


கலைமகள்

தொகுதி எ

(பகுதி நஎ—சஉ)

[பவஞு தைமீ முதல் யுவஞு ஆனிமீ முடிய]

கௌரவப் பத்திரிகாசிரியர்கள்

(1) பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல். (2) எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை, எம். ஏ., எல்.டி. (3) மு. இராகவையங்கார், தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர். (4) ராவ் பஹதூர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல். (5) டி. கே. சிதம்பரநாத முதலியார், பி.ஏ., பி.எல். (6) தி. சிவராமசேதுப்பிள்ளை, எம்.ஏ., பி.எல். (7) கே. சுவாமிநாதன், எம்.ஏ., பி.எல். (8) க. அ. நீலகண்ட சாஸ்திரி, எம். ஏ. (9) எம். லக்ஷ்மி அம்மாள், எம்.ஏ., எல்.டி. (10) எஸ். வையாபுரிப்பிள்ளை, பி.ஏ., பி.எல். (11) ஆர். நாராயணசாமி ஐயர், பி.ஏ., பி.எல். (நிர்வாகப் பத்திரிகாசிரியர்.)

1935

சென்னை லா ஜர்னல் அச்சுக்கூடம், மயிலாப்பூர்.

 [ரு. 2—6—0

ஏழாந்தொகுதியின் பொருளடக்கம்

——:o:——

குறிப்புந் திரட்டும்:

சரித்திரம்:

கட்டுரை எழுதியவர்கள்

——:o:——



ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதர்

கலைமகள்

‘என்ன வேண்டும்?’

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

—:o:—

தமிழ்நாட்டிலுள்ள சிவஸ்தலங்களுள், பூமிதேவிக்கு ஹ்ருதயகமலமென்று சிறப்பிக்கப்படுவதும் சிவபெருமான் புற்றிடங் கொண்டு பூங்கோயிலில் எழுந்தருளியிருக்கப் பெற்றதுமாகிய பெருமையை உடையது திருவாரூர். அங்கே திருக்கோயிலில் ஸ்ரீ முசுகுந்த சக்கரவர்த்தியால் தேவலோகத்திலிருந்து கொணர்ந்து பிரதிஷ்டை செய்யப்பெற்ற ஸ்ரீ தியாகேசப்பெருமான் விளங்கு கிறார். அம்மூர்த்திக்குத்தான் ஏனைய மூர்த்திகளைக்காட்டிலும் சிறப்புக்கள் அதிகமாக உண்டு; நாள்தோறும் பூஜைகளும் அவ்வப் போது உத்ஸவங்களும் அங்கே மிகவிரிவாக நடைபெறுவது வழக் கம். *திருவந்திக்காப்பு அத்தலத்தில் ஸ்ரீ தியாகேசர் ஸந்நிதியில் தொன்றுதொட்ட விசேஷமுடையது. சிவபக்தர்கள் அந்தத் தரிசனத்தைச் செய்து இன்புறுவதற்கு ஆவலுற்றிருப்பார்கள். இந்தச் சிறப்பினால் ஸ்ரீ தியாகராஜப்பெருமானுக்குத் திருவந்திக் காப்பழகர் என ஒரு திருநாமம் வழங்குகின்றது.

தஞ்சாவூரில் இருந்த சரபோஜிமன்னர் ஒருமுறை திருவாரூர் சென்றிருந்தார். அங்கே அவருக்கு அரண்மனை முதலியன உண்டு. அவர் ஸ்ரீ தியாகேசர்பால் ஈடுபட்டவர். திருவாரூர் செல்லும் காலங்களில் திருவந்திக்காப்புத் தரிசனம் பெற்று உள்ளமுருகி இன்புறுவார். ஒருநாள் அங்ஙனம் தரிசனம் செய்யச்சென்ற காலத்தில் மிகச் சிறப்பாகத் திருவந்திக் காப்பு நடைபெற்றது. தீபாராதனைக் காலத்தில் பலவகையான உபசாரங்கள் முறைப்படி நிகழ்ந்தன. பலவகை வாத்தியங்கள் வாசிக்கப்பட்டன. வாத்தியப் பணிவிடை செய்பவர்களுள் ஒரு நட்டுவன் இருந்தான். அவன் எப்பொழுதும் விபூதிருத்திராட்சதாரணம் செய்துகொண்டு விளங்குபவன்; ஸ்ரீ தியாகேசப்பெருமானுக்குச் சுத்தமத்தளம் வாசிக்கும் தொண்டுபூண்டவன்; பக்தியிற் சிறந்தவன்.

---

*சாயங்கால பூஜை.

சரபோஜிமன்னர் தரிசனம்செய்துகொண்டிருக்கையில் ஒவ்வோருபசாரத்தையும் கவனித்துவந்தார். அவர் கவனித்துவருதலையறிந்த வாத்தியக்காரர்கள் தாம் நாள்தோறும் இயல்பாக வாசிப்பதைக்காட்டிலும் அதிகமாக அன்று தம் திறமையைக் காட்டி ஊக்கத்தோடு வாசிக்கலானார்கள். முன்கூறிய நட்டுவனும் சுத்தமத்தளத்தை வாசித்துவந்தனன். அவன் ஸ்ரீ தியாகராஜ மூர்த்தியின் திருவடியில் ஈடுபட்டவனாதலின் தன் இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு வாசித்தான். மற்றவர்களைப்போல அரசரை உத்தேசித்து அதிக ஊக்கமுடையவனாக அவன் காணப்படவில்லை. அவனுடைய உள்ளத்திலிருந்த பக்தி முகத்திற் புலப்பட்டது. வேறு யாதொன்றிலும் நினைவில்லாமல் ஒன்றுபட்ட மனத்தோடு அவன் வாசித்துவருவதை மன்னர் கவனித்தார். அவன் வாசிக்கும் வாத்திய லயமும் அவனுடைய அன்போடு கூடிய மனோலயமும் அவருடைய உள்ளத்தைக் கவர்ந்தன. அவனது தோற்றப்பொலிவையும் இயல்பாகவே அத்தொண்டில் அவன் ஈடுபட்டு நிற்பதையும் உணர்ந்து அவர் மனங்குளிர்ந்தார்; 'இந்த மூர்த்திக்குச் செய்யும் உபசாரங்களில் யாருக்குத்தான் பக்தி பிறவாது! மிகவும் பரிசுத்தனாகத் தோற்றுகின்ற இவனுடைய பணிவிடை நமது மனத்தை அதிகமாகக் கவர்கின்றது' என்று எண்ணி மெல்ல அந்த நட்டுவனருகிற்சென்றார். யாவரும் அஞ்சி விலகி வழிவிட்டு நின்றனர். நட்டுவனோ தன் கண்ணைத் திறவாமலே வாசித்துக்கொண்டு நின்றான். சரபோஜிமன்னர் அவனருகிற் சென்று நின்றார். அவன் தானாகக் கண்ணைத்திறந்து வாத்தியத்தை நிறுத்தும்வரையில் அவனுடைய வாத்திய வாசிப்பிலும் தோற்றத்திலும் தம்மைமறந்து ஈடுபட்டனர்; அவருக்கு அவன் வாசிப்பு ஒவ்வொரு நிமிஷத்திலும் மிக்க இன்பத்தை விளைவித்தது.

வாசிப்பதை நட்டுவன் ஒருவகையாகப் பூர்த்திசெய்தபின்பு தியாகப்பெருமானைக் கும்பிடுவதற்காகக் கண்ணைத் திறந்தான். தனக்கு அருகில் அரசர் நிற்பதைக்கண்டு திடுக்கிட்டான். அவனது உடல் பயத்தால் நடுங்கியது. உடனே அரசர், "சும்மா இரு, அப்பா! உனக்கு என்னவேண்டும்?" என்று கேட்டார்.

நட்டுவனுக்கு மனம்கலங்கியது. அருகிலிருந்த வாத்தியக் காரர்களும் பிறரும் அவனையும் மன்னரையும் விழித்தகண் மூடாமல் பார்த்துக்கொண்டே நின்றனர். 'இந்த அதிர்ஷ்டம் நமக்கு இல்லையே!' என்று சிலர் எண்ணினர். நட்டுவனால் பேசுதற்கு இயலவில்லை. அவன் தன் மனத்திலுள்ள கருத்தை வெளியிட அஞ்சுகிறானென்பதை உணர்ந்த சரபோஜிமன்னர், "உனக்கு

எது வேண்டுமானாலும் கேள்; பயப்படாதே" என்றார். உடன் இருந்தவர்கள் அவன் எதைக் கேட்கப்போகிறானோ வென்பதைக் கூர்ந்து கவனித்து நின்றனர்.

நட்டுவன், "எங்களையெல்லாம் பாதுகாத்து வரும் மகாராஜா அவர்களே! அடியேனுக்கு ஒரு வரங்கொடுக்கவேண்டும். ஸ்ரீ தியாகேசப்பெருமானுடைய மகாஸந்நிதானத்தில் திருவந்திக்காப்பு வேளையில் அடியேன் என்றும் இந்தப் பணிவிடையையே செய்துகொண்டிருக்கும்படி கட்டளையிட வேண்டும்; இதுவே எனக்குப் போதுமானது. இந்தப் பணிவிடையையே செய்து வாழும்படி கடாட்சிக்க வேண்டும்" என்று கைகுவித்துக் கொண்டே சொன்னான். அவனுடைய கண்களிலிருந்து தாரை தாரையாக நீர்பெருகியது.

சரபோஜியரசர் ஸங்கீதப்பயிற்சி மிக்கவரென்பதையும் பல ஸங்கீதவித்துவான்களையும் வாத்தியக்காரர்களையும் தம் ஆஸ்தானத்தில் இருக்கச்செய்து பாதுகாத்து வருபவரென்பதையும் அந்த நட்டுவன் அறிந்தவனாதலின் தன்னையும் தஞ்சைக்கே அழைத்துச் சென்றுவிட்டால் ஸ்ரீ தியாகேசப்பெருமான் பணிவிடையினால் வரும் ஆனந்தத்தை இழக்கநேருமேயென்று அவன் எண்ணிக் கலங்கினான்.

அவன் அரசரிடம் கூறியவற்றைக்கேட்டு அருகிலிருந்தவர்கள் வியந்தார்கள். அரசருக்கும் அவனுடைய தீவிரமான பக்தி நன்கு புலப்பட்டது.

"உன்னுடைய இஷ்டப்படியே சௌக்கியமாக இந்தப்பணிவிடையையே செய்துகொண்டிருக்கலாம். ஸ்ரீ தியாகேசரைத்தவிர உன்னுடைய பணிவிடையை ஏற்றுக்கொள்ளும் யோக்யதையையுடைய பிரபு வேறுயாரும் இல்லை. உன்பாக்கியமே பாக்கியம்!" என்று சொல்லித் தேவஸ்தானத்தாரிடம் அவனை நன்றாகப்பாதுகாக்கும்படி உத்தரவு செய்தார். அன்றியும் அவனைத் தம் அரண்மனைக்கு வருவித்து ஸம்மானங்கள் செய்து, "உன்னுடைய பணிவிடைக்கு எத்தகைய தீங்கும் வாராமல் இருக்கும்படி நாம் பார்த்துக்கொள்வோம்" என்று சொல்லி யனுப்பினார்.

இந்தநிகழ்ச்சியை அறிந்தவர்கள், பெரியபுராணத்தில் திருவாரூர்த் திருக்கூட்டச்சிறப்பைப் பற்றிக் கூறும்பகுதியிலுள்ள, "'கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறல்' என்பதை இவனிடம் கண்டோம்" என்று சொல்லிச் சொல்லி அவனைப் பாராட்டினார்கள்.

இலக்கியம்

சில தமிழ்நூல்களின் காலக்குறிப்புக்கள்

எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை, எம்.ஏ., எல்.டி.

(ஆருந்தொகுதி, 519 ஆம் பக்கத்தொடர்ச்சி)

14. வரதராசர் பாகவதம்

தமிழிலே இரண்டு பாகவதங்கள் உள்ளன. ஸம்ஸ்கிருதத்திலே 18,000 கிரந்தங்கள் கொண்ட இதிகாச பாகவதம் செவ்வைச்சூடுவாரால் 4,970 திருவிருத்தங்களாகத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. அச்சுப்பிரதிகளில் ஆசிரியர் புலவர் திலகராகிய ஆரியப்ப புலவரென்றிருப்பது தவறு. வேம்பத்தூர்ப் புலவர்களுள் ஒருவராகிய செவ்வைச்சூடுவார் பாகவதந் தமிழி லியற்றினரென்பதைக் குறிக்குஞ் செய்யுள்,

கதிக்குமறு பிறப்பொழித்துக் கதிகொடுக்கும் பாகவத
கதையை முன்னம்
மதிக்குமுயர் வடமொழியாற் புனைந்தருளவ் வியாதமுனி
வரனே மீள
உதிக்குநிம்பை மாதவபண் டிதச்செவ்வைச் சூடியென
வுலகு போற்ற
விதிக்குமறை யவர்குலத்திற் றோன்றியருந் தமிழாலும்
விளம்பி னானே

என்பது. இதுவன்றி,

திருமருவு பஞ்சலக் கணவேலை பொங்கிச்
செழிக்குமிரு நிதிகொழிக்கும்
தென்னிம்பை நகரமதில் வாழுமந் தணரிற்
சிறந்தசெவ் வைச்சூடுவார்
சுருதிபுகழ் பாகவத பௌராண மோதினர்...

என்னும் செய்யுளும் அதனையே குறித்தது.

36,000 கிரந்தங்கள் கொண்ட புராணபாகவதத்தை நெல்லைநகர் அருளாளதாசரென்னும் மதுரகவி வரதராஜ ஐயங்கார் 9,000 பாடல்களாகத் தமிழில் மொழிபெயர்த்தார். க-வது திருவரங்கப்படலத்தில் இத் தமிழ்ப் புராணபாகவதம் அரங்கேற்றிய காலத்தைக் குறிக்கும் செய்யுளொன்று காணப்படுகிறது:

ஆயுமறை யோரெண்ண வருஞ்ச காத்த
மாயிரத்து நானூற்றே டறுபத் தஞ்சாந்
தூயசுப கிருதுதனின் முதன்மா தத்திற்
றுலங்குகுரு வாரத்துத் திராட நாளி
னேயமுட னெல்லிநகர் வரத ராச
னிகரிலரங் கத்திலா வணையி னேங்கு
நாயகன்முன் னறிஞர்மகிழ்ந் திடவே வாசு
தேவகதை யரங்கேற்றி நலனுற் றானே [154]

சகாத்தம் 1465 சுபகிருது சித்திரைமீ வியாழக்கிழமை உத்திராட நக்ஷத்திரம். கி. பி. 1542 இச் சக வாண்டுக்கு நேரானது.

15. சூடாமணி உள்ளமுடையான்

இது மண்டலபுருடன் அருளிச்செய்ததாகச் சொல்லும் ஓர் சோதிட நூல். இந்நூற்பெயர்

உற்றுல குய்யவந்தா னருளுள்ள முடையான் மங்கை
கொற்றவன் புகழ்போ லிந்தக் குவலய முழுதுங் கேட்கச்
சொற்றவிந் நூற்பே ருள்ள முடைச்சூடா மணியென் றிட்டுப்
பொற்றொடி விளக்கை நல்லாய் புலவர்முன் புகல லுற்றேன்.

என்னும் பாயிரச்செய்யுளில் ஆசிரியரே கூறுமாறு அருளுள்ள முடையான் என்னும் சிறந்த குணத்தைச் சூடாமணியோடமைத்து வந்ததாகத் தெரிகின்றது. இந்நூல் பாயிரமுள்பட 453 செய்யுள் கொண்டது. இறுதிச் செய்யுள் இந்நூல் தோன்றிய காலத்தைக் குறித்தது:

விளம்பிய சகரா ணண்டா யிரத்தொரு நூற்றின்* மிக்க
வளம்புகழ் பாண்ட மங்கை மாதவ னரிய வன்சே
யிளங்கொடி மடவார் காம னிசைத்திருக் கோட்டி நம்பி
யுளம்புகக் கணித நூலை யுரைத்தன னுலகுக் கெல்லாம்.

சகாப்தம் 1100 கி. பி. 1177-ஆகும். உரை விளம்பி வருடம் என்று குறித்தமையால் கி. பி. 1178 நூல் செய்த காலமாகும். உரையில் வடமொழியிலுள்ள சோதிடத்தைத் தமிழினல் யாவர்க்

---

* சகராணண்டாயிரத் திருநூற்றின்—பிரதிபேதம்.

கும் உளங்கொள உரைத்தான் வெண்பைக்குடிநாட்டுப் பிரமதேசமென்னும் பாண்டமங்கலமாகிய பஞ்சவன்மாதேவி சதுர்வேத மங்கலத்து அரியவன் புத்திரன் திருக்கோட்டியூர் நம்பியென்று விவரங் காணப்படுகிறது. சூடாமணியென்னும் பெயர்கொண்ட வடமொழிச்சோதிட நூலை மொழிபெயர்த்ததனால் அப்பெயரையே கொண்ட தமிழ்நூலைச் சூடாமணிநிகண்டாசிரியனோடு சம்பந்தப் படுத்தியது தவறுபோலும். மேலே இறுதிச்செய்யுள் கூறியபடி ஆசிரியர் திருக்கோட்டியூர் நம்பி யென்பவரேயாதல் வேண்டும்.

16. சரசோதிமாலை

இது ஓர்சோதிடநூல்; இந்நூலியற்றிய காலமுதலிய விவரம்

உரைத்தசக வருடமுறு மாயிரத் திருநூற்
 றொருநாலெட் டினிலிலகு வசந்தந் தன்னிற்
றரித்திடுவை காசிபுதன் பனையி னுளிற்
 றம்பைவளர் பராக்கிரம வாகு பூபன்
இருத்தவையிற் சரசோதி மாலை யீரா
 றேய்படல நூற்றொன்பான் முப்பா னன்காம்
விருத்தமரங் கேற்றினனாற் போச ராச
 விஞ்சைமறை வேதியனும் புலவ ரேறே

என்ற செய்யுளாற் புலப்படும். சகவருடம் 1232 கி. பி. 1309-க்கு நேரானது. வைகாசி மாதம் புதன்கிழமை அநுடநட்சத்திரம். தம்பையில் அரசுபுரிந்த பராக்கிரமபாகு வென்னும் வேந்தன் அவைக்களத்தில் பன்னிரண்டு படலங்களும் 934 விருத்தங்களும் கொண்ட இந்நூலைப் போசராசபண்டிதரென்னும் அந்தணப் புலவர்பிரான் அரங்கேற்றினர்.

17. வீரசிங்காதனபுராணம்

சாரங்கதேவ தேசிகர் திருமடமென வழங்கும் திருக்குடந்தைப் பெரியமடத்தின் வரலாறுரைக்கும் இப் புராணம் பெருமத்தூர் மடம் வேலைய சுவாமிகளாலும் கோட்டூர் உமாபாக தேவராலும் அருளிச்செய்யப்பட்டது. வேலையசுவாமிகள் துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகளது சகோதரர். இந்நூல் வரலாறு சிறப்புப்பாயிரத்தில் தெளிவாக உரைக்கப்பட்டது:

வீரசைவ குருசோமசேகரதே சிகன்பாத மிலைச்சிப் பூவாள்
வீரநர சிங்கமன்னன் வினவமறை யாகமங்கள் விளம்ப நாதி
வீரசைவ மிகுக்கவான் மெய்ஞ்ஞான பீடமிதின் மேவ லாலே [நூலை.
வீரசிங்கா தனமெனப்பேர் விளங்கிடுமென் றதன்பெருமை விளம்பு

மகத்துதே சிகன்முன் கருநடந் தமிழால்
வழுத்துமென் றியம்பவே லையர்
தொகுத்தருண் மழைய மல்லையர் சரிதந்
தொன்மையா மூர்க்கர்தஞ் சரிதம்
படுத்தக ளங்கச் சோழர்தஞ் சரிதம்
பகர்ந்தனர் சிதம்பர மடத்துண்
மிகுத்துவாழ் வசவ லிங்கையர் பிறவும்
விளம்பிட வேண்டுமென் றிசைக்க.

கலியது நாலா யிரத்தெண்ணூற் றிருபான்
கதிசகாத் தம்மொரா யிரத்தின்
மலியறு நூற்று நாற்பத்தொன் றாக
வழங்கிய விளம்பிதை மாதஞ்
செலுமதிற் பதினொன் காந்தின மதனிற்
றிங்களிற் கயிலையே குடந்தை
சொலும்வீர பத்திர ரிரேணுகர் சோம
சேகரர் சரிதமுந் தொகுத்தே.

தக்கமெய் கண்ட சந்ததி யதனிற்
றழைகயி லாயர்பொற் பதத்தைப்
பக்கமாய்ப் பணிகோட் டூர்வரு மடந்தை
பாகரு முரைத்தனர் குடந்தைக்
கொக்குநான் முன்னூற் சார்புநூற் பழையோ
ருயர்ந்தவாக் கியமதை யுணர்ந்தே
மிக்கிலக் கணத்தின் விதியுளி வழாது
விளங்கிடும் விருத்தயாப் பதனல்

இறுதி ஐந்து சருக்கங்களைப் பாடியவர் மெய்கண்டசந்தானம் திருத்துறையூராதீனத்தவர். நூலியற்றிய காலம் கலியப்தம் 4820 சகாத்தம் 1641 விளம்பிஸு தைமீ. கி. பி. 1719 அதற்கு நேரான ஆண்டாகும்.

18. கமலாலயபுராணம்

திருவாரூர்த்தலத்தின் பெருமை யுரைக்கும் இந்நூல் மறை ஞானசம்பந்தரென்னும் பெரியாரால் இயற்றப்பட்டது. இதற்குக் கமலாலயச்சிறப்பு என்று வேறொரு பெயருமுண்டு. இந்நூலியற்றிய காலமுதலியன பின்வருஞ் செய்யுள்களாற் புலப்படும்

ஆண்டுகலி யுகத்துக்கு நானூற்று முப்பத்தீ ராயி ரத்து
வீண்டியநா லாயிரமு மறுநூறு மெண்ணைந்து மேழுஞ் செல்லப்

பூண்டபரா பவவாண்டின் மகரத்திற் புதத்திரயோ தசிபூர் வத்திற்
காண்டகுதிங் களின்மானின் மயேந்திரத்திற் கவுலவமென் கரணந் தன்னில்

பொருவரிய திருவாரூர்ப் புற்றிடங்கொண் டருண்மூலட் டான னென்னும்
பரமசிவன் பாங்கான சன்னிதிக்கு வாமதலப் பாகந் தன்னிற்
றிரமுறுதே வாசிரய மண்டபத்துப் பரமசிவன் வாக்கைத் தேர்ந்து
தருமமுத னெறியுணர்த்துஞ் சைவரும்மை திகருமுறுஞ் சங்கந் தன்னில்.

அருமறைக ளொருநான்கு மாகமங்க ளெழுநான்கு மங்க மாறுந்
திரிவறவா ராய்ந்துசிவ மானபரன் றெய்வமெனத் தெளிந்த சைவர்
பொருவரிய சிவனூர் புற்றிடங்கொண் டருள்புரிந்த புகழை யெல்லாம்
முறைசெய்யு மாரியத்தின் பொருடமிழா லுணர்த்துகவென் றுரைக்கச்
[சொல்வாம்.

கலியப்தம் 4647 சென்ற பராபவஹு தைமீ த்துக்கு நேரானது கி. பி. 1547. இந்நூல் 20 சருக்கங்கொண்ட 1,065 செய்யுட்களுடையது. இன்னும் அச்சாகவில்லை. இந்நூலைப் பற்றிய விவரங்களை இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை திருவாரூர், சோமசுந்தர தேசிகர் சித்தாந்தம் மலர் ௬ இதழ் அ-ல் காட்டினர்.

19. பிராயச்சித்த சமுச்சயம்

பாவங்கட்குப் பரிகாரமுரைக்கும் இந்நூல் வடமொழியினின்றும் மொழிபெயர்க்கப்பட்டது. 302 செய்யுட்களுடையது. நூலாசிரியர் ஞானப்பிரகாசரது மாணாக்கரெனத் தம்மைக் கூறிக் கொள்ளுகின்றனர். ஞானப்பிரகாசர் என்னும் பெயருடையார் பலரிருந்தனராதலால் இவர் கூறிய ஞானப்பிரகாசர் எவர் எனத் துணியக்கூடவில்லை.

அன்னவர்தந் திருவாக்கென் றலைமேற் கொண்டாண்
டானகொல்ல மெண்ணூற்றெட் டாண்டாங் கிர
மென்னுமுறு வருடமுத்த ராய ணத்தி
லெழிலுறும் பத்தில்வளர் பக்கந் தன்னிற்
பன்னுபுத வாரமகம் பருவந் தன்னிற்
பதிஞானப் பிரகாசன் பாதந் தன்னை
யுன்னியுளத் தறிந்தபடி யுரைத்தேன் கல்வி
யுடையோர்கள் பொறுப்பரெனு முறுதி யாலே

என்று வருஞ் செய்யுளால் கொல்லமாண்டு 808 ஆங்கிரசஹு மாசிபீ நூலியற்றிய காலமெனத் தெரிகிறது. இதற்கு நேரானது கி. பி. 1633. இங்குக் கூறிய விவரம் தஞ்சை சரபோஜி மஹாராஜா ஸரஸ்வதிமால் புத்தகாலயக் காட்லாக்கில் கண்டது. இனி அந்நூலில் குருமரபு துதியாக ஆசிரியர்,

தங்கு முலகம் பரவுதிரு விசைப்பா வுரைத்த தலைவருமென்
பங்க மெனவுற் றிடுமெறுபத் தொடுமூ வருமா கமந்தமிழ்செய்
திங்க ளுரிஞ்சு மணிமாடத் தில்லைக் குகையிற் றிரைபோட்டுப்
பங்க மறவாழ் மறைஞான சம்பந் தனுநம் பதியாவார்

என்றுரைத்ததாக இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை திருவாரூர் சோமசுந்தரதேசிகர் சித்தாந்தம் மலர் ௲ இதழ் அ - ல் எழுதியிருத்தலின் கி. பி. பதினாறும் நூற்றாண்டிடைக்காலத்துத் திகழ்ந்த மறை ஞானசம்பந்தர் வழியில் வந்தவர் இவ்வாசிரியர் எனப் புலப்படுகிறது. கொல்லமாண்டைக் குறித்தலின் ஆசிரியர் தென்னாட்டினர்போலும்.

மாம்பழம்

பதினான்காம் நூற்றாண்டில் இருந்த அமீர்குஸ்ரு என்ற கவிஞர் "உலகம் மெச்சும்மாம்பழங்கள் இந்தியாவில் உண்டாவதால் இந்தியர்களைக் கண்டு சிலர் பொறாமைப்படலாம். ஆனால் மாம்பழங்களை எந்தத்தேசத்தில் எவ்வளவு சிரத்தையுடனும் பயிர்செய்தாலும் அவைகள் இந்தியாவில் பயிர் செய்யப்படும் ராசியைவிட மிகவும் மட்டமாகவே இருக்கும். எப்பழங்களையும் முதிர்ந்த பிறகுதான் சாப்பிடமுடியும். ஆனால் மாம்பழங்களை எல்லாநிலைகளிலும் உபயோகிக்கலாம் என்று கூறியிருக்கிறார்". மொகலாய அரசரான அக்பரும் ஒருலக்ஷம் மாமரங்களைத் தர்பங்கா(Durbanga)விற்கு அருகிலுள்ள பாக்வரி (Lake Bagh) என்னும் இடத்தில், பயிர் செய்வித்தார் என்று சொல்லப்படுகிறது. அவைகளில் சிலவற்றை இப்பொழுதும் காணலாம். எப்படி புதிதாக விளைந்த நெல்லுக்கும், பசுமாடுகளுக்கும் உத்ஸவங்கள் கொண்டாடப்படுகின்றனவோ அவ்விதமே மாம்பழத்திற்கும் சில இடங்களில் உத்ஸவங்கள் நடக்கின்றன. ஐரோப்பியபாஷைகளில் மாங்காய் என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபே அப்பழத்தின் பெயராகவழங்கிவருகிறது. போர்த்துகீஸியர் மூலமாய் மாமரங்கள் முதல் முதல் தென் ஆப்பிரிக்காவிற்கும், பிறகு அங்கிருந்து மற்ற உஷ்ணப்பிரதேசங்களுக்கும் பயிர்செய்யக்கொண்டு போகப்பட்டன. இக்காலத்தில் மாமரம் மித உஷ்ணப்பிரதேசங்களிலும் கூட உழவர்களின் பாதுகாப்பின் கவனத்தினால் பயிராகிறது; எனினும் இந்திய மாம்பழத்திற்கு ஒருதனிமதிப்பு இருக்கிறது.

—தி கார்டனிங் ரிவ்யூ

இராமாயணமும் தமிழ்வழக்குக்களும்

மு. இராகவையங்கார்

முன்னுரை

சங்கச்செய்யுட்களிலும் பிற சான்றோர்பாடல்களிலும் வடமொழி இதிஹாசபுராணங்களிற் கண்ட சரிதைகள் பலவும் பயில்கின்றன. திருமால், சிவபிரான், முருகக்கடவுள் முதலிய தெய்வங்களின் சரிதங்களும், நளன் பூண்டவர்முதலிய அரசர்செய்திகளும் உவமை மூலமோ எடுத்துக்காட்டாகவோ அம்முன்னூல்களிற் கூறப்படுவதால், புராணேதிகாசவழக்குக்களைப் பழைய தமிழ்மக்கள் நன்கறிந்திருந்தவர் என்பது தெளிவாகின்றது. அவ்வாறுள்ள சரித்திரங்கள் வடநூல்வழக்குக்களுடன் பெரிதும் ஒத்தும் சிறுபான்மை வேறுபாடு கொண்டும் உள்ளன. அன்றியும் வடநூல்களில் இல்லாத கதைப்பகுதிகள் தமிழில் வழங்குவனவும் உண்டு. கண்ணபிரான் மணந்த ஆயர்குலத்து நப்பின்னைப் பிராட்டியைப்பற்றியும், அப்பெருமான் குருந்தொசித்தது குடக்கூத்தாடியது முதலியவைபற்றியும் அமைந்த கதைகளை ஆரியத்திலேனும் வேறுமொழிகளிலேனும் காண்டல் மிகவரிது. இவ்வாறே, தமிழ்வழக்கான இராமாயணச் செய்திகள்சிலவும் முன்னூல்களிலே ஆங்காங்குக் காணலாம். இராமசரிதம் பற்றிய அத்தமிழ்வழக்குக்களை நம்மவர் அறியவிரும்பி, அவற்றை இங்கே தொகுத்துக் கூறவிரும்புகின்றேன்.

1. தமிழிலமைந்த இராமாயணநூல்கள்

இராமசரிதம் கூறும் நூல்கள் தமிழில் பண்டைக்காலத்தே இயற்றப்பட்டிருந்தன. "பாரதஞ் சீராமகதை"[1] என்று பாரதம் பாடிய பெருந்தேவனார் கூறுதலால், சீராமகதை எனவும் முன்னோர் இராமாயணத்தை வழங்கினர் என்பது தெரியலாம். கம்பநாடர்க்கு நெடுங்காலத்துக்கு முன்பே, பெருந்தேவனார் பாரதம் போலப் பெரும்பாலும் வெண்பாயாப்பில் அமைந்த இராமாயணநூலொன்று பெருவழக்குடையதாயிருந்ததாகும். இச்செய்தி, யாப்பருங்கல விருத்திகாரர் "பாதம் பலவரிற் பஃறொடை வெண்பா" என்ற சூத்திரவுரையில், "பலவடியான்வந்த பஃறொடைவெண்பா,

1. திருவள்ளுவமாலை, 30.

இராமாயணமும் புராணசாகரமும் முதலாய செய்யுட்களிற் கண்டு கொள்க" என்று எழுதுதலால் அறியப்படுகின்றது. வீரசோழிய உரையிற் கண்ட மேற்கோட்பாடல்கள் சிலவற்றை நோக்குமிடத்து அவை இராமாயணக்கதை பற்றியவை என்பது எளிதில்விளங்கும். அவை வருமாறு:—

"மற்றிவனே மாலென் றறிந்தாலவ் வாளரக்கன்
பெற்றி கருதுவதென் பேதையர்காள்—மற்றிவன்றன்
கண்டான் கடைசிவத்தற் குண்டோ கடலிலங்கை
வண்டா ராக்கன் வலி"

"ஐயிருப தோசனையு மாங்கோ ரிடனின்றிக்
கைபரந்த சேனைக் கடலொலிப்பத்—தையல்
வழிவந் திராமன் வடகனாயா னென்றான்
விழிவந்து வேரூக மீட்டு"

(பொருட்படலம், 'வேந்தன் சிறப்பு' என்பதனுரை).

இவை அப்பழைய இராமாயணச் செய்யுட்கள்போலும். ஜைன தீர்த்தங்கரருடையவும் ச்லாகாபுருஷர்களுடையவுமான சரிதங்களைக் கூறும் ஸ்ரீபுராணம் என்ற மணிப்பிரவாளநூலில், விருத்தம் அகவற்பாக்களில் இராமசரிதம் அமைந்த பாடல்கள் சில உதகரிக்கப்பட்டுள்ளன. அவற்றுட் சிலபாடல் வருமாறு:—

சூர்ப்பணகையை நோக்கிய இராவணன் கூற்று

"அலைவட்டங் கிடந்த வல்குற் கதிபதி யாகும் பெற்றி
கலைவட்டங் கிடந்த வல்குற் காரிகைக் கறிவித் தாயேல்
முலைவட்டங் கிடந்த முத்த மாலைமென் முறுவ லாளென்
சிலைவட்டங் கிடந்த தோளைச் செறிதற்கை யுறவு முண்டோ"

சீதையின் சோர்வு

"உருமிடிப் புண்ட வருமணி நாகமெனத்
திருமணி நிலத்திற் றேவி சோர்ந்து
செய்த பாவையின் மெய்திரி வின்றி
மையலி னுயிர்த்து மடிந்துடன் கிடப்ப"

"விம்முறு துயரிற் கொம்மென வுயிரா
விளைந்த தெல்லா முளங்கொள வுணரா
எழுதுகண் ணருவிய ளினைந்தினைந் திரங்கலின்
ஒழுகுபு கழிய முழுகிய மேனியள்
அழுதழு தலறி யாவோ வென்னும்
இணைபிரி யன்றிலி னேங்கி நீங்காத்
துணைவனை நினைந்து சோகமீ தூர்தர

வான்பழி சுமந்துநின் வனமலர்ச் சேவடி
யான்பிரிந் தேதல னிடவயி னிடர்ப்பட
மான்பின் போகிய மன்னவ னேயெனும்
மாயோன் செய்த மாயா மானிடை
மாயவன் செய்த மகிழ்ச்சிகண் டருளி
ஆவதொன் றின்றி யதன்வழி யொழுகிய
நாயக னேயென நணுகாய் வந்தெனும்
கொற்றவன் துணையே குலவிளங் களிறே
செற்றலர்ச் செகுக்குஞ் சினத்தீ யுருமே
மைத்துன மலையே மன்னவ னேயெனும்
நாற்கடற் பரந்தன வேற்படைத் தானையொடு
கூற்றுறழ் மொய்ம்பிற் கொடுஞ்சிலைத் தடக்கைத்
தம்பித் துணைவனிற் றனிப்படப் பிரிந்திட்
டெம்பெரு மகனை யென்வயி னிறுவி
மாற்றவன் செய்த மாயா மானினை
நோற்றி லாதே னோக்கிய நோக்கின்
அருவினை யேனை யருளிய மனத்தால்
மருவிய மாய வுருவுதரற் கெழுந்த
வரிசிலைக் குரிசில மன்னர்பெரு மானை
மான்மறி தொடர்ந்துசெல் வாளரி போலக்
கானெறி விடுத்துக் கடுவனம் புகுத்தி
மாயப் புணர்ப்பின் மன்னனை நினைந்து
ஆயமுந் தாயருந் தோழியு மின்றியோர்
நொதும லாளன் விதிவழி யொழுகி
இடனிடை விட்ட சேய்மைத் தன்றியும்
கடலிடை யிட்ட காப்பிற் றாகிய
இலங்கை மூதூ ரிடுசிறைப் பட்டு
மலங்கு விழிமான் வழிதேர்ந் தருளிய
மன்னவற் குற்றது மின்னதென் றறியாது
இன்னற் படவெனை யின்னண மிழைத்த
வினையே வலிதே விளிதால் புரிவாய்
மனுவே யனையனை வார ணுசியில்
தனியொரு மான்பிணை தன்னின் விடுத்தே
எனையுந் தனியே யிவணிட் டதுவே"

"சுழல்விழித் தறுகட் பேழ்வாய்ச் சுடர்க்கைவேற் றி(ர)ண்ட தோளாய்
யுழைவிழி யார்சொற் கொண்டா ருறுவர்வெந் துயர மென்னும்
பழமொழி யதனை யோர்ந்தும் பாவியேன் சொல்லைக் கேளா
உழையின்பின் போன வேந்தே யுனக்குற்ற தறிகி லேனே"

"கோம்பி கண்டு குலுங்குபு கலங்காச்
சாம்பிய மஞ்ஞையிற் சாய்ந்தனள் கிடப்ப"

இவை, ஜைனராமாயண சரித்திரம்பற்றி முன்னோர்பாடிய பழைய காவியத்தைச் சார்ந்தனவாகத் தோற்றுகின்றன. இஃதன்றி, சென்னை அரசாங்கக்கையெழுத்துப் புத்தகசாலையிலுள்ள பல திரட்டு என்றசுவடியிற் கண்ட செய்யுட்களிலே—'இராமாயண வெண்பா' என்ற தலைக்குறிப்பின்கீழ்:—

"சனகன்மொழி கேட்டுத் தவமுனிவன் சொன்னான்
தினகரனார் தெய்வக் குலத்தோன்—மனமகிழ
வந்தசிறுச் சேவகனை மன்னா வறியீரோ
இந்தவகை யென்னினைந்தீ ரென்று"

"தயரதனும் புத்திரருந் தாமரையோன் பெற்ற
நயமுனியுந் தானையுட னண்ணச்—சயமுடைய
கோதமன்றன் புத்திரனைக் கொண்டு மிதிலேசன்
ஏதமிலான் வந்தா னெதிர்"

"வசிட்டனுங் கோசிகனுங் மன்னவருங் கூடி
விசித்திரமா மங்கலச்சொல் விண்டு—சசிக்குநிகர்
மாமுகத்துச் சீதைக்கும் வாழு முருமிளைக்கும்
மாமுகூர்த்த மிட்டார் மகிழ்ந்து"

"சூரியனார் வம்சத் துதித்த தயாதனு
மாரியனை யிங்கே யழைமினென்றான்—ஊரி
வளைக்குலங்கள் முன்றிறுறு மாமுத்த மீன்று
திளைக்கு மிதிலையர்கோன் றேர்ந்து"

என்ற செய்யுட்கள் காணப்படுகின்றன. இவையும் வேறோர் இராமாயண நூலைச் சேர்ந்தவையாகும். இந்நூல்களில் ஒன்றுமே இப்போது அகப்படவில்லை.

2. இராமாவதாரம்

மேற்கூறிய இராமாயணங்களெல்லாம் "அகல்வானிற் கங்கையெனும் அணங்கிழியப் பொலிவிழந்த ஆறொத்தன" என்னும்படி தோன்றியது, கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் அருளிய இராமாயணம். இப்பெருநூல் தோன்றியபின் அவை பொலிவிழந்ததோடு வழக்கும் வீழ்ந்தன. கம்பர் தம் பெருங்காப்பியத்துக்கு யாவரும் வழங்கவேண்டும் என்று இட்ட திருப்பெயர் இராமாவதாரம் என்பதாம். இதற்கு, திருமாலின் தசாவதாரங்களிலே இராமாவதாரத்தில் நிகழ்ந்த சரிதங்களைக் கூறும் நூல் என்பது பொருள். இதனை

"நடையி னின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடைநிகழ்ந்த இராமாவதாரப்பேர்...மாக்கதை"

என்று, கம்பரே பாயிரமுறைப்படி தம் நூற்குப் பெயரிட்டு ஆளுதலால் அறியலாம். 'புறத்திரட்டு' என்ற நூல்தொகுத்த புலவரும் இராமாவதாரம் என்ற தலைக்குறிப்பிட்டு அந்நூற்பாடல்களை எடுத்தாளுவர். அத்தியாத்தும ராமாயணத்தில் "இராமாவதார சரித்திரம் யாவையும் எனக்கு அப்பொழுதே சொல்லியிருக்கிறூர்" என்றவாக்கியம் காணப்படுதலும், (v, i.) காசுமீரதேசத்தில் அத்தேசபாஷையில் இயற்றப்பட்டுள்ள இராமாயணத்துக்கு 'இராமாவதாரசரிதம்' என்பது பெயராக வழங்குதலும் இங்கு ஒப்பிடத்தக்கன. இவற்ருல் இராமாவதாரம் என்ற பெயர்வழக்கு, இராமாயணத்துக்கு முன்னேர் வழங்கிய தொன்றென்பதும் அதனையே கம்பரும் தம் நூற்பெயராக இட்டு வழங்கலாயினர் என்பதும் விளங்குவனவாம்.

இவ்விராமாவதாரத்தில், கம்பநாடர் முக்கியமாக வான்மீகத்தையே தமக்கு முதனூலாகக் கொண்டவரேனும், வடமொழியினும் தமிழினுமமைந்த மற்ற இராமாயணங்களையும் ஆராய்ந்து தழுவிக் கதையமைத்துக் கொண்டவரேயாவர். வான்மீகத்துடன் கம்பராமாயணம் பலவிடங்களிற் கதைவேறுபாடு கொண்டுள்ளது என்பது பலருமறிந்ததே. முன்னூல்களை ஆதாரமாகக் கொண்டே கம்பர் கதைக்கூறுகளை அவ்வாறுவேறுபடுத்திக் கொண்டவரன்றித் தாமே கற்பித்துக்கொண்டவ ரல்லர். அத்தியாத்துமராமாயணமுதலிய வடநூல்களிலே அவ்வேறுபாடுகள் சிலவற்றைக் காணலாம். அவ்வாறே அவர்க்குமுன் வழங்கிய தமிழிராமாயணங்களும் அம்மாறுபாடுகள் உடையனவாதல் வேண்டும். ஆனல் அந்நூல்கள் நமக்குக் கிடையாமையால் அவற்றிலமைந்த சரித்திர வேற்றுமைகளை நாம் அறிய இடமில்லை. எனினும், ஆங்காங்கு உதகரிக்கப்பட்டுள்ள இராமசரிதங்கூறும் பழம்பாடல்களை நோக்குமிடத்து, கம்பர்க்கு ஆதாரமாயிருந்தவற்றுள் தமிழ் முன்னூல்களுஞ் சேர்ந்தவை என்பது தெரியலாம். இதற்குச் சில பிரமாணங்கள் வருமாறு:—

3. சீதை மதியுடம்பாடு

மிதிலாபுரியில் கன்னிமாடத்திலே "சதகோடி மின்சேவிக்க மின்னரசு என்னும்படி" ம "கல்லும் புல்லுங் கண்டுருக"வும் பெண்கனியான சீதாபிராட்டி நின்றபோது, முனிவருடன் அந்நக

ரிற் பிரவேசித்த இராமபிரான் அப்பிராட்டியைத் தற்செயலாக ஆங்குக்காண அவளும் அப்பிரானைக் கண்டு இருவரும் நோக்கெதிர் நோக்கி உள்ளங்கலந்து ஒருயிரான நிலையை

"எண்ணரு நலத்தினா ளினையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணினை கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள்"

"பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை யொருவர்த முள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினார்"

"அந்தமி லழகனை யணைகி லாமையால்
பைந்தொடி யோவியப் பாவை போன்றனள்
சிந்தையு நிறையுமெய்ந் நலனும் பின்செல
மைந்தனு முனியொடு மறையப் போயினான்"

"பிறையெனு நுதலவள் பெண்மை யென்படும்
நறைகம ழலங்கலா னயன கோசரம்
மறைதலு மனமெனு மத்த யானையின்
நிறையெனு மங்குச நிமிர்ந்து போயதே"

எனக் கம்பநாடர் மிகவழகாகப்பாடுதலைப் பலரும் நன்கறிவர். இக்கதாசந்தர்ப்பம் வான்மீகமுனிவர் கூறுத தொன்றும். வில் முறிவு நிகழ்ந்தபின்பே, இராமபிரான் சீதையைக் கண்டனர் என்பர் அம்முனிவர். இவ்வாறு, கம்பநாடர், காப்பியத் தலைமக்களின் உள்ளக்கலப்பைத் தமிழர்சுவைக்கேற்ப வைத்து நயம் பெறப் பாடியது, அவரது சொந்தக் கற்பனையாகவே பலருங் கருதல் கூடும். ஆனால் இக்கருத்து கம்பர்க்கும் முற்பட்ட தமிழ்நூலில் அமைந்து கிடப்பதொன்று என்பது இங்கு அறியத்தக்கது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில்:—

"ஆள்வினை முடித்த வருந்தவ முனிவன்
வேள்வி போற்றிய விராம னவனொடு
மிதிலை மூதா ரெய்திய ஞான்றே
மதியுடம் பட்ட மாக்கட் சீதை
கடுவிசை வின்னா ணிடியொலி கேளாக்
கேட்ட பாம்பின் வாட்ட மெய்தித்
துயிலெழுந் து மயங்கின ளதான்று"

(தொல். பொருள். 54 உரை.)

என்ற பழைய செய்யுட்பகுதியைச் சுட்டியொருவர் பெயர் கொண்ட கைக்கிளைக்கு நச்சினார்க்கினியர் மேற்கோள் காட்டு

கின்றனர். இதனுள், "இராமன் மிதிலைமூதா ரெய்திய ஞான்றே மதியுடம்பட்ட . . . சீதை" என்பதனால், இராமபிரான் முனிவருடன் மிதிலையிற் பிரவேசித்தபோதே, உள்ளப்புணர்ச்சியாகிய மதியுடம்பாடு அப்பிரானுக்கும் பிராட்டிக்கும் நிகழ்ந்தது என்று கூறப்பட்டிருத்தல் அறியலாகும். இப்பாட்டுப் பழைய இராமாயணத்தைச் சார்ந்ததோ அன்றி வேறு நூலில் உள்ளதோ தெரியவில்லை. எவ்வாறாயினும், கம்பர்க்கு முற்பட்ட பழைய நூற்பகுதியே இஃது என்பது, தொல்காப்பிய சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் மேற்கோள்காட்டுதலினின்று தெரிகின்றது. இதனால், கம்பநாடர் சீதாராமரின் மதியுடம்பாட்டைத் தாமே கற்பித்துக் கூறினவரல்லர் என்பதும், முன்னோர் அகத்துறை நயம்பெறக் கூறியதனையே தம்பெருங்கவித்திறம் விளங்கப் பாடியவர் என்பதும் தெளிவாதல் காண்க. இதுமட்டுமன்று; பெருமானும் பிராட்டியும் நோக்கெதிர்நோக்கி உள்ளங்கலந்து ஒருவர்க்கொருவர் விழைவுமிகுத்தனர் என்று அவர் கூறிய செய்யுட் கருத்தும் அவர்க்கு முன்னூலினின்றே தோற்றிய தொன்றாகும். கலித்தொகையுள்:—

"எழின்மருப் பெழில்வேழ மிகுதரு கடாத்தாற்
றொழின்மாறித் தலைவைத்த தோட்டிகை நிமிர்ந்தாங்
கறிவுநம் மறிவாய்ந்த வடக்கமு நாணொடு
* * * *
என்னெஞ்ச மென்னோடு நில்லாமை நனிவௌவித்
தன்னலங் கரந்தாளை" (138)

எனத் தலைவன் தலைவியைக் கண்டதனால் தன் நிறையழிந்தநிலைக்கு, தோட்டியைக் கைநிமிர்த்துச் சென்ற மதவேழத்தின் தன்மை உவமிக்கப்பட்டிருத்தல் காணலாம். இக்கருத்தேபெறப் பெருங்கதையில் கொங்குவேளிர் என்ற புலவர்பெருமானும்

"கதிர்முடி வேந்தன் கண்ணிய நுண்பொருட்
கெதிர்மொழி கொடாஇய வெடுத்த சென்னியன்
மன்னவன் முகத்தே மாதரு நோக்கி
உள்ளமு நிலையுந் தள்ளிடக் கலங்கி
* * * *
தடக்குவரை நில்லாது தோட்டி நிமிர்ந்து
மதக்களி றிரண்டுடன் மண்டி யாஅங்கு
இல்வழி வந்ததம் பெருமை பீடுறத்
தொல்வழி வயத்துத் தொடர்வினை தொடர

வழுவில் போகமொடு வரம்பின்று நுகரும்
உழுவ லன்பி னுள்ளந் தாங்கி
* * * *

அமைப்பருங் காதலு மிமைப்பினு ளடக்கி
ஒருவயிற் போல உள்ளழி நோக்கமொ
டிருவயி னொத்தலீ திறந்த பின்னர்" (1, 32, 30—49.)

என்று பாடுகின்றார். உதயணன், நளகிரி என்ற மதயானையை அடக்கி நடத்திக்கொண்டு பிரச்சோதனன் முன்னிலையில் வந்து நிற்க, அதுபற்றி அவ்வரசன் அவனை உசாவுகின்றபோது அரசன் பின்னின்ற வாசவதத்தை அவன் கண்ணெதிர்ப்பட, உதயணனும் அவளும் ஒருவரையொருவர் கண்டு உள்ளங்கலந்தநிலை இவ்வடிகளில் அழகாகக் கூறப்பட்டுள்ளமை காணலாம். ஆனால் தலைவன் தலைவி இருவர் மனங்களையும் மத்தயானைகளாகக் கொண்டு அவர்கள் தம் வசமிழந்தனரென்று அவ்வேளிர் கூறுகின்றார். இவ்வாறு தலைவன் மனத்தை நெய்தற்கலியும், தலைவன் தலைவியரிருவர் மனங்களையும் பெருங்கதையும் தோட்டியை நிமிர்த்துச்சென்ற மத்த வேழங்களாகக் கூறிய கருத்தினையே கம்பர் தம் காப்பியத்தலைவியான பிராட்டியின் கைக்கிளை கூறுமிடத்து:—

"பிறையெனு நுதலவள் பெண்மை யென்படும்
நறைகம ழலங்கலா னயன கோசர
மறைதலு மனமெனு மத்த யானையின்
நிறையெனு மங்குச நிமிர்ந்து போயதே"

என்று தழுவிப்பாடுதல் ஈண்டு ஒப்பிடத்தக்கது. ஆண்மக்கட்கும் நிறை வேண்டுவதொன்றாயினும் அது மகளிர்க்குப்போல அத்துணைச்சிறப்புடைய தாகாமையாலும், பலதாரமணம் புரிதற்குரிய அரசர்குலத்து அவதரித்த இளைஞரான இராமபிரானது மனநிலை ஏகதாரவிரதத்தில் நிலைநின்றது என்று கவி கதைத்தொடக்கத்தே வரையறுத்தற்கு ஏலாமையாலும், தம்தந்தையைப்போலவே அப்பிரானும் மணந்துவாழ்தற்குத் தகுதியுடையராதலாலும் கம்பர் காப்பியத்தலைவனைப்பற்றி இங்கே கூற ஒருப்படாது நிறையினின்று வழுவாதொழுகற்குரிய தலைவியின் ஒருதலைக்காம நிலையினையே கூறிப்போயினர் என்றும், அவளது காதல்கைம்மிக்க மனத்தை மத்தயானையாகக்கொண்டு அதனைத் தன்நிறையங்குசத்தால் அவள் அடக்க முயன்றதனையே சிறப்பிக்கலாயினர் என்றுங் கொள்க. கற்பிற்கரசியான பிராட்டி, இன்னானினையான் என்று அறியப்படாமல் முனிவருடன் தெருவிற்சென்ற புருடனொருவனைக்

கண்டு காழுற்று உள்ளந்தன்வசமிழந்தாள் எனின் அது மானுட நெறிக்கு எங்ஙனம் அடுக்கும்என்னும் ஆசங்கையைப் பரிகரித்தற்கே, மேற்கூறிய "பிறையெனு நுதலவள்" என்றபாட்டை அப்புலவர்பெருமான் பாடுகின்முர் என்பது தெரியலாம். பிராட்டி நற்குண நற்செய்கைகள்மிக்க ஒப்புயர்வற்ற பெண்மணியே யாயினும், தெய்வம் இடைநின்று கூட்டுதலால் அவளுள்ளம் முன்னறிந்திராத இராமன்பாற் கலந்ததென்றும், அந்நிலைமையிலும் தன்னியற்கைக் குணமான நிறையென்னும் அங்குசத்தையிட்டு மனமாகிய மத்த யானையை அடக்கியொடுக்கத் தன்னாலான அரும்பாடுபட்டனள் என்றும், அந்நிறையங்குசத்தைக் கைவிடுதலின்றியே அவள் கொண்ட அப் பெருமுயற்சியைச் சிறிதும் பொருட்படுத்தாமல், கைக்கொண்ட நிறை சீதையதேயாக, அந்நிறைத்தோட்டியின் பிடிப்பு விலகும்படி அதன் கொக்கியை நிமிரச்செய்துவிட்டு, அவள் மனமாகிய மத்தயானை இராமன்பால் ஓடிவிட்டதென்றும், ஒரு பெண்மணிக்கு இதனிலும் தற்காக்கச் செய்துகொள்ளக்கூடிய முறை வேறில்லையாதலின் பிராட்டியின் நிறையில் யாதொரு குற்றமும் நிகழ்ந்திலதென்றும், கவி அருமையும் பெருமையும் பெறப் பாடுதல் பலமுறையும் சிந்தித்து மகிழத்தக்கது. இவ்வாறு கலித்தொகை பெருங்கதைகளினின்று தோற்றிய கருத்தொன்றினை நயம்படப் பெருக்கிக் கதாசந்தர்ப்பத்துக்கேற்ப அதனை அழகு பெற அமைத்துக்கொண்ட கம்பரது அருங்கவித்திறம் பாராட்டற்பாலதன்றே? கலித்தொகையினும் பெருங்கதைக் கருத்தே அவரால் இங்குப் பெரிதும் தழுவப்பட்டமை அறியலாம். அந்நூலிலுள்ள சொற்றொடர்களையும் பொருள்களையும் இவ்வாறே எடுத்துக்கொண்டு தமக்கேற்ற முறையில் கம்பர் அமைத்துப் பாடுதலை வேறிடங்களினும் நாம் காணலாகும். "பரந்துமீ னரும்பிய பசலை வானகம்" (தைலமாட்டு. 6) எனக் கம்பர் பாடிய தொடர்:—

"வாம்பில் பன்மீன் வயின்வயின் விலங்கிப்
பரந்துமீ தரும்பிய பசலை வானத்து"

(1, 33, 49-50.)

என்ற பெருங்கதையடிகளுடன் ஒத்திருத்தல் கண்டுகொள்க. இவ்வடிகளுள் 'பரந்து மீதரும்பிய' என்பதனைப் 'பரந்து மீனரும்பிய' என ஒரெழுத்தைமாற்றி, 'பன்மீன் வயின்வயின் விலங்கி' என வரும் முன்னடிப் பொருளும் அடங்கக் கம்பர் அமைத்துக்கொண்டஅழகு அறியத்தக்கது. இவ்வாறே:—

"உள்வழி யுணரா தழலுமென் னெஞ்சினைப்
பல்விதழ்க் கோதைப் பதுமா பதியெனும்

மெல்லியற் கோமகள் மெல்லென வாங்கித்
தன்பால் வைத்துத் தானுந் தன்னுடைத்
திண்பா னெஞ்சினைத் திரிதலொன் றின்றி
என்னுழை நிறீஇ'' (பெருங்கதை, 3, 8, 92-7.)

என்ற பெருங்கதைத் தொடரின் பொருளை "வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையு, மிருவரு மாறிப்புக் கிதய மெய்தினர்' என்று கம்பர் அமைத்திருத்தல் காண்க. இவ்வாறே முன்னூல்களினின்று காட்டக்கூடிய ஒப்புமைப்பகுதிகள் பல. இவற்றால் வான்மீகத்தினும் வேறுபட்ட கதைக்கூறுகளைக் கம்பர் பழைய தமிழ்நூல்களினின்றும் தழுவி அமைத்துக்கொண்டவரென்பதும், முன்னூற் கருத்துக்களைத் தமக்கேற்ற முறையில் வளம்படப்பெருக்கி நயம்பெறக் கூறவல்லவரென்பதும் நன்குவிளங்கக் கூடியன.

4. அகலியாசாபம்

கௌதம முனிவரால், அவர் மனைவி அகலியை இந்திரனுடன் கூடிய தீச்செய்கையின் பொருட்டு, அவ்விருவருமே சபிக்கப்பட்ட சரித்திரம் பிரசித்தமானது.

"ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி''

என்றார் திருவள்ளுவனாரும். அகலியையுடன் கலந்தபின், ஆங்குக் கௌதம முனிவர் வருதலையறிந்து "புரந்தரன் நடுங்கி ஆங்கோர் பூசையாய்ப் போகலுற்றான்'' என்றார் கம்பநாடர். இந்திரனை அவனது இயற்கையுருவத்துடன் அம்முனிவர் கண்டனர் என்று வால்மீகி கூறுவர். அன்றியும்,

"எல்லையி னுண மெய்தி யாவர்க்கு நகைவந் தெய்தப்
புல்லிய பழியி னோடும் புரந்தரன் போய பின்றை
மெல்லிய லாளை நோக்கி விலைமக ளனைய நீயும்
கல்லிய லாதி யென்றான் கருங்கலாய் மருங்கு வீழ்வாள்''

"பிழைத்தது பொறுத்த லென்றும் பெரியவர் கடனே யென்பர்
அழற்றருங் கடவு ளன்னாய் முடிவிதற் கருளு கென்னத்
தழைத்துவண் டிமிருந் தண்டார்த் தசரத ராம னென்பான்
கழற்றுகள் கதுவ விந்தக் கல்லுருத் தவிர்தி யென்றான்''

என்று கல்லுருவாக அகலியை சபிக்கப்பெற்ற நிலையைக் கம்பர் கூறுகின்றார். வான்மீகரோ "அநேக ஆண்டுகள் வரை உணவின்றிக் காற்றையுண்டு சாம்பரில் விழுந்து தவித்துக்கொண்டு வசிப்பாயாக. எல்லாப் பிராணிகட்கும் கண்ணுக்குப் புலப்படாமலே இவ்வாச்சிரமத்தில் வாழ்வாயாக. அருந்திறல்

படைத்த இராமன் இக்கொடிய வனத்துக்கு எப்போது வருவரோ அப்போதுதான் நீ புனிதமாவாய்" என்று கூறுகின்றார். இவ்வாறு முதனூலோடு மாறுபடக் கம்பர் பாடியதும் பழைய தமிழ்வழக்குப் பற்றியேயாகும். எட்டுத்தொகையுள் ஒன்றான பரிபாடலுள், திருப்பரங்குன்றத்துக் கோயிலில் அமைந்த சித்திரமண்டபத்தே, அகலிகைசாபம் பற்றிய சித்திரமும் எழுதப்பட்டிருந்ததென்றும், அவ்வாலயத்துத் தொழவருவோர் அதனைக் கண்டு,

"இந்திரன் பூசை; இவள் அகலிகை; இவள்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிது'—என்றுரை செய்வோரும்"

(19, 50—2.)

என்று அச்சித்திரம் அமைந்த திறத்தை வியந்து கூறுவதாகப் பாடப்பட்டுள்ளது. இதனால், சங்ககாலத்தில் வழங்கிய அகலிகையின் சாபவரலாறு இத்தகையதென்பது சுருக்கமாக விளங்கும். இதுவே பழைய தமிழிராமாயணங் கூறுங் கதையாகுமென்றும், இதனைத் தழுவியே கம்பருங் கூறலாயினர் என்றும் நாம் கருதத் தடையில்லை. இந்திரன் பூனையுருக்கொண்டதும் அகலிகை கல்லுருவானதும் பாத்ம புராணம், கதாசரித்ஸாகரம், துளசிதாஸர் ராமாயணம் முதலியவற்றினும் கூறப்படுவனவாம். இதனால் இவ் வரலாறு முற்காலத்தும் பிற்காலத்தும், தமிழகத்தும் பிறவிடங்களினும் பெருகவழங்கியதே யென்பது பெறப்படும். இக்கதை பற்றி வான்மீகத்துக்கு உரையிட்ட திலகர் கூறுவது வருமாறு:— "முன்சொல்லாத விஷயங்களைப் பின்னரேனும் பின் சொல்லாத விஷயங்களை முன்னரேனும் நிச்சயமாய் விளக்குவது வான்மீக முனிவர் வழக்கம். ஆதலால் இவர் சொல்லாததொன்றை உண்டென்பது அநுசிதம். புராண இதிகாசங்கள் எதுவும் வான்மீகத்துக்குப் பிற்பட்டதே யாதலால், அம்முதனூலுக்கு ஒவ்வாதபோது அது தள்ளத் தக்கதே. இக்கதை வான்மீகத்துள் எங்குங் காணாமையால் 'கல்லாகுக' என்று சபித்தாரென்ற புராணாந்தர கதை விருத்தமேயாம். ஆதலால் கல்பாந்தர விஷயம் என்று நயப்பித்துச் சொன்ன கோவிந்தராஜர் முதலியோர் வியாக்கியானங்கள் சிந்திக்கத்தக்கன" என்பதாம். இதனால் வடநூலாசிரியருள் ஒருசாரார்க்கு மேற்கூறிய தமிழ்வழக்கு ஒவ்வாதிருந்தமை தெரியலாம்.

சாஸ்திரம்

கண்ணாடி

பே. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.

மிகப் பழமையான காலம் முதல் கண்ணாடியை மக்கள் உபயோகித்து வந்திருக்கிறார்கள். அது முதன்முதலில் எப்பொழுது செய்யப்பட்டது என்று நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. பெர்லின் மியூசியத்திலே கண்ணாடிப்பொருள் ஒன்று இருக்கிறது. அதிலே மூன்றாவது அமேனெம்ஹேத் அரசனுடைய (*King Amenemhet III*) பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது. அந்த அரசன் பழைய எகிப்துதேச அரசர்களின் பன்னிரண்டாவது வமிசத்தைச் சேர்ந்தவன். கிறிஸ்து பிறப்பதற்கு முன் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே எகிப்து நாட்டில் அரசு புரிந்தவன். ஆகையால் இப்போதைக்கு 3800 வருஷங்களுக்கு முன்னாலேயே அந்தக் கண்ணாடி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

மேலும், எகிப்து தேசத்திலே பதினெட்டாவது அரசவமிசத்தைச் சேர்ந்த மூன்றாவது துட்மோஸ் (*Thutmose III*) என்னும் அரசன் அரசுபுரிந்த காலத்திலே அந்தத் தேசத்திலே கண்ணாடி மணிகளைச் செய்து வந்தார்கள் என்பதற்குப் போதிய ஆதாரம் இருக்கிறது. அந்தக் காலம் கிறிஸ்து பிறக்குமுன் பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். அதாவது சுமார் 3400 வருஷங்களுக்கு முன்புள்ள ஒரு காலமாகும்.

இவற்றிற்கும் மிகப் பழமையான ஒரு காலத்திலே சில வகைக் கண்ணாடி மணிகள் பாபிலோனியாவில் செய்யப்பட்டு வந்தன. ஊர் (*Ur*) என்னும் நகரத்துக்கு அருகிலுள்ள ஒரு பிரதேசத்திலே, அந்நகரத்திலே மூன்றாவது அரசவமிசம் அரசாண்டுவந்த காலத்தைச் சேர்ந்த ஒரு கல்லறையிலே சில வகைக் கண்ணாடி மணிகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றைப்

ஸார்டன் என்பவர் எழுதிய 'விஞ்ஞான சாஸ்திர வரலாறு' என்னும் புத்தகத்திலிருந்து தொகுத்தெழுதியது.

பார்த்தால் அந்தக் காலத்திலே அந்தப் பிரதேசத்திலே கண்ணுடி மணிகள் மிகவும் சாமானியமான பொருள்களாகத்தான் மதிக்கப் பட்டு வந்திருக்கவேண்டு மென்பது தெரியவருகிறது. இவற்றின் காலம் கி. மு. 2450ம் வருஷம் வாக்கில் இருக்கலாமென்று மதிக்கப்படுகிறது. அதாவது சுமார் 4500 வருஷங்களுக்கு முன்பு என்று சொல்லலாம்.

அஸ்ஸிரியா நாட்டிலும் வெகு காலமாகக் கண்ணுடி செய்யப்பட்டு வந்திருக்கிறது. நாம் காலத்தைக் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியபடியான ஆதாரங்களோடு பொருந்தி உள்ளது மிகப் பழமையான ஒரு கண்ணுடிப் பாண்டம். அது ஸார்கான் அரசன் (*Sargon*) காலத்தைச் சேர்ந்ததாகத் தெரிகிறது. அதாவது கி. மு. எட்டாவது நூற்றுண்டு.

ரோம ராஜ்ஜியத்திலும் மிகவும் ஏராளமாகக் கண்ணுடிச் சாமான்கள் செய்யப்பட்டு வந்தனவாகத் தெரிகிறது. ரோமராஜ்ஜியத்திலே அலெக்ஸாந்திரியா நகரத்தில் தான் கண்ணுடிச் சாமான்களை மிகவும் அதிகமாகச் செய்துவந்தார்கள் என்று ஸ்ட்ராபான் (*Strabon*) என்பவரும் ப்ளினி (*Pliny*) என்பவரும் சொல்லுகிருர்கள். இந்த நகரத்திலிருந்துதான் பலவிதமான கண்ணுடிச் சாமான்கள் தரைமார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் சீன தேசத்துக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும். ஹான் வமிசத்தின் சரித்திரங்களிலிருந்தும் இது தெரியவருகிறது. பிற்காலத்துச் சரித்திரங்களிலேயும் பத்து வகையான நிறநிறமான கண்ணுடிச் சாமான்கள் ரோம ராஜ்ஜியத்திலிருந்து சைன தேசத்துக்கு வந்தன வென்று குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கி. பி. மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத்திலே உள்ள வரலாறுகள் இவ்வாறு கூறுகின்றன.

சீனதேசத்திலே கி. பி. முதலாவது நூற்றுண்டு முதலே கண்ணுடிச் சாமான்களை உபயோகித்துவந்தார்கள். எனினும் அவர்களுக்குக் கண்ணுடி ஒரு செயற்கைப் பொருள் என்று அப்போது தெரியாது என்று சொல்லுவதற்கு இடம் இருக்கிறது. வெகுகாலமாக அதை ஒரு கனிப் பொருள் என்றே அவர்கள் மதித்து வந்தார்கள். ஸ்படிகம், ரத்தினங்கள் இவைகளைப் போலவே கண்ணுடியும் இயற்கையாகவே தோன்றும் ஒரு பொருள் என்று அவர்கள் எண்ணி வந்தார்கள்.

அந்தத் தேசத்திலே ஐந்தாம் நூற்றுண்டுக்கு முன்பு கண்ணுடிச் சாமான்கள் ஒன்றும் செய்யப்பட்டதாகத் தெரிய வில்லை. அப்பொழுது சீனதேசமானது வட ராஜ்ஜியம் என்றும் தென்

ராஜ்ஜியம் என்றும் இருபெரும் ராஜ்ஜியங்களாகப் பிரிவுபட்டிருந்தது. அயல் நாட்டிலிருந்து—இந்தோசிதியாவிலிருந்து—வந்த தொழிலாளர் சிலர் வடக்கு ராஜ்ஜியத்திலே இத்தொழிலைத் தொடங்கினர். அவர்களுக்கு வேண்டிய பொருள்களெல்லாம் அதன் தலைநகருக்குப் பக்கத்திலேயே நல்லவேளையாக அகப்பட்டன. அவர்கள் அங்கே செய்த கண்ணாடியானது மேல் நாட்டிலிருந்து வந்த கண்ணாடியைக் காட்டிலும் சிறந்ததாயிருந்ததென்று அந்நாட்டினர் கொண்டாடினர். இதே சமயத்தில் தான் தெற்கு ராஜ்ஜியத்திலும் இத் தொழிலைத் தொடங்கியதும். ரோம ராஜ்ஜியாதிபதி சீன அரசனுக்குச் சில கண்ணாடிச் சாமான்களை அன்பளிப்பாக அனுப்பினான். அவற்றைப் பெற்றுக் கொண்ட சீன அரசன் அவைகளை மிகவும் பாராட்டினான் என்பதைத் தெரிந்த ரோம மன்னன் கண்ணாடித் தொழிலில் வல்ல தொழிலாளி ஒருவனைச் சீனத்துக்குக் கடல் மார்க்கமாக அனுப்பி வைத்தான். அவன் சீனாவுக்கு வந்து அங்கே உள்ள கற்களைப் பளிங்காக மாற்றினான் என்று அத்தேச சரித்திரம் கூறுவதால் அவன் அந்தத் தேசத்திலேயே கண்ணாடித்தொழிலை நடத்தினான் என்பது தெளிவு.

குண்டலகேசி

இது நாதகுத்தனாரென்பவரால் இயற்றப்பெற்ற ஒருதமிழ்நூல்; சீவகசிந்தாமணி முதலிய ஐம்பெருங்காப்பியங்களுள் நான்காவது; பௌத்த சமயத்தைச் சிறப்பித்துக் கூறுவது; குண்டலகேசியென்னும் ஒருவணிக மாதின் சரித்திரத்தைக் கூறுதலின் இப்பெயர் பெற்றது; இதன் சில செய்யுட்கள் தொல்காப்பியவுரை, யாப்பருங்கல விருத்தி, வீரசோழியவுரைகளிலும் பலநூல்களிலிருந்து தொகுத்த புறத்திரட்டு என்னும் நூலிலும் நீலகேசியிலும் சிவஞான சித்தியார் பரபக்கத்திற்கு ஞானப்பிரகாசர் இயற்றிய உரையிலும் காணப்படுகின்றனவேயன்றி நூல் முழுவதும் இதுகாறும் எங்கும் கிடைத்திலது; இது குண்டலகேசிவிருத்தமென்றும் பெயர் பெறும்; இதில் இக்காலத்து வழங்காத சொல்லும் பொருளும் உண்டென்பர். **—மஹா மஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள்.**

அருவியும் அதன் பயன்களும்

கே. ஸீ. வீரராகவையர், எம். ஏ., எல்.டி.

அருவிஎன்பது மலைப்பிரதேசங்களில் உள்ள உயரிய இடங்களிலிருந்து கீழேவிழும் நீர்த்தொகுதியாகும். இம்மாதிரியாகப் பெரிய அணைகளைத்தாண்டி விழும் நீரும் அருவி எனப்படும். மழைபெய்யும்பொழுது நமது வீட்டுமாடிகளினின்று விழும் நீர்த்தொகுதியும் அருவி என்றே அழைக்கப்படுகிறது. முதலில் சொல்லியது இயற்கையருவி; பின்னர்ச்சொல்லியன செயற்கையருவிகள். இயற்கை யருவிகள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்; மழைக்காலங்களில் பேராரவாரத்துடன் விழும். அப்பொழுது அவைகள் பயங்கரமாகவும் கம்பீரமாகவுமிருக்கும்.

உலகத்திலே உன்னத அருவிகள் பலவுள. அவைகளின் உயரம் பலதிறத்ததாகும். மைசூர் சம்ஸ்தானத்திலுள்ள ஜேர்சோப்பா அருவி 900 அடி உயரத்திலிருந்தும், பிரட்டிஷ் கயானாவிலுள்ள கைத்தூர் அருவி 822 அடி உயரத்திலிருந்தும், சாம்பஸி நாட்டிலுள்ள விச்டோரியா அருவி 415 அடி உயரத்திலிருந்தும், நையகாரா அருவி 326 அடிஉயரத்திலிருந்தும், சிவசமுத்திர அருவி 250 அடி உயரத்திலிருந்தும், பைகாரா அருவி 200 அடி உயரத்திலிருந்தும், திருக்குற்றால அருவி, 200 அடி உயரத்திலிருந்தும் விழுகின்றன. இவைகளிற் சில ஒரே வீழ்ச்சியாகவும், வேறு சில பலபாகங்களாகப் பிரிந்து தாவித்தாவிப் பல பல உயரிடங்களினின்று குதிக்கும் வீழ்ச்சிகளாகவும் காணப்படும்.

இவைகளின் அருகில் போவது கஷ்டமாகும்; சில இடங்களில் மேடைகளைக்கட்டிப் பருத்த கம்பிகளைக் கைப்பிடியாக வளைத்து அருகில்போய் ஸ்நானம்செய்யும் வசதிகளைச் செய்திருக்கிறார்கள். அருவிகளில் ஸ்நானம் செய்வது உடம்பைப் பிடித்து விட்டதுபோலிருக்கும்; தலையிலுள்ள எண்ணெய்ப்பசை முதலியன பறந்துபோய்விடும்; மனது உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் பெறும். அருவிகளில் ஸ்நானம் செய்வது பண்டைக்கால வழக்கத்திலுமுளது. சங்கச்செய்யுள்கள் என்று கருதப்படும் பழைய நூலாகிய பத்துப்பாட்டில் ஒன்றான கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்

டில் இந்த அருவிஸ்நானம் நன்றாக விவரிக்கப்பட்டிருக்கிறது: குறிஞ்சியென்பது மலையும் மலைசார்ந்த இடமுமாகும். கபிலர், மலையில் அருவி உண்டாவதற்குக் காரணமும் கற்பிக்கிறார்; அவர் சொல்லுவதாவது:—

“ விசும்பாடு பறவை வீழ்பதிப் படர
நிறையிரும் பௌவங் குறைபட முகந்துகொண்
டகலிரு வானத்து வீசுவளி கலாவலின்
முரசதிர்ந் தன்ன வின்குர லேற்றொடு
நிரைசெல னிவப்பிற் கொண்மூ மயங்கி
இன்னிசை முரசிற் சுடர்ப்பூட் சேஎய்
ஒன்னார்க் கேந்திய விலங்கிலை யெஃகின்
மின்மயங்கு கருவிய கன்மிசைபொழிந்தென
அண்ண னெடுங்கோட் டிழிதரு தெண்ணீர்
அவிர்துகில் புரைய மவ்வெள் ளருவித்
தவிர்வில் வேட்கையேந் தண்டா தாடிப்
பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி
நளிபடு சிலம்பிற் பாயம் பாடி” (46—58).

“தலைவனுடைய நெடிய மலைச்சிகரத்தினின்றும் குதிக்கின்ற தெளிந்த நீரையுடைய விளங்குகின்ற வெள்ளிய துகிலையொக்கும் அழகிய வெள்ளிதாகிய அருவியிலே நீங்குதலில்லாத விருப்பமுடையேமாய் அமையாமல் விளையாடி, செறிவுண்டான மலையிடத்தே பளிங்கைக் கரைத்துச் சொரிந்துவைத்தாற்போன்ற பரந்த சுனையைக் குடைந்து விளையாடுகின்றவிடத்தே எங்கள் மனதுக்கு விருப்பமானவற்றைப் பாடி” என்ற உரை அருவியின் அழகை விளக்குகின்றது. இம்மாதிரியாகவே இன்றைக்கும் திருக்குற்றால அருவியில் ஜனங்கள் ஆடி ஆவணி மாதங்களில் முழுகி விளையாடுவதைக் காணலாம்.

மேடிட்ட இடங்களிலிருந்து விழும் அருவிக்கு அபாரமான சக்தி உண்டு. அந்தச்சக்தியைக் கலைவல்ல பேரறிஞர்கள் மனிதர்களின் வாழ்வுக்கு உபயோகமாகும்படி இயந்திர சக்தியாக மாற்றிப் பல அற்புதங்களைச் செய்திருக்கிறார்கள். நமது நாட்டில் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள பாபநாச அருவியை இந்தமாதிரி உபயோகித்துப் பெரிய பஞ்சாலைக்கு வேண்டிய சக்தியைப்பெற்று ஹார்வி கம்பெனியார்களால் பெரிய தொழிற்சாலை நடத்தப்பட்டு விளங்குகிறது. அருவியின் சக்தியை இயந்திர சக்தியாக மாற்றலாம். அதனையே பின்னும் மின்சாரசக்தியாக மாற்றிப் பல்பல

வேலைகளைச் செய்வதற்கு உபயோகிக்கலாம்; இந்த மின்சாரசக்தியை அவ்விடங்களிலிருந்து பல மைல்களுக்கப்பாலுள்ள இடங்களுக்கும் அனுப்பலாம். இந்த மின்சாரசக்தியை உபயோகிப்பதால் தொழில்களுக்குச் செலவு குறைகின்றது; கரி, நிலக்கரி முதலியவற்றை அதிகமாக உபயோகிக்க வேண்டாம்; சுற்றுப் புறத்திலுள்ள காற்றுக்கெடாது; வீட்டின்உட்புற வெளிப்புறங்கள் சுத்தமாயிருக்கின்றன. ஆகையால் இக்காலத்தில் நிலக்கரியின் சக்தியைவிட மின்சாரசக்தியையே முதலாளிகளும் வேலையாட்களும் பெரிதும் விரும்புகிறார்கள். இயந்திரங்கள் ஓட்டுதல், நெசவு நெய்தல், மாவரைத்தல், நெல்குத்தல், கல்உடைத்தல், விளக்கெரித்தல், மரம் அறுத்தல், தண்ணீர் இறைத்தல் முதலிய பல வேலைகளுக்கும் மின்சாரசக்தி பயன்படுகிறது.

சிவசமுத்திர அருவியின் சக்தியை மின்சார சக்தியாக மாற்றுவதற்கு மைசூர் திவானாகஇருந்த ஸர் கே. சேஷாத்திரி ஐயர் ஐம்பதுவருஷங்களுக்கு முன்பு பாடுபட்டு அடிகோலினர். அன்னாருடைய ஞாபகார்த்தமாக அங்குள்ள மின்சார உற்பத்தி சாலையை "சேஷாத்திரி உற்பத்திசாலை" என்று பெயரிட்டு அழைக்கிறார்கள்.

அருவியின் அடியில் இயந்திரங்களை அமைப்பது கஷ்டம்; மேலும் அருவியில் மழைக்காலத்திலும் மற்றக்காலங்களிலும் ஒரே அளவாக ஜலம் விழுவதில்லை; தவிரவும் அருவியின் உயரத்தைவிட அதிக உயரவித்தியாசம் கிடைத்தால் அது மின்சார சக்தியை உண்டுபண்ணுவதற்குச் சிறந்ததாகும். இக்காரணங்களைமுன்னிட்டு அருவி தலைக்குமேலே ஒரு அணையைக்கட்டி ஜலத்தைத்தேக்கி, அத்தேக்கத்திலிருந்து வேண்டிய அளவு ஜலம் எல்லாக்காலங்களிலும் கிடைக்கும்படியாக கால்வாய்கள், குழாய்கள் மூலமாக மின்சார உற்பத்திசாலைக் கட்டடத்துக்குக் கொண்டு வருவது வழக்கம். அதேமாதிரி சிவசமுத்திரத்திலும் அமைந்துளது; அருவியின் உயரம் 250 அடிதான்; ஆனால் மேற்கே இரண்டு மைலுக்கப்பால் ஒரு அணைகட்டி ஜலத்தைத்தேக்கி இரண்டு மைல் நீளத்துக்குக் கால்வாய் மூலமாயும் பிறகு சுமார் ஒருஅடிமுதல் 3½ அடி குறுக்களவுள்ள 13 இருப்புக் குழாய்களின் மூலமாயும் ஜலம் உற்பத்திசாலையை அடைகிறது. மேட்டு வாய்க்காலுக்கும் உற்பத்திசாலைக்கும் 400 அடி உயர வித்தியாசம் ஏற்பட்டுளது. உற்பத்திசாலை நான்குமெத்தை அல்லது மாடியுள்ள 100 அடி உயரக் கட்டடமாகும். அதை மேலேயுள்ள வாய்க்காலிலிருந்து பார்த்தால் ஒரு சிறு வீடுபோல் தோன்றும்;

கீழேபார்த்தால் பெரிய பள்ளத்தாக்கு தென்படும்; பார்ப்பதற்கே பயங்கரமாயிருக்கும்.

குழாய்களின் வழியாய் விழும் ஜலம் உற்பத்திசாலையிலுள்ள காற்றாடிகளில் வந்து மோதுகின்றது; உடனே காற்றாடிகள் வெகுவேகமாய்ச் சுழல ஆரம்பிக்கின்றன. காற்றாடி சுழலும் போது அதன் அச்சு அதிவேகமாகச் சுற்றுகின்றது. இந்தச் சுற்றுவேகத்தைக் காந்தசக்தியின் உதவிகொண்டு மின்சாரசக்தியாக மாற்றுகிறார்கள். இச்சக்தியைச் சேகரித்துப் பலஇடங்களுக்கும் அனுப்புவதற்காக அனேக இயந்திரங்களை அங்கு அமைத்துள்ளார்கள். அங்கேபோகிறவர்கள் ஜாக்கிரதையா யிருப்பதற்காகவும் உலோகசம்பந்த பொருளைத் தொடக்கூடாது என்பதற்காகவும் பல பாகங்களில் சிவப்புவர்ணத்தில் "எச்சரிக்கை" என்ற குறிகள் எழுதித் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. இவ்விடத்திலிருந்து மின்சாரசக்தி பல இடங்களுக்கும் செப்புக்கம்பியின் மூலமாகக் கொண்டுபோகப் படுகிறது.

இங்கே தயாரிக்கும் மின்சாரசக்தி சுமார் 35 மைல் தூரத்திலுள்ள மைசூருக்கும், 70 மைல் தூரத்திலுள்ள பங்களூருக்கும் 100 மைல் தூரத்திலுள்ள கோலார் தங்கச்சுரங்கங்களுக்கும் அனுப்பப்படுகிறது. முதல்முதலில் சிவசமுத்திரம் மின்சார உற்பத்தி கோளார் தங்கச்சுரங்க வேலைக்காகவே தயாரிக்கப் பட்டது; இப்பொழுது அச்சக்தி பங்களூர், மைசூர் முதலிய நகரங்களில் விளக்குகள், விசிறிகள் முதலிய வசதிகளுக்கு உபயோகப்படுதலல்லாமல், பஞ்சாலைகள், நெசவுசாலைகள், மாவரைக்கும் சாலைகள், மரமறுக்கும் சாலைகள் மற்றத் தொழிற்சாலைகள் முதலியவைகளுக்கும் உதவுகின்றது. சமுதாய நன்மைகளுக்கும் தொழில்களுக்கும் மின்சாரசக்தி மேன்மேலும் விரும்பப்படுகிறது; ஜனங்களின் தேவைக்குத் தக்கபடி மின்சாரஉற்பத்தியும் ஐந்து, ஆறு தடவையாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. மின்சாரசக்தியின் தேவை எதிர்பார்த்ததற்கு அதிகமாக வேண்டப்பட்டதாதலின், சிவசமுத்திரத்துக்கும் 65 மைல் மேற்கே மேட்டுப்பூமியில் ஒரு பெரிய அணைகட்டுவதற்கு 1912-ல் ஒரு யோசனை ஆரம்பமாயிற்று; 1920-ல் 65 அடி உயரமுள்ள ஒரு அணை நிர்மாணமாயிற்று; அதனால் உண்டானதேக்கம் கிருஷ்ணராஜசாகரம் எனப்படுகிறது; அத்தேக்கத்திலிருந்து இயந்திரங்களை ஓட்டுவதற்கு வேண்டிய சக்தியை அளிக்கவல்ல ஜலத்தொகுதி கால்வாய்கள் மூலம் பெறப்படுகிறது.

மைசூர் சம்ஸ்தானத்தில் கிராமங்களில்கூட மின்சாரசக்தியைக் கிராமவாசிகள் உபயோகிக்கத் தொடங்கிவிட்டனர்.

தோட்டங்களுக்கும் ஜலம் இறைப்பதற்கும், நூல்நூற்று ஆடைகள் நெய்வதற்கும், மாஅரைப்பதற்கும், பீடி சுருட்டுகள் செய்வதற்கும், விளக்குகளுக்கும் பெரிதும் உபயோகமாகின்றது. இத்தொழில்களில் மின்சக்தி உபயோகப்படுவதால் சுமார் 100-டன் விறகுக்குமேல் தினசரி உபயோகத்தில் இப்பொழுது குறைந்துவிட்டதென்றும், நாடோடி வீட்டுச் செலவுக்கு வேண்டிய விறகின் விலை குறைந்திருக்கிறதென்றும், ஜலசக்தியின் உபயோகத்தால் காட்டுமரங்கள் வெட்டுப்படாமல் வளருகின்றன வென்றும், இதனால் மழை ஜலசௌகரியம் ஏற்படுகிறதென்றும் அறிஞர்கள் கணக்கிட்டுச் சொல்லுகிறார்கள். 4000 குதிரைப் பல வேகத்துடன் 1902-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸ்தாபனம் இப்பொழுது 40,000 குதிரைப் பலம் திட்டத்துக்குப் பெருகி மைசூரின் பொருளாதார முன்னேற்றத்துக்கு முக்கியகாரணமாக இருந்துவருகிறது.

நமது மாகாணத்தில் பல அருவிகள் உள. அவைகளினின்று சுமார் பத்துலக்ஷம் குதிரைப் பல வேகம் அடையமுடியுமென்று சர்க்கார் நிபுணர்கள் கணக்கிட்டிருக்கின்றார்கள். இவைகளில் பெரிதாகிய நீலகிரியிலுள்ள பைகாராநதி நீரோட்டத்தைக் கொண்டு ஒருலக்ஷம் குதிரைப் பல வேகம் அடையமுடியுமென்று கண்டுபிடித்து, சர்க்காரின் தீவிரமுயற்சியால் 1928-ல் ஆரம்பிக்கப்பட்டு 1933-ல் முற்றுப்பெற்றுள்ள பைகாராமின்சார உற்பத்தி சாலை உதகமண்டலத்திலிருந்து 15-மைல் தூரத்திலுள்ளது; இப்பொழுது 21,000 குதிரைப் பல வேகமே தயாரிக்க ஏற்பாடாயிருக்கிறது; சமயத்துக்கும் தேவைக்கும் தக்கபடி அதை ஒரு லக்ஷத்துக்கு உயர்த்துவதற்கு வேண்டிய சௌகரியங்களை நிர்மாணித்து வைத்திருக்கிறார்கள்.

பைகாராநதி 180 அடி, 200 அடி உயரமுள்ள இரு செங்குத்தான அருவிகளாக விழுகின்றது; ஆனால் மலைஉச்சியிலிருந்து சமவெளிக்கு வருவதற்குள் 4000 அடி வித்தியாசம் உண்டாகிறது. பைகாரா நதிகளின் ஜலத்தை ஒரு ஏரியாகத் தேக்கியிருக்கிறார்கள்; அதிலிருந்து சிவசமுத்திரத்தில் செய்திருப்பது போல, இரும்புக்குழாய்களின் வழியாய் 3000 அடிக்குக்கீழேயுள்ள மின்சார உற்பத்திசாலைக்கு ஜலம் கொண்டுவரப்படுகிறது; மூன்று குழாய்கள் மலைச்சார்பில் பிணைக்கப்பட்டிருக்கின்றன; அவைகளின் மொத்த நீளம் 10,000 அடி. அக்குழாய்களின் கீழ்க்கோடியில் விழும் ஜலம் வெகுசக்திவாய்ந்தது. அச்சக்தியை உபயோகித்து அக்குழாய்களுடன் சேர்க்கப்பட்டிருக்கும் காற்றாடி

இயந்திரங்களை ஓட்டி, காந்தசக்தியின் மூலமாய் மின் ாரசக்தியைப் பெறுகிறார்கள்; அதைச் சேகரித்து வைத்து மற்ற இடங்களுக்கு அதை அனுப்புகிறார்கள்.

மேட்டுப் பூமியிலிருந்து பள்ளபூமிக்கு ஜலம் பாயும்; அதே மாதிரி உயர்ந்த அழுத்தத்திலிருந்து (*voltage*) தாழ்ந்த அழுத்தத்திற்கு (*voltage*) மின்சாரசக்தி கம்பிகளின் மூலம் பாயும். இந்த அழுத்தத்திற்கு **வோல்ட்** என்று பெயர். பைகாராவின் ஜலவேகத்தைக்கொண்டு, மின்சாரசக்தி 66,000 **வோல்ட்** அழுத்தம் வரை செய்யப்படுகிறது. பைகாராவிலிருந்து கோயம்புத்தூருக்கு இரண்டு மின்சாரப் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. கோயம்புத்தூரில் அந்த 66,000 **வோல்ட்** 22,000 அல்லது 4000-க்குத் தாழ்த்தப்பட்டு அங்கிருந்து வெவ்வேறு இடங்களுக்குச் சக்தி செல்லுகிறது. 22,000 **வோல்ட்** பாதையொன்று பொள்ளாச்சிக்கும் ஆனைமலைக்கும் செல்லுகின்றது; அதைப்போன்ற மற்றொரு பாதை திருப்பூர், ஈரோடு, சேலம் முதலிய இடங்களுக்குச் செல்லுகிறது; உதகமண்டலம், கூனூர் முதலிய இடங்களுக்கும் அங்குள்ள தேயிலைத்தோட்டங்களுக்கும் பைகாராவிலிருந்து 11,000 **வோல்ட்** பாதைமூலமாகச் சக்தி அனுப்பப்படுகிறது. திருச்சூர், எர்ணாகுளம் முதலிய இடங்களுக்கும், ஈரோட்டிலிருந்து கரூர்வழியாகத் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கும்பகோணம், நாகபட்டினம் முதலிய இடங்களுக்கும் மின்சாரசக்தியை அனுப்ப சர்க்கார் அனுமதிகொடுத்திருக்கிறார்கள். 350 மைல் நீளம் மின்சாரக் கம்பிப்பாதைகள் போட்டாய்விட்டன; இன்னும் இருநூறு மைல் நீளம் பாதைகள் போட ஏற்பாடாயிருக்கிறது.


பைகாரா மின்சாரஸாதனத்திற்குச் சுமார் 120-லக்ஷரூபாய் செலவாயிருக்கிறது. வேலைதொடங்கிப் பத்தாவது வருஷத்தில் நூற்றுக்கு $6\frac{3}{4}$ விகிதம் வட்டிகட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சரக்குகளைப்போலவே மின்சாரசக்தியும் விற்பனையாகிறது. விலையின் விகிதம் அழுத்தத்தின் உயர்வுக்கும் நேரத்துக்கும் சக்திக்கும் தகுந்தபடி வேறுபாடடையும். உயர்ந்த **வோல்ட்**களில் சக்தியை வாங்குவோர் தாம் உபயோகிக்கும் அளவைப் பொறுத்து 7 பைசாமுதல் 1 அணாவரை **யூனிட்** சக்திக்கு விலை கொடுப்பார்கள்; சிறுயந்திரசாலைக்கு 400 வோல்ட்டில், யூனிட்டுக்கு 10 பைசாமுதல் 15 பைசாவரை விலையுண்டு; விசிறி, விளக்கு முதலியவைகளுக்கு யூனிட்டுக்கு 4 அணாவாகும்; தெருக்களுக்கு விளக்கெரிக்க இரண்டணாவாகும்; மின்சாரசக்தியின் உபயோகத்தால் உண்டாகும் செல்வமும் மற்ற ஜனசமூக நன்மை

களும் பலதிறத்தனவாகும். பொதுஜன ஆதரவும் உற்சாகமும் இருந்தால், கிராமங்களிலும் தேவையானமட்டும் மலிவாக இம்மின் சாரசக்தி சென்று கிராமவாசிகளின் பணத்தைப் பெருக்கி, சமூக நன்மைகளை அதிகரிக்கச்செய்து, கிராமமக்களை நோயற்றவாழ்வு வாழச் செய்யுமென்பதிற் சந்தேகமில்லை.

மின்சாரசக்தி கம்பியின் மூலமாய் அதிவேகமாய் ஓடும்; எளிதாகவும் மலிவாகவும் உடனேயும் அதை வெகுதூர இடங்களுக்கு அனுப்பலாம். நமது தமிழ்நாடுகளில் நிலக்கரி, எண்ணெய் முதலிய எரிபொருள்கள் இதுவரை கிடைக்கவில்லை; ஆனால் அருவிகளின் ஜலசக்தி மிகுதியாக இருக்கிறது; ஆதலின் அதைப் பெறும் இடங்களில் அதை மின்சாரசக்தியாக மாற்றினால் எல்லா இடங்களுக்கும் அச்சக்தியை அனுப்பிவிடலாம். முன்னாட்களில் கரியும் எண்ணெயும் அகப்படும் இடங்களில்தான் தொழிற்சாலைகள் உண்டாயின; தொழிலாளர்கள் கிராமங்களை நீத்து அவ்விடங்களில் கூடினர். நெருக்கம் மிகுதிப்படவே வாழ்வில் படுகெடுதிகள் உண்டாயின; சமூகச் சச்சரவுகளும் ஏற்பட்டன. தொழில் ஆலைகள் ஓரிடத்தில் மிகுவதைவிட பல இடங்களில் பரந்து இருத்தலே சிறந்ததாகும். அப்படிச் செய்வதற்கு மின்சாரசக்தியே தக்க கருவியாகும். அருவிகள் இருக்கும் இடங்களில் மின்சார சக்தியை மலிவாக உண்டாக்கி, எங்கேதேவையோ அங்கே எளிதில் உடனே அதை அனுப்பச்செய்தலே நன்று. தொழிலாளிகளும் கிராமங்களை விட்டு நீங்கவேண்டாம்; மின்சார சக்தி அவர்களைத்தேடி வரும்; விவசாயப்பொருள்கள் விளையும் இடங்களிலேயே அவைகளை உபயோகத்துக்கு ஏற்ற வேறு பொருள்களாக அச்சக்தியைக் கொண்டு மாற்றிவிடலாம். போக்குவரத்துக்கும் முக்கிய சாதனத்தைக் கொடுக்க வல்லது அது. ஆகையால் இயற்கையில் நமக்குக் கிடைத்திருக்கும் சாதனங்களைப் பயன்படுத்தி அனுபவிப்பதே அறிஞர்களின் வழக்கமாகவுளது. நமது நாட்டு அருவிகளின் இயற்கையழகைப்பார்த்து ஆனந்திப்பதோடு அவைகளை நவீனமுறையில் ஆதரித்து, அவைகளினின்று முழுப்பயனையும் பெறுவது கற்றோரின் கடமையாகும்; துரைத்தனத்தாரின் பொறுப்புமாகும்.

சேலம்ஜில்லா மேட்டூர் என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பெரிய அணையின் ஒருபுறத்தில் அதிகஉயரம் ஜலம் தேங்கி நிற்கிறது; அவ்வணையின் அடியில் பெரிய குழாய்களை அமைத்து அவைகளின் வழியாய் மறுபக்கத்திலும் ஜலசக்தியை அடைவ

தற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அம்மேட்டூர்த்தேக்கத்திலும்



திருக்குற்றால அருவி

மின்சாரம் உற்பத்திசெய்து பக்கத்துக் கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கும் அதை அனுப்பப் பிரவிருத்தி நடந்து வருகிறது.

ஒளி வளைவு

அ. குப்புஸ்வாமி ஐயர்

காற்றைப் போலவே ஒளியும் கண்ணுக்குப் புலப்படாத பொருள். மிகவும் நுட்பமான பல பரமாணுக்கள் நம்மைச்சூழ்ந்து எங்கும் பரவியிருக்கின்றன. இவை ஒளிபெற்றுத் துலங்குவதனுல் நாம் வெளிச்சத்தைப் பார்க்கிறோம். ஒளி பொதுவாக நேர்வழியில் செல்லுகிறது. வாயு, ஜலம், பளிங்கு, அப்ரகம் முதலான பொருள்களில் ஒளி ஊடுருவிச் செல்லும். அதாவது இந்தவஸ்துக் களில் புகுந்து செல்லும். ஒரு சிறு நீரோட்டத்தைக் கல் முதலான ஏதேனும் ஒரு வஸ்து தடுக்கும்போது நீரோட்டம் தன்வழியை மாற்றிக்கொண்டு வளைந்து ஓடத்தொடங்கும். இதுபோலவே நேர்வழியிலே செல்லுகிற ஒளியை வாயு, ஜலம் சிலவகைக் கண்ணுடிகள் முதலிய வஸ்துக்கள் தடுக்கும்போது உடனே ஒளியானது வளைந்து செல்லத்தொடங்கும். இதை 'ரிப்ராக் ஷன்' (*Refraction*) என்று இங்கிலீஷ் பாஷையில் வழங்கு கிறார்கள். இதை நாம் 'ஒளிவளைவு' என்று சொல்லலாம். சுமார் இருநூறு மைல் உயரம்வரையில் பூமியை வாயுமண்டலம் (*Atmosphere*) சூழ்ந்திருக்கிறது. இது நமது கண்களுக்குத் தெரியாது. வாயு அலைந்து வீசினுல் காற்று வீசுகிறது என் கிறோம். வாயு அலையாமல் இருந்தால் விசிறியினுல் அதை அலைத்துக் காற்று வீசும்படி செய்கிறோம். வாயுமண்டலம் ஒன்றன் மேலொன்றாக அடுக்கிவைக்கப்பட்ட மெல்லிய படலங்களாக அமைந்திருக்கிறது. மேலே உள்ள படலங்கள் அடியிலிருப்பவை களை அமுக்குகின்றன. ஆகையால் பூமிக்கு அருகே அமர்ந்திருக் கிற வாயுமண்டலத்தில் நெருக்கம் (*Pressure*) அதிகம். ஆகாயத் தில் தோன்றும் சோதிகளின் ஒளி வாயுமண்டலத்தைத் தொடும் வரை நேராக வருகிறது; பிறகு ஒருபுறமாகவே வளைந்து வரத் தொடங்குகிறது. இதனுல் வானசோதிகளை உண்மையான நிலைமை யில் நாம் பார்ப்பதில்லை; சற்று உயரத்தில் இருப்பதாகவே அவை நமக்குப் புலப்படுகின்றன. ஒளிவளைவு அடிவானத்தின் (*Hori-zon*) அருகே அதிகமாக இருக்கும். சூரியன் அல்லது சந்திரன் அடிவானத்தின் கீழே இருக்கும்போதே ஒளிமடங்கி வாயுமண்ட லத்தில் பிரதிபலித்து பிம்பம் முழுதும் அடிவானத்துக்கு மேலே

இருப்பதுபோல் தோன்றும்; மேற்கே மறைந்தபிறகும் சூரியன் அடிவானத்திற்கு மேலே இருப்பதாகத் தோன்றும். இதனால் சூரிய உதயஅஸ்தமனங்கள் இரண்டு நிமிஷங்களுக்கு முன்பின்னாக நமக்குத் தெரிகின்றன.


ஒளிவளைவு வஸ்துக்களின் வடிவங்களையும் விகாரப்படுத்திக் காட்டுகிறது. ஒரு நேரான நீண்ட கண்ணாடிக்குழாயைத் தண்ணீருக்குள் செருகி அதன் பிரதிபிம்பத்தைப் பாருங்கள்; இதன் வடிவம் நேராக இராமல் வளைந்தும் பருத்தும் இருக்கக் காண்பீர்கள். உதய அஸ்தமன நேரங்களில் சூரியசந்திரர்களின் பிம்பங்கள் அடிவானத்தில் அமர்ந்திருக்கும்போது ஸரிவட்டமாகத் தோன்றாமல் முட்டைவடிவமாகத் தெரிகின்றன. இதுவும் ஒளிவளைவின் செய்கையேயாகும்.

காலையிலும் மாலையிலும் ஸந்திவெளிச்சம் (*Twilight*) தோன்றுவதற்கும் ஒளிவளைவு காரணமாகிறது. சூரியன் உதிக்கும் முன்னும் மறைந்த பின்னும் ஒளிக்கதிர்கள் (*Light rays*) பூமிக்கு மேற்பாகத்தில் வாயுமண்டலத்தில் புகுந்து மேல்நோக்கிச் செல்லுகின்றன; இந்த ஒளியின் அதிகபாகம் வாயுமண்டலத்தில் நிறைந்திருக்கிற அணுக்களால் தடுக்கப்பட்டுச் சிதறிப் பல பக்கங்களிலும் பரவுகிறது. இதனால் சூரிய உதய அஸ்தமனங்களுக்கு முன்னும் பின்னும் வானம் சிவந்து தோன்றுகிறது.


பூரணசந்திரகிரகணத்தில் சந்திரபிம்பம் முற்றும் பூமியின் நிழலில் புகுந்தபிறகும் மங்கிய தாமிரநிறமாகப்பிம்பத்தைக் காண்கிறோம். இதற்கும் ஒளிவளைவே காரணம். பூமி சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவே வந்து சூரிய ஒளியைச் சந்திரனில் படாமல் தடுக்கிறது; ஆனாலும் சூரியகிரணங்களிற் சில பூமியின் மேற்பாகத்தைப் பரிசித்து வாயுமண்டலத்தில் வளைந்து புகுந்து சந்திரபிம்பத்தைத் தாக்குகிறது; அங்கிருந்தும் மடங்கி நெளிந்து மறுபடியும் பூமியின் மீது விழுகிறது; ஆகையால் சந்திர பிம்பம் சிவந்து காண்பது ஒளிவளைவின் வன்மையால்தான்.

சூரியன் மறையும்போதும் உதிக்கும்போதும் சந்திரகிரகணம் நிகழ்ந்தால் மற்றோர் அற்புதக் காட்சி தோன்றும்: இரண்டு பிம்பங்களும் ஒளிவளைவின் வன்மையால் அடிவானத்திற்கு மேலே தோன்றும்; இந்த நிலைமையில் மேற்கே சூரியன் பிரகாசிக்கும்போதே கீழ்த்திசையில் கிரகணத்துடன் சந்திர பிம்


பமும் தோன்றும். இவ்விதக்காட்சி கி. பி. 1666, 1668, 1750-ம் வருஷங்களில் நேர்ந்ததெனப் [1]பார்க்கர் துரை உரைத்திருக்கிறார்.




முப்பட்டைக்கண்ணாடியின் வழியாக ஒளிசெல்லும்போது வளைதல்



ஒளியானது மையம்குவிந்த கண்ணாடி வழியாகச் செல்லும்போது வளைதல்



ஒளியானது மையம்குழிந்த கண்ணாடி வழியாகச்செல்லும்போது வளைதல்



பாத்திரத்தின் அடிமட்டத்திலுள்ள நாணயம் உயர்ந்து தோன்றுதல்

[1]*Elements of Astronomy*, *George W. Parker, M.A.*; *Eclipses*, p. 171

ஒளிநிலை வழு

ஒளி ஒலியைக்காட்டிலும் வேகமுள்ளது. மின்னலும் இடியும் ஒரே சமயத்தில் உண்டாகின்றன; ஆனாலும் முதலில் நாம் மின்னலைப் பார்க்கிறோம்; பிறகுதான் இடி முழங்குவதைக் கேட்கிறோம். ஒளி ஒரு விநாடிநேரத்தில் 1,86,000 மைல் தூரம் செல்லுகிறது என்பதைப் பலவாறு ஆராய்ந்து அறிந்திருக்கிறார்கள்.

காற்றில்லாத காலத்தில் மழை பொழியும்போது மழைத் துளிகள் செங்குத்தாக விழுகின்றன. நாம் வெளியே நின்றால் குடையைச் செங்குத்தாகப் பிடித்துக்கொள்ளுகிறோம். வேகமாக ஓடுவோமானால் மழைத்துளிகள் எதிரிலிருந்து சாய்ந்து விழுவதைக் காண்கிறோம்; குடையைச்சாய்த்துப் பிடித்துக்கொள்ளுகிறோம். மழைத்துளிகள் செங்குத்தாகவே விழுந்தாலும், நாம் ஓடுவதால் அவை சாய்ந்து நம்மேல் விழுகின்றன; இதை மழையின் வழு என்று சொல்லலாம்.

பூமி சூரியனைச் சுற்றி இடைவிடாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. பூமி சூரியனிடமிருந்து ஒளியை அடைகிறது. ஒளி வெகு வேகமாகச் சென்றும் சூரியனிலிருந்து பூமிக்கு வந்துசேர 8-நி. 18-செ. நேரம் ஆகிறது. இதற்குள்ளாகப் பூமி தன் வழியில் சுமார் 150 மைல் தூரம் செல்லுகிறது. இதனால், பூமியிலிருந்து நாம் சூரியனைப் பார்க்கும்போது உண்மையான நிலைமையில் சூரியன் நமக்குத் தெரிவதில்லை; சற்றுக் கிழக்கே நகர்ந்திருப்பதாகவே தெரிகிறது; சூரியனின் நிலை வழுவித் தோன்றுகிறது. இதை ஆங்கிலபாஷையில் 'அபரேஷன்' (*Aberration*) என்கிறார்கள். நாம் இதை 'ஒளிநிலைவழு' என்று வழங்குவோம். ஒளி பொதுவாக நேர்வழியில் செல்வதானாலும், பூமியின் வேகமான பிரயாணத்தால் சூரியவொளி சாய்ந்துவந்து பூமியிற் சேருவதாகத் தோன்றுகிறது. இந்தத் தோற்றமே 'ஒளிநிலைவழு'. இதைக் கண்டறிந்தவர் ப்ராட்லி (*Bradly*) என்பவர்.

அலைகள்

கே. அப்புராவ்

1


நீர் அலைகள்

அலைகள் என்பன இன்னவை என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஓர் குளத்தில் உண்டாகும் அலைகளையும், ஆறுகளிலும் சமுத்திரங்களிலும் உண்டாகும் அலைகளையும் நாம் அதிகமாகப் பார்த்திருக்கிறோம். நமது ஆராய்ச்சிக்காக ஓர்குளத்தில் உண்டாகும் அலைகளையே உதாரணமாக வைத்துக்கொண்டு அலைகளைப்பற்றிய விஷயங்களைக் கற்றுக்கொள்வோம்.

ஓர் குளத்திற்குச் சென்று ஓர் கல்லை அதன்மத்தியில் போட்டால் வட்டமாக அலைகள் உண்டாகிக் கரையை நோக்கி அகன்றுகொண்டு செல்கின்றன. கல்லானது ஜலமட்டத்தைத் தாக்கியதும் ஜலமட்டம் அவ்விடத்தில் கொஞ்சநேரத்திற்குக் கீழ் சென்றுவிடுகின்றது. அங்கு ஓர் பள்ளம் உண்டாகிவிடுகிறது. அப் பள்ளத்தை நோக்கிச் சுற்றிலுமுள்ள ஜலம் மட்டத்தைச் சரிசெய்வதற்காக வேகமாக அதிகப் பலத்துடன் வருகிறது. ஜலமானது பள்ளத்தின்மத்தியில் ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளுமல்லவா? இதனால் முன் ஜலமட்டம் சற்றுக் கீழ் இருந்த இடத்தில் ஜலமட்டம் சற்று மேலே போய்விடுகிறது. உடனே ஜலமட்டம் சாதாரண ஸ்திதிக்கு வர வேகத்துடன் வருவதனால் மறுபடியும் ஜலமட்டம் கீழே போக நேருகிறது. இவ்வாறு ஜலமட்டம் உயர்வதும் தாழ்வதும் பலதடவைகள் உண்டாகின்றன.

அலையானது செல்லும்போது அதனுடன் தண்ணீரும் போவதுபோல் காணும். ஆனால் ஓர் கட்டையையோ தேங்காய் மட்டையையோ குளத்தில் போட்டுப் பார்ப்போமானால் அலை வரும்போது மட்டை மேலும் கீழும் செல்கிறதே தவிரப் பக்கமாக நகருவதில்லை. ஜலமும் அலையுடன் போகும் பட்சத்தில் மட்டையும் போகவேண்டுமல்லவா? ஆகையால் அலைகள் உண்டாகி அவை வெளியில் போகும்பொழுது, அலைகள் உண்டாக்கப்படும் ஓர்

பொருளை—உதாரணமாகத் தண்ணீர், காற்று, ஈதர் அலைகள்—தம்முடன் இழுத்துக்கொண்டு போவதில் நகரும் சக்தியானது ஓர் தண்ணீர்த் துளிக்கும் மற்ருெரு தண்ணீர்த் துளிக்கும் கொடுக்கப்




பட்டு இவ்வாறு தண்ணீர் காணும் அளவும் அதாவது தண்ணீர்த் துளிகள் இருக்குமட்டும் அலைகளாகச் செல்கின்றது.

அலைகள் குளத்தின் கரையை அடைந்து நின்றுவிடுகின்றன. சில சமயத்தில் அலைகள் மீள்கின்றன. இவ்வாறு மீள்கின்ற அலைகள் தாம் முதலில் உண்டான இடத்தை நோக்கிச் செல்கின்றன.


அலைகள் ஜலமட்டத்திற்கு மேலாக இருக்கும் உச்சிப் பாகத்தைச் சிகரம் என்றும் கீழ்ப்பள்ளத்தைப் பள்ளம் அல்லது கிண்ணம் என்றும் கூறலாம்.

அலைகள் உண்டாக்கப்படும்போது ஜலமட்டத்தில் உள்ள தண்ணீர்த்துளி மேலாவது, கீழாவது நகரும் சக்தி தனக்கு அளிக்



கப்படாமல் ஓர் க்ஷண நேரத்திற்கு ஒரே இடத்தில் இருக்கும். மேலே படத்தில் கண்டமாதிரி அலைகள் போகும்போது (உ-ம்) மூன்ருவது சிகரத்திற்கும் மூன்ருவது பள்ளத்திற்கும் மத்தியில் உள்ள தண்ணீர்த் துளியில் நகராமல் உள்ள துளியானது + என்று


காண்பித்திருக்கும் ஜல மட்டத்திலுள்ள துளியாகும். அலைகள் அம்பினால் காண்பித்திருக்கும் பக்கமாகப் போகின்றன என்று வைத்துக்கொள்வோம்.



முதலில் நகராமல் இருந்த துளியானது சற்று மேலே செல்லும். அலைபோவதனால் உடனே அதற்கடுத்த துளியின் நகரும் சக்தியைப்பெற்றுக்கொண்டு அதன் உயரத்திற்குச்செல்கிறது. இம்மாதிரியே பக்கத்திலுள்ள துளியின் சக்தியைப்பெற்றுக்கொண்டு இத்துளி மேலும், கீழும் செல்கின்றது என்பது தெரிகிறது. எவ்விதத்திலும் இதுபக்கமாகச் செல்வதில்லை. இம்மாதிரி அலைகள் ஓர் துளிக்கும் மற்றோர் துளிக்கும் கொடுக்கப்படும் ஓர் சக்தியினால் உண்டாவன என்பது தெளிவாகிறது.

ஓர் சிகரத்திற்கும் மற்றோர் சிகரத்திற்கும் அல்லது ஓர் நகராத துளிக்கும் அதற்கு இரண்டாவது நகராத துளிக்கும் உள்ள தூரத்தை 'அலை அளவு' என்று கூறுவார்கள். குளத்தின் மத்தியிலிருந்து அலைகள் உண்டாகின்றன என்று வைத்துக்கொள்வோம். குளத்தின் மத்தியிலிருந்து குளக்கரை 100 கஜம் என்றும், அலையின் அளவு 1 கஜம் என்றும் வைத்துக் கொண்டால் 100 கஜத்திற்குள் காணப்படும் அலைகளின் எண் 100 ஆகும். அலை அளவு 5 கஜமானல் 20 அலைகள் காணப்படும். இதை, 'குறைவுத் தொடர்ச்சி' என்று கூறுவோம். 'அலை அளவு' $\frac{1}{2}$ அடி ஆனல் 600 அலைகளும், $\frac{1}{4}$ அடி உள்ளதானல் 1200 அலைகளும் உண்டாகும். இவற்றை 'அதிகத்தொடர்ச்சி' அலைகள் என்று கூறுவோம். நாம் குளத்தின் நீள அகலத்தை எடுத்துக்கொள்வதற்குப்பதிலாய் ஓர் அலை ஓர் விநாடிக்கு எவ்வளவு தூரம் செல்கிறதோ அந்நீளத்தைக் கணக்காக வைத்துக்கொண்டு அலையின் அளவைத் தெரிந்துகொண்டு அலை ஓர் கணக்கான காலத்தில் எவ்வளவுதூரம் செல்கிறது என்பதையும், காலத்தையும் நீளத்தையும் தொடர்ச்சி எண்ணையும் தெரிந்து கொண்டு அலை அளவையும் கண்டு பிடிக்கலாம். ஓர்

அலைபோவது என்பது அலையை உண்டாக்கும் நகரும் சக்தி ஓர் துளிக்கும் மற்றோர் துளிக்கும் மாறும் துரிதமான காலத்தைக் காண்பிக்கிறது. (ஓர்விநாடிக்குள் தொடர்ச்சியின் காலமானது



ஒவ்வொரு துளி தனக்கு ஓர்தடவையில் கொடுக்கப்பட்ட சக்தியை ஒத்தது.) ஓர் துளி நகரும்சக்தியை எவ்வளவு காலம் வைத்திருக்கிறது என்பதைக் கவனிக்கலாம். ஓர் விநாடியில் 1000 அலைகள் உண்டாகின்றன என்று வைத்துக் கொண்டால், ஓர் துளியானது தனக்குச் செலுத்தப்படும் சக்தியின் தடவை 1000 ஆகுமல்லவா? அதாவது நகராமல் இருந்ததுளி ஓர் தடவையில் நகர ஆரம்பித்துத் திரும்பவும் முதலில் இருந்த ஸ்திதிக்கு வருவதற்கான காலம் $\frac{1}{1000}$ விநாடி.


அலை ஓர் விநாடிக்கு 1000 கஜம் போகிறது என்று வைத்துக் கொள்வோம். அலை அளவு 1 அடி ஆனல் தொடர்ச்சி $1000 \times 3 = 3000$ தடவையாகும் அல்லது தொடர்ச்சி 6000 தடவை என்றால் அலை அளவு $\frac{1}{2}$ அடியாகும்.

குளத்தின் கரை ஓர் சுவராயிருந்தால் சுவரில் தாக்கும் அலைகள் எல்லாம் படத்தில் காண்பது போல் பிரதிபிம்பித்து மறுபடியும் திரும்பிக் குளத்தின் மத்தியை நோக்கிச் செல்கின்றன. ஆனல் பிரதிபிம்பிக்கப்பட்ட அலைகள் மிகவும் சுத்தமாய்த் தெரிவதில்லை.

ஓர் குளத்தில் இரண்டு இடத்தில் ஒரேசமயத்தில் அலைகள் உண்டானல் அலைகள் ஒன்றுக்கொன்று சந்திக்கும். சந்தித்த பிறகும் அலைகள் போய்க்கொண்டு இருக்கும். ஓர் அலையின்


மேடும் மற்ருேர் அலையின் மேடும் சந்தித்தால் அங்கே ஓர் பெரிய மேடு ஏற்படும். ஆனால் இரண்டுவேறு விதமானவை—அதாவது ஓர் அலையின் மேடும் மற்ருேர் அலையின் பள்ளமும் சந்தித்தால் அங்கே மேடாவது பள்ளமாவது இராது. சமமாய் இருக்கும்.

மேலே கூறப்பட்ட அலை உண்மைகளைத் தெரிந்துகொள்வதற்கு ஓர்குளத்தில் இறங்கி அதன் கரையோரமாய் ஓர் கட்டை



யையோ அல்லது நமது பாதத்தையோ அமிழ்த்தி அலைகளை உண்டாக்கலாம். அல்லது ஒரு சுவரிலோ கம்பத்திலோ ஓர் கயிற்றைக்கட்டி அதைக் கீழும் மேலுமாவது பக்கமாகவாவது ஆட்டி அலைகளை உண்டாக்கலாம். அலைமட்டத்தினின்று மேட்டின் உயரமாவது பள்ளத்தின் ஆழமாவது நாம் கயிற்றை ஆட்டும் சக்தியைப் பொறுத்தது. கயிற்றை அதிகபலமாய் ஆட்டினுல் அலையின் அகலமும் அதிகமாகும்.


கயிற்றை நாம் ஒருவிநாடிக்கு ஒருதடவை ஆட்டினுல் அதே சமயத்தில் கயிற்றில் ஒரே ஓர் அலைபோகும். கயிற்றை விநாடியில்



10 தரம் ஆட்டினேமானல் 10 அலைகள் அதேசமயத்தில் கயிற்றில் செல்லும். ஆகையால் அலையின் வேகத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமானுல், நாம் ஒரு விநாடியில் உண்டாகும் அலையின் எண்ணையும் அதன் அளவையும் பெருக்கவேண்டும். அதாவது:
அலை எண் × அளவு = அலையின் வேகம்.


ஓர் மின்சார மணியின் உதவியாலோ அல்லது கடியாரத்தில் மணியடிக்கும் சம்மட்டியின் உதவியாலோ நாம் ஓரேவிதமான அலைகளை உண்டாக்கலாம். ஓர் மணியின் சம்மட்டியில் (மணி

அடிக்கும் பாகம்) ஓர் கயிற்றைக்கட்டி அதன் நுனியில் ஓர் சிறிய கல்லைக் கட்டிவிட்டு மணியை அடிக்கவைக்க வேண்டும். மணி



அடிக்கும்போது அலைகள் உண்டாகும். அதேமாதிரி ஓர் கடியாரத்திலும் கயிற்றைச் சற்றுத் தளர்த்தியாய்க் கட்டி மணியை அடிக்கச்செய்தாலும் அலைகள் உண்டாகும்.

மற்றும் நீங்கள் ஒரு நெல் வயலுக்குச் சென்று (பயிர்கள் மிகவும் இளமையாயும் குட்டையாயும் இருத்தல் நலம்) பார்த்தால்



அங்கே காற்றினால் ஏற்படும் அலைகளைப் பார்க்கலாம். அலைகள் பிரதிபிம்பிப்பதைப் பார்ப்பதற்கு ஓர் அகலமான பாத்திரத்தில்

தண்ணீர் நிரப்பி அதில் ஆராய்ச்சி செய்யலாம். பாத்திரத்தின் மத்திக்குச் சற்று ஓரத்தில் ஓர் நீர்த்துளியை விட்டால் அலைகள் உண்டாகி, பிரதி பிம்பிக்கப்பட்ட எல்லா அலைகளும் ஓரிடத்தில் சந்திக்கின்றன. அம்மாதிரி சந்தித்த இடம் பாத்திரத்தின் மத்தியி லிருந்து அலைகள் ஆரம்பித்த இடம் எவ்வளவு தூரத்தில் உள் ளதோ அவ்வளவு தூரம் உள்ளதாயிருக்கும்.

நாம் நோயாளிகளாகக் காரணம் என்ன ?

நம்முடைய பொதுச் சுகாதாரம் கெட்டு, நாம் நோயாளிகளாகப் போய்விடுவதற்குக் காரண மென்ன ? 1. சுகாதார மின்மை, அதிக மக்கள் குறுகிய இடங்களில் நெருங்கிவசித்தல், சுகாதாரமற்ற சேரிகள், ஒழுங்கீனமான வீடுகள், போதிய நல்ல காற்றில்லாமை, சூரிய வெளிச்ச மில்லாமை. 2. வறுமை, நெடுநாளாக அரை வயிற்று உணவே உட்கொண்டு வருதல், போஷிப்பற்ற உணவு. 3. சமூகாசாரப் பழக்கவழக்கங்கள். 4. உடற்பயிற்சி யில்லாமை, ஓய்வெடுத்துக்கொள்வதற்கு அவகாசமின்மை இந்நான்கு காரணங்கள் நம் பொதுச் சுகாதாரத்தைக் கெடுக்கக் கூடியவை காள யிருப்பதுடன், க்ஷயரோகம் போன்ற நோய்கள் வருவதற்கும் காரணமா யிருக்கின்றன.

தாருல் இஸ்லாம்

சரித்திரம்

கெமால் பாட்சா

மா. இராசமாணிக்கம்

நாட்டு நலத்தின்பொருட்டு ஒரு சர்வாதிகாரி தம் இன்னுயிர்க் காதலியையும் துறந்து, தூய எளியவாழ்க்கையை நடத்திவருகின்றார் எனின், அத்தகைய பரம புருஷரைப் பற்றி அறிய நீங்கள் அவாவுவீர்கள் அல்லவா? அவர் தாம், "ஐரோப்பாவின் நோயாளி" என்று உலகம் பழிக்கத்தக்க கேவலநிலையில் இருந்த, மத குருமார்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு அல்லலுற்றிருந்த துருக்கியை நவீன துருக்கியாக மாற்றி, அத்துருக்கியில் புதியதொரு யுகத்தை நிலைநாட்டி யுள்ளவராகிய முஸ்தபா சேமால் பாட்சா.



முஸ்தபா கேமால் பாட்சா.

முசோலினி, ஹிட்லர் இவர்களைப்போன்றே இக்கெமால் பாட்சாவும் மிகமிக எளிய குடும்பத்தில் தோன்றியவர். இவர் இளவயதிலேயே தந்தையை இழந்தார். இவர் அன்னையார் தம்மிரு மக்களுடன் தம் சகோதரர் வீடு சென்றார். அங்கே இவர் தம் மாமனின் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டும், கடைகளைச் சுத்தஞ்செய்து கொண்டும், தோட்டங்களைக் காவல் புரிந்துகொண்டும் சில வருஷங்கள் கழித்தார். இவர் பாடுவதிலும், தம் தாய்நாட்டு இயற்கை வனப்புக்களைக் கண்டு மகிழ்வதிலும் அச்சிறு வயதிலேயே பெரிதும் ஈடுபட்டிருந்தார்; தம் மாமன் உதவியால் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து சிறிது

கல்வி கற்றார்; பின்னர் இராணுவக் கல்லூரியிற் சேர்ந்து போர்ப் பயிற்சியும் பெற்றார்.

இவர் போர்வீரராக இருக்கையில், அன்வர் பாட்சா என்பவர் துருக்கி இளைஞர்களுக்குத் தலைவராகத்தோன்றினார். அப்பொழுது பால்கன் தேசங்களிடையே போர் தொடங்கிற்று. அப்போரில், துருக்கியர் அன்வர்பாட்சாவை ஆதரித்தனர். அன்வர் பாட்சாவினால் துருக்கிக்கு நன்மை ஏற்படாதென்பதை நன்குணர்ந்த கெமால், துருக்கி இளவரசரைப் பட்டம் வகிக்கும்படி தூண்ட, இளவரசரும் பட்டம் பெற்றார். ஆனால் சுல்தானுக்கும், அன்வர் பாட்சாவிற்கும் நிகழ்ந்த போராட்டத்தில் பின்னவர் வெற்றிபெற்றார்.

அந்நிலையில் பால்கன் போர் கடுமையாக நடைபெற்றது. துருக்கி நகரமான ஸ்மர்னாவின் அருகில் கிரேக்கர் வந்து விட்டனர்; துருக்கியின் நிலை பேராபத்தானதாய் இருந்தது. அவ்வமயம் கெமால், சுல்தான் கட்டளைப்படி சிரியாவிலிருந்த ஒரு சேனைக்குத் தலைமை வகிக்கச்சென்றார். ஆனால் அவர் தலைமை வகிக்க இருந்த சேனை அரசாங்க ஏடுகளில் எழுதப்பட்ட சேனையே தவிர வேறன்று. இவ்வுண்மையைக் கெமால் அறிந்திருந்தனர்; ஆனால் சுல்தான் அறிந்திருக்கவில்லை. எனினும் கெமால் சருங்கடற் கரையிலுள்ள ஒரு துறை முகம் வந்து சேர்ந்தார். இதற்கிடையில், ஸ்மர்னாவில் கிரேக்கர்கள் வந்திறங்கிவிட்டசெய்தி கான்ஸ்டாண்டிநோபிலில் பெருங்கலகத்தை உண்டாக்கியது. பகைவரை வெருட்டக் கெமால் சொன்ன யோசனையை அங்கிருந்த சர்க்கார் கேட்கவில்லை. அதனால் சீற்றங் கொண்ட துருக்கியர் இவரைத் தம் தலைவராகக் கொண்டனர். அதன்பயனாக அங்கோராவில் தேசியக் கட்சி ஒன்று ஏற்பட்டது; கெமால் அதன் தலைவரானார். இந்நிலையில் கிரேக்கர் அங்கோராவை நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

'அங்கோரா பகைவர்வசமாயின், துருக்கி அடிமை நாடாகும்' என்பதை நன்குணர்ந்த கெமால் நாட்டுப்பற்று மிக்கிருந்த இளைஞர்களை ஒரு படையாகச் சேர்த்தார்; கிரேக்கர்களை எதிர்த்தார். இருபத்திரண்டு நாள் கடும்போர் நிகழ்ந்தது. கிரேக்கர் அங்கோராவில் இருந்த தேசிய மகாசபைக் கட்டடத்தையும் நெருங்கி விட்டனர். ஆ! அச் சங்கடமான சந்தர்ப்பத்தில் துருக்கியர் சிறிது சோர்வுற்றிருப்பினும், தோல்வியையே தரிசிக்க

நேர்ந்திருக்கும். மகாவீரரான கெமால் தம் இளைஞர்களை உற்சாகப் படுத்தினர். முன்னணியில் அவரது வீரத் தோற்றம் இளைஞர்களை ஊக்கியது. இந்நிலையில் ஒவ்வொருவர் உள்ளத்திலும் 'எங்கள் நாடு' என்பதே சிறந்து தோன்றியது. அதிகம் அறைவதேன் ? துருக்கியர் வெற்றியுற்றனர்; தம் தாய்நாட்டை அன்னியர்க்கு அடிமையாக்காது தமக்குரிமையாக்கிக் கொண்டனர்.

இவ்வெற்றிக்கறிகுறியாகக் கெமால் காஜி (வெற்றிவீரர்) என்னும் பட்டம் பெற்றார். அதன் பின்னர் இவர் காஜி முஸ்தபா கெமால்பாட்சா என்று அழைக்கப்படுகிறார். தேசியக்கட்சியின் தலைவரான கெமால் வலியற்றிருந்த துருக்கிச் சுல்தானை வெருட்டி விட்டுக் குடிகளின் விருப்பத்திற்கேற்பத் துருக்கியின் சர்வாதிகாரியானர்.

"லதிபா ஹனும்" என்னும் துருக்கிய அழகி கெமாலைக் காதலித்தாள். கெமாலும் அவளை விரும்பி மணந்துகொண்டார். அவளுக்கு நெருங்கிய உறவினர் அரசியலில் சிறந்த நிலையில் வைக்கப்பட்டனர். எனினும் அவ்வுறவினர் அவளது செல்வாக்கால் பல அநீதச்செயல்களைப் புரிந்தனர்; அவளும் அவர்களுக்கு உதவியாக இருந்தாள். இதனை அறிந்த கெமால் தம் மனைவியைக் கண்டித்தார்; எனினும் அவள் சிறிதும் திருந்தவில்லை. எனவே, "நாட்டு நன்மையைக்கருதியேனும் இவ்வுறவினரை ஒழித்தல் வேண்டும்; அங்ஙனம் ஒழிப்பேனுல் என்மனைவி பெருஞ் சீற்றங் கொண்டு நாளும் ஏறுமாறாக நடந்து எனது வாழ்க்கையைப் பாழாக்குவாள்; ஆதலின் அவர்களை வேலையினின்றும் நீக்குவதோடு இவளையும் விலக்கி விட்டு விவாகரத்துச் செய்துவிடுதலே சாலச்சிறந்தது" என்றெண்ணிய கெமால், தாம் எண்ணியபடியே செய்து முடித்தார். நாட்டு நன்மையின்பொருட்டு இப்பெருந்தகையாளர் செய்த தியாகத்தை யாம் என்னெனப் புகழ்வேம்!

இனி, கெமால் செய்துள்ள சீர்திருத்தங்களைக் கவனிப்போம்: துருக்கியர் பகுத்தறிவுக்கு ஒவ்வாத மூடக்கொள்கைகளையும், குருட்டுப் பழக்க வழக்கங்களையும் கைவிடும் நாளே துருக்கி முன்னேறும் நன்னாளாகும் என்பதைக் கெமால் மக்கட்கு அறிவுறுத்தினர். அவர் அறிவுறுத்தலை மக்கள் ஏற்றுக் கொள்ளாமையைக்கண்டு, கடுமையான சட்டங்களாற்றான் அவர்களை உயர்த்த முடியும் என்பதை அறிந்தார்; எல்லாத்துருக்கியரும் தம் துருக்கிக்குல்லாய்களை நீக்கி, மேனாட்டுக்குல்லாய் (*Hats*) அணிதல் வேண்டும், பெண்டிர் தம்முகமூடிகளை எடுத்து எறிதல் வேண்டும்

என்று கண்டிப்பான கட்டளை பிறப்பித்தார்; சமூகவாழ்வில் ஆடவரும் பெண்டிரும் நெருங்கிப் பழகுதல் வேண்டும் என்றார்; இருபாலாரும் சேர்ந்து நடனம் செய்தலை ஆதரித்தார்; இருபாலார்க்கும் பல பள்ளிகளைத் தோற்றுவித்துக் கல்வி புகட்டச்செய்தார். இங்ஙனம் இவர் செய்த இச்சமூகப்புரட்சியால், ஆடவரும் பெண்டிரும் மேனாட்டு நாகரிகத்தை ஒவ்வொருமுறையிலும் தழுவினர்; பெண்டிர் மேனாட்டு மகளிரைப் போலப் பல கலைகளிலும் பயிற்சி பெற்று வருகின்றனர்; பலர் ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகட்குச் சென்று பல துறைகளிலும் உயர்தரக்கல்வியைக் கற்றுவருகின்றனர்; வீட்டு வாயிற்படியையே பார்த்திராத பெண்டிர் இக்கெமாலின் ஆட்சியில் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் முன்னணியில் வந்து நிற்பது பெரிதும் பாராட்டத்தக்கதன்றோ? துருக்கிப்பெண்டிர் போலீஸ்படையிலும் கப்பற் படையிலும் குத்தகைவேலையிலும் ஈடுபட்டுள்ளர்; உயர்தரக் கல்லூரிகளிலும், சட்டக்கல்லூரிகளிலும் வைத்தியக்கல்லூரிகளிலும் பெண்டிரும் போட்டியிட்டுப் பயின்று வருகின்றனர். பெண்டிர் தம் விருப்பத்திற்குகந்த காதலரை மணந்து கொள்ளலாம்; அவர்கள் கன்னிகைகளாகவும் காலந் தள்ளலாம்; அவர்களுக்கு எல்லாவித உரிமைகளும் கெமாலின் ஆட்சியில் அளிக்கப்பட்டுள்ளன. அப்பெண்டிருள் ஒருத்தியே மூன்றாண்டுகட்குமுன் ஐரோப்பாவில் நடைபெற்ற அழகுப் போட்டியில் அழகுராணியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள் எனின், நவீன துருக்கியின் நாகரிக நிலையை என்னென்பது!

கெமாலது ஆட்சிக்குமுன், ஒரு துருக்கியன் பல பெண்களை மணந்துகொள்ளலாம் என்னும் உரிமை இருந்தது. ஆனால் கெமால், 'ஒருவன் ஒருத்தியையே மணந்து வாழவேண்டும்; தக்க காரணம் காட்டி அவன் இரண்டாம்மணம் செய்து கொள்ளலாம்' என்னும் சட்டத்தை உண்டாக்கினார்; தாடி வைத்துக்கொள்ளும் வழக்கத்தை அடியோடு ஒழித்தார்; தம் சீர்திருத்தங்கட்கு எதிர்ப்பாக இருந்த முல்லாக்களையும் தக்கவழியில் திருத்தினார்; துருக்கி பாஷையின் எழுத்துக்களை அடியோடு மாற்றி லத்தீன் எழுத்துக்களையும், துருக்கி எழுத்துக்களையும் ஒன்று கூட்டிப் புதிய எழுத்துக்களை அமைத்தார். இப்புதிய எழுத்துக்களாலான பாஷையே இன்றைய துருக்கியின் அரசியல் பாஷையாகும். மதப் பள்ளிகளை ஒழித்து, அவற்றிற்கிருந்த மூலப்பொருள்களைச் சீர்திருத்தங்கட்குப் பயன்படுத்தினார்; மத சம்பந்தமான மடங்களையும், சத்திரங்களையும் அரசியல் காரியாலயங்களாகவும், பள்ளிக்

கூடங்களாகவும் மாற்றினார்; இஸ்லாமிய மதத்தைத் தேசிய மதமாக்கினார்; அரசியல் உத்தியோகஸ்தர்களை, அல்லாவின் மீது பிரமாணம் கூறுவதை விடுத்துத் தங்கள் சொந்த கௌரவத்தின் மீதே ஆணையிடும்படி கட்டளையிட்டுள்ளார்; வெள்ளிக் கிழமை தோறும் இஸ்லாமிய விடுமுறையாக இருந்ததை ஒழித்து மேனாட்டு வழக்கப்படி ஞாயிறன்று விடுமுறை ஏற்படுத்தினார்; இஸ்லாமிய பஞ்சாங்கத்தையும், மதசம்பந்தமான விடுமுறை நாட்களையும் திருத்தி மேனாட்டுமுறைப்படி கொணர்ந்துள்ளார்; இச்சீர்திருத்தத்தின்பயனாகப் பழையவிழாக்கள் மறைந்து வருகின்றன.

புரட்சிமயமான சீர்திருத்தங்களே கெமாலின் மந்திர வார்த்தைகளாகும். இவர் கல்வி சம்பந்தமாகச் சிறந்த தொண்டாற்றியுள்ளார். இவரால் ஏற்படுத்தப்பட்ட புதிய பள்ளிகளில், புத்தகக் கல்வியும், கைத்தொழிற் கல்வியும், வர்த்தகக் கல்வியும் போதிக்கப்பட்டு வருகின்றன. உயர்தரக் கல்விச் சாலைகளிலும் பெரும்பாலான ஏழை மாணவர்க்கு இலவசமாகக் கல்வி அறிவிக்கப்படுவதோடு, உணவும் உடையும் அளிக்கப்படுகின்றன. இவ்வுதவிகளுக்கு ஈடாக அவ்வேழைமாணவர் குறிப்பிட்ட சில வருஷங்கள்வரையில் அரசாங்க ஊழியர்களாக இருக்கவேண்டும். நாடெங்கும்வியவசாயக் கல்விச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன; பெரிய நகரங்களில் தொழிற்கல்விச்சாலைகள் இருந்து வருகின்றன. துருக்கியருள்ள மேனாட்டுப் பாதிரிகளால் நடத்தப்படும் கலாசாலைகளில் உள்ள பாட திட்டங்கள் துருக்கி அரசாங்கத்தால் பார்வையிடப்பட்டு வருகின்றன. அப்பள்ளிகளில் நடைபெறும் பரீட்சைகள் துருக்கியக் கல்வி அதிகாரிகளால் பார்வையிடப்படுகின்றன. மேனாட்டுப் பாதிரிகள் துருக்கிக்குப் பாதகமான எத்தகைய கொள்கையையும் தங்கள் கலாசாலைகளில் புகுத்தாத வரையில் துருக்கியில் கலாசாலைகள் நடத்தலாம் என்ற செய்தியைக் கெமால் வெளிப்படையாகக் கூறியுள்ளார். சுருங்கக் கூறின் மேற்கு ஐரோப்பாவையும், அமெரிக்காவையும் போலத் துருக்கிக் கல்வி நிலைமையும் மிக உயர்ந்த முறையில் கொண்டுவரல் வேண்டுமென்பதே கெமாலின் அடிப்படையான எண்ணமாகும்.

1922-ம் ஆண்டில் துருக்கியின் கூட்டு வியவசாயநிலை இன்றுள்ள இந்திய விவசாயநிலையை ஒத்திருந்தது. ஆனால் இன்று துருக்கியர்கெமாலின் அரசியலில் நவீன முறையில் எந்திர ஏர்களைக் கொண்டு நிலத்தை உழவும், நவீன எந்திரங்களால் அறுவடை செய்யவும், சிறந்த முறையில் பயிர் செய்யவும் அறிந்திருக்கிறார்கள்.

கெமால் நாடெங்கும் வியவசாய சம்பந்தமான கல்லூரிகளை ஏற்படுத்தியுள்ளார்; தலைநகரான அங்கோராவில் ஒரு வியவசாய மாதிரிப் பண்ணையை உண்டாக்கி நடத்தி வருகின்றார். வியவசாயப் பத்திரிகைகளும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. தரிசாய்க் கிடந்த நிலங்கள் செழிப்புள்ள பசிய வயல்களாக மாற்றப்பட்டு வருகின்றன. துருக்கியின் விளைபொருள்களில் புகையிலை மிகச்சிறந்ததாகும். 1923-ல் துருக்கியில் விளைந்த புகையிலையை விட அடுத்தஆண்டில் இருமடங்கு அதிகமாக விளைந்தது; இன்று துருக்கிப் புகையிலையும், பஞ்சும், கோதுமையும், பார்லியும் துருக்கிக்கு வேண்டுவது போக எஞ்சுவன மேனுடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன. வியவசாயிகளுக்குச் சாதகமான ஒவ்வொன்றையும் கெமால் அரசாங்கம் ஊக்கத்துடன் கவனித்து வருகின்றது. வியாபார சம்பந்தமான தரை, கடல், ஆகாயப்பாதைகள் நாளுக்கு நாள் சீர்திருந்தி வருகின்றன. அரசாங்கம் வியவசாயிகளுக்கு உழவுக்கருவிகட்கும் பிறவற்றுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகப் பண உதவி செய்து வருகின்றது.

பாதைகளும், ரெயில் பாதைகளும் அதிகப்பட்டு வருகின்றன. கெமாலுக்கு முன் புகை வண்டிகள் மேனுட்டாரால் செய்யப்பட்டு வந்தன. ஆனல் இப்போது அவை துருக்கியரால் அரசாங்க உதவி கொண்டு செய்யப்பட்டு வருகின்றன. கெமால் சிறந்த அறிவாளியாதலால் மேனுடுகளிலிருந்து ஒரு செப்புக்காசும் கடன் வாங்குவதில்லை. துருக்கி ஒவ்வோரு துறையிலும் தன்னைத் தானே நம்பியிருத்தல் வேண்டுமென்பதைக் கெமால் நன்குணர்ந்தவர். அதனல் அவர் அயல் நாட்டுப் பொருள்களை வாங்காமல் சுதேசிப்பொருள்களை ஆதரித்து வாங்கும்படி நாடெங்கும் பிரசாரம் செய்வித்தார். தொழிற் சாலைகளுக்கிருந்த வரியை நீக்கினர்; சர்க்கரைத்தொழிற் சாலை, காயிதத் தொழிற் சாலை, எண்ணெய்த் தொழிற் சாலை முதலிய பெரிய தொழிற்சாலைகட்கு அரசாங்கத்தின் மூலம் பொருளுதவி செய்தார்; வியவசாயப்பாங்கிகளைப் பெரிய நகரங்களில் ஏற்படுத்தியுள்ளார்.

சுல்தானல் மனம் போனவாறு ஆளப்பட்டு வந்த துருக்கியர் கெமாலின் வீரத்தாலும், நாட்டுப்பற்றாலும், தன்னலமற்ற தியாகத்தாலும் சுதந்திர வீரராக இன்று விளக்குகின்றனர்; மேனுட்டாரைப் போல நாகரிக முகட்டை நெருங்கி வருகின்றனர்; ஒவ்வொரு துறையிலும் முன்னேறிச்செல்கின்றனர், நாடெங்கும் கல்வி என்னும் மலர் மலர்ந்து மணம் வீசுகின்றது. ஆடவ்

ரும் பெண்டிரும் சமநிலையில் முழுச்சுதந்திரத்தோடும் இன்ப வாழ்க்கையை நடத்துகின்றனர். துருக்கி நாட்டுச் சுதந்திர சுந்தரிகள் தங்கட்கும் தங்கள் தாய்நாட்டுக்கும் சுதந்திரத்தை அளித்துள்ள சுதந்திர வீரரும் தன்னலமற்ற பரமபுருஷரும் ஆகிய கெமாலே வாழ்த்திச் செல்லும் நிலையைக் காணுந்தோறும் துருக்கியின் இரட்சகரான கெமால், உள்ளம் பூரித்துத் தம்மை இத்தகைய பெரிய நிலைக்கு இலக்காக்கிய இறைவனை மனமொழி மெய்களால் வழுத்துந் திறத்தினை யாம் என்னென மொழிவோம்!

ஸூரிய ஸ்நானம்

நாம் நிதானமாய் 'ஸூர்யஸ்நானம்' செய்யவேண்டும். அதாவது முதல் நாளிலேயே அதிகநேரம் ஸூர்யவெப்பம் நம்மீது விழும்படி நாம் ஸ்நானம் செய்யக்கூடாது. முதல் நாள் 4 நிமிஷங்களும், இரண்டாவது நாள் 6 நிமிஷங்களும், மூன்றாவதுநாள் 8 நிமிஷங்களும், இவ்விதமாகத் தினம் கொஞ்சம் கொஞ்சமாக நேரத்தை அதிகரித்துக்கொண்டு நாம் ஸூர்யவெளிச்சத்தில் ஸ்நானம் செய்துவந்தால் ஒரே நாளில் 10 மணி நேரம் ஸ்நானம் செய்வதால் ஏற்படும் கெடுதல், அதாவது தோல்வறண்டு போதல் பலஹீனம் முதலியன உண்டாகா.

மேலே சொன்ன பிரகாரம் ஸூர்ய ஸ்நானம் செய்துவந்தால் குளிர்காலத்தில் ஜலதோஷம் உண்டாகாது. தவிர அதிகக் குளிரையும் ஸுலபமாகச் சகித்துக்கொள்ளலாம். மேலும் குளிர்காலத்தில் உன்னைச் சுற்றியுள்ளவர்கள் தேகாரோக்கியம் இல்லாமல் பலஹீனர்களாயிருக்க நீ பலிஷ்டனும், உற்சாகமுள்ளவனுகவும் இருப்பதுடன் நீ 'ஸூர்ய நமஸ்காரம்' செய்துவந்ததைப்பற்றிக் கடவுளுக்குக் நிரம்பவும் நன்றியறிவுள்ளவனுயுமிருப்பாய்.

ஆர்யதர்மம்,



முத்துஸ்வாமி தீக்ஷிதர்

டி. எல். வேங்கடராமையர், பி. ஏ., பி. எல்.

---

1. பிறப்பு

சோழ நாட்டிலே தஞ்சாவூர் ஜில்லாவிலே உள்ள திருவாரூர் என்னும் ஊரானது பிரசித்தமான சிவக்ஷேத்திரங்களில் ஒன்று. அது பாடல் பெற்ற க்ஷேத்திரம். அதை ஸ்ரீபுரம் என்றும் கமலாபுரம் என்றும் கமலை என்றும் சொல்லுவதுண்டு. அந்த ஊரிலே சிவபெருமான் தியாகராஜனாக அவதரித்து முசுகுந்தன் முதலிய பக்தர்கள் அநேகருக்கு முக்தியளித்து அருளியதாகப் புராணங்கள் கூறுகின்றன.

சரித்திர காலத்திலேயும் தஞ்சாவூரிலே அரசுபுரிந்த நாய்க்க வமிசத்தரசர்களும் மகாராஷ்டிர வமிசத்தரசர்களும் திருவாரூர்த் தியாகேசனை மிகவும் ஆராதித்து வழிபட்டு வந்தனை செய்து வந்திருக்கின்றனர். அத்தெய்வத்தினுடைய அருளால் அவர்கள் பல நன்மைகளை அடைந்தார்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். நாயன்மார்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்ததும் இவ்வூரிலேதான். கமலையில் பிறந்தோர் முக்தி பெறுவார் என்பது பழமொழி.

மத உலகத்திலே இவ்வளவு புகழ்பெற்ற திருவாரூரானது சங்கீத உலகத்திலேயும் மிகவும் சிறப்புற்று விளங்குகிறது. ஏனென்றால், சங்கீதத்தின் மும்மூர்த்திகள் எனத்தகும் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள், சாமா சாஸ்திரிகள், முத்துஸ்வாமி தீக்ஷிதர் ஆகிய மூவர் பிறந்ததும் இவ்வூரிலேதான்.

ஸ்ரீ தியாகராஜையர் தகப்பனாராகிய ராமப்பிரும்மம் என்பவர் திருவாரூரிலே வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரு ஆண்குழந்தை

பிறந்தது. அதற்கு ஐப்யேசன் என்று பெயரிட்டார். ஆனால் அந்தக் குழந்தை அவருடைய மனத்துக்குத் திருப்தியளிக்கவில்லை; ஆதலால் அவர் "எனக்கு நல்ல புத்திரன் ஒருவனை அனுக்கிரகம் செய்ய வேண்டும். தியாகேசா! உம்முடைய பெயரை அவனுக்கு இட்டு மகிழ்ச்சி அடைவேன்" என்று பகவானை வேண்டிக்கொண்டதின் மேல் ஒரு ஆண்குழந்தை பிறந்ததாம். அந்தக் குழந்தைக்கு அவர் கருதியபடி தியாகராஜன் என்று பெயர் வைத்தாராம். இந்தக் குழந்தைதான் பிற்காலத்தில் திருவையாறு க்ஷேத்திரத்துக்குச் சென்று சங்கீதத்துக்கே ஒரு புத்துயிர் அளித்த ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள்.

சாமாசாஸ்திரிகளும் திருவாரூரிலே தான் பிறந்தார். பிற்காலத்தில் இவர் தஞ்சாவூருக்குச் சென்று அங்கே மிகவும் சிறப்புடன் வாழ்ந்தார். இப்பொழுதும் சங்கீத உலகத்திலே மகா கீர்த்திமானாக விளங்கிக்கொண்டிருக்கிறார்.

முத்துஸ்வாமி தீக்ஷிதர் பிறந்ததும் இந்த ஊரிலேதான். இவருடைய தகப்பனாருக்கு ராமஸ்வாமி தீக்ஷிதர் என்று பெயர். அவருடைய முன்னோர்கள் காஞ்சீபுரத்துக்கு அருகிலுள்ள விரிஞ்சிபுரம் என்ற ஊரைச் சேர்ந்தவர்கள். அவர் அந்த ஊரிலே கி. பி. 1735ம் வருஷத்திலே அதாவது சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன்னால் பிறந்தார். அவர் குழந்தையாய் இருக்கும் பொழுது, அவருடைய ஏழாவது பிராயத்தில் கர்நாடகத்தை ஆண்டுவந்த நவாபுகளுக்கும் ஆங்கிலேயருக்கும் யுத்தங்கள் நடந்துகொண்டிருந்தன. இந்தச் சண்டைகளிலே வேறு பலரும் கலந்துகொண்டார்கள். அதனால் காஞ்சீபுரப் பிரதேசத்திலே அப்பொழுது அமைதியான பயமற்ற வாழ்க்கை புரிவது மிகவும் கஷ்டமான விஷயமாயிருந்தது. அதனால் அனேக ஜனங்கள் அந்தப் பிரதேசத்தைவிட்டுச் சோழநாட்டுக்குச் சென்று அங்கே குடியேறினர். ராமஸ்வாமி தீக்ஷிதருடைய தாயார் தகப்பனாரும் இவ்வாறு குடியேறியவர்களுள் சிலர். அவர்களோடு ராமஸ்வாமி தீக்ஷிதரும் புறப்பட்டுவந்தார். அவர்கள் முதலில் கோவிந்தபுரத்திலே தங்கினார்கள். ராமஸ்வாமி தீக்ஷிதர் இளம் பிராயமாயிருக்கும்பொழுதே அவருடைய தந்தையர்கள் காலமானார்கள்.

ராமஸ்வாமி தீக்ஷிதருக்கு நல்ல சங்கீதப்பயிற்சி உண்டு. அவர் மிகவும் இனிமையாகப்பாடும் திறமை வாய்ந்தவர். அதனால் அவருடைய கஷ்ட நிலைமையைக் கண்டு மனமிரங்கிய ஜனங்கள் அவருடைய இனிமையான குரலைக் கொண்டே அவருக்கு ஏதா

வது உதவிபுரியலா மென்று எண்ணினர்கள். சில பெரியோர்களாகச் சேர்ந்து அவருக்கு முறைப்படி சங்கீதம் கற்றுக்கொடுத்துவிட வேண்டு மென்று தீர்மானித்தார்கள்.

அந்தக் காலத்தில் திருவிடைமருதூரில் முத்துவேங்கடமகி என்ற பெரியார் ஒருவர் இருந்தார். கர்நாடக சங்கீதத்துக்குப் பாணினி எனத்தகும் வேங்கடமகியின் பரம்பரையைச் சேர்ந்தவர் இந்த முத்துவேங்கடமகி. சங்கீதத்திலே மிக்க திறமை உள்ளவர். ராமஸ்வாமி தீக்ஷிதர் அவரிடத்திலே சிஷ்யராய் அமர்ந்தார். அவரிடமிருந்து சங்கீத விஷயமான சாஸ்திரம் சம்பிரதாயம் முதலியவற்றை நன்றாய்க் கற்றுக்கொண்டார். இப்படி வித்தியாப்பியாசம் செய்து முடிந்தபின்பு விவாகம் செய்துகொண்டு திருவாரூருக்குச் சென்று அங்கே வாசம் செய்துகொண்டு வந்தார். இப்பொழுது ஹம்ஸத்வனிஎன்று வழங்கும் ராகமானது இவரால் உண்டாக்கப்பட்டது.

இவருக்கு விவாகமாகி வெகுகாலம் வரை குழந்தைகளில்லாமல் இருந்தது. நாற்பதாம் வயது ஆகியும் குழந்தை இல்லாமல் இருக்கவே இவருக்கு மனத்தில் கவலை உண்டாயிற்று. அந்தக் காலத்தில் இவர் ஒரு பெரியாரைக் கண்டு வணங்க நேர்ந்ததாம். அந்தப் பெரியார் அவரை ஆசீர்வதித்து "வைத்தீசுவரன் கோயில் என்னும் க்ஷேத்திரத்துக்குச் சென்று, அங்கே எழுந்தருளியிருக்கும் வைத்தியநாதேசுவரர், பாலாம்பிகைஅம்மை, முத்துக்குமாரன் ஆகிய தெய்வங்களைப் பிரார்த்தித்துப் பூஜைசெய்து, அங்காரகனையும் வழிபட்டால் உன்னுடைய மனோரதம் நிறைவேறும்" என்று வாழ்த்தினராம். அந்த அனுக்கிரகத்தைச் சிரமேற்கொண்டு, ராமஸ்வாமி தீக்ஷிதரும் அவர் மனைவியுமாக வைத்தீசுவரன்கோயில் போய்ச்சேர்ந்தார்கள். அங்கே நாற்பதுநாள் உபவாசமிருந்து, நியமநிஷ்டைகளைச்செய்யவேண்டிய வேளைகள் தவிர மற்றவேளைகளிலெல்லாம் கோயில் சன்னிதியிலேயே இருந்து ஓயாமல் தெய்வத்தைக் குறித்துப் புகழ்ந்து பாடிக்கொண்டே இருப்பாராம். அப்பொழுது நாற்பதாம் நாள் இரவில் இவர் ஒரு கனவு கண்டாராம். அந்தக் கனவிலே தன் கண்ணெதிரே ஸ்ரீபாலாம்பிகை அம்மை நிற்கக்கண்டார். மனம் பதறி மெய் பதைபதைக்கச் சட்டென்று எழுந்து அன்னையை வணங்கி அவளது சரணாரவிந்தங்களில் ஈடுபட்டுக் கிடந்தார். அவர் பக்தியைக்கண்டு மனமிளகிய தாயானவள் தேனினும் இனிய சொற்களால் "குழந்தாய் ராமஸ்வாமி, எழுந்திரு" என்று அவரைத் தேற்றி, திவ்வியமான முத்துமாலை ஒன்றை அவர் கையில் கொடுக்க, அவர் அதைப் பேரானந்தத்துடன் பெற்

றுக் கொண்டார். தேவியும் மறைந்தாள். அவருடைய நித்திரையும் கலைந்து கையில் முத்துமாலை இல்லாதிருக்கக் கண்டு தாம் கண்டது கனவென்று அறிந்தார். தேவியின் அனுக்கிரகம் தமக்குக் கிடைத்துவிட்டது என்பதற்கு இக்கனவு ஒரு அறிகுறி யாகும். என்று எண்ணி எண்ணி மனமகிழ்ந்து, தம் மனைவிக்குத் தாம் கண்ட காட்சியையும் பெற்ற அருளையும் பற்றித் தெரிவித்தாராம்.

இருவருமாக மனமகிழ்ந்து மறுநாள்காலையில் தெய்வ சன்னிதிக்குச் சென்று, பலவகையாகத் துதித்துப் பாடிப் பூஜை செய்து, பின்பு தம்முடைய ஊராகிய திருவாரூருக்குத் திரும்பிச் சென்றார்கள்.

இது நடந்த ஒரு வருஷத்துக்குள், அதாவது மன்மத வருஷத்தில், அவர்களுக்கு ஆண்குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை பிறந்த அன்று ஊரெல்லாம் உத்ஸவமாகவே இருந்தது. ஏனென்றால் அப்பொழுது தியாகேசனுக்குப் பங்குனி மாதத்தில் பிரும்மோத்ஸவம் நடந்துகொண்டிருந்தது. அதிலும் அன்று சிறப்பாக வஸந்தோத்ஸவ தினமாகக் கொண்டாடப்பட்டது. இவ்வளவு சிறப்பு வாய்ந்த நாளன்று பிறந்த குழந்தைக்கு என்ன பெயரிடலாமென்று யோசித்தார்கள். பாலாம்பிகை அம்மையின் அருளால் பிறந்தபடியினாலேயும், முத்துமாலையின் அறிகுறியால் பிறப்பானது தெரிவிக்கப்பட்டதினாலேயும், இந்தக் குழந்தைக்கு முத்துஸ்வாமி என்று நாமகரணம் செய்தார்கள்.

இந்தக் குழந்தை தான் சங்கீத உலகத்துக்கே ஒரு திலகமாக விளங்கும் முத்துஸ்வாமி தீக்ஷிதர்.

முத்துஸ்வாமி தீக்ஷிதரும் வயதுவந்த பிறகு ஒரு சமயம் வைத்தீசுவரன்கோயிலுக்குப் போயிருந்தார். அப்போது இவர் பாலாம்பிகை அம்மையின்பேரில் ஒரு கீர்த்தனம் பாடினார். இது கல்யாணி ராகத்தில் மிச்ரஜாதி ஏக தாளத்தில் அமைக்கப்பட்டிருக்கிற 'பஜ ரே ரே சித்த பாலாம்பிகாம்' என்னும் கீர்த்தனை யாகும். அது வருமாறு:

பல்லவி

பஜ ரே ரே சித்த பாலாம்பிகாம் பக்த கல்ப லதிகாம்

அநுபல்லவி

நிஜ ரூப தான தக்ஷ சரணாம் அருணாம் நித்யாம் கல்யாணீம்
சர்வாணீம்

சரணம்

ஸ்ரீவாக்பவ கூடஜாத சதுர்வேத ஸ்வரூபிணீம்
ச்ருங்கார காமராஜோத்பவ ஸகலவிச்வ வ்யாபினீம்
தேவீம் சக்திபீஜோத்பவ மாத்ருகார்ண சரீரிணீம்
தேவநுத பவரோகஹர வைத்யபதிஹ்ருதயவிஹாரிணீம்
பாவ ராக தாளமோதினீம் பக்தாபீஷ்ட ப்ரதாயினீம்
ஸேவகஜன பாலன குருகுஹ ரூப முத்துகுமார ஜனனீம்*

இதன் சரணத்தில் வரும் மத்தியமகாலத்தின் பொருள்: "பாவம், ராகம், தாளம் முதலியவற்றால் சந்தோஷிப்பவளே! பக்தர்களுடைய மனோரதங்களை நிறைவேற்றுபவளே! தன்னைப் பின்பற்றியவர்களை எல்லாம் ரக்ஷித்தருளும் குருகுஹன் என்ற முத்துக்குமாரனது தாயே!" என்பது. இதனால் தம் தகப்பனார் புத்திரனை வேண்டி, தேவியை வழிபட்டு, அவளுடைய சன்னிதியிலே நின்றுகொண்டு, பாவ ராக தாளங்கள் நிரம்பிய இனிய கானத்தால் அவளை ஆராதித்து மகிழ்வித்து, அவளுடைய அருளால் மக்கட்பேறு பெற்றமை குறிப்பிக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள்.

---

* **प.**—भजरे रे चित्त बालाम्बिकां भक्तकल्पलतिकाम्

अनु.—निजरूपदानदक्षचरणाम् अरुणां नित्यां कल्याणीं शर्वाणीम्

च.—श्रीवाग्भवकूटजातचतुर्वेदस्वरूपिणीम्
शृङ्गारकामराजोद्भवसकलविश्वव्यापिनीम्
देवीं शक्तिबीजोद्भवमातृकार्णशरीरिणीम्
देवनुतभवरोगहरवैद्यपतिहृदयविहारिणीम्
भावरागतालमोदिनीं भक्ताभीष्टप्रदायिनीम्
सेवकजनपालनगुरुगुहरूपमुद्दुकुमारजननीम्



*சுசீலை

எஸ். வையாபுரிப்பிள்ளை, பி.ஏ., பி.எல்.

சுசீலை தன் தந்தையின் தூரபந்துவாகிய அம்மணியம்மாள் கூட வசிக்கத் தொடங்கி ஒருவருஷத்திற்குப் பிற்பாடுதான் இராமநாதனை முதன்முறை சந்தித்தாள். இராமநாதன் அம்மணியம்மாளுடைய தங்கையின் குமாரன்.

சுசீலை சிறு குழந்தையாயிருக்கையிலேயே அவள் தாய் இறந்துவிட்டாள். அவள் தகப்பனார் பெருஞ் செல்வவானாயிருந்தார். அவருடைய பணமுழுவதையும் போட்டிருந்த அர்ப்பத்நட்பாங்கு திடீரென்று முறிந்து விட்டது. தமது ஏகபுத்திரியை வறுமை வாழ்விற்கு இரையாக்கிவிட்டோமே என்ற ஏக்கம் பிடித்து அதுவே நோயாக விரைவில் மரணமடைந்துவிட்டார்.

சுசீலைக்கு வயது பதின்மூன்று. நிரம்ப அழகுவாய்ந்தவள். ஆதரவு செய்வாரொருவரு மின்றித் தவித்துக்கொண்டிருந்தாள். சுசீலையின் பிதா இறந்துவிட்டதைக் கேள்வியுற்றதும் அம்மணியம்மாள் துக்கம் விசாரிக்கச்சென்றாள். சென்ற இடத்திலே சுசீலையின் நிலையையுணர்ந்து அவளைத் தனது இல்லத்திற்கு அழைத்து வந்து தனது குழந்தைபோற் பாவித்து மிக்க ஆதரவோடு வளர்த்து வந்தாள். அம்மணியம்மாள் ஒருவிதவை. அவளுடைய அகமுடையான் பொருட்செல்வத்தை நிரம்பத் தேடிவைத்து விட்டு இறந்தார். குழந்தைச் செல்வம் இல்லை.

அம்மணியம்மாள் இல்லாவிடின் தனது கதி என்னவாயிருக்கும் என்று சுசீலை அடிக்கடி நினைத்து வருந்துவாள். தன்னைத் தாயினும் மேலாகப் போற்றிவந்த அம்மணியம்மாளிடம் மிகுந்த அன்பு பூண்டு ஒழுகிவந்தாள்.

இராமநாதனைச் சுசீலை பார்த்ததே இல்லை; ஆனால் அவன் சென்னையிற் கிறிஸ்தவகலாசாலையிற் படித்துக் கொண்டிருந்த போது எடுத்த படமொன்றை அம்மணியம்மாள் தன்வீட்டு மாடியில் தூக்கியிருந்தாள். இராமநாதன் பேரில் அம்மணியம்மாளுக்கு மிகுந்த பிரியம். தன் பெரியதாயாரது அன்புநிறைந்த கண்

---

* ஓர் ஆங்கிலக் கதையைத் தழுவி யெழுதியது.

களுக்கு அவன் எவ்வளவோ அழகுள்ளவனாகவும் எவ்வளவோ சிறந்த குணங்களுள்ளவனாகவும் தோன்றியது ஓர் ஆச்சரியமாகுமா? இப்போது அவன் வானசாஸ்திரத்தில் மகா நிபுணனாய்ச் சென்னைச் சர்வகலாசங்கத்தின் ஆராய்ச்சிச்சாலையில் ஒரு தலைமையாசிரியனாக விளங்கினான்.

விடுமுறைக் காலத்திலே அவன் தனது பெரியதாயார் வீட்டிற்கு வருவதாக எழுதியிருந்தான். தான் எழுதிவருகிற ககோளசாஸ்திரத்தை முடித்தற்கு ஜனசஞ்சாரம் அதிகமில்லாத கிராமவாசந்தான் தக்கதாகுமென்று அவன் கருதினான். அவன் வருகிறானென்று கேள்விப்பட்டதும் சுசீலை அடைந்த வருத்தத்தைச் சொல்லி முடியாது. தான் இதுவரை அனுபவித்துவந்த செளக்கிய வாழ்விற்கு இடையூறு ஏற்பட்டுத் தான் வேறெங்கேனுஞ் செல்ல வேண்டியதாயிருக்குமோ என்று மிகவும் பயப்பட்டாள்.

இராமநாதன் வந்துவிட்டான். அவனைச் சுசீலை எதிர்பாராத விதமாக நேருக்குநேர் பார்த்துவிடும்படி நேர்ந்தது. அவன் கடிதத்திலிருந்து மத்தியானத்திற்குமேல்தான் அவன் வீடுவந்து சேருவதாயிருக்குமென்று அம்மணியம்மாள் எதிர்பார்த்திருந்தாள். வீட்டை அதிகாலையிலே மெழுகிக் கோலமிட்டு, பூச்செடிகளுக்கெல்லாம் நீர்வார்த்து, பார்ப்பதற்கு ரம்மியமாயிருக்க வேண்டும் ஏற்பாடுகளை அம்மணியம்மாள் செய்துகொண்டிருந்தாள். சுசீலை தெருவாசலில் நின்று வீட்டினழகைப் பார்த்த வண்ணமாக இருந்தாள். திடீரென்று மோட்டார் வந்து நின்றது. இராமநாதன் ஒரு நண்பனின் உதவியால் காலையிலேயே வீடு வந்து சேர முடிந்தது. சுசீலை திரும்பிப் பார்த்ததும் இராமநாதன் வண்டியிலிருந்து இறங்கிநின்றதும் ஒரேசமயமாயிருந்தது.

இராமநாதன் அழகுவாய்ந்தவன் என்று அவன் பெரியதாயார் சொல்லிக்கொண்டிருந்தது உண்மைதான். கம்பீரமான முகம்; பளபளப்புடன் கறுத்து விளங்கிய தலைமுடி 'கிராப்பு' செய்யப்பட்டிருந்தது. நல்ல தேகக்கட்டு; புயங்கள் சிலம்பவித்தையிற் பழக்கமடைந்தனபோல் வலுத்துத் திரண்டிருந்தன; கண்களில் அசாதாரணமான ஒளி; ஆனால் சாந்தமும் ஆழ்ந்த சிந்தனையும் அங்கே குடிகொண்டிருந்தன.

* * *

அம்மணியம்மாள் சுசீலையின் சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறிமுடித்தாள். இராமநாதனுடைய கண்கள் சிறிது கலங்கின. இத்தனை இளவயதில் அவள் பெற்றோரை இழந்து விட்டது பெருந்துர்ப்பாக்கியந்தானென்று வருந்திக்கூறினான்.

சுசீலையின் மெல்லிய அழகிய சரீரம் எல்லாவகையிலும் லக்ஷணம் நிரம்பியதாக இருந்தது. அவளது அழகு இராமநாதனது கனவுலகிலுள்ளதுபோலத் தோன்றிற்று. அவளது பொன்போன்ற மேனியும் கறுத்து நெய்த்துச் சுருண்ட கூந்தலும் அவனைப் பரவசமாக்கிவிட்டனவென்றே கூறவேண்டும். அவள் தன் மருண்டகண்களை நிமிர்த்துப் பார்க்குந்தோறும் அவனுடைய உள்ளம் கலக்கமடைந்தது.

அவளும், தன்னைக் கண்டு அவன் கலக்கமுறுவதை ஒருவாறு உணர்ந்தாள். இதுவரை அமைதியோடிருந்த வாழ்க்கை இனிச் சஞ்சலப்படுமோவென்று பயங்கொண்டாள்.

இராமநாதன் வந்து ஒருவாரமாயிற்று. அதன்பின்தான் ஓர் ஆண்மகனது வாழ்க்கை நலத்தில் தனது கருத்து சஞ்சரிக்கக் கூடுமென்பதைச் சுசீலை உணர்ந்தாள். இராமநாதனே எப்பொழுதும் ஆழ்ந்த சிந்தனையோடேயே இருந்தான். புஸ்தகம் எழுதுவதில் முழுநோக்கங் கொண்டுள்ள ஒருவன் இப்படி யிருந்தது ஆச்சரியமல்ல. என்றாலும், ஏதேனும் சுசீலைக்கு ஆகவேண்டிய திருக்குமானால் அதை எப்படியோ உணர்ந்து முற்கூட்டியேசெய்துவிடுவான்.

ஒருநாள் இரவு வானமண்டலத்தில் நக்ஷத்திரங்கள் தெளிவாகவும் அழகாகவும் விளங்கிக் கொண்டிருந்தன. தனது தூர திருஷ்டிக் கண்ணாடியை எடுத்துக் கொண்டு மூன்றும் மாடிக்கு இராமநாதன் போய்க்கொண்டிருந்தான். மாடிப்படிக்கருகில் தனது பெரிய தாயாரும் சுசீலையும் நிற்பதைக் கண்டான். அவர்களை நோக்கி "நக்ஷத்திரங்களைப் பார்க்க வருகிறீர்களா? நான் மூன்றும் மாடிக்குப் போகிறேன்" என்று சொன்னான். அம்மணி அம்மாள் தனக்கு மாடி ஏறி இறங்குவது முடியாதென்றும் வேண்டுமானால் சுசீலை போய்ப்பார்க்கலாமென்றும் சொன்னாள். சுசீலைக்கோ அரைமனதாக இருந்தது. முடிவில் "சும்மாபோய்ப் பார்" என்று அம்மணியம்மாள் கூறவே, அவளும் பின்சென்றாள். அவளுடைய இருதயமானது சிறிது வேகமாகவே துடித்துக் கொண்டிருந்தது.

இருவரும் மூன்றும் மாடியிற் போய்ச்சேர்ந்தார்கள். சுசீலை சிறிது நடுக்கத்துடனேயே நின்றுகொண்டிருந்தாள். இராமநாதன் அவளை அருகில் வரச்செய்து ஆகாயத்தை உற்று நோக்கச்சொல்லி அங்கே காணப்பட்ட நக்ஷத்திரங்களை ஒவ்வொன்றாகக் காட்டினான். ஒரு சிறு நக்ஷத்திரத்தைக் காட்டி அதைக் கவனித்து

நோக்கும்படியாகச்சொன்னான். அவளுக்கு அந்நக்ஷத்திரம் அவ்வளவு தெளிவாகத் தெரியவில்லை. எந்த நக்ஷத்திரத்தை என்று தயங்கிக்கேட்கவே, அவன் அவளது மெல்லிய விரலின் நுனியைப் பிடித்துத் தன்விரலோடு சேர்த்து உயர்த்தி நக்ஷத்திரத்தைக் காட்டினான். பின் கிரகங்களுடைய பெயர்களை ஒவ்வொன்றாகச் சுட்டிச் சொல்லிக்கொண்டிருந்தான். அப்பெயர்களெல்லாம் இவள் காதில் தெளிவாகப் பட்டனவென்று சொல்லமுடியாது. தான் சொல்லுவதைக் கவனிக்கவில்லையென்பதைத் தெரிந்துகொண்டு "நான் சொன்னதை நீ முழுவதும் கவனிக்கவில்லைபோல் தோன்றுகிறதே. நான் சூரியனைச்சுற்றி ஓடுகின்ற ஒன்பது கிரகங்களின் பெயர்களையும் வரிசையாகச் சொல்லிக்கொண்டிருந்தேன்" என்றான். சுசீலை தன் அறியாமைக்குச் சிறிது வெட்கமடைந்தாள். "நக்ஷத்திரங்களைப் பற்றிக் கூறுகிறீர்களென்று நினைத்தேன். என்றாலும் எத்தனையோ லக்ஷக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ளவைகளைப் பற்றி இத்தனை உற்சாகம் காட்டுவதற்குக் காரணம் தெரியவில்லை. இவற்றின் முன் நான் எவ்வளவோ அற்பமென்று எனக்குத் தோன்றுகிறது" என்று கூறிச் சிறிது நடுங்கினாள். "மக்கள் எல்லாருமே இவைகளை நோக்கும்போது மிகமிக அற்பந்தான்" என்று இராமநாதன் பதிலளித்தான். பழையபடி சுசீலைக்கு ஒரு சிறு நடுக்கமுண்டாயிற்று. "உனக்குக் குளிருகிறதென்று நினைக்கிறேன்" என்று சொல்லி அவளைக் கீழே இட்டுவந்தான்.

அன்றிரவு சுசீலை கனவுகண்டாள்: இருவரும் மாடிக்குச் சென்று வானத்தை நோக்கிக்கொண்டிருந்தார்கள். பிறைச்சந்திரன் தாழ்ந்து தாழ்ந்து தங்களைநோக்கி வந்துகொண்டிருந்தது. தங்கள் கைக்கு எட்டக் கூடிய தூரத்தில் ஒருபெரிய ஊஞ்சல் போல அது தொங்கிக் கொண்டிருந்தது. இராமநாதன் தன்னை ஜாக்கிரதையாக எடுத்து அவ்வூஞ்சலின் மீது வைத்தான்; தானும் ஏறிக்கொண்டான். ஊஞ்சல் மிகவேகமாக ஆடத்தொடங்கிற்று. "என்னுடன் இவ்வூஞ்சலில் ஆடிச் சந்திரமண்டலம் போவதில் உனக்கு அச்சமில்லையா!" என்று கேட்டான். "நீ அருகிலிருக்கும்போது எனக்குப் பயமென்பது தோன்றவில்லை" என்று மறுமொழி கூறினாள். அப்போது இராமநாதனுடைய முகத்திலே இதுவரையினும் இல்லாத ஒருபுதிய புன்னகை தவழ்ந்தது. தாங்கள் ஏறியிருக்கும் பிறைச்சந்திரனது ஒளிகூட இப்புன்னகையொளியின் முன் மங்கிப்போயிற்றென்றே நினைத்தாள். அந்த ஒளியிலேயே மனம் ஊன்றிநின்று கண்ணயர்ந்து உறங்கிவிட்டாள். காலையில் விழித்தெழுந்துங்கூட அந்தக்கனவு கண்முன்னே நின்றுகொண்

டிருந்தது. தன்னைச் சந்திரமண்டலத்திற்கு அழைத்துச்சென்ற இராமநாதன் மீது சுசீலேக்குக் காதல் அரும்பத்தொடங்கிற்று.

ஆனால் இராமநாதன் தன்னைப்பற்றி நினைப்பதாகவே அவளுக்குத் தோன்றவில்லை. அவளுடைய அழகு சாதாரணமான தன்று என்பதை அவன் தெரியாதவனல்ல. அவள் அழகைப்பற்றி அவன் தனது பெரியதாயாருடன் வேடிக்கையாகப் பேசுவதையும் அவள் கேட்டிருக்கிருள். தன் அழகும் குணமும் அவன் மனத் திற் சிறிதும் பதிந்திருப்பதாக மாத்திரம் தெரியவில்லை. சுசீலேக்கு இது மிக வருத்தத்தை உண்டுபண்ணிற்று. இவளுக்கு வருத்தம் நேரிடுங்காலங்களில் இவள் அவ்வீட்டிலுள்ள புஸ்தக அறைக்குச் சென்று புஸ்தகங்களை எடுத்து வாசித்துக்கொண்டிருப்பாள். காவியச் சுவையிலே அவள் மிகவும் ஈடுபட்டிருந்தாள்.

ஒருநாள் அம்மணியம்மாள் தனது தோழி யொருத்தி வீட்டிற்குச் சென்றிருந்தாள். மழைபெய்துகொண்டிருந்தது. இராமநாதன் தான் எழுதிக்கொண்டிருந்த புஸ்தகத்தில் மனம் அழுந்தியிருந்தான். சுசீலே புஸ்தக அறையிலுள்ள ஒரு நாற்காலி யில் சாய்ந்திருந்து புஸ்தகம் ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு வாசிக்க முயன்றாள். ஆனால் அவள்மனம் படிப்பில் செல்லவில்லை; மேல்மாடியில் எழுதிக்கொண்டிருக்கும் இராமநாதனைப்பற்றியே சிந்தனை செல்லலாயிற்று. அப்போது திடீரென்று ஆளரவம் கேட்டது.

வந்தது தனது தந்தையினுடைய பழைய நண்பரிலொருவ ரான சோமநாதர். அவர் புஸ்தகங்கள் பிரசுரித்து வெளியிடும் தொழிலை மேற்கொண்டிருந்தவர். அவரைக்கண்டதும் சுசீலேயின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. அவர் "சௌக்கியந்தானா" என்று கேட்டுக்கொண்டு உள்ளேவந்து சுசீலேயின் பக்கத்திலிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். "என்ன வாசிக்கிறாய்? கண்ணன் பாட்டுத்தானா" என்று கேட்டார். "பாரதியை நான் அடிக்கடி வாசித்து வருகிறேனென்று உமக்கு எப்படித்தெரியும்?" என்று கேட்டதும், அவர், "நீ என்னதான் வாசித்துக் கொண்டிருப்பாய் என்பதைக்கூட நான் சொல்லிவிடுவேனே" என்று கூறினார்.

"ஆமாம், நீங்கள் சொல்லியது சரிதான்"

"சரி, பாடு பார்ப்போம். எனக்கும் பாரதி பாட்டுக்களில் மிகப்பிரியம். நானும் சொல்லிப் பார்க்கிறேன்."

"காற்று வெளியிடைக் கண்ணம்மா - நின்றன்
காதலை யெண்ணிக் களிக்கின்றேன்"

என்ற பாட்டைச் சுசீலே பாடத்தொடங்கினாள்.

"மிக அழகான பாட்டைப் பொறக்கியிருக்கிறாய். அம்மணி யம்மாள் இன்னும் திரும்பவில்லை. இராமநாதன் அந்தப் பாழாய்ப் போன ககோளசாஸ்திரத்தை ஓயாமலெழுதிக் கொண்டிருக்கிறான். நான்தான் அதைப் பிரசுரிப்பதாக ஒத்துக்கொண்டிருக்கிறேன். இருந்தாலும் இப்படியா செய்கிறது? எப்பொழுதும் எழுத்து வேலைதானா? உன்னைப்போல ஒரு யுவதி எத்தனை அழகாய்ப் பாடினாலும் அவனுக்குச் சாதம் இல்லை கண்ணும் இல்லை. அதை அனுபவிப்பது என் அதிருஷ்டம் என்று தான் கூற வேண்டும்?"

இப்படிச் சோமநாதர் சொன்னதும் சுசீலை தன்னருகில் கிடந்த சிறுதிண்டை அவர்மீது எறிந்து சிரித்து விட்டு முன் போல்வே சௌகரியமாகவே உட்கார்ந்து கொண்டாள். சோம நாதருக்குச் சுமார் 55 வயது இருக்கலாம். பெரிய குடும்பி. சுசீலை சிறுகுழந்தையா யிருக்கும்போது அவர் இவளை மடிமீ தெடுத்துவைத்துச் சீராட்டியவர். தன் தந்தை யிடத்தில் கூச்சமின்றி விளையாடுவதுபோலவே சுசீலை அவரிடத்தில் விளை யாடுவாள்.

இருவரும் பாடினார்கள். இருவரது குரலும் ஒத்து இசைந்து சென்று கேட்பதற்கு மிக இனிமையாயிருந்தது. கடிகாரம் டிக்டிக் என்று அடித்துக்கொண்டிருந்தது. திடீரென்று ஆளரவம் கேட் டது. சுசீலை திரும்பிப்பார்த்ததும் இராமநாதனைக்கண்டாள். ஏதாவது வேண்டுமா என்று சிறிது கலக்கத்துடன் கேட்டாள்.

"விசேஷமா யொன்றுமில்லை. நீங்கள் இரண்டுபேரும் சேர்ந்து பாடுவது மிக நன்றாயிருக்கிறது. எவ்வளவு நேரமாகப் பாடுகிறீர் களோ?"

பதில் கூறாது இருவருஞ் சிரித்தார்கள்.

"வானுலகத்திலுள்ள தாரகையைக் கண்டு மகிழ்ச்சி சொல்வ தைக் காட்டிலும் தன் அருகிலுள்ள ஓர் சிறுமியின் அழகொளி யைக் கண்டு மகிழ்வது நல்லதல்லவா?" என்று கூறிக்கொண்டே சோமநாதர் எழுந்திருந்து,

"உன் பெரியதாயார் வந்துவிட்டாளோ?" என்று கேட்டார்.

"ஆமாம், வந்தாயிற்று. உங்களிருவரையும் காப்பி சாப்பிடுவ தற்கு அழைத்தாள்."

* * *

"சேட்டிபோ அம்மா! இரண்டுபேரும் சேர்ந்து ஒரு சாதற் பாட்டைப் பாடிக் கொண்டிருந்தார்கள். இவர்களைப் பார்த்தால் அப்படிக் காதற்பாட்டைப் பாடுவார்களென்று உனக்குத்தோன்று

கிறதா?" என்று தன் பெரியதாயாரைப் பார்த்து இராமநாதன் கேட்டான்.

சுசீலையைத் தவிர எல்லாரும் சிரித்தார்கள். அவள் மட்டும், "எனக்குப் போது போகவில்லை. படித்துக் கொண்டிருந்தேன். அப்போது அவர் வந்தார். இருவரும் பாடிக்கொண்டிருந்தோம்" என்று கூறினாள்.

"சேர்ந்துபாடுவதற்கு நானும் வந்திருப்பேனே, என்னை ஏன் கூப்பிடவில்லை?" என்றான் இராமநாதன்.

சுசீலைக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. பாரதியின் பாட்டு இராமநாதன் மனத்தில் காதலுணர்ச்சியை உண்டுபண்ணி விட்டதோ வென்று நினைத்தாள்.

* * *

மறுநாள் காலையில் தபால் மூலமாக ஒருகடிதம் வந்தது. அதன் முத்திரையை அம்மணியம்மாள் கண்டதும் பெருமகிழ்ச்சியடைந்து, "எனக்குத் தெரியுமே! சுந்தரியின் பெற்றோர்கள் வெகுகாலம் தங்கியிருக்கமாட்டார்களே. வந்துவிட்டார்களென்று தோன்றுகிறது.

சுசீலை:—யார்?

அம்மணியம்மாள்:—சுந்தரியின் பெற்றோர்கள். மேலே மாடியில் ஓர் அழகிய பெண்ணின் படம் நீ பார்த்திருக்கிறாயல்லவோ? அதுதான் சுந்தரி. அவள்பெற்றோர்களும் அவளும் பம்பாய்க்குப் போய் ஒருவருஷமாகிறது. அங்கே சுந்தரியின் தகப்பனாருக்கு உத்தியோகம். அவர்களெல்லாரும் வரவேண்டியகாலம் ஆகிவிட்டது. ஒருத்தன் எத்தனைகாலமாகத்தான் சுந்தரிக்காகக் காத்திருப்பது?

சுசீலை:—யார் காத்திருக்கிறார்கள்?

அம்மணி:—யார்! இராமநாதன்தான்.

சுசீலையின் அடிவயிற்றில் நெருப்பைக் கொட்டினதுபோல் இருந்தது.

"சுந்தரி என் அண்ணாவின் குழந்தை. இராமநாதனும் சுந்தரியும் சிறு குழந்தைகளாயிருக்கும்பொழுதே இணைபிரியாத தோழர்களாயிருந்தார்கள். ஒருவர்க்கொருவர் மிகுந்த அன்பு பாராட்டி வந்தார்கள். இதைக் கண்டு இருவருடைய பெற்றோர்களும் இருவரையும் மணமுடித்து விடவேண்டுமென்று தீர்மானித்து விட்டார்கள். ஆனால் சௌகரியம் வாய்க்கவில்லை; என் அண்ணா தூர தேசங்களிலே வேலையாயிருந்தார்கள். இப்போதுதான் வருகிறார்கள்."

"என்றைக்கு வருகிறார்கள்?"

"கடிதம் வந்திருப்பதால் சீக்கிரம் வருவதாயிருக்கும். வந்தவுடன் கலியாணம் நடக்கும்."

சுசீலைக்கு உடம்பு என்னவோ ஒருமாதிரியாக இருந்தது. சிறிது வாட்டத்துடன் அறைக்குச் சென்றாள். இராமநாதன் காதலுணர்ச்சியற்றவனாயிருப்பதன் காரணம் இப்போதுதான் தெரிந்தது. அவன் மனவடக்கத்தைக் குறித்து ஒருவாறு மகிழ்ச்சியும் அடைந்தாள். சுந்தரியை முன் ஒருமுறையும் பாராதவளாயிருந்தும் அவள்மீது வெறுப்புக்கொண்டாள்.

அறைக்குச் சென்றபோதிலும் அங்கே அவளால் இருக்க முடியவில்லை. தனியேயிருந்தால் தன் மனத்திலிருக்கும் பாரம் அதிகப்படுவதுபோலத் தோன்றிற்று. உடனே அம்மணியம்மாள் இருக்குமிடத்திற்கு வந்தாள்.

"ஏனம்மா! உனக்கு உடம்பு என்ன செய்கிறது? ஒரு மாதிரியாக இருக்கிறாயே! முகத்தைப் பார்க்க முடியவில்லையே! நான் வெளியே போகிறேன். டாக்டரை வரச் சொல்லட்டுமா?"

"வேண்டாம், கொஞ்சநேரத்தில் எல்லாம் சரியாய்ப் போய் விடும். நான் இங்கேயே இருக்கிறேன்."

அம்மணியம்மாள் புறப்பட்டுப்போய்விட்டாள். சுசீலை தன்னையறியாமலே புஸ்தக அறைக்குச் சென்று உட்கார்ந்தாள். துக்கம் மேலிட்டது; கண்ணீர் வடிந்தது. தனக்கு இனி வாழ்வென்பதே கிடையாது என்று எண்ணலானாள்.

அன்றுமாலையில் புதிதாக ஓர் அம்மாள் அம்மணியம்மாளைத் தேடிவந்தாள். அவள் அவ்வூர்ப் பெண்பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயினி. பள்ளிக்கூடத்தில் மறுநாள் ஒரு விசேடம் நடக்கப்போகிறபடியால் அதில் சுசீலை ஏதாவது ஒரு பாட்டுப்பாட வேண்டுமென்று ஏற்பாடுசெய்வதற்கு வந்தாள். சுசீலை முதலில் மறுத்துப்பார்த்தாள். சோமநாதர் அவளது பாட்டுத்திறமையைப் பற்றிக் கூறியிருப்பதால் அவள் அவசியமாக வந்துதான் தீர வேண்டுமென்று உபாத்தியாயினி வற்புறுத்தினாள். தான்போய்ப் பாடுவது அம்மணியம்மாளுக்கும் திருப்தியாயிருக்குமென்று உணரவே சுசீலை உடன்பட்டாள். உபாத்தியாயினி திருப்தியுடன் விடைபெற்றுச் சென்றாள்.

"எதைப்பாடப்போகிறாய்?" என்று அம்மணியம்மாள் கேட்டாள்.

"எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை."

'கண்ணன் பாட்டு'ப் புஸ்தகத்திலிருந்து ஏதாவது ஒன்றைப் பாடினால் போகிறது. நேற்றுப் பாடினதையே பாடு. ராமு இன்று காலைமுதல் எரிந்து விழுந்துகொண்டிருக்கிறான். பைத்தியம் பிடித்ததுபோலிருக்கிறான். அவன் தன் அறையிலுள்ள புஸ்தகங்களைக் கண்டபடி விட்டெறிகிற சத்தமும் அடிக்கடி கேட்கிறது. இந்தப்படியானால் அவன் எழுதிவருகிற புஸ்தகம் எப்போ முடியும்? அதனால் வரும் பணத்தைக்கொண்டு சுந்தரிக்கு ஏதாவது நகைகள் வாங்கிக்கொடுப்பான் என்றல்லவோ நினைத்திருந்தேன்."

"எதற்காகக் கோபமாயிருக்கிறார்? அவருக்குக் கோபம் வந்ததைப் பார்த்ததே யில்லையே!"

"அப்படிச் சாந்தமாயிருக்கிறவர்களுக்குத்தான் மிகுந்த கோபம் வரும். இன்றைக்குத் தபால் வருவதற்குமுன்னாலேயே அவன் கீழேவந்து விட்டானே."

"ஒருவேளை சுந்தரியம்மாளின் பெற்றோரிடமிருந்து காகிதம் வந்ததோ?"

"அப்படி யிராது. அவர்களிடமிருந்து கடிதம் வந்தால் மிகுந்த உத்ஸாகமாயல்லவா இருப்பான்? சுந்தரிக்கும் அவனுக்கும் கலியாணமாகி விட்டதானால், அப்புறம் இவ்வளவு கோப தாபங்களுக்கு இடமேயிராது."

அம்மணியம்மாள் கடைக்குப் போகவேண்டியதாயிருந்தது. சுசீலை மறுநாள் பாடவேண்டிய கண்ணன்பாட்டைத் தயார்செய்ய வேண்டியிருந்ததால் கூடச்செல்லவில்லை. கண்ணன்பாட்டுப் புஸ்தகத்தை யெடுக்கப்போனாள். அப்பொழுதுதான் சோமநாதர் அதைக்கொண்டுபோயிருப்பது அவளுக்கு ஞாபகம் வந்தது. என்ன செய்வது? தான் முந்திப்பாடினபாட்டை மனத்துக்குள் சொல்லிப் பார்த்தாள். முதற் செய்யுளில் அங்கங்கே ஞாபக மறதியிருந்தது. எவ்வளவோ முயன்றும் அந்தச் செய்யுள் முழுமையும் நன்றாக ஞாபகத்திற்கு வரவில்லை. சோமநாதருக்கு ஓராள் அனுப்புவோமா என்று நினைத்தாள். அந்தச்சமயம் சோமநாதரிடமிருந்தே ஒருகடிதத்தை இராமநாதன் கையில் கொடுப்பதற்கு ஓராள் வந்தான். அவனிடம் தனக்கு அம் முதற்செய்யுளை எழுதியனுப்பும்படி ஒருகடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு, அவன் கொண்டுவந்த கடிதத்தை யெடுத்துக்கொண்டு இராமநாதன் அறைக்கு வந்தாள்.

கதவைத் திறந்தாள். உள்ளேயிருந்த இராமநாதனைப் பார்க்கவே பயமாயிருந்தது. அவன் முகத்திலே வெறுப்பும் கோபமும்

போராடிக்கொண்டிருந்தன. அவனிடம் சென்று கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சரேலெனச் சுசீலை திரும்பிவந்துவிட்டாள். சில நிமிஷங்களில் இராமநாதனும் வெளியே புறப்பட்டுச் சென்றான்.

ராமு திரும்பிவரும்போது அவனை அம்மணியம்மாளும் சுசீலையும் கண்டார்கள். முன்னிருந்த வெறுப்பும் கோபமும் இப்போது சுவாலைவிட்டெரியத் தொடங்கிவிட்டன. இருவரும் ஸ்தம்பித்துப்போய்விட்டார்கள். "என்ன விசேஷம்? சோமநாதர் நீ எழுதிய புஸ்தகத்தை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டாரா?" என்று அம்மணியம்மாள் கேட்டாள்.

"இல்லை, அந்த நாசமாய்ப்போன புஸ்தகத்தை அந்தக் கிழட்டுத் திருடன் எடுத்துக்கொண்டான்" என்று கடுத்த குரலில் இராமநாதன் பதில் சொன்னான். சுசீலையைப் பார்த்து, "இந்தா, உனக்கொரு கடிதம். உனக்கு நிரம்பத் திருப்தியாயிருக்குமென்று நினைக்கிறேன்" என்று சொல்லிவிட்டு ஒரு கடிதத்தை அவளிருந்த இடத்தை நோக்கி எறிந்துவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டு போய்விட்டான். அம்மணியம்மாள் அந்தக் கடிதத்தை யெடுத்துப் படித்துவிட்டுச் சுசீலையைக் குறித்துப் பார்த்தாள். உடனே சுசீலை, "நாளைப்பாடவேண்டும் கண்ணன்பாட்டில் ஒரு செய்யுள் இது. எனக்கு ஞாபகத்துக்குவராததால் எழுதியனுப்பும்படி சோமநாதருக்குக் கடிதம் கொடுத்திருந்தேன். இது என் கடிதத்திற்குப் பதில்" என்று விவரமாய்க் கூறினாள்.

"உன்னைப் பார்க்கவே பிடிக்காதபடி முகத்தைத் திருப்பிக்கொண்டானே! என்ன காரணம்? இதற்குமுன் இப்படியிருந்ததைக் கண்டதேயில்லையே?"

இராமநாதன் உணவுகொள்ளக் கீழே இறங்கி வரவில்லை. அவனைப் போய்ப்பார்த்துவர அம்மணியம்மாள் மேலே சென்றாள்.

"ராமு, ஏன் இப்படியிருக்கிறாய்? ஏதாவது விசேஷமுண்டா? எங்களுக்கெல்லாம் பயமாயிருக்கிறதே!" என்று அம்மணியம்மாள் கேட்டாள்.

"'எங்களுக்கு' என்று யாரைச்சொல்லுகிறாய்?"

"என்னைப்போலொத்த பெண்டுகளுக்குத்தான்."

"பெண்டுகளென்றால் எனக்கு எரிகிறது. அவர்களைப்பற்றிப் பேசாதே. அவர்களெல்லாரும் கள்ளிகள், உன்னையும் என் அம்மாவையும் தவிர—"

"சுசீலையோ?"

"அவளும் கள்ளிதான், ஒன்றும் வித்தியாசமில்லை."

"சுந்தரியோ?"

"இந்தக் கடிதத்தைப் படித்துப்பார். விஷயம் விளங்கும்."

"அன்புள்ள ராமுவுக்கு,

இந்தவருஷம் கலியாணம் நடத்திவிடவேண்டுமென்று உறுதியாயிருந்தேன். ஆனால் உனது மாமி தன் அண்ணு கோபுவுக்கு இரண்டாந்தாரமாகச் சுந்தரியைக் கொடுக்கவேண்டுமென்று பிடிவாதம் பண்ணிவிட்டாள். அவன் பணக்காரனல்லவா? பலகாரியங்களைக் கட்டி யளந்து சுந்தரியையும் தனக்குச் சகாயமாகச் சேர்த்துக்கொண்டாள். அவர்கள் கருத்துப்படியே கலியாணத்தை நடத்தி விடுவதென்று தீர்மானித்து விட்டேன். எனக்கு வருத்தம்தான். உனக்கும் அளவில்லாதவருத்தம் இருக்கக் கூடியது இயல்பே. ஆனாலும் என்ன செய்வது? என்பேரிலே மனஸ்தாபங் கொள்ளமாட்டாயென்று நினைக்கிறேன்.

இப்படிக்கு
சந்திரசேகரன்."

அம்மணியம்மாள் வருத்தம் சகிக்கமுடியாமல், சிறிதுநேரம் ஒன்றும் பேசாமல், அப்படியே இருந்துவிட்டாள். கடைசியில் ஒருவாறாகத் தெளிந்து, "போனால் போகிறது. இதற்காக நீ சாப்பிடாமல் இருப்பானேன். வா, கீழே போவோம்" என்று அழைத்தாள்.

"சுந்தரி எக்கேடுகெட்டாலுஞ் சரியே. எனக்கு அதைப்பற்றி அக்கரையேயில்லை. ஆனால் பெண்களையே வெறுக்கிறேன். எல்லாரும் கள்ளிகள்."

அம்மணியம்மாள் மட்டும் கீழே வந்தாள். விஷயத்தைச் சுசீலைக்குத் தெரிவித்தாள். பிறகு திடீரென்று "சரி, சுந்தரியை மணஞ்செய்யமுடியாததால் அவனுக்கு மனம் இடிந்துதானிருக்கிறது. ஆனால் உன்னைப்பற்றி அவ்வாறு சொன்னது கொஞ்சமும் சரியல்ல. நான்போய் அவனிடம் பேசிவருகிறேன்."

"என்னைப்பற்றி என்ன சொன்னார்?"

"நீயும் எல்லாப் பெண்களையும்போல் கள்ளிதான் என்றான். பெண்களை இப்படி பழிவாய்ப்பேசுகிறவனை எனக்குப்பிடிக்காது."

சுசீலை தன் அறையில் தனியாக உட்கார்ந்திருந்தாள். அவளை அரித்துத் தின்றுகொண்டிருந்த மனவருத்தம் எங்கேயோ பறந்துவிட்டது.

தான் பாடவேண்டிய பாட்டைத் தனக்குத்தானே சொல்லிக்கொண்டிருந்தாள். அப்போது சாத்தியிருந்த கதவு மெல்லத் திறந்தது. ராமு வாடித் தொங்கிய முகத்துடன் உள்ளே வந்தான்.

"பெண்களெல்லாம் கள்ளிகள்; நம்பத்தகாதவர்கள்; கள்ளத்தனமாகக் காதல் செய்வதுதான் அவர்களுக்கு விருப்பம் போலிருக்கிறது! அப்படித்தானா?" என்று கேட்டான்.

சுசீலை ஆச்சரியத்தோடு, "நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? எனக்குத் தெரியவில்லையே" என்றாள்.

"சுந்தரி அப்படிச் செய்திருக்கிறாள் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. நீயும் அப்படித்தானே?"

"நான் அப்படியொன்றுஞ் செய்ததாகத் தெரியவில்லையே?"

"கிழப்பிணங்கள் காதற்பாட்டுக்களைப் பாடிக் கள்ளத்தனமாக எழுதி அனுப்பினால், அவைகளைக் கள்ளியல்லாமல் வேறு யார் ஏற்றுக்கொள்வார்கள்?"

சுசீலைக்கு முகம் சுண்டிவிட்டது. "கள்ளிதான் அவ்வாறு செய்வாள். என்னிடம் ஏன் அதைச் சொல்லவேண்டும்?"

"ஏன் சொல்லவேண்டுமென்று கேட்கிறாய்? அந்தக் கிழட்டுச் சோமநாதன் கள்ளத்தனமாக உனக்குக் காதற்பாட்டு எழுதியனுப்பினான். நீ அதை அன்போடு வாங்கி வைத்துக் கொண்டாயே?"

சுசீலைக்கு அப்போதுதான் விளங்கிற்று. "நீங்கள் அதைப் படித்துப் பார்த்தீர்களா?"

ராமுவுக்கு மிகுந்த வருத்தமுண்டாயிற்று. தனக்குத் தகாத ஓர் காரியத்தைச்செய்து விட்டதாகச் சட்டென்று உணர்ந்தான். இப்படியுணருகிறானென்று சுசீலை கண்டதும் அவளும் வருத்தங் கொண்டாள்.

"நான் பார்க்கவேண்டுமென்று நினைத்துச் செய்ததல்ல. அந்தக் கிழவன் கடிதத்தின் உறையை ஒட்டாமற் கொடுத்துவிட்டான். சுந்தரி விஷயத்தில் மனம் ஊன்றியிருந்த நான் கடிதத்தைக் கை சோரவிட்டேன். அது கீழே விழும்போது உறையிலிருந்து கடிதம் வெளிவந்துவிட்டது. அப்போது அது என்கண்ணைக் கவர்ந்ததேயன்றி, நானாகப் பார்க்கவில்லை. நீ அனுப்பிய கடிதத்திற்குப் பதில் என்று சொன்னானே. நீ அப்படிச் செய்யலாமா?"

"தாங்கள் என்னைப்பற்றிக்கனவிலேனும் சிந்தித்தது உண்டோ?"

"ஓயாத சிந்தனையுங் கவலையுந்தான். இல்லாமற்போனால், நான் அந்தக்கடிதத்தைத் திரும்பிக்கூடப் பார்த்திருக்கமாட்டேன். அதிலெழுதியிருந்ததைக் கண்டதும் என் வருத்தம் சகிக்க முடியவில்லை. சுந்தரி வேறொருவனைக் கலியாணம் பண்ணிக்கொள்வதில் எனக்குச் சிறிதும் வருத்தமேயில்லை."

சுசீலையின் மனத்தில் தைரியம் பிறந்தது. ராமுவை அன்பு கனிந்த கண்களால் ஏறிட்டு நோக்கினாள். ராமுவும் நெருங்கி

வந்து அவள் மெல்லியகரங்களைக் கையாலெடுத்துத் தன்கண்களில் ஒற்றிக்கொண்டான். "நாளையதினம் இவ்வூர்ப் பெண்பள்ளிக் கூடத்தில் ஒரு விசேஷம். அதில் பாரதியின் கண்ணன் பாட்டிலிருந்து ஒரு பாட்டு நான் பாடுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறேன். அதை நானும் சோமநாதரும் பாடிய பொழுது நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அந்தப் புஸ்தகத்தை அவர் ஏதோ பார்க்கவேண்டுமென்று சொல்லி வாங்கிப்போனார். எனக்கு அரைகுறையாய் ஞாபகத்திலிருந்ததால், முழுவதையும் எழுதியனுப்பும்படி அவருக்குக் கடிதம் அனுப்பியிருந்தேன். அதற்குப் பதில்தான் நீங்கள் கொண்டுவந்தது. பாட்டை முழுவதுங் கேட்கிறீர்களா?" என்று கூறிவிட்டு,

"காற்று வெளியிடைக் கண்ணம்மா - நின்றன்
காதலை எண்ணிக் களிக்கின்றேன் - அமு
தூற்றினை யொத்த இதழ்களும் - நில
வூறித் ததும்பும் விழிகளும் - பத்து
மாற்றுப்பொன் னொத்தநின் மேனியும் - இந்த
வையத்தில் யானுள்ள மட்டிலும் - எனை
வேற்று நினைவின்றித் தேற்றியே - இங்கோர்
விண்ணவ னாகப் புரியுமே."

"நீயென தின்னுயிர் கண்ணம்மா - எந்த
நேரமு முன்றனைப் போற்றுவேன் - துயர்
போயின போயின துன்பங்கள் - நினைப்
பொன்னெனக் கொண்ட பொழுதிலே - என்றன்
வாயினி லேயமு தூறுதே - கண்ணம்
மாவென்ற பேர்சொலும் போதிலே - உயிர்த்
தீயினி லேவளர் சோதியே - என்றன்
சிந்தனையே யென்றன் சித்தமே."

என்ற செய்யுட்களைக் கந்தர்வகானமோவென்று சொல்லும்படி இனிய கம்பீரமான குரலிலே பாடினாள். அவள் அழகிய கண்களிலே காதல் கனிந்து விளங்கிற்று. ராமு அவளை அணுகித் திரும்பவும் அச்செய்யுட்களைக் கூறும்படி வேண்டினான். அவள் திரும்பவும் பாட ராமுவும் அவளைப்பின்றொடர்ந்து சொல்லத்தொடங்கினான்:

"காற்று வெளியிடைக் கண்ணம்மா - நின்றன்
காதலை பெண்ணிக் களிக்கிறேன் - அமு
தூற்றினை யொத்த இதழ்களும் - நில
வூறித் ததும்பும் விழிகளும்"

என்றதுவரை பாடல் சென்றது. இருவருடைய கண்களும் சந்தித்தன.

திகம்பரன்

கே. சாவித்திரி அம்மாள்

[உலகில் ஒவ்வொருவருக்கும் அவர்கள் வாழ்க்கையின் நிலைமையை மாற்றக்கூடிய விசேஷ சம்பவங்கள் நேரிடும். அவைகளை முன்னதாகவே நாம் அறிந்துகொள்வதென்பதுமட்டும் சாத்தியமல்ல. இவைகளன்றி ஒருமாறுதலுமியற்றுமல் நம்மையணுகிய அளவிலேயே அகன்றுவிடும் சிறு சம்பவங்களும் எவ்வளவோ இருக்கின்றன. நமக்கு நேரும் அதிர்ஷ்டமோ, துரதிர்ஷ்டமோ, அதை முன்னதாகவே நாம் அறிந்துகொள்ளுவதென்றால் பின்பு வாழ்நாள் முழுவதும் சந்தோஷம், பயம், ஏமாற்றம், நம்பிக்கை இவைகளே முற்றிலும் குடிகொண்டுவிடுமல்லவா? பிறகு ஒரு நிமிஷநேரமாவது நிம்மதியென்பது நமக்கு எவ்வாறு ஏற்படும்? இதனுண்மையை அடியில்வரும் கதையிலிருந்து ஒருவாறு நாம் அறிந்துகொள்ளலாம்.]

திகம்பரனுக்கு வயது இருபது ஆயிற்று. தான் பிறந்து வளர்ந்த கிராமத்திலிருந்து ஐந்தாறு மைல் தூரத்திலுள்ள ஒரு ஊரில் கொடுக்கல் வாங்கல் தொழில் நடத்திவந்த தன் சிற்றப்பனை அவன் பார்க்கச் சென்றான். திகம்பரன் நல்லகுடும்பத்திற் பிறந்தவன். சுமாராய்க் கல்வியும் பயின்றிருந்தான். விடிந்தபிறகு கால்நடையாய்க் கிளம்பியவனுதலால் சிறிது தூரம் செல்வதற்குள்ளேயே வெய்யில் உக்கிரமாய்த் தகிக்கத் தொடங்கவே, சற்று ஒரு மரத்தடியில் தங்கிப் போக்குவண்டிகள் ஏதாவதொன்றில் ஏறிச் செல்லலாமென்று உத்தேசித்தான்.

இப்படி அவன் நினைத்ததுதான் தாமதம்; விரைவில் தெளிந்த நீரையுடைய ஒரு சிறுவாய்க்காலும் அதனருகே அவனுக்கென்றே வைத்துப் பயிராக்கப்பட்டதுபோல் குளிர்ந்த நிழல் கொடுத்துக் கொண்டிருந்த சில வேப்பமரங்களும் சாலையோரமாய்க் காணப்பட்டன. திகம்பரன் அவ் வாய்க்காலிலிறங்கி, தன் தாகம் தீருமட்டும் கைகளால் நீரை யள்ளிப் பருகினான். பிறகு கையிலிருந்த துணிமூட்டையைத் தலைக்குயரமாய் வைத்துக் கொண்டு வேப்பமரத்து நிழலில் கவலைதீர்ந்தவன்போல் படுத்துக் கொண்டான். வெய்யிலின் வெப்பம் அவ்விடத்தில் சிறிதும் அணுகவில்லை. முதல்நாள் பெய்த மழையினுல் சாலைப்புழுதியும்

வெகுவாய் அடங்கியிருந்தது. அவன் படுத்திருந்த புற்றரையோ பஞ்சணைமெத்தைக்குமேல் சுகமாய்த் தோன்றிற்று. பக்கத்தில் அரித்தோடிக்கொண்டிருந்த வாய்க்காலின் இனிய ஓசையும், தலைக்குமேல் பந்தலிட்டதுபோல் ஒன்றோடொன்று பின்னிய கிளைகளுடன் மெதுவாய் அசைந்தாடிய மரங்களின் குளிர்ந்த காற்றும் ஆனந்தநித்திரையை யுண்டாக்கவே திகம்பரனும் அப்படியே அயர்ந்து உறங்கிவிட்டான்.

இவ்வண்ணம் அவன் நித்திராதேவியின் வசமாய்ப் படுத்திருக்கும்பொழுது தத்தம் அலுவலிலீடுபட்டுக் கால்நடையாகவும் வண்டிகளிலும் பல ஜனங்கள் அவ்வழியே போவதும் வருவதுமாயிருந்தனர். இப்புறமும் அப்புறமும் திரும்பிப்பாராத சிலர் அவனிருந்ததை யறியாமலே சென்றனர். அவனிருந்தபக்கம் பார்த்தும் தங்கள் யோசனைகளில் முழுகிக் கவனியாமற் சென்றனர் சிலர். அவன் அயர்ந்த தூக்கத்தைக் கண்டு சிலர் புன்னகைகொண்டு செல்ல, அதற்காக அவனைத் தூற்றிச்சென்ற கன்னெஞ்சரும் சிலர். யாரும் அருகிலில்லாத சமயம் ஒருவயதான பெண்பிள்ளை அச்சிறுவன் படுத்திருந்த விடத்தை எட்டிப்பார்த்துத் தூக்கத்தில் அவன் முகமிருந்த அழகைவியந்து சென்றாள். மதுபானத்தைக் கண்டித்துப்பேசும் பிரசங்கி யொருவர் குடியினால் நினைவுதப்பி அங்கே அவன் விழுந்துகிடக்கிறானென வெண்ணி அன்று மாலை, தாம் செய்யவிருந்த பிரசங்கத்தில் அவனையோர் உதாரணமாய்ச் சேர்த்துக்கொண்டுவிட்டார். ஆனால் மெய்மறந்த நித்திரையிலாழ்ந்து கிடந்த திகம்பரனுக்கோ பிறர் புகழ்ச்சி இகழ்ச்சி கோபம் அலக்ஷியம் யாவும் ஒன்றாகவே யிருந்தன.

* * * *

அவன் தூங்கிய சில நிமிஷங்களுக்கெல்லாம் அவ்வழியில் தன்பாட்டுக்குச் சென்றுகொண்டிருந்த நல்ல குதிரைவண்டியொன்று அவனிருந்த இடத்தைக் கிட்டியதும் சட்டென்று நின்றது. காரணம் வண்டிச்சக்கரங்களிலொன்று திடீரென்று கழன்று விழுந்ததே. அதைச் சரிப்படுத்திக்கொண்ட பிறகுதான் மேலே செல்லமுடியுமென்று தெரிந்தது. வண்டியினுள் ஓர் ஜவுளிக்கடை முதலாளியும் அவன் மனைவியும் வீற்றிருந்தனர். வண்டிக்காரன் சக்கரத்தைச் சரிப்படுத்திக் கொண்டிருக்கும்பொழுது கீழிறங்கி நிழலுக்காக ஒதுங்கிய தம்பதிகள் அங்கு ஓடிய வாய்க்காலையும் அதனருகே புற்றரையில் படுத்திருந்த சிறுவனையும் கண்ணுற்றனர். அயர்ந்த தூக்கத்தைக் கலைக்க யாருக்குத்தான் மனம்வரும்? தன் முழங்கால் பிடிப்பையும் பொறுத்துக்

கொண்டு கடைமுதலாளி மெதுவாய் அடிவைத்துச் செல்ல, தன்னால் அவன் தூக்கம் எங்கு கலைந்துவிடுமோ என்றஞ்சிய அந்த அம்மாளும் தன்கால் மெட்டிகளைச்சப்தம் செய்யாவண்ணம் கழற்றிவைத்துக்கொண்டாள்.

"ஆஹா! இப்பையன் என்ன தூக்கம் தூங்குகிறான்! சுவாசம் என்ன நிதானமாய் வருகின்றது பார்! இப்படிப்பட்ட நித்திரை என் வரும்படியில் பாதிகொடுத்தாலும் எனக்குக் கிட்டுமா? அதற்கு எவ்வளவு சரீர ஆரோக்கியமும் மனவமைதியும் இருக்க வேண்டும்?" என்றான் கணவன்.

"அதுமட்டுமா? இளமையுமல்லவோ கூடவேண்டும்? எவ்வளவு ஆரோக்கியமும் அமைதியுமிருந்தாலும் வயது காலத்தில் இப்படிப்பட்ட நித்திரையுண்டாவது மிகவரிது. நமக்கும் இச்சிறுவனுக்கும் வயதில் எவ்வளவு பேதமிருக்கிறதோ, அவ்வளவு பேதம் தூக்கத்திலுமிருக்கிறது" என்றாள் மனைவி.

இவ்வாறு அத்தம்பதிகள் பேசிக்கொண்டார்கள். பார்க்கப் பார்க்க அந்த முன்பின் அறியாச் சிறுவனிடம் அவர்களுக்கு ஒருவித அபிமானம் மிகுந்தது. சாலையோரத்து மரத்தடியே, உயர்ந்த பட்டுத் திரைச்சீலை கட்டித்தொங்கும் கட்டிலுடன்கூடிய ஒரு படுக்கையறைபோல் திகம்பரனுக்கு அமைந்தது. மரத்தின் ஓர் இடுக்குவழியாய் வெய்யில் அவன் முகத்தில் படுவதைப் பார்த்து அந்தஸ்திரீ மெதுவாய் ஒருகிளையை வளைத்து வெய்யிலைத் தடுத்தாள். இதைச்செய்தவுடனே பெற்றெடுத்த தாய்போல் அவனிடம் அவள் உள்ளத்தில் ஒருவித பிரேமை குடிகொண்டது.

"இவனை இங்கே படுக்கவைத்து அதற்குச்சரியாய் நம்மையும் கொண்டுவந்து சேர்த்தது எல்லாம் தெய்வச்செயலே! இச்சிறுவனின் முகத்தில் இறந்துபோன நம் நடராஜனின் சாயலும் இருப்பதுபோல் தோன்றவில்லையா? மெள்ள எழுப்புவோமா?" என்று மனைவி கேட்டாள்.

"எழுப்பி என்னசெய்வது? அவன்குணம் எப்படியோ, நமக்கென்ன தெரியும்?" என்று கணவன் தயங்கினான்.

"இக்கபடமற்ற முகத்தையும் இந்நிச்சிந்தை யுறக்கத்தையும் கண்டபிறகுமா?"

இவ்வண்ணம் அவர்கள் குசுகுசுவென்று பேசிக்கொண்டு நிற்கும்பொழுது படுத்திருந்த சிறுவனின் முகத்திலோ அவன் ஆழ்ந்தநித்திரையின் அமைதியே விளங்கிற்று. அவன் சுவாசமும் எப்பொழுதும்போல் வெகுநிதானமாகவே வந்து கொண்டிருந்

தது. ஸ்ரீதேவியின் கடாட்சம் தன்மேல் படவிருந்ததை அப்பேதைப்பையன் எவ்வாறு அறிவான்!

அக்கடை முதலாளியின் ஒரே மகன் இறந்துவிட்டான். அவன் சொத்து முழுமையும் தாயாதியொருவனுக்குப்போய்ச் சேருவதாயிருந்தது. இத்தகைய சந்தர்ப்பங்களில் எவ்வளவு பெயர்கள் நூதனமான காரியங்களைச் செய்கிறார்கள்! பிச்சை வாங்கிப் படுத்தவனைப் பிரபுவாய்க் கண்விழிக்கச்செய்பவரில்லையா?

"மெள்ள எழுப்புவோமா?" என்று மனைவி மீண்டும் கேட்க, அச்சமயம், "சக்கிரம் சரியாய்விட்டது எசமான்" என்றான் வண்டிக்காரன் வணக்கத்துடன். இதைகேட்டதும் சதிபதிகள் திடுக்கிட்டு "என்ன இவ்வாறு அசட்டுயோசனைகள் செய்தோமே" என்று வெட்கமடைந்தவர்களாய் விரைவில் வண்டியேறிச் சென்றார்கள். திகம்பரனும் நிம்மதியாய்த் தூங்கினான்.

* * *

தம்பதிகள் ஏறிய குதிரைவண்டி இரண்டொருமைல்தூரம் தான் சென்றிருக்கும். அதற்குள் ஓர் அழகிய சிறுமி தன் கவலையற்ற ஹிருதயத்தைக் குதூகலநடை. அறிவிக்க அவ்வழியே நடந்துவரலானாள். அவள் அவ்வாறு உல்லாசமாய் வரும்பொழுது அவள் அணிந்திருந்த ஆடை சற்றுக் கலைந்து தரைமீது புரளவே அதைச் சரிப்படுத்தும்பொருட்டு மரங்களின் மறைவை நாடிச் சென்றவள் அங்கே வாய்க்காலினருகில் படுத்திருந்த இளைஞனைக் கண்ணுற்றாள். கலைந்த ஆடையை நேரேயணியும்பொருட்டு ஓர் புருஷன் படுத்திருக்குமிடத்தை யடைந்தோமேயென்று வெட்கியவளாய் அச்சிறுமி மெல்லென அடிவைத்துத் திரும்பிச்செல்ல யத்தனித்தவள் உறங்கும் வாலிபனுக்கு நேருவதாயிருந்த ஒரு சிறு தீங்கைக்கண்டுவிட்டாள். மேலே பறந்துகொண்டிருந்த ஓர் பெரும் வண்டு இங்கும் அங்கும் சப்தித்துக்கொண்டே சுற்றிவிட்டு முடிவில் திகம்பரன் முகத்திலேயே வந்து உட்கார்ந்துவிடும்போல் தோன்றியது. வண்டு கொட்டினாலும் சிலசமயங்களில் அபாயகரமாவதுண்டல்லவா? மாசற்ற உள்ளத்தையுடைய பெண்மணியும் தனதாடையின் முன்தானையினால் அந்தவண்டை வெருட்டி அவ்விடத்தினின்றும் ஓட்டிவிட்டு, வெட்கத்தினால் சிவந்து தயங்கிய முகத்துடன் கீழே படுத்திருக்கும் இளைஞனைக் கடைக்கண்ணால் நோக்கினாள்.

"என்ன அழகிய வடிவம்!" இவ்வாறு நினைத்ததும் அவள் முகம் முன்னிலும் சிவந்தது. திகம்பரன் ஒரே தூக்கமாய்த் தூங்கி

ளுன். தன் எதிரில் நின்ற யுவதியின் திருவுருவத்தைத் தாங்கிய இன்பக் கனவேதும் அவன் நித்திரையில் தோன்றி உள்ளம் பரவசனாகச்செய்யாதது ஓர் விந்தையன்றோ! ஜன்மாந்தரத்தில் அவ்விருவரும் சதிபதிகளாயிருந்திருக்கலாம். இச்சன்மத்திலும் அவனையே கணவனாக வரித்து அடையக்காத்திருக்கும் பெண்மணி இவளாக ஏன் இருக்கலாகாது? இப்பொழுது அவள் வெட்கத்தினால் தயங்கிய கடைக்கண் பார்வையுடன் அவனருகில் நிற்கிறாள். அதை அவன் அறிந்துகொள்ளாவிடில் அவளை மீண்டும் காண்பது என்நாளோ!

"என்ன அயர்ந்த தூக்கம்!" என்று எண்ணமிட்டுக் கொண்டே சிறுமி அவ்விடம் விட்டகன்று மேலே நடக்கலானாள். ஆனால் முன்போன்ற குதூகல நடை இப்பொழுது அவளிடம் காணவில்லை.

அப்பெண்மணியின் தந்தை நல்ல வருமானமுடைய ஓர் வக்கீல். பணமில்லாவிடினும், கல்வியும் அழகும் பொருந்திய ஓர் இளைஞனுக்கே தம்மகளைக் கொடுப்பதாய்ச் சங்கல்பம் செய்திருந்தார். இப்பொழுது அப்பெண்ணின் மூலமாய்த் திகம்பரன் அவருக்கு அறிமுகமானால் அவர்கோரிக்கைப்படியே யாவும் நிறைவேறக்கூடுமல்லவா? மறுபடியும் ஸ்ரீதேவியின் கண்ணொளி தன்மீது பட்டும் படாததுமாய்ச் சென்றதை திகம்பரன் சிறிதும் அறிந்தானில்லை.

* * *

சிறுமிகண்ணுக்கு மறைந்ததும் இருமனிதர்கள் அம்மரநிழலை யணுகினர். அவர்களுடைய தீயமுகங்களையும் அழுக்குப்படிந்த வஸ்திரங்களையும் நோக்கும்பொழுது இஷ்டப்படி திரிந்து பொய், களவு சூது முதலிய இழிவுத்தொழில்களைக்கொண்டு ஜீவனம் நடத்தும் பெரிய துஷ்டர்களென்பது நன்கு விளங்கிற்று. மரத்து நிழலில் சூதாடச்சென்றவர்கள் அங்கே படுத்திருக்கும் திகம்பரனைக்கண்டனர்.

"உஸ்! அவன் தலைக்கடியிலிருக்கும் மூட்டையைப் பார்த்தாயா?" என்று ஒருவன் இரகசியமாய் மற்றொருவனிடம் கூறினான்.

இதற்குப்பதில் மற்றவனும் தலையசைத்துக் கண்சிமிட்டினான்.

"நான்பந்தயம் கட்டுகிறேன்: அந்தமூட்டையில் ஆசாமி ஏதேனும் பணமுடிப்பு வைத்திருக்காமற் போகமாட்டான். இல்லாவிட்டால் அவன் இடுப்புத்துணியிலாயினும் இருக்கும்" என்றான் முதற்பேசியவன்.

"ஆமாம்! ஆனல் அவன் பாதியில் விழித்துக்கொண்டுவிட்டால்—?" என்று மற்றவன் கேட்க முதற்பேசியவன் தன் இடுப்பில் சொருகியிருந்த சிறுகத்தியைக் காண்பிக்கவே அவன் சந்தேகம் நீங்கிவிட்டது. இருவரும் சந்தடிசெய்யாமல் உறங்கும் சிறுவனை அணுகினார்கள். ஒருவன் கத்தியை அவன்முகத்திற்கு நேராய்ப்பிடிக்க மற்றவன் மூட்டையைப் பரிசோதிக்கத் தொடங்கினன். அச்சமயம் திகம்பரன் கண்விழித்திருந்தால் பட்டப்பகலில் படுபாதகத்தொழில் செய்யவிருந்த அவ்விருவருடைய கோர முகங்களையும் கண்டு பேயோ பிசாசோவென்று நடுநடுங்கி யிருப்பான். ஆனல் பச்சைப் பாலகனைத் தாயின்மடியில் படுத்துறங்கிய பொழுதுகூட இப்பொழுது அவன் முகத்தில் விளங்கிய அமைதியும் தெளிவும் தோன்றியிராவென்பது நிச்சயம்.

"மூட்டையை அப்புறப்படுத்திவிடுவோம்."

"உன் வேலையைப்பார்; அசைந்தால் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்." இவ்வாறு அவர்கள் குசுகுசுவென்று பேசிக்கொண்டிருக்கும்பொழுது தரையை மோந்துபார்த்துக்கொண்டே அங்குவந்த நாயொன்று அவ்விருவர் முகங்களையும் படுத்துறங்கும் வாலிபனையும் மாறி மாறி நோக்கிவிட்டுப் பிறகு வாய்க்காலினருகில் சென்று தண்ணீர்குடிக்கத்தொடங்கிற்று.

"இனி நம்காரியம் ஆனற்போல்தான். நாயின் சொந்தக்காரன் பின்னேடேயே வந்துகொண்டிருப்பான்" என்முன் அவ்விருவரில் ஒருவன் பரபரப்புடன்.

"ஆனல் வாய்க்காலில் தாகத்துக்கு நீர் அருந்திவிட்டுப் போய்ச்சேர்வோம்" என்முன் மற்றவன். கையில் கத்திவைத்துக்கொண்டிருந்தவன் இடுப்பில் அதைச்செருகிக் கொண்டான். பின்னர் இருவரும் வாய்க்காலினின்றும் நீரையள்ளிக் குடித்துவிட்டு ஒருவரையொருவர் தமாஷாய்ப் பேசிப் பரிகசித்துக்கொண்டே அவ்விடம்விட்டுச் சென்றார்கள். விரைவில் அவர்கள் யாவற்றையும் மறந்துவிட்டார்கள். ஆயினும் அவர்கள் புரியவிருந்த பெரும்பாதகச் செய்கையைத் தெய்வமும் மறந்து சும்மாவிருக்குமா? திகம்பரனே, தான் உயிர்மாளும் நிலைமையிலிருந்ததையாவது, பின்பு அவ்வாபத்து நீங்கிப் புத்துயிர் பெற்றதையாவது உணராமல் ஆனந்த நித்திரையிலிருந்தான்.

* * *

சுமார் ஒருமணிநேரம் தூங்கி உடம்பிலிருந்த சோர்வு ஒருவாறு நீங்கிய பிறகுதான் அவன் நித்திரை கலைவதாயிருந்தது.

மெதுவாய் அவன் உதடுகள் அசைந்தன. சற்றுப் புரண்டுபடுத்துக் கொண்டான். அச்சமயம் அவ்வழியே சென்ற போக்குவண்டியின் கடபட சப்தம் காதைத் தொளைக்கவே திகம்பரன் விழித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான்.

"என்னப்பா! ஒருஆளுக்கு இடமிருக்குமா?" என்று வண்டிக்காரனைக் கேட்டான்.

"முன்னாலே இடமிருக்கு; வாங்கசாமீ!" என்றான் வண்டிக்காரன்.

திகம்பரன் ஒரு தாவில் ஏறி உட்கார்ந்துகொண்டான். வண்டியும் வேகமாய்ச் சென்றது. வேப்பமரத்தடியில், தான் படுத்துத் தூங்கிய அச்சொற்பநேரத்தில் தனக்கு என்னவெல்லாம் நேரவிருந்தனவென்பதை அறியாமலே அச்சிறுவன் சென்றான். ஒரு நொடியில் தனக்கு வாய்க்கவிருந்த ஐசுவரியசம்பத்தையும் அவன அறியவில்லை. இளஞ்சிறுமி ஒருத்தி ஆசையுடன் தன்னைக் கடைக்கண்ணால் நோக்கிநின்றதையும் கடைசியில் காலன் தன்னுயிரைக் கொள்ளைகொள்ள இருந்ததையும் ஒன்றையுமுணராமல் களங்கமற்ற மனதுடன் திகம்பரன் உற்சாகமாய்ச் சென்றான்.

சீனப் பெண் பொலீஸ்

சீனாவில் விவாகம் செய்துகொள்ளாத அநேக பெண்கள் பொலீஸ் சேவகிகளாகச் சேர்ந்திருக்கிறார்கள். இவர்களுக்குப் பிரத்தியேகமான ஒருவித பொலீஸ் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்கள் சமாதானத்தைக் காப்பாற்றும் வேலையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஜனக்கணிதம்போன்ற பிறகாரியங்களுக்கும் இவர்களுடைய சேவகம் பெரும்பாலும் உபயோகப்படுகிறது. இவர்களில் ஒவ்வொருவருக்கும் சராசரியாக 35 ரூபாய் சம்பளம் அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இவர்கள் தமது வேலை முடிவானதும் வெளியே போவதில்லை. ஓய்வு நேரங்களில் படிப்பிலும், எழுதுவதிலும் தமதுகாலத்தைச் செலவு செய்கின்றனர்.

இந்துசாதனம்

லீ லா

ந. பிச்சமூர்த்தி, பி. ஏ.

1

சந்திரசேகரன் சப்கலெக்டர் பதவியை ஏற்று ஒருவாரங்கூட ஆகவில்லை. அதற்குள்ளாகவே தினசரி வேலையின்மீது அவனுக்கு அலுப்புத்தோன்ற ஆரம்பித்தது.

அலுப்பு மேலிட்டு ஒருநாள் பங்களாவில் சும்மா உட்கார்ந்திருந்தான். டலாயத் உடலை நெளித்தபடியே உள்ளே நுழைந்து ஒருசிறு கடுதாசை நீட்டினான். அதை வாங்கி "ஜோஸப் பால், ஹெட்மாஸ்டர், மிஷன்ஸ்கூல்" என்று தனக்குள்ளேயே படித்துவிட்டு உள்ளே அழைத்துவரச்சொல்லி டலாயத்துக்கு உத்தரவிட்டான்.

'ஹெட்மாஸ்டர்' உள்ளே நுழைந்தார். சப்கலெக்டருடன் உடல்நலம், அகவிலை, வெயில்கடுமை முதலிய பலவிஷயங்களைப் பற்றிச் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, தாம் வந்தகாரியத்தைத் தெரிவித்தார்: "ஒரு சிறிய வேண்டுகோள்; அடுத்த ஞாயிற்றுக்கிழமை எங்கள் பள்ளிக்கூடத்து வருஷாந்தர விளையாட்டுவிழா. அம்மாளுக்குப் பள்ளிக்கூட மாணவர்கள் முன்னேற்றத்திலும் அவர்கள் விளையாட்டிலும் அதிக ஊக்கமுண்டென்று கேள்விப்பட்டேன். எங்கள் விழாவுக்கு அம்மாளைத் தலைமைவகித்துப் பரிசுகள் வழங்கவேண்டுமென்று கேட்க வந்தேன்" என்றார்.

மெத்த வந்தனம், ஒருநொடியில் கேட்டுச் சொல்லுகிறேன்" என்று மாடிப்புறம் போனான் சந்திரசேகரன்.

உள்ளபடி அவன் மாடிஏறிப்போகவில்லை. நடுவழியிலேயே திரும்பி, அபஜயமடைந்தவனைப்போல் முகத்தை வைத்துக்கொண்டு வந்தான்.

"தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முடியாமலிருப்பதற்காக மன்னிப்புக் கோரச்சொன்னாள். உடல் நலமாயில்லையாம்."

"அப்படியா?" என்று ஹெட்மாஸ்டர் மீசையைத் திருகிக்கொண்டு யோசனையிலாழ்ந்தார்.

“சரி! அப்பொழுது நீங்கள் தலைமைவகிக்க வேண்டியது தான்” என்றார்.

தன் மனைவியைத் தலைமைவகிக்கச் சொன்னது சந்திரசேகரன் உள்ளத்தில் பல பழைய புண்களைக் கிளறிவிட்டது. எப்படியேனும் ஹெட்மாஸ்டருடன் சந்திப்பு முடிந்தால் போதுமென்ற நிலைமையில் அவன் இருந்ததால் அடுத்தபடியாக அவனையே தலைமைவகிக்கும்படி கேட்டதற்கு உடனே சம்மதி தந்துவிட்டான்.

என்றைத்தினம் அவ்விளையாட்டு விழாவுக்குத் தலைமை வகிப்பதாக ஒப்புக்கொண்டானோ அன்றுமுதல் இதரபள்ளிக்கூடங்களிலிருந்தும், பொது ஸ்தாபனங்களிலிருந்தும் அதைப்போன்ற வேண்டுகோள்கள் வந்தன. ஒவ்வோர் அழைப்புச் சம்பந்தமாகவும் தன் மனைவியைப்பற்றியவரையில் மறுக்கவேண்டிய கசப்பான பொறுப்பு அவனுக்கு ஏற்பட்டது.

இதன் பலனாக ஊருக்கு வந்த ஒருமாதத்திற்குள்ளாகவே ஊரார் வாய்வம்பு பேசத்தொடங்கினார்கள். சப்கலெக்டர் மனைவி அவலக்ஷணமா, அங்கஹீனமா? அல்லது மௌட்யமா? அல்லது நிரம்பக் கர்வம் பிடித்தவளா? ஒருகால் மனைவியேயன்றி யாரேனும் சேர்க்கையா என்று பலவாறு சந்தேகப்பட்டார்கள். சந்திரசேகரனுடைய நுண்ணறிவுக்கு இவ்விஷயம் தெரியாமல் இல்லை. தான் தலைமை வகிக்கும் ஒவ்வொரு கூட்டத்திலும் தன் முதுகுப் புறத்தைச் சுட்டிசுட்டிக் காட்டிப் பிறர் பேசுவதுபோன்ற காட்சிகள் அவன் அகக்கண்ணில் தோன்றி அவர்கள் தன் மனைவியைப் பற்றிக் குசுகுசுவென்று பேசுவது கணீர் என்று தன் காதில் விழுந்ததுபோன்ற பிரமை உண்டாயிற்று.

சந்திரசேகரன் மனத்தில் ஓயா அதிருப்தி. சப்கலெக்டராயிருந்தாலென்ன? ஓர் அற்ப விஷயத்தை—மாற்றமுடியாத இயற்கையின் கோணலை—அறுபதுநாழியும் நம்மைப்போன்ற ஜனங்களிடமிருந்து மறைப்பதே முக்கியவேலையாய்விட்டால் சுகமென்பதை எப்படிக் காணமுடியும்? வேம்பான பொய்வாழ்க்கை! இதைவிட குற்றவாளிகளுக்கு விதிக்கும் தனிச்சிறைத் தண்டனைகூட மேல். மாமனாராக வாய்ந்தாரே ஒருவர்—எவ்வளவு குரூரஸ்வபாவமுள்ளவர்! எவ்வளவு சமத்காரமாகத் தன்னை வலைபோட்டுப் பிடித்துவிட்டார். ஆனால் அவர்மீது குற்றம்சாட்டுவது நியாயமா? பாங்கு முறிந்துபோய் அளவற்ற பணநஷ்டம் ஏற்பட்டதைப்பற்றி இந்தியாவிலிருந்து தன் தகப்பனார் இங்கிலாந்திற்கு எழுதி அனுப்பியபொழுது ஐ. சி. எஸ். படிப்பை அத்துடன் விடாதது யார் குற்றம்?......ஐ. சி. எஸ். என்ற பட்டமும் வரப்போகும்

பதவியும் அவன் ஆசையைத் தூண்டின. உணர்ச்சி மழுங்கிப் போய்விட்டது. பெண்ணின் குறைவு பெரிதாய்ப் படவில்லை. தகப்பனுர் குறிப்பிட்டிருந்த பெண்ணை மணம் செய்வதாக ஒப்புக் கொண்டான். கண்ணைத் திறந்துகொண்டு குளத்திலிறங்கிய குற்றம் யாருடையது? பிறகு முன்பணம் வாங்கிப் படித்துப் பரீக்ஷை யில் தேறி ஏற்பாட்டுப்படி மணம்செய்து கொண்டது தர்ம நியாயந்தானே? இப்பொழுதோ மாமனுர் தம் கணக்கற்ற ஐவேஜி யைக் காட்டி ஏமாற்றிவிட்டதுபோல் கருதினுன். தன்பேராசை யைத் தவிர—தன் விதியைத் தவிர—மற்ற எல்லோரையும் நொந்து கொண்டிருந்தான். இவ்வளவு எண்ணங்களின் பேரில் அவனுக்கு ஓயா அதிருப்தி உண்டாவது சகஜந்தானே?

இப்படியே நாட்கள் சென்றன. ஒருநாள் ஓர் எண்ணம் தோன்றிற்று. அதுவரையில் ஏன் தோன்றவில்லை யென்பதே ஆச்சர்யமாயிருந்தது. 'விழாக்களுக்குத் தலைமை வகிப்பதை நிறுத்திவிட்டால் ஒருகால் வேதனை குறையாதா?' என்று நினைத் தான். அது முதல் ஆபீஸ்வேலையைத் தவிர வேருென்றும் சந்திர சேகரன் பார்ப்பதில்லை. பொதுஜனங்களிடையில் அதிகமாய்க் கலப்பதில்லை. இருந்தாலும் தான் எதிர்பார்த்த அமைதி உள் ளத்தில் தோன்றவில்லை. தன்வேதனையின் வேர் பின்னும் ஆழமாய் ஓடியிருப்பதை அவன் உணரவில்லை.

2

அவன் மனைவி லீலாவை உயர்ந்த பெண்மையின் அவதார மென்றே கருதவேண்டும். ஜலத்துளி நீர்ப்பெருக்கில் கலந்திருத் தல்போல் தன்மையற்றிருந்தாள். அவளுடைய அமைதி ஆழ்ந்த குளத்தினுடையது. தாளுகப் பிதுங்கிக் கிளம்பி முன்நிற்கும் முந்திரிக்கொட்டையல்ல அவள். கணவனை நேருக்குநேர் பார்ப் பது அருமை. ஏனென்ருல், அப்படிப்பார்க்கும் வேளையில், தன் னையும் அறியாமல் அவள் கண்கள் கணவன் அவனை நேசிக்கவில் லையே யென்று குற்றம் சாட்டிவிடலாமல்லவா என்ற ஐயம். டலாயத்தோ வீடுகூட்டியோ கூட அவளைப்பார்த்ததில்லை யென் ருல் வேறு சொல்வானேன்?

வீட்டுக் காரியங்களிலும் வெகுசமர்த்து. சப்கலெக்டர்மனைவி யாயிருந்தும், தன் தகப்பனுரின் அளவற்ற ஐவேஜிக்கு ஒரே வார் ஸாக இருந்துங்கூட, சமையல் முதற்கொண்டு செய்யும்படி ஏற் பட்டுவிட்டதே என்று அலட்டிக்கொண்டதில்லை. உள்ளூரக்கூட

நொந்துகொண்டதில்லை. தன் மாமியார் மாமனார் இருவரும் காரியக்காரியை அமர்த்து என்று எவ்வளவோ வற்புறுத்தியுங்கூடக் கணவர் மறுத்துவிட்டதன் நுட்பமான காரணத்தை அவள் நன்றாய் அறிந்திருந்தாள். அவ்வளவு பெரிய உத்தியோகஸ்தன் மனைவி ஊமையென்று விளம்பரமாகாமலிருப்பதற்குக் காரியக்காரி இல்லாததும் ஒரு வழியல்லவா? வீட்டுக்காரியங்கள் இல்லாதபொழுது அவளை மாடியில் பார்க்கலாம். தனிமையும், மேகங்களும், நக்ஷத்திரங்களும், அமாவாஸை இருளும்' பௌர்ணமியின் கேடையமும், பரிதியின்தங்கமும், மரங்களின் ஒலியும் அவளுக்கு ஆத்ம நேசமாயின.

மாதங்கள் சென்றன. கந்தர்வனைப்போன்ற வெகு அழகிய சந்திரசேகரன் சோர்வுற்று ஸோபாவின்மீது கன்னத்தில் கைவைத்தவாறு உட்கார்ந்திருந்தான். வழக்கத்திற்கு விரோதமாக அன்று லீலா அவன்முன்பு தரையில் உட்கார்ந்திருந்தாள். ஏதோ அவள் உள்ளத்தில் தோன்றியது; முகம் நிழலடைந்தது. திடீரென்று எழுந்திருந்தாள். நெருப்பின் நாக்குக்கள் நடனம் செய்வதுபோல் விரல்களால் ஜாடைசெய்தாள். ஜாடைகளைவிட அவளுடைய கண்களின் பேச்சு இன்னும் தெளிவாயிருந்தது.

அவள் சமிக்ஞைகளின் பொருளைச் சந்திரசேகரன் உணர்ந்தான். அதாவது அவன் உடம்பு தாள்போல வெளுத்துக் கிடக்கிறது என்பதுதான். ஒருவேளை அவளுடைய கவலை பெண் ஸாகஸத்தின் ஒரு பகுதியோ என்றுகூடத் தோன்றிற்று. அடுத்த க்ஷணம் அவளுடைய திகிலடைந்ததோற்றம் தன் சந்தேகத்திற்கு ஆதாரமே இல்லை என்பதை விளக்கிக் காட்டிற்று. அத்துடன் நிற்கக்கூடவில்லை; லீலாவின் உடல் நிலைமையைப்பற்றிக் கேட்க வேண்டுமென்று தோன்றிற்று. அவ்வார்த்தைகள் லீலாவுக்குத் திருப்தியளித்தன.

3

ஒருமாதமாயிற்று; சந்திரசேகரனுடைய நோய் வெளிப்பட. வீட்டு மாடிப்படி ஏறும்பொழுதும் ஆபீஸ் மாடிப்படி ஏறும் பொழுதும் அவன் முழங்கால்கள் கெஞ்சின. அவனுடைய பசி மந்தமடைந்துவிட்டது. அத்துடன் தூக்கமும் குறைவுபட்டது. வாழ்வே பாரமாய், ருசியற்றுப்போயிற்று. எனவே வைத்தியரைப் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

சோகைநிபுணர் சந்திரசேகரனைப் பார்த்து, "என்ன சார்!" என்றார். "ரத்தம் அதிக மோசமாயிருக்கிறதே. காரணம் ஏதேனும் சொல்லத் தெரியுமா?"

"ஒன்றும் காணோமே!"

"நல்லது; நான்சொல்லி வருகிறேன், பிறகு சொல்லுங்கள். மனவேதனை. எதிர்பாராத சம்பவம்—அல்லது........"

"அதெல்லாம் ஒன்றுமில்லை" என்று வெகு அவசரத்துடன் குறுக்கிட்டான் சந்திரசேகரன்.

"சரி போகட்டும். எது காரணமாயிருந்தாலும் ஒருபரிஹாரம் சீக்கிரம் செய்ய வேண்டியது. அதாவது நல்ல ரத்தமாக உங்கள் உடலில் பாய்ச்சவேண்டியது முக்கியம். யார் பெயர்வழி?"

சந்திரசேகரனுடைய முகம் வாடிற்று; "ஆனால் அவ்வளவு மோசமாய்விட்டதா உடம்பு?"

"அப்படிச் சொல்வதற்கில்லை. இனி அதிகமாய்த் தாமதிக்கக்கூடாது."

"ஆனால் சரி; நாளைக்கு இங்கே வந்தால் பாக்கி பேசுவோம்" என்று சந்திரசேகரன் சொல்லவே நிபுணர் வீட்டிற்குக் கிளம்பிவிட்டார்.

அன்றுமாலை தனிமையாய் உட்கார்ந்திருந்த சந்திரசேகரன் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். நிபுணர் குறிப்பிட்ட விஷயம் அவன் மனத்தில் கலவரத்தை உண்டாக்கியது. 'யாரைப் போய் யாசகம் கேட்பது ரத்தத்திற்கு?' என்பது பெரிய பிரச்சினையாகிவிட்டது.

அந்திப்பொழுது முற்றி நக்ஷத்திரங்களாய் மலர்ந்துங்கூட அவன் அப்படியே உட்கார்ந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் காலடிச்சத்தம் கேட்டது. அவன் திரும்பினான். லீலா அதுவரையில் தன்னிடத்திலிருந்தபடியே கணவனைக் கவனித்துவந்தாள். அவளுக்கு அதற்குமேல் உட்கார்ந்திருக்க முடியவில்லை. எழுந்து வந்து கணவனுக்கெதிரில் மௌனமாய், புத்தவிக்கிரஹம் போல் அசைவற்று உட்கார்ந்தாள்.

அவளுடைய மௌனம் அவனைக் குறைகூறிற்று. இன்பத்தில் இல்லாவிட்டாலும் துன்பத்திலேனும் அவளுக்குப் பங்கு தரக்கூடாதா? என்ன இருந்தாலும் மனைவி மனைவிதானே! அவள் தூய உணர்ச்சி அப்பொழுதே நோயைக் குறிப்பிடவில்லையா? டாக்டர் சொன்னதை மறைப்பானேன் என்பது போலத் தோன்றிற்று.

சந்திரசேகரனின் உள்ளம்நெகிழ்ந்தது; கணவன் சொன்னதைக் கேட்ட லீலா தான் தயார் என்று சமிக்ஞைமூலமாய்த் தெரிவித்தாள். தன்னையும் மீறிச் சந்திரசேகரனின் அன்புணர்ச்சி பொங்கி எழுந்தது. லீலாவை அணைத்துக்கொண்டான்; "அடி அசடு! நீ கூடாது" என்றான்.

அவ்வார்த்தைகளைக்கேட்ட லீலா வருத்தமடைந்தாள். குளத்தில் கல்லெறிந்தால் தோன்றும் அலைகள்போல் அவள் கண்களில் எழுந்தன. சந்திரசேகரனுக்கே ஏன் சொன்னேமென்று ஆகிவிட்டது. தான் அன்புடன் சொன்ன பேச்சு அவளுடைய ஸ்திரீ தர்மத்தை மறைமுகமாய்த் தாக்கக்கூடும் என்ற எண்ணமே அவனுக்கு வரவில்லை. அப்படித் தாக்கவே அவள் முகத்தோற்றம் அவன் எண்ணங்களைச் சிதற அடித்தன. அவளைச் சமாதானப் படுத்த முயன்றதெல்லாம் பயனற்றுப்போகவே அவள் இஷ்டப்படி இணங்கச் சம்மதித்தான்.

மறுநாள்காலையில் நிபுணர் வந்தார். "என்ன ஏற்பாடு?" என்றார். பதில் சொல்லச் சந்திரசேகரனுக்கு இரண்டு நிமிஷம் பிடித்தது. "நான் ஒருவரை அமர்த்தியிருக்கிறேன்."

"நல்லது, அவரை நான் பார்க்கவேண்டுமே."

சந்திரசேகரன் சற்றுத் தயங்கினான். பிறகு நிபுணர் காதில் பட்டதோ படவில்லையோ என்று சந்தேகிக்கக்கூடிய அவ்வளவு தாழ்ந்த குரலில், "அவரல்ல, அவள்" என்று பதில் சொன்னான்.

"யாராயிருந்தாலும் பரிசோதித்துத்தான் ஆகவேண்டும்."

நிபுணர் லீலாவைப் பரிசோதித்துவிட்டு, அவள் உடலிலிருந்து மூன்றுநான்கு துளிகள் ரத்தம் ஒரு கண்ணாடியில் எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டார். மூன்றுநாட்கள் கழித்து ரத்தம் பாய்ச்சுவதென்று தீர்மானமாயிற்று.

4

குறிப்பிட்டதினத்தில் லீலாவின் ரத்தத்தை எடுத்துச் சந்திரசேகரன் உடலில் டாக்டர் ஏற்றினார். ஆப்பரேஷன் நல்லபடியாய் முடிந்தது. ஆனால் சந்திரசேகரன் குணமடையக் கொஞ்சநாள் பிடித்தது. நிபுணர் சில தடைஉத்தரவுகள் பிறப்புவித்தார். நோயாளி மாடியைவிட்டுக் கீழே இறங்கக்கூடாது; நடமாடக் கூடாது. சந்திரசேகரனுக்கோ தன் லீலாவோடு பேச

வேண்டுமென்ற பேரவா. அதில் வியப்பென்னவென்றால் லீலா அவன் இருக்கும் இடத்திற்கே வராததுதான். அதற்குக் காரணம் லீலாவையும் அமைதியாய் இருக்கும்படி டாக்டர் தடை உத்தரவிட்டிருப்பதாகத் தாயார் சொன்னாள்.

பேசும் சந்தர்ப்பம் வாய்த்தது; அன்று அஷ்டமிசந்திரனுடைய அழகு வானத்தில் தேங்கிக் கிடந்தது. சவுக்கைத் தோப்பினூடே கோபமற்ற நல்ல பாம்புபோல் காற்று மூச்சுவிட்டுக் கொண்டிருந்தது. அண்டைவீடொன்றிலிருந்து வந்த வீணையின் ஒலி துயரத்தைத் தழுவி மிதந்தது.

சந்திரசேகரன் மாடிப்படியில் யாரோ ஏறி வருவதைக்கேட்டுப் பெருமகிழ்ச்சி கொண்டான். அது ஏமாற்றமாய் முடிந்தது. மேலே வந்த நிபுணர் லீலாவின் தேகஸ்திதி இரண்டு மூன்றுநாட்களாய் நன்றாயில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்தார்.

மறுகணம் சந்திரசேகரன் அங்கே தரிக்கவில்லை. கீழே வந்தான். காம்ரா உள்ளில் ஒரு கட்டிலின்மீது அவள் படுத்திருந்தாள். ஓர் விளக்குத் தாழ்ந்து எரிந்து கொண்டிருந்தது. தாயார் தரையில் உட்கார்ந்திருந்தாள். "இப்படி ஏமாற்றலாமா என்னை?" என்றான்.

தாயார் கண்ணீர்விட்டாள். "ஒன்றும் பிரமாதமில்லையென்று நினைத்தோம். டாக்டரும் உனக்கு அனாவசியமான அதிர்ச்சிகள் உண்டாக்கக் கூடாதென்றிருந்தார். வேண்டுமென்று நான் செய்வேனா?" என்றார்.

சந்திரசேகரனுக்குத் தாங்கவில்லை. தான் எதிர்பார்த்த பேசும் சந்தர்ப்பத்தில் இவ்வளவு துன்பம் கலந்திருக்குமா என்று நினைக்க நினைக்க அவன் துயரம் கரைகடந்தோடியது. லீலாவின் முகத்தைப் பார்த்து அவன் நெஞ்சம் மூர்ச்சையடைந்தது.

ஒருவாரம் வரையில் அக்கரையில் ஒருகாலும் இக்கரையில் ஒருகாலுமாகத் தவித்தாள் லீலா. வாரக்கோடியில் ஏதேனும் நெருக்கடி ஏற்படுமோ என்று நிபுணர் பயந்தார். அப்பொழுதெல்லாம் சந்திரசேகரனின் மனச்சாட்சி அவனை வருத்தியது. லீலாவை அலக்ஷியம் செய்த குற்றவாளி என்ற எண்ணம் அவனை ஒப்பற்ற 'நர்ஸ்' ஆக்கிவிட்டது.

நிபுணர் பயந்த நெருக்கடிவேளை; அதிலும் இரவு; ஜன நடமாட்டமும் வண்டிகளின் ஓசையும் தேய்ந்துகொண்டிருந்தன. அறையில் விளக்கு மங்கலாய் எரிந்துகொண்டிருந்தது. சந்திர

சேகரன் சந்தடி செய்யாமல் கட்டிலின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

சில நிமிஷங்கள் சென்றன. சென்ற ஒரு வாரமாக ஏற்பட்ட கவலையாலும், தூக்கமின்மையாலும் அவன் உடலில் அயர்வு நிறைந்திருந்தது. அவனை அறியாமலே கண்கள் மூடிப்போயின. பின்னும் கொஞ்சநேரம் சென்றது. அவனை யாரோ திடீரென்று தீண்டினாற்போல் இருந்தது. காலனுடைய ஜில்லிட்ட கையோ என்று திகிலடைந்து லீலாவைப் பார்த்தான். அவள் கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். முகத்தில் ஒரு கருணை ததும்பிற்று; "போதும்; இனி நீங்கள் தூங்கப்போகலாம். கவலைக்கிடமில்லை" என்று சொல்லுவதுபோல் ஜாடை காட்டினாள். அதுவரையில் லீலாவிற்கு அவன் இழைத்திருந்த தீங்கைப்பற்றி எண்ணி ஏங்கிய குற்றமுள்ள நெஞ்சம் அந் நிமிஷத்தில் தெளிவடைந்தது. லீலாவை மார்புறத் தழுவினான். அவளுடைய கண்களில் கண்ணீர் தோன்றிற்று.

அடுத்த பதினைந்தாம்நாள் ஊரில் நடந்த தேக்கச்சேரிக்கு அழைப்புக்கிணங்கி அதிசயமாய் வந்த சந்திரசேகரனைப்பார்த்து ஜனங்கள் வியப்படைந்தனர். அதைவிட அவனுடன் வந்திருந்த அழகியைப் பார்த்துப் பிரமித்தனர். அவள்தான் ஊமை லீலா!

இரண்டரை ரூபாவுக்கு நெசவுத்தறி

'காலி' (Galle) பெண்கள் ஐக்கிய சங்கத்தினர் இப்போது சில காலமாகத் தமக்கு வேண்டிய துணிகளைத் தாமே நூல் நூற்று நெசவுசெய்து வருகின்றனர். இப்போது அவர்கள் மூங்கிலாலும், கமுகஞ் சலாகைகளினாலும் செய்யக்கூடிய தறி யொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதன் விலை $2\frac{1}{2}$ ரூபா மாத்திரமே! 150 ரூபா பெறுமதிப்பான தறி செய்யும் வேலைகளை இத்தறி செய்து முடிக்கும் என ஷை சங்கத்தினர் உத்தரவாதம் அளிக்கின்றனர். இத் தறி மூலமாக ஷை சங்கத்தினர் அழகிய தாவணிகள், சேலைகள் முதலியவற்றைச் செய்து பரோபகாரமாக மலிந்த விலைக்கு விற்றுவருகின்றனர்.

இந்துசாதனம்

வான்மலர்

ஏ. எஸ். பஞ்சாபிகேசையர், எம். ஏ., ஐ. ஸி. எஸ்.

ஸரோஜம் என்பவள் பதினைந்து வயதுச்சிறுமி; [1]மாதரசிபுரத்துக் கன்னிமாடக்கலாசாலை ஒன்றில் ஐந்தாம் 'பார' வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தாள். உரியவேளைக்கு உண்டு உல்லாசமாக உடுத்து ரிக்ஷா வண்டியிலேறி ஒய்யாரமாகப் பின் சாய்ந்து காலை நீட்டிக்கொண்டு இவள் பள்ளிக்கூடத்திற்குப் போய்வருவாள். அந்த வயதில் எவருக்கேனும் மனக்கவலை உண்டோ? விசாரம் என்பதே அறியாத வாலிபப்பருவமே நமது வாழ்நாளில் த்தமநாளென்று வயது முதிர்ந்தவர்களும் சொல்வதைக்கேட் ருக்கிறோமல்லவா? பள்ளிக்கூடத்திற்குப் போவதையும் வருவதையும், அன்பர்களோடு ஆடிப்பாடிக் கொந்தளிப்பதையும், எங் கவலையுமில்லாமல் யதேச்சையாக வியவகரித்துக் கொண்டிருந்ததையும் நினைந்து ஒருபோதேனும் அப்படிப்பட்ட சுகவாழ்வுக் காலம் இனித் திரும்பவராதேயென நாம் சிந்திக்கிறோமல்லவா?

ஸரோஜம் களிப்பும் சிரிப்புமாக இருந்தாள். எதுவும் சாத்தியமாகும், தனக்கு மிஞ்சினது எதுவுமில்லை, தன் வாழ்வே வாழ்வு, பெரும் பெரும் காரியங்களும் எளிதிற்கிட்டும் என்று இவள் மனோராஜ்யம் செய்துகொண்டிருப்பதாக இவளுடைய நடையுடை பாவனைகளினால் தோன்றியது. களைஇல்லை கவலையில்லை, கஷ்டமில்லை நஷ்டமில்லை, நோயில்லை; நொடியில்லை; வேண்டுவன வேண்டியவாறே அமைகின்றன. இப்படிப்பட்ட நிலைமையில் எவரே ஸரோஜத்தைப்போலச் சோம்பித்திரிந்து மனோராஜ்யம் செய்யார்?

இவளுடைய வாத்திமார் ஆங்கிலக் கன்னியர் ரத்தினங்கள், ஸரஸகுணம் உள்ளவர்கள்; இவளது கல்விப்பயிற்சியிலும் க்ஷேமாபிவிருத்தியிலும் மிக்க சிரத்தையுள்ளவர்கள். அவர்களிடத்து இவளுக்கு அபிமானம் அதிகம். முக்கியமாக, அவர்கள் தம் நாட்டைவிட்டு, நல்லினத்தைவிட்டு, சுகவாழ்வைவிட்டுக்

ஆங்கிலத்திலிருந்து ஸ்ரீமான் கே. எஸ். வேங்கடசுப்பையரவர்கள், பி.ஏ., எல்.டி. மொழிபெயர்த்தது.

[1]மாதராசிபுரம்: சந்திரகிரி ராஜகுமாரியின் ஊர் (மதராஸ்).

கடல் கடந்து கண்காணுத பிறநாடுகளிலுள்ள அன்னியர்களுக்கு மதோபதேசம் செய்வதும், எழுத்தறியா லக்ஷக்கணக்கான இந்தியமாதர் நிலைமையை உயர்த்தி அவர்கள் உய்யும்வழி தேடுவதுமே உயிர்த்தொழிலாகக் கொண்டுள்ளதை எண்ணி இவள் அவர்களை மிகமிகப் பாராட்டுவாள்; அவர்களுடைய பரோபகாரச் சிந்தையை எண்ணி மகிழ்வாள். ஏனெனில், அவர்களுக்கும் நம் நாட்டாருக்கும் ஒரு விதத்திலும் உறவுமில்லை, ஒற்றுமையும் இல்லை—குலம் வேறு, கோத்திரம்வேறு, குணம்வேறு, கொள்கை வேறு, நிறம்வேறு; இத்தனைவேற்றுமைகள் இருப்பினும், அவ்வாங்கிலக் கன்னிமார் லோகோபகாரக் கருத்துடன் இவ்வளவு அன்பு பூண்டொழுகுவது அதிசயமே. இவள் மேலும் மேலும் அவர்களை நினைந்து மகிழ்ந்து மனம் பூரிப்பள். இவ்வபிப்பிராயத்தை இவள் உற்ற தோழியாகிய மீனுக்ஷி என்பவளிடம் ஒருநாள் வெளியிட்டனள். மீனு இவளுக்குப் பள்ளித்தோழியுமாவாள்.

இவளுடைய வார்த்தைகளைக்கேட்டு மீனு, "இந்தக்கன்னிமார் ம்கோபகாரிகள் என்கின்றனையே. நம்மை ஆள்வதற்காக நம் நாட்டுக்கு வருகிற ஆயிரக்கணக்கான ஆங்கிலேயர்கள் பரோபகாரிகளேயல்லவா? அவர்களுடைய பரோபகாரச் சிந்தையைக் காட்டிலும் இக்கன்னிமாரின் பரோபகாரச் சிந்தை உயர்வன்று. எல்லாருக்கும் தன்னலக்கருத்தே மேம்பட்டுளது" என்றனள்.

ஸரோஜம் அம்மொழிகேட்டுச் சீறிச்சினந்து சிரமசைத்து, "அப்படியில்லை. தர்மத்துக்குக் கட்டுப்பட்டுப்பேசு; நியாயமாகப் பார். நீ சொல்கிற ஆயிரக்கணக்கான ஆங்கில அதிகாரிகளுக்குக் கை நிரம்பப் பணம் கிடைக்கின்றது. அத்தனை பணத்தை அவர்கள் தங்கள் நாட்டில் கனவிலும் காணற்காகாது. இந்தக் கன்னிமார்களோ, இவர்களுக்கு என்னஉண்டு?" என வினவினள்.

மீனு:—அவர்களுக்குப் பணம் பண்டம் முதலிய உலகப் பொருளாகிய லாபம் ஒன்றுமில்லை என்பது உண்மையே. ஆனால், பிறமதத்தினரைத் தம் மதத்திற்குத் திருப்பித் தம் கொள்கைகளையும் ஆசாரங்களையும் ஏற்கும்படி செய்தோம் என்னும் மமதையினுலுண்டாகும் திருப்தி அவர்களுக்கு உண்டு. இந்த முயற்சியில் அவர்கள் தம் மதக்கொள்கைகளைப் பிறர் மனத்தில் பதிப்பிக்கின்றனர். இதுபெரிய லாபமல்லவா? பணம் சம்பாதிக்கவேண்டும், பொருள் தேடவேண்டும், அல்லது ஒரு நாட்டைத் தம் ராஜ்யத்திற் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்னும் ஆசை எவ்வளவு பலமான தன்னலக்கருத்தோ அவ்வளவு பிறரைத் தம் மதத்திற்குத் திருப்பவேண்டுமென்னும் ஆசையும் மிகப்பெரிய தன்னலக்கருத்தா

கும். என்னைக்கேட்டால், லோகோபகாரமென்பது வானத்தினின்று மழை பொழிவதுபோலத் தனக்குத் தானகப் பொழியும் உபகாரமாம். அதற்கு எவ்விதக் கைம்மாறும் எதிர்பார்க்கலாகாது. உபகாரம் செய்வதற்கு ஓர் உட்கருத்தும் இருக்கக்கூடாது. அதுவே உண்மையான பரோபகாரம். இந்தக் கன்னிமார்கள் எப்பொழுது பார்த்தாலும் கிறிஸ்தவ மதமே மேன்மையானதென்று காது புளிக்கச் சொல்லிக்கொண்டிருப்பதும், அம்மதக் கொள்கைகளை விசேஷமாக எடுத்துச்சொல்லிப் பலகாலம் வற்புறுத்துவதும் நமக்கு மிக அருவருப்பாக இருக்கின்றன. மதபோதனை எவருக்குச் செய்ய வேண்டும்? அதை நாடி வருவாருக்கும், விரும்பி வினவுவார்க்கும் செய்யவேண்டும். மற்றவர்களுக்குச் செய்யலாமோ? கிறிஸ்து மதமே உயர்வானதென்று எப்பொழுதும் தம்பட்டம் அடித்துக்கொண்டு இவர்கள் திரிவது, கரிபூசிக்கொண்டிருக்கிறவனொருவன் எவன் எந்தக்காரியத்திற்குத் தன்னண்டை வந்தாலும், தான் எட்டுந் தூரத்தில் எவர் போனாலும் அவர்மீதெல்லாம் தன் உடம்புக் கரியைப் பூசுவதுபோல் இருக்கின்றது. இது மிகவும் வெட்கக்கேடான காரியம்.

ஸரோஜம்:—நல்லது, ஆனால் அவர்கள் அந்தக்காரியத்திற்கெனவே யல்லவோ வந்திருக்கிறார்கள்? தாங்கள் செய்ய மேற்கொண்ட காரியத்தை அவர்கள் செய்வது குற்றமாகுமோ? அவர்கள் மீது குற்றம் சொல்லலாமோ?

மீனா:—அப்படிச் சொல்வாயானால், ஒரு காசுகூடச் செலவழிக்காமல் பணம் குவிக்கவேண்டுமென்று சங்கற்பித்துக்கொண்டு லோபித்தனமாக வியவகரிக்கிற பிசுனன்மீது பிழையுண்டோ? அலெக்ஸாந்தரைப்போலவும் நெபோலியனைப்போலவும் உலகம் முழுதையும் வென்று வசப்படுத்தித் தன் ஆளுகைக்கு உள்ளாக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிற அரசன்மீது குற்றம் சொல்வதற்காகுமோ?

ஸரோஜம்:—உனக்கு உத்தம பாவனையேயில்லை. எதனிலும் நீ தோஷம் காண்பாய்; நீ வெடுவெடுப்புக்காரி; குறளை பேசுவதே உனக்குக் காரியம். உன்னிடத்தில் ஒருநல்ல வைரக்கல்லைக் கொடுத்தால், அது வெறும் கரிக்கட்டை, மினுமினுக்கும்படி தளுக்குச் செய்யப்பட்டிருக்கிறது என அதனை இகழ்ந்து மகிழத் தக்கவள்.

மீனா:—(சிரித்துக்கொண்டு) அது கரிக்கட்டையேயல்லாது மற்றென்னும்?

ஸரோஜம்:—(சுடச்சுட ஏசுவாளாய்) அப்படியானல் நீ ஏன் வைரத்தோடு போட்டுக்கொண்டிருக்கிருய்? கரிக்கட்டை என இகழ்வதைக் காதில் அணியலாமோ?

மீஞ:—நீ என்னத்துக்காக அணிந்துகொண்டிருக்கிருயோ அதற்காகத்தான். வீண் பகட்டுக்காகவும் பிரதிஷ்டைக்காகவுந் தான்!

ஸரோஜம்:—உன்னிடத்தில் இவ்வளவு பாசாங்கும் வீண் பகட்டும் இருக்கிறபோது இந்தக் கன்னிமாரை நீ எப்படி தூஷிக்கலாம்?

மீஞ:—ஏனென்ருல், அவ்யாஜ கருணமூர்த்தியென்றும், கேவலம் பரோபகாரச் சிந்தையே உள்ளவரென்றும் அவர்கள் நடிக்கின்றனர். உண்மையில் அவர்கள் ஒரு வியாஜமும் இல்லாமல் உபகாரம் செய்யப்போந்தவர்களல்ல.

ஸரோஜம்:—எவ்வளவு உயர்ந்ததானலும் அதைத் தாழ்த்திப் பேசுவதே உனக்கு வழக்கம். கோபுரத்தைக் குப்பைமேடு என்பாய், மாணிக்கத்தைக குன்றிமணி என்பாய், பாலை வெந்நீர் என்பாய். அன்று ஒருநாள் பாலிய விதவை யொருத்தி மறுமணம் செய்து கொள்ளவேண்டுமென்னும் அவாவை அடக்கித் தன்னலத்தை மறுத்து, இறந்த கணவனையே நினைந்து அவனது அன்பையே பாராட்டிக் கொண்டிருந்ததை அசட்டுத்தனமென்றும் அறிவீனமென்றும் அக்கிரமமென்றும் இகழ்ந்தாயல்லவா? அதுவே நமது ஆரியதர்மம்; அதுவே அழகு; என் மனத்திற்கு இசைந்ததும் அதுவே.

மீஞ:—அதற்குள் அவசரப்பட்டு இங்ஙனம் பேசாதே. உலகத்தில் நீ இன்னும் வெகுகாலம் வாழவேண்டியிருக்கிறது. கடைசிவரையில் பொறுத்திரு. இப்போதுள்ள அபிப்பிராயம் அப்போது நிலைக்கின்றதா பார். நமது இந்து ஆசாரங்களிற் பல பிறருடைய இன்பத்திற்காகவும் திருப்திக்காகவும் மாத்திரமே பயன்படுமல்லாது அவைகளை ஆசரிக்கிறவர்களுடைய நன்மைக்காக அல்லவென்று எனக்குத் தோன்றுகிறது. நான் சொல்வது உனக்கு விளங்குகிறதோ இல்லையோ? பரதேசி ஒருவன் ஊசிகளையும் சூலங்களையும் ஒரு கன்னத்திற் குத்தி மறுகன்னத்தின் வழியாக இழுத்து வாய்ப்பூட்டுப் போட்டுக் கொள்கிருன். அப்படியிருப்பவன் எல்லாம் வெறுத்த துறவி என்று நம்மவரிற் பலர் நினைத்துக் கொண்டாடுகிருர்கள். ஆனல், அப்படிக் குத்திக்கொள்கிறவனுக்கு அது இனிமையாகுமோ, நன்மையாகுமோ? அப்படிப் போலவே,

கணவன் வேண்டுமென்னும் காதல் மிகுந்த கைம்பெண் தன் காமத்தை அடக்கிக்கொண்டு மனமாழ்ந்து மாளவேண்டுமென அவளைக் கட்டாயப்படுத்துவானேன்? அது இருக்கட்டும்; இன்னெரு சங்கதி கவனி: ஒரு பெண்ணுக்குக் காமம் மேலிட்டிருக்குமானல், அதை அவள் பலவந்தமாக அடக்குவாளாயின், அவளுடைய தேகத்துக்கு என்றென்றும் நீங்காத தீமை ஏற்படும்; சித்தம் ஒரு நிலையாயிராது; ஜீர்ணசக்தி கெடும்; உணவில் ருசியே தோன்ருது; சரீரம் மெலியும்; எதனிலும் வெறுப்புத்தோன்றும். ஆனல், காம உணர்ச்சியேனும் அவாவேனும் இல்லாதவளுடைய விஷயம் வேறு; அப்படிப்பட்டவளுக்கு விவாகம் இல்லாததனல் உடம்பு கெடாது. அப்படிப்பட்டவர்கள் உலகத்தில் மிகச் சொற்பம். அவர்களைப்பற்றி நமக்குப் பேச்சு இல்லை. பலவந்தமாக வைதவ்யம் கொண்டாடுவதைப்பற்றி மாத்திரமே சொல்கிறேன்.

ஸரோஜம்:—நீ சொல்கிற விஷயம் தெரிந்தது. ஆனல், இவ்வுலகத்தில் உத்தம பாவனையைப் பலவந்தமாக வற்புறுத்தவே வேண்டு மென்பது எனது கொள்கை. காம ஆதுரத்தைப் பலவந்தமாக அடக்கக்கூடாதென்று சொல்கிருயல்லவா? அந்த மனோவேகத்தைத் தணிப்பதனல் விஷய இச்சை வரவரக் குறைந்து போகும். அது இருக்கிற இடம் தெரியாமல் அடங்கினல் அவ்விஷயத்தில் அவளுக்கிருந்த மனோவேகமானது உலகத்திற்கு உழைக்கும் உத்தம வேகமாகப் பரிணமிக்கும். காமவேகமானது மாறித் தர்மவேகமாவதனல், அக்கைம்பெண் பரோபகாரம் செய்யப் பெரும் சக்தி வாய்ந்தவளாவாள்.

மீன:—நீ சொல்வது தவறு. அம் மனோவேகம் அப்படி மாருது. பலவந்தமாக அதை நசிக்கச் செய்வதனல், முன்பே அவளுக்கிருந்த அற்ப சக்தியும் அழிந்துபோம். அவளுக்கு மனவெழுச்சி இல்லாமலே போம். வீரியம் அற்றுப்போம். அவள் லட்சியமில்லாமல் திரிபவளைப்போல, எதனிலும் பற்றில்லாதவளாவாள்; திக்கற்று மனங்கசந்து மனுஷத்துவேஷங் கொள்வாள்; சாவு சீக்கிரம் வராதாவென்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள்.

ஸரோஜம்:—உன்னேடு வாதிக்க என்னல் முடியாது. நீ அசாத்தியக்காரி.

மீன:—தோழி, உனக்கு ஏன் அப்படித்தோன்றுகிறது தெரியுமா? நம்முள் உன்னைப்போன்ற ஸ்திரீ புருஷர்கள் பலர் உண்டு. நீங்களெல்லாரும் வான் மலர் கொய்து வயிறு நிரம்பி மகிழ்வீர்கள்; அழகிய கனவு கண்டு அகங்களிப்பீர்கள். எனவே, பிரத்திக்ஷ

மாக இருக்கிற அவஸ்தையை மறந்து, அல்லது ஒளித்து வீணே மனோராஜ்யம் செய்வீர்கள். இங்ஙனமாக, எளிய பாலிய விதந்து ஒருத்தி சமூகக் கட்டுப்பாட்டின் கொடுமையினால் மறுமணம் செய்துகொள்ளமுடியாதவளாகி வாழ்நாள் முழுதும் துன்பத்துக்காளாகி நிமிஷந்தோறும் பிறரால் இகழ்ந்து அவமதிக்கப்படுகிறவளை, மனோராஜ்யக்காரர்களாகிய நீங்கள் பதிவிரதாசிரோமணி எனப்பாராட்டுகிறீர்கள். அந்தக் கதி நமக்கு வந்தால் அந்நிலைமையின் உண்மை தெரியும். அப்பொழுது பதிவிரதா தர்மக் கனவு பறந்துபோம். அந்தக் கனவினால் வாய்ந்த கடுங்கஷ்டம் வெட்ட வெளிச்சமாகும். பலவந்தமாக வைதவ்ய வாடிக்கையை அனுசரிக்கிறவளெவளும் தன் வாழ்க்கை சிறந்ததெனக் கொண்டாடுவதை நான் கேட்டதே இல்லை.

ஸரோஜம்:—கணவனை இழந்து நான் ஒருவேளை கைம்பெண்ணானால்—கைம்பெண் ஆகவேண்டுமென நான் விரும்பவில்லை—மறுமணம் செய்துகொள்ளக் கூடாதெனச் சங்கற்பித்துள்ளேன். இறந்த கணவனது ஞாபகார்த்தமாக நற்பணிகள் ஆற்றுவதிலே வாணாளை வினியோகிப்பேன். ஆனால், நான் சொல்கிறபடி, அறுதாலி யாகமாட்டேன் என்றே எண்ணுகிறேன்.

மீனா:—ததாஸ்து. ஆனால், நாம் எதிர்பாராத வைதவ்யம் நேர்ந்துவிட்டால், நீ இப்பொழுது சொல்கிறபடி செய்வது யுக்தமென நான் சொல்லமாட்டேன். இறந்தபிறகு தன்னையே சதாகாலம் நினைந்துருகி மனைவி அன்பு பாராட்டத் தக்கவாறு ஒழுகும் உத்தமக் கணவன் அருமையினும் அருமை. உள்ளபடி பார்த்தால் எல்லாரும் நடுத்தரமான நற்குணம் வாய்ந்தவர்களே. கணவர்கள் பெரும்பாலும் இப்படித்தான் இருக்கிறார்கள். இதற்கேற்றபடி மனைவிகளும் இப்படியே இருக்கிறார்கள். உத்தமரென்று எவரையும் சொல்வதற்கில்லை; அதமரென்றும் இகழ்வதற்கில்லை. விண்ணும் மண்ணும் கலந்தாற்போல் இருக்கிறார்கள். பலர் வெறும் மண்ணைப்போன்றவர்களாய் இருக்கிறார்கள். மண்ணிலும் நாற்றமெடுத்த மண் என்னலாம். அருமையாக எங்கோ ஒருவர் ஆகாசத்தைப் போன்ற தூயவரெனவே சொல்லலாம். இப்படிப்பட்டவர்கள் தங்கள் மனைவியர் மனத்தில் நீ சொல்லிய அளவு பக்தியை ஊட்டத்தக்கவர்களாகலாம். ஆனால், அதற்கேற்றபடி அம்மனைவியரும் அத்தன்மையராக இருக்கவேண்டும்.

ஸரோஜம்:—நல்லது, நான் என்ன, விண்ணா மண்ணா?

மீனா:—பாதிவிண் பாதிமண். பூமியில் வேரூன்றி ஆகாசத்தில் அரும்புகின்றனை.

ஸரோஜம்:—(வயிற்றெரிச்சலோடு) சந்தோஷம், நீயோ?

மீனு:—தொண்ணூற்றென்பதும் ஒன்றும் நான் மண், மண்ணுக்கே உரியவள். மண்ணிற்பிறந்து மண்ணினால் உடம்பெடுத்து மண்ணில் உழன்று மண்ணை உண்டு மண்ணையண்டி மண்ணையே மகிழ்ந்து மண்ணோடுமண்ணாக மடியும் மாண்புடையவள். விண்ணின் நினைவு ஒருபோது தோன்றல் கூடும். கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்? சாக்கடைப் புழுவுக்கு அதுவே சுவர்க்கம். அதுபோல எனக்கு இம்மையே இன்பம். நடைமுதல் வாழ்க்கை வியவகாரத்திற்கு உரியனவே எனக்கு உரியவை. மறுமையும் மனோராஜ்யகுணமும் எனக்கு இல்லை.

ஸரோஜம்:—மறுமை நினைவு உனக்கு ஒரு பங்கே யானாலும், அந்த ஒரு பங்கு எனது ஐம்பது பங்கினும் அதிகமாக உயர்ந்து ஓங்கி ஆகாயம் அளாவத்தக்கதாக இருத்தல் இயலும். ஆதலின், மனோராஜ்யம் செய்வதில் என்னைக்காட்டிலும் நீயே மிஞ்சினவளாயிருக்கலாமே.

மீனு:—அப்படி இருந்தாலும் இருக்கலாம். அதிமாத்திரையான மின்வலியைப்போல, அந்தப் பரநினைவு தோன்றுவதும், ஓங்குவதும் ஓய்வதும் எனக்குத் தெரிவதில்லை. சாதாரண மின்வலியானால் அதன்வேகம் நமது தேகத்தில் தாக்குவது நமக்குப் புலப்படும். அந்தவேகம் மிகுந்தால் அது தாக்குவதே தெரியாது; நமக்கு வாதையுணர்ச்சியிராது. இப்படிப்பட்ட அதிமாத்திரையான மின்வலிப்பிரயோகத்தால் கொலைக்குற்றவாளிகளைக் கொல்வது உத்தமமென்றும், தூக்கிட்டுக் கொல்வதனால் துன்ப உணர்ச்சி தோன்றுமாதலின் இது அதமமான விதமென்றும் சொல்கிறார்களல்லவா? கொஞ்சம் வெளிச்சமானால் நமக்குக் கண் தெரிகிறது; எல்லாவற்றையும்பார்க்கிறோம். அதிகவெளிச்சமானால் கண் தெரிவதில்லை; எல்லாம் இருளாகின்றது. அதுபோல, எனக்குள்ள ஒரு பங்கு மறுமை உணர்ச்சி அதிமாத்திரையாகி, எனக்குப் புலப்படாது வியவகரிக்கின்றது போலும்.

ஸரோஜம்:—ஆகவே, இளமையில் நான் கணவனை இழந்தால், வேறொருவனை மணப்பேனென்று நீ நினைக்கிறாய் அல்லவா?

மீனு:—ஆம்; மனோராஜ்யமாக நீ கட்டிய ஆகாயக் கோட்டை மாயமாய்ப்போகும்போது நீ மறுமணம் புரிந்து கொள்வாய். அப்படிச் செய்யா விட்டால் அது உனது மூடத்தனமாகும்; வாழ்க்கை வைபவங்களனைத்தையும் நீ வீணே இழப்பாய்.

இந்த வார்த்தைகள் ஸரோஜத்தின் மனத்தை உறுத்திக்கொண்டிருந்தன. மீனு சொல்லிய விஷயங்களைக் குறித்து இவள் அன்றிரவு ஆழ்ந்து ஆலோசித்தாள். மேலும் மேலும் சிந்தனை செய்து பார்த்ததில், தனது உத்தம பாவனையையும், அந்த பாவனையில் தனக்குள்ள பற்றையும், தன் சங்கற்பத்தின் உறுதியையும் தோழி மீனாக்ஷி உள்ளபடி கணிக்காமல் ஏனோதானோவென்று லகுவாக மதித்துப் பேசினள் எனத்தேறித் தெளிந்தாள். 'என்ன வந்தாலும் வரட்டும், என் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, சொன்னபடியே ஆற்றிச் சாதிப்பேன்' எனத் திடமாகச் சங்கற்பம் செய்து கொண்டாள்.

(தொடரும்)

ஐம்படைத் தாலி

காத்தற் கடவுளான திருமாலின் சங்கம், சக்கரம், கதை, கட்கம், சார்ங்கம் என்னும் ஐந்து ஆயுதங்களின் வடிவமாக அமைப்பது; இதனைப்பஞ்சாயுதம் என்றும் வழங்குவர். ஐந்தாவது நாளில் பிள்ளைகளுக்கு இதனைத்தாரணஞ்செய்தல் மரபென்றும் ஸ்ரீருஹ்யரத்நம் என்னும் வடநூலில் இதற்குவிதியுள்ளதென்றும் கூறுவர். இது தாலியெனவும் தாலியைம்படையெனவும் வழங்கும்.

—மகா மகோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள்.



குறுக்குத் தையல்

வி. விசாலாக்ஷி அம்மாள்

குழந்தைகள்சட்டைகள், பெரியவர்களுடைய 'ஜாகட்டுகள்' முதலியவைகளுக்குக் குறுக்குத் தையலில் பல அழகிய சித்திரங்கள் போட்டு அலங்காரம் செய்யலாம். இந்தத் தையலுக்கு ஆங்கிலத்தில் 'கிராஸ்-ஸ்டிச்' என்று சொல்லுகிறார்கள். இந்தத் தையல் கற்றுக் கொள்ளுவதற்குச் சுலபமான தையல்தான். தப்புக்களும் அதிகமாகப் போட முடியாது. இதற்கு அவசியமான பொருள்கள், பல வர்ணங்களிலுள்ள 'டி. எம். ஸி' நூல்கள், இந்தத்தையல் தைப்பதற்கு அவசியமான வலை, கூர்மையான ஊசி, சித்திரங்கள் போட்டிருக்கும் படப்புஸ்தகம். ஊசியின் காது சற்றுப் பெரியதாக இருக்கவேண்டும்.

குறுக்குத் தையல் சித்திரப்படப் புஸ்தகங்களில் அநேக தினுசுகள் விற்கிறார்கள். வலை போன்ற கட்டங்களில் பல வர்ணங்களில் சித்திரங்கள்வரையப்பட்டிருக்கும். இப்புஸ்தகங்களின் உதவியினால் இந்தத் தையலைச் சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம். ஜாகட்டைகளுக்குச் சித்திரத் தையல் போடுவதாக வைத்துக் கொள்ளுவோம். முதலில் துணியை 'மாட்கியார்' வெட்டில்—அதாவது தோளில் தையல் விழாமல் தைக்கும் தினுசில்—வேண்டிய அளவில் கத்தரித்துக் கொள்ள வேண்டும். கைகளின் ஓரங்களில் வேண்டிய அகலத்திற்கு வலைத்துணியைக் கத்தரித்து மேல்பக்கமாக வைத்து ஒட்டிக் கொள்ளவேண்டும். வலையைக் கீழ்ப் பக்கம் மேல்பக்கம் இரண்டு பக்கமும் ஒட்டிக்கொண்டால் வேலை செய்வதற்குச் சௌகரியமாக இருக்கும். பிறகு புஸ்தகத்தில் நாம் போட உத்தேசிக்கும் சித்திர தினுசில் எந்த வர்ண நூல் உபயோகித்


திருக்கிறதோ, அதே மாதிரியான வர்ண நூலைப் போதுமான அளவிற்குக் கத்தரித்து, ஊசியில் கோத்துக் கொண்டு கட்டங்களை எண்ணிக்கொண்டு தைக்கவேண்டும். ஒரே கட்டத்தில் இரண்டு தரம் தையல்கள் ஒன்றின்மேல் ஒன்றாகக் குறுக்கே தைக்கப்படுவதனால்தான் இந்தத் தையலுக்குக் 'கிராஸ்--ஸ்டிச்' என்ற பெயர் ஏற்பட்டது. கொஞ்ச தூரம் தைத்ததும் நூலின் வர்ணம் மாறிவிடும். அடுத்த வர்ண நூலை ஊசியில் கோத்துக் கொண்டு தைக்க வேண்டும். இந்தத் தையல் கற்றுக் கொள்ளுவதற்குச் சுலபமாக இருந்தபொழுதிலும், வேலை நச்சுவேலைதான். அடிக்கடி தையலை முடித்து மற்றொரு வர்ணத்தில் புதிதாகத் தொடங்கவேண்டி வரும். முதலிலேயே, போட உத்தேசிக்கும் சித்திரத்தில் உபயோகித்திருக்கும் பலவர்ண நூல்களை வேறாகப் பொறுக்கி எடுத்து, வேண்டிய அளவிற்குக் கத்தரித்துத் தையல் பெட்டியில் தனியாக வைத்துக் கொண்டால், தைப்பதற்குச் சௌகரியமாகவும் இருக்கும்; நூலும் சிக்குப்படாமல் இருக்கும்.

தையல் தைத்து முடிந்ததும் வலையின் நூல்களை உருவி எடுத்துவிடவேண்டும். இது சுலபமாக உருவ வந்து விடும். எல்லா நூலையும் உருவி எடுத்தபிறகு சட்டையைத் தைத்து இஸ்திரி போட்டுவிட்டால் பார்வைக்கு அழகாக இருக்கும். குழந்தைகளின் சட்டையின் அடிகளிலும் கைகளின் ஓரங்களிலும் மார்பிலும் அழகிய வர்ணங்களில் பல நேர்த்தியான சித்திரங்களை இந்தத் தையலில் தைக்கலாம். நூலும் அதிக விலை இல்லை. புஸ்தகங்களில் வர்ணச்சித்திரங்கள் கொடுத்திருப்பதனால், வர்ண அமைப்பு எவ்விதம் முடியுமோ என்று சந்தேகப்பட வேண்டியதும் இல்லை. ஒழிந்த வேளைகளில் இதை ஒருபொழுது போக்காகத் தைத்துக் குழந்தைகளின் துணிகளையும், பெரியவர்களுடைய சட்டைகளையும் அழகு படுத்தலாம்.

ஒரு நூதனமான பணியாரம்

இந்தப் பணியாரம், மரிக்கன்மா 'ஸாவினாலும்' வெந்த ஆப்பிள் பழத்துண்டுகளாலும் செய்யப்படுவது. ஆப்பிள் பழங்களில் இரண்டு தினுசுகள் உண்டு. உயர் ரகத்தைச்சேர்ந்த ஆப்பிள்கள் நல்ல தித்திப்பாக இருக்கும்; இவற்றை நாம் சாதாரணமாகப் பழமாக அப்படியே சாப்பிடுவதற்கு உபயோகிக்கிறோம். தாழ்ந்த ரக ஆப்பிள்கள் புளிப்பாக இருக்கும். இந்தப் பழங்களைத்தான் இப் பணியாரம் செய்வதற்கு உபயோகிக்க வேண்டும்.

தாழ்ந்த ரக, புளிப்பான ஆப்பிள்கள் கிடைக்காவிட்டால் தித்திப்பான ஆப்பிள்களையும் உபயோகிக்கலாம். ஆப்பிள் பழங்களைத் தோலை நன்றாகச் சீவி, நடுவில் இருக்கும் விதை நடுக்கட்டை முதலியவைகளை நீக்கி, ஒரே சீராகத் துண்டு துண்டுகளாக நறுக்கிக்கொள்ள வேண்டும். பழங்களை நன்றாக அலம்பி, களிம்பேறாத வாயகலமான பாத்திரத்தில் போட்டு, பழத்துண்டுகள் முங்க ஜலம் விட்டு வேக வைக்க வேண்டும். ஜலம் முத்துக் கொதி வரவேண்டும்; தீயை நிழல் போல் எரிய விடவேண்டும். தீயை அதிகமாக விட்டு நன்றாகக் கொதிக்க விட்டால் பணியாரம் கெட்டுவிடும். இவ்விதம் இரண்டு அல்லது இரண்டரை மணி நேரத்திற்கு வேகவைக்க வேண்டும். பணியாரம் சரியாக வர வேண்டுமானால் இதை முக்கியமாகக் கவனித்துக்கொள்ள வேண்டும். பிறகு வேண்டிய அளவு சர்க்கரை சேர்த்துக் கொஞ்ச நேரம் கொதிக்க விட்டு அடுப்பை விட்டு இறக்கி நன்றாக ஆறவைக்க வேண்டும். கால்படி பாலை அடுப்பில் வைத்துக் காய்ச்ச வேண்டும். பால் கொதி வந்ததும், ஒரு 'டேபில்—ஸ்பூன்' அதாவது நாலு தேயிலைக் கரண்டி மரிக்கன் மாவைக் கொஞ்சம் ஆறின பாலில் கரைத்துக்கொள்ள வேண்டும். இதற்கு மைதாமாவை உபயோகித்து விடக்கூடாது. மரிக்கன்மா பொட்டலங்களாகவும், டப்பாக்களாகவும் கடைகளில் விற்கப்படும். கரைத்திருக்கும் மாவுடன் நாலு 'டேபிள்—ஸ்பூன்' சர்க்கரை சேர்த்து நன்றாகக் கிளறிக் கொள்ளவேண்டும். கொதிக்கும் பாலில் கரைத்த மாவைக் கொட்டி நன்றாகத் துழவ வேண்டும். அடுப்புத்தீயை மெதுவாக விட்டுப் பத்துப் பதினைந்து நிமிஷங்கள் வரையில் கொதிக்க விட வேண்டும். கொதிக்கும் பொழுது கை விடாமல் கிளறவேண்டும். அடுப்பை விட்டு இறக்கி, ஆறவைத்துக் கொள்ள வேண்டும். இந்த 'ஸாஸ்' நன்றாக ஆறினதும், ஆப்பிள் பழத்துண்டுகளில் கொஞ்ச அளவு எடுத்து, ஒரு தட்டில் வைத்து மற்றொரு பக்கத்தில் கொஞ்சம் 'ஸாஸ் விட்டு', ஒரு ஸ்பூனினால், சேர்த்து எடுத்துச் சாப்பிடும்படிக் கொடுக்க வேண்டும். இது வாய்க்கு ருசியாகத் திதிப்பாக இருக்கும். உயர்தர ஆப்பிள்களை உபயோகிப்பதாக இருந்தால், சில வேளைகளில் வெந்த துண்டுகள் இலேசான ரோஜா வர்ணமாக மாறிவிடலாம். இதனால் பழம் கெட்டுவிட்டது என்று எண்ணிவிடக் கூடாது.



நரியின் சமர்த்து

வி. கிருஷ்ணசாமி ஆசாரியார்

ஒரு பெரிய காட்டில் ஆணும் பெண்ணுமாக இரண்டு நரிகள் இருந்தன. அவைகளுக்கு ஐந்து குட்டிகள் இருந்தன. தகப்பன் நரி தன்னைப்போல் அழகும் புத்தியும் படைத்தவர்கள் இல்லையென்று கர்வம்கொண்டு இருந்தது. தாய்நரி அழகும் புத்தியும் வாய்ந்ததாக இருந்தும் தகப்பன் நரியை மறுத்துச் சொல்ல முடியாமல் இருந்தது. அடிக்கடி தகப்பன் நரி தன் மனைவியைப் பார்த்து, "நமது குட்டிகள் எவ்வளவு அழகானவை! இவையெல்லாம் என்னைப் போலவேதான் இருக்கும்" என்று சொல்லியது. தாய்நரியும், "நம்குட்டிகள் அழகானவைதான்" என்று பதில் சொல்லியது.

இந்த இரண்டு நரிகளும் பக்கத்திலுள்ள கிராமங்களுக்குப் போய்க் குட்டிகளுக்கு இரைதேடி வருவது வழக்கம். ஓர் இராத்திரி இவைகள் வழக்கம்போல் இரை தேடி எடுத்துக்கொண்டு அந்தக்காட்டின் வழியாக வந்தன. வழியில் தகப்பன் நரி, "நான் இன்று எவ்வளவு இரை சம்பாதித்தேன் பார்த்தாயா!" என்று கர்வத்துடன் சொல்லியது. தாய் நரி, "இவ்வளவு சத்தமாகக் கர்ஜனைசெய்தால் நமக்கு ஆபத்து நேரிடும்; காட்டில் இருக்கும் புலிகளெல்லாம் வந்து நம்மைக் கொன்றுதின்றுவிடும்; மெதுவாய்ப் பேசுங்கள்" என்று சொல்லியது. இதைக்கேட்ட ஆண்

நரிக்குத் தன் மனைவியின்மேல் கோபம் வந்தது. அது பெண் நரியைப் பார்த்து, "பைத்தியம் பிடித்தவள் போல் உளருதே! புலிக்கு நான் புத்தியில் இளைத்தவனா?" என்றது.

பக்கத்திலே புதரில் பதுங்கியிருந்த ஒரு புலி இதைக் கேட்டதும் ஓடி வந்து, "ஏ நரியே! நீ அவ்வளவு புத்திசாலியா? இதோ பார், உன்னையும் உன் மனைவியையும் அடித்துத் தின்கிறேன்" என்றது.

இதைக்கேட்ட ஆண் நரி பயந்து என்ன செய்வதெனத் தெரியாமல் கலங்கி நின்றது. அதன் டம்பமான வார்த்தைகளெல்லாம் பிரயோஜனப்படவில்லை.

இது இப்படியிருக்க இனிமேல் தப்புவதற்கு வழியில்லையெனத் தெரிந்த பெண் நரி புலியைப் பார்த்து, "மாமா, இப்பொழுது தங்களுடைய தரிசனம் எங்களுக்குக் கிடைத்தது எங்கள் அதிர்ஷ்டந்தான். எனக்கும் இந்த ஆண் நரிக்கும் எங்களுடைய குட்டிகள் யாரைப்போல் இருக்கின்றன என்னும் விஷயத்தில் சண்டை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தாங்கள் தான் தீர்த்துவைக்க முடியும். ஆதலால் தயவு செய்து தாங்கள் எங்கள் இருப்பிடத்திற்கு வாருங்கள்" என்று புலியை அழைத்தது.

புலி இவ்விரண்டு நரிகளோடு ஐந்துகுட்டிகளையுங்கூட அடித்துத் தின்னலாம் என்று ஆசை கொண்டது; அது தாய்நரியைப் பார்த்து, "அப்படியா? உனது இஷ்டம்போல் செய்கிறேன். என்னை நீங்கள் வசிக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்" என்றது.

உடனே இரண்டு நரிகளும் புலியை அழைத்துக் கொண்டு தங்கள் இருப்பிடம் சென்றன. வளையினிடம் வந்தவுடன் பெண்நரி ஆண்நரியைப் பார்த்து, "நான் நமது நண்பனுடன் இங்கே இருக்கிறேன்; நீங்கள் போய்க்குட்டிகளை அழைத்து வாருங்கள்" என்று சொல்லியது.


உடனே ஆண் நரி வளைக்குள் சென்றது. பெண் நரி புலியுடன் பேசிக்கொண்டு இருந்தது. புலியோ தனக்கு அன்று கிடைக்கப்போகும் விருந்தைப்பற்றி எண்ணிச் சந்தோஷப்பட்டுக்கொண்டே இருந்தது.

வெகுநேரம் சென்றும் தகப்பன் நரி தன் குட்டிகளை அழைத்துக்கொண்டு வரவில்லை. புலி காலதாமதமாவதைக் கண்டு ஆத்திரப்பட்டது. அப்போது பெண் நரி, "மாமா, மன்னியுங்கள்; நான்போய் என் கணவரையும் குட்டிகளையும் அழைத்து வருகிறேன்" என்றது. புலியும் அதற்கிணங்கியது. அந்த நரி வேகமாக வளைக்குள் ஓடிற்று. உள்ளே போனவுடன் இரண்டு நரிகளும், "இன்று தெய்வாதீனமாகத் தப்பித்துக்கொண்டோமே" என்று மிகவும் சந்தோஷம் அடைந்தன.

தாய்நரியும் வராததைக் கண்டு புலி, கோபங்கொண்டு வளையின் வாசலில் நின்றுகொண்டு அந்த வனமுழுவதும் நடுங்கும்படி முழக்கம் செய்தது. அதைக்கேட்ட தாய்நரி வளையின் வாசல் வரையில் வந்து, "மாமா, எங்கள் வழக்கை நாங்களே தீர்த்துக்கொண்டு விட்டோம். குட்டிகளெல்லாம் தாயைப் போலவேதான் இருக்கின்றனவென்று என் கணவர் ஒப்புக்கொண்டார். உங்களுக்குச் சிரமம் கொடுத்ததற்காக மன்னிக்கவேண்டும்; இனி நீங்கள் போய் வரலாம்" என்று சொல்லியது.

அறிவில்லாத புலிக்கு நரிகளின் தந்திரம் அப்போதுதான் தெரிந்தது. அதற்குள் பொழுது விடிந்துபோனதைக் கண்டு புலி அவ்விடத்தை விட்டுத் தன் இருப்பிடம் சென்றது.

தகப்பன் நரி தன் மனைவியின் சாமர்த்தியத்தைக் கண்டு அதுவே அதிக புத்தியுள்ளதென்று ஒப்புக்கொண்டது. அன்று முதல் அது கர்வப்படுவதை விட்டுவிட்டது.



தமிழுக்குச் சிறப்பு

பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் சென்ற டிசம்பர் மாதம் திருப்பனந்தாள் காசி மடத்து ஆயிரம் ரூபாய்த் தமிழ்ப் பரிசு வழங்குவதை முன்னிட்டுக் கோவைக்கு விஜயம் செய்திருந்தபொழுது கோவை நகர சபையார் மேற்கூறிய பெரியாருக்கு (டிசம்பர் மாதம் 14-ம் உ) ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள். நகரசபையினர் ஓர் தமிழ்ப் பெரியாரை உபசரிக்க முன்வந்தது இதுவே முதற்றடவையாகும். பிறநாட்டிலிருந்து வருபவர்களையும் பிறமொழி வல்லுநர்களையும் வரவேற்று உபசரிக்கும் வழக்கத்தை இதுவரையிற் கண்டுவந்தோம். கோவை நகரசபையார் பிரம்மஸ்ரீ ஐயரவர்களைப் பாராட்டி உபசரித்த செயலால் தங்களுக்குள்ள தமிழன்பை நன்கு புலப்படுத்திக் கொண்டனர். அவர்கள் அப்பெரியாருக்குச் செய்த உபசாரம் தமிழன்னைக்கே செய்ததாகும் என்பதில் ஐயமில்லை. நாட்டுமொழியைக் கௌரவிக்கும் விஷயமாய், கோவை நகரசபையாரைத் தமிழ் நாட்டிலுள்ள ஏனைய நகர சபையினர் பின்பற்றுவார்களென்று நம்புகிறோம்.



மகாமகோபாத்தியாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர்

ராவ்பகதூர் கே. வி. கிருஷ்ணசாமி ஐயரவர்கள்

கலைமகள் கௌரவப் பத்திராசிரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் இப்புது வருஷத்தில் ராவ்பகதூர் என்னும் பட்டம் பெற்றது குறித்து யாம் பெரிதும் மகிழ்கின்றோம். ஸ்ரீமான் கிருஷ்ணசாமி ஐயர் பிரபல நியாயவாதிகளுள் ஒருவர். தமிழன்பு பூண்டவர். சென்னைப் புஸ்தகாலயப் பிரசார சங்கத்திற்கும் சென்னை ஸர்வகலாசாலை அகராதிச்சங்கத்துக்கும் தலைவர். என்றும் குன்றாத ஊக்கத்தோடு பொதுமக்கள் அறிவு வளர்ச்சி கருதிப் பலவகையாகப் பாடுபட்டு வருபவர். இவருடைய பொதுஜன சேவை அன்பர்களாற் பெரிதும் பாராட்டப் படுகின்றது.

பள்ளிக்கூடப் புஸ்தகாலயங்களும் புஸ்தகாலய வேலைகளும்

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் புஸ்தகாலயம் ஒன்று இருக்கிறது. பள்ளிக்கூடத்தின் செழிப்புக்கு எற்றபடி அதில் குறையவோ நிறையவோ புஸ்தகங்களைச் சேகரித்து அடுக்கிவைத்திருக்கிறார்கள். நான் முன்னால் படித்த பள்ளிக்கூடம் ஒன்றில் ஒரு புஸ்தகாலயம் இருந்தது. இரண்டு பெரிய ஹால்களுக்கு நடுவே ஒரு நடை. அந்த நடையின் அகலம் குறைவு. நீளம் அதிகம். ஹால்களுக்கு வெளிச்சமும் காற்றும் வரவேண்டுமென்று அந்த நடையின் பக்கச் சுவர்கள் இரண்டிலும் பல ஜன்னல்கள் விடப்பட்டிருந்தன. நடையின் இரண்டு கோடிகளிலும் இரண்டு கதவுகள். பள்ளிக்கூட அதிகாரிகள் புஸ்தகாலயத்துக்கு இதுதான் தகுந்த இடமென்று தீர்மானித்தார்கள். புஸ்தக அலமாரிகளை அந்த நடையில் வைத்துப் பூட்டினார்கள். பக்கத்து ஜன்னல்களை எல்லாம் மூடினார்கள். ஒரு பக்கத்துக் கதவைச் சார்த்தித் தாழ்ப்பாள் போட்டார்கள். மற்றொரு பக்கத்தில் மார்பளவுக்கு ஒரு கதவைப் போட்டுச் சார்த்தி உள்ளே ஒரு கடுகடுத்த ஆளைக் காவல் வைத்தார்கள். அறை இருட்டறையாய்விட்டது. காற்றும் வெளிச்சமும் உலாவிய நடையில் மெய்யாகவே ஈ காக்காய் போகமுடியாமல் ஆகிவிட்டது. பக்கத்து அறைகளுக்கு வந்து கொண்டிருந்த காற்றும் இதனால் நின்று போய்விட்டது. புஸ்தகம் வேண்டியவர்கள் நடைக்கு வெளியே நின்று கொண்டு பணிவாய்த் தாழ்மையாய்ப் புஸ்தகம் வேண்டுமென்று சொல்லவேண்டும். அதுவும் வாரத்தில் ஒரு முறைதான் கேட்கலாம். புஸ்தகம் கிடைத்தால் அதிர்ஷ்டம். இது பழைய காலம்.

இப்பொழுதும் இவையெல்லாம் முற்றிலும் மாறவில்லை. புஸ்தகாலய அதிகாரிகள் தாங்கள் புஸ்தகங்களைப் பழுதுபடாமல் பார்க்கும் காவற்காரர்கள் அல்ல, அவற்றை வாரி வழங்கும் கொடையாளிகள் என்பதை இன்னும் முற்றிலும் உணரவில்லை. புஸ்தகங்கள் ஒளித்து வைப்பதற்கல்ல; உபயோகத்துக்காகவே என்பதை முழுவதும் தெரிந்து கொள்ளவில்லை. ஆயினும் முன்னைக்காட்டிலும் எவ்வளவோ சீர்திருத்தங்கள் நடந்துகொண்டுதான் வருகின்றன.

இப்பொழுது ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் வெளிச்சமுள்ள காற்றுள்ள சௌகரியமான நல்ல அறைகளில் புஸ்தகாலயங்களை ஏற்படுத்துகிறார்கள். அங்கே பள்ளிக்கூட மாணவர்களை வரவிடுகிறார்கள். மேலும் புஸ்தகாலய வேலை என்று ஒரு மணியோ இரண்டு மணியோ அதற்கு மேலோ வைத்திருக்கிறார்கள். அந்த வேலையிலே ஒரு வகுப்புப் பிள்ளைகள் எல்லாரும் புஸ்தகாலயத்துக்குள் வந்து, அங்கே வைத்திருக்கும் புஸ்தகங்களில் தத்தமக்கு வேண்டிய புஸ்தகங்களை எடுத்துப் படிப்பார்கள். புஸ்தகாலய அதிகாரிகள் இதற்கு உதவி புரிவார்கள். இது சிறந்த ஏற்பாடல்லவா?

இவ்வாறு புஸ்தகாலயங்களைப் பற்றி அபிப்பிராயம் மாறியதற்கு, மாறி வருவதற்குக் காரணம் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள புஸ்தகாலயப் பிரசார சங்கத்தார் செய்துவரும் பிரசாரமே யாகும். மேலே நாடுகளில் புஸ்தகாலயப் பிரசாரசங்கங்களும் பள்ளிக்கூட அதிகாரிகளும் கலந்து ஏகோபித்து ஒத்துழைக்கிறார்கள். ஒருவர்க்கொருவர் உதவிபுரிகிறார்கள். அதே மாதிரி நம்முடைய நாட்டிலும் இருப்பது நல்லதென்று உணர்ந்த சென்னைப்புஸ்தகாலயப் பிரசார சங்கத்தார் இந்தக் கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்களில் சில பிரசங்கங்களை நடத்துவித்தார்கள். எத்தனையோ பள்ளிக்கூடங்களிலிருந்து

ஆசிரியர்களும், தலைமை ஆசிரியர்களும் வந்து பிரசங்கங்களைக் கேட்டார்கள். பிரசங்கம் செய்தவர் சென்னைப் புஸ்தகாலய சங்கத்தின் காரியதரிசிகளில் ஒருவரும், யுனிவெர்ஸிடி புஸ்தகசாலையின் அதிகாரியுமான ஸ்ரீமான் எஸ். ஆர். ரங்கநாதன் அவர்கள் எம். ஏ. எல். டி. இவர் பல நாடுகளுக்குச் சென்று அங்குள்ள புஸ்தகாலய முறைகளை நன்கு நேரில் கண்டு உணர்ந்தவர். இவர் பள்ளிக்கூட ஆசிரியராகவும் இருந்தவர். ஆகையால் இப்பேர்ப்பட்ட பிரசங்கங்களை நடத்த இவர் மிகவும் தகுதியுடையவர்.

பள்ளிக்கூடங்களில் ஏன் புஸ்தகாலயங்கள் இருக்கவேண்டும் ? அவற்றால் பிள்ளைகளுக்கு உள்ள சௌகரியங்கள் என்ன ? உபாத்தியாயர்களுக்கு உள்ள சௌகரியங்கள் என்ன? புஸ்தகங்களைப் படிக்கப் பிள்ளைகளை எப்படிப் பழக்கவேண்டும் ? அவர்களுக்கு எப்படி ஊக்கம் அளிக்கவேண்டும்? எப்படி ஆசை உண்டாக்கவேண்டும் ? புஸ்தகாலயங்களால் மாணவர்களுடைய மனமும் அறிவும் உற்சாகமும் எப்படி விரிவடைகின்றன?மாணவர்கள் பொழுது போக்குக்காகப் படிக்கவேண்டுமோ? மேன்மேலும் அறிவை மூட்டைமூட்டையாகக் கட்டுவதற்காகப் படிக்க வேண்டுமோ ? புஸ்தகங்களைத் தவிர என்ன என்ன கருவிகளை எல்லாம் உபகரணங்களாக அமைத்துக் கொள்ளலாம்? படங்கள், படப் புஸ்தகங்கள், பத்திரிகைகள், விசித்திர விளக்கு (மாஜிக் லான்டொன்), சினிமாப் படங்கள் இவைகளை எப்படிப் பயன்படுத்தலாம் ? பாட்டு, நாடகம், காலக்ஷேபம் இவைகளை எவ்வாறு படிப்புக்குத் துணையாக உபயோகப்படுத்துவது? புஸ்தகங்களைக் கிழிந்துபோகாமல் பாதுகாப்பது எப்படி? வேண்டும் போது எளிதில் எடுக்கும்படியாக வைப்பது எப்படி? என்னும் விஷயங்களையும் இன்னும் இவைபோன்ற விஷயங்கள் பலவற்றையும் ஸ்ரீமான் ரங்கநாதன் மிகவும்தெளிவாகவும் பலரும்கேட்டு அனுபவிக்கும்படியாகவும் விளக்கிச் சொன்னார்.

இவரைத் தவிர டிரெக்டர் சாம்பியன் துரையவர்களும், புஸ்தகாலயப் பிரசார சங்கத்தலைவர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களும் வெவ்வேறு நாட்களில் பிரசங்கம் செய்தார்கள்.

புஸ்தகக்காட்சி

இதன் சார்பாக, இதற்குத் துணையாகப் புஸ்தகக்காட்சி ஒன்றும் நடைபெற்றது. இதைக் கல்வி இலாகா மந்திரி கனம் எஸ். குமாரஸ்வாமி ரெட்டியாரவர்களின் தலைமையில் யுனிவெர்ஸிடி வைஸ் சான்செலராகிய லிட்டில்ஹேல்ஸ் துரையவர்கள் திறந்துவைத்தார்கள். சென்னையிலுள்ள சில பிரபலமான புஸ்தக வியாபாரிகள் ஐந்தாவது ஆறுவது பாரங்களுக்கு ஏற்றபடியாபுள்ள புஸ்தகங்களை அங்கே கொண்டு வைத்திருந்தார்கள். இந்தப் புஸ்தகங்கள் தகுதி உள்ளனவா என்று சங்கத்தார் நியமித்த ஒரு கமிட்டி ஆராய்ந்து அவற்றைப் பொறுக்கி எடுத்தது. எல்லாப் புஸ்தகங்களும் மிகவும் நன்றாயிருந்தன. என்னை எடுத்துப்பார், என்னை வாங்கு, என்னைப் படி என்று அவை சொல்லிக்கொண்டே இருந்தன. என்ன அழகான கட்டடம், அழகான அச்சு, அழகான படங்கள், அழகான எளிய நடை. இவைகளைப் பார்த்தபோது மறுபடியும் சிறுபிள்ளையாகிப் பள்ளிக்கூடத்தில் படிக்க வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. பையனாகி விட்டால், தூக்கத்தைக் கெடுத்து, பசியைக் கெடுத்து, உடலைக் கெடுத்து, அறிவையும் கெடுக்கும் பரீக்ஷைகளுக்கு மறுபடியும் உட்காரவேண்டியிருக்குமே என்ற பயம் ஒரு க்ஷணம் பகீர் என்று தோன்றிற்று. புஸ்தகங்களின் அழ இன்னும்

ஒரு முறை பார்த்த உடனே அந்தப் பயத்தையும் ஒதுக்கித்தள்ளிக் கொண்டு, படிக்கவேண்டும் என்னும் ஆசையே ஓங்கி வளர்ந்தது. ஆனால் எல்லாம் ஆங்கிலப் புத்தகங்கள்! பெரும்பாலும் ஆங்கிலப் பிள்ளைகளுக் காகவே, அவர்கள் பழக்க ஒழுக்கங்களை ஒட்டி, எழுதப்பட்டவை. அந்தப் புஸ்தகங்களைப் பார்த்தபோதெல்லாம் குழந்தையாகப் பிறந்தால் ஆங்கில நாட்டில் பிறக்க வேண்டும் என்று தோன்றிக்கொண்டே இருந்தது. அவர்களே அதிர்ஷ்டசாலிகள். இதைக் கண்டு நாம் அதிகம் வருத்த மாவது பொறாமையாவது படவேண்டியதில்லை. ஏனெனில் இங்கிலாந்து முதலிய தேசங்களிலும்கூட இத்தகைய ஏற்பாடுகள் தொடங்கி அதிக நாளாகவில்லை. ஆதலால் நாம் உடனே சுறுசுறுப்பாக வேலை செய்தால் நம் முடைய நாட்டுக் குழந்தைகளும் உற்சாகமாக உல்லாசமாகப் படித்து மகிழ் வார்கள். நாமும் அவர்களுடைய ஆனந்தத்தைக் கண்டு களிப்படைவோம். இவ்வாறு நடத்தப்படும் புஸ்தகக் காட்சிகளாலும் பிரசங்கங்களாலும் நமது மாணவர்களும், அவர்களைப் போற்றிப் பயில்விக்கும் ஆசிரியர்களும், புஸ்தகாலய அதிகாரிகளும், புஸ்தகங்களை எழுதுவோரும், இயற்றுவிப் போரும் மிகவும் பயன் அடைவார்கள் என்பது உறுதி. ஆதலால் இப்பேர்ப் பட்ட காட்சிகளும் பிரசங்கங்களும் நமது நாட்டிலே பல இடங்களிலும் பிரதி வருஷமும் பல தடவைகளில் நடத்தப் படவேண்டும். அவற்றால் பயனடைந்து, நமது நாடு மேன்மேலும் முன்னேற்றமடையும்.

பெ. நா. அப்புஸ்வாமி

எஞ்ஜினியரிங் காலேஜில் நடந்த பொருட்காட்சி

நமது நாட்டுப் பெரியார்களில் ஒருவராய், உலகத்தாரால் புகழப்படுபவ ராய், உள்ளவர் ஸர் ஸி. வி. ராமன் என்னும் பௌதிகசாஸ்திரவிற்பன்னர். அவர் கேவலம் சாஸ்திர ஆராய்ச்சியில் மட்டிலும் திறமை வாய்ந்தவர் அல்லர். அவர் சிறந்த தேசபக்தரும் கூட. அவர் தம் அருமைச் சாஸ்திரத் தைப் பற்றிப் பேசும்போதெல்லாம், அவர் மனத்திலே ஊறிக் கிடக்கின்ற பற்பல ஆச்சரியமான கருத்துக்களை மிகவும் தெளிவாகவும் இனிமையாகவும் கவிதாவன்மையுடனும் பேசி விளங்கவைத்துப் பாமரர்களையும் பண்டிதர் களையும் வசீகரிக்கின்றார். ஒரு நாடு முன்னேறவேண்டுமானால் அந்நாட்டி லுள்ள ஒவ்வொருவனும் விஞ்ஞான சாஸ்திர விஷயங்களை அறிந்துகொள்ள வேண்டும், அதற்கு ஏற்ற—அதனால் ஏற்படும்—மனநிலையை அடையவேண் டும், ஒவ்வொரு விஷயத்தையும் அப்பேர்ப்பட்ட மனநிலையோடும் அதனால் உண்டாகும் விசேஷப்பார்வையோடும் பார்க்கவேண்டும் என்று அவர் ஒவ்வொரு தடவையும் வற்புறுத்துகிறார். பந்துவிளையாட்டிலாகட்டும், சங் கீதத்திலாகட்டும், கலைகளிலாகட்டும்—ஒவ்வொன்றிலும் இத்தகைய மன நிலையும் பார்வையும் அவசியம் என்று அவர் கற்பித்துக்கொண்டே வருகிறார்.


இந்த வருஷம் கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்களுக்குப் பிறகு அவர் சென்னைக்குவந்திருந்தால் மிகவும் சந்தோஷம் அடைந்திருப்பார். ஏனெனில், குதிரைப் பந்தயம் நடக்கும் கிண்டியில், அறிஞர்களும் மெச்சும்படியான சிறப்பான காரியம் ஒன்று நடைபெற்றது. அது எஞ்ஜினியரிங் காலேஜில் நடந்த பொருட் காட்சி.

வருஷா வருஷம் நடப்பதுபோல் இந்த வருஷத்திலும் கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்கள் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டன.

வெளியூர்களிலிருந்து ஏராளமான ஜனங்கள் பொழுதுபோகிற்காகச் சென்னைக்கு வந்திருந்தார்கள். அதிலும் இந்த வருஷத்தில் ரயில்வே கம்பெனியார் டிக்கட்டுகளை மிகக் குறைவாக ஏற்படுத்தியிருந்ததனால் கூட்டத்துக்குக் கணக்கே இல்லை. இவ்வருஷம் எத்தனையோ விழாக்கள் நடந்தன. போட்டா போட்டியான சங்கீதக் கச்சேரிகள், மகாநாடுகள், சினிமாக்கள், பேசும்படக் காட்சிகள், பற்பலபாஷைகளில் நடிக்கப்படும் நாடகங்கள், விருந்துக் கச்சேரிகள், கண்காட்சிகள், பிரசங்கங்கள்—இன்னும் இவை போன்றவை எத்தனையோ நடைபெற்றன. இந்தப் பரபரப்பெல்லாம் ஒருவாறு அடங்கிய பிறகு, கிண்டியிலுள்ள எஞ்ஜினீயரிங் காலேஜில் ஒரு பொருட் காட்சியை நடத்தினார்கள்.

இந்தக் காட்சி இந்த ஜனவரி மீ 5, 6, 7ஆம் தேதிகளில் நடைபெற்றது மிகவும் அருமையாயிருந்தது. திரள் திரளான ஜனங்கள்—பல காட்சிகளைக் கண்டு அலுத்தும் உற்சாகம் குறையாத ஜனங்கள்—கிண்டிக்குப் போய் அதைப் பார்த்து அனுபவித்தார்கள். வேடிக்கை பார்க்கப்போன ஜனங்கள் வேடிக்கையோடு வேடிக்கையாய் அனேக விஷயங்களையும் தெரிந்துகொண்டு திரும்பினார்கள்.

அந்தக் காட்சியைப் பல பிரிவுகளாகப் பிரித்து வெவ்வேறு அறைகளில் வைத்து நடத்தினார்கள். முதல் அறையில் மாதிரி உருவங்களை வைத்திருந்தார்கள். இங்கே பலவிதமான எஞ்ஜின்கள், மெஷின்கள், வீடுகள், மரப்



ஆல்ஸன் யந்திரத்தில் செங்கலை நசுக்கிச் சோதித்தல்.

பாலங்கள், இருப்புப்பாலங்கள், மதகுகள், சுண்ணும்புக்காளவாய்கள், முதலியவற்றின் மாதிரியுருவங்கள் வைத்திருந்தார்கள். இன்னொரு அறையில் ஸர்வே செய்வதற்கு (நில அளவைகளுக்கு) வேண்டிய பலவிதமான கருவிகளையும் இயந்திரங்களையும் வைத்திருந்தார்கள். ஒருவன் சட்டைப்பையில் போட்டுக்கொண்டு நடந்தால் அவன் எவ்வளவு தூரம் நடந்தான் என்று


காட்டக் கூடிய பீடாமீடர் (Pedometer) என்னும் கடியாரத்தைப்போன்ற விசேஷமான கருவி ஒன்றும் அங்கே இருந்தது. சிறிய படத்தைப் பெரிய படமாக விரித்தும், பெரிய படத்தைச் சிறிய படமாகச் சுருக்கியும் வரைவதற்கு வேண்டிய கருவிகளும் இருந்தன.

இன்னொரு அறையில் பௌதிகசாஸ்திர சம்பந்தமான சாமான்கள் வைக்கப்பட்டிருந்தன. காந்தகுணங்களைக் காட்டும் கருவிகளையும், மின்சார சக்தியை எவ்வாறெல்லாம் உண்டாக்கலாம் என்று காட்டுவதற்கு வேண்டிய உபகரணங்களையும், மின்சார சக்தியை அளப்பதற்கு வேண்டிய சாதனங்களையும், மின்சார குணங்களை விளக்கிக் காட்டும் கருவிகளையும்—விந்தை விந்தையாய் அமைத்துவைத்திருந்தார்கள். வீட்டுக்கு உதவக்கூடிய கருவிகள் அனேகம் இருந்தன. இவற்றுள் சில, மின்சார மணி, அடுப்பு, வெந்நீர்க்கெட்டில், இஸ்திரிபோடும் கருவி, துடைப்பம், மயிர் உலர்த்தும் கருவி, தானாகவே காப்பிபோடும் கருவி, என்பனவாம். உதகமண்டலத்துக்குப் பக்கத்திலுள்ள பைகாராவில் நீர்வீழ்ச்சியால் மின்சாரத்தை எப்படி உண்டாக்குகிறார்கள் என்பதைச் சிறு உருவத்தால் விளக்கிக்காட்டினார்கள். அதே மாதிரியாகத் தென் இந்தியா மின்சார ரயிலுக்கும் உருவம் ஒன்று வைத்திருந்தார்கள். பக்கத்து அறையில் விளக்கு வெளிச்சத்தின் அளவைப் பரீக்ஷிக்கும் கருவி, ரேடியோ, ஒலிபெருக்கும் கருவி முதலிய கருவிகளையும், பேசும்படத்தின் தத்துவம் என்ன சினிமாக்காட்சி எப்படி நடைபெறுகிறது என்பவற்றை விளக்குவதற்கு வேண்டிய கருவிகளையும் வைத்திருந்தார்கள். இதற்கு அடுத்த அறையில் மின்சார இயந்திரங்களைக் கொண்டுவைத்திருந்தார்கள். அங்கே வாசலில் அட்டையால் செய்த ஒரு காவல்காரனை வைத்திருந்தார்கள். உள்ளே பிரவேசிக்கும் ஒவ்வொருத்தருக்கும் அந்த மின்சாரப் பொம்மை சலாம்போட்டுக் கொண்டிருந்தது. வந்தபேர்கள் எத்தனைபேர்கள் என்று கணக்கிட்டுக்கொண்டும் இருந்தது! இங்கே மின்சாரக் கடியாரங்களும், திருடன் வந்தால் மணியடிக்கும் கருவியும், வெளிச்சம் பட்டால் குரைக்கும் நாய் உருவமும், ஸ்ட்ரோபாஸ்கோப் என்னும் விந்தையான கருவியும் இன்னும் அனேக விசித்திரங்களும் இருந்தன.

ஐந்தாவது அறை பௌதிகசாஸ்திர ஆராய்ச்சிசாலை. ஜ்வாலையால் மின்சாரத்தைத் தயாரிக்கும் முறையும், விளக்குச் சுட்டினால் பாடும் குழாயும், நெருப்புப் பிடித்துக் கொண்டால் தானாக அடிக்கும் மணியும், மின்னலை உண்டாக்கும் கருவியும், செயற்கையாக மாலை நோக்கைக் காட்டும் காட்சியும், கிராமபோனும், தந்தியும், இருட்டினால் தானாகவே ஏற்றிக்கொள்ளும் கலங்கரை விளக்கும், தூர தரிசினி முதலியவையும் இன்னும் பலவும் இருந்தன.

ஆறாவது அறை பூதத்துவசாஸ்திர விஷயமானது. அதில் நீரூற்றுக்கள் என் கிளம்புகின்றன, மலைகள் எப்படி உண்டாகின்றன என்பனவற்றை விளக்கும் உருவங்கள் வைக்கப்பட்டிருந்தன. மிகவும் கியாதிபெற்ற கோஹினூர், கிரேட் மோகல், ஆர்லாப், ஹோப் முதலிய பெரும் பெரும் வைரங்களின் உருவங்கள் கண்ணாடியில் செய்து வைக்கப்பட்டிருந்தன. சிற்சில கனிப்பொருள்களிலிருந்து என்ன என்ன சாமான்கள் செய்யப்படுகின்றன என்பதை நன்றாக விளக்கிக்காட்டியிருந்தது.

அடுத்த அறை இரசாயன சாஸ்திர விஷயங்களை விளக்குவதாயிருந்தது. இங்கே சாமானிய உலோகங்கள், அவற்றின் உபயோகங்கள், மரத்தைக்



சக்திக்ருஹம்

காய்ச்சினால் கிடைக்கும் பொருள்கள், நிலக்கரியைக் காய்ச்சுவதால் கிடைக்கும் பொருள்கள், பெட்ரோல் எண்ணெய் வடித்தல், ஸோப்புகள் மெழுகு வர்த்திகள் செய்தல் முதலியவற்றை விளக்கிக்காட்டினார்கள்.

அடுத்த அறை சாமான்களின் சோதனைச்சாலை. இதிலே இரும்பு, மரம், செங்கல், சிமிட்டி, குழாய்கள், கம்பிகள், அச்சுக்கள் முதலியவை எவ்வளவு அழுத்தத்தைத் தாங்கும், எவ்வளவு இழுவையைத் தாங்கும், எவ்வளவு திருகலைத் தாங்கும் என்று சோதிப்பதற்காக மிகவும் அற்புதமான பல யந்திரங்களை வைத்துச் சோதித்துக் காட்டிக்கொண்டே யிருந்தார்கள்.

இதற்கு அடுத்த அறை தண்ணீர் சம்பந்தமானது. நீர் இறைக்கும் யந்திரங்களும், நீர் வீழ்ச்சியால் மின்சாரத்தை உண்டாக்கும் யந்திரங்களும், நீர் ஓட்டத்தை அளக்கும் கருவிகளும், இங்கே இருந்தன. அமெரிக்காவிலே கொலராடோ நதியிலே கட்டப்பட்ட ஹூவெர் அணை என்னும் பிரம்மாண்டமான அணையின் சிற்றுருவம் ஒன்றை இங்கே செய்து வைத்திருந்தார்கள்.

பத்தாவது அறை இயந்திரசாலை. அதிலே பலவகை எஞ்ஜின்கள், அவற்றின் உருவங்கள் முதலியவற்றை வைத்திருந்தார்கள். சூட்டை அளக்கும் கருவிகளும் ஒருவகையான அசைவை இன்னொரு வகையான அசைவாக மாற்றுவது எப்படி என்று காட்டும் கருவிகளும் இங்கே இருந்தன.

அதற்கு எதிராக உள்ள அறையில் இரும்பைக் கடைதல், சீவுதல் அறுத்தல், இழைத்தல், துளைத்தல்,தறையிடல், பூட்டுச் செய்தல், திருகாணி செய்தல் முதலியவற்றைச் செய்யும் கருவிகள் வைத்துத் தொழில்களைச் செய்து காட்டிக் கொண்டே யிருந்தார்கள். பன்னிரண்டாவது அறை தச்சுப்பட்டறை. அங்கே பலவிதமான யந்திர வாள்கள்—நீளவாள், சக்கர வாள்,நாடாவாள், முதலியவையும், மரத்தைக் கடைசல் பிடிக்கும் கருவிகளும், இவைபோன்றன பிறவும் வைக்கப்பட்டிருந்தன.

காற்றால் வேலைசெய்யும் சம்மட்டியும், உலைக்களமும், வார்ப்படசாலையும், மிகவும் பெரிதான சக்திகிருகமும் ஆகிய யாவும் பார்க்கத்தக்கவையா யிருந்தன. ஒருநாளில் பார்த்து முடியாதபடியால் இரண்டுநாள் போய்ப் பார்த்துவிட்டுவந்தோம். மிகவும் நன்றாயிருந்தது. அவர்கள் நடத்துவது இது இரண்டாவது காட்சி. இவர்கள் வருஷா வருஷம் சிரமத்தையும் செலவையும் பாராது இப்பேர்ப்பட்ட காட்சியை நடத்தி வருவார்களென்று நம்புகிறோம். அவர்கள் கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்களில் இதை நடத்தினால் சென்னை வாசிகள் மட்டுமன்றி வெளியூரார் பிறரும் இந்தக் காட்சியைக் கண்டு களித்துப் பயனடைய முடியும். ஸர். வி. வி. ராமன் கொண்டுள்ள நோக்கமானது நிறைவேற இதுவும் ஒரு சாதனமாயிருக்கும்.

பெ. நா. அப்புஸ்வாமி

கலைமகள்

மானங் காத்த மைந்தர்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

1

தமிழ்நாட்டில் உள்ள சில சில ஊர்களில் பரம்பரையாகக் கவிஞர்கள் இருந்துவருகிறார்கள். அவ்வூர்களுள் [1]வேம்பத்தூரென்பது ஒன்று. அது மதுரைக்குக் கிழக்கேயுள்ளது. சங்ககாலமுதல் இன்றளவும் அவ்வூரில் கவிஞர்கள் இருந்து வருகின்றனர். அங்கே உள்ள சோழியப் பிராமணர்களுள் இளைஞர்களும் எளிதிற் செய்யுட்கள் இயற்றும் ஆற்றலுடையவர்களாக இக் காலத்தும் விளங்குகிறார்கள். வேம்பற்றூர்க் குமரனாரென்னும் சங்கப்புலவர் அவ்வூரினரென்றே கருதப்படுகிறார்.

அவ்வூர்ச் சோழியர்களிற் பலர் பண்டைக்காலத்தில் வேறு வேறிடஞ்சென்று தங்கள் தங்கள் கல்வி மிகுதியையும் வருத்தமின்றிச் செய்யுட்கள் இயற்றும் வன்மையையும் புலப்படுத்தி அங்கங்கேயுள்ள அரசர், பிரபுக்கள் முதலியோரால் நன்கு மதிக்கப் பெற்று விளைநிலம் முதலியவற்றை அடைந்து வாழ்ந்துவந்தனர். அங்ஙனம் அவர்கள் இருந்தவூர்கள், வீரசோழன் அல்லது வீரை, தென்காசி, சீவலப்பாவூர், வல்லநாடு, இருப்பையூருணி, திருநெல்வேலி, கரிவலம்வந்த நல்லூர், கற்குளம், பனையூர், குறுங்காவனம் அல்லது குறுங்களாவனம் முதலியன.

வேம்பத்தூராருள் ஒருவராகிய பெருமாளையரென்னும் ஒரு வித்துவான் திருநெல்வேலியிலிருந்த சைவவேளாளப் பிரபுக்களின் பேராதரவால் அந்நகரத்தில் வசித்துவரலானார். வரன்முறையாக இலக்கிய இலக்கணங்களைப் பயின்ற அவர் நெல்லையப்பர் விஷயமாக ஏதேனும் நூல் இயற்றவேண்டுமென்றெண்ணினார். அவருடைய அன்பர்களும், அவருக்கு ஆதரவளித்த பிரபுக்களும் பிரபந்தமொன்று செய்தால் நலமாயிருக்கும் என்று விரும்பினர். அங்ஙனமே சில தினங்களில் அவர் நெல்லைவருக்கக்கோவை

1. வேம்பத்தூரையும் அவ்வூர் வித்துவான்களையும் பற்றிய விரிவான செய்திகளை யான் பதிப்பித்து வெளியிட்டுள்ள திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்திற் காணலாம்.

என்னும் பிரபந்தத்தை இயற்றி முடித்தார். மொழிக்கு முதலாகும் உயிரெழுத்துக்களிலும் உயிர் மெய்யெழுத்துக்களிலும் ஒவ்வொன்று ஒவ்வொரு பாட்டின் முதலில் முறையே வரும்படி அகப்பொருட்டுறைகளை அமைத்துப் பாடுவது வருக்கக்கோவையாகும். பாம்பலங்காரர் வருக்கக்கோவை, மாறன் வருக்கக் கோவை முதலியவை அவ்வகையைச் சார்ந்தனவே.

நெல்லைவருக்கக்கோவை இயற்றி நிறைவேறியவுடன் பெருமாளையர் அதனை அரங்கேற்ற எண்ணினர். பலரால் நன்கு மதிக்கப்பட்ட பண்டிதராதலின் அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற வேண்டுமென்றெண்ணிய அன்பர்கள் அதற்காவன செய்தமைத்தார்கள். பெருமாளையரும் தாம் இயற்றிய அந்நூல் சிறப்பாக அரங்கேற்றி முடியுமென்ற உவகையிலாழ்ந்திருந்தார்.

ஸ்ரீ சாலீவாடீசுவரப்பெருமான் ஸந்நிதியில் அரங்கேற்றுதற்குரிய முயற்சிகள் செய்யப்பட்டன. அரங்கேற்றும் நாள் வந்தது. உள்ளூராரையன்றி அயலூர்களிலிருந்தும் பிரபுக்களும் வித்துவான்களும் வந்திருந்தார்கள். பெருங்கூட்டத்தினிடையே பெருமாளையர் இருந்து அரங்கேற்றத் தொடங்கினர். அவருடைய மனம் மிக்க ஊக்கத்தோடு இருந்தது. காப்புச்செய்யுளை அவருடைய மாணாக்கருள் ஒருவர் வாசித்தார். அது,

(வெண்பா)

தேரோடும் வீதியெலாஞ் செங்கயலுஞ் சங்கினமும்
நீரோ டுலாவிவரும் நெல்லையே - காரோடும்
கந்தரத்த ரந்தரத்தர் கந்தரத்த ரந்தரத்தர்
கந்தரத்த ரந்தரத்தர் காப்பு

என்பது.

இதை வாசித்தவுடன் கூட்டத்தில் இருந்த ஒருவர் எழுந்து நின்று, "இக்கவியில் ஓர் ஆட்சேபம் இருக்கிறது" என்று சொன்னர். பெருமாளையருக்கு, "எடுத்தவுடனே அபசகுனம் போல இந்த மனிதன் ஏதோ சொல்லுகிறுனே" என்ற எண்ணம் வரவே அவருடைய ஊக்கம் தளர்ந்து விட்டது. ஆட்சேபஞ் செய்தவர், "வீதியெல்லாம் செங்கயலும் சங்கினமும் நீரோடுலாவி வரும் என்று பாடியிருக்கிறீரே; வீதியில் கயலும் சங்கினமும் நீரோடு ஓடுகின்றனவா?" என்றூர்.

பலகாலமாகப் பிரபுக்கள் தமிழ்க்கவிஞர்கள் முதலியவர்களுடைய நன்மதிப்பைப் பெற்று வாழ்ந்துவந்த பெருமாளையர், ஆட்சேபஞ் செய்தவருக்கு விடை கூறுவதைப் பற்றி யோசிக்க

வில்லை. அப்பொழுது 'முதன்முதலாக அரங்கேற்றத் தொடங்கின நூலுக்கு இறங்குதுறையில் நீத்தானதுபோல ஆட்சேபம் உண்டாயிற்றே! நம்முடைய நன்மதிப்புக்கு இழுக்கு வந்து விட்டதே!' என்ற எண்ணம் அவர் நெஞ்சில் தோன்றி வருத்தத் தொடங்கியது. அதனால், அவர் எல்லாவற்றையும் மறந்து திசை மயக்கம் அடைந்தவர்போல் சிறிதுநேரம் இருந்தார். ஆட்சேபத்துக்கு ஸமாதானம் சொல்ல இயலாமல் அவர் விழிப்பதாகவே அங்கிருந்தவர்கள் யாவரும் எண்ணினார்கள்.

பெருமாளையருக்குச் சிறிதுநேரம் கழித்தபிறகுதான் நாம் இன்னநிலையில் இருக்கிறோம் என்ற நினைவுவந்தது. தம்மேல் அவமதிப்பு அதிகமாகும்படி அவ்வளவுநேரம் மௌனமாக இருந்துவிட்டதற்கு வருந்தினார். அவருக்கு அந்நூலை அரங்கேற்ற மனம் இடந்தரவில்லை. ஆகையால், "கடவுளுடைய கிருபை இப்பொழுது பூரணமாக என்பக்ஷம் இல்லையென்று தோன்றுகிறது. அதனால், அரங்கேற்றம் இப்பொழுது நடைபெற என்மனம் உடன்படவில்லை. பின்பு வைத்துக்கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டு மனத்துயரோடு வீடு சென்றனர்.

வந்திருந்த யாவரும் தத்தமக்குத் தோற்றியவாறு பல விதமாக எண்ணிக்கொண்டு சென்றனர். தமக்கிருந்த நன்மதிப்புக்குப் பெருங்குறைவு வந்து விட்டதாக எண்ணி எண்ணிப் பெருமாளையர் வருந்தினர்; அவருடைய மனப்புண் ஆறவேயில்லை. சிலகாலத்துக்குப் பின்னர் அவருக்கு ஒரு குமாரர் பிறந்தார். குமாரர் பிறந்த சிலவருஷங்களுக்கப்பால் பெருமாளையர் இறந்தனர்.

2

பெருமாளையருடைய குமாரர் உரியபருவத்தில் அவ்வூரிலுள்ள வித்துவான்களிடத்தில் தமிழ்க்கல்வி கற்றுவந்தார். "குலவிச்சை கல்லாமற் பாகம்படும்" என்பதற்கேற்ப அவருக்குத் தமிழறிவு விரைவாகப் பெருகலாயிற்று. தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் நல்ல பயிற்சியைப் பெற்று விளங்கினார்; கவி இயற்றுவதிலும் பிரசங்கம் செய்வதிலும் முறையே ஆற்றலுடையவரானார். ஒருநாள் அவர் தம் வீட்டிலுள்ள சுவடிகளை எடுத்துப் பரிசோதித்து வருகையில் நெல்லைவருக்கக்கோவை கிடைத்தது. அது தம் தந்தையாரால் இயற்றப்பெற்றதென்றறிந்து அதைப் படித்துப் பார்த்து இன்புற்றார். அந்நூல் இருப்பதாகவே அதுகாறும் அவர் அறியவில்லை. அக்காலத்தில் அவருடைய தாயார் இருந்தனர். அவரிடம் அதைப்பற்றி விசாரிக்கலானார்:

குமாரர்: அம்மா! அப்பா இயற்றிய நூல் ஏதாவது உண்டா?

தாயார்: ஒரு புஸ்தகம் எழுதினர்; அதை எழுதப்போய்த் தான் அவருக்குச் சந்தோஷமேயில்லாமற் போயிற்று.

குமாரர்: அந்தப்புஸ்தகந்தானா இது?

குமாரர் தாயாருக்குக் கையிலிருந்த சுவடியைக் காட்டினர்.

தாயார்: ஐயோ, அந்தச் சுவடியை நீ ஏனப்பா எடுத்தாய்? உன்னுடைய தகப்பனர் அதனல் அடைந்த வருத்தம் போதாதா? அதை ஆற்றிலாவது கிணற்றிலாவது போட்டுவிடு; அதுதான் உன் தகப்பனரைக் கெடுக்கவந்த சனியன்.

குமாரர்: என்ன அம்மா! அப்படிச் சொல்லுகிறயே? அப்பா எவ்வளவு அழகாக இதை இயற்றியிருக்கிறர்! இந்த அருமையான நூலை இப்படிக் கேவலப்படுத்திப் பேசலாமா? தோஷமல்லவா?

தாயார்: தோஷமா! எங்களுடைய சந்தோஷமெல்லாம் போனதற்கு இதுதானே காரணம்?

குமாரர்: எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. இந்தப்புஸ்தகம் உங்களை என்ன பண்ணியது?

தாயார்: அது பழைய கதை; அதைப்பற்றி அந்தக் காலத்தில் துக்கப்பட்டது போதாதென்று இப்பொழுது வேறு சொல்லி வருத்தப்படவேண்டுமா?

குமாரர்: ஏதாயிருந்தாலும் சொல்லிவிடு; எனக்கு இந்தப் புஸ்தகத்தைப் படித்துப் பாடம் சொல்லிப் பரவச் செய்ய வேண்டுமென்ற ஆசை தோன்றியிருக்கிறது. இதை எப்போது அப்பா இயற்றினர்? எங்கே அரங்கேற்றினர்?

தாயார்: அரங்கேற்றமா! அதைப்பற்றிச் சொல்லுகிறேன், கேள்: நீ பிறப்பதற்கு முன்பே இதை அவர் பாடினர். அரங்கேற்றத்துக்காக எல்லா ஏற்பாடுகளும் செய்தார்கள். அரங்கேற்றம் ஆரம்பிக்கும்போது எவனே ஒருவன் முதற்பாட்டே தப்பு என்றுனும். அவ்வளவுதான். உடனே அவருக்கு மானத்தால் மனம் ஒடிந்து போய்விட்டது. அதன்பிறகு அவருக்குப் பழைய சந்தோஷம் வரவேயில்லை. அரங்கேற்றமே நடக்கவில்லை. அந்தச் சுவடியையும் மூலையிலே போட்டுவிட்டார்.

குமாரர்: முதற்பாட்டிலே என்ன தப்பு? ஏதாவது ஞாபகம் இருக்கிறதா?

தாயார்: அவர் ஒன்றும் பேசவேயில்லை. யாரோ சொல்லிக் கொண்டிருந்தார்கள்; அதுதான் என்காதில் விழுந்தது: வீதியெல்

லாம் மீனும் சங்கும் நீரோடு ஓடுமா என்று அவன் கேட்டானும்; இதுதான் ஞாபகம் இருக்கிறது.

குமாரர் ஒருவகையாக ஆட்சேபம் இன்னதென்பதை ஊகித்து அறிந்தனர். பிறகு முதியவர்களிடம் விசாரித்தும் தெரிந்து கொண்டார். அவர் மீண்டும் மீண்டும் அந்தநூலைப் படித்துப் படித்து இன்புற்றார். எவ்வாறேனும் தம் தந்தையாருக்கு இருந்த இகழ்ச்சியை நீக்கி விடவேண்டுமென்ற உறுதியை மேற்கொண்டார். அந்த நூலைத் தாமே அரங்கேற்றி அதன்பால் யாதொரு பிழையுமின்மையை எடுத்துக்காட்ட வேண்டுமென்றெண்ணினர்.

நெல்லையிலுள்ள அன்பர்கள் முயற்சியினல் ஸ்வாமி ஸந்நிதியில், அரங்கேற்றுவதற்காக ஒரு பெரியசபை கூட்டப் பட்டது. [1]முதற்பாட்டுக்கு அவர் அர்த்தம் சொல்லத்தொடங்கினர்; "இது பிழையுள்ளதென்று முன்பு ஒருவர் ஆட்சேபிக்க, எந்தையார் மனவருத்தத்தால் அரங்கேற்றவில்லையெனக் கேள்வியுற்றேன். இதில் எவ்வகைப் பிழையும் இல்லை. வீதியெல்லாம் தேரோடும்; செங்கயலும் சங்கினமும் நீரோடுலாவிவரும்; இத்தகைய நெல்லையென முடிவு கொள்ளவேண்டும். இவ்வளவு அருமையான நூலை இயற்றிய என் தந்தையாருக்கு இந்த ஆட்சேபத்துக்கு விடைதெரியாமல் இருப்பதற்கு நியாயமில்லை. 'மயிர்நீப்பின் வாழாக் கவரிமாவன்னர்' என்பதற்கேற்ப மிக்க மானமுடையவராதலின் எல்லாவற்றையும் மறந்து துன்பக்கடலில் ஆழ்ந்தார். ஆட்சேபித்த பொறாமைக்காரர் யாரோ தெரியவில்லை; அவ்வொருவரு

---

1. இச் செய்யுளின் பிற்பகுதியின் பொருள் வருமாறு:—கார் ஓடும்-கருநிறம் பரவிய, கந்தாத்தர் - திருக்கழுத்தையுடையவரும், அந்தாத்தர் - ஞானகாயத்தையே திருமேனியாகக் கொண்டவரும், கந்து அாத்தர் - பற்றுக்கோடாகிய செம்மைநிற முடையவரும், அம் தாத்தர் - திருமுடியில் நீரைத் தாங்கியவரும், கந்தர் அத்தர் - முருகக்கடவுளின் தந்தையாரும், அம் தாத்தர் - அழகிய தகுதியையுடையவருமாகிய சிவபெருமான், காப்பு - காவல் புரிந்து வீற்றிருக்கும் இடம்.

நெல்லை காப்பென்று முடிக்க.

அத்தலத்துக்கு உரியதாக அடியேன் இயற்றும் நூல் இனிது முடியும் வண்ணம் பாதுகாத்தருள்வரென்பது கருத்து.

அந்தரம்-ஆகாயம்; கந்து-பற்றுக்கோடு; அரத்தம்-சிவப்பு; அம்-நீர், அழகு; தரம்-தகுதி.

இச்செய்யுளின் பொருள் என்னுடைய ஆசிரியர் மகாவித்துவான் ஸ்ரீமீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் முன்பு தெரியவந்தது.

டைய செயலால் அக்காலத்தில் இருந்த பலரும் இந்நூலின் அருமை பெருமைகளை யறிந்து இன்புறக்கூடவில்லை. என்செய் வது!" என்று சொல்லிவிட்டு, மேலே நூல் முழுவதற்கும் விரிவாகப் பொருள் கூறி அரங்கேற்றி நிறைவேற்றினர். அந்நூலின் சுவையில் ஈடுபட்டவர்கள், "இதுகாறும் இந்த நூலை அறியாமல் இருந்தோமே" என்றெண்ணி இரங்கினர்கள். மிக்க முதுமையை யுடையவர்கள், " இவ்வளவு அரிய நூலைச் செய்தும் அதை நாங்களெல்லாம் தெரிந்து இன்புறவும் அதனல் உண்டாகும் பயனைப் பெருமாளையர் அடையவும் இயலாமற் போயிற்றே" என்று வருந்தினர். "புலிக்குப் பிறந்தது பூனையாகு மா? முன்னே முளைத்த காதினிலும் பின்னே முளைத்த கொம்பு வலிதென்பதற்கு இலக்கியம் போன்றவர் இந்த இளைய வித்து வான்" என்று அவரை வித்துவான்கள் கொண்டாடினர். யாவரும் மகிழ்ந்து பல பெருஞ்சிறப்புக்களை அவருக்குச் செய்தனர்.

அவர் தம் வீட்டிற்குவந்தார். அவருடைய தாயார், அரங் கேற்றம் நிறைவேறியதும் தம்குமாரர் சிறப்புப்பெற்றதுமாகிய வற்றை முன்பே அறிந்தவராய் எல்லையில்லாத உவகையுடன் அவர் வரவை எதிர்நோக்கி யிருந்தார். வரும்போதே குமாரர், "அம்மா! அப்பாவுக்கு இருந்த குறையை நீக்கிவிட்டேன்" என்று சொல் லிக்கொண்டு வந்தார்.

"என் சிங்கமே! இப்பொழுது அவர் இருந்து சந்தோஷப் படக் கொடுத்துவைக்கவில்லையே!" என்னும் பொழுதே தாயாரின் கண்களில் ஆனந்த பாஷ்பமும் துக்கக்கண்ணீரும் கலந்து சிந்தின.

[இந்த அரியசெய்தியை எனக்குச் சொல்லியவர், சேலத்தைச் சார்ந்த-சாருவாயென்னுமூரிலிருந்த கதிர்வேற்கவிராயரென்பவர்.]

இராமாயணமும் தமிழ்வழக்குக்களும்

மு. இராகவையங்கார்

(20-ஆம் பக்கத் தொடர்ச்சி)

5. பிராட்டி கழற்றியிட்ட அணிகளும் குரங்கினமும்

இராவணன் சீதாதேவியைப் பற்றிக்கொண்டு தேரோடு போம்போது, ரிசியமுகபர்வதத்தருகில் பிராட்டி தன் ஆபரணங்களைக் கழற்றி யெறிய, அவற்றை அங்கிருந்த வானரவீரர்கள் கண்டு பொறுக்கிச் சேமித்து வைத்திருந்தசெய்தியைக் கம்பநாடர்—

"உழையரி னுணர்த்துவ துளதென் றுன்னியோ
குழைபொரு கண்ணினாள் குறித்த தோர்கிலம்
மழைபொரு கண்ணிணை வாரி யோடுதன்
இழைபொதிந் திட்டனள் யாங்க ளேற்றனம்.

"வைத்தன மிவ்வழி வள்ளல் நின்வயின்
உய்த்தன தந்தபோ துணர்தி யாலெனக்
கைத்தலத் தன்னவை கொணர்ந்து காட்டினன்
நெய்த்தலைப் பால்கலந் தனைய நேயத்தான்."

என்று பாடுவர். இச்செய்தியைப் பெரிதும் ஒத்தே வான்மீகருங் கூறுகின்றார். இனி, பிராட்டி கழற்றியிட்ட அவ்வணிகளைப்பற்றிய அரியசெய்தியொன்று முற்காலத்தே வழக்கிலிருந்த தென்பது புறநானூற்றால் அறியப்படுகின்றது. வறியரான புலவரொருவர் தம் குடும்பத்துடன் சென்று வள்ளலான சோழனொருவனைக் கண்டு அவனால் பெரிதும் உபசரிக்கப்பட்டு அணிகலமுதலிய பரிசில் அளிக்கப் பெற்றபோது, அவனுதவிய ஆபரணங்களை முறைதெரியாமல் அவ் வெளியபுலவரின் குடும்பத்தார் தம்முறுப்புக்களில் மாறியணிய, அதுபற்றி அரசவையில் விளைந்த பெருநகையை அப்புலவரே—

"எஞ்சா மரபின் வஞ்சி பாட
எமக்கென வகுத்த வல்ல மிகப்பல
மேம்படு சிறப்பி னருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே; அதுகண்டு
இலம்பா டுழந்தவென் னிரும்பே ரொக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்
அரைக்கமை மரபின மிடற்றியாக் குநரும்
மிடற்றமை மரபின அரைக்கியாக் குநரும்
கடுந்தே றிராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதாணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்கு
அறாஅ வருநகை யினிதுபெற் றிகுமே"

(புறநா. 378)

என்று கூறுகின்றார். இப்பாட்டில், பிராட்டி இடைவழியில் போகட்ட அணிகளை வானரர்கள் கண்டெடுத்து அவற்றை அணியுமுறை யறியாமல் விரலணிகளைச் செவியிலும், செவியணிகளை விரலிலும், அரையணிகளைக் கழுத்திலும், கழுத்தணிகளை அரையிலுமாக மாறியணிந்தனர் என்ற இராமாயணச் செய்தியை உவமைப்படுத்தியிருப்பது காணலாம். இவ்வரியசெய்தி வேறெங்குங் காணப்படாததாகும். "என்னுடன் ஐந்துபேர்கள் பர்வதத்தின் தாழ்வரையில் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்து, அவள் (சீதை) மேலாடையையும் அழகிய ஆபரணங்களையும் கீழே போகட்டாள். இராகவ! அவற்றை நாங்கள் எடுத்துக் கொண்டு போய்க் காப்பாற்றிவைத்திருக்கிறோம்" என்று, சுக்கிரீவன் இராமபிரானிடம் சொல்லியதாக வான்மீகி முனிவர் கூறுவர். அதனால், குரங்குக்கூட்டங்கள் அவ்வணிகளைக் கண்டெடுத்தன என்பதும், அவற்றைப் பிறர் பரிகசிக்கும்படி மாறியணிந்துகொண்டன என்பதும் தமிழ்நாட்டில் வழங்கிய பழைய சரித்திரவழக்காகவே தெரிகின்றன.

6. ஆலின்கீழ் இராமபிரான் புரிந்த மந்திராலோசனை

மேற்கூறிய வானரச்செய்திபோலவே, வான்மீகிராமாயணத்தில் வழங்காத மற்றொரு வரலாறு சங்கச்செய்யுளிற் பயில்வதாம். அஃதாவது:—தனுஷ்கோடிக் கடற்கரையில் ஆலமரமொன்றின் கீழ் இராமபிரான்தங்கி மேல்நடத்தற்குரிய யுத்தகாரியங்களைப் பற்றி வானரவீரர்களுடன் ஆலோசனை புரிந்தனரென்றும், அப்போது அவ்வாலில்வாழ்ந்த பறவைகளின் கலப்போசை அதிகமாகி

ஒருவர் சொல்வது மற்றவர்க்குக் கேட்காதபடி இடையூறுவிளைத்தனவாக, பெருமான் அவற்றைத் தம் திருக்கையாலமர்த்தி அவ்வொலிமுழுதும் அடங்கும்படி செய்தனரென்றும் கடுவன் மள்ளனார் என்ற பழம்புலவர் உவமைமுகத்தாற் கூறுவதேயாகும். இதனை—

"வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவ மிரங்கு முன்றுறை
வெல்போ ரிராமன் அருமறைக் கவித்த
பல்வீ ழாலம் போல
ஒலியவிந் தன்றுலிவ் வழுங்க லூரே."

(அகம். 70)

என்ற அகநானூற்றடியால் அறிக. இக்கதை இராமாயண நூல்களிற் காணப்படாத தொன்றாகும். ஆயினும், சேதுபுராணத்தில் இம் மந்திராலோசனைச்செய்தி அடியில் வருமாறு கூறப்பட்டுளது. அஃதாவது:—இராமன் கடற்கரையில் முற்கூறியவாறு வானரவீரர்களுடன் ஆலோசனை புரியும்போது சமுத்திரகோஷம் அதற்குப் பெருந்தடையாயிருந்தமையால் முனிவுற்று அதனை அடங்கச்செய்தனர் என்பதாம். இவ்வரலாற்றைச் சேதுபுராணம் அமுததீர்த்தச்சருக்கத்தில் நிரம்பவழகியதேசிகர்—

"சானகி தன்னை யுன்னித் தசமுகத் தரக்கற் கோறற்
கானகா ரியங்கள் செய்வா னவனிருந் தாயும் வேலை
மீனமார் தரங்க வேலை மிக்கெழு குரைப்பி னுள்ளே
தானடங் குற்றுத் தம்மிற் சாற்றிய மாற்றங் கேளார்.

"ஆயின ரவையி னுள்ளோ ரஃதுணர்ந் தடலி ராமன்
ஏயெனச் சீறி வல்லே யிருபிரு குடிமு ரிப்பால்
ஓயெனக் குறிப்பி னர்க்கு முததியை நிறுத்தா னத்தால்
மேயதே காந்த ராம விழுப்பெய ரப்ப திக்கே."

என்று பாடுதலால் உணர்க. இராமேச்சுரத்தீவில் தனியே கோயில்கொண்டுள்ள ஏகாந்தராமமூர்த்தி சம்பந்தமாக இந்த ஐதிகம் கூறப்படுவதுபோலவே, நவபாஷாணம் என்ற தேவிபட்டணத்திலும் இவ்வழக்கு உள்ளது. அவ்வூரி லுள்ள சமுத்திரம் கரைக்குச் சிறிது தூரம்வரை அலையொலியில்லாமல் அடங்கியிருப்பதற்கு இராமபிரானிட்ட திருவாணையே காரணமாகக் கூறப்படுகின்றது. தனுஷ்கோடிக்கரையில் ஆலமரத்தின் ஒலியடங்கச்செய்ததற்கும் சமுத்திர வொலியை அடக்கினதற்கும் ஒருபுடை ஒற்றுமை இருத்தலை இச்செய்திகளினின்று நாம் தெரியலாம். இதனால் மந்திராலோசனைக்குத் தடையாயிருந்த

தொன்று இராமபிரானால் ஒலியடங்கச் செய்யப்பட்டது என்ற வரலாறு தமிழ்நாட்டில் முற்காலத்தும் பிற்காலத்தும் பெருவழக்குப் பெற்றிருந்ததென்பது பெறப்படும்.

7. "குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறை"

சங்கப்புலவராகிய சீத்தலைச்சாத்தனார் மணிமேகலையிற்கூறியது இத்தொடர். 'குரங்குகளால் வேலைசெய்யப்பட்ட கடலையுடைய அழகிய கன்னியாகுமரித் தீர்த்தத்துறை' என்பது இதன் பொருளாம். இவ்வாறு வானரசம்பந்தம் பெறக் குமரித்துறையை அப்புலவர் விசேடிப்பதால், அத்துறையைச் சேதுமூலமாக முன்னோர் வழங்கி வந்தனர் என்பது தெரியலாகும். சேதுபதிகள் ஆட்சிக்குரிய சீமையில் தர்ப்பசயனம் என்ற திருப்புல்லாணியினின்று தொடங்கும் இராமஸேதுவைக் கன்னியாகுமரிக்குரியதாகக் கூறுவது எவ்வாறு பொருந்தும் என்ற சங்கை இங்கு எழுதல் இயல்பே. இதற்குக் கன்னியாகுமரித் தலபுராணம் முதலியன தக்க விடைதருவனவாம். இராமபிரான், பிராட்டியின் மீட்சியையும் இராவணவதத்தையுங் கருதித் தென்சமுத்திரமுனைக்கு வந்து ஆங்குவாழும் துர்க்காதேவியை வணங்கி, கடலில் சேதுபந்தனஞ்செய்து அதன் வழியே தம்பெருஞ் சேனை செல்லவும், சேது மூலமான குமரியிலும் கிழக்கே தேவிபட்டணத்திலும் இருந்து அத்திருவணையைப் பாதுகாக்கவும் வேண்டி, அவ்வாறே தேவியின் வரம்பெற்றனர் என்று அக்குமரித்தலபுராணத்துச் சேதுமூலவரலாற்றுச் சருக்கம் கூறுகின்றது. அப்புராணம் பாடிய சங்கர நாவலர் என்ற புலவர் அதுபற்றிக் கூறும் செய்யுட்கள் வருமாறு:

"அடலுடை யிராம னென்பா னழிகு ழிலங்கைக் கேகக்
கடலுடைச் சேது வொன்று கட்டிடக் கருத்தி லுன்னி
மடலவிழ் மாலைச் செங்கை மாதவக் கன்னி வாழும்
திடலுறு குமரி யென்னுந் தென்கடற் கரைக்கண் வந்தான்.

* * *

"கருதிடுஞ் சேது வொன்று கட்டவுங் கட்டுஞ் சேது
வருமிடை யூறொன் றின்றி வழிக்கொண்டு செலவு மற்றப்
பொருவலி யிராவ ணாதி யரக்கரைப் பொருது கொல்வான்
பெருவலி பெறவுந் தந்தே னென்றவள் பின்னுஞ் சொல்வாள்.

"சேதுவின் கீழ்பா லாய தேவிபட் டணத்துக் கிப்பால்
ஓதிய மேல்பாற் சேது மூலமா யுள்ள தாய
ஆதியாங் குமரி யென்னு மத்தலத் திருந்தி யானும்
பேதியா ததனைக் காத்தல் செய்குவன் பேணிப் பேணி.

"அவ்வரங் கொள்ளப் பெற்ற வடல்வலி யிராம னுைம்
செவ்விதிற் பூசித் துள்ள தேவிவாழ் குமரி தன்னைத்
திவ்விய சேது மூல மென்பது செய்யப் பெற்ற
தெவ்வமி லத்த லத்தின் பெருமையா ரியம்ப வல்லார்.

"ஆங்குள விராம சேதுக் காதியாஞ் சேது மூலம்
ஈங்கிது."

இவற்றால் குமரித்துறையை இராமசேது தொடங்குமிடமாக முன்னோர் வழங்கியது உண்டென்பது தெரியலாம். இன்றும் கன்யாகுமரித்துறையில் நீராடுவோர் ஸங்கல்பக்கட்டுரைகளிலே "ஆதிஸேதோர் கன்யாகுமரி க்ஷேத்ரே மாதுர்பிதுர்தீர்த்தே" என்று கூறுதலையும், கன்யாகுமரி ஆதிஸேதுவாகவும் தனுஷ்கோடி மத்யஸேதுவாகவும் சோணாட்டுக் கோடிக்கரை அந்த்யஸேதுவாகவும் கருதப்படுவதையும் நாம் கேட்டறியலாம். இத்தகைய வழக்கே சாத்தனார்காலத்தும் பிரபலமாயிருந்ததென்பதனை, 'குரங்கு செய் கடற் குமரியம் பெருந்துறை' என்றதொடர் குறிப்பிடவல்லது.

"நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடலரு முந்நீ ரடைத்த ஞான்று
குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை யெல்லாம்
அணங்குடை யளக்கர் வயிறுபுக் காங்கு." (மணி. 17, 10-4)

என, வானரங்கள் சேதுகட்டிய செய்தியை வேறிடத்தும் சாத்தனார் உவமை முகத்தாற் கூறுதல் காண்க. தருப்பசயனமாகிய திருப்புல்லாணியைச் சேதுமூலம், ஆதிஸேது என்று கூறும் வழக்கு நெடுக உண்டு. தேவிபுரம் என்ற தேவிபட்டணத்தைச் சேதுமூலமாகச் சேதுபுராணம் கூறுமாயினும், திருவணைக்கு அப்பட்டணம் உரியதன்றென்பதும், அதன்தெற்கே 15 மைலிலுள்ள திருப்புல்லாணியே சேதுமூலமாவதென்பதும் யாவரும் நன்கறிவர். "ஸேதுமூலே புல்லாரண்யக்ஷேத்ரே" என்று அங்கே தீர்த்தத்துறை மூழ்குவோர் சங்கல்பம்செய்துகொள்வது இன்றும் உள்ளது. இவ்வாறு திருப்புல்லாணியைத் திருவணை தொடங்கும் ஆதிஸேதுவாக வழங்குவதுபோலவே, கன்யாகுமரியும் வழங்கப்பட்டதென்க. அத்திருவணை மேற்கே கன்னியாகுமரியிலிருந்து தொடங்குவதென்ற வழக்கும் உள்ளமையால், சேதுமூலமாகக் குமரித்துறையை முன்னோர் கொண்டது ஏற்புடையதென்றே சொல்லலாம். இராமபிரான் மகேந்திரபர்வத சிகரத்தினின்று சமுத்திரத்தைப் பார்த்தாரென்றும், பின்பு அவர் மலயபர்வதத்தை யடைந்து அதினின்றிறங்கியதும் சமுத்திரக்கரையை அடைந்தனரென்றும், அச் சமுத்திரதீரத்திலிருந்தே சேதுபந்த

னத்தைப்பற்றி வானரவீரர்களுடன் ஆலோசனை புரிந்தாரென்றும் வால்மீகி கூறுவர். இதனால் மலயபர்வதத்தை அடுத்ததே, அப்பிரான் அணைகட்ட எண்ணிய சமுத்திரப்பகுதி என்பது பெறப்படும். படவே, சேதுமூலமாகக் குமரியைக்கூறும் பழையவழக்குக்கு இராமாயணத்திலும் குறிப்புண்மை காணலாம். இந்தச் சேது, கிழக்கே திருப்புல்லாணி தனுஷ்கோடி வழியாகச் சென்று இலங்கை சேர்வதால், பலவெள்ளங்கொண்ட வானரசேனை சென்ற மார்க்கம் அதுவே யென்பதும், இராமபிரான் அவ்வழியேவந்து தனுஷ்கோடியில்தங்கி, (அகநானூறும் சேதுபுராணமும் கூறியவாறு) மேற்கொண்டு போர்க்குரிய ஆலோசனைகளை அங்குநடத்தலாயினர் என்றும் மேற்சொன்ன செய்திகளை யெல்லாம் பொருந்த அமைத்துக்கொள்வது தகும். இவ்வாறன்றி—

𑌦𑌶𑌯𑍋𑌜𑌨𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌂 𑌶𑌤𑌯𑍋𑌜𑌨𑌮𑌾𑌯𑌤𑌮𑍍 ।
𑌦𑌦𑍃𑌶𑍁𑌰𑍍𑌦𑍇𑌵𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾 𑌨𑌲𑌸𑍇𑌤𑍁𑌂 𑌸𑍁𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑌮𑍍 ॥

(வான்மீகராமா. யுத்தகாண். ஸர்க். 22. சுலோ. 74)

"எய்த யோசனை யீண்டொரு நூறிவை
அய்யி ரண்டி னகல மமைந்திடச்
செய்த காலணை யென்றிது செப்பினர்
வய்ய நாதன் சரணம் வணங்கியே" (கம்பரா. சேதுபந். 71)

என்ற முன்னோர் திருவாக்குக்களின்படி, 100 யோசனை நீளமும், 10 யோசனை அகலமும் உடையதாக இராமஸேது அமைக்கப்பட்டதென்று தெரிவதால், குமரிதனுஷ்கோடிகள் 80-மைல் அகலமுள்ள ஸேதுவால் இணைக்கப்பட்டு ஏறக்குறைய ஒன்றாயிருந்ததென்று கொள்ளினும் அமையும். இனி, சேது மூலமான குமரித் துறைபற்றிய மற்றொரு விஷயமும் நாம் இங்கே குறிப்பிடற் குரியது.

தனுஷ்கோடித்துறையைப்பற்றி, மேற்கூறிய அகநானூற்றுத் தொடரன்றி, வேறு பழைய தமிழ்ப் பிரமாணமொன்றுமே காணப்பட வில்லை. அக்கோடித்துறை, பிற்காலத்துப் போல முற்காலத்தும் பிரபலமாயிருந்திருப்பின், பாவவிமோசனமுதலியன கருதிப் பலருஞ்சென் றாடிவந்த புண்ணிய நீர்த்துறையாகச் சங்கநூல்களில் அது மிகுதியும் கூறப்பட்டிருக்கும். அவ்வாறன்றிக் குமரித்துறையே அத்தகைய சிறப்பை முற்காலத்தில் அடைந்திருந்ததாகச் சங்கச்செய்யுள்பலவும் ஒருமுகமாகக் குறிப்பிடுதல் சிந்திக்கத்தக்கது. பரதகண்டத்தில் பஞ்சமாபாதகம் புரிந்தவர்

களும், குடிக்குற்றப்பட்டோரும், பிறரும் தம் பாவங்கழுவவேண்டி யாத்திரையாகப் பெருந்திரளுடன் வந்து பொதியமலையை வலங்கொண்டு இக்குமரித்துறை சென்று நீராடிப்போந்தன ரென்ற செய்தியை—

"மாமறை முதல்வன் மாடல னென்போன்
மாதவ முனிவன் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து
தமர்முதற் பெயர்வோன்." (சிலப். 15, 12—1)

"மாமுனி பொதியின் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை யாடி மீள்வோன்." (ஷை 27, 68-9)

"பழவினைப் பயத்தாற் பிழைமண மெய்திய
எற்கெடுத் திரங்கித் தற்றக வுடைமையின்
குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறைப்
பரந்துசென் மாக்களொடு தேடினன் பெயர்வோன்."
(மணி. 5, 35-8)

"பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து
கொண்டோற் பிழைத்த தண்ட மஞ்சி
தென்றிசைக் குமரி யாடிய வருவோள்." (ஷை 13, 5-7)

"பார்ப்பார்க் கொவ்வாப் பண்பி னொழுகி
காப்புக்கடை கழிந்து கணவனை யிழந்தேன்
தெற்கட் குமரி யாடிய வருவேன்." (ஷை 13, 80-4)

"இமயப் பொருப்பகத் தீராண் டுறைந்தபின்
குமரித் தீர்த்த மரீஇய வேட்கையின்
தருமயாத் திரையெனத் தக்கிணம் போந்துழி."
(பெருங்கதை, 2, 36,236-8)

"குண்டுநீர்க் குமரித் தெண்டிரை யாடிய
போயின னென்னும் பொய்யுரை பொத்தி." (ஷை 2, 20, 82-3)

"வந்தவர வென்னையென வாட்கண்மட வாய்கேள்
சிந்தைநலி கின்றதிரு நீர்க்குமரி யாட
வந்திலதி ரையபய னென்னைமொழி கென்றாள்" (சீவக. 2020)

"குமரியாடிப் போந்தேன், சோறு தம்மின்" (தொல். சொல்.)

என்பன முதலிய முன்னோர் கூற்றுக்களால் உணர்க. இவையன்றிச் சங்ககாலத்தில் இத்தேசத்துக்கு வந்துசென்ற யவனாசிரியரெழுத்தாலும் இச்செய்தியை நன்கறியலாம். பெரிப்ளுஸ் (*Periplus*) நூலாசிரியர், இக்குமரித்துறையை இல்லறத்தாரும் துறவிகளுமான ஆண்பாலர் பெண்பாலரெல்லாம் பாவவிமோசனார்த்தம்

பெருங்கூட்டமாக நீராடிவருமிடமாகக் கூறுதல்காண்க (*Tamils 1800 years ago, p 35*). இக்காலத்து இராமேச்சுர யாத்திரிகர் போல, முன்னுளில் குமரியாடச்செல்வோர் "குமரியாடிப் போந்தேன் சோறுதம்மின்" என்று பிறரைக்கேட்டால் அவர்க்குத் தவருது உணவிட்டு உபசரிப்பது நாட்டின் பெருவழக்காயிருந்தது. "அறங்கெடுத்தார் கங்கையிடைக் குமரியிடைச் செய்தார்செய்த பாவத்துப் படுவார்களாகவும்" எனத் தருமங்களைக் கெடுப்பவரைப் பற்றி வழங்கும் சாஸனத்தொடரும், வடக்கே கங்கைபோலத் தெற்கே பிரபலம்பெற்ற தீர்த்தத்துறையாயிருந்தது குமரியே என்பதைப் புலப்படுத்தக்கூடியது. இவ்வாறு சேதுமூலமாகக் குமரித்துறை முன்னோராற் கருதப்பட்டமைபற்றியே 'குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறை' எனச் சாத்தனாராற் கூறப்பட்டதென்பதும் அதனால் 'ஆஸேதுஹிமாசலம்' என்ற வடமொழித் தொடர்க்கு, 'குமரி முதல் இமயம்வரை' என்று, பழைய வழக்கிற் கேற்பப் பொருள்கொள்வதும் இயையும் என்பதும் அறியத் தக்கன.

ஆச்ரமங்களின் மேன்மை

'இந்தியாவின் உண்மையான நிதி அதன் ஆச்ரமங்களிலேயே உள்ளது' என ஸாது வாஸ்வானி சமீபத்தில் ஓர் உபந்நியாசத்தின் பொழுது பம்பாயில் கூறினர். இந்தியாவின் முன்னைய மகோந்நத பெருமைக்கு இதன் பண்டைய ஆச்ரம வாழ்க்கையே காரணமாகும். தற்காலத்தில் பல பெரிய நகரங்கள் உண்டாயிருக்கின்றனவாயினும், அவை நரகத்திற்கு ஒப்பிடத் தக்கனவாகவே யுள்ளன. கூட்டமும், காதையடைக்கும் இயந்திரங்கள், மோட்டார் முதலியவற்றின் சப்தமும் சகிக்க முடிவதில்லை. அநாவசியமான உணர்ச்சிகளை மூட்டும் ஸினிமாக்களும், காட்சிகளும், நாடகங்களும் மிகுந்து நிற்கின்றன. ஆனல் இவ்வித வாழ்க்கையில் அந்தரங்க நிலை, அதாவது ஆத்மார்த்த வாழ்வு இல்லவேயில்லை. இந்தியாவின் உண்மையான அந்தஸ்து பணப் பெருக்கத்தினல் ஏற்பட்டதல்ல. அதன் ஆத்மீக வாழ்க்கையே சிறப்புறச்செய்தது. ஆச்ரமவாழ்க்கை ஆத்மசக்திக்கு உற்பத்தி ஸ்தானம். கட்டுப்பாடு, ஸாதனமுறை, தபோசக்தி முதலியவைகள் இங்கேதான் உண்டாகமுடியும். மேனாட்டின் ஜடதத்துவ வாழ்க்கை நெறிக்கும், இந்தியாவின் ஆத்மார்த்த நெறிக்கும் மிகுந்த வித்யாஸம் இருக்கிறது.

—கல்பதரு.

திருக்குற்றாலக் குறவஞ்சி

ராவ்சாகிப் வே. ப. சுப்பிரமணிய முதலியார், ஜி. பி. வி. ஸி.

(6-ஆம் தொகுதி, 309-ஆம் பக்கத்தொடர்ச்சி)

திரிகூடநாதர் பவனிவருணனை

திரிகூடநாதர் குற்றால நன்னகர வீதியிலே பவனிவரும் காட்சியைக் கண்டு களித்தற்குத் தேவர்கூட்டமும் முனிவர் கூட்டமும் அசுரர்கூட்டமும் மனிதர்கூட்டமும் வந்து கலந்து நெருங்கின. அக்காட்சியை இமையாத கண்ணுடைய தேவர்கள் இடைவிடாமற் காணல் போல, மற்றவர்களும் காணும் ஆசையால் கண்கொட்டாமல் பார்ப்பதாய் இமையாராயினர் (இமையார்—தேவர்கள், கண் இமையாதவர்.) அதனால், இயல்பாக இமையாத தேவர் இவர், தற்சமயத்தில் இமையாமலிருக்கிற மனிதர் முதலியோர் இவர் எனப்பகுத்தறியக் கூடாதபடி பவனியின் வைபவமிருந்ததென்னும் இனிய கருத்துடைய கவிப்பகுதி வருமாறு:—

*(ப) அண்டர் கூட்டமும் முனிவர் கூட்டமும்
அசுரர் கூட்டமும் மனிதராம்
தொண்டர் கூட்டமும் இமைப்பிலாரெனச்
சூழ்ந்து தனித்தனி மயங்கவே. (4)

பவனி காணவரும் பெண்களின் வருணனை

பல பெண்கள் பவனி காணவரும் அவசரத்தில் ஒருகைக்கு வளையல் அணிந்து மறுகைக்கு அணியாமலும் ஒரு கண்ணுக்கிட்ட மையோடும் மறுகண்ணுக்கிட எடுத்த மையோடு தோன்றும் கையோடும் தம்மை மறந்தவராய் ஓடிவந்தார்களென்று நகைச் சுவைப் புலப்படக் கூறுவது அடியில் வருவது:—

(7) ஒருகைவளை பூண்டபெண்கள், ஒருகைவளை பூணமறந்
தோடுவார், நகைப்பவரை நாடுவார்; கவிழ்வார்,
கருதுமனம் புறம்போக, ஒரு கணுக்கு மையெடுத்த
கையுமாய், ஒருகண் இட்ட மையுமாய் வருவார். (6)

---

*தொடக்கத்தில் குறித்த எண்கள் தெரிந்தெடுத்த கவிகள் அல்லது கவிப்பகுதிகளின் வரிசை எண்களாகவும் முடிவிற்குறித்த எண்கள் அச்சுப் புத்தகத்திலுள்ள கவிகளின் எண்களாகவும் இருத்தல் காண்க.

இந்நாடக நாயகியாகிய வசந்தவல்லி பந்தடித்தல்

'பெண்ணுக்குப் பெண்மயங்கும்' பேரழகுடைய வசந்தவல்லி திரிகூடநாதர் பவனிவரும்போது வீதியிலே,

(8) நத்தணி கரங்கள் சேப்ப நாலடி முன்னே ஓங்கிப்
பத்தடி பின்னே வாங்கிப் பந்தடி பயில்கின் றாளே. (10)

[நத்து—சங்கு; சங்குவளையலுக்கு ஆகுபெயர். முன்னே யோங்கி—முன்னேறிச்சென்று. பயிலல்—பழகல்.]

(9) இந்திரை யோஇவள், சுந்தரி யோ, தெய்வ
ரம்பையோ, மோகினியோ, மனம்
முந்தியதோ, விழி முந்தியதோ, கரம்
முந்திய தோவெனவே, உயர்
சந்திர சூடர் குறும்பல வீசுரர்
சங்கணி வீதியிலே, மணிப்
பைந்தொடி நாரி வசந்தஒய் யாரிபொற்
பந்துகொண் டாடினளே. (11)

[இந்திரை—இலக்குமி. சுந்தரி—இந்திராணி. சந்திரசூடர்—சந்திரசேகரர்; சிவன். குறும்பலவு—குறும்பலா; குற்றாலத்தல விருக்ஷம். நாரி—பெண்.]

தடித்த எழுத்திலுள்ள பகுதி சிறந்த கவிநயமுடையது.

வசந்தவல்லி மையல் கொள்ளல்

வசந்தவல்லி திரிகூட நாதரைக் கண்டு மோகங்கொண்டு,

(10) வாகனைக்கண் டுருகுதையோ, ஒரு
மயக்கமதாய் வருகுதையோ,
மோகமென்ப தீதுதானோ? இதை
முன்னமேநான் அறிவேனோ? (17)

[வாகு—அழகு. வாகன்—அழகன்.]

என்று தோழியரிடம் சொன்னாள்.

முதல் முதற் பார்த்தவுடனே முடிவான மோகங்கொண்டு விடலும் (*Love at first sight*) மோகத்தை அறியாதவர் அறிந்தபோது உறுவதாகிய கன்னிக்காம வருணனையும் (*Description of maiden love*) அடங்கிய இந்தக்கண்ணியில் தடித்தவெழுத்திலுள்ள பகுதி, தன்மை நவிற்சியணிக்குச் சிறந்த உதாரணமாயிருத்தல் கவனிக்கத்தக்கது.

(11) வெள்ளி விடையில் வியாளம் புனைந்தாரைக் கண்டு சிந்தை
நள்ளிய திங்களை ஞாயிறு போலக்கண் டேனே.
எள்ளள வூணும் உறக்கமும் இல்லாரைக் கண்டு நானும்
ஒள்ளிய வூணும் உறக்கமும் அற்றுவிட் டேனே. (27)

[வெள்ளி விடை—வெண்மையான இடபவாகனம். வியாளம்-பாம்பு. நள்ளிய—விரும்பிய. ஒள்ளிய—நல்ல; ஒண்மை—நன்மை (நாமதீப நிகண்டு 610.)]

இது, பாங்கிக்குக் கூறியது. முன்னிரண்டடியில், 'வெள்ளி முதலிய நான்கு வாரங்களையும் ஒரொழுங்குபடுத்திக் கூறிய இயல்பு காண்க.' பின்னிரண்டடியில், 'தெய்வமாதலால் திரிகூட நாதருக்கு ஊணும் உறக்கமு மில்லை, மையலானதால் எனக்கும் ஊணுறக்க மில்லை' என்ற நயம் நோக்கத்தக்கது.

வசந்தவல்லி பாங்கிச்குக் கூறியது

(12) அஞ்சு தலைக்குள் ஆறுதலை வைத்தார்—எனது மனதில்
அஞ்சு தலைக்கோர் ஆறு தலைவையார். (32)

[தலைக்குள்—தலையில். ஆறு—கங்கை யாறு. தலை—முதன்மை (யாக). அஞ்சுதலை யென்பதில் ஐகாரம் சாரியை. ஆறு தலை—(பயம்) தணிதலை, மனச் சமாதானத்தை. அஞ்சு, ஆறு, தலை என்பவைகளை விசித்ரமாக உபயோகித்த கவித்திறம் காண்க.]

(13) தேவர் துரைதன் சாபம் தீர்த்தவர், வன்ன மாங்குயிற்
சின்னத் துரைதன் சாபம் தீர்க்கிலார்.
எவ ரும்புகழ் திருக்குற் ருலர் தாம், சகல பேர்க்கும்
இரங்கு வார்; எனக் கிரங்கிலார் பெண்ணே. (32)

[தேவர் துரை—தேவேந்திரன். சாபம்—சபித்துக் கூறுமொழி. வன்னம்—நிறம். மாங்குயில் சின்னம் துரை—மாமரத்தில் வாழும் குயிற் பறவையை எக்காளமாகவுடைய தலைவன்; மன்மதன். சாபம்—வில். தீர்க்கிலார்—(ஒடித்து) ஒழிக்கின்ருரில்லை. சின்னத் துரையென்பதில் சிறிய துரை என்னும் தொனிப்பொருள் புலப் படல் காண்க. இந்திரன் சாபம் தீர்த்தவர் மன்மதன் சாபம் தீர்த்திலர், சகலருக்கும் இரங்கியவர் யான் ஒருத்திக்கு இரங்கிலர் என்பவற்றிலுள்ள முரணலங்காரம் காண்க.]

குறிசோல்லும் குறத்தி வருதல்

(14) சைவமுத் திரையை வானின்மேல் தரிக்கும்
தெய்வமுத் தலைசேர் திரிகூட மலையான்
தேவர்கள் தம்பிரான் திருஅருள் பாடி
இலகுநீ றணிந்து திலகமும் எழுதிக்
குலமணிப் பாசியும் குன்றியும் புனைந்து
சலவைசேர் மருங்கில் சாத்திய கூடையும்
வலதுகைப் பிடித்த மாத்திரைக் கோலும்
மொழிக்கொரு பசப்பும்... ... ...

விழிக்கொரு சிமிட்டும் வெளிக்கொரு பகட்டுமாய்
மன்னவர் தமக்கு வலதுகை நோக்கி
இன்னகை மடவார்க் கிடதுகை பார்த்துக்
காலமுன் போங்குறி கைப்பல னங்குறி
மேலினி வருங்குறி வேண்டுவார் மனக்குறி
மெய்க்குறி கைக்குறி விழிக்குறி மொழிக்குறி
எக்குறி யாயினும் இமைப்பினில் உரைக்கும்
மைக்குறி விழிக்குற வஞ்சிவந் தனளே. (40)

[சைவ முத்திரை—சூலக்குறி. திரி—மூன்று. கூடம்—சிகரம்; மலையுச்சி. தெய்வம்—தெய்வத்தன்மை. சலவை—வெளுத்த துணி. மொழிக்கு—பேச்சுக்கு. பசப்பு—நயம், ஏய்ப்பு. சிவனுக்குரிய திரிகூடமலையுள் மூன்று சிகரங்களும் ஆகாயமளாவியிருப்பது, வானத்தில் சிவனுக்குரிய சூலக்குறியிட்டது போலிருப்பதாகக் கூறியதிலுள்ள உவமான உவமேயப் பொருத்தம் பாராட்டத் தக்கது.]

குறிசொல்லும் குறத்தியின் தோற்றமும் செயலும் கண் எதிரே கண்டாற் போலத் தோன்றும்படி வருணித்திருக்கும் கவித்திறம் கருதத்தக்கது.

திரிகூட மலைவளம்

வந்த குறத்தியை வசந்தவல்லி 'உன் சொந்தமலை எந்தமலை? அந்தவளம் எனக்குச் சொல்' என, அவள் சொல்லுகின்றாள்:

திரிகூடமலை உயர வருணனை

(15) வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்,
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்,
கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பார்,
கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்,
தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்,
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்,
கூனல்இளம் பிறைமுடித்த வேணிஅலங் காரர்,
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே. (44)

[வானரங்கள்—(ஆண்) குரங்குகள். மந்தி (கள்)—பெண் குரங்கு (கள்.) வான்கவிகள்—தேவலோகத்துக் குரங்குகள். கானவர்—வேடர்கள். விழி எறிந்து—கண் (பார்வையைச்) செலுத்தி. கவன சித்தர்—ஆகாய வழியே செல்லவல்ல சித்தர்கள். காய சித்தி—(மருந்து மூலிகையால்) தேகத்தை நெடுநாளிருக்கச் செய்யும் சித்தி. பரிக்கால்—குதிரைக்கால். தேர்க்கால்—தேர்ச் சக்கரம். கூனல்—வளைவு; வேணி—சடை.]

முதலடியில், திரிகூடமலையில் உள்ள ஆண்குரங்குகள் பெண் குரங்குகளுக்கு இனிய கனிகளைக் கொடுத்துக் கொஞ்சும்; பெண் குரங்குகள் (முன் கொடுத்த கனிகளைத் தின்று தெவிட்டியதனுலோ ஊடலாலோ) அக்கனிகளைக் கீழே எறியும்; அப்போது, தேவ லோகத்துக் குரங்குகள், அண்ணுந்து நோக்கி, 'என்னிடம் போடு', 'என்னிடம் போடு' என்று கையேந்திக்கெஞ்சும்: என்றதனுல், திரிகூட மலையுச்சி தேவலோகத்துக்கும் உயர்ந்ததென்பதையும், அங்கே தேவலோகத்தில் இல்லாத தீங்கனி விருட்சங்களுண் டென்பதையும் உய்த்துணரவைத்தார்.

இரண்டாம் அடி முற்பாதியில், வேடர்கள் தேவர்களைக் கண் பார்வைச் சமிக்ஞையால் தங்களிடம் வரும்படி அழைப்பார்க ளென்றதனுல், திரிகூடமலை தேவலோகத்துக்கு (உயரமாயிருப் பதன்றிக்) கண்ணுக் கெட்டுந் தூரமாயும் சமீபமாயும் உள்ள தென்பதை ஊகித்துத் தெரிந்துகொள்ளும்படி செய்தார்.

இரண்டாம் அடி பிற்பாதியில், ஆகாயமார்க்கமாகச் சஞ்சரிக் கும் சித்தர்கள் வந்து காயசித்தி விளைப்பாரென்றதனுல், திரிகூட மலை 'குறவரும் மருளும் குன்றம்' ஆதலால், அம்மலையின் உச்சி, பூமியில் நடந்து திரியும் சாமானிய மனிதர் அடையக்கூடாததா கவும், வேறெங்குமில்லாத சிறந்த காயசித்தி மருந்து மூலிகைக் காக எங்கும் கவன சித்தர் போன்ற ஆகாச கமனிகளால் மட்டும் அடையக்கூடியதாகவும் உள்ள உயர்ச்சியையுடைய தென்பதை ஆராய்ந்தறிந்துகொள்ள அமைத்தார்.

மூன்றும் அடியில் திரிகூடமலையிலுள்ள தேனருவி யென்னும் நீர்வீழ்ச்சி குதிபாய்தலில் எழும்பிய நீர், ஆகாயத்திலே அம்மலை யுச்சியில் விழுந்து பெருகி யோடும்; (அதனுல் உண்டாகிய நீர்ப் பாசிபற்றிய வழுக்கில்) சூரியனது தேர்க்குதிரைக் காலும் தேர்ச் சக்கரமும் வழுகுமென்றதனுல், அம்மலையுச்சியின் மகோன்னதத் தைக் குறிப்பாகப் புலப்படுத்தினர்.

பின்வரும் பகுதிகள், எளிய தெளிவான நடையுடைமையால், வியாக்கியானம் வேண்டாது தாமே விளங்குவனவாகவும், சொன் னயமும் தொனிநயமும் ஒருங்கு பொருந்திப் படிக்கப் படிக்கத் தெவிட்டாத தீஞ்சுவையுடையனவாகவும் உள்ளன:—

(16) கயிலையெனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே;
கனகமகா மேருவென நிற்குமலை அம்மே;
சுயிலமலை தென்மலைக்கு வடக்குமலை அம்மே;
சகலமலை யுந்தனக்குள் அடக்குமலை அம்மே;

வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை அம்மே;
வானிரவி முழைகள்தொறும் நுழையுமலை அம்மே;
துயிலுமவர் விழிப்பாகி அகிலமெங்கும் தேடும்
துங்கர்திரி கூடமலை எங்கள்மலை அம்மே. (44)

[சயிலமலை - சிவசைல மலை. தென்மலை - பொதியமலை. அடக்கும்மலை - (தனக்குள்) அடங்கும்படி வெற்றிபெற்ற மலை. வான் - ஆகாயம். இரவி - சூரியன். முழை - குகை. துயிலும் அவர்-அறிதுயில் அமர்ந்த திருமால். விழிப்பாகி—தூங்குதல் நீங்கி, சாக்கிரதையாய்.]

(17.) கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே;
கொழுநனுக்குக் காணிமலை பழனிமலை அம்மே;
எல்லுலவும் விந்தமலை எந்தைமலை அம்மே;
இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே;
சொல்லரிய சாமிமலை மாமிமலை அம்மே;
தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை அம்மே;
செல்லினங்கள் முழவுகொட்ட, மயிலினங்கள் ஆடும்
திரிகூட மலைஎங்கள் செல்வமலை அம்மே. (44)

[எல்—ஒளி; சூரியன். எந்தை—என் தந்தை. செல் இனம் - மேகக்கூட்டம். முழவு கொட்ட—மிருதங்கம் போல் இடியொலி செய்ய.]

அந்த அந்தக் குறவர்கள் வாழும் மலைகளை அவரவர் ஆளும் மலைகளாகக் கொள்ளும்படி சமத்காரமாகக் கூறியது கவனிக்கத் தக்கது.

(தொடரும்)

சிரிப்புப் படிப்பு

பிரிஸ்டல் நகரத்திலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் குழந்தைகளுக்குச் சிரிக்கக் கற்றுக்கொடுத்து வருகிறார்களாம். மற்றப் பாடங்களுக்குமுன் பத்துநிமிஷநேரம் குழந்தைகளுக்குச் சிரிப்புப்போதனை அளிக்கப்படுகிறது. குழந்தைகளும் உட்கார்ந்து கொண்டு பலமாகச் சிரித்து வருகிறார்கள். இந்த நற்போதனையின் பயனாக இப்பள்ளியிலுள்ள குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். —லோகோபகாரி.

சாஸ்திரம்

மண்ணெண்ணெய்

டி. இராஜகோபாலன், பி. ஏ.

நமது தேசத்திலும் தேசாந்தரங்களிலும் ஆதி தொட்டு வீடுகள், வீதிகள், ஆலயமண்டபங்கள் முதலிய பல இடங்களுக்குத் தீபாலங்காரங்கள் செய்து வருகின்றனர். ஆயினும் தீபம் எரிப்பதற்குரிய கருவிமட்டும் ஒன்றாயிருக்கவில்லை. தேசத்தில் நாகரிகம் விருத்தியாக ஆகத் தீபம் எரிப்பதற்கு ஏற்றகருவிகளும் புத்தம் புதியனவாய் வெவ்வேறாகக் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. சிறிதுகாலத்திற்கு முன்வரையில் பற்பல வித்துக்களினின்றும் ஆட்டி எடுத்த எண்ணெயையே விளக்கெரிப்பதற்கு ஏற்ற கருவியாக எல்லாத் தேசத்தாரும் உபயோகித்து வந்தனரென்று தெரிய வருகிறது. இக்காலத்திலும் அனேகர் அந்தத் தைலங்களையே ஊற்றி விளக்கேற்றிப் பல இடங்களிலும் தீபாலங்காரங்கள் செய்து வருகின்றனராயினும், இந்தத் தைல விளக்கைப் பார்க்கிலும் எத்தனையோ மடங்கு சிறந்தவையான ஒளிதரத்தக்க கருவிகள் பல இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவை, மெழுகுவர்த்தி, கொழுப்பு வர்த்தி, கரிவாயு, மின்னொளி, கெரோஸின் எண்ணெய் என்று வழங்கும் கல்தைலம் முதலியவைகளாம்.

இக்கருவிகளாகிய விளக்குகள் எல்லாவற்றுள்ளும், மின்சார விளக்கே எல்லாவிஷயங்களிலும் மேன்மை பெற்றதாயினும், அது விசேஷமான பொருட்செலவின்றிச் சாதிக்கக் கூடாததாகையால், அரசர்கள் பிரபுக்கள் முதலிய தனவான்களைத் தவிர மற்றவர்களுக்கு எளிதில் உபயோகப்படத் தக்கதன்று. யோசிக்குமளவில் கெரோஸின் என்னப்பட்ட கல் தைலமே ஏழைமுதற்கொண்டு பிரபு வரையிலுமுள்ள, பலவகை ஜனங்களுக்கும் எளிதில் உபயோகப்படத்தக்க உயர்ந்த விளக்கொளிக்கருவி எனத் தோன்றுகிறது. இந்தக் கல்தைலம் விலை நயமாகவும் அதிக பிரகாசமாய் ஒளிதருவதாகவும் இருப்பதால் இதன் பெருமை

விசேஷமாய்ப் பரவப் பரவ, இதுவரை வழங்கிவரும் வித்துத் தைலங்களுக்குப் பிரதியாக இதுவே எங்கும் வழங்கலாயிற்று.

இந்தக் கெரோஸின் எண்ணெயானது எள், ஆமணக்கு, தேங்காய், கடலைக்காய் இவைகளைப் போன்ற வித்துக்களினின்றுவது மீனெண்ணெய் முதலியவைகளைப் போன்று பிராணிகளின் சரீரத்தினின்றுவது வடித்தெடுத்த பொருளல்ல. இந்த எண்ணெய் பூமிக்குள் ஆழ்ந்த கனிகளில் கண்டெடுக்கப் படுகின்றது. எண்ணெய் அகப்படும் இடங்களெல்லாம் அநேகமாய் நிலக்கரி அமைந்த தரையும், பூர்வகாலத்துக் காடுகள் அழிந்து மக்கிய பூமிகளுமாகவே இருக்கின்றன. இது முதலில் அமெரிக்காக் கண்டத்திலுள்ள ஐக்கிய மாகாணத்தில் அதிகமாய்க் கண்டெடுக்கப்பட்டு வந்தது. இப்படி ஒருபொருள் பூமிக்குள் இருக்கிறதென்று அப்பிரதேசத்து ஜனங்களுக்குப் பலவருஷங்களாகத் தெரியும். அவர்கள் அதைச் சிலவியாதிகளுக்கு மருந்தாயும் உபயோகித்து வந்தனர். வாதரோகங்களுக்கு மேலே தடவுவதும், குளிர்காய்ச்சலுக்கு உள்ளுக்குப்புசிப்பதுமா யிருந்தார்கள்.

மண் எண்ணெய், பூமிக்குள் இன்னவிடத்தில் இருக்கிறதென்பது, அதையடுத்த வெளியிலே வியாபித்திருக்கும் அதன் நாற்றத்தாலும், சிலவிடங்களில் அதை அடுத்துள்ள குளம் குட்டைகளில் நீரின்மேல் எண்ணெய் படர்ந்திருப்பதாலும் கண்டறியப்படுகிறது. அவ்விடங்கள் எல்லாம் பெரும்பாலும் பள்ளத் தாக்குக்களாயும், சதுப்பு நிலங்களாயு மிருக்கின்றன. அவ்விடங்களில் ஒரு வகை நாற்றமுள்ள காற்றினாலும் எண்ணெய் படர்ந்த தண்ணீர்க் குட்டைகளாலும் பூமிக்குள் இன்ன இடத்தில் கெரோஸின் எண்ணெய் இருக்கின்றதெனக் காணப்பட்ட உடனே பல வேலைக்காரர்கள் அதற்கென்று செய்யப்பட்டிருக்கும் ஓர் யந்திரத்தை அவ்விடத்தில் கொண்டு போய் அதனால் பூமியைத் தோண்டி 500, 600 அடி ஆழத்தின் கீழ் உள்ள எண்ணெயை வெகு சுலபமாகக் கண்டெடுப்பார்கள்.

ஒவ்வொரு சமயங்களில் பூமிக்குள் எண்ணெய் அதிகமாக இருக்கிறதென்பதைக் குறிக்கின்ற குறிகளும் தெளிவாய்த் தெரிந்து அதைக் கண்டெடுப்பதற்கு வேண்டிய முயற்சிகளும் அதிகமாய்ச் செய்தாலும் எண்ணெய் அகப்படாமற் போவது உண்டு. சில சமயங்களில் எண்ணெய் அபரிமிதமாக அகப்படுவதுபோ லிருந்து திடீரென்று தவறிப்போவதும் உண்டு. நன்றாய் உலர்ந்து போயிருந்த கிணறுகளில் விசேஷமாய் எண்ணெய் சுரப்பதும் உண்டு. இப்படிக் கெரோஸின் எண்ணெய் அகப்படுவது மிகவும் அதிசய

மாய் இருப்பதால் அநேகர் இவ்விஷயத்தில் அதிகக் கவலைகொள்கிறார்கள். சில சமயங்களில் விசேஷமான மூலதனம்வைத்து வேலை செய்யத் தொடங்குகிறவர்களுக்கு ஒரு பயனும் கிடைப்பதில்லை. ஒரு சமயத்தில் சிறிதளவு முயற்சி செய்யும் பொழுதே அளவற்ற எண்ணெய் கிடைக்கின்றது. அதனால் கெரோஸின் எண்ணெய் அகப்படுகின்ற தேசங்களில் பல மாறுபாடுகள் உண்டாகின்றன. ஏதாவதொரு நடுக்காட்டில் எண்ணெய் அகப்படத்தொடங்கினால் அந்த நிமிஷமே அவ்விடத்தில் மாயையினால் அமைந்தது போல் ஒரு பட்டணம் உண்டாகின்றது. எண்ணெய் சுரப்பது ஓய்ந்துபோன மறுநிமிஷமே அப்பட்டணம் அழிந்து போகிறது.

வெளியிலிருந்து புதியவர்களாகப் போகின்றவர்களுக்கு எண்ணெய் ஊற்றுள்ள அப்பட்டணங்களில் முதலில் சகிக்கக்கூடாத ஒருவகை வெறுப்பான நாற்றம் தோன்றுமாயினும், அவ்விடம் போன சிறிது காலத்திற்கெல்லாம் அந்த நாற்றமே வழக்கமாகிப் பின்பு அதில் ஒரு கெடுதியும் தோற்றுவதில்லை. அந்த வழக்கத்தினால் அநேகருக்கு மற்றக் காற்றுக்களை விட மண் எண்ணெயின் நாற்றம் கலந்த காற்றை மோப்பதிலேயே அதிகவிருப்பம் உண்டாகிறது.

மண் எண்ணெய்க் கிணறுகளினின்றும், மற்றெங்கும் பரந்த அந்த எண்ணெயினின்றும் எழுகின்ற ஆவியானது சீக்கிரத்தில் பற்றி எரியும் தன்மை யுடையது. நெருப்பைக் கையாளும் போது சிறிது அசாக்கிரதையாகக் கையாடினால், உடனே அது வெடித்துப் பெருந்தீங்கு விளைவிக்கும். வெடிமருந்துக் கிடங்குகளில் வாஸம்பண்ணுவதைப் பார்க்கிலும் இந்த மண் எண்ணெய்ப் பட்டணங்களில் வாசம்பண்ணுவது மிகவும் அபாயத்திற்கு இடமானதென்கிறார்கள். இவ்வளவு அபாயம் விளைவிப்பதாய் இருந்தும், வேலைசெய்பவர் புகை பிடிப்பது கூடாதென்று விளம்பரம் செய்து எங்கும் பிரசித்தப்படுத்தினாலும் அவ்வளவையும் லக்ஷியம் பண்ணாமல் துணிந்து அந்த எண்ணெயை எடுக்க வேலைசெய்கிறவர்கள் சுருட்டுக் குடிப்பதை நிறுத்துவதில்லை.

மண் எண்ணெய், தேசாந்தரங்களுக்குக் கொண்டுபோய் வர்த்தகம் செய்வதற்கு ஏற்றபொருளாய் அமைந்ததனாலும் அதைக் கண்டெடுப்பதற்கு வேண்டிய துளைக்கருவிகள் யாவும் ஏற்றவண்ணம் பொருந்தினமையாலும் அந்த எண்ணெயை எடுத்து வியாபாரம் செய்ய முயன்றவர்களுக்குச் செல்வம் விசேஷ

மாய் விருத்தியாவதற்கு அது முக்கிய ஆதாரமாயிற்று. அவர்கட்கு எதிர்பாராச் செல்வம் அபரிமிதமாகக் கிடைக்கத் தொடங்கியது. இப்பொழுது அந்த எண்ணெயின் விலை முன்னிருந்த விலையில் நான்கில் ஒன்றுக்கு அதிகப்படாதிருந்தாலும் அதனால் உண்டாகும் லாபம் மாத்திரம் அளவற்றதாயிருக்கின்றது. அமெரிக்கா தேசத்தில் ஒரு சங்கத்தார் மண் எண்ணெய்க் கிணறு வெட்டுகிற நிமித்தம் இருபதினாயிரம் ரூபாய் செலவு செய்தார்கள். அவர்கள் கோரினபடியே அவ்விடத்தில் எண்ணெய் விசேஷமாய் அகப்பட்டது. அகப்பட்ட ஒருவாரத்துக்குள்ளேயே அந்த எண்ணெயை விற்று, முதலாக வைத்த பணத்தைப்போல் பன்னிரண்டு மடங்கு அதிகமான பொருள் சம்பாதித்தார்கள். ஆயினும் அவ்வளவோடே அந்த எண்ணெய் செலவழிந்து போகவில்லை.

மிகுதி எண்ணெயை விற்பதனால், அதுமுதல் நாள் தோறும் இரண்டாயிரம் ரூபாய் கிடைத்துக்கொண்டு வருகிறது. பயிர் செய்து அதனால் சீவனம் செய்யும் அனேக எளிய குடியானவர்கள், தங்கள் நிலத்தில் இந்த எண்ணெய் அகப்படக்கண்டு அதனால் திடீரென்று விசேஷ தனவான்களானார்கள்.

பர்மாவில் இந்த எண்ணெய் அபரிமிதமாகக்கிடைக்கிறது.

இந்த எண்ணெயில் உயர்ந்ததென்றும் மட்டமானதென்றும் இரண்டு விதம் உண்டு. மட்டமான எண்ணெயிலிருந்து உண்டாகும் ஆவி சீக்கிரம் தீப்பற்றக் கூடியது. அது மிகவும் அபாயமானது. இருந்தாற் போலிருந்து அவ்விதமான எண்ணெய் ஒவ்வொரு சமயங்களில் வெடித்துப் பெருந்தீங்கு விளைவிக்கும். ஆகையால் சிறிது விலை அதிகமாயிருந்தாலும் இவ்விஷயத்தில் கொஞ்சம் எச்சரிக்கைப்பாய் இருந்து உயர்ந்த வகையான எண்ணெயையே நாம் உபயோகித்து வருவோமானால் எவ்விதமான அபாயமும் உண்டாகாது.

உலகிற் பெரிய காகித ஆலை

உலகிலேயே எங்கேயும் இல்லாத விதமாகப் பெரியதொரு காகித ஆலைக்குரிய இயந்திரங்களை லெனின்கிராடில் ருஷியர்கள் செய்து முடித்து விட்டார்கள். அந்த இயந்திரங்களை ஊரல் மலைகளுக்கருகிலுள்ள காமா ஆற்றங்கரையில் நிர்மாணம் செய்வார்களாம். அவற்றினை லெனின் கிராடிலிருந்து காமா ஆற்றங்கரைக்குக் கொண்டு செல்ல 35 ரயில்வே வாகன்கள் தேவையாகின்றனவாம். அவ்வியந்திரங்கள் 80,000 பாகங்களுடையவைகளாகவும் 400 டன் கனமுள்ளவைகளாகவும் தினசரி 32 டன் காகிதம் தயாரிக்கக் கூடியவைகளாகவும் இருக்கின்றனவாம். —தாருல் இஸ்லாம்.

அலைகள்

கே. அப்புராவ்


(42-ம் பக்கத்தொடர்ச்சி)

2. ஒலி அலைகள்

ஒலிக்கும் அலைக்கும் சம்பந்தம் இருக்கிறது. அலை உண்டாவதனுல் ஒலி உண்டாகின்றது. நாம் பேசும்போது அலைகளை உண்டாக்குகிருேம். மணி அடிக்கும்போதும், வாத்தியம் ஊதும்போதும், மழை வரும்போதும், காற்றில் அலைகள் உண்டாக்கப்படவே, ஒலி கேட்கப்படுகிறது. தண்ணீரில் உண்டாகும் அலைகளைப்போல் காற்றில் அலைகள் உண்டாவதில்லை. ஏனெனில் காற்றுச் சில சமயங்களில் சற்று அடர்த்தியுடனும், வேறுசமயங்களில் அடர்த்தி யில்லாமலும் உண்டாக்கப்படுகின்றது. அடிக்கும்போது மணியானது அதிர்ச்சி கொடுத்து மிகவும் வேகமாய் ஆடுவதைக் காணலாம். ஒரு பெரிய பித்தளைக் குண்டாளத்தில் தண்ணீரைப் பாதி அளவிற்கு விட்டுக் குண்டாளத்தை ஓர் குச்சியினுல் தட்டினுல் சப்தம் உண்டாகும். சப்தம் உண்டாகும்போது தண்ணீரில் மிகவும் சிறிய அலைகள் உண்டாகித் தண்ணீர் மத்திக்குச் செல்வதைக் காணலாம். கல்லிற்குப் பதிலாய் இங்கே பாத்திரம் தண்ணீரில் அலையை உண்டாக்குகிறது. ஆகையால் மணியானது மிகவும் வேகமாய் அதிர்ச்சியுற்று ஆடுவதனுல் காற்றில் அடர்த்தியும் விசாலமுமுள்ள அலைகளை உண்டாக்கி விடுகிறது. அம்மாதிரியான அலைகள் காற்றில் வேகமாகப் பிரவேசித்து நமது காதில் தாக்கி, 'சப்தம்' என்ற உணர்ச்சியை உண்டாக்குகிறது.

மணியிலிருந்து இடதுபக்கமாய் அதிர்ச்சி உண்டாகும்போது அதன் பக்கம் உள்ள காற்று அடர்த்தியாய்ச் சேர்ந்து விடுகிறது. உடனே மணி திரும்பி வலது பக்கம் போகும்போது, விசாலமாய், கொஞ்சம் காற்றுப் பரவி அடர்த்தி குறைகிறது. இம்மாதிரி மணியின் அதிர்ச்சியால் அடர்த்தியும் அடர்த்தி இல்லாதவையுமான காற்று அலைகள் உண்டாகி வெளியிலே பரவுகின்றன. இவ்விதமான காற்று அலைகள் நமது காதில் மிகவும் மெல்லியதாயுள்ள ஓர் ஜவ்வைத் தாக்குகிறது. ஜவ்வானது அதிர்ச்சியைப்பெற்று மணியினுல் ஏற்படும் சப்தஉணர்ச்சியை நமக்கு அளிக்கிறது.

நமது தொண்டையில் இரண்டு ஜவ்வுகள் உள்ளன. நாம் பேசும்போது நமது காற்றுப்பையிலிருந்து காற்றானது இரண்டு



ஜவ்வுகளுக்கும் மத்தியில் புகுந்து வாயின் மூலமாய் வெளியில் வருகிறது. அவ்வாறு வரும் காற்று ஜவ்வை ஆடவைத்து, காற்றில் அலைகளை உண்டாக்கி, 'சப்தம்' என்ற உணர்ச்சி உண்டாக்குகிறது. அலைகளின் தொடர்ச்சி வேறுபடுவதனால் நாம் பல்வேறு சப்தங்களை உணர்கிறோம். சப்தம் அதிகமாக ஆக, அலைகளின் தொடர்ச்சி அதிகமாகிறது. ஒருவர் பாடும்பொழுது அவரது தொண்டையில் இருக்கும் ஜவ்வில் பலவிதமாக அசைவு உண்டாக, அலைகள் பல்வேறு தொடர்ச்சியுடன் உண்டாகின்றன. அதனால் ஓர் இனிமையான பாட்டு எழுகிறது.

ஆர்மோனியத்தில் தகடுகள் ஓர் கட்டையிற் காணும் ஓட்டைகள் அல்லது சந்துகளை மூடிக்கொண்டிருக்கும். காற்று அச்சந்தின் மூலமாய் வெளிப்படும்போது தகட்டில் அசைவு உண்டாக, ஒலி அலைகள் உண்டாகின்றன. அதேமாதிரி நாதசுரத்திலும் வேறு சில ஊதுகருவிகளிலும் சப்தம் உண்டாக்கப்படுகிறது. பிடில், தம்புரா முதலியவைகளில் கம்பிகளில் அசைவு நிகழ்ந்து ஒலி அலைகளை உண்டாக்குகின்றன. இவைகளிலெல்லாம் ஒலி அலைகளை அதாவது தொடர்ச்சியை வேறுபடுத்த வேண்டிய செளகரியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நாதசுரத்தில் ஓர் துவாரத்தை மூடினாலும், அல்லது திறந்துவிட்டாலும் நாம் ஓர் புதிய

மாதிரி ஒலி அலைகளை உண்டாக்குகிறோம்; அதாவது சாதாரண மாக உண்டாகும் அலையளவை மாறுபடுத்துகிறோம்.

தண்ணீர் அலைகள் பிரதிபிம்பிப்பதுபோல் ஒலி அலைகளும் எதிரெழுகின்றன. 'எதிரொலி' என்று நாம் கூறுவது இதுதான்.

ஒலி அலைகளின் வேகத்தை நாம் அளக்கலாம். தூரத்தில் ஒருவன் துணியைத் துவைக்கும்போது அவன் துணியைக் கல்லில் அடித்துவிட்டு மேலே வெகு தூரம் தூக்கிய பின்பே நாம் சப்தத் தைக் கேட்கிறோம். இது ஒளி மிகவேகமாயும், ஒலி மெதுவாயும் வருவதனால் ஏற்படுவது. இம்மாதிரியே ரயில், இயந்திரம் முதலியவற்றிலிருந்து ஆவி தோன்றிய பிறகே வண்டி கூவுவதை நாம் கேட்கிறோம். காற்றில் ஒலி மெதுவாகச் செல்கிறது என்று நமக்குத் தெரிகிறது. ஒலி, காற்றில் ஒரு விநாடியில் சுமார் 1140 அடி செல்கிறது.


ஓர் பிடிலில் ஒரே விதமான இரண்டு கம்பியை இணைக்க வேண்டும். கம்பிகளின் நீளம் ஒரேவிதமாக இருக்கவேண்டும். கம்பியை இழுத்துப்பிடிக்கும் சக்தியும் ஒன்றாக இருக்கவேண்டும். முதல் கம்பியைச் சப்திக்கச் செய்தால் இரண்டாவது கம்பியும் தானாகவே சப்திக்கும். முதல்கம்பியினால் உண்டாகும் அலையின் அளவும் தொடர்ச்சியும், இரண்டாவது கம்பியைத் தனியாகச் சப்திக்கச் செய்தால் எவ்வித அலைகளை உண்டாக்குமோ அதை ஒத்திருக்கும். முதலில் உண்டாகும் அலை இரண்டாவது கம்பியைத் தாக்கி அதையும் தன்னுடன் அசைவிக்கிறது. இச்சமயத்தில் சப்தம் பலமாக இருக்கும்.

ஸ்வரசூலம் (ட்யூனிங் போர்க்) என்பது ஓர் உருக்குக் கம்பி யினால் செய்யப்படும் வாத்தியம். அதன் உருவத்தைப் படத்தில் பாருங்கள்.

அதை ஓர் அட்டையால் தட்டினால் சப்தம் உண்டாகும். அது சப்தம் செய்யும்போது அதன் இரண்டுகைகளும் அதிக வேகமாய் அசைந்து காற்று அலைகளை உண்டாக்கி விடுகின்றன. ஒரே மாதிரியான அலைகளை உண்டாக்கும் இரண்டு ஸ்வர சூலத்தில் ஒன்றை மற்றொன்றிற்குச் சில கஜ தூரத்தில் வைத்து, முதல் சூலத்தைச் சப்திக்கச் செய்தால் இரண்டாவது சூலமும் சப்திக்கும்.



ஒரு நீளமான கண்ணாடிப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு



அதன் வாயின்முன் சூலத்தைச் சப்திக்கச் செய்து பாத்திரத்தில் ஜலத்தை ஊற்றவேண்டும். பாத்திரத்தில் ஜலம் ஓர் அளவிற்கு வரும்போது சூலத்திஞல் உண்டாகும் சப்தம் அதிகரிக்கும். இது பாத்திரத்தில் உள்ள காற்று, சூலத்தின் தொடர்ச்சியுடன் சேர்ந்து அசைவு கொடுப்பதஞல் உண்டாவது. அதாவது மிகுந்திருக்கும் காற்றுப் பாகம் சூலத்தின் தொடர்ச்சியுடன் சேர்ந்து சூலத்துடன் அசைந்து ஒரே அலை அளவுத் தொடர்ச்சியை உண்டாக்குகிறது. காற்றின் அளவைக் கண்டு பிடித்து அதை நான்கால் பெருக்கிவிட்டால் சூலத்திஞல் உண்டாக்கப்படும் அலையின் அளவு தெரிந்து விடும்.

பிடில், தம்பூர் முதலிய கம்பியால் செய்யப்படும் வாத்தியங்கள் எல்லாம் ஒரு காற்றுப் பெட்டியின் மேலேயே வைக்கப்படுகின்றன. இம்மாதிரி வைப்பதஞல் தொனி மிகவும் நன்ருகவும் பலமாகவும் கேட்கிறது.

காற்றில்லாமல் சப்த அலைகள் உண்டாகா. ஓர் கண்ணாடிப் பாத்திரத்தில் ஒரு கடியாரத்தை வைத்து, அதிலுள்ள காற்றெல்லாவற்றையும் எடுத்துவிட்டால் கடியாரத்தின் சப்தம் நமக்குக் கேளாமல் போய்விடும். ஏனென்ருல் காற்றிருந்தாலொழியச் சப்த அலைகள் உண்டாகா.

(தொடரும்.)

அபூர்வ நீர்மூழ்கிக் கப்பல்

சமுத்திர ஆழத்தில் சென்று ஆராய்ச்சி செய்வதற்காகச் சமீபத்தில் பிரிட்டனில் ஒருசிறு நீர்மூழ்கிக் கப்பலை செய்திருக்கிருர்கள். இது 22 அடி நீளமே இருக்கிறது; ஆஞல் அதிக சக்திவாய்ந்தது. ஓரிடத்தில் நின்றுகொண்டு சமுத்திரத்தின் கீழ் சுமார் 90 லக்ஷம் சதுரமைல் விஸ்தீரணமுள்ள இடத்தைச் சோதனைசெய்ய முடியும். அவ்வளவு சக்திவாய்ந்த மின்சார விளக்குகளை இதில் அமைத்திருக்கிருர்கள்.

அத்தி

ஸி. எஸ். ஜகதீச சுந்தரம் பிள்ளை

உலகத்தில் வானுற ஓங்கி வளம்பெற வளரும் பலவகையான பெருமரங்களில் அத்தி மரமும் ஒன்றாகும். இதில் ஊழலத்தி, கல்லத்தி, காட்டத்தி, கொடியத்தி, சீமையத்தி, நல்லத்தி, நீரத்தி, பேயத்தி, மலையத்தி என ஒன்பது வகைகளுண்டு. அத்தி மரத்திற்குக் கோளிமரமென்று மற்றொரு பெயரும் வழங்குகிறது. அத்தியின் விதை சிறுமீன் சினையினும் சிறியதாக இருக்கிறது.

நமது நாட்டு நங்கையர்கள் அத்திக்காயை நாவிற்கினிமையாகப் பருப்பும் தேங்காயும் கலந்து பொரியலாகவோ அவியலாகவோ சமைப்பார்கள். முந்திரிப்பருப்பை வறுத்துப் போட்டுப் பொட்டுக்கடலை மா, வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி, கொத்துமல்லிகைக்கீரை கலந்து அத்திக்காய் வடை சுடுவார்கள். அது மிகவும் ருசிகரமான வடையே. அத்திக்காயைச் சிலர் ஊறுகாயாகப் போட்டும் வற்றலாக்கியும் உபயோகிக்கிறார்கள்.

அத்திப் பிஞ்சானது மூலவாயு, கிராணி, இரத்தமூலம், வயிற்றுக் கடுப்பு முதலிய நோயுள்ளவர்களுக்குப் பத்தியக் கறியாகவும் உதவும். அத்திக்காயால் பிரமேகம், வாதநோய், சூலை, சரீர வெப்பம், இரணம் இவைகள் போகும். மலங் கழியும்.

அத்திப்பழத்தில் தசையத்திப்பழம், விதையத்திப்பழம் என இருவகையுண்டு. தசையத்திப்பழம் தேகத்தைப் போஷிக்கும்; இரத்த விருத்தியை உண்டுபண்ணும்; சுர வெப்பத்தைத் தணிக்கும்; மலத்தைக் கழிக்கும். விதையத்திப் பழம் நித்திய மலபந்தத்தையும் சரீர உஷ்ணத்தையும் பித்த வேகத்தையும் போக்கும். அத்திப் பழம் கொஞ்சம் விலை அதிகமாயிருந்தாலும், அதிலுள்ள தேகத்தைப் போஷிக்கும் பொருளைக் கருதுவோமானால் அதன்விலை பன்மடங்கு மலிவே.

அத்திப் பழங்களில் அறுபத்தைந்து அல்லது எழுபது பங்கு தேகத்திற்கு வேண்டிய உணவும், இருபது பங்கு தண்ணீரும்

இருக்கின்றன. சுத்தமானதும் உருசிகரமானதுமான சர்க்கரையைப் பெற்றிருப்பதனால் அதைப் புசித்தால் சீக்கிரத்தில் சீரணமாகி இரத்தத்தோடு கலந்துவிடுகிறது. நைட்ரோஜென் (*Nitrogen*) என்னும் தேகத்தை வளர்க்கும் பொருள் நூற்றுக்கு ஐந்து அல்லது ஆறுபங்கு இருக்கிறது. அதனால் அது சுறுசுறுப்பையும் உற்சாகத்தையும் இரத்த விருத்தியையும் உண்டுபண்ணுகிறது. இரண்டு விதமான உலர்ந்த சீமையத்திப் பழங்கள் சாதாரணமாய்க் கடைகளில் கிடைக்கின்றன. ஒன்று பெட்டிகளில் ஒன்றோடொன்று ஒட்டினாற்போல் அடுக்கிவைக்கப்பட்டிருக்கும். மற்றொன்று பைகளில் வேறு வேறாய் வைக்கப்பட்டிருக்கும். அத்திப் பழம் நன்றாகச் சுத்தம் செய்யப்பட்டிருந்தால் பெட்டியிலிருந்து எடுத்தவுடனே சாப்பிட உதவும். அவைகள் கடினமாயும் உரம் பெற்று அழுத்த முடையனவாகவுமிருந்தால் வேகவைக்க வேண்டும். வேகவைத்த அத்திப்பழம் மிருதுவாக மாறி மெல்லுவதற்குச் சௌகரியமாக இருக்கும். அதன் குண விசேஷங்களைப் பெரிதும் அறிந்துள்ள மேனாட்டார் அதனை மிகவும் விரும்பிப் புசிக்கின்றனர். மிருதுவான அத்திப்பழங்களையும் வித்துக்களையும் கலந்து அநேக விதமான பழப்பலகாரங்கள் செய்கின்றனர்.

அத்திமரத்தின் வேரிலிருந்து கள் இறக்கலாம். அப்படி இறக்கப்பட்ட கள்ளிற் சீனிச் சர்க்கரையாவது பேயன் வாழைப் பழமாவது கலந்து தினமும் அதிகாலையில் உண்டுவர அஸ்திமேகம், உட்சூடு, மூர்ச்சை, தாகம் இவை நீங்கும்.

அத்திப் பால் காரமும் உஷ்ணமும் உள்ளது. பித்தம், நீரிழிவு சூலைநோய், இரத்த சூலை, மூத்திர கிரிச்சரம் முதலான வியாதிகளை நிவிர்த்தி செய்யும்.

ஆசனக் கடுப்பு, உதிரப் போக்கு, சீதபேதி, இரத்தபேதி, புண்தத்துப் பிரமேகம், பெரும்பாடு, மூத்திரத்தோடு உதிரம் கலந்து விழும் வியாதி முதலானவைகளுக்கு அத்திப்பட்டையை இலேகியமாகவாவது கியாழமாகவாவது[1] கொடுக்கத் தீரும். மேலும் இப்பட்டையைச் சூரணம் செய்து நல்லெண்ணெயிற் கலந்து பிளவை முதலானவற்றிற்குப் பற்றுப் போடலாம்.

அத்தியிலை வயலுக்கு எருவாகப் போட உதவும். அத்திக் கொம்பு பல் விளக்க உதவும்.

அத்திமரம் பலகை மணைக்கும் கதவுகளுக்கும் இன்னுஞ் சில்லரை வேலைகளுக்கும் உபயோகப்படும்.

---

[1]கியாழம்—கஷாயம்.

அத்திமரத்தின் அடிக்கட்டை வாகனங்கள் செய்ய உபயோகப் படும். அன்றியும் அஷ்டபந்தன கும்பாபிஷேக காலங்களில் விக்கிரகங்களாக ஸ்தாபித்து இதை மூர்த்திபந்தனஞ் செய்து பூசிப்பது முண்டு.

ஆகவே அத்திமரத்தின் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு காரியத்திற்குப் பிரயோசனப் படுவதால் அதனை மிகவும் உபயோக முள்ள மரமென்றே சொல்லலாம்.

அதிக ஆயுளைக் கொடுக்கும் பப்பாளிப் பழம்

பப்பாளிப்பழத்தில் அதிகமான சத்துள்ள பதார்த்த மிருக்கின்றது. இப்பழம் அதிகமாகத் தென்னிந்தியாவிலே இருக்கின்றது. தேகத்திற்குப் புஷ்டி அளிக்கக்கூடிய சத்து, நிரம்பப் பப்பாளியில் இருக்கின்றது. இதை ஆங்கிலத்தில் [Vitamin A. B. C. D.] என்று சொல்லுகிறார்கள். மேற்கூறிய ஏ. பி. வி. டி. என்கிற நான்கு முக்கிய சத்தும் பப்பாளிப் பழத்திலிருக்கிறது. இப்பழத்தை ஜனங்கள் அதிகமாய் உபயோகித்துவந்தால் நாட்டிலே மரணவிகிதம் மிகவும் குறைவாகும். குழந்தைகளுக்கு இப்பழத்தைக் கொடுப்பதால் குழந்தைகள் புஷ்டியாய் வளரும். இப்பழத்தை அதிகமாய் உபயோகிப்பதால் மக்கள் அநேக ஆண்டுகள் வாழ்வர். இத்தகைய சத்துள்ள பழம் இந்தியாவில் மிகவும் மலிவான தாகும். இந்திய மக்கள் அறிந்தோ அறியாமலோ இதை உபயோகப்படுத்திக் கொள்ளாமலிருக்கின்றனர். ஆங்கிலேயர்களோவெனில் இதை உபயோகித்து அதிகப் பலனை அடைந்துவருகிறார்கள். இனியாவது நம் தென்னிந்தியர்கள் இப்பழத்தின் நன்மைகளைப் பெறுவார்களா?

—லோகோபகாரி.

பத்திராவதி இரும்பு உற்பத்திச் சாலை

மு. கிருஷ்ணமூர்த்தி ஐயர், பி. ஏ., எல். டி.

உலோகங்களில் மிகவும் அவசியமானது இரும்பு. இது மனிதனுக்குப் பல விதத்திலும் உபயோகமாகிறது. சிறிய குண்டூசி முதல் பெரிய இயந்திரம் வரையில் பலபொருள்கள் இரும்பினாலேயே செய்யப்படுகின்றன. வீடு கட்டுவதற்கும், கப்பல் கட்டுவதற்கும் இரும்புச் சாமான்கள் அதிகமாய் உபயோகப் படுகின்றன. இக்காரணத்தைக் கொண்டே இதைக் 'கரும்பொன்' என்றும் சிறப்பித்துக் கூறுவதுண்டு.

உலகத்தில் அமெரிக்கஐக்கிய நாடுகளிலேதான் இரும்பு அதிகமாய் உருக்கியெடுக்கப்படுகிறது. இந்தியாவிலே பண்டைக்காலத்தில் பலவிடங்களிலும் இரும்பு தயாரிக்கப்பட்டுவந்தது. ஆனால் சென்ற நூற்றாண்டிலிருந்து பலவிதமான இரும்பு எஃகுச் சாமான்கள் அதிக மலிவான விலைக்குப் பிறநாடுகளிலிருந்து வருவிக்கப்பட்டதால் அந்தப் பழைய தொழில் அநேகமாய் ஒழிந்து போய்விட்டதென்று கூறலாம். இரும்பை வார்ப்பதிலும், எஃகாக மாற்றுவதிலும் பண்டைய இந்தியர்கள் கைதேர்ந்தவர்கள். இதற்கு அத்தாட்சியாக டெல்லிக்கு அருகில் அமைந்திருக்கும் 'குதுப்மீனார்' என்ற கோபுரமே போதுமானது. இது வார்ப்பிரும்பால் சுமார் 800 வருடங்களுக்கு முன் நிர்மாணிக்கப்பட்டது. இன்றைக்கும் இது துருப்பிடிக்காமல் இருப்பதைக் காணலாம்.

இக்காலத்தில் இரும்பு இந்தியாவில் சில இடங்களிலேதான் உருக்கி எடுக்கப்படுகிறது. இருப்புச்சுரங்கங்கள் இந்தியாவில் பல இடங்களில் காணப்பட்டாலும் அதைப் புதுமுறையில் அதிகமாக உருக்கியெடுக்க நிலக்கரியும் சுண்ணாம்பும் வேண்டும். இந்தியாவில் பீஹார் ஒரிஸா மாகாணத்திலும், நிஜாம் ராஜ்ஜியத்திலுந்தான் நிலக்கரி அகப்படுகிறது. நிஜாம் ராஜ்ஜியத்தில் சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்துக்கு அருகில் இருப்புச்சத்து (*Iron ore*) அகப்படவில்லை. ஆகவே பீஹார் ஒரிஸா மாகாணத்திலும் வங்காளத்திலுமே இரும்பு உருக்கியெடுக்க வசதி ஏற்பட்டுள்ளது. தென்னிந்தியாவில் மைசூர் ராஜ்ஜியத்தில் பத்திராவதிக்கு அருகில்

இருப்புச் சத்து அகப்படுகிறது. அதிலிருந்து இரும்பைத் தயாரிக்க நிலக்கரி மேற்கூறிய பீஹார், ஒரிஸ்ஸா, சிங்கரேணி முதலிய இடங்களிலிருந்து வரவேண்டும். அதற்குக் காலதாமதமும் பணச் செலவும் அதிகமாகும். அதற்குப் பதிலாக மைசூர் ராஜ்ஜியத்தில் மரக்கட்டைகளை உபயோகிக்கிறார்கள்.

பத்திராவதி நகரம்

மைசூர் ராஜ்ஜியத்தில் பத்திராவதி என்ற இடத்தில் இந்த இரும்பு உருக்கும் தொழிற்சாலை அமைந்துள்ளது. பங்களூரிலிருந்து ஹப்ளி வழியாகப் பூனா செல்லும் இருப்புப் பாதையில் பங்களூரிலிருந்து 131-வது மைலில் பீரூர் என்ற ஜங்க்ஷனுளது. அங்கிருந்து வடமேற்காய் ஷிமோகா என்று வழங்கும் சிவமுகி நகருக்குச் செல்லும் கிளைப்பாதையில் பீரூரிலிருந்து 28-வது மைலில் பத்திராவதி இருக்கிறது. அதாவது பத்திராவதி பங்களூருக்கு வடமேற்கே சுமார் 160 மைல் தூரத்திலுள்ளது. சுமார் 10-மணி ரயில் பிரயாணம் செய்து பங்களூரிலிருந்து பத்திராவதியை அடையலாம்.

பத்திராவதி நகரம் பத்திரா என்ற ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. ஆதலின் அதற்கு அப்பெயர் ஏற்பட்டது. பத்திரா நதி தெற்கிலிருந்து வடக்காகப் பாய்ந்து பத்திராவதி நகரத்துக்குச் சில மைல் தாண்டி, துங்கா என்ற நதியுடன் கலக்கிறது. இவ்விரண்டும் சேர்ந்தபின் ஏற்பட்ட நதிதான் துங்கபத்திரா என்னும் பெரியநதி. இது கிருஷ்ணா நதியின் முக்கிய உபநதியாகும். பத்திரா நதியின் இருகரை யோரமாயும் பலமைல் விஸ்தீரணத்துக்கு நெருக்கமான காடுகள் அமைந்துள்ளன.

இருப்புச் சத்து

தொழிற்சாலைக்கு வேண்டிய இருப்புச்சத்து பத்திராவதிக்கு மேற்கிலுள்ள மேற்குத்தொடர்ச்சிமலையைச் சேர்ந்த பாபாபூடன் மலைத்தொடரில் கெம்மங்கண்டிக்குன்றுகளில் அகப்படுகிறது. கெம்மங்கண்டிக்குன்றின் மேலே வெட்டி யெடுக்கப்படும் இருப்புச்சத்து கயிற்று வழியாய்க் (*Rope-way*) குன்றின் அடிவாரத்துக்குக் கொண்டுவரப்படுகிறது. அங்கிருந்து குறுகிய இருப்புப்பாதை மார்க்கமாய் அது பத்திராவதித் தொழிற்சாலையை அடைகிறது.

இரும்பை உருக்கக் காட்டுமரங்கள் உபயோகப்படுகின்றன என்று மேலே கூறப்பட்டுள்ளது. ஒரு டன் எடையுள்ள இருப்புச்

சத்தை உருக்க ஒரு டன் நிலக்கரியோ அல்லது மரக்கரியோ (*Charcoal*) வேண்டும். 5-டன் மரத்தைச் சுட்டெரித்தால் தான் ஒருடன் மரக்கரி கிடைக்கும். பத்திராவதியில் தினப்படி 80-டன் இரும்பு உருக்க 80-டன் கரி அதாவது 400-டன் மரம் வேண்டும். மிக அதிகமான காட்டுமரம் தினப்படி வெட்டப்பட வேண்டும். தினம் ஒன்றுக்குப் பெரியவண்டியாய் 800-வண்டி மரக்கட்டை தொழிற்சாலைக்குச் செலவாகிறது.

இவ்வளவு அதிகமான மரக்கட்டை தினப்படி எவ்விதம் கிடைக்கிறதென்று கவனிப்போம். பத்திரா நதிக்கு இரு கரையிலும் பலமைல் தூரத்துக்கு நெருக்கமான காடுகள் இருக்கின்றன என்று உங்களுக்குத் தெரியும். அவை அரசாங்கத்தாருடையன. தொழிற் சாலையின் உபயோகத்துக் கென்றே பிரத்தியேகமாக ஒதுக்க வைக்கப்பட்டவை; அவற்றின் மொத்த விஸ்தீரணம் 350 சதுரமைல். மரக்கட்டைகளைத் தொழிற்சாலைக்குக் கொண்டு வரக் காடுகளின் இடையில் குறுக்கேயும் நெடுக்கேயும் குறுகலான இருப்புப்பாதைகள் போடப்பட்டுள்ளன. காட்டிலுள்ள மரம் ஒரு பக்கமிருந்து வெட்டப்படுகிறது. வெட்டப்பட்ட விடத்தில் மறுபடியும் மரங்கள் வளர்க்கப்பட்டுக் காடுகள் விருத்தி செய்யப்படுகின்றன. அவ்விதம் மறுபடியும் விருத்தி செய்யா விட்டால் சில வருஷங்களில் காட்டிலுள்ள மரம் யாவும் தீர்ந்து விடும். இவ்விதம் நேராமலிருக்கவே காட்டிலாகா அதிகாரிகள் காடுகளை அவ்விடங்களில் மறுபடியும் விருத்தி செய்கிறார்கள்.

தொழிற் சாலை

பத்திராவதி இருப்புத்தொழிற்சாலை (*Iron works*) பத்திரா நதியின் ஓரமாய் ஓர் விசாலமான இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் பரப்பு உத்தேசமாக 50 ஏக்கர் ஆகும். இத்தொழிலை முதலில் நினைத்து ஆரம்பித்தவர் மைசூர் ராஜ்ஜியத்தில் திவானாய் இருந்த ஸர். மோக்ஷகுண்டம் விஸ்வேஸ்வரையா ஆகும். அவர் அதிக அனுபோகமுள்ள ஓர் என்ஜினீயர். அவருடைய யோசனை முயற்சி இவற்றின் காரணமாகவே இது 1923-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது.

தொழிற்சாலை பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுளது. ஒவ்வொரு பிரிவிலும் ஒரு குறிப்பிட்ட தொழில் நடந்து வருகிறது. அவை யாவன: (1) குழாய் வார்ப்புச் சாலை (*Pipe foundry Plant*) (2) மதுசாரம் சுத்தம் செய்யும் சாலை (*Alcohol Refinery*) (3) கீல் தயாராகும் சாலை (*Tar plant*) (4) பொது

வார்ப்புச் சாலை (*General Foundry*) (5) இயந்திரசாலை (*Mechine shop*). இவ்விதம் பிரிக்கப்பட்டிருப்பதன் காரணத்தையும் ஒவ்வோர் இடத்திலும் நடக்கும் தொழிலையும் கவனிப்போம்.

இருப்புச்சத்தை உருக்கி இரும்பாக மாற்ற அடுப்புக்கரி வேண்டும் என்றோம். சாதாரண மரத்தைப் போட்டு எரிப்பதென்றால் சூடு அதிகம் ஏற்படுகிறதில்லை. மேலும் அதற்கு உலை பெரியதாக இருக்க வேண்டும். இதற்காக மரக்கட்டைகளைச் சுட்டெரித்துக் கரியாக மாற்றினால் 5-டன் மரம் 1-டன் கரியாக மாறுகிறது. இவ்விதம் சுட்டெரிக்கும்போது மூடிய பெரிய இருப்புப் பாத்திரத்துக்குள் மரக்கட்டைகளைப் போட்டுப் பாத்திரத்தின் கீழே சூடு ஏற்றினால் கட்டைகள் சிலமணி நேரத்தில் கரியாக மாறுகின்றன. கட்டையிலுள்ள திரவ பதார்த்தம் பாத்திரத்தின்மேலேயுள்ள குழாய் வழியாய் மற்றொரு பாத்திரத்துக்குச் சென்று அங்கே குளிர் அடைகிறது. ஆகவே மரத்தைச் சேர்ந்த ஒரு பொருளும் சேதமாகாமல் காப்பாற்றப்படுகிறது. இவ்விதம் மரத்தைச் சுட்டெரிப்பதற்கு (*Destructive Distillation of Wood*) என்று பெயர்.

மேலே குழாய் மூலம் ஆவியாக வந்து குளிர்ந்த திரவ பதார்த்தத்திலிருந்து நமக்குப் பல பொருள்கள் கிடைக்கின்றன. இவற்றில் முக்கியமானவை மதுசாரமும் (*Alcohol*) கீலும்(*Tar*) ஆகும். மதுசாரம் அதற்கென்று ஏற்பட்ட சாலையில் (*alcohol refinery*) சுத்தி செய்யப்படுகிறது. கீல், கீல்சாலையில் சுத்தம் செய்யப் படுகிறது. இப்பொருள்கள் நல்ல விலை போகக் கூடியவை; ஆனால் இவை ஒரு குறிப்பிட்ட தொழில் செய்யும் போது உபவிளைவுகளாகக் (*By-products*) கிடைத்தவை.

இவ்விதம் தயாரான கரியை எடுத்து எடைக்கு எடை இருப்புச்சத்தைச் சேர்த்து உலையில் போட்டு எரியவிடுவார்கள். இரும்புடன் கலந்திருக்கும் மண்ணைப் பிரிக்க அதனுடன் சுண்ணும்புக்கல்லையும் சேர்த்து உலையில் போடவேண்டும். சுண்ணும்புக்கல் இருப்புச்சத்திலுள்ள மண்ணுடன் கலந்து உருகி, பாகின் மேல் அழுக்கு மிதப்பது போல் மிதக்கும். இரும்பு கனமானதால் அடியில் தங்கியிருக்கும். இவ்விதம் உலையின் அடியில் உருகிய நிலையில் தங்கியிருக்கும் இரும்பை நான்கு மணிக்கு ஒருதரம் பக்கத்திலுள்ள துவாரத்தின் வழியாய் வெளியில் விட்டு மண்ணில் ஏற்படுத்திய பள்ளங்களில் ஓடவிடுவார்கள். அங்கே அது

குளிர்ந்து பெரிய இருப்புக்கட்டிகளாக மாறும். இவற்றுக்குக் கட்டி யிரும்பு (*Pig iron*) என்றுபெயர். நிலக்கரி போட்டு எரித்து ஏற்படும் இரும்பைவிட இது சுத்தமானது; ஆகவே அதைவிடச் சற்று விலை அதிகமானது.

இந்தக் கட்டியிரும்பைப் பலவிதத்தில் உபயோகிக்கலாம். இதை வார்ப்பு இரும்பு (*Cast iron*), எஃகு (*Steel*) இவைகளாக மாற்றலாம்; என்றாலும் அவ்விதம் மாற்றத்தக்க வசதி அதிகமாய் இன்னும் இங்கே செய்யப்பட வில்லை. ஆனால் கட்டியிரும்பை மறுபடியும் உருக்கி வார்ப்பு இரும்பாகச் செய்கிறார்கள். இவ்வேலை குழாய் வார்ப்புச் சாலையில் (*Pipe Foundry Plant*) நடக்கிறது. அதற்குத் தேவையான இயந்திரவகை யாவும் நவீனமுறையில் அமைக்கப்பட்டுள்ளன. இச்சாலையில் 2 அங்குலம் முதல் 33 அங்குலம் வரையில் குறுக்களவுள்ள இருப்புக்குழாய்கள் வார்க்கப்படுகின்றன. சாதாரணக் கட்டி இரும்பு அவ்வளவு அதிகமாய் விலைபோகாது. ஆகையால் பத்திராவதியில் தயாராகும் கட்டியிரும்பின் பெரும் பாகம் இவ்விதம் குழாய் செய்ய உபயோகப் படுகிறது. பல இடங்களிலிருந்து வாங்க வருவோரின் விருப்பத்திற்குத்தக்க குழாய்கள் இங்கே தயாராகின்றன. பங்களூர் நகரத்துக்கு மொத்தத்தில் 14 மைல் நீளமும் 24 அங்குலம் குறுக்களவுள்ள குழாய்கள் செய்து அனுப்பப்பட்டன. அதே விதம் பவநகருக்கு 10 மைல் நீளமுள்ள குழாய்களும், ஷோலாப் பூருக்கு 4 மைல் நீளமுள்ள குழாய்களும் அனுப்பப்பட்டன.

பத்திராவதியில் தயாராகும் இரும்பும் அது சம்பந்தமான சாமான்களும் மாத்திரம் அதிகமான லாபத்தைக் கொடுக்கவில்லை. அத்தொழில் செய்வதில் இடையே ஏற்படும் உபவிளைவுப் பொருள்களே இப்போது அதிகப் பிரயோஜனப் படுகின்றன. அவற்றில் முக்கியமானவை மதுசாரமும் கீலுமாகும். மதுசாரம் ரசாயன சம்பந்தமாய்ப் பலவகையில் பயன்படுகிறது. கீல் ஒரு முக்கியமான வியாபாரச் சரக்காகும். மேலும் மைசூரில் மின்சாரக் கம்பிகள் போட அதிகமான கம்பங்கள் தேவை. இக்கம்பங்கள் இருப்புக் கம்பங்களாகஇருந்தால் விலை அதிகமாகும். ஆகையால் காட்டு மரங்களை எடுத்து அவற்றுக்குக் கீல்பூசிப் புதைத்து விட்டால் அவை சீக்கிரம் கெட்டுப்போகா. கறையானும் பிடியாது. அதுபோலவே தண்டவாளங்களுக்குக் கீழே போடப்படும் மரக் கட்டைகளுக்கும் கீல் பூசப்படுகின்றன. ஆகவே கீல் தயார் செய்து அதைக் கட்டைகளுக்குப் பூசும் தொழில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

ஆனால் இருப்புத் தொழிற்சாலை சம்பந்தமான திட்டம் சற்று அவசரமாகத் தயாரிக்கப்பட்டு அதற்குத் தேவையான இயந்திரங்கள் அமெரிக்காவிலிருந்து வருவிக்கப்பட்டன. இயந்திரங்கள் வந்திறங்கிய பின் திட்டத்தில் சில மாறுதல்கள் ஏற்படவேண்டியிருந்தன. இயந்திரங்கள் சில மாற்றப்பட வேண்டியதாயின. மேலும் வியாபார மந்தத்தால் இரும்பு விலையும் சற்றுக் குறைந்து போய்விட்டது. ஆகவே இதில் முதலில் சிறிது நஷ்டமே ஏற்பட்டது.

இவற்றை நிர்மாணிக்க முதன் முதலில் சுமார் 120 லக்ஷம் ரூபாய் செலவாயிற்று. அதன் பிறகு ஏற்பட்ட நஷ்டத்தாலும், இன்னும் புதுக்கட்டடங்கள் இயந்திரங்கள் வாங்கியதாலும் இதுவரையில் அச்சாலை சம்பந்தமாக ஏற்பட்ட மொத்தச் செலவு 2 கோடி ரூபாயாகும். கட்டியிரும்பு மாத்திரம் செய்வதில் அவ்வளவு லாபம் வரவில்லை. ஆகவே அதை எஃகாக மாற்றிப் பல பொருள்கள் செய்தால் லாபம் அதிகம் கிடைக்கும். ஆகையால் இன்னும் சுமார் 20 லக்ஷம் ரூபாய் செலவு செய்து ஓர் எஃகுத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதாக அரசாங்கத்தார் முடிவு செய்துள்ளார்கள். மேலும் மரக்கட்டைகளைச் சுட்டெரிக்கும் போது ஏற்படும் திராவகத்திலிருந்து சாராயகாமிலம் (*Acetic acid*) என்னும் திராவகம் தயார் செய்யவும் ஏற்பாடுகள் நடக்கின்றன.

துருக்கியரின் தேசாபிமானம்

துருக்கி அரசாங்கத்தின் தேசப்பாதுகாப்பு முயற்சிகளில் குடிஜனங்களும் பங்கெடுத்துக் கொண்டு ஒத்துழைக்கின்றார்கள். எனவே, துருக்கியக் குடிமக்களில் ஒரு சார்பார் ஒன்று கூடி, தங்கள் சொந்தப்பணத்தைக் கொண்டு கடற்படைக்காகவென்று பெரிய கப்பலொன்றை வாங்கி அரசாங்கத்துக்குக் கொடுத்துள்ளார்கள். வேறொருசார்பாரும் அவ்வாறே பெரிய ஆகாயவிமான மொன்றை வாங்கி முஸ்தபா கமால் பாட்சாவின் சமுகத்தில் சம்மான மளித்தார்கள். இஸ்தம்பூலின் நாவிதத் தொழிலாளர்கள் கூடி ஓர் ஆகாயவிமானம் வாங்கி, துருக்கி சர்க்காருக்குச் சம்மான மளித்தனர். இதே விதமாக ஆஸ்தானுவின் பற்பல கலாசாலைகளின் மாணவர்கள் சேர்ந்து, பல ஆகாய விமானங்களை வாங்கி அளிப்பதற்காக ஏராளமான தொகை சேர்த்து வைத்துள்ளார்கள். சிற்றூர்—கிராமப் பகுதியின் மாணவர்களும் இந்நிதிக்காகப் பணம் வசூல் செய்து வருகின்றார்கள்.

—**தினமணி.**

ஜீவிகளுடைய குணவிசேஷங்கள்

மா. ஏ.

இவ்வுலகின்கண்ணுள்ள வஸ்துக்களை உயிருள்ளன உயிரில்லன என்று இருபிரிவுகளாகப் பிரிப்பது இயல்பு. உயிருள்ளனவற்றை ஜீவிகள் அல்லது சேதனங்கள் என்றும், உயிரில்லனவற்றை அஜீவிகள் அல்லது அசேதனங்கள் என்றும் கூறலாம். ஜீவிகளின் குணங்கள் என்ன? அவற்றிற்கும் அஜீவிகளுக்கும் உள்ள பேதங்கள் யாவை? உயிருள்ளன ஜீவிகளாகும் என்று கூறுவது எளிது; ஆனால் உயிர் அல்லது ஜீவன் என்பதைப்பற்றி நமக்கு விளங்கியுள்ளது வெகு சுவல்பம். உயிர்நூலோர் செய்துள்ள ஆராய்ச்சிகளெல்லாம் ஜீவிகளுடைய குணவிசேஷங்களைப் பற்றியே யல்லது ஜீவன் என்பதைப்பற்றி அல்ல. ஜீவன் என்று தனியாக ஓர் வஸ்து இருக்கிறதா வென்றுகூட ஸந்தேகிக்க இடம் உண்டு. ஓர் வஸ்துவை ஜீவியா அல்லது அஜீவியா என்று தெரிந்துகொள்ள, அது தானாகவே அசைகிறதா சுவாசிக்கிறதா அல்லது இரஸாயன மாறுபாடு ஏதாயினும் அதில் புலப்படுகின்றதாவென்று கவனிக்கிறோம். இவற்றுள் ஏதாவது புலப்பட்டால் அதை ஜீவியாகவும் இல்லாவிட்டால் அஜீவியாகவும் கருதுகிறோம். ஆகவே, குணவிசேஷங்களால் ஜீவிகளை அஜீவிகளிலிருந்து பிரிக்கிறோம். ஊன்றி ஆராயுங்கால் ஜீவிகளுக்கே பிரத்தியேகமாகக் கருதும் அநேக குணங்கள் அஜீவிகளுள்ளும் காணப்படுவதால், சேதனங்களுக்கே உரிய குணங்களை நிர்ணயிப்பது, சாதாரணமாகக் கருதுவதுபோல், எளிதல்ல.

இடம்விட்டு இடம்போகும் சக்தியை ஜீவிகளுடைய முக்கிய குணமாகக் கருதுவதுண்டு; ஆனால் ஜீவிகளாகிய தாவரங்களுக்கு இக்குணமில்லை; கடற்பஞ்சு பவழம் முதலான தாழ்ந்த பிராணிகள் செடிகள்போல் ஓரிடத்திலேயே நிலைத்திருக்கின்றன. இவற்றிற்கு மாறாக அசேதனவஸ்துவாகிய பொட்டாசியத்தைத் தண்ணீரில் போட்டால் அது நீர்வண்டு நீந்துவதுபோல இங்குமங்கும் சுழலுகிறது; இக்காரணத்தால் பொட்டாசியத்தை ஜீவியாகவும், கடற்பஞ்சை அஜீவியாகவும் கருதலாமா? ஆகவே இடப்பெயர்ச்சியைமாத்திரம் ஒரு ஜீவகுணமாகக் கருத இடமில்லை.

ஒரு புழுவைத் தொட்டால் அது சுருங்குகிறது, அல்லது நீளுகிறது, அல்லது பின்வாங்குகிறது. அது இருட்டை நாடுகிறது; வெளிச்சத்தை அகற்றுகிறது. தாவரங்கள் சூரியவெளிச்சம் இருக்கும் பக்கமாகத் திரும்பி வளர்கின்றன. இவ்விதமான மாறுபாடுகள் கற்களில் காணப்படுவதில்லை. ஆகவே ஜீவிகள் சுற்றுவட்டஸ்திதி அல்லது சூழ்வுக்குத் தகுந்தவாறு பிரதிபலிக்கின்றன என்று கூறலாம்; பிரதிகரணசக்தி ஜீவிகளுடைய குணமாகுமென்னலாம். இச்சந்தர்ப்பத்தில், 'நெருப்புப் பொறியுடன் சம்பந்தப்பட்ட வெடியுப்பானது பிரதி பலிக்கவில்லையா?' என்றும் 'பிரதிபலிக்கும் காரணத்தால் வெடியுப்பு சேதனமாகுமா?' என்றும் கேட்பது தகுதியாகும். பிரதிபலிப்பின் பலனுக வெடியுப்பின் வியக்தி சுவபாவம் முழுமையும் மாறுகையில் ஜீவிகள் மாறுவதில்லை. ஜீவிகள் தற்காப்பு நிமித்தமாகத்தான் பிரதிபலிக்கின்றன; தற்காப்புக்கு விரோதமாகப் பிரதிபலிக்கமாட்டா.

மேற்கூறியவற்றிலிருந்து ஜீவிகளுடைய குணங்களை வியக்தமாக நிர்ணயிப்பது அசாத்யம் என்று நினைக்கற்பாலதன்று; சில குணங்கள் அவற்றிற்கே உரியவையாகும். இவற்றுள் முதலாவது ஜீவிகளுடைய இரஸாயன வமைப்பாகும். ஜீவிகளெல்லாம் புரோடோப்ளாஸம் என்கிற வஸ்துவினாலாகியவை. இதை ஹக்ஸ்லி என்கிற பிரபல உயிர்நூல் நிபுணர் ஜீவாதார வஸ்துவாகக் கூறியிருக்கிறார். புரோடோப்ளாஸம் இல்லாமல் ஜீவி இல்லை. இவ்வஸ்துவானது திரவபதார்த்தமுமில்லை, கனபதார்த்தமுமில்லை; ஆனால் இவ்விரண்டிற்கும் நடுத்தரமான கோழைபோன்ற வஸ்துவாகும். இது புரதம், மாவுபதார்த்தம், நிணபதார்த்தம், ஜலம்; உப்புக்கள் முதலான ஸம்யோகவஸ்துக்கள் சேர்ந்த ஓர் மிச்ரவஸ்து. நைட்ரோஜன், கரி, பிராணவாயு, ஜலவாயு, கந்தகம் முதலான முக்கிய மூலப்பொருள்கள் இதில் சேர்ந்துள்ளன. சூழ்வுநிலை பிரதிகூலமாக இருந்தால் எளிதில் அம்மோனியா கரியமிலவாயு முதலான ஸம்யோகவஸ்துக்களாகப் பிரிந்து விடுகிறது.

இரஸாயன அமைப்பைத்தவிர ஜீவிகளினுள்ளே ஸதாகாலமும் நடக்கும் இரஸாயன மாறுபாடுகளை இரண்டாவது குணவிசேஷமாகக் கூறலாம். ஜீவியை எரியும் விளக்குடன் ஒப்பிடுவதுண்டு. விளக்கு எரிவதற்கு வேண்டிய சைதன்யம் எண்ணெயில் அடங்கியுள்ளது; எண்ணெயானது பிராணவாயுவுடன் சேர்ந்து அச்சைதன்யத்தை வெளிப்படுத்தி உபயோகிக்கிறது. இச்சேர்க்கையைப் பிராணகரணம் என்கிறார்கள். இப்பிராணகரணத்தினால்

எண்ணெயானது கரியமிலவாயு ஜலம் முதலான வஸ்துக்களாக மாறிவிடுகிறது. விளக்கு அணையாமல் எரியவேண்டுமானால் மேலும் மேலும் எண்ணெய் விடவேண்டியது அவசியமாகும். இப்படியே ஜீவிகளுடைய தேகவஸ்துவாகிய புரோடோப்ளாஸத்திலுள்ள சைதன்யம் பிராணகரணத்தினால் ஜீவஸம்பந்தமான சுவாசம் சலனம் முதலான வேலைகளுக்கு உபயோகப்படுகிறது; இதனால் புரோடோப்ளாஸமானது கரியமிலவாயு, தண்ணீர், மூத்திரவுப்பு முதலான பதார்த்தங்களாக மாறி நஷ்டமாகிறது. இதற்கு ஈடு செய்ய ஜீவிகள் ஆகாரம் உட்கொள்ளுகின்றன. இவ்வாகாரம் புரோடோப்ளாஸமாக மாறுகிறது. ஆகவே ஜீவிகளுள் ஆகாரம் புரோடோப்ளாஸமாக மாறுகிறது; புரோடோப்ளாஸம் பிராணகரணத்தினால் கரியமிலவாயு மூத்திரவுப்பு முதலான பதார்த்தங்களாக அழிகிறது. இம்மாறுபாடுகளை முறையே ஆக்கச்செயல், அழிவுச்செயல் என்றும், இரண்டையும் பொதுவாக ஜீவரஸாயன முறை என்றும் கூறுவது தகுதியேயாகும்.

நீராவியந்திரம் நிலக்கரியிலுள்ள சைதன்யத்தை பிராணவாயுவினுதவியால் வெளிப்படுத்தி வேலைசெய்வதுபோல், ஜீவியானது ஆகாரத்திலுள்ள சக்தியைப் பிராணவாயுவின் மூலமாகவே வெளிப்படுத்தி வேலைசெய்யும் காரணத்தால் இவ்விரண்டையும் ஒப்பிடுவதுண்டு. மாறுபடுந்திறத்தில் உவமை பொருத்தமாகும்; ஆனால், இயந்திரத்தை நடத்த ஒரு கர்த்தா இருப்பது அவசியம்; வேலைசெய்து நாளடைவில் இயந்திரம் தேய்ந்து போகுமேயொழிய, ஜீவிகளுக்குள்ளதுபோல் ஈடுசெய்யக்கூடிய சக்தி அதற்கு இல்லை; தானகக் கிரியை நாடலும், சூழ்வுக்குத் தகுந்தபடி பிரதிபலித்தலும் இயந்திரத்தினால் முடியா.

வளர்ச்சி ஜீவிகளுடைய குணவிசேஷமாகும். வளர்ச்சி என்பது பரிணாமவிருத்திதானல்லவா? துருசித்திராவகத்தில் போட்ட துருசிக்கட்டியும், உப்புநீரில் போட்ட உப்புக்கல்லும் பிரமாணத்தில் பெரிதாகவில்லையா? ஆனால், இவற்றின் வளர்ச்சிக்கும் ஜீவிகளுடைய வளர்ச்சிக்கும் வித்தியாசம் உண்டு. துருசி உப்பு முதலான அஜீவிகளுடைய வளர்ச்சி அவற்றின் அணுக்கள் மேல் புறமாகப் படிவதனாலேயாகும். ஜீவிகள் வளர்வது அவற்றினின்றும் மாறுபட்ட பண்டங்களின் நஷ்டத்தினாலேயாகும். உதாரணமாக மாடு புல்லைத்தின்று வளர்கிறது; புல்லானது உப்புக்கள், ஜலம், வாயு முதலானவற்றை உட்கொண்டு வளர்கிறது.

ஜீவிகள் ஆகாரத்தை உட்கொண்டு ஓர் உச்சநிலை வரையில் வளர்ந்தபிறகு, தங்கள் இனத்தை விருத்திசெய்யும் சுவபாவ

முடையன. பிராணிகள் முட்டைகளிட்டேனும் குட்டிகள் போட்டேனும் இனத்தைப் பெருக்குகின்றன. செடிகள் வித்துக்கள் மூலமாக விருத்தியாகின்றன. இக்குணத்தை இனப்பெருக்கம் எனலாம்; இனப்பெருக்கமில்லாவிட்டால் ஜீவவர்க்கம் நசித்து விடும் என்று கூறாமலே விளங்கும்.

ஜீவிகள் ஜீவிகளிலிருந்தே ஜனித்து வளர்ந்து தம்மினத்தைப் பெருக்கிப் பின்பு நசிக்கும் சுவபாவமுள்ளன. இந்நிகழ்ச்சிகளைப் பொதுவாக ஜீவிதசக்ரம் என்று கூறலாம்; இவைகள் அஜீவிகளுள் உண்டாவதில்லை.

சாஸ்திர சம்பந்தமான மொழிகள்

அணுக்கள்—*Molecules*
அழிவுச்செயல்—*Katabolism*
ஆக்கச்செயல்—*Anabolism*
கடற்பஞ்சு—*Sponge*
சூழ்வு—*Environment*
ஜீவிகள்—*Living things*
ஜீவரஸாயனமுறை—*Metabolism*
சேதனங்கள்—*Living things*
பவழம்—*Coral*
பிரதிகரணம்—*Response*
பிராணகரணம்—*Oxidation*
புரோடாப்ளாஸம்—*Protoplasm*
பொட்டாசியம்—*Potassium*
மிசிரவஸ்து—*Mixture*
மூலவஸ்து—*Elements*
மூத்திரவுப்பு—*Urea*
ஸம்யோகவஸ்து—*Compound.*



பரபூதூர்

க. அ. நீலகண்ட சாஸ்திரி, எம். ஏ.

பரபூதூர் என்பது சாவகத்தீவிலுள்ள ஒரு பெரிய பௌத்த ஸ்தூபம். இந்தப் பெயர் என்ன பொருளுடையதென்று இன்னும் நிர்ணயிக்கப் படவில்லை.

சாவகத்தீவில் இப்போது பெரும்பாலும் மகம்மதியர் வசிக்கிறார்கள். இங்கே சென்ற நூற்றுவருஷங்களுக்கு மேலாக டச்சுக்காருடைய ஆதிக்கம் இருந்து வருகிறது. இப்போது நாம் பரபூதூரைப் பற்றிக் குறிப்பிடப் போகிற விஷயங்களெல்லாம் அநேகமாக டச்சு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட 'ஆர்க்கியாலஜி' இலாகாவைச் சார்ந்த ஆசிரியர்களால் வெளியிடப்பட்டவைகளேயாகும்.

சாவகத்தீவு முன்னாட்களில் இந்தியாவைச்சார்ந்த ஒருதேசமாகவே விளங்கிவந்தது. சீதையைத் தேடுவதற்காக சுக்ரீவன் பல திசைகளிலுமுள்ள ஊர்களையும் நாடுகளையும் விவரமாகச் சொல்லி தன்னுடைய குரங்குச்சேனைகளை அனுப்பும்போது, கீழ்த்திசையில் இருப்பதாக அவனால் குறிக்கப்பட்ட நாடுகளில் சாவகம் ஒன்று. அப்போது சாவகத்தீவு (யவத்வீபம்) ஏழுராஜ்யங்களடங்கினது. பொற்சுரங்கங்கள் வாய்ந்ததாகவும் இரத்தினங்கள் மிகுந்ததாகவும் புகழ்பெற்றிருந்தது. வால்மீகி ராமாயணத்தில் இந்தப் பகுதியைக் கவனித்துப் பார்த்தால் ஒவ்வொரு திசையிலும் உள்ளபல நாடுகளைச் சொல்லிவிட்டு அதற்குமேல் இருப்பது மனிதரால் செல்லமுடியாத இடங்கள் என்று சுக்ரீவன் சொன்னதாகக் காணலாம்; ஆகையால் இந்த எல்லையை அடைவதற்கு முன் உள்ள நாடுகளெல்லாம் அக்காலத்தில் இந்தியர்களுக்கு நன்றாகத் தெரிந்தவைகளென்றும், அந்நாடுகளுக்கு வியாபாரத்திற்காகவோ அல்லது வேறு எக்காரணம் பற்றியோ அவர்கள் போய்வருவது வழக்க

மாக இருந்ததென்றும் ஊகிக்க இடமுண்டு. சாவகத்தீவில் சுமார் 2000 வருஷங்களுக்கு முன் இந்தியர்கள் குடியேறி அவர்களுடைய நாகரிகத்தைப் பரப்பி அநேக சிறு ராஜ்யங்களை ஸ்தாபித்து வாழ்ந்து வந்தார்கள் என்பதற்குப் பல ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. அந்த ஆதாரங்களுக்குள் முக்கியமானவை நம் நாட்டில் உற்பத்தியாகி, சாவகத்திற் பரவி யிருந்த சைவமதமும் பௌத்த மதமுமேயாம்.

சாவகத்தீவுமட்டுமல்லாமல் அதன் அருகே உள்ள மற்ற நாடுகளிலும் தீவுகளிலுங்கூட இந்தியர்கள் குடியேறியிருந்ததாகத் தெரிகிறது. நம் நாட்டில் காணப்படுவனவற்றைப்போன்ற கல்வெட்டுக்களும், கோயில்களும், விக்கிரகங்களும் இந்நாடுகளிற் காணப்படுகின்றன. இவைகளின்காலம் சாதாரணமாக கி.பி. நான்காம் நூற்றாண்டு முதல் பதினைந்து பதினாறும் நூற்றாண்டு வரையாகும்.

ஆனால் இந்த பரபூதூர் ஸ்தூபத்தைப்போன்ற வேறொரு ஸ்தூபம் எங்கும் காணப்படவில்லை. இதர ஸ்தூபங்களில் ஒன்றேனும் இவ்வளவு பெரிதாயும் இத்தகைய சிற்பவேலை முற்றிலும் நிறைந்ததாயும் இல்லை. பரபூதூரின் அளவு அமைப்பு அழகு முதலியவற்றை எடுத்துரைக்குமுன், ஸ்தூபம் என்றால் என்ன, அது எதற்காக யாரால் ஏற்படுத்தப்பட்டது என்ற விஷயங்களைச் சுருக்கமாகச் சொல்லுவோம்.

ஸ்தூபத்தைப் பௌத்தர்களுடைய கோயில் என்று ஒருவாறாகச் சொல்லலாம். ஆனால் நமது கோயில்களைப்போல விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து தொழுதுவரும் இடங்களல்ல ஸ்தூபங்கள். நாம் கோயில்களிலுள்ள சுவாமிகளைத் தொழுவதைப் போல், பௌத்தரும் சமணருங்கூட ஸ்தூபங்களையே தொழுவதும் பிரதக்ஷிணம் செய்வதும் வழக்கம்.

ஸ்தூபங்களைத் தாதுகர்ப்பம் என்றும் சொல்லுவதுண்டு; அதாவது தாதுவைத் தனக்குள் அடக்கிக்கொண்டிருக்கும் ஒரு கட்டடம் என்பது பொருள். தாது என்பது சரீர தாது; சாரீரம் என்றும் சொல்லப்படும். இது ஒரு மஹாபுருஷன் இறந்ததும், அவனுக்குரிய ஸம்ஸ்காரங்களை முடித்தபிறகு அவன் சரீரத்தினுடைய சாம்பலையும் எலும்புகளையும் சேகரித்துச் சாதாரண ஜனங்கள் அவைகளை நெடுநாள் வணங்கும்படி நேர்த்தியான சிறுபெட்டிகளில் அடக்கஞ்செய்து அவைகளை ஒவ்வோரிடத்தில் பதித்து அவ்விடங்களைக் குறிக்க ஸ்தூபங்களைக் கட்டினார்கள். அதன்பிறகு அந்தத் தாதுவை வணங்க விரும்புவோர்கள் அவைகளடங்கிய ஸ்தூபங்களையே வணங்கி வந்தார்கள். முதல் முத


லில் புத்தருடைய தாதுக்களையே ஸ்தூபங்களில் அடக்கிவைத்தார்கள். நாளடைவில் அவருக்குப்பின் வந்த பிரபல பௌத்த சன்னியாசிகளும் இம்மாதிரி கொண்டாடப்பட்டுவந்தார்கள்.

இப்படி ஏற்பட்ட 'ஸமாதி ஸ்தூபங்கள்' ஒருவகை. இவைகளைத் தவிர வேறுவிதமான ஸ்தூபங்களும் உண்டு. அவைகள் முக்கியமான ஸம்பவங்கள் நடந்த இடங்களைக்குறிப்பதற்காக ஏற்பட்ட ஞாபகச்சின்னங்களாகும். உதாரணமாக, புத்தர் கயா க்ஷேத்திரத்தில் ஞானம் அடைந்து காசிக்கு அடுத்த ஸாரநாத் என்னுமிடத்தில் தமது முதல்பிரசங்கத்தைச் செய்தார். இவ்விடங்களில் ஸ்தூபங்கள் கட்டப்பட்டன.


பொதுவாக ஸ்தூபங்களைக் கட்டுவது ஒரு தர்மகாரியமாகவும் அவைகளை வணங்குவது பௌத்தமதத்தினருடைய முக்கியமான வழக்கங்களில் ஒன்றாகவும் ஏற்பட்டுக்கொண்டு வந்தது. இந்த ஏற்பாடுகள் சுமார் கி. மு. நான்கு அல்லது ஐந்தாம் நூற்றாண்டுகளில் ஆரம்பமாயிருக்கவேண்டும்.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் ஆண்ட மௌரியவம்சத்தரசனை அசோக மஹாராஜா 84,000 ஸ்தூபங்கள் கட்டினானென்று ஓர் ஐதிகமுண்டு.


ஸ்தூபங்களின் அமைப்பை எளிதில் விளக்குவதாக உள்ள ஒரு படம் இதோ இருக்கிறது (1). தரைமட்டத்திற்குமேல் சில அடிகள் உயரமுள்ள ஒரு பீடம் இருக்கிறது; இந்தப் பீடம் சதுரமாகவோ அல்லது வட்டமாகவோ இருக்கலாம். இந்தப் பீடத்தின்மேல் ஸ்தூபத்தின் உடல் என்று சொல்லக்கூடிய பாகம் பெரும்பான்மை அர்த்தகோள வடிவாய் அமைக்கப்பட்டிருக்கும். அதைச் சுற்றிப் பிரதக்ஷிணம் செய்வதற்கு வேண்டிய இடம் பீடத்தின்மேல் காலியாக விடப்பட்டிருக்கும். இந்தப் பீடம் சில ஸ்தூபங்களில் பல மேடைகளாய் ஒவ்வொரு மேடையிலும் பிரதக்ஷிணம் செய்ய வசதியுடன் கூடினதாய் இருக்கும். முதற்சித்திரத்தில் இரண்டு மேடைகள் காணலாம். ஸ்தூபத்தின் உடலின்மேல் கண்டமும் சிகரமும் அதற்குமேல் ஒன்று அல்லது மூன்று அல்லது ஐந்து குடைகளும் இருப்பதுண்டு. பீடத்தின் பக்கங்களிலும் உடலின் மீதும் புத்தசரித்திரக்கதைகளையும் புத்தருடைய பூர்வஜன்ம (ஜாதக)க்கதைகளையும் சிற்பங்களில் அமைப்பது வழக்கம். இம்மாதிரி கிருஷ்ணா ஜில்லாவிலிருந்த அமராவதி ஸ்தூபத்தில் அமைக்கப்பட்டிருந்த சிற்பங்கள் வெகு நேர்த்தியானவை; அவைகளில் சிலவற்றை, சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் இப்பொழுதும் காணலாம். பெரிய ஸ்தூபங்களின் சிகரம் தரைமட்டத்திற்குமேல் 150 அல்லது 200 அடிகள்கூட இருப்பதுண்டு.




1. ஸ்தூபத்தின் அமைப்பு




2. பரபூதூர் அடிமனை அமைப்பு




3. பரபூதூர் ஆகாயத்தோற்றம்



4. பரபூதூர் வாயில்



5. பரபூதூர் பிராகார அமைப்பு



6. பரபூதூர் வட்டமேடை ஸ்தூபங்கள்

ஒரு பெரிய ஸ்தூபத்தைச் சுற்றிப் பல சிறிய ஸ்தூபங்களும் பௌத்த சந்நியாசிகள் அதாவது பிக்ஷுக்கள் வாஸம் செய்யத் தகுந்த விஹாரங்களும் ஏற்படுவதுண்டு.

இப்படிப்பட்ட ஸ்தூபங்களும் விஹாரங்களும் இந்தியா முழுவதும் பரவினதல்லாமல் இந்தியர்கள் குடியேறிய அயல் நாடுகளிலும் தீவுகளிலும் அமைக்கப்பட்டன. பௌத்தர்களால் முதல் முதல் ஏற்படுத்தப்பட்ட ஸ்தூபங்களையும் விஹாரங்களையும் பின்பற்றியே ஹிந்துமதக் கோயில்களும் மடங்களும் ஏற்படுத்தப் பட்டன என்று கருதுவர் சரித்திர ஆசிரியரில் ஒரு சாரார்.

இனி, பரபூதூர் ஸ்தூபத்தைச் சற்று நன்றாகக் கவனிப்போம். இதன் அடிமனை அமைப்பையும் (*ground-plan*) ஆகாயத்தோற்றத்தையும் (*air-view*) இரண்டு படங்களில் (சித்திரம் 2-3) இங்கே தந்திருக்கிறோம். இவைகளைப்பார்த்த அளவிலேயே பரபூதூரின் பெருமையும் வனப்பும் அதன் நிர்மாண நேர்மையும் எளிதில் யாவருக்கும் புலப்படும். இப்பெருங் கட்டடமானது சாவகத் தீவின் நடுவில் நாலுபுறமும் மலைகளால் சூழப்பட்ட கேடு என்னும் சமபூமியின் நடுவிலுள்ள ஒரு சிறு குன்றை ஆதாரமாகக் கொண்டு நல்ல காட்சிகள் எங்கும் நிறைந்த ஒரு பிரதேசத்துக்கு நடுநாயகமாய் விளங்குகின்றது. இந்த ஸ்தூபத்தின் அடிப்பாகம் ஒன்றின்மேல் ஒன்றாகவும் படிப்படியாகக் குறைந்து கொண்டுபோகும் அளவுடையவையாகவும் அமைக்கப்பட்ட ஆறு சதுரமேடைகள் வாய்ந்தது: தரை மட்டத்தில் ஒவ்வொரு பக்கமும் 495 அடி நீளமுள்ளது. ஒவ்வொரு பக்கத்தின் நடுப்பாகமும் கொஞ்சம் கொஞ்சம் வெளியே இருமுறை இழுத்துக் கட்டப்பட்டிருக்கிறது; இதே அமைப்பானது சதுரமேடைகள் ஒவ்வொன்றிலும் ஏற்பட்டிருப்பது அடிமனைப் படத்தைப் பார்த்தால் தெரியும். ஒரு மேடையிலிருந்து அடுத்த மேல்மேடைக்குப் போக ஒவ்வொரு பக்கத்தின் நடுவிலும் நேர்த்தியாக அமைக்கப் பட்ட படிக்கட்டுகளும் வாயில்களும் உண்டு; இந்த வாயில்களில் ஒன்றின் படத்தை (சித்திரம் 4) இங்கே காணலாம். அது நன்றாகக் கவனிக்கத்தக்கது. நமது ஆலயங்களில் உத்ஸவவிக்கிரங்களுக்குப் பின்னால் வைக்கப் பட்டிருக்கும் திருவாசியைப்போல் அந்த வாயில்களில் முகப்புக்கள் அமைந்திருப்பதைக் காண்கிறோம். இந்த அமைப்பின் பெயர் காலமகரம் எனப்படும். இந்தக் காலமகரத்தை எத்தனையோ வேறுபாடுகளுடன் சாவகநாட்டுச் சிற்பிகள் பற்பல இடங்களில் அமைத்திருக்கிறார்கள். பரபூதூர் வாயில்களின் இரண்டுபக்கங்களிலும் உட்புறமும் வெளிப்புறமும் தரங்

தரமான சிங்கங்கள் வாயிலுக்குக் காவல்போல வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சதுரமேடையிலும் பிரதக்ஷிணம் செய்ய வசதி உண்டு; இந்தப் பிராகாரங்களில் பிரதக்ஷிணம் செய்வோர்களுக்கு ஸ்தூபத்துக்கு வெளியே உள்ள இடங்களுள் ஒன்றும் தெரியாதபடி இவை உயர்ந்த சுவர்களால் மறைக்கப்பட்டிருக்கின்றன; இருபுறமும் சுவர்களில் அமைக்கப் பெற்ற அழகான சிற்பங்களும், தலைக்குமேல் ஆகாயமும் தெரியுமே ஒழிய வேறொன்றும் கண்ணுக்குத் தெரியாது. சிற்பங்கள் பெரும்பாலும் புத்தசரிதத்தையும் ஜாதகக்கதைகளையும் தழுவிச் செதுக்கப் பெற்றிருக்கின்றன. பிரதக்ஷிணம் செய்யும் பிராகார அமைப்பைக் காட்டுகிறபடத்தை ஐந்தாவதாகக் கொடுத்திருக்கிறோம். அதில் வாயிலின் மேலுள்ள கோபுரத்தில் இருக்கும் புத்தவிக்கிரகத்தைக் கவனிக்கவேண்டும்.

இந்தச் சதுர மேடைகளை விட்டு மேலேபோவதற்குமுன் ஒரு விசேஷம் இங்கே குறிப்பிடவேண்டியது அவசியம். அதாவது, தரைமட்டத்தில் உள்ள மேடை சிற்பங்கள் ஒன்றுமில்லாத ஒரு பெரிய வெறும் திண்ணை; ஆனால் அந்தத்திண்ணைக்குப் பின்னால் அதனால் நன்றாக மறைக்கப்பட்டவைகளாக இருந்தும் வெகு நேர்த்தியாக அமைந்தவையாக உள்ள சிற்பங்கள் அநேகம் இருக்கின்றன. இந்தச் சிற்பங்கள் எல்லாவற்றையும் இந்தத் திண்ணையை ஒவ்வொரு சிறுபாகமாகப் பிரித்தெடுத்துப் படம் பிடித்துப் பிறகு அந்தப்பாகத்தைத் திரும்பக்கட்டிவிட்டு, அடுத்தபாகத்தைப் பிரித்துப் படம்பிடித்து, இதே மாதிரியாக நான்கு பக்கங்களிலும் மறைந்துகிடக்கும் சிற்பங்களையும் படங்கள் பிடித்திருக்கிறார்கள். ஆனால் இந்தச் சிற்பங்கள் இப்படி ஒருவர் கண்ணுக்கும் எளிதில் அகப்படாதபடி மறைந்து கிடக்கக் காரணம் என்ன? இந்தக் கேள்விக்குப் பல ஆசிரியர்கள் பல விடைகள் அளிக்கிறார்கள். அவைகளில் முக்கியமான இரண்டை இங்கே குறிப்பிடுவோம். முதலாவது: பரபூதூர் கட்ட ஆரம்பிக்கப்பட்டு வேலை பாதி நடந்து கொண்டிருக்கும்போதே அஸ்திவாரம் போதாததனால் மேல் ஏற்றிக்கொண்டு போகும் கற்களின் பாரம் தாங்காமல் கட்டடம் குலைய ஆரம்பித்திருக்கவேண்டும்; இப்பெரிய குறையைத் தீர்ப்பதற்காக அடிப்பாகத்திலே உள்ள சிற்பங்களை மறைத்தாவது ஒரு சரியான முட்டு எல்லாப்பக்கங்களிலும் கொடுக்க எண்ணியே இவ்வாறு செய்தார்கள் போலும். அந்த முட்டுக்கட்டடந்தான் இப்போது நாம் குறிப்பிட்ட பெருந்திண்ணையாக விளங்குகிறது என்று கூறுவர் கட்டட இலாகா உத்தியோகஸ்தர்களும் வேறுசிலரும். இரண்டாவது அபிப்பிராயம் என்னவென்பதை மேலே கூறுவோம்.

இனி, சதுரமேடைகளுக்குமேல் என்ன இருக்கிறதென்று பார்ப்போம். ஆருவது மேடைக்குமேல் ஏறினதும் ஒரு திண்ணையும் அதன்மேல் படிப்படியாய் மூன்று வட்டமான மேடைகளும் காணப்படுகின்றன. ஒவ்வொரு வட்டமேடையிலும் வரிசையாக சிறு ஸ்தூபங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன; இவைகளின் கணக்கு: முதல் மேடையில் முப்பத்திரண்டு, அதற்குமேல் உள்ளதில் இருபத்துநான்கு, கடைசி மேடையில் பதினாறு; ஆக மொத்தம் எழுபத்திரண்டு. இந்த ஸ்தூபங்கள் எல்லாம் ஒரே மாதிரியானவை; வேறோரிடத்தில் காணப்படாத மாதிரி அது; ஏனென்றால் பிற ஸ்தூபங்களைப்போல் கட்டியான கட்டடங்களாக இராமல், இந்த ஸ்தூபங்களில் ஒவ்வொன்றும் உள்ளே ஓர் அறையோடு கூடியும், அவ்வறையில் வெகு நேர்த்தியான புத்தவிக்கிரகமொன்றைப் பெற்றும், இந்த விக்கிரகம் பார்ப்பவர்களுக்குக் கொஞ்சம் கொஞ்சம் தெரியும்படிக்கு ஏற்பட்ட சிறுசிறு துவாரங்களைச் சிகரத்தில் பெற்றும், ஒவ்வொன்றும் ஓர் பெருங்கோயில் மணிபோன்ற வடிவையுடைய புத்தக் கூடு என்று சொல்லத்தகுந்ததாய் அமைந்திருக்கிறது. இந்த அமைப்பின் நேர்த்தியை நாம் கடைசியாய்க் கொடுத்திருக்கும் ஆருவது படத்தைப் பார்த்து அறிந்து கொள்ளலாம். கடைசி வட்டமேடையின் நடுவில் எல்லாவற்றிலும் பெரிதாய் 52 அடி குறுக்களவுடையதாய் ஒரு வட்ட ஸ்தூபம் தெரிகிறது. ஆதிகாலத்தில் இதன் உச்சியில் ஒரு பெரிய சிகரம் இருந்திருக்க வேண்டும். இந்த ஸ்தூபத்தின் உள்ளே என்ன இருக்கிறது என்று அறிய வழியில்லாமல் எல்லா இடத்திலும் இது நன்றாக அடைக்கப்பட்டிருக்கிறது. இதன் உள்ளே அறைகுறையாய் வேலைமுடியாத புத்தவிக்கிரகம் ஒன்று இருந்ததாகச் சிலர் கருதுகிறார்கள்; வேறுசிலர் இது வெறுங்காலியாகவே விடப்பட்டிருக்கவேண்டுமென்று கருதுவர். இந்த வட்டமேடைகளி ல்யாதொரு சிற்பவேலையும் இல்லை. வெளித்தோற்றத்தை மறைக்கும் சுவர்களும் இல்லை. எல்லா இடங்களும் சுத்தமாய் அலங்காரங்கள் யாதொன்றுமில்லாமல் வெற்றிடங்களாய் விடப்பட்டிருக்கின்றன. இதன் காரணம் என்னவென்றால், கீழே உள்ள சதுரமேடைகள் இந்திரியங்கள் நுகரக்கூடிய சுவைகள் நிறைந்த போகபூமியைக்குறிக்கின்றனவென்றும், மேலே உள்ள வட்டமேடைகள் நிர்மலமான மனத்தால் அடையத்தகுந்த யோகபூமியைக் குறிக்கின்றன என்றும் கருதுவர் சிலர்.


மணிக்கூண்டுகளில் அடைக்கப்பட்ட எழுபத்திரண்டு புத்த விக்கிரகங்களைத்தவிர, சதுர மேடைகளிலும் பெரிய பெரிய புத்த விக்கிரகங்கள் இருக்கின்றன. இவைகளிலே மிகவும் உயர்ந்தவரிசை

யில் அமைக்கப்பட்ட விக்கிரகங்கள் பக்கத்துக்குப் பதினாறு வீதம் மொத்தம் அறுபத்துநான்கு. இந்த அறுபத்துநான்கு புத்தர்களும், முன்கூறின எழுபத்திரண்டு புத்தர்களைப்போலவே, இரண்டு கைகளையும் மார்பின் எதிரில் சேர்த்து ஒரு சக்கரத்தை உருட்டுவதுபோல் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்; இதுதான் தர்மசக்ரப்ரவர்த்தன முத்திரை. புத்தனை அறவாழி யுருட்டுவோன் என்று நூல்கள் கூறுவது யாவரும் அறிந்தவிஷயம்; அறவாழி யுருட்டுதலாவது எல்லா ஜனங்களுக்கும் சமயக்கொள்கைகள் விளங்கும்படியாக உபன்னியாசம் செய்வதுதான். இன்னும், ஒவ்வொரு திசையிலும் 92 புத்தவிக்கிரகங்கள் அவ்வத்திசைக்கு உரிய முத்திரைகளுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன: கிழைத்திசையில் பூமி ஸ்பரிசமும், தெற்கில் வரதமுத்திரையும், மேற்கில் தியானமும், வடபுறம் அபய முத்திரையும் என்பவையே. ஆகமொத்தம் புத்தவிக்கிரகங்களின் கணக்கு 4×92+64+72= 504.

இந்தப்பெரிய பரபூதூர் ஸ்தூபத்தின் விவரங்களை ஒவ்வொன்றாய் விளக்கிக் கூறப்புகுந்தால் அவை ஒரு பெரும் தனி நூலாகும். அதற்கு இங்கே அவகாசம் இல்லை. இந்தஸ்தூபத்தைக் குறித்த சிலமுக்கியமான விஷயங்களைக் குறிப்பிடுவதே நமது கருத்து. இது யாரால் எப்போது கட்டப்பட்டது என்று கேட்டால் அதற்கு முடிவான விடை சொல்ல இயலாது. ஐரோப்பியர்கள் சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் சாவகத்தீவிலுள்ள ஜனங்களைக் கேட்டபோது அவர்கள் முற்காலத்தில் ஓரரசன் தெரியாத்தனமாய்த் தன்பெண்ணையே மணந்து கொள்ள நேர்ந்த பாபத்தைத் தான் கண்டுபிடித்ததும் அதற்குப் பிராயச்சித்தமாக இதைக்கட்டினானென்றும், ஓர் அரசன் ஓர் அழகான பெண்ணை மணந்துகொள்ள விரும்பினகாலத்து அவள் ஆக்கினைப்படி இதைக் கட்டி முடித்தபின் அவளை மணந்தான் என்றும் இன்னும் பலவாறாகவும் கதைகள் கட்டினார்கள். யதார்த்தமாகப் பார்த்தால் நமக்கு உண்மையில் யார் இதைக்கட்டினார்களென்று அறிந்து கொள்ளத்தக்க ஆதாரம் யாதொன்றும் இல்லை. அடியில்உள்ள பெருந்திண்ணையால் மூடப்பட்டுக் கிடக்கிற சிற்பங்களைப் பிரித்து இப் படம் பிடித்த காலத்தில் அவைகளின் தலையில் சில தலைக் கட்டு சாஸநங்கள் காணப்பட்டன; இவை கல்லில் செதுக்கப்படாமல் ஏதோ ஒருவர்ணமசியால் எழுதப்பட்டிருக்கின்றன. படித்துப்பார்த்ததில் கீழே செதுக்கப்பெற்றிருக்கும் சிற்பங்களைக் குறிப்பால் விளக்குவனவாகவும் காணப்படுகின்றன. இதைக் கவனித்தால், இந்தத் தலைக்கட்டு சாஸநங்கள், சிற்பிகளுக்கு அவர்கள் செதுக்கவேண்டும் சிற்பங்களையும் அந்தச் சிற்பங்கள்

அமைக்கப்படவேண்டும் இடங்களையும் குறிக்க ஏற்பட்டிருக்க வேண்டுமென்று ஊகிக்க இடமுண்டு. இந்த எழுத்துக்களின் வடிவத்தைக் கொண்டு இந்த ஸ்தூபம் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பட்டிருக்கவேண்டுமென்று தீர்மானிக்கலாம். அக்காலத்தில் சாவகத்தில் அரசாண்ட மன்னர்கள் சைலேந்திரவம்சத்தைச் சார்ந்த பௌத்தஅரசர்கள் என்பது பிற சாஸநங்களால் தெரியவருகிறது.

தரைமட்டத்தில் உள்ள சிற்பங்கள் வெறுந்திண்ணையால் மறைபட்டிருப்பதற்குச் சிலர் சொல்லும் காரணத்தைக் குறித்து, பிறர்கூறும் சமாதானம் வேறு ஒன்று உண்டென்றும், அதை நாம் மேலே கூறுவதாகவும் சொன்னோம். அது பின் வருமாறு: இந்த மஹாஸ்தூபமானது மனிதனுடைய ஸம்ஸார வாழ்க்கையையும் அவன் புண்ணியச்செயல்களால் பரிசுத்தமான மனத்தினால் அடையும் ஞானத்தால் பெறக்கூடும் நிர்வாணமாகிய மோக்ஷத்தையும் வெள்ளிடைமலையாக விளங்கவைக்க ஏற்பட்ட ஓர் பெருங்கருவி. இதன் அடிப்பாகத்தில் திண்ணையால் மூடப்பட்ட சிற்பங்களானவை பாமர ஜனங்களால் கொண்டாடப்பட்டும் புத்திமான்களால் அடக்கி மறக்கப்பட வேண்டியனவுமான இம்மைச் சுகதுக்கங்களைக் குறிக்கின்றன; அதாவது சிற்றின்பவுலகம். இச்சிற்றின்பவாழ்க்கையை வெறுத்துப் பேரின்பம் தேடுவான் ஒருவன் படிப்படியே ஸாதகங்கள் பெற்று மேன்மையை அடையும் வழியைக் குறிக்கின்றன அதற்குமேலுள்ள மேடைகள். புத்த மதக்கொள்கைகளின் பிரகாரம் சிற்றின்பவுலகத்தைக் காமதாது வென்று கூறுவர்; அதற்குமேல் ரூபதாது அரூபதாது என்று இரண்டு உலகங்கள் உண்டு. ரூபதாதுவைக் குறிப்பவை சதுர மேடைகள்; அரூபதாதுவைக் குறிப்பவை வட்டமேடைகள். கடைசியாய்ச் சிகரத்திலிருக்கும் பெரிய ஸ்தூபம் முற்றிலும் மறைக்கப்பட்டு இன்னவிதமென்று உரைக்கவொண்ணாத நிர்வாண தசையைக் குறிப்பதாகும். இம்மாதிரி இந்த பரபூதூர் ஸ்தூபத்தின் இயற்கையை நிர்ணயிப்போமானால், அடியில் மூடப்பட்டுக் கிடக்கும் சிற்பங்களை ஆதிமுதல் மூடவேண்டும் என்ற எண்ணத்துடனேயே செதுக்கினார்கள் என்று கருதவேண்டும்.



புதுமைப் பெண்

ந. பிச்சமூர்த்தி, பி. ஏ.

அங்கம் 1—காட்சி 1

[இடம்—ஹிமோத்கிரி மலைச்சாரலில் பெரிய இயற்கை மண்டபம்.]

பரமசிவன்:—கணபதி! நாமிருக்கும் இடத்தில்கூட காற்றிலே என்ன குழப்பம்? என்ன இருட்டு?

கணபதி:—(தலையைத்திருப்பாமல்) ஓம் ஓம் ஓம் (வாய் அசைபோடும் சப்தம் கேட்கிறது.)

பரமசிவன்:—என்னடா! கேட்டால் ஓம் ஓம் என்கிறாயே?

சுப்பிரமணியர்:—இல்லையப்பா! கொழுக்கட்டை மலை மூன்று பாக்கி. அடுத்த பிள்ளையார் சதுர்த்திவரை ஒருபக்ஷமிருக்கிறது. அதனால் அண்ணாவுக்கு வேலைத் தொந்தரவு; பதில் சொல்ல வாய் ஒழியவில்லை.

பரமசிவன்:—அண்ணாவைப் பரிகாசம் பண்ணாதே, அதிகப் பிரசங்கி.

சுப்பிரமணியர்:—இல்லை. நான் பொய்யே சொல்லுகிற வழக்கமில்லை. (பரமசிவன் திரும்பிப்பார்க்கிறார்.)

கணபதி:—(சாவதானமாய்) என்ன—ஹிக்—அப்பா—ஹிக்—சொன்னாய்?—ஹிக்.

பரமசிவன்:—குழந்தாய்! விக்கல் வருகிறது. முதலில்போய் ஆகாசகங்கையில் தண்ணீர் குடித்துவிட்டுவா. பிறகு சொல்லுகிறேன்.

கணபதி:—(தீர்த்தம் சாப்பிட்டுவிட்டு) பேவ், பேவ். (ஏப்பம் விடுகிறார்.) ஸ்ஸ்! அப்பாடா! இப்பொழுது சொல்லுங்கோ.

பரமசிவன்:—ஒன்றுமில்லை. காற்று இங்கே தெளிவாக இல்லையே, ஏனென்று கேட்டேன்.

கணபதி :—நல்ல கேள்வி? அதற்கு என்னைப் பார்த்தீர்களே. நெருப்பு, காற்று இந்தவிஷயமெல்லாம் அவனுக்குத்தான்தெரியும். தம்பியைக்கேளுங்கோ—சூரப்புலியை.

பரமசிவன் :—உனக்குத் தெரியுமாடா, சுப்பிரமணியா?

சுப்பிரமணியர் :—குறிப்பிட்ட விஷயம் தெரியாது. பூலோகத்தில் எதோ குழப்பமாம். ஏட்டிக்குப் போட்டியாம். அந்த வாடைதான் வந்து நம்முடைய காற்றைக் குட்டிச்சுவராய் அடித்துவிட்டதுபோலிருக்கிறது.

பரமசிவன் :—புரியவில்லை நீசொல்வது. பார்வதி! பார்வதி!!

(பார்வதி ஒரு குகைக்குள்ளிருந்து வருகை.)

பார்வதி :—இதோவந்துவிட்டேன்....ஏன்?

பரமசிவன் :—இந்தக் காற்றிலே என்ன அசடு கலந்திருக்கிறது தெரியுமா?

பார்வதி :—அதை நான் கண்டபடி. நாரதர் இங்கே நேற்று வந்தார். பூமியில் ஏதோ அமர்க்களப் படுகிறதென்று நீளமாகக் கதை சொல்ல ஆரம்பித்தார். எனக்குக்கேட்கச் சாவகாசமில்லை. விபூதி முட்டம்போடக் கோமயம் உண்டை செய்துகொண்டிருந்தேன். 'நாளைக்கு வாங்கோ, கதை கேட்கிறேன்' என்று சொன்னேன். இப்பொழுது வருவார்.

பரமசிவன் :—(சிறிது கோபத்துடன்) இந்த இழவுதான்! சற்றுக் கண்மூடி தியானத்திலிருந்தால் ஏதாவது தகரார். தர்மபத்னியானவள் விஷயம் இன்னதென்று ஒருவார்த்தைகேட்டுத் தெரிந்து வைத்துக்கொள்ளக் கூடாதா? என்னவோ சொல்லுவார்களே—மனையில் உட்காருவதற்கும் தான்தான். மாவிலை கொண்டு வரவும் தான்தான். அதுபோல் எல்லாவற்றிற்கும் நான்வேண்டும். ஊம்!

பார்வதி :—ருத்ராம்சம் கிளம்புகிறது. நான் உள்ளேபோகிறேன்.

(பார்வதி உள்ளேபோய்விடுகிறாள்; நாரதர் வருகை.)

நாரதர் :—(பரமசிவனைப் பார்த்துவிட்டு சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டுக் கொண்டே) சிவாய நமசிவாய. (எழுந்திருந்து பாடுகிறார்.)

உலகத்தை உயிர்ப்பித்தாக்கி
  உயிர்களைத் துளிரச்செய்தோய்!
மல இருள் எரிக்க வேண்டி
  அறிவினைச் சுடரச் செய்தோய்!

விண்ணோக்கை விற்றுவந்து
கீர்த்தியுடன் மாலைமாற்றும்,
மண்ணுன மாந்தர் போக்கின்
நேர்த்திகளைக் கேளுமரசே,
சிவாய நமசிவாய.

பரமசிவன்:—தீர்க்காயுஷ்மான் பவஸௌம்ய. பக்தா! வரும் போதே மல்லுக்குத் தயாராக வருகிறுயே, என்ன விசேஷம்?

நாரதர்:—ஒன்றுமில்லை. வெறும்மனே தான். நாளாகிவிட்டதே. பார்த்துவிட்டுப்போகலாமென வந்தேன்.

பரமசிவன்:—பேஷ். சந்தோஷம். சௌக்யம்தானே? இன்று ஏன் மஹதீ வீணையின் த்வனி சௌம்யமில்லை?

நாரதர்:—இல்லையே. சரியாகத்தா னிருக்கிறது.

பரமசிவன்:—அப்படியா? ஆனல் சரி. விசேஷம் ஏதாவ திருந்தால் சொல்லு.

கணபதி:—இந்த மாதக் கணக்கு ஏதாவது சூத்திரக் கயிறு போட்டுப் பின்னியாயிருக்கும். அப்படிதானே?

பரமசிவன்:—இது ஏதடா கஷ்டம்! பெரியவர்கள் பேசும் பொழுது சின்னப் பயல்கள் கரடியை விட்டு ஓட்டிக்கொண்டு! போங்களடா இரண்டுபேரும். (நாரதரைப் பார்த்து) கணபதியைக் கவனிக்காதே. சமாசாரம் சொல்லு.

நாரதர்:—எங்கே விசேஷமென்று கேட்கிறீர்கள்? இந்திர சபையிலா? ரிஷிகள் நடுவிலா? பாரததேசத்திலா? மற்றைய பூப்பிரதேசத்திலா?

பரமசிவன்:—எங்கே விசேஷமோ அதைச்சொல்லு. இங்கே அடிக்கும் காற்றைக் கவனிப்பதிலிருந்து எனக்கு முன்னுணர்ச்சி ஏற்படுகிறது.

நாரதர்:—சமீபத்தில் பூமிக்குப்போயிருந்தேன். உலகத்தில் ஒரே கக்ஷிப்பிரதிகக்ஷி. தொழில்பாகுபாட்டில் குழப்பம். சொத்து, சுதந்திரம், பணம் காசு, வீடு வாசல் முதலிய ஒவ்வொன்றும் தேசத்திற்குச் சொந்தம்; மக்களுக்குப் பொதுவாகச் சொந்தம்; தனி மனிதனுக்கில்லை யென்ற பரம வேதாந்தக் கொள்கை ஒன்று கிளம்பி இருக்கிறது. அது முற்றிலும் பிசகென்று எதிர்க் கக்ஷி.

நந்தி:—(குறுக்கிட்டு) ஸ்வாமி! முதல் கக்ஷிதான் நியாயமானது. சர்வமும் சிவசொத்துத்தானே. தனி மனிதனுக்கு எவ் விதத்தில் பாத்யம்?

பரமசிவன் :—அடே நந்தி! மாடு என்பது சரியாக இருக்கிறதே! அவசரப்படாதே. நாரதா! சொல்லு.

நாரதர் :—தவிர, தேசத்தைச் சுதேசம் என்று சொல்லக் கூடாதாம்.மானிட வகுப்பேதான் தேசமாம். இனிமேல் சண்டைகளே கூடாவாம்.

பரமசிவன் :—ஊம், அப்புறம்?

நாரதர் :—இன்னும் எவ்வளவோ கட்சி. கடைசியாக, ஆண் பெண் என்ற பேதம் பாராட்டுவது சுத்தப் பிசகென்று ஒருபுதுக் கட்சி முளைத்திருக்கிறது. ஆணுக்குள்ளது பெண்ணுக்கும், பெண்ணுக்குள்ளது ஆணுக்கும் என்கிறார்கள். திடுக்கிடக்கூடிய வாதங்கள். என்னால் சொல்லக் கூட இயலாது. சொல்ல அலுப்பாகவுமிருக்கிறது. ஏதாவது நல்ல சிரவணம் செய்வோமென்று இங்கேவந்தேன்.

பரமசிவன் :—நல்லது, நாரதா! காற்றைக் கவனி, ஓம்; மழையைக் கவனி, ஸோஹம். இதுதான் சிரவணம்; உண்மையான சிரவணம். கவனி.

அங்கம் 1 — காட்சி 2

[இடம்—பூவுலகம்; பாரததேசம்; சென்னைப்பட்டினம் டவுன் ஹால். பெரிய கூட்டம். ஸ்திரீபுருஷர்கள் நிறைந்திருக்கிறார்கள். சபை நடந்துகொண்டிருக்கிறது.]

ஸ்திரீ அக்ராசனாதிபதி :—இதுவரையில் ஒவ்வொருவரும் முக்கால் மணிநேரம்பேசி, மத்யானம் ஆரம்பித்த கூட்டத்திற்கு இன்னும் கரைதெரியவில்லை. இனிமேல் இரண்டு நிமிஷத்திற்குமேல் பேச ஒருவருக்கும் அனுமதி கிடையாது.

புருஷ அக்ராசனாதிபதி :—என் சகோதரி சொல்வது நிரம்ப சரி. அடுத்தாற்போல் யார்பேசவேண்டியது? சுசீலையா? சரி.

சுசீலை :—(இருந்த இடத்திலிருந்தே) கடவுளின் மக்களே.

("மேடைக்கு," "மேடைக்கு" என்ற குரல்கள்.)

சுசீலை :—(மேடையினின்று) கடவுளின் மக்களே! நாம் புருஷர்களைப்போல் சமஉரிமை கேட்பதைப்பற்றி நமது சகோதரர் பலர் வசைமாரிபெய்து கண்டித்தாரே அன்றி ஒரு துளியாவது காரணம் சொன்னதாகத்தெரியவில்லை. நமது பழமையான சம்ஹிதைகள் முதலாக நாளது வரையில் நடந்துவந்திருக்கும் ஒவ்வொரு காரியத்திலும் ஆண்மக்களுக்காகவே உலகம் படைக்

கட்டுப்பட்டதென்ற தனிக்கொள்கையே காணப்படுகிறது. அது பற்றித்தான் பெண்பாலார் ஆண்மக்களின் பொடிடப்பிகள்போல் ஒரு சொத்தாகப் பாவிக்கப்பட்டுவருகின்றனர். சதுரங்கக் காய்கள் போல் நகர்த்தப்பட்டு வருகின்றனர். இது வெட்கக்கேடானது. இவ்வுலக நாகரிகத்தின் அமைப்பிலும் சமூக அமைப்பிலும் ஸ்திரீ களுக்கும் பொறுப்பென்பது இருந்தால், ஸ்திரீகளுக்கு ஒரு சட்டம், புருஷர்களுக்கொருசட்டம் என்று ஏற்பட்டிருக்கவே இருக்காது. ஆகையால் நாம் இனியேனும் முற்பட்டு இந்த யுக ஸ்திரீ புருஷ தர்மத்தை மாற்றுவிட்டால் கேடு முண்டிப் போகும்.

(பெண்களுக்கிடையில் பலத்த கரகோஷம்;
கீழேஉட்காருகிருள் சுவீலை.)

ஸ்திரீ அக்ராசனதிபதி:—யார் எதிர்க்கட்சி? வேம்புதீக்ஷிதரா? நடக்கட்டும்.

வேம்புதீக்ஷிதர்:—இளங்கன்றுகளே! நான்சொல்லப்போவது ஒரே வார்த்தை. சுவீலையின் பேச்சில் பழி ஆண்மக்கள்பேரில் போடப்பட்டது. அது நியாயமல்ல. ஸ்திரீ தத்வத்தையும், ஸ்திரீ தர்மத்தையும் ஸ்திரீகளே உலகத்தின் சிருஷ்டி பாரத்தை வகித்து வருவதையும் பார்ப்பதிலிருந்து—காமாலையற்ற கண்களுடன் பார்ப்பதிலிருந்து—பிறகு ஏதாவதிருந்தால் அதற்கு ஜவாப் பிரும்மாவே யல்லாது ஏழை ஆண்மக்கள் அல்ல. இப்பொழுதிருக்கும் பாகுபாடுகளுக்கெல்லாம் ஆதிகாரணம் இயற்கையின் பேதபுத்திதான். எங்களைப்பற்றியவரையில் ஸ்திரீகள் இல்லாவிட்டால் சோறு ஏது? தண்ணீர் ஏது? இன்பம் ஏது? ஓம் ஏது? மோக்ஷம் ஏது? சரி பாதி பாத்யத்திற்கு மேலாகவே கொடுத்திருக்கிறோம். வேண்டா மென்றால் இயற்கையை மாற்றுங்கள், வாய்ச்சண்டை தேவை யில்லை; ஸாரப்படாது.

(புருஷப்பகுதியில் பிரமாதமான கரகோஷம்.)

ஸத்யவதி:—தீக்ஷிதர்வாள் சொல்வது ஆணி அடித்தாற் போன்ற பேச்சு. அது விவாதவிஷயத்தைத் தெளிவாக்கியது மல்லாமல் அவரை அறியாமலே நாம் சாதிக்க ஒரு திட்டத்தை யும் மார்க்கத்தையும் குறிப்பிட்டிருக்கிறது. அதற்காக அவருக்கு நம்முடைய மனமார்ந்த வந்தனத்தை உங்கள் சார்பாகத் தெரி வித்துக்கொள்ளுகிறேன். இனிப்பேச்சை வளர்ப்பானேன்? ஆகை யால் நான் இப்பிரேரேபணையை உங்கள் ....

ஸ்திரீ அக்ராசனதிபதி:—விவாத அழகிற்குப் பொருந்தாமல் தீர்மானங்களை நடுவில் கொண்டுவரக்கூடாது, நிறுத்தும்.

புருஷஅக்ராசனதிபதி:—வேறு எவருக்கேனும் பேச விருப்ப முண்டா?

(அநேக குரல்கள்):—இல்லை, வேண்டாம், அனவசியம், ஊம், பிரேரேபணை.

இரண்டு அக்ராசனதிபதிகளும்:—ஆனல் சரி. பிரேரேபணை கட்டத்திற்கு?

குரல்கள்:—ஆமாம், உடனே.

ஸத்யவதி:—ஆகையால் சகோதர சகோதரிகளே! என் பிரேரேபணையைத் தங்கள்.....

அநேக குரல்கள்:—வோட்டுக்குவிடத் தேவையில்லை. ஏகமனதாய் ஆமோதிக்கிறோம்.

சில ஹீனஸ்வரங்கள்:—ஆக்ஷேபிக்கிறோம்.

அநேக குரல்கள்:—இல்லை. ஏகமனதாய் ஆமோதிக்கிறோம்.

(ஓரே தடபுடல்; கரகோஷம்; முடிவுரைகூட இன்றிக் கூட்டம் கலைந்து விடுகிறது.)

அங்கம் I—காட்சி 3.

[இடம்—ஸ்திரீ அக்ராசனதிபதி வீடு. புருஷ அக்ராசனதிபதியும் ஸ்திரீ அக்ராசனதிபதியும் வேறு பலரும் அங்கே கூடியிருக்கிறார்கள்.]

ஸ்திரீ அக்ராசனதிபதி:—நண்பரே! நமது தீர்மானமெல்லாம் சரிதான். நம்முடைய ரூபங்களை நம் மனேமுயற்சியால் மாற்றவாவது! மண்ணுங்கட்டியாவது! அதிசயமாயிருக்கிறதே! யார் பிரும்மா?

புருஷஅக்ராசனதிபதி:—இதென்ன அசட்டுமலைப்பு! பிரமகீடநியாயம் பிறந்த நமது தேசத்திலே இந்த சந்தேகமும் பிறந்தால்? நான் சொல்லுகிறேன், இது சாத்தியம். ஆனல் கூட்டத்தின் தொடக்கத்தில் நான் சொன்னதுபோல் முதலில் பார்வதி, லக்ஷ்மி வகையராவை முதலில் பார்த்துவிட்டுத்தான் பிறகு பிரும்மா, விஷ்ணு முதலியவர்களைப் பார்க்கவேண்டும்.

ஸ்திரீ அக்ராசனதிபதி:—நீங்கள் சொல்வது சரிதான், இப்பொழுது புரிகிறது.

(சேவகன் வருகை.)

சேவகன்:—பத்திரிகைகளின் நிருபர் ஆறுபேர்கள் வந்திருக்கிறார்கள். வரலாமா என்று கேட்டுவரச் சொன்னார்கள்.

ஸ்திரீ அக்ராசனாதிபதி :—வரச்சொல்லு.

(சேவகன்போதல், நிருபர்கள் வருகை)

முதல்நிருபர் :—நான் "பந்து" பத்திரிகையின் தலைமைநிருபர்; தங்கள் கூட்டத்தைப்பற்றிப் பொதுஜன அறிவிப்பா அல்லது எங்களுக்கு விசேஷமான அழைப்பா யாதொன்றும் வேண்டாமா? தங்கள் நோக்கங்களும், பிரசங்கங்களும் பெயர்களும் பத்திரிகைகளில் வரவேண்டாமா?

இரண்டாவது நிருபர் :—நான் "தேசசேவாமித்திரன்" நிருபர்.

மூன்றாமவர் :—நான் "ஆதிதர்மம்" நிருபர்.

புருஷ அக்ராசனாதிபதி :—சரிதான், விகடன்கள் நிருபர் எவருமில்லையா?

(ஒருவர் வணக்கத்துடன் இதோ என்று முன்வருகிறார்.)

ஸ்திரீஅக்ராசனாதிபதி:—உங்களையெல்லாம் பார்த்ததில் நிரம்ப சந்தோஷம். எங்கள் கூட்டவிஷயம் வெளியே தெரியப்படுத்தாததற்குக் காரணம், இது வெறும் குடும்பக்கலகம். மன்னிக்கவேண்டும். குடும்பரகஸியம். இதைச் சந்தியிலிழுக்க எங்களுக்கு விருப்பமில்லை.

பந்துநிருபர் :—போகட்டும், கூட்டத்தின் "மினிட்ஸ்" புஸ்தகத்தை..........

ஸ்திரீ அக்ராசனாதிபதி :—அது கேட்கக்கூடாதென்று தானே குடும்பரகஸியமென்று சொன்னது.

விகடன் நிருபர் :—சரி அதுவேண்டாம், தீர்மானங்களையாவது கொடுத்தால்........

ஸ்திரீ புருஷ அச்ராசனாதிபதி :—(இருவர்களுமாய்) அதுவும் இயலாது. தீர்மானங்களை விகடன் உள்பட ஒரு பத்திரிகைக்காவது தினசரிக்காவது கொடுக்கவோ, காட்டவோ கூடாதென்ற தீர்மானம் வேறு செய்திருக்கிறோம். தயவு செய்து மன்னிக்கவேண்டும். இருந்தாலும் அடுத்த வாரம் எங்கள் சங்கத்திற்கு வந்தால் இந்தக் கூட்டத்தின் விருத்தாந்தத்தையும் அன்று வரையில் நடந்தேறிய இதரவிஷயங்களையும் கண்டு ஒருசிறிய குறிப்பு எங்களால் எழுதிக்கொடுக்கப்படும்.

நிருபர்கள் :—நல்லது, அநேக வந்தனம்.

அக்ராசனாதிபதிகள் :—நல்லது, வந்தனம்.

அங்கம் II—காட்சி 1.

[இடம்—ஹிமோத்கிரியில் மலைகளால் சூழப்பட்ட குளம்—மானஸரோவர்.]

பார்வதி:—ஸரஸ்வதி! எத்தனைநாழி ஸ்நானம் செய்வது? பையன்கள்மாதிரி ஜலத்தை வாரி இறைக்கிறாயே என்மேல், போதும் கரையேறுவோமா?

ஸரஸ்வதி:—ஸ்நானத்திற்கு இறங்கினால் எனக்குக் கரையேற மனமே வருவதில்லை.

பார்வதி:—அழகுதான். நாமிப்படியெல்லாம் செய்தால் புருஷர்கள் பாடென்ன? வைச்வானரன் கோபம்கொள்ள மாட்டானா? ஆபத்து வந்துவிடும். நான் கரையேறுகிறேன். சாமுண்டீ! என் நீலச்சேலையெங்கே?

சாமுண்டி:—இதோ!

பார்வதி:—உன்னைப்பார்த்தால்தான் எனக்குப் பீரீதி. ஸ்நானம் கீனம் இந்தவைதிகமே இல்லை, உனக்கு.

சாமுண்டி:—ஆமாம். எனக்கு ஸ்நானம் செய்ய ஓய்வு இருந்தால் தானே. சண்டமுண்டாளைப்போன்ற அசுரர்கள் இன்னும் ஒழிந்தபாடில்லை. போர் முடிந்த பேச்சில்லை. உடம்பைத் தேய்த்து எப்படிக் குளிப்பது?

(ஸரஸ்வதி ஜலத்திலிருந்தபடியே பாடுகிறாள்.)

பார்வதி:—அழகாயிருக்கிறது உன்பாட்டும் காரியமும்! நான் தலைமயிர் ஆற்றி, அது காய்ந்துகூடப் போய்விட்டது. நீ இன்னும் குளித்தபாடில்லை.

ஸரஸ்வதி:—இதோவந்துவிட்டேன்.

(எல்லோரும் புறப்படும் சமயம் எட்டியகுரல்கள் அநேகம்.)

பார்வதி:—என்ன சத்தம்?

ஸரஸ்வதி:—அதுதான் நானும் கேட்கிறேன்.

பார்வதி:—எனக்குப் பயமாயிருக்கிறது. சாமுண்டீ! நீதான் காப்பாற்றவேண்டும்.

(ஒரு ஸ்திரீ அவசரமாக வருகிறாள்.)

ஸ்திரீ:—பார்வத்யை நம:, ஸரஸ்வத்யை நம:, சாமுண்டாயை நம:; அம்மா! பூவுலகிலிருந்து உங்களிடம் ஒரு யோசனைகேட்கத் தங்கள் பெண்கள் பலர் வந்திருக்கிறார்கள். அதோ சத்தம் கேட்கிறதே, அது அந்தக் கூட்டத்தினுடையது.

பார்வதி: அதெப்படி நாங்கள் அவ்வளவு பேருடனும் பேச முடியும்? தவிர எங்களுக்கு இன்னும் கிருஹகிருத்யங்கள் ஆன பாடில்லை. இங்கே ஸ்நானத்திற்கு வந்த இடத்தில் இவ்வளவு பொழுது போக்கிவிட்டாள் ஸரஸ்வதி.

ஸ்திரீ:—இல்லை, இல்லை. உங்களுடன் பேச இரண்டு அல்லது மூன்று பேர்கள் மாத்திரம் தான் வருவார்கள். பாக்கி ஸ்திரீகள் அந்த ஆயிரக்கால் மண்டபம் போன்ற ஆலமரத்தடியில் தங்கி இருப்பார்கள்.

பார்வதி:—கலியென்பது சரியாகத்தான் போய்விட்டது. திடீரென்று மண்ணுலகிலிருந்து இங்கு ஸ்திரீகள் வரவாவது! என்ன ஆச்சர்யமாயிருக்கிறதே!

ஸரஸ்வதி:—எதைப்பற்றி அவர்கள் யோசிக்க வந்திருக்கக் கூடும்?

சாமுண்டி:—வந்தால் தானே தெரிகிறது.

(ஐந்து ஸ்திரீகள் வருகிறார்கள். வந்தவுடன் நமஸ்காரம் செய்கிறார்கள்.)

பார்வதி:—குழந்தைகளே! வாருங்கள் சௌக்யமா?

எல்லோரும்:—சௌக்யம்தான்.

முதல்ஸ்திரீ:—இவ்விடத்தில் அனைவரும் க்ஷேமம் தானே?

பார்வதி:—க்ஷேமம்தான்.

ஸரஸ்வதி:—அபூர்வமாக இவ்விடம் வந்தகாரணம் என்னவோ?

முதல்ஸ்திரீ:—சுஸீலா! நீசொல்லு, நாம் வந்த விஷயத்தை.

சுஸீலா:— நான் மாட்டேன். பிரேரேபணை கொண்டுவந்த ஸத்யவதியே சொல்லட்டும்.

ஸத்யவதி:—நம்முடைய குறும்பெல்லாம் பெற்ற தாயார்கள் முன்புதானா? ஊரோடு இருக்கக்கூடாதா? போகட்டும். நானே சொல்லுகிறேன்.

அம்மா! உலகத்தில் எங்களுக்குக் கஷ்டம் வளர்ந்து வருகிறது. அறிவும் நாகரிகமும் எங்களுக்குள் முதிர்ந்ததிலிருந்து புருஷர்கள் எங்களுக்குத் தீர்மானமான எதிரிகள் ஆய்விட்டார்கள். நம்மைவிடப் புருஷர்கள் எந்தவிதத்தில் உயர்ந்தவர்களென்று தெரியவில்லை. ஸ்திரீ புருஷர்கள் நிகரானவர்கள்—சரிதானா நான் சொல்வது? சரியென்றால் இந்தக்கொள்கையை அனுசரித்து புதுப்புராணங்களோ, சாஸ்திரங்களோ, பழைய சாஸ்திரங்கள்

ப்ராணங்கள் இவைகளுக்குப் புதுவியாக்யானமோ செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. இது எப்படி செய்யலாம்?

சுசீலே:—அம்மா! ஸத்யவதி சொல்வது எங்கள் அபிப்பிராயத்தின்வாலேக்கூடக் குறிப்பிடவில்லே. நாங்கள் வந்தவிஷயமென்னவென்றால்.... ஏதோ ஈஸ்வராதிகள் தத்வத்தை ஆதாரமாகக் கொண்டு ஸ்திரீ புருஷர்கள் என்ற இருவகுப்பு உண்டாக்கி இருக்கிறார்களாம். அதற்குத் தகுந்தாற்போல் காரியங்கள் அமைத்திருக்கிறார்களாம். சிருஷ்டிபாரம் ஸ்திரீகளுக்கு இருக்கும் வரையில் புருஷர்களுக்கு அவர்கள் சரி, நிகர், சமானம் என்று சொல்லுவது கனவில் பிதற்றலாம். முடியாதகாரியமாம். அந்த மூலபலத்தின் உதவியால் புருஷர்கள் எங்கள் திட்டத்தை எதிர்க்கிறார்கள். அந்த விஷயத்தில் நாம் ஏதாவது மாறுதல்கள் செய்யமுடியுமா என்று ஆலோசனை கேட்கவந்திருக்கிறோம்.

பார்வதி:—அடே அப்பாடா! அதெல்லாம் எனக்கொன்றும் தெரியாது. ஸரஸ்வதிதான் பண்டிதை. அவள்தான் ஏதாவது சொல்லவேண்டும்.

முதல்ஸ்திரீ:—நான் ஒருவார்த்தை சொல்லலாமா? சிருஷ்டி பாரத்தைவகிப்பதுகூடப் பெரிதாகத் தோன்றவில்லே. அதற்குப் பிறகு குழந்தைகளே வைத்யன் வீட்டிற்கு, கட்டிக்கென்றும் மாந்த்திற்கென்றும் தூக்கிக்கொண்டு போவது; இல்லாவிட்டால் தெருத் தெருவாய்க் குழந்தைகளேத் தேடிக்கொண்டலேவது; காவேரி, குளத்தில் குழந்தைகள் இறங்கிவிடப் போகிறார்களே என்று வயிற்றில் நெருப்பை வைத்துக் கட்டிக்கொண்டு கஷ்டப்படுவது—இந்தச் சங்கடமெல்லாம் நினேத்தாலே போதும் போதும் என்று ஆய்விடுகிறது. புருஷர்களுக்கென்ன? தினசரிப்பத்திரிகைகளேப் படிக்கிறார்கள். குழந்தைக்கு என்று வாயெடுத்தால்போதும். மூஞ்சிமுழுதும் கோணலும் சுருக்கமும்தான். அடுத்தது ருத்ராம்சம். இந்த ஒரு காரணமே போதும்—சிருஷ்டி பாரத்தை நம்மைவிட்டு எடுத்துவிடுவதற்கு.

ஸரஸ்வதி:—நீங்கள் சொல்வது நிரம்பசரி. இங்கும் அப்படித்தான். சிவனுக்கு அறுபது நாழியும் தூக்கம். அதற்குப்பெரிய பெயராக சமாதி என்கிறார்கள். இந்தக் கணபதியும், சுப்பிரமணியனும், வீரபத்ரனும் வீட்டை நிர்த்தூளிசெய்கிறார்கள். ஸதா அடிதடி; பார்வதி என்ன செய்வாள் பாவம்!

பார்வதி:—எனக்கு மாத்திரம் இந்தக்கஷ்டமென்று நினேக்கக்கூடாது. லக்ஷ்மிக்கும் அப்படித்தான். வைகுண்டத்துக்கு அத்திபூத்தது போல் எப்பொழுதாவது விஷ்ணு வருகிறாராம்.

பாக்கி நேரங்களெல்லாம் பூலோகத்தில் ஏழைகள் வீட்டிலும் பக்தர்கள் வீட்டிலும் பொழுதுபோக்குகிறார். லக்ஷ்மிக்கு முதலில் எப்படிபொழுது போகும், சொல்லுங்கள்? உங்களுக்காவது ஸ்திரீசங்கங்கள் இருக்கின்றன.

சாமுண்டி:—ஸரஸ்வதியின் கஷ்டத்தைச் சொல்லவேண்டும். பாவம்! பிரும்மாவுக்கு மண்பிசைந்து தருவதைத் தவிர அவளுக்கு வேறுஜோலியே இல்லை. அது காலா, இரும்பா? இது தெரியவேண்டாமா அவளுடைய புருஷனுக்கு! அவர்செய்யும் சட்டிகளாயினும் நன்றாக இருந்தால் ஸரஸ்வதி கண்ணுவைது சந்தோஷப்படும். வெறும் மோசம்! கோணல்சட்டி, சப்பைச்சட்டி, ஒடிந்தசட்டி, தாழிவயிறு, ஊசித்தொண்டை, கூனல்சட்டி, சாய்ந்தசட்டி, நொண்டிச்சட்டி, ரொம்பவிநோதம் அவர்வேலைப்பாடு! இவ்வளவு கூத்திலும் ஸரஸ்வதி வீணைவாசிக்கவேண்டுமாம். அந்த லயத்திலே தான் பிரும்மாவுக்குச் சட்டிபானை பிடிக்கவருமாம். அப்பப்பா! அவள் சிரமத்தை ஆதிசேஷன்தான் வர்ணிக்கவேண்டும்.

சுஸீலை:—அடாடா! என்னென்ன கஷ்டம் நமக்கெல்லாம்! இப்பொழுது பார்த்தீர்களா எங்கள் கக்ஷி எவ்வளவு நியாயமானதென்று! அதனால்தான் இதற்குப் பரிஹாரம் தேடவேண்டும் என்று சொல்லுகிறோம்.

ஸரஸ்வதி:—நீங்கள் சொல்லுவதென்னவோ சரி. அதைப் பற்றி என்ன இருந்தாலும் நாங்கள் ஒன்றும் சொல்லக்கூடாது. நாழியும் ஆகிவிட்டது. அவர்களையே தரிசித்து, உங்களுடைய குறைகளைக் கூறிக் காலில் விழுந்து பாருங்கள். பலிக்கும்.

சுசீலை:—சரி, உத்தரவு வாங்கிக் கொள்கிறோம்.

(எல்லோரும் திரும்ப எத்தனிக்கிறார்கள்.)

ஸரஸ்வதி:—ஒருவார்த்தை. எங்களைப் பார்த்ததாக அவர்களிடம் சொல்லிவிடாதீர்கள். ஞாபகமிருக்கட்டும்.

(எல்லோரும் வெவ்வேறு வழியாகப் போய்விடுகிறார்கள்.)

அங்கம் III—காட்சி 1.

[இடம்—ஹிமோத்கிரி மலைச்சாரலில் பெரிய இயற்கை மண்டபம்.]

பரமசிவன்:—ஏனடா சுப்பிரமணியா! கீழண்டைப்புறத்திலிருந்து என்ன ஜயகோஷம்போன்ற சப்தம்?

சுப்பிரமணியர்:—எனக்குத் தெரியாது. பார்க்கவேணும்.

பரமசிவன் :—காலையிலிருந்து என் வாசி குளரிக்கொண்டிருக்கிறது. உனக்கு எப்படி?

சுப்பிரமணியர் :—எனக்கும் அப்படித்தான். சண்டையின் குறி கூடத்தோணுது.

(கணபதி கரும்பைக் கடித்துக் கொண்டே வருகிறுர்.)

கணபதி :—அப்பா! பெரிய ஆலமரத்தடியில் சமுத்திரம் போல் ஸ்திரீகளின் கூட்டம். அடிக்கடி 'ஜே, ஜே' என்று கத்துகிறுர்கள்.

பரமசிவன்:—அவர்கள் யார்? வந்த விஷயமென்னவென்று விசாரித்தாயா?

கணபதி :—இல்லை.

பரமசிவன் :—இல்லையா? ஆனல் போன காரியம்தான் என்னவோ? சோம்பேறி!

கணபதி :—பெண் பார்க்கப் போயிருந்தேன். அம்மா சாபம் ஞாபக மிருக்கிறதா, மறந்துவிட்டதா?

பரமசிவன் :—வெறும் துடுக்குப்பயல்! அதெல்லாம் போகட்டும்; வீரபத்ரனைப்போய்ப் பிரும்மா, விஷ்ணு இருவரையும் அழைத்துவரச் சொல்லு.

கணபதி :—இதோ செல்லுகிறேன். ஆனல் அவன் சண்டையிலிருந்து திரும்பிவந்து விட்டானே என்னவோ?

பரமசிவன் :—ஏய் சுப்பிரமணியா! நீபோய் வீரபத்திரனிடம் சொல்லிவிட்டுவா. இந்தக் கணபதியிடம் ஒருவிஷயம் சொன்ஞல் உடனே ஏதாவது முட்டுக்கட்டை போடாமல் விடுவதில்லை. உடனேபோ.

(கணபதி விழுந்து விழுந்து சிரிக்கிறுர். சுப்பிரமணியர் போய்விடுகிறுர்.)

கணபதி :—வாஸ்தவமாய், அப்பா, எனக்கு நடப்பது என்ஞல் விளக்கெண்ணெய் சாப்பிடுவதுபோல் இருக்கிறது. வஞ்சனை இல்லை என்பேரில்.

(தொடரும்)

வான வீதி

கே. ஸ்ரீநிவாஸ், பி.ஏ.

மாடிக்குப்போன குழந்தை திரும்பி வரவில்லை. மணி எட்டடித்து விட்டது. அம்மா திகிலடைந்தாள். எங்கும் தேடிப்பார்த்தோம்.

கவலையுடன் அங்கு மிங்கும் அலைந்தேன். யாரோ பெருமூச்சுவிடுவதைக் கேட்டேன். மேல்மாடியில் சுவரோரத்தில் போடப்பட்டிருக்கும் ஸோபாவில் குழந்தை படுத்துக் கொண்டிருப்பதைக் கண்டவுடன் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"குமுதா! கண்ணே குமுதா!" என்றேன்; பதிலில்லை. கிட்ட நெருங்கி அவளைத் தட்டினேன். ஆகாயத்தைப் பார்த்தவண்ணமிருந்தன அவளுடைய கண்கள். சப்தம் செய்யாமல் சற்று விலகி நின்றேன். பறந்த வெளியில் தூவப்பட்டிருக்கும் நக்ஷத்திரப் பூக்களில் அவள் ஹிருதயம் ஈடுபட்டிருந்தது. குழந்தை கண் மூடவில்லை.

திடீரென்று அவள் எழுந்து உட்கார்ந்தாள். அம்மா! அம்மா!" என்றாள்.

உடனே நான் அவளைக் கையில் எடுத்துக்கொண்டே "குமுதா குஞ்சு! என்ன அம்மா" என்றேன்.

அப்பொழுதுதான் அவள் என்னைப் பார்த்தாள் அவளுடைய மிரளும் கண்கள் மின்னலென் ஜொலித்தன.

"அண்ணா! அண்ணா! அதோபார்; அங்கே மினுக்குறது பார் ஒரு நக்ஷத்திரப்பூ. அதை எனக்குப் பறிச்சுத்தா!" என்று கேட்டாள்.

"கண்ணே! அதைப்பறிச்சால் அதன் அம்மா கோபிச்சுக்கு மாட்டாளா?" என்றேன்.

"அப்படின்னா மன்னிமட்டும் எனக்கொரு நக்ஷத்திரம் பறிச்சுத்தரேன்னாளே!" என்று கொஞ்சினாள் குமுதா.

உடனே மேலே நோக்கினாள். மெய்மறந்தவள்போல் பிரமித்தாள். கால்கள் கடித்தன. "அண்ணா! அந்த ஆகாச வீதியில் சூர்யனும் சந்திரனும் நடந்து போறாளே! நாம் ஏன் போகக் கூடாது?" என்றாள்.

நான் சிரித்தேன்.

"அண்ணா! அதோபார்; அந்த நக்ஷத்திரம் எவ்வளவு அழகாயிருக்கு. அதுமாதிரி நான் ஆகப்போறேனே. அப்போ நீ என்ன செய்வாய்?"

என் கண்களில் நீர்த்துளிகள் ததும்பின. அவளுக்குத் தெரியாமல் துணியால் துடைக்க முயன்றதைக் குமுதா பார்த்து விட்டாள்.

"அண்ணா! ஏன் அழறே; அழுதேன்னா அங்கே ஓடிப்போய் விடுவேன்!" என்று பயமுறுத்தினாள். "எங்கே?" என்றேன். அவளது மெல்லிய விரல்கள் வானத்தைச் சுட்டிக் காட்டின. எங்கிருந்தோ பெரும்புயல் அடிப்பதுபோல் எனக்குத் தோன்றிற்று. வாழ்கையின் மலர் அசைவதும், வாடுவதும் போலிருந்தது.

"குமுதா குஞ்சு! என் தங்கக்குஞ்சு!" என்று கொஞ்சிக் கொண்டே அம்மா மாடிக்கு வந்தாள். குழந்தை சந்தோஷத்தில் கத்திக்கொண்டே அம்மாவிடம் ஓடியது. அம்மா குமுதாவைத் தூக்கிக்கொண்டு கீழே போய் விட்டாள்.

கவலையுடன் எல்லோரும் நின்று கொண்டிருந்தோம். குமுதாவுக்கு ஜுரம் 104 டிக்கிரி அடித்துக் கொண்டிருக்கிறது. கார் வரும் சப்தம் கேட்டது. மறு நிமிடம் டாக்டர் உள்ளே வந்தார்.

குமுதா அவரை விரைக்க விரைக்கப் பார்த்தாள். "டாக்டர்!" என்று மெல்லிய குரலில் கூப்பிட்டாள்.

"என்னம்மா!" என்று சொல்லிக்கொண்டு டாக்டர் அவளைத் தொட்டார்.

"அந்தக் கதவைத் திறக்கச்சொல்!" என்றது குழந்தை. உடனே முழுக்கதவையும் திறந்தேன்.

வெளியே காரிருள்; விண்ணில் நக்ஷத்திரங்கள் தம் மெல்லிய ஒளியை வீசிக்கொண்டிருந்தன.

"அதோ அந்த வீதியைப் பார்!" என்று கூவிக் கை தட்டினாள் குமுதா. பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் குத்திவிளக்கின் ஒளி மங்கியது. அம்மா ஓடோடிப்போய் அதன் திரியைத் தூண்டி

விட்டாள். இதைப்பார்த்து விட்டாள் குமுதா. "பூ! அந்த விளக்கை அணை. அம்மா! அதோ அங்கே பார், என் விளக்கை" என்று ஆகாயத்தைச் சுட்டிக் காட்டினாள். எங்கள் எல்லோருக்கும் அழுகை வந்துவிட்டது.

"அண்ணா! கிட்டேவா!" என்று என்னைக் கூப்பிட்டாள். கண்ணைத் துடைத்துக்கொண்டு பக்கத்தில் போய் நின்றேன்.

"அதோ அந்தச் சுடரைப் பார்!" என்றாள்.

எல்லோரும் விண்ணை நோக்கினோம். "ஆனந்தமாக ஒரு விளக்கு அங்கே எரியறது பார். நான் அங்கே போகப்போறேனே!" என்று கூறி, குமுதா கல கலவென்று சிரித்தாள்.

இலைகள்கூட அசையவில்லை. நிசப்தம். புன் முறுவலுடன் வானத்தை நோக்கினாள் குமுதா. "நான் அங்கே போறேனே!" என்று சிரித்துக் கொண்டே கண்ணை மூடினாள் குமுதா. வானம் முழுதும் ஜொலித்தது.

ஊமைகளைப் பேசவைத்தல்

மாஞ்சஸ்டரைச் சேர்ந்த ஸாம் ஹிகின்ஸ் என்ற ஓர் ஊமைமனிதன் திடீரென்று பேசும் சக்தியைப் பெற்றிருக்கிறான். பிரிட்டனின் பிரக்கியாதி வாய்ந்த வைத்திய நிபுணர்கள் அவனுடைய தொண்டையில் ஆப்ரேஷன் செய்து அவனுக்குப் பேசும் சக்தி ஏற்படுமாறு செய்துவிட்டனர். ஆப்ரேஷன்செய்து கொள்வதால் மரணம் ஏற்படுவது நிச்சயமென்றும் உயிரை இழப்பதைப் பார்க்கிலும் ஊமையாக இருப்பது நலமென்றும் ஸாம்ஹிகின்ஸின் உறவினர்கள் அவனை மிகவும் பலமாக எச்சரிக்கை செய்தனர். ஆனால் அவன் எச்சரிக்கையைச் சிறிதும் பொருட்படுத்தாமல் ஆப்பரேஷன் செய்துகொண்டான். தற்பொழுது அவன் உல்லாசமாகச் சம்பாஷணை செய்தும் சங்கீதம் பாடியும் பொழுது போக்குகின்றான்.

திப்புவின் மாண்பு

ஓ. எஸ். நடராஜன், பி. ஏ.

அலீகான் திப்புசுல்தானுக்கு மனமொத்த நண்பன். அலீகானுக்கு இருபத்தெட்டு பிராயமே இருக்கும். நல்ல ஆஜானுபாகு; நல்ல தேகக்கட்டும், பார்ப்போர் பிரமிக்கும் முக வசீகரமும் பொருந்தியவன். வாள்வித்தையில் நல்லதேர்ச்சிபெற்றவனாதலின், சாதாரண போர்வீரனிலிருந்து உயர்த்தப்பெற்று அரசனின் நண்பனாய் விட்டான். போர்க்களத்தில் அவன் எதிரிகளைப் புறமுதுகிட்டோடச்செய்து தன் சேனைக்கு ஜயத்தைக் கொடுத்துக்கொண்டுவந்தபடியால் அரசன் தன் தேசக்காவலுக்கு அலீகான் இன்றியமையாதவன் என்று எண்ணினான்.

இவ்வளவு புகழ்பெற்ற அலீகானிடம் குற்றங்களின்றிப் போகவில்லை. அவன் பெரிய காம விடபுருடன். தன் தேசத்தில் இருக்கும் வனப்புவாய்ந்த பெண்டிர்களில், எவளைக்கண்டபோதிலும், அவளை அடைந்து சுகிக்கவே வழிதேடுவான். அலீகானின் இவ்விழிதொழிலால் குன்றிய குடும்பங்கள் பல. அரசனின் சாதாரண குடிகள், ஒரு பெரிய அரசனுக்கு ஆப்தன்மட்டுமன்றி, சமமான அந்தஸ்து வாய்ந்த அலீகானை ஒன்றும் செய்ய முடியவில்லை.

மைசூருக்கும், அதற்கு வடக்கே இருந்த சாம்பூர் என்ற சிறு ராஜ்ஜியத்திற்கும் நடந்த யுத்தத்தில் அலீகான் ஆவேசத்துடன் போர்செய்து, வெற்றிக்கொடி நாட்டினான். திப்புவும் அவன் பராக்கிரமத்தை மெச்சி அலீகானைத் தன் நாட்டின் ஒரு மாகாணத்திற்குப் பிரதிநிதியாக நியமித்தான்.

அலீகான் அரசனுக்குத் தன் வந்தனத்தைச் செலுத்திவிட்டு ஆயிரம் காலாட்கள், ஐந்நூறு குதிரைப்படை, நூறு யானைகள் புடைசூழ, ஒரு பெரிய குதிரைமீது ஆரோகணித்து, மிகுந்த ஆடம்பரத்துடனும் அட்டகாசத்துடனும் அம்மாகாணத்தின் தலைநகரை யடைந்தான். அவன் அதிகாரவரம்பிற்குள் வரப் போகுமுன்னரே, அம்மாகாண ஜனங்களுக்கு வரப்போகும் பிரதிநிதியினிடம் மிகுந்த பீதியும், மட்டற்ற சஞ்சலமும் உண்டாய் விட்டன.

மாதங்கள் சில சென்றுவிட்டன. ஒருதினம் அம்மாகாணத்தின் முக்கிய நகரமாகிய சிக்முகளூரில் ஓர் ஊர்வலம் தெருக்களின் வழியே மெதுவாகச்சென்றது. ஏராளமான ஜனங்கள் புதுமணத் தம்பதிகள் ஏறியிருக்கும் பல்லக்கைச் சூழ்ந்து வந்தார்கள். பிரமாதமான மேளதாள வாத்தியங்களின் ஒலி.

மணப்பெண்ணை நன்ருய்ப் பார்க்க முடிகிறது. தீப்பந்தங்களினின்றும் வரும் ஒளி நேரே அவள் முகத்தில் விழுந்ததால், போவார் வருவார் எழில் மிகுந்த அப்பெண்ணைப் பார்த்துவிட்டுச் சற்றே நிற்காமல் போகமுடியவில்லை.

அலீகான் அரண்மனைக்கு நேரே மெதுவாக ஊர்வலம் சென்றுகொண்டிருந்தது. சாதாரண போர்வீரன் கோலமே கொண்ட அலீகான் பாதசாரியாக எதிரேவந்தவன் கூட்டத்துடன் கலந்துகொண்டு அந்த மணப்பெண்ணை நோக்கினன்.

"கண்டதேகாட்சி கொண்டதே கோலம்" என்னும் பழமொழியைக் கடைப்பிடிக்கும் இக்கடையன் அப்பெண்ணைத் தான் அடைந்து சுகிக்காவிட்டால் தன்ஜன்மம் வீணென எண்ணினன். இதுவரை எத்தனையோ மாதர்களைப் பார்த்தும் எவ்வளவோ, பேரின் கற்பைக் கொள்ளைகொண்டுமுள்ள இவனுக்கு அந்த மணப்பெண்ணைப்போன்ற அழகியைத் தான் அதுவரை கண்டதில்லை என்று தோன்றியது.

நேரே தன் அரண்மனை சென்றவுடன், போஜனமின்றித் தன் படுக்கையறையை நாடினன். அப்பெண்ணைக் கவரப் பல்வேறு உபாயங்கள், சினிமா காட்சியில் தோன்றுவதுபோல் அவன் மூளையில் தோன்றித் தோன்றி மறைந்தன. கடைசியில் ஒரு தீர்மானத்திற்கு வந்தான். அவனுக்குத் தூக்கம் வரவேயில்லை.

* * *

மறுநாள்காலை, ஒரு போர்ச்சேவகன் மணமகன் சோமப்பா வீட்டையடைந்தான். சோமப்பா ஒரு சிறுவயதினனான வியாபாரி; நல்லகுலத்தில் பிறந்தவன்.

போர்ச்சேவகன் கொடுத்த அரசமுத்திரை கொண்ட லிகிதத்தை வாங்கி வாசித்தான். தன்னை உடனே வந்து காணும்படி கண்டிருந்தது. சோமப்பாவிற்குத் திகிலாய்விட்டது. உள்ளே சென்று தன் மனைவி கோசலாபாயினிடம் விவரத்தைச் சொல்லிவிட்டு விடைபெற்றுச் சென்றான்.

அலீகான் சோமப்பாவைக்கண்டதும் "நீர்தானே சோமப்பா, பாஜிவம்சத்தைச் சேர்ந்தவர்?" என்றான்.

"ஆம்" என்றனன் சோமப்பா.

"திப்புவின் ஆட்சியைத் தொலைக்க அங்கிலேயர் உதவியை நாடும் கட்சியில் நீர் ஒருவர் என்று தெரிகிறது, என்ன சொல்லுகிறீர்?" என்றான் அலீகான்.

சோமப்பாவிற்கு இது ஓர் புது இடிபோல் பட அவன் பயந்து "எனக்கொன்றும் தெரியாது; நான் இதுவரை மைசூரிலிருந்தேன்" என்றான்.

"இதோ இதைப்பாரும், உங்கள் கடிதம். நீர் அந்த ரகசியக் கட்சியில் அங்கத்தினராகச் சேர ஒப்புக்கொண்டிருக்கிறீர்" என்று கூறிக் கடிதத்தை நீட்டினான். சோமப்பா நடுங்கும் கையுடன் கடிதத்தைப் படித்துவிட்டு "எஜமான், நான் இது வரை மைசூரில் அல்லவா இருந்தேன்; கடிதம் இரண்டு ஆண்டுகளுக்குமுன், இங்கிருந்தல்லவா எழுதப்பட்டிருக்கிறது!" என்று பரிதாபமான குரலில் சொன்னான்.

"எனக்குத் தெரியாது; நீர் இதை நன்றாய் ருஜுப்படுத்தும் வரை சிறைவாசம் செய்யவேண்டியதுதான்; இவ்வூரில் பாஜிவம்சத்தைச் சேர்ந்த வேறு சோமப்பா கிடையாது. ஆகையால் இது உம்முடையதுதான் . நீர் எழுதியதாக நிச்சயமாய்விட்டால், நீர் தூக்குத்தண்டனை அடையவேண்டியதே."

* * *

சோமப்பாவின் வீட்டில் புயல் அடித்தது. முந்தியநாள் மணவீடாக, கோலாகலத்திலிருந்த வீடு, இன்று ஓவென்றலரும் மக்களால் நிறைக்கப்பட்டது. கோசலாபாய், சமாசாரம் கேட்டு மூர்ச்சித்துவிட்டாள். அவளுக்கு வேண்டிய அளவு சிச்ருஷை செய்யப்பட்டது. அவளுடன் அழுவோரும், பலசொல்லித் தேற்றுவோரும் கூடினர்.

கோசலா பெரிய சேனாதிபதிகள் வம்சத்தைச் சேர்ந்தவளாகையால், அவள் இரத்தத்திலும் ஓரளவு, அவர்களின் தீரமும் பிடிவாதமும் இல்லாமலில்லை. ஒருவித ஆவேசம் அவள் தேகத்தில் தோன்றவே சரேலென எழுந்திருந்து நன்றாய் உடுத்துக்கொண்டு, மூடுவண்டியைக் கொணரக் கட்டளையிட்டாள். உற்றார் உறவினர் திக்பிரமைகொண்டு அவள் செய்கைகளை த்தையும் பார்த்துக்கொண்டிருந்தனர்.

"நான் ராஜப்பிரதிநிதியைக் காணப்போகிறேன்" என்று சொல்லிவிட்டு வண்டியிலேறிக்கொண்டு கிளம்பிவிட்டாள். அலீகானும் பேட்டியளித்தான். இதுதானே அவன் விரும்பியது. கோசலா ஓர் ஓரமாக நின்றபடியே, "எஜமானே, என்கணவர்

ஒன்றுமறியாதவராயிற்றே. அவர்மீது யாரோ வீண் அபவாதம் சுமத்துகின்றனர். என் தகப்பனரும் அவர் தகப்பனரும் ராஜவிச்வாசிகளாயிற்றே. எப்படி இவர்மட்டும் விரோதியாக முடியும்?" என்றாள்.

"அது விஷயம் வேறு; மேலும் என்னிடம் உன்புருஷனுடைய குற்றத்தை ரூபிக்க அத்தாட்சி இருக்கிறது" என்றனன்.

"ஐயோ, அவர் நிரபராதியாயிற்றே, அவரைக் காக்க வழியில்லையா?"

"வழியுண்டு; நீ நாளை மாலை என்னைவந்து காண்பாயாக" என்று சொல்லி, மெதுவாக அவ்விடம் விட்டகன்றான்.

கோசலாபாய் நேரே, தன் கணவன் அடைபட்டிருக்கும் சிறைக்கூடத்திற்குச் சென்றாள். உள்ளே செல்ல அனுமதிக்கப்படவே, ஆவேசத்துடன் கணவன்மீது பாய்ந்தாள். அவனும்; அவளைத் தன் மார்புறத்தழுவி முத்தமிட்டான்.

"தாங்கள் நிரபராதிதானே?"

"ஆம்."

"ரூபிக்க ஆதாரம் உண்டா?"

"உண்டு."

"என்ன, என்னவென்று சொல்லுங்கள். இப்பொழுதே அவைகளைத் தாக்கல்செய்து தங்களை விடுவிக்கிறேன்."

"நான் முன்பு ஓர்முறை திப்புவிற்குச் செய்த உதவியை முன்னிட்டு, அவர் எனக்கு ஒரு பதக்கம் அளித்திருக்கிறார்; அதை அதிகாரிகளிடம் காட்டினல், அவர்கள் நமக்கு வேண்டிய உதவிகள் செய்தே தீரவேண்டும். நாம் நேரே திப்புவிடம்கூடச் செல்லலாம்."

"நான் உடனேசென்று என்னாலான முயற்சிகள் செய்கிறேன்."

"கண்ணே, நீ அலீகான்முன் செல்வதை, நான் சகிக்கமுடியாது; அவன் எப்பாபத்திற்கும் அஞ்சாப் பாதகன்."

"நாத, ஆபத்தில் என்னசெய்வது? தாங்கள் என்னைப் பற்றிக் கவலைப்படவேண்டாம்" என்று சொல்லிக்கொண்டு கோசலாபாய் பிரியமாட்டாமல் பிரிந்து சென்றாள்.

மறுநாள் மாலை, கோசலாபாய் அந்தப்பதக்கத்துடன் அரண்மனையை அடைந்தாள். அலீகான் நன்றாய் உடைதரித்திருந்தான்; முகத்தில் குரூரமான மந்தகாசம்.

"உன் புருஷனைக் காக்க ஒரேவழிதான்."

"அது என்ன?" என்ருள் ஆவலுடன் கோசலா.

"நீ என் இஷ்டத்தைப் பூர்த்திசெய்யவேண்டும், கண்ணே! உன் அழகில் நான் மயங்கினேன். என் அபிப்பிராயத்திற் கிணங் கினுல், பெரிய ராணிக்குச் சமானமான நிலைமையில் உன்னை வைப் பேன்" என்முன் அலீகான்.

கோசலாபாய்க்கு, இரத்தம் கொதித்தது. "மூர்க்கா, என்ன சொன்னுய்? நான் உன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்துவிட்டு, என் புருஷன் மீளுவதைவிட அவர் இறந்தேவிடட்டும்" என்ருள் ஆவேசத்துடன்.

"அப்படிச் சொல்லாதே, என் இஷ்டத்திற்கு இணங்கத் தான் வேண்டும்; நீயாக இசையாவிட்டால், நாளுக இணங்க வைப்பேன்" என்று சொல்லிக்கொண்டே அவளை அணுகினுன்.

கோசலாபாய் அஞ்சாமல், "இதுமூலம் என்னைக் காப்பாற்றிக் கொள்வேன்; நேரிலேயே திப்புவிடம்சென்று என் கணவனைக் காப்பாற்றி வழிதேடி, உன்மேலும் வஞ்சம்தீர்த்துக் கொள்வேன்" என்று கூறி அந்தப் பதக்கத்தைக் காட்டினுள்.

அலீகானுக்குப் பகீரென்றது. "இது ஏதடா, பிள்ளையார் பிடிக்கக் குரங்காக முடிந்தது" என்று எண்ணமிட்டான். திடீ ரென்று எழுந்து கோசலாபாயின் மேல் பாய்ந்தான். கோசலாபாய் கதவைத் திறக்கச் செல்லவே, அலீகான், "உசேன், உசேன்" என்று அவசரமாகக் கத்திவிட்டு, கதவின்மேல் சாய்ந்து கொண்டான். மற்ருெரு கதவைத்திறந்து கொண்டு ஒரு கோரரூபம் வாய்ந்த ஆள் உள்ளேவந்து சேர்ந் தான். வந்தவன் கோசலாபாயைத் தூக்கி ஒரு கட்டிலில் கிடத்திவிட்டுக் கைகளையும் கால்களையும் கட்டிவிட்டான். பிறகு ஒரு வெள்ளிக்கோப்பையில் ஏதோ ஒரு திரவபதார்த் தத்தை ஊற்றி அதில் ஒரு சூரணத்தைப் போட்டுவிட்டு, அதை அவள்வாயில் பலாத்காரமாக ஊற்றினுன். கோசலாபாய் சற்று நேரத்தில் ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்தாள். அந்தோ! அதிக மென்ன! கோசலாபாய் தன் உயிரினும் உயரிய கற்பை இழந் தாள். அதே சமயம் சோமப்பாவும், ரகசியமாகவே தூக்கிலிடப் பட்டான்.

* * *

மறுதினம் கோசலாபாய் தன் வீட்டுக்கூடத்தில் கிடத்தப் பட்டிருந்தாள். அவளுக்குத் தூக்கம் நீங்கியதும், தன் இணையற்ற அருங்கலத்தை இழந்துவிட்டதை யுணர்ந்து, இருதயம் வெடிப் பதுபோலாய்விட்டது. இடிமேல் இடிபோல் புருஷன் தூக்கி

விடப்பட்டதை யுணர்ந்து, வாயிலும் வயிற்றிலும் போட்டுக் கொண்டாள். ஊணுறக்கமின்றி இரண்டு தினங்களில், சோர் வடைந்து வாடிய ரோஜாவைப்போலாய்விட்டாள். திடீரென்று ஆவேசம் வந்தவள்போல் எழுந்து உட்கார்ந்தாள்.

“அப்படியே செய்வேன்; இது நிச்சயம்” என்று கத்தியவண்ணம், தன் வேலையாளை மைசூருக்குப் போக மூடுவண்டியைச் சித்தம் செய்யச்சொன்னாள். இரண்டு குதிரை பூட்டிய வண்டி வாசலில் நின்றது. தனிமையாக மைசூருக்குப் பிரயாணமானாள். பரிகள் புயல்காற்றினும் கடுகிச் சென்றன. கோசலாவின் நிலைமையும் புயல்காற்றால்தான் பீடிக்கப்பட்டிருந்தது.

திப்பு வேட்டையிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தான். வேகமாகவரும் வண்டியைக்கண்டு, என்ன விவரம் என்று விசாரிக்கச் சற்று நின்றான். “இதோ சுல்தான்” என்று வண்டிக்காரன் சொல்லவே கோசலா இறங்கி அவன் பாதத்தில்விழுந்து மூர்ச்சையானாள். நெடும்பிரயாணம் செய்ததால் வண்டி யோட்டியும் தலைகிருக்கி ஒரு புதரில் விழுந்தான். சுல்தான் சற்றே திகைத்தான். பிறகு, “இவர்கள் இருவரையும் நமது அரண்மனைக்கு எடுத்துச் செல்லுங்கள்; தம் நினைவு வந்ததும் விசாரித்துக்கொள்வோம்” என்றான்.

* * *

சுல்தான் கோசலாபாயால் காடுக்கப்பட்ட மகஜரை வாசித்துக்கொண்டிருக்கிறான். கோசலாபாய் முன்னால் தலை குனிந்த வண்ணம் உட்கார்ந்திருக்கிறாள். சுல்தான் கண்களில் தீப்பொரி பறக்கின்றன. படிக்கப்படிக்கக் கைகள் பதறுகின்றன. கோசலாவுக்கு நேர்ந்த அவமானம் பூராவும் கண்டிருக்கிறது. மகஜரைப் படித்து முடித்துவிட்டு ஆசனத்திலிருந்து துள்ளி யெழுந்து, “இப்படியே நடந்ததா? அலீ இப்படி செய்தானா?” என்று கோபத்தில் பொங்கினான். “அபுல், நாளை மாலைக்குள் அலீ இங்குவந்து சேரவேண்டியது” என்றான்.

“சித்தம் மகராஜ்” என்றான் பிரதானியாகிய அபுல்.

* * *

அலீகான் பயத்தில் நடுங்குகிறான்; முகம் வெளுத்து வேர்வை கொட்டுகிறது.

“அலீ, இந்த மகஜரில் கண்டதுயாவும் உண்மையா?” என்றான் சுல்தான் பரிதாபமான குரலில். மனு அவனிடம் கொடுக்கப்பட்டது.

அலீகான் அதைப் படித்துவிட்டு, "நான் ஒன்றும் அறியேனே!" என்ருன் தைர்யத்துடன்.

"பாவி, என் முகத்தைப்பார்த்துச் சொல்; நீ பொய் சொன்ஞலும் என் வயிற்றெரிச்சல் வீணுகாது; இதோ வந்திருக்கிருனே உன்னேடு அம்மனிதன் உசேன்; அவனும் உனக்கு உடந்தையாயில்லையா?" என்ருள் கோசலா நிரம்ப துக்கத்துடன்.

சுல்தானுக்கு விஷயம் உண்மை என்று பட்டது. அலீகான் வெட்கித் தலேகுனிந்து மௌனம் சாதித்தான். சுல்தான் உசேனேப் பார்த்து, "உனக்கு இந்த விஷயத்தைப்பற்றி என்னதெரியும்?" என்ருன். மகஜர் அவனுக்கு வாசித்துக் காட்டப்பட்டது.

"ஷா இன்ஷா! என்னே மன்னியுங்கள். எனக்கொன்றும் தெரியாது" என்ருன் உசேன்.

"இந்த உசேனேக் கம்பத்தில் கட்டுங்கள்; எங்கே ஒரு கொரடாகொண்டுவா" என்று கட்டளேயிட்டான் திப்பு.

பளீர் பளீரென்று கொரடாவால் பத்து அடிவிழுந்தன. உசேன், "ஐயோ விடுங்கள், அடிமை உள்ளதைச் சொல்லி விடுகிறேன்" என்று கதறினன்.

"இந்த மகஜரில் கண்டவிஷயம் உண்மையா?"

"உண்மை, முழுதும் உண்மை."

"சோமப்பாமீது சாட்டப்பட்ட குற்றம் மெய்யா?"

"பொய்."

"பின் அந்தக்கடிதம்?"

"கற்பனே."

சுல்தான் தனக்கு வந்த கோபத்தை அடக்கிக்கொண்டான். அலீகானேக் காட்டி, "இவனே என்னசெய்யலாம்" என்ருன் கோசலாபாயிடம்.

"உங்களிஷ்டம், நான்நாளேகாலே உடன்கட்டையேற அனுமதிக்கவேண்டும்" என்ருள் கோசலா. நிதானமாகத் திப்பு சற்று யோசித்துவிட்டு, "அது முடியாது. நான்சொல்வதுபோல் கேட்க வேண்டும்; உன் கௌரவத்தை நிலேநாட்டப் போகிறேன்; நீ அதுவரை கைதி. அது என்கட்டளே" என்ருன் மிகுந்த உக்கிரத்துடன்.

கோசலாபாய் நடுங்கிவிட்டாள்; சுல்தான் "என் பிரதான மௌல்வியைக்கூப்பிடு" என்றான். வெண்மைதாடியும், பிரகாச மான கண்களும் கொண்ட ஒருவர் அழைத்துக்கொண்டுவரப் பட்டார். சுல்தான் அவரை வணங்கிவிட்டு, "இந்தப்பெண் இந்து. இவளை முகம்மதிய மதத்தில் சேர்த்துவிட்டு, உடனே இவளை இந்த அலீகானுக்குக் கலியாணம் செய்துவிடவேண்டும். இப்பொழுது என்முன் சடங்குகள் ஆகவேண்டும், ஜல்தி" என்றான் சுல்தான்.

அலீகானின் சப்தநாடியும் ஒடுங்கிவிட்டன. தொண்டை யில் ஏதோ அடைத்துக்கொண்டது. கோசலாவிற்கு யாவும் சொற்பனம்போல் இருந்தது.

சடங்குகள் முடிந்ததும், "கோசலாபாய்! உன் கௌரவத்தை நிலைநாட்டிவிட்டேன்; உனக்காக அந்த மூர்க்கனை விடுகிறேன்; நீ உன் கணவனுடன் என்நகரில் இருக்கலாம். உங்களுக்குத்தகுந்த வசதிகள் கிடைக்கும்; பிறகு உன் இஷ்டம்" என்றான் சுல்தான்.

கோசலாவின் கண்கள் கண்ணீரால் நிறைந்தன. தரையில் மண்டியிட்டவண்ணம் தன் நன்றியறிதலைச் சொல்ல வாயெடுக்கு முன், "நீ ஒன்றும் சொல்லவேண்டாம்" என்று சொல்லிக் கொண்டே கையை அசைத்துவிட்டு வெளியே சென்றுவிட்டான். அலூல், தம்பதிகளை அழைத்துக்கொண்டுபோய், நன்றாய் ஜோடித்த ஒரு படுக்கையறையில் விட்டுவிட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு சென்றான்.

மறுநாள்காலை அலீ, மார்பில் குத்துண்டு படுக்கையில் பிணமா கக்கிடக்கிறான். கோசலா மார்பில் ஒருகத்தி செருகப்பட்டுப் பிணமாகக் கீழேகிடக்கிறாள். திப்புவுக்காக ஒருகடிதம் கீழ்வரு மாறு வரையப்பட்டிருக்கிறது.

"சுல்தான் சமுகத்திற்கு அடிமை கோசலாவின் விண்ணப்பம்: என்விஷயத்தில் ஷாஇன்ஷா இதைவிட அதிகநீதி செலுத்த முடியாது; அதற்கு என் நன்றியறிதலை நேரில் காட்டமுடியவில்லை" என்று மட்டுமிருந்தது.

கடிதத்தைப் படித்ததும், "இப்படியாகுமென்று எனக்குத் தெரியும்; அலீகானுக்குச் சரியான தண்டனை வேண்டியதே" என்றான் திப்பு.

வான்மலர்

ஏ. எஸ். பஞ்சாபகேசையர், எம். ஏ., ஐ. ஸி. எஸ்.

(90-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நினைவின் வழியே செல்லும் ஸரோஜத்தின்மனம் தன் விவாகத்தின் மீது சார்ந்து உலவியது. அப்போது தனக்கும் கலியாணம் ஆகுமோ எனப் பிரமித்தாள். வைதிக குடும்பத்தின ரான தன் தோழிகள் எல்லார்க்கும் முன்னாலேயே கலியாணமாகி விட்டது. அவர்களிற் சிலர் புக்ககத்தில் வாழ்ந்து அகமுடையானை இழந்து அவலமாகி அன்னைமனை சார்ந்தார்கள். 'ஐயோ பாவம்! அவர்களுடைய ஜன்மம் என்ன ஜன்மம்! இளமையில் அறுத்து இகபோகங்களைத் துறந்து ஏகாங்கியானார்களே. நிச்சயமாக அவர்கள் இனி மறுமணம் செய்துகொள்ளார்கள். அதுதான் நல்ல கொள்கை. அதுவே உத்தம ஜீவனம். நற்கதியேற்கும் நன்னடை அதுவே. ஆனால், அவர்களிற் பெரும்பான்மையோர் துக்கக்கடலில் ஆழ்ந்திருக்கிறது போல் தோன்றுகிறதே. ஏன் அப்படி இருக்கிறார்களென்று தெரியவில்லை. ஒருவேளை அவர்கள் தம் இச்சைக்கு இசைந்தவனை மணக்காமல் பெற்றோர் பொறுக்கியெடுத்தவனை மணக்கவேண்டி வந்த தனால் இவ்வாறு துன்புறுகிறார்களோ என்னவோ? இல்லா விட்டால், கணவனோடு தாம் அனுபவித்த இன்பத்தையும் எழிலையும் ஏற்றத்தையும் நினைந்து ஏனைய இன்பங்களை வெறுத் துத்தள்ளுமளவு அன்பு அவர்கள் மனத்தில் குடிகொண்டிருக் குமே. ஆனால், வயதிலும் விவேகத்திலும் வாழ்க்கை வியவகார அனுபவத்திலும் தம்மிற் சிறந்த பெற்றோர்கள் தேடித் தேர்ந் தெடுக்கிற கணவனைக் காட்டிலும், ஏதும் அறியாத இளம்பெண் கள் தம் இஷ்டப்படி இணங்குகிற கணவன் உத்தமன் ஆவனோ? முதியோரைக் காட்டிலும் இவர்களுக்குத் தாரதம்மிய ஞானமும் விவேகமும் அதிகமாமோ?' என்று ஸரோஜம் தனக்குத்தானே பேசிக்கொண்டாள். இந்த விசாரத்தினால் இவள் மனத்தில் குழப்பம் ஏற்பட்டது, கவலை மிகுந்தது, அமைதி குலைந்தது. விசாரம் மிக்கவறுக்கும் மனமும் தேகமும் ஒரு நிலையில் நில்லா

வல்லவோ? இந்தச்சங்கடம் பொறுக்க முடியாதல்லவா? இந்தத் தொல்லையைத் தவிர்ப்பதற்கு வழி ஒன்றே உளது: அதாவது, தூக்கம். துக்கம் தூக்கத்தில் மறையும். ஆனால், தூக்கமோ வராது. ஆதலின், இவள் விளக்குகளை அணைத்துவிட்டுப் படுக்கையிற் படுத்துக் கண்ணைக் கெட்டியாக மூடிக்கொண்டு பலவந்தமாகத் தூக்கம் வருவித்துக் கொண்டாள்.

மறுநாள் மாலையில் பள்ளிக்கூடம் விட்டு வந்தபின், இவள் தன் தந்தையாகிய ராமதாஸ் என்பவரோடு *மீனாவில் உலவிக் கொண்டிருந்தாள். அப்பொழுது கலாசாலை மாணவனொருவன் எதிரே வந்துகொண்டிருந்தான். அவனது ஆடை அவமன்றி ஒழுங்குமின்றிக் கேவலமாயிருந்தது. ஆனால், அவனது கண்கள் உள் நோக்குடையனவாகத்தோன்றின. பார்ப்பதற்குக் கண் வெளியில் திறந்திருந்தாலும் அவனது மனம் வேறு எங்கோ சஞ்சரித்துக் கொண்டிருந்ததெனச் சரேலெனச் சொல்வதற்காகும். ஆழ்ந்த சிந்தனையும் மனோராஜ்யமும் அவன் கண்ணிற் புலப்பட்டன. அதனால் அவன் ஆடைமுதலான வெளி உலகத்து வியவகாரங்களில் கவனம் செலுத்தவில்லை யென நாம் ஊகிப்பதற்காகும். அப்படிப்பட்டவனுடைய கண்ணொளி ஸரோஜத்தின் முகமண்டலத்தில் ஒரு கணப்போது அன்புக்குறியாக அமர்ந்தது. இவளும் அவ்வாறே அவனை உற்று நோக்கினள்; சிறிது நேரம் பின்தங்கி நிற்க இவள் ஆசைப்பட்டிருப்பள்; ஏனெனில், புதிய விதமானதோர் உற்சாகமும் அன்பும் இவள் உள்ளத்தில் உதித்தன. அவ்வன்பு மீனாவினிடத்தில் உள்ளது போலல்லாது, வேறு விதமாக இருந்தது. அது எத்தகையதென் இவளுக்குச் சொல்ல முடியவில்லை. ஆயினும், இவளுடைய தந்தை வழக்கம்போல முன்செல்ல இவளை விரைவுபடுத்தினர். ஆதலினால், தன் மனத்தில் இந்தப்புதிய உணர்ச்சி யெழுப்பிய உன்மத்தன்போன்ற இளைஞனை விட்டு இவள் முன்நடக்க வேண்டியவளாயினள். ‘அவன் யாரோ! அவனைப்பார்த்தால் சாதுவான பிள்ளை யென்று நிச்சயமாகச் சொல்லலாம்; படாடோபம் சிறிதுமில்லை, கர்வமில்லை, அமைதியும் ஆழ்ந்த சிந்தனையும் அவனுடைய கண்களில் விளங்குகின்றன. அது எவ்வளவு மனோகரம்! பெரிய எண்ணங்களும் தீர்க்க ஆலோசனையும் அவன் மனத்தில் குடிகொண்டிருக்கின்றன என்பதற்கு அதுவே அறிகுறி. அதனால், அவனது அன்பும் தீர்க்கமாகவே இருக்கவேண்டும். அப்படிப்பட்ட அன்புதான் சரியான அன்பு’ என்று அவனது குணங்குறிகளை வகை

---

*மீனா சென்னை கடற்கரை யோரத்துச் சிங்கார உலாச்சாலை.

யாகச் சிந்தித்துக்கொண்டிருந்ததனுல் இவளுடைய மனம் பின்னே இழுக்க, இவளுடைய கால், தந்தைக்கு அஞ்சி முன்னே இழுத்தது. ஆதலால், இவளுடைய நடை மெலிந்து சோர்ந்தது. அப்போது தந்தை, 'ஸரோஜம், என்ன சிந்தித்துக்கொண்டிருக்கின்றனே? ஏன் இவ்வளவு மெதுவாக நடக்கின்றனே?' என்று வினவினர். இவள் சற்று ஓடி அவரை எட்டிப்பிடித்து, 'விவாகத்தினுல் மனிதருக்குச் சுகமும் சந்துஷ்டியும் நிஜமாக அதிகரிக்குமோ என்று சும்மா நினைத்துக்கொண்டிருந்தேன்' என்றனள்.

ராமதாஸ்:—விவாகம் என்பதனுலேயே எல்லாம் வந்துவிடாது. (விவாக) பாத்திரத்துக்குத்தக்கபடி ஆடும் அந்தப் பாக்கியம். ஒத்த தம்பதிகளானுல் சுகானந்தம் முன்னினும் மிகும். ஒவ்வாத தம்பதிகளானுல் முன்னினும் துன்பம் மிகும்.

ஸரோஜம்:—பராக்குப் பார்வை யுள்ளவர்கள் நல்ல நாயகராவாரென்று உமக்குத் தோன்றவில்லையா?

ராமதாஸ்:—என்ன கேள்வி! அங்ஙனமன்று; நல்விழிப்பும் மேற்பார்வையும் உள்ளவர்களே உத்தம கணவராவாரென்று எனக்குத் தோன்றுகிறது. மனோராஜ்யம் செய்பவர்கள் பெரும்பாலும் தூங்கு மூஞ்சிகள். அவர்கள் எதற்கும் பயன்படார். அவர்களுக்கு வெளி உலகமெல்லாம் சூனியம்; வெறும் பாவனையே அவர்களுக்குப் பிரதானம். அவர்களுடைய பாவனை வியவகாரத்திற்கு இசையாது.

ஸரோஜம்:—அப்பா, பாவனையே பிரதானமாகக் கொண்டவர்கள் உங்களுக்குப் பிடிக்காதோ?

ராமதாஸ்:—எனக்குப் பிடிக்குமென்று நான் சொல்வதற்கில்லை. பாவனைகளைக்காட்டிலும், யதார்த்தங்களே எனக்கு இனிமை. யதார்த்தங்களாவன, உள்ளதை உள்ளபடி தெரிந்து விவகரித்தல். பாசி பிடித்துத் துர்நாற்றம் வீசிக்கொண்டிருக்கிற ஒருசிறுகுட்டையை இந்திர புஷ்கரணியென்று பாவித்து அதனில் மூழ்குவது பாவனைப் பிராதானியமாகும். அந்தக் குட்டையிலுள்ள நீரின் அசுத்தத் தன்மையைத் தெரிந்து அதனை ஒதுக்குவதே யதார்த்தப் பிராதானியமாகும்.

அந்த வார்த்தையைக்கேட்டு ஸரோஜம் மறுமொழி சொல்லாமல் மௌனமாக முன் நடந்தனள். தந்தை சொல்லியது அவளுக்கு ஒப்பாகவில்லை. அவருடன் வாதிப்பதனுல் பயனில்லையெனத்தேர்ந்து, வாதாடாமல் அவள் அதோடு அதை விட்டுவிட்டாள்.

மூன்றுநாள் சென்றபின், ராமதாஸும் ஸரோஜமும் தங்கள் வீட்டுத் தாழ்வாரத்தில் 'நாஸ்தா' பண்ணிக்கொண்டிருந்தார்கள். அப்போது தபாற்காரன் வந்து ராமதாஸின் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். ராமதாஸ் அதை வாசித்தபோது அவர் முகத்தில் ஆச்சரியக்குறி தோன்றியது. அதைத் தமது மகளிடம் கொடுத்து, 'இதை வாசித்துப்பார். இவன் யாரோ மனோராஜ்யக்காரன்!' என்று அவர் சொன்னார். ஸரோஜம் கைநடுங்க, அந்தக் கடிதத்தை யேந்தி வாசித்தாள்:

'ஐயா,

இரண்டுநாளைக்கு முன்னால் மாலைப்போழ்தில் நீங்களும் அற்புத சௌந்தரியவதியாகிய உங்கள் அருமைப் புதல்வியும் கடற்கரையுலாவில் எனக்கு எதிரே வந்துகொண்டிருக்கக் கண்டேன். நான் அவளை உற்றுநோக்க, அவளும் என்னை உற்றுநோக்கினள். அக்கணமே உரியவேளை ஒத்துவந்ததெனத் தெரிந்தேன். என் மனத்திற்கு இசைந்த பெண்மணியைக் கண்டேனெனக் கொண்டேன். உங்கள் புத்திரிகா ரத்தினத்தின்மீது எனக்குள்ள கரைகடந்த காதலும் வியப்பும் கண்ணியமும் சொல்லிலும் அடங்கா, எழுத்திலும் அடங்கா. இவ்விஷயமாக உங்களைக்கண்டு நேரில் பேச எனக்குச் சந்தர்ப்பம் கொடுப்பீர்களாக. நான் 'லா காலேஜில்' படித்துக்கொண்டிருக்கிறேன். இதுவரையில் எல்லாப் பட்டப் பரீக்ஷைகளிலும் திருப்திகரமாகத் தேறியிருக்கிறேன்.

ஒருவரி பதில் தயவு செய்ய வேண்டுகிற

யதார்த்தவாதி திரிவிக்ரமன்.

குறிப்பு:—அவள் பெயர் ஸரோஜம். அவளது பாவனையில் ஏற்பட்ட அருங்காதல் அவளது கமலக்கண்ணின் வழியே என் மனத்தில் ஆழப்பதிந்து உள்ளத்திற் கிளறுகின்றது. ஸரோஜம்! ஆஹா என்ன அழகியபெயர், எவ்வளவு பொருத்தம்! தி'.

இந்தக் கடிதத்தை ஸரோஜம் உற்சாகத்தோடு மேலும் மேலும் மும்முறை படித்தனள். அவன் தன்னை மறக்கமாட்டானென்று இவளுக்கு எப்படியோ மனத்தில் தோன்றிக்கொண்டேயிருந்தது. தான் நினைத்தபடி அவன் மறவாமல் இருக்கிறானென்று தெரிந்து இவள் மகிழ்வுற்றாள்.

ராமதாஸ்:—நல்லது, ஸரோஜம், அந்தக் கடிதத்திலேயே மூழ்கிப் போயிருக்கிறாயே ஏன்? அந்தப் பையன் யார்? நான் அவனைப் பார்த்ததாக ஞாபகமே இல்லையே!

ஸரோஜம்:—(நாணமுற்று) அவன் இன்னாராகத்தான் இருக்கவேண்டுமென்று உன்கிக்கிறேன். ஐஸ் ஹவுஸுக்கு எதிரே அன்றைக்குப் பார்த்தோமே, உறக்கக்கண்வாய்ந்த இளைஞரை.

ராமதாஸ்:—இம்! உறக்கக்கண் உள்ளவர்கள் உத்தமக்கணவராவரோவென்று நீ அன்றைக்குக் கேட்டதற்குக் காரணம் இப்போது எனக்குத் தெரிகிறது.

தந்தை இவ்வார்த்தை சொல்லியவுடனே, ஸரோஜம் மறுபடியும் கூச்சமுற்றுச்சிறிது நேரத்தில் அது தெளிந்தாள்.

ராமதாஸ்:—சரி, இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்!

ஸரோஜம்:—என்ன செய்யவேண்டுமென்று உங்களுக்குத்தான் தெரியும். எனக்கென்ன தெரியும்?

ராமதாஸ்:—ஆபீஸில் இன்றைக்கு அந்தப் பையனை வருவித்துப்பேசி, நல்ல வரன்தானோ எனப் பார்க்கிறேன். நல்லவரனெனத்தோன்றினால், அவனை நாளை மாலையில் சிற்றுணாக்கோஷ்டிக்கு அழைத்து வருகிறேன்.

சந்தோஷத்தினால் ஸரோஜம் பரவசமாயினள். ராமதாஸ் மனைவியை அழைத்து இந்தச் சங்கதியை யெல்லாம் சொல்லினர்.

அன்றுமாலையில் ராமதாஸ் தமது ஆபீஸில் திரிவிக்ரமனை வருவித்துப் பேசினார். அந்தப்பையன் ஏழை யென்று தெரிந்தது. அவனது பெற்றோர் ஒரு சமயம் நல்ல பணக்காரர்களாக இருந்தனராம். அவனைப் பார்த்து ராமதாஸ், 'உனக்குவரதக்ஷிணை கொடுப்பேனென்றாவது, என் பெண்ணுக்கு ஸ்ரீதனம் அளிப்பேனென்றாவது நீ எதிர்பார்க்கமுடியாது' என்றார்.

திரிவிக்ரமன்:—அப்படிப்பட்டதொன்றும் எனக்கு வேண்டாம்.

ராமதாஸ்:—மாதம் ஒன்றுக்கு முந்நூறுரூபாய் சம்பளம் பெறுதவனுக்கு என்பெண்ணை விவாகம் செய்துகொடுக்க எனக்கு இஷ்டமில்லை. இவளுடைய தமக்கைகளையெல்லாம் அப்படியே கொடுத்திருக்கிறேன்.

திரிவிக்ரமன்:—இரண்டு மூன்று வருஷத்தில் நான் வக்கீலாக வந்து மாதம் முந்நூறு ரூபாய் சம்பாதிப்பேன்.

ராமதாஸ்:—இளங்கன்று பயமறியாது; இளமையில் இனிமையே தோன்றும்; ஆசை ஆகாசத்தை அளாவும்; வயது ஏற ஏற அனுபவத்தில் அவ்வாசை அவலமாகும்; எவ்வளவு கெட்டிக்

கார வக்கீலாயிருந்தாலும் தக்கவர்களுடைய ஆதரவு இல்லாவிட்டால், பின்னேயிருந்து தாங்குபவர் இல்லாவிட்டால் மாதம் ஒரு நூறு ரூபாய் கிடைப்பது குதிரைக்கொம்பாக இருக்கும். இது அனுபவ ஸித்தம். இப்படித் திண்டாடுகிற வக்கீல்கள் சிலரை எனக்குத் தெரியும்.

திரிவிச்ரமன்:—அவர்களுக்கு ஊக்கமில்லைபோலும்; முண்டியடித்து நெட்டித்தள்ளினால் முன்னுக்கு வரலாம்.

ராமதாஸ்:—அப்படியில்லை. ஏதாவது இருந்தாலல்லவா அதை நெட்டித்தள்ளலாம்? முண்டுவதற்கும் நெட்டுவதற்கும் அவர்களுக்கு இடமே இல்லை!

திரிவிக்ரமன்:—நான் மாதம் முந்நூறுரூபாய் சம்பாதிக்கிற போது உங்கள் பெண்ணை எனக்குப் பாணிக்கிரகணம் செய்து கொடுக்கலாம். ஆனால், நமது நாட்டில் மாதம் ஒருநூறுரூபாய் வைத்துக்கொண்டு ஒரு கணவனும் மனைவியும் சுகமாக ஏன் காலம் கழிக்க முடியாதென்று நினைக்கிறேன்.

ராமதாஸ்:—எல்லாரும் வயிறு வளர்க்கிறார்கள். அப்படி இழிதகையாகக் காலங்கழிக்கும் வாழ்க்கை எனக்குப் பிடிக்காது. அது ஒரு வாழ்க்கையா? அது எங்களுக்கு வழக்கமில்லை. வெறும் சோறும் தண்ணீரும் கிடைத்தாற் போதுமென்று இராமல், மனைவி மக்களைச் சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும் வைத்து ஆதரிக்கத்தக்க அளவு வரும்படி வாய்ந்த பின்னரே ஒருவன் ஒரு பெண்ணை விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்பது எனது அந்தரங்க அபிப்பிராயம். எப்படியானாலும், நீ மாதம் முந்நூறு ரூபாய் சம்பாதிக்கிறபோது வந்து என் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளுகிறேன் என்பதனாலே நமக்குள் அவ்விஷயத்தைப் பற்றித் தர்க்கமில்லை. நாளைக்கு நீ மாலைச்சிற்றுணவுக்கு எங்கள் வீட்டுக்கு வா. அந்தச் சமயத்தில் என் பெண்ணைப் பார்த்துப் பரிச்சயம் செய்து கொள்ளலாம்.

மறுநாள் ராமதாஸ் வீட்டில், உத்தேசித்தபடி சிற்றுணக் கோஷ்டி கூடியது. மனோராஜ்யத்தில் நுழைந்த உறக்கக் கண்ணனை திரிவிக்ரமன் வீட்டுக்குள்ளே போய்க்கொண்டிருக்கையில், ஸரோஜம் தாழ்வாரத்தில் நிற்பதைப் பார்த்தான். இவள் முன்னினும் மும்மடங்கு அழகாக அவனுக்குத் தோன்றினாள். மனோரஞ்சிதமான பட்டாடையுடுத்து இவள் பாங்காக நின்றுகொண்டிருந்தனள்.

தனது விசாலமானகண்களினால் இவளும் அவனைப் பார்த்தாள். அவன் உடனே தன் கூரியபார்வையை அப்பால் செலுத்தி

விட்டான். இவள் தேநீரைக் கொண்டுவந்து கொடுத்தபோது திருவிக்ரமனுடைய கண்கள் பார்க்க நாணின. தனக்கு அளிக்கப் பட்ட அந்தத் தேநீரை ஸரோஜந்தான் போட்டிருக்கவேண்டு மென்று அவனுக்குத் தோற்றியது; அப்போது அவனுக்கு உண் டான ஆனந்தத்துக்கு அளவே இல்லை.

அவர்கள் சிற்றுண்டி அருந்திக்கொண்டிருக்கும்போது திரு விக்ரமன் உபகாரச்சம்பளத்திற்கு விண்ணப்பம் போடவேண்டு மென்று ராமதாஸ் கூறினார். அச்சம்பளத்தைக்கொண்டு இந்தியன் சிவில் சர்விஸ் பரீக்ஷைக்குப் படிக்கவேண்டுமென்றும் அவர் கூறினார். அதிகசம்பளத்தைச் சீக்கிரமாக அடைய அது ஒருவழி என்று எடுத்துச்சொன்னார். அத்தகைய உபகாரச்சம்பளங்களுக்கு முன்பே விண்ணப்பம் போட்டும், அதில் ஒன்றும் பிரயோஜன மில்லையென்று திருவிக்ரமன் பதிலளித்தான்.

திருவிக்ரமன் அவ்விடத்தைவிட்டுச் சென்றபிறகு, 'இந்தப் பையன் ஏழையாயிருக்கிறான்; பரீக்ஷைகளில் முதல்வகுப்பில் தேறியிருக்கிறான். பெரிய உத்தியோகம் கிடைக்குமென்று நம்பிக்கொண்டிருக்கிறான். இக்காலத்தில் இவைகளெல்லாம் பிர யோஜனப்படா. இவன் நம்முடைய ஸரோஜாவுக்கு ஏற்றகணவனு வானா என்பது எனக்குத்தெரியவில்லை. நீ என்னசொல்கிறாய்?' என்று ராமதாஸ் தம் மனைவியிடம் கூறினார்.

'அவளிஷ்டம் எப்படியோ, அப்படிச்செய்யுங்கள்' என்றாள் அவள்.

'சரோஜா, நீ என்னசொல்கிறாய்?' என்று ராமதாஸ் கேட்டார்.

'அவர் ஏழையோ, பணக்காரரோ அதைக்குறித்து நான் கவலைப்படுவதில்லை. அவருக்கு உபகாரச்சம்பளம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் எனக்கு நிமித்தமில்லை. என்பால் காதலுடை யவராக இருக்கவேண்டும். அவர் என்னைக் காதலிக்கிறார் என்று நான் திடமாகச் சொல்லக்கூடும். ஆகவே, அவர் என்னை ஏற்றுக் கொள்ளும் பக்ஷத்தில் நான் அவரையே கணவராக அடைவேன்'.

'வாழ்வதற்குப் பணம் வேண்டுமே, அதற்கென்னசெய்வது?'

'சர்வகலாசாலைப் பட்டங்களைப்பெற்ற ஒருவர் எங்களுக்குச் செலவிற்கு வேண்டிய திரவியத்தைச் சம்பாதிப்பார் என்பதில் சந்தேகமில்லை. உண்மைக்காதலினால் பிணைக்கப்பட்ட எங்க ளுடைய வாழ்க்கையின் சுகமே எங்களுக்குப் போதுமானது.'

'நீ அசட்டுத்தனமான மனக்கோட்டைகளைக் கட்டிக்கொண் டிருக்கிறாயே. உன்மீது குறை கூறுவதில் பயனில்லை. என்னுடைய

இளம்பிராயத்தில் நானும் அவ்வாறுதான் ஆகாசக்கோட்டைகளைக் கட்டிக்கொண்டிருந்தேன். இதற்கு இப்போது அவகாசமில்லை. உன்னுடைய அபிவிருத்தியை நாம் கவனித்துக்கொண்டிருப்போம். பிறகு அதைக்குறித்து நிச்சயிக்கலாம்' என்று ராமதாஸ் சொன்னார்.

அன்றையதினம் இரவு ஸரோஜா நல்ல கனவுகளைக் கண்டாள்.

இரண்டு தினங்களுக்குப் பிறகு ராமதாஸ் இவளைக்கூப்பிட்டு, 'குழந்தாய், அந்த ஆசாமி எவ்வளவு மோசக்காரனாகி விட்டான், பார்' என்று சொல்லிக்கொண்டே அவள்கையில் ஒருகடிதத்தைக் கொடுத்தார். ஸரோஜா அக்கடிதத்தைப் படித்துப் பார்த்தாள். அதில் கீழ்க் குறித்தவை எழுதப்பட்டிருந்தன:—

'எனதன்புடைய ராமதாஸரே,

இக்கடிதத்தில் காணப்படும் விஷயங்களுக்காக என்னை மன்னிக்குமாறு நான் தங்களை வேண்டிக்கொள்கிறேன். நான் என்னுடைய சகோதரருடன் கலந்து பேசினேன். வரதக்ஷிணையில்லாமல் நான் கலியாணம் செய்துகொள்ளக்கூடாதென்று அவர் சொல்லிவிட்டார். நான் ஏழை என்றுமட்டுந்தான் எனக்குத் தெரிந்திருந்தது. என்னுடைய படிப்பு முடிவடையும்வரையில் எனக்கு வேண்டிய பணம் எனக்கிருக்கிறதென்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுதுதான், நான் ஏழையாக இருப்பது மட்டுமன்றிக் கடனாளியென்றும் அறிந்துகொண்டேன். ஆகவே எனக்கு வரதக்ஷிணைகொடுக்கும் ஒரு மனிதருடைய பெண்ணையே நான் கலியாணம் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. அன்புமிகுந்த கனவுகளையும், ஆசையைஉண்டு பண்ணும் நம்பிக்கைகளையும் நான் மறந்துவிடவேண்டியதுதான். முத்துமுத்தாக இருந்த பனித்துளிகளையெல்லாம் நொடியில் சூரியன் உறிஞ்சிவிட்டான். அவைகள் ஆவியாக மறைந்துபோய் விட்டன. நான் இனிமேல் பொதுக்கிணற்றிற்குச் சென்று என்னுடைய தாகத்தைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். இனி அக்கிணற்றின் அசுத்தமான தண்ணீரையே நான் பருகவேண்டும்; என் வாழ்நாளை நான் அவ்வாறே கழிக்கவேண்டும். வரதக்ஷிணை கொடுக்கும்படி நான் தங்களைக் கேட்பேனென்று கனவிலும் கருதவில்லை. ஸரோஜாவைப்பற்றிக் கொண்டிருந்த கனவுகளையெல்லாம் இனி நான் மனத்தைவிட்டு அகலும்படி தூரத்திவிடவேண்டும். வயிற்றுவலிக்காரனுக்கு நல்ல கனவுகள் எவ்வாறு ஏற்படும்? தயவு செய்து என்னுடைய மனோநிலைமையை உள்ளபடி அறிந்துகொள்

ளுமாறு நான் தங்களைப் பிரார்த்திக்கிறேன். தாங்கள் சௌக்கிய மாக வாழ்வீர்களாக.

திருவிக்ரமன்.

குறிப்பு:—வேறு தேசங்களுக்குச் சென்று படிப்பதற்காக அளிக்கப்படும் உபகாரச்சம்பளம் எனக்குக் கண்டிப்பாகக் கொடுக் கப்படமாட்டாதென்று கடிதமூலமாக நேற்றையதினம் அறிவிக் கப்பட்டது. தயவுசெய்து என்னை மன்னித்து மறந்துவிடுங்கள்.

தி.'

ஸரோஜா அக்கடிதத்தை இருமுறை படித்துப் பார்த்தாள். இவளுடைய கண்களில் தோன்றிய கண்ணீர் இவள் பார்வையை மறைத்தது. தன்னுடைய ஆவல் சிதறிப்போனதைக்குறித்து இவள் மிகவருந்தினாள். உன்னதக் கருத்துக்கள் சிறிதேனும் இல்லாமல் லௌகிகமான கொள்கைகளைத் திருவிக்ரமன் கொண்ட செய்கை இவளுக்குக் கோபத்தை யுண்டுபண்ணிற்று. கடைசியாக இவள் சுபாவநிலைமையை அடைந்தாள். சிலர் பணத்தை உத்தேசித்துத் தான் கலியாணம் செய்துகொள்ள வேண்டியவராகின்றனர். அத் தகைய துரதிர்ஷ்டசாலிகளின் பரிதாபகரமான நிலைமையைக் குறித்து இவள் இரங்கினாள். ஆகவே, இவளுடையதந்தை இவளைக் கேட்டபோது, 'நான் அந்த ஏழை இளைஞன்பால் இரக்கங் கொள்கின்றேன். அவரைப்போல ஆயிரக்கணக்கானவர் கள் நமது தேசத்திலிருக்கின்றனர்; அவர் மிகுந்த கஷ்டஸ்திதியில் இருப்பதனால், காலத்துக்கேற்றவாறு நடந்து கொள்ளத்தான் வேண்டியிருக்கின்றது' என்று இவள் பதிலுரைத்தாள்.

'இருக்கக்கூடும்; ஆனால் அதைக்குறித்து நமக்கென்னகவலை? அவன் உனக்குத் தகுந்த நாயகனல்ல; அவனே அதை ஒப்புக் கொள்கிறான்; ஆகவே அவ்விஷயம் இத்துடன் முடிவடையட்டும்' என்று ராமதாஸ் சொல்லிவிட்டு, அக்கடிதத்தைத் துண்டுதுண் டாகக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் எறிந்துவிட்டார்.

* * *

'மீனு, நீ சொன்னது உண்மைதான். நமது தேசத்தவர் வான் மலரை நம்பிக்கொண்டிருப்பவர்களே. நமது எண்ணங்கள் எல்லாம் நமது வாழ்க்கையில் நிலைகுலைந்து நாசமடைந்து போகின் றன. அநேக இளைஞர்கள் தாங்கள் காதலிக்கும் பெண்களைக் கலி யாணம் செய்து கொள்ளமுடியாமல் தவிக்கின்றார்கள். பணத்திற் காக வேறொருபெண்ணைக்கலியாணம் செய்துகொள்ளும்படி நேரிடு கிறது. அவர்களுடைய படிப்பிற்காகவோ வேறு குடும்பவிஷயங்

களுக்காகவோ பணம் இன்றியமையாததாகிவிடுகின்றது' என்றாள் ஸரோஜா.

'நாகரிகம் மேலிட மேலிட, கொள்கைகளும் மூடநம்பிக்கைகளும் மறைந்துபோய்க்கொண்டேயிருக்கும். ஆராய்ந்தறியும் சக்தி விருத்தியடையும் இந்த இருபதாம் நூற்றாண்டில் நாகரிகம் விருத்தி யடைந்திருக்கின்றதென்பதில் சந்தேகமில்லை. ஆகவே புத்திக்கு எது நல்லதென்று தோன்றுகிறதோ அதைத்தான் நாம் செய்யவேண்டும். அடதெய்வமே! உன்னுடைய கண்களினின்றும் கண்ணீர் வருவானேன்? காரணமென்ன?' என்றாள் மீனு.

'கொள்கைகள் மறைந்து போய்விடுகின்றனவே என்பதினால் தான்' என்று கண்ணீரைத் துடைத்துக்கொண்டு ஸரோஜா கூறினாள்.

'நேற்றையதினம் திருவிக்ரமன் உங்கள் வீட்டிற்கு வந்திருந்தாரா?'

'இல்லை, காலத்தை அனுசரித்து அவர், பணம்வந்தால்தான் கலியாணம் செய்துகொள்வதென்று நிச்சயித்துவிட்டார்' என்று ஸரோஜா சொல்லிவிட்டு, மறுபடியும் பெருகிக்கொண்டிருக்கும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

'என் அன்புள்ள தோழியே! அழாதே; அத்தகைய சலன புத்தியுடையவர்களைக் குறித்து அழுவதில் பயனில்லை.'

'கஷ்டங்கள் மேலிட்ட சந்தர்ப்பங்களில் அவரைப்போலவே எவரும் சலனபுத்தியுடையவர்கள் ஆவார்களல்லவா?'

'எல்லோரும் அப்படி யிருப்பார்களென்று நினைக்கமாட்டேன். நிற்க எல்லாம் நலத்திற்கே என்று நாம் கருதுவோமாக! நீ அவரைக்குறித்து வருத்தப்படாமலிருப்பது மேல்'

'இவ்வுலகத்தில் எங்கும் துன்பமே நிறைந்திருக்கிறது.'

'அது நம்முடைய மனோபாவத்தைப் பொறுத்திருக்கிறது.' அது இன்னும் துக்கமே நிரம்பியதாகக் காணப்படுவதும் உண்டு. நல்ல வேளையாக நம்மைப் பொறுத்தமட்டில் இவ்வுலகம் அதிக துன்பம் நிரம்பியதாகத் தோன்றாமலிருக்கிறது. அதைக்குறித்து நாம் சந்தோஷப்படவேண்டியிருக்கிறது.''

'நீசொல்லுவது ஒரு நல்ல காரணமாக எனக்குத் தோன்றவில்லை.'

(தொடரும்.)

உபாத்தியாயர் பகுதி

பிராசீன விளையாட்டுக்களும் பாலர் கணிதப்பயிற்சியும்

எஸ். ஜகந்நாதன்

முன்னுரை

குழந்தைகளின் தேக மனவளர்ச்சியில் விளையாட்டே ஜீவாதாரம் என்று சொல்லலாம். அவர்கள் பஞ்ச இந்திரியங்கள் மூலமாக விஷயங்களை அறிந்துகொண்டு தங்களது அறிவையும் மேன்மைப் படுத்திக்கொள்கிறார்கள். பள்ளிக்கூடத்துப் பாடங்களைக் கற்றுக் கொடுப்பதிலும் பஞ்ச இந்திரியங்கள் மூலமாகக் குழந்தைகள் விஷயங்களை அறிந்துகொள்ளும்படி போதுமான சாதனங்களை ஏற்படுத்துவது முக்கியமாகும்.

எண்ணும் எழுத்தும் ஆகிய இவை இரண்டும் ஞானக் கண்ணைத் திறக்கும்படியான திறவுகோல்களாக இருக்கின்றன. எழுத்துத் தெரியாதவன்கூட தன் ஜீவியநாட்களைச் சரிவரக் கழிக்கத் தக்கவாறு சில கணக்குக்கள் போடத் தெரிந்து கொள்ள வேண்டியவனாகிறான். மேலும் ஜீவியத்திற்கு வேண்டிய கணக்குக்கள் எல்லாம் வாய்மொழியாகவே செய்யப்பட வேண்டியிருக்கின்றன. இதற்கேற்ற பயிற்சி இளமைப்பருவ முதற் கொண்டே உண்டாகவேண்டும். வஸ்துக்களைப் பார்ப்பது, கையாளுவது, கணக்கில் வாய்மொழியாகவே பயிற்சிபெறுவது, தினசரி நடைபெறும் விஷயங்களைக்கொண்டு கணிதஞானத்தைப் பழக்குவது ஞாபகசக்தியை வளர்த்துவது இவற்றைப்போலப் படிப்படியாகக் கணிதப்பயிற்சி அபிவிருத்தியடையவேண்டும்.

நமது தாய்நாடாகிய தமிழ்நாட்டில் கணிதம் எவ்வளவோ சிறப்படைந்து இருந்தது என்றும், மனக்கணக்குக்களாகச் செய்யவேண்டிய சுலபமான முறைகளும் வாய்பாடுகளும் இன்றும் உள்ளன

என்றும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். கணக்கில் எவ்வளவோ நிபுணர்கள் தோன்றியிருக்கிறார்கள். உதாரணமாக அரங்கநாத முதலியாரின் பெயரும் ராமானுஜனின்பெயரும் நமது ஞாபகத்திற்கு வரலாம். எல்லோரும் அரங்கநாத முதலியார், ராமானுஜம் இவர்களைப்போல் உயர்ந்த நிலையை அடைவது அசாத்தியம் என்றாலும் தற்காலம் காணக்கூடிய குறையை நீக்கத்தக்க முறைகளையும், தினசரி சம்பவத்தில் வரக்கூடிய கணக்குக்களையும், வாய்மொழியாகப் போடக்கூடிய வழிகளையும் பயிற்சிகளையும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் நம்மவர்கள் பெறத்தக்க வழிகளைக் கையாளுதல் ஏற்றதாகும்.


கதை போதனமுறை சம்பந்தமான விளையாட்டுக்கள்

தமிழ்நாட்டில் பற்பல விளையாட்டுக்கள் காணப்படுகின்றன. காலைமுதல் மாலைவரையில் குழந்தைகள் தெருக்களிலும் வீட்டுத் திண்ணைகளிலும் இவ்விளையாட்டுக்களை விளையாடிக் காலங்கழிக்கிறார்கள். ஆனால் பள்ளிக்குவந்ததும் அவர்கள் இவைகளை மறந்து விடுவதற்கு நாமே காரணமாக இருக்கிறோம் என்று எனக்குத் தோன்றுகிறது. அவர்களது தினசரிப்பழக்கத்தை ஒட்டியும், தெரிந்ததைக்கொண்டு தெரியாததை விளக்குதல் என்ற போதனமுறையை அனுசரித்தும் நாம் அவ்விளையாட்டுக்கள் வாயிலாக இன்பம் உண்டாக்கியும் ஊக்கம் பிறப்பித்தும் நாம் பாடங்களை நடத்தவேண்டும். இன்பமும், ஊக்கமும் இருக்குமானால் எந்தக் கடுமையான காரியத்தையும் சுலபமாகச் சாதிக்க முடியும் என்பது யாவரும் அறிந்துள்ள விஷயம். அவற்றையேதான் போதனமுறையிலும் சொல்லியிருக்கிறார்களே தவிர, புதிதாக ஒன்றும் சொல்லிவிடவில்லை. இங்கே எனக்குத்தெரிந்த கணித அபிவிருத்திக்கான விளையாட்டுக்கள் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

1. "ஒற்றையோ இரட்டையோ?"

சாதாரணமாய்க் குழந்தைகள் ஒன்று என்பதைத் தெரிந்துகொண்டுவிடுகிறார்கள். மேலும் முழுசு, பாதி, குறைவு, நிரம்ப, போதும், போதாது என்னும் பதங்களைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். சாதாரணமாக விளையாட்டு எண்ணிக்கையில் 1, 2, 3, 8,4, 5

என்றும், 1, 3, 8, 9, 6 என்றும் வாயில் வந்தபடி எண்ணுகிறார்கள். ஒன்றிற்குப்பிறகு 3 என்று சொல்லுகிற குழந்தைகளைக் கண்டும் கேட்டும் இருக்கிறேன். இந்தப் பிராசீனமான விளையாட்டில் 2 என்பதைப் பலமுறை சொல்லிக் காட்டத்தக்க பயிற்சி ஏற்பட்டிருக்கிறது.




“ஒற்றையோ இரட்டையோ” விளையாட்டு

ஒரு குழந்தை கையில் கொஞ்சம் சோழிகளோ, புளியங் கொட்டைகளோ குன்றிமணிகளோ வைத்திருக்கிறாள். அவள் “ஒற்றையோ இரட்டையோ” என்று கேட்கிறாள். அவள் தாயார் “ஒற்றை” என்று சொல்லுகிறாள். உடனே குழந்தை தன் கையிலுள்ளவற்றை இரட்டை இரட்டையாக வைக்கிறாள். இரண்டு இரண்டு என்று கொண்டே வைக்கிறாள். கடைசியில் ஒன்றே ஒன்று இருந்தால் ஒற்றை என்றும், ஒன்றுமில்லாமல் இருந்தால் இரட்டை யென்றும் சொல்லி விடுகிறாள். இதேமாதிரி பலதரம் தாயும் குழந்தையும் விளையாட இவற்றின் பொருள் நன்கு தெரியவரும்.

2. பாண்டி ஆட்டம்

இது ஒரு பழைய ஆட்டம் ஆயினும் தற்காலத்தில்கூட சிறுவர்கள் சிறுமிகள் இவ்விளையாட்டை இன்புடன் ஆடுவதை நாம் தினந்தோறும் பார்த்து வருகிறோம். சாதாரணமாக மூன்று வட்டங்கள் போட்டுக் கொண்டுதான் ஆடுவார்கள். மேலும் ஆறு வட்டங்கள்போட்டுக்கொண்டு ஆடுவதும் உண்டு. சிறுவர்கள்

தங்களுடைய கால்களாலேயே தாம்பாளங்கள்போல் வட்டங்கள் போட்டுக்கொண்டு நொண்டி நொண்டிப் பாண்டி ஆடுவார்கள். ஜர்மன் சிறுவர்கள்கூட தெருவில் பாண்டி ஆடுகிறார்கள் என்பதை நான் ஒரு படத்தில் பார்த்தது ஞாபகம் வருகிறது. கீழேயுள்ள படத்தைப் பாருங்கள். ஒவ்வோர் இடமாகத் தாண்டிச் செல்ல ஒவ்வொன்றைக்கூட்டுகிறதுபோல் ஆகிறது.




ஓர் இடம்விட்டு அடுத்த இடம் செல்ல ஓர் எண்ணுடன் 2 கூட்டுவதுபோல் ஆகும். இரண்டு இடங்கள் விட்டு அடுத்த இடம் செல்ல 3 கூட்டுவதுபோல் ஆகும்.

இவ்விளையாட்டு மூலமாகக் கணிதமானது "எண் இடவேலை" என்று குறிப்பிட்டிருப்பதை நன்கு உணரலாம். பெரியார்கள் தமது யோசனையினால் எவ்வளவு நூதனமான விஷயங்களைக் கண்டறிகிறார்களோ அதேபோல் குழந்தைகளும் "ஏரோப்ளேன் பாண்டி" என்னும் ஆட்டத்தைக் குழந்தைகள் இராஜ்யத்தில் நூதனமாகக் கண்டுபிடித்து அதற்கேற்ற சட்டதிட்டங்களையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இயற்கையே இம்மாதிரி அமைந்திருக்கிறது. இது என்ன ஆச்சர்யம்!


3. பரமபதசோபான படம்

மேலேசொல்லப்பட்ட எண்இடவேலையை வேறு விளையாட்டுக்களினால் நிரூபிக்கலாம். "பரமபதசோபான படம்" என்றும் "மோக்ஷப்படம்" என்றும் கேள்விப்பட்டிருக்கலாம். வீட்டிலுள்ள பெரியவர்களும் குழந்தைகளும்கூட சோழிகள் வைத்துக்கொண்டு இந்த ஆட்டத்தை ஆடுவார்கள். ஏணியில் ஏறுவதும், பாம்பின் வழியாய் இறங்குவதும் வேடிக்கையைத் தரும். "இதெல்

லாம் அவரவர்கள் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது" என்றும் சொல்லுவார்கள். சோழிகளுக்குப் பதிலாகத் தாயக்கட்டைகளைக் கூட உபயோகிக்கலாம்.



சோழிகள்



தாயக்கட்டை

மேல்நாட்டார்கூட இந்த விளையாட்டை ஆடுகிறார்கள். ஆனால் அவர்கள் இதை, "பாம்புகளும் ஏணிகளும்" என்று சொல்லுகிறார்கள். சோழிகளுக்குப்பதிலாக ஒரு பெட்டிக்குள் ஒருகாயைப்போட்டுக் குலுக்குகிறார்கள். நமதுபடம் 3 பை. அவர்களது படம் 13 அ௵. விளையாட்டின் ஒற்றுமையை நோக்க மனிதர்களின் எண்ணம் எப்படி ஒரேமாதிரி போய்க் கொண்டிருக்கிறது என்று தெரியவருகிறதல்லவா!

சுமார் 4 பேர்வரையில் சேர்ந்து மோக்ஷப்பட விளையாட்டை ஆடலாம். ஆடுகிற ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான காய் வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு சோழிகளைக் குலுக்கிப் போட, எந்த எண் வருகிறதோ அதற்குத் தகுந்தாற்போல் தம்முடைய காயைச் சரியான இடத்தில் வைக்கவேண்டும். 2 விழுந்தால் 2வது இடத்திலும், அதன்பிறகு 3 விழுந்தால் $2+3=5$வது இடத்திலும், அதன்பின் 4 விழுந்தால் $2+3+4=9$வது இடத்திலும் காயை நகர்த்தவேண்டும். ஒருவர் ஆடினபிறகு அடுத்தவர் ஆடவேண்டும். ஒவ்வொருவரும் ஒரே சமயத்தில் ஒரே தடவைதான் சோழிகளைக் குலுக்கித் தம் காயை நகர்த்திவைக்கமுடியும். ஏணியின்மீது ஏறுவதும், பாம்பின்வழியாய் இறங்குவதும் வேடிக்கையை உண்டுபண்ணும். ஓர் எண்ணுடன் ஒன்றுமுதல் நான்குவரையிலுள்ள எந்த எண்ணையும் கூட்ட இந்த விளையாட்டுப் போதுமான பயிற்சியைத் தருகிறது.

(தொடரும்.)

இக்கட்டுரையிற் காணப்படும் பிளாக்குகள் ஸ்ரீமான்கள் பி. ஜி. பால் அண்ட் கம்பெனியார்கள் உதவியவை.



புடைவைத் தலைப்பு

வி. விசாலாக்ஷி அம்மாள்

புடைவைத் தலைப்பை நம் முன்னோர்கள் எடுத்துச் செருகிக் கொண்டுதான் இருந்தார்கள்; தலைப்பைப் பின்பக்கம் அப்படியே தொங்கவிட்டுக்கொள்ளும் வழக்கம் சமீபத்தில் ஏற்பட்ட நாகரிகம் என்றே கூறவேண்டும். முப்பாகக் கரையே அழகு என்று கருதப்பட்ட அந்த நாட்களில் நீளமான தலைப்பு நாசூக்கானதாக எண்ணப்பட்டது. புடைவையின் தலைப்பு கிட்டத்தட்ட இரண்டு முழ நீளம்வரையில் இருந்தது. 'கார்டு' கரைகள் ஏற்பட்ட பிறகு, தலைப்பின் நீளமும் இதற்கு ஏற்பக் குறைந்துகொண்டே வந்தது. இப்பொழுது தலைப்பின் நீளம் மிகவும் குறைவாக இருப்பதே நாசூக்காக எண்ணப்படுகிறது. மேலும் நீளத் தலைப்பு தொங்கவிடுவதற்கு அவ்வளவு நன்றாக இருப்பதும் இல்லை.

தலைப்பை முன்பக்கம் கொண்டுவந்து மடித்துச் செருகிக் கொள்ளுவது ஒருவித அலங்காரம், அப்படியே பின்பக்கம் தொங்கவிட்டுக் கொள்ளுவது மற்றொரு தினுசு அலங்காரம் என்று கூறலாம். தலைப்பை எடுத்துச் செருகிக் கொள்ளுவதினால் எவ்வித வித்தியாசமான தோற்றமும் உண்டாவதில்லை என்றே சொல்ல வேண்டும். தலைப்பைச் செருகும் பொழுது, சற்று நீளம் விட்டுச் செருகவேண்டும். செருகும் பக்கம் சற்றுத் தூக்கலாகவும், மற்றையபக்கம் தாழ்ந்தும் இருக்கும்படி இழுத்தாவது, தட்டியாவது விடவேண்டும். தலைப்பை ஒட்ட இழுத்துக்கட்டிக் கொள்ளுதல் கர்னாடக வழக்கம் என்பது சகஜமாக அனைவருக்கும் தெரிந்த விஷயந்தான். தலைப்பைச் செருகிக்கொள்ளும் பொழுது அநேகமாக எல்லாரும் புடைவையைச் சற்று அதிக


அகலமுள்ள பக்கம் வெளித் தலைப்பாக இருக்கும்படி மடித்தே கட்டிக்கொள்ளுகிறார்கள். தலைப்பைச் செருகிக்கொள்ளும் பொழுது குட்டைத் தலைப்பாக இருக்காமல் கவனித்துக் கொள்ளுவதே முக்கியமான அம்சம்.

தலைப்பைத் தொங்கவிடுவதாக இருந்தால், முதலாவதாக இந்த அலங்காரம் நமக்குப் பொருத்தமாக இருக்குமா என்பதை கவனித்துக்கொள்ளவேண்டும். குட்டையாக இருப்பவர்கள் தலைப்பைத் தொங்கவிட்டுக் கொள்ளுவதனால் இன்னும் அதிகக் குட்டையாகக் காட்டுகிறார்கள். இவர்கள் சற்று உயரமாகக்காட்ட வேண்டும் என்று பிரியப்படுவதாக இருந்தால், 'கார்டு' கரைப் புடைவைகள் கட்டக்கூடாது; தலைப்பைத் தொங்கவிடக் கூடாது. குட்டையாக இருப்பவர்கள் சற்று அகலமான கரைகள் போட்ட புடைவைகளைக் கட்டித் தலைப்பை நாசூக்காக எடுத்துச் செருகிக் கொள்ளுவதனால் இவர்கள் பார்வைக்குச் சற்று உயரமாகத் தோன்றுவார்கள். அப்படியே இவர்கள் தலைப்பைத் தொங்க விட்டுக்கொள்ளுவதாக இருந்தாலும், குட்டைத்தலைப்பாகத் தொங்கவிட்டுக் கொள்ளவேண்டும். அதிகப் பருமனாக இருப்பவர்கள் தலைப்பைத் தொங்கவிட்டுக்கொள்ளுவதனால் இன்னும் பருமனாக 'குறுக்கே படர்ந்து' காட்டுகிறார்கள். இவர்கள் தலைப்பைச் செருகிக்கொள்ளுவதே நலம். தலைப்பைச் செருகிக் கொள்ளுவதனால் சரிகைவேலைசெய்த தலைப்புக்களின் வேலைப்பாடு மறையப்பட்டுச் சோபிக்காமல் போய்விடுகிறது என்பது என்னவோ உண்மைதான். இருந்தாலும், அதிகப்பருமன் இல்லாமல் நல்ல நிதானமான உயரமுள்ளவர்கள் தொங்கவிட்டுக்கொண்டால் தான் இந்த அலங்காரம் பொருத்தமாக இருக்கிறது. சிலர் ஒட்டியாணம் போட்டுக்கொண்டு, மேலே தோளருகில் 'பொரோச்'சையும் போட்டுக்கொள்ளுகிறார்கள். தலைப்பைத் தொங்கவிடும் பொழுது,இதில் ஏதாவது ஒன்றைமட்டும் உபயோகிப்பதே போதுமானது. தோள் மூடிஇருக்கவேண்டும் என்று இஷ்டப்படுகிறவர்கள் வலது தோள்மேல் தலைப்பின் ஒரு கரையைப் பொருத்தி, மிகவும்சிறிய 'பொரோச்சி'னாலோ, துணி மடிப்பில் மறைந்துவிடும் படியான சிறிய 'சேப்டீ பின்'னினாலோ குத்திக் கொள்ளலாம். பொதுவில், தலைப்பைத் தொங்கவிட்டுச் செய்துகொள்ளும் அலங்காரம் அதிக வயதாகாத மாதர்களுக்கே இசைவானது. அவர்களுள்ளும் சிலபேர்களுக்கு இது பொருந்துவதில்லை. இவர்கள் தலைப்பைச் செருகிக்கொள்ளுவதே மேல். தலைப்பைத் தொங்கவிட்டுக் கொள்ளும்பொழுது, அதிக நீளம் இல்லாமலும், அதிகம் குட்டையாக இல்லாமலும், இடையின் கீழ் ஏறக்குறைய ஒருசாண் நீளம்

தொங்கும்படி கட்டிக் கொள்ளவேண்டும். ஒரு பக்கம் தூக்கியும், தலைப்பின் மற்றொரு நுனி தாழ்ந்தும் இராமல் ஏத்தாப்பைத் தோளின் மேல் ஒரே சீராகச் சுருக்கிப் போட்டு, 'பொரோச்'சைக் குத்த வேண்டும். தவிர இந்த அலங்காரம் தங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறதா என்பது அவர் அவர்கள் கவனித்துக் கொள்ளவேண்டிய விஷயம்; மனிதர்களுடைய மனப்பாங்கைப் பொறுத்தது என்றும் கூறலாம்.

பூசணிக்காய் ஹல்வா

இதற்குப் பூசணிக்காய், நல்ல சதைப்பற்று உள்ளதாய், முற்றின கல்யாண—அதாவது சாம்பல்—பூசணிக்காயாக இருக்கவேண்டும். அதிகம் முற்றி விட்டால் காய் சடைசடையாக இருக்குமாகையினால் சரியானபடி துருவுதற்கு வராது. பூசணிக்காயைத் துண்டு செய்து, விதை குடல் முதலியவைகளை நீக்கி விட்டுத் தோலைச் சீவாமல், அப்படியே கொப்பரைத்துருவில் துருவவேண்டும். தோல் அளவில் துருவி, நிறுத்திக்கொள்ளவேண்டும். துருவலை வாய் அகலமான களிம்பேறாத கனமான பாத்திரத்தில் போட்டு, கொஞ்சம் பாலைவிட்டு, நன்றாக வேகவைத்துக்கொள்ள வேண்டும். பிறகு அடுப்பை விட்டு இறக்கி, வெந்த துருவலை ஒரு வெள்ளைத் துணியில் கொட்டிப்பிழிந்து, சக்கையை எடுத்துக் கொள்ளவேண்டும். துருவல் மொத்தை ஒருபங்கானால், ஒன்றரைப் பங்கு சர்க்கரை, அரைப்பங்கு பால்கோவா என்ற அளவில் எடுத்துக்கொள்ளவேண்டும். சர்க்கரையை முதலில் கெட்டிப்பாகாகக் காய்ச்சி, அதில் வெந்த துருவல்மொத்தை, பால்கோவா இவைகளைப் போட்டு, நெய் விட்டுக்கிளறி, வழக்கமான குங்குமப்பூ, ஏலப்பொடி, வாதுமை, முந்திரிப்பருப்பு இவைகளைச் சேர்த்து, சுருண்டுவந்ததும், ஒரு நெய் தடவின தட்டில் கொட்டிவிட வேண்டும். இந்த ஹல்வாவைப் பால்கோவா சேர்க்காமலும் செய்யலாம். அப்படிச் செய்வதாக இருந்தால், பூசணிக்காய்த் துருவலை வேகும்பொழுது, தாராளமாகப் பால்விட்டு வேகவைத்துச் சுண்டக் காய்ச்ச வேண்டும். இந்த ஹல்வா வாய்க்கு ருசியாகவும் இனிப்பாகவும் இருப்பதுடன், உடம்பிற்கும் புஷ்டியை அளிக்கும்.



சிங்கமும் புலியும்

பே. நா. அப்புஸ்வாமி ஐயர், பி. ஏ., பி. எல்.

"மைதானத்தில் சர்க்கஸ் வந்திருக்கிறதே, தெரியுமா, மாமா? அதற்கு நாங்கள் நேற்று ராத்திரி போனேம். அப்பா கூட்டிக்கொண்டு போனர்கள். மைதானத்திலே பெரிய கூடாரம் ஒன்று அடித்திருக்கிறது. அதற்குள்ளே நட்ட நடுவிலே இரும்புச்சட்டங்களைக் கொண்டு நிறுத்தினர்கள். பெரிய கூடாக ஒரு கூண்டு கட்டினர்கள். அதற்குள்ளே நாலு சிங்கம், இரண்டு புலி, ஒரு கரடி, ஏழெட்டு நாய்கள், ஓர் ஆடு எல்லாவற்றையும் விட்டு அடைத்தார்கள். அந்த ஆட்டுக்கு உடம்பெல்லாம் பயத்தால் கிடுகிடுவென்று ஆடிக்கொண்டே இருந்தது. கரடி வெறும் சோம்பேறி போலிருந்தது. முதலில் எந்த இடத்தில் வந்து உட்கார்ந்ததோ அந்த இடத்தை விட்டு அது அசையவே இல்லை. ஏன் மாமா?"

"அது வெள்ளைக்கரடி, ராமா. அது இருக்கிற ஊரிலே எப்பொழுதும்—வருஷம் முந்நூற்றறுபத்தைந்து நாளும்—பனிக்கட்டி உறைந்திருக்கும். அங்கே ஒரே குளிர். நீயும் நானும் அங்கே போனல், நம்மால் அந்தக் குளிர் தாங்க முடியாது. நாம் குளிரிலே விறைத்துப் போவோம். அதைப்போல,

அந்தக் கரடிக்கு வெயில் பிடிக்காது. அதற்கு வெயில் தாங்காது. ஆகையால்தான் அது சோம்பேறி மாதிரியாகச் சும்மா இருந்தது. குளிர்ப் பிரதேசத்திலே உள்ளவர்கள் சோம்பேறிகளாய் இருந்தால் கஷ்டம்; பிழைத்திருக்கவே முடியாது.''

"கூட்டுக்குள்ளிருந்து நாய்கள் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தன. வாலைச் சுருட்டிக் கொண்டு இங்கும் அங்கும் அசட்டுத்தனமாக ஓடிக் கொண்டிருந்தன. ஒரே ஒரு நாய் மட்டிலும் தைரியமாய் இருந்தது."

" அது வேட்டை நாய்; கரடி வேட்டையில் அதை உபயோகிப்பதுண்டு. அது சிங்கம் புலி ஒன்றுக்கும் பயப்படாது" என்றேன்.

" அதனால்தான் அது கரடியைப் பார்த்து உறுமிக்கொண்டே இருந்ததுபோல்இருக்கிறது. இரண்டு சிங்கத்துக்குத் தலையிலும் கழுத்திலும் ஜோராகப் பிடரிமயிர் இருந்தது; அது பார்ப்பதற்கு அழகாக இருந்தது. தலையைத் தூக்கிக்கொண்டு சிங்கம் நடக்கிறதைப் பார்த்தால் நாடகத்திலே ராஜா நடக்கிற மாதிரி இருந்தது. மற்ற இரண்டு சிங்கங்களுக்குப் பிடரிமயிர் இல்லை."

" புலிக்கும் சிங்கத்துக்கும் ஏதாவது வித்தியாசம் இருந்ததா? கவனித்தாயா?''

" புலியின் உடம்பின்மேலெல்லாம் வரி வரியாகக் கோடுபோட்டதுபோல இருந்தது. சிங்கத்தின் உடம்பிலே கோடு ஒன்றும் இல்லை. அது ஒரே பழுப்பு நிறமாக இருந்தது."

"இவ்வளவுதானா?"

" சிங்கத்தினுடைய வாலின் நுனியிலே, மாட்டு வாலின் நுனியில் இருப்பதுபோல், குஞ்சம்மாதிரி

யான மயிர்க்குச்சு ஒன்று இருந்தது. புலியினுடைய வாலானது பூனைவால் நாய்வால் மாதிரியாக மொட்டையா யிருந்தது. அது கிடக்கட்டும், மாமா; சிங்கம் பலசாலியா? புலி பலசாலியா?"

"நீகேட்ட கேள்வி நல்ல கேள்வி; ஆனால் புதுக் கேள்வி இல்லை. ரொம்பநாளாக எத்தனையோ பேர் கேட்டுக்கொண்டுவந்த கேள்விதான் இது. சிங்கம் அழகா? புலி அழகா? சிங்கம் பலசாலியா? புலி பலசாலியா? என்கிற கேள்விகளுக்குப் பழங்காவியங்களில்கூட விடை அகப்படும். ஒரு புருஷன் அழகான கம்பீர நடைநடந்தால் 'சிங்கத்தைப் போல நடந்துவந்தான்' என்று அவனைக் காவியங்களில் வருணித்திருக்கும்; சிங்கத்துக்கு மிருகேந்திரன் மிருகராஜன் என்றெல்லாம் பெயரிட்டிருக்கிறார்கள். அதனால் அதுதான் பலசாலி என்பது அவர்களுடைய கருத்து."


"அப்படியானால் சிங்கம்தானா பலசாலி?"

"நான் சிங்கம் பலசாலி என்று சொல்லவில்லை. பழைய காவியங்களைப் பார்த்தால், பலதேசத்துக் காவியங்களிலேயும், சிங்கம் தான் மிகவும் அழகான பிராணி என்றும், மிகவும் பலசாலியான மிருகம் என்றும் நினைத்துவந்ததாகத் தெரிகிறது."

"அது சரியா? தப்பா?"

"நான் அடியைப்பிடித்துச் சொல்லுகிறேன், கேள். சிங்கம் புலி இரண்டும் பூனை வருக்கத்தைச் சேர்ந்த மிருகங்கள், தெரியுமோ, இல்லையோ? வீட்டுப் பூனை மிகவும் சாதாரண ஜந்துவாய் இருந்தாலும் அதற்கு எத்தனையோ விசேஷங்கள் இருக்கின்றன. அதன் பல், நாக்கு, நகம், பாதம், மீசை, கண் இவை ஒவ்வொன்றிலும் விசேஷம் இருக்கிறது.

"பூனையைப் போலவே சிங்கமும் புலியும் மாமிச பக்ஷிணிகள்; அதனால் அவைகளின் பற்களும் நகங்களும் மாமிசத்தைக் கிழிப்பதற்கு ஏற்றபடி கூர்மையாகவும் வளை வாகவும் அமைந்திருக்கின்றன. நாம் சாப்பிடுவதைப்போல் அவை உணவை அரைத்து



பூனையின் பற்கள்.

அரைத்துச் சாப்பிடுவதில்லை. அப்படியே கடித்து விழுங்கி விடுகின்றன. அதனால் அவைகளுக்கு அரைக்கிற பற்கள் இல்லை; கிழிக்கிற பற்களே உண்டு.

"பூனையின் நாக்கைப்போலவே சிங்கம் புலிகளின் நாக்கும் மிகவும் சுரசுரப்பாக இருக்கும். நாயின் நாக்கு பட்டுப்போல மிருதுவாயிருக்கும். சிங்கத்தின் நாக்கு அரத்தைப்போலிருக்கும். புலியின் நாக்கும் அப்படித்தான். அவை கொன்று தின்னும் மிருகத்தின் எலும்பில் ஒட்டிக்கொண்டிருக்கும் மாமிசத்தைத் துளிகூட விடாதபடி அராவி எடுத்துச் சாப்பிடுவதற்கு இந்த நாக்கு மிகவும் உபயோகமாக இருக்கிறது. அவை நம்மை விளையாட்டாக நக்கிக்கொடுத்தாலும் கூட நம்முடைய தோல் உரிந்து இரத்தம் வந்து விடும். இதைப்பற்றி எத்தனையோ கதைகள் உண்டு.

"அவைகளின் கால் நகங்களும் பூனையின் கால் நகங்களைப்போலவே வளைந்தும் மிகவும் கூர்மையாயும்இருக்கும். சாதாரணமாக அவை கால்விரல்களுக்கு இடையேயுள்ள உறைகளுக்குள் மறைந்திருக்கும். ஏதாவது ஒன்றைப் பிடிக்கவோ கிழிக்கவோ

வேண்டுமானால் அவைகளை வெளியே நீட்டமுடியும். வேண்டாதபோது அவைகளை மறுபடியும் உறைக்குள்ளே இழுத்துக்கொண்டு பத்திரப்படுத்திவைக்க முடியும். நாய்களுடைய கால் நகங்கள் வெளியே எப்பொழுதும் நீட்டிக் கொண்டிருக்கும். அந்தமாதிரி இந்த நகங்களும் வெளியே நீட்டினவாக்கில் இருந்தால் சிங்கம் புலிகள் நடக்கும்போதும் ஓடும்போதும் இவைகளின் முனைகள் பூமியில் உராய்ந்து கூர்மழுங்கி மொட்டையாய்ப் போய்விடுமல்லவா? அதனால்தான் பெரிய பட்டாக்கத்திகளை உறையில் போட்டு வைப்பதைப்போல் இவற்றையும் வேண்டாத வேளைகளில் உறைக்குள்ளே வைத்திருக்கிறது. நகங்களை வேண்டியபடி மடக்கவும் நீட்டவும் சௌகரியமான ஏற்பாடுகள் காலில் அமைந்திருக்கின்றன.



பூனை இனத்தின் நகங்கள்.


“இவை வேட்டையாடும் பிராணிகள். ஆயினும் மிகவும் வேகமாய் ஓடிப்பிடிக்கக்கூடிய திறமை இவைகளுக்குக் கிடையாது. இவை பெரும்பாலும் மான், வரிக்குதிரை முதலியவைபோல வேகமாய் ஓடக்கூடிய பிராணிகளையே கொன்று தின்று வாழும். ஆதலால் இவை ஒளித்துப் பதுங்கியிருந்து, ஓசைப்படாமல் நெருங்கிச் சென்று, ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவைகளைப் பற்றிப் பிடித்துக் கொல்லும். ஆகையால் சந்தடியே செய்யாமல் நடக்கவேண்டியது அவசியம். அதனால் இவைகளுடைய பாதங்களின் அடிப்புறத்தில் மெத்தைகள் வைத்துத் தைத்தது மாதிரியாகப் பல மெத்தைகள் காணப் படுகின்றன.



பாதங்களின் அடிப்புறம்.

ஆகையால் இவை நடக்கும்போது 'டாக், டாக்' என்று ஓசைப்படாது; நடக்கிற ஓசையே கேட்காது."

"அதனால்தானே மாமா, 'பூனைமாதிரி நடக்கிறான்' என்று சொல்லுகிறார்கள்?"



பூனையின் மீசை.

"பூனைக்கு மீசை இருக்கிறதே, பார்த்திருக்கிறாயா?"

"பார்த்திருக்கிறேன்: இரண்டு பக்கமும் குச்சிமாதிரி நீட்டிக்கொண்டிருக்கும்."

"அது எதற்காகத் தெரியுமா? மனிதர்கள் மீசையை வளர்க்கிறமாதிரி அழகுக்காகவா? ஆசாரத்துக்காகவா? இல்லை. பூனையினுடைய மீசையின் ஒருபக்கத்து நுனிமுதல் மற்றொரு பக்கத்து நுனிவரையில் அளந்துபார்த்தால், பூனை எவ்வளவு அகலம் இருக்கிறதோ அதே அகலம்தான் அதுவும் இருக்கும். பூனையானது எலி வேட்டையாடுகிறபொழுது ஓசைப்படாமல், எலிமேல் வைத்த கண்ணை எடுக்காமல், எலி நுழைகிற வழியின்பின்னே பதுங்கிப் பதுங்கிப் போகும். தான் போகிறவழி சரிதானா என்று கவனித்துக்கொண்டே போவது அப்பொழுது முடியாது. ஏனென்றால் எலிமேல்வைத்த கண்ணை ஒரு க்ஷணம் எடுத்தால் அந்தக்ஷணமே எலி இருட்டில் மாயமாய் மறைந்துவிடும். பூனை வேட்டையாடிப் பின்தொடர்ந்து போகும்போது எங்கேயாவது சந்துபொந்தில் அதனுடைய மீசை தட்டுமானால் அங்கே உடம்பு நுழையாது என்று பூனைக்கு உடனே தெரியும். அதனால் அது அந்த வழியாய் நுழைய முயலாமல் வேறுவழியாய் நுழையப்பார்க்கும்.

"சிங்கத்துக்கும் புலிக்கும் மீசை உண்டு. அதுவும் இதற்காகத்தான் ஏற்பட்டது. அவை காட்டிலே

முள்ளிலும் புதரிலும் நுழைந்து போக முயலும் போது 'இங்கே உனக்கு வழிகிடையாது' என்று மீசை அறிவிக்கும். உடனே அவை அந்த வழியை விட்டுவிட்டு வேறு வழியாகப்போகப் பார்க்கும். மீசை இல்லாவிட்டால் அவை பாதிஉடம்பு நுழைந்தபிறகு புதரில் மாட்டிக்கொள்ளும். இரையும் அகப் படாது. மற்றப்படி உயிருக்கே அபாயம் வந்து விடும்.''


"குருடன் கையில் வைத்துக்கொண்டு தட்டிக் கொண்டே போகிற கம்பு இருக்கிறதே, அந்த மாதிரித்தான் மீசையும் என்று சொல்லுங்கள். நான் இந்த வேடிக்கையைக் கேட்டதே இல்லை. நாம் சிங் கம், புலியாகப் பிறந்தால் மீசைக்குத் தைலம் தடவி வளர்க்கவும் கூடாது, கத்தரிக்கவும் கூடாதுபோலி ருக்கிறதே. அதனால் சிங்கம் புலியாய்ப் பிறக்கக் கூடாது'' என்றான் ராமன்.

"இத்தனைநேரம் சிங்கத்துக்கும் பூனைக்கும் உள்ள ஒற்றுமைகளைச் சொன்னேன். அவ்விரண் டுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. நான் அவற் றின் உடல் அளவைப்பற்றிச் சொல்லவில்லை. பூனை யின் கண்ணைப்பற்றிப் படித்திருக்கிறாய் அல்லவா?



பகல் பார்வை.

அது கண்ணின் கருவிழியின் நடுவிலுள்ள பாகத்தைப் பகலில் சுருக்கிக்கொள்ளும்; இரவிலும் இருட்டிலும் அகலமாக்கிக் கொள்ளும் என்று தெரியுமே. சிங்கத்தின் கண் களுக்கு இந்தச் சக்தி இல்லை. அவைகளின் கண் நம்முடைய கண் மாதிரியாகத்தான் இருக்கும். ஆனால்



இரவுப் பார்வை.

ராத்திரியில் பார்ப்பதற்கு ஏற்றபடி அதன் கண்கள் பெரிதாய் அமைக்கப்பட்டிருக்கின்றன.

"சிங்கம் இந்தியாவில் கத்தியவார் மாகாணத்தில் மட்டிலும் தான் இப்போது இருப்பதாகத் தெரிகிறது. பாரசீகத்திலும் மெஸொபொடோமியாவிலும் உள்ள சிலசில இடங்களிலும் சிங்கங்கள் உண்டு. ஆனால் ஆப்பிரிக்காக் கண்டத்தைத்தான் அவற்றின் ராஜ்ஜியம் என்று சொல்லவேண்டும். இந்த இடங்களிலே புலிகளைக் காணவில்லை. இந்தியாவும், சீனாவும், ஸைபீரியாவும், மஞ்சூரியாவும், காக்கஸஸ் மலைப்பிரதேசமும், மலேயா நாடுகளும் புலிகள் வாழ்கின்ற பிரதேசங்கள். இந்த நாடுகளில் சிங்கங்கள் இல்லை. சிங்கங்களுக்குள் ஆப்பிரிக்காவிலுள்ள சிங்கம் தான் பெரிய சிங்கம். புலிகளில் ஸைபீரியாவிலுள்ள புலிதான் பெரிய புலி.

"அளவிலே புலிக்கும் சிங்கத்துக்கும் அதிக வித்தியாசமில்லை. அவைகளின் உயரம் மூன்றடிமுதல் நாலடிவரையில் இருக்கும். நீளம் எட்டடிமுதல் பன்னிரண்டு அடிவரையில் இருக்கும். இந்த 'அடி' நாம் ஜாதி அடி என்று சொல்லுகிற அடி; பன்னிரண்டு அங்குலம் கொண்டது. 'பதினாறடி வேங்கை' என்று கேட்டிருக்கிறாய் அல்லவா? அந்த அடி நாம் காலால் அளக்கிற அடி, அதாவது கிட்டத்தட்ட ஒன்பது அங்குல அளவுள்ளது. இந்த அளவு புலியின் மூக்கின் நுனிமுதல் வாலின் நுனிவரையிலுள்ள நீளத்தின் அளவு. சாதாரணமாய் ஒவ்வொரு சிங்கமும் புலியும் ஐந்நூறு அல்லது அறுநூறு பவுண்டு எடை இருக்கும்.

"சிங்கத்தின் கால்கள் சற்று உயரம்; அதனால் சிங்கத்தின் தோற்றமும் நடையும் சற்றுக் கம்பீரமாயிருக்கும். புலியின் கால்கள் சற்றுக் குட்டை; ஆனால் உடம்பு நீளம்; அதனால் அதன் நடை சற்றுக் குறு

நடையாயும் மென்னடையாயும் அழகாயிருக்கும். பிறநாட்டுக் காவியங்களிலே சிங்கத்தின் நடையை ஆண்மக்களுடைய நடைக்கும் புலியினுடைய நடையை அழகிய பெண்களுடைய நடைக்கும் ஒப்பிட்டிருக்கிறார்கள்.

"கொஞ்சகாலத்துக்கு முன்னால் ஒரு பத்திரிகையிலே படித்தேன் - லண்டனிலோ வேறெங்கேயோ ஞாபகமில்லை - ஒரு காட்சிச் சாலையில் புலிக்கூடும் சிங்கக்கூடும் அடுத்தாற்போல் இருந்தன. புலிக் கூட்டிலே இரண்டு புலிகளும் சிங்கக்கூட்டிலே இரண்டு சிங்கங்களும் இருந்தன. ஏதோ ஒரு கதவைச் சார்த்தப்போன வேலைக்காரன் ஒருவன் தவறுதலாய் அவ்விரண்டு கூடுகளுக்கும் இடையே உள்ள கதவைத் திறந்துவிட்டான். உடனே ஒரே பாய்ச்சலாகச் சிங்கங்களும் புலிகளும் ஒன்றின்மேல் ஒன்று பாய்ந்து மிகவும் உக்கிரமாகச் சண்டைபோட்டன. அவற்றின் காப்பாளர்கள் எவ்வளவோ முயன்று அவற்றை விலக்கப் பார்த்தார்கள்; முடியவில்லை. கடைசியில் இரண்டு புலிகளும் சேர்ந்து சிங்கங்கள் இரண்டையும் கடித்துக் கொன்று போட்டுவிட்டன. அதனால் புலி சிங்கத்தைவிடப் பலசாலி என்று நிரூபிக்கப்பட்டது என்று அந்தப் பத்திரிகையில் போட்டிருந்தது."

"ஒரு சண்டையை வைத்துக்கொண்டு சொல்லிவிடலாமா?"

"இன்னும் கேள்! நம்முடைய தேசத்திலே ஒரு காலத்திலே அனேகமாக எல்லா இடங்களிலும் சிங்கம் இருந்ததாகத் தெரிகிறது. இப்பொழுது ஒரே ஒரு மூலையில் மட்டிலும் தான்சிங்கம் இருக்கிறது. மற்ற இடங்களில் இருந்த சிங்கங்கள் எப்படி நிர்மூலமாகப் போய்விட்டன? மனிதன் வேட்டை

யாடிச் சிங்கங்களைக் கொன்றது ஒருகாரணமாய் இருக்கலாம்; இதுபோதுமா? அவன் புலிகளையுந் தானே வேட்டையாடுகிறான். புலிகள் இருக்கின்றனவே. அதனால் இன்னும் வேறு சில காரணங்களும் இருந்திருக்கவேண்டும். காட்டிலே புலிக்கும் சிங்கத்துக்கும் எத்தனையோ சண்டைகள் நடந்திருக்கவேண்டும். அவற்றிலே சிங்கம் தோற்றுப்போய் அழிந்துபோயிருக்க வேண்டும். இதுவும் ஒரு காரணம், என்று ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள்" என்றேன்.

"இந்தியாவிலே புலி இருக்கிறது; சிங்கம் இல்லை. அதனால் புலி பலசாலி என்று சொன்னால், ஆப்பிரிக்காவிலே புலி இல்லையே; சிங்கம் மட்டிலும் தானே இருக்கிறது; அதனால் அங்குள்ள புலிகளைச் சிங்கம் கொன்றுவிட்டது என்று சொன்னால் என்ன? அப்படியானால் சிங்கம் தானே பலசாலி என்று ஆகும்?" என்றான் ராமன்.

"ஆனால் ஒன்று: ஆப்பிரிக்காவில் ஒருநாளும் புலி இருந்ததில்லை. நம்முடைய தேசத்தில் ஒருகாலத்தில் சிங்கம் இருந்தது. இப்போது இல்லை. இதைத் தவிர ஆராய்ச்சிக்காரர்கள் சிங்கத்தையும் புலியையும் அளவுநாடா முதலியவைகளைக் கொண்டு அளந்து பார்த்திருக்கிறார்கள். சிங்கத்தின் கால் நகங்களைவிடப் புலியின் கால் நகங்களுக்குப் பலம் அதிகமாம். புலியின் உடம்பின் நீளம் சற்று அதிகம் என்று முன்னமேயே சொன்னேன். புலியின் தாடைக்குச் சிங்கத்தின் தாடையைவிடப் பலம் அதிகமாம். அதனால் சிங்கத்தைவிடப் புலிதான் பலசாலி என்று அவர்கள் முடிவுகட்டி யிருக்கிறார்கள்.

"சிங்கம் இந்தியாவிலே இல்லாமல் அழிந்து போனதற்கு இன்னும் ஒரு காரணமும் சொல்லுகிறார்


கள. சிங்கம் சுகவாசியாம். வீடுவசதிகளிலே சௌகரியம் குறைந்தால் அதனால் வாழ முடியாதாம். புலி எங்கே வேண்டுமானாலும் வசிக்குமாம்; குகையோ பொந்தோ, புதரோ, சதுப்பு நிலமோ, கோரைப் புல்லோ, குட்டிச்சுவரோ, பாழ்மனையோ ஏதானாலும் புலிக்குச் சௌகரியந் தானாம். சிங்கத்துக்கு அப்படி இல்லையாம். அதனாலும் புலி தங்கிவாழ்ந்து சிங்கம் நசித்துத் தொலைந்து போயிருக்கலாம்.”

“சிங்கத்தைவிடப் புலிதானே பலசாலி? பேஷ் நம்முடைய நாட்டிலே யாருக்கோ புலிக்கொடி உண்டே மாமா; அது யாருக்கு? மாமா!”

“சோழ ராஜனுக்கு.”

ஜப்பானிய விஞ்ஞான ஆராய்ச்சி

பட்டுப்பூச்சியினின்று நேராகப்பட்டுநூல் தயாரிப்பதற்கான ஓர் புதிய முறையை ஜப்பானில் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது லங்காஷயரில் சிறிது கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதைக்கண்டுபிடித்தவர் டோக்கியோ பட்டு ஆராய்ச்சிக்கழகத்தின் தலைவரான ஸ்ரீ மிஹோஷினோ என்பவராவர். இதைக்குறித்து மான்செஸ்டர் கார்டியனில் ஒரு பட்டுநூல் ஆராய்ச்சிக்காரர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்: “பட்டு இதுவரை பட்டுப்பூச்சியின் தலையில் உண்டாகிக் கெட்டியாக வெளிவரும் ஓர் திராவகத்திலிருந்து உண்டாகிறதாகக் கருதப்பட்டுவந்தது. இப்பொழுது ஸ்ரீ ஹோஷினோ கண்டுபிடித்திருப்பதுமூலம் இத்திராவகத்தால் நேராகச்சேகரித்து அதினின்றும் நூலைஎடுப்பதாயிருக்கிறது. இந்த முறையால், பட்டுத்தயாரிக்கும் முறையில் பூச்சிகளைக் கொன்றபின் நூற்குவியலைத் திரட்டி இயந்திரங்களில் சுற்றிச் சிக்கெடுத்தல் முதலிய வேலைகள் குறைந்துவிடும்.”



தமிழ்ப் பெரியாரின் எண்பதாவது ஆண்டு நிறைவு விழா

ஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களுடைய எண்பதாவது ஆண்டு நிறைவை மிகச் சிறப்பாகக் கொண்டாடவேண்டுமென்றெண்ணி அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யும்பொருட்டு, சென்னைத்துரைத்தன மந்திரி கனம் பி. டி. ராஜனவர்களுடைய தலைமையில் ஒரு சபை அமைக்கப் பட்டிருக்கிறது. ஸ்ரீமான் தி. சிவராம சேதுப்பிள்ளையவர்களும், ஸ்ரீமான் பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்களும், ஸ்ரீமான் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்களும் காரியதரிசிகள். ஸ்ரீமான் ராவ் பகதூர் கே. வி. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் பொக்கிஷதார். அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையைப் பின்னே பிரசுரித்திருக்கிறோம்.

ஸ்ரீ ஐயரவர்களுடைய பெருமையை உலகு நன்கு அறியும். தமிழ்நாட்டிற் பிறந்த ஒவ்வொருவரும் அவர்கள்பால் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவராவர். அவர்களுடைய பேருழைப்பின் பயனாகத் தமிழுலகில் ஒரு புதுயுகம் உண்டாயிருக்கிறதென்பதில் ஐயமில்லை. அவர்கள் சம்பந்தமான இக்கொண்டாட்டத்தைச் சிறப்புற நடத்துவதில் ஒவ்வொருவரும் தம்முடைய ஆற்றல் முழுவதையும் காட்டித் தொண்டுபுரியவேண்டும். ஐயரவர்களால் தமிழ் உலகடைந்த நன்மையைத் தமிழறிஞர்கள் நன்கு எடுத்துக் கூறி யாவரையும் இக்கொண்டாட்டத்திற்குப் பலவகையில் உதவிபுரியும்படி தூண்டவேண்டும். பள்ளிக்கூடமாணவர்கள் தங்களுடைய தமிழ் அன்பைக் காட்டுதற்குரிய செவ்வி வாய்த்திருப்பதை எண்ணித் தமிழ்ப்பெரியாரைப் பற்றிய புகழ்களைப் பரப்பவேண்டும். எவ்வளவு முயற்சிகளைச் செய்தாலும் அவ்வளவும் தமிழ்த் தாயின் தொண்டேயாகும்.—ப-ர்.

அறிக்கை

அன்பார்ந்த ஐயா,

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களுக்கு 1935-ம் ௵ மார்ச்சு மாதம் 6-ம் தேதி எண்பதாவது ஆண்டு பூர்த்தியாகின்றது.

நம்முடைய தமிழ்மொழியும் தமிழ் இலக்கியமும் அபிவிருத்தி யாவதற்கு அறுபது ஆண்டுகளாக ஐயரவர்கள் மதிப்பரிய தொண்டுகளைச் செய்து வந்திருப்பதை யாவரும் நன்கறிவர். தம்முடைய மெய்வருத்தங்களை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல், தனியாகவே இருந்து சங்ககாலத்து அரிய பெரிய நூல்களைப் பாதுகாத்து ஆராய்ந்து பிழையறப் பரிசோதித்துப் பதிப்பிக்கும் பெருஞ்செயலைச் செய்திருக்கிறார்கள்.

அவர்கள் செய்துள்ள பேருதவியினாலேயே பண்டைத் தமிழரின் நாகரிகத்தையும் பெருமையையும் நாம் இப்பொழுது அறிந்திருக்கிறோம். நமது தொன்மையைக் குறித்து நாம் நியாயமாகப் பெருமை பாராட்டிக் கொள்வதற்கு அவர்களே முக்கிய காரணமாக உள்ளார்கள். அவர்கள் தமிழுக்குச் செய்துள்ள ஒப்புயர்வற்ற தொண்டுகளைத் துரைத்தனத்தாரும், சர்வகலாசாலையாரும் நன்கு மதித்து மஹாமஹோபாத்தியாயர், டாக்டர் என்னும் பட்டங்களை அவர்களுக்கு அளித்துக் கௌரவித்திருக்கிறார்கள்.

தமிழ்ப் பாஷாபிமானிகளும் கல்வியின் மேம்பாட்டைக் கருதுவோரும் தமிழ்ப்பெரியாராகிய ஐயரவர்களின் எண்பதாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாட விரும்புவார்கள் என்பது திண்ணம்.

பிறநாடுகளிலே கல்வித்துறைகள் பலவற்றில் மேம்பாடுற்ற பெரியார்களின் வாழ்க்கையில் இவ்வகையான சந்தர்ப்பங்களை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். அவர்களின் ஞாபகார்த்தமாகக் கட்டுரைத்தொகுதிகளை வெளியிட்டு, உருவச்சிலைகளை நிறுவி, உபகார நிதிகளையும் அமைத்துப் பலவாறாகப் பாராட்டுகிறார்கள்.

தமிழ்மக்களுக்கு ஐயரவர்களிடமுள்ள நன்றியறிவைப் புலப்படுத்துவதற்கும், சிறந்த பாஷாவிற்பன்னராகவும் போதகாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் இருந்து நெடுங்காலமாக அவர்கள் செய்துவரும் அருஞ்செயல்களைப் பாராட்டுவதற்கும் இது தக்க சமயமாகும்.

ஆதலால் மார்ச்சு மாதம் 6-ம் தேதி புதன்கிழமை மாலை 5-மணிக்கு, ஐயரவர்களுக்கு உபசாரப்பத்திரம் ஒன்று அளித்தும், அவர்களுடைய உருவப்படத்தைச் சென்னைச் சர்வகலாசாலை மண்டபத்தில் நிலைபெற வைத்தும், அவர்கள் செய்துவரும் நூற்பதிப்பு வேலைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தும், பொருளுதவி செய்வோர் கருத்துக்கு ஏற்றபடி வேறு உசிதமானவற்றைச் செய்தும் அவர்களை இச் சமயம் பாராட்ட எண்ணியிருக்கிறோம்.


இந்த விழாவில் தாங்களும் கலந்துகொள்வீர்களென்று நம்புகிறோம். தங்கள் உடன்பாட்டையும் தங்களுடைய கருத்துக்களையும் தெரிவிப்பதோடு தங்களாலான பொருளுதவியையும் செய்யும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

பணம் அனுப்புவோர்கள் மயிலாப்பூர், வடக்குமாடவீதியிலுள்ள ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களுக்கு அனுப்பலாம். பொருளுதவி செய்வோரின் கூட்டமொன்று மார்ச்சு மாதம் முதல் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5¼-மணிக்குத் தேனும்பேட்டை மௌப்ரேஸ் ரோட்டில், தலைவர் கனம் பி. டி. ராஜனவர்கள் வீட்டில் நடைபெறும். தாங்கள் அச்சமயம் வந்திருந்து விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கு வேண்டியனவற்றைச் செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

கவிதைப் பரிசு

'கலைமகள்' கவிதைப் பரிசைக் குறிக்கொண்டு பல அன்பர்கள் கவிதைகளை அனுப்பி யிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் கவிதை எழுதும் ஆற்றல் இன்னும் இருக்கின்றதென்பதை அன்பர்களுடைய கவிதைகள் குறிப்பிக்கின்றன.. மறைந்திருக்கின்ற சக்தியை வெளிப்படுத்துதற்குரிய தூண்டுதல்கள் இல்லாமையே அச் சக்தி மங்குதற்குக் காரணமென்று தோற்றுகிறது.

பெண்கள் பலர் இப்பரிசு குறித்துக் கவிதைகளெழுதியனுப்பி யிருக்கிறார்கள். எண்பத்தைந்து கவிதைகளுக்குமேல் நமக்குக் கிடைத்திருக்கின்றன. எல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்து பரிசுக்குரிய கவிதை தேர்ந்தெடுக்கப்படும். பரிசுபெற்ற கவிதையைப் பற்றிய விவரம் பங்குனி மீ பத்திரிகையில் வெளிவரும். —ப-ர்.



ஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி
திராவிடவித்யாபூஷணம் டாக்டர்

உ. வே. சாமிநாதையரவர்கள்

கலைமகள்

என் செவிலித்தாய் ::

'கலைமகள் ஒரு சிறந்த தமிழ்ப்பத்திரிகை' என்று இன்று தமிழ்நாடு முழுதும் நான் புகழ்பெற்றிருப்பதற்குக் காரணம் என் அன்பர்களுடைய முயற்சிகளே. பல அறிஞர்கள் செய்து வரும் உதவிகளும் பெரியோர்களுடைய ஆசியும் மாதந்தோறும் எனது உலாவை மிகவும் சிறப்பாக நடத்துகின்றன. அவர்களுள், இன்று எண்பது ஆண்டு நிறைந்து தமிழ்ப் பழமாக விளங்கும் ஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி திராவிட வித்தியா பூஷணம் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் என்பால் அன்பு பூண்டு செய்துவரும் நல்லுதவிகளுக்கு வரம்பும் உண்டோ?

நான் உலாவரவேண்டுமென்றெண்ணிய என்னுடைய அன்பர்கள் 1931-ம் வருஷம் டிஸம்பர்மாதம் ஸ்ரீ ஐயரவர்களைத் தரிசித்துத் தங்கள் எண்ணத்தை வெளியிட்டார்கள்; அன்றியும், "தாங்கள் அடிக்கடி கட்டுரையெழுதிக் கலைமகளை அழகு செய்யவேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள். தமிழ்மொழி பல வழியிலும் பரவவேண்டுமென்னும் எண்ணமுடைய அவர்கள் அதற்கு மனமுவந்து உடன்பட்டார்கள்.

எனது உலா பிரஜோற்பத்தி வருஷம் தைமாதம் தொடங்கியது. தமிழ்மகளை அலங்கரிப்பதிலேயே தம் வாழ்வு முழுதும் அர்ப்பணம் செய்யும் ஐயரவர்களுக்குக் கலைமகளை அலங்கரிக்கத் தெரியாதா? என்னுடைய முதல் உலாவிலே அவர்கள் அருளிய 'கலைமகள்' என்னும் அரிய கட்டுரையைத் தாங்கிவந்தேன். ஐயரவர்களுடைய கட்டுரையை என்பாற் கண்டவர்கள், "கலைமகள் நல்ல பேறுபெற்றது; இது வாழ்க!" என வாழ்த்தினர்கள்.

பின்பு ஐயரவர்களிடமிருந்து 'வண்டானம் முத்துசாமி ஐயர்', 'வறுமைப்புலி' முதலியன வெளிவரலாயின. தமிழ்நாடு

அவற்றைக் கண்டு களித்துக் குதூகலித்தது. வரவர அவர்களுடைய அன்பு பெருகலாயிற்று. கட்டுரை எழுதுவதன்றி இது காறும் வெளிவராத பலபழந்தமிழ்நூல்களை என்பால் அமைத்து அழகுறச் செய்யத் தொடங்கினார்கள். முதல் முதலாக, 'தென்றல் விடு தூது' என் உலாவில் இன்பத்தைப் புகுத்தியது. பாசவதைப் பரணி, வலிவலமும்மணிக்கோவை, திருஇலஞ்சி முருகன் உலா என்னும் நூல்களை நான் தாங்கித் தமிழுலகுக்கு அளித்தேன்.

ஐயரவர்கள், தம் அன்பு முதிர்ச்சியால் தம்முடைய நூலாசிரியத் தன்மையை விளக்கும் கட்டுரைகளை முன்னும் பதிப்பாசிரியத் தன்மையை விளக்கும் நூல்களைப் பின்னும் பொருத்தி இருபுறமும் எனக்கு அரண்செய்து அருளுகிறார்கள். ஒவ்வொருமாதமும் தமிழ்நாட்டார் என்னைக் கண்டவுடன் 'ஐயரவர்கள் என்ன எழுதியிருக்கிறார்கள்?' என்று ஆவலுடன் திறந்து பார்த்துப் படித்து முகமலர்கிறார்கள். என் முகத்தில் திலகம் போல அவர்களுடைய கட்டுரை ஒளிர்கின்றது.

> 'சொல்வாராற்றுக் கிடந்த அநேக வரலாறுகளை இலக்கியப் பெரும் புலவராகிய சாமிநாதையரவர்கள் மிக எளிய நடையில் எழுதிவருகிறார்கள். பண்டிதர்கள் மனதுவைத்தால் எவ்வளவு எளிய நடையிலும் எழுதமுடியும் என்பதை நன்றாக விளக்கிவிட்டார்கள். அவர்கள் எழுத்தில் ஒரு தனித் தன்மை இருக்கிறது. எளிமையும் பொருத்தமும் வாய்ந்த சொற்கள்; சலனமற்ற - ஆனால் ஆற்றல் மிக்க - நடை; எளிய இனிய வருணனை; நகைச்சுவையும் உணர்ச்சியும் உள்ளவாசகம்; இவை பெரியாரின் வியாசத்தை அலங்கரித்து நிற்பன. கலைமகளைத் திறந்ததும் அன்னார் அளித்தும் அருங்காட்சியே கண்ணுக்குக் கிட்டும்' (தனவணிகன்)

என்று ஒரு பத்திரிகை கூறுவதை மிகையென்று சொல்லமுடியுமா?

> "தமிழ் மொழிக்சேன்றே உடலேடுத்த பேரியார் உ. வே. சாமிநாதையர் அவர்களைப் பத்திரிகை உலகிலும் ஈர்த்தபெருமை கலைமகளுக்கே உரியதாகும்" (ஷை)

என்று பிறர் கொடுக்கும் கௌரவத்தால் எனக்கு உண்டாகும் சந்தோஷத்துக்கு அளவுண்டோ?

ஐயரவர்களுடைய கட்டுரைகள் பலபத்திரிகைகளில் பெயர்த்து வெளியிடப்படுகின்றன; எத்தனையோ பாடபுஸ்தகங்களில் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன; இவற்றால் எனது தொண்டு

பயன் பெறுவதைத் தமிழர் நன்கு அறிகின்றார்கள். இவ்வளவுக்கும் காரணம் ஐயரவர்களுடைய அன்பேயன்றோ?

அவர்கள் இன்னும் பலபல அரியசெய்திகளை எழுதுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். கலைமகளில் அவர்கள் எழுதிய மகா வைத்தியநாதையர் சரித்திரமும் கனம் கிருஷ்ணையர் வரலாறும் ஸங்கீதாபிமானிகளிடையே ஒருகிளர்ச்சியை உண்டாக்கியிருக்கின்றன. இன்னும் அவர்கள் தமிழ்க் கீர்த்தன வரலாறுகளைப்பற்றியும், கோபாலகிருஷ்ணபாரதியார் முதலியோர்களைப்பற்றியும் எழுத எண்ணியிருக்கிறார்களென்பதை அறிந்தால், "எங்கே? எங்கே?" என்று யாவரும் காத்திருப்பார்கள். ஐயரவர்கள் தமிழ்நூற் சுவடிகளைத் தேடிப் பட்ட சிரமம், பதிப்பித்த கதை, பழகிய பெரியோர் வரலாறு, கண்ட அரிய செய்திகள் முதலியவற்றை எழுதவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளப் போகிறேன். இப்பொழுது அவர்கள் என்னோடு இணைத்து வெளியிடும் 'உதயண குமார காவியம்' என்பதைப்போன்ற காவியங்களையும், பிரபந்தங்களையும், வேறு அரிய நூல்களையும், தலையாற் சுமந்து உலாவ எண்ணியிருக்கிறேன். ஐயரவர்கள் அன்பு என்றும் குன்றாதென்ற உறுதி எனக்கு உண்டு.

என்னைப் பாராட்டி எழுதும் பல அன்பர்கள், ஐயரவர்கள் கட்டுரைகளின் சிறப்பைக் குறித்தே முதலில் எழுதுகிறார்கள். உண்மையில் எனக்குச் சேவிலித்தாயாக ஐயரவர்கள் இருந்து பாதுகாக்கிறார்கள் என்று சொல்லுதலைவிட வேறொன்றும் சொல்லத் தெரியவில்லை.

இவ்வளவுக்கும் கைம்மாறாக அவர்கள் எதிர்பார்ப்பது எல்லோரும் படித்து இன்புறுவதேயாகும். அவர்கள் செயலுக்குத் தக்க கைம்மாறும் உண்டோ?

இனியும் அவர்கள் தமிழ் நூற் செல்வத்தை விருத்திசெய்துகொண்டு அரோக திடகாத்திரத்தோடு பல்லாண்டு பல்லாண்டு வாழும் வண்ணம் திருவருள் புரியவேண்டுமென்று இறைவன் இணையடித் தாமரைகளை இறைஞ்சுகின்றேன்.

கலைமகள்.

வாழ்த்துப்பாடல்கள் ::

பாஷா கவிசேகர மகாவித்துவான்
ரா. இராகவையங்கார்

1

பத்துப் பாட்டுப் பதிற்றுப்பத் துப்புறப்
பாட்டோ டைங்குறு நூறுசிந் தாமணி
புத்தர் கொள்கை புகன்மணி மேகலை
பொற்சி லப்பதி காரம் பெருங்கதை
மெத்து நன்பரி பாடல் பரணிநூல்
வேம்பத் தூரர் திருவிளை யாடலோ
டித்த ரைக்கிற வாதுசெய் வள்ளன்மைக்
கியாது ளோஞ்சாமி நாதற் குதவற்கே!

2

ஏடு தேடி யலைந்தவு ரேத்தனை
எழுதி யாய்ந்த குறிப்புரை யெத்தனை
பாடு பட்ட பதத்தெளி வெத்தனை
பன்னே றிச்கட் பொருட்டுணி வெத்தனை
நாடு மச்சிற் பதிப்பிக்குங் கூலிச்கு
நாளும் விற்றபல் பண்டங்க ளேத்தனை
கூட நோக்கினர்க் காற்றின வெத்தனை
கோதி லாச்சாமி நாதன் றமிழ்க்கென்றே!

3

எத்து ணைப்பொன் னளிப்பர்சிந் தாமணிக்
கேற்ற நல்விலை யென்மணி மேகலைக்
குய்த்த வண்சிலம் பின்செய்திக் கோத்ததொன்
றுண்டு கோல்லிவண் மண்டலந் தேடினும்
வைத்த செய்யுள் விளைந்த பொருண்முற்றும்
மானு மோபத்துப் பாட்டுச்செய் யுட்பொருட்
கித்த ரைப்பதிற் றுப்பத்து நூறுபொன்
இன்ப திற்றுப்பத் துக்கெதிர் நிற்குமோ!

4

பிறந்த துத்தம தானமேன் பாரிவன்
 பெய்த துத்தம தானமேன் பேனிவன்
சிறந்த தாயதேண் ணுயிரர் நன்குடி
 தெளிந்த சோற்களேண் ணுயிர மேம்படும்
உறுந்த மிழ்ப்பர மாசாரி யன்னேனற்
 சோத்த தேசாமி நாதப் பெரும்பெயர்
மறைந்த செந்தமிழ் தோற்றஞ்சேய் வண்மையான்
 மற்றிக் காலத் தகத்தியன் றனிவன்.

5

பொன்ப லாயிர முட்பொரு வாதுநீ
 புரிந்த வண்டமிழ்த் தொண்டினுக் கொண்டுகில்
நின்ப லாயிர மான குறிப்புரை
 நீடு செய்புகழ்ப் போர்வைச்கு நேருமோ
உன்ப ராவுமெய்ந் நூல்வடி வாகுநீ
 ஊழி யூழியும் வாழ்கென வோதுமிவ்
அன்ப லாலெது வுந்தர வாய்ந்திலேன்
 ஐய னேசாமி நாதநன் மெய்யனே!

௬

(வேறு)

உச்சிமேற் கோளவல்ல நச்சினார்க் கினியர்
 உயர்ந்தபரி மேலழக ரடியார்க்கு நல்லார்
மெச்சுமிளங் கோவடிகள் கொங்குவேள் சாத்தன்
 வீறுதமிழ்ச் சங்கத்தைந் நூறுபுல வோர்கள்
அச்சயின நூலுதவு திருத்தக்க தேவர்
 அம்மயிலை நாதர்புறப் பாட்டினுரை காரர்
நச்சுபதிற் றுப்பத்தி னுரையாளர் கூத்தர்
 நவில்சாமி நாதனிசை நாட்புகல்வ தென்னே.

மஹாமஹோபாத்தியாயரை நான் முதன்முதல் சந்தித்தது ::

ராவ்பஹதூர் ப. சம்பந்தமுதலியார், பி. ஏ., பி. எல்.

சுமார் 50 வருடங்களுக்கு முன் சென்னையில் ஆச்சாரப்பன் வீதியில் 54-ஆவது கதவிலக்கமுள்ள வீட்டில் பம்மல் விஜயரங்க முதலியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு நாள் மத்தியான்னம் மேல்மாடியில் உட்கார்ந்து ஏதோ பரீட்சைக் காகிதங்களைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தபொழுது, அவர் பக்கலில் அவரது கடைசிக் குமாரன், 12வயதுள்ளவன் உட்கார்ந்திருந்தான். அச்சமயம் 30 வயதுள்ள ஒரு பிராமணர் முதலியாரைப் பார்க்க வந்தார். விஜயரங்க முதலியார் தம் ஆசனம் விட்டெழுந்து அவரை வணங்கி, வேறோர் ஆசனத்தில் அமரும்படி அவரைக் கேட்டுக் கொண்டார். முதலியார் பக்கத்திலிருந்த சிறுவனும், தன் தந்தை யாரையோ வணங்குகிறாரே யென்று தானும் வணங்கினான். பிறகு அந்தப் பிராமணர் முதலியாரை யோகக்ஷேமங்களெல்லாம் விசாரித்துவிட்டுத் தம்முடைய ஆசாரியராகிய மஹா வித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களைப்பற்றி ஏதோ பேசிக் கொண்டிருந்தார். பிறகு அவர், விடைபெற்றுப் போகுமுன் அவர் பேசியதை யெல்லாம் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த பிள்ளையைப் பார்த்து, "பிள்ளையாண்டான் உங்கள் குமாரனா?" என்று விசாரித்தார். அதற்கு முதலியார் அவர்கள், "ஆம் என்கடைசிக் குமாரன்" என்று விடைகொடுக்க, "நீ என்ன வகுப்பில் படிக்கிறாய்? உனக்குத் தமிழ்ப்பாட புஸ்தகங்கள் என்ன"? என்று சில கேள்விகள் கேட்க அப்பையன் கொஞ்சம் இலக்கணமாகவே தமிழில் அக் கேள்விகளுக்குப் பதில் உரைத்தான். அதன்மேல் ஐயரவர்கள், "பிள்ளையாண்டான் தமிழில் இலக்கணமாகப்பேசுகிறானே!" என்று கூறிவிட்டு, ஏதோ ஒருநூலைக் குறிப்பிட்டு, "இதைப் படித்திருக்கிறாயா?" என்று வினவினார். அதற்கு அப்பிள்ளை, "அதை எனக்குப் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொடுக்கிறதில்லை" என்று பதில் சொன்னான். அதன்பேரில், "அப்பா, கற்றுக்கொடுக்கிறதில்லை என்று இரண்டுபதங்கள் உபயோகித்தாயே; அதை ஒரு பதமாகச் சொல் பார்ப்போம்" என்றார். அதற்குப் பதில் உரைக்கத்

தெரியாது பிள்ளை திகைத்தான். அதன்மீது ஐயர் அவர்கள், "பெரிதல்ல, கற்பிக்கிறதில்லை என்று சொல்லலாமல்லவா?" என்று கூறினர்.

அந்தப் பிராமணர்தாம் தற்காலம் மஹா மஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்; அப்பிள்ளையாண்டான் அடியேன் சம்பந்தம். இது நேரிட்டு ஐம்பது வருடங்கள் கழிந்தன. அன்றுமுதல் இன்றுவரை, எனக்கு ஒரு வார்த்தை கற்பித்த ஐயரவர்களை எனது ஆசாரியராகக் கொண்டு தொழுது வருகிறேன். இதில் என் நண்பர்கள் குறிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அக்காலம் ஐயரவர்கள் தமக்கு வயதில் மிகவும் சிறியவனான என்னிடம் பேசவேண்டிய நிமித்தமில்லை; என்னுடன் பேசி என்னுடைய தமிழ்ப்பாட புஸ்தகங்களைப்பற்றிக் கேட்டு என் பதிலில் விரித்துக்கூறல் என்னும் குறையைநீக்கிச் சுருங்கச்சொல்லல் என்பதைக் கற்பிக்க ஐயரவர்களுக்கு அவசியமொன்றுமில்லை. ஆயினும் ஐயரவர்களுக்குத் தமிழில் இருந்த ஆர்வமே இங்ஙனம் செய்யும்படி தூண்டியது என்பது திண்ணம். அதன்பயனாக, எனக்கு அன்றுமுதல் தமிழ்ப் பாஷையில் ஏதோ கொஞ்சம் ஊக்கமுண்டாக, மற்றெல்லாப் பாடங்களைப் படிப்பதைவிடத் தமிழ்ப்பாடங்களைப் படிப்பதில் சிரத்தை உடையவனானேன்.

பிறகு, 40 வருடங்களுக்குமுன் நான் என் முதல் தமிழ் நாடகமாகிய லீலாவதி சுலோசனா என்பதை அச்சிட்டபொழுது என் தந்தையார் அதன்பிரதி ஒன்றை ஐயர் அவர்களுக்கு அனுப்ப, ஏதோ சிறுபிள்ளை எழுதினான் என்று அலட்சியம் செய்யாது அவர்கள் அதற்குச் சாற்றுகவிஎழுதிஅனுப்பினார்கள். ஐயர் அவர்கள் கவியை, பல வித்துவான்கள் அனுப்பிய சாற்றுகவிகளின் முகப்பில் அமைத்து அச்சிட்டேன். அந்நாள் முதல் இந்நாள் வரை எனக்கு ஏதாவது நாடகத்தமிழ் சம்பந்தமாகச் சந்தேகம் பிறந்தால் மஹாமஹோபாத்தியாயரிடம் சென்று அச்சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வேன்.

மேற்கண்டபடி எனக்கு ஐயர்அவர்கள் உற்சாகம் அளித்ததே, ஒன்றுமறியாத என்னையும் ஓர் சிறு தமிழ்நாடக ஆசிரியனாக்கி, இதுவரையில் 64 நாடகங்கள் தமிழில் எழுதும்படி செய்தது என்று உறுதியாக நம்புகிறேன்.

"பெரிய தமிழ்வித்துவான்களெல்லாம் இதுவரையில் எழுதாத முறையில் கேவலம் வசனநடையில், இச்சிறுபிள்ளை தமிழ் நாடகம் எழுதுவதாவது" என்று அச்சமயம் என்னைத் திரஸ்கரித்

திருந்தால், தமிழ் மடந்தையின் பாதங்களுக்கு நான் இயற்றிய இந் நாடகப் பூமாலையைப் புனைந்திருக்கமாட்டேன்.

ஆகவே மஹாமஹோபாத்தியாயருடைய பல அரியகுணங் களுள், எவ்வளவு புல்லறிவாளர்களாயிருந்தும் அவர்களுக்கும் நமது தாய்ப்பாஷையாகிய தமிழ்ப்பாஷையில் உற்சாகமுண்டாக்கி அவர்கள் அதை அவர்கள் சக்திக்கேற்றபடி விருத்திசெய்யும் உற்சா கத்தை உண்டுபண்ணும் குணம் மிகவும் மெச்சத்தக்கதாம் என் பதை இதை வாசிக்கும் என் அன்பர்கள் அறிவார்களாக.

மஹாமஹோபாத்தியாயர் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்திருந்து, எனக்குத் தமிழில் உற்சாகமளித்தது போல் இன்னும் பலருக்கு அளிக்கும்படியாக எல்லாம் வல்ல இறைவன் இணையடியைப் போற்றுகிறேன்.

பதிப்பாசிரியர் படும்பாடு

தூக்கினலன்றோ தெரியும் தலைச்சுமை? பரிசோதனசிரியர் படுங்கஷ்டமும் ஓர் அரிய பழைய நூலைச் சுத்த மனச்சாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டார்க்கன்றி விளங்காது. இவையெல்லாம் அனுபவத்தாலன்றி அறியப்படாப் பொருள்கள். ஒன்றற்கொன்று ஒவ் வாத இருபது இருபத்தைந்து பிரதிகளையும் அடுக்கிவைத்துக்கொண்டு என் கண் காணச் சிந்தாமணி பரிசோதனைசெய்து பதிப்பித்த கும்பகோணம் வித்தியாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் வே. சாமி நாதையரைக் கேட்டால் இந்நால்வகையாசிரியர் பாட்டின் தாரதம் மியம் சற்றே தெரியலாம்.

—சி. வை. தாமோதரம் பிள்ளை - கலித்தொகை முகவுரை.

உண்மைப் பதிப்பாசிரியர் ::

பெ. நா. அப்புஸ்வாமி, பி. ஏ., பி. எல்.

அளவற்ற கல்வி, தடுமாறாத ஞாபகசக்தி, ஓய்வறியாத உழைப்பு, தளராத பொறுமை, உண்மையினின்று விலகாத நிலை ஆகிய இக்குணங்கள் யாவும் பொருந்தியவரே சிறந்த பதிப்பாசிரியராக ஆதல் கூடும். மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களிடம் இந்தக் குணங்களெல்லாம் நிறைந்து காணப்படுகின்றன.

பழங்காலத் தமிழ்நூல்களை வெளியிடுவது மிகமிக அரிய காரியங்களுள் ஒன்று. அவற்றுள் காணப்படும் விஷயம் வேறு, பாஷைநடை வேறு, எழுதும் வகை வேறு; காலத்தச்சனும், பூச்சிகளும், நூல்களைச் சுவடிகளில் பெயர்த்து எழுதுவோரும் செய்துள்ள இடையூறுகளுக்குக் கணக்கேது? ஆதலால், இத்தனை கஷ்டங்களை நிவர்த்தித்துக்கொண்டு ஏதாவது ஒரு சிறு நூலை வெளியிடுவதுகூட மிகவும் சிரமமான காரியம் என்பது அத்தகைய முயற்சி எடுத்துக்கொண்டோர் யாவரும் அறிந்த விஷயம்.

ஐயரவர்கள் பல அரிய நூல்களைக் கிட்டத்தட்ட அறுபது வருஷ காலமாக அடக்கத்துடன், இடைவிடாது, மனஞ்சலியாது துருவித் துருவி ஆராய்ந்து மேன்மேலும் புதிது புதிதாக வெளியிட்டுக்கொண்டே வருகிறார்கள். அவர்களுடைய பெருமையை எவ்வளவு புகழ்ந்தாலும் போதாது.

இக்காலத்திலே நாம் பழந்தமிழ் நூல்களைப் பற்றிப் பெருமை பாராட்டுகிறோம். பஞ்சகாவியங்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்று பேசுகிறோம். மகாமகோபாத்தியாயரவர்கள் தம்முடைய ஆராய்ச்சி வேலையைத் தொடங்கிய காலத்திலே எட்டுத்தொகை இன்னவை பத்துப்பாட்டு இன்னவை என்று ஒருவருக்கும் தெரியாது.*

---

* புறநானூறு இரண்டாம் பதிப்பின் முகவுரையில் X-ம் பக்கத்தைப் பார்க்க.

ஐயரவர்கள் அவற்றைத் தெரிந்து, சோதித்து, ஆராய்ந்து, வெளியிட எடுத்துக்கொண்ட முயற்சிகள் கணக்கில. அவர்கள் பதிப்பித்திருக்கும் நூல்களின் முகவுரைகளிலே இந்த விஷயத்தைப்பற்றிய சில குறிப்புக்களைக் காணலாம்.*

இவை எல்லாவற்றைக் காட்டிலும் சிறந்ததாகவும் பதிப்பாசிரியருக்குரிய குணங்களுள் இன்றியமையாததாகவும் நான் கருதுவது, கண்ட விஷயத்தைக் கண்டபடி வெளியிடுவதே யாகும். பிழையான வடிவத்தை வெளியிடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. பழைய பிரதிகளில் காணப்படும் வடிவத்தை நன்ருகப் பரிசோதித்து, ஒன்ருேடொன்று ஒப்பிட்டு ஆராய்ந்து, அதன் மெய் வடிவத்தை வெளியிடுவதுதான் உண்மையான பதிப்பாசிரியர் செய்யவேண்டிய வேலை. மதசம்பந்தமாயும், ஆராய்ச்சி சம்பந்தமாயும் தாம் என்ன கொள்கைகளைக் கொண்டிருந்தாலும், பிரதிகளில் அவற்றுக்கு விரோதமாயுள்ள கொள்கைகள் காணப்படுமாயினும், அவற்றைத் தம் மனம்போல மாற்ருது ஏட்டில் உள்ளபடியே வெளியிட்டு உலகத்துக்கு அளிப்பதுதான் மேன்மைக் குணம்.

சிற்சில ஆராய்ச்சியாளர்களும் பதிப்பாசிரியர்களும் சில விஷயங்களை மறைத்தும் சிலவிஷயங்களை அஞ்சாது மாற்றியும் தம்முடைய கொள்கைகளை நிலைநிறுத்த முயன்றிருக்கிருர்கள். ஏட்டுப் பிரதிகளைப் பெயர்த்தெழுதுவோரும் கூசாது கவிஞன் எழுதிய செய்யுளை மாற்றி அமைத்திருக்கிருர்கள்; புதியனவாகச் செய்யுட்களைச் சேர்த்திருக்கிருர்கள்; சில செய்யுட்களை விட்டும் இருக்கிருர்கள்.

ஐயரவர்கள் அப்படிச் செய்ததே கிடையாது. ஏட்டில் கண்ட வடிவத்தை, தாம் சோதித்துத் துருவித்துருவி ஆராய்ந்த மெய்வடிவத்தை, உள்ளபடியே வெளியிடுவதைத் தம்முடைய விரதமாகக் கொண்டிருக்கிருர்கள். இதை அவர்கள் பலமுறை எடுத்துக் கூறி யிருக்கிருர்கள். உதாரணமாகச் சீவகசிந்தாமணியின் முகவுரையில் 8-ம் பக்கத்தில்,

"புராதனமான தமிழ்நூல்களும் உரைகளும் பண்டை வடிவங் குன்ருதிருத்தல் வேண்டுமென்பதே எனது நோக்கமாதலின், பிரதிகளில் இல்லாதவற்றைக் கூட்டியும், உள்ளவற்றை மாற்றியும் குறைத்

---

* பெருங்கதை முகவுரை-LXIV-ம் பக்கம்; சிலப்பதிகாரம் முகவுரை 10-ம் பக்கம் முதல் 13-ம் பக்கம் வரை; சீவகசிந்தாமணி முகவுரை 7-ம் பக்கம்; புறநானூறு முகவுரை 9-ம் பக்கம்; பத்துப்பாட்டு முகவுரை 9-ம் பக்கம்முதல் 13-ம் பக்கம்வரை. மற்ற நூல்களின் முகவுரைகளையும் பார்க்க.

தும் மனம்போனவாறே அஞ்சாது பதிப்பித்தேனல்லேன்; ஒருவகையாகப் பொருள்கொண்டு, பிரதிகளில் இருந்தவாறே பதிப்பித்தேன். யானாக ஒன்றுஞ் செய்திலேன்"

என்றும், பெருங்கதையின் முகவுரையில் 22-ம் பக்கத்தில்,

"பழைய நூல்கள் பழையவடிவத்தினின்றும் வேறுபடாமலிருக்க வேண்டுமென்பதே எனது முழு நோக்கமாதலால் எவ்வளவு உழைக்க வேண்டுவதோ அவ்வளவுதூரம் உழைத்து இப்பதிப்பு நிறைவேற்றப் பெற்றது; என்னையறியாமல் பிழைகள் நேர்ந்திருக்கலாம்; அவை நாளடைவில் திருத்தமடைதல் கூடும்"

என்றும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

பழைய நூல்களின் உண்மை வடிவத்தை வெளியிடுவதே உண்மைப் பதிப்பாசிரியரின் கடமை. அதுவே அவரது மேன்மையும் ஆகும்.

——(o)——

கைம்மாறு என்னே !

நாடகத் தமிழ்க்கு நாற்புறத்தினும் தடைகள் அமைக்கப் பட்டமையின் அஃது அழிநிலையடையத் தலைப்பட்டது. பண்டிதராயினர் கடிந்து நாடகத் தமிழைக் கைவிடவே, அது பாமரர்கையகப்பட்டு இழிவடைந்து தெருக்கூத்தினளவிலே நிற்கின்றது. அக்காலத்துச் சங்கப் புலவர்கள் செய்த பாரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல், கூத்தநூல், நூல் என்ற நாடகத்தமிழ் நூல்களெல்லாம் யாண்டுப் போயொளித்தன? 'சிலப்பதிகாரம்' என்னும் நாடகக் காப்பியம் மட்டிலே தப்பித் தவறி வெளியேறிவிட்டது. அதனை வெளிப்படுத்திய பண்டித சிகாமணி சாமிநாதையர்க்குத் தமிழுலகஞ் செய்யக்கடவ கைம்மாறென்னே!

—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் -

தமிழ் மொழியின் வரலாறு.

கல்லூரியில் மஹாமஹோபாத்தியாயர் ::

ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல்.

மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதைய ரவர்களுடைய எண்பதாம் ஆண்டு நிறைவுவிழாவை யொட்டி, அவர்களிடம் சென்னை இராஜதானிக் கல்லூரியில் (*Presidency College*) தமிழ் கற்ற மாணவருள் ஒருவனாகிய என்னை, என் நண்பர் பிரும்மஸ்ரீ ரா. நாராயணஸ்வாமி ஐயரவர்கள், ஒரு கட்டுரை மூலம் எனது ஆசிரியர் பாடம் கற்பித்த முறை முதலிய வற்றை விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இம் முறையில் நானும் இவ்விழாவிற் கலந்துகொள்ள ஏற்பட்ட சந்தர்ப்பத்துக்கு வந்தனம் செய்து எனது கடமையைச் செலுத்துகின்றேன்.

நான் இக்கல்லூரியில் கல்வி பயின்றது 1911-ம் ௵ முதல் 1915-ம் ௵ வரையில் நான்கு வருஷங்களிலே. அக்காலத்தில் காலேஜ் வகுப்புக்களில் தமிழ்ப் பாடம் கட்டாயப்பகுதியிற் கிடையாது. இண்டர்மீடியேட் பரீக்ஷைக்குமட்டும் தமிழ்க் கட்டுரை (*Vernacular composition*) எழுதவேண்டிய நிபந்தனை யிருந்தது. பி. ஏ., பி. ஏ. ஆனர்ஸ் பரீக்ஷைகட்கு இந்த நிபந்தனை கூடக் கிடையாது. நான் கணக்கு, விஞ்ஞானசாத்திரம் முதலிய பகுதிகளைச் சிறப்புப் பாடமாக (*optionals*) எடுத்துக் கொண்ட படியால் தமிழ்ச் செய்யுள், வசனம், இலக்கணம் முதலியவற்றைப் பாடமாகக் கற்க வேண்டிய அவசியம் கல்லூரியில் எனக்கு ஏற்பட வில்லை. இண்டர்மீடியேட் வகுப்புக்களில் இரண்டு ஆண்டுகள் தமிழ்க் கட்டுரைப் பயிற்சிக்கென வாரத்துக்கு இரண்டு மணி நேரம் ஒருசேரத் தொடர்ச்சியாக அக்காலத்தில் எங்கள் கல்லூரி யில் ஏற்பட்டிருந்தது. அவற்றுள் ஒரு மணி நேரத்தில் கட்டுரை யெழுதுவதை நிறுத்திவைத்துக்கொண்டு மற்றொரு மணியில் ஐயரவர்கள் இஷ்டப்படி சிந்தாமணி, சிலப்பதிகாரம், கம்பராமா யணம் முதலிய சிறந்த காவியங்களிலிருந்து சிறந்த பாடல்களையும் நயங்களையும் எடுத்து விளக்கி எங்கட்குத் தமிழறிவு நன்கு வளருமாறு துணைபுரிய அவர்களிடம் விண்ணப்பித்தோம். ஐய

ரவர்களும் இந்த வேண்டுகோளுக்கிரங்கி வாரந்தோறும் சில பாடல்களை விளக்குவார்கள். அப்போது அவர்களது நிரம்பிய புலமையும், ஆராய்ச்சிநுட்பமும், பாடஞ் சொல்லும் திறமையும், மாணவர்உள்ளத்தைக் கவரும் பேராற்றலும் எங்கட்கு நன்ருகப் புலப்பட்டன.

அக்காலத்தில் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் தமிழ் வகுப்பு ஏளனஞ் செய்யப்பட்டு வந்தது. தமிழ்ப் பண்டிதர்களை யும் மாணவர்கள் ஏளனஞ் செய்வது சகஜமாயிருந்தது. தமிழ்ப் பண்டிதர்களும் இவ்வேளனத்தைப் பொறுக்கமாட்டாமல் பெருங் கோபங்கொண்டு சீறி விழுவது வழக்கம். இதனுலும் ஏளனமும் பரிகாசமும் அதிகரித்துவந்தன. தமிழ்ப் பண்டிதர்கட்குப் பெரும்பாலும் ஏளனப் பெயர்கள் (*nicknames*) இடுவதுண்டு.

ஆனல் நமது ஐயரவர்கள் விஷயத்தில் இத்தகைய நிகழ்ச்சி கள் எவையும் எக்காலத்திலும் இல்லை. அவர்களைக் காணும் போதே, மரியாதையாகவும் நேயத்தோடும் நடந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் பிள்ளைகளிடத்தில் இயல்பாகவே தோன்றும். ஐயரவர்கள் உலக அனுபவத்தில் தலைசிறந்து விளங்கு பவர்களாகையால், பிள்ளைத்தன்மை, பிள்ளைமனப்பான்மை முதலியவற்றை நன்ருயறிந்து மாணவர்கட்கு இன்பம் ஊட்டும் வகையிலேயே பாடத்தை நடத்துவார்கள். எனது அனுபவத் தில் அவர்கள் ஒரு நாளிலாவது ஒரு கடுஞ் சொல்லாவது சொன்னதுமில்லை, கோபித்ததுமில்லை. மாணவர்கள் எழுதும் கட்டுரைகளிற் பிழைகள் மலிந்திருப்பினும், அப்பிழைகளை விளக் கும்போது சிறிது பரிகாசஞ் செய்து திருத்தியும், பிள்ளைகள் நாணமுறும்படி செய்து உயர்த்தியும் வகுப்பை மிகத்திறமையாக நடத்துவார்கள். நகைச்சுவை ததும்பப் பேசும் முறை ஐய ரவர்கள் உடன்பிறந்ததென்று கூறுவது மிகையாகாது.

அக்காலத்தில் எங்கள் கல்லூரியில் தமிழ் மாணவர் சங்கம் ஒன்றிருந்தது. அதற்கு அவர்கள் தலைவராகவும் யான் காரிய தரிசியாகவும் இருந்ததுண்டு. வாரத்துக்கு ஒரு முறையேனும், மாதமிருமுறையேனும் கூட்டங்கள் நடை பெறும். பல மாணவர் களும் சில மாணவிகளும் (அக்காலத்தில் இராணி மேரிப் பெண் கல்லூரியில்லை) கூட்டங்களிற்பேசுவார்கள். ஐயரவர்கள் ஒவ்வொரு கூட்டத்தையும் ஆதியோடந்தமாக உடனிருந்து நடத்திவைப் பார்கள். மாணவிகட்குச் சிறப்பாக ஊக்கமளிக்க வேண்டி, அவர் கள் பேச்சைப் பாராட்டித் தமது கருத்துரையைத் தெரிவிப்பார் கள். நன்ருகத் தமிழ் எழுதவும் பேசவும் கற்ற மாணவர்களை

மிகவும் புகழ்ந்து வேறு பலரையும் அவ்வாறு கற்குமாறு ஊக்கு வார்கள்.

தமிழ் நூல்களைப் பயில வேண்டுமென்ற வேட்கை கொண்ட மாணவரிடத்து ஐயரவர்கட்கு நிரம்பவும் பிரிய முண்டு. ஓய்வு நேரங்களில் அவர்கட்குப் பல பொருள்களை அன்போடு தெரிவிப் பார்கள். இம்முறையில் எனக்கேற்பட்ட அனுபவம் ஒன்றைக் கூறி இக்கட்டுரையை முடிக்கின்றேன். "அபிராமியந்தாதி" என்ற தோத்திர நூலில் சில பாடல்களை நான் திருக்கோயில் வழிபாடு செய்யும்போது அம்பாள் சந்நிதியிற் பாடுவது வழக்கம். அதி லொருபாடல்,

"பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேஉன்னை யன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே"

என்றிருக்கிறது. இப்பாடலில் கறைக்கண்டனுக்கு மூத்தவள் என்று உமாதேவியாரைக் கூறியிருப்பது எனக்கு விளங்க வில்லை. 'மேல்நாட்டு நாகரிகத்தில்தான் புருஷனைவிடப் பெண் சாதி மூத்தவளாக இருத்தல் கூடும்; நமது நாட்டில் கடவுள் திருமணத்திலும் இவ்வாறு இருத்தல் கூடுமோ?' என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. அப்போது எனக்கு வயது பதினாறு. தத்துவ ஆராய்ச்சியேனும், சைவ சித்தாந்த சாத்திரப் பயிற்சி யேனும் அந்த வயதில் எனக்கு ஒரு சிறிதுமில்லை. எனவே இந்த சந்தேகத்தை ஐயரவர்களிடம் கேட்டுத் தெளிய வேண்டுமென்று தீர்மானித்தேன். ஒரு நாள் தமிழ்க்கட்டுரை வகுப்பு முடிந்தபின் சிறிது நேரங்கழித்து அவர்கள் ஓய்வாகவிருந்த வேளையில் எனது சந்தேகத்தைத் தெரிவித்தேன். உடனே மிகுந்த மகிழ்ச்சியோடு என்னை உட்காரவைத்து, நான் தமிழ் நூல்களைப் பயின்றுள்ள முறை, அளவு முதலியவற்றைப் பற்றி விசாரித்து நான் படிக்க வேண்டியவற்றை விளக்கிக் கடைசியாக, "இது ஒரு தத்துவ நுட் பம். தத்துவங்கள் தோன்றும் முறையில் சத்திதத்துவம் தோன் றியபின் சிவதத்துவம் தோன்றுவதாகும். முன் தோன்றியது மூத்தது என்ற உலக வழக்கையொட்டி ஆசிரியர் மூத்தவளே யென்கிறார்" என்று விளக்கினார்கள். இந்தத் தத்துவ நுட்பம் அப் போது எனக்கு விளங்கவில்லையாயினும், மேல்நாட்டு நாகரிக முறையில் பார்வதிதேவி தம் கணவனுக்கு வயதில் மூத்தவ ளல்லள் என்பதையறிந்து மிகவும் மகிழ்ச்சியெய்தினேன். பல

ஆண்டுகள் கழித்துத் திருச்சிற்றம்பலக்கோவைக்குப் பேராசிரியர் எழுதிய உரையுள் "தவளத்த நீறணியும் தடந்தோளண்ணல் தன்னெருபால், அவளத்தனும் மகனும் தில்லையான்" என்பதற்குக் கூறியுள்ள உரையைப் பார்த்தபோதும், சிவஞானசித்தியார் இரண்டாஞ் சூத்திரத்துள் "சிவம் சத்தி தன்னை யீன்றும் சத்திதான் சிவத்தை யீன்றும்" என்ற செய்யுட்கு அறுவர் கூறும் உரையைப் பயின்றபோதும், திருவாசகத்தில் திருப்பொற் சுண்ணத்துள், "எம்பெரு மான்இம வான்மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் தமையன் எம்ஐயன்" என்று கூறுவதையும் திருமூலர் திருமந்திரத்தில் "தாயும் மகளும் நல்தாரமுமாமே" என்பதையும் பார்த்தபோதும் இதன் உண்மையும் நுட்பமும் எனக்குப் புலனாயின. அப்போது அபிராமியந்தாதியையும் ஐயரவர்களையும் நினைந்து நினைந்து மகிழ்ந்தேன்.

ஐயரவர்கள் தமிழ்த்தாய்க்குத் தொண்டுபுரிய மேலும் பல ஆண்டுகள் உடல் நலத்தோடு வாழும்படி அருளுமாறு இறைவனை வழுத்துகின்றேன்.

——(o)——

பஞ்சாட்சரம்!

சிந்தாமணி உரையில் ஓரிடத்திற் பஞ்சாட்சரம் உபதேசிக்கப் பட்டதாக எழுதியிருந்தது. சிந்தாமணியோ சைனர்களுடைய நூல். இறக்கும் நிலையிலிருந்த ஒருநாயின் காதில் மந்திரம் உபதேசிக்கப்பட்டதென்பது சந்தர்ப்பம். உரையைப் பிரதிசெய்தவர் உரையாசிரியர் எழுதியிருந்த "பஞ்சநமஸ்காரம்" என்பதை, "பஞ்சாட்சரம்" என்று எண்ணிவிட்டாரென்று தோற்றியது. அந்தப் பிரதி சைவரொருவருடைய பிரதி. பஞ்சநமஸ்காரம் என்பது சைனர்களுடைய மந்திரம்.

—சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், பக். 137.

ஐயரவர்களால் தமிழ்நாடு அடைந்த பயன் ::

கே. ஜி. சேஷையர், பி. ஏ., பி. எல்.

ஸ்ரீசாமிநாதையரின் கல்விப்பெருமையைக் கேட்டு மகிழாதார் தமிழ்நாட்டில் எங்குமில்லை. மகாவித்வான் என்னும் பிரசித்தி பெற்று யாவராலும் கம்பருக்கு நிகராவாரென்று புகழப்பெற்று வந்த ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்களிடம் தமிழ்த்தேர்ச்சி பெற்ற நல்லறிஞர்களுள், ஸ்ரீசாமிநாதையரைப்போல் தமிழகத்திற்கு என்றும் நிலைபெறும் உதவிபுரிந்த பெரியார் வேறொருவருமிலர். கல்வி கேள்விகளில் முதிர்ச்சியடைந்த இம் முதியார், தாம் ஸ்ரீபிள்ளையவர்களிடம் பெற்ற எல்லாச் செல்வத்தினும் முதன்மையான கல்விச்செல்வத்தைக் கணக்கிடற்கரிய தமிழ் மாணவர்கட்கு 49 வருடம் இடைவிடாமல் உதவிவந்தார். உத்தமதானபுரத்தினராகிய இவர் உத்தமோத்தமமாகிய வித்யாதானஞ் செய்தலையே கடமையாகக்கொண்டு இன்புற்றுவாழ்ந்து வருகின்றனர்.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

என்ற தெய்வப்புலவர் கூற்றிற்கு நம் புலவர் சிகாமணி இலக்காவார் என்று சொல்லச் சற்றும் ஐயமில்லை. கல்வித்திறன் வாய்ந்த குரவரது குணங்கள் யாவும் இப்பெரியாரிடம் உள்ளன. சாந்தமும், தம்மை வியவாமையும், தாமறிந்த அரியவிஷயங்களைத் தம்மிடம் வரும் வாலிபர்கட்கும் ஏனையோர்க்கும் நல்கி உவப்படையும் சீலமும், பிறரைப் பாராட்டலும், அழுக்காறின்மையும், அன்பு பாராட்டி வருதலும், ஒருநிமிஷங்கூட வீண்பொழுது போக்காமல் கல்வித்துறையில் மேன்மேல் ஆராய்ச்சி செய்து வருதலும், ஆழ்ந்த ஆசிரியபக்தியும், சிறந்த தெய்வபக்தியும் நம் புலவர்பெருமானிடம் உள்ளன. ஸ்ரீஐயரவர்கள் படித்தறியாத இலக்கிய இலக்கண நூல்கள் தமிழில் இல்லையெனல் தவறன்று. தமிழ்க்கலைத்தேர்ச்சியில் நிகரிலாச்சீர்த்திபெற்று விளங்குவாரென்றறிந்து, அதற்கறிகுறியாக, குறுமுனிக்குத் தமிழிலக்கணம் உபதேசித்த குமரக்கடவுளின் நாமமாகிய சாமிநாதனென்ற பெயரை ஸ்ரீமீனாட்சிசுந்தர

நாவலர் சிகாமணி நம் ஐயரவர்களுக்குப் பெயராயமைத்தார் போலும்! இவ்வளவு பாரங்கதராக விளங்கும் இப்பெரியாரிடத்தில் வித்தியாகர்வம் சிறிதும் இலது.

இந்நாவலர் தமிழ் நாட்டிற்குச் செய்திருக்கும் நலத்தை எந்நாளும் தமிழுலகு போற்றிக்கொண்டாடும். தமிழ் நாட்டில் தொன்னூற்பயிற்சி எங்கும் பரவுதற்கு ஸ்ரீஐயரே மூலகாரணராவர். தமிழ் நாட்டின் பண்டைச்சரித்திரவாராய்ச்சிக்கும் அங்ஙனமே. ஆங்காங்கே செல்லரித்து அழியநின்ற ஏட்டுப்பிரதிகளிலிருந்து சங்கநூல் பலவற்றைப் பிழையறவெடுத்தெழுதித் தமிழுலகத்துக்குப் பயன்படும் வண்ணம் அச்சியற்றி வெளிப்படுத்தும் பெரிய சிரமசாத்தியமான பொறுப்பை இப்பெரியார் மேற்கொண்டு, சுயலாபம் இச்சிக்காமல், தளரா ஊக்கத்தோடும், எதிர்ப்பட்ட இடர்களைச் சற்றும் கவனிக்காமலும், யாவரும் வியப்புறும் வண்ணம் ஐம்பது வருடகாலமாகத் தமிழ்த்தொண்டு செய்து வாழ்ந்துவருகிறார். கருமமே கண்ணாயினாரை விளக்கிக்கூறும் வெண்பாவிலடங்கிய விஷயங்களுக்கெல்லாம் நம் ஐயரவர்களே உதாரணமென்று சொல்லும்படியிருந்தது பழைய ஏடுகள் தேடிப்பெறுவதில் அவர்களுக்குற்ற அனுபவம். கறையான் வாய்ப்பட்டு அழிந்துபோகும் நிலையிலிருந்த சங்கநூல் வரைந்த ஏடுதேடுதற்கும், கிடைத்தபின் பிழைகளின்றி நன்குசோதித்துச் சுத்தப்பிரதி எழுதி அச்சியற்றச் சித்தப்படுத்துவதற்கும் ஐயரவர்கள் எடுத்துக்கொண்ட சிரமம் எல்லையில்லாதது. மேம்பட்ட இப்பணியில் அவர்கள் எடுத்தமுயற்சியும் கழித்த காலமும் அடைந்த வருத்தமும் அளவுபடுவனவல்ல. ஆங்கிலங் கற்றோரும் ஏனையோரும் கடைச்சங்ககால ஆராய்ச்சியில் கருத்தைச்செலுத்தி வேலைசெய்துவர ஆரம்பித்தது, ஸ்ரீஐயரவர்கள் 1892-ல் சிலப்பதிகாரத்தையும் 1894-ல் புறநானூற்றையும் வெளியிட்டதன் பலனேயாம். ஆராய்ச்சிக்காரர்கள் தம் ஆராய்ச்சிக்கு ஆதாரமாகக்கருதும் வேறிரண்டு சங்கநூல்களையும் ஸ்ரீஐயரவர்களே வெளியிட்டுள்ளார்கள். அவை பத்துப்பாட்டும் பதிற்றுப்பத்தும் ஆம். பதிற்றுப்பத்தின் உதவி யில்லையானால், சங்க காலத்துச் சேரர்களின் வரலாறு அறியமுடியாது. வேறு அநேக தொன்னூல்களும் பிற்காலநூல்களும் ஸ்ரீஐயரவர்கள் ஆராய்ச்சிக்குறிப்புக்களோடும் குறிப்புரையோடும் வெளியிட்டிருக்கிறார்கள். இன்றும் கலைமகள், செந்தமிழ் போன்ற பத்திரிகைகளில் சில அருமையான நூல்கள் அவர்களால் வெளியிடப்பெற்று வருகின்றன. சென்றவருடம் தாம் எழுதிய ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் என்ற பெயர்சூட்டப்பெற்ற சிறந்ததோர் வசன நூல்

தமிழகத்திற்கு அவர்கள் ஈந்துதவினார்கள். முதிர்ந்தபிராயத்திலும் சோர்வின்றித் தமிழ்த்தொண்டு புரிவதையே தம் ஆருயிர்த் தொழிலாக ஏற்று நடத்திவரும் இப்பெருந்தகைக்கு நாம் எவ்வளவுதான் நன்றி கூறினும் அது மிகையாகாது. அவர்களுக்கு நீண்ட ஆயுளும், ஆரோக்யமும், ஐசுவரியமும் அளித்து, இன்னும் பல்லாண்டு தமிழ்நாட்டிற்கு வித்யாதானம் செய்து இன்புற்றுவாழ்ந்து மேன்மேல் பொங்குபுகழ் உடையராய் விளங்க எல்லாம் வல்ல ஈசன் இனிது அருள் புரிவாராக!

——:o:——

மறைமலையடிகள் கடிதம்

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்வாமி வேதாசலம். பல்லாவரம்,
28-11-1911.

செந்தமிழ் அணங்கிற்கு நந்தா விளக்கனைய ஐய,

நீங்கள் அன்புகூர்ந்து விடுத்த கடிதமும், சீவக சிந்தாமணியுரை இரண்டாம் பதிப்பும் பெற்றுக்கொண்டேன். இவ்வரும் பெருஞ் செந்தமிழ்ப் பொருட்டொடர்நிலைச்செய்யுளுக்குத் தாங்கள் செய்திருக்கும் சிறப்புக்களையும், எடுத்துக்கொண்ட பேருழைப்பினையும் நினைந்து உள்ளம் பெருங்களிப்பெய்துகின்றேன். உங்களைப்போல நஞ் செந்தமிழ்நூல்கட்குப் பொறுமையோடு இவ்வளவு உழைப்பெடுத்துக் கொண்டு சிறப்புச் செய்யவல்லார் எவர் உளர்? என்பதனை நினையுந்தோறும், அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலியனவுந் தங்கள் கையாற் பதிப்பிக்கப்படினல்லவோ கவின் பெறும் என்னும் மற்றுமோர் நினைவும் உடனெழா நிற்கின்றது. எல்லாம் வல்ல ஆண்டவன் நுங்கள் வாயிலாகவே அந்நூல்களை வெளியிடுவிக்கவேண்டுமென அவனை இறைஞ்சிப் பரவுகின்றேன். ஞானசாகர, உ, ௩, ௫, ௬-ஆம் பதுமங்கள் விரைவில் தங்கட்கு வரும்படி செய்விப்பேன்.

அன்புள்ள,
வேதாசலம்.

தமிழ்விடுதூது ஆராய்ந்த வரலாறு ::

[கீழே உள்ளது, என்னுடைய நண்பரும் ஸ்ரீ ஐயரவர்களிடம் பாடங்கேட்பவருமாகிய ஒருவர் சிலவருஷங்களுக்குமுன் எனக்கு எழுதிய கடிதங்களுள் ஒன்றன்பகுதி. இக்கடிதம் எழுதியதேதி 1-11-1930. ஸ்ரீ ஐயரவர்கள் தமிழ்விடுதூதென்னும் பிரபந்தத்தை ஆராய்ந்த காலத்தில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை இதனால் அறியலாம். அவர்களது ஆராய்ச்சி வன்மையையும் அவர்கள் தமிழோடு ஒன்றி நிற்பதையும் இக் கடிதம் விளக்கும். இதனை எழுதியவர் இக்கடிதப்பகுதி வெளிப்படுத்தப்படும் என்பதை அக்காலத்து அறியார். எனினும், இதிலுள்ள செய்திகள் யாவருக்கும் இன்பத்தை உண்டாக்கும் என்னும் நோக்கத்துடன் இதனை இங்கே வெளியிடத் துணிந்தேன்.

—வித்துவான் ச. கு. கணபதி ஐயர்.]

......ஸ்ரீமத் ஐயரவர்களுடைய உழைப்பின் வன்மையைச் சிலசில எடுத்துக்காட்டுக்களாலேயே அறிந்துகொள்ளலாம். மயிலையந்தாதியில், துயரக்கண்ணீர் சுடும் என்பதற்குக் காட்டிய குறிப்புக்கள் அரியனவல்லவென மறுத்தல் கூடுமோ? தமிழ்விடுதூதில் முகவுரையில் காட்டப்பெற்ற தூதைப்பற்றிய இலக்கணங்களும், நெல்விடுதூது, புகையிலைவிடுதூது என்பவற்றைப்பற்றிய செய்தியும், தமிழைத் தூதுவிடற்குரிய மேற்கோளும் எத்துணை அரிய செய்திகள்!

1900-ஆம்வருஷத்தில் கிடைத்த சுவடி 1930-இல் வெளிவருதல் அதிசயமல்லவா? ஒரு சிறுநூலுக்கு முப்பது வருஷ உழைப்பு! அதனால்தான் அந்நூல் பழுத்துச் சுவைகனிந்து நிற்கின்றது.

இரத்தினச் சுருக்கத்தில் ஒலைப்பூவெனத் தாழம்பூ, கூறப்படுகின்றது. அதுபோன்ற பிரயோகம் வேறெங்கும் காணற்கு அரிதாக இருந்தது. இந்தத் தமிழ்விடுதூதிலே "மட்டோலைப் பூவனையார்" என்ற தொடர் (கண்ணி, 8) அம்மேற்கோளைப் பயன்படுத்திக் கொண்டது.

ஸ்ரீமத் ஐயரவர்கள் எந்தநூலைப் படித்தாலும் படிப்பித்தாலும் அதனிலுள்ள அரியகருத்துக்கள், உவமைகள், அரும்பதங்

கள் முதலியவற்றைக் குறியிட்டும் இடுவித்தும் வைப்பது வழக்கம். பின்னர் மற்றொரு நூலைப் படிக்கையில் அந்தக் குறிப்பு அந்நூற் கருத்தை நன்கு விளங்கவைக்கும்.

22-ஆம் கண்ணியில் சார்பெழுத்து இருநூற்று நாற்பதென ஆசிரியர் பாடியிருக்கிறார். அதற்குரிய ஆசிரிய வசனங்களைத் தொல்காப்பியம் முதலியவற்றில் தேடியும் கிடைக்கவில்லை. கடைசியில் இலக்கண விளக்கத்தில் இந்தக் கணக்குக் காணப்பட்டது. ஆகவே, இந்நூலாசிரியர் இலக்கண விளக்கக்காரருக்குப் பிற்பட்டவரென்று உடனே—அந்த இளமை முறுக்கில்—நான் கூறினேன்; ஏன்? நீங்களுமே கூறுவீர்கள்.

"அவசரப் படாதே; நான் பழம் புண்ணாளி; இலக்கண விளக்கத்தார் எதனையும் சொந்தமாகச் செய்யவில்லை; பலநூல்களில் உள்ள கருத்துக்களையும் சூத்திரங்களையும் அப்படியே எடுத்து அமைப்பவர்; ஆகையால் அவருடைய சார்பெழுத்துத் தொகைக்கும் வேறு நூலில் மேற்கோள் இருக்கும்; எனவே தமிழ்விடு தூது இலக்கண விளக்கத்துக்குப் பின்புதான் இருக்கவேண்டும் என்று துணிந்து கூறமுடியாது; என்றாலும் அதனை ஒருபட்சமாகக் கருதலாம்" என்று, இயற்கையிலேயே பனிக்கட்டிபோன்று மெதுவாகக் குளிர்ச்சியைப் புகுத்தும் தம்முடைய வார்த்தைகளால் ஸ்ரீமத் ஐயரவர்கள் என் ஆவேசத்தை அடக்கினார்கள். ஆராய்ச்சிக் கதையைக் கண்டீர்களா!

34-ஆம் கண்ணியிலே "அட்டா தசவன்னனைகள்" என்று கூறப்பட்டிருக்கிறது. இலக்கணங்களெல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்தும் அதற்குரிய மேற்கோள் கிடைக்கவில்லை. மாறனலங்கார உரையாசிரியர் ஓரிடத்தில் "பதினெட்டு வருணனையும்" என்று கூறிச்சென்றாரேனும் அவை இவையெனச் சுட்டிக் காட்டினாரல்லர். தண்டியலங்காரம் காப்பியநிலை பேசுங்காலை பலபல கூறுகின்றது. பதினெட்டென்னும் எண்ணிற்கு வழியில்லை. அச்சூத்திரத்தில் கூறப்படும் பிறவற்றை ஒழித்துப் புனையத் தகுவனவாகக் கூறப்படும் மலைகடல் முதலியவற்றை எண்ணுகையில் வழக்கம் போலவே சிறுபொழுது ஐந்தென்றே கொண்டு எண்ணினேம். மொத்தம் பதினேழு வருணனைகள் வந்தன. இன்னம் ஒன்றுக்கு வழியில்லை. திடீரென்று, "இருங்கள் இருங்கள்! கண்டுபிடித்துவிட்டேன்" என்றார்கள் எங்கள் குருமூர்த்திகள். நாங்கள் ஈப்புகுவதும் தெரியாமல் வாயைத் திறந்து அவர்களைப் பார்த்து நின்றோம். அவர்கள் தோளைத் தட்டிக்கொண்டே காலை அசைத்தார்கள். மிகவும் உற்சாகம் உண்டாகும்பொழுது தமிழ்த்தெய்வம்

இக்கோலம் கொள்வதை நாங்கள் பன்முறை கண்டிருக்கிறோம். அவர்கள், "சிறுபொழுது ஆறுக வைத்து எண்ணிப் பாருங்கள்" என்றதுதான் தாமதம்; "அப்பொழுது சரியாகப் பதினெட்டா யின" என்று முறுவலுடன் உள்ளக் களிப்பு வெளியிற் குதிக்கக் கூறினேம்.

"சிலருடைய கொள்கை சிறுபொழுது ஆறென்பது; அதன் படி பதினெட்டு வருணனைகள் இந்தத் தண்டியலங்காரச் சூத்திரத் தாலே ஏற்படுகின்றன; இப்பொழுது இச்சூத்திரத்திற்கு உண்மை யான மிக அரியவுரை கண்டுகொண்டோம்; இதற்குமுன் இவற்றை யார் எண்ணிப் பார்த்தார்கள்! இந்தச் சிறு நூலன்றோ (தமிழ் விடு தூது) இந்தச் சூத்திரத்தை விளக்குவித்தது" என்று சொல்லி எதையோ நினைந்து சிலநேரம் வாளா விருந்தார்கள். அவர்கள் கண்ணில் நீர் துளும்பியது. நாங்கள் ஒன்றும் அறியாது இருந்தோம். அவர்கள் நாத்தழுதழுத்துக் கொண்டே, "இந்தப் புலவர் (தமிழ் விடு தூதின் ஆசிரியர்) எப்படி இருந்தாரோ! யார் இவருக்குப் பாடங் கற்பித்தாரோ! இவரைப்போன்ற எத்தனை பேர்கள் இந்தத் தமிழ்நாட்டில் இருந்திருக்கிறார்கள்! அவர்கள் காலத்தில் இருந்திருப்பேனுனல் எவ்வளவு விஷயங்கள் அறிந்து எவ்வளவு இன்பமாகக் காலத்தைக் கழித்திருப்பேன்!" என்று இரங்கினர்கள். இந்தக்காலம் அவர்களுக்கு மன வெறுப்பை அளித்து விட்டது. அவ்வெறுப்பின் பயனுக, பண்டைக்கால நினைவு எங்கள் தமிழ்வள்ளலுக்கு எழும்போதெல்லாம் இந்தக் காட்சியையே நாங்கள் காண்போம். என்செய்வோம்? தமிழர் ஆதரவு அத்துணையில் அமைந்திருக்கிறது!

பிரபந்தங்கள் பலவற்றை ஒருவன் படித்தாலன்றித் தமிழின் உள்ளுறையாகிய மறைபல கொள்ளுதல் அரிதாம் என்பது ஐய ரவர்களின் கொள்கையாகும். யாரேனும் பாடங்கேட்கவரின் 'முதலில் பிரபந்தங்களைக் கேள்' என்பார்கள். அவைதாம் தமிழ் மொழியின் ஒழுக்கை அரண்கோலிக் காப்பன வென்பது அவர் கள் துணிவு. இந்தத் தமிழ்விடுதூதிலே அப்பிரபந்தங்களைத் தமிழாகிய அரசிற்கு மெய்காப்பாளராக ஆசிரியர் கூறியுள்ளார். இதனைக்கண்ட நம் பெரும்பேராசிரியர், இது தமது உள்ளக் கிடக்கையோடு ஒத்திருத்தலை யறிந்து மகிழ்ந்து முகவுரையிலே இதனைக் குறிப்பித்துள்ளார்கள்.

66, 67-ஆம் கண்ணிகளிற் கூறப்படும் செய்திகள்—வில்லி ஒட்டக்கூத்தராதியோர் செய்கை—எம் ஆசிரியருக்கு உடன்பா

டன்று. அதனால்தான் முகவுரையில் இந்நூற்சுருக்கங் கூறுகை யில் அப்பகுதி காட்டப் பெறவில்லை.

113-ஆம் கண்ணியிற் கூறப்பட்ட தொடைகளின் தொகை நச்சினார்க்கினியர் ஒருவரே கூறுகின்றார்; பிறர் வெவ்வேறு கொள் கின்றார்கள்.

151-ஆம் கண்ணியாகிய,

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"

என்பது அவர்களை நிரம்ப உருக்கிவிட்டது. அவர்கள் பலமுறை அதனை வார்த்தைகளாகச் சொல்லி யிருக்கிறார்கள்; அவர்கள் வாழ்வின் இலட்சியமும் அதுவே; செந்தமிழ் நூலில் ஒரு பாட்டு அதனைக் கூறுமெனின் மனம் உருகாதோ? ஒருவர்க்கு உள்ளூற அமைந்து கிடக்கும் தனி உணர்ச்சியை வேறொருவர் தாமாக எடுத் துக்கூறுகையில் எவ்வளவு கனிவு ஏற்படுகிறது! பாட்டிலே— மற்றவர் பாடியதேயாயினும்—நமது அநுபவம் ஒத்திருந்தால் அந்த நிமிஷத்தில் நாம் நம்மையே மறந்துவிடுகிறோமல்லவா? "முத்தமி ழால் வைதா ரையுமங்கு வாழவைப்போன்" என்று பலவருடங் களுக்குமுன்பு அருணகிரிநாதர் முருகனைக் கூறியபாட்டிலே நம் முடைய இதயம் ஒன்றி உணர்ச்சியினால் நிரம்பி வெடித்து விடும் போல் ஆகி ஒரு பெருமூச்சேனும் விடும்படி செய்துவிடுகிறதல்ல வா? நம்முடைய நம்பிக்கையை—அவன் எவ்வாறேனும் காத்தரு ளும் பேரருள் வாய்ந்தவன் என்ற உள்ளுணர்வை—அந்தப் பாட்டுக் கிண்டி மலர்த்திவிடுவதனாலன்றோ அந்த அநுபவம் ஏற்படு கிறது?

ஆகவே, அக்கண்ணி நம் ஆசிரியர்பிரான் மனத்தைக் கசிய வைத்தது. பன்முறை அதனைப் படிக்கக் கேட்டார்கள். அக் கருத்தை அவ்வாறே வெளியிட வேண்டும், அதுவே தம்முடைய கருத்தென்று தமிழுலகம் அறிய வேண்டும் என்னும் மீதூர்ந்த அவா அவர்கள்பால் எழ, அது,

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் - திருந்த
உரைப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்
பதிப்பிக்க வேகடைக்கண் பார்"

என்ற வெண்பாவாக முகிழ்த்தது. இப்பொழுது அது தக்க யாகப்பரணி முகவுரையின் முதலிலே காணப்படும். பன்னூல் ஒளிரவேண்டுமெனில், அவர்கள் அவற்றைப் பதிப்பிக்க வேண்டும்.

அவை தமிழ்த்தாய்க்கு அணிசெய்யும். தமிழ்நாடே! நீ அவ்வளவு பாக்கியம் செய்திருக்கிறாயா?

153-ஆம் கண்ணியில் அவரை நிழலைப் பற்றிய குறிப்பு இப்பொழுது எளிதாக இருக்கலாம். அந்தக்கண்ணிக்குப் பொருள் கண்டு பிடிக்கச் செலவழித்த முயற்சியில் நூற்றில் ஒருபங்கால் கம்பராமாயணம் முழுதும் பொருள் கூறிவிடலாம். ஆமாம்! உழைப்பின் வன்மை இனிய பயனை உண்டாக்குதல் பின்பல்லவோ தெரிகிறது?

194-ஆம் கண்ணியில், "காசுபணம் காணிலுன்னை விற்பா ரவர் பால்நீ மேவாதே" என்ற அடியைப்படித்தேன். "ஐயோ!" என்று கூவினார்கள் அவர்கள்; இரண்டு மூன்று முறை பெருமூச்சு விட்டார்கள்; "இந்தக்காலம் பணத்தாலல்லவா எண்ணப்படுகிறது! என்னுடைய நோக்கம் காசல்லவென்பதைப் பிரமாணமாகச் சொல்வேன்; அழிந்துபோகும் நிலைமையிலுள்ள பல அருநிதியங்களாகிய நூல்களை வெளியிடக் காகிதம் வேண்டும்; அச்சுக்கூலி வேண்டும். நான் என்செய்வேன்! பிறரை வாய் திறந்து கேட்க மனம் கூசுகின்றது; ஒருபுஸ்தகம் செலவாக இருபது முப்பது வருஷங்களாகின்றனவே! நான் ஆராய்ந்து வைத்த நூல்களைப் பதிப்பிப்பதில் தோன்றும் கஷ்டங்கள் பிறருக்கு என்ன தெரியும்? ஒரு நூலுக்காக எத்தனை நூலை ஆராயவேண்டும்! எவ்வளவு செய்திருக்கிறேன்! அவ்வளவுக்கும் பணம்—காலம்—உதவி வேண்டாவோ? நல்ல உருவத்தில் இந்நூல்களை யெல்லாம் நான் பார்க்க முடியுமா?" என்று சொல்லி இரண்டு நிமிஷம் தங்களை மறந்திருந்தார்கள். "சரி, மேலே வாசி" என்ற வெறுப்பொலியோடுகூடிய கட்டளை எழுந்தது பின்.

இப்படி, ஆராய்ச்சிக்காலக்கதை ஒரு விரிந்த சரித்திரமாகும். அவற்றையெல்லாம் ஞாபகப் படுத்திக்கொண்டு எழுதும் விருப்பம் எனக்கு உண்டு; ஆனால் சோம்பல் தகைகின்றது.

இந்தத் தமிழ்விடுதூதுக் குறிப்புரையிலேயே இதுகாறும் வெளிவராத சோக்கநாதருலா, திரிசிரகிரியுலா முதலியவற்றிலிருந்து மேற்கோள்கள் காணப்படும்..........

——:o:——

ஐயரவர்கள் சங்கநூற் பதிப்பு ::

வே. ப. சுப்பிரமணிய முதலியார், ஜி. பி., வி. ஸி.

முன்னுரை

சற்றேறக்குறைய 1890-ம் வருஷத்தில் என் நண்பர் எஸ். டி. கள்ளப்பிரான் பிள்ளையவர்கள் கும்பகோணம் காலேஜ் ஆசிரியரு ளொருவரா யிருந்தபோது அவர்களைப் பார்க்கச் சென்றிருந்தேன். அப்போது, நான் திருநெல்வேலி ஆங்கிலக்கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தகாலத்தில் அந்தக் கலாசாலைப் பிரிவின் பாலாயிருந்த சாமிஐயரவர்கள் கும்பகோணம் காலேஜ் பிரிவின் பாலாயிருந்தார்கள். அவர்களை நான் பார்த்தபோது, அவர்கள், நான் தமிழார்வமுடையவனென்பதை நினைவு கூர்ந்து, என்னை பி. ஏ. வகுப்பில் தமிழ்ப்பாடம் கற்பித்துக்கொண்டிருந்த ஐயரவர்களிடம் கொண்டுபோய்விட்டு அறிமுகமாக்கி, "இவன் தமிழ் விற்பத்தியுடையவன், தாங்கள் பாடம் சொல்லுதலைக் கேட்டுப் பயனடையத்தக்கவன்" என்று சொல்லி விட்டுப்போனார்கள். அது முதலாக, ஐயரவர்களுக்கு அன்பனானேன். அப்போது அவர்கள் சிந்தாமணியும் பத்துப்பாட்டும் முதல் முதலாகப் பதிப்பித்திருந்தார்கள்.

பின்பு நான் கும்பகோணத்திலும் அதற்கடுத்த நீரத்த நல்லூரிலும் நிகழ்ந்த மாட்டுத்தாவணி (வருடாந்தர மாட்டுச்சந்தை) களை மேற்பார்க்கும் உத்தியோகமாகப் பலமுறை போயிருந்தபோது ஒவ்வொருவருஷமும் ஒருமாதத்துக்கு மேற்பட்ட காலம் ஐயரவர்களைக்கண்டு சல்லாபித்துப் பழகும் பாக்கியம் வாய்த்திருந்தது. அவர்கள் சென்னைக்கு வந்தபின், தொடுத்தும் இடைவிட்டும் நெடுங்காலம் பழகும் அதிட்டமுடையவனாயிருந்தேன். இவ்வாறு அவர்களைச் சந்தித்த காலங்களில் பேசப்பெற்ற பலவிஷயங்களுள் சங்கநூல்கள் சம்பந்தமானவைகளினின்று அவர்கள் அந்நூல்களைப் பதிப்பித்த வரலாற்றைத் தொகுத்துச் சுருக்கமாக எழுதுகின்றேன்.

சங்கநூற் பதிப்புவரலாறு

தமிழ் நாட்டில், சென்ற நூற்றாண்டின் பிற்பாதியில், ஆங்கில மொழிப்பயிற்சி பிரபலமாகப் பரவத் தொடங்கியதற்கு முன்பு,

நெடுங்காலமாகச் சங்கநூற்பயிற்சி குறைந்து, வித்துவான்களுள்ளேயே பெரும்பாலார், குறள் நாலடியார் தவிரச் சங்கநூற் பெயர்களையும் தெரியாராயிருந்தனர்.

* 'அந்தக்காலம், பத்துப்பாட்டு எட்டுத்தொகை இன்னவையென்று தெரியாதிருந்த காலம்'. எனவே, தமிழ்நாடெங்கும் பாராயணஞ் செய்யப்பெற்றுப் பிரசித்தியடைந்துள்ள திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டைச் சேர்ந்ததென்று அந்தக் காலத்தில் தெரிந்தவரில்லையென்பது சொல்ல வேண்டியதில்லை.

அக்காலத்தில், தத்தமக்குரிய சமயசம்பந்தமான நூல்களன்றி வேறெந்த நூலையும் படித்தல் வீண் பொழுதுபோக்கு என்ற கொள்கையும் அக்கொள்கைப்படியே அனுட்டானமும் இருந்து வந்தன. உண்மைச்சமயப்பற்றுக்கும் உண்மை மொழிப்பற்றுக்கும் எவ்வகை விரோதமும் இல்லையென்ற பகுத்தறிவுடையார் மிகச் சிலராயிருந்தனர். அப்படியிருந்த காலத்தில் ஐயரவர்கள், சிந்தாமணியையும் அதன்பின் பத்துப்பாட்டு முதலாகப் பல சங்கநூல்களையும் பதிப்பிப்பாரானார்கள். அவர்கள் பதிப்பித்திருக்கிற நூல்களின் முகவுரைகளால் அவற்றின் அருமை பெருமை முதலியவைகளும் பதிப்பிப்பதில் நேர்ந்த காலச்செலவு பொருட்செலவு முதலியவைகளும் விளங்குமாதலால் அவைகளை இங்கே கூறவேண்டியதில்லை.

அவர்கள் முதன்முதற் பதிப்பித்ததாகிய சிந்தாமணிப் பதிப்புக்கு உதவியாகத் தம்மிடத்திருந்த அந்நூலின் ஏட்டுப்பிரதிகளைக் கொடுத்தவருள் ஒருவராகிய சேலம் இராமசாமி முதலியாரவர்கள், பெருஞ் செல்வப் பிரபுக்களுள் ஒருவராகவும், அக்காலத்து ஆங்கிலங் கற்றாருள் முன்னணியில் வைக்கத்தக்காருள்ளே மிகச் சிறந்தாரொருவராகவும் இருந்தார்கள். அவர்கள், அக்காலத்துத் தமிழ்ப்பண்டிதருள்ளே உயரிய இயற்கையறிவும் நிரம்பிய பாண்டித்தியமும் அசாதாரண தேகமன ஊக்கமும் அரிய விடாமுயற்சியும் உடையாரென ஐயரவர்களைக் கண்டறிந்து 'தாங்கள் இதுவரையும் பண்டிதர்கள் உழைத்துவரும் பழையவேலைசெய்யாமல், புதியவேலையாகச் சங்க நூல்களைப் பதிப்பித்தல் வேண்டும். அவைகள், பிற்காலத்து நூல்களுக்கு ஆதாரமாய், முற்கால வரலாறுகள் தெரிய உதவியாதல் முதலிய அளப்பரிய சிறப்புடையவைகள்; பயில்வாரற்று இறக்கும் தறுவாயிலிருக்கின்றன' என்றகருத்துப்

---

*புறநானூறு, 2-ம் பதிப்பு முகவுரை.

பட நல் ஆலோசனை கூறி ஐயரவர்களைச் சங்கநூல்களைப்பதிப்பிக்கும்படி தூண்டினார்கள். அந்த ஆலோசனை மிகவும் சுருக்கமானதாயினும், அது,

"தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும், அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழல்ஆ கும்மே"

என்றவாறு மிகவும் பெருக்கமான பயனை அளித்திருப்பது பிரசித்தமானது.

சங்கநூற் பதிப்புமுறை

ஐயரவர்கள் பதிப்பித்திருக்கின்ற சங்கநூல்களைப் பார்த்திருப்பவர்களுக்கு அப்பதிப்புமுறை எவ்வளவு சிறப்புடையதென்பது தானே விளங்குமாதலால், அதை நான் இங்கே கூறக் கருதினேனில்லை. அப்பதிப்பு வரலாறு எழுதத்தொடங்கியபோது, அது விஷயமாகத் திருஞானசம்பந்தர் கால நிர்ணயம், நூற்றொகை விளக்கம், மனோன்மணீயம் ஆகிய நூல்களின் ஆசிரியரான சுந்தரம் பிள்ளையவர்கள் என்னிடம் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. அது வெளியிடத்தக்கதென்ற எண்ணம் தோன்றியதனால் முதலில் எழுதக்கருதிய நூற்பதிப்புவரலாற்றோடு அப்பதிப்புமுறையையும் சேர்த்துக்கொண்டேன்.

சுந்தரம்பிள்ளையவர்கள் சொன்னதன் கருத்தாவது:—

'தாமோதரம்பிள்ளை தொல்காப்பியம் சூளாமணி முதலிய நூல்கள் பதிப்பிப்பதும், சாமிநாதையர் சிந்தாமணி பத்துப்பாட்டு முதலிய நூல்கள் பதிப்பிப்பதும், தமிழ்மொழிக்கு மிகச் சிறந்த உபயோகமான வேலைகள். இவ்விருவரையும் அறியாதார், இவர்கள் வெளியிட்டிருக்கின்ற நூல்களைக்கொண்டு, முன்னவர் ஆங்கில வாசனை அறியாத பரமவைதிக பரம்பரைத் தமிழ்ப் பண்டிதரென்றும் பின்னவர் அரிய தமிழ்ப்பாண்டித்தியத்தோடு ஐரோப்பிய அமெரிக்கப் பதிப்பாசிரிய சிரேஷ்டர் போலப் பதிப்புமுறை ஞானமும் படைத்த பல்கலைக்கழகப் பட்டதாரியென்றும் கருதுவார்கள். நான் இவ்வாறு கூறியது, தாமோதரம் பிள்ளையிடத்து மதிப்பில்லாமையாலன்று; சாமிநாதையரது நூற்பதிப்புச் சதுரப்பாட்டில் ஈடுபட்டமையாலென்று கொள்ளவேண்டும்' என்பது.

உழைப்பின் அவதாரம் ::

வித்துவான் விசுவநாத ஐயர், பி. ஏ.

1929௵ மார்ச்சுமீ 30௳ அன்று முதன் முதலாக ஸ்ரீ ஐயரவர்களை அவர்களில்லத்தில் கண்டேன். அச்சமயம் அவர்கள் தம்வீட்டுக் கூடத்தில் ஒரு சோபாவில் பாஷாகவிசேகரர் ஸ்ரீ ரா. இராகவையங்கார் சுவாமிகளுடன் தாழ்ந்த குரலில் அளவளாவிக் கொண்டிருந்தனர். ஸ்ரீசுவாமிகள் எவையோ சில பாடல்களைச் சொல்லிக்கொண்டிருக்க ஸ்ரீ ஐயரவர்கள் அவற்றைக் கேட்பதும் இடையிடையே வினவுவதுமாக அச்சமயம்இருந்தனர். அப்பொழுது நேரம் சுமார் பிற்பகல் ஒன்றரைமணி இருக்கலாம். வெயில் மிகக்கொடுமையாயிருந்ததால் ஸ்ரீ ஐயரவர்கள் சற்றுக் களைப்பாறிக்கொண்டிருக்கக் கூடுமென்றெண்ணிய எனக்கு அவர்கள் முகப்பொலிவும் ஊக்கமும் ஆச்சரியத்தை விளைவித்தன. தமிழ்த் தாயின் தவப்புதல்வர்களான அவ்விருவரையும் ஒருசேரக் கண்ட எனக்கு என்னை யறியாமல் ஆநந்தம் பொங்க, தலையிலுள்ள தலைப்பாகை அவிழ்ந்ததையும் அறியாமல் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தேன்.

அச்சமயம் ஸ்ரீ ஐயரவர்கள் என்னுடன் பேசின பேச்சுக்கள் என் மனத்தைவிட்டு இன்றும் அகன்றில. அவர்கள் என்னை நோக்கி, "உழைப்பு வேண்டும்; உண்மையான உழைப்பின் பலனை ஒருவராலும் மறுக்கமுடியாது" என்று பல தடவைகள் கூறினார்கள். அன்றைய மாலை நான் என் நண்பரான காலஞ்சென்ற ஸ்ரீ. சி. பி. வேங்கடராமஐயரைக் கண்டு ஐயரவர்களை நான் கண்டதையும் அவர்களைப்பற்றி நான் கொண்ட எண்ணங்களையும் அறிவிக்க, அவர் "ஐயரவர்கள் உழைப்பைப்பற்றி ஏதேனும் சொன்னார்களோ?" என்று வினவினர். இக்கேள்வி முதலில் மிக்கவியப்பை எனக்கு ஊட்டிய போதிலும் சீக்கிரத்தில் ஸ்ரீ ஐயரவர்களின் மூலமந்திரம் இதுவே என்று அறிந்து கொண்டேன்.

பிறகு இரண்டு வருஷங்கள் கழித்து அவர்களைக் காண நேர்ந்தபோதும் அம்மந்திரமே எனக்கு உபதேசிக்கப்பட்டது. உழைப்பின் அவதாரமே அவர்களன்றோ? நான் அவர்களைச் சந்தித்த காலங்களெல்லாம் மிகச் சிலவே, அவர்கள் உழைப்

பின்றிச் சோம்பியிருந்த நேரத்தையாவது, வீண்பேச்சுக்கள் பேசும் நேரத்தையாவது நான் கண்டிலேன். ஜபத்தில் அமர்ந்திருத்தல், தேவாரபாராயணஞ் செய்திருத்தல், ஏடுகளைச்சோதித்திருத்தல், புரூப் பார்த்தலில் கவனத்தைச் செலுத்தல், மாணவர்களுக்குப் பாடம் சொல்லுதல், வந்தவர்களிடம் காரியங்களைப் பேசுதல் இவற்றையன்றி அவர்கள் வேறு வீண்தொழில்கள் செய்தலை நான் கண்டதேயில்லை. அவர்கள் எண்ணெய்தேய்த்துக் கொள்ளும் போதும் உண்ணும் போதுங்கூட மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லிக்கொடுப்பதுண்டு என்று நான் கேள்விப்படுகிறேன். யாரேனும் ஒருவர் ஸ்ரீ ஐயரவர்கள் தம் ஆயுளுள் எத்தனைமணி உழைப்பிற் செலுத்தியிருப்பரென்று கணக்கிட்டுக் கூறுவாரானால் அது உலகுக்கு மிக்க வியப்பைத் தருமென்பதற்கு ஐயமில்லை.

இவ்விதம் உழைப்பே உருவெடுத்துவந்த அப்பெரியார் தம் வாழ்க்கையாலும் வார்த்தையாலும் அவ்வுழைப்பென்னும் மந்திரத்தையே உலகுக்கு வழங்குவதில் விந்தையொன்றுமில்லை. அவற்றைப் பெறும் ஒவ்வொருவரும் அவ்வண்ணம் செய்யக் கூடாமை மிகவும் வருந்தத்தக்கதேயாம். நம்மில் எத்தனைபேர் அந்நல்லுபதேசங்களின் பயனைப் பெறுகின்றனர்! ஸ்ரீ ஐயரவர்களிடம் அளப்பதற்கரிய நற்குணங்களும் நற்பழக்கங்களும் மிகமிகமலிந்து கிடப்பினும் அவற்றிற்கெல்லாம் மூலமானது அவருடைய உண்மையும் உழைப்புமேயாகும். இவற்றை ஒருசிறிதேனும் பிறதமிழர்கள் பின்பற்றுவரேல் தமிழின் வருங்கால நிலையைப்பற்றி நாம் கவலைப் பட இடமேயில்லை.

பிரதிகளின் இயல்பு

பழைய பிரதிகளுட் பல, இனி வழுப்பட வேண்டுமென்பதற்கு இடமில்லாமற் பிழைபொதிந்து அநேக வருடங்களாகத் தம்மைப் படிப்போரும் படிப்பிப்போரும் இல்லை என்பதையும், நூல்களைப் பெயர்த்தெழுதித் தொகுத்து வைத்தலையே விரதமாகக் கொண்ட சில புண்ணியசாலிகளாலேயே தாம் உருக்கொண்டிருத்தலையும் நன்கு புலப்படுத்தின. ஒன்றேடொன்று ஒவ்வாது பிறழ்ந்து குறைவுற்றுப் பழுதுபட்டுப் பொருட்டொடர்பின்றிக் கிடந்த இப்பிரதிகளைப் பரிசோதித்த துன்பத்தை உள்ளுங்கால் உள்ளம் உருகும்.

—சிலப்பதிகார முகவுரை.

ஐயரவர்களின் பொறுமை ::

ந. மு. வேங்கடசாமி நாட்டார்

தமிழ் நாட்டின் பழமை பெருமைகளை அறிதற்குக் கருவியாகும் தொன்னூல்கள் பலவற்றையும் நன்னர் ஆராய்ந்து வெளியிட்டு, அயன்மொழியாளர் முன்னே தமிழ் மக்கள் தலை நிமிர்ந்திருக்குமாறு புரிந்தவர் மகா மகோபாத்தியாய, டாக்டர் வே. சாமிநாதையரவர்களாவர் என்பது உலகம் அறிந்த தொன்று. அப் பெரியார்க்கு எண்பதாவது ஆண்டு நிறைதலைக் கொண்டாடும் நிகழ்ச்சி யாவரையும் இன்புறுத்தல் ஒருதலை.

தமிழொன்றே வல்லார் ஆராய்ச்சியின் பெற்றியறியா ரென்னும் வெளிற்றுரையாளர் நாணித் தலைகவிழ்க்குமாறு அவருடைய பதிப்புக்கள் விளங்குகின்றன. ஐயரவர்கள் பதிப்பின் விழுப்பங்களையும், அவற்றால் அவர்கள் எய்தலாகும் நல்லிசையின் எல்லையினையும் உரைப்பான்புகின் "விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும்" என்னும் சங்கத்தூச் சான்றோர் வாய்மொழி நினைவுக்கு வருகின்றது. அவர்க்குக் கல்வி கற்பித்த பன்னருஞ்சிறப்பின் நல்லாசிரியராகிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் வரலாறு போன்றே அவரது வரலாறும் தமிழ்ப்புலவர் வரலாறுகளில் தலைசிறந்த தொன்றாக நிலவுதற்குரியது. அவர் ஒன்றும் விழையும் இத்தகைய சிறப்பினைப் பெறுதற்குக் காரணமாக இருந்தது வினைமுயற்சியான் வரும் இன்னாமையை யெல்லாம் இன்பமெனக் கருதும் அவரது மனத்திட்பமே.

பன்னாட் பயிற்சியால் அவர்பாற் கண்டறிந்த அரிய குணமொன்றை ஈண்டுக் குறிப்பிடுதல் பொருந்தும். அதுதான் பொறுமை என்பது. 'பொறைக் கயிற்றிற் புகழைப்' பிணித்த பெரியார்களில் ஐயரவர்கள் முதற்பத்தியில் நிற்றற் குரியராவர். காரண முள்வழியும் அவர்பாற் சினமுண்டாக யாண்டுங் கண்டதில்லை.

"உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரிற் பின்"

என்னும் தமிழ்மறை பொறுமையின் பெருமையை இனிது விளக்குகின்றது.

நம் தமிழ்ப் பெரியார் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழன்னைக் காவன பணிகள் புரிந்து இன்புறச் செந்தமிழ்க் குரவராகிய தில்லையம்பலவாணர் செம்பொற் சேவடிகளை ஏத்துதும்.



'எங்கள் தமிழ்ப்பண்டிதர்'

எங்கள் தமிழ்ப்பண்டிதர் ::

கே. ஸ்வாமிநாதன், எம். ஏ., பி. எல்.

நான் ப்ரெஸிடென்ஸி காலேஜில் சேர்ந்தபோது ஐயரவர்கள்தான் தமிழ்ப்பண்டிதர். இவருடைய ஆழ்ந்த படிப்பும், தமிழிலக்கியத்துக்கு இவர் செய்துள்ள 'ராக்ஷஸ' காரியங்களும், முதல்வகுப்பு மாணவருக்கு எப்படித்தெரியும்?

கழுத்தை மறைக்கும் சட்டையும், சுவரைப் பாரென்றால் கதவைப்பார்க்கும் (சற்றுத்துவண்ட) தலைப்பாகையும், படபடவென்று இங்லீஷ் பேசாமையும், ஒருவரிடம் ஒன்று சேர்ந்தால் அவரை மதிப்பதெப்படி?

இதெல்லாம் போகட்டும்; தமிழ்கூட இந்த ஆசாமிக்கு நன்றாய்த்தெரியாதோ என்ற சந்தேகமும் உண்டாயிற்று. அதுவரை எங்களுக்குத் தெரிந்த தமிழ்ப்பண்டிதர்கள் ஒருவித கம்பீரமான, பொருளற்ற தமிழைப் பேசி, ஒட்டக்கூத்தர், காளமேகம் முதலிய பெரியாரின் பல்லொடிக்கும் செய்யுள், உதடு ஒட்டாத செய்யுள், சிலேடைமிகுந்த செய்யுள் இவற்றைக் கக்கி, எங்களைப் பிரமிக்கச் செய்ததுண்டு; தமிழ் வகுப்பில் இந்த இடிமுழக்கத்தைக் கேட்டுச் சிலராவது பயபக்தியுடன் நடந்ததுண்டு. (இதெல்லாம் பழைய சரித்திரம். இப்பொழுது தமிழ்ப்பண்டிதர்களுங்கூட வெள்ளைத் தமிழ் பேசுவதாகக் கேள்வி.)

ஆனால், இந்தக்கிழவரோ (அப்பொழுதே இவர் கிழவர்தான்) மெதுவாக, மிக எளிய இனிய நடையில், எல்லாருக்கும் பொருள் விளங்கிவிடும்வகையில் பேசினார்; கரடுமுரடான பழையசெய்யுள்களை எங்கள்மேல் வீசியெறிந்து, எங்களை ஹிம்ஸித்து, பயமுறுத்தச் சக்தியற்றவர்போலிருந்தார். உண்மையில் செந்தமிழ் தெரிந்தவராயின், இப்படி 'அப்பாவி'யாய் இருப்பாரா? இவ்வித 'சாதாரணப்பேச்சு' இருப்பானேன்? இன்று 'கல்கி'யின் கைவன்மையினால் தமிழுலகம் முழுவதும் பரவியிருக்கும் சாதாரண நடையின் ரகசியத்தை ஐயரவர்கள் மாணவர்களுக்கு அப்போதே வெளியிட்டார். ஆனால் அதன் அருமையை அறிந்து, அதைப் போற்றி அனுபவிப்பதற்குக் காலம் வரவில்லை; எங்களுக்கும் சரி, உலகத்துக்கும் சரி, தக்க காலம் வரவில்லை.

அந்த வருஷம் ஜுலைமாதம் இரண்டாம் வாரம் புதன்கிழமை காலை 10-30 மணிக்கு, செங்கோடையனும் நானும் ஒருமுடிவுசெய்தோம்; அதாவது: 'இவர் சுத்த பிரயோஜனமில்லை' என்பதே. (S. S. L. C. இங்கிலீஷில் எங்கள் இருவருக்கும் நல்லமார்க்கு வந்துவிட்டதால் எங்களுக்குள் சுயமதிப்பும் பரஸ்பர கௌரவமும் அதிகம்.)

ஆனால், வெகுசீக்கிரத்தில் இந்த முடிவு மாறுதல் அடைந்தது. முதலாவது, ஹண்ட்டர்துரை இவருக்குக் காட்டும் மரியாதையைப் பார்த்ததில், இந்தப் பண்டிதரிடம் ஏதோ சரக்கு இருக்கும் என்ற நம்பிக்கை பிறந்தது. மேலும், தமிழ்ப்பண்டிதர்களிடம் நாங்கள் எதிர்பார்த்த குணங்கள் இவரிடம் காணவில்லை யென்றாலும், இங்கிலீஷ் அல்லது சரித்திர வாத்தியார்களுக்குக்கூட இல்லாத சாதுர்யமும், கேலிப்பேச்சும், லௌகிக அறிவும் இவரிடம் புலப்பட்டன. மாணவர் ஒவ்வொருவரின்பேர், ஊர், குடும்பம் முதலிய வரலாறுகளைக் கேட்டு, ஒவ்வொருவருடைய தகப்பனார், சிற்றப்பா, பெரியப்பா, தாத்தா முதலியவரைப்பற்றியும், அவர்கள் ஊரோ, கிராமமோ சரித்திரத்திலும் பாட்டிலும் பெற்ற பேரைப் பற்றியும், இன்னும் என்ன என்னவோ ஸ்வாரஸ்யமான விஷயங்களைப்பற்றியும் அவிழ்த்துவிட்டார். திவான் சேஷையா சாஸ்திரி முதல், மாங்குடிக்கு நாலுமைல் தூரத்திலுள்ள சுரைக்காயூர் கிராம முன்ஸிப் முத்துசாமிபிள்ளைவரை, நாங்கள் பேர்சொன்ன நபர்கள் எல்லாரும் தமக்கு நெருங்கிய சிநேகிதர்கள் என்றும், தமிழ்நாடு முழுவதிலும் தமக்குத் தெரியாத கிராமமாவது, மிராசுதாரராவது, உத்தியோகஸ்தராவது இல்லை, இருந்திருக்கவும் முடியாது என்றும் சந்தேகந் தீர நிரூபித்துவிட்டார். புத்தியுள்ள மாணவர்கள் இதை உணர்ந்து அன்றுமுதல் இவர்வகுப்பில் வெகு மரியாதையாய் நடந்துகொண்டார்கள். கர்ப்பூரவாசனை தெரியாத வேறுசிலர் சிலசமயம் 'வாலையாட்ட' முயன்றால், அவர்களை அடக்குவதில் நமது ஐயரவர்கள் பல நுட்பமுறைகளைக் கையாளுவார். கடிந்துபேசாமல், பழுத்த வாழைப்பழத்தில் கூர்மையான ஊசியை ஏற்றுவதுபோல, அழகான இரண்டொரு வார்த்தையில் ஆளை அழச்செய்துவிடுவார். "உன் தமையன் வகுப்பில் வெகு வினயமாயிருப்பான்; ஆனால் அவன் படித்தவன்" என்று எனது நண்பனொருவனைப்பார்த்து அவர் சொன்னது இன்னும் ஞாபகத்திலிருக்கிறது. முக்கியமாய்—(அவையெல்லாம் உண்மையோ கட்டுக்கதையோ எனக்குத் தெரியாது)—பி. சம்பந்த முதலியாரை நாயகராகவுடைய கதைகளைப் பிரயோகித்தே எங்களில்

பலரைக் கைவசப்படுத்திவிட்டார். பழையமாணவர் எல்லாரிடத்திலும் இவருக்கு மிக்க அன்பு உண்டு; என்றாலும், எனக்குத் தெரிந்தமட்டில் இ. வை. அனந்தராமையரிடத்திலும், ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியாரிடத்திலும் ஒரு விசேஷ அபிமானம் வைத்திருப்பதாகவே சொல்லலாம்.

* * *

ஐயரவர்கள் வெளியிட்டிருக்கும் தமிழ்நூல்களின் தொகையையும், அவற்றின் இலக்கியச்சிறப்பையும், அவற்றினுள் பொதிந்து கிடக்கும் சரித்திரச்சாக்ஷியங்களையும் கருதுங்கால் தமிழுக்கு இவர் ஒருவர் செய்திருக்கும் தொண்டு, எவரும் எந்தப்பாஷைக்கும் எக்காலத்திலும் செய்ததில்லை என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். கான்ஸ்டான்டிநோபில் (*Constantinople*) நகரிலிருந்து தப்பியோடும் கிரேக்கசாஸ்திரிகள் இத்தாலியா தேசத்துக்குக் கொணர்ந்த ஏடுகளே ஐரோப்பா புனர்ஜன்மம் (*Renaissance*) பெற்றதற்கு ஒரு முக்கிய காரணமென்பர். பாரதியாருக்குக் கவிதையிலும், தமிழரனைவருக்குமே வாழ்க்கையிலும் உயிரும், உத்ஸாகமும் ஊட்டித் தமிழ்நாட்டுக்குப் புனர்ஜன்மம் அளித்தவர் இவரே. எத்தனையோ புலவர்களும், கல்விக்கழகங்களும், அரசகுடும்பங்களும் ஒன்றுசேர்ந்து, நூறுவருஷகாலத்தில் ஐரோப்பாவில் நடத்திவைத்த ஒரு பெரிய காரியத்தை, இந்தத்தமிழர் ஒருவராகச் செய்து முடித்திருக்கிறார்.

இவர் செய்த தொண்டின் பரிமாணத்தைக் கணிக்க ஓர் உபமானம் சொல்லலாம்: 1870-ஆம் வருஷத்தில் 'பியோவுல்ப்' (*Beowulf*) என்ற காவியமும், சாஸர், ஸ்பென்ஸர், ஷேக்ஸ்பியர் (*Chaucer, Spenser, Shakespeare*) என்ற கவிகளின் நூல்களும் பதிப்பிக்கப்படவில்லையென்றும், ஏடுகளிலே அங்குமிங்கும் சிதறிக்கிடந்தன என்றும் வைத்துக்கொள்வோம். மில்ட்டன் (*Milton*), ஜான்ஸன் (*Johnson*) முதலிய பிற்காலத்திய நூலாசிரியர் பிரஸ்தாபிப்பதாலும், சிலவாக்கியங்களை மேற்கோளாக எடுத்துக்காட்டுவதாலும் மாத்திரமே, அந்த ஆதிகவிகளின் பேர்களும், நூல்களும் சிலர்காதில் விழுவதாக வைத்துக்கொள்வோம். சென்ற அறுபது வருஷத்தில் ஆங்கிலேய வித்வான் ஒருவர் தோன்றி, தன்னந்தனிமையாய்ப் பழையகாலநூல்கள் அத்தனையையும் சாஸ்த்ரோக்தமாய், முற்றும் பிழையறப் பதிப்பித்து ஆங்கிலேயருக்குத் தந்ததாக வைத்துக்கொள்வோம். மேல்நாட்டு ஜனங்களிடம் பலநூற்றாண்டுகளாக இவ்வளவு உபேக்ஷையும் குடிகொண்டிராது; வேறொரு வித்வானிடம் இவ்வளவு பாண்டித்திய

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்த மென்றாலும் வேண்டேன்-திருந்த
உதிப்பித்த பன்னூ லொளிர வடியேன்
பதிப்பிக்க வேகடைக்கண் பார்."

பன்னூல் ஒளிரப் பதிப்பித்தலாகிய நோன்பிலே ஆற்றலோடு தலைப்பட்ட ஐயரவர்கள் கூற்றங்குதித்த பெருந்தமிழராவர். அவர்கள் விடாது உழைத்துப் பதிப்பிக்கச் சித்தமாய் வைத்துள்ள நூல்கள் இன்னும் எத்தனையோ உள்ளன. ஆதலின், அவைபலவும் அவர்களாற்பதிப்புறும் பாக்கியம் பெற்றொளிருமாறு பதிப்புத் தொழிலுக்கு இன்றியமையாத சாதனங்கள் பலவற்றையும் அவர்களிடம் சேர்ப்பித்து அவர்களது அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்வதே தமிழுலகின் தனிக்கடமையாகும்.

உரிமை யுரை

(விருத்தம்.)

உரமலி திரிசி ராமலை யுதித்த
ஒருமணி யாவடு துறையாம்
புரமலி மடத்தி லியற்றமிழ்க் குரவு
புனைமணி பலதமிழ் நூல்செய்
வரமலி புகழ்மீ னாட்சிசுந் தரநா
வலர்மணிக் கென்குரு மணிக்குத்
திரமலி சுவைசால் பெருங்கதைப் பதிப்பைத்
திகழ்வுற வுரிமையாக் குவனே.

—டாக்டர் ஐயரவர்கள்.

பாராட்டு ::

சே. சோமசுந்தரபாரதி, எம். ஏ., பி. எல்.

பிரும்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர். உ. வே. சாமிநாத ஐயரவர்களைத் தமிழுலக முழுதறியும். இவர்கள் புகழ் பரவுதற்கு என்போன்றார் எடுத்துரைகள் யாதும் வேண்டா. இவர்கள் பெருந்தகவுரைக்கச் சிறப்புரிமை பெற்று யருஞ் சிலரோடு சேர்த்தெண்ணப் பெறும் பேற்றை எனக்குதவிய 'கலைமகள்' பத்திராசிரியருள் ஒருவரும், சென்னைச் சர்வகலாசாலைத் தமிழகராதித் தலைமைப் பதிப்பாசிரியருமாகிய திரு. வையாபுரிப் பிள்ளையவர்களின் அன்பும், ஐயரவர்களின் தமிழ்த் தொண்டு பாராட்டும் விழவினில் என்மகிழ்ச்சி கூறுமவாவுமே இப்பணியில் எனைத் தூண்டுவன. "நல்லார் குணங்க ளுரைப்பதுவும்" நன்றாற் றலாமாகையால், இப்பெரியாரின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டு வெளியீட்டில் யானும் இப்பெரியாரின் மெய்க்கீர்த்தி சிறிது கூற விரைந்து விடைபெறுகின்றேன்.

தற்காலத் தமிழகத்தில், புலமையுலகில் தலைமைநிலை தாங்கித் தன்னிகரற்ற தமிழ் நாவலராய் வீறுபெற்றுயர்ந்த தகையாளர் சாமிநாதையரவர்களை அறியாதார் தமிழ்மணமறியாதாராம். தமிழக மட்டுமன்று; தமிழ் மொழித்தகவாயும் மேனாட்டார் எல்லாரும் இவர்கள் புகழேற்றிப் போற்றுகின்றார்கள். விரிந்து பரந்தாழ்ந்த பல விழுமிய நூலெழுந்து காலவரம்பிகந்த தமிழுகந்து பயின்று நிதம் நலமயின்று வளமலிந்து நிரம்பியநூற் பெரும் புலமைச் செல்வருளே இப்பெரியார் செம்மலாவார். சிறந்த சால்பு பிறி தெதுவும் இலதெனினும், இவர்களிடம் நின்ற நிறைபுலமை யொன்றே இவர்களுக்குக் குறையாத புகழுதவப் போதிய தாகும்.

இன்னும் இவர்கள், மருங்கொவ்வாத் தமிழ்வாணர் ஒருங்கு வந்து வீறுசொலப் பொதுவறுதண்டமிழ்ப் புலமை இறைமை தாங்கி, அனைவருக்கும் இனியவராஞ் செவ்வி மிகப்படைத்தாளும் பண்பு இவர்கள் உடைமையாகும். "இன்சொலினிதீனல்" கண்டு கொண்டு இவர்கள் யாண்டும் யார்க்கும் எஞ்ஞான்றும் இனியன வே சொல்லிக் கனிவிக்கும் ஏமாப்பை அகல அணிகலனாக் கொண்டுடையார்கள்.

சமயவெறி, தனச் செருக்கு, சண்டையிடும் இழிபுலமை செறிந்தடர்க்குந் தற்காலத் தமிழச் சமுதாயத்தில், வேத்தியலில்

விழுப்பதவிதாங்குபவர், குறுமன்னர் வினையாளர், பலமடத்தின் அதிபதிகள், தனிவணிகர், வேளாண்மை விழுச்செல்வர், இகலினை யே புகலிடமாக் கொள்பவர்கள், வாதினைத் தம் வாழ்வினுக்குச் சாதகமாக்கொண்டபலர், பலவேறு பதவியுடை யெனேவோரும் இவர்கள் தமதின்றுணைவரென விரும்ப எவ்வெவர்க்கும் இனிய சொலும் சொல்லின் செல்வர்.

நாமறியத் தமிழர்களே தமிழ்பேசல் இழிதகவென்று அதை வெறுத்து இறுமாந்த காலமுண்டு. தமிழுணர்வின் குறைவளவே அறிவின் நிறைவளங் குறிப்பதெனச் சொல்பவரைப் பழியாமல் தமிழுலகம் பெரியார்போல் மதித்ததுண்டு. தமிழ்க்கல்வி பயிலா தார் எனைமாட்சியுடையாரும் அந்நியரும் ஆங்கிலரும் இந்நாளில் தட்டுண்டு தடுமாறியேனும் தமிழிற் பேச விரும்புவதை இன்று காண்போம். இவ்வரிய மதிப்பு விருப்பமாறுபாட்டை ஒரே தலை முறையில் தமிழரிடைச் செய்துதவித் தமிழ் வளர்த்த செவிலி யருள் தலைமைநிலை ஐயரவர்கட்கே உரித்தாமென்பது மிகை யாகாது.

தமிழில் நன்னூலே கிடையாது, அறிவுவளம் பெருக்காத சின்னூல்கள் சிலவன்றி மதிவாணர் மதிக்க வேறெந்நூலும் இல்லை யெனப்பழித்த பலர், வாழ்நாளை முழுதுதவிப் பயின்றாலும் படித் துலவாப் பன்னூல்கள் விழுப்பொருளும் கவிச்சுவையும் தழுவி நலமிக நிறைந்த எண்ணில நூல் இறந்தனபோய் இன்றுமுள படிப் பார்க்கென்று தொன்னூல்கள் துருவியெடுத்து உலகறிய உதவித் தொன்மைத் தமிழ்ப்பெருமை நாகரிகம் உலகறியச் செய்த பெரும் புண்ணியருள் முதற்பதவி இவர்களதே யென்பதிலோர் ஐயமில்லை.

காலகதியும் கறையானும் கொண்டுண்டு அழிந்தொழிந்தன போக, அழியவிருந்த பல பழைய விழுமிய நூற்சுவடிகளைத் தற்கா லத்தமிழரின் நொதுமல், மறவி, மடிமையெனும் மறலிதூதர் கொடுங்கையினின்றும் பிடுங்கி அவற்றிற்கு இறவாப் புதுவாழ்வு உதவிய பலருங் கூடச் சிதலரித்தும் பிறவழியும் விளங்காத இடங் களிலே சொல்விரித்தும் திரித்தும் தமது மனம் விரும்பியாங்குத் திருத்தங்கள் பல துணிந்து நூற்பான்மை மாற்றுதாரில்லை யென லாம். ஐயரவர்களோ, தெளிந்து துணியக்கூடும் இடங்களினும் புதுப்பாடம் பெய்யாமல் ஏடிருந்த படியெழுதி வெளியிடுவர்; பாடங்கள் பலவுளவேல், அவைபலவு மறையாமல் குறிப்பிப்பர். இவ்வாறு பழம்புலவர் மரபினொடு மாண்புபேணிப் பதிப்பு வெளியீடுகளில் மெய்ம்மையறம் ஓம்பிக் காப்பர்.

இதுவுமன்றி மேனாட்டார் முறைமுழுதும் மேற்கொண்டு முகவுரைகள், அரியபடி விளக்கங்கள், அபிதானமஞ்சரிகள், மேற்கோளின் விவரங்கள், நூலில் வரும் அரிய பல பொருட்குறிப்பு இவையெல்லாம் அரிது முயன்று இனிதெழுதித் தமிழகத்தில் நூலுலகைச் சால வளஞ்செயும் அரிய முயற்சியிலே அயர்ச்சியின்றி உழைத்து மகிழ்வார்கள். இவர்கள் பெருமுயற்சியினால் நாகரிகப் புலவர் பலர் இன்றளவும் நூலினையே படியாமல் பல பழநூற் பொருள் முழுதும் உணர்ந்ததுபோல் வாதப்போர் விளைத்து உளஞ்சுளியாக் களியாட்டம் கொள்ளுதற்கு இப்பெரியார் இவர்க்கெல்லாம் வைப்புநிதிவழங்கி அவை எண்பதத்தாலெவ்வெவரும் துய்த்துலவச் செய்துவைத்த வள்ளலாவர்.

அருமையென மேனாட்டார் கொண்டாடும் வெள்ளி விழா இரட்டிய பொன்விழாவாண்டும் ஐம்பதேயாம். இக்காலம், தலைமுறைகள் இரண்டளக்கப் போதியதாம். இத்துடனே ஒருபது கூடி அறுபது பெறினும் அதை வைரவிழாவெனவே வெள்ளையரும் அயர்ந்து மகிழ்வார். ஐயரவர்கள் எண்ணைந்தை இரட்டிய ஆண்டவதிகண்டும், ஐயைந்தை யிரட்டியதன் மேலான ஆண்டு பல தமிழ்த் தொண்டே ஆற்றிவந்தும், தமிழுலகு அவர்களுக்குத் தகவுடைய செய்ந்நன்றி செய்ததெனக் கூறற்கில்லை. அந்நியராம் ஆங்கிலநல்லரசியலார் இப்பெரியார் தமிழ்ப்புலமை நிறைவுகண்டு மகாமகோபாத்தியாயப் பதவி இவர்க்கு உதவி ஒருவாறு கடனாற்றக் கண்டுவைத்தோம்.

வடமொழிக் கடலுக் கெல்லைகண்ட திருக்குடந்தை மடாதிபதிகளும் இவர்களைத் தாக்ஷிணாத்திய கலாநிதியெனப் புகழ்ந்து தாமும் புகழ் கொண்டார்கள். தென்மதுரைத் தமிழ்ச்சங்கம் இவர்களுக்கு நிதிக்கிழியொன்றுதவித் தன்னறத்தை ஒருசிறிது நிறுவிற்றாகும். எனினும், கொடைமடம் பயின்ற வள்ளலர் வாழ்ந்த புகழோட்டம் பெரிதகன்ற தமிழகத்தில் தமிழ்ப்பெருமை நெடிதுநிதம் பேசும் நம்மவர்கள் தளராமல் சலியாமல் தமிழ்த் தொண்டை. ஒல்லும் வகையானேவாது அறவினையாச் செல்லும் வாயெல்லாம் செய்துவரும் ஐயரவர்களுக்குச் செய்ந்நன்றி மறவாத் தமிழ்மரபின் மாட்சி அறிவித்தல் இன்றியமையாததாகுமன்றோ? தமிழர் விரைந்து வினைமேற்கொண்டு உற்றுழியுதவும் கொற்றம் விரும்பி இந்த நல்லதருணத்தில் தங்கடனாற்றித் தம்பால் தமிழன்பு உணர்வின் தளர்வின்மையை விளக்கி வீறுபெறுவரென நம்புகிறேன்.

இப்போது நாம் செய்யும் உபசாரம் இவர்களுக்குச் செய்த தாக மட்டுமமையாது, தமிழ்ப் புலமைக்கும் தமிழ் வளர்க்குந் தொண்டினுக்குமே நாம் வைத்திருக்கும் மெய்யன்பை நீட்டி யளப்பதோர் கோலாகும். ஐயரவர்கள் இன்னும் பல்லாண்டு இனிதிருந்து இனிய தமிழ்வளத்தை வளர்த்து உயரும் பெருவாழ்வும் நலம் பலவும் பெறுகவென விரும்புகின்ற

தமிழன்,
சே. சோ. பாரதி.

——::——

ஏட்டுப் பிரதிகளின் அலங்கோலம்

உரையில்லாத மூலங்கள் எழுத்துஞ்சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு வேறுபட்டிருந்ததன்றி இவற்றுள் சிலபாடல்களின்முன் திணையெழுதப்படாமலும், சிலவற்றின்பின் துறையெழுதப்படாமலும், சிலவற்றின்பின் இரண்டுமெழுதப் படாமலும், சிலவற்றின்பின் பாடினோர் பெயர் சிதைந்தும், சிலவற்றின்பின் பாடப்பட்டோர் பெயர்சிதைந்தும், சிலவற்றின்பின் இருவர்பெயருமே சிதைந்தும், சிலபாடல்கள் இரண்டிடத்து எழுதப்பட்டு இரண்டெண்களையேற்றும், வேறுவேறிடத்தில் இருத்தற்குரிய இரண்டுபாடல்கள் ஒருங்கெழுதப்பட்டு ஒரெண்ணையேற்றும், சிலமுதற்பாகங்கள் குறைந்தும்,சில இடைப்பாகங் குறைந்தும், சில கடைப்பாகங் குறைந்தும், சிலமுற்றுமின்றியும், ஒருபாடலின் அடிகளுள் ஒன்றும் சிலவும் வேறுபாடல்களின் அடிகளோடு கலந்தும், ஓரடியே ஒருபாட்டுட் சிலவிடத்து வரப்பெற்றும், பொருளுண்மை காணாதவண்ணம் இன்னும் பலவகைப்பட மாறியும் கையெழுத்துப் பிரதிகளிலிருந்தன. இவற்றைப் பரிசோதித்து வருகையில், இந்நூலிலிருந்து வேறுநூல்களினுடைய பழைய உரைகளின் இடையிடையே உரையாசிரியர்களால் பூர்த்தியாகவும் சிறிது சிறிதாகவும் எடுத்துக்காட்டப்பட்டிருந்த உதாரணங்கள், சிற்சில பாடல்களிலுள்ள வழுக்களை நீக்கிச் செவ்வை செய்துகொண்டு பொருளுண்மை காணுதற்கும், சிற்சிலபாடல்களிற் குறைந்த பாகங்களை நிரப்பிக் கொள்ளுதற்கும், பிறழ்ந்து கிடக்கும் சில பாடல்களை ஒழுங்கு படுத்தி வரையறை செய்துகொள்ளுதற்கும் பெருந்துணையாக இருந்தன.

—புறநானூறு, முதற்பதிப்பின்முகவுரை.

தமிழ்த்தாயின் முதற்புதல்வர் ::

பண்டிதமணி
மு. கதிரேசச் செட்டியார்

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களுக்கு எண்பதாம் ஆண்டு நிறைவுறுதல் குறித்து அந்நன்னாளில் தமிழன்பர்கள் விழாக்கொண்டாட ஏற்பாடு செய்துவருதலை யறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். ஸ்ரீமாந் ஐயரவர்கள் ஆண்டினும் அறிவினும் முதிர்ந்து இக்காலத்துத் தமிழ்ப்புலவருள் தலைமணியாக விளங்குகின்றவர்கள். துறைசையாதீனத்துக் கவிச்சக்கரவர்த்தியாக விளங்கிய மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள்பால் முறையாகத் தமிழ்பயின்று அரசினர் கலாசாலைகளிற் பல்லாண்டுகளாகச் சிறந்த தமிழாசிரியராக வீற்றிருந்து பன்னூறுமாணவர்களுக்குத் தமிழுணவளித்தவர்கள். தமிழ்ப்புலவர்கள் வாழ்ந்த பல ஊர்களுக்குஞ் சென்று பல அரிய தமிழ் நூற்சுவடிகளையெல்லாந் தொகுத்துச் செவ்வியமுறையின் ஆராய்ந்து பலவகைக் குறிப்புக்களுடன் மேலைத்தேசத்து நூல் வெளியீடுகளுக்கு எவ்வகையினுந் தாழாது சிறந்தமுறையில் அந்நூல்களை வெளியிட்டு வருகின்றவர்கள். இத்துறையில் இவர்களையொப்பார் இதுகாறும் யாரும் இல்லையென்பது யாவரும் உணர்வர். இக்காலத்துத் தமிழறிஞர் சங்கநூல் முதலிய பழைய தமிழ் நூல்களை எளிதிற் பெற்று இன்புறுதற்கு இவர்கள் பேருதவியே சிறந்த கருவியாகும். தம் வாழ்நாள் முழுதும் இடைப்பிறவரலின்றித் தமிழ்த் தொண்டொன்றையே மேற்கொண்டு உழைத்த பெருமை ஸ்ரீமாந் ஐயரவர்கள் ஒருவர்க்கே உரியதென்பது மிகையாகாது. இவர்கள் பெருமைக்கு அரசினரும் சர்வகலாசாலையாரும் மடாதிபதிகளும் பிற சங்கங்களும் இவர்களுக்கு அளித்த சிறந்த பட்டங்களே சான்றாகத் திகழ்கின்றன. உலகவாழ்க்கையில் கல்வியறிவினாலுண்டாம் இன்பமே விழுமியதெனக் கொண்டு வாழ்க்கையை நலம்பெற நடத்திவருகின்ற நம் ஐயரவர்களின் வரலாறு பின்வரும் புலவர்சந்ததிகளுக்கு மிகவும் உபகாரமாக விளங்குமென்ப தொருதலை. இவர்களோடு யான் பழகுங்காலமெல்லாம் எனக்குத் தமிழிற் புதிய புதிய ஆர்வமுண்டாதல் இயல்பு. இவர்கள் பக்கலிலிருந்து கழித்தகாலமெல்லாம் பயனுடையனவாகவே சென்றனவென்பது என் அநுபவமாகும். பழைய புலவர்களின்

வரலாற்றுக் குறிப்புக்களும் புலவர்களை ஆதரித்து வந்த செல்வர்களின் செயல்களும் பிறவும் வியக்கத்தக்க முறையில் இவர்கள் எடுத்துக் கூறுவதுண்டு. கல்லூரி முதலிய நிலயங்களில் தமிழாசிரியர்களுக்கு ஒதுக்கிடன் அளித்துப் புறக்கணிக்கப்பட்டுவரும் இக்காலத்தில் இவர்கள் ஆங்கிலப் பேராசியர்களை விடச் சிறந்த வீறு பெற்று விளங்கிவரும் நிலை தமிழுலகுக்கே நன்குமதிப்பைத் தருவதொன்றாகும். இவர்கள் குணங்களுட்சிறந்தது பகைவர் மாட்டும் இனியராக நடந்து கொள்வது. யாதுகாரணத்தாலேனும் தம்மை ஒருவர் வெறுத்துப்பேசினாலும் எழுதினாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் தம் கடமையைத் தளராது செய்துவரும் இயல்பு நம் ஐயரவர்கள்பாலன்றி வேறுயாரிடத்தும் காண்டற்கு இயலாத தொன்று.

ஓர் அவைக்களத்து இவர்கள் தலைவராக இருக்குங்கால், ஒருவர் நெறிபிறழ்ந்து பேசுவாராயின் அப்பிறழ்ச்சியை அறிஞர் உணர்ந்து கொள்ளவும் அவ்வுபந்யாசகர் மனம் வருந்தாமல் தம்மைப் பாராட்டுவதாக நினைக்கும் வண்ணமும் இவர்கள் முடிவுரை கூறுவது வியப்பைத் தருவதாகும். புதுக்கோட்டை ஆட்சியுட்பட்ட மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபையில் மூன்றுமுறை ஸ்ரீமாந் ஐயரவர்கள் தலைவராக வீற்றிருந்து சபையை அலங்கரித்ததுண்டு. அங்ஙனம் மும்முறை இவர்கள் நல்வரவு அச்சபைக்கு நேர்ந்ததற்குக் காரணம் இவர்கள் தமிழ்ப்பணிப் பெருமையும் அச்சபையினிடத்தும் என்பாலும் வைத்த பேரன்புமேயாகும். அந்நாட்களில் எம் நகரத்துத் தனவணிக மக்கள் எய்திய இன்பம் சிறந்ததே; பன்மீன் நடுவட் பான்மதி விளங்கிய விண்ணிடம்போல அச்சபை பல புலவர் புடைசூழ்ந்திருப்ப இவர்களைத் தலைவராகப் பெற்றுத் திகழ்ந்தகாட்சி இன்னும் என் உள்ளத்தை இன்புறுத்துகின்றது. தமிழ்மொழிக்குப் புத்துயிரளித்த புலவர் சிகாமணியாகிய ஸ்ரீமாந் ஐயரவர்களின் பெருமை எத்துணை விரிப்பினும் அடங்குவதன்று; "மண்டேய்த்த புகழினான்" என்பது இவர்களுக்குப் பொருந்துவதாகும். இவர்கள் மாண்பு வளரவளரத் தமிழ்ப்புலவர்களின் பெருமை வளர்வதாயிற்று. வேற்றுமொழிப் பயிற்சி ஒரு சிறிதும் விரவாது தமிழ் ஒன்றே பயின்று, பலமொழிகளிலும் வல்ல நிபுணர்களினுஞ் சிறக்கப் பீடுபெரிதுடையராக இவர்கள் விளங்குதல் தனித்தமிழ்ப் புலவர்களுக்கெல்லாம் பெருமை தருவதொன்றாகும். இத்தகைய பெருமை மிக்க பெரும்போாசிரியராகிய ஸ்ரீமாந் ஐயரவர்களின் சதாபிஷேகவிழாக் கொண்டாடும்படி நேர்ந்தது தமிழ்நிலத்தாரின் பாக்கியமேயாகும்.

தமிழ்த்தாயின் முதற்புதல்வராகிய இவர்கள் இன்னும் பல்லாண்டு நிலவுலகவாழ்க்கை பெற்றுத் தம் அன்னைக்குரிய திருப்பணிகளை மேன்மேலுஞ் சிறக்கப்புரிந்து வாழும் வண்ணம் சொற்பொருள் வடிவினராகிய நம் உமாநாதர் திருவருள்பாலிப்பாராக.

——::——

38-வருஷங்களுக்கு முன்

கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் பிரமஸ்ரீ வே. சாமிநாதையர் அவர்கள் கல்லூரியில் தம் கடமையைக் கழித்த காலம் போக எஞ்சியவற்றில் ஒவ்வொரு நிமிஷத்தையும் பனையோலைச் சுவடிக் குவியலில், முன் இறந்துபோன பழந்தமிழ்நூல்களை ஆராய்ந்து கொண்டிருத்தலிலேயே கழித்து வருகிறார்கள். அத்தகைய பனையோலைப் பழஞ்சுவடிகளிற்றானும் வரிகள் குறைந்தும் வார்த்தைகள் பிறழ்ந்தும் செல்துளைத்த புள்ளியன்றி மெய்ப்புள்ளியில்லாச்சொற்களும், இவைகளினாலும் ஏடெழுதுவோராலும் நிகழ்ந்த சொற்குற்றம் பொருட்குற்றங்களும்தன்னகத்தில்நிறைந்து பாணவாய்ப்பட்ட சுவடிகளைத் திருத்துவதிலும் அவற்றின் குற்றங்களைக் கண்டு பிடித்துச் செம்மை செய்வதிலும் ஐயரவர்கள் படுங் கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல. இத்தகைய அருஞ்செயல்களை முடிப்பதற்குரிய சிறந்த கருவிகளேனும் இருக்கின்றனவா? அந்தோ, அவையும் இல்லை. அவர்கள் காவிரிக்கரையிலுள்ள ஒரு சிறிய வீட்டின் மெத்தைமேல் தரையில் உட்கார்ந்துகொண்டு சுடுகாற்றுத் தம்மேல் எரிந்து வீச் சிறிய மேசை யொன்றின்மேல் கடிதங்களை வைத்துக்கொண் டெழுதுவார்கள். அவர்கள் திவ்ய தேகத்தின் மேல் எரிந்துவந்து வீசும் காற்றின் வன்மையைக் குறைக்கத்தக்க குளிர்ந்த பந்தல் அவர்கள் வீட்டு முகப்பில் இல்லை; க்ரோட்டன்ஸ் இல்லை; வெட்டிவேர்த் தட்டிகளில்லை; குளிர்காற்று வீசும் பங்கா இல்லை. இவ்வாறாகவும் இத்தகைய துன்பங்களின் நடுவிலிருந்து கொண்டே பண்டிதாவர்கள் தமிழ்ச்சுவையறிந்து அச்சுவையை எல்லார்க்கும் நுகரக் கொடுக்கவேண்டுமென்னும் பொதுநன்மையை நாடி அரியபெரிய நூல்களை யாராய்ந்து அச்சிட்டு வெளியிட்டு வருகிறார்கள். இவர்கள் ஐரோப்பியராய் மட்டும் இருந்தால் அந்நாடுகளிலுள்ளோர் இவருக்குச் செய்யும் மரியாதையும், நன்கு மதிப்பும் இவ்வளவென்றெடுத்துரைக்க முடியாது; கவர்ன்மெண்டாரும் எத்தனையோ உயர்ந்த பட்டங்களும் உத்தியோகங்களும் கொடுத்துவிடுவார்கள். நம் காருண்ய கவர்ன்மெண்டார் தமது கல்லூரியில் பண்டிதர் அவர்களது நிலையை உயர்த்தி, இத்தகைய வேலைகளினின்றும் அவர்களைச் சிறிது இளைப்பாறச்செய்து பிரஜைகளுக்கும் மாணவர்களுக்கும் அவர்கள் நீடிய ஆயுள்பெற்றுப் பயன் விளைக்குமாறு உதவிசெய்வார்களென்று நம்புகிறோம்.

—சித்தாந்த தீபிகை (21-6-1897.)



பாலவனத்தம் ஜமீன்தார்

ஸ்ரீ பாண்டித்துரைத் தேவர்.

[ஐயரவர்கள்பாற் பேரன்புடையவர்களில் இவர் ஒருவர். மதுரைத் தமிழ்ச்சங்கத்தை ஸ்தாபித்தவர்.]

ஐயரவர்கள் ஸ்வசரித்திரம் ::

பாஷாபாரத துரந்தர

ம. வீ. இராமாநுஜாசாரியார்

ஸ்ரீமத் ஐயரவர்களுடைய சரித்திரம் ஒன்று விவரமாக வெளிவந்தால், அது, நல்லுழைப்பின் பெருமையையும், இயலாத தென்று பிறரால் கைவிடப்பட்ட அரிய பெரிய காரியத்தையும் எவ்வளவு இடையூறுகள் நேர்ந்தாலும் அவற்றுக்கு அஞ்சி மனம் சோர்ந்து நிறுத்திவிடாமல், கடவுள் அருளை முன்னிட்டு, முயற்சி செய்தால் நிறைவேற்றலாமென்னும் உண்மையையும் நன்கு விளக்கித் தமிழ் மக்களுக்கு ஒரு வழிகாட்டி ஆகும். அப்படிச் செய்ய வேண்டுமென்னும் விருப்பம் எனக்குப் பலநாளாக இருந்தது. அது, இப்பொழுது அடியோடு நின்றுபோயிற்று. அதற்குக் காரணம் பின்வருமாறு:—

நமது தேசத்தில் வித்வான்களுடைய சரித்திரம் உள்ளது உள்ளபடி விவரமாக எழுதப்படவில்லை என்று பொதுவாக ஒரு குறை கூறுவது உண்டு. ஸ்ரீமத் ஐயரவர்கள் பழையநூல்கள் பல இறக்கும் தறுவாயிலிருந்தவைகளைத்தேடி எடுத்து அவற்றுக்குப் புத்துயிர் கொடுத்து அவற்றைக் காத்து உதவியது போலத் தம் ஆசிரியராகிய மஹா வித்வான் கவிச்சக்ரவர்த்தி ஸ்ரீமான் திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களுடைய சரித்திரத்தை வெளியிட்டு வித்வான்களுக்கு உண்மைச் சரித்திரம் இல்லை என்னும் பெருங்குறையை நீக்கிப் பேருதவிசெய்திருக்கிறார்கள். அது வெளிவந்தது முதல் அறிஞர் பலரும் காணாதது கண்டதுபோலப் பேராவலுடன் அதனைப் படித்துப் படித்து இன்புற்றுக் களிக்கின்றனர். ஆங்கிலம் கற்றவர்கள் பாஸ்வெல் என்பவர் எழுதிய டாக்டர் ஜான்ஸனுடைய (*Boswel's Life of Johnson*) சரித்திரத்திற்கும் மார்லி என்பர் எழுதிய க்ளாட்ஸ்டன் (*Morley's Life of Gladston*) சரித்திரத்திற்கும் அதனை ஒப்பிடுவாராயினர். இதுபோலவே தமிழ் மொழியில் ஸ்வசரித்திரம் (*Autobiography*) இல்லாத பெரும் குறையையும் ஸ்ரீமத் ஐயரவர்கள் தமது சரித்திரத்தை எழுதி வெளியிடுவதனால் தீர்க்கவேண்டுமென்று எல்லாரும் ஒரு முகமாகச் சொல்லுகிறார்கள். மேலும்

ஸ்ரீமத் ஐயரவர்களுடைய இளமைக்கால நிகழ்ச்சிகளை நேரில் பார்த்தவர்கள் இப்பொழுது ஒருவரும் இல்லை; பிற்காலத்திலும், ஒவ்வொரு ஸமயத்தில் ஒவ்வொருவர் இருந்திருப்பார்களே அல்லாமல் எல்லா நிகழ்ச்சிகளையும் உடனிருந்து பார்த்து எல்லாவற்றையும் சிறிதும் விடாமல் சொல்லக்கூடியவர்களுமில்லை. ஆதலால், ஐயரவர்களுடைய சரித்திரத்தை அவர்களே எழுதி வெளியிடவேண்டும். ஆனால், அவர்கள், தாம் பல இடங்களுக்கு ஏடு தேடச்சென்று அங்கங்கே அடைந்த பலவகை ஸ்ரமங்களையும் பல சபைகளிலும் மற்றும் பல ஸந்தர்ப்பங்களிலும் அடைந்த சிறப்புக்களையும் உள்ளபடி சொல்லுவார்களோ என்பது ஸந்தேகம்; முன்னுள்ளவற்றைச் சொன்னாலும் பின்னுள்ளவற்றைச் சொல்லார்களென்பதைப் பல வருஷங்களாக நெருங்கிப் பழகியதிலிருந்து நான் நன்கு தெரிந்துகொண்டிருக்கிறேன். பழைய நூல்களைச் சோதிக்கும்போது, சிலர் தங்கள் மனம் போலச் செய்வதுபோலில்லாமல், ஸ்ரீமத் ஐயரவர்கள் எந்த மனச்சாட்சியைக் கொண்டு பாடங்களை நிச்சயிக்கிறார்களோ அந்த மனச்சாட்சியைக்கொண்டே தமது சரித்திரத்தையும் வெளியிட வேண்டுமென்று ப்ரார்த்திப்போமாக.

——:o:——

சர்வ சிலாக்கியமான குணம்

தமிழுக்கும் ஸம்ஸ்கிருதத்துக்கும் இடையே பாஷைப் போட்டி ஏற்படுத்தும் தர்முயற்சிகளுக்கு ஐயரவர்களின் தமிழ்த் தொண்டு என்னும் அறைகூவி நிற்கிறது. தமிழர் இன்று தமிழின் பெருமையை உணர்ந்திருப்பது ஐயரவர்களால்தான். தாய்ப் பாஷையை விரும்புவது நல்லது. அதைப்பொருளறிந்து விரும்புவது மேலும் நல்லது. ஆனால் மற்றபாஷைகளையும் அவமதிக்காது தாய்ப்பாஷைக்குப் பணிவிடைசெய்வது சர்வசிலாக்கியமானது. டாக்டர் சுவாமிநாதையரவர்களிடம் இந்த சர்வ சிலாக்கியமான குணம் காணப்படுகிறது.

—எஸ். சத்தியமூர்த்தி (ஆ. வி.)

ஐயரவர்களும் பதிப்பாசிரியப் பண்பும் : :

மா. இராசமாணிக்கம்

தங்கள் வாழ்நாட்களைத் தமிழ் நூல்களை ஆராய்ந்து வெளிப்படுத்துதலிலேயே கழித்துவரும் மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களது எண்பத்தோராம் பிறப்பு விழாவன்று இக்கட்டுரை எழுதும் பேறு கிடைத்ததைப்பற்றி யான் பெரிதும் மகிழ்கின்றேன். ஐயரவர்கள், பதிப்பாசிரியர் என்ற முறையில் செய்த பெருந் தொண்டினைப் பாராட்டவே இக் கட்டுரை எழுந்ததாகும்.

செவ்வையாகப் பதிப்பித்துள்ள இப்போதைய பேரிலக்கியங்களைப் படிப்பதோ ஆராய்ச்சி செய்வதோ இலேசான காரியமன்று. அவை இரண்டிற்கும் அளவில்லாப் பொறுமையும் நுண்ணிய ஆராய்ச்சியறிவும் வேண்டற்பாலன எனின், ஏடுகளை வைத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து வெளியிடுதல் எத்துணைச் சிரமமான காரியம் என்பதை உள்ளவாறு தமிழுணர்ந்த பேராசிரியரே உணர்வர். மேலும், முதலும் கடையும் இவையெனக் கண்டு பிடித்தற்கு இயலாவகையில் இராமபாணங்களால் துளைக்கப்பட்டு மக்கிக் கிடந்த ஏடுகளை வைத்துக்கொண்டு பொறுமையோடு ஆராய்ந்து பதிப்பிப்பதெனின், அதற்கு எத்துணைப் பேரூக்கமும் பொறுமையும் வேண்டற்பாலன என்பதை யான் உரைக்கவல்லேன் அல்லேன். ஐயரவர்கள் பேரிலக்கியங்களைப் பதிப்பிக்குங்கால் பட்ட இன்னல்களோ அளவிடற் கரிய. அவற்றைப் பற்றி அவர்களே தாங்கள் பதிப்பித்துள்ள பெருங்கதையில் "இப்படியே இன்னும் இந்நூலின் சம்பந்தமாக உண்டான செய்திகளை எடுத்து எழுவதென்றால், அதுவும் ஒரு பெருங்கதையாகும்" என்று எழுதியிருத்தலைக் கவனிக்குமாறு வேண்டுகிறேன்.

ஒரு பெரிய நூலினைப் பதிப்பிக்கும் ஆசிரியர் அந்நூல் எழுதப்பெற்றுள்ள மொழியில் விரிபுலமை சான்றவராகவும் பேரறிஞர் பலராலும் பாராட்டத்தக்க நிலையில் இருப்பவ

ராகவும் இருத்தல் வேண்டும். அவர் தாம் பதிப்பிக்கும் நூலின்கண் வரும் அரிய செய்திகள் பிற நூல்களால் வலியுறு மெனின், அடிக்குறிப்பின்கண் அந்நூற் பகுதியை அப்படியே எடுத்துக் காட்டுதல் வேண்டும்; பல சிறந்த விழுமிய தொடர்களைப் பதிப்பித்தலும் வேண்டும்; நூலிற் காணப்படும் கடின பதங்கட்கு உரையும், சிற்சில இடங்களில் விளக்கவுரையும் காட்டுதல் வேண்டும். அந்நூலால் வெளிப்படும் மக்களின் செயல்கள், நாகரிகநிலை, இன்னபிறவும் கற்போர் எளிதில் உணருமாறு வரைதல் வேண்டும்; தாம் அந்நூலைப் பதிப்பிக்குங்கால் தமக்கு உண்டான இன்ப துன்பங்களையும் முகவுரையில் எழுதுதல் அவசியம்; இஃது எற்றுக்கோ எனின், பின்னுள்ளோர் ஒரு நூலினைப் பதிப்பிக்குங்கால் உண்டாகும் சிரமத்தை உள்ளவாறு உணர்தற்கும், அந்நூலிற் பயிற்சி பெற்றதும் அதனைப் பதிப்பித்த ஆசிரியரின் பேருழைப்பைப் பாராட்டி மகிழவுமே என்க. மேலும் பதிப்பாசிரியர் தமக்கு விளங்காத இடங்களைக் குறிப்பிட்டு முகவுரையில் காட்டுதல் மிகவும் வரவேற்கத் தக்கதும் பாராட்டத் தக்கதும் ஆகும். பதிப்பாசிரியர் தமக்கு விளங்காத இடங்களைக் குறிப்பிடாமல் ஒரு விதமாகப் பொருள் எழுதிப் போதல் அவர்தம் பேருழைப்பிற்கு ஒரு நீங்காக் களங்கமாகும். நூலினைப் பதிப்பிக்குங்கால் அவர் எவரெவர் உதவியினை எவ்வெவ்வாறு பெற்று அனுபவித்தனரோ அதனை உள்ளவாறே முகவுரையில் வரைந்து பாராட்டுதல் பெரிதும் மேற்கொள்ளத் தக்கது. பதிப்பாசிரியர் மனவடக்கம் உடையராயிருத்தலே இவை யனைத்தினும் மேம்பாடுற்றது.

இவ்வுத்தம இலக்கணங்கள் யாவும் ஸ்ரீ ஐயரவர்களிடம் ஒளிர்தலை அவர்கள் பதிப்பித்துள்ள ஒவ்வொரு சங்கநூலிலும் காணலாம். உதாரணமாகப் பேரிலக்கியமாகிய பெருங்கதையை யெடுத்து ஆராய்வோம்: அதன் முகவுரையில் ஐயரவர்கள் பெருங்கதையின் ஏட்டுப் பிரதி மக்கட்குக் கிடைத்த வரலாறும், வேறு பிரதியைத் தாம் தேடிச் சேர்த்த வரலாறும் வெகு விளக்கமாகவும் விரிவாகவும் எழுதி யுள்ளார்கள். முதலும் முடிவும் இல்லாத நூல் பெருங்கதையாகும். அதுவோ வடமொழி நூலின் மொழி பெயர்ப்பு. ஐயரவர்கள் அந்நூலில் உள்ள விஷயத்தை உணர, அது சம்பந்தமான உதிதோதய காவ்யம் என்ற வடநூலை நரசிம்மாசாரியர் என்பவரைத் தமிழில் மொழிபெயர்த்துத் தரச் செய்து அதனை ஆராய்ந்தார்கள்; 'உதயணகுமாரகாவியம்' என்ற தமிழ் நூலையும் ஆராய்ந்தார்கள்; இதன் சார்பாக வேறுபல

அரிய வடமொழி நூல்களில் உள்ள செய்திகளையும் அறிந்து கொண்டு உதயணன் வரலாற்றினை உணர்ந்தார்கள். பின்னர், இருந்த காண்டங்களை அங்ஙனமே பதிப்பித்து, கடின வார்த்தைகட்குப் பொருளும் விசேடக்குறிப்பும் நூலின் இறுதியிற் சேர்த்துள்ளார்கள்; உதயணன் வரலாற்றையும் ஒவ்வொரு காண்டத்தின் பொருள் விசேடத்தையும் முகவுரையில் நன்கு விளக்கியுள்ளார்கள்; நூலிற் காணப்பெறும் இலக்கண விசேடங்களும் மேற்கோள் இடங்களும் நன்குறக் காட்டியுள்ளார்கள்; இவர்களது முகவுரையும் உதயணன் வரலாறும் இன்றேல், பெருங்கதை படிப்பாரற்று, எம்போல்வார் நினைவில் பெயரும் இராதென்பது முற்றிலும் உண்மை.

பெருங்கதையினை முற்றும் வாசிப்போர் அதனை மிகச் சிறந்த பேரிலக்கியமாகவே கருதுவர் என்னுந் துணிபுடையேன். பழைய உரையாசிரியரும் நூலாசிரியரும் அதனைப் பாராட்டியிருத்தலே அதன் உயர்வுக்குச் சான்றாகும். அத்தகைய சிறந்த இலக்கிய அமுதைத் தமிழர் நுகருமாறு தம் பேருழைப்பின் பயனை அளித்துள்ள பதிப்பாசிரியரவர்களை என்போல்வார் பாராட்டுவது வியப்பன்றே? ஐயரவர்கள் பெருங்கதையின் முகவுரை 13-ஆம் பக்கத்தில், "இவற்றால், மயிலைநாதர் முதலியோர்களுடைய காலங்களிற் சிதைவில்லாமல் இந்நூல் முழுவதும் இருந்து வந்ததென்றே தெரிய வருகின்றது. இப்படியே இன்னும் இதன் பகுதிகள் பழைய உரைகளில் வந்திருத்தல் கூடும்; அவற்றைக் காணும்பொழுது இந்நூலும், இதைப் படிக்கும் பொழுது அவைகளும் சில சமயங்களில் ஞாபகத்திற்கு வருவதில்லை; என் செய்ய!" என்று எழுதியிருத்தலை நோக்க, நினைக்க, என் போன்ற தமிழ் மாணவர் உள்ளம் அவர்களது உண்மையுரையால் எத்துணைப்பெருமகிழ்ச்சி எய்துகின்றதென்பதை யான் உரையாற் கூறுதற்கில்லை. இங்ஙனம் கூறலன்றோ ஓர் உண்மைப் பதிப்பாசிரியரது பேரிலக்கணமாகும்!

மேலும் ஐயரவர்கள் அம் முகவுரையிலே 22-ஆம் பக்கத்தில் "குறிப்புரை யென்று ஏதோ ஒன்றை எழுதலானேன். சிலப்பதிகார வுரையில்,

'எழுத்தின் திறனறிந்தோ இன்சொற் பொருளின்
அழுத்தந் தனிலொன் றறிந்தோ—முழுத்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற் குரையின்
றெழுதத் துணிவதே யான்'

என்று நிரம்பிய கல்விமானும் முத்தமிழ்ச் சிங்கமுமாகிய அடியார்க்கு நல்லாரே எழுதுவாராயின், ஒன்றுச்கும் பற்றாத யான் யாது கூறவல்லேன்?" என்று கூறியுள்ளதை எண்ண எண்ண,

"பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு"

என்ற குறளடி நினைவுக்கு வருகின்றது. பதிப்பாசிரியரவர்களின் அடக்கத்தையும் எளிமையையும் உண்மைத் தமிழர் எழுமையும் மறவார் என்பது திண்ணம்.

ஏட்டுப் பிரதிகளை உதவியவர்கள் முதல் தம்முடனிருந்து உதவிசெய்த உத்தமர் ஈறாக யாவர்பெயர்களையும் ஐயரவர்கள் சிறிதும் மறவாமல் நன்றி கூறியிருத்தல் அவர்களது பரந்த மனப்பான்மையை நன்கு விளக்குகின்றது.

எல்லா நூல்களையும் மிக விரிவான முறையில் ஆராய்ச்சி செய்து வெளியிட்டுள்ள ஐயரவர்கள் பதிற்றுப்பத்தினை அங்ஙனம் ஆராயாமல் விட்டதற்குக் காரணம் எனக்குத் தோன்றவில்லை. நான் அதைப்பற்றி ஒருமுறை அவர்களைக் கேட்டேன். அதற்கு அவர்கள், "யான் அநாவசியமாகக் குறிப்புரை முதலியவற்றை வரைந்து புத்தகத்தைப் பெருக்குவதாகச் சில அன்பர் குறை கூறினர். அதனால், இதனை வாளா விட்டேன்" என்று மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்தார்கள். தமிழ் மாணவ உலகில் இரு தாளினையும் உறுதியாக ஊன்றிக் கொண்டுள்ள எனக்கு அச் செய்தி பெரு வருத்தத்தை விளைத்தது. பேரிலக்கியங்களை ஆராய்ந்து அவற்றுள் எளிதில் உணரக் கூடாவகையில் ஆழ்ந்து கிடக்கும் பல அரிய பெரிய விஷயங்களைத் தெளிவாக எடுத்துக் கூறுதலும், கடின வார்த்தைகட்குத் தெளிவான பொருள் கூறுதலும், நூலினைப் பெருக்குவனவாகுமா? ஐயரவர்கள் பதிப்பித்துள்ள நூல்களில் எந்தத்தனிப்பட்ட காகிதத்தையேனும் 'இது பயனற்றது' எனக் கூறற்கியலுமா? யானறிந்தவரை வேறெவரும் இங்ஙனம் கூறக் கேட்டிலேன். ஒருவர் முயன்று நூல் வெளிப்படுத்தியபின் குறை கூற அன்பர் பலர் சேர்கின்றனர்; அவர்தம் பெரு முயற்சியையும்பேருக்கத்தையும் பாராட்டற்குச் சிலர்தாம் முன்வருகின்றனர். இது தமிழ்நாட்டாரிடம் உள்ள பெருங்குறையென்றே கூறுதல்வேண்டும். இங்ஙனம் குறை கூறியவர் ஒரு புறமிருக்க, பதிற்றுப்பத்தின் உண்மைப் பொலிவினை என்போல்வார் உணர வழியின்றித் துன்புற வேண்டுவதாயிருக்கிறது. இத்தகைய குறைபாடுகள் இனியேனும் தமிழரிடந் தலைகாட்டாதிருத்தல் சிறப்புடையது.

ஐயரவர்கள் பதிப்பித்துள்ள புறநானூறு ஒன்றே அவர்களுடைய உத்தம இலக்கணங்களை வெளிப்படுத்துவதற்குப் போதுமானதாகும். ஒவ்வொரு செய்யுளாகப் படித்து விஷயங்களை அறிய வேண்டுமென்னுந் துன்பமின்றி, அவர்கள் தந்துள்ள 'பாடினோர் வரலாறு, பாடப்பட்டோர் வரலாறு' இவற்றிலிருந்தே புறநானூற்றின்பெருமையை உள்ளவாறு உணரலாம். அவர்கள் பதிப்பித்துள்ள நூல்களின் முகவுரைகளைப் படித்தே (மூலத்தைப் படிக்காமல்) ஒருவர் பெரும் பண்டிதராக மாறலாம் என்பது முக்காலும் உண்மையெனக் கூறலாம் அன்றோ?

தமிழ்மொழிக்கும் தமிழ்மக்கட்கும் ஐயரவர்கள் ஆற்றியுள்ள தொண்டுகட்குத் தமிழராய நாம் யாது கைம்மாறாகச் செய்யப் போகின்றேம்? அவர்களது உருவச் சிலை யொன்றைச் சென்னைச் சர்வகலாசாலை மண்டபத்தில் நாட்டுதல் வேண்டும் என்பதே தமிழறிஞர் பெருவிருப்பமாகும். ஐயரவர்கள் வாழ்க! தமிழ்மொழி சிறக்க!!

பதிப்பிக்க இயைந்த புண்ணியம்

(விருத்தம்.)

எண்ணிய பலவு மாணவர்க் கன்பின்
ஈந்திடு நிதிதமிழ் விளங்க
நண்ணிய புகழ்மீ னாட்சிசுந் தரநன்
னாவல னன்கினி தாய்ந்து
பண்ணிய வீதி விடங்கர்த மாடற்
பனுவலைப் பதிப்பிக்க வியைந்த
புண்ணிய மதனை நினைதொறு மெனது
புந்திமிக் கின்புறு மாலோ.

—தியாகராசலீலை முகவுரை.

ஐயரவர்கள் பாடஞ்சொல்லும் முறை ::

வித்துவான், சு. சோதண்டராமையர்

[இந்தக்கட்டுரை எழுதிய ஸ்ரீமான் வித்துவான் சு. கோதண்ட ராமையரவர்கள் ஸ்ரீ ஐயரவர்களிடம் முறையாகத் தமிழ் நூல்களைப் பாடங்கேட்டவர். பதினைந்து வருஷங்களாக அவர்களுடன் இருந்து பழகும் பேறுடையவர். இங்கே உள்ள கட்டுரையில் அவர் ஸ்ரீ ஐயரவர்களுடைய போதகாசிரியத் திறமையைத் தாம் அறிந்து அனுபவித்தவாறு எழுதியிருக்கின்றனர் —ப -ர்.]

தமிழ் நாட்டில் வரன்முறையாகத் தமிழை அறிந்தும் பிறர்க்குப் பாடஞ் சொல்லியும் வரும் முறை சிலவருஷங்களுக்கு முன்வரையில் சிறப்பாக இருந்தது; இப்பொழுது வரவர அருகிக்கொண்டே வருகிறது.

பாடஞ் சொல்லுவதனாலேதான் ஒரு மொழியிலுள்ள பயிற்சி நாட்டில் மிகுமென்பது ஐயரவர்கள் கொண்ட நோக்கங்களுள் தலைமையானது. இது, தம் ஆசிரியராகிய ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களிடம் பாடங்கேட்ட காலத்தில் அவர்கள் பால் தோன்றி மேன்மேலும் வளர்ந்து வருகின்றது. எண்பது ஆண்டு நிறைந்து விளங்கும் இந்த முதிய பருவத்திலும் அவர்கள் தம்முடைய வீட்டில் சிலமாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்லி வருகிறார்கள்.

ஐயரவர்கள் இளமைதொடங்கியே பாடஞ்சொல்வதில் ஈடுபாடுடையவர்கள். ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் காலத்திற்குப்பின் திருவாவடுதுறை மடத்திலும் பிறகு கும்பகோணம் சென்னையாகிய இடங்களிலுள்ள அரசாங்கக் கல்லூரிகளிலும், சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் கல்லூரியிலும் பலவகையான மாணாக்கர்களுக்குப் பாடஞ்சொல்லியிருக்கிறார்கள்.

பாடஞ் சொல்லுவோர்க்குரிய எல்லா இலக்கணங்களும் ஒருங்கே வாய்ந்தவர்கள் ஐயரவர்கள். பல நூலறிவும், நல்லாசிரியர் பழக்கமும், இயல்பாக அவர்களிடம் அமைந்துள்ள ஹாஸ்யச் சுவையும் அவர்களைச் சிறந்த போதகாசிரியராக்கியிருக்கின்

றன. பாடஞ் சொல்லுவதில் அவர்களுக்கே ஒரு தனிச் சுவை யுண்டு.

பாடங் கேட்கும் மாணவனது தகுதியை அறிந்து பாடஞ் சொல்வது அவர்கள் வழக்கம். கம்பராமாயணத்தைப் பாடஞ் சொல்லுகிறார்க ளென்று வைத்துக் கொள்ளுவோம். அவர்கள் பாடஞ் சொல்லும் முறை கேட்போருக்கு ஏற்ப வேறுபடும். சில நூல்களைமட்டும் வாசித்துள்ள ஒருமாணவனுக்கு அதைப் பாடஞ் சொன்னால் அவனுடைய உள்ளம் வேறொன்றிற் செல்லாத வாறு பிணித்து விடுவார்கள். பல நூல்கள் கற்றறிந்த வித்துவான் ஒருவருக்கு அதையே சொன்னால் அவர்கள் அங்கங்கே புலப் படுத்திச் செல்லும் அரிய விஷயங்களில் அவ் வித்துவான் ஈடுபட்டு, "முன்பு இங்ஙனம் கேட்டிலோமே" என்று வியப்பார். ஒரே பாட்டை ஒருமணி நேரம் பாடஞ்சொல்லும் முறையும் அவர்களுக்குத் தெரியும்; அவ்வொருமணி நேரத்திலேயே நூறு பாடல்களைப் பாடஞ் சொல்லும் ஆற்றலும் உண்டு. கேட்பவ ருக்கு இன்ன இடத்தில் இன்னவகைச் சந்தேகம் உண்டாகும் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதனை விளக்கும் போது அவர்கள் பிறர்மனத்திலுள்ளதை அறியும் தன்மையாள ரென்று நாம் வியப்போம். எத்தனை வகையான மாணக்கர்கள் உண்டோ அத்தனை வகையினருடைய தராதரத்தையும் நன்கு அறிந்தவர்களாதலாலும் வாழ்நாள் முழுதும் தமிழ்நூலறிவைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டு ஒவ்வொரு படியாகத் தாண்டியே உச்சநிலையில் நிற்பவர்களாதலாலும் இத்தன்மையுடையரானார்கள்.

பொதுவாகத் தமிழ்மாணக்கர்களுக்கு இலக்கணமென்றால் வேப்பங்காயாக இருக்கும் என்பது யாவரும் அறிந்ததே. சில பண்டிதர்கள் இலக்கணத்தை இலக்கணமாகவே போதிப்பதால் அவர்களுடைய உழைப்பு வீணாகிறது. நம் ஐயரவர்களோ இலக் கணத்தைப் பாடஞ் சொல்லுகையில் அவர்கள் ஏதோ கதை சொல்வது போலவே இருக்கும். இலக்கணங்களின் நுட்பங்களைக் கூறுவதும் அவற்றை இலக்கியத்தில் அமைத்துக் கூறுவதும் கேட்பவர்களுடைய அறிவுக்கு விரிவை உண்டுபண்ணும். இலக்கணங்களை முறைப்படுத்தி அவர்கள் பாடஞ் சொல்லுகை யில் மாணக்கர் நெஞ்சிற் பசுமரத்தாணிபோற் பதியும். பாடஞ் சொல்லும்போது இடையிடையே நகைச்சுவைக்குரிய செய்திகள் விரவிவரும். அந்த 'ஊறுகாய்களால்' மாணக்கர்கள் பொழுது போவதுகூடத் தெரியாமல் மனம் ஒன்றுபட்டுநிற்பார்கள். 'ஊறு காய்க'ளென்பது ஐயரவர்கள் அடிக்கடி குறிப்பிடும் தொடர்.

ஒருநூல் கேட்கும்போது அதன் சம்பந்தமான பலநூற் செய்திகளை மாணுக்கன் அறிந்துகொள்வான். அவ்வளவும் வகைப் படுத்தி அமைத்த செய்திகளாகவே இருக்கும். 'இந்தக்கருத்தை இங்ஙனம் வேறுபடுத்தி இன்னுர் அமைத்திருக்கின்ருர்', 'இந்த விஷயம் இவருடைய புது அமைப்பு', 'இச்சொல் இந்த விதம் மாறிவந்திருக்கிறது' என்று அவர்கள் சொல்லிவரும்பொழுது மாணுக்கனுக்கு ஒரு நூலை ஆராயும் முறை புலனுகும்.

ஆங்கிலக்கல்லூரிகளில் ஐயரவர்கள் ஆசிரியராக இருந்து தமிழைக் கற்பிக்கும் காலத்தில் ஸம்ஸ்கிருதம் முதலிய வேறு பாஷைகளைக்கற்கும் மாணுக்கர்கள் கூட அவர்கள்பால் ஈடுபட்டிருப்பார்களாம். அவர்களுடைய இனிய சாரீரமும் பாடஞ் சொல்லும் தோரணையும் அகஸ்மாத்தாகக் கேட்பவர்களையும் காந்தத்தைப்போல இழுக்கும். துஷ்டக்குழந்தைகளைப் பாட்டுச் சொல்லித் தாலாட்டித் தூங்கவைப்பதை எண்ணிப்பாருங்கள். அந்த மெல்லென்ற அசைவிலும் ஜில்லென்ற பாட்டிலும் குழந்தை துஷ்டத்தனம் அடங்கித் தூங்குகின்றதல்லவா? அதே மாதிரி ஐயரவர்கள் மாணுக்கர்களைப் பாடஞ் சொல்லியே அடக்கிவிடுவார்கள். இங்ஙனம் அவர்களிடத்தில் இயல்பாகவே ஈடுபட்டமையால் தான் அவர்கள்பால் எப்பொழுதேனும் பாடங் கேட்டவர்கள் இக்காலத்தும் அவர்களைக் கண்டால் தெய்வம் போலவே மதித்து உபசரிக்கிருர்கள்.

சிதம்பரம் ஸ்ரீ மீனுட்சி தமிழ்க்காலேஜில் அவர்கள்பாற் பாடங் கேட்டபேறுடையவர்கள் அந்தக்காலத்தைத் தங்கள் வாழ்வில் என்றும் மறத்தற்கரியதென எண்ணி உருகுகின்ருர்கள். அங்கே ஐயரவர்கள் சங்கநூல்களையும் பிறநூல்களையும் பாடஞ் சொல்லிவந்தார்கள். அவற்றைப் பாடஞ் சொல்லுகையில் 'நம் வாழ்வு முழுவதும் நாம் மாணவராகவும் இவர்கள் ஆசிரியராகவும் இருந்து நாடோறும் பாடம் நடைபெற்ருல் அதனினும் வேறு இன்பம் உண்டோ' என்று தோற்றும். 'தமிழ்ச்சுவை, தமிழ்ச் சுவை' என்று வாயினுற் சொல்லிக் காதாற் கேட்டதை அப்பொழுது அநுபவத்தில் அறிந்தோம்.

ஒருநூலில் உள்ள விஷயத்தைப் பகுத்து முதலில் உணர்த்துதல் அவர்கள் வழக்கம். பிறகு தனித்தனியே எடுத்து விரிவாகச் சொல்லி வருவார்கள். அப்பொழுது இடையிடையே அந்த நூலைத் தாம் படித்தகாலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைச் சொல்வார்கள். சில கருத்துக்களைக் கண்டுபிடித்தற்குப் பட்ட கஷ்டங்களைக்

கதைகதையாகச் சொல்வார்கள். ஒரு பாடபேதத்துக்கு ஒரு வரலாறு! ஓர் எழுத்துக்கு ஒருசரித்திரம்!

பாடஞ் சொல்லும்பொழுது அச்சுப் புத்தகங்களிலுள்ள பிழைகளைக் குறிப்பாகத் தெரிவிப்பார்கள். 'இது பிழை' என்று கூறிப் பதிப்பித்தோர்மேற் குறை கூறுதற்குத் துணியமாட்டார்கள்; 'இந்த இடம் ஏட்டுச் சுவடியில் வேறாக இருக்கவேண்டுமென்று தோற்றுகிறது' என்று சொல்லுவார்கள்; ஏட்டுச்சுவடியில் அந்த இடத்தை எடுத்துப் பார்த்தால் அப்படியே வேறாக இருக்கும். தமிழ்நூல்களின் போக்கை அத்தனை நுணுகி ஆராய்ந்து அளவிட்டு வைத்திருக்கிறார்கள். கற்பிக்கும்போது மாணாக்கர்களை வினவி விடைகூறச் செய்து அவர்கள் அறிவை உறுதிப்படுத்துவார்கள். அவர்கள் வினவும் வினாக்களே விடைகளையும் ஆராய்ச்சி முறையையும் மாணாக்கர்களுக்குத் தோற்றச் செய்யும். ஒரே நூலைப் பலமுறை பாடங் கேட்டால் ஒருதடவைக்கு மற்றொரு தடவை புதுப்புது விஷயங்களை அறிந்துகொள்வோம். தமிழ்ப் பெருங்கடலாகிய அவர்களிடத்தில் தமிழறிவுப் பஞ்சமேது?

அவர்களுடைய மாணாக்கர்களுக்குத் தமிழ்ப்பசி அதிகம் இருக்கும்; எந்தக்காலத்தும் அவர்களை மறவாத நிலை உண்டாகும்; ஆராய்ச்சி செய்யும் முறைகள் புலப்படும்; உண்மையான அறிவு எங்கே உண்டென்பதைத் தேர்ந்து கொள்ளும் திறன் அமையும்.

இப்பொழுதும் அவர்களுடைய மனம் பாடஞ் சொல்வதையே நாடிக்கொண்டிருக்கின்றதென்பதை அவர்களோடு பழகியவர்கள் அறிவார்கள். படிக்க வேண்டுமென்று விரும்புபவர்களைக் கண்டால் அவர்களுக்கு உண்டாகும் இன்பத்துக்கு அளவில்லை. "எவ்வளவோ பேர்கள் என்னைவந்து பார்க்கிறார்கள்; பேசுகிறார்கள்; இன்னது படித்தேன்; அதில் இன்னது சந்தேகம்; விளக்க வேண்டுமென்று கேட்பவர்களே அரியராயிருக்கிறார்கள்" என்று அவர்கள் அடிக்கடி கூறுவதுண்டு. "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்." என்ற திருமூலர் வாக்கில் அவர்களுடைய வாழ்வின் இலட்சியம் அமைந்திருக்கின்றது. தாம் பெற்றுள்ள அறிவைப் பரப்புவதில் அவர்களுக்குள்ள ஆசை திருமூலருடைய ஆசைக்குச் சிறிதேனும் குறைந்ததன்று என்பதில் ஐயமே இல்லை.

தமிழ்ப்பருதியின் கதிர் ::

டாக்டர் வி. வி. ரமணசாஸ்திரிகள், எம். ஏ.

தென்மொழிக் கோமான் ஸ்ரீ வே. சுவாமிநாத ஐயரவர்களது 80-ஆம் ஆண்டு, 6-3-1935-இல் நிறைவுறுமென்று "கலைமகள்" பத்திராசிரியர் எனக்குத்தெரிவித்துள்ளார். இவ்வொப்பிலாக் கல்வி மணியை நான் 1887-ஆம் வருடமுதல் அறிவேன். இவரிடத்து நிகழும் தமிழ்ப்பயிற்சியின் ஆழத்தையும் பரப்பையும் மாண்பையும் வகுத்துரைக்க எனக்கு ஆற்றல் சற்றேனும் இல்லை. கோகழியில் விளங்கிய வித்துவப் பெருந்தகையாகும் தமிழ்க்கவிகேசரி ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்களது சீடர், நமது ஐயரவர்களென்பது எல்லோருக்கும் வெளிப்படை. நான் கண்டறிந்தமட்டில், ஐயரவர்களது நூலாராய்ச்சித்தொண்டு, தொன்மைத்தமிழ்விளக்கு என அழைக்கத்தகும் நச்சினார்க்கினியரதைப் பின்பற்றுவதாகும். ஆனால், வீடெய்தும் மெய்யறிவை வளர்க்கும் நூல்கள்மட்டும், மாசற்ற பசுந்தமிழ்விளக்கும் நமது கல்விப் பெருங்கடலது ஆராய்விற்கு இலக்காகாது ஒழிந்தது, நந்தமிழ் நாட்டின் தவக்குறையேயன்றி வேறில்லை. ஈசன் இன்னருளால் ஐயரவர்கள் நீண்டகாலம் நோயின்றி இன்னும் இம்மேதினியில் வதிந்துநின்று, தமிழ் மொழியை வளர்த்துவருவார் என்பது என் மெய்த்துணிபு.

ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கத்தையும் தேம்பாவணியையும் ஆக்கிய வீரமாமுனிவரின் பிறப்புநாடாகிய இத்தாலியிலும், செந்தமிழ் எழுதும் ஆற்றலுள்ள நாநாபாஷைக் களஞ்சியமாகும் ஷூலியாங் வாங்ஸாங் பிறப்புநாடாகியபிராஞ்சிலும், அரிய ஞானத்திரட்டாகும் திருவாசகத்தைக் கூசாது ஆங்கிலத்தில் திருப்பிய போப்பின் பிறப்புநாடாகிய இங்கிலாந்திலும், கைவல்ய நவநீதம் என்னும் பெயர்தாங்கும் தமிழ் அறிவுநூலை ஆங்கிலத்தில் வன்மையுடன் மொழிபெயர்த்து விடுத்த கிரௌல் என்பவர் பிறந்தநாடாகிய ஜர்மனியிலும், மெய்கண்டசாத்திரத்தில் சில பகுதிகளை ஆங்கிலத்தில் முயற்சியுடன் திருப்பிய ஹாய்ஸிங்கடன் பிறப்புநாடாகிய அமெரிக்காவிலும், மற்றுமுள்ள மேற்றிசை நாடுகளிலும், நந் தமிழ்ப்பருதியின் கதிர் வீசுகின்றது. இத்தகைய புகழுடன் இலங்கும் செந்தமிழ்ப்பிழம்பாகும் நம் ஐயரவர்களைக் காக்கும் எம் அண்ணலைப் போற்றுவதுடன், அவ்வண்ணலையே மீண்டும் இறைஞ்சி, ஐயரவர்களுக்கு, எதிர்காலத்தில், நிகழுலகத்தும் எதிருலகத்தும் குறையில் வளப்பத்தை அருளும்படி அனைவரும் வேண்டற்பாலர்.

நாண்மங்கல வாழ்த்து* ::

க. சு. நவநீத கிருஷ்ணபாரதி

பூவிரி சோலைக் காவிரிப் புனலுள்
தோய்ந்துளங் குளிர்ந்து தோன்று குடமுனி
பொதியச் செந்தமிழ் மதியச் சந்தனம்
பூசிப் புனைந்து வீசிப் பரந்த
கலைதரு சீர்த்தி கவினை வுடுத்து
மதியணி வேணி மாபெரு மியவுள்
துதியமு துண்டுவருந் தோலா நாவினை;
தமிழ்ப்பா லுண்ணலின் தமிழ்மக வாயினை;
தமிழ்நல னுகர்தலின் தலைவனு மாயினை;
தமிழ்தரு நலத்தால் தாயும் ஆயினை;
தமிழுட லாகின் நீயுயி ராகுவை;
தமிழுயி ராகி னீயுட லாகுவை;
தமிழையா ழாக்கித் தமிழ்ப்பா விசைக் குவை;
நினையா ழாக்கித் தமிழுமிசை யெழுப்பும்;
என்புநெக் குருக்குந் [1]தென்கலைத் திருவினை;
சீரா னுயர் [2]பெரும் பேரா சிரியனை;
[3]பெரும்புகழ் படைத்து வரும்பே ரறிஞனை;
ஆனைப் புலமை மீனாட்சி சுந்தரப்
பாற்கட லிருந்து மேற்கலை முகந்து
சொல்லே ருழவ ரெல்லாரு மேத்தித்
தத்தம் புலங்களுண் முத்தமிழ்ப் போகமும்
வருந்திமுயல் கிலரா யிருந்துவிளை வெய்த
மடியாக் குணமலை முடிமீ திருந்தே
ஆய்ந்தகரு முதலா வேய்ந்தவை முற்றி
முன்னு மின்னலான் மன்னு மிடியான்
துன்பிலா துலக மின்புற வொளிர்செய்(து)
இன்னுரை யியம்பி மன்பதை மகிழ்கொள
நான்மறை பொழியுந் தேன்மழை முகிலினை
பொருந்துநின் குருவின் திருந்துவர லாறெனும்
விருந்தமு தாட்டிய பெருந்தமிழ் வள்ளலை;
கடல்புக் கொளித்த புடவிதரு மால்போல்
சிலந்தி வலைக்குட் சிதலுணக் கிடந்து
நலிந்தழிந் தொழிந்த புலந்திகழ் சங்கப்
பனுவற்(கு) அச் சிந்து பவனிவரச் செய்தனை;
புறமெலாம் புதுக்கித் திறமெலாங் காட்டிப்
பதிற்றுப் பத்தெனு மன்னரும் பரவ
ஐங்குறு நூறும் அகங்குழை யன்பரும்
மங்கலப் பாட்டு மனம்பரி பாட

---

* தாக்ஷிணாத்யகலாநிதி மஹாமஹோபாத்தியாய டாக்டர், உ. வே. சாமிநாதையர் அவர்கள்மீது யாழ்ப்பாணத்து ஆரிய திராவிடபாஷாபிவிருத்தி சங்கத்தாரும் கலாநிலயத்தாரும் இட்ட கட்டளைப்படி பாடியது.

1 தாக்ஷிணாத்ய கலாநிதி. 2 மஹாமஹோபாத்யாயர். 3 டாக்டர்.

அந்தா திகள்முத லாகிய சுற்றம்
வந்தடி போற்ற வயங்கு நன்னால்
மங்கலம் புனைந்து மயின்மே லிருத்திப்
புத்தமு தொத்த முத்தமி ழாசிக்குச்
செய்யாச் சிறப்பெலாஞ் செய்துகண் டுவக்குனை;
நான்மறை ஞானத் தேன்மழைத் தாமரைத்
தாரினை; காரினை யெள்ளுந் தமிழ்க்கலைக்
கொடையினை; ஒள்ளிய நடையினை; வைதிகச்
சைவம் பழுக்குந் தெய்வத் தருவினை;
ஏமஞ் சான்ற இளந்தமிழ் புரந்துவரு
சேமஞ் சான்ற சாமி நாதனும்
ஒருபெயர் பூண்டமைக் கொப்பத்தமிழ் புரக்குனை;
நன்றுதரு மியற்றமிழ் நவின்றவ ரெல்லாம்
அன்றுதொல் காப்பிய னாணைவழி நின்றதின்
இன்றுநின் னாணைவழி யியங்குமா றியக்குனை;
ஓங்குது மெனத்தமி ழொருவின ராகி
ஆங்கிலம் பயின்ற வறிஞரு நின்னருட்
பாங்கடைந் துய்வான் பணிந்துவரு சிறப்பினை;
காதுள் வெதுப்பினும் தீதுநீ கொளா(து)
ஓதி யின்னுரை உவக்குனை; இன்றுநீ
ஈண்டெண்ப தாவ தாண்டுநிறைந் தனையெனத்
தாண்டுமலை யுடுத்த தமிழக மெல்லாம்
பெருநா ளாகப் பேணுபு புரியுநின்
திருநாண் மங்கலத் தொருமாண் சிறப்பும்
பூண்டு வேண்டிய வேண்டியாங் கெய்தினை;
ஐய,
நின்னுறு பிறப்பே நிறைதமிழ்ப் பிறப்பே
நின்னுறு வளர்வே நிகர்தமிழ் வளர்வே
நின்னுறு பேறே நிலவுதமிழ்ப் பேறே
நின்னுறு வாழ்வே நெடுந்தமிழ் வாழ்வே
நினக்குச்செய் தொண்டே நிலைதமிழ்த் தொண்டே
நீபுரி யருளே நிரைதமி ழருளே
இருசுட ருலகுக் கொருநீ யாகி
ஒருபே ராற்றலும் போற்றி வருநூ(று)
ஆயுளும் வேத வாசியு மடைந்து
நாவா லரனெழுத் தைந்தையும் நவின்று
பூவா லவனடிப் போதினை புனைந்து
செந்தமிழ் வண்மையும் வந்தமை கண்மையும்
மறாது வழங்கி யறாது போற்றி
நின்நல் ஆவிநின் மெய்யொடு நிலைஇ
இன்ன லின்றி யின்பெலா மெய்தி
மன்னுக பெரும வழிவழி
ஒன்றுங் கன்னித் தமிழுட னுவந்தே!

என் நண்பர் ::

ஜே. எம். ஹென்ஸ்மன்

[ஸ்ரீமான் ஜே. எம். ஹென்ஸ்மன் அவர்கள் கும்பகோணம் துரைத்தனக் கல்லூரியில் பிரின்ஸிபாலாக இருந்தவர்கள். அவர்கள் பிரின்ஸிபாலாக இருந்த காலத்திலும் ஸ்ரீ ஐயரவர்கள் தமிழாசிரிய ராக அங்கே இருந்தார்கள். அவர்களுடைய ஸௌலப்ய குணத்தை யும் ஒழுங்கையும் பற்றி அடிக்கடி ஐயரவர்கள் சொல்வதுண்டு.

ஸ்ரீமான் ஹென்ஸ்மன் அவர்களை இம் மலருக்கு ஒரு கட்டுரை எழுதும்படி வேண்டியிருந்தோம். அதற்கு விடையாக ஒரு கடிதம் ஆங்கிலத்தில் எழுதி விடுத்தார்கள். அதன் மொழிபெயர்ப்பு, கீழே வெளியிடப்படுகிறது.—ப - ர்.]

சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்,
15-2-1935.

அன்பார்ந்த ஐயா,

என்னுடைய நண்பராகிய டாக்டர் சாமிநாத ஐயரவர்களுடைய எண்பதாம் ஆண்டு நிறைவுக்கொண்டாட்டம் அவர்களுடைய நண்பர்களாலும் அபிமானிகளாலும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுமென்று அறிந்து மிகமகிழ்கிறேன். தமிழில் நான் ஒருகட்டுரை எழுதமுடியுமென்று எண்ணவில்லை. மேலும், அவர்களைப்பற்றிய நிகழ்ச்சிகள் எவையேனும் இருப்பினும், இப்பொழுது முப்பதுவருஷங்களுக்குமேல் ஆனமையால் என் ஞாபகத்தில், தெளிவில்லாத விஷயங்களையன்றி வேறொன்றுமில்லை. எனினும், ஆச்சரியப்படத்தக்க அவருடைய ஆராய்ச்சியையும் பழந்தமிழிலக்கிய சம்பந்தமான விஷயங்களைத் தீர்மானிப்பதில் அவருக்குள்ள இணையற்ற ஆற்றலையும் பற்றிய ஞாபகம் மட்டும் எப்பொழுதும் திடமாக இருக்கிறது. கதைகளை நுனித்து ஆராயாமல் அவர் எப்பொழுதும் ஒப்பியதில்லை. தமிழ் இலக்கியங்களில் வரும் பெயர்களைப் பற்றிய அக்கதைகள் இன்னவென்பது இப்பொழுது என் ஞாபகத்திலிருந்து மறைந்தன. அவர் அக்கதைகளை ஆராய்ந்து செப்பஞ் செய்தார். அவற்றிற் சிலகதைகளேனும்—ஒன்றேனும்—எனக்கு நினைவுக்கு வந்திருக்கக்கூடாதா!

ஒன்றைமட்டும் நீங்கள் உறுதியாக நம்பலாம்: தமிழ் இலக்கிய ஆராய்ச்சியை மேலும் செய்துகொண்டு உடல் நலமும் இன்பமும் பொருந்தி அவர்கள் பல ஆண்டுகள் வாழவேண்டுமென்று வாழ்த்துவதில் அவர்கள் நண்பர்களும் அபிமானிகளுமாகியவர்கள் யாருக்கும் பின்னுகேன். அவருடைய இளம்பருவத்திலிருந்தது போலவே இப்பொழுதும் அவருடைய ஞாபக சக்தியும் திட்பமும் தூய்மையாக இருக்கின்றன; இனியும் அப்படியே இருக்குமாக!

'கால்மணி நேரம் தமிழுக்கு' ::

டி. கே. சிதம்பரநாத முதலியார், பி.ஏ., பி.எல்.

மூன்று மாசத்துக்கு முன்தான் ரவீந்த்ரநாத டாகூர் நம்முடைய சென்னைக்கு வந்து சில உண்மைகளை நமக்குத் தெரிவித்தார். அவைகளில் ஒன்று: "கவியை அனுபவித்து விடுவதற்காக எத்தனையோ பாஷைகளைக் கற்றேன். இங்கிலீஷ் மாத்திரமல்ல; பிரஞ்சு பாஷை, ஜெர்மன் பாஷை, லத்தீன், கிரீக்கு ஆகிய புராதன பாஷைகள் எல்லாம் கஷ்டப்பட்டுக் கற்றேன். என்ன பலன்? கவியின் இதயம் தெரிந்ததா? இல்லவே இல்லை. என் தாய் மொழி ஒன்றின் மூலமாகத்தான் எனக்கு அது தெரிய வந்தது.' இது நமக்கு லகுவில் விளங்கிவிடாது என்று எண்ணி, தாம் சொன்ன வார்த்தைக்கு ஒரு தீர்மானமும் கொடுத்தார். அதாவது: "பிற பாஷைகளின் மூலமாகக் கவியின் உயிர் நிலையை அறியப் புகுவது காதலியின் அருள் முறுவலைப் பெறுவதற்காக வக்கீலுக்கு வக்காலத்துக் கொடுக்கிற அழகுதான்."

இதெல்லாம் வங்காளிகளைப் பார்த்துச் சொன்னதாகத்தான் வைத்துக்கொள்ள வேண்டும். தமிழரைப்பற்றிய உண்மை - அதாவது தமிழைப் புறக்கணிப்பதையும், தமிழ்ப் பாட்டில் ஒன்றும் இல்லை, தமிழுக்கென்று தனிநயம் (தமிழ் ஜீனியஸ்) கிடையாது என்றெல்லாம் சாதாரணமாகச் சொல்லிக்கொண்டும் அதைவிட நம்பிக்கொண்டும் இருக்கிறதையும் டாகூர் தெரிந்திருந்தால் எப்பேர்ப்பட்ட ஆவேசமும் ஆங்காரமும் வந்திருக்குமோ சொல்லமுடியாது.

ஒரு தேசத்தாருடைய நாகரிகத்துக்கும் பாஷைக்கும் விரோதிகளாய் இருப்பவர் பொதுவாக அந்தத் தேசத்தை அடியோடு அழிக்கப் பார்க்கும் அக்கம் பக்கத்திலுள்ள தேசத்தார்தான். கொரியா தேசத்தாருக்குச் சொந்தமான நாகரிகமும் அதற்கேற்ற பாஷையும் உயர்தர நிலையிலேயே இருந்தன. ஜப்பான் கொரியாவைக் கைப்பற்றின· உடன் கொரியர்கள் தங்களுக்கு உரிய நடை உடை பாவனையை விட்டுவிட வேண்டும், கொரிய பாஷையை ஒழித்துவிட வேண்டும், ஜப்பானியர்களைப் போலவே எல்லா விதத்திலும் இருக்கவேண்டும், முக்கியமாக ஜப்பான் பாஷையைத் தான் கற்கவேண்டும், என்றெல்லாம் கொடுங்கோன்மை நடத்தி

ஞர்களாம். இது போலவே ஐரோப்பா கண்டத்திலும் ஒரு தேசத்தார் தங்களுக்கு உட்பட்ட பிறதேசத்தாருடைய நாகரிகத்தையும் பாஷையையும் வேரோடு களைந்தெறியப் பார்த்தார்கள், இன்றைக்குமே பார்க்கிறார்கள், என்பது தெரியவருகிறது.

ஆனால் தமிழ்ப் பாஷைக்கும் தமிழ் நாகரிகத்துக்கும் உலை வைக்க அயல் தேசத்தார் படை எடுத்து வரவேண்டிய அவசியம் எல்லாம் இல்லை. தமிழ் மக்களே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள் என்றால் பொருந்தும். ஜப்பான் மாதிரி சட்ட திட்டங்கள் ஏற்படுத்தவில்லைதான். அந்தச் சட்டதிட்டங்கள் கொரியர்களுக்குத் தங்கள் பாஷையில் முன்னிருந்ததை விட அதிகமாக ஆர்வங்கொள்ளக் காரணமாக இருந்தன; பாஷைமேல் ஏதோ மிதந்தாற் போலிருந்த ஆசையை இதயத்துக்குள் செலுத்தி ஒரேபடியாய்ப் பதிந்து நிற்கும்படி செய்து விட்டன. நம்மவர்கள் செய்கையோ கொடுமையிலும் கொடுமை. ஆபத்தில் இருக்கிறோம் என்ற உணர்ச்சியே இல்லை. 'தமிழ் எதற்கு? தமிழில் என்ன இருக்கிறது? தமிழைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிறதும் பாராட்டிப் பேசுகிறதும் வெறும் படாடோபம்; தேசபக்தி என்று சொல்லுவதில் உளுத்துப் போன பொக்கான பாகம் அது; அக்கம் பக்கத்தில் உள்ளவர்களையும் அவர்கள் பாஷைகளையும் குறித்து வந்த விரோதம்.' இப்படியெல்லாம் சொல்லுகிறவர்கள் யார்? அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் அல்ல; தமிழ் நாட்டிலேயே இருந்து கொண்டு, வீட்டில் பெண்டு பிள்ளைகளோடு தமிழிலேயே பேசிக்கொண்டிருக்கிற தமிழ் மக்களே. இவ்வளவுக்கும் காரணம் ஏதோ உலகத்தில் இல்லாத, தமிழ் மக்களிடத்தில் மாத்திரம் அமைந்துள்ள, சீர்கேடல்ல. நம்மவரும் மற்ற உலகத்தாரைப் போல ஒரேவிதமான சீலம் படைத்தவர்கள் தான். வங்காளிகளை மட்டும், இல்லாத ஒரு பக்குவத்தில் படைத்து விட்டானா பிரமன்? இல்லை. என்றாலும், வங்காளிகள் ஒவ்வொருவரும், ரவீந்த்ரநாத டாகூரிலிருந்து ரயில்வே போர்ட்டர் வரையும் ஏகோபித்து, தங்கள் தாய்ப்பாஷையினிடத்தில் அபார ஆர்வமும் அக்கரையும் கொண்டிருக்கிறார்கள். இதற்காக மேல் நாட்டார்கள் அவர்களை மதிக்கிறார்கள்.

தமிழர்களைப்பற்றி இப்படிச்சொல்ல முடியுமா? யூனிவெர்ஸிட்டி பட்டம் ஒன்று இரண்டு கிடைக்கவேண்டியது; பதவியும் ஏதாவது கிடைத்து விடவேண்டியது; உடனே, 'தமிழ்படிக்கிறவன், தமிழ்தெரிந்தவன்' என்று தம்மை எண்ணி விடுவார்களோ என்றபயம் ஏற்பட்டுவிடுகிறது. இதற்கெல்லாம் பள்ளிக்

கூடங்களும் கற்பிக்கிறமுறையும் காரணந்தான்; ஆனாலும், முக்கிய காரணம், நம்முடைய மூதாதைகளின் பூர்வவினையே.

அவர்கள் எவ்வளவோ அரிய நூல்களை எழுதிவைத்து விட்டுத்தான் போனார்கள். திருக்குறள் என்ன, கம்பராமாயணம் என்ன, கலிங்கத்துப் பரணி என்ன, சிலப்பதிகாரத்தில் பதித்து வைத்திருக்கிற வைரமணிகள் போன்ற வரிப்பாடல் என்ன: இவை களின் வாடாத பெருமையையும் அழகையும் நம்மவர் அனுபவிக் கிறார்களா? ஒப்புக்கொள்ளுவதுதான் உண்டா? தமிழர் இவை களை அனுபவியாமல் வேறு யார் அனுபவிக்க? செவ்வாய் கிரகத்தில் யாரோ மக்கள் இருக்கிறார்களாம்; அவர்களா வரப்போகிறார்கள் அனுபவிக்க? தமிழுக்குத் தமிழர்தான் கதி; தமிழர்க்கும் தமிழே கதி.

இந்த உண்மை மகாமகோபாத்யாய சாமிநாத ஐயர் அவர் களுடைய மனசில் ஐம்பது வருஷத்துக்கு முன்னமே பட்டு விட்டது. அன்று முதல் இன்றுவரையும் அவர்கள் தமிழ் மக்களைத் தமிழ்படிக்கும்படி சதா தூண்டிக்கொண்டிருக்கிறார்கள். படிக்கிற வர்களைக் கண்டுவிட்டால் கூத்தாடுவார்கள்.

சுமார் நாற்பது வருஷத்துக்கு முன், திருச்சிராப்பள்ளிக்கு வந்து, எஸ். பி. ஜி. காலேஜில் தமிழின் அருமையைப்பற்றியும் வளத்தைப்பற்றியும் பிரசங்கம் செய்தார்கள். நானும் பிரசங்கத் தைக் கேட்கப் போயிருந்தேன். அப்போது நாலாவது பாரத்தில் வாசித்துக் கொண்டிருந்த சிறுபையனாக இருந்ததால், "கும்ப கோணம் சாமிநாத ஐயரைப் பார்க்கப்போயிருந்தேன்" என்று சொல்லுவதுதான் பொருந்தும். இருந்தாலும் ஐயரவர்கள், தமிழ் மகளின் நகை ஜாபிதாவை எடுத்துக் காட்டியபோது, அதாவது தலைக்குச் சூளாமணி, மார்புக்குச் சிந்தாமணி, காதுக்குக் குண்டல கேசி, கைக்கு வளையாபதி, இடைக்கு மணிமேகலை, கடைசியாகக் காலுக்குச் சிலப்பதிகாரம் என்று முடித்தார்களோ இல்லையோ, அப்படியே மயங்கிப்போய்விட்டேன். அன்று இரவெல்லாம் ஒரே சொப்பனம்—தமிழ் அணங்கு வருகிறதும், தன் அபூர்வ அணி கலங்களை இப்படியும் அப்படியுமாகத் திருப்பித் திருப்பிக் காட்டுகிறதுமாய் இருந்தது. பிரசங்கத்தின் இறுதியில் ரொம்ப ஆற்றுமையோடு ஒரு விஷயத்தை வலியுறுத்தினார்கள். "மாண வர்களுக்கும், கனவான்களுக்கும் ஒருவார்த்தை: இங்கிலீஷைப் படிக்க வேண்டாமென்று நான்சொல்லவில்லை. எவ்வளவு வேண்டு மானாலும் படியுங்கள். ஆனால், தமிழுக்குத் தினம் அரைமணிநேரம் ஒதுக்கிவையுங்கள்; கால் மணி நேரம் படித்தாலும் போதும்;

பெரிய காரியம்'' என்று, தம் ஆர்வத்தை எல்லாம் சேர்த்து ஒரு முனைப்படுத்திச் சொன்னார்கள். இன்றைக்கும் என்னால் அந்த ஆர்வத்தை மறக்க முடியவில்லை. இந்த ஆற்றாமை நாற்பது வருஷத்துக்கு முன். இடையில் தமிழ்ப்பயிற்சி சிறிது விருத்தி அடைந்திருக்கிறது என்றாலும், மூன்று கோடி ஜனங்கள் தமிழர் என்று எண்ணும்போதும், வங்காளிகளுக்குத் தாய்மொழியி லுள்ள உணர்ச்சியும் உறுதியும் நம்மவருக்குத் தமிழ் சம்பந்தமாக இல்லையே என்று எண்ணும்போதும் நாமும் ஐயரவர்களோடு சேர்ந்து ஆற்றாமைப் படவேண்டியதாய்த்தான் இருக்கிறது.

பண்டைக்காலத்து உயர்தர இலக்கியங்கள் சம்பந்தமாக நம்மவருக்கு அவ்வளவாக அக்கரை ஏற்படாவிட்டாலும், ஒரு விதத்தில் தற்போது நாம் எல்லோரும் சந்தோஷம் கொண்டாட வேண்டியிருக்கிறது. நாற்பதினாயிரம், ஐம்பதினாயிரம் என்று சொல்லும்படியாகத் தமிழ் மக்களுக்கு—ஆடவர் பெண்டிர் பிள்ளை கள் எல்லாருக்கும், இங்கிலீஷ் படித்தவர்களுக்குங்கூட—தமிழ் வசனம் வாசிக்கிற பழக்கம் ஏற்பட்டு, தமிழணங்கின் சௌலப் பியம், விசித்ரமான நடனகதிகள், உல்லாசப்போக்குகள், நம் நெஞ் சோடு நெஞ்சுவைத்து இதயத்துக்கு இதயம் பேசும் தனித்த அருமைப்பாடுகள் எல்லாம் தெரியவும் அனுபவிக்கவும் நேர்ந்திருக் கிறது. சமீபத்தில், 'ஆனந்தவிகடன்' புகுந்து விளையாடாத வீடில்லை, ரயிலில்லை, ஊரில்லை, தோட்டமில்லை, அடுக்களை இல்லை, பெட்ரூம் இல்லை, தோட்டியில்லை, தொண்டமான் இல்லை என்று சொல்லத் தோன்றுகிறது. ஒரேபடியாய் பேஸ்துவைத்த மாதிரி இருந்த தமிழகம் திடீரென்று குலுங்கக் குலுங்கச் சிரிக்கிறதைக் காண்பதில், ஐயர் அவர்களுக்கு நம்மைப்போலவே சந்தோஷம்.

வசனத்தின் ருசியைக் கண்டுவருகிற தமிழ்மக்கள் நாளடைவில் பண்டைய இலக்கியங்களின் அருமையையும் உணர்ந்து பாராட்டக் கூடும். ரவீந்த்ரநாத டாகூர் சொன்ன சொல்லின் உண்மை இன்னதென்று அவர்களுக்கு நன்றாய்ப் பட்டுவிடும். ஐயரவர்கள் நமக்குச் செய்துள்ள உதவியும், அது எவ்வளவாக நம்முடைய நன்றிக்கு விஷயமாய் இருக்கிறது என்ற உண்மையும் அப்போது தான் தென்படும்.

——:o:——

செயற்கரிய செய்த பெரியார் ::

எஸ். வையாபுரிப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.

தமிழன்னையின் இளமைப்பருவத்தே அவள் புனைந்தருளிய சிறந்த பொற்பணிகள் பலவற்றைத் துருவித் தேடிக் கண்டு அவற்றை மாசு நீக்கி மீண்டும் அழகுறுத்தி அவள் தெய்வத்திரு மேனியில் அணிவித்து மகிழ்ந்த தமிழ்ச்செல்வர் யாவர்? தமிழ்ப் புலமைக்கு உரையாணியாக விளங்கும் தமிழ்ப்பெருந்தகையார் யாவர்? தமிழ்க்கல்வி புதியதோர் மேம்பாடுற்று எவரும் போற்றத் தக்க நிலையிலே இக் காலத்து நிலவுதற்குக் காரணமாயுள்ள அருந்தமிழ்ப் பேராசிரியர் யாவர்? தமிழ்மக்கள் தங்கள் புராதன நாகரிகத்தையும் தொன்மை, பெருமை முதலியவற்றையும் நன்கு உணர்ந்து களிப்புறும்வண்ணம் செய்வித்த தமிழ்மகனுர் யாவர்?

இச்செயற்கரிய செயல்களையெல்லாஞ் செய்த பெரியார், மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களே ஆவார்.

அவர்களது 80-வது ஆண்டு நிறைவுவிழாவைத் தமிழ்மக்களாகிய நாமனைவரும் மிக்க சிறப்புடனும் பெருமகிழ்ச்சியுடனும் கொண்டாடுவோமாக! அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் பெரும் பயனளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பணிந்து பிரார்த்திப்போமாக!

இணையற்றவர்

சென்ற ஐம்பது வருஷங்களில் இம் மாகாணத்தில் விளங்கிய பெரியார்கள் ஒவ்வொருவரையும் அநேகமாக எனக்குத் தெரியும். ஆனல் அறிவாற்றலில் சிறந்து கல்விக்காக முழுமனதுடன் பாடு பட்டதில் மகாமகோபாத்தியாயருக்கு ஈடாக வேறுயாரையும் நான் அறியேன். "அதிவேகமாய்ச் சென்று கொண்டிருக்கும் காலம் ஒரு நாளும் திரும்பிவராது" என்னும் உண்மையை அவரைப் போல் நன்குணர்ந்து ஒவ்வொரு நிமிஷத்தையும் நற்பயன்படுத்தி வருபவர்களையும் நான் பார்த்ததில்லை. கலைஞர்களாகக் கருதப்படுவோர் தங்கள் தங்கள் கலைகளிடத்தில் கொள்ளக்கூடிய சிரத்தாபக்தியில் இப்பெரியாரைப் போல் சிறந்தவர் தென்னிந்தியாவில்—ஏன், இந்தியாவில்கூட—இல்லையென்றே அச்சமின்றிச் சொல்லுவேன்.

—வி. வி. ஸ்ரீநிவாச ஐயங்கார் (ஆ. வி.)

தமிழின் புதுயுகம் ::

மு. இராகவையங்கார்

செந்தமிழ்ப் பேராசிரியராகிய மஹாமஹோபாத்யாய ஐயரவர்களது எண்பதாம் ஆண்டு நாண்மங்கலத்தைக் கொண்டாடும்படி தமிழ்நாட்டுக்கு வாய்த்த பேறு பெரும்பேறே ஆகும். அரசர் முதலிய செல்வர் பிறந்த தினத்தை "வெள்ளணிநாள்' என்பது பழைய தமிழ்வழக்கு. அத்தினத்தில் அவர்கள் மங்கலவண்ணமாக வெள்ளணிகளையே அணிந்துகொள்வதுபற்றி அப்பெயர் பெற்றதென்பர். இதன்பொருத்தம் எவ்வாறாயினும், நம் தமிழ்ப் பெருஞ்செல்வர்க்கு நடத்தும் இவ்விழாவை நாம் வெள்ளணித் திருநாள் எனல் மிகவும் ஏற்புடையதாம். தமிழ்க்கல்விக்கு நிலைக்களமாகிய நம்பெரியார் "வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிரு"க்கும் தமிழ்க் கலைமகளின் பிரதிநிதியாகத் திகழ்தலால், அத்தெய்வத்தின் பிரசன்னம் மிகுந்து விளங்கும் மங்கலதினத்தை நாம் வெள்ளணிநாள் எனல் பெரிதும் பொருந்துவதன்றோ?

மறைந்துகிடந்த தமிழ்நூற் செல்வங்களைக் கண்டெடுத்து மாசறக்கழுவிச் சுத்தஞ்செய்து உதவிய நம்பெரியாரது செயற்கருஞ் செயலை உலகமுழுதுமே கொண்டாடா நின்றது. அந்நிலையில் அவர்கள் முயற்சியின் பயனை முற்றவும் அனுபவிக்குந் தமிழ்நாடு அந்நன்றி பாராட்டுவதில் வியப்பொன்றுமில்லை. ஆயினும், அப் பாராட்டுக்கு ஓர் அழகிய சந்தர்ப்பத்தைத் தேடிக்கொண்ட செயல் புகழ்ச்சிக்குரியதாகும். என்னெனில், நம் ஐயரவர்களின் இவ் வெண்பதாம் ஆண்டுவிழாவைத் தமிழணங்கின் புதுயுகத் திருநாளாகவே கொண்டு போற்றத்தகும். அவர்கள் பதிப்பாசிரியராக முன்வந்த காலம் சற்றேறக்குறைய அவர்களது முப்பத்திரண்டாம் ஆண்டாகின்றது. அதுமுதல் இதுவரை அவர்களது இடையறாத பெருமுயற்சியால் தமிழ்க் கல்வித்துறையில் உண்டாகிய மாறுபாடு அதிசயம் விளைப்பதொன்றாகும். பிற்காலத்து இலக்கியங்களையும் சில்லறைப் பிரபந்தங்களையும் கற்பதோடும் சொல்லணி பெருகக் கவிபாடுவதோடும் நிரம்பியதாகக் கருதப்பட்டு வந்த தமிழ்ப்புலமையின் நிலைமை, ஐயரவர்கள் பதிப்புக்கள் வெளியேறிய இவ் வரைநூற்றாண்டுக்குள் சங்கச் செய்யுட்களின்

சொற்பொருள் நயங்களில் ஈடுபட்டுவப்பதும் சங்ககாலத்துச் சரித்திர வளங்களைக்கண்டு வியப்பதுமாக மாறிவிட்டது. புதுக்கவிகளிற் கவிந்துநின்ற உள்ளங்களை யெல்லாம் பழங்கவிநயங்கள் கொள்ளைகொள்ளலாயின. 40-வருஷங்கட்குமுன் பத்துப்பாட்டு புறநானூறு முதலிய சங்கநூல்கள் வெளியேறியபோது, அவற்றைத் 'தொட்டுப் பார்க்கப் பயப்பட்டுத் தூரவைத்துத் தொழுத' புலவர்களும் உண்டு. இக்காலத்தோ, தமிழ்ப் புலவரின் பயிற்சியிலும், பேச்சிலும் எழுத்திலும் பண்டை நூல்மணங்களே பெரிதும் கமழ்கின்றன. இத்தகைய மாற்றம் யாவும் எம்மனோர் கண்கூடாகக் கண்டறிந்தவை.

இவ்வளவேயோ! நம்மவர் தமிழ்க்கடலில் இறங்கித் திளைத்தாடுதற்கு ஆராய்ச்சித் துறைகளை அமைத்து உதவியவர்களும் நம் பெரியாரேயாவார். பன்னெடுங்காலமாக அவர்கள் தேடிக் கண்டு வெளியிட்ட பொருட்குவியல்களால் சொற்பொருளறிவும் ஆராய்ச்சியும் நாட்டில் விரிந்து பெருகலாயின. தமிழாராய்ச்சிக்கு மூலமான விதைகள் பலவும், சொல்லேருழவரான அவர்கள் தொகுத்துள்ள பொருட்குறிப்புக் களஞ்சியங்களினின்றே எடுக்கப்படுவனவாகும். ஐயரவர்களது நீண்ட பொறுமையும் சலியாத முயற்சியும் இல்லையேல், தமிழின் பழஞ்செல்வங்களைக் கண்டு மகிழவும், தம் பண்டைப்பெருமைகளை உணர்ந்து கொண்டாடவும் தமிழ்மக்கட்கு இயலுமோ? இம்முதிர் பருவத்தும் தமிழாராய்ச்சியிலுள்ள ஆர்வமிகுதியால் புதியபுதிய நூல்களை வெளியிட்டு வரும் அவர்களது நிரதிசயமான தமிழ்த்தொண்டினை நோக்குங்கள்.

"இனிநினைந் திரக்க மாகின்று...
* * *
குளித்துமணற் கொண்ட கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்று
இருமிடை மிசைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே"

என்று, தம்முதுமைக்கு வருந்திப்பாடிய தமிழ்ப்பெருமக்களும் நம் முன்னோரில் உண்டு. அன்னோரையெல்லாம் பின்னோராக்கித் தாமின்புறுவது உலகின்புறக் கண்டு உள்ளம் பூரித்து தம் முதுமையை மகிழ்ச்சிக்குரிய தாக்கியவர்கள் நம் ஐயரவர்களே யன்றோ?

இன்னும், பதிப்பாசிரியத் தலைமையும் நம் பெரியார்க்கே உரிமையுடையதாகும். பாடசுத்தங்களாலும் பலவகைக் குறிப்புக்

களாலும் ஆராய்ச்சியுரைகளாலும் நிரம்பியவை அவர்கள் பதிப்புக்களே. ஐயந்தெளிந்து பாடசுத்தம் பெறுமளவும் ஆராய்ச்சி செய்தும் நூற்பதிப்புக்கு அங்கமான பொருட் குறிப்பெல்லாம் முற்றமுடித்தும் விலைப்பொருளீட்டத்தில் மயங்கி விரையாது கலைப்பொருளீட்டத்தையே கருதி ஆண்டுபலவாகப் பொறுமை காட்டி உழைத்து வெளியிடப்பெற்ற அப்பதிப்புக்கள் யாவும் தமிழ்மகளின் சீரிய அணிகளாகத் திகழ்கின்றன. இவ்வாறு நூற்பதிப்பு முறையாலும் தமிழ்மொழிக்குப் புதிய பொலிவை உண்டாக்கி வருபவர்கள் ஐயரவர்களே யாவர்.

இங்ஙனம், கல்வி ஆராய்ச்சி பதிப்பு ஆதிய துறைகளை நன்கமைத்து அரை நூற்றுண்டுக்குள் தமிழ்மக்கட்கு ஒரு புதுயுகத்தைப் படைத்துதவிய நம் தமிழ்ச்செல்வரது நன்றி மண்ணிற் கடலின் மலையிற் பெரியனவாகும். அந்நன்றியைப் பாராட்டியே, அரசர் குரு அறிஞர் என்ற மூவகை உயர்ந்தோர்களும் அவர்களைச் சிறப்பிக்கலாயினர். மஹாமஹோபாத்யாயர் என்ற மாராய நெடுமொழியை மன்னராலும், தாக்ஷிணாத்ய கலாநிதி என்ற பேற்றினை ஜகத்குருவாலும், டாக்டர் என்ற சிறப்புப் பெயரைச் சருவகலா சங்கத்து அறிஞர்குழுவாலும் பெற்று விளங்கும் நம் பெரியாரது பேறனைத்தும் தமிழகத்தின் பெருமையேயாம். அஃதுணர்ந்து, தமிழ்ப்பொதுமக்களும் தம் நன்றிபாராட்ட நடத்தும் இவ்வெண்பதாம் ஆட்டைக்கொண்டாட்டத்தைத் தமிழ்ப்புதுயுகத்தின் திருநாளாகவே கருதி, பெரியோர்களான பரமாசாரியர்களை எம்மவர் நித்தமும் வாழ்த்து முறையே "இன்னுமொரு நூற்றுண் டிரும்" என்று நாளும் வாழ்த்துவோமாக.


—:o:—

அடக்க குணம்

ஸ்ரீ சாமிநாதையரின் கல்வி கடலைப் போன்றது. மெய் வருத்தம் பாரா அவருடைய முயற்சியுடன் எறும்பும் தேனீயுமே போட்டி போடலாம். கல்விமுயற்சியிலும் அவருடன் நாம் போட்டி போடமுடியாதாயினும் அவருடைய அடக்க குணத்தையாவது நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

—சக்கரவர்த்தி இராஜகோபாலாச் சாரியார்

(ஆ. வி.)



Courtesy: Ananda Vigadan.

மகாமகோபாத்தியாய ஐயரவர்கள்

(சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் காலேஜ் பிரின்ஸிபால்—1924)

கடிதங்கள்

——:o:——

ஸ்ரீ ஐயரவர்கள்பால் அன்புடையார் பலர். அவர்களுடைய இளமைமுதல் பலவகையிலும் சிறந்த நிலையிலுள்ளவர்கள் பலர் அவர்களுடைய உழைப்பினல் தமிழ்நாடு அடையும் நற்பயனை அறிந்து போற்றிவந்திருக்கின்றனர். மடாதிபதிகளும், அரசர்களும், ஸம்ஸ்தானாதிபதிகளும், பிரபுக்களும், புலவர்களும் ஐயரவர்கள்பால் காட்டிவரும் அபிமானம் பல செயல்களால் வெளியாகும். அவ்வப்போது அத்தகையவர்கள் அவர்களைப் பாராட்டி எழுதிய கடிதங்கள் நூற்றுக் கணக்கானவை. அவற்றிற் சிலவற்றைக் கலைமகளில் வெளியிட எண்ணி எம் விருப்பத்தை அவர்களிடம் தெரிவித்தோம். அவர்கள் அருள் கூர்ந்து அவசரத்தில் அகப்பட்ட சில கடிதங்களை வழங்கினார்கள். அவை பின்னே வெளியிடப்படுகின்றன. இறைவன் நல்லருளால் ஐயரவர்கள் தாமே எழுத இருக்கும் வரலாறு வெளிவருமாயின் இவற்றைவிடப் பன்மடங்கு சிறப்புடைய கடிதங்களையும் தமிழ் நூற்செல்வம் உலகுக்குப் பயன்பட்ட சரிதையையும் நாம் அறிந்து மகிழலாம்.

ப—ர்.

சேலம் இராமசாமி முதலியார் ::



சேலம் இராமசாமி முதலியாரைப் பற்றி நாம் அதிகம் கூற வேண்டுவதில்லை. அவர்தாம் முதல் முதலில் ஐயாவர்கள் சிந்தாமணியைப் பதிப்பிக்கத் தூண்டியவர். 'இச் சீவகசிந்தாமணியை உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரையுடன் பலபிரதிருபங்களை நன்முகப் பரிசோதித்து, எழுதுவோரால் நேர்ந்த வழுக்களை மாற்றிப் பலர்க்கும் பயன்படும் வண்ணம் அச்சிடுவிக்க முயலும்படி சில வருஷத்திற்கு முன் சேலம் ம. ா. ா. ஸ்ரீ இராமசுவாமி முதலியாரவர்கள் பல முறை வற்புறுத்திக் கூறி, எனக்குத் தம்பால் இருந்த கையெழுத்துப் பிரதியையும் கொடுத்தார்கள்' என்று ஐயரவர்கள் சிந்தாமணி முகவுரையில் எழுதியது காண்க. 'ஊர்க் குழைப்பான்', 'தமிழென்னு முந்நீர்க் குழைப்பான்' என அவரைப் பற்றி ஐயாவர்கள் பாடியுள்ளார்கள்.

எழும்பூர் 26-8-'89

அன்புள்ள அய்யா,

இவ்விடத்திலனைவரும் க்ஷேமம். அவ்விடத்திய க்ஷேமங்களுக் கெழுதி யனுப்பக் கோருகிறேன். தாங்களன்புடனெழுதிய கடிதங் கிடைத்துச் சகலமும் தெரியலானேன். பத்துப்பாட்டுப் பிரதிகள் என்னிடம் கொண்டுவந்து சேர்க்கப் பட்டன. அவைகளில் என்னுடைய புத்தகங்களை வைத்துக் கொண்டு மற்றவைகளைச் சேர வேண்டியவர்களுக்குச் சேர்ப்பிக்கும்படி ஏற்பாடு செய்து விட்டேன். இப்புத்தகத்தைப் படிப்போர்கள் தாங்கள் அது விஷயமா யெடுத்துக்கொண்ட சிரமத்தின் மிகுதியை அறிவார்களென்று நம்புகிறேன். சிலப்பதிகாரத்தைத் திருத்திவரத் தொடங்கினதாகத் தங்கள் கடிதத்தினுல் தெரியவர அதிக சந்தோஷ மடையலானேன். அவ்வரும் புத்தகமும் விரைவில் வெளிப்படுமென்று பூரணமாக நம்பி யிருக்கிறேன். மற்றப்படிக்கு நூதனமொன்றுமில்லை. இவ்விடத்தில் எல்லோரும் க்ஷேமமாக இருக்கிறார்கள். தங்கள் தேக விஷயத்தில் கவனிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு
இஷ்டன்
சே. இராமசுவாமி

பூண்டி ரங்கநாத முதலியார் ::



ஐயரவர்கள் சிந்தாமணியைப் பதிப்பித்தவுடன் அதன் பிரதிகளை முதன் முதலில் ஸ்ரீ இராமசாமி முதலியாரவர்களிடமும் பூண்டி ரங்கநாத முதலியாரவர்களிடமும் அளிக்க எண்ணினார்கள். ஆயினும் ரங்கநாத முதலியாரவர்களைக் காணப் போனபோது அவர் அயலிடத்துக்குச் சென்றிருந்தார்; ஆதலின் பார்க்க முடியவில்லை. ஐயரவர்கள் கும்பகோணம் சென்றவுடன் தாம் வந்ததும் பிறவுமாகிய செய்திகளைச் செய்யுட்களாகவே எழுதிவிடுத்தார்கள். அதற்கு விடையாக ரங்கநாத முதலியாரவர்கள் செய்யுள் ரூபத்தில் ஒரு கடிதம் எழுதி விடுத்தார்கள். அதிலுள்ள செய்யுளொன்று வருமாறு:

அன்றெனைக் காண நயந்தனை நீயே;
  அமையமோவ் வாமையால் அமைவாய்ச்
சென்றனை; நின்னைக் கண்டிலாக் குறையும்
  என்னதே; சிற்றறி வுடையேன்
ஒன்றல பலவாம் பிழைசெயத் தகுமே!
  உத்தம குணமோருங் குடையாய்!
கன்றினைக் காரா அன்புடன் புரக்கும்
  கமைமிகுத் தளித்தல்நின் கடனே.

ராவ் பஹதூர், பூண்டி ரங்கநாத முதலியார், M. A. அவர்களை அறியாதாரில்லை. அவர்கள், கும்பகோணம் காலேஜிற்குச் செட்டியாரவர்களுக்குப் பிறகு ஐயரவர்கள் வந்திருக்கிறார்கள் என்று கேட்டபொழுது, ஐயரவர்களுடைய பழக்கமில்லாமையினாலோ அல்லது பிராயத்தை உத்தேசித்தோ, 'செட்டியாரவர்களுடைய ஸ்தானத்திற்கு இவர்கள் தகுதியுடையவர்களோ' என்று ஸாது சேஷையாவர்களைக் கேட்டார்களாம். பிறகு ஐயரவர்களுடைய பழக்கமுண்டான பின், ஐயரவர்களுடைய கல்விப்பெருக்கையும் குணாதிசயங்களையுங் கண்டு மிக்க நண்பர்களாயினர். இரண்டு பேருக்கும் செய்யுள் வடிவமாகவே சடிதப் போக்கு வரவுகள் நடப்பதுண்டு. முதலியாரவர்கள் ஐயரவர்களை ஸமீபத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பி, பிரஸிடென்ஸி காலேஜில் ஒரு சமயம் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்தானம் காலியானபொழுது ஐயரவர்களை அங்கே வருவித்துக் கொள்ள மிக முயன்றார்கள்.

—பாஷாபாரத துரந்தர ம. வீ. இராமாநுஜாசாரியார்.

ஜூலியன் வின்சன் ::

ஐயரவர்களுடைய அயல் நாட்டு நண்பர்களுள் இவர் ஒருவர். இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் அவர்களுக்குப் பல கடிதங்கள் எழுதியிருக்கிறார். பாரிஸ் நகரத்திலுள்ள பெரிய புஸ்தகசாலையிலுள்ள தமிழ்ச் சுவடிகளை ஆராய்ந்து சிலப்பதிகாரம், மணிமேகலையென்னும் இரண்டும் இருப்பதாக அறிவித்தார். இச்செய்தி அந்நூற்பதிப்புக்களின் முகவுரைகளில் ஐயரவர்களாற் குறிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

பாரிஸ், 17-4-'95.

எனதன்பிற்குரிய ஐயாவே, நீரனுப்பின 2-புத்தகங்களும் எழுதின கார்டும் என்கிட்ட சேர்ந்தன. ஆதலால் மிகவுஞ் சந்தோஷம் பெற்றிருக்கிறேன். நீர்பெரிய வேலைக்காரனென்றும் மகாகனம் பொருந்திய வித்துவானுயிருக்க வேணுமென்றும் நினைத்து வருகிறேன். பணமோவென்றால் இன்னுமெப்படியதையனுப்பலாமென்றெனக்குத் தெரியாது. ஆனால் சிலநாள்களில் எப்படியாகிலும் புதுச்சேரி வழியாய் சென்னப்பட்டணம் வழியால் அனுப்புவேன். மணிமேகலை அச்சிட முடிக்கும்போது 2 பிரதிகளை அனுப்புக. அது உரையின்றி இருக்குமோ? உரையை யெழுதினீரோ?

இங்ஙனம்
தங்கள் அன்பன்,
J. VINSON,
(ஜே. வின்சன்)

ஒரு பிரஞ்சுதேச நண்பர் ::

[ஜூலியன் வின்சனுடைய மாணாக்கர்களுள் ஒருவர் இவர். இவர் ஸ்ரீமத் ஐயரவர்களை நேரே கண்டு ஸல்லாபம் செய்திருக்கின்றார். இக்கடிதத்திற் குறிப்பிக்கப்படும் பழைய காஞ்சிப் புராணத்தை இவர் ஆராய்ந்து வேண்டியவற்றைக் குறித்துக்கொண்டு ஐயரவர்களிடம் திருப்பி அனுப்பிவிட்டார்.]

தஞ்சாவூர்,
6, அக்டோபர், '02.

ம-ள-ள-ஸ்ரீ சாமிநாதய்யரவர்களுக்கு அனேக வந்தனம்.

நான் கும்பகோணத்தை விட்டுப் புறப்படும்போது உங்களுக்கு விடுமுறைநாள் என்று கேள்விப்பட்டேன். ஆகையால் தங்களைச் சிரமப்படுத்த எனக்கு மனதில்லை.

ம-ள-ள-ஸ்ரீ கலெக்டர் வீட்டில் நான் விருந்துண்ணும்போது உங்களைக் கீர்த்தியால் அறிந்து அதிக மதிப்புவைத்திருக்கும் கலெக்டர் துரையவர்களைத் தாங்கள் எனக்குக் காட்டிய பழைய காஞ்சிப்புராணத்தை என்னுடைய செலவில் காபியெடுக்கத் தங்களைக் கேட்கும்படி பிரார்த்தித்துக் கொண்டேன். நான் அந்தப் புராணத்தை அச்சிட்டு வெளிப்படுத்த மாட்டேனென்கிற நம்பிக்கை தங்களுக்கு இருக்கலாம்.

அதின் சாராம்சத்தை அறிந்து கீழ்நாட்டு பாஷைகளை ஆதரிக்கும் சங்கத்துக்கு (*Orientalist's Congress*) எழுத எண்ணமே தவிர வேறு எண்ணங் கிடையாது. இந்த அருமையான அச்சிடாத புஸ்தகத்தைத் தாங்கள் கஷ்டப்பட்டுக் கண்டு பிடித்தீர்களென்றும் அதின் அசல் தங்களிடத்தில் இருக்கிறதாகவும் வெளிப்படுத்துவேன்.

நான் தங்கள் சினேகிதரும் என் உபாத்தியாயருமாகிய ம-ள-ள-ஸ்ரீ வின்சோன்துரை (*M. Vinson*) பேரைச் சொல்லித் தங்களைப் பார்க்க வந்தபோது என்னை எவ்வளவு அன்பாய் அங்கிகரித்தீர்கள்; என்றால் தங்களை யான் கேட்கும் புராணத்தின் காப்பியைத் தருவீர்களென்று நம்புகிறேன்.

சாஸ்திரங்களை ஓங்கச் செய்யவும் அழகிய தமிழ்ப் பாஷையின் பெருமையை வெளிப்படுத்தவுமே இந்த உபகாரத்தைத் தங்களிடம் கேட்கிறேன்.

தங்களுடைய அபிமானத்தை எதிர்பார்க்கும்,
Marquis De Barrique, De Fontainieu.
(மார்க்குவிஸ் டி. பாரிக் டி. போண்டேனியோ)

நான் மதுரை இராமேசுவரம் போய்த் திரும்புகையில் கும்பகோணம் வருகிறேன். தாங்கள் எனக்கு எழுதவேண்டுமானால் புதுச்சேரிக்குக் கடிதம் எழுதவும். அங்கிருந்து எனக்கு வந்து சேரும்.

ஜி. யு. போப் ::

['போப்பையர் இலக்கணம்' தமிழ் நாட்டுக்குப் புதிதல்ல. திருவாசகத்தையும் குறளையும் நாலடியார்முதலியவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தமிழ் நூல்களை உலகுக்குத் திறந்து காட்டியவர் போப். இவருக்கு ஐயரவர்கள்பாலிருந்த விசுவாசம் இணையற்றது. இவர் எழுதிய கடிதங்களுள் ஒன்றன் மொழிபெயர்ப்பு இது.]

அன்புள்ள ஐயா,

உயர்ந்த பதிப்பாகிய உங்கள் புறநானூற்றை எனக்குக் கொடுத்ததற்கு உங்களுக்கு வந்தனமளித்து முன்னமே எழுதியிருக்கவேண்டியது.

உங்கள் உயர்ந்த பதிப்பாகிய சிந்தாமணி என்னிடம் இருக்கிறது. அதை நான் அடிக்கடி பார்ப்பதன்றி அதை என் நாலடியார்ப் பதிப்பின் முகவுரையிற் கண்டிருக்கிறேன்.

இன்னும் வேறு ஏதாவது பதிப்பித்திருக்கிறீர்களா? ஸொஸைடிக்காக ஒரு பத்திரிகை எழுத உத்தேசித்திருக்கிறேன்; இது நிற்க.

புறநானூற்றை இன்னும் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் படிக்குச் செய்ய முடியாதா? எனக்குத் தமிழ் தெரியுமென்று நான் எண்ணிக்கொண்டிருந்தாலும் அதிலுள்ள அநேகம் பாடல்களைத் தெரிந்துகொள்ளமுடியவில்லை என்று வெளிப்படையாக ஒப்புக்கொள்ளுகிறேன். அப்படியானால் சுருக்கமாயும் சுலபமாயும் வெளிப்படையாயும் இருக்கிற குறிப்புக்கள், விருத்தியுரை ஆகிய இவைகளை நாங்களடையும்படி செய்யவேண்டும். பண்டிதர்களாக இல்லாத எங்களிடத்தில் இரக்கம் வைக்கவேண்டும்.

சரித்திர சம்பந்தமில்லாத கதைகளைத் தள்ளிவிட்டு முச்சங்கத்தின் விருத்தாந்தத்தைப் பற்றி ஏதாவது சரித்திரம் எழுதமுடியுமா? கலித்தொகையின் பெரும்பாகமும் சிலப்பதிகாரத்தின் சிலபாகமும் நன்றாயிருக்கின்றன. இன்னும் அநேக கவிகளிலிருந்து நல்ல பாடல்களைத் தெரிந்து கொள்ள ஆசையுண்டு.

நான் புஸ்தக விவரணத்தைப் பற்றி எழுதும் புஸ்தகத்தில் நிஜமாயுள்ள பழைய தமிழ்ப் புஸ்தகங்களை எல்லாம் சேர்க்க எண்ணமுண்டு. கூடுமானால் உதவிசெய்ய வேண்டும்.

புறநாட்டினனாகிய எனது மடமையைப் பார்த்து ஒருகால் நகைக்கலாம். தமிழை உலகத்திலுள்ள தாய்ப்பாஷைகளிலொன்றாக உயர்த்துவதனிமித்தம் ஏதாவது கொஞ்சம் தொண்டு செய்யவேண்டுமென்றெண்ணுகிறேன். எனக்குத் தாங்களனுப்பும் எதுவும் உபயோகப் படுத்தப்படும்.

புறநானூற்றை எவ்விதமாக உபயோகப்படுத்தலா மென்பதைச் சொல்லவேண்டும்.

பெருந்தேவனாராற் செய்யப்பட்ட முதற் பாட்டு நன்றாயிருக்கிறது; ஆனால் மாணிக்கவாசகர் பாட்டைப்போலிருக்கிறது. அது சரியா?

உண்மையுள்ள,
ஜி. யு. போப்.

பொ. குமாரசாமி ::

[ஸ்ரீமான் பொ. குமாரசாமி முதலியாரவர்கள் ஐயரவர்களை நெடுங்காலமாக ஆதரித்து வந்தவர்; ஸர். பொன்னம்பல ராமநாதனவர் களுடைய தமையனர். 'பழைய செந்தமிழ்நூற் பரிபாலகரும் இவ் வாராய்ச்சியால் எனக்கு மனச்சோர்வு உண்டாகாத வண்ணம் அடிக்கடி ஊக்கமளித்து வந்தவரும் கொழும்பு நகரத்துப் பிரபு சிகாமணியுமாகிய கௌரவம் பொருந்திய ஸ்ரீ. பொ. குமாரசாமி முதலியாரவர்கள், இந்நூலிற் சிற்சில இடங்களில் முன்னம் நிகழ்ந்த ஐயங்களை நீக்கிக் கொள்ளுதற்பொருட்டு யான்கேட்ட வினக்களுக்கு இலங்கையிலுள்ள பௌத்த வித்தியோதய பாடசாலைத் தலைவராகிய ஸ்ரீஸுமங்களரவர் களைக் கொண்டு விடைகளெழுதுவித்து அனுப்பிப் பேருதவி செய்து வந்தார்கள்' என ஐயரவர்கள் மணிமேகலைப் புத்தகத்தின் முகவுரை யில் இவரைப்பற்றி எழுதியிருக்கிறார்கள்.]

கொழும்பு, 10 செப். '89

ஸ்ரீ. ஸ்ரீ. வே. சாமிநாத ஐய ரவர்களுக்கு,

ஐயா,

நீங்கள் அனுப்பிய கடிதமும் பத்துப்பாடல் மூன்றும் வந்து சேர்ந்து மிக மகிழ்ச்சியடைந் தேன். தமிழுக்கு நீங்கள் செய் யும் பேருதவிக்குத் தமிழரால் என்ன கைம்மாறு செய்யத் தக் கது? தங்களைப்போல் இன்னுஞ் சிலர் சிதைந்து போகின்ற நூல் களை யச்சிடுவர்களாகில், தமி ழுக்குக்குறைச்சல் வேறென்ன?

சிலப்பதிகாரம் அச்சிடுவதில் இனி முயலவேண்டியது. சீக்கி ரத்தில் முடிவுசெய்யும்படி கேட் கின்றேன். பின் வேறு நூல்களை யச்சிட இவ்வூர்ப் பிரபுக்களைக் கொண்டு உங்களுக்குப் பொரு ளுதவி செய்யும்படி முயற்சி செய்வேன்.

ம-ா-ா-ஸ்ரீ தாமோதரம் பிள்ளை அவர்கள் மூலமாய் ஆறு முக நாவலர் மருகர் பொன் னையா என்பவரிட மிருக்கும் சிலப்பதிகாரப்பிரதியைஅழைப் பித்தால் ஒருவேளை மூன்று காண்டங்களும் அப்பிரதியில் இருக்கும்.

பத்துப்பாடலில், எனக்குப் பத்துப் பிரதி யனுப்பினால் இங்கே செலவுசெய்து பண மனுப்புவேன். விலையின்ன தென்று எழுதுக. செலவான தன் பின் இன்னும் வேண்டுமா கில் எழுதுவேன்.

இங்ஙனம் தங்கள் அன்பன்,

பொ. குமாரசாமி.

இராஜராஜேச்வர ஸேதுபதி ::

[ஐயரவர்களுடைய பெருமையை நன்கறிந்து உபசரித்தவர்களுள் இச்சேதுபதி மன்னரும் ஒருவர். இவர் தமிழ்ப்பயிற்சி மிக்கவர். இவரது செய்யுளியற்றும் ஆற்றலும் புலவர்களது வரிசையறியும் திறனும் ஐயரவர்களால் அடிக்கடி பாராட்டப்படும். இவர்,

"பால்வேண்டும் பழம்வேண்டும் பணம்வேண்டும் பலஉடுப்பு
மேல்வேண்டும் கோல்வேண்டும் விரைசகடம் மிகவேண்டும்
ஞால்வேண்டும் எனலன்றி அரசேநின் போல்தமிழ்த்தோன்
ஞால்வேண்டும், எனஅன்பின் நுவல்பவரைக் கண்டிலமால்"

என ஐயரவர்களாற் பாடப்பெற்ற பெருமை வாய்ந்தவர்.]

Palace, Ramnad, 17-8-'21

மஹாமஹோபாத்தியாய அய்யரவர்கள் சமுகத்துக்கு நமஸ்காரம்.

அன்புடனனுப்பிய கடிதமும், கல்யாண சுந்தரமய்யரவர்கள் மூலமனுப்பிய மணிமேகலைப் புத்தகங்களும் கிடைத்தன. என்னை இப்புத்தகங்கள் மூலமாயும் கௌரவித்ததற்கு என்றும் நன்றி பாராட்டும் கடமையுடையேன். தாங்கள் இத்தமிழகத்திற்குச் செய்யும் மஹோபகாரத்திற்கு என்னால் அடையும் சொற்ப உதவி ஒருபொருட்டாமோ? நிற்க. ஆவுடையார் கோவில் தம்பிரானவர்களின் வியோகம், நியூஸ் பேப்பர் வாயிலாய்த் தெரிய மிக்க விசனமடைந்தேன். மிகவும் சமர்த்தர். லௌகீகம் நன்கறிந்தவர். மிக்க அனுபவமும் மடத்தின் சம்பிரதாயமும் அறிந்தார் அவர்கள்போல் பின்னொருவர் இக்காலத்தில் இல்லையென்றே சொல்லலாம். அவர்களை இழந்தது ஆதீனத்திற்கு ஒரு குறைவே. இவ்வருஷம் சங்கத்தின் விழா செப்டம்பர்மாதம் 17உ மதுரையில் நடைபெறும். கனம் K. ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள் அக்கிராசனம் வகிக்க ஒப்புக்கொண்டுள்ளார்கள். தாங்களில்லாது எப்படி அச்சபை நடக்கமுடியும்? நான் அந்தக் கொண்டாட்டத்தில் அன்வயிப்பது எப்படி? ஆகவே தாங்கள் அவசியம் வந்து என்னையும் சபையையும் கௌரவிக்க வேண்டுகிறேன். ஆதீன விஷயங்கள் கடவுள் கிருபையால் சீக்கிரம் ஓர் அனுகூலமான முற்றுதலடையும். தாங்கள் அங்கிருந்து வருவது எல்லோருக்கும் பெருத்த ஆறுதலாயிருக்கிறது. தாங்கள் அது சம்பந்தமான விஷயாதிகளோடு தமிழ்ப்பாஷைக்கும் உழைக்கும் விரதம் விட்டுவிடாதது உலகோர் செய்த பெரும் பாக்கியம். என்ன கைம்மாறு செய்யப்போகிறார்கள் உலகோர்? நன்றிமறவாது இருப்பார்களேயாயின் அதுவே சிறந்ததாகும்.

தங்கள் அன்புள்ள,

B. இராஜராஜேசுவர ஸேதுபதி.

தாமதத்திற்கு மன்னிக்க.

சுந்தரம் பிள்ளை ::

[மனோன்மணீயம் எழுதிய புரொபஸர் சுந்தரம்பிள்ளை ஐயரவர்களுடைய நண்பர்களில் ஒருவர்; மனோன்மணீய நாடகத்தின் பகுதிகள் பாடமாக வைக்கப்பட்ட காலங்களில் ஐயரவர்களை வேண்டி அவர்கள் செய்த திருத்தங்களை விருப்பத்தோடு ஏற்று மகிழ்ந்தவர்.]

சிவமயம்.

தயவுசெய்து அனுப்பித்த எழுத்தும் திருத்தங்களும் கைசேர்ந்தன. நேற்று சாயரக்ஷை வரையும் இரண்டு பிரசங்கங்கள் எழுதி வாசிக்கவேண்டிய அவசர அலுவல் வழக்கமானவற்றோடு தொடர்ந்து கொண்டமையால் சற்றும் சாவகாசமில்லாமல் மறுபடிக்கும் வந்தனத்திற்கும் காலம் தாழ்த்தமை மன்னிக்க வேண்டுகிறேன். திருத்தங்களைக் கவனித்து மேலும் யாதேனும் சந்தேகம் தோற்றுகிறவைகளைத் தெரிவித்துக் கொள்வேன். கண் வியாதியோடு இவ்வளவு எனக்காகச் சிரமம் எடுத்துக் கொண்டதற்காக மனப்பூர்வமாக நன்றிபாராட்டுதலன்றி மற்றென்ன உபசாரம் யான் சொல்லத்தக்கது? கண்வியாதிகள் அறிந்த நல்ல வைத்தியரிடம் அன்றிச் சாதாரணமானவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு யாதும் பிரயோகிக்கத் தக்கதன்றே. இப்போது ஏது தன்மையிலிருக்கிறதென்று அறிய அவாவுகிறேன். தாங்கள் தமிழுக்கு ஒருகண். தங்கள் கண்ணுக்கு வருத்தமென்று கேட்க மனம் சகிக்கிறதில்லை. இனியும் தங்களால் ஆகவேண்டுமவை அனந்தம். சகாயத்திற்கு ஒன்றோ இரண்டோ ஆள் அவசியம். அவ்வகைச் செலவிற்கு என்னசெய்யக்கூடியதாக இருக்கும்? என்னாலியன்றவை செய்ய ஆயத்தம். தஞ்சாவூரில் ம-ா-ா-ஸ்ரீ கல்யாண சுந்தரமய்யர் அவர்களை யான் சென்ற ஆண்டு கண்ட காலை இவ்வகையான முயற்சிக்குத் தாம் அனுகூலிக்கும் விருப்பமுடையராகப் பேசினர். அவர்கள் ஒரு வாக்குச் செலவிடுவதானால் மடங்களில் அழியும் பொருளில் எவ்வளவு இதில் கதியடையக் கூடாததாகும்? அவர்களைத் தாங்கள் ஏன் பிரேரிப்பிக்கலாகாது? சாது சேஷய்யர் அவர்கள் மூலமாயினும் இலகுவில் நிறைவேறலாமே. தாங்கள் இனித் தனியே யாவும் பார்க்கலாமென்ற எண்ணத்தைத் தயவு செய்து விட்டுவிட வேணும். சஹாயத்திற்கு ஆளின்றி இனியும் முயற்சிக்கில் எங்ஙனம் தங்கள் நேத்திர வியாதி வலுத்து விடுமோ என்று அஞ்சி யிவ்வளவு எழுதலானேன். நம் மனையார் தேகநிலையைக் கருதும்போது "இருதலைக் கொள்ளியினுள் எறும்பு" என்றே யுண்மையாய் எண்ண வேண்டியதாக இருக்கிறது. உழைத்தால் சரீர உபாதி துணிபாக நிற்கிறது. உழைக்காவிட்டால் சரீரமிருந் தென்ன பயனென்ற சோகமும் அப்படியே. ஏதுசெய்ய? கடவுள் இச்சைபோல நடக்கட்டும்.

16, கார்த்திகை
திரு அனந்தை
(29—11—1896)

தங்கள் நண்பன்,
பி. சுந்தரம்பிள்ளை.

அ. சண்முகம் பிள்ளை ::

[சோழவந்தான் அரசஞ் சண்முகனார் ஐயரவர்களைத் தமிழ்த்தெய்வமாகக் கருதி வழிபட்டவர்களுள் ஒருவர். மிகக் கூரிய அறிவுடையவர். இலக்கண ஆராய்ச்சி நிரம்பப் பெற்றவர். இவர் எழுதியுள்ள தொல்காப்பியப் பாயிர விருத்தி இவருடைய இலக்கண ஆராய்ச்சி வன்மையை விளக்கும்.]

செந்தமிழ்க் கடலின் நிலை கண்ட தெய்விக அந்தணர் திலகராய் அலகிலாப்புகழொடென் சிந்தைவிட் டகலாத் தேசிகர் திருவடி வந்தனை செய்து வரைவதிவ் விண்ணப்பம்.

க்ஷேமம். அவ்விடம் க்ஷேமங்களுக்குத் திருமுகம் கட்டளையிட் டருளும்படி தேவரீரது திருவடிக்கமலங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

அசௌக்கியத்தால் இவ்வருடத்தினும் மதுரைச் சேதுபதி ஐஸ்கூலில் ரஜாப் பெற்றுக் கொண்டு நாளதுவரை சோழவந்தானில் வசித்து வருகிறேன். இப்போது இன்னிசை யிருநூறு எனவொரு நீதிநூல் அடியேன் சிற்றறிவிற் கெட்டிய அளவிற் பாடிச் சிறிதும் நாணாது தேவரீரது சந்நிதானத்துக்குப் புக்போஸ்டு செய்து அனுப்பி யிருக்கிறேன். அரிய பெரிய சங்க நூலெல்லாம் ஆராய்ந்த தேவரீருக்கு இது மிக்க அருவருப்பைத் தருமாயினும் அடியேனது அறியாமையான் எழுந்த அவாவை முடிப்பிக்குமாறு சிறிது கடைக் கண்ணோக்கஞ் செய்தருளித் திருத்த வேண்டின் திருத்தியும் நீக்க வேண்டின் நீக்கியும் சேர்க்க வேண்டின் சேர்த்தும் அனுப்பினால் உடனே அச்சிடுதற்கு இவண் அநேகர் எதிர்பார்த்திருக்கின்றனர். தேவரீரிடத்துப் பாயிரம் பெறல் வேண்டுமென்பது அடியேனது பேரவா. கருணையால் திருவுளம் இரங்கி இதனையும் நிறைவேற்றுமாறு பிரார்த்திக்கின்றேன்.

என் தந்தைபெயர் அரசப் பிள்ளை. ஊர் சோழவந்தான். மதம் சைவம். சாதி வேளாளன்.

அடியேன் பாடிய பிறநூல்கள்: ஏகபாத அந்தாதி, மாலைமாற்று, பஞ்சதந்திர வெண்பா, நவமணிக்காரிகை நிகண்டு, கலம்பகமுதலியன.

இதில் இரண்டு லேபிலிருக்கின்றன.

இங்ஙனம்
தேவரீர்மாணாக்கன்
சோழவந்தான் தெற்குத்தெரு
அ. சண்முகம் பிள்ளை.

அம்பலவாண தேசிகர் ::

[ஐயரவர்களுடைய பிரசங்கங்களில் கடவுள் வணக்கம் இராமற் போயினும் போகும், திருவாவடுதுறை மடத்தைப் பற்றிய பிரஸ்தாபம் இல்லாமல் இராது. அந்த மடத்தைப்பற்றிப் பேசாவிட்டால் அவர்களுடைய மனம் திருப்தி உறாது; அதற்குக்காரணம் அவர்கள் இளமைக் காலத்தில் அங்கே பெற்ற கல்வியும் ஆதரவுமேயாகும். அவ்வாதீனத்தில் 17-ஆம் பட்டத்தில் தலைவராக வீற்றிருந்தவர் ஸ்ரீ அம்பலவாண தேசிகர். அவருடைய சிறந்த ஆற்றல்களைப் புகழாதார் அரியர். அவருடைய ஸபை போஜமகாராஜாவின் ஸபையை நினைவுறுத்துமாம். அவர் ஐயரவர்களிடத்தில் இணையற்ற மதிப்பு வைத்திருந்தார். ஐயரவர்களும் அவர்பால் மிக்க அன்பு பூண்டிருந்தனர். இப்பொழுதும் அவருடைய திறமைகளைப் பற்றியும் வித்துவான்களை வரிசையறிந்து ஆதரிக்கும் சிறந்த இயல்பைப்பற்றியும் ஐயரவர்கள் அடிக்கடி கூறுவதுண்டு.]

சித்திரைமீ கசுவ.

அய்யரவர்கள்

மஹா மஹோபாத்தியாய நமது வே. சாமிநாத அய்யரவர்களுக்கு விஞ்ஞாபனபத்திரிகேயம்.

தங்களாசீர்வாத விசேஷத்தால் க்ஷேமம்; தங்கள் க்ஷேமம் தெரிய விரும்புகிறோம்.

நாம் முன்னரெழுதிய கடிதத்திற்குப் பதிலாகத் தாங்களெழுதிய ஆப்தவாக்கிய லிகிதம் போந்தளவில்லாத மகிழ்ச்சியை விளைவித்தது.

நாமெழுதிய லிகிதம் தாங்கள் திருக்குறள் கOசு-ம் அதிகாரம், இரவு - ச-வது பாமாணவர்க்குப் போதிக்குங்கால் வந்தது மிகுந்த வியப்பிற்றே.

அந்தக்காரணத்தானும் தங்களுழுவலன்பானும், "மீளா ஆளலாற் கைம்மாறில்லை" என்னும் அருமைத் திருப்பாசுரத்தை எழுதியது தெரிந்து மிக்க ஆனந்தமுற்றோம்.

தாங்கள் இடம் மாறுதலின்றி நம்மிடத்திற்கே உரியவர்களாதலின் கைம்மாறிலாதவர்களேயாம்; ஒழுங்குமாறுதவர்கள் எனினும் ஒக்கும்.

துறைசையைப் பிரிதலரிதென்பதைப் பற்றித் தாங்களெழுதிய "தெய்வப்பொன்னி" என்னும் பாடலைப்பார்த்து இன்புற்றோம். "கலந்தார் தம்மனங் கவருங் காதலானே" என்னுந் திருத்தாண்டகத்தானும் விளங்குகின்றது.

நாம் சிறிது உபகரித்தலைத் தாங்கள் அன்பின் மிகுதியாற் பெரிதாகக்கோடலால் "தினைத் துணைநன்றி" என்னும் திருக்குறளுக்கும், இணையில்லாத நட்புடையவர்களாயிருத்தலின் "நிறை நீரவர் கேண்மை" என்னும் திருக்குறளுக்கும் சான்றாயிருக்கிறீர்கள். மற்றுள்ளன பின்பெழுதுவோம்.

அம்பலவாண தேசிகர்.

சாதாரணஷு கும்பரவி உகூவ
திருவாவடுதுறையாதீனம்.

மகாமகோபாத்தியாய வாழ்த்து ::

சி. சுப்பிரமணிய பாரதியார்

[ஐயரவர்கள் மகாமகோபாத்தியாயப் பட்டம் பெற்றபோது பாடிப் படித்த செய்யுட்கள்]

(அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

1

செம்பரிதி யொளிபெற்றான் பைந்நறவு சுவைபெற்றுத்
திகழ்ந்த தாங்கண்
உம்பரெலாம் இறவாமை பெற்றனரென் றெவரேகொல்
உவத்தல் செய்வார்
கும்பமுனி யெனத்தோன்றும் சாமிநா தப்புலவன்
குறைவில் சீர்த்தி
பம்பலுறப் பெற்றனனேல் இதற்கென்கொல் பெருவகை
படைக்கின் றீரே!

2

அன்னியர்கள் தமிழ்ச்செவ்வி யறியாதார் இன்றெம்மை
ஆள்வோ ரேனும்
பன்னியசீர் மகாமகோ பாத்தியா யப்பதவி
பரிவின் ஈந்து
பொன்னிலவு குடந்தைநகர்ச் சாமிநா தன்றனக்குப்
புகழ்செய் வாரேல்
முன்னிவனப் பாண்டியர்நாள் இருந்திருப்பின்
இவன்பெருமை மொழிய லாமோ?

3

நீ தியறியோம் இவ்வுலகத் தொருகோடி இன்பவகை
நித்தந் துய்க்கும்
கதியறியோம் என்றுமனம் வருந்தற்க குடந்தைநகர்க்
கலைஞர் கோவே
பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும் காலமெலாம்
புலவோர் வாயில்
துதியறிவாய் அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய் இறப்பின்றித்
துலங்கு வாயே.

எனது நோக்கம்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்



"உங்களுடைய நோக்கம் என்ன?" என்று கேட்பது எளிது; அதற்கு உண்மையாக விடையளிப்பது அரிது. "உங்களுடைய நோக்கத்தைப் பற்றிச் சில வரிகள் எழுதுங்கள்" என்று கலைமகள் ஆசிரியர் விரும்பினர். 'என்னுடைய நோக்கத்தை அறிந்து உண்டாகும் பயன் என்ன? பெரியோர்களுடைய நோக்கத்தை அறிந்து அதன்படி நடக்க முயன்றால் பயன்படும்' என்று எண்ணினேன்; ஆனாலும் அன்பினால் அவர் கேட்பதற்கு ஒருவகையாக விடையளிக்கத் துணிந்து சிலவற்றை எழுதலானேன்.

என்னுடைய வாழ்வின் நோக்கமெல்லாம் பெரும்பாலும் தமிழ்த்தொடர்புடையது தான். தமிழ்நூல்களை ஆழ்ந்து பயில

வேண்டும். பலமுறை பயின்றால்தான் உண்மை புலப்படும். முதலிலே கடினமாகத் தோற்றினாலும் பலகால் பயின்றால் வரவரத் தெளிவுண்டாகும். ஒருநூலிலுள்ள சொற்சுவை பொருட்சுவைகளை அனுபவித்துப் படிக்கவேண்டும். அவற்றைப் பிறரும் அறியும் வண்ணம் எளிய நடையிற் சொல்லவும் எழுதவும் வேண்டும்.

பழைய நூல்களையும் உரைகளையும் தெளிவாக ஆராய்ந்து உண்மைக் கருத்தை அறியவேண்டும். தெரியாதவற்றைத் தெரிந்தனவாகக் காட்டலாகாது. அவற்றைப் பாதுகாக்கவேண்டும். புதிய கருத்துக்களை அவற்றில் ஏற்றிவிடலாகாது. அவசியமல்லாத கருத்துக்களை மேற்கொண்டு நூலையோ உரையையோ எழுதிப் பிறரை வற்புறுத்தி மகிழச்செய்தல் நலமன்று. பழைய நூல்களிற் சொற்பொருட் குற்றம் இருப்பதாகத் தோற்றினால் அங்ஙனம் அமைத்ததற்குக் காரணம் என்னவென்று ஆராயவேண்டும். நமக்கு விளங்காததனால் ஒன்றைக் குற்றமென்று துணிந்துவிடுவதால் பயன் இல்லை. நாமே நன்றாக அறிந்துவிட்டோமென்று மதித்து அயலாரைத் தாழ்வாக நினைத்தலும் பேசுதலும் கூடா. பிறர் எழுதியுள்ளவற்றை அவமதியாமல், குணமான பாகங்களை அறிந்து உபயோகித்துக் கொள்ளவேண்டும்.

கற்றவர்களிடத்தில் முறையாகப் பாடங்கேட்கவேண்டும். கேட்டவற்றைச் சிந்தித்து முறையாகப் பாடஞ்சொல்ல வேண்டும். அதைவிடப் பெரிய உபகாரம் வேறு இல்லை. எப்பொழுதும் படித்துக்கொண்டு இருக்க வேண்டும்.

முன்னோர் ஒழுகிவந்த முறையைப் பெரும்பாலும் பின்பற்றுதலே மன ஒருமைக்கு வழியாகும். புதுக் கொள்கைகள், புதிய மதங்கள், புதிய தெய்வ வழிபாடு முதலியவற்றை ஆராய்ச்சியின்றி மேற்கொண்டால் அவை நம் மன இயல்போடு பொருந்துவதற்குப் பலகாலம் செல்லும்; ஜனங்களிடையே ஒற்றுமையும் கடைப்பிடியும் தவறிவிடும். பிறமதங்களையும் தெய்வங்களையும் தூஷித்தல் கூடாது. அயல்மதக் கொள்கைகளையும் வேறுபாஷையிலுள்ள அரிய செய்திகளையும் அறிந்து வைத்தல் அறிவை விரிவுறச் செய்யும்.

எந்தச் சமயத்தாரோடும் எந்தத் தேசத்தாரோடும் சகோதர பாவத்துடன் ஒற்றுமையாயிருந்து காலங்கழிக்கவேண்டும்.

மேற்கொண்ட காரியத்தைச் சிறிது சிறிதாகப் பலநாள் ஆய்ந்து ஆய்ந்து திருத்தமாக நிறைவேற்ற வேண்டும். முயற்சி

யிடையே யாரேனும் அவமதிக்க நேர்ந்தால் அதனைப் பொருட்படுத்தாமல் காரியத்தைச் செய்துவரவேண்டும். நம்முடைய நெஞ்சறிய நற்காரியத்தை மேற்கொண்டு கடமையைச் செய்துவந்தால் இறைவன் அருளால் முடிவில் நன்மையே கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. செய்யும் காரியத்தைப் பயனால் தெரிவிக்க வேண்டுமேயன்றித் தொடங்கியதுமுதல், 'இப்படிச் செய்தேன், அப்படிச் செய்தேன்' என்று தாமே பாராட்டிப்பேசுதல் உயர்வன்று.

பிறர் செய்த குற்றத்தை மறந்துவிடுதலும் பலரிடையே எடுத்துக் கூறாமையும் நன்மை பயக்கும். சிற்றுதவி செய்தாரையும் மறவாமல் என்றும் நன்றி பாராட்டுதலினின்றும் தவறலாகாது. மனிதனை மனிதனாகச்செய்வது நன்றியறிவேயாகும்.

முதியவர்கள் படியாதவர்களாயினும் அவர்களுடைய பழக்கம் நன்மைகளை உண்டாக்கும். திருவாவடுதுறை யாதீனகர்த்தராக விளங்கிய மேலகரம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் இதனை அடிக்கடி வற்புறுத்திக் கூறுவார்கள்.

நன்மையும் தீமையும் கடவுள் நம் வினைக்கேற்ப அமைப்பன வென்று எண்ணவேண்டும். ஆதலின் தீமை செய்தாரென்று நெஞ்சிற் பகையுற்று யாரையும் கடிதல் ஆகாது. தெய்வம் நன்மையையே உண்டாக்கும் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டும். அது பலவிதமான இடையூறுகளை எளிதில் வெல்லும் வன்மையை அளிக்கும்.

பெரியோர் வாயிலாகவும் அநுபவத்தினாலும் அமைந்த நோக்கங்கள் பலவற்றுள் இவை சில. இவற்றின்படி நடக்கவே நான் முயன்று கொண்டுவருகிறேன்.

“இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்”

இங்ஙனம்,

வே. சாமிநாதையர்



புதுமைப் பெண்

ந. பிச்சமூர்த்தி, பி. ஏ.

(165-ஆம் பக்கத்தொடர்ச்சி)

அங்கம் III—காட்சி 2

[இடம்:—ஹிமோத்கிரி மலைச்சாரலிலுள்ள இயற்கை மண்டபம்]

பிரும்மா:—ஏனையா சிவனே! எங்களை வரவழைத்த காரணம் என்ன?

பரமசிவன்:—எனக்கே விளங்கவில்லை; நீ என்னுடன் சிறிது நேரம் இருந்தால் புலப்படக் கூடும்.

பிரும்மா:—ஓஹோ! அப்படியா சமாசாரம்? நான் இங்கே தங்கிப் பொழுது போக்கினால் திகிரி சுழன்று கொண்டே இருக்கும்; தெரியுமல்லவா? மண் காய்ந்து போகும். பிறகு ஸரஸ்வதியிடம் வசைகேட்க வேண்டிவரும்.

மஹாவிஷ்ணு:—பையா! கொஞ்சம் பொறு....அதோ என்ன இரைச்சல்?

(எட்டிய குரல்கள் ஜே ஜே என்று கூவுகின்றன.)

வீரபத்திரர்:—(வெகு பரபரப்புடன் வந்து) அப்பா! பெரிய கூட்டம் ஒன்று இந்த இடத்தைநோக்கி ஆரவாரத்துடன் வந்து கொண்டிருக்கிறது. நமக்கு அவர்கள் விரோதிகளா? சொல்லுங்கள். இந்த ஜடைக்கு இரையாக்கிவிடுகிறேன், அவ்வளவு பெயர்களையும்.

மஹாவிஷ்ணு:—வீரபத்திரா! துடிக்காதே. குளத்தில்போய் ஒருதரம் ஸ்நானம் செய்துவிட்டு வா.

(நந்திதேவர் வருகை)

நந்தி:—பெரியோர்களே! தங்களைக் காணப் பூமியிலிருந்து பல ஸ்திரீகள் வந்திருக்கிறார்கள். சாவகாசந்தானா என்றுகேட்டு வரச் சொன்னார்கள்.

பரமசிவன்:—வரச் சொல்.

(ஸ்திரீகளின் கூட்டம் வந்து நமஸ்காரம் செய்துவிட்டு எல்லோருமாகத் தரையில் ஒடுக்கத்துடன் உட்காருகிறார்கள்.)

மூன்று கர்த்தாக்களும்:—-தீர்க்க சுமங்கலாபவ.

பரமசிவன்:—மக்களே! சௌக்யமா? ..ஏது, இவ்வளவு சிரமங்களுக்குட்பட்டு இவ்விடம் வந்த காரணம்?

சத்யவதி:—சுவாமி! நாங்கள் இப்போது இருக்கும் நிலைமையில் இனி வாழ்வது கடினம். நாங்கள் புருஷர்களின் அடிமையா? அவர்களுடைய க்ஷணப்பைத்யங்களையெல்லாம் தெளியவைக்கும் மருந்துதானு? எங்களுக்காகவென்று உலகில் ஒருவிதப் பொறுப்பும் ஸ்வதந்திரமும் இல்லையா? இனி இந்த அக்ரமங்களை யெல்லாம் நாங்கள் பொறுக்கப்போவதில்லை. அடுப்பூதும் வேலையையும், நகை புடைவைக்கு அடித்துக் கொள்ளும் பிசாசுகள் என்றபட்டப் பெயரையும் இன்றுடன் ராஜிநாமா செய்ய அனுமதி தரவேண்டும். இதுவரையில் தழைத்திருக்கும் புருஷ நாகரிகத்திற்கு இன்றுடன் பிணைப்பறை அடிக்கிருேம். இனி ஸ்திரீயும் புருஷர்களும் சரி நிகர் சமானம்.

பரமசிவன்:—அம்மா! நீ சொல்லுவது சரிதான். வலது கண்ணுக்கும் இடது கண்ணுக்கும் என்ன ஏற்றத்தாழ்வு? நீங்கள் ஆண்களுக்கு வெறும் அடிமையென்று யார் கதை சொன்னது? இதெல்லாம் யாருடைய கிளர்ச்சி?

சுஸீலை:—(குறுக்கிட்டு) மஹாப் பிரபோ! இது கிளர்ச்சி யல்ல. சுடலையில் தாண்டவமாடும் உங்களுக்கு உலகம் ஏது? அதன் ஸ்மரணை ஏது? மஹாவிஷ்ணுவோ நித்திரையில் பொழுதைப் போக்கிவிடுகிருர். உலகின் போக்கை அவர் கண்டபடி? பாவம்! பிரும்மாவுக்கோ ஒழிவு நேரமில்லை. தபாலாபீஸ் களிலேனும் குறிப்பிட்ட நேரத்தில் தபால்களுக்கு முத்திரைகள் போட்டுக் கொண்டிருக்கிருர்கள். இந்த ஹிரண்யகர்ப்பருக்கு, பாவம்! மூச்சுவிடக்கூட நேரமில்லை. இந்த நிலைமையில் அபலையரான எங்கள் வகுப்பாரும் உலகமும் கேடு அடைவதில் வியப்பென்ன?

மஹாவிஷ்ணு:—குழந்தாய்! அது எப்படி?

சுஸீலை:—அதைத்தான் சொல்லப்போகிறேன்; நாங்கள் சிருஷ்டிபாரம் வஹிப்பது உலகில் ஒரு இழிசொல்லாகி விட்டது. எங்கள் வகுப்பைத் தாழ்த்தவும், புருஷ நாகரிகமாகவே உலகம் வளர்ச்சியும் முதிர்ச்சியும் பெறுவதற்காகவுமே நீங்கள் ஏடுகள் எழுதுவித்திருப்பதாகத் தெரிகிறது. கல்வி, அறிவு, மனத்தெளிவு, விண்நோக்கு முதலியவைகள் புருஷதர்மங்களாம்; மனிதர்களின் காணியாட்சியாம். அடுப்பங்கரைச் சமையலும், வெள்ளிக்கிழமை எண்ணெயும், குழந்தைகள் பெறுவதும், புளி கரைப்பதால் நகச்

சொத்தையும், நாய்போல் படிந்து கிடப்பதுவுந்தான் ஸ்திரீ தர்மங்களாம். அதிலும் ஹிந்துதர்மமாம். இவ்வித்யாசத்தைக் குறிப்பிடக் கருதியே நீங்கள் சிருஷ்டி பாரத்தை ஸ்திரீகளின்மேல் சுமத்தி விலங்கிட்டு, ஸ்வதந்த்ரத்திற்கு அருகரல்லாதவர்களாக்கி இருக்கின்றீர்களாம். ஆகையால் அருள் கடல்களே! தயவு செய்து இன்றுடன் சிருஷ்டி பாரத்தை எங்களை விட்டு எடுத்து விடுங்கள். புருஷர்கள் எக்கேடு கெட்டுப் போகட்டும்; எங்களுக்குக் கவலையில்லை.

பிரும்மா:—சபாஷ்! உன் வாய்க்குச் சர்க்கரைதான் போட வேண்டும். நான் இனி கொஞ்சம் நல்ல காற்று வாங்கலாம்; அக்காடா என்று சிரம பரிஹாரம் செய்து கொள்ளலாம்.

பரமசிவன்:—பிரும்மதேவரே! மஹா அவசரக்குடுக்கையாய் இருக்கிறீரே. சற்றுச் சும்மா இரும்.

(ஸ்திரீகளைப் பார்த்து) நீங்கள் சொல்லும் வார்த்தைகள் யுகத்தைப் புரட்டுவனவாக இருக்கின்றனவே!

கூட்டத்தில் உள்ளவர்கள்:—அதற்குத்தான் இங்கேவந்தோம்.

மஹாவிஷ்ணு:—(குறுக்கிட்டு) சிவனே! சற்றுச் சிவனே யென்று இருங்கள். நான் இவர்களுக்குப் பதில் சொல்லுகிறேன். பெண்களே! நீங்கள் செய்வது இயலாத காரியம். இயற்கைக்கு விரோதம். சக்தியின்றிச் சிவம் உலகில் நிற்காது; சமமாகிவிடும். இரண்டும் அதாவது இரண்டு வகுப்பும் அவசியம். இப்பொழுது ஸ்திரீ புருஷ தர்மமாக அமைக்கப்பட்டிருப்பது கிரமமானது, அழகானது, புராதனமானது.

அநேகம் குரல்கள்:—அதை ஆக்ஷேபிக்கிறோம்.

சத்யவதி:—நானும் அதை ஆக்ஷேபிக்கிறேன். நான் தெரிந்து கொண்டிருக்கும் வரையில் ஆண் பெண் என்ற பிரிவு நேற்று வந்ததென்றே சொல்லலாம். பைபிளில், ஆதியில் ஆதாம் என்பவன் மட்டும் இருந்ததாகவும், அவன் உடலிலிருந்து ஈவ் என்னும் பெண் உற்பத்தியானதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் அர்த்தநாரீசுவரர் என்று போற்றிவரும் சம்பிரதாயமும் ஆண் பெண் என்னும் பாகுபாடே இல்லாததையும், ஒன்றே இரண்டு வகுப்புமாய் இருந்ததென்பதையும் குறிப்பிடும் தத்வ சித்திரம். தாங்கள் லக்ஷ்மியை ஹிருதயத்தில் வைத்துக்கொண்டிருப்பதாகச் சொல்லும் கதை இதே விஷயத்தை விளக்குகிறது. மேலும் சில செடி கொடிகளிலும், நத்தை முதலிய ஊர்வன வகையிலும் இப்பொழுதும் ஆண் பெண் என்னும் வகுப்பு பேதமில்லை. ஜீவ சாஸ்திரத்தின் அரிச்சுவடிப் புஸ்தகங்கூட இவ்விஷயங்களைச்

சொல்லுகின்றனவே. இப்படியிருக்க மனிதவர்க்கத்துக்குள் அனுவசியமான தருமத்தை ஏற்படுத்திக் கக்ஷிக்கும் அவமானத்திற்கும் இடம் தந்தது பெரியோர்களாகிய தங்கள் பிழை. இதை மஹாவிஷ்ணு ஆதரித்துப் பேசுவது புருஷர்களுக்கு வகாலத்து வாங்கிக்கொண்டு பேசுவதுபோல் இருக்கிறது. ஆகையால் நாங்கள்வேண்டுவது......

பரமசிவன் :—(குறுக்கிட்டு) இது ஏதப்பா! இவர்கள் கலியுகத்தையே சம்புடம் செய்து சுஷ்கப்படுத்துகிறார்களே. ஏனம்மா! எல்லாம் அமைதியாய்க் கிரமப்படி நடக்கக்கூடாதா? ஏன் அவசரப் படவேண்டும்? சண்டைபோடவேண்டும்? உங்கள் கக்ஷியை ஒப்புக்கொண்டுவிட்டால் உலகமே முடிந்துபோகுமே. அதற்கு என்ன செய்வது? யோசித்தீர்களா?

சத்யவதி :—சுவாமி! அந்தப்பேச்செல்லாம் இனி ரஸிக்காது. அமைதியாய்—ஒழுங்காய்—கிரமமாய்–இவ்வார்த்தைகளும் இவை குறிப்பிடும் கொள்கைகளும் காட்டுமிராண்டிகளுடையன; கலியுகத்து வேதாந்திகளுடையனவல்ல. கலியுகத்துக்கு அடுத்த யுகம் தோன்றவேண்டி நிவிருத்தியில் பாடுபடுவோருக்கு ருசிக்கக்கூடியவையல்ல. கலியின் முடிவை அவசரப்படுத்துவதே எங்கள்நோக்கம். எங்களைப்போலவேதான்—ஆனால் வேறு துறையில்—புருஷர்களும் சொல்லிக்கொண்டு புதுயுகப் பிறப்பிற்கு அஸ்திவாரம் போட்டிருக்கிறார்கள்.

மஹாவிஷ்ணு :—சரி! அதற்காக நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

சத்யவதி :—அப்படி வாருங்கள்..... நாங்கள் புருஷர்களுக்கு ஸமானமாகவேண்டுமென்று சொன்னேன். அது மெய்ப்படுவதற்காக, எங்களைத் தாழ்த்தவேண்டிச் சொல்லப்படும் அவதூற்றை—ஏதோ ஈச்வராதிகளாகிய நீங்களே சிருஷ்டிதத்வத்தில் வித்யாசத்தைவைத்து, உலகையும் ஸ்திரீகளையும் ஒட்டும் கடிவாளத்தைப் புருஷர்கள்கையில் கொடுத்திருப்பதாகச் சொல்லப்படும் கட்டுக்கதையை—இத்துடன் ஒழித்துவிட வேண்டும். இனி நாங்கள் சிருஷ்டிபாரத்தை வஹிக்கமாட்டோம். ஸ்திரீ புருஷர்கள் என்ற பாகுபாட்டை மறைக்க, அழிக்க வழிதேடுவோம். அனுமதி தந்தருளவேண்டும்.

மஹாவிஷ்ணு :—ஐயோ! அது முடியாத காரியமாயிற்றே! இயற்கைக்கு மாறாயிற்றே!

சத்யவதி :—(வேகத்துடன்) இந்தக் கதையை லக்ஷந்தரம் மண்ணுலகில் கேட்டிருக்கிறோம். உங்களிடத்திலும் இதே வறட்டுக்

கதையென்றால் பிறகு—போகட்டும். அதெல்லாம் எங்களால் முடியும். ஸத்திய யுகத்தை நிலைநாட்டுகிறோமா, இல்லையா, பாருங்கள்!

மஹாவிஷ்ணு:—சரி, ஒப்புக்கொள்ளுகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். இவைகளை எப்படி நிறைவேற்றுவீர்கள்?

சத்யவதி:—ஏன்? எங்கள் வாக்கின் சக்தி எங்கேபோகும்? தவிர மனம்போல வாழ்வுஎன்பது பழைய அத்வைதக்கொள்கையல்லவா? ஜீவ சாஸ்திரத்திலும் கிரியை முதலென்றும் அதற்காகத் தனிக்கருவி கரணங்களும் பிறகுதான் ஏற்படுகின்றனவென்றும் ஒருகொள்கை உண்டு. உதாரணமாக ஒட்டகச் சிவிங்கிக்கு அப்படித்தானும். உயர இருக்கும் இலை தழைகளைத் தின்ன வேண்டும் என்று அடிக்கடி எண்ணி ஏங்கிய காரணத்தினாலேயே அதற்குக் கழுத்து நீளமாய்ப் போய்விட்டதாம். அதைப்போல் நாங்களும் சாதனைசெய்து ஜயம் பெறுகிறோம். பெரியோர்கள் ஆசீர்வாதம் செய்யவேண்டும்.

(பார்வதி, லக்ஷ்மி, ஸரஸ்வதி முதலியவர்கள் வருகை)

பரமசிவன்:—(அவர்களைப் பார்த்துவிட்டு) ஏ! வாசுதேவா! குட்டு இப்போது வெளிப்பட்டுப் போய்விட்டது. நம் வீட்டுப் பெண்களும் இந்தப்பெண்களும் எல்லோரும் ஒப்பாக, சாதுவாய், பூனைகள்மாதிரி வந்திருப்பதைப் பார்த்தாயா?

ஸரஸ்வதி:—இல்லவே இல்லை; குளக்கரையில் இவர்களைப் பார்த்ததென்னவோ வாஸ்தவம். அவர்கள் ஏதேதோ கேட்க வந்திருப்பதாக அவர்களாகவே சொன்னார்கள். நாங்கள் பதில் சொல்லவில்லை. இங்கே என்னதான் நடக்கிறது, பார்க்கலாமென வந்தோம்.

மஹாவிஷ்ணு:—நல்லதாயிற்று; விஷயம் தெரிந்ததா?

ஸரஸ்வதி:—தெரிந்தது.

மஹாவிஷ்ணு:—உங்கள் அபிப்பிராயம் என்னவோ?

ஸரஸ்வதி:—இந்தப்பெண்கள் சொல்லிவரும் காரணங்கள் எப்படி இருந்தபோதிலும் இவர்கள் சொல்லும் விஷயத்தை ஆதரிப்பதற்கு இவ்விடத்தில் இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

மஹாவிஷ்ணு:—ஆ! அப்படியா? சொல்லு பார்ப்போம்.

ஸரஸ்வதி:—இந்தப்பயல்கள் கணபதி, சுப்பிரமணியன் இவர்களைப்போல் குழந்தைகளைக் கட்டி மேய்க்க யாரால் ஆகும்? குழந்தைகள் செய்யும் விஷமத்தைப் பார்க்கும்போது சிருஷ்டி-

பாரம் பெண்கள் தலையில் வைத்திருப்பது சுத்த அநீதி என்று தெளிவாய் விளங்குகிறது. அரைமணி நேரம் குழந்தைகளைப் புருஷர்கள் பார்த்துக்கொண்டால், பிறகு அதிலுள்ள துன்பமெல்லாம் தெரியும். போனவாரம் பாருங்கள்! இந்த சுப்பிரமணியன் வள்ளி என்ற பெண்ணைக் கிழவன் வேஷம் தரித்துக்கொண்டு போய்த் தன்னைக் கல்யாணம் செய்துகொள்ளச் சொன்னனும். அவள் மாட்டேனென்ருளாம். கிழவனை யார் மணம்புரிவார்கள்? அதற்காக இந்தக் கணபதிப்பயல்போய் யானைமாதிரி அவளைப் பயமுறுத்தினனும். கடைசியில் கல்யாணம் முடிந்துவிட்டது. தேவலையா பையன்கள் கதை?

மஹாவிஷ்ணு:—அதென்ன போனவாரமென்கிருயே?

ஸரஸ்வதி:—ஏன்! தங்களுக்குக் கணக்குக்கூட மறந்துபோய் விட்டதா? நம்முடைய நாள், வருஷம் முதலியவற்றை நன்ருய் ஞாபகம் மூட்டிக்கொள்ளுங்கள்.

மஹாவிஷ்ணு:—சரிதான்! சரிதான்!

ஸரஸ்வதி:—நல்லவர்களுடைய குழந்தைகளே இப்படியென்ருல் பூலோகத்துக் குழந்தைகளைப்பற்றிக் கேட்பானேன்?

மஹாவிஷ்ணு:—ஆகையினலே?

ஸரஸ்வதி:—இந்தப்பெண்கள் சொல்லும் ஒவ்வொன்றையும் ஆமோதிக்கிறேம்.

(இடி, மழை)

அங்கம் III—காட்சி 3.

[இடம்:—மானஸஸரோவர் குளக்கரை.]

மஹாவிஷ்ணு:—பரமசிவம்! புதுப்பெண்களின் பேச்சுக் கேட்டீரே, முடிவென்ன?

பரமசிவன்:—பிரும்மா என்ன சொல்லுகிருன்?

மஹாவிஷ்ணு:—ஆக்ஷேபமே இல்லையாம்; பையன்களுக்குக் கோடை விடுமுறைமாதிரி இருக்குமாம் அவனுக்கு.

பரமசிவன்:—சரி, உம்முடைய அபிப்பிராயம்?

மஹாவிஷ்ணு:—கலி முற்றுகிறதென்பது.

பரமசிவன்:—எதுவாகவேண்டுமென்ருலும் இருக்கட்டும். இப்பொழுது செய்யவேண்டியதைச் சொல்லும்.

மஹாவிஷ்ணு:—இந்தப்பெண்கள் வந்திருந்தபொழுதே இந்தப் புது நாகரிகப் பிதற்றலையெல்லாம் ஓங்கி மண்டையிலடித்தாற்

போல் ஒருவார்த்தை சொல்லியிருந்தால் இப்பொழுது இவ்வளவு சங்கடப்படவேண்டியதில்லை.

பரமசிவன்:—நீரே நீளமாகக் கதைகேட்டுக்கொண்டிருந்து விட்டு என்னைச் சொல்லுகிறீரே!

மஹாவிஷ்ணு:—பட்டவர்த்தனமாக இருப்பது அவ்வளவு சரிவராது; கிரியையிலே அவர்கள் சொல்வதை அனுசரிக்காமல் இருந்துவிட்டால் போகிறதென்று நினைத்துச் சும்மா இருந்தேன்.

பரமசிவன்:—அதெல்லாம் முடியாதையா, முடியாது. அப்பொழுதே பவிஷ்யபுராணத்தில் கலியில் இன்னது இன்னது நடக்க வேண்டுமென்று புராணக்காரனை எழுதச் சொல்லிவிட்டு இப்பொழுது மற்றொன்று சொன்னால் இந்த கணபதி, சுப்பிரமணியன், வியாஸன் இவர்களெல்லாம் சிரிப்பார்கள்.

மஹாவிஷ்ணு:—மன்னிக்க வேண்டும். பவிஷ்ய புராணம் சுருதியா? ஸ்மிருதியா? அல்லது........அதற்குத் தலை குனிய வேண்டுமென்பதற்கு?

பரமசிவன்:—இந்தக் கக்ஷிகள் எல்லாம் நாமே கிளப்பினால் நன்றாயிருக்காது.

மஹாவிஷ்ணு:—அப்படியென்றால் நீரே முடிவைச்சொல்லி விடுகிறதுதானே.

பரமசிவன்:—இந்தப் புதுப்பெண்கள் கேட்டபடியே ஆகட்டுமே. நமக்கும் தொல்லை ஒழிந்துபோகும். அத்துடன் இந்த லக்ஷ்மி, பார்வதி, ஸரஸ்வதி இவர்களும் வைய மாட்டார்கள். என்ன சரிதானா?

மஹாவிஷ்ணு:—ததாஸ்து.

பிரும்மா:—நானும் ததாஸ்து.

அங்கம் IV—காட்சி 1.

[இடம்:—பூவுலகம், பாரததேசம், சென்னபட்டினம், நகரமண்டபத்தாழ்வாரம்.]

முதல் ஸ்திரீ:—ஆமாம் இப்பொழுது நாம் தீர்மானங்கள் செய்யப்போகிறோமே; அது வெறும் வாய்ப்பேச்சாகத்தானே? சீர அமைப்புகள் எப்படி மாறும்?

இரண்டாவது ஸ்திரீ:—நீ சுத்த கர்நாடகம்; ஒன்றாவது பசலி; நம்முடைய சங்கத்தில் சேர்ந்தபிறகாவது இதையெல்லாம் தெரிந்துவைத்துக் கொள்ளக்கூடாதா?

முதல் ஸ்திரீ:—புதிதுதானே, தெரியவில்லை. நீ சொல்லு; கேட்கிறேன்.

இரண்டாவது ஸ்திரீ:—சக்கர அமைப்பை நம்மால் மாற்றமுடியும். ஆனால் முதலில் நாம் செய்யவேண்டியது நமது மனத்தை மாற்றவேண்டும்; அதாவது நாம் பெண் என்ற மனோபாவத்தை மறக்கவேண்டும். அப்படி மறந்து, ஆணுக்குச் சமானம் என்று நினைத்தால்—விடாமல் நினைத்தால்—ஆண்போலவே ஆகிவிடுவோம்; அமைப்பு மாறிவிடும். தெரிகிறதா?

முதல் ஸ்திரீ:—(இடி இடியென்று சிரித்துக்கொண்டு) பேஷ்! பேஷ்! பழைய கதைமாதிரி இருக்கிறது. மெதுவாக வீட்டைத் தூக்கி என் முதுகின்மேல் வைத்துவிட்டால் பிறகு ஒரேஓட்டமாக ஓடிப்போவேன் என்றானும் வஸ்தாத். நல்ல பேத்தல்!

இரண்டாவது ஸ்திரீ:—பேத்தலா? தினசரிப்பத்திரிகையைப் பார்த்தால்தானே! முதல் முதல் ருஷ்யா தேசத்து டாக்டர் ஒருவர் இந்தத் தத்வத்தை விளக்கிச் சொன்னார். பார்வைக்கு ஆணாக இருந்தாலும் மனம் பெண்ணுடையது போலிருந்தால் நாளடைவில் சரீரம் மாறிப்போகும்; அப்படியாகாவிட்டால்கூட ஆபரேஷன்கள் செய்தால் மாற்றி விடலாம். அதைப்போலவே பார்வைக்குப் பெண்ணாயிருந்தாலும் ஆண்போன்ற மனம் இருந்தால் ஆணாகவே மாற்றிவிடலாம். சில ஸ்திரீகளைப் புருஷர்களாகவும், சில புருஷர்களை ஸ்திரீயாகவும் மேற்படி டாக்டர் மாற்றியதிலிருந்து இந்த முடிவுகளுக்கு வந்தாராம். இந்த விவரங்கள் சிலவருஷங்களுக்கு முந்திய 'பந்து' பத்திரிகையில் வந்திருந்தன. பார்க்கவில்லையா?

முதல் ஸ்திரீ:—பார்க்கவில்லை.

இரண்டாவது ஸ்திரீ:—நம்முடைய தேசத்திலேகூட ஆபரேஷன்களில்லாமலே இவ்வித மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதாக் கேள்வி.

முதல் ஸ்திரீ:—ரொம்ப தமாஷாய், சுலபமாய் இருக்கிறதே!

இரண்டாவது ஸ்திரீ:—சந்தேகம் என்ன?

முதல்ஸ்திரீ:—இருக்கட்டும். மனோபாவத்தை மாற்ற இதர வழிகள் உண்டோ?

இரண்டாவது ஸ்திரீ:—ஓ! கிறிஸ்தவ சிகிச்சைப் பிரகாரம் தினம் பத்துலக்ஷம் தடவை 'நான் ஸ்திரீயல்ல' என்று ஜபம் செய்து வந்தால் நாளடைவில் எண்ணம் கைகூடும்.

முதல் ஸ்திரீ:—ஊம்!

இரண்டாவது ஸ்திரீ:—இல்லையென்றால் மேல்நாட்டில் செய்வதுபோல் பெண்கள் டென்னிஸ் விளையாடலாம், நிஜார்போட்டுக்

கொள்ளலாம். தலைமயிரைக் கிராப்செய்து கொள்ளலாம். குஸ்தி, குத்துச்சண்டை, குதிரைச்சவாரி, நீந்தல்போட்டி இவைகளில் மும்முரமாகக் கலந்து கொள்ளலாம். தேர்தல்களுக்கு நிற்பது, உத்தியோகம் பார்ப்பது இவையெல்லாம் இருக்கவே இருக்கின்றன. இவற்றையெல்லாம் அனுஷ்டித்தால் நாளடைவில் பெண்கள் தங்கள் மனோபாவத்தை மாற்றிக்கொள்ளலாம்.

முதல் ஸ்திரீ:—அதுதான் மேல்நாட்டுப் பெண்களின் படங்கள் சிலகூடப் புருஷர்களைப்போல் காணப்படுகின்றன போலும்!

ஒருகுரல்:—அக்ராஸனாதிபதி வந்துவிட்டார்!

(இருவரும் உள்ளே போகிறார்கள்.)

அங்கம் IV—காட்சி 2.

[இடம்:—மூன்றும் அங்கம் மூன்றும் காட்சியில் சொல்லப்பட்ட ஹாலின் உள்புறம். கூட்டம் நடந்துகொண்டிருக்கிறது.]

புருஷ அக்ராசனாதிபதி:—நமது கூட்டத்தைக் கலைப்பதற்கு முன் ஒருவார்த்தை சொல்ல விரும்புகிறேன். நமது சகோதரிகள் பிடிவாதமாகத் தங்கள் கொள்கைகளைப் பறையடித்து முழக்கி, கடைசியில் உலகின் சிருஷ்டிகர்த்தர்களுடைய மனத்தையும் மாற்றி ஜயமடைந்ததைப்போல் உலகின் சரித்திரத்தில் ஆச்சர்யமான சம்பவம் எப்பொழுதும் நடந்ததில்லை; நடக்கப்போவதுமில்லை. நினைப்பது நடக்கும்; ஆதியில் உள்ளது அந்தியத்திலும். இனி ஆண் பெண் என்னும் பிரிவு சீக்கிரத்தில் மறையும். நான் சொல்ல வந்தது இவ்வளவுதான். பெண்கள் வெல்க! புதுயுகம் தோன்றுக!!

(கூட்டத்தில் கரகோஷம்)

ஸ்திரீ அக்ராசனாதிபதி:—எனக்கும் ஒருவார்த்தை சொல்ல வேண்டுமென்று தோன்றுகிறது. தங்களுடைய ஊக்கத்தாலும் உதவியாலும் நமது சங்கம் முளைத்து விரிந்து பூர்ணத்தன்மை பெற்று உலகையே மாற்றக்கூடிய லக்ஷியமும் திறமையும் அடைந்ததற்காக எனக்காகவும் என் சகோதரிகளுக்காகவும் எங்களுடைய மனமார்ந்த வந்தனத்தைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தங்களுக்கு எங்களால் வேறு என்ன கைம்மாறுசெய்யக் கூடும்! எங்களுடைய வந்தனம் தங்களைப் பாதுகாக்கட்டும்.

(பலத்த கரகோஷம்; கூட்டம் கலைந்து போகிறது. ஒரு ஸ்திரீ அவசரமாக வருகிறாள்.)

ஸ்திரீ :—அம்மா! சென்ற வாரம் வந்த பத்திரிகை நிருபர்கள் வெளியே காத்திருக்கிறார்கள். வர அனுமதியா என்று கேட்கிறார்கள்.

ஸ்திரீ அக்ராசனாதிபதி :—வரச் சொல்லு.

(நிருபர்கள் வருகை)

முதல்நிருபர் :—நமஸ்காரம்; எங்களை ஞாபகமிருக்குமென நம்புகிறேன்.

ஸ்திரீ அக்ராசனாதிபதி :—இருக்கிறது.

முதல்நிருபர் :—தங்கள் சங்கத்தினுடைய நோக்கங்களும், இது வரையில் நடந்தேறிய கூட்டங்களின் விவரங்களும் முடிவுகளும் உலகத்திற்குத் தெரியாததால் ஆளுக்கு ஒருவிதமாய்ப் பேசத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஸ்திரீ அக்ராசனாதிபதி :—பனங்காட்டு நரியா சலசலப்புக்கு அஞ்சப்போகிறது?

வேறு நிருபர் :—நீர் சற்றுச் சும்மா இரும்; நான் கேட்கிறேன். அவர் பேச்சைத் தள்ளிவிடுங்கள். இங்கே இரண்டொருநாட்களுக்குமுன் உலகப்போக்கையே முழுதும் கவிழ்க்கக்கூடிய ஆணிவேர்த் திட்டங்களும், அமுலுக்குக்கொண்டுவரும் முறைகளும் நீங்கள் கண்டு பிடித்திருப்பதாகக் கேள்விப்பட்டோம். அவற்றைத் தெரிந்துகொள்ள நாங்கள் வெகு ஆவலுள்ளவர்களாக இருக்கிறோம். உலகத்து ஜனங்களும் ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

ஸ்திரீ அக்ராசனாதிபதி :—நண்பர்களே! ரொம்ப சந்தோஷம். தங்கள் விண்ணப்பம் கிரமமானது. ஆனால் எங்கள் கூட்டங்கள், தூதுகள், நோக்கங்கள் இவைகளைப்பற்றி நேர்த்தியான புஸ்தகம் தயாரித்துப் புஸ்தகரூபமாய் வெளியிட உத்தேசித்திருக்கிறபடியால் அவைகளைப்பற்றி விஸ்தாரமாய்ச் சொல்லாததற்கு மன்னிக்கவேணும். இப்பொழுது இந்தத் தீர்மானத்தைப் பார்த்துத் திருப்தியோ அதிருப்தியோ அடையுங்கள். இன்று கூட்டத்தில் நடந்தேறிய தீர்மானம் இதோ! (ஒரு தாளை நீட்டுகிறாள்.)

பத்திரிகை நிருபர் :—சகோதரர்களே! உரக்க வாசிக்கிறேன். எல்லோரும் குறித்துக் கொள்ளுங்கள். (படிக்கிறார்.)

“ஆதியில் உள்ளதை அந்தியத்திலும் சிருஷ்டிக்கவேண்டி ஆண் பெண் என்ற இருவகுப்பையும் ஒரே வகுப்பாக மாற்றிவிட வேண்டுமென்ற முற்பட்டநோக்கத்தை உடைய இச்சங்கம், இனி அர்த்தநாரீசுவரர் என்னும் ஹிந்துமத தெய்விகதத்வத்தை ஜனங்

கள் உணரும்படி போதித்து, ஒரே வகுப்புக்கொண்ட புதுயுகத்தையும் அதை அனுசரித்துப் புதுச்சட்டதிட்டங்களையும், தர்மங்களையும், அவைகள் வேரூன்றித் தழைப்பதற்கு ஜனங்களின் நோக்கத்தையும் சிருஷ்டிகற்பனையையும் சரிவரத் தூண்டி உலகத்தைப் புது மாதிரி அமைப்பதென்ற தீர்மானத்திற்கு வந்திருக்கிறது. இச் சபை அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் இக்கொள்கைகளைப் பரவச்செய்ய வேண்டியது.''

முதல்நிருபர்:—முதல் நம்பர் தீர்மானம்! ஆனால் அக்ராசனுதிபதி அவர்களே! ஒரு சின்ன சந்தேகம். இந்தக் கொள்கை—இந்த ஆவல்—இந்தக் கனவு எப்பொழுது மெய்ப்படும்?

ஸ்திரீ அக்ராசனுதிபதி:—உமக்கு விஸ்தாரமாகப் பதில்சொல்லக் கூடும். ஆனால் இப்பொழுது ரொம்பக் களைப்பாய் இருக்கிறது. சுருங்கச் சொல்லின் இதெல்லாம் நமது விருப்பத்தை—நமது ஆவேசத்தைப் பொறுத்ததாய் இருக்கிறது. ஐம்பது வருஷத்திற்குள்ளும் கைகூடலாம். ஐம்பதினுயிரம் வருஷத்திலும் முடியாதிருக்கலாம். எப்படியும் கலியின் முடிவிற்குள் ஒரு வகுப்பை உலகில் காணலாம். தற்சமயத்தைப் பற்றியவரையில் பிரயத்தனம் மட்டும் எங்கள் பொறுப்பு—தீவ்ரப்பிரயத்தனம். வந்தனம்.

நிருபர்கள்:—தங்களைச் சிரமப்படுத்தியதற்கு மன்னிக்கவேண்டும். போய்வருகிறோம் வந்தனம்.

(எல்லாநிருபர்களும் போய்விடுகின்றனர்; ஒரு நிருபர் பாக்கி.)

நிருபர்:—அம்மா, இன்னுமொரு சந்தேகம்.

ஸ்திரீ அக்ராசனுதிபதி:—கேளும்.

நிருபர்:—கார்ப்பத்தடையைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்னவோ?

ஸ்திரீ அக்ராசனுதிபதி:—அட அசட்டு நிருபரே! சத்திரத்தில் சாப்பாடு இல்லை என்னும்பொழுது இலைபொத்தல் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீரே!

நிருபர்:—மன்னிக்கவேண்டும். ஆமாம் மறந்துபோய்விட்டேன். அநேக வந்தனம்.

ஸ்திரீ அக்ராசனுதிபதி:—(முகத்தைக் கைக்குட்டையில் துடைத்துக்கொண்டு) அப்பாடா! ஒரு பெரிய காரியம் முடிந்தது.

(ஒரு பெரிய நிலைக்கண்ணாடிமுன்பு உட்காருகிறாள்.)



தமிழ்மகள் திருநாள்

மார்ச்சுமீ 6-ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் தமிழ்மயமாக விளங்கியது. தமிழ்மகளை முடிசூட்டிய பெரியாருடைய சதாபிஷேகத்திருவிழா, தமிழ்மக்களால் மிகச் சிறப்பாகப் பல இடங்களிற் கொண்டாடப்பட்டதென்பதைப் பத்திரிகைகள் வாயிலாக அறிந்து மகிழ்கிறோம்.

அன்று, சென்னைமாநகரில் நிகழ்ந்த கொண்டாட்டம் தனிச் சிறப்புடையதாக இருந்தது. ஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களுடைய வாஸஸ்தானமாகிய தியாகராஜ விலாஸத்தில் 5-ஆம் தேதிமுதல் வைதிகமுறைப்படி சதாபிஷேக உத்ஸவத்திற்குரியன நடைபெற்றன. 6-ஆம் தேதிகாலையில் தமிழ்ப் பெரியாருடைய திவ்ய தரிசனத்தைக் காணவேண்டிப் பல வகையான அன்பர்களும் கூடியிருந்தனர். பல புண்ணிய தீர்த்தங்களால் அபிஷேகம் நடந்தபின்னர், பல வகையான தானங்கள் வழங்கப் பெற்றன. ஸ்ரீ ஐயரவர்களுடைய குமாரர் ஸ்ரீமான் கலியாணசுந்தரையரவர்கள் தம்முடைய கடமையை நன்குணர்ந்து செய்யவேண்டியவற்றைக் குறைவின்றி மிகவும் சிரத்தையோடு செய்வித்தனர். இத்தகைய பெரிய விசேஷம் நடைபெறுதல் அருமையாதலின் இதனைப் பார்க்கவேண்டுமென்னும் அவாவினால் தூண்டப்பெற்றுப் பல அன்பர்கள் வந்து கூடினர்.

அன்றுமாலை ஸெனெட் தோட்டத்தில் ஸ்ரீமான் கல்யாண சுந்தர ஐயரவர்களால் யாவருக்கும் தேநீர் விருந்து அளிக்கப் பட்டது. பிறகு ஸெனெட் மண்டபத்தில் பாராட்டுக் கொண்டாட்டம் நடை பெற்றது.

இவ்வளவு சிறந்த அமைதியுள்ள கூட்டத்தை இதுவரையில் கண்டதில்லை என்பதே எங்கும் பேச்சாக இருந்தது. நகரத்தி லுள்ள பிரமுகர்களிற் பெரும்பாலோரும் தமிழ்ப் புலவர்களும் மாணுக்கர்களும் பிறரும் இந்தக்கூட்டத்திற் காணப்பட்டனர். வெளியூரிலிருந்தும் பலர் வந்திருந்தனர். கூட்டத்திற்கு ஸர் மஹமத் உஸ்மான் ஸாஹிப் பகதூர் அவர்கள் தலைமை வகித்தார். ஐயரவர்களுக்குப் பல உபசாரபத்திரங்கள் படித்து அளிக்கப் பட்டன.

முதலில் நண்பர்களும் அபிமானிகளும் அளித்த உபசாரபத்தி ரத்தை ஸ்ரீமான் சிவராம சேதுப்பிள்ளையவர்கள் வாசித்தளித்தார். அந்தப்பத்திரம் பனையேட்டில் எழுதப்பெற்றிருந்தது; இரண்டு தந்தயானையால் தாங்கப்பெற்ற ஒருவெள்ளிக் குழாயில் வைத்து அளிக்கப்பட்டது. அவ்வுபசாரபத்திரம் வருமாறு:—

* * *

தமிழ்ப்பேராசியராகிய ஐயரவர்களே!

இறைவன் திருவருளால் எண்பது பிராயம் நிறைந்து விளங்கும் தங்களை இன்று உபசரிக்கும் பாக்கியம் எங்களுக் குக் கிடைத்ததைப்பற்றி நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகி ரோம்.

இளமைப் பருவம் தொடங்கித் தமிழ்க் கல்வியில் பேராவல் கொண்டு ஒழுங்கான பழைய முறையில் தமிழ்நூல்களை நல்லாசிரியரிடம் கற்றுத் தாங்கள் அடைந்துள்ள பேரறிவு தமிழுலகத்திற்கே பெரும்பேருக அமைந்து இன்பம் பயப்ப தாயிற்று.

பலகாலமாகப் படிப்பாரும் தேடுவாரும் இன்றிச் சிதலுக்கு இரையாகி அழியும் நிலையிலிருந்த அரிய தமிழ்நூல்களை அழியாவண்ணம் தாங்கள் தேடித் தொகுத்து ஆராய்ந்து வெளியிட்டுச் சிறந்த பதிப்பாசிரியராக விளங்குகிறீர்கள். தமிழ்நாட்டின் பூர்வசரித்திரத்தையும் தமிழ் மக்களின் அருமை பெருமைகளையும் உலகம் உணர்வதற்குக் கருவி

யாகிய பழைய நூல்கள் பலவும் தங்களது தனிஉழைப்பினுல் அல்லவோ கிடைத்துள்ளன?

தாங்கள் வெளியிட்ட நூல்களில் எழுதிய முன்னுரைகளாலும் குறிப்புரைகளாலும் விஷய அகராதி முதலியவற்ருலும் தமிழ்நூற் பதிப்புக்களுக்குப் புதிய பெருமை ஒன்றைத் தாங்கள் அளித்திருக்கிறீர்கள். இக்காலத்தில் வெளிவரும் ஆராய்ச்சிகளுக்கெல்லாம் தாங்கள் மூலாதாரமாக இருக்கிறீர்கள்.

தமிழ் நாட்டிலே இதுவரையில் இல்லாத புதிய முறையில் தமிழ்ப் பெரியார் ஒருவருடைய ஜீவிய சரித்திரத்தை எழுதி உதவிச் சிறந்த நூலாசிரியராகவும் விளங்குகிறீர்கள். தங்களுடைய வசன நடையானது இனிமையும் தெளிவும் உடையதாகவும், எளிமையால் தங்கள் பெருமையை விளக்குவதாகவும் அமைந்துள்ளது.

மணிமேகலை பெருங்கதை முதலிய நூல்களில் வரும் அரிய விஷயங்களை விளக்கித் தாங்கள் எழுதியுள்ள குறிப்புரைகள், தாங்கள் சிறந்த உரையாசிரியர் என்பதைக் காட்டுகின்றன.

திருவாவடுதுறை மடத்திலும், கும்பகோணம் சென்னை ஆகிய இடங்களிலுள்ள அரசாங்கக் கலாசாலைகளிலும், சிதம்பரம் ஸ்ரீ மீனுட்சி தமிழ்க்கல்லூரியிலும் கல்விகற்ற மாணவர்களுக்கும், தங்களை நாடிய வித்தியார்த்திகள் பலருக்கும் தமிழ்ச் சுவையையும் அறிவையும் நன்கு ஊட்டிய போதகாசிரியராகவும் தாங்கள் விளங்குகிறீர்கள்.

நிரம்பிய கல்வியாலும், நன்கு ஆராய்ந்து தெளிந்த பின்பே நூல்களை வெளியிடும் பொறுமையாலும், இடையூறுகளைப் பொருட்படுத்தாத விடாமுயற்சியாலும், அபாரமான ஞாபகசக்தியாலும், உள்ளதை உள்ளபடி பதிப்பிக்கும் அரியகுணத்தாலும், தூய்மை நிலையாலும், செய்ந்நன்றிமறவாத பெருந்தன்மையாலும், உடல்தளர்ந்தும் தமிழ்ப்பணியில் தளராத

மனஉறுதியாலும் தாங்கள் தமிழ்நாட்டிற்கு ஒரு திலகமாக விளங்கிக்கொண்டிருக்கிறீர்கள்.

அறிவிற் பெரிய தமிழ்ப்பெருமுதியாராகிய தாங்கள் அரோகதிடகாத்திரராய்த் தமிழ்த்தாயின் திருப்பணிகளை மேன்மேலும் செய்துகொண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து விளக்கும்படி செய்விக்கும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

* * *

பிறகு கொண்டாட்ட ஸபையின் சார்பில் கனம் பி.டி. ராஜன் அவர்கள் 3001 ரூபாய்க்குரிய உண்டிய லடங்கிய வெள்ளிப் பையொன்றை ஐயரவர்களிடம் சேர்ப்பித்தார். பொதுமக்கள் பலரும் அன்போடளித்த நிதியிலிருந்து இத்தொகை வழங்கப் பெற்றது. பின்பு சென்னைப் பண்டிதசங்கத்தாருடைய உபசாரபத்திரம் ஓர் அழகிய வெள்ளிப்பேழையில் வைத்து அளிக்கப் பெற்றது. அப்பால் சென்னை ஸம்ஸ்கிருத ஸேவாஸமிதியாருடைய வடமொழி அபிநந்தனபத்திரம் ஒன்று ஒரு தந்தப் பேழையில் வைத்துக் கொடுக்கப்பட்டது. பின்பு வித்வச்சிரோமணிமண்டலத்தாரால் வடமொழி அபிநந்தனபத்திரமொன்றும் தமிழ் வாழ்த்துச்செய்யுள் இரண்டும் படித்தளிக்கப்பட்டன. சென்னைப் புத்தகாலயப் பிரசாரசங்கத்தின் சார்பாக ஆங்கிலத்தில் கையால் எழுதப்பெற்றிருந்த உபசாரபத்திரத்தை ஸ்ரீமான் ஏ. ராமசாமிமுதலியாரவர்கள் வாசித்தளித்தனர். அந்தப்பத்திரம் மிக அழகாக எழுதப்பட்டிருந்தது. அதன் ஓரங்களில் ஐயரவர்களாற் பதிப்பிக்கப்பெற்ற நூற்பெயர்கள் காலமுறைப்படி வரிசையாகத் தொங்கல் மாலையைப்போல எழுதப்பட்டிருந்தன. அப்பத்திரம் ஒருவெள்ளித் தட்டில் வைத்துத் தரப்பட்டது. தமிழ்ப் போகராதி நிர்வாக சபையார் உபசாரச் செய்யுளும், வண்ணைத் தமிழபிவிருத்திக் கழகத்தாரின் செய்யுளும், கும்பகோணம் காலேஜ் பழைய மாணவர் சங்கத்தார், கும்பகோணம் காலேஜ் ஆசிரியர்களும் மாணவர்களும் ஆகியவர்களுடைய பத்திரங்களும் பிறகு வாசிக்கப்பட்டன. பின் கூறிய உபசாரபத்திரத்தில், ஐயரவர்கள் தம் சுய சரிதையை எழுதி வெளியிடவேண்டும்

என்ற வேண்டுகோள் காணப்படுகிறது. அப்பால் சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ச்சங்கமாணவர்களது உபசாரபத்திரம் ஓர் அழகிய தந்தக் குழாயில் வைத்து வழங்கப்பட்டது. லயோலா காலேஜ், சென்னைக் கவர்ன்மெண்டு மகமதியர் காலேஜ், பச்சையப்பன் காலேஜ் என்பவற்றிலுள்ள தமிழ்மாணவர்கள் சார்பாக மூன்று பத்திரங்கள் பின்னர் வாசித்து வழங்கப்பட்டன.

அதன்பின் நண்பர்கள் வழங்கிய ஸம்மானங்கள் அளிக்கப்பட்டன. ஸ்ரீ ஐயரவர்களெழுதியுள்ள ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரத்தைப் படித்து, ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே உள்ள சிறந்த தொடர்புக்கு அந்நூல் இணையற்ற உதாரணமாக விளங்குகின்றதென்பதை அறிந்து, அதன்பால் ஈடுபட்டு, ஸ்ரீ ஐயரவர்களுடைய வரலாறு அதனினும் பன்மடங்கு உயரிய செய்திகளையும் தமிழ்மகளின் சரித்திரத்தையும் வெளிப்படுத்தித் தமிழுலகுக்கு வழிகாட்டியாக நின்று நிலவுமென்ற எண்ணந்தூண்ட அச்சரித்திரத்தை எழுதி வெளியிடும்பொருட்டு ஓர் அபிமானி, கொண்டாட்ட ஸபையினருக்கு ரூ-501 அனுப்பியிருந்தனர். அது பிறகு வழங்கப்பட்டது. அவ்வபிமானி தம் பெயரை வெளியிட விரும்பவில்லை. இது மிகவும் அருமையான செயலென்பதை நாம் கூறவேண்டியதில்லை. தமிழர்களிடையே ஐயரவர்களுடைய உழைப்பு வியக்கத்தக்க உணர்ச்சியை உண்டாக்கி யிருக்கிறதென்பதற்கு இவ்வபிமானியின் செயலும் ஒரு சான்றாகும்.

* * *

பின், ஸ்ரீ ஐயரவர்கள் எழுந்து பின்வருமாறு பேசினார்கள்.

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் - திருந்த
உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்
பதிப்பிக்க வேகடைக்கண் பார்.

அக்கிராசனாதிபதி யவர்களே! பெண்மணிகளே! அன்பர்களே!

என்னுடைய 81-ஆவது ஜன்ம தினமாகிய இன்று உங்களெல்லோரையும் கண்டு உங்களுடைய அன்பு நிறைந்த

உபசாரங்களைப் பெறவைத்த இறைவன் திருவருளை வழுத்து கின்றேன்.

இப்பொழுது வாசிக்கப் பெற்ற உபசார பத்திரங்களில் என்னை அளவுக்குமேலே புகழ்ந்திருக்கிறீர்கள். அவை உங்களுடைய பேரன்பை விளக்குகின்றன. அவற்றில் என்பால் உள்ளனவாகச் சொல்லப்பட்ட இயல்புகள் யாவும் என்னிடத்தில் இல்லையாயினும் இன்னபடி இருப்பது நலம் என்ற எண்ணத்தை அவை உண்டாக்குகின்றன. என்னுடைய இளம்பிராயந் தொடங்கித் தமிழ்த்தாயின் திருப்பணியை எனக்குத் தெரிந்தவரையில் செய்து வருகிறேன். எனது உழைப்பு உங்களுக்கெல்லாம் உவப்பைத் தந்திருக்கின்றதென்பதை இந்த உபசாரபத்திரங்கள் மூலமாக உணர்ந்து என் உள்ளம் நிறைவடைந்து குளிர்கின்றது. நீங்கள் அளித்த நிதி முதலியவைகளைத் தமிழ் அன்னையின் அருள்வடிவென்றே எண்ணுகிறேன். தமிழ் நாட்டின் பல வேறிடங்களிலிருந்து பல வகையினரும் சேர்ந்து அளிப்பனவாதலின், இவை தமிழ் நாட்டார் என்பாற்கொண்டபேரன்புக்கும் தமிழபிமானத்திற்கும் அடையாளங்களாக இருக்கின்றன.

இப்பொழுது என்னுடைய மனம் சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருக்கின்றது. இறைவன் தரிசனம் அளித்ததைச் சொல்லும்போது, 'சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி' என்று சேக்கிழார் கூறியது நினைவுக்கு வருகிறது. மீண்டும் இளமை வந்தாற்போன்ற ஊக்கம் உண்டாகிறது. இன்னும் நான் செய்ய எண்ணியிருக்கும் பல தமிழ்ப்பணிகளும் இடையூறின்றி நிறைவேறும், தமிழர் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

இந்தக் கொண்டாட்டத்தை நடத்த முன்வந்த நிர்வாக சபையார்பால் நான் மிக்க நன்றியறிவு பாராட்டுகின்றேன். இந்த ஸந்தர்ப்பத்தில் தமிழ் நாட்டாருடைய நல்லன்பை நான் நன்கு அறிந்து ஊக்கம் பெற அவர்கள் முயற்சி உபகாரமாயிற்று. நிதிக்கு உதவி செய்தவர்களுக்கும்,

உபசாரபத்திரங்கள் வாசித்தளித்த ஸ்தாபனங்களுக்கும், அன்பர்களுக்கும், பத்திரிகைகளில் என்னைப் பாராட்டி எழுதிய பத்திரிகாசிரியர்களுக்கும், பிற அன்பர்களுக்கும் என் நன்றியறிவைத் தெரிவிப்பதையன்றி வேறு என்செய்ய வல்லேன்!

இவ்வளவு உபசாரத்திற்கும் நான் ஒருவனே உரியவனல்லன். என் இளமை தொடங்கி எனக்குப் பாடம் சொல்லி வந்த ஆசிரியர்களுக்கும் அவ்வப்போது என்னை ஆதரித்து வந்தவர்களுக்கும் என்னுடைய பதிப்புக்களுக்கு ஏடுதருதல்முதலிய பலவகை உதவிகளைச் செய்தவர்களுக்கும் உடனிருந்து ஸஹாயம் செய்தவர்களுக்கும் பிறருக்கும் இவ்வுபசாரத்திற் பங்கு உண்டு. அவர்கள் உதவி இன்றி நான் என்னுடைய தமிழ்ப்பணிகளை இயற்றமுடியுமோ?

பவ வருஷமாகிய இவ்வாண்டு என்னுடைய ஆசிரியராகிய ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிறந்த வருஷம். எனது ஜன்மதினமாகிய உத்தரட்டாதி அவர்களுடைய ஜன்மதினமாகிய பூரட்டாதியை அடுத்துள்ளது. அவர்களுடைய ஜனனத்தை நினைவுறுத்தும் இவ்வாண்டில் நான் இத்தகைய உபசாரங்களைப் பெற்றது அவர்களுடைய அன்பு இன்னும் என்னை பாதுகாத்து நிற்கின்றது என்பதைக் குறிக்கின்றது. எனக்குத் தம்முடைய தமிழாசிரியர் ஸ்தானத்தை அளித்துப் பாதுகாத்த ஸ்ரீ தியாகராச செட்டியாரவர்களுடைய அன்பை நினைக்கின்றேன். அவர்கள் முயற்சியால் ஒரு நல்ல ஸ்தானம் எனக்குக்கிடைத்ததற்கு அறிகுறியாக நான் இருக்கும் இடத்திற்குத் தியாகராஜவிலாஸம் என்ற பெயரை வைத்தேன். புகழுடம்பில் இருந்து என்னைப் பாதுகாக்கும் அவர்களுடைய இயல்பு என் நெஞ்சைவிட்டு என்றும் அகலாது. திருவாவடுதுறை யாதீனத்தில் இளமை தொடங்கி நான் அடைந்துவரும் பலவகையான ஆதரவுகளை நினைந்து உள்ளம் உருகுகின்றேன். தக்கயாகப்பரணி முதலிய ஏட்டுச்சுவடிகளை எனக்கு வழங்கிய தருமபுரமடத்தார் உபகாரத்தை என்றும் மறவேன். எனது உருவப்

படத்தை இங்கே அமைக்கத் தந்து என்னைப் பிரகாசப் படுத்திய திருப்பனந்தாள் காசி மடாலயத் தலைவர்களை மனமார வாழ்த்துகின்றேன்.

இந்தக் கொண்டாட்டத்திற் கலந்து கொண்டு தங்களுடைய அன்பைப்புலப்படுத்திய எல்லோருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியை மீண்டும் செலுத்துகின்றேன்.

அயர்ச்சியினாலும் மறதியினாலும் பல அன்பர்களையும் பற்றிச் சொல்ல நேரமின்மையினாலும் இங்கே சொல்லப் படாத அன்பர்கள் யாவரும் இதுகாறும் சொன்னவற்றைத் தமக்கும் உரியனவாகக் கொள்ளும்படி வேண்டுகின்றேன். எல்லோருக்கும் நன்மையை உண்டாக்கியருளும்படி ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கின்றேன்.

* * *

அப்பால் ஸர் உஸ்மான் அவர்கள் ஐயரவர்களைப் பாராட்டிப் பேசி அவர்களது உருவப்படத்தைத் திறந்துவைத்தார். அப்படம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்களாகிய ஸ்ரீ சாமிநாதத் தம்பிரானவர்களால் உதவப் பட்டது. அதனைச் சர்வகலாசாலையின் சார்பில், வைஸ்சான்ஸலர் ஸ்ரீமான் லிட்டில் ஹேல்ஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டார். அப்பால் ஸ்ரீ காயகசிகாமணி ஹரிகேசவ நல்லூர் முத்தையா பாகவதரவர்கள் தமிழ்ப் பாட்டுக்கள் பாடினார். கொண்டாட்டம் இனிதே நிறைவேறியது.

கூட்டத்திலிருந்தவர்களுக்குக் கலைமகள் வெளியீடாகிய ஐயரவர்கள் சதாபிஷேகமலரும், உபசாரபத்திரங்கள் அச்சிட்ட புத்தகமும் வழங்கப்பட்டன.

* * *

தமிழ்மகளின் திருநாளாகிய இது ரங்கூனிலும், யாழ்ப்பாணத்திலும், தமிழ்நாட்டிற் பலவேறிடங்களிலும் கொண்டாடப் பெற்றதாக அறிகிறோம். பல இடங்களில் ஐயரவர்களுடைய உருவப்படம் திறந்துவைக்கப்பெற்றது. தமிழ்நாட்டார் தமிழ்மொழியின்பால் மிக்க அன்பு உடையாரென்பது இக்கொண்டாட்டத்தால் நன்கு உறுதிபெற்றது. பல இடங்களில், ஐயரவர்களுடைய வரலாற்றை அவர்களே எழுதி வெளியிட வேண்டுமென்ற



ஸர் மகமத் உஸ்மான் ஸாஹிப் பகதூர் அவர்கள்.

தீர்மானம் நிறைவேறியிருக்கின்றது. தமிழர்களுடைய இந்த ஆசையை தமிழ்ப்பெரியார் மிக்க உவப்போடு நிறைவேற்றவேண்டும் என்று நாமும் வணங்கி வேண்டுகின்றோம்.

இந்த மலர்

கலைமகளின் பங்குனிமாத வெளியீடாகிய இதனை மகாமகோபாத்தியாய ஐயரவர்களுடைய சதாபிஷேக மலராக வெளியிட வாய்த்தது குறித்து மிகமகிழ்கின்றோம். இந்தமலருக்காக ஐயரவர்களுடன் பழகிய பல அன்பர்களிடம் கட்டுரை எழுதி உதவும்படி வேண்டிக்கொண்டோம். அவர்கள் புரிந்த பேருதவிகளே இந்த மலரை இவ்வளவு அழகுபெறச்செய்தன. எனவே இம்மலரில் எழுதியுள்ள அனைவருக்கும் எமது நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்கிறோம். மார்ச்சுமீ 6-ம் தேதியன்று இம்மலரின் முன் 64 பக்கங்களை மட்டும் தனியே தைத்து ஸெனெட் மண்டபத்தில் வழங்க ஏற்பாடு செய்திருந்தோம். அந்த மாபெருங்கூட்டத்தில் 'கலைமகள் மலர்' சிறப்பாக விளங்கியது. பல அன்பர்கள் அதனைப்பற்றிப் பாராட்டினார்கள்.

தமிழ்ப் பெரியாருடைய பெயரால் கலைமகள் செய்ய முன் வந்த இச்சிறு தொண்டை அன்பர்கள் ஆதரிக்கும்போது கலைமகள் பெருமைப்பட நியாயம் உண்டு அல்லவா?

கவிதைப் பரிசு

கவிதைப்பரிசைப் பற்றிய முடிவை அறிய அன்பர்கள் மிக ஆவலாக இருப்பார்களே என்ற கவலை ஒருபாலிருந்தாலும் வேறொரு தமிழ்த் தொண்டில் ஈடுபட்டோம் என்ற ஒரு சமாதானம் அதை மறக்கச் செய்கிறது. இந்தமலரை வெளியிடுவதிலேயே எமது கவனம் முற்றும் செலுத்தப்பட்டமையின் கவிதைகளை ஆராய்ந்து பரிசை வழங்குவதற்குரியவற்றைச் செய்ய இயலவில்லை. புதுவருஷம் வரப்போகிறதல்லவா? வருஷப்பிறப்பன்று கவிதைப்பரிசை வழங்கலாமென்று நம்புகிறோம். பரிசுபெற்ற கவிதையும் புதுவருஷ இதழில் வெளிவரும்.



அன்னபூர்ணதேவி



விதியின் திறம்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

தமிழ்நாட்டில் வழங்கும் தனிப்பாடல்கள் பல. அவற்றைப் பாடிய புலவர் பலருடைய வரலாறுகள் சொல்வாரற்று மறைந்தன. சில தனிப்பாடல்கள் இயற்றிய புலவர்களைப் பற்றியும் அப்பாடல்கள் இயற்றப்பட்ட ஸந்தர்ப்பங்களைப் பற்றியும் அங்கங்கே கர்ணபரம்பரையாகச் சில சில செய்திகள் அப்பாடல்களோடு வழங்கி வருகின்றன. என்னுடைய இளமைக் காலத்தில் அத்தகைய செய்திகள் பலவற்றை நான் கேட்டிருக்கிறேன். சில தனிப்பாடல்களைப் பற்றிய வரலாறுகள் மிகுந்த வியப்பை யூட்டும். இக்காலத்தில் அவ்வரலாறுகளைக் கூறுவாரும் கேட்பாரும் அரியராயினர். அவற்றுள் ஒன்று வருமாறு:—

'மூவேந்தரு மற்றுச் சங்கமும் போய்' விட்ட காலத்தில் தமிழ் நாட்டில் ஒருசமயம் பஞ்சம் உண்டாயிற்று. அப்பொழுது புலவர்களை ஆதரிக்கும் பிரபுக்கள் அரியராயினர். நாட்டில் கொள்ளைக்கூட்டங்கள் மிக்கன. புலவர்கள் வறுமையின் மிகுதியால் தாம் கற்ற கல்வியை வெறுத்துப் பேசும் நிலைக்கு வந்துவிட்டனர்.

அக்காலத்தில் ஒருபுலவர் தம்மை ஆதரிப்பாரின்றி வருந்தினார். அவர் சிவபக்தி மிக்கவர்; வேறொரு தொழிலும் செய்ய அறியார். ஆதலின் வேறு எங்கேயாவது சென்று ஜீவனம் செய்யலாமென்னும் நினைவுடன் தம்மனைவியோடு புறப்பட்டு அயலிடத்துக்குப் பிரயாணஞ் செய்யலானார்.

அவர்கள் ஒரு காட்டின் வழியாகச் செல்ல நேர்ந்தது. அக்காட்டில் சிலர் கூடிப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் புலவரையும் அவர் மனைவியையும் கண்டு அணுகவந்தார்கள். அவர்களுடைய தோற்றம் அஞ்சத்தக்கதாக இருந்தது. அக்கூட்டத்தினரைக் கண்ட புலவருடைய மனைவி அஞ்சி, "சகோதரர்களே, என்னையும் என் கணவரையும் காப்பாற்ற வேண்டும். நாங்கள் ஜீவனத்துக்கு வழியில்லாமல் வேறு தேசங்களுக்குப் போய்ப் பிழைக்கலாமென் றெண்ணி வருகிறோம். உங்களைக் கண்டால் நல்ல புண்ணியசாலிக ளென்று தோற்றுகிறது" என்று சொல்லி அழுதாள். அவள் சகோதரர்களென்றழைத்ததைக் கேட்டு அக்கூட்டத்தில் இருந்த ஒருவன் மனமிரங்கி அவ்விருவரையும் பார்த்து, "நீங்கள் பயப்படவேண்டாம். நாங்கள் உங்களைக் காப்பாற்றுகிறோம். நீங்கள் இனி எங்களோடே இருக்கலாம். எங்களுடைய சகோதரியையும் சகோதரி புருஷரையும் போல உங்களைப் பாதுகாத்து வருவோம். எங்களுக்குக் கிடைக்கும் லாபத்தில் உங்களுக்கும் பங்குதருவோம். எங்களோடு சேர்ந்து உழைக்கவேண்டும்" என்றான்.

புலவர்:—அப்படியே செய்கிறேன். நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள்?

அவன்:—நாங்கள் திருட்டுத்தொழில் செய்வோம்.

புலவருக்கும் அவருடைய மனைவிக்கும் அப்பொழுதுதான் அவர்கள் கள்வரென்று தெரியவந்தது. புலவர் சற்று நேரம் யோசித்தார்.

கள்வர் தலைவன்:—என்ன யோசிக்கிறீர்? நாங்கள் ஏழைகள் வீடுகளிலும் தர்மவான்கள் வீடுகளிலும் போய்த் திருட மாட்டோம். பிறருக்குக் கொடாமல் தாமும் உண்ணுமல் பணத்தைச் சேர்த்துவைத்திருக்கும் லோபிகள் வீட்டிலேதான் திருடுவோம். நல்லவர்கள் வீட்டிற்குத் திருடப்போனால் அபசகுனங்கள் உண்டாகும். கன்னம் வைக்கும் போது தேள் கையில் கொட்டும். அப்பொழுது நாங்கள் அஞ்சித் திரும்பி விடுவோம்.

கள்வர்தலைவன் திருட்டுத் தொழிலைப்பற்றி மேலும் சொல்லி நிறுத்தினான்.

புலவர் 'இதுவும் சிவன் செயல்போலும்!' என்று எண்ணி மறுக்கமுடியாமையால் அவர்களோடு இருக்க உடன்பட்டார். கள்வர்கள் அவ்விருவருக்கும் காட்டுக்குள் தனி இடம் அமைத்துக் கொடுத்து வேண்டியவற்றை அளித்து ஆதரித்து வந்தார்கள். தீத்தொழிலை உடையவர்களாயினும் அவர்களுக்கு இருந்த அன்புடைமையை நினைந்து நினைந்து அப்புலவர் வியந்தார். நாளடைவில் நல்லுபதேசம் செய்து அவர்களைத் திருத்திவிடலாமென்று எண்ணினர்.

ஒருநாள் கள்வர்தலைவன் புலவரையும் திருட வரும்படி அழைத்தான். 'குரங்குக்கு வாழ்க்கைப்பட்டால் மரம் ஏறு திருக்கமுடியுமோ?' முன்பே வாக்குக் கொடுத்தபடி செய்யவேண்டியவராதலின் புலவர் அதற்கு இணங்கினர்.

பக்கத்திலிருந்த ஊரிலுள்ள ஒரு ஜமீன்தாருடைய அரண்மனையில் அன்று திருட எண்ணிக் கள்வர் சென்றனர். புலவரும் உடன் சென்றார். சென்ற கள்வர் ஜமீன்தார் அரண்மனையை அடைந்து ஒரு பக்கத்திற் கன்னமிட்டுப் புலவரை உள்ளே போய் உளவறிந்துவரச் செய்தனர்.

கன்னமிட்ட துவாரத்தின் வழியாகப் புலவர் நுழைந்து உள்ளே சென்றார். அவர் சென்ற இடம் அரண்மனையின் அந்தப்புரமாக இருந்தது. அங்கே ஓரிடத்தில் ஒரு பெரிய மஞ்சத்தில் ஜமீன்தாரும் அவர் மனைவியும் உறங்கிக் கொண்டிருந்தனர். நிலைக் கண்ணாடிகளும் அழகிய விளக்குக்களும் வேறுபல அலங்காரப் பொருள்களும் அவ்விடத்தை அழகுசெய்து விளங்கின. அவற்றைக் கண்ட புலவர் வியந்து இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்தார்; பிறகு அந்த மஞ்சத்தின்கீழே புகுந்து மறைவாக இருந்து என்ன செய்வதென்று யோசிக்கலானர்.

இரவின் நான்காம் ஜாமத்தில் ஜமீன்தாரும் அவர் மனைவியும் விழித்துக் கொண்டனர். ஜமீன்தார் தமிழ்ப்பயிற்சி மிக்கவர்; தமிழ்நயம் கண்டு இன்புற்றுப் பொழுதுபோக்கும் இயல்புள்ளவர். அவர் மனைவியும் தமிழன்பு மிக்கவள். விழித்துக்கொண்ட அவ்விருவரும் ஒருவரோடொருவர் ஸல்லாபம் செய்யத்தொடங்கினார்கள். சில நேரத்திற்குப்பின் இருவரும் சேர்ந்து புதுச் செய்யுளொன்றை இயற்றலானார்கள்.

ஜமீன்தார் முதல் இரண்டடியில் ஒருவினாவை அமைத்துக் கூறினார். அவர் மனைவி அவ்வினாவுக்குரிய விடையை அமைத்துப் பின் இரண்டடியையும் பூர்த்திசெய்ய முயன்றாள்.

புலவர் கீழே இருந்து எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்தார். அவர்காதில் அத்தமிழ்ச் செய்யுள் இனிமையோடு புகுந்தது. கள்வருக்கிடையில் இருந்து தமிழ்நூல்களைப் பற்றி நினைக்கச் சமயம் இன்றித் தமிழுக்கு அலந்திருந்த அவர் மனம் அப்பொழுது உணர்ச்சியுடையதாயிற்று. ஆகவே அவர் அவ்விருவர் ஸல்லாபத்திலும் ஒன்றிவிட்டார். ஜமீன்தார் சொன்ன செய்யுளின் முற்பாதிக்கு ஏற்ற பிற்பாதி அநாயாசமாக அவருக்குத் தோற்றியது. அதைச் செவ்வையாக மனத்துக்குள் அமைத்துக் கொண்டார். தமக்கு அப்பொழுது உண்டான ஊக்கத்தில் அவர் தாம் களவுசெய்ய வந்திருப்பதையும் மறைவாக இருப்பதையும் மறந்தார். ஒருஸபையில் தமக்குக் கொடுக்கப்பட்ட ஸமஸ்யையைப் பூர்த்திசெய்யும் நிலையில் இருப்பதாக எண்ணினார். ஜமீன்தார் தாம் முடித்த முற்பாதியை மீண்டும் மனைவிக்குச் சொல்லிக் காட்டினர். உடனே புலவர் தாம் முன்பே மனத்துள் முடித்துவைத்திருந்த பிற்பாதியைத் தொடர்ந்து கீழே இருந்தபடியே கூறினார்.[1]

ஜமீன்தார் திடுக்கிட்டார். அவர் மனைவி சரேலென்றெழுந்துவேறிடஞ் சென்றாள். ஜமீன்தார், "யார் அங்கே?" என்று அதட்டிக் கேட்டார். புலவர் தம்முடைய நிலை இன்னதென்பதை அப்பொழுது உணர்ந்தார்; மெல்ல வெளியே வந்து உடல் நடுக்கத்தோடு நாக்குழறத் தம்முடைய வரலாற்றைச் சொன்னார்.

ஜமீன்தார் முதலில் கோப மிக்கவராக இருந்தாலும், தமிழ்ச் சுவையறிந்தவராதலின் புலவர் தமது வரலாற்றைக் கூறிக் கொண்டு வரவர அவர் மனம் இளகியது. பசிப்பிணி புலவரை அந்நிலைக்குக் கொண்டுவந்ததென்பதை நினைக்கையில் அவர் மிக இரங்கினார்.

புலவர் :—ஏதோ ஊழ்வினை வசத்தால் இந்த ஸங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டேன். நான் முன்பே உயிரைவிட்டிருப்பேன். தமிழை மறந்துவிட்டு உயிர்தரித்திருப்பதில் என்ன பயன் இருக்கிறது? என்னுடைய மனைவியொருத்தி இருக்கிறாள். அவளுக்காக உயிர்வைத்திருக்கிறேன். என்செய்வேன்! என்னை

---

1. அச்செய்யுள் இப்பொழுது என் ஞாபகத்துக்கு வரவில்லை.

எசமானவர்கள் காப்பாற்றவேண்டும். அன்றியும் மற்றொரு வரம் அருளவேண்டும். என்னோடு வந்திருக்கும் கள்வர்கள் சில நற்குணங்களை உடையவர்கள்; லோபிகள் வீட்டிற்குத்தான் சென்று திருடுவார்கள். இன்று தவறி இங்கே வந்துவிட்டார்கள். அவர்கள் இதுவரையில் எங்களைப் பாதுகாத்துவந்தார்கள். அவர்களை இப்பொழுது தாங்கள் துன்புறுத்தாமல் விட்டுவிடவேண்டும். என்னால் அவர்கள் அகப்பட்டுக் கொள்ளலாகாது.

புலவருடைய நன்றியறிவின் மிகுதியை ஜமீன்தார் உணர்ந்தார். அவருடைய மனம் அதிகமாக இரங்கியது:

"ஐயா! நீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். உம்முடைய நண்பர்களை நான் ஒன்றும் செய்யேன். இதோ என்னுடைய பொக்கிஷ அறையைக் காட்டுகிறேன். அங்கே உள்ளவற்றில் உமக்கு வேண்டியவற்றை எடுத்துக்கொண்டு போய் உம்முடைய நண்பர்களுக்கும் கொடுத்து ஸௌக்கியமாக இரும்" என்று சொல்லி ஜமீன்தார் புலவரை ஓர் அறைக்குள் அழைத்துச் சென்றார். அவ்வறையில் பலவகையான ஆடையாபரணங்கள் நிறைந்திருந்தன. முளைகளில் முத்துமாலைகளும் ரத்தினமாலைகளும் பொன்மாலைகளும் மாட்டப்பட்டுத் தொங்கின. கொடிகளில் உயர்ந்த பட்டுப் பீதாம்பரங்கள் இருந்தன. அவைகளை யன்றிக் கீழே சிலபெட்டிகளும் இருந்தன.

ஜமீன்தார், "இவற்றுள் எதுவேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம்" என்றார். அங்கே இருந்தவற்றைக் கண்ட புலவர் வியப்பே உருவமாக நின்றார். இன்னதை எடுத்துக்கொள்வதென்று தோற்றவில்லை. 'யாவருக்கும் பங்கிட்டுக் கொடுக்கத் தக்கதாக இருக்கவேண்டுமே' என்று யோசித்தார். சிலசில ஆபரணங்களைக் கையால் தொட்டுப் பார்த்தார். சிலவற்றை எடுத்துப்பார்த்தார். பித்துப் பிடித்தவர் போலச் சிலநேரம் ஒன்றும் தோன்றாமல் இப்படி நின்ற பிறகு முடிவில் ஒரு பெட்டியைக் காட்டி, "இதை எடுத்துப் போகிறேன்" என்றார். "அப்படியே செய்யும்" என்று சொல்லி விட்டு ஜமீன்தார் அதன் ஒரு பக்கத்தைப் பிடித்துக்கொண்டார். புலவர் மற்றொரு பக்கத்தைப் பிடித்துக்கொண்டார். இருவரும் அதைக் கன்னவாசல் வரையில் தூக்கிவந்தனர். அவ்வாசலுக்குள் பெட்டி செல்லவில்லை. அதையறிந்த ஜமீன்தார் சில ஆயுதங்களை எடுத்து வந்து அந்தத் துவாரத்தைப் பெரிதாக்கினார்; வெளியிற் பெட்டியைக் கொணர்ந்து புலவர் தலையில் தூக்கிவைத்தார். "புலவரே, ஞாபகம் இருக்கவேண்டும். கஷ்டப்பட்டால் கூசாமல்

என்னிடம் வந்துவிடும். எப்பொழுது உமக்கு வரமுடியுமோ அப்பொழுது வாரும். சௌக்கியமாக இங்கேயே இருக்கலாம். இந்த இடம் உம்முடைய இடமே. இதோ அந்தப்பெட்டியின் திறவுகோல் இருக்கிறது'' என்று சொல்லி அதையளித்து விடைகொடுத்தனுப்பினார்.

உள்ளே சென்றவர் நெடுநேரமாகியும் வாராமையினாலும் உள்ளிருந்து பேச்சொலி கேட்டமையாலும் புலவர் அகப்பட்டுக் கொண்டாரென்றஞ்சிக் கள்வர்கள் ஓடிப்போய்விட்டனர். வெளியில் வந்த புலவர் அவர்களைக் காணவில்லை. ஆதலின் அவர், கனமுள்ளதாக இருந்தாலும், 'இன்றைக்கு நல்ல லாபம் நம்மால் உண்டாயிற்றென்று கள்வர்கள் ஸந்தோஷப்படுவார்கள். அவர்களைத் திருத்துவதற்கு இது நல்ல ஸமயம்' என்று எண்ணிக்கொண்டு பாரத்தைப் பொருட்படுத்தாமல் உத்ஸாகத்தோடு பெட்டியைச் சுமந்து கொண்டு தம்முடைய உறைவிடத்துக்கு வந்தார். அவருடைய நிலை என்னாகுமோ என்றெண்ணிய அவர் மனைவி அவரது வரவை மிக்க ஆவலோடு எதிர்பார்த்து இருந்தாள். புலவர் மகிழ்ச்சியோடு தள்ளாடித் தள்ளாடிப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வருவதைக் கண்ட அவளுக்குப் போன உயிர்வந்தது; எதிர்சென்று அவர் தலையிலிருந்து பெட்டியை இறக்கினாள். அதைக் கீழே வைத்துவிட்டு நிகழ்ந்தவற்றையெல்லாம் அவர் சொன்னார். அவர் மனைவி கேட்டு வியப்புற்றாள்.

அந்தப் பெட்டியில் என்ன என்ன பொருள்கள் இருக்கின்றனவோ என்று பார்க்கவேண்டுமென்ற ஆவல் அவர்களுக்கு இருந்தது. ஆதலின் திறவுகோலைக்கொண்டு புலவர் திறந்து கைவைத்துப் பார்த்தார். முத்தும் இரத்தினங்களும் பொன்னும் ஆடையும் அதில் நிரம்பியிருக்குமென்று அவர் நம்பியிருந்தார். பாவம்! அப்பெட்டி முழுவதும் உப்பு நிறைந்திருந்தது. புலவருக்கு உண்டான் வருத்தத்துக்கு எல்லையில்லை; ''எவ்வளவு சிரமப்பட்டுத் தூக்கிவந்தேன்! வேறு பெட்டியைத் தூக்கிவந்திருக்கலாகாதா! ஜமீன்தார் நினைத்திருந்தால் அங்கேயே என்னைக் கொன்றிருக்கலாம்! அவர் எவ்வளவு அன்புடன் பேசினார்! தம்முடைய பொக்கிஷத்தைத் தாமே திறந்து காட்டி எதைவேண்டுமானாலும் எடுத்துக்கொள் என்றாரே! சிலமுத்துமாலைகளையாவது பொன்மாலைகளையாவது எடுத்துவந்தேனில்லையே! சில பட்டாடைகளையாவது மூட்டைகட்டித் தூக்கிக்கொண்டு வந்திருக்கலாமே! என்னுடைய துரதிர்ஷ்டம் இப்படியா வந்து முடியவேண்டும்?''

என்று பெருமூச்சுவிட்டு வருத்தமுற்முர். அவர் மனைவியும் வருந்தினள்.

அப்பால் சிறிது நேரம் கழிந்தபின்னர், அவர்மனைவி, "இனிவருத்தப்படுவதனுல் பிரயோஜனம் என்ன? இந்த உப்பைக் கீரைக்கு வைத்துக் கொள்ளலாம்'' என்று சொல்லிவிட்டு அதில் சிறிது கையிலெடுத்துப் பார்த்தாள். என்ன ஆச்சர்யம்! அது வாணஉப்பாக இருந்தது. "நல்ல உப்புக்கூட அல்லவே! வாண உப்பாக இருக்கிறதே!" என்முள் புலவர்மனைவி. புலவருடைய மனம் எப்படி யிருக்குமென்பதை வார்த்தைகளால் சொல்ல முடியுமோ? சிறிது நேரம் அவர் மௌனமாக இருந்தார். பிறகு அவருடைய உணர்ச்சி,

(விருத்தம்)

"நாடேலாஞ் சேந்நேல் விளையினும் நாட்டின்
நதியேலாம் நவமணி தரினும்
காடேலாம் ஆடை காய்க்கினும் மேகம்
கனகமே போழியினும் மடவாய்
ஆடலே புரியும் அம்பல வாணர்
அவரவர்க் கமைத்ததே யல்லால்
வீடேலாம் கிடந்து புரண்டேருண் டழினும்
விதியலால் வேறுமோன் றுளதோ?"

என்ற செய்யுளாக வெளிப்பட்டது. விதியின் திறத்தையன்றி அவர் வேறு எதை நினைந்து ஆறுதலடைய முடியும்?

இலக்கியம்

இராமாயணமும் தமிழ்வழக்குக்களும்

மு. இராகவையங்கார்

(118-ம் பக்கத்தொடர்ச்சி)

8. அணிலும் சேதுபந்தனமும்

வானரவீரர்கள், இராமபிரான் திருவாணைப்படி திருவணை கட்டும் பெருமுயற்சியில் மூண்டு நின்றபோது, அப்பக்கத்திருந்த அணிற்சாதியும் அத்தொண்டினில் ஈடுபட்டு, நீரில் நனைந்த தம் முடம்பை மணலிற்சென்று புரட்டி உடம்பிலொட்டிய அம்மணலைக் கொண்டுவந்து கடலிற் சேர்த்துத் தம்மாலான உதவிபுரிந்து வந்ததென்றும், அதனைக் கண்டு இராமபிரான் பெரிதும் உவந்தருளினர் என்றும் வழங்கும் கதை தென்னாட்டில் பிரசித்தமானது. இதனைத் தொண்டரடிப்பொடியாழ்வாரும்,

> "குரங்குகள் மலையை நூக்கக் குளித்துத்தாம் புரண்டிட் டோடித்
> தரங்கநீ ரடைக்க லுற்ற சலமிலா வணிலம் போலேன்"

என்று தம் திருமாலையில் (27) பாடியருளினர். இக்கதை வேறு வடநூல்களிற் காணப்படாத தொன்றாகும்[1]. இவ்வரலாறு ஆழ்வார்கள் காலத்துக்கு முற்பட்ட வழக்காயிருத்தலால், பழைய தமிழ்ச்செய்திகளுள் ஒன்றாக இதுவும் நாம் சேர்த்துக்கொள்ளற்குரியது.

---

1. சிலவாண்டுகட்குமுன் *Prof.* காளிதாசநாக் என்பார், சென்னைச் சர்வகலாசாலை மண்டபத்தில், ஸுமாத்ரா ஜாவாமுதலிய தீபங்களில் வழங்கும் ஆரியவழக்கங்களைப் பற்றிப் புரிந்த உபந்யாசமொன்றில், அப்பிரதேசத்து வழங்கும் இராமாயணத்திலே இவ்வணிற்கதை அமைந்த சித்திரத்தை 'மாஜிக் - லாண்டேர்ண்' மூலம் விளங்கக் காட்டியதோடு, அதற்குத் தென்னாட்டு வழக்கும் உண்டென்பது தெரிந்து கூறியதை அறிஞர் பலரும் அறிந்திருப்பர்.

9. இராமராவணயுத்தமாகிய இராமாயணம்

இராமராவணயுத்தத்தை 'இராமாயணம்' என்ற பெயரால் முன்னோர்வழங்கிவந்தனர். இதனை,

"தேவாசுர ராமாயண மாபாரத முளவென்
றோவாவுரை யோயும்படி யுளதப்பொரு களமே" (கலிங். 11,161.)

எனச் செயங்கொண்டாரும், "தேவாசுரம், இராமாயணம், மகாபாரதம் என்கின்ற போர்" (சீவக. 2353 உரை) என நச்சினார்க்கினியரும் "தாரகாம்யம்[1], தேவாசுரம், இராமாயணம், மகாபாரதம்போலப் பல நாட்கூடி இறப்பதல்லது" எனத் தக்கயாகப்பரணி உரைகாரரும் கூறுதலால் உணரலாம். தேவாசுரம் - தேவர்கட்கும் அசுரர்கட்கும் நிகழ்ந்தபோர்; "தேவாசுரம் பொருதாய் செற்று" (மூன்றாம் திருவந்தாதி, 48) "தேவாசுரம் செற்றவனே" (திருவாய். 9, 8, 7.) என்றார் பெரியார்களும். "கோவிந்தா நீயன்றி, மாபாரத மகற்ற மற்றார்கொல் வல்லாரே" என்ற வில்லிபுத்தூரர் வாக்கால் (உத்யோ. 34) மாபாரதம் பாண்டவதுரியோதனர் யுத்தமாதல் காண்க. இவை போலவே, இராமாயணம் என்பதனை இராமராவண யுத்தத்துக்கே பெயராக முன்னோர் வழங்கலாயினர் என்பது அறியத்தக்கது.

10. இராமாயணப்போர் நடந்தேறிய காலம்

இனி, இராமாயணப்போர் நிகழ்ந்தகாலம் இரண்டுமாதங்கள் என்றும் ஒருமாதம் என்றும் ஒருபக்ஷம் என்றும் கூறுவர், வால்மீக வியாக்யாதாக்கள். எவ்வகையினும் அவர்கள் கருத்தின்படி இரண்டு மாதங்கட்குமேல் அது நடந்ததில்லை யெனலாம். தமிழ் வழக்கிலோ, இராமராவணயுத்தம் 18 மாதங்கள் நடைபெற்றன என்று வழங்குவது புதியதோர் செய்தியாகும். சேரன்-செங்குட்டுவன் பத்தினிப் படிவத்துக்கு இமயத்தினின்று கல்லெடுத்துவரப் படையுடன் வடநாடு சென்றபோது, தன் பகைவரான கனகவிசயரென்ற ஆரியவேந்தருடன் அவன் பெரும்போர் புரிந்ததனை இளங்கோவடிகள்—

"செறிகழல் வேந்தன் தென்றமி ழாற்றல்
அறியாது மலைந்த வாரிய மன்னரைச்

---

1. தாரகாசுரனுக்கும் முருகவேட்கும் நடந்தபோர்; 'தாரகாரி' என்பது முருகவேட்கு ஒரு திருநாமம். தாரகவதை, மச்சபுராண முதலியவற்றில் விரியக்கூறப்படுவதாம்.

செயிர்த்தொழின் முதியோன் செய்தொழில் பெருக
உயிர்த்தொகை யுண்ட வொன்பதிற் றிரட்டியென்
றியாண்டு மதியு நாளுங் கடிகையும்
ஈண்டுநீர் ஞாலங் கூட்டி யெண்கொள
வருபெருந் தானை மறக்கள மருங்கின்
ஒருபக லெல்லை யுயிர்த்தொகை யுண்ட
செங்குட்டுவன்'' (சிலப் 27, 5-13.)

என்று சிறப்பிக்கின்றார். (யமன்) "உயிர்த்தொகையுண்ட ஆண்டும், மதியும், நாளும். கடிகையும் ஒன்பதிற்றிரட்டி (பதினெட்டு) என்று அவற்றோடே கூட்டி எண்ண (என்றது), தேவாசுரயுத்தம் 18 ஆண்டிலும், இராமராவணயுத்தம் 18 மாதத்திலும், பாண்டவ துரியோதன யுத்தம் 18 நாளிலும், செங்குட்டுவனும் கனகவிசயரும் செய்த யுத்தம் 18 நாழிகையிலும் முடிந்த என்று எண்ண" என்பது இவ்வடிகளின் பழைய அரும்பதவுரை. 18 - என்ற எண்ணில் வருஷமாதநாட்கள் அமையும்படி நடந்த பழைய போர்களுடன் நாழிகையையுங் கூட்டி உலகம் எண்ணும்படி, 18 நாழிகையில் செங்குட்டுவன் ஆரியப்போரை வென்று முடித்தான் என்பது கருத்து. 'எண்கொண்ட ஞாட்பு' என்ற சிந்தாமணிப்பாடலில், (2353) சீவகன் செய்த போரைத் திருத்தக்கதேவரும் இக்கருத்தே பெற அமைத்துப்பாடுதல் காண்க. இவற்றால் இராமாயணப்போர் 18 மாதகாலம் நடந்ததென்றசெய்தி சங்ககாலமுதல் தமிழ்மக்களால் வழங்கப்பட்டுவந்ததென்பது தெரியலாம். இப்பதினெட்டு மாதக் கணக்கு வான்மீகத்துக்கு எவ்வகையினும் பொருந்துவதாகத் தெரியவில்லை. பிராட்டிக்குத் தீங்கிழைத்த சூர்ப்பணகை இலக்குமணரால் அங்கபங்கப் படுத்தப்பட்டதைக் கம்பர்,

"கொலைது மித்துயர் கொடுங்கதிர் வாளினக் கொடியாள்
முலைது மித்துயர் மூக்கினை நீக்கிய முறைமை
மலைது மித்தென விராவணன் மணியுடை மகுடத்
தலைது மித்தற்கு நாட்கொண்ட தொத்ததோர் தன்மை"

(கம்பரா. சூர்ப்ப. 96.)

என்று பாடுகின்றார். இவ் வங்கச்சேதஞ்செய்த நாளை இராமராவண யுத்தத்தின் தொடக்கமாகக் கொண்டு 18 மாதத்துக் கணக்கைத் தமிழ்மக்கள் கணக்கிட்டனரோ, அன்றி வேறு இராமாயணத்து இச்செய்தி கூறப்பட்டுள்ளதோ தெரியவில்லை; இஃது அறிஞர் ஆராய்தற்குரியது.

11. இராமாயணமும் புறத்துறைகளும்

இராமராவணயுத்தத்தின் செய்திகளைப் புறத்திணை முறையில் வகுத்து முன்னோர் பாடியுள்ளார் என்பது தொல்காப்பிய உரைகளிற்கண்ட மேற்கோட் செய்யுட்கள் சிலவற்றாலும் பிறநூல்களாலும் தெரியவருகின்றது. எயில்கோடல் என்ற புறத்திணையில் வானரசேனைகளின் செய்திகளை,

> "இருசுடர் வழங்காப் பெருமூ திலங்கை
> நெடுந்தோ ளிராமன் கடந்தநா ளன்றை
> எண்கிடை மிடைந்த பைங்கட் சேனையிற்
> பச்சை போர்த்த பல்புறத் தண்ணடை
> யெச்சார் மருங்கினு மெயிற்புறத் திறுத்தலிற்
> கடல்சூ ழரணம் போன்ற
> துடல்சின வேந்தன் முற்றிய வூரே"
>
> (தொல். புறத். 12ம்சூத். மேற்கோள்.)

என்றும், எயில்காத்தல் என்றதுறையில் இராவணன் செய்திகளை—

> "மேலது வானத்து மூவா நகரும்
> கீழது நாகர் நாடும் புடையன
> திசைகாப் பாளர் தேயக் குறும்பும்
> கொள்ளை சாற்றிக் கவர்ந்துமுன் றந்த
> பல்வேறு விழுநிதி யெல்லா மவ்வழிக்
> கண்ணுதல் வானவன் காதலி னிருந்த
> குன்றேந்து தடக்கை யனைத்துந் தொழிலுறத்
> தோலாத் துப்பிற் றுணிழல் வாழ்க்கை
> வலம்படு மள்ளர்க்கு வீசி யிலங்கையின்
> வாடா நொச்சி வகுத்தனன்
> மாலை வெண்குடை யரக்கர் கோவே" (ஷை. ஷை. ஷை.)

என்றும் 'கட்டினீத்தபால் (சிங்காதனந்துறத்தல்) என்னும் புறத்துறைக்கு,

> "கடலு மலையு நேர்படக் கிடந்த
> மண்ணக வளாக நுண்வெயிற் றுகளினும்
> நொய்தா லம்ம தானே யிஃதெவன்
> குறித்தன னெடியோன் கொல்லோ மொய்தவ
> வாங்குசிலை யிராமன் தம்பி யாங்கவ
> னடிபொறை யாற்றி னல்லது

முடிபொறை யாற்றலன் படிபொறை குறித்தே."
தொல். பொருளதி. 76, நச்.)

எனவும் இராமசரிதங்கூறும் பாடல்களான்[1] உணர்க. இவையாவும் சங்ககாலத்து வழங்கிய இராமாயணப்பாடல்களாகக் கருதற்குரியனவாம்.

இவ்வாறே 'கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்' என்ற துறைக்கு இலங்கைகொள்வதன் முன்னர் அதனை இராமன் வீடணற்குக் கொடுத்ததையும், தழிஞ்சி என்ற துறைக்கு முதனாட் போரிலே சேனைமுழுதையும் இராவணன் தோற்றுத் தனியனாய் நின்ற நிலையை நோக்கி இராமபிரான் 'இன்று போய்ப் போர்க்கு நாளைவாவென நல்கிய'தையும் முன்னோர் மேற்கோள் காட்டுவர். இன்னு மிதனை விரிப்பிற்பெருகும்.

12. வசந்தன் உயிர்பெற அருளியது

வசந்தன் என்பவன், இராமபிரான் படைத்தலைவருள் ஒருவனான வானரவீரன். கும்பகர்ணன் புரிந்த பெரும்போரில் இவ்வானரத்தலைவனை அவ்வரக்கன் போரிற் பிடித்துத் தன்னுடலிற் றேய்த்துப் பூசிக்கொண்டனன் என்பர். இவ்வரலாறு கும்பகருணப்படலத்துக் கம்பர் கூறாததாயினும்[2] உத்தரகாண்டம் பாடிய பெரும் புலவர்—

"வியந்து வீடண னழைத்தலும் வெய்யவன் மறுத்து
வயந்த னைப்பிசைந் தருக்கன்மா மகனைக்கொண் டகன்றான்"
(அசுவமே. 228.)

என, குசலவர்கள்வாக்கில் வைத்துப் பாடுதல்காண்க. இராவணவதம் முடிந்தபின், இராமபிரான் பிராட்டி இளையபெருமாளுடனும் எல்லா வானரத்தலைவர்சேனைகளுடனும் அயோத்தி செல்லப் புஷ்பகவிமானத்தில் இவர்ந்துநின்றபோது ஒருசார் வானரக்கூட்டமட்டும் அதனில் ஏறாமல் தாமதித்துநிற்க, அதுபற்றிப் பெருமான்

---

1. 'ஆசிரியமாலை' என்ற தொகைநூலுள் இப்பாட்டுக்களிற் சில தொகுக்கப்பட்டுள்ளன. இவ்வாசிரியமாலைச் செய்யுட்களாகப் 'புறத்திரட்டு' என்ற நூலிற் காட்டப்பட்டவற்றைத் திரட்டி யான் செந்தமிழில் வெளியிட்டுள்ளேன் (தொகுதி, 5, பகுதி, 10).

2. கம்பராமாயணம், கும்பகருணப்படலத்து, 177 - ஆம் பாடலை அடுத்து, "பற்றினன் வசந்தன் றன்னை" என்ற செய்யுள் ஒரு பிரதியில் மட்டும் காணப்படுகின்றதாயினும், அது கம்பர் வாக்காகத் தோன்றவில்லை. (ஸ்ரீ. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியஸ்வாமி பதிப்புக் காண்க)

உசாவியகாலையில், இறந்துபட்ட வானரவீரருள் கும்பகருணனாற் கொல்லுண்ட வசந்தன் என்ற தலைவன்மட்டும் உயிர்ப்பிக்கப் பெறுமையால், அவனைச் சார்ந்த வீரர்கள் துக்கத்துடன் அதனில் ஏறுமல் நின்றுவிட்டனர் என்ற செய்தி தெரியவந்தது. உடனே இராமபிரான் யமதருமனுக்கு நிருபமொன்றெழுதி அனுமானிடம் கொடுத்து, வசந்தனை மீட்டுவரும்படி கட்டளையிட, அச் சிறிய திருவடி யமலோகம்புக்கு, அவ்வானரவீரன் அங்கின்மையால் இந்திரலோகமும் பின் பிரமலோகமுஞ் சென்று, பிரமதேவனால் அவ்வசந்தனிருப்பிடமறிந்து போய் அவனை மீட்டு இராமரிடம் கொணர்ந்தனர் என்றும், பின் அவ்வசந்தனுடன் அவனைச் சார்ந்தோரும் விமானத்தில் ஏறியதும் அது செல்லலாயிற்றென்றும் வரலாறென்று பழைமையாகவே வழங்கிவருகின்றது. இச்செய்தி, கம்பராமாயண ஏட்டுப்பிரதிகள் பலவற்றிற் காணப்படவில்லையேனும் சிலபிரதிகளில், இயமப்படலம், வசந்தனுயிர்பெறுபடலம் என்ற தலைப்புக்களின்கீழ்ப் பலபாடல்களாற் கூறப்பட்டுள்ளது[1]. இச்சரிதம் தமிழ்நாட்டிற் பழைமையாகவே வழங்கிவருவதென்பது, இராமாயண உத்தரகாண்ட வாசிரியர்—

"ஏறிட விமானந் தன்னில் யாவரு மிறைவி தானும்
மாறின வசந்தன் சேனை நின்றது மலர வன்பால்
கூறின னனுமன் வாங்கிக் கொண்டபின் குரிசி லானும்
ஆறிய பரத்து வாச னணிமலர்ச் சோலை புக்கான்"

(அசுவமே, 259.)

எனக் குசலவர் கூற்றில் வைத்துப் பாடுதல் காண்க. பின்னோரான புலவர்களிலே, காரி ரத்தினகவிராயர் என்பார், தாம் பாடிய பாப்பாவினம் என்ற நூலில்,

"அமரிடை வசந்தன்மீ வானந் தோய்ந்திடும்
உடலுயி ருடன்வர நின்று
தமர்தொழத் திண்டேர் நடைகற்ற தனையுளூர்" (பக். 80.)

எனவும், இராமநாடகம் பாடிய காழி அருணசலக் கவிராயர்—

"முடிபுனை யுந்தச ரதனுரை யிங்கிது முழுது மொழிந்தடனே
முதல்வர் வரந்தனி லனைவர்க ளும்பழ முறையி லெழுந்தபினே
இடர்பெரு கும்பா தனையரு ளும்படி வடதிசை புஷ்பகமேல்
இரகுபதி யுஞ்சன கியுமொரு தம்பியு மெவரு நிறைந்திடுமுன்

1. இப்பாடல்களை, ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியஸ்வாமி உரையுடன் பதிப்பித்துள்ள யுத்தகாண்டத்தில், மீட்சிப் படலத்துட் கண்டுகொள்க (பக் 770-74).

வடபடி யும்வசந் தனைநிமி கடுங்கொடு வருகென வெம்பெருமான்
வரைதிரு பந்தனை முடிமிசை கொண்டொரு மறலியின் மண்டல
அடுகளி றிந்திர னுறைதரு மண்டல மயனுறை மண்டலமும் [மும்
அதிரதி ரும்படி விசையனு மந்தனவ் வளவு கிளம்பினனே''

என்ற விருத்தத்தினும் "தாவி யனுமன் வந்தானே" என்ற பத முழுதினும் விரிவாகவே பாடுதல் காண்க. இராமாயணவெண்ணா முதலியவற்றினும் இச்செய்தி கூறப்பட்டுள்ளதாம். இவ்வசந்தன் கதை வேறு எந்த வடமொழியிராமாயணத்தில் உள்ளதென்பது தெரியவில்லை. எனினும் தமிழ்நாட்டில் சிலநூற்றாண்டுகட்கு முன்வரை இச்சரிதம் பெருவழக்காயிருந்ததென்பது, மேற்கூறிய பிரமாணங்களால் அறியத்தகும்.

13. அனுமானுடன் இராமன் விருந்துண்டது

இராவணவதத்துக்குப் பின் இராமபிரான் பிராட்டியுடனும் வானர வீரர்களுடனும் புஷ்பகவிமானத்திற் சென்று பரத்துவாசர் ஆச்சிரமத்திற் றங்கியபோது, பெருமான் அம்முனிவர்க்கு அனுமானின் அரும்பேருதவியைப் புகழ்ந்து கூறி, அம்முனிவரது விருந்தில் தம்முடன் உண்ணும்படி அச் சிறியதிருவடியை அழைத்தனர் என்றும், அவ்வுபசாரத்தை அவர் ஏற்றுக்கொள்ளாது இராமனது பரிகலசேடத்தையே உண்ணலாயினர் என்றும் வரலாறொன்று வழங்குகின்றது.

"முனிவன் வாண்முக நோக்கிமெய் முழுதுணர் முனியே
அனும னுண்டகை யளித்தபே ருதவியின் றெம்மால்
நினைய வும்முறை நிரப்பவு மரிதினி நீதி
புனித வுண்டியெம் முடனெனப் புரவலன் புகன்றான்"

என்பன முதலாகவரும் கம்பராமாயணச் செய்யுட்களால்[1] உணர்க. இவ்வாறு உடனுண்ணும்படி பெருமான் விரும்பிய கருணைத் திறத்தை வியந்து திருமங்கைமன்னனும்—

"வாத மாமகன் மற்கடம் விலங்கு
மற்றோர் சாதியென் றொழிந்திலை யுகந்து
காத லாதரம் கடலினும் பெருகச்
செய்தகவினுக் கில்லைகைம் மாறென்று

1. இச்செய்யுட்கள் கம்பராமாயண அச்சுப்பிரதிகளிற் காணப்படா; சில ஏட்டுப் பிரதிகளில் மட்டும் உள்ளன. (ஸ்ரீ. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியஸ்வாமியின் யுத்தகாண்டப்பதிப்பு, பக். 811-2.)

கோதில் வாய்மையி னுயொடு முடனே
உண்ப னென்ற வொண்பொரு ளெனக்கும்
ஆதல் வேண்டுமென் றடியிணை யடைந்தேன்
அணிபொ ழிற்றிரு வரங்கத் தம்மானே"

(பெரிய திருமொழி, 5, 8, 2.)

என்று அருளிச் செய்தல் அறியத்தக்கது. பரதனிடம், தாம் குறித்த தினத்தில் வந்து சேரும் செய்தியை முன்சென்று அறிவித்து வரும்படி இராமபிரானல் விடுக்கப்பட்ட அனுமான், அதனை அப்பரதற்கு அறிவித்துவிட்டுத் திரும்பி, பரத்துவாச முனிவரால் அப்பெருமான் விருந்துண்ணும் சமயத்தில் வந்து சேர்ந்தனர் என்றும், அதுகண்டு பெரிதுமகிழ்ந்து அவரிளைப்புத்தீரச் சிறியதிருவடியைத் தம்முடனுண்ணும்படி பெருமான் அருளிக்கூறினரென்றும் பின்னோர் இச்சரித்திரத்தைச் சிறிது வேறுபடக் கூறுவர். காழி அருணசலக் கவிராயர் தம் இராமநாடகத்தில் இதனை,

"நீதமுட னனுமனிது சொன்ன னிந்த
நிமிஷம்வந்து சாமியுனக் கருள்வ னென்றான்
போதரவாய்ப் பரத்வாசன் மடத்திற் பூர்வ
போசனவே ளையிற்போய்ரா கவனைக் கண்டான்
பாதமலர் வணங்கினன் பரதன் றன்னைப்
பார்த்ததுங்காத் ததுஞ்சொன்ன னட்போ தையன்
காதலனே யனுமானே நீயே யென்றன்
கண்ணென்று னென்னுடன்வா வுண்ணென் றானே"

"வாவா அனுமானே—என்னுடன்உண்ண—வாவா சீமானே" என்று பாடுதல் காணலாம். இச்சரித்திரத்தையே, பாப்பாவினம் என்ற நூலியற்றிய காரி ரத்தினகவிராயர்,

"கமையடைந் தொடுங்குவான் விருந்தறைந் திடுகாலைத்
தமையன்வந் தனனெனப் பரதன துயிர்தந்தான்
அமைவுகண் டுடனுண்பா னருள்தந்த குணனூரர்"

(பரிபா. 2, பக். 80.)

என்றும், திருவைகுந்தநாதர் பிள்ளைத் தமிழாசிரியர்—

"கார்நிறக் கோதையும் மதிபொருவு வதனமுங்
கச்சடங் காத தனமுங்
கமலவிழி யுங்கொண்ட சனகியுந் தம்பியுங்
கதிரவன் பெறுமதலையும்
எருலவு வானரத் தலைவருஞ் சேனையு

மிலங்கையர சன்ற னுடனே
எதிபரத் தவனுறையு மினிதான சாலையினி
லெய்தியவ னுலமைந்த
வார்சுவையி னோடடிசில் போனக முணக்கருதி
வாய்மடுத் துற்ற பொழுதில்
வந்துதொழு மாருதியை யென்றனுட னுண்ணநீ
வாவென் றழைத்து மகிழுஞ்
சீர்மருவு தாரணி யிராகவ முகுந்தநீ
சிறுதே ருருட்டி யருளே
சீதரதென் வைகுந்த நாதரகு வீரநீ
சிறுதே ருருட்டி யருளே''

என்றும் பாடியிருத்தல் காண்க. இத்தகைய வரலாறு வால்மீக முனிவர் கூறுததொன்றுகும். பரத்துவாசமுனிவரது விருப்பின்படி ஒருநாள்வரை அவ்வாச்சிரமத்தில் தாமதித்த இராமபிரான், மறுநாள் தாம்வந்து சேருஞ் செய்தியைப் பரதற்கு முன்சென்று அறிவிக்கும்படி அனுமானை அனுப்பி, அம்மறுநாளே பரதனிடஞ் சென்றுவிட்டதாக அம்முனிவர் கூறுகின்றுரேயன்றி அவ்வனுமான் திரும்பிய செய்தி கூறினரில்லை. இவ்வாறு வான்மீகத்துக் காணப்படாமை பற்றியே, மேற்கூறிய திருமங்கைமன்னன் பாசுரத்துக்கு வியாக்கியானமிட்ட பெரியார்கள், 'உடனுண்பனுன்' என்பதற்குத் தன் திருமேனி யனுபவத்தை அளித்துதவியதாகக் கருத்துக் கூறலாயினர். ஆயினும், மேற்கூறிய ஆசிரியர் பலர் திருவாக்குக்களாலும், அநுமாற்குத் தம்முடன் உண்ணும் பெரும்பேற்றை அளித்து அவரைச் சிறப்பிக்கப் பெருமான் விரும்பினர் என்பதே தமிழ்நாட்டார் வழங்கிய வரலாறு என்பது நன்கு விளங்குகின்றது. இவ்வரியசெய்தி ஆழ்வார்காலத்துக்கு முற்பட்டதா யிருத்தலின் பழைய தமிழ்வழக்கினுள் ஒன்றுக இதுவும் கொள்ளற்குரியதாகும்.

14. அகத்தியரும் இராவணனும்

தசமுகனுன இராவணனைப்பற்றிய வரலாறு சிலவும் வடநூல்வழக்கின் வேறுகத் தமிழகத்து வழங்கிவந்தனவாம். இவ்விராவணன் குணங்களாலும் செய்கைகளாலும் பழிக்கப்பட்டவனுயினும், பெருந்தவம்புரிந்து சிவபிரானது பேரருளுக்கு இலக்காகி நாளும் வாளுமாகிய வரங்கள் அளிக்கப் பெற்றவனென்றும், இசையிற் பெரிதும்வல்லவன் என்றும் நூல்களிற் சிறப்பிக்கப்படுவன். இவனது சிவபத்தித்திறத்தை வியந்தே சம்பந்தமூர்த்திகள், தம்

தேவாரப்பதிகங்களில் எட்டாம்பாடல்தோறும் இவனைப் பாடு வாராயினர். ஆயினும் குணஞ்செயல்களாற் கொடியோன் இவன் என்பதனை—

"மெய்சொல்லா விராவணனை மேலோடி யீடழித்துப் [158-2,
பொய்சொல்லா துயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே" பக்.

"தேவிதன்னை யொருமாயையால், கானதில் வவ்விய
காரரக்கன்" (890-2),

"உரைபுணராதவன் காமமென்னு
முறுவேட்கையான்" (890-4,)

"பொருண்மன்னனைப்பற்றிப் புட்பகங்கொண்ட
மருண்மன்னன்" (748-11)

என்பன முதலியவற்றால் அம்மூர்த்திகள் குறிப்பிட்டுச் செல்வர். இத்தசமுகன் தன்பேராற்றலால் தென்னாட்டை அடிப்படுத்தி ஆட்சிபுரிந்து வந்தவன் என்றும், அகத்தியமுனிவர் இவனை ஓர் உபாயத்தால் இந்நாட்டிலணுகாதபடி செய்து ஓட்டினரென் றும் தமிழ்வரலாறொன்று வழங்குகின்றது. இதனை,

"தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற் றொன்முது கடவுள்"

என்னும் மதுரைக்காஞ்சித் தொடராலும் (40-1), அதற்கு நச்சி னார்க்கினியர்—

"இராவணனைத் தமிழ்நாட்டை ஆளாதபடிபோக்கின கிட்டுதற் கரிய வலிமையினையுடைய பொதியமலையிலிருக்குங் கடவுளாகிய பழமை முதிர்ந்த அகத்தியன் * * * இராவணன் தென்றிசையாண்டமைபற்றித் தென்னவன் என்றார்; இராவணனுளதல் தோல்காப்பியப் பாயிரச் சூத்திரத்து உரையாசிரியர் கூறிய உரையான் உணர்க"

என்றெழுதிய உரைக்குறிப்பாலும் அறியலாகும். "தென்னவன் மலையெடுக்கச் சேயிழை நடுங்கக் கண்டு" என, இராவணனைத் தென்னவன் என்ற பெயரால் திருநாவுக்கரசுநாயனாரும் வழங்கு தல் அறியத்தக்கது.

இனி, நச்சினார்க்கினியர் எழுதியவாறு, இராவணன் தென் றிசையாண்ட செய்தியை உரையாசிரிய ருரையினின்றேனும், அவனை அகத்தியமுனிவர் தமிழ்நாட்டினின்று ஓட்டிய வரலாற் றைப் பிறநூல்களினின்றேனும் விவரமாக நாம் அறியக் கூட வில்லை. அச்சிடப்பட்ட தொல்காப்பியம், இளம்பூரணப் பாயிர வுரையுள் இராவணன் செய்தி யொன்றுமே காணப்பட்டிலது. எனினும், அப்பாயிரத்தில் அகத்தியனார் வரலாறு கூறுமிடத்து—

"பொதியிலின்கணிருந்து இராவணனைக் கந்தருவத்தாற்பிணித்து அவனை ஆண்டுவாராமை விலக்கி"

என்று எழுதிச்செல்வர் நச்சினார்க்கினியர். தஞ்சைவாணன் கோவையில், "இசைக்குருகப்படுசிலை" (345) எனப் பொய்யா மொழிப்புலவர் கூறிய தொடரும், அதற்கு—'இராவணனைப் பிணிக்கக் குறுமுனி பாடும் இசைக்கு உருகப்பட்ட பொதியமலை" என அட்டாவதானி சொக்கப்ப நாவலர் எழுதிய உரையும் அந் நச்சினார்க்கினியர் கூற்றையே வலியுறுத்துதல் காணலாம். இவ் வரலாற்றையே—

" இனியபைந் தமிழின் பொதியமால் வரைபோல்
இசைக்குரு காதிம மலையின்
தனையையின் றீஞ்சொற் குருகுறுஞ் சோண
சயிலனே கயிலை நாயகனே " (சோணசைலமாலை. 26.)

எனச் சிவப்பிரகாசமுனிவரும் கூறினர். இவற்றால், தென்றிசை ஆண்டுவந்த இராவணன் அகத்தியரது ஆச்சிரமமான பொதியமலை யினிடையிற் புக்கபோது, அவனைப் பிணித்துத் தமிழகத்தை விட்டு அகற்றவேண்டிக் கந்தருவகானத்தைத் தம் யாழ்கொண்டு அம்முனிவர் வாசிக்க, அப்பாடற்குப் பொதிய முருகி அவ்வரக்க னைச் சூழ்ந்துநெருக்கித் தன்னுள் அகப்படுத்திக் கொள்ளவும், அதற்காற்றாத இராவணன் வேண்டிக் கொண்டவாறு, தென்னாட் டில் இனிப்புகாதபடி அவனுக்கு ஆணையிட்டு, அவ்வாபத்தினின்று அவனை விடுவித்து ஒட்டினர்—என்பதுபோன்ற கதை இந்நாட் டில் வழங்கியதாக வேண்டும் என்பது புலப்படுகின்றது[1]. அகத்தி யர் யாழிசையில் வல்லவர் என்பதனை,

" மன்னு மகத்தியன்யாழ் வாசிப்ப " (திருக்கைலாச ஞானவுலா)
"தமிழ்க்குன்றில் வாழுஞ் சடாதாரி பேரியாழ்"
(தக்கயாகப்பரணி, 539.)

என்பவற்றால் உணர்க. இவ்வாறு, அகத்தியமுனிவர் இராவண னைத் தென்னாட்டைவிட்டு அகற்றியவர் என்ற வரலாற்றை வட நூல்களிற் காணுதல் அரிதாகவுள்ளது. அதனால், இது பழைய தமிழ் வழக்காகவே கொள்ளற்பாலது. பிராட்டியைத் தேடி வரும் படி சுக்கிரீவன் வானரவீரர்களை ஏவும்போது—"அம்மலயபர்வதத்

1. இவற்றையெல்லாம் "மதுரைக்காஞ்சியாராய்ச்சி என்ற தலைப்பின் கீழ் 24-ஆண்டுகட்குமுன் யான் எழுதிய கட்டுரையுட் கண்டுகொள்க (செந் தமிழ், தொகுதி-7).

தின் உச்சியில், மிகவும் தேஜோவானும் சூரியஸமானராய் ருஷி சிரேஷ்டராயுள்ள அகத்திய முனிவரையுந் தரிசியுங்கள். பிறகு நிர் மலசித்தமும் பரமஞானவானுமான அம்முனிவரது ஆணைபெற்றுக் கொண்டு தாமிரபர்ணியைத் தாண்டுங்கள்" என்றும், இராம பிரான் அகஸ்தியாச்சிரமத்தைப் பற்றித் தம் இளவலான இலக்கும ணர்க்குக் கூறும்போது, "அம்மகானாகிய அகஸ்தியர் இவ்வுலகிற்கு நன்மைபுரியும் பொருட்டு இங்கிருந்த யமனுடைய உபத்திரவத்தை நீக்கி, இத் தென்றிசையையும் சுகமாக வசிக்கத்தக்க திசையாகச் செய்துவைத்தார்" எனவும், "எவருடைய மகிமையால் இன்றைக் கும் அரக்கர்கள் இத் தென்திக்கைக் கண்ணெடுத்துப் பார்த்து உட் புக நடுங்குகின்றார்களோ, அவருடைய ஆச்சிரமம் அது; பெரும் புண்ணிய மூர்த்தியாகிய அவர் இத்திசைக்கு வந்ததுமுதல் இங்கே அரக்கர்கள் தம் பகைமை நீங்கிச் சாந்தமுள்ளவர்களாகிவிட்ட னர். அம்முனிவர் பெயரைக்கொண்டே இத்தென்திக்கும் அகஸ் தியர்திசை என்ற வெகுசாந்தமான பெயர்பெற்று மூவுலகத்தும் பிரசித்தியடைந்து கொடியவர் அஞ்சுந்திசையாக விளங்குகின்றது" என்றும் வால்மீகமுனிவர் கூறுகின்றார். இவற்றால் இராவணன் தென்னாட்டை யாளாதபடி அகத்தியர் செய்வித்தவர் என்ற தமிழ்ச்செய்திக்கு, வடமொழியிதிகாச மொன்றிற் குறிப்புக்கள் உள்ளன என்பது மட்டில்அறியக்கூடும்.

15. முடிவுரை

இன்னும் இராமாயண சரிதங்கள்பல உவமையாகவும் எடுத் துக்காட்டாகவும் சங்கச் செய்யுட்களிற் கூறப்படுதலைக் காண லாம். உதாரணமாகக் கோவலன் தன் மனைவியுடன் காவிரிப்பூம் பட்டினத்தை விட்டகன்றதும், அந்நகரம் இராமபிரானைப் பிரிந்த அயோத்தியினிலையை அடைந்ததாக ஒப்பிட்டு,

> " பெருமக னேவ லல்ல தியாங்கணும்
> அரசே தஞ்சமென் றருங்கா னடைந்த
> அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
> பெரும்பெயர் மூதூர் பெரும்பே துற்றதும் "

என்று இளங்கோவடிகள் பாடுவர். மஹாவீர: என்றும் ஸத்ய பராக்ரம: என்றும் வான்மீகிபகவான் இராமபிரானைச் சிறப்பித்துக் கூறுதல்போல, அருந்திறல் என்று அப்பிரானை இளங்கோவடிகள்

இங்கே கூறுதல் அறியத்தக்கது. இவ்வாறே, இளையபெருமாளான இலக்குமணரது தொண்டுபுரியுந் திறத்தை,

" இறைமீக் கூறிய விராமன் றம்பி
மறுவொடு பெயரிய மதலைக் கியைந்த
ஆனுப் பெரும்புகழ் யாமு மெய்தத்
தேனர் தாமரைத் திருந்துமலர்ச் சேவடி
வழிபா டாற்றுதும்" (3, 24, 90-4.)

எனப் பெருங்கதை சிறப்பிக்கின்றது. இதனுள் 'லக்ஷ்மணர் என்பது மறு (உடல்மச்சம்) உடைமைபற்றி வழங்கிய பெயர் தனை 'மறுவொடு பெயரிய மதலை' என்ற தொடரால் கொங்கு வேளிர் குறித்தல் காண்க. ஜைன நூலான வடமொழி உத்தர புராணத்தில் (பர்வம்—67 ச்லோ. 152) இராமாயணசரித்திரம் வருமிடத்து—"அந்த தேவனுன மணிசூளனுனவன் சக்ரரேகை என்ற அடையாளத்துடன் கூடியவனுதலால், லக்ஷ்மணன் என்ற பெயருடையவனுனன்" என்ற கருத்தமைந்த சுலோகம் கூறப்பட்டுள்ளதென்பர்1. இது ஜைனரான அக்கொங்குவேள் கூறிய மேற்கண்ட தொடருடன் ஒப்பிட்டறியத்தக்கது. இங்ஙனமே, தனக்கு நேர்ந்த பழிக்கு அஞ்சிப் பூமிக்குள் ஒளித்துத் தன்புகழை உலகில் நாட்டிய சீதாபிராட்டியின் அரிய செயலை,

"சிறுமையி னுணர்ந்த பெருமக ளிரங்க
மண்கெழு மடந்தாய் மறைவிடந் தாவென
ஒன்றுபுரி கற்போ டெலகுவிளக் குறீஇப்
பொன்ற லாற்றிய புகழாள் போல" (1, 36, 338—41)

எனப் புலவர்பெருமானுகிய அவ்வேளிரே கூறுதல் அறியத்தக்கது. இனி, இராவணன் கயிலையங்கிரியை எடுத்து நின்றநிலையை,

" இமையவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தணன்
உமையமர்ந் துயர்மலை யிருந்தன ணுக
ஐயிரு தலையி னரக்கர் கோமான்
தொடிபொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லா துழப்பவன் போல
உருபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை

1. 'ஜைன - கேஸட்' பத்திராதிபரான ஸ்ரீ: ஸி. எஸ். மல்லிநாதர் அவர்களால் இவ்விஷயம் அன்புடன் எனக்கு அறிவிக்கப்பட்டது.

நீடுறு விடாகஞ் சிலம்பக் கூஉய்த்தன்
கோடுபுய்க் கல்லா துழக்கு நாடகேள்"

என்று குறிஞ்சிக்கலியில் (2) கபிலர் கூறுவர். இதனுள் வேங்கை மரத்தைப் புலியென்று தன் கோட்டாற் குத்தி அக்கோட்டைத் திரும்பவாங்கமாட்டாது வருந்திக் கூப்பிடும் மதயானையின் நிலைக்கு இராவணன் கயிலையையெடுத்து நின்ற நிலையை அவர் ஒப்பிட்டிருப் பது காண்க. இவ்வாறே, இராமாயணசரித்திரங்கள் தமிழகத்திற் பெருக வழங்கிவந்துள்ளதைத் தலமான்மியங்களினின்றும் நாம் பலபடியாகத் தெரியலாகும். கழுகின் வேந்தாகிய சம்பாதி இருந்த வனம், காவிரிப்பூம்பட்டினத்தை யடுத்திருந்ததென்று மணிமேகலை கூறும். இச் சம்பாதிவனத்தைப் புள்ளிருக்கு வேளூர் என்பர். இதனை,

"வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த
சம்பாதி யிருந்த சம்பாதி வனமும்" (மணி. 3, 53—4)

"தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே"
(தேவா. புள்ளிருக்கு. சம். 4.)

என்ற முன்னோர் திருவாக்குக்களால் உணர்க. இராவணன் பெருந் தேவியான மண்டோதரிக்குச் சிவபிரான் அருள்புரிந்ததனை—

"ஏர்தருமே ழுலகேத்த எவ்வுருவுந் தன்னுருவாய்
ஆர்கலிசூழ் தென்னிலங்கை யழகமர்வண் டோதரிக்குப்
பேரரு ளின்பமளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்"
(திருவாசகம், 18, 2.)

எனத் திருவாதவூரடிகள் பாடுதலும் அரியதோர் தமிழ்ச் செய்தியா கும். மற்றும், சேதுபுராண முதலிய தலமான்மியங்களில் வழங்கும் இராமசரிதவழக்குக்கள் பல. அவற்றை யெல்லாம் இங்கு விரிப்பிற்பெருகும்; அம்மான்மியங்களை நோக்கியுணர்க. இவற் றால், ஸ்ரீராமசரிதம் சங்ககாலத்துத் தமிழ்மக்களுட் பெரு வழக்குப் பெற்றிருந்த தென்பதும், தமிழிராமாயண நூல்கள் இயற்றப் பட்டிருந்தனவென்பதும், தென்னாட்டு வழக்கேயான சரித்திரக்கூறுகள் அச்சங்காலத்தும் பிற்காலத்தும் பெருக வழங்கிவந்தன என்பதும் நன்கறியலாகும்.

திருக்குற்றாலக் குறவஞ்சி

ராவ் சாகிப் வே. ப. சுப்பிரமணிய முதலியார், ஜி. பி. வி. ஸி.

(124-ஆம் பக்கத்தொடர்ச்சி)

குறத்தி நாட்டுவளங் கூறுதல்

(இனிய சுவையினால்) மாதர் சொல்லைப் பழித்த தென்று மைந்தர்கள் (துண்டுதுண்டாக வெட்டி) மண்ணிற் புதைத்த கரும்பு, (துண்டுகளெல்லாம் முழுக்கரும்புகளாகத்) திரும்பவும் வளர்ந்து, (வடிவத்தினால்) மாதர்கள் தோள்களை வென்று, (அதனோடு நில்லாமல்) முத்துக்களைக் (கணுக்களில்) ஈன்று (அம்முத்துக்களால்) அவர்கள் பற்களை வென்று, (அம்மட்டோடும் அமையாமல்) அவர்கள் (நாயகரைப்) பிரிந்திருக்குங் காலத்தில் அவர்களது முழுப்பெண்மைலத்தையும் (சிதைவுறச் செய்து) வெல்லுதற்கு மன்மதன் கைவில்லாக (வீறு கொண்டு மேன்மேலும் அதிக) உயரமாகவளரும் (வளப்பமுடையதாகிய) திரிகூடநாதரது ஆரிய நாடு எங்கள் நாடு என்ற இனிய கற்பனை அமைந்தது பின் வருவது:—

(18.) அந்ந லார்மொழி தன்னைப் பழித்ததென்
றடவர் மண்ணில் மூடும் கரும்பு
துன்னி மீள வளர்ந்து மடந்தையர்
தோளை வென்று, சுடர்முத்தம் ஈன்று
பின்னும் அங்கவர் மூரலை வென்று,
பிரியுங் காலத்திற் பெண்மையை வெல்லக்
கன்னல் வேளுக்கு வில்லாக ஓங்கும்
கடவுள் ஆரிய நாடெங்கள் நாடே. (46)

[அம் நல்லார்-அழகுடைய பெண்கள். துன்னி-நெருங்கி. மூரல்-பல். பெண்மை-பெண்ணுக்குரிய நலம்; (தமிழகராதி) நலம்-அழகு. கன்னல்வேள்-கரும்பு (வில்லுடைய) மன்மதன். கடவுள் என்பது இங்கே திரிகூட நாதரை உணர்த்தியது.]

உன் ஆரிய நாட்டை மிகவும் உயர்த்துக் கூறுகின்றாயே; அந்த நாட்டில், மற்ற நாடுகளிற் போல, குற்றங்கள் காணப்படுவதில்லையோ என்று வினவுவார்க்கு எதிர் மறையான விடையளியாமல்

உடன்பாடான விடையளிப்பான் போன்று, குறத்தி, சொற்றன்மையாற் குற்றங்களானவைகளாய்ப் பொருட்டன்மையாற் குணங்களானவைகளாயுள்ள பலவற்றைத் தொடுத்து அடக்கி ஆச்சரியமும் ஆனந்தமும் அடையும்படி கூறுவது பின் வருவது :—

(19.) ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்;
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்;
வாடக் காண்பது மின்னார் மருங்குல்;
வருந்தக் காண்பது சூல்உளை சங்கு;
போடக் காண்பது பூமியின் வித்து;
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து;
தேடக் காண்பது நல்அறம் கீர்த்தி;
திருக்குற் றாலர்தம் ஆரிய நாடே. (46)

[பூ புனல்-அழகுடைய நீர். மருங்குல்-இடை. சூல்உளை-கருப்பவாதைப் படுகின்ற. ஆரிய நாடே-ஆரிய நாட்டிலே.]

வசந்தவல்லி குறிகேட்டல்

வசந்தவல்லி குறிகேட்கக் குறத்தி, அவள் கையைப்பார்த்து, 'நீ பந்தடித்துக் கொண்டிருந்த வீதியிலே [1]மணிப் பணி அணிந்தவன் (திரிகூட நாதன்) [2]ஆனை ஏறி வந்தான். அப்போது, அவன் சேனையைக் கண்டு வெருட்சி கொண்டாய் போலும்' என்றாள்.

வசந்தவல்லி,

'ஒன்றும் விடாமற்குறி சொல்லியே வந்தாய் பின்னை
உழப்பிப்போட் டாய்குறியைக் குழப்பிப் போட்டாய்'

'மோகினியே உன்னுடைய கிறுகிறுப் பெல்லாம் அவன்
மோகக்கிறு கிறுப்படி மோகனக்கள்ளி'

எனக், குறத்தி, 'உன் காய்ச்சல் கருமக்காய்ச்சல்' என்றாள்.

வசந்த வல்லி சோபித்துக் கூறுதல்

(கண்ணிகள்)

(1) கன்னி யென்று நானிருக்க நன்னகர்க்குள்ளே என்னைக்
காமியென்றாய் குறவஞ்சி வாய்மதியாமல்;

1. மணிப் பணி-இரத்தினாபரணம், (நாக)ரத்தினமுடைய பாம்பு.
2. ஆனை-யானை, இடபவாகனத்தில் (உருபுமயக்கம்.) தார்-மாலை.

(2) சன்னை[1]யாகச் சொன்னகுறி சாதிப்பாயானல் அவன்
தாருஞ்சொல்லிப் பேருஞ்சொல்லி ஊருஞ்சொல்லடி.

'அவன்பேர் திரிகூட நாதன்' என்று குறத்தி கூறக்கேட்ட வுடனே, வசந்தவல்லி மகிழ்ந்து வெகுமதியும் விடையும் கொடுக்கப்பெற்றுக் குறத்தி சென்றாள்.

சிங்கி யென்னும் அந்தக் குறத்தியின் கணவன் சிங்கன் என்பவன் அவளைத் தேடி வரும் வழியில், தன் தோழனை நோக்கிக் கூறுவது வருமாறு:—

சொக்கு வேட்டையும் தேவாசுர யுத்தமும், கோச்குச்சாறும் கந்த சஷ்டி விழாவும்

21. மீறும் இலஞ்சிக் குறத்தியைக் கொண்டசெவ்
வேட்குற வன்முதல் வேட்டைக்குப் போனநாள்
ஆறுநாட் கூடி ஒரு கொக்குப் பட்ட
தகப்பட்ட கொக்கை அவித்தொரு சட்டியில்
சாறுக வைத்தபின் வேதப் பிராமணர்
தாமும் கொண்டார் சைவர் தாமும் கொண்டார்

[கொக்கு-கொக்குப்பறவை, மாமரம், அவித்தல்-அவியச் செய்தல் (வேக வைத்தல்), அழித்தல். சட்டி-மண் பாத்திரம், சஷ்டியென்னும் ஆறும் திதி. கொண்டார்-உண்டார் (நாமதீப நிகண்டு 693.) கொண்டாடினர் (கொள்ளல்-கொண்டாடுதல், தமிழகராதி).]

வெளிப்படைப் பொருள்:—வள்ளிக் குறத்தியைக் கொண்ட செவ்வேட் குறவன், ஆறு நாள் வேட்டை யாடினன். அந்த வேட்டையில் அகப்பட்ட கொக்கைச் சட்டியில் அவித்துச் சாருக வைத்தபோது, அந்தச் சாற்றை வேதப்பிராமணரும் சைவரும், கொண்டார்கள் என்பது.

குறிப்புப்பொருள்:—சுப்பிரமணியக் கடவுள் சூரனோடு பிரதமைத்திதியிலே போர்தொடங்கிச் சட்டித்திதியில் (ஆறும் நாளில்) மாமரமாக உருமாறி நின்ற சூரனைச் சங்கரித்தது, கந்தர் சஷ்டித் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டபோது, அந்தத் திருவிழாவை வேதப் பிராமணரும் சைவரும் ஏற்றுக்கொண்டார்கள் என்பது.

தோனிப்பொருள்:—பிராமணரும் சைவரும் மாமிசம் உண்டார் என்பது.

ஆசிரியர், ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத (தடித்த எழுத்திலுள்ள) சில சொற்களைத் தெரிந்தெடுத்து, அவைகளை, வேறு

1. சன்னை - பரிகாசம்.

வேண்டிய சொற்களை இடைப்பெய்து, சம்பந்தப்படுத்தி மேற் கூறிய இருவேறு செய்திகளை ஒருசேர உரைத்திருக்கின்ருர்.

அற்பமான பறவை வேட்டையில், சகஜமாக நடக்கும் எளிய சிறிய கொக்குப் பிடிக்கும் வேடச் செயலோடு, மகத்தான தேவாசுரயுத்தத்திலே அபூர்வமாக நிகழ்ந்த சூர சங்கார வீர கிருத்தியத்தையும், சிறுகுடிசையில் ஒரு சிலர் கொக்குச் சாறுண்டு களிக்கும் உண்டாட்டத்தோடு, பேருலகிலே கணக்கி லடங்காத ஜனங்கள் கந்தசட்டித் திருவிழாக்கண்டு களிக்கும் கொண்டாட்டத்தையும் ஏக காலத்தில் இனிது கூறிய கவிவன்மை அருமையினும் அருமையானது.

சிங்கன் மோக பரவசனய் மோழிதல்

'சிங்கியை என்னேடு பேசும்படி நான் எவ்வளவோ தாழ்ந்து வேண்டியும் இணங்காமல் பிணங்கிப் பேசாமல் இறுமாப்புடன் மௌனஞ் சாதிக்கின்ருள். அவள் அறியாமல் அவள் இறுமாப்பு நீங்கி இன்பமாகப் பேசும்படி அவள் மடிமேலிருந்து துள்ளித் தோள்மேலேறி வாய்க்கருகே யிருந்து, அவள் "என் செல்வக் கிளியே, நான் சொல்லிக் கொடுப்பதைச்சொல்" என்று கொஞ்சிக் கூறும் வார்த்தைகளைக் கேட்கும் பாக்கியமுடைய, அவள் அருமை பாராட்டி வளர்க்கின்ற கிளியாயிருக்கத் தவஞ் செய்தேனில்லையே' என்னும் கருத்துடைய கவி வருமாறு:—

(22.) கள்ளுலவு கொன்றைபந்தார்க் கர்த்தர்கிரி கூடவெற்பில்
பிள்ளைமதி வாணுதலாள் பேசாத வீறடங்கத்
துள்ளிமடி மேலிருந்து தோளின்மேல் ஏறிஅவள்
கிள்ளைமொழி கேட்கஒரு கிள்ளையா னேனில்லையே. (88)

[கள்-தேன். பிள்ளைமதி-பிறைச் சந்திரன் (போன்ற) வாணுதலாள்-ஒளியுடைய நெற்றியுடையவள் (சிங்கி.) வீறு-சருவம்-அகங்காரம். கிள்ளைமொழி-கிளிமொழிபோலும் (இனிய) மொழி. 'துள்ளி மடிமேலிருந்து' என்பதை 'மடிமேலிருந்து துள்ளி' என மாற்றுக.]

குற்ருல மகிமை

அறிவுடையோர்களே, (பிறவித் துன்பத்தினின்று நீங்கி முத்தியின்பத்தை அடைதற்காக க்ஷேத்திர யாத்திரை செய்தற் பொருட்டு) அலையாத ஊர்களிலெல்லாம் (மெய் வருந்த) அலைந்து திரியவேண்டிய அவசியமில்லை. (இந்த இடத்திலேயே

உடம்பசையாமலிருந்து நாக்கை மாத்திரம் அசைத்து) ஒரு முறை 'குற்றாலம்' என்று (ஓதுவோமாக. அப்படி) ஓதினால், வட வருவி (என்னும் நீர் வீழ்ச்சியாகிய புனித தீர்த்தத்தை)யுடைய வன் (ஆன குற்றாலநாத சுவாமி), நம்மை மறுபிறப்பாகிய சேற் றில் நடுதற்கு வரவழைக்க மாட்டான் (வேறு யாது செய்வா னெனில், மீளாக்கதியான முத்தியையடையச் செய்துவிடுவான்) என்னுங் கருத்துடைய அடியில் வரும் வாழ்த்துக் கவியோடு குற்றாலக் குறவஞ்சி கவிநயம் முற்றுப்பெறுகின்றது.

23. சுற்றாத ஊர்தோறும் சுற்றவேண் டாம்புலவீர்,
குற்றாலம் என்றொருகால் கூறினால்—வற்றா
வடவருவி யானே, மறுபிறவிச் சேற்றில்
நட, வருவி யானே நமை. (17)

சந்திரனின் சக்தி

பூமியின்மீது சந்திரன் எவ்வளவு ஆதிக்கம் செலுத்துகின்றான் என்று இப்பொழுது உலகம் எண்ணிக்கொண்டிருக்கிறதோ அதைவிடப் பன்மடங்கு அதிகமான சக்தியைப் பூமிமீது பிரயோகித்துவருவதாக நவீன விஞ்ஞான நிபுணர்கள் கூறுகின்றார்கள். இந்த சந்திரசக்தியினால் பிராட்காஸ்ட்டின் சப்த அலைகள் பாதிக்கப்படுகின்றனவாம். சந்திர சக்தி எவ்வளவுதூரம் சப்த அலைகளைப் பாதிக்கின்றன என்பதைத் திட்டமாக அறிய நிபுணர்கள் முற்பட்டிருக்கின்றனர். வேறு சில பகுதிகளில் பயிர்களின் வளர்ச்சியைக் கூட சந்திரசக்தி பாதிக்கிறதென நம்புகிறார்கள். சில சந்திர சக்தியினால் அதிகவளர்ச்சியடைகின்றனவென்று சில வருடங்களுக்கு முன்னதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது.

சாஸ்திரம்

கிருஷிகன்

எஸ். ஆத்மாராம்;-
(வியவசாய டிமான்ஸ்ட்ரேடர், கும்பகோணம்.)

---

1. உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.
2. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.
3. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
4. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
5. மேழிச் செல்வம் கோழை படாது.

என்று ஔவை, திருவள்ளுவர் முதலிய பெரியோர்கள் வியவசாயமே எல்லாத்தொழில்களைக் காட்டிலும் சிலாக்யமான தொழில் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது அகவிலைகள் எல்லாம் குறைந்திருக்கும் சமயத்தில் ஒவ்வொரு மிராஸ்தாரும் வியவசாயம் செய்து ஜீவிப்பவர்களின் நிலைமையைக்காட்டிலும் உத்தியோகத்திலிருப்பவர்களின் நிலைமை மேலானது என்று நினைக்கலாம். இதற்கு முக்ய காரணம், நமது செலவுகளை அதிகமாக்கிக்கொண்டிருப்பதும், வியவசாயத்தைச் சரியாகக் கவனியாமலிருப்பதும்தான் என்று நினைக்கிறேன்.

ஒவ்வொருமனிதனுக்கும் முக்யமாய் வேண்டியது ஊண், உடை. ஒவ்வொரு மிராஸ்தாரும் கவனமாய்ச் சாகுபடி செய்யும் விஷயத்தில் தங்களுக்கு வேண்டிய ஆகாரப்பொருள்களையும் உடையையும் தாங்களே உண்டாக்கிக்கொள்ளலாம். சென்னை ராஜதானியில் சாகுபடி செய்யக்கூடிய விஸ்தீர்ணம் 3, 37, 93, 466 ஏகர் என்றும் ஜனத்தொகை 4, 67, 48, 644 என்றும் கணக்கிட்டு இருக்கிறார்கள். இப்பொழுது எடுத்திருக்கும் ஜனத்தொகையானது 10 வருஷங்களுக்கு முன் எடுத்ததொகையைக் காட்டிலும்

இது சென்னைப் புத்தகாலய சங்கத்தின் ஆதரவில், சென்ற மகாமகத்தின்போது கும்பகோணத்தில் செய்யப்பட்ட பிரசங்கத்தின் சுருக்கமாகும்.

100-க்கு 10 அதிகமாக இருப்பதாகவும் தெரிகிறது. ஆனால் சாகுபடி செய்யக்கூடிய விஸ்தீர்ணமோ அதிகமாகவுமில்லை, அதிகமாக்கிக் கொண்டு போவதற்கும் இடமும் இல்லை. ஆகையால், நாம் இப்பொழுது இருக்கும் நிலத்தில் இப்பொழுது கிடைக்கும் மாசூலைக் காட்டிலும் அதிகமாய்க் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். தவிரவும் நமக்குத்தேவையான பொருள்கள் எல்லாவற்றையும் நாமே சாகுபடி செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இந்த ராஜதானியிற் கரும்பு சாகுபடிக்குத்தகுந்த அநேக நிலங்கள் இருந்தும், ஒவ்வொரு வருஷமும் 80,000 டன் அதாவது சுமார் 2 கோடி ரூபாய்க்குமேல் சர்க்கரை விலைக்கு வாங்குகிறோம். சுமார் 200 வருஷங்களுக்கு முன் நமக்குவேண்டிய உடைகளை நாமே தயார் செய்துகொண்டோம். ஆனால் இப்பொழுது நமது தேசத்தில் 50 கோடி ரூபாய் விலையுள்ள ஜவுளிதினுசுகள் அயல் நாடுகளிலிருந்து வாங்குகிறோம். ஆகையால் ஒவ்வொருவரும் தங்களுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் தங்கள் தேசத்திலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

நிலச்சுவான்கள் முன்னேற்றமடைவதற்கு என்ன செய்யலாம் என்பதைப்பற்றிச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். உதாரணமாக தஞ்சை ஜில்லாவை எல்லோரும் தென் இந்தியாவின் நெற்களஞ்சியம் (*Granary of S. India*) என்று சொல்லுகிறார்கள். நெல்விளையக்கூடிய நன்செய் நிலங்கள் ஏராளமாய் இருந்தும் விளைந்த நெல்லை விற்றே இதரகாரியங்களை நடத்தவேண்டியிருப்பதால் நெல்லின் விலை குறைந்த சமயத்தில் நிலச்சுவான்கள் அதிகக் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது. ஆனால் அதிகலாபத்தைக் கொடுக்கக்கூடிய கரும்பு, வாழை முதலிய பயிர்களை வடிகால் வசதியுள்ள நிலங்களில் சாகுபடிசெய்தால் அதிகசிரமம் ஏற்படாது. நெல் சாகுபடியில் எப்படிச் செலவைக்குறைத்து அதிக மாசூல் அடையலாம் என்பதைப்பற்றிச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்:

1. பொறுக்கிய விதைகளை உபயோகித்தல்

ஆடுதுறைச் சர்க்கார் வியவசாயப் பண்ணையில் இந்த ஜில்லாவில் உபயோகித்துவரும் முக்யமான எல்லாத்தினுசு நெல்லிலும் விதைபொறுக்கியிருக்கிறார்கள். இந்த விதைகள், நாட்டுவிதைகளைக் காட்டிலும் 100-க்கு 10 முதல் 25 வரையில் அதிக மாசூலைக் கொடுக்கின்றன. நல்ல விதைகளை வாங்கி உபயோகிப்பதால் அதிகச் செலவு ஒன்றுமில்லை. விதை தேவையுள்ளவர்கள் ஒவ்

வொரு தாலூக்காவிலும் உள்ள விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர் களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

2. கலக்க நாற்றுப்பாவிச் சிச்சனமாய் நடுதல்

இப்பொழுது ஜனங்கள் அதிகவிதையைச் சொல்ப நிலத்தில் நாற்று விட்டு நடுகிறார்கள். அதனால் நாற்றுக்கள் நன்றாய் வளராமல் மகசூலும் குறைந்து விடுகிறது. சாதாரணமாய் ஒரு ஏகர் நடுவதற்குச் சம்பாவில் ஒரு கலமும் குறுவையில் $1\frac{1}{2}$ முதல் 2 கலம் வரையிலும் விதை உபயோகிக்கிறார்கள். இந்த அளவில் பாதிவிதையே ஒரு ஏகர் நடுவதற்குப்போதுமானது. ஒரு செண்டுக்கு ஒரு பட்டணம் படி வீதம் சம்பாவிதையும், $1\frac{1}{2}$ பட்டணம் படி வீதம் குறுவை விதையும் 10 செண்ட் நிலத்தில் நாற்று விட்டால் ஓர் ஏகர் நிலம் நடுவதற்குப் போதுமான நாற்றுக்கள் கிடைக்கும். இந்தமாதிரி செய்வதினால் விதை மிச்சமாவதும் தவிர அதிக மகசூலும் கிடைக்கிறது.

3. அகல உழுவதைவிட ஆழ உழு

இந்தப் பழமொழிப்படி நன்றாய் உழுவது நடுவதால் அதிக மகசூல் கிடைக்கும். நன்செயை உழத்தகுந்த சிறு இருப்புக் கலப்பைகள் இருக்கின்றன. மரக்கலப்பையால் 4 அல்லது 5 தரம் உழுவதைக் காட்டிலும் இருப்புக்கலப்பையால் 2 அல்லது 3 தரம் உழுதால் போதுமானது. ஒரு கலப்பையை அநேக வருஷங்கள் உபயோகிக்கலாம். ஒன்றின் விலை ரூ. 4 தான்.

4. மாடுகள்

நம்முடைய தேசத்தில் வியவசாயத்திற்கும் குழந்தைகளுக்குப்பாலுக்கும் மாடுகள் முக்யமாய் வேண்டியிருக்கின்றன. அதனால்தான் மாடுகளைத்தெய்வமாக நாம் கொண்டாடிவருகிறோம். மாடுகளுக்கு வேண்டிய நல்ல தீவனம் போட்டுப் போஷிக்கவேண்டும். 'தகப்பனைப்போல் பிள்ளை' என்ற பழமொழிப்படி நல்ல பொலிகாளைகளை வைத்துக்கொண்டு பிரயோஜனமற்ற காளைகளுக்குக் சாய் எடுத்து விட்டால் மாடுகள் விருத்தியாகும். மாடுகளை விருத்திசெய்வதற்காக நல்லவேலை செய்யக்கூடிய காங்கயம் காளைகளையும் அதிக பால் தரக்கூடிய வம்சத்தைச்சேர்ந்த சிந்து (*Sindhi*) காளைகளையும் வாங்கிவைத்துக்கொண்டால் சர்க்காரில் காளை ஒன்றுக்கு வருஷம், ஒன்றுக்கு ரூ. 90 வீதம் இனாம் கொடுத்து வருகிறார்கள். மாட்டிற்குத் தீவனம் போடும்போது சொஞ்சம் உப்பு சேர்த்துக்கொடுத்தால் அது சாப்பிடும் தீனி நன்றாய் ஜீரணமாகும்.

5. எரு

i. **தொழு எரு:**—தொழு எருவே எல்லா எருக்களைக் காட்டிலும் சிலாக்யமானது. நாம் இந்த எருவைச் சரியாகச் சேகரித்துக் காப்பாற்றுமல் இருப்பதால் அதன்சத்துக் குறைந்து விடுகிறது. தவிரவும் அநேக வீடுகளில் சாணியை வரட்டியாகத் தட்டி அடுப்பெரித்து விடுகிறுர்கள். இப்படிச்செய்வதால் நிலங் களுக்கு வேண்டிய எரு இல்லாமல் மாசூலும் குறைந்து விடுகிறது. தவிரவும் மாட்டின் மூத்திரத்தில்தான் நல்ல சத்து இருக்கிறது. அதையும் நாம் சேகரிப்பதில்லை. தளவரிசை போட்டிருக்கும் மாட்டுக்கொட்டில்களில் சாளவம் கட்டி மூத்திரம் எருக்குழியில் விழும்படி செய்யவேண்டும். தளவரிசைபோடாத கொட்டில்களில் அரை அடிகனத்திற்கு வண்டல் அல்லது மணலைப்போட்டு அந்த மண்ணை ஒன்று அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு தரம் எருக் குழியில் கொண்டுபோய்ச் சேர்த்தால் எருவின் சத்துக்குறையாமல் இருக்கும். எருவானது வெயிலில் உணராமலும் மழையினுல் கரைந்துபோகாமலும் இருக்கும்படியும் எருக்குழியின்மேல் ஒரு பந்தல் போடுவது சிலாக்யமானது.

ii. **பசுந்தாள் எரு:**—நன்செய் நிலங்களுக்குப் பசுந்தாள் எரு மிகவும் சிலாக்யாமானது. ஆனுல் இந்தஜில்லாவில் மலைகள் இல்லாததால் தழை எரு அதிகமாய்க் கிடைப்பதில்லை. நம்முடைய நன்செய் நிலங்களிலேயே பசுந்தாள் உரப்பயிர்கள் சாகுபடி செய்து எருவாக உபயோகிக்கலாம். நெல் அறுவடைக்குப் பதினைந்து அல்லது 20 நாளைக்குமுன் அவுரி அல்லது கொளிஞ்சி விதையை விதைத்தால் நல்ல பசுந்தாள் எரு கிடைக்கும். இந்தப்பயிர்களை மாடுகள் சாப்பிடுவதில்லை. ஓர் ஏகர் விதைப்பதற்கு வேண்டிய விதையின்கிரயம் 8 அணுவுக்கு மேல் ஆகாது.

iii. **சேர்க்கை எருக்கள்:**—தஞ்சை ஜில்லாவின் மண்ணை அநேக இடங்களில் பரிசோதித்துப்பார்த்தால் தான்ய சத்து (*Phosphoric acid*) மிகவும் குறைந்திருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் எலும்புத்தூள் (*Super Phosphate*) சூபர்பாஸ்பேட் முதலிய எருக்களை பசுந்தழைகளுடன் உபயோகித்தால் அதிக மாசூல் கிடைக்கும்.

வேறு பயிர்கள்

தஞ்சாவூர் ஜில்லாவில் நன்செய் நிலங்கள் அதிகமாக இருப் பதால் அவைகளில் நெல்லைத்தான் முக்யமாய் சாகுபடிசெய்கிறுர் கள். இப்பொழுது நெல்லின் விலை குறைந்திருப்பதால் நெல் சாகு

படியில் அதிகலாபம் கிடைப்பதில்லை. ஆகையால் வடிகால் வசதியுள்ள நிலங்களில் நமக்குவேண்டிய, கரும்பு, வாழை, நிலக்கடலை முதலிய பயிர்களைச் சாகுபடி செய்யலாம்.

6. பழ விருக்ஷங்கள்

முன்காலத்தில் நம்முடைய முன்னோர்கள் காய், கறி, கிழங்கு முதலியவைகளைச் சாப்பிட்டுக் கொண்டு நெடுங்காலம் திடகாத்திரர்களாய் இருந்ததாக நாம் சரித்திரங்களில் படித்திருக்கிறோம். பழங்கள் சாப்பிடுவது உடம்பிற்கு நல்லது என்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. நம்முடைய தேசத்திலிருந்து இங்கிலாந்திற்கு மாம்பழங்களைக் கொண்டுபோய் உபயோகிப்பதாக நாம் பத்திரிகைகளில் பார்க்கிறோம். நம்முடைய தேசமானது பழவிருக்ஷங்கள் பயிர் செய்வதற்கு ஏற்றதாக இருந்தும் நாம் அதிகமாய்ப் பழவிருக்ஷங்களைப் பயிர்செய்யாமலும் பழங்களை உபயோகிக்காமலும் இருக்கிறோம். இந்தஜில்லாவிலேயே, மா, எலுமிச்சை, சாத்துக்குடி, ஆரஞ்சு முதலிய த்ாவரங்கள் நல்ல பழங்களைக் கொடுத்து வருகின்றன. மேற்சொல்லிய தாவரங்களை எல்லாரும் பயிர் செய்து பழங்களைச் சாப்பிடும் வழக்கத்தை விருத்தி செய்து கொள்ளவேண்டும்.

i. வாழை :—இதைப் படுகைநிலங்களில் சாதாரணமாகப் பயிர்செய்து வருகிறார்கள். வடிகால் வசதியுள்ள நன்செய் நிலங்களிலும் இதைச் சாகுபடிசெய்யலாம். இந்தப்பழத்தை உலர்த்தி அநேகநாள் வைத்துக்கொள்ளலாம் என்று ஆடுதுறை வியவசாயப் பண்ணையில் கண்டு பிடித்திருக்கிறார்கள். பழம் அதிகமாகக் கிடைக்கும் காலங்களில் அவைகளை உலர்த்தி அயல் நாடுகளுக்கு அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யலாம்.

ii. தென்னை :—அதிகமாகத் தென்னை மரங்களை வைத்தால் அதிக காய்கள் கிடைக்குமென்று நினைத்துக்கொண்டு ஏகருக்கு 100 முதல் 200 பிள்ளைகள் வரை வைத்துச் சாகுபடி செய்து மரங்கள் காய்க்காமல் போய்விடுகின்றன. தென்னை மரங்களை ஒருமரத்தின் மட்டை மற்றொரு மரத்தின் மட்டையின்மேல் படாமல் இருக்கும்படி அதாவது 25 அடிக்கு ஒன்று நட்டால்தான் நல்லபலனை அடையலாம். தோப்பை நன்றாய்க் கொத்தி எருவும் போட்டால் அதிகமாகக் காய்கள் கிடைக்கும்.

iii. காய்கறிகள் :—ஒவ்வொருவரும் தங்களுக்கு வேண்டிய காய்கறிகளைத் தங்கள் வீட்டுக்கொல்லையிலேயே சாகுபடி செய்யலாம். சீமைத்தக்காளி, வெண்டை, கத்தரி, கொத்தவரங்காய் முதலியவைகளைச் சாகுபடி செய்தால் நமக்கு வேண்டிய காய்கறிகளை விலைக்கு வாங்கவேண்டியதில்லை. நம்முடைய வீட்டின் பின்புறமும் சுத்தமாயும் இருக்கும்.

'சேர்ந்து வாழ்வதே சிறந்தவலிமை' என்ற பழமொழிப்படி எல்லா மிராஸ்தார்களும் ஒன்றுசேர்ந்து தங்களுக்கு வேண்டிய சாமான்களை மொத்தமாக வாங்கியும், தங்களிடம் அதிகமாய் இருக்கும் சாமான்களை மொத்தமாய்க்கொண்டுபோய் நல்ல விலை கிடைக்கக்கூடிய இடங்களில் விற்றும், பணத்தை எலக்‌ஷன், கோர்ட்டு விவகாரங்கள் முதலியவைகளில் வீண் செலவுகள் செய்யாமலும், அதிக டம்பமில்லாமலும் இருந்தால் இந்தமாதிரி விலைவாசிகள் குறைந்திருக்கும் சமயத்தில் அதிக சிரமம் இல்லாமல் வாழலாம்.

ஜப்பான் சந்நியாசிகள்

மகா போதி சங்கத்தின் பொதுக்காரியதரிசியான ஸ்ரீதேவப்பிரியவாலி சின்ஹா கல்கத்தா கல்லூரி சதுக்கம் பௌத்த மண்டபத்தில் ஜப்பானின் நிலைமையைப்பற்றிப் பிரசங்கம் செய்கையில் சந்நியாசிகளைப்பற்றிக் குறிப்பிட்டதாவது:— (இவர் டோக்கியோவில் நடந்த ஆசிரிய பௌத்த வாலிபர்) மகாநாட்டுக்குப் போய்விட்டு வந்தவர். ஜப்பானில் பௌத்த மடங்கள் பல இருக்கின்றன. அவற்றின் பொருளாதார நிலைமை திருப்திகரமாகவே இருந்து வருகின்றது. அங்குள்ள சந்நியாசிகள் சோம்பேறிகளல்ல. அவர்கள் சமுதாய சேவை புரிகின்றனர். அவர்களால் சமுதாயத்திற்கு அநுகூலமே தவிர வேறல்ல,

—கல்பதரு.

அலைகள்


கே. அப்புராவ்

(132 - ஆம் பக்கத்தொடர்ச்சி)

3. மின்சார அலைகள்

கிளார்க் மாக்ஸ்வல் என்பவர் 1873-ஆவது வருஷத்தில் 'மின் சார அலைகள்' என்று ஒருவகை அலைகள் உண்டு என்றும் அவை ஒளியின் வேகத்தை உடையவை என்றும் கணக்கிட்டு அறிவித்தார். ஜர்மனியில் ஏர்ட்ஸ் என்பவர் மாக்ஸ்வல் கூறியதை ஆராய்ச்சி யின் மூலமாய் நிரூபித்தார்.


ஏர்ட்ஸ் என்பவர் மின்சாரப்பொறி உண்டாகும்பொழுது மின்சார அலைகள் உண்டாகின்றன என்றும் அதை 'மின்சாரக் கண்ணின்' உதவியால் கண்டுபிடிக்கலாம் என்றும் கூறினார். 'ஆலிவர் லாட்ஜ்' என்பவர் இரண்டு 'லீடன் கண்டன்சர்' என்பவற்றைக் கொண்டு மின்சார அலைகள் உண்டென்பதைக் காண்பித்தார். ஓர்



லீடன் கண்டென்சரில் மின்சாரம் சேர்த்து அதை இரண்டு கம்பி களின் மத்தியில் மின்னலைப் போல் பொறியுண்டாகச் செய்தார். மற்றொரு கண்டன்சரில் உள்ள தகட்டிலிருந்து ஓர் சிறிய தகட்டை

V.ii - 11


வெளித்தகட்டிற்குச் சற்றுச் சந்து விட்டு ஒட்டிப் படத்தில் காண்கிறமாதிரி இணைப்புகள் செய்தார். அலை அனுப்பும் கருவியில்



பொறி போகும்பொழுது மற்றொரு கண்டன்சருடன் காண்பித்திருக்கும் கொக்கியை ஓர் குறித்த இடத்திற்குக் கொண்டுவந்தால், வெளியில் தகட்டின் சந்தில் மின்சாரப்பொறி போவதைக் காணலாம். இதனால் மின்சார அலையுண்டாகி இரண்டாவது கண்டன்சரில் மின்சாரம் உண்டாக்குகிறது என்று தெரிகிறதல்லவா?


ஒளியைப்போன்ற வேகமுடைய மின்சார அலையும் ஈதரில் உண்டாக்கப்படுகிறது. ஆனால் ஒளிஅலைகளைப் போலில்லாமல் மின்சார அலைகளின் அளவு பல அங்குலத்திலிருந்து சில மைல்கள் வரை நீளமுள்ளதாயிருக்கும்.


கம்பியில்லாத தந்தி அனுப்பப்படும்போது வெளியில் உயரமாகப் போட்டிருக்கும் கம்பியில் மின்சாரம் மிகவும் அதிக அழுத்



தத்துடன் அனுப்பப்படுகிறது. படத்தில் காண்பது, அக்கம்பியை இரண்டு குண்டுகளுடன்சேர்த்துப் பூமியுடன் இணைக்கப்பட்ட

தோற்றம். இரண்டு குண்டுகளுக்கும் மத்தியில் சற்றுச் சந்து இருக்கும். கம்பியில் மின்சார சக்தி அதிகமானதும் பொறி பொங்கில் பொறி உண்டாகிப் பூமிக்குப் போய்விடுகிறது. திரும்பவும் மின்சாரமாகிப் பொறி உண்டாகிறது. இம்மாதிரியாகக் கம்பியில் மின்சார அழுத்தம் மாறுவதும் பொறி உண்டாவதும் மின்சார அலைகளை ஈதரில் உண்டாக்கி விடுகின்றன. அலைகள் தூரத்தில் உள்ள ரிசீவர் அல்லது மின்சாரக்கண்ணில்போய் அடைகின்றன. மின்சார அலைகள் எல்லாப் பக்கமும் செல்கின்றன. தூரம் அதிகமானதும் அலையின் சக்தி குறைந்து விடுகிறது. அதிகநீளமுள்ள மின்சார அலைகள் மிகவும் சீக்கிரத்திலேயே கெட்டுச்சக்தியற்றுப்போய் விடுகின்றன. இவற்றிற்கு நீள அலைகள் என்று பெயர். அலை நீளம் மிகவும் சிறியதாயிருந்தால் அதன் சக்தி அதிகமாகி நெடுந்தூரம் அதிகமான சக்தி குறையாமல் செல்லும். நமக்கு இங்கிலாந்திலிருந்து அனுப்பப்படும் ரேடியோவில் மின்சார அலை குறுகிய நீளமுள்ளதானுல் அங்கிருந்து அனுப்பப் படும் பாட்டு முதலியவைகள் கேட்பதற்குச் சுலபமாய் இருக்கின்றன.






பின்னும் சிறிய அலைகள் பிரதிபிம்பிக்கச் செய்து ஒரே திக்கில் ஒரே கொத்தாக அனுப்பி ரகசியத்தந்தி ஏற்படுத்த முடியும்.

கம்பியில்லாத் தந்தியில் உண்டாக்கப்படும் மின்சார அலைகள் சேர்ந்து வராமல் விட்டுவிட்டு வருகின்றன. இதனுல் இவ்வித அலைகளைக் கொண்டு கம்பியில்லா டெலிபோன் உண்டாக்குவது கஷ்டம். டெலிபோனுக்குச் சேர்ந்துவரும் அலைகள் வேண்டும். இவ்வித அலைகள் 'தர்மானிக் வால்வ்' என்ற ஓர் கருவியின் உதவியால் உண்டாக்கப்படுகின்றன. டெலிபோனில் ஒருவர் பேசும் போது சேர்ந்துவிடும் அலைகளின் உருவம் மாறிவிடுகிறது. இம்

மாறுதல் ரிசீவரில் பேச்சாக வருகிறது. ஆனால் ரிசீவரில் முதலில் வரும் மின்சாரம் மாறிமாறி வருகிறது. அதாவது இரண்டுவித மின்சாரம் அதிகமாகத் தம்முடைய வழியை மாற்றிக்கொள்கின்றன. இவ்விதமான மின்சாரம் டெலிபோன் ரிசீவரில் சப்தம் உண்டாக்காது. ஆகையால் மாறி மாறிவரும் அலைகளை இரண்டாகக் கத்தரித்து விடவேண்டும். இரண்டாகக் கத்தரித்துவிட்டால் ரிசீவரில் மின்சாரம் ஒரே வழியாகச்சென்று பேச்சை உண்டாக்குகிறது.



1. விட்டுவரும் அலை. 2. சேர்ந்துவரும் அலை.

அலைகள் மிகவும் தூரமிருந்து வருவதனால் சக்தியை இழந்திருந்தால் அதன் சக்தியை ரிசீவரில் அதிகரித்துப் பேச்சு சரியாய்க் கேட்கும்படி செய்யவேண்டும். இதை ‘ஆம்பிளிபிகேஷன்’ அல்லது அதிகரிக்கச் செய்வது என்று கூறுவார்கள்.


பலவித நீளமுள்ள மின்சார அலைகளை உண்டாக்குவதனால் அலைகள் கலந்துகொண்டு ஏற்படும் கஷ்டத்தை அவை தடுக்கின்றன. பம்பாயிலிருந்து அனுப்பப்படும் மின்சார அலை நீளத்திற்கும் கல்கத்தாவிலிருந்து அனுப்பப்படும் அலைகளின் நீளத்திற்கும் வித்தியாசம் இருப்பதனால் இரண்டு அலைகளும் கலப்பதில்லை. நாம் பம்பாயில் என்ன நடக்கிறது என்று கேட்க வேண்டுமென்றால் நமது ரிசீவரை அங்கிருந்து வரும் அலையின் நீளத்திற்குத் தகுந்தபடி அமைப்பைப் பொருத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் பம்பாயை மட்டும் நாம் கேட்கலாம். அதேமாதிரி கல்கத்தா அலையளவிற்குப் பொருத்தினால் கல்கத்தாவைக் கேட்கலாம்.

எக்ஸ் ரே

எக்ஸ்ரே அலைகள் ஒளி அலைகளினும் மிகவும் சிறியனவே. எக்ஸ்ரே ஒளியை நாம் பார்க்க முடியாது. அதன் அலை அளவு மிகவும் சிறியது. அதன் வேகமும் சற்று ஒளியின் வேகத்தை ஒத்ததே. எக்ஸ்ரே மெதுவான பொருளில் நுழைந்து செல்லும். முக்கியமாக ஈயத்தில் அது செல்லாது. நமது எலும்பில் அது போவது கொஞ்சம் கஷ்டம். ஆனால் மாமிசத்தில் சென்று விடுகிறது. ஆகையால் நமது உடம்பில் உள்ள எலும்பைப் புகைப்படம் பிடிப்பது முடிகிறது. எலும்பினால் தடுக்கப்பட்ட எக்ஸ்ரே

அலைகள் கீழுள்ள புகைப்படக் கண்ணாடிக்குச் சென்று படத்தைப் பதிப்பிக்க முடிவதில்லை. ஆனால் மாமிசத்தின் மூலமாய்ச் செல்லும் அலை நமது எலும்பின் உருவத்தை நிழலாகப் பதிப்பித்து விடுகிறது.

படத்தைப் பாருங்கள்: கண்ணாடிக் குழிக்குள் இருக்கும்



காற்று எல்லாம் எடுத்து விடப்படுகிறது. 'காதோட்' என்னும் வழியாய் அதிக அழுத்தமுள்ள மின்சாரம் 'அனோட்' வழியாய்ப் போய் விடுகிறது. இச்சமயத்தில் வெளிச்சத்தைக் கொடுத்துக் கொண்டு 'எலக்ட்ரான்' என்னும் மின்சா நுண் பொருள்கள் காதோடிலிருந்து சென்று அனோடைத் தாக்குகின்றன. அனோடிலிருந்து எக்ஸ்ரே உண்டாகி வெளியில் வருகிறது. எலக்ட்ரான்கள் அனோடைத் தாக்கும்போது அனோடிலுள்ள அணுக்கள் தாக்கப்பட்டு அதிக பரபரப்பான அசைவு உண்டாகி எக்ஸ்ரே அலைகள் ஈதரில் தூண்டப் படுகின்றன என்று ஒரு வாறு அனுமானிக்கலாம்.

எக்ஸ்ரே இரண்டு கம்பியினால் ஏற்படுத்தப்பட்ட சந்தில் பட்டதால் அச் சந்தின் வழியாய் மின்சாரம் போகும்படியாய்க் காற்றை ஓர் மின்சாரம் போகக் கூடிய உலோகத்தைப் போல் செய்து விடுகின்றது. அது எக்ஸ்ரேயினால் கம்பியில் உள்ள "ஐயனஸ்" என்பவைகள் விடுவிக்கப் படுவதனால் ஏற்படுகிறது.

எக்ஸ்ரேயைப் பிரதிபிம்பிக்கக் கூடிய கண்ணாடி இதுவரை கண்டு பிடிக்கப் படவில்லை.

உயிர் நூலை ஏன் கற்கவேண்டும்?

அ. ஸ்ரீனிவாசாச்சாரியார், பி. ஏ., எல். டி.

உயிர் நூல் யாது?

இயற்கையில் உள்ள பொருள்களைப் பொதுவாக இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்:—(1) உயிரற்றன (2) உயிருள்ளன. காற்றிற் பறக்கும் தூள் முதலாக வானத்தில் ஒளிரும் நக்ஷத்திரங்கள் வரை உள்ள பொருள்கள் பல உயிரற்றனவாம்; புல் முதல் வானுற ஓங்கிவளரும் காட்டு மரங்கள்வரை யுள்ள செடிகொடி மரங்களும், புழுமுதல் மனிதன்வரையுள்ள பிராணிகளும் உயிருள்ளனவாம். இயற்கைப் பொருள்களை நன்கு ஆராய்ந்து கற்றுத் தேர்ந்த பெரியார், உயிருள்ள பொருள்கட்கும் உயிரற்றபொருள்கட்கும் ஆறு வேறுபாடுகள் இருப்பதை உணர்ந்துள்ளனர்.

(1) உயிருள்ள மனிதன் காற்றை உட்கொள்ளுவதையும் வெளிவிடுவதையும் செய்ய இயலாது போவானாயின்—சுவாசம் நின்றுவிடுமாயின்—அவனது உடலை உயிரற்ற பொருள் என்று விடுகிறோமன்றோ? ஆதலின் உயிருள்ள பொருள் மூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் இயல்புடையது; உயிரற்ற பொருள் மூச்சுவிடும் தன்மை யற்றது.

(2) உயிருள்ள பொருள் உணவையுண்டு, அதைத் தனது உடலாக மாற்றும் சக்தியை உடையதாகும்; உயிரற்ற பொருளோ உண்ணுந் திறமை யற்றதாகும்.

(3) உயிருள்ள பொருள் நாளும் வளர்ந்துவரும் இயல்புடையதாகும்; உயிரற்ற பொருளோ வளரும் தன்மை யில்லாததாகும்.

(4) உயிருள்ள பொருள் தன்னிட மிருந்து வேறு உயிருள்ள பொருள்களைத் தோற்றுவிக்கும் திறமையுடைய தாகும்; உயிரற்ற பொருள் அவ்வண்ணம் செய்ய இயலாததாகும்.

(5) உயிருள்ள பொருள் வெவ்வேறு தொழில்களைக் கொண்ட பல உறுப்புக்களை யுடையதாகி, அத் தொழில்களில் ஒவ்வொன்றாலும் முழு உடலிற்கும் அதன்கண் தங்கும் உயிர்க்

கும் நன்மை உண்டாகும் வண்ணம் பல அங்கங்கள் அமையப் பெற்றதாகியும் இருக்கும்; உயிரற்ற ஒரு பொருளின்கண் அத்தகைய உடலும் உறுப்புக்களும் காணப்படுவதில்லை.

(6) உயிருள்ள பொருள் தானாக அசையவும் இயங்கவும் வல்லமையுடையது; ஆனால் உயிரற்ற பொருளோ ஓர் உயிருள்ள பொருளின் உதவியின்றித் தானாக அசையவோ இடம் பெயர்ந்து செல்லவோ இயலாத நிலையிலிருக்கும். சுருங்கக்கூறின், இந்த ஆறு வேறுபாடுகளையும் இரண்டிற்குள் அடக்கலாம்:—(1) உயிருள்ள பொருள் ஒன்று தன்னைச் சூழ்ந்துள்ள இயற்கைப் பொருள்கட்கு ஏற்றவாறு தன்னை அமைத்துக் கொண்டும் தானே ஒழுகிக்கொண்டும் வளர்ந்து வரும்; (2) தன்னைப் போன்ற சிறிய உயிருள்ள பொருளைத் தன்னிடமிருந்து உண்டாக்கும். இதுவரை கூறப்பட்டுள்ள சிறப்பியல்புகளைப் பெற்ற உயிருள்ள பொருள்கள் பலவற்றையும் கவனித்தால், அவை பொதுவாக மரங்கள் விலங்குகள் என இருவகைப்படுவது தோன்றும்; ஆதலின், உயிர்நூலும் மரநூல், விலங்குநூல் என்னும் இருபகுதிகளை யுடையதாகும். மரங்கட்கும் விலங்குகட்கும் உள்ள வேறுபாடுகள் எவை என்ற கேள்வி எழலாம். பல அங்கங்களையுடைய உடல் ஒன்று மரத்திற்கும் விலங்கிற்கும் உண்டென்று கூறினோ மல்லவா? அவ் வுடலை வளர்த்தற்கு இன்றியமையாத உணவுப் பொருள்களை ஒரு மரமும் ஒரு விலங்கும் எங்கிருந்து பெறுகின்றன என்பதை உற்று நோக்கினால், இரண்டிற்கும் உள்ள முக்கிய வேறுபாடு ஒன்று வெளிப்படும். மரத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களாவன, இலைகள் வழியாக உறிஞ்சும் சில வாயுக்களும், வேர்கள் வழியாகத் தரையிலிருந்து உறிஞ்சும் நீரும் அதிற் கரைந்துள்ள உப்புக்களுமே; இவைகளைக் கொண்டே ஒரு மரம் (அல்லது செடி) தன் உடலை அமைக்கிறது. ஆனால் எந்த விலங்கும் இவ்வண்ணம் செய்ய இயலாது. உதாரணமாக, உப்புக்களும் காற்றும் நமக்குப் போதா; செடிகள் தம்மிடம் சேகரித்து வைத்துள்ள பொருள்களோ, விலங்குகள் தம் உடலிற் சேகரித்து வைத்துள்ள ஊன்பொருள்களோ நமக்கு அவசிய மாகின்றன. விலங்குகள் செடிகளின் (மரங்களின்) உடல்களிலுள்ள பொருள்களை உணவாகக் கொண்டே உயிர்வாழ வல்லன; ஆனால் மரங்களோ தங்களது உடலிற்கு வேண்டிய பொருள்களைத் தாமாகவே உண்டாக்கிக் கொள்ளும் சக்தியையுடையன. (ஊனைத் தின்னும் விலங்கும் சுற்றுவழியில் அவ்வூனை அமைக்கக் காரணமாயிருந்த மரப்பொருள்களைப் பற்றியே வாழவேண்டியிருக்கிறது.) ஆதலின்

விலங்குகள் மரங்களைச் சார்ந்து உயிர் வாழும் நிலையிலுள்ளன; ஆனால் மரங்களோ விலங்குகளைச் சார்ந்து நில்லாது, தமக்கு வேண்டும் பொருள்களைத் தம்மைச் சூழும் உயிரற்ற பொருள்களினின்றும் உற்பத்தி செய்துகொள்ளக்கூடிய நிலையுலுள்ளன. இன்னும் ஒரு வேறுபாடும் கருதத் தக்கது. ஒரு மரம் இடம்விட்டுப் பெயர்ந்து செல்ல இயலாததாயிருக்க, ஒரு விலங்கோ நினைத்த மாத்திரத்தால் ஓரிடம் விட்டு வேறிடம் செல்லும் திறமை யுடையதாகின்றது. இந்த இரண்டு வேறுபாடுகளையும் பொதுவானவையென்றே கொள்ளல் வேண்டும்; ஏனெனின், ஊனைத் தின்று வாழும் செடிகளும் இடம்விட்டுப் பெயராது கிடக்கும் உயிர்ப் பிராணிகளும் சிறுபான்மை உள்ளன. இன்னும் உய்த்து நோக்குங்கால், செடியெனவும் விலங்கெனவும் குறிப்பிட்டு உரைத்தற்கரிய நிலையில் சில நுண்ணிய உயிர்களும் உள; ஆயினும் அவைகளையும் உயிர்கள் என்று கூறத் தடையில்லை. ஆக, மரங்கள் விலங்குகள் நுண்ணிய சிற்றுயிர்கள் முதலாய பலவகைப் பட்ட உயிர்ப் பொருள்களையும் பற்றிக் கூறும் நூல் 'உயிர்நூல்' எனப் படுகின்றது.

இயற்கைநூற் பயன் யாது?

இயற்கைப் பொருள்களை ஆராய்ச்சி முறையால் அறியும் நூலை இயற்கைநூல் என்போமாயின், உயிர்நூல் ஓர் இயற்கை நூலாகும். உயிர் நூலைக் கற்பதன் பயனை ஆராயுமுன், பொதுவாக ஓர் இயற்கை நூலைக் கற்பதனால் விளையும் பயன் என்ன என்பதைச் சற்றுக் கவனிப்போம். இயற்கை நூலொன்றைக் கற்பதனால் அறிவு வளர்கின்றது என்பது அனைவரும் அறிந்த தொன்று. ஆனால் அறிவுவளர்ச்சியோடும் உண்மைகளை நாடுவதோடும் ஒரு மனிதன் நின்று விடுவதில்லை. தான் பெற்ற அறிவை உலகவாழ்க்கையில் தனக்குப் பயன்படுத்துதல் மனிதனது இயல்புதான். ஆகவே, இயற்கைநூற் புலவர் பலரும் அந்நூலைக் கற்றுவருங்கால், அறிவின் வளர்ச்சியையும் அவ்வறிவை மனிதவாழ்க்கைக்குப் பயன் படும் முறையில் செலுத்துதலையுமே நோக்கங்களாகக் கொண்டுள்ளனர். அறிவிற்கு ஒளியையும் வாழ்க்கைக்குப் பயனையும் தருவதே இயற்கை நூலின் நோக்கமென வகுத்தார் பெரும் புலவராகிய பேகனார் (*Bacon*). தற்கால நாகரிகத்திற்குச் சின்னங்களாக விளங்கும் கம்பியிலாத்தந்தி (*Wireless telegraphy*) பேசும் படக் காட்சி (*Talkie*) அம்மை குத்துதல் முதலிய புதிய

பொருள்களும் முறைகளும் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றை நாம் கவனிப்போமாயின், நெடுநாள் அறிவின் வளர்சிக்காக ஒரு நூலைக் கற்றதின் பயனுலேயே உலக உபகாரமான புதுப்பொருள்களையும் புதிய முறைகளையும் கண்டுபிடித்தல் என்பது புலப்படும். ஆயினும் உலக உபகாரத்தைக் கருதியே பெரியார் இயற்கை நூல் ஆராய்ச்சியில் ஈடுபட்டதும் உண்டு. உதாரணமாக, மருத்துவ சாலைகளில் ரணவைத்தியத்தில் பலர் இறந்ததைக் கண்டு துன்பத்தில் அழுந்திய ஒரு புலவரே அதன் காரணத்தை ஆராயப் புகுந்த போது கண்ணிற்குப் புலனுகாத நுண்ணிய சிற்றுயிர்களைப் பற்றிய உண்மைகளைக் கண்டுபிடிக்கலானுர். ஆதலின், உயிர் நூலைப் பயிலுங்காலும், முதலில் அறிவுவளர்ச்சியும் அதன் பயனுய் உலக உபகாரமும், அதுபோலவே உலக உபகாரம் ஒன்றைக் கருதியே அறிவுவளர்ச்சியில் ஈடுபடுதலும், ஆகிய இவை இரண்டும் உண்டாகும். உண்மையில் அறிவுவளர்ச்சியும் உலக உபகார முறையும் ஒன்றையொன்று பற்றியிருத்தலின், ஒன்றைப்பெற முயலுங்கால் மற்றொரு பயனும் தானே கைகூடுகின்றது.

உயிர் நூற் கல்வியின் பயன்

உயிர்நூலைக் கற்பதினுல் விளையும் அறிவுவளர்ச்சி ஒருபுறம் இருக்கட்டும்; அதனுல் மக்கட்குப் பயனுண்டா? உயிர்நூலறிவிற்கும் மனிதனது முற்போக்கிற்கும் (நாகரிக வளர்ச்சிக்கும்) ஏதேனும் சம்பந்தமுண்டா? மனிதனது வாழ்க்கையை எத்துறையிலாயினும் சீர்திருத்தி அமைக்கும் திறமை அதற்கு உண்டா? இத்தகைய கேள்விகட்கு முதலிற் சுருக்கமாக விடையளித்துப் பின்னர் உதாரணங்கள் காட்டி விளக்கி ஒவ்வொன்றையும் பெருக்கிக் கொண்டு போவோம். உயிர்நூலாராய்ச்சியால் விளையும் பயன்களை ஐந்தாறு வகைகளாகப் பிரிக்கலாம்:—(1) அவ்வாராய்ச்சியின் பயனுய் மக்கள் தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை மிகுதியாகப் பெறுதற்குரிய வழிகளை அறிந்துகொள்வார்கள்; அதனுல் ஒருவாறு பசித்துயர் நீங்கப்பெறுவர். (2) அறிவின் உதவியால் நோயின்றி வாழும் வகையையும் நோயை வெல்லும் முறையையும் மக்கள் உணரக்கூடும்; அதனுல் உடற்பிணியின் கொடுமை ஒருவாறு நீங்கும். (3) ஆண்பெண் வேற்றுமையைப் பற்றியும் நற்பழக்கங்களைப் பற்றியும், இன்னும் உணவு வெறி கொடுக்கும் பொருள்கள் உறக்கம் ஓய்வு முதலிய வேறு சிலவற்றைப் பற்றியும் தமக்குப் போதிய அறிவைப் பயன்படத்தக்க முறையிற் புகட்டும். (4) உடல் நலமும் அழகும் அறிவும் உள்ள

நன்மக்களைப் பெறும் வழிகளை நமக்கு எடுத்துரைக்கும். (5) ஒழுக்கத்தை உயர்த்தவும் உதவும். (6) உயிரையும் உடலையும் பற்றிய உண்மைகளைப் பொதுப்படி எடுத்துக் காட்டி நமக்கு ஞானத்தையும் அறிவையும் ஈயவல்லதாகும். இவை ஒவ்வொன்றையும் சற்று விரிவாக ஆராய்வாம்.

உயிர் நூலும் உணவும்

ஊன் செடிகொடிகளினின்றே பெறப்படுகின்றது என்பது அனைவர்க்கும் தெரிந்த உண்மை; அதனால் மனிதன் ஊனுண்பவனாயினும், அவனது உணவு முடிவில் மர உணவைப் பொறுத்துள்ளதாகவே கருதப்படலாம். இம் மர உணவைச் செழிக்கச் செய்தற்குரிய முறைகளை உயிர்நூல் நமக்குப் புகட்டக்கூடும்; எவ்வாறெனில், அந்நூலறிவால் நிலத்தின் மாசூலையும் மரங்களிலுள்ள காய்கனிகளையும் பெருக்கிக் கொள்ள இயலும். கடலையினத்தைச் சேர்ந்த சில செடிகளின் வளர்ச்சியைப்பற்றி உயிர்நூற் புலவர் சில புதிய உண்மைகளைக் கண்டுபிடித்துள்ளனர்; இவைகளை அறிந்தவர் நிலத்தை எளிதாய்ச் செழிப்புடையதாகச் செய்து கொள்ளலாம். கடலைச் செடிகளின் வேர்ப்பாகங்களில் பல இடங்களில் முடிச்சுகள்போன்ற பகுதிகள் காணப்படுகின்றன. இவைகளை நன்கு ஆராய்ந்து பார்க்குங்கால், சில நுண்ணிய சிற்றுயிர்கள் ஆங்கே குடிகொண்டுறைவது தெரியவருகின்றது. அவைகள் செடிகளின் சத்தைக் கொண்டு உயிர்வாழ்கின்றன; ஆனால் அவை அட்டைகளைப் போலத் தமக்கு வேண்டிய உணவைப் பறித்துக் கொள்வதோடு நின்று விடுவதில்லை. அவை செடிகளின்மீது நன்றி பாராட்டித் தம்மாலியன்ற கைம்மாறு அவைகட்கும் செய்கின்றன. நிலத்தில் மட்பொடிகளுக்கு இடையிலுள்ள காற்றிலிருந்தும் (காற்றுக் கரைந்த) நீரிலிருந்தும் அவை செடிகளின் வாழ்க்கைக்கு இன்றியமையாத மடிவாயுவைப் (*Nitragen*) பிரித்தெடுத்துச் செடிகட்கு ஊட்டுகின்றன. இதனால் அச் செடிகள் நிலத்திற்கு நல்ல உரமாகின்றன. செடிகளின் மாசூலை நாம் கைப்பற்றிக் கொண்டபின், அவைகளை நிலத்திலேயே அழியவிட்டு உழுது சாகுபடி செய்தால், பயிர் மிக நன்றாகச் செழிப்பாக வளர்கின்றது. இதனால் மக்கட்கும் விலங்குகட்கும் உணவுப் பொருள் மிகுகின்றதல்லவா? இன்னும், பாழாகக் கிடக்கும் நிலங்களைப் பயிர் செய்தற்குரிய நன்செய் நிலங்களாக மாற்றும் முறைகளை உயிர்நூலறிஞர் நமக்குப் போதிக்கின்றனர்; அம் முறைகளைப் பின்பற்றுவோமாயின் நாம் உணவுப் பொருள்களை எத்தனையோ மடங்கு

மிகுதியாக்கிக் கொள்ளலாம். உலகத்து வாழும் மக்களின் தொகை இலக்ஷக்கணக்காக ஆண்டு தோறும் கூடிவருகின்றதெனக் கணக்கிட்டிருக்கின்றனர் அறிஞர்; இவ்வண்ணம் தொகை பெருகிக் கொண்டே வருமாயின், வருங்காலத்து மாந்தர் போதிய உணவுப் பொருள் கிடைக்கப் பெருமையால் அல்லற் படுவது நிச்சயம். ஆனால், உயிர்நூலாராய்ச்சியினால் விளைபொருள்களைப் பெருக்கும் வழியை நாம் அறிந்து கொள்வோமாயின், உலகம் பின்னாளில் உணவுப் பஞ்சத்திற்கு ஆளாகாது தப்பிப்பிழைத்துக் கொள்ளக் கூடும்.

இதற்கு ஓர் உதாரணமாகக் கோதுமையை எடுத்துக் கொள்ளலாம். ஐரோப்பாவில் பற்பல இடங்களிலும் கிழக்குக் கண்டங்களிலும் சில மலைகளில் இன்றைக்கும் வளர்ந்து வரும் ஒருவகைக் காட்டுக் கோதுமை உண்டு; அக்கோதுமை கிறிஸ்து பிறப்பதற்குப் பதினாயிரம் ஆண்டுகட்கு முன்னும் கையாளப்பட்டு வந்ததாகத் தெரிய வருகிறது. அத்தகைய கோதுமையினின்றும் உண்டாக்கப்பட்டுள்ள தற்கால முதல்தரக் கோதுமையில் ஒவ்வொரு கதிரிலுமுள்ள விதைகளின் தொகையும் உணவுச் சத்தும் காட்டுக் கோதுமைக்கதிரில் உள்ளனவற்றைவிட எத்தனையோமடங்கு மிகுந்துள்ளன. விதைகள் அதிகமுள்ள கோதுமைக்கு விரைவில் காய்க்கும் இயல்பையும் நன்றாக அரைபட்டு அழகிய மாவினை அளிக்கும் தன்மையையும் ஊட்டுதற்குரிய முறைகளைத் தற்கால உயிர்நூற் புலவர் அறிந்துள்ளனர். இம்மாதிரியான முறைகளின் பயனாய்க் கோதுமையின் மாசூலையும் அதன் உணவுச் சத்தையும் அபிவிருத்தி செய்து உணவுப் பஞ்சத்துக்கு ஆளாகாது காத்துக் கொண்டமையினாலேயே, இருபது ஆண்டுகள் முன் தொடங்கிய ஐரோப்பிய யுத்தத்தில் ஆங்கிலேயர்க்கும் அவரைச் சேர்ந்தார்க்கும் வெற்றியுண்டாயிற்று. அப்பெரும் போரில் வெற்றிபெறுதற்கு ஏதுவாயமைந்தவைகளுள் ஒன்று, உயர்ந்த தரமான நாட்டுக் கோதுமையை உண்டுபண்ணும் திறமையை நேசக்கட்சியார் பெற்றதே. அதன் பின்னும் கோதுமையைப் பயிர்செய்யும் முறை பற்பல முன்னேற்றங்களை அடைந்துள்ளது. ஒரு ஏக்கர் நிலத்தில் விளையக்கூடிய கோதுமை மாசூலை அதிகப்படுத்தும் முறையை இக்கால மக்கள் அறிவார். உறைபனிப் பிரதேசங்களில் விளையும் ஒரு வகைக் கோதுமையையும் இதர கோதுமைகளையும் ஒட்டுப்போட்டுப் புதிய வகைக் கோதுமையை உண்டுபண்ணியதனால், அக்கோதுமையைப் பனிப் பிரதேசங்களிலும் விளையச் செய்துள்ளனர். முன் விளையாத தேசங்

களிலும் இப்போது அது பயிர்செய்யப் படுகின்றது. உறை பனியை எதிர்க்கும் கோதுமையோ நல்ல பலன்தரும். ஆங்கில நாட்டுக் கோதுமையை ஒட்டவிட்டு ஒரு புதிய ஜாதிக் கோதுமையை உண்டுபண்ணியதன் பயனாய் சுவீடன் முதலான குளிர் மிக்க மண்டலங்களிலும் கோதுமையின் விளைவை அரைப்பங்கு அதிகமாக்கி யுள்ளனர். ஆஸ்திரேலியாவுக்காகச் சொற்ப நீரின் துணையைக் கொண்டு வளரக்கூடிய ஒரு ஜாதிக் கோதுமையையும் நிலவளம் மிகவுங்குறைந்த இடத்தும் வளரக்கூடிய இன்னொரு ஜாதிக் கோதுமையையும் உயிர்நூல் விற்பன்னர் கண்டு பிடித்துள்ளனர்.

இங்ஙனமே, ஒரு கோழியை ஓராண்டிற்கு இருநூறு முட்டை சுட்குமேல் இடுமாறு செய்யவும் முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நல்ல தண்ணீரைக் கொண்டுள்ள ஏரிகளில் சில செடிகளை வளர்ப்பதினால், அவைகளைத் தாரகமாகக் கொண்டு நுண்ணுயிர்கள் சில பல்குகின்றன; அவ்வுயிர்களை உணவாகக் கொண்டு வேறு சில உயிர்களும், அவைகளை உணவாகக் கொண்டு சில நீர்வாழும் பிராணிகளும் வாழ்கின்றன; இப் பிராணிகளை உண்டு சில மீன்கள் கொழுத்து வாழ்ந்து பெருகுகின்றன; ஆக, சில செடிகளை ஏராளமாக வளர்த்துக் கொள்ள இயலுகின்றது. இவ்விருவகையானும் மக்கள் உணவுப் பொருள்களைப் பெருக்கிக் கொள்கின்றனர்.

உயிர்நூல் இன்னும் வேறு சில வழிகளாலும் அத்துறையில் மக்கட்கு உதவியளிக்கின்றது. சில பயனளிக்கக்கூடிய மரங்களையும் விலங்குகளையும் புதிய இடங்களில் நிலைபெறச் செய்வதனால், அந்நாட்டிற்கு உணவுப் பொருள்கள் செழிக்கும். பயிர்கட்கும் ஆடுமாடுகட்கும் இடையே நேரக்கூடிய கொள்ளை நோய்களையும் தொற்று நோய்களையும் தடுக்கும் முறைகளைக் கண்டுபிடித்தல் வாயிலாக, அவைகள் அழியாமல் பாதுகாக்கலாம். செடிகட்கும் விலங்குகட்கும் ஒரு நோய் திடீரென்று கண்டதும், அதன் காரணத்தை ஆராய்ந்தறிகின்றனர் உயிர்நூலறிஞர்; பின்னர் அதை நீக்கும் முறையைக் கண்டு பிடிக்கின்றனர். நல்ல கனிகளை உதவும் மரங்களுக்கு நேரும் சில நோய்களை நீக்க, அந்நோய்களை விளைக்கும் சில பூச்சிகளைத் தின்னும் உயிர்களைக் கண்டுபிடித்து, அவைகளை வளர்க்கின்றனர். பிஜித்தீவுகளில் ஒருவகை அந்துப் பூச்சியால் அழிந்த தென்னைகளை இப்போது மலாய் நாட்டிலிருந்து கொண்டு வந்த ஓர் ஈயின் துணையால் காப்பாற்றி வருகின்றனர். சில பறவைகளின் உதவியால் காப்பிச் செடிக்கு நேரும் ஒரு நோயை நீக்கி

வருகின்றனர். சில செடிகள் நன்கு வளர்தற்குச் சில பூச்சிகள் அவசியமாவதை உணர்ந்து, அவைகளை வளர்க்கின்றனர்; கலி போர்னியாவில் முதலில் மலடாயிருந்த அத்திமரங்கள், பின்னர் அவைகளை அவைகளின் பிறப்பிடத்துக் காய்க்கச் செய்தற்குத் துணைபுரிந்த ஒரு பூச்சியைக் கொண்டுவிட்டுப் பரவச் செய்த வுடன் காய்க்கவும் தொடங்கின. ஆக, உயிர்நூல் மக்கட்கு உணவுப் பொருள்களை ஆக்கியும் பெருக்கியும் பாதுகாத்தும் தொண்டு புரிந்து வருகின்றது.

(தொடரும்.)

இனம் கண்டுபிடிக்கும் நூதனம்

ஸ்ரீ தாமஸ் ஓர்ஸ்லி என்னும் ஒரு ஆங்கில நிபுணர் இப்பொழுது புதிய தொரு நூதனத்தைக் கற்றுத்தேர்ச்சியடைந்திருக்கிறார். கோழிமுட்டை களில் எது ஆண் குஞ்சு பொரிக்கும் எது பெண் குஞ்சு பொரிக்கும் என்று கண்டுபிடித்துக் கூறிவிடுகிறார். இந்த அரிய வித்தையை இவர் சில ஜப்பா னியர்களிடமிருந்து படித்துக்கொண்டார். இவ்விஷயத்தில் ஜப்பானியர்கள் தான் தேர்ச்சிபெற்றவர்கள். இந்த நூதனப்பயிற்சி நவீன கோழிப் பண்ணை களுக்குப் பெருத்த உபகாரமாக இருக்கிறதாம்.

வீடு ஏன் சுத்தமாக இருக்க வேண்டும்?

அபிசேல் டேவிட்

[1933-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் சென்னை தென்னிந்திய தேசிய சுகாதார சங்கத்தாரால் மாணவர்களுக்குரிய வியாசப்போட்டி ஒன்று நடத்தப்பெற்றது. அதில் இதை எழுதிய சிறுபெண் பரிசு பெற்ருள். அப்பெண் அப்பொழுது மூன்றும் பாரத்தில் படித்துக் கொண்டிருந்தாள். இதை உதவிய ஷை சங்கக் காரியதரிசிக்கு எமது நன்றி உரியது.—ப - ர்.]

நம்முடைய தேகம் சௌக்கியமாய் இருக்க வேண்டுமானல் நம்முடைய வீடுகளும் சுற்றுப்புறங்களும் சுத்தமாக இருத்தல்வேண்டும். நம்முடைய வீடுகள் எப்பொழுதும் சுத்தமாக இருக்கவேண்டும். ஏனென்ருல் நம்முடைய வீடுகள் சுத்தமாய் இருந்தால் மற்றவர்களும் நம்முடைய மாதிரியைப் பார்த்து அவர்களுடைய வீடுகளையும் சுத்தமாக வைக்கப் பிரயாசைப் படுவார்கள். வியாதிகள் வராமல் இருக்க அது ஒரு முக்கியமான சாதனமாய் இருக்கின்றது. முதலாவது நம்முடைய வீட்டை வருஷத்திற்கு இரண்டு முறையாகிலும் வெள்ளை அடிக்கவேண்டும். அப்படிச் செய்வதனல் சுவரில் இருக்கும் மூட்டுப்பூச்சிகள் வராமல் இருக்கும். நம்முடைய வீடுகள் சுத்தமாய் இருக்குமாயின் வியாதிகள் வருவதற்கு இடமில்லை. மூட்டுப் பூச்சிகளினுல் அநேக வியாதிகள் உண்டாகின்றன. மூட்டுப்பூச்சி நம்மைக் கடிப்பதனுல் நம்முடைய இரத்தம் கெட்டுப்போய் உடனே வியாதி வரும். அவ்வித வியாதி வராமல் இருக்க வேண்டுமானல் வீட்டை வெள்ளையடிக்கவேண்டும். நம்முடைய வீட்டில் இருக்கும் சாமான்களை வாரத்தில் இரண்டு முறையாகிலும் வெளியில் எடுத்துப் போட்டு வீட்டைச் சுத்தமாகப் பெருக்கி வைக்க வேண்டும். ஏனென்ருல் பெரிய சாமான்களை நாம் அடிக்கடி எடுப்பதில்லை; ஆகையால் அவைகளின் அடியில் சில விஷப்பூச்சிகள் உண்டாயிருக்கும். அவற்றை நாம் பார்க்காமல் இருந்துவிட்டால் பூச்சிகள் பரவிவிடுவதனுல் நமக்கு வியாதி உண்டாகும். முதலாவது நம்முடைய சாமான்களை வெயிலில்

போட்டுப் பிறகு வீட்டை நன்ருகத் தூசியடித்து மூலேகளைத் துடைத்துப் பெருக்கவேண்டும். பிறகு வீட்டைச் சுத்த ஜலத்தால் நன்ருய்க் கழுவியபின் ஈரம் காய்வதற்குள் யாரும் அவ்வீட்டுக்குள் வாராதபடி பார்க்க வேண்டும். ஏனென்ருல் மற்றவர்களுடைய காலில் இருக்கும் தூசிகள் ஈரத்திலே படிந்துவிட்டால் சிறு கிருமிகள் உண்டாகும். கழுவியபின் நன்ருகத் துடைக்கவேண்டும்.

காற்றடித்துத் தூசிகள் படராதபடிக்கு வீட்டின் கதவுகளையும் ஜன்னல்களையும் நன்ருகக் காற்று வரும்படி திறந்து வைக்க வேண்டும். அப்பொழுதுதான் வீடு உலரும்.

பிறகு சாமான்களை நன்ருக ஈரத்துணிகளினுல் துடைத்துத் தூசிகளைப் போக்கி அவைகளைப் பிறகு காய்ந்த துணிகளினுல் துடைத்து வெயிலில் காயவைத்து வீட்டில் கொண்டு வந்து சேர்க்கவேண்டும். பிறகு நம்முடைய சமையல் சாமான்களைச் சுத்தமாகக் கழுவித் தூசிகள் படியாமல் துடைத்து வைக்க வேண்டும். அவைகளைத் துடைப்பதற்காகப் பிரத்யேகமான துணிகள் வைத்திருக்கவேண்டும். கூரைகளை நாம் சுத்தமாக வைக்க வேண்டும். அவைகளில் பட்சிகளாவது பூச்சிகளாவது கூடுகள் கட்டாமல் பார்க்கவேண்டும். ஏனென்ருல் அவைகள் அசுத்தமான மலங்களைக் கழிப்பதனுல் வீட்டில் நாற்றம் உண்டாகி ஆகாயம் கெட்டுப் போகிறது.

சமையல் அறை தனிமையாக இருக்கவேண்டும். ஏனென்ருல் அசுத்தங்களை மிதித்துக்கொண்டுவருவார் அப்படியே உட்சென்று அவர்கள் கால்களில் இருக்கும் கிருமிகள் நம்முடைய ஆகாரங்களில் செல்லாமலிருக்க அது ஒரு வசதியாம். அப்படியே காய் பதார்த்தங்கள் அல்லது மாமிசப் பதார்த்தங்களை உபயோகிக்கும் போது நாம் அவைகளில் நல்லவற்றை எடுத்துக் கொண்டு தேவயில்லாதவற்றை அவ்விடத்திலேயே போட்டுவிட்டால் அவைகள் அங்கேயே தங்கிக் கொசுக்கள் உண்டாகி நமக்கு வியாதிகள் வருகின்றன. அப்படிச் செய்யாமல் அத்தோல்களை வெளியில் கொண்டுபோய்ச் சுட்டு எரிக்கவேண்டும். சமையல் அறையில் சாக்கடை முதலிய தண்ணீர் தங்கும்படியான இடங்கள் வைக்கக்கூடாது. ஏனென்ருல் அவ்விடத்தில் தண்ணீர் தங்குவதனுல் பூச்சிகள் உண்டாகி நமக்கு வியாதிகள் தோன்றுகின்றன. சாக்கடை முதலியவை இருப்பின் அவ்விடங்களைச் சுத்தமாக வைக்கவேண்டும்.

நம்முடைய வீட்டைச் சுற்றிலுமுள்ள இடம் சுத்தமாக இருக்க வேண்டும். காலையில் எழுந்தவுடன் வீட்டின் சுற்றுப்புறங்களைச்

சுத்தமாக வைக்கவேண்டும். ஏனென்றால் நம் வீட்டிற்கு அநேகர் வருவார்கள். அவர்கள் வீதியின் வழியாய் வருவதனால் வெளியில் இருந்து எச்சல் சளி இன்னும் அநேகவிதமான அசுத்தங்களை மிதித்துக்கொண்டு வருவார்கள். அவைகள் நம்முடைய வீடுகளில் தங்காமல் இருக்கும்பொருட்டு நாம் சுற்றுப்புறங்களைச்சுத்தமாக வைக்கவேண்டும். இன்னும் நம்முடைய வீடுகளின் சுற்றுப்புறங்களில் குப்பை அழுகினதோல் பழங்கள் முதலிய அசுத்தப் பொருள்களைக் கொட்டக்கூடாது. அப்படிச் செய்வதனால் அவைகள் எல்லாம் அழுகி நாற்றம் உண்டாகி சிறுகிருமிகள் உண்டாகி நமக்கு வியாதி வருகிறது. அக்குப்பைகளைத் தூரத்தில் கொண்டுபோய் எரித்துவிடவேண்டும். வீட்டைச் சுற்றித் தண்ணீர் தங்காமல் பார்க்க வேண்டும். வீட்டிற்குச் சமீபத்தில் மல ஜலபதார்த்தங்கள் தங்காமல் பாதுகாக்கவேண்டும். ஏனென்றால் கொசுக்கள் உண்டாகி பரவுவதனால் வியாதி உண்டாகும். நம்மிடத்தில் உள்ள ஆடு மாடு கோழி மற்ற எந்த ஜீவன்களையும் வைப்பதற்குத் தனியான இடங்கள் கட்டப்பட்டிருக்க வேண்டும். அவைகள் வீட்டில் வராதபடி காக்கவேண்டும். ஏனென்றால் அவைகள் வெளியில் அசுத்தங்களையெல்லாம் மிதிக்கும். அவைகள் நம்முடைய அறைகளில் சென்றால் அசுத்தங்கள் தரையில் படர்ந்து வியாதி உண்டாகின்றது.

கிணறுகள் வீட்டில் இருக்குமாயின் அவைகளைப் பத்திரமாகப் பாதுகாக்கவேண்டும். கிணற்றை வருஷத்திற்கு இரண்டு முறையாகிலும் அடியில் இருக்கும் சேற்றையெல்லாம் வாரியெடுத்துச் சுத்தமாக வைக்க வேண்டும். ஏனென்றால் அவைகளை எடுக்காவிட்டால் அவைகள் அடைத்துப் போவதனால் ஊற்று நின்றுவிடுமாதலால் தண்ணீர் அசுத்தமாகிவிடும். அதை நாம் பருகினால் வியாதி உண்டாகும்.

இன்னும் கிணற்றைச் சுற்றிலும் தளவரிசைசெய்ய வேண்டும். மரங்கள் முதலியவைகள் கிணற்றைச் சுற்றி இருத்தல் கூடாது. அசுத்த ஜலம் கிணற்றைச் சுற்றி இருத்தல் கூடாது. ஏனென்றால் அவைகள் கிணற்றின் நீரோடு கலப்பதனால் நீர் அசுத்தமாய் விடுகின்றது. அதைப் பருகுவதனால் வியாதி உண்டாகும்.

இன்னும் வீடுகளில் வியாதி உள்ளவர்கள் வீட்டிற்கு வெளியில் வந்து வாந்தியெடுப்பதனாலும் மற்றும் துர்க்கிரியைகள் செய்வதனாலும் அவர்கள் எடுக்கும் வாந்தி முதலியவைகளில் இருந்து விஷக்கிருமிகள் வீதியெங்கும் படர்ந்து அவைகள்

காற்றினால் வீட்டின் உட்சென்று வியாதியை வருவிக்கின்றன. இவ்விஷயத்தில் ஜாக்கிரதையைக் கையாள வேண்டும்.

இன்னும் நாம் நித்திரை செய்யும்படியாக வைத்திருக்கும் படுக்கைகளை வெயிலில் காயவைப்பது மிகவும் அவசியம். ஏனென்றால் நாம் இரவில் தூங்கும்பொழுது அவைகளில் படுத்துறங்குவதால் ஒருவிதமான வாசனையுண்டாகும். அவ்விதமான வாசனை உண்டாகாமல் இருக்கும்படி அவைகளை வெயிலில் காயவைப்பது மிகவும் அவசியம்.

இன்னும் நம்முடைய வீடுகள் விஸ்தாரமான இடங்களில் கட்டப்பட்டிருக்கவேண்டும். ஏனென்றால் காற்று நம்முடைய வீடுகளில் தாராளமாய் உட்செல்லவேண்டும். சதுப்பு நிலங்களில் நாம் குடியிருக்கக்கூடாது. ஏனென்றால் ஈரமான இடங்களில் குடியிருப்பது தேக சௌக்கியத்திற்குக் கெடுதியுண்டாக்கும் என்பதிற் சந்தேகமில்லை. ஆகையால் நம்முடைய வீடு சுத்தமாய் இருக்க வேண்டும்.

தூக்கத்தில் நடக்கும் வியாதி

உலகத்தில் பல வினோத வியாதிகள் இருக்கின்றன. அவைகளில் தூக்கத்தில் நடக்கும் வியாதியும் ஒன்று. இந்த வியாதியைத் தடுப்பதற்குப் பல விஞ்ஞான சாஸ்திரிகள் இரவும் பகலும் உழைத்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இப்பொழுது ஒரு பிரிட்டிஷ் நிபுணர் வேறொரு கருவி ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். இது தூக்கத்தில் நடக்கும் வியாதியைத் தடுக்கமுடியாவிட்டாலும் தூக்கத்தில் நடந்து அதனால் கேடுகள் வராமலிருப்பதையாவது தடுக்க உதவியாக இருக்கிறது. இக்கருவியானது தூக்கத்தில் ஒருவன் எழுந்து நடக்கும்போது ஒரு பெரிய சப்தத்தை உண்டாக்கிவிடுகிறது. எனவே அவன் விழித்துக்கொள்கிறான்.

வீர.

சரித்திரம்

துருக்கியில் ஸ்திரீகளின் முன்னேற்றம்

கே. நடேசன், பி.ஏ.

துருக்கி தேசம் மேன்மையடைந்திருப்பது அத்தேசத்தின் ஸ்திரீகளின் அபிவிருத்தியினால்தான் என்று பல்வேறு ஐரோப்பிய நூலாசிரியர்கள் அனவரதமும் கூறுகின்றனர். முஸ்தபா கெமால் பாட்சாவின் ராஜ்ஜியபரிபாலனத்தின் பயனாகத் துருக்கிதேசத்துப் பெண்மக்கள் பழைய கட்டுப்பாடுகளை ஒழித்து நூதன நாகரிக மேன்மைகளைக் கைக்கொண்டனர். மங்கையாக அந்தப்புரங்களில் மறைந்து கிடந்த கோஷாஸ்திரீகளை வெளிக்கிளப்பி, ஆண்மக்கள் பெண்மக்கள் இருவருக்குமிடையிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை அறவே யொழித்து, சமத்துவமான கௌரவம் அளிக்கப்பட்டது.

இவ்வாறு கிணற்றுத் தவளைகளுக்கு நாட்டுவளப்பத்தைக் காட்டிய கெமால் தம் முஸ்லீம் சமூகநிலைமையை உயர்த்த எத்தனித்து அநேக இடையூறுகளினின்றும் தம் நாட்டு ஸ்திரீகளை முன்னுக்குக் கொண்டுவந்தார். கூட்டில் அடைத்த பட்சி போலிருந்த பெண்டிரெல்லாம் சுயேச்சையாய்ப் பல்வேறு தொழில்களைக் கைக்கொண்டனர். பல நூற்றாண்டுகளாக சுல்தான்களின் கட்டுப்பாட்டிற்கு இணங்கிநடந்த ஸ்திரீகள் கனவிலும் கருதாத நன்மைகளைப்பெற என்னபாக்கியம் பெற்றனர்! கெமால் ஏகாதிபத்தியத்தைப் பெறாமல் போனால் துருக்கி பழையநிலையிலேயே இருந்திருக்கும்.

இன்றைக்குத் துருக்கியில் 160 லட்சம் கொண்ட ஜனத்தொகையில் 90 லட்சம் பெண்டிர் இருக்கின்றனர். அவர்கள் சென்ற 13 நூற்றாண்டுகளாக வீட்டைவிட்டு வெளிக்கிளம்பியவர்கள் அல்லர். படிப்பும் கிடையாது. இயற்கைச் சாதனங்களும் மிகக்குறைவு. தங்கள் மக்களை எவ்வாறு முன்னுக்குக் கொண்டுவருவதென்பதை நன்கு அறிந்திலர். வீட்டு வேலை செய்தே செக்குமாடுகளைப் போல் சக்தி அற்று, மேனிகுன்றி, தேசத்திற்கு ஒரு பயனும் அளிக்க யோக்கியதையில்லாமல் இருந்தனர்.

இந்தக் கேவலத்தை யொழித்துத் துருக்கியும் பல தேசத்தினருக்குச் சமமாக இருக்கவேண்டுமென்று நினைத்த கெமால், புதிய ஏற்பாடுகளையும் சீர்திருத்தங்களையும் உண்டுபண்ணினர். திடீரென்று துருக்கி ஸ்திரீகள் சுதந்திரதாகம் மேலிட்டு, மனிதர்களிடம் கட்டுப்பட்டிருப்பது பிழையென்று உன்னிச் சமமான கொள்கைகளைக் கைக்கொண்டனர். சமூகவித்தியாசம் விரைவில் தீர்க்கப்பட்டது. ஏககாலத்தில் வீட்டுச் சிறையினின்றும் விடுபட்டுத் தங்கள் முகமூடிகளைக் கழற்றி எறிந்தனர். பலர் வியக்கத்தகுந்த பழைய நாள் உடைகளை ஒழித்து நன்மையடையும் துறைகளை நாடினர். நாகரிகம் செழித்து ஓங்கியது. கர்னாடகப் பழக்கங்கள் தலையெடுக்க வொட்டாமல் தொலைக்கப்பட்டன. எதை எடுத்தாலும் 'சாஸ்திரத்தில் அப்படி யிருக்கிறது. குர்ஆன் இப்படிச் சொல்லுகிறது' என்று சொன்ன நாளெல்லாம் பறந்து போயின. ஐரோப்பிய ஸ்திரீகள் எவ்விதமே அவரவர்கள் மனோதர்மப்படி நடந்து கொள்ளுகின்றனரோ அவ்விதமே துருக்கி ஸ்திரீகளும் நடக்கலாயினர்.

துருக்கிதேச மனிதர்கள் முன்னமே பல பெண்டிரைக் கலியாணம் செய்துவந்தனர். அக்கெட்டவழக்கத்தை 1926-ம் வருஷம் பாட்சா அடியோடு ஒழித்தார். ஸ்திரீகளின் அடிமைத் தொழிலை நீக்கினர். கலியாண வியவகாரங்களுக்குரிய புதிய சட்டங்களை நிரூபணம் பண்ணினர். ஜனங்களின் நடையுடை பாவனைகள் நாகரிகம் பெற்றன. பண்டைக்காலக் கேவல உடைகள் அறவே நீங்கின. ஸ்திரீகள் முகமூடிகளுக்குப் பதிலாகக் கழுத்தில் ஒரு சிறிய சவுக்கம் போட்டுக் கொள்கின்றனர். பாட்சாவின் மனப்படி ஸ்திரீகள் நல்ல தொப்பிகளை அணிகின்றனர்.

வீட்டை விட்டு வெளிக்கிளம்பிய நாள்முதல் தொழில்கள் செய்ய விருப்பங்கொண்ட ஸ்திரீகள் அரசன் ஏற்படுத்திய சீர்திருத்த முறைப்படி பல வேலைகளைச் செய்துவருகின்றனர். தேசத்தின் செல்வவிருத்தியும் நாளுக்கு நாள் விருத்தியாகின்றது. தினசரிப்பத்திரிகைகளை ஊக்கத்துடன் படிப்பதும், ஜன சமூகத்தில் இஷ்டப்படி நடப்பதும், நாடகமேடைகளில் நடிப்பதும், ஸினிமாப்படங்களைப் புதிய வழிகளில் உண்டு பண்ணுவதும், பலர் தொழிற்சாலைகளில் உத்தியோகத்திலமர்ந்து வேலை செய்வதும் யாவருக்கும் தற்காலத் துருக்கிதேசத்தில் அதிசயத்தை உண்டு பண்ணுகின்றன.

இன்றைக்கு அங்கோராவிலும், இஸ்தான்புல் என்ற நகரிலும் பெண்களில் 15 மாஜிஸ்டிரேட்டுகள், 12, வக்கீல்கள், 4 டாக்டர்கள், 5 ரசாயனப் பரிசீலனர்கள், 4 முனிசிபல் கௌன்சிலர்கள், 20 சர்வ கலாசாலை விரிவுரையாளர்கள் இருந்து வருகிறார்கள் என்றால் அவர்கள் முன்னேற்றத்தைச் சொல்லவும் வேண்டுமோ? தவிர 800 பெண் சுருக்கெழுத்துக் காரர்களும், டைப்பு அடிப்பவரும், பாங்குகள், ஆபீஸ்கள் இவற்றில் 1500 பெண் குமாஸ்தாக்களும் வேலை செய்து வருகிறார்கள். தொழிற்சாலைகளில் 20,000 பெண்டிர் வேலை செய்துவருகிறார்கள். இதேமாதிரி ஒவ்வொரு பட்டணத்திலும் துருக்கி ஸ்திரீகள் வேலை செய்து சம்பாதிக்கின்றனர். இன்னும் பலர் சாரணத்தலைவர்களாகவும், தேகப்பயிற்சி செய்யும் தொழிற்சாலைகளை நடத்துபவர்களாகவும், போதனாமுறையைப் படித்து உபாத்தியாயர்களாகவும் வேலைசெய்து வருகின்றனர். இன்னும் சிலர் சர்வதேச சங்கங்களால் ஒருங்குகூடி நடத்தும் அநேக போட்டிப்பந்தயங்களில் கலந்துகொள்கின்றனர். சிலர் ஆகாய விமானங்களை ஓட்டுகின்றனர்.

பூர்விக பவுண்டன் பேனா

முதல் முதலாகக் கண்டுபிடித்ததென்று சொல்லப்படும் பவுண்டன் பேனாவின் கதையைப்பற்றி இப்பொழுது பத்திரிகைகளில் பல செய்திகள் வெளியாயிருக்கின்றன. கடிகாரம் கண்டுபிடிக்கப்பட்ட இடமாகிய நீயூரம் பர்க் என்ற இடத்தில் டானியல் ஸ்கொவெண்டர் என்டவரே முதல் முதலில் பவுண்டன் பேனாவைக் கண்டுபிடித்தார். அவர் 1685-ம் வருடத்தில் பிறந்தார். முதல் முதல் அவர் கண்டுபிடித்த பவுண்டன் பேனா இறகாலாயது. அதை வாயால் உறிஞ்சி மைஇழுக்கவேண்டும். அக்காலத்தில் அந்த இறகுப்பேனா மாணாக்கர்களுக்கும் நிலமளப்பவர்களுக்கும் போதிய ஆதாரமாயிருந்தது.

வீர.

கொலம்பா நாயனர்

எஸ். ஆர். அனந்தநாராயண ஐயர்

அயர்லாந்து தேசத்திலுள்ள தோணிக்கால் (*Donegal*) என்னும் ஊரில், கி. பி. 521-ம் வருஷத்தில், பிற்காலத்தில் கொலம்பா நாயனர் என்று பிரஸித்தி பெற்ற மஹான் பிறந்தார்.

அவர், உட்புறமுள்ள ஹெப்ரிடீஸ் (*Inner Hebrides*) என்னும் தீபகணத்தைச்சேர்ந்த அயோனு (*Iona*) என்னுந் தீவில், கிறிஸ்தவ மதத்தைப் பரவச்செய்து, அங்கு கி. பி. 563-ல் ஒரு மடமுங் கட்டினர். அங்கிருந்து, நாளடைவில், வட ஸ்காட்லாந்து (*Northern Scotland*) முழுமையும் கிறிஸ்தவமதம் பரவியது.

அவரது காலத்தில் புஸ்தகங்களை அச்சிற் பதிப்பிக்கும் வித்தை கண்டு பிடிக்கப்படவில்லை. புஸ்தகங்களைப் படிக்க விரும்புவோர் அவைகளை அவற்றின் சொந்தக்காரரிடம் இரவல் வாங்கியே படிப்பது வழக்கமாக இருந்தது.

கொலம்பா நாயனர் இவ்வாறு, ஒருகாலத்தில் ஒரு புஸ்தகத்தை இரவல் வாங்கி, அதைத் திருப்பிக்கொடுக்கத் தவறியதனிமித்தம், ஆயிரக்கணக்கான ஜனங்கள் உயிரிழக்க நேர்ந்தது. இந்த ஸம்பவத்தையே ஒருவியாஜமாகக் கொண்டு, இதனுல் தம்மைச் சேர்ந்த பாபத்தை நீக்கும் பொருட்டு அவர் ஸ்காட்லாந்தெல்லாம் திரிந்து கிறிஸ்தவ மதத்தைப் பரவச் செய்தாரென்று அவரது சரிதைகள் கூறுகின்றன.

அவர் புஸ்தகம் இரவல் வாங்கிய ஸமாசாரத்தை இங்கே சுருக்கமாகச் சொல்லுகிறோம்:

அவர், தமது ஸகபாடியாகிய பினியன் நாயனரிடமிருந்து (*St. Finian*), மிக அழகாக எழுதப்பட்டிருந்த கிறிஸ்துதரிசனம் (*The Gospel of Christ*) என்னும் நூலை இரவல் வாங்கி, அதைப்பார்த்துத் தமக்கு ஒரு பிரதி எழுதிக்கொண்டார். இதையறிந்த பினியன், பொருமைகொண்டு, தமது அஸல் புஸ்தகத்தையும், கொலம்பா எழுதிய நகலையும், பின்னையவர் தம்மிடம் கொடுத்துவிடவேண்டுமென்று வாதித்தார். இந்தவழக்கு

இவர்களுக்குள் தீராமற்போகவே, அந்நாட்டு அரசனாகிய மீத் ராஜாவினிடம் (*King of Meath*) விசாரணைக்குவந்தது.

அரசன், "பிள்ளை தாய்க்கும், கன்று பசுவுக்கும் எப்படிச் சொந்தமோ அப்படியே நகலும் அசலைச் சேர்ந்தது; ஆதலால், கொலம்பா, தாம் எழுதிய நகலை முதனூலார்க்குச் சேர்த்தல் வேண்டும்" என்று தீர்மானித்தான்.

இதை யறிந்த கொலம்பாவின் உற்றாரும் உறவினரும் அரசனுக்கு விரோதமாகக் கிளம்பினர். சிறிய சண்டை பிரமாதமாயிற்று. நாட்டில் இரண்டு கட்சிகள் தோன்றின. பின்னர் நடந்த பெரிய யுத்தத்தில் இருதிறத்தார்க்கும் ஆயிரக்கணக்கான ஜனச்சேதம் உண்டாயிற்று.

இதன்பின் கொலம்பா, அயர்லாந்தை விட்டு ஸ்காட்லாந்துக்குச்சென்று, அத்தேசத்தார்க்குக் கிறிஸ்தவ மதம் போதித்தாராம்.

அவரது உபதேசங்களில், புஸ்தகங்கள் இரவல் வாங்கும் முறையும் ஒன்றாம்!


தீப்பிடிக்காத துணிகள்

திரைகள், துணிகள் முதலியவைகள் தீப்பிடிக்காத முறையில் தயாரிக்கக்கூடியமுறை ஒன்றை டாக்டர் சார்லஸ் பாப்ஸ்ட் என்பவர் கண்டுபிடித்திருக்கிறார். இவ்வாறு தயாரிக்கப்படும் துணிகள் இலகுவாகவும், குறைந்த செலவில் தயாரிக்கப்படக்கூடியவைகளாகவுமிருக்கின்றன. அது எப்படித் தயாரிக்கப்படவேண்டுமென்றால் அமோனியம் பாஸ்பேட் கலவையில் துணியை 5 நிமிட நேரம் ஊற வைக்கவேண்டும்; இதேபோன்று அந்தத் துணி வெளுக்கப்படும் ஒவ்வொரு முறைக்குப்பின்னரும் அமோனியம் பாஸ்பேட்குழம்பில் ஐந்து ஐந்து நிமிட நேரம் ஊற வைத்துக்கொள்ள வேண்டும்.

வீர.



அன்னபூர்ணாதேவி
(பின்தோற்றம்)



அன்னபூர்ணாதேவி
(பக்கத்தோற்றம்)



அன்னபூர்ணா தேவி

பே. நா. அப்புஸ்வாமி ஐயர், பி. ஏ., பி. எல்.

பார்வதி தேவியார் ஒரு சமயம் கருணா சொரூபியாகிய அன்னபூர்ணா தேவியாக வடிவெடுத்தார் என்பது ஐதிகம். அன்னபூர்ணா என்ற சொல்லுக்குச் சோறு நிரம்பவுடையவள், அதாவது தன் பக்தர்களுக்குக் கொடுக்கும் பொருட்டு நிரம்பச் சோறு உடையவள் என்பது பொருள்.

அன்னபூர்ணாதேவி யௌவனப்பருவம் வாய்ந்தவள். சிவந்த நிறமுள்ளவள். சந்திரனைப் போன்ற வட்டமான முகமும், மூன்று கண்களும், உன்னதமான ஸ்தனங்களும் உடையவள். அவள் தன் இடக்கையில் மாணிக்கங்களால் இழைத்த பாத்திரத்தையும், வலக்கையில் மாணிக்கங்கள் இழைத்த கரண்டியையும் ஏந்தியவள். பாத்திரத்தில் தேனும் கரண்டியில் இனிய அன்னமும் இருக்கும். மாணிக்கம் இழைத்த வளையல்களை அவள் அணிந்துகொண்டிருப்பாள். அவள் தனது மார்பகத்திலே ஒளிபொருந்திய மாலையையும், உடலிலே பலவேறு ஆபரணங்களையும் அணிந்திருப்பாள். அவளது தலையிலுள்ள கிரீடத்திலே சந்திரகலை விளங்கிக்கொண்டிருக்கும். நான்கு கைகளை உடையவளாகவும் அவள் காணப்படுகிறாள். அவளது கை ஒன்றில் பாசம் தோன்றும்; மற்றொன்றில் அங்குசம் தோன்றும்; ஏனைய இரண்டுகைகளும் அபயவரத முத்திரைகளுடன் அமைந்திருக்கும்.[1]

பார்வதிதேவியின் மற்றொரு கருணைவடிவமாகிய துளஜா-பவானி என்னும் தேவியும், அன்னபூர்ணா தேவியைப்போலவே, ஒரு கையில் இனிய அமுதையும் மற்றொரு கையில் அதை

---

1. **கோபிநாதராயர்**—இந்து சிற்பசாஸ்திரம் முதல் புத்தகம் இரண்டாம் பாகம், 370-ம் பக்கம்.

எடுத்துவழங்குதற்குரிய கரண்டியையும் ஏந்தியவளாகக் காணப் படுகிறாள் என்பதும் குறிப்பிடத்தக்கது.1

அன்னபூர்ணாதேவியின் 2விக்கிரகம் ஒன்றின் முன்தோற்றம், பின்தோற்றம், பக்கத்தோற்றம் ஆகிய மூன்றுதோற்றங்களையும் காட்டும் படங்கள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த விக்கிரகமானது பஞ்சலோகங்களை உருக்கிவார்த்த கட்டி விக்கிரகம். அதன் பீடம் குறுக்ககன்ற நாற்கோணவடிவில் இருக்கிறது. பீடத்தின் உயரம் 4 அங்குலம். அதன் அகலம் அடிப்புறத்தில் 8 அங்குலமாயும் மேற்புறத்தில் 7 அங்குலமாயும் இருக்கிறது. மேலுள்ள விக்கிரகத்தின் உயரம், பீடமின்றி 18½ அங்குலம். படத்திலுள்ள பீடம் தாமரைப்பீடம் அல்ல; சாதாரணமானபீடந்தான். அதன் இருபுறங்களிலும் இரண்டு வளையங்கள் காணப்படுகின்றன. விக்கிரகத்தை இடம்விட்டு இடம் பெயர்த்துக் கொண்டு போகும்பொழுது அவற்றின் வழியாகக் கொம்புகளை நுழைத்துத் தூக்கிக்கொண்டு போவதன் பொருட்டே அவை வைக்கப்பட்டிருக்கின்றன.

தேவியின் திருமேனி சற்றே இடப்புறமாக வளைந்து நிற்கிறது. இத்தகைய நிலையை ஆபங்க நிலை 3யென்று சொல்லுகிறார்கள்.

தேவியின் கூந்தலை நடுவே வகிடு எடுத்துப் பின்புறமாகப் படியவாரிக் கொம்புபோல் முறுக்கிச் சற்று இடப்புறமாகப் பெருங் கொண்டையாக முடித்திருக்கிறது. அந்த முறுக்கிலே இரண்டு சுருள்கள் காணப்படுகின்றன. அவற்றிலே அழகாகத் தொடுத்த பூமாலைகள் பின்னப்பட்டிருக்கின்றன. சுருள்களுக்கு இடையிலே

---

1. எச். கிருஷ்ணசாஸ்திரி—தென்இந்தியக் கடவுளர் விக்கிரகங்கள், 220-ம் பக்கம்.

2. "இந்த விக்கிரகமானது சென்னை அட்வகேட் ஸ்ரீமான் எஸ். டி. ஸ்ரீநிவாஸகோபாலாசாரியார் அவர்கள் சேகரித்துவைத்திருக்கும் விக்கிரகங்களுள் ஒன்று. அவர்களிடமிருக்கும் வேறுசில விக்கிரகங்களைப்பற்றியும் நமது பத்திரிகையில் படங்களோடு வெளியிட எண்ணியிருக்கிறோம். இவற்றை வெளியிட அநுமதி கொடுத்ததற்கு அவர்கள்பால் மிகவும் நன்றிபாராட்டுகிறோம். பே. நா. அ.

3. நிற்கின்ற நிலையில் உள்ளனவாகக் காணப்படும் கடவுளர் விக்கிரகங்களிலே மூன்று நிலைகள் மிகவும் அழகுவாய்ந்த நிலைகளாகக் கருதப்படுகின்றன. அவற்றை மூன்று பங்கங்கள் என்று சொல்லுகிறார்கள். அவற்றை ஆபங்கம் (சொற்ப வளைவு), ஸமபங்கம் (நடுத்தரமான வளைவு), அதிபங்கம் (மிக்க வளைவு) என்று சிற்பஸாரஸங்கிரகம் கூறுகிறதென்று ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரியவர்களின் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. (226-ம் பக்கம்).

அவற்றின் நுனிகள் தொங்கிக்கொண்டிருப்பது படத்தில் தெரிகிறது. இதனை அமைத்த சிற்பியானவன் மிகவும் நுட்பமான வேலைப்பாடு செய்பவன் என்பது தலையிலுள்ள மயிர்களை அவன் மெல்லிய கோடுகளாற் காட்டியிருப்பதிலிருந்து தெரியவரும். தேவியின் நெற்றிப்புறத்திலேயும் அளகமானது சுருள்சுருளாக இருப்பதை அவன் நன்றாகக் காட்டியிருக்கிறான்.

வகிடு எடுத்திருக்குமிடத்திலே மணிகள் கோத்ததாயும் இலைவடிவமுள்ளதாயும் உள்ள ஓர் ஆபரணத்தைத் தேவி அணிந்திருக்கிறாள். இதற்கு இருபுறங்களினும் வேறு இரண்டு ஆபரணங்கள் காணப்படுகின்றன. அவை சந்திரப்பிறை சூரியப்பிறைகளென்று தோன்றுகிறது. இந்த விக்கிரகத்தின் நெற்றியிலே மூன்றாவது கண்ணைச் சிற்பி அமைக்கவில்லை.

தேவியின் திருமுகமானது பூர்ண சந்திரனைப்போல் முழு வட்ட வடிவமாக அமைந்திருக்கிறது. அவள் இருவிழிகளும் மூக்கும் மிக அழகாகவும் திருத்தமாகவும் இருக்கின்றன. திருச்செவிகளிலே துளைகள் காணப்படுகின்றன. ஆனால் அத்துளைகளில் மகரகுண்டலங்களேனும் பத்ர குண்டலங்களேனும் அணியப்படவில்லை. திருக்கழுத்திலே மங்கல நாண் ஒன்று இருக்கிறது. அதன் நடுவிலே இதழ்களுள்ள ஆபரணம் ஒன்று காணப்படுகிறது.

பருத்து உயர்ந்த அவளுடைய ஸ்தனங்கள் ஒன்றை யொன்று தொடுவனபோல் நெருங்கியிருக்கின்றன. பூணூலாவது சன்னவீரமாவது அவள் அணிந்துகொண்டிருப்பதாகச் சிற்பி காட்டவில்லை.

தனது புயம் ஒவ்வொன்றிலும் கேயூரம் ஒன்றைத் தேவி அணிந்துகொண்டிருக்கிறாள். இதன் முன்புறத்திலே பூவணி காணப்படுகிறது. கேயூரமானது மூன்று வளையங்களாய் அமைந்திருக்கிறது. அம்மூன்று வளையங்களும் ஒரு பட்டையால் ஒன்று சேர்த்துக்கட்டப்பட்டிருக்கின்றன. அப்பட்டையில் மணி கோத்த சிறு தொங்கல்கள் சில காணப்படுகின்றன.

அவளது திருப்புயத்தில் முழங்கைக்குச் சற்றுமேலாகப் பாஜிபந்து[1] என்று இக்காலத்தில் வழங்கப்படுகிற ஆபரணம்

1இத்தகைய ஆபரணமானது சோழர்காலத்து விக்கிரகங்கள் பலவற்றுள் காணப்படுகிறது என்று சென்னைக் காட்சிச்சாலையார் இந்த விக்கிரகங்களைப்பற்றி எழுதியுள்ள அட்டவணையில் கூறியிருப்பதைக் கவனிக்க (30-ம் பக்கம், 42-ம் பக்கம்).

ஒன்றையும் அவள் அணிந்திருக்கிறாள். அவளது முன்கையிலே மூன்று வளையல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கையிலும் பாம்பு விரலைத் தவிர மற்ற விரல்களில் மோதிரங்கள் காணப்படுகின்றன.

அவளது வலக்கரத்திலே உள்ள கரண்டியானது வேறாக வார்த்து இணைக்கப்படாமல் விக்கிரகத்தோடு ஒன்றாகவே வார்க்கப்பட்டிருக்கிறது. அன்னபூர்ணாதேவியின் விக்கிரகங்களில் பெரும்பாலும் இடது கரத்திலே காணப்படும் பாத்திரமானது இந்த விக்கிரகத்தின் கையிலே காணப்படவில்லை. தேவியின் வலக்கை தொங்கவிடப்பட்டிருக்கிறது.

அவள் தன் இடையிலே பூந்துகிலொன்றைத் தரித்துக் கொண்டிருக்கிறாள். அத்துகில் அவளது வலது முழந்தாள் வரையில் எட்டுவதாயும், அவளது இடதுகால் முழங்காலுக்கும் கணைக்காலுக்கும் நடுவரையில் எட்டுவதாயும் இருக்கின்றது. அதிலே அமைக்கப்பட்ட பூத்தொழிலானது வஸ்திர மடிப்புக்களுக்கு இடையே தெரியும்படியாகச் சிற்பி கோடுகளிட்டு அழகாகக் காட்டியிருக்கிறான். அகன்ற மேகலை ஒன்று அவள் இடையில் விளங்குகிறது. அவள் காலிலே பாடகத்தையும், காலின் கட்டை விரலிலும் நான்காம் விரலிலும் சுற்றுக்களையும் அணிந்து கொண்டிருக்கிறாள்.

விக்கிரகம் மிகவும் அழகாக இருக்கிறது.

नित्यानन्दकरी वराभयकरी सौन्दर्यरत्नाकरी
निर्धूताखिलदोषपावनकरी प्रत्यक्षमाहेश्वरी ।
प्रालेयाचलवंशपावनकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ॥

क्षत्त्रत्राणकरी महाभयकरी माता कृपासागरी
सर्वानन्दकरी सदा शिवकरी विश्वेश्वरी श्रीधरी ।
दक्षाक्रन्दकरी निरामयकरी काशीपुराधीश्वरी
भिक्षां देहि कृपावलम्बनकरी मातान्नपूर्णेश्वरी ॥

முத்துஸ்வாமி தீக்ஷிதர்

டி. எல். வேங்கடராம ஐயர், பி. ஏ., பி. எல்.

(54-ஆம் பக்கத்தொடர்ச்சி)

2. கல்வியும் காசியாத்திரையும்

கல்வி கற்றது

ராமஸ்வாமி தீக்ஷிதர் நன்றாகக் கற்றவர்; கல்வியின் பெருமையை நன்கு உணர்ந்தவர்; பொருட்செல்வத்தைக் காட்டிலும் அறிவுச் செல்வத்தையே மேலாக மதித்தவர்; ஆதலால் அவர் தம் புத்திரரான முத்துஸ்வாமி தீக்ஷிதருக்கு நன்றாக வித்தியாப்பியாசம் செய்து வைத்தார். முத்துஸ்வாமி தீக்ஷிதர் உபநயனமான காலம் முதல் நான்கு வேதங்களையும் நன்றாகக் கற்றுணர்ந்த பெரியார்களிடம் சென்று வேதங்களை முறைப்படி அத்தியயனம் செய்து வந்தார். அவர்கள் ஸாம வேதத்தைச் சேர்ந்தவர்கள். ஆதலால் முத்துஸ்வாமி தீக்ஷிதரும் ஸாமவேதத்தை மிகவும் கருத்துடன் கற்று அதிலே விசேஷமான பயிற்சியை அடைந்தார். வடமொழியில் தேர்ச்சியுள்ள பண்டிதர் ஒருவரிடம் சென்று ஸம்ஸ்கிருதத்திலே உள்ள காவிய, நாடக, அலங்கார நூல்களையும் வியாகரணத்தையும் நன்கு கற்றார். தம் தந்தையினிடத்தில் சங்கீதாப்பியாஸம் செய்துவந்தார். அவருக்கு பாலியவயதிலேயே விவாகமும் நடந்துவிட்டது.

மணலிக்குச் சென்றது

இப்படியிருக்கையில் ஒரு நாள் மணலி வேங்கடகிருஷ்ண முதலியார் என்ற பிரபு ஒருவர் தியாகேசனைத் தரிசனம் செய்யும்பொருட்டுத் திருவாரூருக்கு வந்தாராம். அவர் சங்கீதத்தில் மிகவும் அபிமானமுள்ளவர். அவர் திருவாரூரில் ராமஸ்வாமி தீக்ஷிதர் பாடக் கேட்டார். அப்பொழுது அவருடைய சங்கீதத்தில் மிகவும் ஈடுபட்டு, அவரைத் தம்மோடுகூட மணலிக்குவந்து தம்முடைய ஸம்ஸ்தானவித்துவானாக இருக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அவரும் உடன்படவே முதலியார் அவரைக் குடும்பத்தோடு மணலிக்கு அழைத்துச்சென்றார்.

காசிக்குச் சென்றது

இவ்வாறு முத்துஸ்வாமி தீக்ஷிதர் தம் தகப்பனாருடன் மணலியில் வாழ்ந்துவரும்போது சிதம்பரநாத ஸ்வாமிகள் என்ற சந்நியாசி ஒருவர் காசியாத்திரையாகப் போகும்வழியில் அங்கே வந்தாராம். ராமஸ்வாமி தீக்ஷிதருக்கு அவரை ஏற்கெனவே தெரியுமாம். அவர் திருவாரூரிலே இருக்கும்போது அந்தச்சந்நியாசியிடம் ஸ்ரீவித்தையை உபதேசமாகப்பெற்றிருந்தாராம். ஆதலால் அந்தச்சந்நியாசி மணலிக்குவந்ததும் அவரை மிகவும் பணிவுடன் வரவேற்றுப் பல உபசாரங்களைச் செய்து, தம் வீட்டிலே அவருக்குப் பிக்ஷையைத் தாராம். அந்தச்சமயத்திலே முத்துஸ்வாமி தீக்ஷிதரைப் பார்த்த ஸ்வாமிகளுக்கு அவர்மேல் அளவில்லாத அன்பு உண்டாயிற்றாம். அதனால் அவரைத் தம்முடன் காசிக்கு அனுப்பவேண்டுமென்று ராமஸ்வாமி தீக்ஷிதரைக் கேட்டாராம். தாம் உபவாஸமிருந்து அருமையாகப் பெற்ற பிள்ளையைச் சந்நியாசி துணையாகக் கேட்டவுடனே, விசுவாமித்திரர் ராமனைத் தரவேண்டும் என்று கேட்ட உடனே தசரதன் என்ன பாடுபட்டானோ அத்தனை பாடும் பட்டாராம் ராமஸ்வாமி தீக்ஷிதர். மணலி வேங்கடகிருஷ்ண முதலியாரும் சந்நியாசி பக்கம் சேர்ந்துகொண்டு வற்புறுத்தவே, அவர் மறுக்க முடியாமல் ஸ்வாமிகளின் வேண்டுகோளுக்கு இணங்கினார். முத்துஸ்வாமி தீக்ஷிதரையும் அவருடைய மனைவியையும் ஸ்வாமிகள்கூடக் காசிக்கு அனுப்பிவைத்தார். அவர்கள் காசிக்குச் சென்றார்கள்.

காசியில் வாழ்க்கை

காசியை அடைந்ததும் சிதம்பரநாத ஸ்வாமிகள் முத்துஸ்வாமி தீக்ஷிதரை மிக்க அன்போடு நடத்தி அவருக்குப் பலவிதமான அரிய விஷயங்களையும் போதித்து வந்தார். தேவியின் மகாத்மியங்களை அவருக்கு நன்றாக எடுத்துரைத்தார். ஸ்ரீவித்தையையும் அவருக்கு உபதேசம் செய்தார். யோகசாஸ்திரம் சோதிடசாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களை அவருக்கு நன்றாகக் கற்றுக்கொடுத்தார்.

ஒரு விந்தையான நிகழ்ச்சி

இப்படியிருக்கையில் மிகவும் விந்தையான நிகழ்ச்சி ஒன்று நடந்ததாகச் சொல்லப்படுகிறது. அது வருமாறு: ஒருநாள் குருவும் சிஷ்யருமாக வழக்கம் போல் கங்கைக்கரையில் உட்கார்ந்து கொண்டு பல விஷயங்களை ஆராய்ந்துகொண் டிருந்தார்கள். அப்பொழுது ஸ்வாமிகள் முத்துஸ்வாமி தீக்ஷிதரைப் பார்த்து, "முத்துஸ்வாமி! நான் உனக்கு வெகு காலமாகச் சிரமத்தைக் கொடுத்து

வருகிறேன். நீ அதைப் பொருட்படுத்தாது, மிகவும் சிரத்தை யுடன் எனக்குப் பணிவிடை செய்து வந்திருக்கிறாய். உன்னுடைய அறிவும், புத்தியும், கல்வியும் மிகவும் விசாலமானவை. ஆதலால் உனக்கு வெகுசீக்கிரம் ஆத்மஞானம் உண்டாகும். இது என் ஆசீர்வாதம்" என்றார். உடனே தீக்ஷிதர் மிகவும் பரபரப்புடன், "ஸ்வாமி என்னைவிட்டுப் பிரியப்போவதுபோல் பேசுகிறீர்களே. எப்பொழுதும் தங்களுக்குப் பணிவிடை செய்துகொண்டு தங்க ளிடமே இருக்கவேண்டுமென்பதுதான் என் ஆசை" என்றார். அதற்கு ஸ்வாமிகள், "நீ வருத்தப்படாதே. நாம் பிரியவேண்டிய சமயம் நெருங்கிவிட்டது. நீயும் உன் தாயார் தகப்பனார்களை விட்டுவந்து வெகுகாலம் ஆகிவிட்டது. இனிமேல் நீ அவர்கள் இருக்கும் இடம் சென்று அங்கே இருப்பதுதான் தரும்" என்றார். முத்துஸ்வாமி தீக்ஷிதர் மிகவும் கஷ்டப்பட்டு மனத்தைத் தேற்றிக்கொண்டு இதற்கு இணங்கினார். பிறகு ஸ்வாமிகள், "முத்துஸ்வாமி! நீ இந்தப் படித்துறையிலே மூன்றுபடி இறங்கு. உனக்குக் கங்காதேவி அனுக்கிரகம் செய்வாள். அவளுடைய பிர ஸாதத்தை நீ பெறுவாய்" என்றாராம். குருவின் சொற்படி முத்து ஸ்வாமி தீக்ஷிதர் மூன்றுபடிகள் இறங்கிய உடனே கங்கைப் பிரவாகத்தில் ஒரு வீணை மிதந்து இவர் கையருகில் வந்ததாம். அதைப் பக்தியுடன் எடுத்துப்பார்த்தபோது அதிலே 'ராம' என்கிற வார்த்தை பொறித்திருந்ததாம். அதை ஏற்றுக் கொண்டு, குருவினிடம் விடைபெற்றுக்கொண்டு முத்துஸ்வாமி தீக்ஷிதர் காசியைவிட்டுப்புறப்பட்டுத் தம் ஊருக்கு வந்தாராம். இப்பொழுதும் அவருடைய குடும்பத்தார் தம்மிடம் உள்ள ஒரு வீணையைக் காட்டி அவர் இவ்வாறு விந்தையாய்ப் பெற்ற வீணை இதுதான் என்று சொல்லுகிறார்கள்.

காசி வாசத்தினுல் உண்டான பயன்கள்

முத்துஸ்வாமி தீக்ஷிதர் ஒரு பெரியாரை அண்டி அவருடன் காசி க்ஷேத்திரத்தில் வாழ்ந்து வந்ததனால் அவருடைய மனமானது மிகவும் சாந்தமான நிலையை அடைந்தது. இது சலனம் குறைந்து அமைதி மிகுந்ததாய்க் காணப்பட்டது. சுகம், துக்கம் முதலியவை அவரை அதிகம் பாதிக்கவில்லை. சாந்தி நிலை யிலே முழுகினதாக அவருடைய ஆன்மா காணப்பட்டது. அவர் ஆயுள் முழுதும் இப்பேர்ப்பட்ட மனநிலையையே உடையவராய் இருந்தார் என்பது அவருடைய கீர்த்தனங்களினின்று தெரிய வருகிறது. அகத்தோற்றத்தை முகம் காட்டுவது போல், அகத் தின் நிலையைச் சொற்கள் காட்டுமன்றோ?

இவர் கீர்த்தனைகளில் பெரும்பான்மை சாந்திரஸப் பிரவாக மாய்க் காணப்படுகின்றன. ஆதலால் ஆழ்ந்து, அமர்ந்து, அநு பவித்து, நிதானமாய் விளம்பகாலத்திலே பாடுவதுதான் அக் கீர்த்தனங்களைப் பாடுவதற்கு உரிய முறை. அப்பொழுது தான் அவற்றின் முழு ரஸமும் புலப்படும்.

காசிவாழ்க்கையால் இன்னொரு பிரயோஜனமும் உண்டா யிற்று. அங்கே வாழ்ந்தபடியால் சங்கீதப்பிரியரான அவர் வட நாட்டுச் சங்கீதத்தைப் பல முறைகளிலே நன்றாகக் கேட்டிருக்க வேண்டும். அதன் சுவைகளை நன்றாக உணர்ந்திருக்க வேண்டும். இப்போது ஹிந்துஸ்தானி சங்கீதம் என்று சொல்லுகிற அதன் அம்சங்களிலே பலவற்றின் அழகை அவர் நன்கு அனுபவித்திருக்க வேண்டும். அவர் அப்படி அனுபவித்தார் என்பதற்கு எத்தனையோ ஆதாரங்களைக் காட்டலாம். உதாரணமாக யமுனா கல்யாணி என்று இப்போது வழங்கப்படுகிற ஒரு ராகத்திலே அவர் ஜம்பூபதே என்று தொடங்கும் கீர்த்தனம் ஒன்றை அமைத் துப் பாடியிருக்கிறார். அது வருமாறு:

யமுனாகல்யாணி ராகம்—ரூபக தாளம்

பல்லவி

ஜம்பூபதே மாம் பாஹி நிஜாநந்தாம்ருதபோதம் தேஹி

அநுபல்லவி

அம்புஜாஸநாதிஸகலதேவநமன
தும்புருநுதஹ்ருதயதாபோபசமன
அம்புதிகங்காகாவேரீயமுனா
கம்புகண்ட்யகிலாண்டேச்வரீரமண.

यमुनाकल्याणिरागः—रूपकताळः

प. जम्बूपते मां पहि निजानन्दामृतबोधं देहि

अनु. अम्बुजासनादिसकलदेवनमन
तुम्बुरुनुतहृदयतापोपशमन
अम्बुधिगङ्गाकावेरीयमुना
कम्बुकण्ठ्यखिलाण्डेश्वरीरमण.

சரணம்

பர்வதஜாப்ரார்த்திதாப்லிங்க விபோ
பஞ்சபூதமயப்ரபஞ்சப்ரபோ
ஸர்வஜீவதயாகரசம்போ
ஸாமஜாடவீநிலய ஸ்வயம்போ
சர்வ கருணாஸுதாஸிந்தோ
சரணாகதவத்ஸலார்த்தபந்தோ
அநிர்வசநீயநாதபிந்தோ
நித்யமௌலிவித்ருதகங்கேந்தோ
நிர்விகல்பக ஸமாதிநிஷ்ட சிவ கல்பகதரோ
நிர்விசேஷசைதன்ய நிரஞ்ஜன குருகுஹகுரோ.

இதைப் பாடிக் கேட்டால் இது வடநாட்டார் பாடும் த்ருபத் என்பதைப்போல் இருக்கும். இதைப்பற்றி இன்னொரு சமயம் சற்று விரிவாகச் சொல்லுகிறேன்.

அவர் காசிவாஸத்தால் நமக்குச் சில கீர்த்தனங்களும் கிடைத்திருக்கின்றன. அவர் நாட்டுக்கு வந்தபிறகுங்கூட காசியைப்பற்றிய நினைவுகள் மேலிட்டு வரவே காசியிலுள்ள அன்னபூரணிதேவியின் பேரில் ஏஹி அன்னபூர்ணே என்று தொடங்கும் புன்னாகவராளி ராக கீர்த்தனத்தையும், காலபைரவர் மேல் கால பைரவம் பஜே என்று தொடங்கும் பைரவ ராக கீர்த்தனத்தையும் பாடியிருக்கிறார். அவை வருமாறு:

च. पर्वतजाप्रार्थिताब्लिङ्ग विभो
पञ्चभूतमयप्रपञ्च प्रभो
सर्वजीवदयाकर शंभो
सामजाटवीनिलय स्वयंभो
शर्व करुणासुधासिन्धो
शरणागतवत्सलार्तबन्धो
अनिर्वचनीयनादबिन्दो
नित्यमौलिविधृतगङ्गेन्दो
निर्विकल्पकसमाधिनिष्ठ शिव कल्पकतरो
निर्विशेषचैतन्य निरञ्जन गुरुगुहगुरो.

புன்னாகவராளி ராகம்—ஆதி தாளம்

பல்லவி

ஏஹி அன்னபூர்ணே ஸந்நிதேஹி ஸதா பூர்ணே ஸுவர்ணே

அநுபல்லவி

பாஹி பஞ்சாசத்வர்ணே ச்ரியம் தேஹி ரக்தவர்ணே அபர்ணே

சரணம்

காசீக்ஷேத்ரநிவாஸினி கமலலோசனவிசாலினி
விச்வேசமனோல்லாஸினி ஜகதீசகுருகுஹபாலினி
வித்ருமபாசினி புன்னாகவராளிப்ரகாசினி
ஷட்த்ரிம்சத்தத்வவிகாஸினி ஸுவாஸினி
பக்தவிச்வாஸினி சிதாநந்தவிலாஸினி

பைரவராகம்—ஆதி தாளம்

பல்லவி

காலபைரவம் பஜேஹமனிசம் காசீபுரவாஸம் பூதேசம்

पुन्नागवराळिरागः—आदिताळः

प. एहि अन्नपूर्णे सन्निधेहि सदा पूर्णे सुवर्णे
अनु. पाहि पञ्चाशद्वर्णे श्रियं देहि रक्तवर्णे अपर्णे
च. काशीक्षेत्रनिवासिनि कमललोचनविशालिनि
विश्वेशमनोल्लासिनि जगदीशगुरुगुहपालिनि
विद्रुमपाशिनि पुन्नागवराळिप्रकाशिनि
षट्त्रिंशत्तत्त्वविकासिनि सुवासिनि
भक्तविश्वासिनि चिदानन्दविलासिनि

भैरवरागः—आदिताळः

प. कालभैरवं भजेऽहमनिशं काशीपुरवासं भूतेशम्

அநுபல்லவி


சூலசக்ரபாசதண்டஹஸ்தம் சோகமோஹ
வாரணப்ரசஸ்தம்

சரணம்

நாரதாதிநுதச்யாமகாத்ரம்
நாகயஜ்ஞஸூத்ரவிசித்ரம்
க்ரூரதரபாபதண்டனசதுரம்
குருகுஹப்ரியகரம் திகம்பரம்
வாரிஜாஸனஸ்ய க்ருந்தனம்
வாஞ்சிதார்த்தபலதானசிந்தனம்
தீரதரம் விதிகபாலதரணம்
தேவராஜஸேவிதாப்ஜசரணம்

अनु. शूलचक्रपाशदण्डहस्तं शोकमोहवारणप्रशस्तम्

च. नारदादिनुतश्यामगात्रं
नागयज्ञसूत्रविचित्रं
क्रूरतरपापदण्डनचतुरं
गुरुगुहप्रियकरं दिगम्बरं
वारिजासनास्यकृन्तनं
वाञ्छितार्थफलदानचिन्तनं
धीरतरं विधिकपालधरणं
देवराजसेविताब्जचरणम्



வான்மலர்

ஏ. எஸ். பஞ்சாபகேசையர், எம். ஏ., ஐ. ஸி. எஸ்.

(186-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதினெட்டு மாதங்களுக்குப் பின்னர், அவ்விரண்டு பெண் மணிகளும் பள்ளிக்கூடத்திற் பரீக்ஷைகள் முடிந்தபின்னர், விடுமுறை நாட்களுக்கு வேறு ஊருக்குச் செல்வதற்கு முன்பாகச் சந்தித்தனர். அவர்களுடைய படிப்பும் ஒருவாறு முடிவடைந்து விட்டது.

"என்பிரிய சிநேகிதியே, நீ வேறொருவரைக் கல்யாணம் செய்ய ஏற்பாடுசெய்துகொண்டு விட்டாயா?" என்று மீனா கேட்டாள்.

"என்னுடைய தகப்பனாரல்லவா எனக்குக் கணவரை நிச்சயம் செய்தார்?" என்றாள் சரோஜா.

"அவர் எவ்வாறு இருக்கிறார்? அவருடைய கண்கள் கூட ஆழ்ந்த யோசனையைக் குறிப்பித்துக் கொண்டிருக்கின்றனவா?"

"இல்லை; அத்தகைய கண்களையுடையவரைக் குறித்து எனக்கு இனிமேல் கவலையில்லை. என்னுடைய தகப்பனார் இவரை ஆராய்ந்து நிச்சயித்திருக்கிறார்; இவருடைய கண்கள் விசாலமான பார்வையை யுடையவைகளாக இருக்கின்றன."

"இவர் என்ன உத்தியோகத்திலிருக்கின்றார்?"

"இவர் டாக்டராயிருக்கின்றார். இவருடைய பெயர் இராமச்சந்திரர்."

"வயதென்னவோ?"

"இருபத்துமூன்று."

"பார்ப்பதற்கு அழகாயிருக்கின்றாரா?"

"அழகென்பது அநேக விஷயங்களைப் பொறுத்திருக்கிறது. ஆனால் அதிக மோசமில்லை."

"நீ அவரை விரும்புகிறாயா?"

"நான் அவரை விரும்புகிறேன். ஆனல் காதல் என்பது நாளடைவில் ஏற்படும்."

"கலியாணம் எப்போது நடக்கும்?"

"அடுத்த மாதத்தில் நடக்கலாம்; இன்னும் கலியாண தினம் நிச்சயிக்கப்படவில்லை. கூடியசீக்கிரம் முகூர்த்ததினம் நிச்சயிக்கப் படும். அப்போது நான் உனக்கு எழுதுகிறேன். நீ தவருமல் வருவாயென்று நான் நம்புகிறேன்."

"சந்தேகமில்லாமல் நான்வருவேன். கலியாணகாலங்களில் நடக்கும் கேளிக்கைகளேயும், கிடைக்கும் நல்ல சாப்பாட்டையும் விட்டுவிடக் கூடாது. அவர் எவ்விடத்தில் உத்தியோகத்திலிருக் கின்ருர்?"

"அவர் இப்போதுதான் வைத்தியகலாசாலையில் படித்துப் பரீக்ஷையில் தேறியிருக்கின்ருர். சிங்கப்பூரில் ஒருநல்ல உத்தி யோகம் அவருக்குக் கிடைத்திருக்கிறது. கலியாணம் முடிந்த பிறகு என்னையும் கூட்டிக்கொண்டு அங்கே போவதாக அவர் உத்தேசித்திருக்கின்ருர்."

"ஆகவே நீ சமுத்திரத்தைத் தாண்டிப் போகப்போகின்ருய். நாமிருவரும் பிரிந்து போகப் போகிரோம்."

"பெண்களின் கதி அவ்வளவுதான். அவர்களுடைய கணவன் மார்கள் எங்கிருக்கின்றனரோ, அங்கே அவர்களும் செல்லவேண்டி யதுதான். ஆனல் சிங்கப்பூர் நமக்கு அடுத்த வீடுபோலாகி விட்டது. நமது தேசம் நமது தேசத்து மக்களுக்கு நல்ல உத்தி யோகங்களை அளிக்கும் சக்தியில்லாததாயிருக்கின்றது."

" அவருக்கு அவ்விடத்தில் என்ன சம்பளம்?

" மாதம் ஒன்றுக்கு முந்நூறு டாலர்கள் சம்பளம். அதைத் தவிர வாடகையில்லாமல் ஒரு வீடும், உபயோகத்திற்காக ஒரு மோட்டாரும் அவர்கள் கொடுப்பதாக வாக்குறுதி செய்திருக்கின் ருர்கள். அதாவது, மாதம் நானூற்று ஐம்பது ரூபாய் சம்பளம் என்று வைத்துக்கொள்வேன். அதைத்தவிர, வீடும் மோட்டா ரும் இலவசமாகக் கொடுக்கின்றனர். மேலும் சம்பளம் ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு ஆகும்வரையில், வருஷம் ஒன்றுக்கு ரூபாய் எழுபத்தைந்து வீதம் உயர்த்தப்படும். எல்லாவற்றையும் உத்தே சித்துப் பார்த்தால் மோசமில்லை யென்று தோன்றுகிறது. உன் உத்தேசமென்ன?"

"நீ நல்ல அதிர்ஷ்டசாலிதான். இதற்குமேல் என்ன வேண்டியிருக்கிறது? என்னையும் கலியாணம் செய்துகொள்வதற்கு இவரைப்போலவே இன்னொரு டாக்டர் இருக்கிறாரா என்று பார்த்துச் சொல்என்று உன்னை நான் கேட்கலாமென்றிருந்தேன். இவ்வளவு சம்பளத்தையும், இலவசமான வீட்டையும், மோட்டாரையும் உடைய ஒருகணவன்மீது நான் காதல் கொள்வேன் என்பதில் சந்தேகமில்லை" என்று சிரித்துக்கொண்டே மீனா கூறினாள்.

"நான் என்தகப்பனாரிடம் சொல்லி வேறொருவரைப் பார்த்துக் கண்டுபிடிக்கச் சொல்லுகிறேன். ஆனால் இவரைப் போலவே வேறொரு டாக்டரை உண்டுபண்ண முடியும் என்று நினைக்காதே" என்று சரோஜா பதிலளித்தாள்.

"இந்தக் கலியாணம் உன்மனதுக்கிசைந்ததாயிருக்கின்றதா? இது உனக்குச் சந்தோஷத்தை அளிக்கின்றதா?"

"நான் சந்தோஷத்துடன்தான் இருக்கிறேன். இருந்தபோதிலும் ராமச்சந்திரருக்கும், ஆழ்ந்த பார்வையையுடைய கண்கள் இருந்திருந்தால் மிகவும் நன்றாயிருந்திருக்கும் என்று நான்கருதுகிறேன்."

"எப்பொழுது ஒன்று தவறிப்போய் மற்றொன்று அதற்குப் பதிலாக ஏற்பட்டுவிட்டதோ, அப்போது தவறிப்போனதைக் குறித்து வருந்துவதில் பயனில்லை. யோசனையிலாழ்ந்திருக்கும் குறுகிய கண்களை மறந்துவிடு. விசாலமான பார்வையையுடைய அகன்ற கண்களை விரும்பு."

சரோஜாவின் முகம் மலர்ந்தது. "நம்முடைய இத்தகைய சாதாரணமான விருப்பங்களுக்குக் காரணம் கூறுவது கஷ்டம்" என்று அவள் சொன்னாள்.

"இப்போது அந்த ஆழ்ந்த சிந்தனையைக் குறிக்கும் கண்களையுடையவர் என்னசெய்துகொண்டிருக்கிறார், தெரியுமா?" என்று மீனா கேட்டாள்.

"ஆசாரம் வாய்ந்த குடும்பத்தைச்சேர்ந்த ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டார். இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் வரதக்ஷிணையாக அவர் வாங்கிக் கொண்டார். அவருடைய குடும்பத்தின் கடன்களையெல்லாம் தீர்த்துவிட்டு, ஐ. சி. எஸ். பரீக்ஷைக்குப் படிப்பதற்காக உபகாரச் சம்பளத்துடன் அவர் இங்கிலாந்திற்குப் போயிருக்கிறார்."

"அவருக்கு நல்ல அதிர்ஷ்டம் என்றுதான் தோன்றுகிறது."

"சந்தர்ப்பம் நேரிடவே, அவருடைய கண்கள் விசாலமாகி விட்டன."

"உன் கணவருடைய அகன்ற கண்கள் காதலின் செயலால், கூடிய சீக்கிரம் ஆழ்ந்த கண்களாக மாறிவிடும்."

"அவ்வாறு ஆகுமென்றே நாம் நம்புவோமாக! நான் ஓர் அந்தரங்கமான விஷயத்தை உன்னிடம் சொல்லப்போகிறேன். வீரச்செயல்களும், போற்றத் தகுந்த உன்னதமான எண்ணங் களும், இவ்வுலகில் பயனளிப்பதில்லை. நம்முடைய நல்ல எண்ணங் களெல்லாம் பயனற்றுப் போவதை ஒவ்வொருநாளும் நாம் பார்த் துக்கொண்டிருக்கிறோம். நமது எண்ணங்களுக்கும், உலகில் நடக்கும் விஷயங்களுக்கும் சம்பந்தமே யில்லாமலிருக்கின்றது. போற்றத்தக்க கொள்கைகளையெல்லாம் நாளடைவில் நாம் பறக்க விட்டுவிடவேண்டியதுதான்."

"அப்படித்தான் நேரிடும். உன்னத எண்ணங்களை வைத்துக் கொண்டு நாம் வயிறு வளர்க்கமுடியாது. கனவுகளினால் நம் முடைய வயிற்றை நிரப்பமுடியாது. அவைகளினால் நாம் வேறு எந்தவிதமான திருப்தியையும் அடையமுடியாது. அதை உத்தே சித்துத்தான் நம்முடைய பெரியோர்கள் அபினி, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை நாம் உபயோகிக்கக் கூடாதென்று தடுத்திருக் கின்றனர். சாதாரணமாகக் காணும் கனவுகளே நமக்குப் போது மானவை. அவற்றுடன் லாகிரி வஸ்துக்களை உபயோகித்து இன் னும் ஏன் கனவுகளை நாமாகவே அதிகப்படுத்திக்கொள்ள வேண்டு மென்பது அவர்கள் கொள்கையாயிருந்தது. சரி, இப்போது எனக்கு நேரமாகிறது. நான் சீக்கிரம் போகவேண்டும். உன்னுடைய கலியாண முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டவுடன் எனக்கெழுது. நான் கண்டிப்பாக நான்குநாள் முன்னதாகவே வந்து, எல்லாவற் றையும் கண்டுகளிக்கிறேன்."

"அப்படியே செய்" என்றாள் சரோஜா.

கலியாணம் மிக்க ஆடம்பரத்துடன் நடந்தது. அவ்வூரி லிருந்த பெரிய மனுஷர்களெல்லாம் அக்கலியாணத்திற்கு வந்திருந் தனர். மீனாவும் வந்திருந்தாள். விருந்துகளெல்லாம் முதல்தர மானவையாக இருந்தன. அத்தகைய விருந்துகள் அதற்குமுன்பு அவ்வூரில் நடந்ததேயில்லையென்று அனைவரும் புகழ்ந்து பேசிக் கொண்டனர். பாட்டுக்கச்சேரிகளுக்கென்று பிரத்தியேகமாக

வரவழைக்கப்பட்டிருந்த சங்கீத வித்வான்கள் மிகவும் திறமை வாய்ந்தவர்கள். கலியாணமானபிறகு தங்கள் காலத்தைச் சுகமாகக் கழிப்பதற்கும், வேலையைக் கவனிப்பதற்கும், அந்தத் தம்பதிகள் கப்பலேறிச் சிங்கப்பூருக்குச் சென்றனர்.

சமுத்திரத்திற்கு அருகிலிருந்த பங்களாவும், சிங்கப்பூர் அமைப்பும் சரோஜாவின் மனத்திற்குத் திருப்தியை அளித்தன. 'டாட்ஜ் மோட்டாரில் ஏறிக்கொண்டு, சிநேகிதர்கள் வீட்டிற்குச் செல்வதிலும், கடைகளுக்குச் சென்று சாமான்களை வாங்கிக் கொண்டு வருவதிலும், சரோஜா காலத்தைச் சந்தோஷமாகக் கழித்துவந்தாள். அவளுடைய அழகையும், அமைதியுடன் கூடிய குணத்தையும், போற்றத்தகுந்த நடத்தையையும் கண்டு அவ்வூரி லுள்ளோர் அனைவரும் அவளுடைய நட்பை நாடினர். ராமச்சந்திரருடைய ஆஸ்பத்திரி இரண்டுமைல்களுக்கு அப்பாலிருந்ததால், அவள் அவருடன் ஆஸ்பத்திரிக்குச் செல்வது வழக்கம். அவருக்கு வேண்டிய சிற்றுண்டிகளையும் அவள் அவருக்கு மத்தியானவேளை களில் கொண்டுபோய்க்கொடுப்பது வழக்கம். சாயங்கால வேளை களில் போய் அவரை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வருவாள். கடற்கரை யோரங்களில் நடக்கும் பலவிதமான காட்சிகளைக் காண அவர்களிருவரும் அடிக்கடி இராத்திரிகாலங்களில்கூட தங்களுடைய மோட்டாரில் சுற்றுவது வழக்கமாயிருந்தது.

அவ்வாறு சந்தோஷத்துடன் அவர்கள் காலத்தைக் கழித்து வந்தனர். காலசக்கரம் அதிவிரைவாகச் சுழன்றுகொண்டிருந்தது. அவர்களுக்குக் காலம் போனதே தெரியாமலிருந்தது. முதல் ஐந்து வருஷங்களுக்குக் குழந்தைகளே வேண்டியதில்லை என்று அவர்கள் தீர்மானம் செய்துகொண்டனர். சாதாரணமாக டாக்டர்கள் சொல்வதுபோல ராமச்சந்திரர் அவளிடத்தில் பின் வருமாறு சொன்னார்: "பிள்ளை பெறுவதற்கு ஏற்ற வயது உனக்கு இன்னும் ஆகவில்லை. நீ மிகவும் சிறிய வயதுடையவள். உனக்கு இருபத்தொன்று அல்லது இருபத்திரண்டு வயது ஆனபிறகுதான், நீ பிள்ளைபெறுவதற்குத் தகுதியானவளாவாய். மேலும் காதல் என்னும் செடி கலியாணமான சிலவருஷந்தான் புஷ்பித்துக் கொண்டிருக்கும். பிறகு அது காய்காய்க்க ஆரம்பித்து விட்டால், சந்தோஷம் முன்பு இருந்ததுபோல இராது. அதாவது கலியாணமாய்க் குழந்தைகளில்லாத சிலவருஷங்களில் காதலர் அனுபவிக்கும் இன்பமே இன்பம். பிறகு அனுபவிக்கும் சுகம் அதைப் போல இருக்கவே இராது."

"ஆனால் எனக்கு ஒரு குழந்தை வேண்டுமென்று ஆசையாயிருக்கிறதே" என்று அவள் சொன்னாள்.

"இந்த ஐந்து வருஷங்களுக்குப் பிறகு உனக்கு எவ்வளவு குழந்தைகள் வேண்டுமோ, அவ்வளவும் பெற்றெடுத்துக்கொள். யௌவனம் என்னும் பருவம் மறுபடியும் வாய்ப்பதரிது. ஒவ்வொரு குழந்தையும் கிழத்தனத்தை உண்டாக்குவதற்குக் காரணமாயிருக்கின்றது. ஆகவே கூடியவரையில் நித்யானந்தத்தையும் நாடு. இளமைப் பருவத்திலேயே இன்பத்தை அனுபவித்துவிடு" என்று அவர் சொல்லவே, அவளும் அதற்கிணங்கினாள். இம்மாதிரியாக அவர்கள் வாழ்க்கையின் இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தவர். சில சமயங்களில் அவளுடைய கணவன் வீட்டில் இல்லாதகாலத்து, தனியே வீட்டிலிருப்பது அவளுக்குச் சிறிது கஷ்டமாகத் தோற்றியது. ஒரு குழந்தை யிருந்தால் அதனுடனாவது விளையாடிக்கொண்டு காலத்தைக் கழிக்கலாமென்று அவளுக்குத் தோற்றியதுண்டு. அவள் அதை விரும்பியது முண்டு. அடிக்கடி அவளுடைய சிநேகிதர்களுடைய குழந்தைகளைக் கொண்டுவரும்படிசெய்து, அவைகளுக்குப் பல விதமான பொருள்களை அவள் கொடுப்பாள்.

நான்கு வருஷங்களுக்குப்பிறகு அவர்களுடைய வாழ்க்கைக்கு இடையூறு நேர்ந்தது. அதிகதொத்து வியாதியாகிய க்ஷய ரோகத்தினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் பல நோயாளிகளுக்கு இரவும் பகலும் சிகிச்சை செய்து வந்ததனால், ராமச்சந்திரரையும் அந்த வியாதி பற்றிக்கொண்டது. முதன்முதலில் அது சாதாரணமாயிருந்தது. வேலையைக் குறைத்துக்கொண்டு, ஆகாரத்தையும் பத்தியமாக வைத்துக் கொண்டால் வியாதி குணமடைந்து விடுமென்று எண்ணினார். ஆனால் அக்கொடிய வியாதியோ, உறுதியாகப் பிடித்துக்கொண்டது. இரண்டு மாதங்களுக்குள், தம்முடைய ஆஸ்பத்திரியிலேயே ராமச்சந்திரர் படுத்தபடுக்கையாக இருக்கவேண்டியதாயிற்று. அவருக்குச் சகாயமாக வேலைசெய்துகொண்டிருந்த டாக்டர்களே அவருக்கு மருந்து கொடுக்க வேண்டியதாயிற்று. சரோஜா மத்தியான வேளைகளில் அவருக்கு வேண்டிய ஆகாரம் முதலியவைகளைக் கொண்டுபோய்க் கொடுத்துக் கொண்டிருந்தாள். இராத்திரி முழுவதும் அவரருகிலேயே இருந்துகொண்டு அவருக்கு வேண்டிய பணிவிடைகளை அவள் செய்துவந்தாள். ஆனால்

நாளுக்குநாள் வியாதி பலமடைந்து வந்தது. சிங்கப்பூரிலிருந்த ராமதாஸுடைய சிநேகிதர் ஒருவர், ராமச்சந்திருடைய நிலைமையைப் பற்றி ராமதாஸுக்குக் கடிதம் எழுதவே, ராமதாஸ் தம்முடைய மாப்பிள்ளை யிருக்குமிடமாகிய சிங்கப்பூருக்கு வந்து சேர்ந்தார். ராமச்சந்திரருக்கு வியாதிகண்டு ஒருமாத மானவுடனேயே ராமதாஸ் வந்து சேர்ந்துவிட்டார். அவருடைய மனத்திற்கு வருத்தத்தை உண்டுபண்ணுமலிருப்பதற்காக, சரோஜா அவ்விஷயத்தை அவருக்குத் தெரியப்படுத்தாமலிருந்தாள்.

சரோஜாவின் துன்பம்நிரம்பிய முகத்தையும், ராமச்சந்திருடைய நிலைமையையும் கண்டு, ராமதாஸ் அதிக வருத்தமடைந்தார். சரோஜாவும் இரவும்பகலும் சரியானபடி தூங்காததால் இளைத்துப் போயிருந்தாள். ராமதாஸ் தம்முடைய மருமகனை, ஆஸ்பத்திரியில் தனியேகண்டு பேசினார். உடனே தம்முடைய மகளுடன் அவரை இந்தியாவிற்குப் புறப்பட்டு வரும்படிக்கு அவர் எடுத்துரைத்தார். "இது ஒரு நாகரிகமற்ற தேசம். நாம் நமது தாய் நாட்டிற்குத் திரும்பிச் செல்வோம். நம் தேசத்தின் சீதோஷ்ண நிலையும், இடம் மாறுதலும், உமது வியாதியைக் குணப்படுத்தும். மேலும் நம் நாட்டில் சிகிச்சை செய்வதற்குப் பல மனிதர்கள் இருக்கின்றார்கள்" என்று ராமதாஸ் சொன்னார்.

"எனக்குச் சிகிச்சை செய்யச் சரோஜா ஒருத்தியே போதும்" என்றார் ராமச்சந்திரர்.

"சிகிச்சை செய்வதற்குப் போதுமான பயிற்சி அவளுக்கு இல்லை. மேலும் இவ்வாறு இரவும் பகலும் இடைவிடாமல் சிகிச்சை செய்வதற்கு வேண்டிய பலம் அவளுக்கு இல்லை. இப்பொழுதே அவள் இளைத்துப் போய்விட்டாளென்பது உமக்குத் தெரியவில்லையா?"

"நான் இந்தியாவை வெறுக்கிறேன். கௌரவமாக என்னுடைய வாழ்க்கையை நடத்துவதற்குத் தகுதியான உத்தியோகம் எனக்கு அவ்விடத்தில் கிடைக்க வில்லையே. நாம் மிகவும் சாதாரண மனிதர்களைப் போலத்தான் அவ்விடத்தில் வாழவேண்டும். உத்தியோக வேட்டை நம்முடைய தேசத்தில் மிகவும் மும்மரமாக நடந்து வருகின்றது. நானும், சரோஜாவும் இவ்விடத்தில் ராஜ போகத்துடன் சந்தோஷமாக வாழ்ந்துவந்தோம். மறுபடியும் இந்தியாவிற்குத் திரும்பிவர எனக்கு இஷ்டமில்லை. இவ்விடத்தில் கைதேர்ந்த வைத்தியர்கள் இருக்கின்றனர். சிகிச்சைக்கு யாதொரு

குறைவும் இல்லை. எனக்கு இவ்விடத்தில் எந்த விதத்திலும் குறைவு இல்லை. சிகிச்சை செய்வதற்குப் பலர் தயாராக இருப்பினும், எனக்கு என்னவோ சரோஜா தான் சிகிச்சை செய்யவேண்டுமென்று தோன்றுகிறது. தங்களை யார் இவ்விடத்திற்கு வரும்படி எழுதினார்கள்? தாங்கள் ஏன் இங்கே வந்தீர்கள்? தாங்கள் உடனே திரும்பி இந்தியாவிற்குச் செல்லுங்கள். நான் இப்போது இந்தியாவுச்கு வரமாட்டேன். கையில் பலஆயிர ரூபாய்களைச் சேர்த்து வைத்துக் கொண்டபிறகுதான் நான் இந்தியாவிற்கு வருவதாக உத்தேசம். இப்பொழுதோ நான் கொஞ்சம்கூட சேர்த்து வைக்கவில்லை. நான் இப்போது வந்தால் ஜனங்கள் என்னைக் கண்டு பரிகாசம் செய்வார்கள். 'சிங்கப்பூருக்குச்சென்று நான்கு வருஷகாலம் உத்தியோகம் செய்துவிட்டுத் திரும்பிவரக் கூடக் கையில் காசில்லாமல், மாமனாருக்கு எழுதிக் கூட்டிக் கொண்டு வரும்படிச் செய்திருக்கிறான்' என்று எல்லோரும் ஏளனம் செய்வார்கள்."

"அசட்டுத்தனமாகப் பேசாதீர். உடனே இந்தியாவிற்குத் திரும்பி வாருங்கள்."

"நான் வரவேமாட்டேன்."

"அப்படியானால் நான் சரோஜாவை என்னுடன் கூட்டிக் கொண்டு போகிறேன். அவள் இவ்விடத்தில் வீட்டில் தனியாக இருந்துகொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கமுடியாது."

தங்களை இங்கேவந்து இந்தியாவுக்குக் கூட்டிக்கொண்டு போகும்படி, சரோஜாவா தங்களுக்குக் கடிதம் எழுதினாள்?" என்று மெதுவாக அதிககோபத்துடன் ராமச்சந்திரர் கேட்டார்.

"இல்லை, என்னுடைய சிநேகிதர் ஒருவர் எனக்கு இவ்விஷயத்தை அறிவித்தார்."

"நல்லது என்னுடைய அருமை சரோஜா அந்தமாதிரி செய்யமாட்டாளென்று எனக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது தாங்கள் இந்தியாவிற்குத் திரும்பிச் செல்லுங்கள். வேண்டுமானால், தங்களுக்கு இவ்விஷயத்தை அறிவித்த சிநேகிதரையும் தங்களுடன் கூட்டிச் செல்லுங்கள். என்னையும் சரோஜாவையும் இவ்விடத்திலேயே விட்டுச் செல்லுங்கள்."

"அது முடியவே முடியாது. நான் சரோஜாவை என்னுடன் கூட்டிக்கொண்டுதான் போகப்போகிறேன். நீர் உம்முடைய நன்மையைக் கவனியாமல் போனாலும் நான் என்னுடைய குமாரியின் நன்மையையாவது கவனிக்கவேண்டாமா?"

"தாங்கள் தங்களுடைய வேலையைக் கவனியுங்கள். சரோஜாவிற்கு எது நன்மையாக இருக்குமென்பது எனக்குத் தெரியும்."

"தங்களுக்குத் தெரியாது. தங்களுக்குத் தெரிந்திருந்த போதிலும், தங்களுடைய சுயநலத்தையே தாங்கள் பெரிதாக எண்ணிக்கொள்கிறீர்கள். என் மகளுடைய சௌக்கியத்தைக் குறித்தாவது, தேக ஸ்திதியைக் குறித்தாவது தாங்கள் கவலைப் படுவதேயில்லை."

"தாங்கள் என்ன தைரியத்துடன் அவ்வாறு சொல்கிறீர்கள்? தங்களுக்கு அவ்வளவு துணிச்சலா? சௌக்கியமாக வாழ்ந்து வருபவர்களுடைய குடியைக் கெடுக்கும் பாவியாகத் தாங்கள் தோன்றியிருக்கிறீர்கள். தாங்கள் சந்தோஷத்தைக் கெடுத்துத் துக்கத்தை உண்டுபண்ணுகிறீர்கள். தாங்கள் ஏன் இந்தியாவிலேயே இருந்திருக்கக்கூடாது? தாங்கள் ஏன் இவ்விடத்திற்கு வந்தீர்கள்? என்னுடைய மனைவியின் நல்லமனத்தைக் கெடுத்து, அவளுக்கும் எனக்கும் பகைமையை உண்டாக்கவா தாங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள்? என்னை இந்நிலைமையில் தனியே விட்டு விட்டுப் பிரிந்துபோகும்படி அவளுக்கு உபதேசம் செய்யவா தாங்கள் இங்கே வந்தீர்கள்?"

"ஏன் இவ்வாறு கோபத்துடன் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று சொல்லிக்கொண்டே, தன்கணவனுடைய ஆகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, சரோஜா அந்த அறைக்குள் வந்தாள். "என்னைத் தனியே விட்டுவிட்டு, உன்னைத் தம்முடன் இந்தியாவிற்கு வரும்படி, உன் தகப்பனார் சொல்லுகிறார்" என்றார் ராமச்சந்திரர்.

"அவர் ஏதோ பிதற்றுகிறார். சுத்தப்பொய். அவருக்கு உடம்பு குணமாகும்வரையில், உன்னையும் அவரையும் இந்தியாவிற்குக் கூட்டிக்கொண்டு போகலாமென்று நான் நினைத்தேன். அவர் ஒரே பிடிவாதமாக இந்தியாவிற்கு வரமாட்டேன் என்கிறார். பிறகு நான் உன்னையாவது கூட்டிப்போகிறேன் என்று சொன்னேன். நீ இவ்விடத்தில் தனிமையாக, மனவருத்தத்துடன் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதனால், உன்னுடைய தேக சௌக்கியத்திற்கும் கெடுதல் உண்டாகும். உன்னுடைய தேக சௌக்கியமும் கெட்டுப் போகாமலிருப்பதற்காக நான் அவ்வாறு கூறினேன். உன்னுடைய மனோ வியாகூலமும் ஒருவாறு நீங்கும்" என்றார் ராமதாஸ்.

"என்தந்தையே, என்னுடைய கணவருக்கு அருகிலே இருப்பதனால் எனக்கு உண்டாகும் சந்தோஷத்தைப்பற்றிய ஞாபகமே

தங்களுக்கு இல்லாமற் போய்விட்டதா? ஒருமனைவி எப்பொழுதும் அவளுடைய கணவரிடத்தில்தானிருக்கவேண்டும். அதுவும் கணவருக்குக் கஷ்டம் நேரிட்டகாலத்து, அவள் அவசியம் அருகிலிருந்தே தீரவேண்டும். ஆகவே என்னைமாத்திரம் தனியாக இந்தியாவிற்குக் கூட்டிப்போவது என்னும் எண்ணத்தை அறவே ஒழித்து விடுங்கள்.''

"என்கண்ணே, நீ சொல்வதெல்லாம் போற்றத்தக்க உன்னதமான கொள்கைகள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் உண்மையில், நீ மிகவும் இளைத்திருக்கிறாய். உன்தேகத்தைக் குணப்படுத்திக் கொள்ள, நீ இத்தேசத்தைவிட்டு இந்தியாவிற்குச் செல்லுதல் மேல். அந்த மாறுதல் உனக்கு நல்லது'' என்றார் இராமச்சந்திரர்.

"அப்படியானால் நாமிருவரும் செல்வோம்.''

"இந்தநிலைமையில் நான் இந்தியாவிற்கு வரமாட்டேன்'' என்று ராமச்சந்திரர் சொன்னார்.

"அவருடைய பிடிவாதத்தைப் பார்த்தாயா!'' என்று ராமதாஸ் சொன்னார்.

"அடே, துரோகசிந்தை வாய்ந்தவனே, உன்னை நான் வெறுக்கிறேன்'' என்று ஈன சுவரத்துடன் இராமச்சந்திரர் கூறினார். அவருக்கு அதிக கோபமுண்டானதால், அவருடைய தேகம் மிக்க பலஹீனமான நிலைமையை அடைந்துவிட்டது. மறுபடியும் இந்தியாவிற்குப் போகும் விஷயத்தைக் குறித்துப் பேசக்கூடாதென்று சரோஜா கண்டிப்பாக ராமதாஸிடம் கூறினாள். "அப்படியானால் நான் இவ்வளவு பணத்தைச் செலவுசெய்துகொண்டு இங்கு வந்திருக்கவேண்டியதே இல்லையே'' என்று ராமதாஸ் சொன்னார். "ஏன்? வந்தீர்கள்?'' என்றாள் சரோஜா.

இன்னும் இரண்டுவாரங்கள் அவ்விடத்திலேயே இருந்துகொண்டு, எவ்வாறாவது சரோஜாவைத் தம்முடன் கூட்டிக் கொண்டு செல்லவேண்டுமென்று எண்ணிக்கொண்டு ராமதாஸ் அவ்விடத்திலேயே தங்கினார். எப்படியாவது ராமதாஸ் தம்முடைய மனைவியின் சுபாவத்தை மாற்றிவிடுவார் என்று சதா ராமச்சந்திரர் கவலைகொண்டிருந்தார். அவருடைய மனத்திற்குச் சமாதானம் இல்லாமல் போகவே, அவருடைய வியாதி அதிகமாயிற்று. நாளுக்குநாள் அவர் பலஹீனமடைந்து வந்தார்.

ராமதாஸ் அவ்விடத்தையடைந்து பதின்மூன்று தினங்கள் கழிந்த பின்னர், இராமச்சந்திரருடைய நிலைமை கலைக்கிடமாகியது. அவருடைய மரணம் சமீபித்துவிட்டதென்று, அவருக்குச் சிகிச்சை செய்துகொண்டிருந்த வைத்தியர்கள் கூறினார்கள். இரண்டுநாட்கள் கழித்துச் செல்ல விருந்த ஒரு கப்பலில் இந்தியாவிற்குச் செல்வதென்று தீர்மானித்திருந்த ராமதாஸ், அச்செய்தியைக் கேட்டதும் தம்முடைய பிரயாணத்தை நிறுத்திவிட்டார். அவரும் அவ்விடத்திலேயே இருந்தார்.

"மாமிசம் தின்னும் கழுகு, எவ்வாறு எருமைக்கடாவின் மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்குமோ, அவ்வாறு இவர் என்னுடைய மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டு காத்துக் கொண்டிருக்கிறார்" என்று ராமச்சந்திரர் சரோஜா தம்மைப் பார்க்கவந்தவுடன், அவளிடம் சொன்னார்.

"என்னுடைய அன்பிற்குகந்தவரே, அவ்வாறு சொல்லாதீர்கள். தாங்கள் இன்னும் அநேக வருஷங்கள் உயிருடனிருப்பீர்கள்" என்று அவள் சொன்னாள்.

"எனக்கு அத்தகைய வீண் எண்ணங்களின்மீது நம்பிக்கையில்லை. கண்டிப்பாக நான் இன்னும் ஒருவாரத்தில் இறந்துபோய் விடுவேன். நானும் ஒரு டாக்டரானதால் எனக்கு அது நன்றாகத் தெரியும்" என்று சொல்லிவிட்டு, கண்டோர் பரிதபிக்கும்படி ஓயாமல் அவர் இருமினார். அவருடைய வாயிலிருந்து இரத்தம் வெளியே வந்தது. சரோஜா ஓயாமல் அழத்தொடங்கினாள்.

"என்கண்ணே, நீ அழாதே. நம்முடைய வாழ்க்கையைக் கண்டு பொறாமை கொண்டுள்ள கிரகங்கள், இந்த வியாதியையும் ராமதாஸையும் என்னிடம் அனுப்பியிருக்கின்றார்கள்" என்று இருமல் நின்றவுடன் அவர் கூறினார்.

அந்தவாரம் முழுவதும் சரோஜா அதிக மனவருத்தப்பட்டாள். அவளுடைய மனக்கிலேசம் எடுத்துரைக்க முடியாததாயிருந்தது. அவளுடைய கணவரது தேகநிலையோ நாளுக்கு நாள் கேவலமான ஸ்திதியையே அடைந்து தாம் இறப்பது நிச்சயம் என்று டாக்டர்கள் கூறிய பத்துத் தினங்களுக்கெல்லாம், ராமச்சந்திரர் உயிர் துறந்தார்.

(தொடரும்.)

கர்நூல் யாத்திரை

'ஸ்ரீரங்கன்'

பகல் பன்னிரண்டு மணிக்கு நாங்கள் மயிலாப்பூரிலிருந்து புறப்பட்டோம். நான், பிரியம்வதை, இந்திரா, டிரைவர், 'சிவப்புமின்னல்', பெட்டிகள், படுக்கைகள். எல்லோரையும் சேர்த்தே இங்கே நாங்களென்று குறிப்பிடுகிறேன். ஒரே ஒரு பெட்டியுடன் வருவதாகப் பிரியம்வதை வாக்களித்திருந்தாள். ஆனால் புறப்படும் சமயம் மற்றொரு பெட்டி, மற்றொரு சின்னப் பெட்டி, சின்ன மற்றொரு பெட்டி, ஒரு குட்டிப் பெட்டி எல்லாம் எவ்விதமாகவோ சேர்ந்துவிட்டன.

எங்களில் 'சிவப்பு மின்னல்' தான் முக்கியம். அதனால் தான் நாங்கள் யாத்திரைசெய்யமுடிந்தது.

சாதாரணமாக, காலத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு 'ராமா', 'கிருஷ்ணா' என்று நாமகரணம் செய்து அப் பெயர்களைக் கொண்டு அழைப்பார்கள். சிறிது நாட்சென்று பிறக் கும் பிள்ளையை அதன் சொந்தப் பெயரால் அழைக்காமல் 'ராஜா மணி' என்பார்கள். அந்தக்குழந்தை மிக அருமை. அதுபோலவே எங்களுக்கும் எங்கள் 'மின்னல்' மிக அருமை. சிலர் தங்கள் வண்டியைக் கர்நாடகமாக—'மோட்டார்கார்', 'மோட்டார்', 'கார்' என்பது போல எங்கள் 'மின்னலை' நாங்கள் கண்டபடி குறிப்பிடமாட்டோம் 'மின்னல்' என்றாவது 'சிவப்பு மின்னல்' என்றாவது தான் சொல்லுவோம். "மின்னலை அலம்பியாய்விட் டதா?", "மின்னலுக்குப் பெட்ரோல் போதுமா?", "மின்னலுக்குப் புது உறை போட்டாய்விட்டதா?" என்று தினமும் கவலையுடன் கேள்விகள் உண்டாகும்.

பிரியம்வதை என்னுடன் எப்போதும் பிரியமாகவே பேசிக்கொண்டிருப்பதாகச் சொல்லும் மாதரசி. இந்திராவைக் 'குள்ள பாஸ்கர்' என்று சொன்னால் அவளுக்குக் கோபம் வந்து விடும். அவளுக்கு வயது 14. ஆனால் அவளுடைய அபிப்பிராயத் தில் அவளுக்கு வயது 41. இந்த அபிப்பிராயத்தை அநுஸரித்தே அவள் எல்லாரையும் மிரட்டிக்கொண்டே இருப்பாள்.

டிரைவர் தமிழனல்ல. அவனுக்குத் தமிழும் தெரியாது, வழி யும் தெரியாது. எது சொன்னாலும் "அச்சா சாப்" என்பான். ஒரு சமயம் மின்னலின் டயரை மாற்ற நேரிட்டால் உதவிசெய் வதற்காக அவனையும் அழைத்துச் சென்றோம். சில்லரை ஸாமான் களையும், டிரைவரையும் பின் ஆஸனத்தில் அடைத்துவிட்டு நாங் கள் முன்னால் உட்கார்ந்தோம். பிரியம்வதைக்கும், இந்திராவுக்கும் வண்டியோட்டத் தெரியாது. அதனால் அவர்களுக்கு ஒரு ஸௌகரி யம் இருந்தது. எப்போதாகிலும் வழிதவறினால் அது வண்டி யோட்டிய என்னுடைய குற்றம். ஆனால் சாமர்த்தியசாலிகளான அவ்விருவர்களும் கூடவந்ததனால்தான் சரியாக ஊர்வந்து சேர்ந் தோம் என்ற கீர்த்தி அவர்களுக்கு.

இந்த ரஸ்தாவில் வழிதப்பி அதிகதூரம் போகச் சந்தர்ப்ப மில்லை. சரியான மார்க்கத்தில் மாத்திரமே மைல் கற்களும் போய்ச் சேரவேண்டிய ஊரின்பெயர் எழுதிய கைகாட்டி மரங்களும் இருக் கின்றன. ஆகையால் தவறான வழியில் சென்றால் சிறிது தூரம் கடந்ததும் இவைகளொன்றையும் காணாவிடில் நமது தவறு சீக்கிரம் தெரிந்து விடுகிறது. சில இடங்களில் கைகாட்டி மரங்கள் தம் கைகளை எல்லாம் இழந்துவிட்டு எல்லாரஸ்தாக்களையும் பட்ச பாதமில்லாமல் பார்த்துக் கொண்டு ஒன்றும் சொல்லாமல் வெறும் ஸ்தம்பங்களாய் நிற்பதால் ஒவ்வொரு சமயம் சந்தேகம் ஏற்பட்டு விடுகிறது. அந்த நிலைமையில் நானாகச் சரியான மார்க்கத்தைத் தெரிந்து அதில் போவதாக இருக்கும் தருணத்தில், பிரியம் வதையும் இந்திராவும் "அதுதான் சரியான ரஸ்தா" என்று அதையே சுட்டிக்காண்பித்துக் கண்டிப்பாகச் சொல்லுவார்கள். உடனே புருஷனுடைய சுயமரியாதையைக் காப்பாற்றுவதற்காகி லும் நான் வேறொரு மார்க்கமாக வண்டியை விடவேண்டியிருக் கிறது. கடைசியில் அது தவறானவழியாக முடிகிறது. பக்கத்தில் புத்திமதி சொல்ல ஒருவரும் இல்லாவிடில் இவ்விதமான தவறே ஏற்படாது.

பூந்தமல்லி ஹைரோட்டில் நொடி அதிகமென்று பலர் சொன்னதால் மவுண்ட்ரோட் மார்க்கமாகச் சென்றோம். இந்த வழியில் அநேக கண்டிராக்ட்காரர்கள் போட்டியின் பேரில் வேலைசெய்திருக்கிறார்கள். ரோட்டை விதம் விதமாக இங்கே காணலாம். சம மட்டமாகச் செப்பனிடப்பட்டு அவைகள் எல் லாம் நிரம்ப நன்றாக இருக்கின்றன. இவ்விடத்தில் மோட்டார்கள்

மணிக்கு நாற்பது மைல் சுலபமாகப் போகக் கூடும். மார்மலாங்க் பிரிட்ஜ் (*Marmalong Bridge* மாம்பலப் பாலம்) என்னும் புராதனப் பாலம் ஒன்று வழியிலிருக்கிறது. அதன்மேல் மாத்திரம் அதிக வேகமாகச் செல்லக்கூடாதென்பது அதிகாரிகளின் உத்தரவு. அப்பாலத்தின் ஆரம்பத்திலிருக்கும் ஒரு சதுர ஸ்தூபத்தில் அதன் சரித்திரம் லத்தீன் (*Latin*) பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. 1786-ம் வருஷத்தில் ஓர் அரண்மனைக்காரன் (*Armenian*) தர்மத்திற்கு இந்தப்பாலத்தைக் கட்டினதாகக் கண்டிருக்கிறது. மெல்லெனப்போகும் கட்டைவண்டிகளைச் சுமப்பதற்காக அவனால் கட்டப்பட்டபாலம் தன்னுடைய 150-வது வயதில் மோட்டார்களையும் பஸ்களையும் தாங்குகிறதே! இந்நாளில் கட்டப்படும் பாலங்கள் எத்தனை வருஷங்கள் தாங்கி நிற்கும்?

பறங்கி மலையை அடுத்தவுடன் அம்மலையைச் சுற்றிக்கொண்டு செங்கல்பட்டுக்குப் போகும் ரஸ்தாவில் போகாமல் வலதுபக்கமாகத் திரும்பி நேரே மலையடிவாரத்திற்கே சென்று அங்கிருந்து வலதுபக்கம் பிரியும் பெங்களூர் மார்க்கமாகச் சென்றோம். இதுவே எங்கள் வழி. தாரடித்த ரஸ்தாவின் ஸுகம் இத்துடன் தீர்ந்து விட்டது. அதற்குமேல் பாதை நன்றாக இருந்தபோதிலும் புழுதி அதிகம். முன் பக்கத்திலுட்கார்ந்திருப்பவர்மேல் தூசி படாவிட்டாலும் பின்பக்கமிருப்பவர்க்குக் கொஞ்சம் கொஞ்சம் புழுதிபடிந்தது வண்டியின் . பின்னால் கட்டப்பட்டிருக்கும் சாமான்களுக்கு விசேஷமாகப் புழுதி இருந்தது. பெட்டியின் சந்து பொந்துகளில் எவ்விதமாகவோ தொழில்வரி போடுகிறவனைப் போல் நுழைந்து தூசி உள்ளே அடைந்து விடும். வண்டிக்குப் பின்னால் வருபவர்களின் கதியைச் சொல்லவேண்டியதில்லை.

புஷ்பகவல்லி என்னும் பூவிருந்தமல்லி, பூந்தமல்லி என்றும் இங்கிலீஷில் பூனமல்லி என்றும் மாறுபாடடைந்திருக்கிறது. இதற்கு அடுத்தபடி பெயர் எவ்விதம் மாறுமோ! நகைகளைப்போல் பெயர்களும் தேயத்தேய அழகு குறைகின்றன.

கொஞ்சதூரம் சென்ற பிறகு ஸ்ரீராமானுஜாசாரியரின் பிறப்பிடமாகிய ஸ்ரீபெரும்புதூர் கடந்தோம். அதன் முக்கிய தெருவில் அதிகம் மோட்டார்வண்டிகள் போகும். நவீன சம்பிரதாயத்தை அநுஸரித்து அந்தத் தெருவில் பாடசாலை ஒன்றன் வாசலில் “ஸான்ஸ்கிரிட் காலேஜ்” என்று இங்கிலீஷில் தோரணையாக எழுதித் தொங்கவிட்டிருப்பதைப் பார்த்தோம்.

வாலாஜாபேட்டை! வாலாஜாபேட்டையின் நவாப்பின் ஹிந்துமந்திரி தீர்க்காலோசனையின்பேரில் பதினெட்டுப்பேட்டைகளடங்கிய இவ்வூரை நிர்மாணித்தான். அவன் எண்ணப்படியே இவ்வூர் சென்னப் பட்டணம், மைசூர், ராயல சீமைமுதலிய நாடுகளுக்கு மத்தியஸ்தலமாக இருந்து ஒரு நாட்டில் உண்டாகும் சரக்கை மற்ெருரு நாட்டிற்கு விற்று வெகு விரைவில் ஒரு பெரிய வியாபாரஸ்தலமாயிற்று. வாலாஜாபேட்டையிலுள்ள வியாபாரிகளின் பணத்தை அபேட்சித்துப் பல இடங்களிலும் வியவசாயமும் கைத்தொழிலும் விருத்தியடைந்தன. கம்பெனிக்காரர்கள் வந்தார்கள். பின்னேடு இருப்புப் பாதையும் வந்தது. வாலாஜாபேட்டையின் உதவியில்லாமலேயே ஒரு நாட்டின் சரக்கு மற்ெருரு நாட்டிற்கு நேராகச் செல்ல முடிந்தது. பணமெல்லாம் கம்பெனிக்காரர்களுக்குச் சேரலாயிற்று. நாட்டின் வியாபாரத்தை முன்னுக்குக் கொண்டுவந்த வாலாஜாபேட்டை, இப்போது அதன் பலனை அனுபவிக்க முடியவில்லை. இவ்வூரின் அவசியம் போகவே, அதன் ஐச்வர்யம் அந்தஸ்து எல்லாம் குன்றி விட்டன.

"இதைப்பார்க்கும் சமயம் எனக்கு நம் ஹிந்து முன்னேர்களின் நிலைமைஞாபகம் வருகிறது. வெகு ஆதரவுடன் பிள்ளையைப் படிக்கவைத்து முன்னுக்குக் கொண்டுவந்து விடுகிருர்கள். என்னுடையபிள்ளை இந்த உத்தியோகஸ்தன் என்று பெருமைசொல்லுகிற சமயத்தில் அவனுக்கு மனைவி ஏற்படுகிருள். பிள்ளை தன்கிழத் தகப்பனரைவிட்டு மனைவிக்குத் திருப்தி யளிப்பதே மேன்மை என்று எண்ணிவிடுகிருன். அவனுடைய, அந்தஸ்து, அன்பு, தனம் எல்லாம் அவன் மனைவிக்கே சேருகின்றன" என்றேன்.

"ஆமாம், அதிசயந்தான்!" என்ருள் பிரியம்வதை. "எவ்வளவோ அருமையுடன் தாயார் வளர்த்தபெண்களெல்லாம் பிறந்த வீட்டை முற்றிலும் மறந்துவிட்டுத் தங்கள் கணவர்களே கதியென்று இருப்பது மட்டும் சரியோ!"

"அவ்விதம் உதாரணத்திற்காகிலும் ஒரு ஸ்திரீ ஏற்பட்ட பிறகு அதைப்பற்றி நாம் கவலைப்படலாம்" என்று நான் சொன்னேன்.

இதற்கு அடுத்த ஊர் ராணிப்பேட்டை. ராணி யார் தெரியுமா? "கறகறவென்று சுழன்று வருகிறது தேசிங்கு ராஜன் குதிரை" என்று நாம் சிறு வயதில் படித்த தேசிங்கு ராஜனின் பட்டமகிஷி. அந்தச் செஞ்சிக்கோட்டைத் தேசிங்குராஜன் இறந்த

வுடன் அவன் ராணி உடன்கட்டை ஏறினள். அச்செய்கையால் அவன் எதிரியாகிய நவாப்பிற்கும் மனம் உருகவே, அப்பட்ட மகிஷியின் பெயர் எந்நாளும் விளங்கும் பொருட்டு இவ்வூரை உண்டாக்கினன்.

"இக்காலத்தில் எந்த ராணி உடன் கட்டை ஏறுவாள்?"

"இக்காலத்தில் தேசிங்குராஜன் மாதிரி எந்த ராஜா உண்டு?"

முதல் வாக்கியம் யார் சொன்னதென்றும் இரண்டாவது வாக்கியம் யார் சொன்னதென்றும் நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள்.

பெண்ணையாற்றுக்குப் பாலம் கிடையாது. அனேகமாய் அதில் ஜலமும் கிடையாது. அதில் போட்டிருக்கும் கல் பாதையின் வழியாக நதியைத் தாண்டினேம். இனி இங்கே ரஸ்தா நன்ருக இருப்பதால் வேகமாகச் செல்லக்கூடும்.

மாலை சுமார் மூன்று மணிக்குச் சித்தூர் வந்துசேர்ந்துவிட்டோம். பெங்களூர் செல்லும் ரஸ்தா இங்கே இடது பக்கமாக (மேற்கே) பிரிந்து செல்லுகிறது. நாங்கள் அவ்வழியே சென்றேம். அதன் மேல் பல்லமனேரி (*Palmaner*) வந்து சேருவதற்குச் சிறிது முன்னல் அந்த ரஸ்தாவைவிட்டு வலதுகைப் பக்கம் (வடக்கே) பிரியும் ரஸ்தாவில் திரும்பினேம். பல்லமனேரிக்குப் போகவேண்டுமென்று எங்களுக்கு மிகவும் விருப்பம். நீலகிரி கண்டு பிடிக்கப்பட்டு மலைகளிலிருக்கும் வாசஸ்தலங்களுக்குள் அதுவே ராணி யென்று பட்டாபிஷேகம் செய்யப்படுவதற்கு முன் குளிர்ச்சியைச் சுலபமாக அனுபவிக்க வேணுமென்ருல் பல்லமனேரிக்குத்தான் போவது வழக்கம். ஆனல் வழியைவிட்டு அங்கே சென்ருல் நேரம் அதிகமாய் விடுமென்று நாங்கள் அங்கே செல்லவில்லை.

இங்கேதான் காட்ரோட்டு (*Ghat Road*) மலையைத் தாண்டுமிடம். ரோட்டு நன்ருக இருந்தது. ஏறும் சிரமம் எங்களுக்கு இல்லை. 'மின்னலே' எல்லாவற்றையும் வகித்தாள். ஆகையால் ஒவ்வோர் ஏற்றத்தின் போதும் இனிமேல்தான் பெரியமலை வரப் போகிறதென்று சொல்லிக்கொண்டே இருந்தோம். ரோட்டு இறக்கம் காண்பித்த பின்பே மலைகளைத் தாண்டியாய்விட்டதென்று தெரியவந்தது. அப்போது வண்டியை நிறுத்தினேன். பெட்ரோல் நிறைய இருந்தது. என்ஜின் எண்ணெயும் இந்த 120 மைல்களுக்குள் குறைந்திருக்காதென்பது என் அபிப்பிராயம். இருந்தும் எண்ணெயின் முகாந்தரமாக வண்டியை நிறுத்திச்

சிறிது அமிர்த பானம் செய்யலாமென்பது என் அந்தரங்க எண்ணம். அமிர்தபானமென்ருல் என்னவென்று தெரியுமா? வாயகன்ற ஜாடியில் காலையில் பாலை ஊற்றிப்பிறைகுத்தி மோட்டாரில்வைத்து விடவேண்டும். 12 மணிவெயிலில் ஊரைவிட்டுப் புறப்பட்டு 120 மைல்கள் ஒரேமூச்சில் வந்தபின் வெயில் இறங்கும் வேளையில் வண்டியை நிறுத்தி ஜாடியை எடுத்துப்பார்த்தால் பால் தித்திப்புத் தயிராகத் தோய்ந்து இருப்பது தவிர்த்து, வண்டியின்மெல்லிய ஆட்டத்தால் தயிர் தனக்குத் தானே கடையப்பட்டு வெண்ணெய் ததும்பி யிருக்கும். அதைப்பருகிஞல் அமிர்தம் போலிருக்கும். இவ்விதம் சுகத்தை அனுபவிப்பதற்காகவே ஸ்ரீகிருஷ்ண பகவான் தோய்ந்தபாலை தம்முடைய தேரில் வைத்து, அதிக தூரம் சென்ற பின் அந்த அமிர்தத் தயிருடன் வாசனைத்திரவியங்களைச் சேர்த்து அடிக்கடி பருகிஞராம். அவ்விதத்தயிருக்கு "ரஸாலா" என்று பெயரிட்டாராம். புராணத்தில் சொல்லப்பட்டிருக்கும் இந்தக் கதையை வாசித்ததாக என் நண்பர்களிலொருவருக்கு நன்ருக ஞாபக மிருக்கிறது. இக்கதையை நான் இப்போது முற்றிலும் நம்புகிறேன். அமிர்தபானம் செய்தபிறகு என் மனச்சாட்சி என்னை உறுத்தியது. என்ஜின் எண்ணெயைப் பார்ப்பதற்காக நின்றதால் அதைப் பார்க்கவேண்டியதவசியம் என்ற எண்ணமுண்டாயிற்று. அவ்விதமே எண்ணெயை நோக்கினேன். ஆயிரம் மைல்கள் சென்றிருந்தால் எவ்வளவு குறைந்திருக்குமோ அவ்வளவு குறைந்திருந்தது! அதற்குக்காரணம் அதிகவேகமாக வந்ததென்பது பிற்பாடு தெரிய வந்தது.

மாலை 5 மணி சுமாருக்கு மதனப்பள்ளி வந்துசேர்ந்தோம். சென்னையிலிருந்து 155 மைல்). இன்னும் வெளிச்சம் இருந்ததைக் கண்டபோது பல்லமனேரிக்கும் போயிருக்கலாமே என்று மனத்தில் குறைவாக இருந்தது. இருந்தும் மதனப்பள்ளியும் குளிர்ச்சியாகவே இருந்ததால் மனத்தைத் தேற்றிக்கொண்டு முசாபரி பங்களா (*Traveller'sBungalow*) விற்குச் சென்ருேம். பங்களா அழகான இடத்தில் கட்டப்பட்டு இருக்கிறது. குடும்ப சகிதமாக ஒரு தினம் தங்குவதற்கு வாடகை முக்கால் ரூபாய் மாத்திரம். காம்பவுண்டு பெரியதாகஇருக்கிறது. ஆனல் கட்டிடத்தின் முன்புறம் மோட்டாரை நிறுத்துமிடம் மிகநெருக்கமாகவும் அஸௌகரியமாகவும் இருக்கிறதே என்ற எண்ணம் எங்களுக்கு உண்டாயிற்று. மேலும் சமையலறை வாசற்புறமே ஒருதனிக் கட்டிடமாகக் கட்டப்பட்டிருப்பது அநாகரிகமாகத் தோன்றிற்று. இதன் மர்மம் பிறகுதான் தெரிந்தது. பின்பக்கத்துக் கதவைத்

திறந்து கொண்டு போனபோது அங்கே பெரிய விராந்தாவும் மோட்டார் வந்து தங்கும்படி விசாலமான இடமும் இருக்கக்கண் டோம். மதனப்பள்ளியின் முசாபரி பங்களா வருகிறவர்களுக்கு முதுகைக் காட்டிக்கொண்டிருக்கிற தென்பது அப்போதுதான் தெரியவந்தது. ஆனால் விராந்தாவில் சுகமாக உட்கார்ந்திருக்கும் சமயம் ஊரையும் தெருவையும் பாராமல் இந்தப்புறமிருக்கும் மலைகளையும் விருக்ஷங்களையும் பார்த்து ஆனந்திக்கலாம். அவ்வித உத்தேசத்துடனேயே அது கட்டப்பட்டிருக்கவேண்டும்.

அதி காலையில் எழுந்திருந்தோம். இங்கே மார்கழி மாதத்திய குளிர் நீலகிரியின் சித்திரை மாதத்திய குளிருக்கு ஒப்பிடலாம். தொட்டியில் முதல் நாள் சாயங்காலம் நிரப்பப்பட்டிருந்த தண் ணீரைக் கண்ணால் பார்க்கும் போதே குளிர்நடுக்கிற்று. 'உஷ்ணேன சீதளம்! என்கிற மாதிரி சீதளம் சீதளேன உஷ்ணம். தைரியத் தைக்கைப்பிடித்து ஸ்நானம் செய்து பரபரப்பாகத் தேகத்தைத் துடைத்தபின் குளிர் பறந்து விட்டது.

பங்களாவிலேயே பாலைக்கறந்து கொடுக்குமாறு தோட்டக் காரனிடம் சொல்லவே அவன் மாட்டுக்காரியை அழைத்துவந் தான். ஒரு படி பால் ஐந்தணு விலையென்றாள் அவள். பால் நன்றாக இருந்தது. சென்னையைவிட இந்த இடத்தில் எவ்வளவோ மலி வாகஇருக்கிறதே என்று சொல்லி அவள் கேட்டவிலையைக் கொடுத்து விட்டோம். அது அசட்டுத்தனம். இவ்விதம் கேட்ட தைக்கொடுக்கும் அசடுகளை அவள் கண்டதில்லை போலும். உடனே அவளுடைய வெண்ணெயையும் வாங்குமாறு எங்களை வற்புறுத்தினாள். நாங்கள் துரிதமாக மோட்டாரில் ஏறிப்போகா மலிருந்திருந்தால் அவளுடைய மாட்டையும் கன்றையும் அடுத்த படியாக வாங்கவேண்டியிருக்கும்.

பின்னாலுக்குப் பெட்ரோல் போட்டுக்கொண்டு எட்டு மணிக்கு மதனப்பள்ளியை விட்டுப் புறப்பட்டோம். சென்னையை விட்டுப்போகப்போக நாகரிகக்குறைவு என்பது தெளிவாகக்காணப் பட்டது. சென்னையில் ஒரு ரஸ்தாவில் மாட்டுமந்தையைச் சிறுபை யன் ஒருவன் ஓட்டிக்கொண்டுபோனாலும் மோட்டாரின் ஊதுகுழல் சப்தத்தைக்கேட்டவுடன் எல்லாமாடுகளையும், அவைகள் ஐம்ப தானாலும் நூறானாலும், ஒருமாடுகூட கூட்டத்தை விட்டுப் பிரிந்து நிற்காத விதம் ஒரு புறமாக ஒதுக்கிவிடுவான். இந்தப் பிரதேசங் களில் மோட்டாரைக் கண்டவுடன் மாட்டுக்காரப்பையன் இரைச் சலிட்டும், குச்சியால் அடித்தும், மாடுகளை விரட்டி அவைகளுக்கு ஒரு கிலி உண்டாக்கிப் பாதை முழு அகலத்திற்கும் அவைகளை கூட்டமாகப் பரப்பிவிட்டுத் தான்மட்டிலும் ஒரு பக்கமாகப்

பாய்ந்து ஓடிவிடுவான். அந்த மாடுகளுக்கு வெறி அடங்குகிற வரை நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. வண்டியை நிறுத்திவிட்டு வண்டியின்பேரில் ஏதாகிலும் மாடு ஏறுமலிருக்க வேண்டுமென்று ஸ்வாமியை வேண்டிக்கொள்வதே உத்தமம்.

ஓர் இடத்தில் இடைப்பையன் ஏதோ ஒருவன் கத்திக் கொண்டு, எங்களைத் துரத்திக்கொண்டு வந்தான். அவனுக்குப் பின்னுல் அவன் தகப்பனும் கையை வீசிக்கொண்டு அவனை ஏவினவண்ணம் நின்றிருந்தான். எந்த மாட்டிற்கு என்ன அபாயமோ என்றெண்ணி வண்டியை நிறுத்தினேன். பையன் அருகில் வந்ததும் "தேவரா! பீடி, பீடி" என்று கைநீட்டிக் கெஞ்சினுன். நாகரிகக் குறைவு என்று நினைத்தது தவறு என்று ஏற்பட்டது.

அனந்தப்பூர் (102 மைல் தூரம்) வந்துசேர $11\frac{1}{2}$ மணி யாகி விட்டது. தாமதத்திற்குக்காரணம் மதனப்பள்ளியின் தோசை தான். தன்னுல் மூன்று தோசை சாப்பிடமுடியுமென்று இந்திரா வீரியம் பேசினுள். அதை நம்பி மதனப்பள்ளி ஹோட்டல் காரனெருவனிடம் மூன்று தோசை கொண்டுவரச் சொல்லிவிட்டேன்.



அவ்வூர்த்தோசை வண்டிச்சக்கரம் போலிருக்குமென்று எனக்கு அப்போது தெரியாது. அவைகளை அவன் ஒரு மூட்டையாகக் கட்டிப் பெருமூச்சுடன் கொண்டு வந்து வண்டியில் தொப்பென்று போட்ட பிறகே எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. இந்திரா வழிமுழுதும் தோசைசாப்பிட்டும், நான் அவளுக்குத் துணைபுரிந்தும் ஒரு தோசையில் ஏதோ ஒரு மூலையில் மாத்திரம் பார்சுவக்கிரகணம் மாதிரி குறைந்திருந்தது. மிகுந்திருந்த இரண்டே முக்கால் தோசையின் கனத்தினுலேயே மின்னலுக்குப் பூரணவேகம் பிடிக்கவில்லை. அனந்தப்பூரில் ஒரு மணிநேரம் தங்கிவிட்டுப் புறப்பட்டோம்.

அனந்தப்பூரில் அவல் வாங்காதீர்கள். அனுபவ மூலமாக உணர்ந்த ஞானத்தினுல் நான் உங்களுக்கு அந்தப் புத்திமதியுரைக்கிறேன். தெருவில் ஒரு வீட்டின் ரேழியில் அவல் குத்திக்கொண்

டிருப்பதைப் பிரியம்வதை பார்த்து விட்டு, "இந்தப்பக்கத்து அவல் ரொம்ப உசத்தியாம். கொஞ்சம் வாங்குங்கள்" என்றாள். நான் வண்டியை நிறுத்தி "அவல்", "அவல்" என்று மரியாதையாகத் தமிழில் சொன்னேன். வீட்டுக்காரர்களுக்குப் புரியவில்லை. தெருவில் போய்க்கொண்டிருந்த ஒரு தமிழர் நின்று நான் சொன்னதை அவர்களுக்குத் தெலுங்கில் தர்ஜிமா செய்தார். அப்போதும் அவர்களுக்குப் புரியவில்லை. டிரைவர் "க்யா சாப்" என்று கேட்டான், "அவல்", "அ—வ—ல்", "அவல்" என்று அவனுக்குத் தெளிவாக உரைத்தேன். அவன் அவர்களுடன் ஹிந்துஸ்தானியில் பேசினான். அதன் பலனாக முன் ஒருத்தியாய் நின்று எங்களுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருந்த வீட்டுக்கார அம்மாவிற்குத் துணையாக இன்னும் இரண்டு ஸ்திரீகள் உள்ளிருந்து வந்து மூவருமாக ஒரேசமயத்தில் வேகமாய்ப் பேசினார்கள். தெருவில் கூட்டம் கூடிவிட்டது. இனி மரியாதை பார்ப்பதற்குச்சமயமில்லை. இராஜாங்க விஷயங்களில் மெல்லுவதுபோல் "நேர்ச்செய்கை" (*Direct action*) உபயோகிக்க வேண்டுமென்றெண்ணி, வண்டியை விட்டிறங்கி, கூட்டத்தை விலக்கிக்கொண்டு போய், நேராக உரலுக்குச்சென்று உள்ளேகைவிட்டு ஒரு பிடி எடுத்தேன். நெல்லும் அரிசியுமாக இருந்தது! பாவம்! வீட்டுச் சமையலுக்கு அரிசிகுத்திக்கொண்டிருந்தவர்களை இவ்வளவு சிரமப்படுத்திவிட்டோம்!

"அவர்கள் நம்மைப்பற்றி என்ன எண்ணுவார்களோ!" என்றாள் பிரியம்வதை.

"என்ன எண்ணுவார்கள்! ஒன்று பயித்தியக்காரர்கள்—அல்லது சர்க்காரால் புதிதாக நியமிக்கப்பட்ட உரல் பரீட்சை உத்தியோகஸ்தர்கள் என்றே எண்ணுவார்கள்" என்றேன். கூடியவரை கௌரவத்தைக் காப்பாற்ற முயன்றுகொண்டு கம்பீரமாக அந்தக்கூட்டத்தை விட்டுக்கிளம்பினோம்.

இனி மிகுதியிருப்பது 86 மைல்கள். ரஸ்தாவில் நொடிகிடையாது. ஆனால் வண்டியை ஜாக்கிரதையுடன் செலுத்த வேண்டியிருந்தது. கண்ணுக்கு எட்டும் வரை ஒரு பொட்டுக்கூடஜலமில்லை என்றாலும் கணக்கில்லாமல் காட்டுவாய்க்கால்கள் மாத்திரம் இருந்தன. இப்பிரதேசங்களில் வாய்க்கால்களுக்கும் ஆறுகளுக்கும் மேல் கடந்து செல்வதற்காக உயரமாக அகம்பாவத்துடன் பாலம் கட்டுவது வழக்கமில்லை. வேண்டிய இடங்களில் ரஸ்தாவையே பள்ளமாக்கிவிட்டால் போகவேண்டிய ஜலம் தானாகப் பாதையின் குறுக்கே ஓடிச் சென்று விடும். இதுவே ஏற்பாடு. ஆகையால் ஒரு பர்லாங்கு இரண்டு பர்லாங்கு தூரம் பாதை யோக்கியமாகப்

போகிறதே என்று அதை நம்பிக்கொண்டு வேகமாக வண்டியை விட்டால் திடீரென்று ஒரு பள்ளவாய்க்கால் குறுக்கே இருக்கும். அந்தப்பள்ளத்தில் வண்டி இறங்குகிற வேகத்தில் நம் தேகத்து எலும்புகளெல்லாம் குலுங்கி நொறுங்கிவிடும். இப்பக்கத்துக் கட்டை வண்டிக் காரர்களுக்கோ முழுப்பாதையில் அல்லாமல் பாதையின் ஒரு பாகத்தில் மாத்திரம் தங்கள் வண்டிகளை ஓட்டச் சாமர்த்தியம் கிடையாது. மோட்டார்களின் பேரில் பிரத்தியேக மாக அவர்களுக்குக் கோபமொன்றுமில்லை. அவர்கள் வண்டிகளைச் சந்தித்தாலும் ஒருவர்க்கொருவர் இன்ன விதமாக ஒதுங்குகிற தென்று ஓர் அபிப்பிராயமாகிலும் வழக்கமாகிலும் மேற்கொள்வது கிடையாது. ஒவ்வொரு முறையும் நிதானித்துப் புதிதாக ஆலோசனை செய்தே ஒதுங்கும் யுக்தியைக் கண்டுபிடிப்பார்கள்.

குத்தி (*Gooty*) வந்தோம். அங்கே திப்பு சுல்தான் கட்டிய மலைக்கோட்டையைத் தூரத்திலிருந்தே பார்த்தோம்.

ஒரு குறைவும் இல்லாத மனிதனின் ஜன்மம் பாழ். ஒரு வேளைப்பசி உபத்திரவத்தால் அதைத்தீர்க்க அவன் சம்பாதித்து உண்டானாகில் சந்தோஷப்படுகிறான். அடிக்கடி பசி இல்லாவிடில் "நல்லதாயிற்று" என்று சும்மாயிருக்கிறானா? கிடையாது. வைத்தியர் எங்கே, நிலவேம்புக்கஷாயம் எங்கே என்றுதேடித் தனக்குப் பசியாகிற குறையை உண்டாக்க முயலுகிறான். மதனப்பள்ளியில் குளிர்ச்சியாக இருந்தது. அப்போது கம்பிளிகளாலோ தேக உழைப்பாலோ அக்குளிரைப் போக்கினால் அது ஓர் உற்சாகமாக இருக்கும். இப்போது காற்றில் சிலு சிலுப்பில்லை. மார்கழிமாதத் தியவெயிலும் அதிகமாக உறைக்கவில்லை. வண்டியும் சாவதான மாகப் போய்க்கொண்டிருந்தது. எல்லாம் மத்தியமாகவே இருந்தது. ஒருவருக்கும் ஒன்றிலும் ஸ்வாரஸ்யமில்லை. இந்திராவுக்கு உறக்கம் வரத்தொடங்கிற்று. "ஒருகதை சொல்லு" என்றாள்.

அவள் இன்னும் கதைகேட்கும் வயதைத் தாண்டவில்லை. கதை சொல்லாமல் தப்பித்துக் கொள்ளும் சாமர்த்தியம் எனக்கு இல்லை. "பணம் சம்பாதிக்கும் வழியைப் பற்றி ஒருகதை சொல்லுகிறேன் கேள்" என்றேன்.

"சுமார் தொள்ளாயிரம் வருஷங்களுக்கு முன் சாளுக்கிய வம்சத்தார்கள், இந்தப்பிரதேசங்களில் அரசாண்டு வந்தார்கள். அவர்களில் ஒருவர் துங்கபத்திரைக்கு அக்கரையில் அலம்பூரில் ஒரு கோவில் கட்டினர். இக்காலத்து அரசர்களுக்குக் குதிரைப் பந்தயத்தில் உற்சாகம் இருப்பதுபோல் அந்நாட்களில் அரசர்களுக்குக் கோவில் கட்டுவதில் ஊக்கம் உண்டு. அலம்பூர்

கோவிலுக்காக இந்தப் பிரதேசங்களிலுள்ள மலைகளிலிருந்து கற்களை வெட்டியெடுத்து நூற்றுக்கணக்கான வண்டிகளில் ஏற்றி அக்கரை கொண்டுபோவது வழக்கம். இதைப்பார்த்த ரெட்டி ஒருவனுக்கு ஒருயுக்தி தோன்றிற்று. அவன் ஆடம் ஆடமாக விளக்கெண்ணெயைத் துங்கபத்திரைக்கரையில் வைத்துக்கொண்டு ஒன்றுக்கு நாலாக விலைசொல்லி விற்றான். வண்டிகள் ஆற்று மணலில் இறங்குவதற்குமுன் சக்கரங்களுக்கு எண்ணெய் போட்டால் மாட்டிற்கு வண்டியை இழுப்பது சுலபமாகும். ஆகையால் வண்டிக்காரர்கள் ரெட்டி சொன்ன விலையைக்கொடுத்து எண்ணெயை வாங்கினார்கள். இவ்விதம் ரெட்டி சீக்கிரம் பணக்காரனானான். இதைப்பார்த்த மற்றொரு ரெட்டி அருகில் ஒருவைக்கோல் போர் கட்டினான். வைக்கோலைவாங்கிச்சுட்டு அந்தக் கரியுடன் எண்ணெயைக் கலந்தால் வண்டிக்கு நல்ல மையாகுமென்று அவன் சொன்னான். அவ்விதமே அரசனின் வண்டிக்காரர்கள் அவன் வைக்கோலை வாங்கினார்கள். எல்லா வண்டிகளும் அங்கே தங்கி அவைகளுக்கு மை போடப்படுவது வழக்கமாயிற்று. இவ்விதம் நூற்றுக்கணக்கான வண்டிகளும் வண்டிக்காரர்களும் அவ்விடத்தில் சிறிது நேரம் தங்கவே வண்டிக்காரர்களுக்காகச் சோளத்தட்டும் கடலையும் விற்கும் கடைகள் ஏற்பட்டன. நாளடைவில் அங்கே ஓர் ஊர் ஏற்பட்டு அதற்கு 'மை ஊர்' அதாவது தெலுங்கில் "கந்தனவோலு' என்று பெயரும் ஏற்பட்டது" என்றேன்.

இப்படியெல்லாம் ஓர் ஊர் உண்டாகுமா?" என்று இந்திரா கேட்டாள்.

"என்னை நம்பாவிடினும் உன்கண்களையாவது நம்புவாய் அல்லவா? எதிரேபார்" என்றேன்.

"அது என்ன?"

"அதுதான் கந்தனவோலு."

"அந்தமாதிரிப்பெயரே பூகோள புஸ்தகத்தில் இல்லையே."

"பூவிருந்த மல்லி பூனமல்லி என்றால்' கந்தனவோலு கர்நூலாகாதா?" என்றேன். நாங்கள் கர்நூல் வந்து சேர்ந்து விட்டோம்.

(தொடரும்)

தேவர்களின் ராஜிநாமா

ஸ்ரீ ஜானம்மாள்

ஓரே கூச்சல்! ஒரே குழப்பம்! பிரம்மதேவர்தானா? இவர் ஏன் இப்படி நடுங்கவேண்டும்? இந்தப் பேர்வழிகளெல்லாம் தேவர்களா? ஏன் இவர்கள் காட்டுக்கத்தலாகக் கத்துகிறார்கள்? ஏதோ விஷயம் இருக்கிறது. இது என்ன ஆச்சரியமாக இருக்கிறது! எல்லோரும் ஒருமிக்க ராஜிநாமா செய்கிறார்களாமே! இது என்ன கூத்து? எதற்காக இந்த விர்த்தி? இந்திரன், வருணன், வாயு—இன்னும் யமன் கூட இருக்கிறார்களே. எல்லோருமா ராஜிநாமா செய்யப்போகிறார்கள்? என்ன காரணம்? மனிதர்களாலே தான் இதற்குக் காரணமாமே. இந்த ராஜிநாமாவைச் செய்யும்படி நாங்கள் என்னசெய்து விட்டோம்?

பிரம்மதேவருடைய நான்கு முகங்களும் ஏன் இப்படி இருக்கின்றன? பார்த்தாலே எனக்குத் தலை கிறுகிறுக்கிறது. முப்பது நாற்பதுபேரே கூடியிருக்கிறார்கள். இதிலே ஒருவர் பேசுவது மற்றொருவருக்குக் கேட்கவில்லை. பூலோகத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் எவ்வளவு அமைதியாகக் கூட்டங்களை நடத்துகிறார்கள். தேவர்களே! சற்று நிதானமாகப் பேசுங்கள்; ஒவ்வொருவராகச் சொல்லுங்கள். அவர்களுக்கே இப்படிசெய்யவேண்டுமென்று பட்டுவிட்டாற்போலிருக்கிறது. தனித்தனியே பேச ஆரம்பிக்கிறார்களே. எங்கே, கவனிக்கலாம்.

கூட்டத்தில் முதன் முதலில் பிதாமகர் தம்முடைய குறைபாடுகளைத் தெரிவிக்கலானார். அவர் வைதிகபாஷையில் உச்சஸ்தாயியில் பேசுவதற்கு ஆரம்பித்துவிட்டார்:—

"தேவகணங்களே! என்விஷயத்திற்குத் தனிவிசேஷம் உண்டு. நான் சொல்வதை நீங்கள் கேட்கவேண்டியவர்கள். கேளுங்கள்.

நான் சிருஷ்டியையும் வேத அமைப்பையும் பூர்த்திசெய்துவிட்டு இப்பொழுது ஓய்வாக இருக்கிறேன்"; 'பென்ஷன்' பெற்றுக் கொண்டு ஜீவிக்கிறேன். அந்தோ! எனக்குக் காரியம் ஒன்றுமே இல்லை. சோம்பல்தான் எனக்குக் கிடைத்திருக்கிறது. இப்பொழுது பூலோகத்தில் என்னை நோக்கித் தவம் புரிபவர்களும் வரங்கேட்பவர்களும் இல்லை. தபஸ், எனக்குச் செய்யும்பூஜை, நைவேத்தியங்கள் எல்லாம் நிறுத்தப்பட்டுப் போயின. நான் இப்பொழுது துருப்பிடித்த வஸ்துவாகி விட்டேன்.

"முதல்முதலாக நான் உலகத்தாருக்கு வெளியிட்ட வேதத்தை இந்த மானிடர்கள் தங்கள் தங்கள் மனம்போனவாறே பல பாஷைகளில் மொழிபெயர்த்து வைத்துக்கொண்டு விசாரம்செய்து கொண்டே போகிறார்கள். ஐயோ! அவர்கள் செய்யும் அலங்கோலத்தை ஏன் கேட்கிறீர்கள்? 'வேதத்தில் நிரம்ப விஷயங்கள் இருக்கின்றன; ஆனால் எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கின்றன. தலைகால் தெரியாமல் சிக்கலாகக் கிடக்கின்றன' என்கிறார்கள் சில பேர். வேறே சில பிராக்ஞர்கள், 'இந்தப் பிரம்மதேவன் நமக்கு முதலில் சொல்லிவிட்டு இதை வெளிப்படுத்தியிருந்தால் வரிசைக் கிரமமாக அமைத்துக் கொடுத்திருப்போம். வாசிக்கிறதற்கு எளிதாக இருக்கும்' என்று கூறுகிறார்கள். இன்னும் பலர், 'இது என்ன பிரமாதம்! இன்னும் பெரிதாகவும் தெளிவாகவும் ஒரு வேதத்தை எழுதக்கூடாதோ?' என்று அலக்ஷியமாகப் பேசுகிறார்கள். இவ்வளவு நிந்தைகளையும் கேட்டுக்கொண்டு வாயை மூடிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேன். மனுஷ்யஸ்வபாவம் எனக்குக் கொஞ்சம் தெரியும். அவர்கள் எதையாவது சொன்னால் அதன்படி உறுதியாக முயன்றுசெய்து நிறைவேற்றமாட்டார்கள்; 'சொன்னபடிசெய்வது பெரிதல்ல. புத்தியினால் நன்றாக ஆராய்ந்து எதையும் செய்யவேண்டும்' என்பது அவர்களுடைய கொள்கை. ஆகையால் அவர்கள் பேச்சைக் கேட்டுப் பயமுண்டானாலும் அவர் ஸ்வபாவத்தை நினைந்து சிறிது ஆறுதலுற்றேன். ஆனால் எவ்வளவு நாளைக்கு இப்படி இருக்கமுடியும்? என்றைக்காவது அபாயம் வந்தேதீரும். என்பதவிக்கே மோசம் வந்துவிடும் போலிருக்கிறதே! நான் என் மனஸைத் தைரியப் படுத்திக்கொண்டு அவர்களிடம் ஒருஸமாதானம் சொன்னேன்; "ஏ மனுஷ்ய சிரேஷ்டர்களே! அந்தவேதம் மிகப் பழையகாலத்தில் என்னால் வெளிப்படுத்தப்பட்டது. அக்காலத்தில் பள்ளிக்கூடம், காலேஜ் முதலியவைகள் இல்லை. எல்லோரும் ஞாபகத்தில் எல்லாக்கலைகளையும் சேகரித்து வைத்திருந்தனர். நீங்கள் அதற்கு முன்பே

வந்து ஓரேமாதிரியான சிறந்த படிப்புத்தான் வேண்டுமென்று எடுத்துச்சொல்லியிருந்தால் எனக்கு ஸுலபமாக இருந்திருக்கும். நீங்கள் இவ்வளவுகாலம் கழித்துப் பிறந்தது என்னுடைய துர்ப்பாக்கியவசமே. நான் அடுத்தமுறை பிரம்மபட்டதுக்கு வரும்போது நினைவு இருந்தால், உங்களுடைய விருப்பத்தின்படியே செய்ய ஸித்தனாக இருக்கிறேன்' என்று சொன்னேன்.

"அமரர்களே! என்னுடைய துரதிர்ஷ்டத்தைப் பார்த்தீர்களா? இந்த வேதத்தைத்தான் நான் வெளியிட்டேன். இதைத் தவிர நான் வேறு குற்றத்தைச் செய்யவில்லை. இவ்வளவுதான் என் விருத்தாந்தம்.

"என் அருமைக் குழந்தைகளே! நான்தான் தாத்தா. உங்களுக்கு என்ன வந்துவிட்டது? இப்பொழுது உங்களுக்கு நேர்ந்திருக்கும் துக்கம் என்ன? புராதனமாக இருந்துவரும் உங்கள் உத்தியோகங்களை ஏன் ராஜிநாமா செய்ய நிச்சயித்திருக்கிறீர்கள்?"

பிரம்மதேவர் இப்படிச்சொல்லி நிறுத்தினதுதான் தாமஸம்; உடனே எல்லாத்தேவர்களும் ஆளுக்கொரு பாஷையில் சொல்ல ஆரம்பித்தார்கள்:

"ஓ பகவன்! மனுஷ்யலோகத்தில் ஒருபுதிய அஸுரன் தோன்றி யிருக்கிறான். அவனுக்குள்ள பிரஸித்தி வேறு யாருக்கும் இல்லை. 'ஸயன்ஸ்' என்பது அவன் திருநாமமாம். பழைய காலத்தில் பேசுகிற ஞானத்துக்குமேல் நவீனகாலத்தில் 'விஞ்ஞானம்' வந்திருக்கிறது! 'ஸயன்ஸ்' அசுரனை அந்தப்பேராலும் அழைக்கிறார்கள். அவன் பண்ணுகிற கோரமான காரியங்கள் வாயால்சொல்லி அடங்கா. அவனைப்பார்த்தால் விருத்திராதி அசுரர்களெல்லாம் எவ்வளவோ நல்லவர்களென்று தோன்றும்."

பிரம்மாவினுடைய திருச்செவிகளில் இந்தமுறையீடு புகுந்தது; "வாஸ்தவந்தான்; ஸந்தேகமில்லை" என்று துக்கம் பொருந்திய முகத்தினராய்த் தலையை அசைத்தார். பிறகு தேவகுருவான பிருகஸ்பதி தாடியை உருவிக்கொண்டு எழுந்து பேசத் தொடங்கினார்.

"ஹே பிரும்மன்! இதுவரையில் சத்துருக்களுக்குக்கூட நாங்கள் இவ்வளவு பயப்பட்டது இல்லை. இப்பொழுது மித்திரர்களுடைய தொல்லைதான் அதிகமாக இருக்கிறது. அதனால் நாங்கள் மிகவும் பீதியை அடைந்திருக்கிறோம். இவ்வளவு காலமாக மனுஷ்யர்களுடைய ஹ்ருதயங்களில் வாஸம் செய்தோம். அவர்

களுடைய நம்பிக்கையாகிய பரந்த வெளியிலே ஆட்சிசெய்தோம். ஆனால் இப்பொழுது மனுஷ்யஜாதியினர் இரகசியமாக 'ஸயன்ஸ்' அசுரனுடன் சந்திசெய்துகொண்டு எங்களை அங்கிருந்து துரத்தி விட்டார்கள். அவர்கள் எங்களைத் தங்கள் கபாலத்தில் ஒருமூலையில் ஒதுக்கி வைத்துக் கொள்ளத் தீர்மானித்து விட்டார்கள். அந்த இடத்தில் எத்தனை கரடுமுரடான மேடுபள்ளங்கள் இருக்கின்றன! அங்கே நம்பிக்கையின் மணம் மருந்துக்குக் கூடக்கிடையாது. அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? 'தேவர்களே! பாருங்கள். உங்களுக்கு எல்லையில்லாத விஸ்தாரமான இடத்தை அளித்திருக்கிறோம். அஞ்ஞான இருள் நிறைந்த ஹ்ருதய குகையிலிருந்து வெளிப்பட்டு ஞானோதய ஸ்தலமான சிரசின் சிகரத்தின்மேல் இனி இருக்கப்போகிறீர்கள். உங்களுக்கு அதிர்ஷ்டம் உண்டாகியிருக்கிறது. அந்த இடம் உங்களுக்குப் பிடிக்காவிட்டால் எங்களுடைய விஞ்ஞான வியாக்யானத்திலே தான் இருக்கும்படி நேரிடும். அங்கே இருந்தால் உங்களை எவரும் தள்ளமாட்டார்கள்; ஆகையால் அதைப்பற்றிப் பயப்பட வேண்டாம். மகாவிஷ்ணுவினுடைய மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராகாவதாரம் முதலியவை 'எவல்யூஷன் கொள்கை' (*Theory of Evolution*) என்று பிரசாரம் செய்துகொண்டிருக்கிறோம். பிராணனைக் கொடுத்தாவது உங்களை உத்தாரணம் செய்ய ஸங்கல்பம் செய்து கொண்டிருக்கிறோம்' என்று கூறுகிறார்கள்.

"ஹே பகவன்! மானிடப்பதர்கள் எங்களை ஏளனம் செய்யும் விதத்தைப் பார்த்தீர்களா? இதுவரையில் நாங்கள் சொர்க்கவாஸிகளாக இருந்து வந்தோம். அசுரர்களின் உபத்திரவம் பொறுக்க முடியாமற் போனால் எப்பொழுதாவது ஒருதரம் சொர்க்கத்தை விட்டு வெளியேற நேரிடும். ஆனால் இப்பொழுதோ, கேவலம் மனிதர்கள் எவல்யூஷன் கொள்கைப்படி எங்களை மதிக்கிறது இல்லை. என்னவிந்தை! உங்களைக் காட்டிலும் பூலோகத்திலுள்ளவர்கள் அதிகமாகப் படிக்கவும் எழுதவும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

"ஹே பங்கஜாசன! நீங்கள்தான் எங்களுடையபிதா. அந்த மனுஷ்யர்களிடமிருந்த எங்களை எப்படி காப்பாற்றுவீர்களோ, அது எங்களுக்குத் தெரியாது. தேவர்கள் சிரஞ்சீவிகளென்ற பெருமையும் கர்வமும் இப்பொழுது பறந்துபோய் விட்டன. நாமும் மரித்து ஏன் முக்தர்களாக இருந்திருக்கக் கூடாதென்ற ஏக்கம் மனஸை வாட்டுகிறது?"

பிரம்மதேவர் என்ன செய்வார் பாவம்! பிருகஸ்பதிக்குப் பதில் அளிக்க முடியாமல் அவர் விழித்தார். அவர் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினார்.

இதற்கிடையே தேவர்கள் தங்கள் ராஜிநாமாவை அளிப்பதற்கு ஆரம்பித்துவிட்டார்கள். காமதேனுவும் கற்பகவிருக்ஷமும் எழுந்து நின்று பேசத் தொடங்கின:

"ஸபையோர்களே! வேண்டிய பொருள்கள் இவையென்று அறிந்து வழங்குவது எங்களால்தான் முடியுமென்பது லோகப் பிரஸித்தம். அதனால், ஜனங்கள் ஸதாகாலம் எங்களிருவரையும் பூஜித்துக்கொண்டே வந்தார்கள். ஆனால், இப்பொழுது ரூபா யென்ற பேருடைய வெள்ளைப் பிசாசு ஒன்று புறப்பட்டிருக்கிறது. அது தன் அபார சக்தியைக் கொண்டு எங்களுடைய பெயரை இருந்த இடம் தெரியாமல் அடித்துவிட்டது. இனி, பலஹீனர்களாய் அந்த நன்றி கெட்ட மனுஷ்ய லோகத்தில் எங்களால் இருக்கமுடியாது. போதும் எங்களுடைய உத்தியோக வாழ்வு. இதோ எங்களுடைய ராஜிநாமாவை அங்கீகரித்தருளும்படி பிரார்த்திக்கிறோம்."

யமதர்ம ராஜா எழுந்திருந்தார்.

"பிதாவே நமஸ்தே! என் பேரைக் கேட்ட மாத்திரத்தில் நடுங்காதவரில்லை. ஆனால், இப்பொழுது பூலோகத்தில் என்னை விட அதிக பயத்தை உண்டு பண்ணுகிறவர்கள் கிளம்பியிருக்கிறார்கள். போலீஸ் வீரர்கள், சைனியங்கள் முதலியவர்கள் எனது தண்டத்தைத் தங்கள் கைகளில் ஏந்தித்திரிவதைப் பார்த்த பிறகு எப்படி வெறுமனே இருக்கமுடியும்? மேலும் டாக்டர்கள் மரணத்தை எதிர்த்துப் போராடக் கிளம்பிவிட்டார்கள். ஒரு க்ஷணங்கூட என்னால் இருக்கமுடியாது. என் ராஜிநாமாவை ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்று ஸமர்ப்பணம் செய்தார் யமராஜா. அவருடைய ராஜிநாமாவைக் கடைசியில் கவனிக்கலாமென்று ஒத்திப்போட்டார்கள்.

வருணபகவான் எழுந்திருந்தான்; அவன் கண்களில் நீர் வடிந்தது:

"தந்தையே! தாக சாந்திக்குத் தண்ணீர் குடிப்பதென்று சொல்லிய காலம் இப்பொழுது மலையேறிவிட்டது. மத்திய லோகத்தில் இப்பொழுது தாகமென்றால் சாராய புட்டி வந்து விடுகிறது. அங்கே கால்வாய்களிலும் நதிகளிலும் ஸ்திரீகளின் அழுகைக் கண்ணீரும் சாராயமுந்தான் பெருகி ஓடிக்கொண்டிருக்கின்றன. மதவெறி பிடித்தவர்கள் நீரைக்காட்டிலும் மதுவே

ஸர்வ சிலாக்கியமானதென்று போடுங் கூக்கூரல் வானத்தைப் பிளக்கிறது. நல்லபடியாக நான் வந்து சேருகிறேன். இனிமேல் இத்தகைய அவமானத்தை நான் சகிக்கமாட்டேன். இந்த ராஜி நாமாவைக் கடாக்ஷித்தருளுங்கள்" என்று கூறினன். ஸபையோர் அவனுடைய முறையீட்டை ஆலோசித்தார்கள்; "காந்திமகான் நாளடைவில் இந்த மதுவின் ஆதிக்கத்தை ஒழித்துவிடுவாரென்ற நம்பிக்கையிருக்கிறது. ஆகையால் வருணன் விஷயத்தை யோசித்துத்தான் முடிவு கட்டவேண்டும்" என்று சொல்லிவிட்டார்கள்.

தர்ம தேவதை மெல்ல எழுந்திருந்தது; பிராணன் போய்க் கொண்டிருக்கிற நிலையில் அது வணக்கத்துடன் தெரிவிக்க ஆரம் பித்தது:

"ஹே ப்ரபோ! மனுஷ்யர்கள் நம்முடைய ஆதீன கர்மசாரர்க ளென்றே இதுவரையிலும் நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனல் இன்று அவர்கள் அதனைப் புறக்கணித்து விட்டார்கள். 'தர்ம மென்பது நாம் அமைத்துக்கொள்வது. அது நமக்கு அடங்கியதே யன்றி நாம் அதற்குக் கட்டுப்பட்டவர்களல்ல' என்று சொல்கிருர் கள்; 'சிறையிலே கட்டுப்பட்டுக்கிடந்தாலும் கிடக்கலாம். வெளி யிலே எதற்கும் கட்டுப்பட்டு ஸ்வதந்திரத்தை இழந்து அடிமை களாக ஆண்மையின்றி இருக்கலாகாது' என்று வீரம் பேசுகிருர் கள். இனி எனக்கு அந்த லோகத்தில் வேலையே இல்லை. ஆகை யால் என் ஸிம்ஹாசனத்தைக் காலி செய்து விடவேண்டியது தான்."

வாயுபகவான் பெருமூச்சு விட்டுக்கொண்டே எழுந்தார்.

"ஐயோ! கேட்பாரில்லையா? என்ன அநியாயம்! லோகம் முழுவதும் ஸ்வராஜ்யக் கூக்குரல் தான் முழங்குகிறது. என்னை அங்கே யாரும் லக்ஷியம் செய்வது கிடையாது. பிராணவாயு, விஷக்காற்று இன்னும் எத்தனையோ காற்றுக்கள்; இவற்றைத் தாங்களாகவே அவர்கள் உற்பத்தி செய்து கொண்டு தலை திரும்பி நிற்கிருர்கள். வாயுமண்டலத்துக்கு மேலே கூட ஸுலபமாகப் பிராண வாயுவைக் கொண்டுபோய் உல்லாஸமாக விமானங்களில் திரிந்துகொண்டு இருக்கிருர்கள். நான் ராஜிநாமா செய்துவிட்டு 'ஹாய்'யாக இருக்க விரும்புகிறேன். இந்த மனிதப்புழுக்களுக்கு உழைத்தது போதும்" என்ருர் வாயு.

அப்பால் சூரியமூர்த்தி பேச ஆரம்பித்தார்:

"ஹே தேவ! ஜன சமூகமானது சத்யலோகம், வைகுண்டம், கைலாஸம் என்னும் மூன்று லோகங்களையும் மீறிப் போயிருக் கிறது. அவர்கள் தங்களையே எல்லாம் வல்ல கடவுளாக நினைத்துக்

கொண்டு ஸகல கார்யங்களையும் செய்கின்றார்கள். நான் அநாவசிய மென்கிறார்கள். வெளிச்சத்தை அவர்களே உண்டாக்குகிறார்கள். பகல் வெளிச்சம், எக்ஸ்ரே, மின்சார கிரணங்கள், ரேடியம் முதலியவற்றைக்கொண்டு என்னோடு போட்டிபோட முன் வந்திருக்கிறார்கள். இந்தத் தராதர மற்ற லோகத்தில் அரைக்ஷணம் இனித்தங்க என்னால் முடியாது. சிறிதுகாலம் குளிர்ச்சியாக மகா விஷ்ணுவுடன் பாற்கடலில் வசிக்க எண்ணியிருக்கிறேன்.''

சந்திரன் எழுந்திருந்தான். ஸ்வபாவத்திலே குளிர்ந்த அவன் வார்த்தைகளிற் கூடச் சிறிது உஷ்ணம் இருந்தது; "கேட்டீர்களா அநியாயத்தை? இந்தப் பூலோக கவிகளுடைய தலையெடுப்பை என்னவென்று சொல்வேன்! தங்களுடைய ஸ்திரீகளின் கால் நகங்கள் என்னைக்காட்டிலும் பதினாயிரம் மடங்கு அழகாக இருப்பதாக வர்ணிக்கிறார்களே! கவிகளுடைய மனைவிகளின் கால் நகத்தின் காந்தி குறையும் வரையில் நான் எனது அந்தப்புரத்தில் ரோஹிணியுடன் ஸுகமாகக் காலங்கழிக்க நிச்சயித்திருக்கிறேன்'' என்றான்.

தேவ ஸேனாபதி கார்த்திகேயர் சொல்லலானார்: "நான் தேவர்களுடைய ஸேனாபதியாதலால், தேவலோகத்தில் எத்தகைய சண்டை நேர்ந்தாலும் அதையறிந்து தேவர்களைக் காப்பாற்றுவது என் கடமை. ஆனால் இப்பொழுது இவர்களுக்கு நேர்ந்திருக்கும் ஆபத்துக்களெல்லாம் பூவுலக ஸம்பந்தமானவை. அவைகளை நீக்க என்னால் முடியாது. மனுஷ்யலோக யுத்தத்துக்குத் தர்மமே இல்லை. நானோ தர்மத்துக்குக் கட்டுப்பட்டவன். இவர்களைக் காப்பாற்றுவதற்குச் சக்தியில்லாமல் இந்த உத்தியோகத்தை வகிப்பதைவிட ஸ்வர்க்கத்தில் யுத்தம் வரும் வரையில் ஓய்வை மேற்கொண்டு இருப்பதென்று தீர்மானித்து விட்டேன்'' என்றார்.

அங்கே ஒருமாது தூய வெண்பட்டைக் கட்டிக்கொண்டு தலைகுனிந்தவண்ணம் இருந்தாள். அவ்வம்மை ஸபையோருக்கு முன்பு எப்படி தன் கணவருடன் பேசுவதென்று லஜ்ஜையுடன் தயங்கி நிற்பதாகத் தோற்றியது. ஸரஸ்வதீதேவியாகிய அவள் மெதுவாய்த் தன்கணவர்முன்பு தன்குறைகளை வீணாகானத்தால் சோகரஸங்கலந்து தெரிவித்தாள். அதைக்கேட்டுத் தேவர்கள் உருகிப்போய் வருந்தினார்கள். இந்திரனுடைய ஆயிரங்கண்களிலிருந்தும் பலபலவென்று கண்ணீர்த்துளிகள் உதிர்ந்தன. பிறகு வாக்குதேவி தன் இனிய குரலால் பேச ஆரம்பித்தாள்; "நாத! இதுவரையில் பூமியில் பாலர்களுக்குரிய வித்யாப்யாஸம் என் ஆதீனத்தில் இருந்தது. இப்பொழுதோ அது என்னிடமிருந்து

நழுவிவிட்டது. நானோ ஸ்திரீ. என்னுடைய சக்தி வெகு ஸொல்ப மானது. மனிதலோகத்தில் இப்போது என் குழந்தைகளிடம் ஒரு மூட்டைப் புஸ்தகங்களை அச்சிட்டுச் சுமத்தியிருக்கிறார்கள். அப்புஸ்தகங்களைப் படிப்பதற்கு எனக்கே மூச்சுவிட்டுப்போகிறது; மார்பு படபடவென்று அடித்துக்கொள்கிறது; சோர்வுண்டாகிறது. அந்தக் குழந்தைகள் என்னசெய்யும் பாவம்! அவர்களுடைய ஞான சக்தியைத் தேய்த்து மழுக்கி உத்ஸாகத்தைக் குறைத்து எலும்புந் தோலுமாக்கிக் குட்டிச் சுவரைப்போல வளர்த்து வருகிறார்கள். ப்ராணநாத! க்ஷமிக்கவேண்டும். அந்த லோகத்திலுள்ள விபரீதப்படிப்பு உங்களால்கூட அப்பியாஸம் செய்யமுடியாதென்று சொல்லவேண்டியிருக்கிறது. அப்படியிருக்கையில் என்னால் இந்த விஷயத்தை எப்படி நிர்வகிக்கமுடியும்? இந்த வித்தியா இலாகாவை ஈவிரக்கமில்லாத ஒரு காட்டாளிடம் ஒப்பித்து விடுவது நலமென்று தோன்றுகிறது. இதை யமதர்ம ராஜனிடம் ஒப்பிப்பது யுக்தமா இருக்குமென்று நான் எண்ணுகிறேன். தேவரீருடைய கிருபை எப்படியோ!" என்று சொல்லி நிறுத்தினாள்.

யமதர்மராஜா உடனே எழுந்தார்: "என் அம்மை சொல்லியவாறு நான் அந்த இலாகாவுக்கு அவசியமே இல்லை. அதைக் கவனித்துக்கொள்ள உபாத்தியாயர்களும், இன்ஸ்பெக்டர்களும் தயாராக இருக்கிறார்களென்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

பாலர் வித்தியாப்யாஸத்தில் யமதர்மராஜாவை நியமிக்கும் பிரரேபணை வியர்த்தமாகப்போய்விட்டது. மற்றத் தீர்மானங்கள் யாவும் ஸபையில் ஏகமனதாய்ப் பிதாமகர் முன்னிலையில் அங்கீகரிக்கப் பட்டன.

ஐயோ பாவம்! தேவர்களுக்கு இந்தப் போதாத காலம் வந்திருக்கிறதென்பது வாஸ்தவம். அவர்கள் இனிமேலாவது தங்கள் பாட்டைப் பார்த்துக்கொண்டு சொஸ்தமாகத் தங்கள் குடும்பங்களைக் கவனித்துக்கொண்டு காலத்தைக் கழிக்கப்போவதாகத் தீர்மானித்தது மிகவும் ஸந்தோஷத்தைக் கொடுக்கிறது. பிழைத்துப் போகட்டுமே!

பரிசுக் கவிதை

வாலிபர் கானம்

மே. ரா. மீ. சுந்தரம்

பொன்னிறக் கூடைகள் தாங்கிடுவோம்—யுவப்
பூங்காவுக் கொன்ருக ஏகிடுவோம்—பல
புன்னகைப் பூக்கள் பறித்தே அவைகளேப்
புவியெங்கும் வாரி இறைத்திடுவோம்.

பாட்டுடன் பண்ணை இசைத்திடுவோம்-அதைப்
பறவைகள் போலப் பயின்றிடுவோம்—எங்கள்
கூட்டுக் களியினிற் சேர்ந்துவிட் டால்பின்னர்
கொள்வதுண் டோதுயர் உள்ளத்திலே?

காதிஞல் கேட்பது காதல்மொழி—எங்கள்
கண்களால் காண்பதும் காதல்தெய்வம்-எங்கள்
சாதியின் நாமமே காதற் கூட்டம்—நாங்கள்
சாதலுக் கஞ்சிடோம் காதல்பெற.

மற்றவர் வாழ்க்கையில் தோல்வி காண்பார்
—அவர்
"மண்" எனப் பூமியை ஏழ்மை செய்வார்
—புகழ்
வெற்றியின் கோலத்தை எங்கும் காண்போம்
—உயர்
விண்ணைஇப் பூமியில் ஊன்றி வைப்போம்.



அந்தப்புர ஆட்சி

வி. விசாலாக்ஷி அம்மாள்

‘விக்கிரமாதித்தியன் என்னும் மன்னனும், பட்டி என்னும் மந்திரியும், வேதாளமும்’ என்று தொடங்கும் கதைகள் நம் தேசத்தவர்கள் அனைவருக்கும் தெரிந்தவையே. பட்டி என்னும் மந்திரியின் பேரையும், புகழையும், நுட்ப அறிவையும், சமயோசித புத்தியையும் பற்றிக் கேள்விப்படாதவர்கள் யாவர்?

ஒரு நாள் மாலை, பட்டி, ஒரு சாலை ஓரமாக உலாவச் சென்றான். விக்கிரமாதித்திய மன்னனுடைய மந்திரி ஸ்தானத்தை வகித்து, இவன் கீர்த்தி பெறுவதற்கு முன்பு நடந்த சம்பவம் இது. திடீரென்று, ‘ஐயோ! ஐயோ! பாவிகளா! என்னைக் காப்பார் யாருமில்லையா!’ என்று ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டு, யாரோ ஓலமிடும் சப்தம் பட்டியின் காதுகளில் விழுந்தது. சப்தம் கேட்ட இடத்தை நோக்கிப் பட்டி விரைவாகச் சென்றான்.

ஒரு கிழவனை இரண்டு தடியர்கள் சேர்ந்து அடித்து, இமிசிக்கும் காட்சியைக் கண்டான். பட்டி புத்திசாலி; யோசனையில்லாமல் பிறர் விஷயங்களில் தலையிட்டுக் கொள்ளுவதனால் விளையக்கூடிய ஆபத்துக்களை நன்கு அறிந்தவன். இருந்த பொழுதிலும், வாலிபத்திற்கு உரிய ஆத்திரத்தினாலும், துணிச்சலினாலும் தூண்டப்பட்டுத் தன் உடைவாளை உருவி, தடியர்களைத் தாக்கினான். அவர்கள் அப்படியே ஓடிவிட்டார்கள்.

முக்கி முனகிக் கொண்டு எழுந்திருந்த கிழவனைப் பட்டி நோக்கினான். அவன் ஒரு தொண்டு கிழம். கந்தைகளை உடுத்திருந்தான். கிழவன் தன் மனமார்ந்த வந்தனங்களைப் பட்டிக்கு அளித்

தான். 'நாளை சாயங்காலம் இதே நேரத்திற்குச் சேணியன் தோட்டத்திற்கு அருகில் இருக்கும் மாந்தோப்பிற்கு வா! உனக்கு ஒரு சம்மானம் அளிக்க விரும்புகிறேன். இந்தப் பிச்சைக்காரக் கிழம் நமக்கு என்ன செய்யக்கிடக்கிறது என்ற உதாசீனத்தினால் வராமல் இருந்து விடாதே!' என்று அந்தக் கிழவன் சொன்னான்.

கிழவன் குறித்த இடத்திற்குப் போவதா, வேண்டாமா என்று மறுநாள் பட்டி யோசனை செய்தான். 'அஷ்ட தரித்திரத்திற்கும் இருப்பிடம்போல் தோன்றுகிறான்; இருந்தாலும், வெளித் தோற்றத்தை அப்படியே நம்பக்கூடாது. எதற்கும் போய்ப் பார்க்கலாம்', என்று புத்தி நுட்பமுள்ள பட்டி தீர்மானித்தான்.

குறித்த இடத்தில் கிழவனைப் பட்டி சந்தித்தான். அந்தக் கிழவன் தோப்பின் உள்ளே பட்டியை அழைத்துச் சென்றான். மாமரங்களுக்கு நடுவில் ஓர் இடை வெளி இருந்தது. இதில் ஒரு மரம் தனித்து நின்றது. இந்த மரத்தின் இலைகள் கண்ணாடி இலைகளைப் போல் பிரகாசமாக இருந்தன. இலைகளின் ஊடே காற்றுச் செல்லும் பொழுது, ஒருவித இனிமையான தொனி இந்த மரத்திலிருந்து கிளம்பிற்று. இந்த மரத்தில் மூன்று மாங்கனிகள் தொங்கிக் கொண்டிருந்தன. ஒரு பழம் சிவந்து நல்ல சதைப் பற்றுள்ளதாக இருந்தது. மற்றொன்று பச்சையாகவும் பளபளவென்றும் இருந்தது. மூன்றாவது பழம் மஞ்சள் நிறமாகவும், தோலின் மேல் பல சுருக்கங்கள் விழுந்தும் இருந்தது. மரத்தின் அடியில் நின்ற கிழவன் ஒரு சாதாரண மனிதன் அல்ல, சக்தி வாய்ந்த ஒரு மந்திரவாதி என்பதைப் பட்டி உணர்ந்தான்.

'இந்த மரத்தில் உள்ள மூன்று பழங்களில் ஒன்றை நீ பறித்துச் சாப்பிடலாம். சிவப்புப் பழத்தைச் சாப்பிடுவதனால் மற்றைய மனிதர்களைவிட சூஷ்மமான புத்தி உனக்கு ஏற்படும். மனிதர்கள் தன்மையை நீ நன்கு அறிந்து கொள்ளலாம். பிறகு நீ அறியமுடியாத விஷயமே இந்த உலகில் இராது. பச்சை நிறமான பழத்தை நீ சாப்பிட்டால், எல்லாரையும் விட அதிக பணக்காரனாக இருக்கலாம். மூன்றாவது பழமான மஞ்சள் நிறக் கனியை அருந்தினால், கிழவிகளுக்கு உன் மேல் பிரியமும், அபிமானமும் ஏற்படும். ஒரு முகூர்த்த காலமே இந்த மரம் இங்கே இருக்கும்; பிறகு இது பூமிக்குள் மறைந்துவிடும். அதற்குள் யோசித்துப் பார்த்து, உனக்கு இஷ்டமான பழத்தைப் பறித்துச் சாப்பிடு' என்று அந்தக் கிழவன் சொன்னான்.

பட்டி பலத்த யோசனையில் ஆழ்ந்தான். 'பகவான் எனக்கு இயல்பாக நல்ல புத்தியை அளித்திருக்கிறார். எல்லா விஷயத்தையும் அறியக் கூடிய சக்தி கிடைத்தால், இப்பிரபஞ்சத்தில் எதுவும் என் மட்டில் இரகசியமாக இருக்காது என்ற நிலைமை ஏற்படலாம்; இது எனக்கு வாழ்க்கையிலேயே வெறுப்பை உண்டுபண்ணி விடலாம். என் செலவிற்குத் தாராளமாகப் போதுமான பொருள் என்னிடம் இருக்கிறது. எல்லாரையும் விட அதிக தனவந்தனாக இருப்பதனால் பிறருடைய பொறாமைக்கு நான் பாத்திரமாவேன். வயதான மாதர்களுடைய அன்பு ஏற்படுவதினால் பல நன்மைகள் உண்டு. இவர்கள் அந்தப்புர அரசிகள்; பிரபஞ்சம் இவர்கள் ஆளுகைக்கு உட்பட்டது'!

இவ்விதம் யோசனை செய்த பட்டி, மஞ்சள் பழத்தைப் பறித்துக்கொண்டான்.

கிழவன் நகைத்து, 'சரியாகவே செய்தாய்! இப்பொழுது இருப்பதைவிட அதிக புத்தி உனக்குத் தேவையில்லைதான்; இவ்வளவு அறிவுடைய உன்னைச் செல்வம் தானே தேடிவரும்!' என்றான்.

அவனுக்கு வந்தனம் கூறிவிட்டு, விக்கிரமாதித்திய மன்னனுடைய வயதான தாயார் வசிக்கும் அந்தப்புரத்திற்கு வழி சொல்லும்படி பட்டி கேட்டான். கிழவன் அவனைக்கும்பிட்டு வழியைச் சொன்னான். பட்டியும் அவ்வழிநோக்கிச் சென்றான். இதற்கு மேல் கூறுவானேன்?

மந்திரி பட்டியினுடைய புகழையும், பெரும் பதவியையும், நுட்ப அறிவையும், சமயோசித புத்தியையும் பற்றிக் கேள்விப்படாதவர்கள் யாவர்?

இது ஒரு புராதனக் கதை. 'பெண்புத்தி பின்புத்தி' என்றும், 'ஸ்திரீ புத்தி ஸ்திரமற்றது' என்றும், 'பெண் புத்தியைக் கேட்பதனால் கெடுதலே விளையும்' என்றும் நாடோடி வசனங்கள் இருந்த பொழுதினும், காரியங்களை உள் இருந்து நடத்திவைப்பவர்கள் மாதர்களே என்பதை நம்மவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். இந்த அந்தப்புர ஆட்சியானது எல்லாத் தேசத்திலும், எக்காலத்திலும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. இதை அலட்சியப்படுத்தி, நிஷித்தமாகக் கூறுவதற்குக் காரணம் பகிரங்கமாக வெளிவராமல் இது மறைவாக இருப்பதே என்று கூறலாம்.


மனிதர்களைப் பொதுவாக இரண்டு வகுப்பாகக் கூறலாம்: காரணங்களைச் சொல்லி முடிவைக் கூறுகிறவர்கள்; காரணங்கள்

சொல்லத் தெரியாமல் முடிவை ஊகித்துக் கூறுகிறவர்கள். ஸ்திரீகளில் அநேகம்பேர்கள் இந்த 'ஊகம்' உடையவர்கள்; சரியான முடிவைக் கூறக்கூடியவர்கள். ஆனால், காரணங்கள் சொல்லாததனால், இவர்கள் இஷ்டங்களையும், முடிவுகளையும் அந்தரங்கத்தில் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றும் புருஷர்கள் இதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளாமல், சபல சுபாவமுடைய மாதர்கள் புத்திமதியை ஏற்றுக் கொள்ளுவது சரி இல்லை என்று கூறுகிறார்கள்.

இருந்தபோதிலும், குடிசையிலிருந்து குபேரன் மாளிகை வரையில், இந்த அந்தப்புர ஆட்சி என்னமோ நடை பெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. ஒரு ஸ்திரீயானவள் நல்ல புத்திசாலியாகவும் ஊகம் உடையவளாகவும், தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ளும் குணமுடையவளாகவும் இருந்தால், அவளுடைய ஆட்சிக்கு உட்பட்ட வீடோ, குடும்பமோ, அல்லது தேசமோ க்ஷேமமும், முன்னேற்றமும் அடைந்து சுபிக்ஷமுள்ளதாக நன்கு நடைபெற்று விளங்கும்.

மரத்திலிருந்து ஆகாரம்

மிருகங்களுக்கு மரக்கட்டைகளிலிருந்து உணவு தயாரிக்கும் முறை ஜர்மனியில் யுத்தத்தின்போது பரிசோதிக்கப்பட்டது. இந்தச் சோதனைகள் இப்பொழுது நன்கு வெற்றிபெற்றிருப்பதாகத் தெரிகிறது. மரத்திலிருந்து சர்க்கரை யெடுக்கும் முறையில் தேர்ச்சிபெற்று இப்பொழுது அங்கே பெரிய தொழிற்சாலைகள் பல ஏற்பட்டிருக்கின்றன. மரத்திலிருந்து கன்று காலிகளின் உணவு தயாரிக்கும் முறைக்கு பிரஷ்யாதேசம் அனுமதி பெற்றுத் தனது வியவசாயிகளுக்கு இலவசமாகக் கற்றுக்கொடுக்கின்றது. ஆகவே, ஜர்மனியில் ஒரு சிலர் இதைக் கையாண்டு பெரும்பொருள் சம்பாதிக்கவோ, தேவைக்கு அதிகமான உற்பத்தியை உண்டுபண்ணவோ இல்லாமலாகிவிட்டது. பச்சை மரக்கட்டைகளைப் பட்டையுடன் மெல்லியதாகச் சீவி, கொஞ்சம் சுண்ணாம்பு சேர்த்துப் பொடிக்கிறார்கள். மரத்திலிருந்து எடுக்கப்பட்ட சர்க்கரைக் குழம்பைக் கலந்து புளிக்கவைத்து கன்று காலிகளுக்கு உணவாக அளிக்கின்றார்கள். வர்த்தக ஊழியன்.




நரியும் பானையும்

பி. ஆர். ராஜசூடாமணி


ஒருநாள் ஒரு மனிதன் சந்தைக்கு வந்து ஒரு பானை வாங்கினான். அவன் அதை எடுத்துக் கொண்டு காட்டுவழியாகப் போனான். போகும் போது ஒரு மரத்தின் அடியில் நரிவளை ஒன்றைக் கண்டான். அவன் அந்த வளைக்குள் எட்டிப் பார்த்தான். வளையில் ஒரு நரி இருந்தது. அது வெகு அழகாய் இருந்தது. அவன் அந்த நரியைப் பிடிக்க ஆசைப்பட்டான். ஆனால் அவனிடம் வலை இல்லை. ஆகையால் அவன் வலையை எடுத்துவர வீட்டுக்குப் போனான். வீட்டுக்குப் போகுமுன், நரி ஓடிப்போகாதபடி பானையை நரிவளையின் வாசலிலே வைத்தான். பானைக்குள் காற்று விசி, பூங் ! பூங் ! என்று இரைந்துகொண்டிருந்தது.

வளைக்குள் இருந்த நரி பானையிலிருந்து வந்த சத்தத்தைக் கேட்டது. அது பயந்து நடுங்கி வளைக்குள்ளேயே இருந்தது. கொஞ்ச நேரமானதும், "இதென்ன சத்தம்?" என்று கவனித்துக் கேட்டது. ஆனால் அது இன்ன சத்தம் என்று நரிக்குத் தெரியவில்லை. கொஞ்சநேரம் அது சும்மா இருந்தது. பின்பு அது, "இது என்ன சத்தம் என்று எட்டிப் பார்க்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே மெதுவாகத் தலையை நீட்டி வெளியே எட்டிப் பார்த்தது.

பார்த்தபோது வளைக்குப் பக்கத்திலே ஒரு பானை இருக்கிறதைக் கண்டு, "பானையே! நீயா இப்படிச் சத்தம் பண்ணுகிறாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்?" என்று வளையிலிருந்து வெளியே வந்தது.




நரி பானையின் கிட்டப் போயிற்று. அதற்குள் இன்னது இருக்கிறது என்று பார்க்கிறதற்காகத் தலையைப் பானைக்குள் நுழைத்தது. நரியின் தலை கழுத்துவரை பானைக்குள் போய்விட்டது. பானையின் வாய் மிகவும் சிறியதாய் இருந்ததனால், நரி தன்




தலையை வெளியே இழுக்க முடியவில்லை. அது தன் தலையை இப்படியும் அப்படியும் இழுத்து இழுத்

துப் பார்த்தது. தன்னால் ஆனமட்டும் அது முயன்று பார்த்தும் தலையை எடுக்க முடியவில்லை.



அதைக் கண்ட நரி, "அறிவுகெட்ட மண் பானையே! என்னிடத்திலா விளையாடுகிறாய்? உன்னை ஆற்றிலே முழுக்கி விடுகிறேன்" என்று கோபத்தோடு சொன்னது.

நரி ஆற்றுக்குப் போகப் புறப்பட்டது. ஆறு பக்கத்திலே தான் இருந்தது. அது வெகு எச்சரிக்கையாகத் தடவித் தடவிப் பார்த்துக் கொண்டே போனது. தண்ணீரருகில் வந்ததும், கழுத்தில்




மாட்டியிருந்த பானையை ஜலத்தில் முழுக்கினது. முழுக்கின வுடனே தண்ணீர் பானைக்குள்

நுழைந்தது. அதனால் "குளு! குளு! புளு!" என்ற சத்தம் உண்டாயிற்று. பானை அழுகிறது என்று நரி நினைத்துக் கொண்டது.


உடனே நரி, "பானையே! இப்பொழுது அழுதால் விடுவேனா? முன்னே நான் 'என் கழுத்தை விட்டுவிடு! விட்டுவிடு!' என்று சொன்னேனே. அப்பொழுது கேட்டாயோ?" என்றது. பானைக்குள் தண்ணீர் நுழைந்து நிறைந்தது. பானை கனமாகி நரியை ஆற்றுக்குள் இழுக்கப் பார்த்தது.

நரி பானையைப் பார்த்து, "முட்டாளே! நான் வேடிக்கையாகத்தானே சொன்னேன். இதைக் காரியமாக எடுத்துக் கொண்டு கோபப் படுகிறாயே!" என்றது. பானை ஒன்றும் சொல்லவில்லை. நரி மிகவும் கஷ்டப்பட்டுப் பானையை வெளியே இழுத்துக் கொண்டு ஆற்றிலிருந்து தள்ளித் தள்ளாடி நடந்தது. நடந்தபோது தண்ணீர் வழி நெடுகக் கொஞ்சம் கொஞ்சமாகச் சிந்திக்கொண்டே வந்தது. கனம் குறையவே நரி ஓட ஆரம்பித்தது.



அது காட்டிற்குள் வெகு வேகமாக ஓடினது. அதனுடைய கண்களைப் பானை மறைத்ததனால்

அதற்குப் போகிற இடமே தெரியவில்லை. அது நேராக ஓடி ஒரு மரத்திலே 'டப்' என்று மோதிற்று; தட்டிவிழுந்தது. அது தட்டி மோதிவிழுந்தபோது, அதன் கழுத்தில் இருந்த பானை சுக்கல் சுக்கலாய் உடைந்து கீழே விழுந்து விட்டது.




அதைக்கண்ட நரி, உடைந்த பானையைப் பார்த்து, "அடா உடைந்த பானையே! அப்பொழுதே என் கழுத்தை விட்டிருந்தால் நீ இப்பொழுது உடைந்து போயிருக்க மாட்டாயே" என்று சொல்லிக் கொண்டு ஓடிப் போய்விட்டது.

——

நெருப்புப் பற்றாத கட்டை

நெடுநாட்களாக ரசாயன சாஸ்திரிகள் நெருப்புப் பற்றாத கட்டைகள் துணிகள் முதலியவைகளைக் கண்டுபிடிக்க முயற்சித்துக்கொண்டு வருகிறார்கள். எத்தனையோ வருட முயற்சிக்குப்பின் இப்பொழுது அவர்கள் நெருப்புப் பற்றாத ரப்பர் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தரப்பர் மின்சார இணைப்புக்களுக்குப் பெரிதும் உபயோகப்படுகின்றது. சாதாரணமாக உள்ள மின்சாரக் கம்பிகள் வெடித்தால் தீப்பற்றிக்கொள்ளும்; ஆனால் இந்த ரப்பரோடு கூடிய மின்சாரக்கம்பி அப்படிவெடித்தாலும் தீப்பற்றாது. வீர.



உலக நடப்பு

பி. ஸ்ரீ. ஆசார்யா

இந்தக் காலத்தை விஞ்ஞானயுகம் என்றே சொல்லலாம். 'ஸயன்ஸ்' என்ற விஞ்ஞான சாஸ்திரம் மேலே, மேலே, மேலே போய்க்கொண்டிருக்கிறது. பூமியையும் கடலையும் கட்டியாள முயலும் ஆசை இப்போது ஆகாயத்தையும் வென்றுவிட வேண்டுமென்று பகீரதப்பிரயத்தனம் செய்து வருகிறது. ஆளில்லாமல் தானாகவே பறந்து செல்லும் பலூன் ஒன்றைக் கம்பியில்லாத்தந்தி முதலிய வசதிகளோடு மணிக்கு 15 மைல் வேகத்தில் வெகு உயரமாகப் பறக்கவிட்டு, ஆகாய வீதிகளிலுள்ள சீதோஷ்ணநிலை முதலியவற்றைக் கண்டு பிடிக்கும் அரிய முயற்சியில் ருஷிய விஞ்ஞானிகள் ஈடுபட்டு ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். இப்படிப் பட்ட ஆகாய கமனம் இதற்குமுன் செய்யப்பட்டதில்லை. வேறொரு விஞ்ஞான சாஸ்திரி மனித சஞ்சாரமில்லாத ஒரு மலையுச்சியிலிருந்துகொண்டு கடலையும் வானத்தையும் ஜயிக்க விரும்புகிறார். 30 மைலுக்கு அப்பால் வரும் நீர்முழுகிக்கப்பலை அறிந்துகொள்ளவும், ஆகாயவிமானங்களினால் ஏற்படக்கூடிய எதிர்ப்பை அறிந்து தடுக்கவும் முயற்சிசெய்துகொண்டிருக்கிறார். அவர் கண்டு பிடித்திருக்கும் ஒரு 'கிரணம்' பறந்து கொண்டிருக்கும் விமானத்தின் எஞ்சினை வேலை செய்யாதபடி தடுத்து விமானத்தை அப்படியே இறக்கிவிடுகிறதாம். சந்திர மண்டலத்திற்குச் செல்லக்கூடிய யந்திரம் ஒன்று கண்டுபிடிக்கவேண்டுமென்றுகூட அவர் முயன்று வருகிறார்! இவ்விதமாக நினைக்கவும் முடியாத காரியங்களை விஞ்ஞான சாஸ்திரம் செய்துகாட்ட முன் வந்திருக்கிறது.

மேற்கே இப்படியிருக்கக் கிழக்கும் ஸர். ஸி. வி. ராமன், ஜே. ஸி. போஸ் முதலான அறிஞர்கள் வாயிலாக விஞ்ஞானத்துறையில் உழைத்து வெற்றியடைய முயலுகிறது. எனினும் லௌகிக அறிவைக்காட்டிலும் அதிக அளவில் பரஞானத்தை நோக்கியே இந்தியா கவனம் செலுத்திவந்திருக்கிறது. இந்தியாவில் இன்றும்

புத்தம்புதிய அறிவு பழைய ஞானத்தை முகமுகமாகச் சந்தித்திருக்கிறது என்று சொல்லவேண்டும். சமீபத்தில் பாட்னு வைத்திய கலாசாலேயில், தற்கால வைத்தியர்களும் பிறரும் அடங்கிய ஒரு கூட்டத்தின்முன் காகானந்தா் என்ற ஹடயோகியொருவர் சில அற்புதங்களைச் செய்துகாட்டினர்: கண்ணாடிப்பாத்திரத்தை உடைத்து வாயில் போட்டுக்கொண்டு பற்களால் கடித்துத் துண்டுகளைத் தண்ணீருடன் உட்கொள்ளுவது, ஆணிகளை விழுங்குவது, அக்கினித்திராவகத்தைப் பானம் செய்வது, உயரத்திலிருந்து கண்ணாடித்துண்டுகள் நிரம்பியதொட்டியில் குதிப்பது முதலிய காரியங்களைச் செய்து காட்டியதோடு, காற்றோட்டமில்லாதபடி தகடால் மூடி அதற்குமேல் மண்போடப்பட்ட ஒருகுழிக்குள்ளே அசௌகரியமில்லாமல் ஒரு மணிநேரம் இருந்து வெளிப்பட்டாராம். இப்படிப்பட்ட செய்கைகள் விஞ்ஞானசாஸ்திரிகளையும் பிரமிக்கச் செய்கின்றன. விஞ்ஞான ஆராய்ச்சியோடு சூட்சும சாஸ்திர ஆராய்ச்சியும் அவசியமென்பது மெல்ல மெல்லப் புலனாகிறது.

விஞ்ஞான சாஸ்திரம், மதபக்திக்கும் சமயஞானத்திற்கும் விரோதமானதன்று என்னும் உண்மையும் இப்போது பல நாடுகளிலுமுள்ள அறிஞர்களுக்கிடையே பரவிவருகிறது. இதற்கு ஓர் அறிகுறியாக ஒருவிஷயத்தைக் குறிப்பிடலாம். தற்கால உலகத்திற்குச் சமரச சன்மார்க்க ஞானத்தை உபதேசிக்கவந்த ஸ்ரீராம கிருஷ்ணபரமஹம்ஸரை நமது நாட்டிலே அறியாதவரில்லை. ஓதாதுணர்ந்த இந்த உயர்ஞானியின் நூற்றாண்டுவிழாவைக் கொண்டாடவேண்டுமென்ற விருப்பம் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நான்கு கண்டங்களிலுமுள்ள சில நல்லறிஞர்களிடையே ஏற்பட்டிருப்பதாக அறிகிறோம். குறித்த விழா அடுத்தவருஷம் கொண்டாடப்படும். உயர்ந்த வேதாந்தஞானம் லௌகிகமான சமுதாய சேவைக்கு விரோதமானதன்று என்பதைப் பரமஹம்ஸ தேவரது சீஷர்கள் மெய்ப்பித்து வருகிறார்கள். உயர்ந்த லட்சியங்களோடு அரசியல் முதலிய துறைகளில் உழைப்பதுதான் சிறந்த பயன் அளிக்கும் என்ற உண்மையைக் கர்மயோகியான மகாத்மா காந்தியும் இந்நாளில் உலகத்திற்கு எடுத்துக்காட்டிவருகிறார் அல்லவா?

உயர்ந்த லட்சியங்கள் இல்லாமல், வகுப்பு நாடுமுதலிய குறுக்குச்சுவர்களை எழுப்பிக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் உலகத்தில் நேரிடும் போர்களுக்கும் ஓயாத சச்சரவுகளுக்கும்

காரணர் ஆகிறார்கள். சென்ற வருஷத்தில் மட்டும் உலக வல்லரசுகள் யுத்த தளவாடங்களுக்குச் சுமார் 250 கோடிப்பவுன் செலவு செய்திருக்கின்றன. இந்தப்பெருந்தொகையைச் சமரசஞானத்தை வளர்ப்பதிலும் கலைகளை வளர்த்துக் கல்வியைப் பரப்புவதிலும் வேறு பொது நன்மைக்குரிய துறைகளிலும் செலவு செய்திருந்தால் எவ்வளவு உபகாரமாயிருந்திருக்கும்! எவ்வளவு அவசரமாக வல்லரசுகள் போட்டி போட்டுப் போர்க்கருவிகளை வரவா அதிகப்படுத்துகின்றன. சமாதானப்பேச்சு உதட்டிலே; பயம் உள்ளத்திலே—என்று சொல்லும்படியிருக்கிறது வல்லரசுகளின் நிலை. "நாம் பலமாக இருந்தால்தான் மற்றவர் நம்மை எதிர்க்கத் துணிய மாட்டார். நாம் தற்காப்புக்காகவே ஆயுதபாணிகளாயிருக்கிறோம்" என்று ஒவ்வொரு வல்லரசும் சொல்லுகிறது. சமாதானத்திற்காகவே கொலைக்கருவிகள் அதிகப்படுகின்றன. இது விந்தையிலும் விந்தை அல்லவா? யுத்தத்தை முடித்து விடுவதற்காகவே சென்ற உலகமகாயுத்தம் நடந்ததாகச் சொல்லுகிறார்கள். அந்த யுத்தத்திற்குப்பின் நாளிது வரையில் நடந்துவரும் ராஜதந்திரங்களும் அரசியல்வாதிகள் ஆடிவரும் ராஜீயசர்க்கஸ்களும் 1914-ம் வருஷத்திற்குமுன்—அதாவது சென்ற மகாயுத்தத்திற்கு முன்—உலகம் எந்தநிலையிலிருந்ததோ அதே நிலைக்கு நம்மை இழுத்துக் கொண்டு வந்துவிட்டன! பழையபடி கட்டவிழ்த்துக்கொண்டு வேதாளம் முருக்கமரம் ஏறிக்கொண்ட கதையல்லவா இது?

ஜர்மனி வெகுவேகமாக 'யுத்தமுஸ்தீப்' செய்துவருகிறது. அதற்கு எதிராகப் பரஸ்பர விரோதமுள்ள தேசங்களும் சேர்ந்து உடன்படிக்கை செய்துகொள்ளுகின்றன. அப்படி ஒப்பந்தம் செய்துகொள்ளும் நாடுகள் ஜர்மனியை ஒதுக்கிவைக்கவாவது எதிர்க்கவாவது வளைத்துக்கொள்ளவாவது உத்தேசிக்கவில்லை என்று வெளிப்படையாகச்சொல்லுகின்றன. வல்லரசுகள் தத்தம் கடமையை உணர்ந்து வார்சேல்ஸ் ஒப்பந்தத்தைத் தாமாகவே மாற்றாததால் ஜர்மனி அதை மீறி நடக்கவேண்டியிருந்ததென்று ஜர்மனியின்சார்பாகப் பேசுகிறவர்கள் சொல்லுகிறார்கள். கட்டாய ராணுவசேவை முறையை அமுலுக்குக்கொண்டுவருவதாக ஜர்மன் சர்வாதிகாரியான ஹிட்லர் விளம்பரப்படுத்தியதும், பூகம்பம் போன்ற ஒரு பெரிய அதிர்ச்சி ராஜீய உலகில் ஏற்பட்டது. "ஐரோப்பிய சதுரங்கத்தில் ஹிட்லர் இன்னும் என்ன ஆட்டங்கள் ஆடப்போகிறாரோ? இப்போது வல்லரசுகள் என்னசெய்யப் போகின்றனவோ?" என்ற கேள்விகள் அரசியல் சோதிடர்களின் உள்ளங்களைக் கலக்குகின்றன.

இப்படிப்பட்ட நிலையில் ரோமாபுரியிலுள்ள கத்தோலிக் ஜகத் குருவாகிய போப் என்பவர் உலகில் பரவிவரும் யுத்த மனப் பான்மையை ஒழித்துச் சமாதானத்திற்காக உழைக்கவேண்டு மென்று ராஜதந்திரிகளை வேண்டிக்கொள்ளுகிறார். போர், மகாபாத கமான செயல் என்று எச்சரிக்கை செய்வதோடு, போரைவிரும்பு கிறவர்கள் மனக்குழப்பம் அடைய வேண்டுமென்றும் அவர்களது விருப்பம் நிறைவேறாமல் போகவேண்டுமென்றும் சர்வேசுவரனைப் பிரார்த்திக்கும்படி சிஷர்களுக்கு உபதேசமும் செய்கிறார். போர் வெறிகொண்டவர்கள் மனக்குழப்பம் அடையவேண்டும் என்று பிரார்த்திப்பதைக் காட்டிலும், அவர்களும் மனம்திருந்தி அஹிம் ஸாதர்மத்தைக் கைக்கொள்ளவேண்டும் என்று பிரார்த்திப்பது மகாத்மா காந்தியின் உயர்ந்தகொள்கைகளுக்கு மிகவும் பொருந்து வதாகும். ஆனால் இது ஒருநாளும் நிறைவேறக் கூடிய லட்சியம் அல்லவென்றும், யுத்த மனப்பான்மை ஜனங்கள் உள்ளத்தின் ஆழத்திலே வேரூன்றி இருக்கிறதென்றும் சில விஞ்ஞானசாஸ்திரி கள் கருதுகிறார்கள். அஹிம்ஸா தர்மவீரர்களும் சில முக்கிய அம் சங்களில் போர்வீரர்களைப்போலவே யிருக்கிறார்கள். அறியாமை யோடும் அசத்தியத்தோடும் அநீதியோடும் வறுமையோடும் போராடித்தானே ஆகவேண்டும்! எப்படிப்பட்ட சமாதான காலங் களிலும் இந்தப்போர் நடந்துகொண்டுதான் இருக்கும். இப்படிப் பட்ட போர்களில் அஹிம்ஸாதர்ம வீரர்களே முன்னணியில் நிற்கமுடியும். எனவே போரை மறந்த உலகத்திலும் வீரமனப் பான்மை நிலைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இத்தாலிய சர்வாதிகாரியான முஸ்ஸோலினி சொல்லுகிறபடி "'தலைவிதி' 'தலைஎழுத்து' என்று சொல்லிக்கொண்டு கீழ்நாடுகள் தூங்கிக்கொண்டிருக்கின்றன" என்றால், அதற்கு அஹிம்ஸா தர்மத்தைப்பற்றிய நம்பிக்கையாவது கர்மத்தைப்பற்றிய நம்பிக்கை யாவது காரணமல்ல என்பதைத்தெளிவாக நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஆத்மவலிமையும் உடல்வலிமையும் பிடிவாதமான பயிற்சியும் கொண்டு போராடிக்கொண்டேயிருப்பதற்கு யுத்தம் அவசியமென்பதேயில்லை. ஆனால் சமரச சன்மார்க்க ஞானமும் ஆத்மநேச ஒருமைப்பாடும் கல்வியின் இன்றியமையாத பகுதி களாகக் கற்பிக்கப்பட்டாலொழிய, யுத்தபயம் அடியோடு தீர்ந்து போவதற்கு வழியில்லை.



வாலிபர் கானம்

இந்த இதழில் நெடுநாளாக எதிர்பார்த்த பரிசுக் கவிதை வெளியிடப்பட்டிருக்கின்றது. யுவ வருஷ ஆரம்பத்தில் 'வாலிபர் கானம்' வெளிவருகிறது. இந்தப்பரிசை உத்தேசித்து வந்த கவிதைகளுள் இதுவே பரிசுக்குரியதாக இவற்றை ஆராய்ந்த அன்பர்கள் கூடித் தீர்மானித்தனர்.

கவிதைகளை அன்புடன் ஆராய்ந்து அபிப்பிராயம் தெரிவித்த அன்பர்கள் :

(1) ஸ்ரீமான் டி.கே. சிதம்பரநாதமுதலியாரவர்கள் பி.ஏ.,பி.எல்.

(2) ஸ்ரீமான் கே. ஸ்வாமிநாதன் அவர்கள் எம். ஏ., பி. எல்.

(3) ஸ்ரீமான் பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், பி. ஏ., பி.எல்.

(4) ஸ்ரீமான் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள், பி.ஏ., பி. எல்.

(5) ஸ்ரீமான் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், ஆசிரியர், ஆனந்த விகடன்.

(6) ஸ்ரீமான் ஸ்ரீநிவாசதாதம் அவர்கள்.

(7) ஸ்ரீமான் வித்துவான் கி. வா. ஜகந்நாதையரவர்கள்

(8) ஸ்ரீமான் ரா. நாராயணசாமி ஐயரவர்கள், பி. ஏ., பி. எல். (நிர்வாகப்பத்திரிகாசிரியர்).

இப்பரிசு குறித்து வந்த கவிதைகளில் வெளியிடக் கூடியவற்றை அவ்வப்போது வெளியிட எண்ணியுள்ளோம். பரிசுக்குரிய அன்பர் ஸ்ரீமான் மே. ரா. மீ. சுந்தரம் அவர்கள் தம் விலாஸத்தைத் தெளிவாகத் தெரிவித்தால் அநுகூலமாக இருக்கும். தங்கப் பதக்கம், அவரிடமிருந்து கடிதம் வந்தவுடன் அனுப்பப்படும்.

புஸ்தகசாலைகள்

சென்னைப் புஸ்தகாலயப் பிரசாரசங்கத்தின் ஆரம்பப் பிரசங்கம் இவ்வருஷம் மார்சுமீ 25-ஆம் தேதி ஸெனெட்

மண்டபத்தில் ஸர். ஸி. வி. ராமனவர்களால் நிகழ்த்தப் பெற்றது. அதன் சாரம் வருமாறு:—

புஸ்தகசாலைகளைப்பற்றிக் கூறுமுன் ஒரு சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அலெக்ஸாண்டிரியாவில் கலிப்ஓமார் பெரியபிராசீன புஸ்தகசாலையை முன்னொருகால் தீக்கிரையாக்கினரென ஒருகதை சொல்லுவதுண்டு. இது எவ்வளவுதூரம் உண்மையென்பது தெரியாது. ஆனால் இதிலிருந்து ஒரு விஷயம் நாம் அறியக்கிடக்கிறது. நான்கூட பம்பாய் சர்வகலாசாலையில் பேசுகையில் புஸ்தகசாலைகளை ஒழிக்க இவ்வுபாயத்தை அனுஷ்டிக்கலாமெனக் கூறினேன். உபயோகமற்ற புஸ்தகங்களைச் சேகரிப்பதில் பயனில்லை. அதனால் நம் காலமும் மற்ற சவுகரியங்களும் வீணாக்கப்படுகின்றன. புஸ்தகசாலை விஷயம் நமது வாழ்வில் அடிப்படையாக இருக்கிறது. பிறரிடமிருந்து கேட்டு அறிவு பெருக்கடைவதைவிடச் சுயமாக விஷயங்களைப் பாகுபாடுபண்ணி அறிவேற்படுத்திக்கொள்வதே மேலாகும்; இவ்விதம் எல்லா விஷயங்களையும் நாமேபடித்தறிய வேண்டுமாயின் அதற்கு புஸ்தகசாலைகள் மிக அவசியமாகும். புஸ்தகசாலைகளில் உபயோகமற்றவைகளை ஒழித்து மிகவும் உபயோகமான உண்மை அறிவூட்டும் புஸ்தகங்களையே சேகரிக்கவேண்டும். இக்காலத்தில் அச்சுவேலை வலுவடைந்திருப்பதன் பயனாக ஏராளமான புஸ்தகங்கள் தினே தினே வெளியிடப்பட்டு வருகின்றன. புஸ்தகசாலையை நடத்துபவர் நன்கு விஷயமறிந்தவர்களாக இருக்க வேண்டும். வெறும் குமாஸ்தாவாக அவர்களைக் கருதக்கூடாது. புஸ்தகங்கள் உள்விஷயம் நன்கு அமைக்கப்பட்டனவாகவும், நன்கு அச்சடிக்கப்பட்டு அழகாகத் தயாரிக்கப்பட்டனவாகவும் இருக்கவேண்டும். புராதன புஸ்தகங்களில் சில அரிய உண்மைகள் இருக்கலாம். அவற்றை நாம் பாதுகாக்க வேண்டும். புஸ்தகங்கள் படிப்பதுடனில்லாமல் உண்மையான அறிவைப் பெருக்கிக்கொள்ளவும் நாம் முயற்சிக்கவேண்டும். சர்வகலாசாலைப் பட்டம் பெற்றபின் படிப்பு முடிந்ததாக நினைக்கக்கூடாது. அப்பொழுதுதான் ஆரம்பமாகிறதெனக் கருதவேண்டும். நல்ல புஸ்தகங்கள் வெளியிட்டுப் புஸ்தகசாலை நடத்தவேண்டிய முறைபற்றிய ஸ்ரீமான் ரங்கநாதனின் பல புஸ்தகங்கள் நமக்கு உபயோகமாக இருக்கின்றன. புஸ்தகங்களைச் சேகரிப்பதுடன் பத்திரிகை அல்லது ஸஞ்சிகைகளையும் சேகரிக்கவேண்டும். ஸஞ்சிகைகள் சிலவற்றில் பல அரிய விஷயங்கள் வெளியாகின்றன. சிக்கனத்தின் பெயரால் இப்பொழுது புஸ்தகசாலைகள்தான் முதலில் பாதிக்கப்படுகின்றன. இது கூடாது. தேகத்திற்கு எப்படி உணவு முக்கியமோ அப்படி புத்திக்குப் புஸ்தகங்கள் அவசியமென இதில் பணஞ் செலவழிக்க வேண்டும். அத்துடன் நல்ல புஸ்தகங்களுக்குப் பிறநாடுகளை நாம் எதிர்பார்த்திருக்கக்கூடாது. நம் நாட்டிலேயே நல்ல புஸ்தகங்களை இயற்றி வெளியிட வேண்டுகிறேன். சு-மீ.

தமிழர் ஸங்கீதம்

மார்ச்சு மீ 19-ஆம்உ இந்திய இளைஞர்கழகத்(Y.M.I.A.) தின் ஆதரவில் ஸ்ரீமான் காயக சிகாமணி முத்தையாபாகவதரவர்கள்செய்த பிரசங்கத்தின் சாரம் வருமாறு:

சங்கீதம் மனிதர்களுக்கு இணையில்லா இன்பம் கொடுக்குமோர் கலை. அது நம் தமிழ்நாட்டில் பழையகாலத்தில் பரிபூரண அபிவிருத்தி அடைந்

திருந்தது. இக்கலையில் ஆண் பெண்களுக்கு ஏற்றவாறு சுருதி அமைத்துப் பாடலாம். (சாதாரணமாய் மத்யம சுருதி பெண்களுக்கும் பஞ்சம சுருதி ஆண்களுக்கும் எடுத்தவை. மனிதர் குரல்கொண்டு பாடுவது ஒருபுறமிருக்க,) பலவித வாத்தியங்களைக் கொண்டு இன்னிசையுடன் பாடுவது பண்டைக் காலத்தில் நன்றாக விருத்தி அடைந்திருந்தது. வாத்தியங்களின் லக்ஷணங்கள், அமைப்பு இவை எல்லாம் மௌநாதிகார லக்ஷணமென்னும் அருமையான புராதனகிரந்தத்தில் கூறப்பட்டுள்ளன. இதுபற்றியே "குரலில்லாதவனுக்கு விரல்" என்று முதுமொழி ஏற்பட்டதுபோலும். சாதாரணமாக வாத்தியங்களின் அமைப்பு மனிதர்களின் உருவங்களை ஒத்ததாயிருக்கும். இந்த விஷயம் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறது. மனிதருக்கு ஈடில்லா இன்பமளிக்கக்கூடிய இன்னொரு விஷயமும் பழைய தமிழ்நாட்டில் பூரணமாக விருத்தியடைந்து இருந்தது. அதுதான் நர்த்தனம். இதை அனுபவிப்பது சாதாரணமான காரியமல்ல. இதை அனுபவிக்கப் பெரிய ஞானம் வேண்டும். இதில் பாவம், ராகம், தாளம் மூன்றும் சேர்ந்து சகல இந்திரியங்களும் லயித்தால்தான் பூரண அழகு ஏற்படும். இதற்காகப் பதம் என்னும் பாட்டு அமைப்பும் ஏற்பட்டது. பதத்தைப் பாடி, பாவத்தைப் பிடித்து, காலில் தாளந்தவறாது ஆடிவிட்டால், தெரிந்து அனுபவிப்பவனின் இன்பம் ஈடில்லாததாக இருக்கும். மனத்தில் தோன்றும் பற்பலஉணர்ச்சிகளைத் தகுந்தவாறு சங்கீதக்கலைமூலம் வெளியிட சப்தஸ்வரங்கள் உதவியாக இருக்கின்றன.

மொத்த ராகங்களின் கணக்கு அளவிடமுடியாத விஷயம். சிலப்பதிகாரத்தில் சங்கீதத்தைப் பற்றி அருமையான விஷயங்கள் உள்ளன. அது ஒரு சங்கீத பொக்கிஷம். தேவாரம் முதலியன சில கட்டுப்பாடுகளுடன் அமைந்த பாட்டுக்கள். திருத்தாண்டகம் தாளத்தில் கட்டுப்படாதது. மத்தியிலே சில காலத்தில் ஆண்ட அரசர்கள் சங்கீதம் இன்னல் பயக்கும் ஓர் கலை என நினைத்துப் பெரிய வித்வான்களை எல்லாம் சிக்ஷிக்க ஆரம்பித்தனர். இதனால் இக்கலை மங்கலாயிற்று. கோவிலில் மாத்திரமே சங்கீதம் அனுமதிக்கப்பட்டது. இந்த சிரமம் கொஞ்சம் கழிந்தபோது பின் வந்தவர்கள் குற்றுயிராக்கப்பட்ட சங்கீதக்கலையை உயிர்ப்பிக்க ஆரம்பித்தார்கள். முதலில் அவர்கள் பல்லவி பாகத்தைத் தொட்டு விட்டுவிட்டார்கள். பிறகு அருணாசலக் கவிராயர் பல்லவி அனுபல்லவி இவை எல்லாம் பாடினர். பாஷாஞானம், ரஸஞானம் இரண்டும் விருத்தியாகவேண்டும்.

தமிழ்நாட்டில் புராதன கிரந்தங்கள் பல ஆராய்ச்சி செய்வாரின்றிச் சிதைந்து போய்விட்டன. சிருங்கார சோக பக்திரசங்களும் மற்றும் எல்லா வித நயங்களும் பொருந்திய சங்கீதம் தமிழ்நாட்டில் உள்ளது. ஆராய்ச்சிக்கு ஆரம்பித்தால், நம் தமிழ்நாட்டுச் சங்கீத பொக்கிஷத்தின் விலைமதிக்கவொண்ணாத உயர்வு நன்கு வெளியாகும். சு-மீ.



தமிழ் தந்த வளம்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

தமிழ்நாட்டிலுள்ள சைவமடங்கள் பல. அவை பண்டைக் காலந்தொட்டே மேன்மேலும் விருத்தியாகிக்கொண்டு வந்தன. பல இடங்களில் நிலங்களையும் கிளைமடங்களையும் பெற்ற ஸ்தாபனங்கள் பல உண்டு. அவ்வக்காலத்தே மடங்களில் தலைமைவகித்தவர்களுடைய பேராற்றலாலும் அவர்கள்பால் உபதேசம் முதலியன பெற்றுக்கொண்ட துறவிகளாலும் மடங்களுக்கு நிலங்களும் பல வகைப் பொருள்வருவாய்களும் சேர்ந்தன. தங்கள் தங்கள் ஞானாசிரியரிடத்தில் உள்ள பக்திப்பெருக்கால் தமிழ்நாட்டிலும் பிறவிடங்களிலும் உள்ளவர்களைத் தம்முடைய கல்வியாற்றல் முதலியவற்றால் வசப்படுத்திப் பொருள்பெற்றுத் தம் ஆசிரியர்களுடைய திருவடியில் அர்ப்பணஞ்செய்த தம் நலங்கருதாத தம்பிரான்கள் பலருடைய முயற்சிகளால் அம்மடங்கள் வளம் பெற்ற வரலாறுகள் பல உண்டு.

திருவாவடுதுறை யாதீனத்தைத் தமிழுலகம் நன்கறியும். அவ்வாதீனத்திற்கு அடியாராக இருந்த தம்பிரான்கள் பலர் மேற்சொன்ன முறையில் நிலங்கள் முதலியன பெற்று அவற்றை ஆதீனத்துக்கு அர்ப்பணம் செய்துள்ளார்கள். ஸ்ரீ சிவஞானயோகிகளும் ஸ்ரீ கச்சியப்பஸ்வாமிகளும் சென்னை, காஞ்சீபுரம் முதலிய இடங்களில் தாம் பெற்ற பொருள்களை இங்ஙனமே ஆசிரியர்களுக்கே உரியனவாகக் கொடுத்துவிட்டார்கள்.

சற்றேறக்குறைய இருநூறு வருஷங்களுக்குமுன் நிகழ்ந்த வரலாறொன்று இத்தகைய தம்பிரான் ஒருவரது செயலை விளக்குகிறது. அவருடைய பெயரேனும் அவர் காலத்திலிருந்த ஆதீனத் தலைவருடைய பெயரேனும் இப்பொழுது தெரியவில்லை.

அத்தம்பிரான் தமிழ்க்கல்வியிற்றேர்ந்தவர்; இனிய செய்யுட்களை அழகிய கற்பனை அமையப் பாடும் வன்மையுடையவர்; வடமொழியறிவும் இசைப்பயிற்சியும் உள்ளவர்; ஞானசிரியர்பால் அளவிறந்த பக்தியும் திருவாவடுதுறை யாதீனத்தின் அபிவிருத்திக்குரியவற்றைச் செய்வதில் ஊக்கமும் நிரம்பியவர்; சிவபூஜா துரந்தரர்; தோற்றப் பொலிவும் துறவொழுக்கந் தவறாத தூய்மையும் அவருடைய சிறப்புக்குத் தனிக்காரணங்களாக விளங்கின.

அவர், ஆதீனத்திலுள்ள அபிமான மிகுதியினல் அங்கே நடைபெறும் சிவபூஜை மகேசுவர பூஜை முதலியன சிறப்பாக நடைபெறவேண்டுமென்னும் எண்ணங்கொண்டு பல இடங்களிற் சென்று தம்முடைய பலவகை ஆற்றலினல் அங்கங்கே உள்ள ஜமீன்தார்களையும் செல்வர்களையும் நட்பினராக்கி அவர்கள் மனங்கனிந்து கொடுப்பனவற்றை ஏற்று ஆதீனத்திற் சேர்த்து வந்தார். சென்ற இடங்களில் அவருடைய கல்வியாற்றலும் கவிவன்மையும் யாவரையும் கவர்ந்தன. அவரது தோற்றப் பொலிவு கல்லாரையும் அவர்பால் ஈடுபடச் செய்தது. திருவாவடுதுறையாதீனம் சைவப் பயிர் தழையும் இடமென்று அவர் வாயிலாக அறிந்த மக்களுக்கு அவ்வாதீனத்திற் பக்தி மிகுவதாயிற்று. 'இந்தத் தவ முனிவரே சிவகணத்துள் ஒருவரைப் போலத் தோற்றும்போது இவரைப்போன்ற பலரும் அவர்களுக்கெல்லாம் ஆசிரியராக ஒரு ஞானதேசிகரும் இருந்து விளங்கும் திருவாவடுதுறை இந்த உலகத்தில் வந்த கைலாஸம்போலத்தான் இருக்கவேண்டும்' என்று ஜனங்கள் எண்ணினர்கள். பலர் திருவாவடுதுறை சென்று ஞானசிரியரைத் தரிசித்து அங்குள்ள காட்சிகளைக் கண்டு களித்து மீண்டுவந்து தம்முடைய விம்மிதத்தைப் பிறருக்கும் தெரிவிக்கலானர்கள். இங்ஙனம் அத்தம்பிரானுடைய முயற்சி பல்கி நலம் பயப்பதாயிற்று.

திருவனந்தபுரத்தில் அக்காலத்தில் இருந்த அரசர் கல்வியாளர்களிடத்தில் பேரன்பு பூண்டு அவர்களுக்கு வரையாது வழங்கும் வள்ளலென்று அத்தம்பிரான் கேள்வியுற்ருர். அவர் பாற்சென்று பழகிவரவேண்டுமென்றெண்ணித் திருவனந்தபுரம் போய்ச்சேர்ந்தார். அவருடைய வரவை யறிந்து அங்கே இருந்த சைவச் செல்வர்கள் சிலர் அவரை வணங்கி உபசரித்தார்கள். அவர்கள் மூலமாக அந்த ஸம்ஸ்தானதிபதி வடமொழியிலும் இசையிலுமே விருப்பமுடையவரென்றும் தமிழ் வித்துவான்களை அவர் பார்த்தலரிதென்றும் தம்பிரான் அறிந்தார். ஆயினும் சிவ

கிருபையினுல் எவ்வாறேனும் அவ்வரசரைப் பார்த்துவிட்டுத்தான் செல்லவேண்டுமென்ற உறுதி பூண்டார். எவ்விதமாகப் பார்க்கலா மென்று யோசிக்கலானுர். அங்குள்ளவர்கள் அது நிறைவேறுவதரி தென்று சொல்லிவிட்டார்கள்.

இங்ஙனம் சிலகாலம் அவர் திருவநந்தபுரத்திலேயே காத்துக் கொண்டிருந்தார். சைவர்கள் அவரை மிக்க பயபக்தியோடு ஆதரித்து வந்தனர். ஒருநாள் அரசர் தம்முடைய குலதெய்வ மாகிய ஸ்ரீ பத்மநாபஸ்வாமியைத் தரிசிக்கும்பொருட்டுப் புறப் பட்டார். அவருடைய வரவை முன்னரே அறிந்த தம்பிரான் அன்று எவ்வாறேனும் மன்னரைக் காணவேண்டுமென்ற துணிவு கொண்டு அவர் வரும் வழியில் தக்க கையுறைகளுடன் நின்றனர். அரசர் அவ்வழியே வரும்போது அவருக்கு முன்வரும் சேவகர்கள் தம்பிரானைக் கண்டார்கள்; அவருடைய நெற்றியிலும் மேனியி லும் உள்ள திருநீறும் காதிலிருந்த ஆறுகட்டி சுந்தரவேடமும் மார்பில் விளங்கிய கௌரீசங்கரத்தோடுகூடிய ருத்ராட்சமாலையும் ஜடாபாரமும் நீண்ட தாடியும் மீசையும் கடுங்காவி உடையும் அவர்களை அஞ்சச்செய்தன. வழக்கமாக வழியிலுள்ளவர்களை விலக்குவதுபோல அவரை விலக்க அவர்கள் பயந்தார்கள்.

அரசர் தம்பிரானைக் கண்டார்; தம்பிரானது தோற்றப் பொலிவில் ஈடுபட்டு நின்ருர்; இதுதான் சமயமென்றெண்ணிய தம்பிரான் கையுறைகளை மன்னரிடம் அளித்தார்; அரசர், எதிர்பாராத அவருடைய செயலுக்கு வியந்து அருகிலுள்ளவர் களைக்கொண்டு அவரை யாரென்று விசாரிக்கச் செய்தார். அப் பொழுது அவர் இசையோடு பின்னுள்ள பாடலைச் சொன்னுர்:

(எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

“மாறிடத் துலவு வேற்படை வஞ்சி
மன்னவ செந்தமிழ் மயில்யாம்
கூறுமூ வேந்தர் திருமுடி துளக்கக்
குலவினேம் நின்குலத் தோருவன்
ஆறுசேர் சடையா னவைமுன நம்மை
அணிசெய்தா ஞரியப் போதுப்பெண்
சீறுமேன் றுணர்ந்தாய் நீயிவண் மதியாய்
திருமுனி மலயமே குதுமே.”

[இதன்பொருள்:—போரில் பகைவர்கள் கூட்டத்திடையே உலாவுகின்ற வேலாயுதத்தையுடைய வஞ்சிமாநகரத்துக்கு அரசே!

நாம் செந்தமிழாகிய பெண்; முன்பு நாம் சேரசோழபாண்டியர்களாகிய மூவரும் தம் தலைவணங்க மகிழ்ந்திருந்தோம்; அவர்களுள் உன்னுடைய குலத்தில் ஒருவராகிய சேரமான்பெருமாள் நாயனார் கங்கைசேர்ந்த சடைமுடியையுடைய சிவபெருமானது திரு முன்னர் அழைத்துச்சென்று நம்மை அழகுபெறச் செய்தார். இத்தகைய பெருமையும் உன்குலத்துக்கு உரிமையும் உடைய எம்மை, ஆரியமாகிய பொதுமகள் கோபிப்பாளென்று எண்ணி இங்கே எம்மை மதியாமலிருக்கின்றாய்; ஆதலின் இனி எம்மை வளர்த்த அகத்திய முனிவருக்குரிய பொதியின்மலைக்குப் போய் விடுகிறோம்.

திருமுடி துளக்க—சிரக்கம்பம் செய்யவென்றும் பொருள் கொள்ளலாம். அணிசெய்தானென்றது கைலைமலையில் சேரமான் பெருமாணாயனார் திருக்கைலாய ஞானவுலாவை அரங்கேற்றியதைக் குறிப்பித்தவாறு.]

தனக்குரியவளாகிய மங்கை ஒருத்தியைப் புறக்கணித்துப் பொதுமகளோடு நட்புப்பூண்ட ஒருகணவனை நீங்கி அவள் தன் பிறந்த வீடு சென்றுவிடும் வழக்கத்தை நினைவிற்கொண்டு இச் செய்யுள் செய்யப்பட்டது. ஆரியத்தைப் பொதுமகளென்றது, பரதகண்டத்திலுள்ள நாடுகள் எல்லாவற்றிற்கும் அது பொதுவாகி வழங்கிவருதல்பற்றி. சொல்லமைதியால் இழிவுடையது போலத் தோற்றினும் பொருளமைதியால் மிக்க வியாபகத்தையுடைமையைப் புலப்படுத்தி நின்றது.

தம்பிரான் தாம் பல நாளாகக் காத்திருப்பதைக் கூறிவிட்டு இச்செய்யுளின் பொருளை விரித்துரைத்தார்; அரசருக்குப் புலப்படும்வண்ணம் வடமொழித்தொடர்களாலும் விஷயங்களை விளக்கினார். செய்யுளின் பொருளை உணர்ந்த அரசர் தம்பிரானுடைய சாதுர்யத்தை அறிந்து மகிழ்ந்தார். தமிழைப் புறக்கணித்தது தவறென்பது அவர் மனத்துக்குப் புலப்பட்டது.

அரசர் அவருக்கு வேண்டியவற்றை அளித்து உபசரிக்கும்படி அருகில் நின்ற உத்தியோகஸ்தர்களிடம் கட்டளையிட்டு விட்டு ஸ்வாமிதரிசனம் செய்யச்சென்றார். தரிசனம் செய்த பிறகு அரண்மனைக்கு வந்து கவனிக்கவேண்டியவற்றை முடித்துக்கொண்டு தம்பிரானை அழைத்துவரச் செய்தார்.

தம்பிரான் அரசரைக் கண்டார்; அவருடைய ஸல்லாபத்தால் தமிழ்மொழியின் வளப்பத்தை அரசர் அறிந்ததோடன்றிச் சேரர்கள் தமிழை வளர்த்த வரலாற்றையும் நன்றாகக் கேட்டுத்

தெளிந்தனர். திருவாவடுதுறை ஆதீனத்தின் பெருமையைப் பல படியாக எடுத்துரைத்தார்; தம்பிரானுடைய அறிவின் திறத்தையும் தூய்மையையும் அரசர் உணர்ந்ததன்றி அவ்வாதீனத்தின் பால் அவருக்கு நன்மதிப்பு உண்டாயிற்று. அவ்வாதீனத்திற்குச் செய்யப்படும் உதவிகளெல்லாம் சிவபூஜை மகேசுவர பூஜைகளிலும் பல அறச்செயல்களிலும் பயன்படுகின்றனவென்றும் அம் மடத்தினது விருத்தியானது ஊருணி நீர் நிறைந்ததற்கொப்ப உலகுக்குப் பயன்தருமென்றும் தம்பிரானுடைய வார்த்தைகளால் அரசர் அறிந்தார். தம்பிரான் சிலகாலம் அரசருடைய ஆதரவில் அங்கேயே இருந்து தமிழ் நயத்தை இயன்றவரையில் எடுத்துக் காட்டினார்.

பிறகு தம்பிரான் திருவாவடுதுறை செல்ல எண்ணி அரசர் பால் விடைபெறுதற்கு விருப்பங்கொண்டார். அதுகாறும் அத் தகையவர்களோடு பழகியறியாத அரசர் அவருடைய தூய்மையில் ஈடுபட்டமையால் அவரைப் பிரிவதில் சிறிது மனம் வருந்தினர். அப்பால் பலவகையான பொருள்களை உதவினர். பட்டுக்களும், பீதாம்பரங்களும், பூஜைக்குவேண்டிய வெள்ளிப்பாத்திரங்களும், பிறவும் வழங்கினர்; அவருக்கு ஒரு பல்லக்கு அளித்து அதனைச் சுமப்பவர்களுக்குரிய அடித்தூண் சம்பளத்துக்கு வேண்டும் பொருளையும் ஈந்தார்; "நீங்கள் அடிக்கடி இங்கேவந்து போக வேண்டும்" என்று கூறி விடையளித்தார்.

தம்பிரான் தாம் பெற்றபொருள்களோடு திருவாவடுதுறை வந்து யாவற்றையும் ஞானசிரியர் திருமுன் காணிக்கையாக வைத்துப் பணிந்தார்; "இவை தமிழ் தந்த வளம்" என்று சொல்லித் திருவநந்தபுரத்தில் நிகழ்ந்தவற்றை விரிவாகச் சொன்னர்.

அந்தத் தம்பிரானும் திருவநந்தபுரம் அரசரும் பூத வுடம்பை நீத்தனராயினும் தமிழ் தந்த வளம் இன்றும் திருவாவடு துறை ஆதீனத்துக்கு உரியதாக விளங்குகின்றது.

இவ்வரலாற்றை முதலில் எனக்குச் சொன்னவர் திரிசிபுரம் ஸ்ரீ சி. தியாகராச செட்டியாரவர்கள்.



பாரதியின் பண்பு

ப. அ. நடேசன்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று."

அழியும் இயல்பினை யுடைய இவ்வுலகில் என்றும் நின்று நிலவுவது புகழேயன்றி வேறு ஒன்று அன்றாகலால், என்புதோல் போர்த்த புன்புலால் உடலைச் சுமையெனக் கருதிய மெய்ப்பயன் கண்டார் தம்புகழை நிறுவச் செயற்கரிய செய்ய விழைகின்றனர். அங்ஙனம் அழியாப் புகழை அடைந்தவருள் காலஞ்சென்ற வரகவி சுப்பிரமணியபாரதியார் ஒருவராவர். இவர் 'பிறந்த பொன்னாடும் தாய் மொழியும் நற்றவ வானினும் நனிசிறந் தனவே' என்னுங் கருத்துடையவர். இவரது புகழ் தமிழக மட்டுமன்றி ஏனைய நாடுகளிலும் பரவியிருக்கிறதென்பது ஒரு மேனாட்டறிஞர், 'இந்தியாவில் நூதன உணர்ச்சி' என்னும் தமது நூலிற் பின்வருமாறு இயம்பியிருப்பதிலிருந்து அங்கை நெல்லிபோல் அறியப்படுகின்றது: "அந்தச் சென்னையின் தமிழ்க்கவி, லஜபதிராய் தேசப்பிரஷ்டஞ் செய்யப்பட்டபோது தாம் எழுதிய புலம்பலைப் பாடினார். அது தேசப் பிரஷ்டஞ் செய்யப்பட்டவர்கட்கெல்லாம் பொதுவான புலம்பலென்னலாம். வீட்டைப்பற்றிய இன்பநினைவுகள், சிறுவயதில் விளையாடிய நாட்டினிடம் ஆழ்ந்தபற்று, அன்னியர்களிடையும், விளங்காத மொழிகளிடையும் வாழ்க்கையின் ஏகாந்தமான தன்மை வெகு சாந்தமுடனும் எளிதாகவுஞ் சொல்லப்பட்டிருந்தன."

இப்புலவர் பெருமான் தமிழ்மொழிக்குப் புதிய ஒளியும், தமிழுலகுக்குப் புத்துணர்வும் புத்துயிருமளித்து மக்களுக்கு இன்பம் ஊட்டிய சான்றோர். தம் இளமைப் பருவத்திலேயே கவியியற்றுந் திறமையுடையவர். எட்டு ஒன்பதாவது பருவத்திற்றானே கொடுத்த அடிகளையுங் கருத்துக்களையுங் கொண்டு அதிவிரைவில்

அற்புதமான கவிகளைப் பூர்த்திசெய்து புலவர் பேரவைகளை வியப்புறச் செய்தனரென அவர் சரிதை கூறுகின்றது. சம்பந்தரும், குமரகுருபரரும் முறையே தமது மூன்று ஐந்தாம் பிராயங்களில் கவிபாடினர் என்பதிலிருந்தும், பாரதியார் சரிதையிற் கண்கூடாகப் பார்த்ததிலிருந்தும், ஒருவர்க்குப் பாவியற்றும் வன்மை எளிதில் வருந்தன்மையற்றதெனவும், அது இயற்கையெனவும் அறிகின்றோம். இன்னவருடைய பாவன்மையையும், நாவன்மையையும் கண்ணுற்ற பாவலர் பலர் இவருக்குப் பதினோராண்டுப் பருவம் நடக்குங்காலைப் 'பாரதியார்' என்னும் பட்டத்தை அளித்தனர். இவர் சிறுவயதிலேயே அநேக புலவர்களுடன் வாதாடி வென்றவர். எடுத்துக் காட்டாக அடியிலிரண்டு உதாரணங்கள் கூறுவாம்:

(1) திருநெல்வேலி இந்து கலாசாலையில் மாணவராயிருந்த போழ்து இவரை அடக்க எண்ணிய தமிழ்ச்சுவை சிறிதறிந்த கல்லூரி மாணவரொருவர் ஓர் பேரவையின்கண் 'பாரதி சின்னப் பயல்' என்னுங் கடையடியைக் கொடுத்து வெண்பாவொன்று இயற்றுமாறு கூற, ஆண்டுக் குழுமியிருந்த மக்களனைவரும் வியப்படையும்வண்ணம் அவ்வெண்பாவின் மூன்றுவதடியின் இறுதியில், அக்கவியை இயற்றச் சொன்னவர் பெயரைக் 'காந்திமதி நாதனை' என்று அமைத்துச் சிறிது நேரத்தில்,

"................காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்"1

என்று பாவை முடித்துத் தம்மிடம் செருக்குக்காட்டிய எதிரியைத் தலைகுனியச் செய்தனர்.

(2) இவர்பால் அழுக்காறுற்ற தமிழ்ப்பண்டிதரொருவர் தம் கேள்விக்கு விடைபகராப் பாரதியை நோக்கி, "மேகம்போலக் கவிகள் பொழிவதாக ஊரிலே புகழப்படுகிறீர். நேரான இடத்திலும் இருக்கிறீர். காளமேகம்போற் பொழியாமற் சும்மா விருப்பதேன்?" என்று ஏளனஞ்செய்ய, நமது கவி, "பண்டிதரவர்கட்கு மேகத்தின் சாமான்ய குணங்கூடத் தெரியாமலிருக்கிறதே? காளமேகம் தனக்குத் தோன்றியபொழுது மழைபொழிவதன்றிப் பண்டிதர் உத்தரவிற்குப் பயந்து பெய்வதில்லையே? இஃதறியாமல் பேசும்படி கட்டாயப்படுத்தும் பண்டிதரிடத்திற் பரிவுகாட்டுவதெப்படி?" என்று விடையிறுத்து ஆசிரியரை நாணச்செய்தனர்.

மாணவ நிலையிலேயே பாவியற்றும் வன்மை அமையப்பெற்ற பாரதியார் நாளடைவில் மக்கள் மனத்தைக் கொள்ளை கொள்ளும் இன்னிசைக் கீதங்களை இயற்றுவாராயினர். தம்

1. காந்திமதிநாதனைப் பார்; அவன் மிகச்சின்னப்பயல், என்றவாறு.

முடைய கீதங்கள் தமக்கு இன்பம் பயப்பதோடு உலகுக்கும் இன்பம் கொடுத்தலான், இவர் மேன்மேலும் பாவியற்றுந் தொழிலினைக் காமுற்றனர். கம்பன் காலத்தை ஒட்டிய கவிகளிற் சொல்லழகும் பொருளழகும் ஒருங்கே வாய்ந்து மிளிர்தலைப் போன்று இவர் பாக்களும் அவ்விரு நயங்களையுந் தாங்கி, யாவரும் எளிதில் உணரும் இனிய ஆற்றொழுக்கன்ன நடையினைப்பெற்று மாண்புற விளங்குகின்றன. தற்காலத் தமிழ்ப்புலவர்களின் தன்மையைப் பாரதியாருடன் ஒப்பிட்டு நோக்குங்கால் பின்னவர் மிகவும் புறம்பே யுள்ளவர். ஏனெனில் தற்காலப் பாக்கள் பெரும்பான்மையுஞ் சொல்லழகைத் தவிர்த்துப் பிறிதொன்றினையும் உடையனவல்ல. "தற்காலம் தழைகளே தழைவதாகவே, மணமற்ற தழைமாலைகளே பெரும்பாலும் தொடுக்கப் படுகின்றன. அழகு, மணம் முதலிய இயற்கைநலம் இல்லாதனவாகத் தழைகளை, வினைத்திறம் மலியப் பல்வேறுபட்ட இலைமாலைகளையே பலரும் முடைகின்றனர். இவ்வனத்திடையே தளரா ஊக்கமுடையான் ஒரு புலவன் வெறுஞ்செடிகளைக் களைந்து, நிலந்திருத்தி, உணர்வு நீர் வார்த்து, உரன்கதிரூட்டி வளர்த்த நல்ல தமிழ்ப்பழந் தோட்டத்தில் நறுமலருஞ் சுவைக்கனியுங் காணப்பெற்றால் அவை அவ்வனத்தியல்புக்கும் பொருத்தமற்ற விளைவாகவே தோன்றும். பாரதியார் பாக்கள் இப்படிப்பட்ட இலைவனத்திடை எழுந்த கனிமலர்த் தோப்பாம்" என்று ஒருதமிழன்பர் மொழிவது குறிப்பிடற்பாற்று. பாரதியாரைக் குறித்து ஒரு சிலர் இழிமொழி இயம்புகின்றனர். அன்னோர் பாரதியாருடைய அரும்பெருங் குணங்களையும், உயரிய கருத்துக்களையும், கற்பனைகளையும், தாய் மொழியன்பையும், மனத்தை உருக்குங் கவித்திறனையும் நன்கு கூர்ந்து அறிந்திலர் போலும். இவ்விருபதாம் நூற்றாண்டில் புலவர்க்குரிய எல்லா இலக்கணங்களும் எஞ்சாது அமையப்பெற்று இசையுடனிலங்கும் கவிகளை இயற்றியவருள் பாரதியாரும் ஒருவரென்பதை எவரும் அறிதல் வேண்டும். பாரதியாரின் ஆற்றலை உணராதவர், பருகுவரன்ன ஆர்வத்தராகி, கள்ளமற்ற உள்ளத்தில் தமிழ்ப்பற்றை மேற்கொண்டு பாரதியார் இயற்றிய நூல்களைக் கற்குமாறு யாம் பெரிதும் வேண்டி நிற்கின்றனம்.

இப்புலவரின் கவிகளும் நடையுமே இவருடைய பொன்றாப் புகழை நன்கு விளக்குகின்றன. அக்கவிகளானே இவர் புலமை மிகவும் விளங்கித் தோன்றுகின்றது. 'உள்ளங் கொள்ளை கொள்ளும் பாட்டின் மூலமாகத்தான் தேசபக்தியை உள்ளபடி உணர்த்த முடியும்' என்ற கூற்றிற்கிணங்க இவருடைய கவிகள் தமது நாட்டன்பை விளக்குவதற்கு எழுந்தனவாகும். 'அதிவேகமாகப்

பறக்குந் திறத்தாலும், இறகுகளின் வர்ணவனப்பினாலும், உள்ள முருக்கும் பாட்டின் இனிமையாலுஞ் செருக்குற்ற ஒரு பட்சிக்கு இவரை ஒப்பிடலாம்.' இவரை முக்கியமாக வீரர் புகழியம்புங் கவி என்று கூறுதலே பொருந்தும். 'காலவித்தியாச மின்றேல் இவர், புறநானூற்றுச்செய்யுட்களை இயற்றிய கவிகள் முன்னாளில் தமிழ்வேந்தரின் ஸம்ஸ்தானங்களிற் பெற்ற புகழும் பொருளும் பெற்றிருக்கக்கூடும். ஆனால், இவரோ ஓர் துர்பிட்சகாலத்தில் வாழ நேர்ந்தமையின், தமது தாய் நாட்டின் வீழ்ச்சியைப் பற்றியும், புதிய கட்சியின் அவா அச்சங்களைப் பற்றியும் பாடினார்.' பாரதியார் ஏனைப்புலவர்களைப் போலல்லாது தமிழ்மொழிக்குச் சில நூதன முறைகளை இயற்றிவைத்துப் போயினர். தமிழ்மொழியின் கண் பாவும் பாவினங்களும் மலிந்துகிடக்கும்போழ்து அவைகளை விடுத்துப் புதிய உணர்ச்சிகளை விளக்க யாரும் கையாளாத நூதன யாப்புக்களையும் விழுமிய நடைகளையும் மேற்கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு பாடலும் வெவ்வேறு முறைகளைத் தழுவியதாகும். செய்யுள் நடையிலும், யாவரும் எளிதிற் கொள்ளும் வசன நடையிலும் அரிய கருத்துக்களை யுள்ளிட்ட கதையியற்றுவதில் பாரதியார் மிக வல்லுநர்.

இவர் ஆங்காங்கே எடுத்தாளும் உவமைகள் மிகவும் இன்பம் பயப்பன. பெரும்பான்மையும் இவர் இயற்கை வனப்பிலிருந்தே உவமைகள் தெரிந்தெடுத்துக்காட்டுகிறார். எளிய உவமைகளா பெரிய நீதிகளை யுணர்த்தும் புலவர் கோமான் இவர்.

'கன்னத்தில் முத்தமிட்டால் - உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி'

'திங்களை மூடிய பாம்பினைப் போல செறிகுழல்'

'வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ? என்றும்
ஆரமு துண்ணுதற் காசைகொண் டார்கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ?'

'முறத்தினாற் புலியைக் காக்கு மொய்வரைக் குறப்பெண் போலத்
திறத்தினல் எளியை யாகிச் செய்கையால் உயர்ந்து நின்றாய்'

எனவரும் உவமைகள் ஒரு சிலவே ஆயினும் அவருடைய உவமைத் திறனும் நயமும் முற்காலப் பாவலர்களை ஒப்ப மிகவும் பொருத்தமுடன் இனிமை பயப்பதைக் காண்க.

பாரதியார் பெரியதேசபக்தரென்பது அவர்பாடிய கீதங்களி லிருந்து உணரக்கிடக்கின்றது. அவர் பாரத நாட்டின்மீது இயற்றி யிருக்கும் பாக்கள் தாய்நாட்டன்பு மீதூர எழுந்தனவேயாம்.

'கூட்டத்திற் கூடிநின்று
கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்திற் கொள்ளாரடி - கிளியே
நாளில் மறப்பாரடி.'

இதுபோன்ற பல பாவிலிருந்தும் ஏனைய நடத்தையிலிருந்தும் இவர் சிலரைப்போன்று பெயரளவில் மாத்திரம் பக்தரல்ல வென்று தெரிவதுடன், போலித்தேசபக்தரைப் பழித்தறிவுறுத் தும் தன்மை இவரிடத்திலிருப்பதும் தெரிகின்றது. மேலும், காந்தி, லஜபதிராய், திலகர், நவுரோஜி முதலிய தேசபக்தர்களைப் புகழ்ந்தியற்றிய பாக்கள் இவரது தேசபக்திக்கு அடிகோலி நிற்ப துடன், இவர் பெரியோரைப் பேணுங்கொள்கையுடையரென்பதை யும் நன்கு விளக்குகின்றன.

'அன்னியர் தமக்கடிமை யல்லவே— நான்
அன்னியர் தமக்கடிமை யல்லவே',
'ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே',
'யார்க்கும் குடியல்லேன்'

என்று இவர் கூறிய அடிகள் உண்மைத் தேசபக்தர்கட்குத் தெவிட்டா இன்பம் பயப்பதோடு புத்துணர்ச்சியையும் வீரத்தை யும் ஊட்டுகின்றன. மாதர்சுதந்திரத்தை இவர் வேண்டி நின்று ரென்பது, 'மாதர்க்குண்டு சுதந்திரம்', 'பெண்கள் விடுதலைக்கும்மி' முதலிய பாட்டுக்களிலிருந்து விளங்குகின்றது. பலவிதச் சாதித் திரிபினால் இந்தியமக்கள் கீழ்நிலையெய்தின ரென்றும், அவ்விதச் சாதித்திரிபே பிணக்கிற்குக் காரணமெனவும் இவர் கருதியதனால் அந்தக் கொள்கையை ஆங்காங்கே திடமுடன் நாட்டியிருக் கின்றார்.

'ஜாதி மதங்களைப் பாரோம்',

'ஜாதி யிரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ்மகள் சொல்லிய சொல்அமிழ்தமென்போம்',

'எல்லோரு மோர்குலம் எல்லோரு மோர்இனம்'

எனவரும் அடிகளைப் படிக்குந்தோறும் எண்ணுந்தோறும் மக்க ளின் மனம் உண்மை நிலையை நாடி எல்லாரும் ஒன்றென்னும் உறுதியை யடைகின்றது.

'எப்பதம் வாய்த்திடு மேனும் - நம்மில்
யாவர்க்கு மந்த நிலைபொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்',
'எல்லாரு மொன்றெனுங் காலம் வந்ததே',
'ஏழையென்று மடிமையென்று மெவனுமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனித ரென்ப திந்தியாவி லில்லையே'

என்று பொறித்த பொன்மொழிகளிலிருந்தும்,

'குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு மேன்மையுறக்
குடிமை நீதி
கடியொன்றி லெழுந்ததுபார்; குடியரசென் றுலகறியக்
கூறி விட்டார்
அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போ தடிமையில்லை
அறிக!'

என ருஷியதேசத்தைப் புகழ்ந்திருப்பதினின்றும், மற்றும் இவருடைய பொதுநோக்கங்களிலிருந்தும் இவர், யாவர்க்கும் ஓரே நிலையைக் கொடுக்கும் பொதுவுடைமை அரசியல் வேண்டுமென்னுங் கொள்கையைத் தாங்கியவரென்பது தெரிகிறது.

'நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்'

என்ற தொடக்கத்தினையுடைய, பாரதமக்களின் நிலையினை யுணர்த்தும் பாக்களும்,

'கரும்புத் தோட்டத்திலே - அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்து கின்றனரோ - ஹிந்து
மாதர்தங் நெஞ்சு கொதித்துக் கொதித்துமெய்
சுருங்கு கின்றனரே - அவர்
துன்பத்தை நீக்க வழியில்லை யோவொரு
மருந்திதற் கிலையோ - செக்கு
மாடுகள் போலுழைத் தேங்குகின் றாரந்தக்
(கரும்புத் தோட்டத்திலே)'

என்று பெண்களின் கோரநிலையினைக் குறிக்குஞ் செய்யுட்களும் மக்களுளத்தில் என்றும் மாறா இரக்கத்தை ஊட்டுகின்றன வல்லவோ? இவ்விதப் பாடல்களே உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கும் வீரத்தினை மேன்மேலும் தூண்டுகின்றன.

பாரதியார் உழவுக்குந் தொழிலுக்கும் வணக்கஞ்செலுத்துகின்றார். இவர் பலவிதக் கலைகளிலும் ஆர்வமிக்குடையரென்பது ஓவியர்மணி இரவிவர்மனைப் புகழ்ந்திருப்பதினின்றும் மற்றுஞ் சில செய்யுட்களினின்றும் விளங்கித் தோற்றுகின்றது.

பாரதியார், ஆய்ந்தறிந்து தொடங்கிய ஒருவினையை மெய் வருத்தம் பாராதும் எவ்வெவர் தீமையை மேற்கொள்ளாதும் முடிக்கும் அஞ்சா நெஞ்சினைப் படைத்தவரென்பது,

'சதையைத் துண்டுதுண் டாக்கினு முன்எண்ணம் சாயுமோ',
'அச்சமில்லை யச்சமில்லை அச்சமென்ப தில்லையே',
'இதந்தரு மனையினீங்கி இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு விரண்டு மாறிப் பழிமிகுத் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி யின்னல் விளைந்தெனை யழித்திட் டாலும்
சுதந்திர தேவி! நின்னைத் தொழுதிடல் மறக்கி லேனே'

என வருவனவற்றால் தெள்ளிதிற் புலப்படுகின்றது.

(தொடரும்.)

மாண்டவர் மீளும் மாயம்

இறந்தவர்களைப் பிழைக்கவைப்பது எவ்விதம் என்று பலவேறு நிபுணர்கள் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். சோவியத் ரசாயன நிபுணர்கள் இவ்விஷயத்தில் சிறிதுவெற்றியடைந்து விட்டனரென்று இப்பொழுதுகிடைத்த செய்தியிலிருந்து தெரியவருகிறது. சோவியத் வைத்தியர்கள் பலரால் இறந்தவனின்தேகத்தில் இரத்தத்தைச் செலுத்தி அவனை எழுப்பும்முறை பரீக்ஷை செய்யப்பட்டு வருகிறது. இதுவரை இந்தப்பரீக்ஷை இறந்துபோன மிருகங்களின்மீது செய்து பார்க்கப்பட்டது. இப்பொழுது மனிதன் விஷயத்திலும் இது சாத்தியமாகுமென்று கருதப்படுகிறது. தூக்குப்போட்டுத் தற்கொலை செய்துகொண்ட ஒருவனது தேகத்தை மாங்கோ இரத்தப் பரிசோதனை மத்தியஸ்தாபனத்தார் கொண்டுவந்து 'கிருத்ரிம ஹ்ருதயம்' என்பதை அத்தேகத்தின் இரத்தக் குழாயுடன் பொருத்தி இரத்தத்தைச் சில நிமிஷங்கள்வரை சிறிதுசிறிதாக உள்ளே செலுத்தினர். கொஞ்சநேரத்தில் மூச்சும், மற்றும் பிழைத்திருக்கும் போதுள்ள அறிகுறிகளும் தென்படலாயின. ஆனால் இரண்டு நிமிஷநேரமே இக்காட்சி இருந்தது. பின்னர் மறுபடி அத்தேகம் உயிரற்றதாயிற்று. இவ்விஷயத்தில் பூரணவெற்றி கிடைக்கா விட்டாலும் இதுவே மற்றும் தீவிர ஆராய்ச்சிக்குத் தக்க தூண்டுகோலாயிருக்கும் எனக்கருதப்படுகிறது.

கடற்கரை மாலைக்காட்சி

தென்குமரி

வி. சுடலைமுத்துப் பிள்ளை

---

(1) கன்னிக் கடலருகே —அழகாய்க்
காணுங் கரையினிலே
மின்னும் மணற்பரப்பில் —குழந்தாய்!
மெல்ல இருந்திடம்மா!

(2) புன்னைப் புதியமலர் —விரியும்
பொன்னவிர் தாழைமலர்
சின்னஞ் சிறுதென்றல் —குழந்தாய்!
சிந்தி விரிக்குதம்மா!

(3) மன்னிய ஆலயமும் —அடுத்த
மன்னவன் மாளிகையும்
உன்னத மாமதிலும் —குழந்தாய்!
ஓதருங் காட்சியம்மா!

(4) முத்தும் பவளமும்போல் —பரந்து
மொய்க்குந் திவலைகளைத்
தத்தும் அலைமிகவே —குழந்தாய்!
தந்து தருக்குதம்மா!

(5) பென்னம் பெருமுதலை —சுறவு
பிள்ளைத் திமிங்கிலமும்
துன்னி மிதப்பதுபோல் —குழந்தாய்!
தோற்றுமிப் பாறைகள்பார்!

(6) ஓடி விரைந்துவரும் —பரதவர்
ஓடங்கள் சண்டிடவே
தேடும் அவர்சிறுவர் —குழந்தாய்!
சிங்கி அடிப்பதுபார்!

(7) பத்தரை மாற்றுப்பொன்னில் —பிரமன்
பண்ணிய நண்டிதுவோ?
எத்தனை வேகமதாய்க் —குழந்தாய்!
இங்கிருந் தோடுதம்மா!

(8) தெள்ளித் திரைகொழித்துக் —கரையில்
சேர்த்திடுஞ் சிப்பிகளைப்
பிள்ளைகள் பொன்மணிபோல் —குழந்தாய்!
பேணிப் பொறுக்குதல்பார்!

(9) பற்றி எரியுங்கப்பல் —குழந்தாய்!
பாதலம் ஆழ்வதுபோல்
முற்றிய ஆழியிலே —கதிரோன்
மூங்கி மறையுதுபார்!

(10) வெய்யோன் அமிழ்ந்தகடல் —குழந்தாய்!
வெட்டி விலகிடவே
துய்ய பவளஒளி —விசும்பில்
தோன்றித் துலங்கியதோ!

(11) சிந்துரம் வைத்தகலம் —உடைந்து
சிந்திச் சிதறுதல்போல்
அந்தி தரும்விசும்பைக் —குழந்தாய்!
ஆரே மறப்பரம்மா!

(12) சொக்குக் கிரணமிட்டுக் —குழந்தாய்!
சோமன் வருவனென்று
செச்கச் சிவந்தசேலை —விசும்பும்
தேடி அணிந்ததுவோ!

(13) சேக்கரின் வானமதைப் —பறவை
தீப்பட் டெரியுதென்றே
ஒக்கப் பறந்துகரை —குழந்தாய்!
ஓடி வருவதுபார்!

(14) சோவில் மணிகளெல்லாம் —முழங்கக்
கூட்டங் கலையுதம்மா!
ஆவலாய் வீடுசெல்வோம் —குழந்தாய்!
அந்தி முழுக்குதம்மா!

என் புத்தகங்கள்

குமுதினி

என் உலகம் சிறியது. பல காரணங்களால் இவ்விதம் ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் உலகத்தில் கிடைக்கும் பெரிய அதிருஷ்டங்களில் ஒன்று புத்தகங்கள். என் வாழ்க்கையின் இன்பங்களில் பாதிக்கு மேல் புத்தகங்களால் ஏற்பட்டவை. அவைகள் பால் நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

தம் சந்தோஷத்தைப் பற்றிப் பேசுவதும் அதைப் பகிர்ந்து கொள்ள விரும்புவதும் மனிதர் இயற்கை. என் புத்தகங்களைப் பற்றிப் பேசவேண்டுமென்று எனக்குச் சிலசமயம் அதிகம் விருப்பமுண்டாவதுண்டு. அது பிறருக்கு ரஸிக்காதோவென்கிற பெரிய தயக்கமும் இருக்கிறது. ஆனால் அவைகளை எழுத்து மூலமாக வெளியிட்டால், என் எண்ணங்கள், குணங்கள் பிடிக்காதவர்கள் சுலபமாகப் பக்கத்தைப் புரட்டி விடலாமல்லவா?

"நேற்று 'பவ்லோவா' என்னும் நடிகையின் நாட்டியக் கச்சேரிக்குப் போயிருந்தேன். எவ்வளவு அற்புதமாக நடித்தார், தெரியுமா! ஆஹா!! தெய்விகம்! அமாநுஷ்யம்!! அப்ஸரஸ்களின் நாட்டியமென்றே சொல்லலாம்!!! இந்த மாதிரி ஆடினார்" என்று சொல்லி, சற்றுக் குட்டையாகவும் கட்டையாகவும் இருந்த ஒருவர் தம் நண்பர்களுக்கு நடித்துக் காண்பித்தாராம். அதாவது, அவ்விதம் நடித்தால் எவ்வாறிருக்குமென்று ஒரு சித்திரக்காரர் சித்திரம் வரைந்திருந்தார். என் புத்தகங்களின் மேன்மையைப் பற்றி நான் சொல்ல முயன்றாலும் அவ்விதந்தானிருக்கும் என்ற சந்தேகம் எனக்கு உண்டாகிறது. இவ்விதமான இடக்குத்தனமான எண்ணங்களுக்கு இடமே கொடுக்கக்கூடாதென்று தீர்மானித்திருக்கிறேன்.

நான் படிக்கும் புத்தகங்களின் மேன்மையைப்பற்றிக் கூறவோ, மதிப்புரை எழுதவோ எனக்குச் சக்தியில்லை. அவைகளால் எனக்குண்டாகும் எண்ணங்களையும், இன்பத்தையுமே என்னால் சொல்லக்கூடும்.

பழைய தமிழ்நூல்களை நான் யாரிடமும் பாடங்கேட்டதில்லை. அவைகளைப் படித்து என் இலக்கியச் சுவையை விருத்தி செய்துகொள்ளவேண்டுமென்று எனக்குப் பெரிதும் விருப்பமுண்டாயிற்று. முதலில் நளவெண்பாவைப் படிப்பது உசிதமென்று எண்ணினேன். நான் படித்த ஒரு நாவலில் நளவெண்பாவிலிருந்து ஒரு பாட்டு எடுத்து எழுதப்பட்டிருந்தது. அது என் மனத்தைக் கவர்ந்தது.

"செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான் - மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்த னுனக்கு."

என்ன மிருதுவான சொற்கள்! என்ன இனிமையான கருத்து! சிறு வயதில் நாம் கதை கேட்கும் காலங்களில் நம் மனத்தில் பாவித்த இளவரசனின் உருவம் இதுவே! அச்சமயம் வர்ணிக்கமுடியாமல் கேவலம் உணர்ச்சியளவிலே நம் மனத்தில் பாவித்ததை இச்சிறிய பாட்டில் அமைத்து இக்கவி அழகுபடுத்தியிருக்கிறார்.

அக்காலத்தில் ஒரு விஷயத்தை மிகைப்படுத்திக் கூறுவதை ஒரு வழக்கமாகக் கொண்டார்கள். புகழேந்தி அதை எவ்வளவு நயமாகக் கையாளுகிறார்!

"வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன
அஞ்சிலம்பே வாய்விட் டரற்றுவன - கஞ்சம்
கலங்குவன மாளிகைமேற் காரிகையார் கண்ணே
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு"

என்று மாவிந்த நகரை வர்ணிக்கிறார்.

எனக்கு இந்த அமைப்பு மிகவும் பிடிக்கும். என்ன செய்வது! இருபதாம் நூற்றாண்டில் பிறந்திருக்கிறேன். இப்போது அந்தமாதிரி எதையாகிலும் மிகைப்படுத்திக் கூறினால், "என்ன அடுக்குகிறாய்?" என்கிறார்கள். முன் ஒருசமயம் என் அறியாமையில் நான் ஒரு பாட்டு எழுதினேன். அதில் மிகவும் தொந்தரவு செய்யும் ஒரு பையனை வர்ணித்து—"வாசற்படிமேல் உட்கார்ந்துகொண்டு வாதாங்கொட்டையை நறுக்குவான்" என்று எழுதினேன். இதை என் குழந்தைக்குப் படித்துக் காண்பித்து அவளைத் திருத்தலாமென்ற ஆசையும் கொஞ்சமிருந்தது. அவள் அதைப் படித்துவிட்டு, "இல்லை, அம்மா, சரியாகவேயில்லை. வாதாங்கொட்டை யென்று எழுதாதே. நிலக்கடலையென்று எழுது"

என்றாள். இச்சிறு விஷயத்தில் கொஞ்சம் மிகைப்படுத்திக் கௌரவமாக உரைப்பதைக்கூட அவள் பொறுக்கவில்லை. கலி காலம்!

* * * *

தமிழ் நாவல்களை நான் அதிகம் வாசிக்கிறதில்லை. அவைகள் அநேகமாக நன்றாகயிருப்பதில்லை என்பதே காரணம். ஆனால் பொதுவாகத் தமிழ் நாவல்களின் போக்கை அறியவேண்டுமென்ற எண்ணத்துடன் சுமார் இருபது முப்பது நாவல்களை எடுத்து மேல்வாரியாகப் புரட்டினேன். அவைகளில் சதானந்தர் என்று ஒன்றிருந்தது. அதைச் சிறிது படித்ததும், 'இந்தக் கூட்டத்தில் இது எவ்விதம் வந்தது' என்று வியந்தேன். ஒருகால் அதன் ஆசிரியராகிய நாகை சொ. தண்டபாணி பிள்ளையின் பாண்டித்தியம் மிகப் பிரசித்தமானதாக இருக்கலாம். எனக்கு இதுகாறுந் தெரியாது.

சதானந்தரைப் படிப்பதால் உண்டாகும் இன்பம் ஓர் அறிஞருடன் சம்பாஷிப்பதைப் போன்றது. நிர்மலமான ஓடையருகில், மெதுவாக வீசும் தென்றலை அனுபவிப்பது போன்றது. திடுக்கிடுதல், மயிர்க்கூச்சடைதல் முதலியவைகளால் வீண் கலவரமுண்டாக்காமல், ஆசிரியர் நிதானமாகக் கதையைச் சொல்லுகிறார். சொல்லிக்கொண்டே போகையில் வழியிலிருக்கும் விநோதங்களையும் சுட்டிக்காட்டி, அவைகளை நாம் அனுபவிக்கச் சந்தர்ப்பமளிக்கிறார்.

கொஞ்சகாலத்திற்கு முன்பு என் அத்தை என்னிடம் வந்து "பங்கஜம் பேசுவதைக் கேட்டாயா! அவள் எவ்வளவு ஆச்சரியமாகப் பேசுகிறாள்!" என்றாள்.

"என்ன சொன்னாள்?" என்று கேட்டேன்.

"என்னவோ 'காதல் என்றால் அது பாத்திரத்து மேலேயுமிருக்கலாம். பெருங்காயத்தின் மேலேயுமிருக்கலாம்' என்கிறாளே!" என்றாள் அத்தை.

இதற்குள் பங்கஜத்தைக் கண்டால்பிடிக்காத வேறோர் பெண், "ஆமாம், அவளுக்கு அவர்கள் வீட்டிலிருக்கும் புறக்கடைக் குட்டிச்சுவரின் பேரில்தான் அதிகக் காதலாம்" என்றாள்.

"என்ன அதிசயம்!" என்று அத்தை மறுபடியும் வியந்தாள்.

பங்கஜம் காதலைப்பற்றி இவ்விதமெல்லாம் ஆராய்ச்சி செய்ததன் காரணம் எனக்கு அச்சமயம் புரியவில்லை. சதானந்தரைப்

படித்த பிறகு, அதில் ஆசிரியர் விநோதமாகக் கூறியிருப்பதை அரைகுறையாக எடுத்துச் சொன்னதன் லாபம் இதுவென் றுணர்ந்தேன். பாவம்! அவள் தன் கல்வித் திறமையைக் காட்ட முயல, மற்றப்பெண்கள் அவளுக்குக் குட்டிச்சுவர்பேரில் காத லென்றும், பெருங்காயச் சிமிழில் காதலென்றும் தீர்மானித்து விட்டார்கள்.

ஒரு தினம் எனது மூளைக்குக் கடினவேலை கொடுக்க இச் சித்து, "இன்று உனக்குப் படிப்பதற்கு யாப்பருங்கலக் காரிகை ஒன்று தான் கொடுக்கப்போகிறேன். இஷ்டமிருந்தால் படி, இல்லாவிடில் தூங்கு" என்று கண்டிப்புடன் கூறினேன். யாப் பருங்கலக் காரிகையின் முன்னுரையில் 'இந்நூலாசிரியர் பண் டைய யாப்பிலக்கணங்களாகிய கரும்புகளை மனமாகிய ஆலையி லிட்டு ஆட்டி, அந்நூல்களின் சாரமாகிய சாற்றினைக்கொண்டு இந்நூலாகிய கட்டியினை இனிது செய்து தந்தனர். இந்நூலுரை யாசிரியர் செய்யுள் வகைகளை நன்குணரவும், செய்யுளியற்றவும் வேட்கையுடைய மாணவர்களாகிய விருந்தினர் பருகிக் களிகொள் ளும்படி அக்கட்டியினைத் தமது உரையாகிய பாலுடன் சேர்த் துத் தந்தனர்" என்றிருக்கிறது. ஆகையால் மூளை அதிக கஷ்டப் படாது விருந்துண்டு களிக்கும் என்றே எண்ணினேன்.

யாப்பு என்றால் செய்யுள் என்றும், அதன் விதிகளை அறிவ தால் செய்யுளைப் படிப்பதனால் உண்டாகும் இன்பம் அதிக மாகும் என்றும் நான் சாமான்யமாக நினைத்திருந்தேன். அவ்விதம் இல்லையாம்.

'யாப்பாராயவே, பா, தாழிசை, துறை, விருத்தங்களாலாக்கப் பட்ட அறம் பொருள் இன்பம் வீடென்னுமவற்றின் மெய்ம்மை யறிந்து, விழுப்பமெய்தி, இம்மை மறுமை வழுவாமல் நிகழ்வாராத லின் இருமைக்கும் உறுதி பயப்பது யாப்பெனக் கொள்க' என்கிறார் உரையாசிரியர்.

அதற்குமேல் இரட்டிப்புத் தீர்மானத்துடன் அப்புத்தகத்தைப் படித்தேன். அதிலிருந்து பல அருமை விஷயங்களை அறிந்தேன். ஒன்றிரண்டு இங்கே உரைக்கிறேன்:

திரிசொற் கிளவி என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? எனக்குத் தெரியும்.

"ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி"

என்கிறார் நூலாசிரியர். உதாரணமாக உந்தி என்பது ஒரு திரிசொல். அதாவது:—'உந்தி என்பது ஆற்றிடைக் குறையும், கொப்பூழும், தேருருளும், யாழகத் தோருறுப்பும் என்னும் பல பொருள் குறித்த ஒரு சொல்.'

நான் வீண்பெருமை அடித்துக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் திசைச்சொல் என்றாலும் எனக்குத் தெரியும். திசைச்சொல் லென்றால் கிழக்கு, மேற்கு முதலிய திக்குகளைக் குறிக்கும் சொல் லென்று ஏமாந்துவிடமாட்டேன். 'திசைச்சொல்லாவன—மயிலை மஞ்ஞை என்றும், கிளியைக் கிள்ளை என்றும், தாயைத் தள்ளை யென்றும், நாயை ஞமலி என்றும் வழங்குவனவாம்.'

இவ்விதம் பல அரிய விஷயங்களைக் கற்றபோதிலும், செய்யுளியலைப் பற்றின விவரம் முற்றும் புரியவில்லை. எழுத்து என்றால் இன்னதென்று நன்றாக விளக்கியிருக்கிறார்கள். தும்மல், இருமல் இவைகளெல்லாம் எழுத்தல்ல என்று விவரித்து எடுத் துரைத்திருக்கிறார்கள். ஆனால் செய்யுளில் ஓர் அடி என்றால் என்ன என்பதைச் சுலபமாகப் புரிந்துகொள்ளும்படி உரையா சிரியர் எழுதவில்லை.

விஷயங்களை எவ்வளவு சுருக்கமாகச் சொல்லக்கூடுமோ அவ் வளவு சுருக்கமாகச் சொல்ல முன்காலத்தில் முயன்றார்கள். புத்த கங்கள் இல்லாததால், எல்லா விஷயத்தையும் உருப்போட்டு மனப்பாடம் செய்து ஞாபகத்தில் வைக்கவேண்டியிருந்தது. எல் லாரும் ஒரு குருவை ஆச்ரயித்தே வித்தை பயின்றனராதலால் அர்த்தம் நன்கு அறிந்தனர். இக்காலத்தில் புத்தகங்கள் ஏற்பட் டிருப்பதால் விஷயங்களைச் சுலபமாகப் புரியுமாறு எழுதலாம் என்று நான் நினைக்கிறேன். உபாத்தியாயரிடம் சிட்சை பெற முடியாத நிலைமையில் அநேகர் இருக்கிறார்கள். அவர்களுக்கு எளிய புத்தகங்களைத் தவிர்த்து வேறு கதி ஏது?

இருந்தும் அக்காலத்தவர்கள் அறிவைத் திரட்டி அழகாகப் பாக்களில் அமைத்திருக்குமாறு இக்காலத்தவர்களால் கஜகர்ணம் போட்டாலும் செய்யமுடியாது என்றெண்ணுகிறேன்.

சாஸ்திரம்

என் நம்பிக்கை

பே. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.

[மேல்நாட்டிலே உள்ள ஆசிரியர் ஒருவர் சில சிறந்த மேதாவிகளைத் தெரிந்தெடுத்து, அவர்களுள் ஒவ்வொருவருக்கும் ஒரு கடிதம் எழுதினார். அதன் சாராம்சம் வருமாறு:

"தங்களுடைய உள்ளத்திலே ஆழ்ந்துகிடக்கின்ற உண்மையான நம்பிக்கைகளை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன். இவ்வுலகம், அதில் வாழும் மக்கட் கூட்டம் இவ்விரண்டின் இயற்கைகளையும் தன்மைகளையும் பற்றித் தாங்கள் கொண்டுள்ள தீர்மானங்கள் என்ன? அவற்றைப் பற்றித் தாங்கள் என்னவெல்லாம் நம்பி வருகிறீர்கள்? தங்களுடைய அறிவு நிரம்பிய மனத்திலே எழுகின்ற உற்சாகங்கள், ஐயங்கள், அச்சங்கள் முதலியவற்றை மறைக்காமல் விண்டு வெளியிடுங்கள். எவற்றினின்று தங்கள் நம்பிக்கைகள் எழுகின்றன? தங்களுடைய அவநம்பிக்கைகளுக்குக் காரணங்கள் யாவை? இவற்றை யெல்லாம் தாங்கள் உணர்ந்தபடியே, தங்களுடைய மனத்தில் தோன்றுகிறவண்ணமே தெரிவியுங்கள். தாங்களும் தங்களைப் போன்று நுண்ணறிவு பொருந்திய மேதாவிகள் வேறு சிலரும் இவ்வாறு பகிரங்கமாய் வெளியிடும் கருத்துக்கள் உலகத்தார் அனைவராலும் ஒரு பெருநிதியமாகப் போற்றப்படும். நம் காலத்துப் பெரியார் பின்பற்றிய நெறியைப் பின்பற்ற முயலுவோர் அனைவருக்கும் அது ஒரு சீரிய லக்ஷியமாகவும் விளங்கும்."



ஐன்ஸ்டைன்

இந்தக் கடிதத்துக்குப் பல பெரியார்கள் பதில் எழுதி அனுப்பினார்கள். அவற்றுள் ஆல்பேர்ட் ஐன்ஸ்டைன் எழுதியனுப்பிய விடையைச் சுருக்கமாக வெளியிட்டிருக்கிறோம். பே. நா. அ.]

நாம் ஒவ்வொருவரும் பூமியிலே வந்து சில காலம் தங்கு கிறோம்; பிறகு மறைந்துவிடுகிறோம். ஏனோ தெரியவில்லை. சிற்சில வேளைகளில் ஏதோ கொஞ்சம் தெரிவது போலவும் தோன்று கிறது.

வாழ்க்கையிலிருந்து ஓர் உண்மை வெளியாகிறது. அதாவது, மனிதன் இருப்பதெல்லாம் மற்ற மனிதர்களின் பொருட்டுத் தான். நம்முடைய உள வாழ்க்கையும் உடல் வாழ்க்கையும் எத்தனை பேர்களுடைய துணையை ஆதாரமாகக் கொண்டிருக்கின் றன? எத்தனை பேருக்கு நாம் எவ்வளவில் கடன்பட்டிருக்கிறோம்? அந்தக் கடனை நாம் எப்படித் தீர்க்கப் போகிறோம்?

பூரண சுதந்திரம் நமக்கு இல்லையென்றே நான் எண்ணு கிறேன். நமக்கு எத்தனை வெளிக்கட்டுப்பாடுகள்? நம்முள் ளிருந்தே பிறக்கும் விலக்கமுடியாத தூண்டுதல்கள் எத்தனை? 'ஒருவன் எதையெல்லாம் விரும்புகிறானோ அதை அவன் நிச்சய மாய்ச் செய்து முடித்துவிடலாம். ஆனால் இன்னதை விரும்புவது என்று நிச்சயிப்பதுதான் அவனால் ஆகாது' என்று ஷோபேன் ஹார் சொல்லியது எனக்கு அடிக்கடி நினைவுக்கு வந்துகொண்டே இருக்கிறது.

நாம் ஏன் பிறந்தோம் என்றாவது வாழ்வு என்றால் என்ன என்றாவது ஓயாது சிந்தித்துக் கொண்டேயிருப்பது மடத்தனமே யாகும். ஆயினும் ஒவ்வொருவனும் தன் தன் வாழ்க்கைக்குச் சிற் சில லக்ஷியங்களை வைத்துக்கொண்டு, தன்னுடைய ஆசைகளையும் புத்தியையும் நெறிப்படுத்திக் கொள்ளுகிறான். நன்மை, அழகு, உண்மை என்பனவே என் கண்ணெதிரே பிரகாசித்து விளங்கிக் கொண்டிருக்கும் லக்ஷியங்கள். கேவலம் சுகத்தையாவது இன் பத்தையாவது லக்ஷியமாகக் கொள்ளுவது எனக்கு அவ்வளவு விசேஷமாகத் தோன்றவில்லை.

செல்வமும் சீரும் சிறப்பும் எனக்கு இழிவாகவே தோன்று கின்றன. சாமானியமான படாடோபமற்ற வாழ்க்கைதான் உட லுக்கும் மனத்துக்கும் நன்மை பயப்பது.

ஜனசமூகத்தினுடைய உரிமைகளைப்பற்றியும் கடமைகளைப் பற்றியும் எனக்கு எவ்வளவோ அக்கரை உண்டு. ஆனாலும் நாலுபேரோடுகூட ஒன்றாக இருந்து வேலை செய்வது என்றால் எனக்குப் பிடிக்கவில்லை. தேசத்துக்காவது, அரசாங்கத்துக் காவது, உற்றார் உறவினருக்காவது, என்னுடைய குடும்பத்துக்கே யாவது நான் முற்றிலும் பாத்தியப்பட்டவன் அல்ல. இப்

பந்தங்கள் பலமாக இருந்தகாலத்திலுங்கூட அவற்றில் நான் படாதவன் போன்ற உணர்ச்சியே எனக்கு இருந்து கொண்டிருந்தது. வயதாக ஆக அதுவும் குறைந்துகொண்டே வருகிறது.

ஜனநாயக முறைதான் மேலான அரசியல்முறை என்பது என் எண்ணம். ஜன சமுதாயத்திலே உள்ளவன் ஒவ்வொருவனும் நன்குமதிக்கப்பட வேண்டும். ஒருவனையும் தெய்வமாகப் பாராட்டலாகாது. இப்பேர்ப்பட்ட அபிப்பிராயம் கொண்ட என்னை ஜனங்கள் புகழ்ந்து கொண்டாடுவது ஒரு விபரீதமேயாகும்.

குறிப்பிட்ட ஒரு காரியம் கைகூட வேண்டுமானால் ஆலோசனையும் அதிகாரமும் பொறுப்பும் ஒரே ஒருவன் கையில் இருந்தாலன்றி முடியாது. மற்றவர்கள் அவனை முழு மனத்துடன் பின்பற்றுகிறவர்களாக இருக்கவேண்டுமே தவிர அவனால் வெருட்டப்படுகிறவர்களாக இருக்கக் கூடாது. தங்களுடைய தலைவனைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் அவர்களிடம் இருக்கவேண்டும்.

ராஜ்ஜியம் என்று சொல்லப்படுகிற ஒரு ஜன சமுதாயம் அவ்வளவு முக்கியமல்ல. அந்தச் சமுதாயத்திலுள்ள மக்கள் பெரும்பாலும் அறிவு அற்று உணர்ச்சி மழுங்கிக்கிடக்கின்ற போதுங்கூட, உணர்ச்சி நிரம்பிச் சக்தி நிறைந்து சிறப்பான பெருங் காரியங்களைச் செய்கின்ற தனிமனிதன்தான் அதைக் காட்டிலும் முக்கியமானவன்.

ஆதலால் ராணுவ ஏற்பாடு மிகவும் இழிவானதென்று நான் கருதுகிறேன். சூவென்ற இடத்துப் பாயும் வீரமும், மடத்தனமான கொலையும், என் தேசம் என் தேசம் என்று முழக்கும் வீணை ஆரவாரமும்—இவற்றையெல்லாம் முற்றிலும் அருவருக்கின்றேன்.

போரென்பது மிக இழிவானது; கேவலமானது. என்னைத் துண்டு துண்டாக வெட்டினாலும் நான் அதில் தலையிட்டுக் கலந்துகொள்ள மாட்டேன். பள்ளிக்கூடங்களாலும் பத்திரிகைகளாலும் நம்முடைய புத்தியானது கெடுக்கப்படாமலிருந்தால் நம்முடைய இயற்கையிலே மனுஷ்ய சுவபாவம் மேலிடும். போர்வெறியும் இதற்குமுன் அடியோடு தொலைந்துபோயிருக்கும்.

நமக்கு விளங்காத சிற்சில பரமரகசியமான விஷயங்கள் இருக்கின்றன என்கிற உணர்ச்சி மிகவும் இன்பகரமானது. சகலமான கலைகளுக்கும் விஞ்ஞானங்களுக்கும் இவையே மூலம்; இவையே சமய உணர்ச்சியின் மர்மம்.

தம்முடைய சிருஷ்டியைச் சிக்ஷித்தலையோ, ரக்ஷித்தலையோ செய்கின்றவராயும் நம்மைப் போன்றவராயுமுள்ள ஒருவர்தாம் கடவுள் என்று நான் நினைக்கவே முடியவில்லை. ஒருவனுடைய உடல் அழிந்தபிறகு அவன் சாவதில்லை என்பதை என்னால் நம்பமுடியவில்லை.

நிரந்தரமாய், சாசுவதமாய் இருந்துவரும் உயிரின் ரகசியத்தைச் சிந்தித்துக் கொண்டும் நமக்கு மிகச்சிறியதோர் அளவிலே புலப்பட்டுக் கொண்டிருக்கின்ற பிரபஞ்ச அமைப்பைப்பற்றி நினைத்துக் கொண்டும், நம்மைச் சுற்றி நாலு பக்கத்திலும் காணப் படுகின்ற பேரறிவின் அணுவிலும் அணுவான பாகத்தை மிகவும் வணக்கத்துடன் அறிய முயன்றுகொண்டு இருப்பதுவே எனக்குப் போதும்.

மரத்தின் வளர்ச்சி

இந்திய தாவரசாஸ்திர நிபுணரான ஜே. ஸி. போஸ் தாம் இவ்வாண்டில் கண்டுபிடித்திருக்கும் புதிய விஷயங்களை, போஸ் ஆராய்ச்சி சாலையின் 17-வது வருஷக் கொண்டாட்டத்தின்பொழுது வெளியிட்டார். மரத்தின் வேர்களின் வளர்ச்சியினளவையும் அதில் செயற்கை முறையில் உண்டாகும் மாறுபாட்டையும் தானகப் பதிவு செய்யப் புதியமுறையொன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகக் கூறினர். அலுமினியத்தாலான தராசுத் தட்டுகள் வேரின் நுனியின்கீழ் வைக்கப்படுகின்றன. அதன் வளர்ச்சி அளவை தட்டு சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கும் யந்திரம் விளக்குகின்றது. சில ரசாயனப் பொருள்களின் உதவியால் வேர்சுருங்கிக் கொள்ளுவது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. தாவரங்களின் உட்புறத்தில் உற்பத்திக் கருவிகள் தோன்றுவதை விளக்கிக் காட்டும் உபாயம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பிராணியும், செடியும் ஜீவிக்க எவ்வளவு பிராணவாயு வேண்டுமென்பதை நிர்ணயித்துக் கூற ஒரு புதிய கருவியும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றது.

வர்த்தக ஊழியன்

இரத்தம்


மா. ஏ.

இரத்தம் ஜீவிதத்திற்கு அத்தியாவசியமான திரவபதார்த்தமாகும். சாதாரண மனிதனுடைய தேகத்திலுள்ள இரத்தமானது அவனுடைய கனத்தில் ஏறக்குறைய இருபதில் ஒரு பாகமும் அளவில் எட்டு பைன்ட் அல்லது ஒரு காலனும் இருக்கும். இரத்தமானது குழல்களில் அடங்கி உடல் முழுவதும் சுற்றிவருகிறது. இக்குழல்கள் இருதயத்துடன் சம்பந்தப்பட்டிருக்கின்றன. இருதயமானது இரத்தத்தை இரத்தக்குழல்களில் இறைத்துச் சுழன்று வியாபிக்கச்செய்யும் இயந்திரமாகும். இரத்தம் தேகத்தில் ஓரிடத்திலேயே தங்காமல் சுழன்றுகொண்டிருப்பானேன்? அன்னமார்க்கத்திலிருந்து ஜீர்ணமான உணவுப்பொருள்களையும் சுவாசகோசங்களிலிருந்து பிராணவாயுவையும் வெவ்வேறு அங்கங்களின் உபயோகத்துக்குக் கொண்டுபோவதும், அங்கங்கே உண்டாகும் அழிவுபதார்த்தங்களாகிய கரியமிலவாயு, மூத்திரவுப்பு, நீர் முதலானவற்றை விஸர்ஜனேந்திரியங்களுக்குக் கொண்டுபோவதும், தேகத்தில் சில பாகங்களில் உண்டாகும் சில ரஸாயன மாறுபாடுகளுக்கு அவசியமான ஹார்மோன்கள் என்று கூறும் ரஸாயன தூதர்களை ஓரங்கத்திலிருந்து மற்றோரங்கத்திற்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதும் இரத்தத்தின் சில முக்கியமான உபயோகங்களாகும். நமது தேகத்தினுட் சென்று கெடுதல் விளைவிக்கும் சத்துருக்களாகும் விஷபீஜங்களையும் விஷபதார்த்தங்களையும் தாக்கி எதிர்க்கும் போர்வீரர்கள் இரத்தத்தில் அடங்கியுள்ளனர்.

இரத்தம் ஜலத்தைக்காட்டிலும் கனமான பதார்த்தம்; அதன் இன எடை சாதாரணமாக 1.055—1.060 இருக்கும்; ருசிக்குச் சிறிது உவர்ப்புள்ளது; அதிலிருக்கும் சில கனபதார்த்தங்கள் காரணமாக ஊடுருவிக் காணக்கூடியதல்ல; லிட்மஸ் பரிசோதனையில் காரவிகாரத்தைக் காட்டும்; அதன் நிறம் கருஞ்சிவப்பு அல்லது ஊதா நிறமுள்ளது.

இரத்தம் சாதாரணமாகப் புலப்படுவதுபோல் முழுமையும் திரவமல்ல. ஓர் துளி இரத்தத்தைப் பூதக்கண்ணாடியின்

மூலமாகப் பரிசோதித்தால் வெண்ணிறமாகவும், செந்நிறமாகவு முள்ள சில கனவஸ்துக்கள் நிறமற்ற ஓர் திரவபதார்த்தத்தில் மிதப்பது தெரியும். கனபதார்த்தங்களுக்குச் சிவப்பு வடிகங்கள் வெள்ளை வடிகங்கள் என்றும், திரவபதார்த்தத்துக்குப் பிளாஸ்மா என்றும் பெயர்.



இரத்தவடிகங்கள்

A, B. வெள்ளை வடிகங்கள்
  a. கணகம்
  b. வெள்ளைவடிகம் அழிக்கும் விஷஜீவலம்
C. சிவப்பு வடிகம், மேல்தோற்றம்
D. சிவப்பு வடிகம், பக்கத்துத் தோற்றம்
E. சிவப்பு வடிகங்கள் சேர்ந்தாற் போல் இரத்தத்தில் இருப்பது

சிவப்பு வடிகங்கள் வெள்ளை வடிகங்களைக் காட்டிலும் ஐந் நூறு அல்லது அறுநூறு மடங்கு அதிகம் இருக்கின்றன; அள வில் சிறிது வித்தியாசப்பட்டாலும் சராசரி $\frac{1}{3000}$ அல்லது $\frac{1}{3200}$ அங்குலம் குறுக்களவுள்ளன. ஒரு சிறிய குண்டூசித்தலை அள வுள்ள இடத்தில் ஏறக்குறைய ஐம்பது லக்ஷம் சிவந்த வடிகங்கள் இருக்கும் என்பதிலிருந்து இவற்றின் சூக்ஷ்மத்தன்மை விளங்கும். தேகத்திலுள்ள மொத்தச் சிவப்பு வடிகங்கள் சுமார் இருபத்தை யாயிரம் கோடி எனலாம். உருவத்தில் சிவந்த வடிகமானது ஓர் சிறு நாணயம்போல் தட்டையாகவும் அதன் இருபக்கங்கள் குழிந்தும் இருக்கும். இதன் மத்தியில் கணத்தில் மத்தியில் இருக்கும் கணகம் இல்லை. இது ஸ்துரோமா என்று கூறும் கடற் பஞ்சு போன்ற மிருதுவான வஸ்துவாலாகியது. மெல்லிய தந்துகி கள் வழியாக இரத்தம் செல்லும்போது மிருதுவான ஸ்துரோமா சுருங்கிப் பிறகு அதன் சுவபாவ நிலைக்குப் பருக்கும். ஸ்துரோமா

விலுள்ள சிறிய துவாரங்களில் ஹீமோக்ளோபின் என்னும் ஓர் சிவப்பு வர்ணபதார்த்தம் இருக்கிறது; இது புரதம் எனப்படும் ஓர் ஸம்யோக வஸ்து வாகும். இதில் புரதத்திலுள்ள நைட்ரோஜன், ஜலவாயு, கரி, பிராணவாயு முதலானவை தவிர இரும்பும் இருக்கிறது. இரத்த சோகையானவர்களுக்கு இரும்பு ஸம்பந்தமான மருந்துகள் கொடுப்பது இரத்தத்தின் இவ்வம்சத்தைப் பலப்படுத்துவதற்கென்று புலப்படும். ஹீமோக்ளோபின் என்னும் வஸ்துவுக்குப் பிராணவாயுவுடன் சுலபமாகச் சேரவும், அதை விட்டுப் பிரியவும் கூடிய குணம் உண்டு; இச்சக்தியினால் இரத்தம் சுவாசகோசங்களில் பிராணவாயுவைக் கிரகித்து மற்ற அங்கங்களுக்கு அதை விநியோகிக்கிறது. பிராணவாயுவுடன் கலந்த சிவப்பு வடிகம் ஊதா நிறமுள்ளதாகவும், அதைவிட்டுப் பிரிந்த வடிகம் கருஞ்சிவப்பாகவும் இருக்கும். மற்றக் கணங்களைப் போல் சிவப்பு வடிகங்கள் நாளடைவில் தேய்ந்து பிரயோசனமற்றுப் போகின்றன. இம்மாதிரியான தேய்ந்த வடிகங்கள் கல்லீரல், மண்ணீரல் முதலான அங்கங்களில் சிதிலமடைகின்றன. சிவப்பு வடிகங்கள் மூன்று அல்லது நான்கு வாரங்கள் ஜீவிக்கின்றன. சிதிலமடைந்த வடிகங்களின் நிறம்தான் பித்த நீருடைய வர்ணத்துக்கு ஹேதுவாகிறது. சிவப்பு வடிகங்கள் நசிக்குந்தோறும் புதிய வடிகங்கள் எலும்பினுள்ளேயுள்ள மஜ்ஜையில் விருத்தியாகின்றன. ஹீமோக்ளோபினும் பசுந்தாவரங்களிலுள்ள க்ளோரோபிலம் என்னும் வர்ணபதார்த்தமும் ஏறக்குறைய ஒரே இரஸாயன அமைப்புள்ளனவாகும். பசுந்தாவரங்களையே பிரதான உணவாக உட்கொள்ளும் பிராணிகளுடைய இரத்தத்தின் நிறம் க்ளோரோபிலத்தினுடைய மாறுபாடாக இருக்கலாமோ என ஊகிக்க இடமுண்டு. உயர்தரப் பிராணிகளுடைய இரத்தத்தில் ஹீமோக்ளோபின் இருப்பது போல் நண்டு இரால் முதலான தாழ்ந்த பிராணிகளுடைய இரத்தத்தில் தாம்ரம் அடங்கியுள்ள ஹீமோஸையானின் என்னும் வர்ணவஸ்து இருக்கிறது.


வெள்ளை வடிகங்கள் ஏறக்குறைய 1/௩௨௦௦ அங்குலம் குறுக்களவுள்ளன. ஓர் சிறிய குண்டூசித்தலை இடத்தில் இருபதினாயிரம் வடிகங்கள் இருக்கும். வெண்ணிற காரணமாக இவற்றைச் சுக்லகணங்கள் அல்லது சுவேதகணங்கள் என்றும் கூறலாம். வெள்ளை வடிகத்தின் மத்தியில் ஓர் கணகம் உண்டு; வெள்ளை வடிகத்துக்கு நிலையுள்ள உருவம் இல்லை. அதன் உருவம் அடிக்கடி மாறும். தேகத்தினுள்ளே பிரவேசிக்கும் விஷபீஜங்களைச் சுற்றித் தாக்கி

ஜீர்ணம் செய்யும் சக்தியுள்ளன. தேகத்தில் அவ்வப்போது மடியும் ஜீவகணங்களையும் ஜீர்ணம் செய்கின்றன. இவைகளே நமது தேக இரக்ஷகத்துக்கு ஏற்பட்ட போர்வீரர்கள். இவற்றைப் பக்ஷக வடிகங்கள் என்றும் கூறலாம். வெள்ளை வடிகங்களும் காலக்கிரமத்தில் நசித்துப் புதிய வடிகங்கள் எலும்பின் மஜ்ஜை, மண்ணீரல், மேதைக் கிரந்திகள் முதலானவற்றில் விருத்தியடைகின்றன. நமது தேகத்தில் சில சமயங்களில் வெட்டுக் காயம் ஏற்பட்டுச் சீழ்ப்பிடிப்பது சகஜம். காயமானது விஷ ஜீவலங்கள் உட்செல்ல மார்க்கமாகிறது; தகுந்த மருந்துகளால் இம்மார்க்கத்தைக் காத்தால் காயம் சுலபத்தில் ஆறிவிடும்; இல்லாவிட்டால் விஷஜீவலங்கள் உட்சென்று தேகவமைப்புக்களைப் பாதிக்கின்றன. அப்போது தேகரக்ஷகர்களான வெள்ளை வடிகங்கள் அவ்விடத்தில் ஏராளமாகச் சேர்ந்து தந்துகிகளிலிருந்து வெளியே வருகின்றன. காயமுண்டான இடத்தை ஜீவலங்களுக்கும் வெள்ளை வடிகங்களுக்கும் போர் நடக்கும் இரணகளமாகக் கூறலாம். இந்தயுத்தத்தில் இருகக்ஷிக்காரர்களும் மடிகின்றனர். மடிந்தவடிகங்களும் விஷஜீவலங்களும் சீழாக வெளியே வருகின்றன. ஓர் துளி சீழைப் பூதக்கண்ணாடியின் உதவியால் பரிசோதித்தால் இவற்றைக் காணலாம். இரத்தத்தின் இரக்ஷகபலம் வெள்ளை வடிகங்களிலாகும்; இவற்றிற்குப் பலமில்லாவிட்டால் ஜீவலங்கள் வெற்றியடையும்.

இரத்தத்தின் திரவபாகமாகும் பிளாஸ்மாவில் அதிக பாகம் ஜலமும் ஆல்பூமின், க்ளோபூலின், பைப்ரினோஜன் என்னும் நைட்ரோஜன் ஸம்பந்தப்பட்ட புரதங்களும் சில உப்புக்களும் இருக்கின்றன. பிளாஸ்மாவிலும் தேகரக்ஷகத்திற்கு வேண்டிய சிலவஸ்துக்கள் இருக்கின்றன. நம்முடைய தேகத்தில் பேதகங்கள் அல்லது விஷஜீவலங்கள் உட்சென்று ஏராளமாக விருத்தியடைந்து சவ்வைத் தின்றுவது, சில விஷங்களை இரத்தத்தில் செலுத்தியாவது கெடுதல் விளைக்கின்றன. உதாரணமாக மலேரியா ஜீவலங்கள் இரத்தத்தில் லக்ஷக்கணக்காக விருத்தியடைந்து சிவந்த வடிகங்களை அழிக்கின்றன; இது காரணமாக இரத்தபாண்டு உண்டாகிறது. அவைகள் விருத்தியாவதுடன் இரத்தத்தில் ஓர் விஷமும் செலுத்தப்படுகிறது. பேதகங்களைக் கொல்லும் பேதகநாசினிகளும், விஷத்திற்குச் சக்தியறச்செய்யும் பிரதிவிஷங்களும் பிளாஸ்மாவில் இருக்கின்றன. குதிரையினுடைய உடலில் பாம்பின் விஷத்தை மரணஹேதுவுக்குக் குறைந்த அளவை உட்செலுத்தினால் இப்பிரதிவிஷம் பாம்பின் விஷத்தைத் தூர்ப்பலப்படுத்துகிறது; நாளடைவில் அதே விஷத்தைச் சிறிது சிறிதாக அதிகப்படுத்தி அக்குதிரைக்கு உட்செலுத்திக் கொண்டு வந்தால் பிரதிவிஷ

மானது அதிகமாக உண்டாகி, அக்குதிரை விஷத்தினால் பாதிக்கப்படுவதில்லை. அக்குதிரையினுடைய இரத்தத்திலிருந்து ஸீரத்தை எடுத்து மனிதர்களுக்கு உட்செலுத்தினால் பாம்பின் விஷத்திற்கு அபயம் கொடுக்கிறது. இவ்விதமாகத் தான் பேதகங்களாலுண்டாகும் வியாதிகளைத் தடுக்க ஸீரங்கள் தயார் செய்கிறார்கள். இவைகளைத் தவிர பேதகங்களை அசைவறச்செய்து கொத்துக் கொத்தாக ஒன்று சேரச்செய்யும் அக்ளூடினின் என்னும் வஸ்துவும், வெள்ளைவடிகங்களுக்கு அவசியமான சமயங்களில் அதிக சுறுசுறுப்புண்டாக்கும் ஆப்ஸோனின் வஸ்துவும் பிளாஸ்மாவில் இருக்கின்றன.

நமது தேகத்தில் காயம்பட்டால் இரத்தம் முதலில் திரவமாக வந்து சிறிது நேரத்திற்குப் பிறகு உறைந்து ஊந்தண் மாத்திரம் வருவதைச் சாதாரணமாகக் கவனித்திருக்கலாம். இவ்விதம் உறைவது தேகரக்ஷணைக்காக ஏற்பட்ட இரத்தத்தின் இயற்கையான குணமாகும். இல்லாவிட்டால் இரத்த நஷ்டத்தினால் பிராண நஷ்டம் உண்டாகும். இரத்தம் எவ்விதம் உறைகிறது என்பது கவனிக்கத் தகுந்தது. பால் உறைவதை இரத்தம் உறைவதுடன் ஒப்பிடலாம். ஒரு கண்ணாடி டம்ளரில் சிறிதளவு இரத்தத்தைப் பிடித்துவைத்தால், திரவமான இரத்தமானது மூன்று அல்லது நான்கு நிமிஷங்களில் கஞ்சிபோல் கெட்டியாகி, சீரம் என்று கூறும் நிறமற்ற ஜலம் மேலாக வடிந்து நிற்கும்; இன்னும் பத்து நிமிஷங்களில் கிரமமாக கஞ்சிபோன்ற இரத்தம் கட்டியாகி, சீரம் அதிகமாக வடிந்து அதில் இரத்தக்கட்டி மிதக்கும். சிறிது உறைந்த இரத்தத்தைப் பூதக்கண்ணாடியின் வழியாகப் பார்த்தால் குறுக்கும்




A B C

இரத்தம் உறையும் முறையை விளக்கும் படம்

A. உறையாத இரத்தம் — பிளாஸ்மாவும் வடிகங்களும்
B. பைப்ரின் நூல்களின் தோற்றமும் அவற்றிற்கு இடையில் வடிகங்களும்
C. இரத்தக்கட்டி ஸீரத்தில் மிதப்பது

நெடுக்குமாக இருக்கும் வலைபோன்ற அநேக நூல்களும் அவற்றிற்கிடையில் இரத்தவடிகங்களும் தெரியும்; இந்நூல்களை பைப்ரின் நூல்கள் என்கிறார்கள். இரத்தக்கட்டி சிறிது நேரம் இருந்தால்

சிவப்புவடிகங்கள் கனமாக இருக்குங் காரணமாக அடியில் படிந்து கட்டியின் மேல்பாகத்தில் வெள்ளைவடிகங்கள் ஏராளமாக இருக்கும்; இப்பாகத்தை வைக்கோற்றிரை என்று கூறுகிறார்கள். ஆரம்பத்திலேயே சிறுகுச்சிகளால் திரவமான இரத்தத்தைக் கலக்கினால் இரத்தம் உறையாமல் இந்நூல்கள் குச்சிகளில் சுற்றிக்கொண்டு டம்ளரில் சீரமும் வடிகங்களும் மாத்திரம் தங்கும். ஆகவே இரத்தம் உறைவதற்கு பைப்ரின் நூல்கள் முக்கியமானவை என்று தெரிந்து கொள்ளலாம். இவை எங்கிருந்து எப்படி உண்டாகின்றன என்று கேட்கக்கூடும். இரத்தத்தில் பைப்ரினோஜன் என்கிற புரத வஸ்து இருப்பதாக மேலே கூறப்பட்டது. ஆரோக்யமான இரத்தக்குழல்களில் இருக்கும்வரையில் இரத்தம் திரவமாக இருக்கிறது. இரத்தம் காற்றில் பட்டால் வெள்ளை வடிகங்கள் சிதிலமடைந்து திராம்பினம் என்னும் ஓர் வஸ்து உண்டாகிறது. இது திரவமான பைப்ரினோஜனை பைப்ரின் நூல்களாக மாற்றுகிறது. தேகத்தில் இரத்தக்குழல்களில் உள்ள இரத்தத்தில் பிரதித்ராம்பினம் என்னும் ஓர் வஸ்து இருக்கிறது; இது திராம்பினம் உண்டாவதைத் தடுப்பதால் இரத்தம் தேகத்தில் உறைவதில்லை. பைப்ரினோஜன் நீங்கலான பிளாஸ்மாவைத்தான் சீரம் என்று கூறுகிறோம். இதுதான் இரத்தம் கட்டினபிறகு ஊந்தண்ணாக வடிகிறது. இதில் உப்புக்கள், சீரம் ஆல்புமின், சீரம் க்ளோபுலின், ஜலம் முதலானவைகள் இருக்கின்றன. பிரதிவிஷ மருந்துகளாகிய சீரங்கள் இதிலிருந்துதான் தயார்செய்கிறார்கள். இரத்தத்தின் அமைப்பும், அது உறையும் போது உண்டாகும் மாறுபாடுகளும் கீழேகண்ட படத்திலிருந்து விளங்கும்:



சாஸ்திர சம்பந்தமான மொழிகள்

அக்ளுடினின்—*Agglutinin*
அழிவு பதார்த்தம்—*Waste material*
ஆப்ஸோனின்—*Opsonin*
இன எடை—*Specific gravity*
இரத்தக்குழல்—*Blood Vessel*
கணம்—*Cell.* கணகம்—*Nucleus*
கல்லீரல்—*Liver*
காரவிகாரம்—*Alkaline reaction*
க்ளோரோபிலம், அரிதம்—*Chlorophyll*
சிவந்த வடிகங்கள்—*Red corpuscles*
சீரம்—*Serum*
சீரம் ஆல்புமின்—*Serum albumin*
சீரம் க்ளோபுலின்—*Serum globulin*
சுக்ல கணங்கள் } *Leucocytes*
சுவேத கணங்கள் }
தந்துகிகள்—*Capillaries.* திராம்பினம்—*Thrombin*
பக்ஷகவடிகம்—*Phagocyte*
பிரதித்ராம்பினம்—*Anti-thrombin*
பிரதி விஷம்—*Antitorin*
பிளாஸ்மா—*Plasma.* புரதம்—*Proteid*
பேதகங்கள்—*Bacteria*
பேதகநாசினி—*Bacteriocide*
பேதக பக்ஷணி—*Bacteriophage*
பைப்ரிநோஜன்—*Fibrinogen.* பைப்ரின்—*Fibrin*
மஜ்ஜை—*Marrow.* மண்ணீரல்—*Spleen*
மேதைக்கிரந்தி—*Lymph gland*
வடிகம்—*Corpuscle*
வெள்ளைவடிகம்—*White Corpuscle*
வைக்கோற்றிரை—*Buffy coat*
ஜீவலங்கள்—*Germs*
ஸம்யோகவஸ்து—*Compound*
ஸ்துரோமா—*Stroma.* ஹார்மோன்—*Hormone*
ஹீமோக்ளோபின்—*Haemoglobin*
ஹீமோஸையானின்—*Haemocyanin*

ராமாநுஜம்

கி. ஸ்ரீநிவாசராகவன், பி. ஏ. (ஆனர்ஸ்)

கும்பகோணம் சார்ங்கபாணி ஸ்வாமி கோயில் கீழ் சன்னிதி வீதி, வடசிறகு, தெற்குப்பார்த்த ஒரு சிறிய தாழ்ந்த பழைய வீட்டுத் திண்ணையில் கீற்றுத்தட்டி காற்றில் அசைந்தாடிக்கொண்டிருக்கிறது. மாலை சுமார் 6-மணி இருக்கும். திண்ணை ஓரம் நான் நின்றுகொண்டிருக்கிறேன். ஒருவர் கையில் காப்பிங் பென்ஸிலும் ஒரு பழைய நோட்டுப்புத்தகமும் வைத்துக்கொண்டு உட்கார்ந்து இருந்தார். என்னைக்கண்டதும்,

"எப்பொழுதுவந்தாய்? உட்கார். இன்றைக்கு 6 கட்டம் போடச் சொல்லித்தருகிறேன். அது மிகவும் கஷ்டம். உங்கள் வாத்தியாரை வேண்டுமானால் கேளு" என்றார்.

"அவருக்கு 4 கட்டமே தெரியாதே. சுமாராக கோணல் மாணலாக என்று 3 கட்டம் போடுகிறார். இன்றைக்கு வேறே சொல்லிக்கொடுங்களேன்."

"சரி, உனக்கு பிராக்ஷன், டெஸிமல் தெரியுமா?"

"தெரியுமே, மூன்றும் வருஷமே கற்றுக்கொண்டேனே."

"ஆனால், இதைக் கூட்டு பார்ப்போம்."

அரை மணி போட்டுப் பார்த்தேன். ஒன்றும் சரியாக வரவில்லை. களைத்துப்போய், "நாளைக்குப்போட்டுக்கொண்டு வருகிறேன்" என்றேன்.

"அது சுலபந்தான்; இதோபார், வழி சொல்லித்தருகிறேன்" என்று கூட்டும் முறையின் சுருக்குவழி தெரிவித்தார். பிறகு நக்ஷத்திரங்கள், தெய்வசக்தி, மந்திரங்களின் சக்தி முதலியவைகளைப்பற்றிய பேச்சு; பேசும்பொழுது ஒருசமயம் கோபமும் வேகமும், மற்றொரு சமயம் சாந்தமும் அமைதியும் மாறிமாறி வரும்.

இந்தக் கட்டுரையில் கூறியவைகள் கீழ்க்கண்ட மூவர்களுடைய கட்டுரைகளிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன. i. பி.வி. சேஷு ஐயர் ii. ஆர். ராமச்சந்திராவ் iii. ஜி.எச். ஹார்டி.

இவர்தாம் ஸ்ரீநிவாஸ ராமாநுஜம், எப். ஆர். எஸ். இவர் இராமஸாமி ஐயங்காருக்கும் கோமளத்தம்மாளுக்கும் முதற் குழந்தையாக, ஸர்வஜித் வருஷம் மார்கழி மீ 9-ம் தேதிக்குச் சரியான 22-12-1887-இல், தாய் மாமன் வீட்டில் பிறந்தார். அப்பொழுது இவர் மாமன் ஈரோடு முன்சீப்கோர்ட் அமீனக இருந்தார். இவர் தம் தாயின் முகஜாடை பெற்றிருந்தார் என்றே சொல்லலாம். இவருக்குப்பின் பிறந்தோர் இரு ஆண்பிள்ளைகள். அவர்கள் இப்பொழுது திருவல்லிக்கேணியில் வசித்துவருகிறார் கள். தகப்பனருக்கு ஜோதிஷம் வரும். தாயார் பாட்டுமுதலிய கலைபயின்றவர். இவர்கள் இருவர் மனேசக்தியும் ஒருங்கேபெற்ற வர் ராமாநுஜன். ஞாபகசக்தி வெகு அதிகம். இவருடைய தம்பி கூடமெட்ரிகுலேஷன் படிக்கும் பொழுது ஆங்கிலஅகராதியில் அநேக பாகம் பாராமல் ஒப்பிப்பார்.

எளியகுடும்பந்தான்; ஆனல் படிப்பிலோ அதிகஆவல். கும்ப கோணம் டவுன் ஹைஸ்கூலில் உபகாரச்சம்பளம் பெற்று ஒரு வருஷமும் தப்பாமல் மேல்வகுப்புக்குச் சென்று 1903-ம் வருஷம் டிஸம்பர் மீ மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறினர். உடனே கும்பகோணம் காலேஜில் எப். ஏ. ஜூனியரில் சேர்ந்தார். அங்கும் பரீக்ஷையில் முதலில் நின்று 'ஜூனியர் சுப்ரமணியம் உபகாரச்சம்பளம்' பெற்றார். ஆனல் வரவர கணிதத்தில் ஏற்பட்ட ஆசை மற்றப்பாடங்களைக் கவனிக்கவிடவில்லை. அவ்வருஷம் பரீ க்ஷையில் தேறவில்லை. உபகாரச்சம்பளமும் நின்று விட்டது. என் செய்வது? தந்தையோ ஏழை. யாரைக்கேட்பது? வெட்கம் ஒரு பக்கம், வருத்தம் ஒருபக்கம், படிக்க ஆவல் ஒருபக்கம் இழுக்க ஊரைவிட்டு விஜயநகரம் சென்றார். அங்கே ஒரு சௌகரியமும் எற்படாமல் சென்னைக்கு வந்தார். பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தார். எவ்வளவோகஷ்டம். கடைசியில் 1906 டிஸம்பரில் எப். ஏ. பரீக்ஷைக்குப்போய்த் தேறவில்லை. இனிப்படிக்கமுடியாது என்று தீர்மானம் செய்துகொண்டு வீடுதிரும்பினர். ஓயாமல் கணக்குப்போடுவார்; ஒருவருடனும் சல்லாபமாய்ப் பேசார். வருத் தம் மிகுந்தமனத்துடன், 'இனி என்செய்யலாம்' என்று யோசனை செய்துகொண்டே இருப்பார். 'தெய்வம் கைவிடாது என்று சொல்லுவார்' என நான் கேள்விப்பட்டிருக்கிறேன். குட்டை; இரட்டைநாடி; அழுக்குவேஷ்டி; க்ஷவரம் எப்பொழுதேனும் மாதமொருமுறை, ஆனல் முயற்சிக்கோ எல்லை இல்லை. இப்படி இருக்க 1909-இல் இவருக்குக் கலியாணம் ஆயிற்று. சாந்தம், மரியாதை, அன்பு அடக்கம் நிறைந்த அப்பெண்மணியை நான்

பலதடவை என் சிறுவயதில் பார்த்திருக்கிறேன். என்னே, தெளர் பாக்யவதி!

பிழைப்புக்கு வழிதேட ஆரம்பித்தார். அங்கும் இங்கும் அலைந்தார். ஒருநாள் திருக்கோயிலூரில் வி. ராமஸ்வாமி ஐயரைப் பார்த்தார். அவர் இவருடைய கணிதப்பயிற்சியைப் பார்த்து ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தார். எனினும் பயன் இல்லை. சென்னைக்குச்சென்று பி. வி. சேஷுஐயரைக் கண்டார். அவர் இவரை நெல்லூர் கலெக்டர் ஆர். ராமச்சந்திரராவிடம் அனுப்பினர் (*Dec.* 1910). அவரும் இவரது கணிதப்பயிற்சி வெகு அபாரமானதென்றுமட்டும் அறியமுடிந்ததே அல்லால் அவர் சொல்வதை எல்லாம் அறியமுடியவில்லை. கொஞ்சம் யோசனை செய்தார். சென்னையில் இருப்பதுதான் இவருக்கு நல்லது என்று அவர் தீர்மானித்துக்கொண்டார். ஆனல் சாப்பாட்டிற்கு வழி செய்யவேண்டுமே என்று பார்த்தார். "நீ சென்னைக்குப்போய் உத்தியோகத்திற்கு முயற்சிசெய்; உனக்கு உத்தியோகம் கிடைக்கு மட்டும் உன்செலவிற்கு வேண்டியதை நான் அனுப்புகிறேன்; இங்கே இருந்தால் உனக்குக்கெடுதலாகும்" என்று சொல்லி அனுப்பித் தப்பாமல் செலவிற்கும் கொடுத்து வந்தார். இது இவருக்குப் பிடிக்கவில்லை. மறுபடியும் சென்னையில் சுற்றித் திரிந்தார். போர்ட் டிரஸ்டில் (*Port Trust*) மாதம் ரூ. 25 சம்பளத்திற்கு குமாஸ்தாவாக அமர்ந்தார் (1911). வரவர, சென்னையிலுள்ள கணிதாசிரியர்களுக்கு இவரிடம் மதிப்பு ஏற்பட்டுவிட்டது. பி. வி. சேஷு ஐயர், ஆர். ராமச்சந்திரராவ், பிரான்ஸிஸ்ஸ்பிரிங், முதலியோர் இவருக்கு உதவிபுரிய ஏற்பாடு செய்தனர்.

1912 இல் பி. வி. சேஷு ஐயருடன் பேசிக்கொண்டிருக் கும் பொழுது அவர் "நீ, ஹார்டி என்னும் கேம்பிரிட்ஜ் கணிதா சிரியர் எழுதி இருக்கும் பூர்ணத்தின் கிரமவரிசை (*Orders of Infinity*) என்பதைப் படித்திருக்கிருயா? என்ருர். உடனே "நான் பார்த்திருக்கிறேன். ஹார்டி அதில் தாம் கண்டுபிடிக்க முடியவில்லை என்று விட்டிருக்கிற $\rho(x)=\pi(x)-\int_2^x \frac{dt}{\log t}$ யை நான் கண்டுபிடித்து இருக்கிறேன்" என்று ராமாநுஜன் பதில ளித்தார். ஹார்டிக்குக் கடிதம் எழுதும்படி சேஷுஐயர் சொல்ல அப்படியே இவரும் 16-1-1913-இல் முதல் கடிதம் எழுதினர். ஹார்டி கடிதத்தைப்பார்த்தார். ஆச்சரியம் அடைந்தார். நுட்ப

கணிதம் (*Calculus*) முதலிய தேர்ந்த ஆயுதங்களுடன் கூடிய மேலைத்தேசத்து கணிதாசிரியர்களை 100 வருஷமாக ஏமாற்றி வாட்டிவந்த கணித ஆராய்ச்சிகளில், கணிதத்தில் நவீனமுறைகளை அறியாத ஓர் இந்தியச்சிறுவன் காட்டின புத்தி கூர்மை அவரை இவர் வசமாக்கிவிட்டது. 'லாண்டா 1908-இல் கண்டுபிடித்ததை இவர்கண்டிருக்கிறார். இன்னும் அநேக புதுவிஷயங்கள் புத்தகங்களில் வெளிவராமல் சிற்சில பத்திரிகைகளில்(*Periodicals*) வந்தவைகளை ஜெர்மன், பிரன்சு தெரியாத சிறுவன் அறிந்தது ஆச்சரியமன்றோ?' என்று எண்ணி ஹார்டி, "வியந்தேன். நீ உன் விடைகளைமாத்திரம் அனுப்பி இருக்கிறாய். பயப்படாமல் உன் முறைகளையும் அனுப்பு. என்னாலான உபகாரம் செய்கிறேன்" என்று பதில் எழுதினார்.

இதற்குப்பதில் 27-2-1913-இல் ராமாநுஜம் எழுதினார்: "தங்கள் அன்புவேண்டும். என்முயற்சிகளை அறிந்து நல்வார்த்தை சொல்வோர் இங்கு இல்லை. எனக்குச் சாப்பாடு வேண்டும். தயவுசெய்து சென்னைக்கவர்ன்மெண்டுக்காவது, ஸர்வகலாசாலைக்காவது சிபார்சு செய்து எழுதுங்கள்" என்பது அவர் எழுதிய பதில்.

இதுநிற்க, வானசாஸ்திர இலாகா அதிகாரி ஜி. டி. வாக்கர் என்பவருக்கு பிரான்ஸிஸ்ஸ்பிரிங் இவரைப்பற்றித் தெரிவித்தார். அவர் இவருடைய பெருமையைஅறிந்து சென்னைச் சர்வகலாசாலையாரிடம் சிபார்சு செய்து 2 வருஷத்திற்கு மாதம் ரூ 75 வீதம் உபகாரச்சம்பளம் வாங்கிக்கொடுத்தார் (1913). இவர் அடிக்கடி ஹார்டிக்குக் கடிதம் எழுதிக்கொண்டுவந்தார். அவரும் இவருக்குக் கணக்குப்போடும் முறைகளிலும் மற்றவிஷயங்களிலும் தம்மாலான உபகாரம் செய்தார்.

1914 மார்ச்சு மாதம் சென்னைச் சர்வகலாசாலையில் கணிதத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்ய கேம்பிரிட்ஜிலிருந்து ஈ. எச். நெவில் என்னும் ஆசிரியர் வந்தார். அவரிடம் ஹார்டி விஷயங்களைச் சொல்லி அனுப்பியிருந்தார். அவரும் நேரில்பார்த்துச் சந்தோஷமெய்தி இவரைத் தம்முடன் கேம்பிரிட்ஜுக்கு வரும்படி வற்புறுத்தினார். கடைசியில் இவரும்ஒப்புக்கொண்டார். சென்னைச் சர்வகலாசாலையாரும் வருஷம் ஒன்றுக்கு 250 பவுன் உபகாரச்சம்பளம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டனர். கவர்ன்மெண்டார் உதவி செய்தனர். கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையாரும் உதவிசெய்தனர். இதன் பயனாக இங்கிலாந்து போய்ச்சேர்ந்தார். கன்றைக்கண்ட ஆவை ஒப்ப ஹார்டியும் இவரை வரவேற்றனர். அன்று முதல்

ஹார்டி, லிடில்உட் இருவரும் இவருக்குக் கணிதப்பயிற்சியில் நண்பர்களாக அமைந்தனர். இவரைப் பெற்றதாய்போலக் காப்பாற்றி வந்தார் ஹார்டி. புண்ணியஸ்தலத்திற்குப் போவதொப்ப ஆங்கில கணிதாசிரியர்களும், மற்றையோரும் அடிக்கடி இவர் அறைக்கு வருவார்கள். இவரோ ஆடம்பரமற்றவர்; ஸாமான்ய உடை, ஸாதாரண அறை. மற்றும் சகல விஷயங்களிலும் செட்டு; பணத்தினிடம் அதிக கவனம்; அனுவசியமாய் ஒரு பைசா கூடச் செலவு செய்யாமல் பிரதிமாதமும் ஊருக்கு மணியார்டர் அனுப்பிவிடுவார். சீக்கிரத்தில் 'கணித ஆராய்ச்சியாளர்' என்னும் பட்டமும், 1917-இல் எப்.ஆர்.எஸ்.(இந்தியர்களுள் முதல் முதல் இப்பட்டம் பெற்றவர் இவரே) 'கேம்பிரிட்ஜ் கலாசாலையாளர்' (*Fellowship of Trnity*, 1918) முதலியபோன்ற பல கௌரவப்பட்டங்கள் ஒன்றன்பின் ஒன்ருய் அடைந்தார். சென்னைச்சர்வகலாசாலையாரும் உபகாரச் சம்பளத்தை மேலும் 5 வருஷத்திற்குத் தருவதாக ஏற்பாடு செய்தனர்.

ஈசனும் இவரை ஏற்கும்காலம் கிட்டிவிட்டது. 1917 மார்ச்சில் உடம்புசரியில்லை. ஹார்டி பெருமுயற்சி எடுத்துக்கொண்டு இங்கிலாந்தில் பல வைத்தியசாலைகளில் சிகித்சை செய்தார். உடம்பு கொஞ்சம் ஸௌகரியம் ஆனதும் இவ்விடத்துக்கு அனுப்பிஞல் நன்ருக சொஸ்தம் ஆகும் என்று அனுப்பிவைத்தார். 1919 ஏப்ரலில் சென்னைவந்தார். கொஞ்சகாலம் கொடுமுடியில் தங்கிஞர். செப்டம்பர் மீ கும்பகோணம் வந்து தம் பழைய வீட்டில் தங்கிஞர். ஆஞல் உடம்பு மறுபடியும் அதிக அஸௌகரியமாக, 1920 ஜனவரியில் சென்னைக்கு வந்து செட்பட்டில் தங்கிஞர். நல்ல வைத்தியர்கள் கவனித்து வந்தார்கள். சகல செலவையும் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாஸ ஐயங்கார் பொறுத்து வந்தார்.

யார் எப்பாடுபட்டும் என்ன! இவர் கொஞ்சம் கொஞ்சமாய் மெலிந்தார். கடைசியாக 26—4—1920 காலை தெய்வ பதம் பெற்ருர். அன்று கணிதஉலகில் வருந்தாதார் ஒருவரும் இல்லை.

இவர் கணித ஆராய்ச்சியைப்பற்றிச் சில வார்த்தைகளை இங்கே கூறுவோம்:

வட்டத்தின் சுற்றளவிற்கும், விட்டத்திற்கும் (*Diameter*) உள்ள சம்பந்தத்தின் குறிப்பை 9 தசாம்சத்திற்கும் 8 தசாம்சத்திற்கும் சரியாகச் சுருக்கமாகக் கூறி இருக்கிருர்.

$$\pi=\frac{63}{25}, \frac{17+15\sqrt{5}}{7+15\sqrt{5}}$$ 9 தசாம்சத்திற்குச் சரி.

$$\frac{1}{2\pi\sqrt{2}}=\frac{1103}{992}$$ 8 தசாம்சத்திற்குச் சரி.

லிடில்வுட், "ஒவ்வொரு முழு எண்ணும் ராமாநுஜனின் பிரிய நண்பன். அவைகளைப்பற்றி எப்பொழுது எது கேட்டாலும் அவர் சொல்வார்" என்று கூறி இருக்கிறார். இதற்கு ஒப்ப ஒரு நாள் இவர் ஆஸ்பத்திரியில் இருக்கும் பொழுது, இவரைப்பார்க்க ஹார்டி வந்தார். அவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது "நான் ஏறிவந்த வண்டியின் நம்பர் 1729; அதைக் குணிதம் (*Factorise*) செய்தால் $1729=7 \times 13\times19$ ஆகிறது. இதில் 13 இருப்பதைப் பார்க்க என்மனம் அதைரியப்படுகிறது" என்றார்.

உடனே ராமாநுஜன். "இது ஒரு முக்கியமான எண் அல்லவா? இரண்டுவிதமாக, இரண்டு எண்களின் கனமாக எழுதக் கூடிய சிறிய எண் இதுதான் என்பதை மறந்துவிட்டீரா" என்றார்.

ரோஜர், ராமாநுஜன் முற்றுச்சமங்கள் எனச் சிலகுறிப்புக்கள் கண்டுபிடித்திருக்கிறார். "இவர் செய்த ஆராய்ச்சிகளில் முக்கியமானவை: 1. தொடர் பின்னங்களைப் பற்றியதும் (*Continued fractions*), 2. குறுஞ்செயல்கள் (*Elliptic functions*) சம்பந்தப்பட்டவைகளும், 3. பங்குபிரிக்கும் அனுமானமும் (*Theory of Partitions*) ஆகும்" என்பர் ஹார்டி.

இவருடைய ஆராயும் தன்மை வெகு விசித்திரமானது. வழி கண்டுபிடிப்பதற்குமுன் அநேகசமயங்களில் விடை கொடுத்துவிடுவார். நம் நாட்டில் மட்டும் அல்லாமல் இவ்வுலகிலேயே ஒரு பெரிய கணிதாசிரியராக இவர் விளங்கினார். இவரைப்போன்ற பலபுதல்வர்களைப் பெற்று இந்தியா அதிலும் தென்னாடு மகிழ்க.

புதிய விஷப்புகை

"பாஸ்ஜெனீ" என்ற வஸ்து மிகச்சுலபமாக ஆகாயத்தில் புகையாக மாறிவிடக்கூடியதாக இருக்கின்றதாயினும், ஆகாய விமானங்களிலிருந்து கீழேஇறங்கத் தக்க கனமுடையதாகச் சீக்கிரம் மாறுவது கஷ்டமாகும். அது திரவரூபமான கனபதார்த்தமாகி அவ்வளவு எளிதில் விமானத்திலிருந்து கீழிறங்கிவிடாது. எனவே, அதனை ஒரு வெடிகுண்டுக்குள்ளோ, 'டார்பீடோ' வுக்குள்ளோ அடைத்துவைத்து, ஆகாயவிமானத்திலிருந்து கீழே போட்டால் கீழே சென்று வெடித்து எதிர்பார்த்த அளவுக்குச் சேதத்தை விளைவிக்கக் கூடியதா யிருக்கும். அப்படி அந்த "பாஸ்ஜெனீ" அடைக்கப் பட்டிருக்கும் வெடிகுண்டோ, டார்பீடோவோ கீழெவெடித்து விடுமாயின், உடனே பாணத்தை யுண்டாக்கத்தக்க நச்சுப்புகையைக் கொண்டல் கொண்டலாகக் கிளப்பிவிடும். அந்தப் புகையினை எவர் முகர்ந்தனரேனும் எவரது சுவாசத்தில் அப்புகை நுழைந்தாலும் அவர் உடனே அந்த இடத்திலேயே வீழ்ந்து மாளுவது உறுதி.

தா. இ.

சரித்திரம்

ஸ்டிரஸ்மென்

கே. நடேசன்

இருபதாம் நூற்றாண்டில் உலக சமாதானம் அளித்த ஸ்ரீமான் 1929-ம் வருஷம் அக்டோபர் மாதம் காலை 6½ மணிக்கு உயிர்துறந்தார். தந்திக்கம்பிகளெல்லாம் 'ஸ்டிரஸ்மென் இறந்தார்' என்று அனவரதமும் ஒலித்தவண்ணமா யிருந்தன. பலதேசங்களிலிருந்து பெர்லின் மாநகரத்திற்கு உபசாரத் தந்திகள் வந்து கொண்டிருந்தன. ஸ்டிரஸ்மென் இளமையிலிருந்து அநுபவித்த சீரும் சிறப்பும் பிரதாபத்துடன் பிரகாசித்தன. உலகம் முழுமையும் இவர் புகழைப் பேசியது. 'பெரிய இராஜாங்க நிர்வாகி, ஐரோப்பாவின் அரசியல்வாதி, மதிப்புற்ற தேசாபிமானி' என்று பலர் பலமுறைகளில் துதித்தனர். ஜெர்மனியின் பிரசிடெண்டான பீல்டு மாஷல்வான் ஹிண்டன்பர்க் என்னும் வயோதிகப் பெரியார் இவர் சவத்தை ஸ்மசானம் கொண்டுசேர்ந்தார் என்றால் நம் ஸ்டிரஸ்மெனின் மதிப்பை இதைப்படிக்கும் நீங்களே நன்கு அறிவீர்கள். ஸ்டிரஸ்மெனே ஜெர்மனி என்று உலகத்தோர் கருதினரென்றால் அன்னார் புகழ் பேசவும் வேண்டுமோ!

சென்ற மகாயுத்தத்தின் பயனாக வார்செயில்ஸ் உடன்படிக்கை ஜெர்மனியை அதோகதியாக்கிக் கேவலஸ்திதியில் தள்ளினாலும், அப்போது அரசாங்க நிலைமை அச்சுக்கெட்டுத் தச்சுமாறி யிருப்பினும், அதிலிருந்து ஓர் கதி மோட்சம் ஏற்படுத்திய பிரபு ஸ்டிரஸ்மெனே ஆவர். ஒரு குருடனுக்குக் கண்ணொளியளித்தால் எவ்வித மகிழ்ச்சி ஏற்படுமோ, அஃதேபோல் திக்கற்ற ஜெர்மனி தேசத்திற்கு ஒரு வழிகாட்டியாயிருந்து, மேன்மையான பழைய ஸ்திதியையும் மதிப்பையும் அளித்து, இராணுவம் கப்பல்படை முதலியவற்றை ஒழுங்கு படுத்தி, எல்லைப்புறச் சச்சரவுகளை அநேகநாள் பாடுபட்டுச் சரிப்படுத்தி, நாணயக் கட்டுப்பாட்டை ஸ்தாபித்து, கட்சிப் பிரதிகட்சி தொந்தரவைநீக்கி, உலகினர்க்கே ஜெர்மனிதான் நடுநாயகமா யிருந்து சமாதானமளிக்கும் என்று அனுபவத்தில் துலக்கிக் காட்டிய மதியூகி நம் ஸ்டிரஸ்மெனே

ஆவர். உலகப் பிரசித்திபெற்ற இவர் இதுகாறும் அளிக்காத சமாதானப் பரிசு (*Nobel prize*) பெற்றூர்.

இற்றைக்குப் பதினைந்து வருஷங்களுக்குமுன் பலதேசத்தினரின் இம்சைக்கு ஆளாகி கதியற்றிருந்த ஜெர்மனி தற்போது உலகத்தையே நடுங்கும்படி செய்கிறது. இதற்கு மூலகாரணம் ஸ்டிரஸ்மென்தான். வருத்த கொள்ளை முளைக்கவைப்பதுபோல, ஜெர்மனியை மீண்டும் ஒரு வல்லரசாக்கிய பிறகுதான் தம் உயிரை நீத்தார்.

இப்பெரியார் பெர்லின்மாநகரத்தில் 1878-ம் ஆண்டு மேமீ 19-ம் தேதியில் பிறந்தார். இவர் தந்தை சாராயக்கடை வைத்து வியாபாரம் செய்துவந்தார். ஆதிமுதல் தேசத்தின் பாதுகாப்புக்கு வேண்டிய துரைத்தனச் சம்பந்தமான படிப்பைத் தம் குமாரர் பயிலும்படி செய்தார். உலக சரித்திரம், இலக்கியம், மதசம்பந்தமான படிப்பு இவற்றை ஸ்டிரஸ்மென் இளமை முதற்கொண்டு கற்றுவந்தார். இராஜதந்திர விஷயங்களையும் நன்கு தெரிந்தார். இராஜீய சம்பந்தமான வியாபார விகிதங்களையும், தேசத்தின் செல்வவிருத்தி விஷயங்களையும் ஆராய்ச்சி செய்து வந்தார்.

இக்கல்வித்திறமே இவரைக் காலக்கிரமத்தில் தக்க நிபுணராக்கியது. பெரிய கூட்டங்களில் எந்தவிஷயத்தையும் பற்றி ஆக்ஷேபம் சமாதானத்துடன் சாங்கோபாங்கமாய் சொற்செறிவு, பொருட்பொலிவுடன் பேசுந்திறம் வாய்த்திருந்தார். இச்சாதுர்யமே ஸ்டிரஸ்மெனை, லொகார்னோ,ஜெனீவா,ஹேக் முதலிய இடங்களில் கூட்டிய அகிலதேசீயக் கூட்டங்களில் பலர் மெச்சும்படி செய்தது. இதிலிருந்து நாம் அறிவதென்னவென்றால் ஸ்டிரஸ்மென் பிறவி முதல் தேசத்தொண்டு செய்பவராவர் என்பதே. எதிரிகள் ஒருபக்கம் இவர் சொல்லைக்கேட்டு இன்புறுவர். ஒரு பக்கம் இவர் வார்த்தைகளைக் கண்டு நடுக்கமுறுவர். இவ்விதம் விருப்பும், வெறுப்பும் ஒருங்கே அமையுமாறு பேசுந்திறம் வாய்ந்த இவர் நாளுக்குநாள் ஜனங்கள் மனத்தைக் கவர்ந்து, அவர்கள் தம்மைப் போற்றும்படி செய்தார்.

லீப்சிக், பெர்லின் முதலிய இடங்களில் கல்விகற்கும்போது, சாரண இயக்கத்திற்குத் தலைமைபூண்டு, பத்திரிகைகளில் தேச சம்பந்தமான விஷயங்களைப் பிரசுரித்துவந்தார். எவனொருவன் ஊராரை வசப்படுத்தி மேன்மை படுத்தி வருகிறானோ அவனே ஒரு தேசதந்திரி ஆவான் என்று ஸ்டிரஸ்மென் கருதினர். நாளடைவில் பொதுஜன சமூக சாஸ்திரத்தில் (*Sociology*) டாக்டர் டிகிரியைப் பெற்றூர்.

22-ம் பிராயம் பிறந்தது. டிரஸ்டன் என்ற நகரிலுள்ள சாக்கொலெட் வியாபாரிகளின் தொகுதித் தலைவரானுர். ஆங்கு ஓர் சங்கங்கத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு இன்ஷூரன்ஸ் பாது காப்பு முறைகளையும் ஸ்தாபித்தார். மேலும், ஜெர்மன் பார்லி மெண்டு சபையில் கைத்தொழில் விஷயங்கள் நன்கு கவனிக்கும்படி செய்தார். பேசர்மான் என்ற மந்திரிக்கு ஓர் வலக்கைபோலிருக்கும் நாட்களில் தேசீயப் பொருளாதார முறைகளைப் பலவழிகளில் சீர்படுத்தினுர். நாட்டில் பெருத்த பணக்காரர்கள் ஏழைகளை ஹிம்சிக்க வொட்டாதபடி திரவியத்தைச் சமமாகவும், ஒழுங்காக வும் பங்கிடும் வழிகளைக் காட்டினுர். இத்தகைய நீதிமார்க்கத்தைத் தாம் உண்மையில் மந்திரிபதவி பெற்றபோது வியாபாரிகளின் சங்கங்கள் கவர்ன்மெண்டாரை எதிர்க்காதபடி தடுத்தார்.

1906-ம் வருஷம் டிரஸ்டன் முனிஸிபாலிடியின் சங்கத்தின் அங்கத்தினரானுர். 1907-ம் ஆண்டில் ஜெர்மன் பார்லிமெண்டிலும் தொழிலாளரின் முக்கிய பிரதிநிதியானுர்.

இவருக்கு 28-ம் பிராயம் தொடங்கிற்று. சற்று முன்புதான் விவாகம் செய்து கொண்டார். தேசச் செலவுதிட்டங்களைப்பற்றி இவர் செய்த உபந்நியாசங்கள் பல்வேறு பத்திரிகைகளில் வெளி யாயின. பலர் படித்து ஆச்சரியப்பட்டனர்; பலர் இவர் மதி யூகத்தைக் கண்டு வியப்புற்றனர். பிரைவேட் வியாபாரிகளைப்பற்றி யும், அவர்களுக்கு வேண்டிய துரைத்தனக் கட்டுப்பாட்டுகளைப் பற்றியும் முதன்முதல் ஜனங்களுக்கு இக்காலத்திய தொழில் ஞானத்தைப் புகட்டினுர்.

1912-ம் ஆண்டில் ஸ்டிரஸ்மென் நாட்டின் தேர்தலில் அபஜய முற்ருர். பலர் இவர்வாய்க்குப் பயந்தனர். சிலர் இவருடைய கல்வித்திறத்தைக் கண்ணுற்றுப் பொருமை கொண்டனர். எதி லும் அதிக்கிரமித்துச் செல்லும் இவரை யாவரும் விலக்கலுற்ருர்.

இதைக்கண்டு, ஸ்டிரஸ்மென் அமெரிக்கா சென்று ஆங்குள்ள ஐக்கியமாகாணங்களிலும், கனடாவிலும் உள்ள வியாபாரச் சங்கங்களில் பொருளாதார விஷயமாய் அரிய உபந்நியாசங்கள் செய்தார். இவர் உழைப்பிற்குத்தக்க அதிர்ஷ்டம் இல்லை. இப்பிரபஞ்ச வியாபாரம் முழுமையும் ஒரு சர்வதேச சங்கத்தில் கட்டுப்படுத்த எண்ணி வீண்பிரயாசைப் பட்டார்.

பல வேலைகளை ஒருங்கே செய்துவந்ததனுல் குடும்பயோக க்ஷேமங்களைக் கவனிக்க இவருக்கு அவகாசமேயில்லை.

தேசீய சைனிய விஷயங்களைப் பலவழிகளில் பலப்படுத்த எண்ணினபோது யுத்தகளத்தில் ஸ்டிரஸ்மெனுக்கு வேலைசெய்ய

இடமில்லை. அடிக்கடி உபந்நியாசம் செய்து வந்ததில் இவர் ஹிருதயம் பலஹீனப்பட்டு வந்ததால் யுத்த சம்பந்தப்பட்ட வைத்தியர்கள் இவரை வேலைசெய்யவொட்டாமல் தடுத்தனர்.

ஆதலால் ஸ்டிரஸ்மென் பார்லிமெண்டில் பேசர்மான் கட்சிக்கு உண்மைத்தலைவராக இருந்துவந்தார். கைத்தொழில், வியாபாரம் முதலியவற்றின் கமிட்டிகளில் உப அக்கிராசனம் வகித்தார். நாட்டின் துரைத்தன விஷயமாய் புதன்கிழமைச் சங்கம் ஒன்று ஸ்தாபித்தார். ஆங்கு பிரமுகர்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டனர். இக்காலத்தில் ஸ்டிரஸ்மென் மதிப்பும், பிரதாபமும் அதிகரித்தன. இவர் பெயர் தெரியாதார் ஜெர்மென் இராஜ்ஜியத்திலில்லை.

சென்ற மகாயுத்தம் முடிந்தபின் மூன்றுவருஷகாலம் ஜெர்மனி மற்ற தேசங்களுடன் ஒருமுடிவான சமாதான விஷயங்களைக் கவனித்தது. தேசீயக் குடியரசின் பிரமுகர்கள் ஸ்டிரஸ்மெனைத் தலைவராக்கினர். அப்போது பிரஷியாவின் தனவந்தர்களின் ஆக்கினையை அறவே ஒழித்தார். கூட்டுக் கமிட்டியின் தொகுதி ஓட்டுக்களைக் கடைப்பிடியாகக்கொண்டார். ஆனால் ஜெர்மனியின் துரைத்தன விதிகளை மாற்ற முயன்றாரில்லை. பார்லிமெண்டுக்கு அதிக அதிகாரம் அப்போதில்லை. எல்லோரும் ஜெர்மனி தேசத்தின் கதி யாதாய் முடியுமோ என்ற கவலையுற்றிருந்தனர். சக்கரவர்த்தியாகிய கெய்சரை ஜெர்மானியர் ஒருபொருட்டாக நினையாததால் லூடெண்டார்ப் என்பவருக்கே யுத்த விஷயங்களில் தலைமை அதிகாரம் ஏற்பட்டது. யுத்த நோக்கங்கள், தேசத்தின் எல்லைப்புற விஷயம், ஆயுதப்படைகள் இவற்றைப்பற்றி முதலில் கவனிப்பு ஏற்பட்டது.

இக்காலத்தில் ஸ்டிரஸ்மென் யுத்தமந்திரிக்குத் தக்க உதவி புரிந்தார். சண்டையை எவ்விதமாவது நிறுத்தினால்தான் ஜெர்மனி ஒரு நிலைக்கு வரும்என்று நினைத்தார். ஆனால் தேசத்தின் ஓர் அடி நிலம்கூட அந்நியநாட்டாரால் அபகரிக்கப்படாது என்று எண்ணினார். ஆனால் மற்றதேசங்களுடன் எத்தகைய சமாதானத்தை முடித்தல் நலம் என்று மந்திரிகள் கூட்டங்களில் ஆலோசித்தார். இச்சமயத்தில் ஸ்டிரஸ்மென், யுத்த மந்திரியாகிய பெத்மென் ஹால்வெக் என்பவர் இனித்தேவை யில்லை என்றும், அவர்செய்யும் உடன்படிக்கை ஜனங்களுக்குப் பிடிக்காதென்றும் முறையிட்டார்.

தவிர, 1919-ம் வருஷம் ஜூலை மாதம் 25-ம் தேதி ஜெர்மனியின் முக்கியப் பத்திரிகைகளில், ஸ்டிரஸ்மென் வருஷக்கணக்காக நடந்த யுத்தத்தின் முடிவு இன்னதென்று விரிவாய்ப் பிரசுரித்தார்.

"நம்யுத்த தளவாடங்களை மேற்கொண்டு போகிறவர்கள் இப்பூவுலகிலில்லை. சண்டையில் நமக்கு எவரும் இணையில்லை என்பது உலகப் பிரசித்தம். பால்டிக் சமுத்திரமும், பிரான்சுத்துறை முகமாகிய கலேயும் நம் ஆஸ்தியாக ஏற்பட்டால்தான் நாம் பிறதேசத்தினரை அடக்கி ஆளாவிட்டாலும், நம்மைக்கண்டு பயப்படும்படி செய்யலாம்" என்று அக்கட்டுரையை எழுதி முடித்தார்.

1918-ம் வருஷம் ஸ்டிரஸ்மென் பண்டெஸ்ராட் என்ற முக்கிய அரசாங்க சபையின் தலைவரானார். ஜெர்மனியே பெட்ரோல் இல்லாத மோட்டாரைப்போல் மகாயுத்தத்தைத் திடீரென்று நிறுத்தியது. முடிவு இன்னதென்று யாவர்க்கும் புலப்படவில்லை. வெளிநாட்டு விஷயங்களில் பலதேசத்தினர் ஸ்டிரஸ்மென் என்ன நினைத்துள்ளாரோ அதுதான் ஜெர்மனியின் வாக்கு என்று கருதலானார்கள். அப்போது ஸ்டிரஸ்மென் தம்நாட்டு மதிப்பைப் பற்றிப் பின் வருமாறு பேசினார்:

"ருஷியா தேசம் 1917-18-இல் நிலைகுலைந்ததிலிருந்து ஜெர்மனிக்கு நிச்சயமாக வெற்றி ஏற்படும் என்று எண்ணி யிருந்தேன். ஆனால் பிரான்சு தேசத்தை இடைவிடாது எதிர்த்ததே இடைஞ்சலை விளைவித்தது. இருப்பினும் ஆல்சேஸ் லோரைனை (*Alsace-Lorraine*) எவ்வாறு பிரஞ்சுக்காரரிடம் சேர்ப்பது? தவிர, அமெரிக்காவின் கடைசிகாலத்திய நாசக்கப்பல்களின் படைஎடுப்பு ஜெர்மனியின் மாண்பைத் தொலைத்தது. ரைன்பிரதேசத்தைத் தாண்டாமலிருந்து பிராஞ்சு தேசத்தை நாசப்படுத்தாமலிருந்திருந்தால், கடைசிவரையில் குறைந்தது ஒருலட்சம் பேர் ஒருங்கே எதிரிகள் சைனியங்களை எதிர்ப்பதாயிருந்திருந்தால் சமாதான சங்கத்திற்கு ஒரு கையில் பேனாவையும், மற்றொரு கையில் கத்தியையும் எடுத்துச் சென்றிருப்பேன்" என்று 1927-ம் வருஷம் பார்லிமெண்டு சபையில் பேசினார். இதற்கு இவருடைய தேசாபிமானமும் புத்தி சாதுர்யமுமே முக்கிய காரணங்களாகும்.

இம்மாதிரி வருங்காலத்திய செயல்களை முன்னறிவதிலும், துரைத்தனத்தின் மாண்பை மேன்மைப்படுத்துவதிலும், பத்திரிகைப் பிரசாரம் செய்வதிலும், பல வேலைகளைத் தீவிரமாய் யோசித்துச் செய்வதிலும், ஸ்டிரஸ்மென் யாவரினும் சாலச் சிறந்து விளங்கினார். தேசீய கார்யங்களில் பெரிய நிர்வாகியாகிய இவர் ஏற்படும் இடையூறுகளை லட்சியம் செய்யாமல் தாம் எடுத்தகாரியத்தை ஒழுங்கே சாதித்து வந்தார்.

VII—59

இதனால்தான் மந்திரியாகிய பேசர்மான் 1917-ம் வருஷம் ஜூலை மாதம் 28-ம் தேதி உயிர் நீத்ததும் அவர் கட்சிக்குச் சட்டசபையில் இவரே தலைவரானார். அக்காலத்தே இவருடைய உபந்நியாசங்களைப் படிக்காதவர் எவருமில்லை. அவற்றைப் பிரசுரிக்காத பத்திரிகையும் ஜெர்மனியில் இல்லை. இச்சிறப்பு யாருக்குக் கிடைக்கும்! இவர் தமக்குமுன் இருந்த நாட்டுத்தலைவர்களின் செயல்களை ஆராய்ச்சிசெய்து சீர்தூக்கிக் கண்டனம் செய்வதே தொழிலாயிருந்தார்.

1920-முதல் 1923-ம் வருஷம்வரையில் மூன்று முக்கிய இராஜீயத்தொந்தரவுகள் இவர் மனத்தைக் கவர்ந்தன.

முதலாவது:—கிழக்குமாகாணமாகிய பிரஷியாவில் காப் என்ற தலைவர் தம்மைத்தாமே பிரதமமந்திரியாக நியமித்துக் கொண்டு அட்டஹாசம் செய்துவந்தார். பொதுஜனக்கூட்டங்கள் அவர் பேச்சுக்குச் செவி கொடுக்கவில்லை. எங்கே வியாபாரச் சங்கங்கள் காப் என்பவரைப் பின்பற்றி விடுமோ என்று ஸ்டிரஸ்மென் பயந்தார். எவ்விதத்திலாவது மத்தியஸ்தம் செய்து கலகத்தை நிறுத்தமுயன்றார். கூனோ-ரோசன்பர்க் என்னும் இவ்விரு மந்திரிகளும் ஒத்துழைப்பதைச் சகியாத ஸ்டிரஸ்மென், ஹிட்லர் மூலம் சாக்ஸ்சனி என்ற பிரதேசத்தைப் படையெடுத்துக் கலகக்காரர்களை ஒழித்தார். தொழிலாளர்களுக்கும், துரைத்தனத்தாருக்கும் சமாதானம் ஏற்பட்டது.

இரண்டாவது:—வடசைலீஷியாவில் பொது ஜனங்களினிடையே கலவரம் ஏற்பட்டது. அதில் எழுந்த பிரச்னை என்னவென்றால் வடசைலீஷியா இனி ஜெர்மனியின் ஆதீனத்தி லிருப்பதா, அல்லது போலண்டின் அதிகாரத்திலிருப்பதா என்பதே. இது எத்தகைய முடிவடையும் என்று பலர் மனத்தில் கலக்கமேற்பட்டது. இதை உத்தேசித்து ஸ்டிரஸ்மென் பிரிட்டிஷ் பிரதிநிதியிடம் கலந்துகொண்டார். ஏனென்றால் இவ் விஷயம் ஜெர்மனியின் கைத்தொழிலின் முக்கியஸ்தலங்களைப் பற்றியது. வடசைலீஷ்யாவை ஸ்டிரஸ்மென் கஷ்டப்பட்டுக் கடைசியாக ஜெர்மனிக்குச் சொந்தமாக்கினார். இக்காரியத்தை மெச்சாதார் ஒருவருமிலர். ஜனங்களுக்குத் தங்கள் பலம் தெரிந்தது. ஸ்டிரஸ்மெனுக்கும் மதிப்பு ஓங்கியது.

மூன்றாவது:—பிரஞ்சுக்காரர்கள் ரூர் பள்ளத்தாக்கைத் தங்கள் இராணுவபலத்துடன் எதிர்த்தனர். 'மழைவிட்டும் தூவானம் விடவில்லை' என்பதுபோல், மகாயுத்தம் முடிந்து அதிககாலம் ஆகவில்லை; மறுபடியும் ஜெர்மனியின் சமாதானத்

தைப் பிறர்கெடுத்தால் ஒய்ந்துபோன ஜெர்மனி என்செய்யும்? ஆயுதமில்லாமலே சமாதானத்துடன் அகிம்ஸா முறையைக் கைக் கொண்டு சாத்வீகமாய் எதிர்த்தனர். பிறநாட்டார் தங்கள் நிலக்கரி, தகரம், மரம் முதலியவற்றைக் கைப்பற்ருமல் தடுத்தனர். அந்நியநாட்டு மந்திரியாகிய ஸ்டிரஸ்மென் கைத்தொழிலாளர் களைத் திடீரென்று வேலைகளை நிறுத்தும்படி உத்தரவிட்டார்.

குடியேறிய பிரஞ்சுக்காரர்களுக்கு சாப்பாடு போட யாரால் இயலும்? ஜெர்மன் நாணயமான மார்க்கின் மதிப்பு நிலை கெட் டிருந்தது. உதாரணமாக ஒரு டாலர் மதிப்பு நாற்பது லட்சம் மார்க்கென்ருல் வாசகர்களே ஜெர்மனியின் பணக்கஷ்டத்தை ஊகித்துக் கொள்ளட்டும். மந்திரிவேலையிலிருந்த ரோசன்பர்க் 1923-ம் வருஷம், பிரிட்டிஷ் பிரிதிநிதியிடம், "இனிமேல் பிரஞ்சுக் காரர்கள் ரூர் பள்ளத்தாக்கைவிட்டு விலகாமல் போனல், ஜெர்மனி யின் உள்நாட்டுச்சண்டை அதிகரித்து அதன் பயனக மறுபடியும் பல்வேறு இடைஞ்சல்கள் சம்பவிக்கும்" என்று கூறினர்.

'இருதேசத்தினரும் ஒருங்குசேர்ந்து ஒருமுடிவடையாமற் போனல் ஐரோப்பியர்களுக்கே அனர்த்தம் விளையும்' என்று அந்நியநாட்டு மந்திரியாகிய ஸ்டிரஸ்மென் கருதினர். நாளடைவில் தாமே நிர்வாகசபையில் மந்திரி ஆனர். சாத்விக எதிர்ப்பை ஊக்கத் துடன் நடத்தினர். நாணயக் கட்டுப்பாட்டையும் உண்டுபண்ணி னர். கடைசிவரையில் எதிர்த்ததனல் எடுத்தகாரியம் கைகூடியது. நோட்டுக்கள் செலாவணியாகவில்லை. பிரஞ்சுக்காரர்கள் கொள்ளை யடிப்பதும் நின்றது. 1923-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 12-ம் தேதி ஸ்டிரஸ்மென் பொக்கிஷமந்திரி பதவிபெற்ருர்; செப்டம்பர் மாதம் 26-ம் தேதி ரூர்பள்ளத்தாக்கின் சாத்விக எதிர்ப்பை நிறுத் தும்படி உத்தரவிட்டார். பலரால் முடிக்கவொண்ணுததை இவர் சாதித்தார். சண்டை நின்றது. அதன்பின் இவரது நிர்வாக ஸபை ராஜினுமா செய்தது.

ஸ்டிரஸ்மெனுக்கு ஜெர்மனியின் மகத்தான கஷ்டகாலத்தில் இராஜீய நிர்வாகம் ஏற்பட்டது. யுத்தத்தில் வெற்றிபெருமலிருப் பினும், ஆயுதப்பரிகரணம் செய்தபோதிலும் ஜெர்மனியைப் பலர் கொண்டாடும்படியான வல்லரசாக ஆக்கியவர் ஸ்டிரஸ்மென் என்று கூறலாம். நஷ்டஈட்டு விஷயங்களிலும், வியாபார உடன்படிக்கை களிலும், பொருளாதார மகாநாடுகளிலும், பார்லிமெண்டு சபைக் கூட்டங்களிலும், ஆயுதப்பரிஹரண விஷய வாக்குவாதங்களிலும், சர்வதேசமகாநாட்டின் பிரச்னைகளிலும் ஸ்டிரஸ்மென் தம் மதி

யூகத்தினாலும், பேசுந்திறத்தினாலும் மேம்பட்டுவந்தார்; எதையும் எண்ணித் துணிந்தார்.

முக்கியமாக நான்குகாரியங்கள் இவர் மனத்தைக் கவர்ந்தன. அவையாவன:—(1) தாவிஸ் ஏற்பாடு, (2) லோகார்னோ உடன்படிக்கை, (3) பிரபஞ்ச சர்வதேச மாகாநாட்டிற்கும் ஜெர்மனிக்கும் உள்ள சம்பந்தம், (4) ஹேக்நகரத்தில் கூடிய சர்வதேசமகாநாடு.

இவற்றை எவ்வாறு நடத்துவது? ஏற்படும் கஷ்டத்தை எப்படி கடப்பது? உலக சமாதானம் எவ்விதம் ஏற்படும்? உபந்நியாசங்களாலல்ல; சமரசப் பேச்சுக்களாலல்ல; பார்லிமெண்டு தீர்மானங்களாலல்ல; இராஜீயக் கடிதப்போக்குவரவினாலும் அல்ல; மற்று எதனால் என்றால், சேனாபலத்தினால்தான்; இவ்வாக்குப் பேரறிவாளர்களுக்கே புலப்படும்.

ஆனால் இக்காரியங்கள் நான்கினையும் ஒருவாறு முடிக்குமுன் ஸ்டிரஸ்மென் உயிர்துறந்தார். மூச்சுப்போகும் தருணத்தில் ரைன்நதி பாயும் பிரதேசத்தை அந்நியர் ஆளுகையினின்றும் விடுவித்தார். இத்தகைய மகாபுருஷரை ஜெர்மனிதேசம் எவ்வாறு மறக்கும்!

நிற்க, தாவிஸ் ஏற்பாட்டின்படி ஜெர்மனியின் பணவசூலுக்கு ஓர் திட்டம் ஏற்பட்டது. பிறதேசத்தினரின் நஷ்டஈட்டிற்கு வருஷந்தோறும் எவ்வளவு தொகை செலுத்துவது என்ற வரையறையும் ஏற்பட்டது. ஜெர்மனிக்கும் ஓர் வழிபிறந்தது; அந்நியர் தொந்தரவும் சற்று நீங்கியது.

1925-ம் வருஷம் புரட்டாசி மாதம் 18-ம்தேதி அரசியல் வாதிகள் லொகார்னோ என்னுமிடத்தில் ஒருங்குகூடினர். இது ஸ்டிரஸ்மென் சாக நாலுவருஷத்திற்கு முன்புதான். இதில் செய்த வேலையைக் கொண்டே உலகினர் பலரும் ஜெர்மனி தேசத்தின் அந்நியநாட்டு மந்திரியாகிய ஸ்டிரஸ்மென் ஓர் பெரியவர் என்றும், உலக சமாதானத்திற்கே மூலபுருஷர் என்றும் இன்றைக்கும் கொண்டாடுகின்றனர்.

ஆனால் லொகார்னோ கூட்டம் யாதொரு விசேஷமுடிவையும் அடையவில்லை. இருப்பினும் பிறதேசத்தினருக்குச் சமமாக ஜெர்மனி கருதப்பட்டது.

1925-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் 24-ம் தேதி பெர்லின் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டது. அதன்படி ருஷியாவும் ஜெர்மனியும் ஒன்றின்மேல் மற்றொன்று யுத்தம் தொடங்குவதில்லை என்று ஒப்புக்கொண்டன.

1926-ம் வருஷம் டிசம்பர் மாதம் 9-ம் தேதி ஸ்டிரஸ்மென் நோபல்பிரைஸ் என்ற உலக சமாதானப் பரிசைப்பெற்ருர்.

1928-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 27-ந் தேதி கெல்லாக் உடன் படிக்கை ஏற்பட்டது. அதன் பிரகாரம் பிரபஞ்சதேசத்தார் இனி யுத்தமில்லாமல் சுவதேச பிறதேச காரியங்களைச் சர்வதேச மகாநாட்டின் மூலம் தீர்த்துக்கொள்வதாக ஒப்புக்கொண்டார்கள்.

1929-ம் வருட ஆரம்பத்தில் பாரிஸ் நகரில் கூடிய பொருளாதார மகாநாட்டில் ஸ்டிரஸ்மென் தம் வாழ்நாளில் கடைசியாக உலகமே போற்றும்படியான மதிப்புற்ற உபந்நியாசம் ஒன்று செய்தார்.

அரிய பெரியகாரியங்கள் ஜெர்மனியின் சார்பாக முடிந்தன. தம் தாய்நாட்டை அந்நியர்களிடம் காட்டிக்கொடுக்கக் கூடாது என்பதே ஸ்டிரஸ்மென் பிரபுவின் ஜீவ்யவிரதமாயிருந்தது. இவர் செய்த நன்மைகளை இன்றைக்கும் ஜெர்மானியர் அநுபவித்து வருகின்றனர்.

இவர் சர்வகலாசாலையிலும், தொழில் ஸ்தலங்களிலும், பார்லிமெண்டு அக்கிராசனவகிப்பிலும், அந்நியநாட்டு சமரசப் பேச்சுக்களிலும், எல்லைப்புற விவகாரங்களிலும் வாய்ச்சமர்த்தரா யிருந்தது ஜெர்மனியின் அதிர்ஷ்டவசந்தான். சாகுந்தறுவாயில் கூட ஆயுதப்பரிகரணம் தம்நாட்டாருக்குத் தகுதியானதல்ல என்று உபதேசித்துச் சென்ருர்.

இவரைப்பற்றிய மதிப்புரைகள் பலஉள; அவை இக்கட்டுரையில் எழுதி மாளா. இருப்பினும் இரண்டு போதுமல்லவா?

(1) பிரிட்டிஷ் பிரதிநிதியாகிய தி அபர்னுன் "ஸ்டிரஸ்மெனே பொதுஜனத்தலைவர்; இதில் சந்தேகமே யில்லை; பொக்கிஷ மந்திரி வேலைக்கு அவரே உரியவர்" என்று ஜெர்மன் பத்திரிகையில் வெளியிட்டார்.

(2) ஸர் ஆஸ்டின் சேம்பர்லினிடம் ஆஸ்குயித் என்ற பிரிட்டிஷ் மந்திரி பின் வருமாறு எச்சரிக்கை செய்தார்: "ஜெர்மன் தேசத்து அந்நியநாட்டு மந்திரியாகிய ஸ்டிரஸ்மெனை சாமான்யமாகக் கருதல்கூடாது. அவரிடம் உங்களுடைய சாமர்த்தியம் எளிதில் பலிக்காது."



படாபஜார் கரீம்பக்ஸ்

பி. எஸ். வரதராஜ ஐயர்

கல்கத்தா 'கீழ்த்திசை வர்த்தகசாலை' (*Emporium of the East*) என்றும், 'அரண்மனைகள் நிறைந்த நகர்' (*City of Palaces*) என்றும் பெயர்பெற்ற பட்டணம். இங்கே தினந்தோறும் கணக்கிலடங்காத வியாபாரம் நடக்கிறது. இப்பட்டணத்தில் வியாபார நெருக்கம் பொருந்திய இடங்கள் கிளைவ் தெரு என்பதும், அதன் கோடியிலுள்ள 'படாபஜார்' என்பதுமே. ஹிந்தியில் 'படாபஜார்' என்றால் 'பெரியகடைத் தெரு' என்று பொருள். சுமார் ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்பு சாதாரணமாக இருந்த இந்த ஊர், இப்பொழுது வியாபாரம் என்னும் மாத்திரைக் கோலின் மகிமையால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் தலைநகருக்கு அடுத்த நகரமாக விளங்குகிறது.

படாபஜாரில் ஹாஷிம் என்ற பெயருடைய ஒரு சிறிய நெசவு வியாபாரி இருந்தான். அவன் அவரவர்களுக்குத் தேவையான துணிகளை வேண்டிய மாதிரிகளில் தறிகளில் நெய்வித்துச் சிறிது லாபத்திற்கு விற்று வந்தான். அவனுடைய கடை சிறியதாயினும் அதன்புகழ் பெரியது. சரக்குகள் எப்பொழுதும் நிச்சயமாகக் கொள்ளக்கூடியனவா யிருந்தன. வியாபாரி நாணயமுள்ளவனும் பலபேர்களுடைய நம்பிக்கையைப் பெற்றவனும் இருந்தான். அவன் சுமார் 100 மைலுக்கப்பாலுள்ள குல்னா என்னும் இடத்தில் தன் இல்லத்தில் தன் மனைவியையும், 12 வயதுள்ள தன் பெண்ணையும் விட்டு வந்திருந்தான்.

ஒரு நாள் சாயந்திரம் குல்னாவிலிருந்து வந்த ஒருவர் அவனுடைய கடைக்குள் பிரவேசித்தார். வந்தவருடைய முகம் சிறிது வாடியிருந்தது.

"வாருங்கள், மொஹிஸின் சாஹேப், இப்படி அமருங்கள்" என்று ஹாஷிம் அவரை உபசரித்தான்.

மொஹிஸின் சாஹேப் அல்லாவைப் பிரார்த்தித்த பிறகு, "ஹாஷிம், நீ உன் குடும்பத்தை விட்டுப் பிரிந்திருப்பது சரியல்ல. உன் வியாபாரத்தை யாரிடமாவது ஒப்புவித்துச் சிறிதுகாலம் ஊருக்குப் போய்வா" என்றார்.

"நீங்கள் சொல்லுகிறது சரிதான். ஆனால் வியாபாரம் இப்பொழுது கொஞ்சம் விருத்தியடைந்து வருகிறது. யாரிடம் நான் கடையை விடுகிறது?" என்றான் ஹாஷிம்.

"யாரிடமாவது ஒப்புவித்து நீ விரைவாக ஊருக்குப் போக வேண்டும்" என்றார் மொஹிஸின் சாஹேப்.

"ஊரில் என்ன விசேஷம்?" என்று திடுக்கிட்டுக் கேட்டுக் கொண்டு, ஹாஷிம் வந்தவரது முகத்தைப் பார்த்தான். அவனுடைய கேள்வி மொஹிஸின் சாஹேபினுடைய வாடிய முகத்தின் மீது கார்முகிலை வீசியது போலிருந்தது.

"என்ன, கலவரமடைந்த முகத்துடன் இருக்கிறீர்களே? ஊரில் யாவரும் க்ஷேமமா? என் குடும்பத்துக்கு ஏதாவது விபத்து நேரிட்டதா? விரைவாகச் சொல்லுங்கள்" என்று பதறிக் கேட்டான் ஹாஷிம்.

வேலைக்காரன் விளக்கை ஏற்றினான். விளக்கின் மங்கின ஒளியில் கவலைக்குறி காட்டிய முகத்தோடிருந்தார் மொஹிஸின் சாஹேப். கடைப்புறம் உள்ள சந்தடியே யொழியக் கடையினுள் அமைதி என்னும் அரசி ஆட்சிபுரிந்தனள்.

வருத்தத்தால் கட்டுண்ட தமது நெஞ்சைச் சிறிது இருமி விடுவித்துப் பேசவாரம்பித்தார் மொஹிஸின் சாஹேப்.

"ஹாஷிம், உனது மனைவி மரணாவஸ்தையிலிருக்கிறாள். அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் எவ்வளவோ உதவிபுரிந்தும் ஒன்றும் பயன்படவில்லை. இச்சமயம் நீ அவள் அருகில் இருக்கவேண்டியது உன் கடமை. திடீரென்று சொன்னால் உன்னால் தாங்க முடியாது என்று நினைத்துச் சற்று நிதானமாகச் சமாசாரத்தைத் தெரிவித்தேன். இனி நடக்க வேண்டிய காரியத்தைக் கவனி. எனக்கு வேறுவேலை இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டு வந்தவர் வெளியே சென்றார்.

இம்மொழிகளைக் கேட்ட ஹாஷிம் நினைவிழந்து ஆதனத்தில் சாய்ந்தான். அப்பொழுது கடையில் தோன்றினான் கரீம்பக்ஸ் என்னும் இளைஞன். கரீம்பக்ஸ் ஹாஷிமை மெதுவாகப் படுக்க வைத்து, வேலைக்காரனுடைய உதவியால் சைத்தியோபசாரம் செய்து சுவாதீனமடையச் செய்தான். பிறகு அவன் "ஹாஷிம் சாஹேப், என்ன சமாசாரம்" என்று கேட்டான்.

ஹாஷிம், "கரீம், என்னுடைய மனைவி மரணத்தறுவாயில் இருப்பதாக ஒருவர்மூலமாக அறிந்தேன். இனித் தாமதமின்றி நான் ஊருக்குப் போகவேண்டும். நான் திரும்பிவருமளவும் கடையைப் பார்த்துக் கொண்டிரு" என்றான்.

கரீம்பக்ஸ் "ஐயா, நானோ தாய்தந்தையற்ற அனாதை. தங்களுடைய பழக்கத்தால் ஏதோ அறிந்திருக்கிறேனே யொழிய வியாபார காரியங்களில் எனக்கு அதிகத் தேர்ச்சியில்லை" என்றான்.

ஹாஷிம், "உனக்குள்ள தேர்ச்சி போதும். உன்னுடைய அருமையான குணம் ஒன்றே போதுமானது. நாணயமும், பொறுமையும், காலத்தையும் பொருளையும் சிக்கனமாகச் செலவு செய்யும் வழக்கமும், விடாமுயற்சியும் வியாபாரத்துக்குரிய குணங்கள். அவை உன்னிடம் இருக்கின்றன. உனக்கு நான் கூறுவது சம்மதமா?" என்றான்.

"தங்கள் கட்டளைப்படி நடக்கச் சம்மதமே" என்றான் கரீம் பக்ஸ்.

அன்றிரவு கடையின் விவரங்களைக் கரீம்பக்ஸ் அறிந்து கொண்டான். மறுநாள் அதிகாலையில் ஹாஷிம் குல்னாவுக்குப் புறப்பட்டான்.

கரீம்பக்ஸ் சுமார் 20 வயதுள்ள வாலிபன்; ஆனால் வயது முதிர்ந்த அனுபவ மிகுந்தவர்களும் அழுக்காறு அடையத்தக்க அறிவுடையவன். படாபஜாரிலுள்ள வியாபாரிகளுக்குக் கடிதமெழுதவும், கணக்குப் பார்க்கவும் உதவிபுரிந்து, அதனால் கிடைக்கும் பொருளைக்கொண்டு அவன் அதுவரை வாழ்ந்தனன். ஹாஷிம் கூறிய நற்குணங்கள் அவனிடம் நிறைந்திருந்தன. அவன் கடையைக் கவனமாகப் பாதுகாத்து வந்ததனால் வியாபாரம் தழைத்தோங்கிற்று.

சில மாதங்கள்; மாதங்கள் ஒரு வருடமாயின; இரண்டு வருடங்களாயின. ஊருக்குப் போன முதலாளி இன்னும் திரும்பவில்லை. குல்னாவிலிருந்து வந்த பல வியாபாரிகளையும், ஏனையவர்களையும் கண்டு கரீம்பக்ஸ் தன் முதலாளியைப் பற்றி விசாரித்தான். உளவு ஒன்றும் கிடைக்கவில்லை. மூன்றுவது வருடம் பூர்த்தியாக இன்னும் சில மாதங்கள் இருந்தன.

கரீம்பக்ஸ் தான் வேலை செய்வதற்காக ஒரு சிறுதொகையை எடுத்துக் கொண்டானே யொழிய முதலிலாவது, லாபத்திலாவது ஒரு காசுகூட எடுத்துக்கொள்ளவில்லை. அவன் ஹாஷிமின் பெயராலேயே வியாபாரம் செய்தான். கடைக்குப் புதிதாக வந்தவர்கள் கரீம்பக்ஸை 'ஹாஷிம்' என்றே அழைத்தனர். அப்பொழுது கரீம் பெருமூச்செறிவான். சில சமயங்களில் கண்ணீர் உதிர்ப்பான். அவன் தினந்தோறும் அல்லாவைத் தொழும் பொழுது ஹாஷிமின் மனைவி சுகமடைய வேண்டுமென்றும்,

அவன் திரும்பிவந்து, கடையை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் பிரார்த்தித்தான்.

வியாபாரம் பெருகிற்று. துணிகளின் மாதிரிகளும், அளவும் அதிகரிக்க அவற்றைச் சேமித்துத் தரவாரியாக அடுக்கி அலங்கரித்து வைக்க அச்சிறு கடையில் இடமில்லை. வேலை அதிகரித்ததால் கரீம்பக்ஸ் தகுந்த நம்பிக்கையான உதவியாளர்களை நியமித்துக் கொண்டான். அவர்கள் உட்கார்ந்து வேலை செய்யக் கடையில் இடமில்லை. ஆகையால் அவன் பக்கத்திலிருந்த காலியான இடமொன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அங்கே கடையைப் பெரிதாக்கி வியாபாரம் செய்தான்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த கடையின் அதிகாரி கரீம்பக்ஸ் கவலையால் வாடினன். தனக்கு உரிமையளித்து, வியாபாரத்தைத் தன் கொள்கைகளின்படி நடத்தவும் அதனுல் விளையும் விசேஷ பலன்களைக் காணவும், காணுவதாற் களிப்பெய்தவும் உதவிய ஹாஷிமைப் பன்முறையும் நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து கண்ணீர் சொரிந்தான். கடையின் காட்சியை ஹாஷிம் காணவும், ஹாஷிம் கடையில் வீற்றிருக்கும் காட்சியைத் தான் காணவும் அவன் ஆசைப்பட்டான்.

கரீம்பக்ஸ் பக்தியுள்ள முஹம்மதியன்; அவன் வெள்ளிக் கிழமை தோறும் பக்கிரிகளுக்கு மாத்திரமேயன்றி, ஏனைய எளியவர்களுக்கும் காலையில் அரிசியும் காசும் வழங்கி வந்தான். அவனுடைய தருமத்தைப் பெறக் கடைப்புறம் நிற்கும் பிச்சைக்காரர்களுடைய கூட்டம் தேனீத்திரளைப்போல நிற்கும். அவர்கள் முணுமுணுப்பது தேனீக்கள் ரீங்காரம் செய்வது போலவிருந்தது. ஒரு வெள்ளிக் கிழமையன்று வழக்கப்படி கரீம்பக்ஸ் பிச்சையிடக் கடைவாசலுக்கு வந்தான். வந்தவன் கூட்டத்தின் ஒரு பகுதியில் ஒரு காட்சியைக் கண்டனன். கண்டவன் பரவசமடைந்தான்.

காட்சியளித்தவர் யார்? கூட்டத்தில் நின்ற ஒரு பிச்சைக்காரன். அவன் முகத்தில் ரோமம் அடர்ந்து, உடல் மெலிந்து, கந்தையும் அழுக்குமான வஸ்திரத்தை உடுத்திருந்தான்! பசியால் களைத்து நிற்கவும் சக்தியற்ற அவன், தன்னுடைய மகளான சுமார் 15-வயதுள்ள ஒரு கன்னிகையின் மீது சாய்ந்து நின்ருன்.

கரீம்பக்ஸ் அவனிடம் சென்று அவனை நமஸ்கரித்து "ஹாஷிம் சாஹேப், வாருங்கள்; உங்களுடைய கடைக்குள் வந்து இருங்கள்" என்று நல்வரவு கூறிக் கையினுல் மெல்லப் பிடித்துக் கடைக்குள் அழைத்துவந்தான்.

"இதுவோ என் கடை? இதுவோ என்கடை?" என்று கேட்டுக் கொண்டே ஹாஷிம் மயங்கி விழுந்தான்.

ஹாஷிம் திரும்பிவந்திருக்கும் செய்தி எங்கும் பரவக் கடையின்முன் கூட்டம் அதிகரித்துவிட்டது. கரீமுடைய உதவியாளர்கள், வந்தவர்களுக்குத் தக்க மொழியளித்து அனுப்பிவிட்டுப் பிச்சை யிட்டுக்கொண்டிருந்தனர்.

கரீம்பக்ஸ் ஹாஷிமுக்கும் அவன் மகளாகிய அமீனுவுக்கும் ஆகாரமளித்து அவர்கள் திறனடையச் செய்தான்.

"மனைவியை யிழந்தேன். கொள்ளைக் கூட்டத்தார் கையிற் பட்டுச் சிறுபொருளையும் உரிமையையும் இழந்து பரிதபித்தேன். குழந்தை அமீனுவோடு காணுத சீமைகளுக்குக் கொண்டுபோகப் பட்டேன்; பின்னர், கடவுளருளால் என்குழந்தையோடு ஒருவாறு தப்பியோடிப் பிச்சையெடுக்க இங்கு வந்தேன். இதுவே என் சரிதை" என்றுன் ஹாஷிம்.

"ஐயோ, அனியாயமாகத் தங்களுடைய மனைவியார் மாண்டு விட்டனரா? கஷ்டப்பட்ட நாளெல்லாம் போகச் சுகமடையும் சமயத்தில் 'வெண்ணெய் வருங்கால் தாழியுடைந்தது போல்' அந்த அம்மாள் இறந்து விட்டனரா?" என்று அழுதான் கரீம் பக்ஸ்.

"அப்பா, கரீம், அவள் தன்னுடைய ஞாபகார்த்தமாக இப் பெண்ணை யீன்று விண்ணுலகேகினள். நீ என்கடையைக் காத்தது போல இவளை மணந்து இவளையும் காப்பாயானுல் உன் கடமையை முற்றிலும் செய்தவனுவாய். கடை உனக்கே உரியது. என்னுடைய எஞ்சிய வாணுட்களைக் குர்ஆனைப் படித்துக்கொண்டு அல்லாவின் அருளைப் பெறும் வகையில் கழித்து வருகிறேன்" என்று முடித்தான் ஹாஷிம்.

மின்னல் உற்பத்தி

மின்னல் மேகத்தில் தோன்றிப் பூமியில் தாக்குவதாகக் கருதப்பட்டுவரினும் மின்னல் பூமியிலிருந்தே புறப்பட்டு மேகங்களை நோக்கிச் செல்வதாகக் கூறுகின்றனர். ஒரு மரத்தின்மீது மின்னல் பாயும்போது, மின்சாரப் போக்கானது பூமியிலிருந்து திரண்டு மரத்தினூடே ஆகாயத்தை நோக்கிச் செல்கின்றது. இதனுல்தான் இடியும் மின்னலும் ஏற்பட்டுள்ள காலத்தில் மரத்தினடியில் நிற்பது அபாயகரமாகின்றது.

கோழிமுட்டையா, கோதுமையா?

சி. வீரபாகுப் பிள்ளை

சில பிள்ளைகள் வழியில் விளையாடிக் கொண்டிருந் தார்கள். அப்பொழுது அவர்களுக்கு ஒரு சாமான் கிடைத்தது. அது கோழிமுட்டை மாதிரி இருந்தது. முட்டைக்கு நடுவில் வரை இருக்காதல்லவா? அதன் நடுவில் சற்றுப் பதிவான வரை ஒன்று நீள இருந்தது. அந்த நேரம் ஒருவழிப்போக்கன் அவ்விடத்துக்கு வந்தான். அவனிடம் பிள்ளைகள் அதைக் காட்டினார்கள். அவன் அதைப்பார்த்து அதிசயித்து அவர்களுக்கு ஒரு காசு கொடுத்து அதை வாங்கிக்கொண்டு பக்கத்து ஊருக்குப் போய் அதை அவ்வூர் அரசனுக்குக் காட்டினான். அரசனுக்கும் அது புதிதாக இருந்தது. வழிப்போக்கன் சொன்னவிலையைக் கொடுத்து அதை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டான்.

"புதியன கண்டபோது விடுவரோ புதுமை பார்ப்பார்."

அரசன் மறுநாட்காலையில் தன்சபையிலுள்ள பெரியோர்களை அழைத்து அவர்களிடம் அந்த அபூர்வ சாமானைக் கொடுத்து, "நீங்கள் இது இன்னது என்று பார்த்துச் சொல்லுங்கள்" என்றான். அவர்களும் 'நல்லது' என்று அதை வாங்கிச் சென்று ஒவ்வொருவரும் எத்தனை வகையாகவோ ஆராய்ந்து பார்த்தார்கள். ஒருவருக்காவது 'அது இன்னது' என்று புலப்படவில்லை. அது மூடுமந்திரமாக இருந்தது. 'சரி, இருக்கட்டும்' என்று அவர்கள் அதை வைத்துவிட்டார்கள். அது ஒரு பலகணியில் இருந்தது. ஒருநாள் ஒருகோழி உள்ளேவந்து அதைக்கொத்தி அதில் ஒரு தொளை செய்துவிட்டது. பின், அதை அந்தப் பெரியோர்கள் பார்த்தார்கள். அது கோதுமை அரிசி என்று தெரிந்தது. அவர்கள் உடனே அரசனிடம் வந்து "மஹாராஜா! அதுவேறு ஒன்றுமல்ல; கோதுமை அரிசி" என்றார்கள்.

"கோதுமை அரிசியா? ஐயா! இது அதிசயமாக இருக்கிறது! இவ்வளவு பருமனான கோதுமைமணி எந்தக்காலத்தில் உண்டு? அது எந்த இடத்தில் விளைந்தது? அதைத் தயவு செய்து நீங்கள்

இது ருஷிய ஆசிரியர் தோல்ஸ்தேயி எழுதிய ஒரு கதையைத் தழுவி எழுதப்பட்டது.

தெரிந்து சொல்லவேண்டும்” என்றான். அந்தக்கல்விமான்களும் எவ்வளவோ முயன்றார்கள்; எத்தனையோ புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தார்கள். தெரியவில்லை.

அவர்கள் அரசனிடம்வந்து, “வேந்தர் பெருமானே! எங்களுக்கு அதைப்பற்றி ஒன்றும் அறிய முடியவில்லை. புத்தகங்களிலும் இல்லை. நீங்கள் குடியானவர்களை அழைத்து விசாரியுங்கள். ஒருசமயம் அவர்கள் இவ்விதமான தானியம் விளைந்த காலத்தையும், இடத்தையும் தங்கள் முன்னோர்களிடம் கேட்டு வைத்திருக்கலாம்” என்றார்கள்.

அப்படியே அரசன், வயதான குடியானவர்களைத் தேடி அழைத்து வரும்படி தன் வேலைக்காரர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்களும் அவ்விதமே ஊர் முழுதும் தேடி ஒரு முதிய வேளாளனை அழைத்து வந்தார்கள். முதுமையால் அவன் முதுகு வளைந்திருந்தது. பற்கள் இல்லை. உடம்பு ரத்த ஓட்டமில்லாமல் வெளுத்திருந்தது. அவன், தள்ளாடித் தள்ளாடி ஒருகனத்த பிரம்பின் ஆதரவால் ஒருவிதம் ராஜசபைக்கு வந்து சேர்ந்தான்.

அரசன் அந்தக் கிழவனிடம் தானியத்தைக் கொடுத்தான். கிழவனுக்குக் கண் தெரியாது. கையால் அதைத் தடவிப் பார்த்துக் கொண்டிருந்தான். அரசன் அவனைப்பார்த்து, “கிழவரே! நீர் எப்பொழுதாவது இவ்வளவு பெரிய கோதுமையை விலைக்கு வாங்கியது உண்டா? அல்லது உம்முடைய வயலில் விளைந்ததுண்டா?” என்றான்.

கிழவனுக்குக் காது மந்தம். மிகுந்த சிரமப்பட்டு அரசன் சொல்லுவதை ஊகித்தறிந்து அரசனைப்பார்த்து, “மஹாராஜாவே! இவ்வளவு பெரியதானியத்தை நான் விதைத்தது மில்லை; அறுத்தது மில்லை; விலைக்கு வாங்கினதுமில்லை. இப்பொழுது கிடைப்பது போன்ற சிறுதானியமே நாங்கள் விலைக்கு வாங்கியிருக்கிறோம். ஆனால், நீங்கள் என்தந்தையைக் கேட்டுப்பாருங்கள். அவருக்கு ஒருகால் இவ்வளவு பெரியதானியம் விளைந்தது தெரிந்தாலும் தெரியலாம்” என்றான்.

அரசனும், இந்தக் கிழவனது தந்தையை அழைத்து வரும்படி ஆள் அனுப்பினான். அந்தப் பழங்கிழவனும் ஒரு பிரம்பை ஊன்றிக்கொண்டு அரசன் சமுகத்துக்கு வந்து சேர்ந்தான். அவன் முதுகு கூனவும் இல்லை; தலை அவ்வளவு வெளுக்கவும் இல்லை; கண்பார்வைமட்டும் கொஞ்சம் மங்கியிருந்தது. அரசன், தானியத்தை அவனிடம் கொடுத்து, “பழுத்தகிழவரே! இவ்வளவு

பெரியதானியத்தை நீர் உம்முடைய வயலில் விதைத்ததுண்டா? அல்லது, விலைக்காவது வாங்கியதுண்டா?" என்றான்.

கிழவன், அவன் மகனைப்போல் முழுச்செவிடல்ல. ஆகவே, அரசன் சொன்னது அவனுக்கு ஒருவிதம் கேட்டது. அவன் அரசனைப் பார்த்து, "மஹாராஜா! நான் இவ்வளவு பெரியதானியத்தை என் வயலில் விதைத்ததுங் கிடையாது; வாங்கினதும் கிடையாது; வாங்குவதா? எனக்கு ஒருசாமானும் வாங்கத் தெரியாது. வாங்குவதும் கொடுப்பதும் பணம் இருந்தாலல்லவா முடியும்? எங்கள் காலத்தில் பணநடமாட்டம் இல்லை. ஒவ்வொருவனும் அவனவனுக்கு வேண்டியதை—நிலமிருக்கிறது—பயிரிட்டு விளைத்துக் கொள்ளுவான். அப்படி ஒருசமயம் தட்டிவிட்டால் நாங்கள் ஒருவருக்கொருவர் கைமாறிக் கொள்ளுவோம். சந்தை தேடிப்போய் மாலை விற்றுக் காசாக்குவதும், பின், தனக்குத் தட்டும்போது ஒன்றுக்கு இரண்டு கொடுத்து வாங்குவதும் எங்களுக்குத் தெரியவே தெரியாது. இப்பொழுது விளையும் தானியத்தைவிட எங்கள் காலத்துத் தானியம் பெரிதாகவும் இருந்தது; மாவும் நிறையக்கொடுத்தது. ஆனால், இது மிகப்பெரிது. இவ்வளவு பெரிய தானியம் நான் இதுவரை பார்த்ததில்லை. ஒருசமயம், என்னுடைய தந்தையார் தம்காலத்தில் விளைந்ததானியம் மிகப் பெரிதாக இருந்ததென்றும், அவை மிகுதியான மாவைத் தந்தன என்றும் என்னிடம் சொல்லியதுண்டு. அவர்களை அழைத்துக் கேளுங்கள்" என்றான்.

அரசன், அந்தக் காலங்கண்ட கிழவரையும் அழைத்து வரும்படி தன் ஆட்களை அனுப்பினான். அவர்களும் அந்த வயோதிகவேளாளரை அழைத்து வந்து ராஜசமுகத்தில் விட்டார்கள். அந்தப்பெருங் கிழவருக்கு ஊன்றுகோலில்லை. கண் நன்றாகத் தெரிந்தது; காதும்கேட்டது. பேச்சு மணி எறிந்தாற்போல் இருந்தது. ஓலக்கமண்டபத்தில் இருந்தவர்களெல்லாம் மூக்கின்மேல் கைவைத்து அவரைப் பார்த்தவண்ணமாகவே இருந்தார்கள். அரசன், தானியத்தை எடுத்துவந்து, "தாத்தா! இதைப்பாருங்கள்" என்று அவரிடம் கொடுத்தான். கிழவரும் அதைத் தம் கையில் வைத்துக்கொண்டு இமை கொட்டாமல் பார்த்தார்.

"இதை நான் நெடுநாளைக்குமுன் பார்த்தது உண்டு" என்று சொல்லி அதைக் கொஞ்சம் கிள்ளித் தம் வாயில் போட்டு மென்று, "சரி! அதுதான் இது! சந்தேகமில்லை" என்றார்.

அப்பொழுது அரசன், "தாத்தா! எப்பொழுது, எந்த இடத்தில் இவ்விதமான தானியம் விளைந்தது? நீங்கள் எப்

பொழுதாவது இவ்வளவு பெரியதானியத்தை விலைக்கு வாங்கியிருக்கிறீர்களா? அல்லது உங்கள் வயலில் விதைத்திருக்கிறீர்களா?'' என்றான்.

அதற்குக் கிழவர் ''மஹாராஜா! என்காலத்தில் எங்கும் அவ்விதமான தானியங்களே விளைந்தன. நான் என்னுடைய பிராயத்தில் இவ்விதமானதானியத்தை உண்டுதான் வளர்ந்தேன். மற்றவரும் இதைத்தான் உண்டு வந்தார்கள். இதைத்தான் நாங்கள் விதைத்தோம்; விளைத்தோம்; அறுத்தோம். இதில் மா நிறைய இருக்கும். இதுதான் எங்கள் ஆருயிர் மருந்து'' என்றார்.

அரசன்:---தாத்தா! அவ்விததானியத்தை நீங்கள் எங்காவது விலைக்கு வாங்கினீர்களா? அல்லது நீங்களே விதைத்து வளர்த்தீர்களா?

கிழவன்:—உணவுப்பொருளை விற்பதும் வாங்குவதும் பாவமல்லவா? ஆகையால், அந்தவழக்கம் எங்களிடமில்லை; கலிமுற்றிவிட்டது. எல்லாம் ரூபாய்,ரூபாய் என்று அடித்துக்கொள்ளுகிறார்கள். எங்களுக்கு ரூபாய்—கறுப்போ? சிவப்போ?—தெரியாது. மேலும் ரூபாய் எதற்கு? ஒவ்வொருவனுக்கும் கொள்ளையாகத் தானியம் விளையுமே! அவை அவன் குடும்பத்துக்குத் தாராளம். பணத்தை வைத்துக்கொண்டு அழவா? பணம் பசியாற்றுமா?

அரசன்:—சரி, உங்கள் வயல் எந்த ஊரில் இருந்தது? இவ்வளவு பருமனுன தானியம் எப்படிவிளைந்தது? அதற்கு நீங்கள் செய்த பக்குவமென்ன?

கிழவன்:—கடவுள் படைத்த இந்த வட்டாரத்திலுள்ள வயல்களெல்லாம் உழவருக்குச்சொந்தம். அவரவர் உழுதவயல் அவரவருக்கு. 'இது என்வயல்', 'இது உன்வயல்' என்ற வாதம் அக்காலத்தில் இல்லை. பாடுபட்டவனுக்குப் பயன் உண்டு. அந்தக் காலத்தில் பயிர் பச்சைகள் செழிப்பாக வளர்ந்தன. வயலில் யானை நின்றுல் தெரியாது;பயிர் அப்படிவளர்ந்திருக்கும். ஓர் அருட்கவி,

''கரும்பல்ல நெல்லென்னக்
கமுகல்ல கரும்பென்ன!'

என்கிறாராம். 'இது, கவிராயர் நாட்டைச்சிறப்பிக்கச் சொன்னது; வாஸ்தவமா?' என்று நீங்கள் நினைக்கலாம். இக்காலத்தில் வளரும் கரும்புபோலத்தான் அக்காலத்தில் நெற்கதிர் இருக்கும்; இக்காலத்துக் கமுகு மாதிரிதான் அக்காலத்துக் கரும்பிருக்கும். அவை அப்படி இருந்ததை நான் என் கண்ணுல் பார்த்திருக்கிறேன். இப்

பொழுது கதலிக்குலே பெரும்பாலும் என்கையளவு நீளந்தா னிருக்கிறது. அன்று அது யானைத்துதிக்கைமாதிரி அவ்வளவு நீளமிருக்கும்.

"மொய்சேர் வண்டுண் மும்மத நால்வாய் முரண்வேழக்
கைபோல் வாழை காய்க் குலே யீனும் கலிக்காழி"

என்று திருநெறித்தமிழ் சொன்னது கற்பனையல்ல; உண்மை.

அரசன்:—தாத்தா! இன்னம் இரண்டுகேள்விதான் பாக்கி. முதலாவது அக்காலத்தில் அப்படி வளஞ்சுரந்த நிலம் இப்பொழுது இப்படியாகக் காரணமென்ன? இரண்டாவது, உங்கள் பேரனுக்கு முதுகு கூனிவிட்டது. உங்கள் மகனும் முக்கால் மனிதராகிவிட்டார். நீங்களோ பிரம்பில்லாமல், யௌவனம் திரும்பிவிட்டதுபோலக் குஷாலாய் நடக்கிறீர்கள்; உங்கள் பார்வை மங்கவில்லை; உங்கள் பல் விழவில்லை; பேச்சுத் தெளிவாகவும் இனிமையாகவும் இருக்கிறது. இன்னம், தாத்தாவுக்கு எத்தனை சதாபிஷேகமோ? இவற்றிற் கெல்லாம் காரணமென்ன?

கிழவன்:—இப்பொழுதுள்ள வேளாளருக்கு வேலையென்றால் கசப்பு. கண்டவனிடம் வயலை யடைத்து விட்டுத் தாங்கள் உடலசையாமல் உண்டு உடுத்து வரவேண்டு மென்கிறார்கள். நிலம் எப்படி விருத்திக்குவரும்? மேலும், "பகடு நடந்த கூழ் பல்லாரோடுண்க" என்ற முதுமொழியை அவர்கள் லக்ஷியம் செய்வதில்லை. விளைந்ததை யெல்லாம் விற்றுச் சுருட்டி மூட்டைகட்டவேண்டு மென்கிறார்கள். மச்சழிந்து குச்சாகிறது. நிலத்தில் விளைவும் கம்மி. அப்பொழுது உழவர்களுக்குத் தெய்வகிருபை இருந்தது. அவர்கள் தெய்வந்தொழுது நெற்றி வியர்வை நிலத்தில்விழப் பாடுபட்டார்கள். ஆகையால் காரில் முப்பூவிளைந்தது. சாவியென்பது கார்த்திகைப் பிறை. கடவுளது சட்டதிட்டத்துக்கடங்கி யோக்கியமாக நடப்பவர்களுக்கு என்னகுறையுண்டு? சகலசம்பத்துக்களும் இருந்தன. கவலையில்லை; பிறர் வாழ்வைக்கண்டு வயிறெரிவதும் அவர்களுக்கில்லை.

புதிய எக்ஸ்ரே ஒளி

காலிபோர்னியா சர்வகலா சங்கத்தால் 10 லக்ஷம் வோல்ட் சக்தியுள்ள எகஸ்ரே ஒளிகளைக் குறைந்த செலவில் உண்டுபண்ணும் முறையொன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் அணுக்களை அழிக்கும் பரீட்சைகளும் செய்து பார்க்கப்பட்டன. இம்முறைகளைக் கொண்டு நியூயார்க்கில் மேலும் சில பரீட்சைகள் செய்யப்படுமோம்.

வான்மலர்

ஏ. எஸ். பஞ்சாபகேசையர், எம். ஏ., ஐ. ஸி. எஸ்.

(388-ஆம் பக்கத்தொடர்ச்சி)

[சரோஜா சிறிதளவு படித்தவள். இளமையில் மனோராஜ்யம் செய்வதிலேயே காலங்கழித்துவந்தாள். இவளுடைய சிநேகிதை மீனு என்பவள்; இருவரும் பலவிஷயங்களைக் குறித்துச் சம்பாஷிப்பதுண்டு. சரோஜா பழைய ஹிந்து மதாசாரங்களில் தீவ்ர நம்பிக்கை கொண்டவள். மீனு, சிலவற்றைக் காலத்துக்கு ஏற்றவகையில் சீர்திருத்திக்கொள்ள வேண்டுமென்ற நோக்கமுடையவள். 'ஒரு விதவை மறுமணம் செய்துகொள்ளலாமா?' என்ற விஷயத்தைக் குறித்து இவ்விருவருக்கும் வாதமேற்பட்டது. சரோஜா கூடாதென்பதை வலியுறுத்தினாள். சிலநாளில் சரோஜாவுக்கு விவாகம் நடைபெற்றது. அதற்குப்பின் இவள் தன் கணவராகிய ராமச்சந்திரர் என்பவருடன் சிங்கப்பூரில் சுகமாகக் காலங்கழித்துவந்தாள். இப்படியிருக்க இவள் கணவர் க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டு இறந்துவிட்டார்.]

"நீ என்னுடைய வாழ்க்கையைப் பிரகாசப் படுத்திய சூரியவெளிச்சமே ஆவாய். உன்னைவிட்டுப் பிரிந்துபோகவேண்டியிருக்கிறதென்னும் விஷயமே எனக்கு அதிக துயரத்தை உண்டாக்குகிறது. மறுவுலகில் உன்னை நான் எதிர்பார்த்துக்கொண்டிருப்பேன்" என்று சாகுந்தறுவாயில் சொல்லிவிட்டு, ராமச்சந்திரர் உயிர்துறந்தார். வருத்தந் தாங்கமுடியாமல், கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு சரோஜா கீழேவிழுந்து விட்டாள். மாமனாரான ராமதாசிடம் ராமச்சந்திரர் ஒருவார்த்தைகூடப் பேசவேயில்லை.

ராமச்சந்திரருக்குச் செய்யவேண்டிய கிரியைகள் எல்லாம் முடிந்தபிறகு, ராமதாசும் சரோஜாவும் சென்னைக்குப் பிரயாணமாயினர். சென்னையில் முதல்முதல் சரோஜா மீனுவைத்தான் பார்த்தாள். தன்னுடைய கஷ்டங்களையெல்லாம் அவள் மீனுவிடம் எடுத்துக்கூறினாள். "நான் எவ்வாறு உயிருடனிருக்கிறேனென்பதற்குக் காரணத்தைச் சொல்ல என்னால் முடியாது. அது எனக்கே விளங்கவில்லை. நானும் இறந்துபோய்விடுவேனென்றே நினைத்தேன். நான் இறந்துபோயிருந்தால் மிகவும் நன்றாயிருந்திருக்கும்" என்று அவள் மீனுவிடம் சொன்னாள்.

"அது சரியல்ல; அவ்வாறு நடக்காது; அது நல்லதுமல்ல! இறந்துபோவதைவிட வாழ்வது எப்போதும் மேலானதென்பதில் சந்தேகமில்லை. மேலும், மனச்சாட்சி என்பது, அத்தகைய மூடத்தனமான தற்கொலைகளைச் செய்யவொட்டாமல் நம்மைத் தடுத்துக் கொண்டே யிருக்கிறது. என்கணவன் அத்தகைய விஷயங்களைக் குறித்துப் பேசுவதை நீ கேட்கவேண்டும்" என்று மீனா சொன்னாள்.

"அவர் ஒரு வக்கீலென்றும், உன்னுடைய மனத்திற்குப் பொருத்தமானவ ரென்றும் நான் கேள்விப்பட்டேன்" என்றாள் சரோஜா.

"ஆம் அது வாஸ்தவந்தான். கணவனையிழந்த ஓர் இளம் பெண்ணும், மனைவியை யிழந்த ஒரு வாலிபனும் இறந்துபோனவர்களுக்குச் செய்யவேண்டிய கிரியைகள் முடிந்தவுடனேயே மறுவிவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று அவர் முன்னொருநாள் சொன்னார். 'ஆர்மோனியம் என்னும் ஒரு கருவி உடைந்து துண்டுதுண்டாகப் போய்விட்டால், உடனே நாம் வேறோர் ஆர்மோனியத்தை வாங்கிக்கொள்ளுகிறோம். அதே மாதிரியாக இந்த மனிதஆர்மோனியம் என்னும் கணவன் மனைவி இருவர்களில், மரணம் என்பதனால் ஒருவர் போய்விட்டால் நாம் அவ்வாறு நடந்துகொள்ளாமல், ஏன் வேறு விதமாக நடந்து கொள்ளவேண்டும்?' என்று அவர் கூறினார்" என்றாள்.

மீனா தன்னையறியாமல் சரோஜா சிரித்தாள். "அவர் முழுவதும் இவ்வுலகப்பற்றுடையவ ரென்று தோன்றுகிறது" என்று சரோஜா சொன்னாள்.

"அவர் அப்படித்தானிருக்கிறார். நமக்கு மேலிருப்பது ஆகாயமோ என்னவோ என்னும் சந்தேகம் அவருக்கு உண்டானால், அவருடைய வழக்குக்களெல்லாம் தோல்வியடைந்துவிடும் என்று அவர் என்னிடம் ஒருநாள் சொன்னார். அதனால் அவருடைய வரும்படியும் குறைந்துவிடும் என்று அவர் எடுத்துரைத்தார்" என்றாள் மீனா.

"எப்படி யிருப்பினும் என் வாழ்நாட்களை விதவையாகவே கழித்துவிடுவதென்று நான் தீர்மானித்துவிட்டேன். முன்னமேயே நான் அவ்வாறு உன்னிடம் சொல்லி யிருப்பது உனக்கு ஞாபகமில்லையா?" என்று சரோஜா கேட்டாள்.

"ஐயோ! எனக்கு அது ஞாபகமிருக்கிறது. நீ இவ்வளவு சீக்கிரத்தில் விதவையாய்விடுவா யென்று நான் எண்ணவே யில்லை. நீயோ இளம்பெண்ணாயிருக்கிறாய்; அழகாயிருக்கிறாய்; உனக்கோ

குழந்தைகளுமில்லை; விமலா செய்துகொண்டதுபோல நீயும் மறுவிவாகம் செய்துகொள்ளத்தான் வேண்டும்'' என்றாள் மீனு.

''அது முடியவே முடியாது. என்னுடைய கணவர்மீது எனக்கிருக்கும் ஆசை, என்னை அவ்வாறு செய்ய ஒட்டாது'' என்றாள் சரோஜா.

* * *

''மீனு, உன்னுடைய நல்லபோதனைகளெல்லாம், யாதொரு பயனுமில்லாமல் போகின்றன. இவள் எப்பொழுதும், இறந்து போன இவளுடைய கணவனது புகைப்படத்தை வைத்துப் பூஜித்துக் கொண்டிருக்கிறாள். அதற்குத் தினந்தோறும் மாலைகளைச் சாத்திப் போற்றிக்கொண்டிருக்கிறாள். அவ்வாறு பூஜிப்பதற்குரிய நல்லெண்ணங்கள் எனக்குத் தெரிந்தவரையில், அவரிடம் ஒன்றுகூட இருந்ததில்லை'' என்று ராமதாஸ் மீனுவைத் தனியே அழைத்துச்சென்று அவளிடம் கூறினார்.

''இன்னும் இரண்டு வருஷங்களுக்குள் இவைகளெல்லாம் மறைந்துபோய்விடும். உலக விஷயங்களை அதிகமாக அவள் அறிந்துகொள்வாள். அப்போது அடையக்கூடிய இன்பம் அவளுடைய கைக்குள் இருக்கிறதென்பதையும் அவள் அறிவாள். அப்போது அப்புகைப்படம் இருந்த இடம் தெரியாமல் போய் விடும்'' என்று மீனு சொன்னாள்.

''இப்பொழுது அவள் விஷயத்தில் நான் என்ன செய்வது?''

''அடுத்த மாதத்தில் நாகப்பூரில் 'அகில இந்திய மாதர்கள் கூட்டம்' ஒன்று நடக்கப்போகிறது. அக்கூட்டத்திற்கு நான் அவளை என்னுடன் அழைத்துச் செல்கிறேன். அக்கூட்டம் அவளுடைய கனவுகள் பலவற்றைப் போக்கடித்துவிடும். நாங்கள் திரும்பிவந்தபிறகு அவளைச் சர்வகலாசாலைக்கு அனுப்பிப் படிக்கும்படி செய்து விடுங்கள்.''

ராமதாஸ் அதற்கிசைந்தார். அவருடைய வந்தனத்தையும் அவளுக்கு அளித்தார்.

நாகப்பூரில் நடக்கும் மகாசபைக்குச் சரோஜாவைத் தன்னுடன் வரும்படியாக மீனு செய்தாள். ஆனால் சரோஜாவை இணங்கும்படி செய்தது மீனுவுக்கு அதிக கஷ்டமாயிருந்தது. நாகப்பூரை அடைந்ததும் சரோஜா அதிக ஊக்கத்துடன் வேலைசெய்ய ஆரம்பித்தாள். அவ்விடத்தில் நடந்த கூட்டங்களில் அவள் கலந்துகொண்டாள். அவ்விடத்தில் பேச எடுத்துக்கொள்ளப் பட்ட பலமுக்கியமான விஷயங்களில் 'விதவைகள் மறுவிவாகம்'

என்பதும் ஒன்று யிருந்தது. அதிக கீர்த்தியும் புகழும் வாய்ந்த பல இந்தியப் பெண்மணிகள், 'விதவைகள் மறுவிவாகம் செய்து கொள்ளத்தான் வேண்டும்' என்று வற்புறுத்திப் பேசினார்கள். மனைவிகளை இழந்த கணவன்மார்கள் எப்படி உடனே மறுவிவாகம் செய்துகொள்கிறார்களோ, அதேமாதிரி, கணவனையிழந்த விதவைகள் சாதாரணமாய், யாதொருதடையுமின்றி, உடனே மறுவிவாகம் யதேச்சையாய்ச் செய்துகொள்ளும் காலம் வந்தால்தான் நம்தேசம் முன்னேற்றமடையும் என்று கண்டிப்பாகக் கூறினார்கள். அப்பெண்மணிகளிடத்துச் சரோஜாவிற்கு அதிக விசுவாசம் இருந்தது.

"மனைவிகளை யிழந்த கணவன்களையும் மறுவிவாகம் செய்து கொள்ளக் கூடாதென்று நாம் தடுத்தல் மேலென்று எனக்குத் தோன்றுகிறது" என்றாள் சரோஜா.

"ஒருகால் யானைக்காலா யிருப்பதே போதுமானது. மறு காலிற்கும் அதை ஏன் வரவழைத்துக்கொள்ளவேண்டும்?" என்று அச்சபைக்கு வந்திருந்த ஒரு பெண்மணி சுருக்கமாகப் பதிலளித்தாள்.

"தாங்கள் கூறியதைத் தயைசெய்து விளக்கிச் சொல்லுங்கள்" என்று சரோஜா கேட்டாள்.

"நான் சொன்னதாவது:—இந்த வியாதி ஒருகாலைப்பற்றி யிருக்கிறது. அவ்வாறிருக்கும்போதே, அதிக கஷ்டத்தையுண்டு பண்ணிக்கொண்டிருக்கிறது. அதாவது கலியாணமாகாத விதவைகள்—பிரயோஜனமற்றவர்கள், அதிக எண்ணிக்கையுடைய பெரிய கூட்டம், நமது தேசத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பவர்கள்—எவ்வளவு கஷ்டத்தைக் கொடுக்கக் கூடுமோ, அவ்வளவு கஷ்டத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் விதவைகளா யிருப்பதனால் யாதொரு சௌக்கியத்தையும் அடைகிறதில்லை. அவர்களால் தேசத்திற்கும் சௌக்கியமில்லை. அவ்வாறிருக்கும்போது அந்த வியாதி மற்றொருகாலுக்கும் தொடரும்படிக்கு ஏன் செய்யவேண்டும்?"

சரோஜா மௌனமாயிருக்க வேண்டியதாயிற்று. அவளுடைய கொள்கைகளெல்லாம், மேலேயிருந்து கீழே ஒவ்வொன்றாகத் தள்ளப்பட்டுக்கொண்டிருப்பதை அவள் கண்டாள். மிகவும் உன்னதமானதாகக் கருதப்பட்ட கொள்கைகளெல்லாம், வெறுக்கத் தகுந்த வியாதிகளென்று எடுத்துக் காட்டப்பட்டன. பழைய பழக்கவழக்கங்கள்—அழகிய போற்றத்தகுந்த, கையாளக்கூடிய நல்ல வழக்கங்களென்று அவளுக்குத் தோன்றிக்கொண்டிருந்தவை

களெல்லாம்—சிறிதுசிறிதாக வெறுக்கத்தகுந்த வியாதிகளாக அவளுக்குத் தோன்ற ஆரம்பித்தன. அங்கு வந்திருந்த வேறொரு பெண்மணியிடம் அவள் தனித்துப் பேச நேர்ந்தது. ஒன்பதாவது வயதில் அப்பெண்ணினுடைய கணவன் இறந்துபோய்விட்டதனால் அவள் விதவையானாளென்றும், பிறகு இருபத்தைந்தாம் வயதில் அப்பெண் மறுவிவாகம் செய்துகொண்டாளென்றும், சரோஜா அப்பெண்ணினிடமிருந்து அறிந்துகொண்டாள். அவ்விஷயம் அவள் மனத்திலிருந்த சிறு சந்தேகத்தையும் நீக்கிவிட்டது.

" இந்தச் சபையில் பேசப்படும் விஷயங்களில், உன்னதமான கொள்கைகளுக்கு இடமேயில்லை. இவ்வுலக அனுபவம் ஜாஸ்தியாக இருக்கும் சீமாட்டிகள் கூடியிருக்கும் இந்தச் சபைக்கு வந்ததுமுதல் என்னுடைய எண்ணங்களும், கொள்கைகளும், பஞ்சாய்ப் பறந்துபோய்க்கொண்டிருக்கின்றன" என்று சரோஜா மீனாவிடம் சொன்னாள்.

"உதாரணமாக?" என்று மீனா கேட்டாள். மீனாவுக்கு அங்கு நடந்துவந்த விவாதங்களைக்குறித்து நன்றாகத் தெரியும். வேண்டுமென்றே அவ்விஷயங்களைக் குறித்துப் பேசும்படி தூண்டியவள் மீனாவே யாவாள். சரோஜாவின் மனத்தைத் திருப்பவேண்டும் என்னும் எண்ணத்துடனேயே மீனா அந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தாள்.

"நான் விதவையாகத்தான் என் வாழ்நாட்களைக் கழிக்கப் போகிறேன் என்று முன்பு நான் எவ்வளவு கண்டிப்பாகச் சொல்லிக்கொண்டிருந்தேனோ, அவ்வளவு கண்டிப்பாக நான் இப்போது சொல்லமாட்டேன்" என்றாள் சரோஜா.

"தேசத்தை முன்னேற்றமடையும்படி செய்து காலத்திற்கும், நாகரிகத்திற்கும் தக்கபடிநட. ஒரு நல்ல கணவனைத் தேர்ந்தெடுத்துக் கலியாணம் செய்துகொண்டு, நல்ல திடகாத்திரமுள்ள குழந்தைகளைப் பெற்றுக்கொள். உன்னுடைய விருத்தாப்பிய தசையில் அக்குழந்தைகளே உனக்குச் சந்தோஷத்தை யளிக்கக் கூடியவர்கள் என்பதை நம்பு" என்று மீனா கூறினாள்.

சரோஜாவின் முகம் மலர்ந்தது. "நான் வேடிக்கையாகச் சொல்லுகிறேன் என்று நினையாதே. நான் உன்னுடைய நன்மையை உத்தேசித்தே சொல்கிறேன்" என்று மீனா மறுபடியும் சொன்னாள்."

"ஆனால் ஒரு விதவையின்மீது காதல் கொண்டு அவளைக் கலியாணம் செய்துகொள்ள யார் முன்வருவார்கள்?" என்று சரோஜா கேட்டாள்.

"நீ மறுவிவாகம் செய்துகொள்ளப் போகிறாய் என்று தெரிந்தால் போதுமானது; கலியாணம் செய்துகொள்ளத் தக்க பருவம் வாய்ந்த வாலிபர்கள், 'நான் முன்பு,' 'நான் முன்பு' என்று மேல்விழுந்துகொண்டு உன்னையடையத் திரள் திரளாக வருவார்கள்" என்று மீனா சொன்னதைக் கேட்டு, சரோஜாவின் முகம் மறுபடியும் மலர்ந்தது.

அச்சபையிலிருந்து திரும்பிவந்தபிறகு, சரோஜா உயர்தரக் கலாசாலையில் சேர்ந்து படிக்கத் தொடங்கினாள். கணவனுடைய புகைப்படத்தைப் பூஜிப்பதை அவள் நிறுத்திவிட்டாள். இவ்வுலகமே அவளுடைய கண்களுக்கு ஒரு புதிய உலகமாகத் தோன்றியது. அவளுடைய எண்ணங்கள் முற்றிலும் மாறுதலடைந்துவிட்டன. அதற்கு முன்பு எல்லாம் அவளுடைய கண்களுக்கு இருள் சூழ்ந்தவைகளாகக் காணப்பட்டுவந்தன. அப்பொழுதோ, எல்லா வஸ்துக்களும் சந்தோஷத்துடனிருப்பவைபோல அவளுக்குத் தோன்றின. அவள் மனத்தில் சந்தோஷமே குடிகொண்டிருந்தது. அவள் மனது இனிய சங்கீதத்தை நாடியது; காதலுக்கு இடந்தந்தது. 'ஆசையும் நேசமும் ஆனந்தமும் அங்கே" (அவள் மனத்திலே) குடிகொண்டிருந்தன. 'பேசலும் பாசமும், பிதற்றலும்' பறந்தோடிப்போயின. அந்த நிலைமையில் இருக்கும்போது, உயர்தரக் கலாசாலைப் பிரசங்கியாராயிருந்த நரசிம்மம் என்னும் ஒரு வாலிபர்மீது அவள் காதல் கொண்டாள். அவரும், தலைகால் தெரியாமல் அவளிடத்தில் மோகங்கொண்டார். தம்மைக் கலியாணம் செய்துகொள்ள அவளுக்கு இஷ்டமா என்று அவர் அவளைக் கேட்டார்.

"உண்மையில் தாங்கள் என்மீது ஆசைகொள்ளும் பக்ஷத்தில், எனக்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை" என்று அவள் சொன்னாள்.

"எனக்கு உன்மீது அதிக ஆசையிருக்கிறது. நான் அவ்வாறு தெய்வத்தின்மீது ஆணையாகச் சத்தியம் செய்கிறேன்" என்றார் அவர். அன்றைய தினமே அவள் ராமதாசிடம் சென்று நடந்தவைகளைக்கூறி, அவருடைய அனுமதியை வேண்டினாள்.

"அந்த வாலிபன் மாதம் ஒன்றுக்குத் தொண்ணூறு ரூபாய் தான் சம்பாதிக்கிறான். மாதம் முந்நூறு ரூபாய்களாவது சம்பாதிக்காத ஒருவனுக்கு நான் உன்னைக் கலியாணம் செய்துகொடுக்க மாட்டேன்" என்றார் ராமதாஸ்.

"என் தந்தையே! நான் வான்மலரை நினைத்துக்கொண்டிருந்த காலமெல்லாம் போய்விட்டது. கனவுகளின்மீது எனக்கிருந்த

நம்பிக்கை ஒழிந்து போய்விட்டது. நிதர்சனமாக நடக்கக்கூடிய வைகளின்மீதே நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். நமது இந்து சமூகத்தில், ஒருவாலிபன், ஒரு விதவையைக் கலியாணம் செய்து கொள்ளுகிறேனென்று முன்வருவதே அரிது. அது அவ்வாறு அரிதாயிருப்பதால்தான், விதவைகள் அவர்களுடைய வாழ்நாட்களுக்குள், மறுவிவாகம் செய்துகொள்வதே அரிதாக இருக்கின்றது. அவ்வாறு நடந்தால் அதை நாம் ஓர் ஆச்சர்யமாகக் கருதவேண்டும். எனக்கு மாதம் ஒன்றுக்குத் தொண்ணூறு ரூபாய் போதுமானது. என்னுடைய காதலர் மூந்நூறுரூபாய் சம்பாதிக்கும் வரையில் நான் காத்திருக்கக் கூடிய நிலைமையில் இப்போது இல்லை. அவ்வாறு சம்பாதிக்கத் தொடங்குவதற்குள் என்னுடைய காதலர் தம்முடைய எண்ணத்தை மாற்றிக்கொண்டாலும் மாற்றிக் கொள்ளக்கூடும்; அவருடைய கனவுகளும் அவரைவிட்டு அகன்று போய்விட்டாலும் போய்விடக்கூடும். ஆகவே இப்போதே எனக்கு விடையளிப்பீராக; சரி என்று சொல்லுங்கள்" என்றாள் சரோஜா.

அவ்வாறு சரோஜா சொல்லவே, "சரி" என்று ராமதாஸ் சொன்னார்.

அடுத்தவாரம் கலியாணம் நடந்தது. "நல்லவேளையாக நமது தேசத்தின் க்ஷேமத்திற்கு அறிகுறியாக, வான்மலர்கள் நாளுக்கு நாள் மறைந்து போய்க்கொண்டிருக்கின்றன" என்று மிரளமிரள விழித்துக்கொண்டிருக்கும் விமலாவிடம் அந்தக் கலியாணம் முடிந்தவுடன் மீனு சொன்னாள்.

பூனையைக் கொல்லும் பட்சிகள்

அமெரிக்காவில் பிளாரிடா என்னுமிடத்தில் சில பறவைகள் பசிங்காக பெர்ரீ பழங்களைச் சாப்பிடுகின்றன. பழுத்த பெர்ரீகள் போதை உண்டாக்கக் கூடியனவா யிருப்பதால் சாப்பிட்டவுடன் பட்சிகளுக்கு இப் பழங்கள் மிகுந்த போதையைக் கொடுக்கின்றன. எங்கேயாவது பூனைகள் காணப்பட்டால் இப்பட்சிகள் அவைகளை எதிர்த்துக் கொன்றுவிடுகின்றன வாம். பிறகு மிகுந்த வீரமாகவும் சந்தோஷமாகவும் பாடுகின்றனவாம்.

புனர் ஜன்மம்

கு. ப. ராஜகோபாலன், பி.ஏ.

1

திருச்சி கண்டோன்மென்டில் ஓர் அழகிய தெற்குப்பார்த்த பங்களா 'கலாவிலாஸம்'. அதன் வலதுகைப்புறத்தில் முன் தோட்டத்தை ஒட்டியிருந்த விசாலமான அறையின் மேற்கு ஜன்னலில் அன்னபூர்ணம்மா சித்தப்பிரமை கொண்டவள்போல உட்கார்ந்திருந்தாள். இப்பொழுது தேசஸேவிகைகளுக்கு ஏற்பட்டிருக்கும் 'கேஸரி' வர்ணப்புடைவையும் 'சாகொலெட்' வர்ணரவிக்கையும் அணிந்திருந்தாள். தோட்டத்தின் இலைகளின் வழியாக நீண்டு வந்த மாலை சூரியனின் கிரணங்கள் அவளுடைய வைரக்காதணிகளில் பட்டதால் ஜ்வலிக்கும் சுடர் அவளுடைய வெளுத்த முகத்தில் விட்டுவிட்டு அடித்தது. லேசாக முடியப்பட்டிருந்த தலைமயிர் சரிந்து அடிக்கடி காதுகளிலும் கன்னங்களிலும் விழுவதை அசிரத்தையாக ஒருகையால் அகற்றிக்கொண்டு ஆழ்ந்த யோசனையிலிருந்தாள். சமையல்காரப்பையன் கொண்டுவந்த ஆகாரத்தைத் தீராது என்று உட்கொண்டாள். தினசரியைப் புரட்டினாள், சற்றுநேரம். வெறுப்புடன் அதை மேஜைமேல் விட்டெறிந்தாள். அவளது உற்சாகமே அற்றுப்போயிருந்தது என்பது அவளது ஒவ்வொரு செய்கையிலும் வெளியாயிற்று.

அன்னபூர்ணா திருச்சி சிறையிலிருந்து விடுபட்டுவந்து நாலு நாட்களாயின. சிறைவாயிலில் வந்து தன்னை வரவேற்ற தன் தோழியின் சகோதரன் விச்வேசுவரனுடைய பங்களாவில் தற்காலம் தங்கியிருந்தாள்.

மேலே இன்னது செய்வது, இங்கே செல்வது என்பது விளங்காமல் திகைத்து உட்கார்ந்துபோயிருந்தாள். காலடி சப்தம் கேட்டவுடன் திடுக்கிட்டு எழுந்து சமாளித்துக்கொண்டு வந்தவரை வரவேற்க முன்வந்தாள்.

"வாருங்கள். மன்னிக்க வேண்டும்; எங்கேயோ ஞாபகமாயிருந்தேன்."

"அதனாலென்ன, உட்காருங்கள்."

இருவரும் மேஜையின் இருபக்க நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள்.

"சாரதா இங்கிருப்பதுபோலப் பாவித்து நீங்கள் சங்கோசமற்று இருக்கவேண்டும்."

"இருக்கிறேனே! தெருவில் நிற்கவேண்டியவளை ஒருநிழலில் உட்கார வைத்திருக்கிறீர்களே."

"அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. சாரதா எல்லா விஷயங்களையும் எழுதி விடுதலையன்று உங்களை வரவேற்கும்படியும் தான் காலேஜ் மூடினதும்—இன்னும் ஒருவாரத்தில்—வருவதாயும் எனக்கு எழுதி யிருந்தாள். தஸரா நெருங்கிவிட்டது."

"ஆனால் என்கதை முழுவதும் தெரியுமா?" என்று ஆச்சரியமற்ற தழுதழுத்த குரலில் கேட்டாள்.

"உங்கள் அனுமதியின் பேரிலோ—அல்லது—"

"பாதகமில்லை. அதைப்பற்றி நான் வெட்கமுறவில்லை. நான் ஒருபெண் என்பதை மறக்கும் தறுவாயிலிருக்கிறேன்" என்று ஜன்னலுக்கு வெளியே பார்த்துக்கொண்டு சொன்னாள்.

அன்றுமாலை அவளுடன் ஏதேதோ பேசவேண்டுமென்றும் சந்தர்ப்பப்பட்டால் பேச்சுவாக்கில், அவளறியாமல், அவளது அந்தரங்க உணர்ச்சிச் சுவையைச் சற்று இறக்கிவைத்து ஆற்றலளித்து மனப்போக்கை அறியவேண்டுமென்றும் அவளறைக்கு வந்து உட்கார்ந்துகொண்டு பீடிகை போட்டார் விச்வேசுவரன். 'நான் பெண் என்பதையே மறக்குந் தறுவாயிலிருக்கிறேன்' என்று அவள் சொன்ன சொற்கள் ஓர் அணைபோலக் குறுக்கிட்டு அவரது சொற்பெருக்கைத் தேங்கச்செய்தன! மேல்சொல்லும் எவ்விதவார்த்தை எப்படித் தைக்குமோ என்று நாற்காலியிலிருந்து எழுந்து உலாத்த ஆரம்பித்தார். அன்னபூர்ணாவும் தன் சொற்களிலிருந்து பொங்கிய ஒரு பாதையைப் பிடித்துக்கொண்டு எங்கேயோ சென்றுவிட்டதாக நினைத்தாள்.

ஐப்பசிமாதம்; திடீரென்று மூடம் போட்டுக்கொண்டு 'பிசு பிசு' என்று தூற ஆரம்பித்தது. தெருவில் ஜன நடமாட்டம் அதிகமில்லை. காக்கையைத் தவிர வேறு எந்தப் பக்ஷியும் இருப்பதாகத் தெரியவில்லை. இயற்கையே தேக்கம் கொண்டதுபோல ஸ்தம்பித்திருந்தது.

2

......காங்கிரஸ் சட்டசபை இயக்கத்தில் இறங்கிவிட்டது. சத்தியாக்கிரகிகளுக்கு இனிமேல் என்ன போக்கு?

காந்தி மறுபடியும் ஏதாவதொன்றை ஆரம்பித்தால்ஒழியத் தொண்டர்கள் தூங்கவேண்டியதுதான். எந்தத் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டுத் தன்மனமுடைந்து உயிரையே மறக்கவேண்டுமென்று நினைத்தாளோ அது கானல் நீர்போல மறைந்துவிட்டது. தான் சிறைசென்றபோது இருந்த நிலையே மாறிவிட்டது. நல்லவேளையாக அன்று விச்வேசுவரன் அவளை வரவேற்றார். இல்லாவிட்டால் எங்கேபோவது என்ற பிரச்னைகூடப் பெரிதாகியிருக்கும். பெற்றோர்கள்தான் பாலியத்திலேயே போய்விட்டார்கள். எடுத்து வளர்த்த தாய்மாமனாவது இன்னும் சிலவருஷங்களிருந்து தன்னைப் பாதுகாக்கக் கூடாதா? அவருடைய அரிய கவனமில்லாததால் தானே—தான் சுயேச்சையடைந்த ஒரு கபடமற்ற பெண்ணாய் இருந்ததால் தானே—அந்தப்பாவி சத்தியநாராயணனின் வலையில் சிக்கிக்கொண்டாள். அவ்வளவு நல்லவன்போல நடித்தான். தன்னைப்பற்றி இல்லாததெல்லாம் சொல்லி ஏமாற்றினான்! என்ன விஷப்பாம்பு! தோழி சாரதா சொன்ன பொழுதல்லவோ அவனுடைய நடத்தை வெளியாயிற்று! என்ன வெட்கக்கேடு! காதலாம் காதல்!

"இனி உயிருள்ளவரை புருஷப்பதர்களிடம் நடந்துகொள்ளும் விதம்வேறு. ஆனால் எனது தோழியின் சகோதரர், விச்வேசுவரன் இந்த நாலுநாட்களில் நட்புக்குரியவர் என்றும் சகல விஷயத்தைப் பற்றியும் படித்து ஆழ்ந்து ஆலோசித்திருக்கிறார் என்றும் காட்டிக்கொள்கிறார். மிகவும் வியக்கத்தக்க இங்கிதத்துடனும் மரியாதையுடனும் அன்புடனும் நடந்து கொள்கிறார். நான் சங்கோசமற்று இங்கே இருக்கவேண்டுமென்பதில் கவனமாக இருக்கிறார். அதற்காக எவ்வளவுநாள் இங்கிருப்பது! அதுவும் தோழி சாரதா இல்லாமல்? விச்வேசுவரன் களங்கமற்ற மனிதராக இருக்கிறார். அவனும் அப்படித்தான் தோன்றினான்! எப்படி இருந்தால்தான் என்ன? எனக்கென்ன பயம்! ஐயோ! இவருடைய நிழலில் தாமதிக்கக்கூடாது!" என்று அவள் நினைத்தாள்.

3

திடீரென்று விச்வேசுவரன் நாற்காலியில் வந்துஉட்கார்ந்தான்.

"இச்சிறுவயதில் நீங்கள் இப்படிச் சொல்வது இயற்கைக்கு விரோதமென்று நான் சொல்லலாமா?" என்றான்.

"எது?" என்று அசிரத்தையுடன் கேட்டாள்.

"உடலின் உண்மையை நீத்துவிட்டதாகச் சொல்வது."

"எது உண்மை?" என்று கேட்டுக்கொண்டு அவன் பக்கம் திரும்பினுள்.

"உணர்ச்சிகள்!"

"நீங்கள் கற்றறிந்தவர்கள்; உணர்ச்சிகளை எப்படி உண்மை என்கிறீர்கள்?"

"நீங்கள் அப்படிக்கேட்டால் 'உண்மை' யென்பதே என்ன வென்றல்லவோ கேட்கவேண்டியிருக்கிறது!"

"சந்தேகமென்ன? எது நிலைபெற்றதோ எது வீழ்ச்சி யற்றதோ அதுதான் உண்மை."

"ஏன்?" என்று அர்த்தமாகாததுபோல் கேட்டான்.

"நீங்கள் சொல்வது அதுதான். நமது வேதாந்திகள் சொல்வதுபோல நிர்க்குணமான ஸத்யம் உலகத்துக்குச் சம்பந்தப் படாதது. ஒருவிதப் பற்றுமற்ற அதுதான் காந்தியின் ஸத்யதத்வமும்!".

"அதைத்தான் சொல்லுகிறேன். உயிரினிடையே காணக் கிடைக்காத ஒரு மலர்ச்சி—ஒரு நக்ஷத்திரப்பூ—உயிரை இழுக்கும் ஓர் உத்தம சக்தி?"

"அது ஸாரமற்றது; கிரகங்களின் அமைப்பை அறியாமல் கணிக்கப்பட்ட ஒரு ஜாதகம் போன்றது; பலனற்றது. சுவர் இல்லாத சித்திர முயற்சி. உண்மை—ஸத்தியமென்பது உணர்ச்சி வெள்ளம் பெருகும் உயிரென்னும் ஆற்றை இருகரையைப் போல அணைத்து வழிகாட்டிச் செல்லவேண்டும்."

"ஒரு பயனற்ற உணர்ச்சி வெள்ளத்தை, நீங்கள் சொல்லுகிற ஒரு அவாஅற்ற உண்மை, கரையாகக் கட்டுப்படுத்த வேண்டும்!"

"ஒவ்வொரு க்ஷணமும் ஒரு நாடித்துடிப்பால் நம்மை மாய்த்தும் உயிர்ப்பித்தும் நிறுத்துகிற ரத்தத்தை நீங்கள் பலனற்றது என்று சொன்னுல், நான் என்ன சொல்வது?"

"அந்த ரத்த ஓட்டம் வேண்டாம்!"

"பின் சாவுதான்!"

"அது மேல்!"

"அது ஏற்படுவது நமது செயலில்லையே!"

"அப்படி, பலஹீனமாக, உயிரை உங்கள் உணர்ச்சிக்கு அடிமையாக்கி விடுகிறதா? சாவைத் தேடியடையும் தைரியம் வேண்டும்."

"அம்மா, இன்னும் ஆராய்ந்து பாருங்கள். எல்லாம் கடைசியில் உணர்ச்சியே!"

"அது ஒரு நாய்க்குடை! கிளைத்த க்ஷணமே கருகுவது!"

"திரும்பவும் மற்றோர் மழையில் கிளைக்கத்தான்!"

"நீங்கள் இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள்?"

"பூப்போன்ற இவ்விளம் வயதில் நீங்கள் மனச்சோர்வு கொள்ளக்கூடாதென்று சொல்லுகிறேன்."

"சோர்வு கொள்ளவில்லையே! திடமல்லவோ பெற்றுத் தேசத் தொண்டில் ஈடுபட்டிருக்கிறேன்."

"அதை நான் குறிக்கவில்லை. மேலும் அது ஒரு சோகத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அது அகலவேண்டும். அதற்குப்பதிலாகப் பூரிப்பு வரவேண்டும்."

"என் உயிரில் இனிமேல் அது எப்படிவரும்?" அவள் கட்டிலடங்காத கண்ணீர் அவள் கண்களில் நிறைந்தது.

"அது வரும்படி உதவ நான் முயலலாமா?" என்று இளகிக் கேட்டான்.

"என்னைத் திட்டுங்கள், காலால்கூட உதையுங்கள், பட்டுக் கொள்ளுகிறேன். ஆனால், 'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்ற கடும் சொற்களைமட்டும் சொல்லிவிடாதீர்கள்; கெஞ்சுகிறேன். எனக்கு வேறு போக்கிடமில்லை. ஆ! அதோ உங்களுக்குக் கோபம் வந்துவிட்டது. உங்களுடைய உறுதியை நான் நம்பவில்லை என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? இல்லை. காதலைத்தான் நான் கரிக்கிறேன்."

"நீ உண்மையான அன்பை—காதல் என்ற பதம் வேண்டாம்—இதுவரையில் அறிந்து அனுபவிக்கவில்லை. அது என் குற்றமா?"

"அன்பீர்? கோபித்துக்கொள்ளக்கூடாது. நீங்கள் சற்று முன்பு சொன்ன என் இளமையை, பூவெனக்கருதி நட்புக் கிளையிலிருந்து பறித்து, கசக்கி மோந்துபார்க்க இச்சிக்கிறீர்கள். என்ன ஆகும்? பூ துவண்டு வாடும். நீங்கள் விட்டெறிந்து விடுவீர்கள்."

"நீ எண்ணுவது பிசகு; அன்னபூர்ணம்! என் உயிரின் எண்ண ஏக்கங்களுடன் இவ்வளவு வருஷங்கள் உழன்றபிறகு என் இருதயத்தில் ஒருபக்கம் சூன்யமாக இருக்கிறதென்றும் அதை ஒரு பெண்தான் நிரப்பக்கூடுமென்றும் அறிகிறேன்—சிரிக்காதே. அதற்குரியவள் நீதான் என்று சாரதா நினைக்கிறாள். உயிரின் கைலாஸ சிகரத்தை ஏறி அடையவேண்டுமென்ற ஆசை எனக்கு இருக்கிறது. நீயும் என் கையைக் கோத்துக்கொண்டுவந்து என் தனிமையை இனிமையாக்குவையா?"

"இனிமை கொடுக்கும் சக்தி என்னை விட்டகன்று விட்டதே? என் இருத்யமலர் அகாலத்தில் மலர்ந்து மூடிக்கொண்டுவிட்டது."

"என் ஆர்வத்தால் அதை மறுமலர்ச்சி கொள்ளச் செய்கிறேன். என்னை நம்புகிறாயா?"

"ஐயோ, நான் என்ன செய்வேன்? உங்கள் வீட்டில் உட்கார வைத்துக்கொண்டு நீங்கள் இப்படித் தடுமாறச் செய்வது தகுமா? என் செத்த மனத்தில் நீங்கள் என்ன சுவையைக் காணப்போகிறீர்கள்?"

"அதைப் புனர்ஜன்ம மெடுக்கச் செய்கிறேன். இந்தா, தைரியமாகக் கையைக்கொடு; கரை ஏறுவோம்!" என்று சொல்லிக்கொண்டே அருகிற் சென்று கையை நீட்டினான்.

"ஐயோ, வேண்டாம்! நான் சொல்வதைக் கேளுங்கள். நமது நட்புக்கும் ஹானிவந்துவிடும். நீங்களும் அவனைப்போல.... ஐயோ, மேலேறுவதற்குப் பதிலாகக் கீழே சருக்கிக்கொண்டு தலைகீழாக வந்துவிடுவீர்."

"நீ எண்ணுவது பிசகு, வா சொல்லுகிறேன்!" என்று அவள் கையைப் பிடித்து எழுப்பி நிறுத்தினான். அவள் தன்மனம் தடுமாற நிற்கமுடியாமல் துவண்டு தள்ளாடினாள். விச்வேசுவரன் அவளைத் தன்மேல் சாய்த்துக்கொண்டான்.

பனி முத்து

காலைஇளங் கதிரவனின் கனகஒளி யினிலே,
காற்றில்அசைந் தாடுகிற மரகதப்புல் நுனியில்
கோலமுற விளங்கும்பனித் துளியெனும்வெண் முத்தே!
கொடுங்கதிரோன் நின்னழகைச் சிறிதும்மதிக் கிலனே!
மாலைவரை உன்னுருவம் மறையாதே இருந்தால்,
வருத்தமெலாம் மறந்தவனாய் மகிழ்ந்திடுவே னிங்கே!
காலனென வெயில்எரிக்கும் கதிர்க்கிரணங் களினால்,
கண்ணே!வெண் முத்தே!நின் காட்சி இழப் பேனே! [1]

மூங்கிலிலை மேலிருந்து தூங்கும்பனி முத்தே!
முழுப்பொழுதும் உருக்குலையா திருந்திடவல் லாயேல்,
ஏங்கிடும்யான் தாகம்பசி முதலியவும் மறந்தே,
இன்றுமுற்றும் இங்கிருந்தே இன்பம்மிகப் பெறுவேன்!
ஓங்குமரம் எழுப்புகின்ற ஓமெனும்இன் னிசையை
உளம்உருக உயிர்உருக உணர்வுருகச் செவியில்
வாங்கிஉன் றன் அழதகண்டு மகிழ்ந்திருப்பே னன்றே!
வண்கதிரோன் உன்றனிடம் மனமிரங்க லென்றே? [2]

ஆரியூர். வ. பதுமநாப பிள்ளை


கர்நூல் யாத்திரை

'ஶ்ரீரங்கன்'

(399-ஆம் பக்கத்தொடர்ச்சி)

'மாரிகா என்னும் ஓர் இடைச்சி ஒரு கோவில் கட்டவே, அதைச் சுற்றி உண்டான ஊர் மார்க்காபுரம்' என்று ஸ்தலபுராணத்தை எடுத்து உரைத்தேன். சிவப்பு மின்னலின்முன் சீட்டில் பிரியம்வதையும், இந்திராவும், அவர்களுடன் சக்கரத்தைத் திருப்புகிறவேலையைச் செய்துகொண்டு நானுமாக மார்க்காபுரத்திலிருந்து கர்நூலுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தோம்.

அச்சமயத்தில் தெருவில் நின்ற பையன்கள் சிவப்புமின்னலை நோக்கி 'குட்டிமோட்டார்' 'குட்டிமோட்டார்' என்று கத்தினார்கள்.



'குட்டி மோட்டார்' என்று கத்தினார்கள்.

ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை. வாஸ்தவமான சர்க்கரையை அவ்வூரில் ஏதோ அநாகரிக வஸ்து என்று மதிப்பார்கள். மார்க்காபுரத்துப் பையன்கள் அபிப்பிராயத்தில் 'பஸ்' ஒன்றுதான் சரியான பிராயமடைந்த மோட்டார் வண்டி.

'இந்த ஒண்ணரைச்சாண் ஊரிலே..... என்று நான் ஆரம்பித்தேன்.

'ஊரைக் கோபித்துக் கொள்ளவேண்டாம்' என்று பிரியம்வதை தடுத்தாள்.

'நானென்றும் ஊரைக் கோபித்துக்கொள்ளவில்லை. கோபித்துக் கொள்ளுவதற்கு ஊர் எங்கே இருக்கிறது? நாலு சந்தும் ஒரு பொந்தும் கூடினால் ஓர் ஊராய் விடுமா? ரயில்வே கம்பெனிக்காரர்கள் இருப்புப்பாதை போடும்பொழுது இந்த இடத்தைச்

சட்டையே செய்யவில்லை. மூன்று நான்கு மைல் தூரத்திற்கு அப்பாலேயே 'மார்க்காபுரம் ரோடு' என்று ஒரு ஸ்டேஷன் ஏற்படுத்தி அங்கிருந்தபடியே பாதையைத் திருப்பிக்கொண்டு போய்விட்டார்கள். இது ஓர் ஊர் ஆகுமா?' என்று கேட்டேன்.

'அடேயப்பா! சிவப்புமின்னலைக் 'குட்டிமோட்டார்' என்று சொன்னால் உடனே ஒரு முன்சீப் கோர்ட்டு ஒரு டெபுடி கலெக்டர் கச்சேரி, போலீஸ் டெபுடி சூப்ரிண்டெண்டு ஆபீஸ் எல்லாம் சந்தும் பொந்துமாய் விட்டதே!' என்று பிரியம்வதை சொன்னாள்.

நான் ஒன்றும் சொல்லவில்லை; ஸ்திரீகளுக்கு மோட்டார் வண்டியின் அருமை தெரியாது.

ஊருக்குச் சமீபத்தில் 'குண்டலகம்மா'வைக் கண்டோம். பெயரைக் கேட்டுத் திகைக்கவேண்டாம். இது மிகவும் தெளிந்த நீரோடு ஓடிக்கொண்டிருக்கும் ஒரு நதி. இப்பொழுதுதான் இதற்குப் பாலம் செப்பனிட்டு முடித்திருக்கிறார்கள். 'பிரவாஹோதகம் சிரேஷ்டம்' என்பதன் உண்மை இம்மாதிரித் தெளிந்த நீர் ஓட்டத்தில் ஸ்நானசுகம் அனுபவிக்கும் பொழுதுதான் விளங்குகிறது.

பத்தொன்பது மைலுக்கு அப்பால்தான் அடுத்த ஊரைக் கண்டோம். 'இது என்ன ஊர்?' என்றாள் பிரியம்வதை.

'கம்பம்' என்றேன்.

'என்ன கம்பம்?' என்றாள் இந்திரா.

'பூகம்பம்'.

'என்ன பூ?'

'சாயப்பூ.'

'க்யா சாப்?' (என்ன, ஐயா?) என்று எங்களுக்குப் பின்னால் உட்கார்ந்துகொண்டிருந்த முகம்மதிய டிரைவர் தன்னைக் கூப்பிட்டதாக நினைத்துக்கொண்டு சொன்னான். அத்துடன் எங்கள் விளையாட்டை நிறுத்தினோம்.

அதற்குப்பிறகு இருபத்துமூன்று மைல்களுக்கு அப்பாலுள்ள 'கித்தலூர்' வந்து சேர்ந்தோம். மின்னலுக்குப் பெட்ரோல் வாங்கிக் கொண்டோம். இந்த ஊரை மறக்கமுடியாது. ஏனென்றால் என்னுடைய அனுபவத்தில் இந்த ஓர் ஊரில்தான் மோட்டார் வண்டிகளின் உபயோகத்திற்காக விற்கிற பெட்ரோல் வண்டி போகமுடியாத ஒரு சந்துக்குள்ளே தூரத்தில் விற்கப்படுகிறது. மோட்டார்வண்டியிலேயே உட்கார்ந்துகொண்டே போகிறவர்கள்

கொஞ்சதூரமாவது பெட்ரோல் தகரத்தைத் தூக்கிக்கொண்டு நடந்துபோனால் அவர்களுக்குத் தேக ஆரோக்கியத்திற்கு நல்லது என்று அந்த வியாபாரியின் அபிப்பிராயம் போலிருக்கிறது. இவ்விதம் அவர்களுக்கு உபகாரம் செய்வதற்குப் பலனாக விலையும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

இந்த ஊர் தாண்டியவுடன் 'நல்லமலை' என்று பெயருள்ள மலைப்பிரதேசம் ஆரம்பிக்கிறது. கணவாய்வழியாகச் சென்றாலுங் கூட அதிக உயரம் ஏறியே மலையைக் கடக்கமுடியும். காட்டிலாகாவின் சரகத்திற்குள் வளைந்து வளைந்து போகிற அவ்வழியில் நமக்குத் திக்குத் திசை ஒன்றும் தெரிவதில்லை. இஞ்சினீயர்கள் தங்களுக்கு முன்னால் காட்டுமனிதர்கள் ஏற்படுத்தின ஒற்றையடிப் பாதையைப் பின்பற்றியே மலையில் ரஸ்தா ஏற்படுத்துவது பிரசித்தம். இந்த இடத்தில் காட்டுமனிதர்களே திசைதெரியாமல் ஒரு பாம்பை ஓடவிட்டு அதுசென்ற விதமாகத் தாங்களும் சென்றிருக்க வேண்டும். வழியின் பேரிலேயே கண்வைத்து வண்டியை விட்டுக்கொண்டு போகவேண்டுமே தவிர கண்ணைச் சிறிதும் எடுக்கக்கூடாது. அக்கம் பக்கம் பார்க்கவேண்டுமானால் வண்டியை நிறுத்திவிட்டுத்தான் பார்க்க முடியும். இந்த மலையின் ஆரம்பத்தில் 'திருவமிட்டா' என்று ஓர் இருப்புப்பாதை ஸ்டேஷன் இருக்கிறது. பிறகு மலையின்மேல் ஒரு குகைக்குள் (*Tunnel*) ளிருந்து இருப்புப்பாதை வெளிவந்து வெகு அழகாகப் பாலத்தின் மீது ஒரு சிகரத்தினின்று மற்றொரு சிகரத்திற்குத் தாவுகிறது. இரும்பினால் செய்யப்பட்ட இவ்வளவு நேர்த்தியாய் உள்ள பாலத்தை நேரிலாவது படத்திலாவது நாங்கள் இதுவரையில் கண்டதில்லை. பாலம் ஒரு வில்லின் ரூபமாகச் செய்திருக்கிறது. அவ்வில்லின் முதுகானது பாதாளத்தை ஒத்த பள்ளத்தை நோக்கியிருக்க, இரண்டு நுனிகளும் இருபக்கமும் உள்ள கோபுரத்தைப் போன்ற கட்டடங்களின்மேல் தாங்கப் பட்டிருக்கின்றன. வில்லுக்கு நாண்கயிறு மாதிரி இருப்புப்பாதை ஓடுகிறது. நாங்கள் வண்டியை நிறுத்தி அந்தப் பாலத்தைப் பல பக்கங்களிலிருந்து பார்த்து மகிழ்ந்தோம். பாலத்தின்மேலே ரயில் வண்டியில் போகிறவர்களுக்கு இதன் பூர்ணலாவண்யத்தைக் காணமுடியாது.

ஒரு கிழவன் 'பட்டணம் பார்க்கிறது' என்று சொல்லும் பெட்டியை மலைமேல் உள்ள காட்டு ஜனங்களுக்குக் காண்பிப்பதற்காகச் சிரமத்துடன் தூக்கிக்கொண்டு எதிரே வந்தான். இந்திராவுக்கு அது என்ன பெட்டியென்று விவரித்துச் சொல்லவேண்டியிருந்தது.

'இந்திராவுக்குக் குழந்தை பிறந்தால் அது மோட்டார்க் காரைப் பார்த்தால் இது என்னவென்று கேட்கும்' என்றேன்.

'ஏன்?' என்று பிரியம்வதை கேட்டாள்.

'நாடெல்லாம் சினிமாவும் டாக்கியுமானதால் 'லண்டன், பாரிஸ்' பார்க்கும் பெட்டி மலைக்கு ஏறிவிட்டது. நாடெல்லாம் ஏரோப்ளேனாகிவிட்டால் காட்டில்தான் மோட்டார்க்காரைக் காணலாம். அதை நாட்டுக் குழந்தை அறியாதல்லவா?' என்றேன்.

'நல்லவேளை, சிவப்புமின்னல் ஜீவதசையிலாவது நம்முடைய காலத்திலாவது அவ்விதம் விபரீதமாக ஒன்றும் நடக்கப்போவதில்லை. பின்னால் என்னவாவது நடக்கட்டும். எனக்குக் கவலையில்லை' என்றாள் பிரியம் வதை.

*   *   *   *

இந்தப் பிரதேசம் முழுவதும் நந்திகேச்வருடைய நாமமே விளங்குகிறது. நாங்கள் கடந்து இறங்கிய கணவாயின் பெயர் 'நந்திக் கணவாய்.' வரப்போகிற ஊரின் பெயர் 'நந்தியால்.' அதற்கு எட்டு மைல் முன்னதாகவே ரஸ்தா பிரியும் இடத்தில் 'மஹா நந்தி' என்கிற பெயரைக் கைகாட்டிமரம் காண்பித்துக் கொண்டிருந்தது. அது ஒரு விசேஷ ஸ்தலமாகையால் அந்த முகமாய்த் திரும்பினோம்.

நான்கு மைல் தூரத்தில் ஒரு சோலையின் மத்தியில் மஹாநந்தி கோவிலைக் கண்டோம். கர்ப்பக் கிருஹத்தில் நந்தி கேச்வருடைய முகம்மாத்திரம் இருக்கிறது. ஆனால் இரட்டை முகமாய் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டு இரண்டும் மேல் நோக்கிக் காணப்படுகின்றன. இவ்விதம் இவைகள் கல்லில் செதுக்கப் பட்டவையல்ல; சுபாவமாகவே அமைந்திருப்பவை என்பது பிரியம்வதையின் அபிப்பிராயம். முன்காலத்தில் இரண்டு முகங்களினாலும் ஜலம் வழிந்துகொண்டிருந்ததாகச் சொல்லுகிறார்கள். இப்பொழுது இந்த வழியாக ஜலம் வெளிவரவில்லை. ஆனால், ஒருவரும் காணாத ஒரு மலைச்சுரங்கத்தின் ஜலமானது ஓய்வில்லாமல் வருஷம் முழுவதும் அந்தக் கர்ப்பக் கிருஹத்தின் அடியில் ஓடிவந்து சன்னிதிக்கு எதிரில் இருக்கும் ஒரு குளத்தில் இரண்டு மூலைகளில் உள்ள நந்தி முகங்களின் மூலமாகக் கொட்டுகிறது. அவைகளுக்கு எதிரிலுள்ள இரண்டு மூலைகளிலிருந்து கல்லில் செதுக்கின வடிகால்களின் வழியாய் அதிகமான ஜலம்

வழிந்தோடுகிறது. இந்தத் தண்ணீர், பிறகு கோவிலுக்கு வெளியே உள்ள இரண்டு குளங்களில் விழுந்து பின்னர் வயல்களுக்குப் பாய்கிறது. கோவிலுக்குள்ளே நுழையாத ஜாதியார்கள் வெளிக் குளங்களில் ஸ்நானம் செய்கிறார்கள். ஒவ்வொரு குளத்திலும் அடிஸ்தலம் சமமட்டமாகச் செப்பனிட்டு இருக்கிறது. இந்த ஏற்பாட்டினால் குளங்களில் எப்பொழுதும் சுத்தமான ஜல மாகவும் குளம் முழுவதும் ஒரே ஆழமாகவுமிருக்கிறது. உள்ளே இருக்கும் குளத்தின் மத்தியில் ஒரு நீராழி மண்டப மும் அதில் சிவலிங்கங்களும் இருக்கின்றன. இந்தக் குளத்தில் சாதாரண உயரமுள்ள ஸ்திரீகளுக்குக் கழுத்தளவு ஆழமுள்ள ஜலம் தங்கி நிற்கிறது.

சோலையின் மத்தியில் அமைக்கப்பட்ட அந்தக் கோவிலுக் குள் கொஞ்சமேனும் சேறில்லாமலும், விழுகிற ஜலமும் ஓடுகிற ஜலமும் தம்மில் பேசிக் கொள்ளுவதைப்போல மிருதுவான சலசலப்புடனும் இருக்கும். அத்தடாகத்தைப் பார்த்து அதன் கானத்தைக் கேட்பது ஆனந்தமாயிருக்கிறது.

இந்த ஜலத்தின் விசேஷகுணங்கள் இரண்டு. எக்காலத்திலும் எந்த நேரத்திலும் வெதுவெதுப்பான ஒரே சூடாயிருக்கிறது. ஏக தேசம் மனுஷ்யதேகத்தின் உஷ்ணமே அதற்கும் உண்டு என்று சொல்லலாம். இரண்டாவது அது ஆச்சரியப்படத்தக்க வகையில் தெளிவாகவும் இருக்கிறது. பளிங்குபோல் தெளிவு என்று சொன் னால் போதாது. ஜலமே இல்லாமல் போனால் குளத்தின் தரை எவ் வளவு பிரகாசத்துடன் தோன்றுமோ அதைக்காட்டிலும் இந்த ஜலத்தின் மூலமாகப் பார்க்கும்பொழுது அதிகப் பிரகாசத்துடனே தெரிகிறது. கரையின்மேல் நின்றுபார்த்தால் ஜலம் முழங்கால் அளவு ஆழம் கூட இருக்காதுபோல் தோன்றுகிறது. இந்த மாயையை நம்பி இறங்கினால் ஜலம் படிக்குப் படி ஆழம் அதிகமா கிக்கொண்டே போகிறது. முடிவில் கழுத்தளவோடு நிற்கும்போது தான் நமக்குத் தைரியம் திரும்பிவருகிறது. ஆனால் ஜலத்தில் இறங்கினவர்க்கு மாயை நீங்கலே ஒழிய கரையின்மேல் நிற்பவர்க்கு யதாப்பிரகாரம்தான். அவர்களுடைய கண்ணுக்கு ஜலத்தில் நிற்பவர்களின் தேகமெல்லாம் குழந்தை வடிவமாகி அந்த இரண்டடி அளவு ஜலத்திற்குள் அடங்கிவிட்டதாகத் தோன்று கிறது.

குற்றாலத்தில் அகஸ்தியருடைய சக்தியைப்பற்றிச் சொல்லக் கேள்விப்படுகிறோம். இவ்விடத்திலேயோ நந்திகேச்வரர் எல்லாரை யும் அகஸ்திய ராக்கிவிடுகிறார். அதுமாத்திரமில்லை. பாரதக்

கதையைக் கேட்டதனால் பாபமெல்லாம் போனதற்கு அடையாள மாக அழுக்குத்துணியும் வெளுத்துப் போனதாகப் புராணத்தில் கதை உண்டு. அதேமாதிரி மஹாநந்தியில் ஸ்நானம்செய்து கிளம்பினால், துணிகளெல்லாம் சுத்த வெளுப்பாக மாறுவதைக் காணலாம்.

* * * *

'இதற்குச் சமீபத்தில் பஸவபுரத்தில் முன்காலத்தில் வைரங் கள் பூமியில் கிடைப்பதுண்டு' என்றேன்.

'அப்படியானால் அங்கே போகலாம்' என்று இந்திரா சொன்னாள்.

'முன்காலத்தில் என்று சொன்னது காதில் படவில்லை போலிருக்கிறது' என்றேன்.

'ஆனால் இப்போது போகிற வழியில் ஒரு கொத்து வயிரக் கற்கள் அகப்படாவா?' என்று பிரியம்வதை கேட்டாள்.

'சக்கரத்தின் டயரில் நிரம்பமுள்ளுக் கிடைப்பதுதான் நிச்சயம்' என்றேன்.

வைரம் அகப்பட்டால் வைர அட்டிகையாவது செய்யலாம். முள்ளு அகப்பட்டு என்ன பிரயோஜனம்? ஆகையால் அந்த இடத்திற்குப்போக ஒருவருக்கும் உற்சாகமில்லை. போகவில்லை.

* * * *


ஜில்லா போர்டாரால் உண்டாக்கப்பட்டிருக்கும் ரஸ்தாக்கள் சாதாரணமாக நன்றாக யிருக்கையில் அவைகளை விட்டு ஒரு நகரசபை எல்லைக்குள் நுழைந்தவுடன் என்ன காரணத்தினாலேயோ ரஸ்தாக்கள் சிலசமயம் ரொம்பக் கேவலமாகக் காணப் படுகின்றன. 'நந்தியால்' இதற்கு ஓர் உதாரணம். வெளியில் சுமார் இருநூறுமைல் பிரயாணத்தில் உண்டானதைக்காட்டி லும் நந்தியாலுக்குள் ஒருமைல் போவதற்குள் எங்களுக்கும் சிவப்பு மின்னலுக்கும் சிரமம் அதிகமாய்விட்டது. ஊருக்கு இரு புறமும் பெரிய குத்துக்கல்லுகளில் 'டிஸ்ட்ரிக்ட்போர்டு எல்லை முடிந்து விட்டது, முனிசிபாலிடி ஆரம்பித்துவிட்டது' என்று பிரசுரம் செய்யப்பட்டிருந்தது.

'இந்தக் கற்களுக்கு என்ன அவசியம்? ரஸ்தாவில் போனால் தனக்குத்தானே வித்தியாசம் தெரிகிறதே!' என்று இந்திரா கேட்டாள்.

'நான் இந்த ஊர் நகரசபைத் தலைவரா யிருந்தால் இந்தக் கேவலத்திற்கு உத்திரவாதி யார் என்று தெரிவிக்கிற இந்தக்கற்களை

ராத்திரியிலேயே வந்து பிடுங்கி எறிந்து விடுவேன்' என்று நான் சொன்னேன்.

'ஆனால் நான் டிஸ்ட்ரிக்ட்போர்டு எஞ்சினீயராயிருந்தால் பொழுது விடிவதற்கு முன்வந்து அந்தக் கற்களைத் திருப்பியும் நட்டு விட்டுப்போவேன்' என்று பிரியம்வதை பிரியமாகச் சொன்னாள்.



நந்தியால்—கர்நூல் ரஸ்தா.

நந்தியாலிலிருந்து கர்நூலுக்கு நாற்பத்தேழுமைல். இவ்வளவு மைல்களிலும் கண்ணால் ஆசைதீரப் பார்ப்பதற்கு ஒரு விசேஷமும் கிடையாது. வெய்யில் ஏறிவிட்டது. இந்திரா ஒளித்தலில்லாமல் உறங்கத்தொடங்கிவிட்டாள். பிரியம்வதையைப் பற்றி நான்ஒன்றும் சொல்லக்கூடாது. எதிரே காணும் ஆட்டிடையர்களின் சுபாவத்தைப்பற்றிச் சிந்திக்கலானேன். அவர்கள் இரு விதம்: ஒருசாரார் மோட்டாரின் ஊதலைக் கேட்டவுடன், அது ஆட்டின்பாடு, மோட்டாரின்பாடு என்று கையை உதறிவிட்டுத் தாங்கள் மாத்திரம் ஒரு பக்கத்துப் பள்ளத்திற்குச் சென்று விடுகிறார்கள். அவர்களை ஒத்துழையாமைக்காரர்கள் என்று சொல்வது சரியாயில்லை. ஏனென்றால் எவ்விதத்திலும் உழைப்பதாகவே இவர்களுக்கு எண்ணம் கிடையாது. மற்றொரு கூட்டத்தினர் அதிக விசுவாசக்காரர். ஆடுகளை இருபக்கமும் விரட்டி விட்டுத் தாங்கள்மாத்திரம் ரஸ்தாவின் மத்தியில் நின்றுகொண்டு புன்னகையுடன் நமக்குக் காட்சி யளிப்பார்கள். தங்களாலே வண்டி போவது நின்று போகிறதே என்றாவது தங்களுக்கும் ஆபத்து வரக்கூடும் என்றாவது எண்ணமே அவர்கள் மனத்தில் உதிப்பதில்லை. 'இவ்விதம் நாற்பத்தேழு மைல் தூரம் முழுவதும் இந்த இரண்டு

கூட்டத்தார்தானு தென்படவேண்டும்' என்று எண்ணிக்கொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென்று 'அடச்சே' என்று ஒரு சப்தம் கேட்டது. அந்த அதிர்ச்சியில் என்கை தடுமாறி விசைச் சக்கரம் கோணிப்போய் மோட்டார்வண்டி பள்ளத்தில் விழப்போனதைக் காப்பாற்றுவதே பெரிய கஷ்டமாய்ப் போய்விட்டது. இவ்வளவுக்கும் காரணம் விசாரித்ததில் இந்திரா சொன்னதாவது:—அவள் தன் கண்களை மூடிக்கொண்டு தீர்க்காலோசனையாயிருந்த காலத்தில் அவள் தலையிலிருந்த புஷ்பத்தின் சரம் கீழே இறங்கி காதினடியில் வந்து கூச்சமுண்டாக்கிற்றும்!!! அதுதான் காரணமோ அல்லது நந்திகேச்வரரைச் சொப்பனத்தில்கண்டு வெருண்டாளோ! இதுவரையில் இத்தனை மைல் தூரம் ஒரு துர்க்குணமும் காட்டாமல் வந்த சிவப்புமின்னலை ஒரு தடவை மிரளச் செய்துவிட்டாள். அத்துடன் நாங்கள் கர்நூல் வந்துசேர்ந்தோம்.



புஷ்பம்
கிச்சு கிச்சு
செய்ததாம்.

உலகை அழிக்க வழி

"பாஸ்ஜென்" அல்லது "கார்பொனைல் குளோரைட்" என்பது நாசகாரிக்கு ஆதாரமான பொருள். இந்த வஸ்துவைச் சுலபமாய்த்திராவகமாக்கிவிடலாம்; அதே போல மிகச் சுலபமாய்ப் புகை மயமாகவும் ஆக்கிவிடலாம். இந்த வஸ்துவின்வாசனை முகருவதற்கும் இன்பமானதாயிருக்கிறது. அன்றியும் எந்த வகையான நிறமற்றதாய்த் தெளிவாகவும், எல்லாவற்றினும் மிகக்கொடிய விஷமாகவு மிருக்கிறது. எனவே இந்த வஸ்துவானது நவீன யுத்தத்தில் நாசகாரியாக உபயோகப் படுவதில் பெரும் உபயோகமானதாயிருக்கிறது. முன்னிருந்த விஷப்புகைகள் வியர்வை யுண்டாக்கல், எரிச்சலுண்டாக்கல், புண்ணுக்கல், போன்றவைகளுக்கு மாருக அவற்றினின்று தப்பிக்கொள்ள, பல எதிர்முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டதால், அவை இப்போது வழக்கற்றுப் போய்விட்டன.



மிதியடி

வி. விசாலாக்ஷியம்மாள்

‘உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால் வரையில் அலங்காரம் செய்துகொண்டிருந்தாள்’ என்று கூறுவது சகஜமானதுதான். பாதங்களையும் கால் விரல்களையும் நகைகளாலும், மருதோன்றி, செம்பஞ்சுக் குழம்பு முதலிய வர்ண வஸ்துக்களாலும் சிங்காரம் செய்து கொள்ளுவது தொன்றுதொட்டு வரும் பழக்கம். காப்பு, கோணல் காப்பு, புதுச்சேரி கொலுசு, தண்டை, சிலம்பு, பாதசரம், மெட்டி, உருட்டு இவைகள் எல்லாம் பாத அலங்காரத்திற்காக உபயோகப்படுத்தப்பட்ட பண்டைக் காலத்து நகைகள். இந்த ஆபரணங்களை, ஏழை தனவந்தர் என்ற வித்தியாசம் இல்லாமல் அனைவரும் அணிந்து கொண்டதாகவே தோன்றுகிறது. கோடீச்வரப் பிரபுக்களும், அரசவம்சத்தைச் சேர்ந்தவர்களும் இவைகளைத் தங்கத்தில் செய்து போட்டுக் கொண்டார்கள். மற்றவர்கள், ‘சாதாரண ஜனங்கள் இடுப்பிற்குக் கீழே தங்கத்தைப் போடக்கூடாது’ என்று நம் நாட்டில் சகஜமாக இருக்கும் ஐதீகத்தை அனுசரித்து, இந்த நகைகளை வெள்ளியில் செய்து போட்டுக் கொண்டார்கள். கண்ணகியின் சிலம்பு, பாண்டிமன்னனுடைய தேவியின் சிலம்பைப்போல் பொன்னினால் செய்யப்பட்டிருந்ததே, கோவலன் உயிரை இழப்பதற்கு ஏதுவாக இருந்தது. சிலம்பை உடைத்து, உள்ளிருந்த மணிகளின் வித்தியாசத்தைக் காட்டி, கண்ணகி தன் கணவன் குற்றவாளி அல்லன் என்பதை நிரூபித்தாள் என்பது அனைவருக்கும் தெரிந்த கதைதான்.

தற்காலத்தில், பாதங்களில் நகைகளை அணிந்து அலங்காரம் செய்து கொள்ளுவது அவ்வளவு நாசூக்கு இல்லை என்ற அபிப்பி

ராயம் ஏற்பட்டிருக்கிறது. இதற்குப் பதிலாக இப்பொழுது மிதியடிகளைப் போட்டுக்கொள்ளுகிறார்கள். பாதசரம் முதலிய நகைகளை யார் யார், எந்த எந்த வயது வரையில் அணிந்து கொள்ளலாம் என்றெல்லாம் நம் முன்னோர்கள் ஒரு முறையை ஏற்படுத்தியிருந்தார்கள். நகைகள்போய், இவைகளுக்குப் பதிலாக மிதியடிகள் வந்துகொண்டிருக்கும் இந்தக் காலத்தில், இதற்கு ஒரு முறை இல்லாமல், அவர் அவர்கள் இஷ்டம்போல் தோன்றினபடி எல்லாம் சிங்காரம் செய்து கொள்ளுகிறார்கள். சிறிய குழந்தைகளுக்கு மேல்நாட்டு முறையில் உடைபோட்டுக் கால்களில் மேல் ஜோடும், ஜோடும் போடுகிறார்கள். இதன்மேல், பம்பாய்ச்சலங்கை, தண்டை முதலியவைகள், குழந்தைகள் ஓடி ஆடும் பொழுது காதுக்கு இனிமையான 'கலகல' வென்ற சப்தத்தைச் செய்கின்றன வென்று, இந்த ஆபரணங்களையும் கூடப் போடுகிறார்கள். குழந்தைகளுக்கு எவ்வித அலங்காரம் செய்தால் என்ன; எதுவும் அவர்களுக்கு ஏற்கும் என்று கூறி விடலாம். நவீன முறையில் முன்புறம் கொசவம் தொங்கும் தெலுங்குப் புடைவையே நாகரிகமாக உடை உடுத்தும் தினுசு என்று கருதப்படுகிறது. இதில் கர்னடக முறை என்று கருதப்படும் தமிழ்ப் புடைவை உடுத்தி, நவநாகரிகத் துறையில் அதிக முன்னேற்றம் அடைந்தவர்களே போட்டுக் கொள்ளும் குதிகால்-உயர்ந்த ஜோடுகளைப் புடைவையின் வர்ணத்திற்கு ஏற்றாற்போல் வாங்கிச் சிலர் போட்டுக்கொள்ளுகிறார்கள். இவ்விதமாக, தற்சமயம் பாத அலங்காரம் எங்நாட்டிலுமில்லாத திரிசங்குஸ்தானத்தை நம் நாட்டில் அடைந்திருக்கிறது. மாதர்கள் மட்டிலும் அல்ல, ஆடவர்கள் விஷயத்திலும் இந்தக் குழப்பம் இருந்துவருகிறது.

இந்த அலங்காரத்திற்கு முறைகள் என்னவோ இருக்கின்றன; அனுசரிப்பவர் மிகச் சிலரே. மிதியடிகளில் அநேகம் தினுசுகள் இருக்கின்றன. சடாக்களை சிநேகிதர்களைக் காணுவதற்காக அவர்கள் வீடுகளுக்குச் செல்லும் பொழுதும், தேநீர் விருந்து, தோட்டக் கச்சேரி முதலிய விசேஷங்களுக்குப் போகும் பொழுதும் அணிந்து கொள்ளலாம். சடாவின் வர்ண அமைப்பும், உடையின் வர்ணமும் ஒத்திருப்பதே நாசூக்கு. சடாக்களில் சரிகை வேலை செய்திருக்கும். அதிக சரிகை வேலை செய்திருக்கும் சடாக்களைப் போட்டுக் கொள்ளுவது கொஞ்சம் படாடோபந்தான். காலுடன் பொருந்தும் மெல்லிய செருப்புக்களையும் போட்டுக் கொள்ளலாம். இவைகளைப் பல அழகிய தினுசுகளிலும், வர்ணங்களிலும் செய்து விற்கிறார்கள். குதிகால்-உயர்ந்த ஜோடுகளை அணிவதாக இருந்தால், தெலுங்குப் புடைவை உடுத்துவதே நலம். இது

விஷயம் சடாக்களுக்கும் பொருந்தும். செருப்புக்களை எவ்வித உடை யுடனும் போடலாம். சாதாரணமாக, குதிகால் உயர்ந்த ஜோடுகளை எப்பொழுதுமே போடுவதாக இருந்தால், இவ்விதம் குதிகால் உயர்த்தப்பட்ட அரை-ஜோடுகளையும் வாங்கி உபயோகிக்கலாம். இவைகளை மேல் ஜோடுபோடாமல், செருப்புப் போட்டுக்கொள்ளுவதுபோல் போட்டுக் கொள்ளலாம். இஷ்டமானால், வீடுகளுக்குள் போகும்பொழுது செருப்பைக் கழற்றி வைப்பதுபோல், வாசலில் சிரமம் இல்லாமல் கழற்றி வைப்பதற்கும் இந்த அரைஜோடுகள் சௌகரியமாக இருக்கும். சிலர், கால் விரல்கள் வெளியில் தெரியும்படியான ஜோடுகளைப் போட்டு, நகங்களுக்கு மட்டும் செம்பஞ்சுக் குழம்பை ஊட்டிக்கொள்ளுகிறார்கள். இதுவும் ஒரு நாசூக்காகவே கருதப்படுகிறது. பொதுவில், நாம் செய்துகொள்ளும் அலங்காரம், எவ்வித முறையையும் தழுவாத ஒரு புதிய தினுசாக இருக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் கூறுவதற்கும் இல்லை. 'செய்ததைச் செய்ததைச் செய்து கொள்ளுவானேன்? நான் இப்படித்தான் சிங்காரம் செய்துகொள்ளப்போகிறேன்' என்று ஒருத்தி புதிய அலங்காரமுறையைத் தழுவினாலும் தழுவலாம். நாகரிகத்தின் முறைகளை அறிந்தவள் என்று அவள் மற்றவர்களால் மதிக்கப்பட்டவளாக இருந்தால், இந்தப்புதிய அலங்கார முறையை மற்றவர்களும் பின்பற்றுவார்கள். நாளடைவில் இதுவும் ஒரு துஸ்து முறையாக ஏற்படலாம். சிலர் மட்டும் நல்லதோலில் செவ்வனே செய்யப்பட்ட உயர்ந்த செருப்பாக ஒரு ஜோடி வாங்கி, எந்த உடை உடுத்தாலும் எங்கே சென்றாலும் அதையே போட்டுக்கொள்கிறார்கள். 'நான் சௌகரியத்திற்காகவே செருப்பை உபயோகிக்கிறேன்; அலங்காரத்திற்காக இல்லை' என்று கூறவும் கூறுகிறார்கள். இவர்கள் பாடு சுகம்.

செவிட்டிற்குச் சூட்டுவைத்தியம்

செவிட்டிற்கும் அதனாலேற்படும் பாதகங்களுக்கும் உஷ்ணத்தினாலான சிகிச்சைமுறை யொன்றை மேல்நாட்டு மருத்துவர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். இதனால் அவர் 40 வருடச் செவிட்டையும் போக்கிவிடுகிறாராம். உஷ்ணமானது நாசித் துவாரங்களின் வழியாக உட்செலுத்தப்பட்டு, பாதிக்கப்பட்டிருக்கும் பாகங்களுக்கு அனுமதிக்கப்படுகிறது. ஓர் உஷ்ணத் திராவகம் மூக்குத் துவாரத்தின் வழியாக ஒரு வைத்தியக் குழாயின் மூலம் உட்செலுத்தப்படுகிறது. பிறகு திரவத்தின் உஷ்ணமானது 110 டிகிரியிலிருந்து 128 டிகிரி வரை அதிகரிக்கப்படுகிறது. இம்மாதிரி இதர காது நோய்களுக்கும் சிகிச்சை செய்யப்படுகிறதாம். சிகிச்சை பெறுபவர்களுள் 100-க்கு 90 பேர் குணப்படுத்தப்படுகின்றனர். 50 முதல் 55 வரை வயதுள்ளவர்களுக்கு இச்சிகிச்சை பூரணபலனளிக்கிறதாம். குழந்தைகளுக்கு இம்முறை மிகவும் உபயோகப்படுகிறது.

உட்கார்ந்தாடும் ஆட்டங்கள்

ஸ்ரீ

ஆட்டத்துக் கழகு ஓட்டமும் சாட்டமும். பந்தாட்டங்கள், பல்சிபளாம், கண்ணுமூச்சி முதலிய முதல்தரமான ஆட்டங்களுக்கெல்லாம் காலின்திறமை முக்கியமாக வேண்டும். காலை மடக்கி உட்கார்ந்துகொண்டு ஆடும் சோழி, பல்லாங்குழி, கட்டம் இவையெல்லாம் இரண்டாந்தரமான ஆட்டங்களே. எனினும், சிலவேளைகளில் ஓடியாட வசதி யில்லாதபொழுது, உட்கார்ந்தாட வேண்டியிருக்கிறது. மழைபெய்கிறது, அல்லது இராவேளையாயிருக்கிறது, அல்லது ஒரு குழந்தைக்கு உடம்பு தெம்பா யில்லாததால் அது ஓடக்கூடாதென்று பெரியவர்கள் தடுத்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட சமயங்களில், விளையாடத் தோழர்கள் இருந்தால், உட்கார்ந்தேனும் விளையாடவேண்டும். உட்கார்ந்தாடும் ஆட்டங்களில் சில பின்வருமாறு.

1. கப்பல் சரக்கு

இந்த ஆட்டத்துக்கு நான்கு குழந்தைகளாவது வேண்டும்; பன்னிரண்டுபேர்வரை இதில் சேர்த்துக்கொள்ளலாம். எல்லாரும் வட்டமாக உட்கார்ந்துகொண்டு, ஒவ்வொருவரும் தன் கப்பலில் வரப்போகும் சரக்கின் பொதுப்பெயரை முதலிலேயே சொல்லிவிடவேண்டும். உதாரணமாக ஆறுபேர் ஆடுவதாக வைத்துக்கொள்வோம். அந்த ஆறுபேரும் முறையே, தானியம், பழம், பூ, மரச்சாமான்கள், தங்கநகைகள், மோட்டார்கார்கள் ஆகிய சரக்குக்கள் தங்கள் தங்கள் கப்பல்களில் வரப்போவதாகச் சொல்கிறார்கள். பிறகு முதல் பையன் கையில் ஒரு வாழைமட்டையை ஆட்டிக்கொண்டே, 'கப்பல் வந்தது. கப்பல் வந்தது' என்று உருப்போடுகிறான். திடீரென்று அவன், 'கப்பல் வந்தது, கப்பல் வந்தது, கப்பலில் என்ன சரக்கு வந்தது?' என்ற கேள்வியுடன் அந்த மட்டையை மற்றொரு பையனிடம் விட்டெறிகிறான். அவன் ஆறாவது பையனா யிருந்தால், அவன் சட்டென்று 'மாரிஸ் கௌலி' அல்லது 'ஆஸ்டின்' என்று ஏதேனும் ஒரு மோட்டார்காரின் பெயரைச் சொல்லவேண்டும். பிறகு அவன் அந்த மட்டையை இதே கேள்வியுடன் மூன்றாமவனிடம் எறிந்தால், அவன் உடனே

ஒரு பூவின் பெயரைச் சொல்லிவிட்டு மட்டையை எடுத்துக் கொள்ளவேண்டும். மட்டையை யாரிடம் வேண்டுமானுலும் எறியலாம். அப்படி எறியப்பட்டவன் உடனே சரியான பதில் சொல்லாவிட்டால், இவன்மேல் ஒரு 'சொப்பை'. மூன்று 'சொப்பைகள்' ஏறினபின் அந்தப்பையன் தோற்றதாக ஒப்புக் கொண்டு ஆட்டத்தை விட்டு நீங்கிவிடவேண்டும்; கடைசியாக ஆட்டத்தில் நிலைப்பவனுக்குத்தான் ஜயம். வேகமாய் ஆடித் தீர்த்தால் இந்த விளையாட்டுச் சாரமாயிருக்கும்.

2. ஒருவிதமாய்ப் பதில்சொல்வது

இதில் ஏழெட்டுக் குழந்தைகள் சேர்ந்து ஆடலாம். ஒரு பையனைக் கேள்வி கேட்பவனுக நியமித்து, அவனை அப்பால் அனுப்பிவிட்டு, மற்றைக்குழந்தைகள் தாங்கள் இன்னவிதமாய்ப் பதில் சொல்வதென்று தீர்மானித்துக் கொள்வார்கள். அவர்கள் 'கோபமாய்' என்று தீர்மானித்ததாக வைத்துக்கொள்வோம். பிறகு அவர்கள் வெளியே சென்ற பையனைக் கூப்பிடுவார்கள்; அவன் அவர்கள் ஒவ்வொருவரையும் ஏதாவது ஒரு கேள்வி கேட்பான். 'இன்றைக்குச் சாப்பாடு நன்றுயிருந்ததா?' 'உனக்குத் தலைவலிக்கிறதா?', 'ஆறைந்து எவ்வளவு?' என்று அவன் பலவிதமான கேள்விகள் கேட்பான். பதில் சொல்லுகிறபொழுது குழந்தைகள் குரலிலும், பாவனையிலும், பேச்சிலும் கோபத்தை நடித்துக்காட்டுவதிலிருந்து, அவன் அந்த வார்த்தையைக் கண்டு பிடிக்கவேண்டும். 'மெதுவாய்' 'உரக்க' 'சந்தோஷமாய்' 'துக்கமாய்' என்பவைபோன்ற எளிதில் நடித்துக்காட்டக்கூடிய வார்த்தைகளைக்கொண்டு ஆடினுல் இந்த விளையாட்டு நன்று யிருக்கும்.

3. பாடிக்காட்டுவது

இதுவும் முன்விளையாட்டுப்போன்றதுதான். எட்டுப்பெண்கள் சேர்ந்து இதை ஆடுவதாக வைத்துக்கொள்வோம். ஒரு பெண்ணை வெளியில் அனுப்பிவிட்டு மற்றவர்கள் அவள் உள்ளேவந்து இன்னது செய்யவேண்டுமென்று, (உதாரணமாக, அந்த அறையில் ஒரு மேசைமேல் கிடக்கும் புஸ்தகத்தை யெடுத்து அவள் அலமாரிக் குள் வைக்கவேண்டுமென்று) தீர்மானித்துக் கொள்வார்கள். பிறகு வெளியே சென்ற பெண்ணை அழைப்பார்கள். அவள் வந்தவுடன் எல்லாருமாகச் சேர்ந்து 'என்னடி, என்னடி, என்னடி பெண்ணே! என்னடி இந்நேரம்?' என்று பாடுவார்கள். அவள் மேசையினருகில் போனுல் குரலைத் தாழ்த்தியும், மேசையை விட்டு மற்ற இடங்களுக் குப் போனுல் உரத்துப் பரிகசித்தும் அவர்கள் பாடுவதிலிருந்து

அவள் தான் செய்யவேண்டிய் காரியத்துக்கும் மேசைக்கும் சம்பந்த முண்டென்று தெரிந்துகொள்வாள். அவள் தயங்காமல் மேசை யண்டை போய் நின்ருல், எல்லாரும் அதுசரி யென்று காட்டு வதற்காக மெதுவான குரலில் பாடுவார்கள். அடுத்தபடியாக, அவள் மேசைமேலிருந்து புஸ்தகத்தை எடுக்காமல்' வேறு எதையா வது எடுத்தால், உடனே அவள் தோழிகள் உரத்த குரலில் 'என்னடி, என்னடி, என்னடி, அசடே! என்னடி இந்நேரம்?' என்று பாடத் தொடங்குவார்கள். இந்த விளையாட்டு ஆடுபவ ருக்குமட்டுமன்றி பார்ப்பவருக்கும் சாரமாயிருக்கும்.

4. மொழிகளைத் தொடுத்துப் பிரிப்பது

குழந்தைகள் வட்டமாய் உட்காரவேண்டும். முதல் குழந்தை ஏதேனும் ஒரு வார்த்தை சொல்லி ஆட்டத்தைத் தொடங்கினுல், இரண்டாவது குழந்தை அந்த வார்த்தையைக் கேட்டவுடன் தனக்குச் சட்டென்று தோன்றும் மற்ருெரு வார்த் தையைச் சொல்லவேண்டும். மூன்ருவது குழந்தை இரண்டாவது குழந்தை சொன்னதை நினைத்து, அதன் தொடர்பாக மற்ருெரு வார்த்தை சொல்லவேண்டும். முதல் வார்த்தையை இந்தக் குழந்தை மனத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது. இப்படியாக ஆளுக்கொருவார்த்தையாக நாலைந்து சுற்றுக்கள் சுற்றி முடிந்த பின், கடைசி வார்த்தையிலிருந்து முதல் வார்த்தைவரை எல்லா வார்த்தைகளையும் தலைகீழ்ப்பாடமாக ஒப்பிக்க வேண்டும். (உதாரணம்: கழுதை, வண்ணன், மூட்டை, மெத்தை, பஞ்சு, நூல், ராட்டினம், மகாத்மா, விரதம், ஏகாதசி, பட்டினி, பிச்சைக்காரன், அரிசி, நெல், புல், குதிரை என்று வார்த்தைப் பின்னல் ஏற்பட்டால், பிறகு 'குதிரை, புல், நெல், அரிசி' என்று 'கழுதை' வரையில் பின்னலைப் பிசகில்லாமல் பிரிக்கவேண்டும்.) இந்த விளையாட்டில் போட்டி இல்லாததால் தோல்வி ஜயம் இல்லை. எனினும் பலபேர் சேர்ந்து இரண்டொருமுறை ஆடுவதற்கு ஏற்ற ஆட்டந்தான்.

5. தொடர்கதை

குழந்தைகள் வட்டமாய் உட்கார்ந்து, ஆளுக்கொரு வாக்கியமாக ஒரு கதையை உண்டாக்கிச் சொல்லிக்கொண்டு போகவேண்டும். அர்த்தமில்லாமற் போய்ப் பாழாகாமல், பெரிய வர் யாரேனும் இந்த விளையாட்டில் சேர்ந்து, கதையை அவ்வப் பொழுது கைதூக்கிவிட்டால் நன்ருயிருக்கும்.

உபாத்தியாயர் பகுதி

பிராசீன விளையாட்டுக்களும் பாலர் கணிதப் பயிற்சியும்

எஸ். ஜகந்நாதன்

(191-ஆம் பக்கத் தொடர்ச்சி)

4. கட்டம் ஆடுதல்

i சதுரக்கட்டம்


கட்டம் ஆடுவதும் ஒரு பிராசீன விளையாட்டாகும். மேலே சொல்லப்பட்ட முறைகளையே இங்கு அனுசரிக்க வேண்டும். எத்தனை எண்கள் சோழிகள் விழுவதனால் காணப்படுகின்றனவோ அத்தனை இடம் நகர்த்திவரவேண்டும்.

16 லிருந்து 17 க்குச் செல்லும் வழியும், 24 லிருந்து 25 க்குச் செல்லும் வழியும் அம்புக்குறிகளினால் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

7	8	9	10	11
6	20	21	22	12
5	19	25	23	13
4	18	17	24	14
3	2	1	16	15

ii கடிகாரக் கட்டம்

இதேமாதிரி ஒன்று அட்டையில் தயார் செய்துகொள்ளக் கூடும். நடுவில் காட்டிய முட்களைக் கொண்டு இரண்டுபேர் விளையாட முடியும் என்று தெரிந்து கொள்ளலாம். காய்களுக்குப் பதிலாக ஒருவன் சிறிய முள்ளையும், மற்றவன் பெரிய முள்ளையும் கணக்குப் பிரகாரம் நகர்த்தி வரவேண்டும். வர்ண அட்டைகளினாலும் இம்மாதிரி முட்களைச் செய்துகொண்டு நகர்த்திவரலாம். இந்த ஆட்டத்திற்கும் பரமபத சோபான ஆட்டத்தின் விதிகளையே அனுசரிக்கவேண்டும்.



iii தேதிப்படக் கட்டம்

இதற்குப் பதிலாக கீழேகண்ட படி ஒருமாஸத்துத் தேதிப் படத்தை உபயோகிக்க முடியும். கணக்குப் பிரகாரம் காயை நகர்த்திக் கொண்டே வரவேண்டியதுதான்.

1935 ஜனவரி 1935

ஞா	*	6	13	20	27
தி	*	7	14	21	28
செ	1	8	15	22	29
பு	2	9	16	23	30
வி	3	10	17	24	31
வெ	4	11	18	25	*
சனி	5	12	19	26	*

மூன்று, நான்கு பிள்ளைகள் சேர்ந்தே விளையாடலாம். இவ்வித விளையாட்டுக்களே மேலே சொல்லிய கூட்டல் கணக்குக்களுக்குத் தகுந்த முறைகளாகும்.

5. சில்லுப்பந்து

கூட்டல் கணக்குக்களுக்கு மாத்திரம் அல்லாமல் கழித்தல் கணக்குக்களுக்கும் விளையாட்டுமுறைகள் நமது நாட்டில் இருக்கின்றன.




நாம் சிறுவர்களாக இருந்த பொழுது பிள்ளையார் பந்து, சில்லுப்பந்து, பேய்ப் பந்து, கிட்டிப்பந்து இவைகளை விளையாடினது நமது ஞாபகத்திற்கு வரலாம். சில்லுப்பந்து ஆட்டத்திற்கு வட்டமான கோபுரம்போல் அடுக்கக்கூடிய பத்துச் சில்லுகள் தேவை. இவற்றை, சல்லி ஓடுகளைக் கொண்டு செய்வது வழக்கம். இவ்

விளையாட்டை விளையாட இரு கக்ஷிகள் வேண்டும். ஒரு கக்ஷிக்காரர் ஒரு பந்து கொண்டு சில்லுகளை அடித்துக் கோபுரத்தைக் கலைக்கிறார்கள். மற்றக் கக்ஷியார் அவற்றை மறுபடியும் கோபுரம் போல் அடுக்க வேண்டும்.

கணக்கு.—10 சில்லுகளில் 2 விழுந்து போனால் மீதி எத்தனை?
10 சில்லுகளில் 3 விழுந்து போனால் மீதி எத்தனை?
இம்மாதிரியே.

6. பதினைந்து ஆடுபுலி

சாதாரணமாய் இக்கட்டத்தைக் கோயிற் புறங்களில் வரைந்தே வைத்திருப்பார்கள். பொழுது போகாத நேரத்தில் 15 புளியங்கொட்டைகளை ஆடுகளாகவும், மூன்று கற்களைப் புலிகளாகவும் வைத்துக் கொண்டு இந்த ஆட்டத்தை ஆடுவார்கள். ஆடுகளின் மேல் புலி பாயாதவண்ணம் ஆடுகளை இடம்விட்டு இடம் நகர்த்திவர வேண்டும்.



புலி ஆட்டின் மீது பாய வேண்டுமானால் ஆடு இருக்கும் இடத்திற்கு அடுத்த இடம் காலியாக இருக்கவேண்டும். ஆடுகளுக்குச் சொந்தக்காரனே பக்கத்து இடம் காலியாயில்லாமல் பார்த்து வரவேண்டும்.

இதில் மொத்தம் 15 ஆடுகள் உண்டு. ஆகவே கணக்கு 15 ஆடுகளில் ஒன்று போய்விட்டால் மீதி எத்தனை? இரண்டு போய் விட்டால் மீதி எத்தனை? மூன்று போய்விட்டால் மீதி எத்தனை? இந்தமாதிரி இவ்விளையாட்டு, கழித்தலுக்கு உதவி செய்யும்.

7. பல்லாங்குழி

சாதாரணமாய் இந்நாளும் பல்லாங்குழி ஆட்டம் வீடுகளில் நடை பெற்று வருகின்றது. பெட்டிப் பல்லாங்குழி என்றும், உருண்டைப் பல்லாங்குழி என்றும், மீன் பல்லாங்குழி என்றும் பல்லாங்குழிகளின் உருவத்திற்குத் தக்கவாறு பெயர்கள் உண்டு. பல்லாங்குழி என்பதனாலேயே 14 குழிகள் என்று நாம் ஒருவாறு


தெரிந்து கொள்ளவேண்டும். இந்த ஆட்டத்தைப் பெண்கள் வெகு சாதுரியமாயும் சாமர்த்தியமாயும் விளையாடுகிறார்கள். ஆயினும் நாம் இதைப் பெருக்கல் கணக்கிற்கு முக்கியமாக உபயோகித்துக் கொள்ளலாம். பெருக்கல் வாய்பாட்டை இதன் மூலமாக நன்கு விளக்கலாம். இரண்டு வரிசையிலும் உள்ள நடுக்குழிகள் காசி என்று பெயர் பெறும். அவை நமது கணக்கிற்கு வேண்டா. பாக்கி பன்னிரண்டு குழிகளில் ஒவ்வொன்றில் இரண்டு இரண்டு சோழிக்குக் சணக்குப் போடுவோம்:

$1 \times 2 = 2$	$4 \times 2 = 8$	$7 \times 2 = 14$	$10 \times 2 = 20$
$2 \times 2 = 4$	$5 \times 2 = 10$	$8 \times 2 = 16$	$11 \times 2 = 22$
$3 \times 2 = 6$	$6 \times 2 = 12$	$9 \times 2 = 18$	$12 \times 2 = 24$

என்று வாய்பாட்டை நிதர்சனமாகச் சொல்லிக் கொடுக்கலாம். 2, 2, ஆகக் கூட்டிக்கொண்டுபோய், தொடர் கூட்டலை இம் முறையினால் சொல்லிக் கொடுக்கும் விதத்தைத் தனியே விளக்க முடியும். கூட்டல் கழித்தல் அப்பியாசத்திற்கு வேண்டிய கணக்குகளையும் பல்லாங்குழி ஆட்டத்திலிருந்து சேகரித்துக் கொள்ள முடியும்.

8. நூறாயிரப்பாண்டி

சிற்சில சமயங்களில் குழந்தைகளின் விளையாட்டுக்களைக் கவனிக்கும்பொழுது, அவர்களே தங்களுக்குக் கல்வி புகட்டும் வழியை நமக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள் எனலாம். நாம் குழந்தைகளிடமிருந்து அனேக விஷயங்களைக் கற்றுக்கொள்ளுகிறோம் என்று நான் நினைக்கிறேன். நாம் கற்றுக் கொள்வது இந்த ஆட்டமாகும்; இந்தப் பாண்டியில் சிறுவர் சில்லை விட்டெறிந்து விளையாடுகிறது வழக்கம். சில் எதில் விழுகிறதோ அங்கு நொண்டிச்சென்று சில்லை வெளியில் தள்ளி, பின்கோடுகளை மிதிக்காமலும் காலைக் கீழேவைக்காமலும் வெளியில் வந்து சில்லை மிதிக்கவேண்டும். பிறகு ஒவ்வொரு நூற்றுக்கும் காலால் ஒரு தாம்பாளம் வரைந்துகொள்ளுகிறார்கள். 400 ஆகும்போது 4 தாம்பாளங்கள் வரைந்து கொள்கிறார்கள். ஓர் ஆயிரத்துக்கு 10 சிறிய தாம்பாளங்கள் அளந்து கொள்ளு




கிறார்கள். ஆயிரம் வந்துவிட்டால் ஒரு மலை ஆகும். அம்மாதிரி ஒருதடவையில் எத்தனை மலைகட்டமுடியும் என்று பார்க்கிறது வழக்கம்.

முடிவுரை

பிறநாட்டு முறைகளின் பகட்டைப் பார்த்து நாம் பிரமிக்கிறோம். அவற்றைப் பார்த்ததும் நமது நாட்டில் அவைபோல் ஒன்றுமில்லை என்று சிலர் எண்ணுகின்றனர். இங்கே சொல்லிய விளையாட்டுக்கள் நமது நாட்டில் வெகுகாலமாகத் தலைமுறை தலைமுறையாக வழங்கிவந்திருக்கின்றவைகளே. ஆயினும் தற்சமயம் படித்தவர்கள்—ஏறக்குறைய மேல் பகட்டை மாத்திரம் பார்க்கிறவர்கள்—"இவையெல்லாம் என்ன, பண்டைக்காலத்துப் பாட்டி விளையாட்டுக்கள்" என்று சற்றே பரிகாசத்துடன் உதாசீனம் செய்கின்றனர். ஆயினும் பாட்டிகளும் புத்திசாலிகள் தான். நாமும் அப் பாட்டிகளுக்குப் பேரன்மார்கள்தானே. நமது பரமபத சோபான படம் மேல்நாட்டில் 'பாம்புகளும் ஏணிகளும்' என்றபெயருடன் இந்நாளும் வழங்கி வருகின்றது எனமுன்னமே சொன்னேன். எந்த விளையாட்டுக்கள் தேகபலம் அளிப்பதோடு மனோபலத்தையும் ஊட்டுகின்றனவோ, தேகப்பயிற்சியையும் மனப்பயிற்சியையும் சேர்த்து அளிக்கின்றனவோ அவைகளே குழந்தைகளுக் கேற்ற நன்முறைகள் ஆகும் என்பதில் ஐயமில்லை. ஆகவே இருபதாவது நூற்றாண்டு ஆரம்ப ஆசிரியர்கள் இங்கே கூறியவற்றைப் பழையவை என்று அசட்டைசெய்யாமல் 'புதியனவாகப்' புதுப்பித்தல் வேண்டும். இவற்றில் சிரத்தையும் ஊக்கமும் காட்டி நமது வீட்டுப் பூர்விகமான விளையாட்டுக்கள் ஆரம்ப வகுப்புக் குழந்தைகளின் தேகமனவளர்ச்சிக்கு ஏற்றவை என்று செய்கையினால் நிரூபிக்கவேண்டும். இவற்றை நாம் விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டு அனுஷ்டிக்க முன்வருவோமாக.

குழந்தைகளின் முகத்தைக் கண்டு முகம் மலர்வதே மோகம். அவர்களுடன் கூடிவிளையாடுவதே போகம். அவர்களுக்குக் கல்வி கற்பிப்பதே யாகம். அவர்களின் க்ஷேமத்தைச் சிந்திப்பதே யோகம். ஆகவே குழந்தைகளுடனிருந்து குழந்தைகளுக்காகவே ஜீவிப்போம்.


(முற்றும்.)



தங்க மீன்கள்

பி. ஆர். ராஜசூடாமணி

ஓர் ஊரில் ஒரு செம்படவன் இருந்தான். அவன் பிராணிகளிடத்தில் அன்பு உள்ளவன். செம்படவர்கள் மீன்களைப் பிடிப்பார்கள். அவைகளை வதைப்பார்கள். பிறருக்கும் விற்பார்கள். தாமும் சாப்பிடுவார்கள். இந்தச் செம்படவன் அவர்களைப்போல் இல்லை. மீன்களின் அழகைப் பார்த்துச் சந்தோஷப்படுவதில் அவனுக்குப் பிரியம் அதிகம். அவன் மூன்று தங்கமீன்களை வளர்த்துவந்தான். அந்த மீன்களை மிகவும் அழகான சின்னக் குளத்திலே, அவன் கொண்டு வந்து விட்டான். பின்பு அவைகளைப் பார்த்து, "சின்னச் சின்ன மீன்களே! சிங்கார மீன்களே! மேலேபோய் நீந்த வேண்டாம். தங்கக் கட்டிமீன்களே! கீழே நீந்தி விளையாடுங்கள். என் சொல்லைத் தட்டவேண்டாம்" என்று சொன்னான்.



அதற்குத் தங்க மீன்கள், "எங்களை வளர்த்த அருமை மாமா! நீர் சொன்னபடியே நாங்கள்

செய்வோம். உம்முடைய சொல்லைத் தட்டமாட்டோம்" என்றன.



திரும்பவும் செம்படவன் அந்த மீன்களைப் பார்த்து, "தங்கமான குஞ்சு மீன்களே! குளத்துக்குள்ளே இருங்கள். வெளியே நீந்திப் போக வேண்டாம். பெரிய ஆற்றுக்குக் கிட்டப் போக வேண்டாம். நான் சொல்லும் வார்த்தையைக் கேளுங்கள். பெரிய நதியைத் தேடவேண்டாம். இந்தக் குளத்திலேயே குடியிருங்கள்" என்று சொன்னான்.


அதற்கு அந்தப் பொன் மீன்கள், "எங்களை வளர்த்த அருமை மாமா! நீர் சொல்லுவதை நாங்கள் கேட்கிறோமே. பெரியநதிக்கு நாங்கள் ஓடிப்போகமாட்டோமே" என்றன.

பின்பு, செம்படவன் தன் வீட்டுக்குப் போய்விட்டான். தங்க மீன்கள் செம்படவன் சொன்னபடியே அந்தத் தடாகத்தின்மேலே வந்து நீந்தாமல் தண்ணீருக்கு அடியிலேயே நீந்திக்கொண்டிருந்தன.

அந்த மூன்று தங்க மீன்களிலே ஒரு மீனுடைய வால் தங்க நிறமாய் இருந்தது. அதற்குத் தங்க வாலன் என்றுபெயர். ஒரு மீனுடைய வால் வெள்ளி போல் இருந்தது. அதற்கு வெள்ளி வாலன் என்று பெயர். இன்னொரு மீனுடைய வால் நீலநிறமாய் இருந்தது. அதற்கு நீல வாலன் என்று பெயர்.


ஒருநாள் நீலவாலன் மற்ற இரண்டு மீன்களையும் பார்த்து, "அண்ணன்மாரே! அண்ணன்மாரே!

இங்கே விளையாடி அலுத்துப் போய்விட்டது. தண்ணீருக்கு மேலே தத்திக் குதித்து விளையாடுவோம், வாருங்கள்" என்றது.



அதற்கு மற்ற இரண்டு மீன்களும், "நாங்கள் வரமாட்டோம்! மாமா சொன்னபடி தான் நாங்கள் செய்வோம்" என்றன.


நீலவாலன், "நீங்கள் வராவிட்டால் இங்கேயே இருங்கள். நான் ஜோராய்ப் போய், தண்ணீருக்கு மேலே குதிக்கப்போகிறேன்; அங்கே விளையாடப் போகிறேன்" என்றது.



அது தண்ணீருக்கு மேலே வந்து தத்திக் குதித்துக் குதித்து விளையாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு கொக்கு வந்து அந்த மீனை ஒரே குத்தாகக் கொத்தித் தூக்கிக்கொண்டு போய்விட்டது.


வெள்ளி வாலனும் தங்க வாலனும் செம்படவன் சொன்னபடியே சிலகாலம் தண்ணீருக்குள் வாழ்ந்து வந்தன. அப்படி வாழ்ந்து வரும்போது, ஒருநாள் வெள்ளி வாலன் தங்கவாலனைப் பார்த்து, "அண்ணே, நாம் இங்கே எவ்வளவு நாள் இருப்பது? பெரிய

நதிக்கு நீந்திப்போகலாம். அங்கேபோய் நன்ருக விளையாடலாம்" என்று சொன்னது.



அதற்குத் தங்க வாலன், "நான் வரமாட்டேன்; மாமா சொன்ன படியேதான் நான் செய்வேன்" என்றது.

அதைக் கேட்ட வெள்ளி வாலன், "அப்படியானுல், நீ இங்கேயே இரு, நான் பெரிய நதிக்குப் போகிறேன்" என்றது. வெள்ளி வாலன் பெரிய நதிக்கு நீந்திப் போய் அங்கே சந்தோஷமாக ஓடி விளையாடிக்கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு பெரிய மீன்வந்து வெள்ளிவாலனைப் பிடித்துத் தின்று விட்டது.



நீல வாலனும் போய்விட்டது. வெள்ளி வாலனும் போய்விட்டது. தங்க வாலன் மட்டில் தனிமையாக, செம்படவன் சொன்னபடியே குளத்தில் வாழ்ந்து வந்தது. ஒருநாள் செம்படவன் தங்க மீன்களைப் பார்க்க வந்தான். அங்கே ஒரே ஒரு தங்க மீன்

தான் இருந்தது. அவன் அந்த மீனைப் பார்த்து, "மற்ற இரண்டு மீன்கள் எங்கே?" என்று கேட்டான். அதற்குத் தங்க வாலன் அந்த மீன்கள் இரண்டும் போய்விட்டன. அவை எங்கேயோ போய்விட்டன. நான்மட்டும் இங்கே தனிமையாக இருக்கிறேனே" என்று அழுதது. அப்பொழுது செம்படவன் புதிதாக இரண்டு தங்க மீன்களைப் பிடித்துக் கொண்டு



வந்து குளத்தில் விட்டான். அவன் அவைகளைப் பார்த்து, "புதிதாக வந்த தங்கமீன்களே! நீல வாலனைப்போல் நீரின் மேலே வந்து விளையாட வேண்டாம். வெள்ளி வாலனைப்போல் பெரிய நதிக்கும் போகவேண்டாம். தங்க வாலனைப் போல் தண்ணீரில் ஆழத்திலே ஓடி விளையாடி வாழ்ந்திருங்கள்" என்றான். அந்த மீன்கள், "மாமா! அப்படியே செய்கிறோம்" என்றன.

தங்க வாலனும் புதிதாக வந்த தங்க மீன்களும் இன்றைக்கும் அந்தக் குளத்திலேயே சந்தோஷமாக வாழ்ந்து வருகின்றன.

உலகப் போக்கு

நெல்லை நேசன்

ஐரோப்பாவில் ஜனத்தொகை பெருகிக்கொண்டிருக்கிறது ; கொலைக் கருவிகளும் பெருகிக்கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட ஜனங்களிடையே வறுமை, வேலையில்லாத கொடுமைமுதலான கஷ்டங்களும், வியாபாரப்போட்டியும், பொருளாதார மந்தமும், அதிருப்தியும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. ஒவ்வொரு நாடும், பக்கத்திலிருக்கும் நாட்டை நம்புவதில்லை. புதிய சிநேகங்கள், புதிய ராணுவ உறவுகள், இரகசியப்பேச்சுகள், இரகசிய மகாநாடுகள் ஏற்படுகின்றன. சர்வாதிகாரிகளின் அகம்பாவம் ராவணாகாரமாக வளர்ந்தோங்குகிறது. அரசியல்வாதிகளின் சூழ்ச்சிகளும் பசப்புகளும் விதண்டாவாதங்களும் அதிகப்படுகின்றன. 'சமாதானம் ! சமஉரிமை ! பாதுகாப்பு ! உலகக்ஷேமம் !' என்ற மந்திரங்களை ஓயாமல் ஒழியாமல் உச்சரித்துக்கொண்டே, ஒவ்வொரு தேசமும் போருக்குத் தயாராகிவருகிறது. " உஷார் ! உஷார் ! அதோ இருக்கும் பொன்மான் எவ்வளவு அழகாக—எவ்வளவு சாந்தமாகக் காண்கிறது ! அதை எப்படியாவது பிடித்துவிடுவோம்" என்று வல்லரசுகள் சொல்லுகின்றன ! கூட்டில் இருக்கும் சிங்கம்போலப் போர்வெறி குமறிக்கொண்டிருக்கிறது; 'அது எப்போது வெளியே வந்துவிடுமோ?' என்ற பயப்பிராந்தியும் ஒருபுறம் காணப்படுகிறது.

ஐரோப்பாவில் மாயமான் வேட்டை

"சிங்கக்கூட்டை ஜர்மனி உடைத்துவிடும்போலிருக்கிறது; அந்தோ! அது நிலைமையைப் பயங்கரமாக்குகிறது!" என்று பிரிட்டிஷ் பிரதமமந்திரி ஸ்ரீ மக்டானல்ட் வருந்துகிறார். பிரான்சும் அப்படியே நினைக்கிறது. ஜர்மனிக்கோ ஆத்திரமும் கோபமும் பொங்குகின்றன. மற்ற நாடுகளைப் பயமுறுத்துவதற்காகத் தான் ராணுவ முஸ்தீபு செய்யவில்லையென்றும், தற்காப்பும் சுயமரியாதையுமே தனது நோக்கமென்றும், ஜர்மனி வாதஞ் செய்கிறது. அந்தரங்கம் வேறுவிதமாகவும் இருக்கக்கூடும். ஜர்மனியின் விஸ்தீர்ணம் அதிகப்படவேண்டுமென்றும், குடியேறப் புதிய நாடுகள் வேண்டுமென்றும், ஜர்மன் சாமான்களை விற்கப் புதிய சந்தைகள் வேண்டுமென்றும் பழைய கைஸர் சக்கரவர்த்தியைப்போலவே சர்வாதிகாரியான ஹிட்லரும் ஆசைப்படுகிறார் என்பது அவர் எழுதியுள்ள சுயசரிதையிலிருந்து தெரிகிறது. ஆனால் ஆங்கில ஆதிக்கத்தைக் கடலில் எதிர்க்கத்

துணிந்தது கைஸர் தவறு என்பது ஹிட்லர் கருத்து. எனவே, ஐரோப்பாக் கண்டத்தில்தான் ஜர்மனி தன் அதிகார எல்லையை விரித்துக்கொள்ள வேண்டும். ருஷியாவின் பொதுவுடைமைக் கொள்கையைப் பற்றிய திகிலும் ஹிட்லருக்கு உண்டு. பிரான்சை அழித்து விட வேண்டுமென்பது ஜர்மனியின் லட்சியமென்று சிலரும், ருஷியாவைச் சுரண்டுவதுதான் நோக்கமென்று சிலரும் கருதுகிறார். 'கலப்பைகளைக் காட்டிலும் பீரங்கிகளை அதிகமாக உற்பத்தி செய்யுங்கள்!' என்று தொழிற்சாலை முதலாளிகளுக்குக் கட்டளையிடும் ஹிட்லர், திகிலினாலோ பேராசையினாலோ ஐரோப்பாவை ஒரு புதிய மகா யுத்தத்தில் இழுத்துவிடக்கூடுமெல்லவா?

சமாதானத்தின் முக்கிய சத்துரு

"இத்தாலி தன் வாளைக் கூர்மையாக வைத்திருக்கிறது. உலகத்திலுள்ள மற்றக் கருவிகளைக்காட்டிலும் இந்த வாள் அதிக நன்மை செய்யும்!" என்று கூறும் முஸோலினியையும், ஹிட்லரைப்போல், உலகசமாதானத்தின் எதிரி யென்று கருதுவதுண்டு. "யுத்தத்தினால்தான் ஐரோப்பாவிற்கும் இத்தாலிக்கும் இந்தப்பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுதலை ஏற்படக்கூடுமென்று நான் சொல்லும்போது, அருகிலிருக்கிறவர்கள் நம்புகிறார்கள். ஏனென்றால் நான் எப்போதும் மனத்திலிருப்பதை ஒளியாமல் வெளியிடுகிறேன்" என்று ஆத்ம ஸ்தோத்திரத்தோடு நிகழ்த்திய ஒரு பிரசங்கத்தினிடையே முஸோலினி கூறியுள்ளார். ஹிட்லரைப்போல் முஸோலினியும் தமது நாட்டினரால் ஒரு ரட்சகராக மதிக்கப்படுகிறார்; ஆனால் இந்த இருவருடைய ராட்சஸ மனோபாவமும், ஐரோப்பிய ராஜதந்திரிகள் அனைவரையும் நடுங்கச் செய்கிறது.

'முஸோலினி'யின் வாள்'

ருஷியாவும் திறமைவாய்ந்த தன் 'செம்படை'களை அதிகப்படுத்திவருகிறது; நவீனமுறையில் பீரங்கிகள் விமானங்கள் முதலியவற்றைச் செய்து கொண்டே யிருக்கிறது. இப்படிப்பட்ட ருஷியாவை நேசதேசமாக்கிக் கொண்டால் ஜர்மனி எவ்வளவு ராணுவ பலமுடையதாயிருந்தாலும், அதைத் தோற்கடித்துவிடக் கூடுமென்று பிரான்சு மனோராஜ்யம் செய்கிறது. ஜப்பான்மீது ருஷியா கொண்டிருக்கும் பீதியின் காரணமாக ருஷியா ராணுவ பலத்தை அதிகரித்து வருகிறதாம்; ஜர்மனியைக் குறித்த பீதியு மிருக்கவேண்டும். ஜப்பான் செய்யும் "வியாபார யுத்தத்தைக்கண்டு இப்பொழுதே ஐரோப்பா அச்சம் அடைகிறது. வியாபாரரங்கத்தில் முன்னேறிவரும் 'மஞ்சள்-மனிதர்' யுத்தரங்கத்திலும் பல பரீட்சைக்கு வந்து விடுவாரோ?"—என்று ஐரோப்பா கவலைப்படுகிறது. துருக்கி—சர்வாதிகாரியான கமால் பாட்சாவும் தமது சிநேகபந்துவான ஜர்மனியின் உதவியால், சிகிச்சை செய்து 'ஐரோப்பாவின் நோயாளி' என்று ஓதுக்கப்பெற்றிருந்த தமது நாட்டைப் பூர்ண ஆரோக்கிய நிலைக்குக் கொண்டு வர முயல்கிறார். யுத்தப்பயிற்சி சம்பந்தமாக 1700 புஸ்தகங்கள் துருக்கியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி அரசியல்-சக்கரம் எங்கும் வெகு வேகமாகச் சுழன்றுகொண்டிருக்கும்போது, கடல்—அரசியாகிய பிரிட்டன் மாத்திரம் சும்மா இருக்கமுடியுமா?

அரசியல்-சக்கரம்

இப்போது பிரிட்டனுக்குத் தேவையான ராணுவபலம் இருக்கிறது. ஆனால், "யுத்தகாலத்தில் பிரிட்டிஷ்படைகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப் பட்டால், பிரிட்டனைப் பாதுகாக்க அதிகமான படைகள்வேண்டும். ஆகை யால் மூலாதாரப் படைகளை இன்னும் அதிகப்படுத்தவேண்டும்" என்று யுத்த காரியாலயம் அபிப்பிராயப்படுகிறது. "ஜர்மனியையும் பிரான்சையும் கவனிக்குமிடத்து, நமது துருப்புகளை அதிகப்படுத்த வேண்டியது இன்றியமையாத காரியம்" என்று பல நாடுகளின் ராணுவ பலத்தை அறிந்த பிரிட்டிஷ் நிபுணர்களும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

கடலரசியின் விழிப்பு

பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்கத்தின் டைரக்டர் ஜனரல், ஏராளமான வைத்தியர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தில் பேசும்போது, லண்டன்மாநகரத்தின் மீது நூற்றுக்கணக்கான விமானங்கள் வட்டமிட்டு, அரைமணி நேரத்தில் வெடிகுண்டுகளாலும் விஷப்புகையாலும் நகரத்தை நரகமாக்கி விடக்கூடுமென்றும், மற்ற ஐரோப் பிய நாடுகளைப் பின்பற்றி இங்கிலாந்தும் அப்படிப்பட்ட அபாயகாலங்களில் சாதாரண ஜனங்களைக் காப்பாற்றுவதற்கு இன்றியமையாத வசதிகளை அமைத்துக்கொடுக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார். இப்படிப்பட்ட களேபரத்திலிருக்கிறது உலகம்!—முக்கியமாக, ஐரோப்பிய உலகம்.

'யுத்தம் கூடாது; அது மதவிரோதமானது; அதை எதிர்த்து நிற்க வேண்டும்' என்று சொல்லக் கூடிய தைரியம் மதஸ்தாபனங்களுக்கு இல்லை. கிறிஸ்துமதத்தின் கௌரவமும் செல்வாக்கும் இப்போது ஐரோப்பாவில் மிகமிகக் குறைந்துபோய்விட்டன என்று கிறிஸ்தவ அறிஞர்களே ஒப்புக் கொள்ளுகிறார்கள். ருஷியாவில் மதம் அடியோடு ஒழிக்கப்பட்டது; இத்தாலி யில் அது உயிரற்றதாயிருக்கிறது. ஜர்மனியிலோ, தேசீயமும் மதமும் ஒன்றோடொன்று முரண்பட்டுத் தொந்தயுத்தம் செய்துகொண்டிருக் கின்றன! 'தேசீய விரோதியான கிறிஸ்துமதத்தை நான் துறந்துவிட்டேன்!' என்று எழுபதுவயதுள்ள ஒரு ஜர்மன் தளகர்த்தர் துள்ளிக்குதித்து மார் தட்டுகிறார்; தோள் கொட்டுகிறார். 'ஒவ்வொரு நாட்டினரும் தம் உள்ளு ணர்ச்சியால் கடவுளைப்பற்றி ஒருவிதமாக அறிந்திருக்கி றார்கள். ஜர்மன் ஜாதியின் உள்ளுணர்வுக்குக் கிறிஸ்து மதம் முற்றும் மாறுபட்டிருக்கிறது' என்பது அந்தத் தளகர்த்தர் கொள்கை. தேசபக்திக்கு மதபக்தி விரோதமானது என்ற அபிப்பிராயம் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் பரவிவருகிறது. மதம் விடுதலை யளிக்கும் என்ற கருத்து மாறி, மதத்திலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற எண்ணம் தலையெடுத்திருக்கிறது; இப்படிப்பட்ட துவேஷம் ஐரோப்பாவைத்தாண்டி ஆசியாக்கண்டத்திலும் புகுந்து விட்டது. ஐரோப்பியர்களின் 'மானஸ புத்திரர்களான ஜப்பானியர், மதத்தையே தங்கள் ராணுவக் கொள்கைக்கு ஒருதுணைக் கருவியாக்கி விட்டார்கள்! அஹிம்ஸா தர்மத்தை அடிப்படை யாகக்கொண்ட புத்தமதம் ஜப்பானில் படும்பாட்டை என்னென்பது !

மதமும் தேசீயமும்

இந்த நிலைமையில், உண்மையான மதத்தின் உண்மையான கடமை என்ன?' என்ற கேள்வி எழுகிறது. கிறிஸ்துமதத்தின் கடமையைக் குறித்

தும் பிரஸ்தாபிக்கும்போது டாக்டர் நார்வுட் என்ற அறிஞர், "சமாதான உணர்ச்சி ஏற்படுவதற்கு ஆயுதபலத்தை அதிகப்படுத்தவேண்டுமென்ற கொள்கையை நாங்கள் ஆதரிக்கமாட்டோம்!" என்று சர்ச்சு (கிறிஸ்தவர் திருச்சபை) கண்டிப்பாகச் சொல்லிவிடவேண்டும்" என்கிறார். ஆனால்

மதமும் சமாதான உணர்ச்சியும்

மதத்திற்கும் அஹிம்ஸாதர்மத்திற்குமுள்ள நெருங்கிய சம்பந்தத்தை உணர்ந்து, யுத்தத்தைத் தடுப்பதற்கு வேண்டிய பலமான முயற்சிகளை எந்த மதத்தினராவது மேற்கொள்ளக்கூடும் என்று தற்கால நிலையில் நாம் எதிர்பார்க்கவில்லை. எனினும் சமாதான உணர்ச்சியையும் சகோதர தர்மத்தையும் விதைத்துத் தேசிய சமூக மாற்றங்களை நாளடைவில் உண்டுபண்ணும் சக்தி, மதத்திற்கு இல்லையென்று சொல்லமுடியாது. இதுதான் மதத்தின் முக்கியமான கடமை. இதுவே நமது தேசிய உள்ளுணர்ச்சியுமாகும்.

நமது இந்து சமயம் இந்தியாவின் உள்ளுணர்ச்சிக்கு மாறுபட்டதன்று. இந்து தர்மத்தை இந்தியாவின் உயிர்நிலையென்றே சொல்லலாம். என்றும் அழியாததாயும், ஞானம், சக்தி, விடுதலை ஆகியவற்றை அளிக்கவல்லதாயும், நம்முள் மறைந்து கிடப்பதாயுமுள்ள ஆத்மாவை உணர்ந்துகொண்டு, லட்சியத்தைப் பூர்த்தி செய்யும் வழியில் ஏற்படும் சுகதுக்கங்களைச் சகித்து அவற்றை வெற்றிக்குரிய சந்தர்ப்பங்கள் ஆக்கவேண்டும்; இதுதான் தாகூரடிகள் வெளியிடும் இந்து தர்மசாரம். எனவே, நமது நாட்டில் தேசீயம்

இந்துதர்மமும் எதிர்காலமும்

மதவிரோதியன்று; உண்மையான தேசபக்தியை மத பக்தி தூண்டிவளர்க்கக்கூடும். மகாத்மாகாந்தி தேசிய வாதியாகவும் ஜீவகாருண்ய மூர்த்தியாகவும் ஒருங்கே புகழ்பெற்றிருக்கிறார் அல்லவா? உலகசிரேஷ்டரான காந்திஜியைப்போல், ஆத்மசுத்தம் தியாக உணர்வு தன்னம்பிக்கை தன்னலமறுப்பு அருளொழுக்கம் முதலான உன்னத குணங்கள் வாய்ந்த பெரியோர்கள் வாயிலாகவே இந்து தர்மம் எதிர்காலத்தில் எங்கும் பரவக்கூடும். அமெரிக்காவில் ஜனங்கள் பெரும்பாலும் பொருளாதார விஷயங்களில் ஈடுபட்டிருந்தாலும், மதவிஷயங்களில் பிரியமுள்ளவர்களென்றும், இந்துமதக் கோட்பாடுகளை அவர்களில் சிலர் வாழ்க்கையில் அப்பியசித்து வருகிறார்கள் என்றும் ஸ்ரீகஸின்ஸ் தமது சுற்றுப் பிரயாணத்தைக் குறித்துப் பேசும்போது சொன்னார். இப்படிப்பட்ட சில அறிகுறிகள் எதிர்கால உலகத்தைக் குறித்து நமக்கும் கொஞ்சம் நம்பிக்கை தருகின்றன.

நாட்டு நடப்பு

நெல்லை நேசன்

சென்ற எப்ரல் 19-ந் தேதி இந்து மகாசபையின் 16-வது மகாநாடு நடைபெற்றது. இலங்கை, பர்மா, ஸயாம், ஜப்பான் முதலிய நாடுகளி லிருந்து பிரதிநிதிகள் வந்திருந்ததும், பௌத்தசமயியும் பர்மாவைச் சேர்ந்தவருமான பொங்கி உத்தமர் தலைமை வகித்ததும், இந்துமகாசபையின் பிரதிநிதிகளுக்கு டோக்கியோவில் வரவேற்பளித்த ஜப்பானியர்களைப் பாராட்டித் தீர்மானம் நிறை வேற்றியதும், இந்து மதத்திற்கும் புத்த மதத்திற்குமுள்ள நெருங்கிய தொடர்பையும் பழைய உறவையும் நினைப்பூட்டுகின்றன. பௌத்த தர்மம் இந்துதர்மத்தின் ஒரு முக்கியமான பகுதிதான் என்பதும், பௌத்தர்களும் இந்துக்களும் சகோதரர்களே யென்பதும் கவனிக்கத் தகுந்த விஷயங்கள். இவ்வுண்மைகளை உணர்ந்து ஒழுகுவது, எதிர்காலத்திலே பொதுவாக ஆசியா வின் நன்மைக்கும், சிறப்பாக இந்தியாவின் நன்மைக்கும் அவசியமாகும். இந்தியரும் பர்மியரும் ஒரே பொதுவான மதநாகரிகமும் கலைவளமுமுள்ள வர்களென்றும், பலதலைமுறைகளாக நெருங்கிய சம்பந்தம் பெற்றிருந்த இந்த இரண்டு ஜாதியார்களும் வருங்காலத்திலும் சேர்ந்துதான் வாழவேண்டு மென்றும் வரவேற்புக் கழகத்தின் தலைவர் கூறினார். இந்துக்களும் ஜயினர் களும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் அவர் வற்புறுத்தி னார். இந்தியா, பர்மா, சீனம், ஜப்பான் முதலிய ஆசியா தேசங்கள் ஒன்றுபட்டுக் கீழ்த்திசை நாகரிகத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றும், சுவராஜ்யம் சீமையிலிருந்து வந்து இறங்கக்கூடிய வரப்பிரசாதமல்ல வென்றும், அது தேசீய தபோபலத்தால் அடையக்கூடிய நிதியேயென்றும், தலைவர் உத்தமர் பேசினார். இந்து மகாசபையைச் சில தேசீயவாதிகள் குறுகிய மனப்பான்மை வாய்ந்த வகுப்புவாத ஸ்தாபனம் என்று கூறுவ துண்டு. ஆனால் எல்லா வகுப்பினர்க்கும் சமநீதிவழங்கி, இந்து சமுதாயத் தில் உண்மையான கட்டுப்பாடு ஏற்படுத்துவதற்கு இப்படிப்பட்ட மகாசபை ஒன்று அவசியமானதென்பதே எமது கருத்து.

இந்து மகாசபை


இந்து மகாசபையின் விஷயாலோசனைக் கமிட்டியில் 'வகுப்புத்தீர்ப்பு' விஷயம் வியவகரிக்கப்பட்டபோது பார்லிமெண்டின் தீர்மானத்தை மாற்றக் கூடிய அதிகாரம் அரசர் பெருமானுக்கு உண்டென்றும், வெள்ளிவிழாவின்போது அவர் வகுப்புத்தீர்ப்பை 'ரத்து' செய்து இந்து மகாஜனங்களின் மனக்குறையை அகற்றவேண்டுமென்றும், பல பிரதிநிதிகள் அபிப்பிராயப்பட்டார்களாம். இந்த வகுப்புத்தீர்ப்பு, தேசீயத்திற்கு விரோதமானதுதான்; இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் அநீதி இழைப்பதுதான்; நாளடைவில் முஸ்லீம் சகோதரர் களுக்கும் நன்மையளிக்கப்போவதில்லை. வகுப்புத்தீர்ப்பினால் வகுப்பு வாதச் சண்டைகள் அதிகரிக்கும் என்பதும் உண்மையே. இதைக் குறித்துக்

வகுப்புத்தீர்ப்பும் வெள்ளிவிழாவும்

காங்கரஸ்-தலைவருக்கும் திரு எம். ஏ. ஜின்னுவுக்கும் நடந்த ஸமரஸப் பேச்சினுல் ஒரு பலனும் ஏற்படவில்லை; அப்படியே, சக்கரவர்த்தியை வேண்டிக்கொள்வதாலும் சீமைக்குத் தூது அனுப்புவதாலும் பயன் விளையப்போவதில்லை. 'வகுப்புத்தகராறு மிட்டாய் அல்ல, முழுமையும் விஷம்!' என்பதைத் தேசமெங்கும் தீவிரமாகப் பிரசாரஞ் செய்யவேண்டும். 'வகுப்புச் சண்டை நின்றாலொழிய, சுவராஜ்யம் இல்லை—என்பதை ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரிவித்துவிடவேண்டும். தேசீயம் என்ற மதத்தை அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். இவ்விதமாக ஆரம்பவேலை செய்வதை விட, வகுப்புவாதக்கேட்டை ஒழிப்பதற்கு வேறு வழியில்லை' என்று 34 வருஷம் ஸிவில் ஸர்வீஸில் இருந்தவரும், காலஞ்சென்ற ஆப்கன் அமீருடன் நெருங்கிப் பழகியவரும், இங்கிலீஷில் 40 புத்தகங்களுக்குமேல் பிரசுரித்திருப்பவருமான ஸர் அஜிசுடீன் அஹ்மத் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். இது இந்து-முஸ்லீம் தலைவர்களது விசேஷ கவனத்திற்குரியது.

"ஏழைகளுக்குப் பிறர் துன்பம் இழைப்பதைத் தடுப்பதற்காகவும், ஏழைகளுக்குப் பணிசெய்வதற்காகவுமே, காங்கரஸ்கட்சி இந்தியாசட்ட சபைக்குச் சென்றதாகத் தலைவர்கள் சொல்லுகிறார்கள். தேசபக்தர்கள் தமாஷுக்காக டில்லிபோகவில்லை. அவர்களால் சபையின் நடவடிக்கைகளுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது. காங்கரஸ் கட்சிக்கு வெற்றிமேல் வெற்றி கிடைத்தது. இதற்காகக் காங்கரஸ் அங்கத்தினர்களும் இதர எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் பலசமயங்களிலும் ஒத்துழைத்தார்கள். 1921-ஆம் வருஷம் சட்டசபைகளைக் காங்கரஸ் பகிஷ்கரித்திருந்ததால் தந்நலக்காரர்கள் அச்சபைகளுக்குள் நுழைந்திருந்தார்கள். சென்ற வருஷத் துவக்கத்தில் சட்டசபைக்குள் காங்கரஸ் கட்சி பிரவேசிக்க வேண்டுமென்று தீர்மானித்து, அபேட்சகர்களை நிறுத்தியதும், நிலைமை மாறிவிட்டது. அஸெம்ப்ளியில் காங்கரஸ்கட்சித் தலைவராயிருக்கும் திரு புலாபாய் தேசாய் அனுபவ அறிவும் பேச்சுத்திறமையும் வாய்ந்தவர்; கட்சியிலும் கட்டுப்பாடு இருக்கிறது. முன்பு இந்திய சட்டசபையில் பெரும்பாலும் வயதுசென்ற அங்கத்தினர்களே காணப்பட்டார்கள். இப்போது நடுத்தரவயதுள்ள அங்கத்தினர் பலர் காணப்படுகிறார்கள். இனி, தேசகைங்கரியத்திற்கு இளைஞர்கள் அதிகமாக வருவார்கள் என்பதற்கு இதை ஒரு நல்ல அறிகுறியாகக் கொள்ளலாம். உண்மையில், காங்கரஸ்காரர்கள் இந்திய சட்டசபையிலே விசேஷமாக ஒன்றும் சாதித்துவிடவில்லை; இப்பொழுதிருக்கும் நிலையில், பிரமாதமாய் ஏழைகளின் நன்மைக்காக ஒன்றும் செய்யவும் முடியாது. விவாதங்களெல்லாம் மரியாதைக் குறைவில்லாமல், கம்பீரமாக நடைபெற்றன. எதிர்க்கட்சியினர் செய்த காரியம் சர்க்காருக்கு முட்டுக்கட்டையாகத்தான் இருந்ததென்றும், உதவியாக இல்லையென்றும் நிதி-மந்திரி கூறினர். எனினும் காங்கரஸ்தான் தேசத்தின் பெரிய அரசியல் - கட்சி யென்பதையும், அக்கட்சியே பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டிய தென்பதையும் ஒருவரும் மறுக்கமுடியாது.

சட்டசபையில் காங்கரஸ்



வெள்ளிவிழா

ஒரு வைபவம் நடந்து 25 வருஷங்கள் சென்ற பிறகு அந்த வைபவத்தைக் கொண்டாடுவதை வெள்ளிவிழாக் கொண்டாட்டம் என்பார்கள். நம்முடைய மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மகிபரின் முடிசூட்டு வைபவம் நிகழ்ந்து, சென்ற மே மீ 6-ஆம் தேதியோடு 25 வருஷங்கள் பூர்த்தியாயின. அன்னாருடைய மகுடாபிஷேக வெள்ளிவிழா மே மீ 6, 7-ஆம் தேதிகளில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யமெங்கும் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது.

நமது மன்னர்பிரான் சிறுவயது முதற்கொண்டு எளிய வாழ்வை மேற்கொண்டவர். இளம்பிராயத்தில் ராணுவ உத்தியோகஸ்தராக இருந்து வந்த நாள் முதற்கொண்டு இவர் உழைப்பும், கடமையில் கருத்தும், எளியவர்களிடம் கருணையும் வாய்ந்தவர்.

இத்தகைய நற்குணங்கள் இவரிடம் இருப்பதனால் சென்ற 25 வருஷ காலத்தில் சாம்ராஜ்யத்துக்குப் பல நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் இவரால் பல நன்மைகள் உண்டாக வேண்டும். இந்தியா இந்த சாம்ராஜ்யத்தின் சவலைக் குழந்தையாக இருந்து வருகிறது. அதன் சவலையைத் தீர்த்து அது புஷ்டியுள்ளதாகும் வகையில் நமது அரசர் பெருமான் இன்னும் ஆக்கம் தேட வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் கடவுள் அவருக்கு ஆயுராரோக்ய ஐசுவர்யாதிகளைக் கொடுத்து அவரைக் காப்பாற்ற வேண்டும். நமது மகாராணியார் தமக்கென வாழாது சமூகாபிவிருத்திக்காகப் பாடுபடுவதோடல்லாமல் இந்தியக் கலைகள் (Arts and Crafts) விஷயத்திலும் விசேஷ கவனம் செலுத்தி வருகிறார். தாய் தந்தையர்களைப் போலவே மாட்சி மிக்க இளவரசர் முதலியவர்களும் விளங்குகிறார்கள். இவர்கள் யாவருக்கும் நல்வாழ்வைக் கொடுத்துக் கடவுள் ரக்ஷிப்பாராக.

கருத்தொப்புமை

துங்க யானைக்காற் படுத்தினும் படுத்துக சுடர்விழிப் பகுவாய
சிங்க வாயிடைச் செலுத்தினும் செலுத்துக தென்புலத்தவர்கோமான்
வெங்கண் மாநரகத்திடை வீழ்த்தினும் வீழ்த்துக விடையேறும்
எங்கள் நாயக தமிழ்அறி யார்கள்முன் இயம்புதல் தவிர்ப்பாயே.

𑌇𑌤𑌰𑌤𑌾𑌪𑌶𑌤𑌾𑌨𑌿 𑌯𑌥𑍇𑌚𑍍𑌛𑌯𑌾
𑌵𑌿𑌤𑌰 𑌤𑌾𑌨𑌿 𑌸𑌹𑍇 𑌚𑌤𑍁𑌰𑌾𑌨𑌨 ।
𑌅𑌰𑌸𑌿𑌕𑍇𑌷𑍁 𑌕𑌵𑌿𑌤𑍍𑌵𑌨𑌿𑌵𑍇𑌦𑌨𑌂
𑌶𑌿𑌰𑌸𑌿 𑌮𑌾 𑌲𑌿𑌖 𑌮𑌾 𑌲𑌿𑌖 𑌮𑌾 𑌲𑌿𑌖 ॥



புத்தக வரவு

பார்வதிபாய் சுயசரிதம்: ஆசிரியர்: ஸ்ரீமான் தே. வீரராகவன் அவர்கள். கிடைக்குமிடம்: ஸ்ரீமான் பி. லோ. அருணசல முதலியார், எடுகேஷனல் பப்ளிஷர்ஸ், சென்னை. விலை அணு 8.

மங்கைக் கோர் மதியுரை: திருதா. பொ. மாசிலாமணிப்பிள்ளை அவர்கள் எழுதியது. **கிராதார்ச்சுனீயம்:** ஆசிரியர்: வியாகரண மஹோபாத்தியாயர் பிரமஸ்ரீ வை. இராமசாமி சர்மா அவர்கள். கிடைக்குமிடம்: சுன்னகம், தனலக்குமி புத்தகசாலை, வண்ணர் பண்ணை.

சருவ சன சேபம்: ஆசிரியர்: ராவ் ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார், ஜி. பி. வி. வி. கிடைக்குமிடம்: தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி அண்டு சென்னை. விலை அணு 1.

ஸ்ரீராம சரிதை: ஆசிரியை: ஸ்ரீமதி கே. எஸ். சங்கரி. விலை அணு 6; **இஹபர சுகம்:** ஆசிரியர்: ரமணதாஸர் ஸ்ரீமான் கா. சு. சேஷகிரி ஐயர் அவர்கள். விலை அணு 8; **ஈச்வரலீலை:** ஆசிரியர்: மேற்படியார். விலை அணு 8. கிடைக்குமிடம்: ஆசிரியர், 138, பிராடீஸ் ரோட், மயிலை.

ஜெனரல் ஸயன்ஸ்: ஸ்ரீ வைகுண்டம் காரனேஷன் ஹைஸ்கூலில் ஆசிரியராக இருக்கும் வெ. வேங்கடகிருஷ்ணன் அவர்கள் பி.ஏ., எல்.டி. எழுதியவை. இவை மூன்று புத்தகங்களாக உள்ளன. முதல் இரண்டு மூன்றாம் பாரங்களுக்கென்று வெவ்வேருக எழுதப்பட்டன. விலை முறையே 10, 12, 12, அணுக்களாக விதிக்கப்பட்டிருக்கின்றன. பதிப்பித்தவர் எஸ். ஆர். சுப்பிரமணியபிள்ளை, புத்தகவியாபாரி, திருநெல்வேலி ஜங்ஷன்.

அரசியல் ஞானி அரங்கசாமி ஐயங்கார்: சுதேசமித்திரன் உதவி ஆசிரியர் திரு. ஆர். கிருஷ்ணமாச்சாரியார் இயற்றியது. இதன்விலை ரூபாய் இரண்டு. **ராஜா தேசிங்கு:** ஆசிரியர்: ஸ்ரீமான் வி. பி. மூர்த்தி, எம். ஏ. விலை அணு 5. பதிப்பித்தவர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

தாலாட்டும் தும்மியும்: விலை அணு நான்கு; **புதுமைப்பாக்கள்:** விலை அணு நான்கு; **காந்தி இருபா:** விலை அணு மூன்று; **காந்தி பதினேண்பா:** விலை அணு ஐந்து. இவை ஊழியன் பத்திரிகையின் ஆசிரியரான ராய. சொக்கலிங்கம் அவர்கள் இயற்றியவை.



சங்கராபரணம் நரஸையர்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

ஸங்கீதக்கலை தமிழ்நாட்டில் வளர்வதற்குக் காரணமாக இருந்தவர்களுள் தஞ்சாவூர் மகாராஷ்டிரமன்னர்கள் சிறந்தவர்களாவர். அவர்களுடைய அரசாட்சியில் கர்நாடக ஸங்கீதப் பயிற்சி மிக விரிவடைந்தது. ஸங்கீதவித்துவான்கள் அதிகமாயினர். தமிழ்நாட்டாருக்கு ஸங்கீத விருந்து மிகுதியாகக் கிடைத்தது. அவர்கள் தங்கள் ஸம்ஸ்தானத்தில் சிறந்த பல ஸங்கீத இரத்தினங்களை வைத்துப் போற்றி ஆதரித்து வந்தார்கள். அதனால் தஞ்சை அக்காலத்தில் இசைக்கலையின் அரசிருக்கையாக விளங்கியது.

வித்துவான்களுடைய ஆற்றலை யறிந்து போற்றுவதும் வரிசை யறிந்து பரிசளிப்பதும் பட்டமளிப்பதும் ஆகிய பலவகைச் செயல்களால் அம் மகாராஷ்டிரமன்னர்கள் பலவித்துவான்கள் மனத்தைக் கவர்ந்தனர். ஸங்கீதத்தில் ஒவ்வொருவகையில் தேர்ச்சி பெற்ற பலவித்துவான்கள் அவ்வரசர்களால் அளிக்கப்பட்டனவும் தங்கள் தங்கள் ஆற்றலைப் புலப்படுத்துவனவுமாகிய பட்டப் பெயர்களை யுடையவர்களாக இருந்தனர். வீணைப்பெருமாளையர், பல்லவி கோபாலையர், இரட்டைப்பல்லவி சிவராமையர் அல்லது சஞ்சீவி சிவராமையர், சல்லகால் கிருஷ்ணையர், கனம் கிருஷ்ணையர், த்ஸௌகம் சீனுவையங்கார், தோடி சீதாராமையர் முதலிய பல பிரபல வித்துவான்களை உத்ஸாகப்படுத்திவிட்டவர்கள் தஞ்சை ஸம்ஸ்தானாதிபதிகளே. இவர்களுக்கும் வேறு பலருக்கும் ஆசிரியராகிய பச்சைமிரியன் ஆதிப்பையரென்னும் இணையற்ற ஸங்கீத வித்துவானை ஆதரிக்கும் புண்ணியமும் அவர்களுக்கு இருந்தது.

அவர்களுள், அருங்கலை விநோதராக விளங்கிய சரபோஜி அரசர்காலத்தில் நரஸையரென்னும் ஸங்கீதவித்துவானொருவர் இருந்தார். அவர் ஏனைய வித்துவான்களுக்குச்சிறிதேனும் ஆற்றலிற் குறைந்தவரல்லர். ஒருநாள் அரசர் முன்னிலையில் பெரியசபையில் அவருடைய வினிகை நடைபெற்றது. அப்பொழுது அவர் மிக விரிவாகச் சங்கராபரணராகத்தை ஆலாபனஞ்செய்து பல்லவி கற்பனைஸ்வரம் முதலியன பாடிவரலானார். முறைப்படியே அதனைப் பாடிவருகையில் அரசரும் சபையோரும் அதில் மிகஈடுபட்டார்கள். அவர் இனிமையாகப் பாடப்பாடச் சபையில் இருந்த யாவரும் ஒன்றுபட்டு மனமுருகினர்; 'இதுகாறும் சங்கராபரணத்தை இப்படிக் கேட்டதேயில்லை' என வியந்து பாராட்டினார்கள். அரசர் அவருடைய ஆற்றலையுணர்ந்து மகிழ்ந்து பலவகைப் பரிசுகளை அளித்ததோடு, 'சங்கராபரணம் நரஸையர்' என்னும் பட்டப் பெயரையும் வழங்கினார். அக்காலமுதல் அவர் அப்பெயராலேயே அழைக்கப்படலாயினர். எங்கேனும் ஸங்கீத வினிகை நடத்தப்போனால் அங்குள்ளவர்கள் முதலில் அவரைச் சங்கராபரணம் பாடச்சொல்லிக் கேட்டு மகிழ்வதை ஒருவழக்கமாகக் கொண்டார்கள். இதனால் அவருடைய ஆற்றல் மேன்மேலும் விளக்கமடைந்தது.

ஒருசமயம் நரஸையருக்கு எதிர்பாராத விதமாகப் பெருஞ்செலவு நேர்ந்தது. அதற்காகக் கடன் வாங்கவேண்டியிருந்தது. தமக்கு வேண்டிய பொருளைத் தருவாரை அவர் காணவில்லை. அக்காலத்தில்[1] கபிஸ்தலத்தில் இருந்த [2]இராமபத்திர மூப்பனாரென்பவர் ஸங்கீதரஸிகராகவும் ஸங்கீதவித்துவான்களுக்குப் பெருநிதியாகவும் விளங்கிவந்தார். அம்மூப்பனாரிடம் பொருள்பெற எண்ணிய நரஸையர் கபிஸ்தலம் சென்று அவரைக் கண்டார். மூப்பனார் வித்துவானை உபசரித்துப் பாராட்டி அளவளாவினர். நரஸையர் அங்கே சிலதினம் இருந்தார். பிறகு ஒருநாள் மெல்லத் தமக்குப் பொருள் வேண்டியிருத்தலைப் பற்றிக்கூறலானார்.

நரஸையர்: எதிர்பாராதவிதத்தில் எனக்குச் செலவு நேர்ந்துவிட்டது. ஒருவரிடம்சென்று பொருள்கேட்க என்மனம் நாண

---

[1] இவ்வூர் தஞ்சை ஜில்லாவில் பாபநாசத்துக்கருகில் உள்ளது,

[2] இவர் கனம் கிருஷ்ணையரை ஆதரித்த உபகாரி. இவரைப்பற்றிய வரலாற்றைக் கனம் கிருஷ்ணையர் சரித்திரத்தால் அறியலாம்.

மடைகிறது. என்னசெய்வதென்று யோசிக்கையில் தங்கள் ஞாபகம் வந்தது. தங்களிடம் கடனைப் பெற்றுக்கொண்டு மீட்டும் கொடுத்துவிடலாமென்று வந்தேன்.

இராமபத்திர: கடனுவேண்டும்? எவ்வளவு வேண்டும்?

நரஸையர்: எண்பது பொன்.

இராமபத்திர: கடன் வாங்கவேண்டுமென்கிறீர்களே; எதையாவது அடகுவைப்பீர்களா?

நரஸையர் சிறிது யோசித்தார்.

நரஸையர்: ஆஹா, வைக்கிறேன்.

இராமபத்திர: எதை வைப்பீர்கள்?

நரஸையர்: ஓர் ஆபரணத்தை.

இராமபத்திர: எங்கே? அதை எடுங்கள் பார்க்கலாம்.

நரஸையர்: அந்த ஆபரணத்தைக் கண்ணால் பார்க்க முடியாது; காதாற் கேட்கலாம். என் உடைமையாகிய சங்கராபரண ராகத்தையே நான் அடகு வைக்கிறேன். தங்களிடம் பெற்றுக் கொள்ளும் பொன்னைத் திருப்பிக் கொடுக்கும்வரையில் அதை எங்கும் பாடுவதில்லையென்று உறுதி கூறுகிறேன்.

இராமபத்திர: அப்படியானால் உங்களுக்கு வேண்டியது தருகிறேன்.

மூப்பனார் நரஸையரிடம் ஒரு கடன்பத்திரம் வாங்கிக் கொண்டு எண்பதுபொன்னை அளித்தார். அத்தொகையைப் பெற்றுக்கொண்ட அவர் மகிழ்ச்சியுடன்சென்று செய்யவேண்டிய காரியங்களை நிறைவேற்றினர். அதுமுதல் எவ்விடத்தும் அவர் சங்கராபரணத்தைப் பாடுவதை நிறுத்தியேவிட்டார். எங்கேனும் வினிகைகளுக்குச் சென்றால் வேறு ராகங்களையும் கீர்த்தனை களையுமே பாடிவந்தார்.

அக்காலத்தில் கும்பகோணத்தில் அப்புராயரென்ற ஒரு செல்வர் இருந்தார். அவர் கம்பெனியாரிடம் பெரிய உத்தியோகம் பார்த்துவந்தார். தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி என்னும் இரண்டிடங்களின் தொடர்புடையவராதலின் அவர் உபய ஸம்ஸ்தான திவானென்னும் சிறப்புப்பெயரால் வழங்கப்பட்டார். அக்காலத்திலிருந்த வாலீஸ் என்னும் துரைக்குப் பிரியமானவராக இருந்ததுபற்றி வாலீஸ் அப்புராயரென்றே யாவரும் அவரை அழைப்பர். ரெட்டிராயரக்கிரகாரத்தில் குளத்திற்கு வடகரையில் அவருடைய வீடுகள் உள்ளன.

அவருடைய வீட்டில் ஒரு கல்யாணம் நடைபெற்றது. அவ்வைபவம் பலவகையில் சிறப்புடையதாக இருக்கவேண்டுமென்றெண்ணிய அவர் அதற்குரியவற்றைச் செய்தனர். ஸங்கீத வினிகையொன்று நடத்தவேண்டுமென்றும் அதற்கு மிகச் சிறந்த வித்துவான்களை அழைக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார். அங்ஙனம் அழைக்கப்பட்டவர்களுள் சங்கராபரணம் நரஸையரும் ஒருவர்.

ஒரு குறிப்பிட்டகாலத்தில் நரஸையருடைய வினிகை நிகழ்ந்தது. ராயர் அவருடைய ஆற்றலைப்பற்றி நன்றாக அறிந்தவராதலின், "உங்களுக்குப் பட்டம் அளிக்கச்செய்த சங்கராபரணத்தைப் பாடவேண்டும்" என்று விரும்பினர்; உடனிருந்த அன்பர்களும் வேண்டிக்கொண்டனர்.

நரஸையர் : தாங்கள் க்ஷமிக்கவேண்டும்; நான் அதைப் பாட முடியாத நிலையில் இருக்கிறேன்.

ராயர் : ஏன்?

நரஸையர் : நான் அதை ஒருவரிடம் அடகுவைத்துக் கடன் வாங்கியிருக்கிறேன். அக்கடனைத் திருப்பிக்கொடுத்த பிறகு தான் அதைப் பாடவேண்டும்.

ராயர் : என்ன ஆச்சரியமாக இருக்கிறது? ராகத்தை அடகுவைத்ததாக எங்கும் கேட்டதில்லை. சரி; யாரிடம் எவ்வளவு கடன் வாங்கியிருக்கிறீர்கள்? நாம் உடனே அதனைத் தீர்த்து விடுவோம்.

வித்துவான், சங்கராபரணத்தைஅடகுவைத்த வரலாற்றைக் கூறினர். உடனே ராயர் என்பது பொன்னையும் அதற்குரிய வட்டியையும் தக்க ஒருவர்பால் அளித்து, அதனைப் பெற்றுக் கொண்டு விடுதலையெழுதித் தரவேண்டுமென்று இராமபத்திர மூப்பனருக்குச் சொல்லி அனுப்பினர். அன்று நரஸையர் வேறு ராகங்களையே பாடினர்.

ராயரிடமிருந்து சென்றவர் இராமபத்திர மூப்பனரிடம் பணத்தைக் கொடுத்துச் செய்தியைக் கூறினர். மூப்பனர் மிக மகிழ்ந்து அந்தத்தொகையோடு பின்னும் சிலபொருளை எடுத்துக் கொண்டு கும்பகோணம் வந்தார். வந்து அப்புராயரையும் நரஸையரையும் கண்டார். அவரைக் கண்டவுடன் அப்புராயர், "பணம் வந்துசேர்ந்ததா? விடுதலையோலை எங்கே?" என்றார்.

இராமபத்திர: ராயரவர்களும் ஸங்கீத சிகாமணியாகிய நரஸையரவர்களும் என்னுடைய செயலை அடியோடே மறந்துவிட வேண்டும். அவர்கள் என்னிடம் எவ்வளவு தொகை வேண்டுமாயினும் கேட்டுப் பெறும் உரிமையுடையவர்கள். அவர்களைப் போன்றவர்களுக்குப் பயன்படுத்தாமல் வேறு என்ன செய்வதற்கு நான் செல்வம் படைத்தேன்? அவர்கள் பணம் வேண்டுமென்றால் உடனே கொடுத்திருப்பேன். 'கடனாக வேண்டும்' என்று அவர்கள் கேட்டது எனக்குச் சிறிது வருத்தத்தை உண்டாக்கியது. விளையாட்டாக அடகுண்டாவென்று கேட்டேன். அவர்கள் சங்கராபரணத்தை அடகுவைத்தார்கள். அன்றுமுதல் இன்று வரையில் அதனை எங்கும் பாடியதாகக் கேட்டிலேன். இதனால் அவர்களுடைய உயர்ந்த குணமும் உண்மையும் புலப்படுகின்றன. இந்தத் தொகை எனக்குரியதன்று. அவர்களுக்கே உரியது. தாங்களே அவர்களிடம் கொடுத்துவிடுங்கள். இதையல்லாமல் இவ்வளவு நாள் சங்கராபரணத்தைச் சிறைசெய்ததற்கு அபராதமாக நான் கொடுக்கும் இந்தத் தொகையையும் தங்கள் திருக்கரத்தாலேயே அவர்களுக்கு வழங்கவேண்டும். இதோ விடுதலை ஓலையும் தந்துவிட்டேன்.

ரூப்பனுருடைய அன்புடைமை அப்பொழுது யாவருக்கும் வெளியாயிற்று. 'கடன் பெற்றவர் கடனைத் திருப்பிக்கொடுப்பதையும் கடன்தந்தவர் வட்டியுடன் பெற்றுக்கொள்வதையும் உலகத்தில் கண்டிருக்கிறோம். கடன் வாங்கினவர் திருப்பிக் கொடுத்தால் கொடுத்தவர் அதைப் பெற்றுக்கொள்ளாமல் பின்னும் தொகை சேர்த்துக் கொடுப்பது புதுமையிலும் புதுமை' என்று யாவரும் வியந்தார்கள்.

மறுநாள் கல்யாணப் பந்தலில் நரஸையருடைய வாக்கிலிருந்து அமுததாரைபோல, விடுதலை பெற்ற சங்கராபரணராகம் வெளிப்பட்ட காலத்தில் கேட்ட யாவரும் பதுமைகளைப் போலத் தம்மைமறந்து ஸ்தம்பிதமாயினரென்று கூறவும் வேண்டுமோ?

அக்காலமுதல் நரஸையர் வாலீஸ் அப்புராயருடைய ஆஸ்தான வித்துவானாக விளங்கிவரலானார்.

இலக்கியம்

பாரதியின் பண்பு

ப. அ. நடேசன்

(436-ஆம் பக்கத்தொடர்ச்சி)

கற்பனைசக்தியில் பாரதியார் யார்க்கும் . இளைத்தவரன்றென்பது அவரது நூல்களாலே அறியக்கிடப்ப தொன்றும். பாரதநாட்டின் தெய்வமாய் இலங்கும் கண்ணனுக்குப் பாமாலை சூட்டப்போந்த பாவலர் முன்னைய தமிழ்ப்புலவர்கள் இறையை முறையுடன் ஏத்தியதே போன்று, கண்ணனைத் தோழனாகவும், தாய்தந்தையர்களாகவும், ஆண்டானாகவும், அடிமையாகவும், வேந்தனாகவும், காதலன் காதலியாகவும் கற்பித்து அஞ்சலி செய்தல் போற்றற்குரித்து. இவரது கற்பனைசக்தி 'குயில்' என்னும் நூலிற் பொலிவுடன் தனிப்பட இலங்குவதைக் காணலாம். இவர் யாத்த பன்னூல்களினும் இதுவே தலைமையானதெனக் கருதுதற்கு இடமுண்டு. இஃது ஒருகாதற்கதையாய் வெளிக்குத்தோற்றினும் உண்மைக்காதலின் நீர்மையையும் அரிய கருத்துக்களையும் பண்ணுடன் பயிலுஞ் சொற்சுவை பொருட்சுவையுடனும், சிறந்த உவமைகளோடும், கற்கக்கற்கத் தெவிட்டாத இன்பம் பயக்கும் வருணனைகளோடும் விளங்காநிற்கின்றது. கற்பனை மிகுந்த கண்ணன் பாட்டும் குயிலும் இவ்விருபதாம் நூற்றாண்டில் தொல்லைப்புகழ் அழிந்து ஒளிகுன்றி நிலைகுலைந்து அவலமுற்றிருந்த தமிழன்னையின் இருவிழிகள் போல் இலங்கிப் பழைய ஒளியும் நிலையும் எய்தற்கிடமாகி நிற்பனவாய் மிளிர்கின்றன.

'வீணையடி நீயெனக்கு—மேவும்விரல் நானுனக்கு'
'கல்வியென்னும் வலிமைகொண்ட கோட்டை கட்டினான்—நல்ல
கருத்தினாலதனைச்சூழ்ந்தோ ரகழிவெட்டினான்
சொல்விளக்க மென்றதனிடைக் கோயிலாக்கினான்

ஸ்வாதந்தர்ய மென்றதன்மேற் கொடியைத்தூக்கினன்'
'துன்பமென்னுங் கடலைக்கடக்குந் தோணி அவன்பெயர்
சோர்வென்னும் பேயையோட்டுஞ் சூழ்ச்சி அவன்பெயர்
அன்பெனுந்தேன் ஊறித்ததும்பும் புதுமலர் அவன்பேர்
ஆண்மையென்னும் பொருளைக்காட்டும் அறிகுறி அவன்பேர்'
'அறிவாகிய கோயிலிலே அருளாகிய தாய்மடிமேல்
பொறிவேலுட னேவளர்வாய்'
'விந்தையுறு காந்தமிசை வீழுமிரும் பினைப்போல்
ஆவலுட னின்னையறத்தழுவி, ஆங்குனது
கோவையிதழ் பருகி'

மேற்கூறிய கற்பனைகளும் உவமைகளும் ஒருசிலவே ஆயினும் அன்னாரது புலமையைஉணர்த்தும் என்பதற்கு ஐயமிலது. இவரது கற்பனைத்திறனையும் ஏனையவற்றையும் இச்சிறு கட்டுரையில் புகுத்தல் முடியாததொன்றாதலின் தமிழறிந்த மக்களனைவரும் அம்மான் புறு நூல்களைக் கற்றுணர்ந்து இன்பந்துய்த்தலே சிறப்பு.

இந்து மதத்தினர் சாதாரணமாகப் பலவிதப் பெயருடன் வழிபடும் இறையைப் பாரதியும் பல்வேறு நாமங்கட்கேற்றாற் போன்று வழுத்துகின்றனர். இவ்வுலகை இயக்குவித்தல் ஒருவிதச் சக்தியே யாகையால் அச்சக்தியையே இவர் மிகுதியும் வழிபட்டிருத்தல், இவர் சக்திமீது பாடிய பாடல்களிலிருந்து தெரிகின்றது.

'எங்ஙனஞ் சென்றிருந்தீர் என்
இன்னுயி ரேயென்றன் இசையமுதே
திங்களைக் கண்டவுடன்—கடல்
திரையினைக் காற்றினைக் கேட்டவுடன்
கங்குலைப் பார்த்தவுடன்—இங்குக்
காலையி லிரவியைத் தொழுதவுடன்
பொங்குவீர் அமிழ்தெனவே—அந்தப்
புதுமையி லேதுயர் மறந்திருப்பேன்'

என்பதுபோன்ற பாக்கள் மிகவும் உருக்கமானவை; கேட்போரைப் பிணிக்குந்தன்மையன. பாரதியார் திங்கள் இரவிமுதலிய இயற்கை எழில்களை வருணித்த தோத்திரக் கவிகள் மிகவுஞ் சிறந்து விளங்குகின்றன.

'யாமறிந்த மதங்கள்பல வுளவா மன்றே
யாவினுக்கு முட்புதைந்த கருத்திங் கொன்றே'

என்றவாறு பாரதியார் சர்வசமய சமரச ஞானியாய் விளங்குகின்றார். இவர் இயேசுவையும், புத்தரையும், முகம்மதுவையும் புகழ்ந்திருப்பது இவரது கொள்கைக்குப் பலங்கொடுப்பதாகும். இவர் அத்வைதக் கொள்கையிற் பூரண நம்பிக்கையுடையவர்.

'ஒளியும் இருளும்', 'தெளிவு', 'அறிவேதெய்வம்', 'நெஞ்சொடு கிளத்தல்' முதலிய வேதாந்தச் செய்யுட்களைப் படிக்குந்தோறும் இவர் வாக்குத் தெய்வவாக்கென ஞானிகள் மதிப்பர். நுட்பமான வேதாந்தப் பொருள்களை மிக எளிதில் மனத்திற் பதியும்படி இவரெழுதியிருப்பதிலிருந்து இவர்பால் நின்றொளிரும் தத்துவ விளக்கம் நன்கு பிரகாசிப்பதைக் காணலாம்.

'துன்பமே யியற்கையெனும் சொல்லைமறந்திடுவோம்
இன்பமே வேண்டிநிற்போம் யாவு மவள்தருவாள்'
'நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சியுயிர் வாழ்வ தறியாமை'

என்னும் கவிகளைக் கற்கும் யார்க்கும் மனந்தளராதெனப் புலப்படுகின்றது.

காட்சியென்னும் நூலிற் கூறிய இயற்கை வருணனைத்திறன் இவர் தமிழன்னைக்குச் சூட்டிய விலையிறந்த மணிமகுடமாகும். பாப்பாபாட்டு, முரசு ஆகியவிரண்டும் தனிசிறந்து விளங்குகின்றன. இவ்விரு நூல்களிலுமுள்ள பாக்களில் மிகுதியும் குழந்தைகளுக்கென்றெ எழுதப்பட்டிருப்பது போல் வெளியில் தோன்றினும் அவை யாவர்க்கும் அறிவுகொளுத்துஞ் சுடராய் நிற்கின்றன. அரிய அறவுரைகளை நாம் குழவிப் பருவத்திலேயே கற்றுக்கொள்ள வேண்டுமென்பது ஆசிரியர் உள்ளக்கிடக்கை. ஏனெனில் குழந்தைகள் மாசற்ற அறிவைக் கொண்டிருத்தலால் அந்த அறிவைச் செவ்வழிப்படுத்தல் எளிதென்பது ஆசிரியர் கருத்து.

'உயிர்க ளிடத்தி லன்பு வேணும்—தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேணும்
வயிர முடைய நெஞ்சு வேணும்—இது
வாழு முறைமையடி பாப்பா'
'அன்பென்று கொட்டு முரசே—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரு மொன்றென்று கொண்டால்'

என்பன இங்கே குறிப்பிடற்பாலன.

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதிலறிந்துகொள்ளக்கூடிய சந்தம்: இவற்றினைத் தருவோன் நமது தமிழ்மொழிக்குப் புதிய உயிர்தருவோனாகின்றான். ஓரிரண்டு வருடத்து நூற்பழக்கமுள்ள தமிழ்மக்களெல்லோர்க்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்த வேண்டும்" என்று ஆசிரியர் கூறியவாறு 'பாஞ்சாலி சபதம்'

என்னுங்காவியத்தைப் புதுமுறையில் யாத்துத் தமிழ்த்தாய்க்கு இன்னுயிரளித்த புலவர் கோமான் இவரே.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணோம்'

என்று ஆசிரியர் தாம் பயிற்சிபெற்ற பன்மொழிகளினும் தமிழ் மொழியே உயர்ச்சியுடைத்தென்று தமது தாய்மொழி யன்பை இனிய நடையில் எடுத்தியம்பியது யார்க்கும் தெவிட்டாச்சுவையைப் பயப்பதன்றோ! தாய்மொழிக் கல்வி மிகவும் மேம்பட்டதென இவர் காட்டிப்போந்தனர். இப்போழ் துள்ள கல்விமுறையை வெறுப்பதோடு அது அடிமைத்தனத்தைப் போதிப்பதெனவும், நாட்டுக்கல்வியுந் தொழிலும் அதனல் கெடுகின்றனவெனவுங் கூறிப்போந்தார். முற்காலப் புலவர்களிடம் செந்தமிழ் நாட்டன்பு இருந்ததே போன்று பாரதியிடமும் அவ் வித அன்பு திகழக் காணலாம். அன்னவரது அன்பைத் தமிழறிஞர் ஒருவர் பின்வருமாறு நவில்கின்றனர்:

"இந்நாட்டிற்கு நல்லணியாயிலங்கும் பெருந் தமிழ்ப்புல வரைப் போற்றப்போந்த இக்கவிஞர்,

'கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்
கம்பன் பிறந்த தமிழ்நாடு
வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளுஞ் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ் நாடு'

என்று அன்பாலமைத்த புகழ்மாலை அறிஞர்நெஞ்சை அள்ளு கின்றது. இவ்வாறு தமிழ்நாட்டை வழிபடும் புலவரது தலையாய ஆர்வம் தமிழ்மொழியன்பை அடிப்படையாகக்கொண்டு விளங்குந் தன்மை இனிதறியப்படும். தாய்மொழியன்பே தாயகவன்பைத் தோற்றுவிப்பதாகும். தாய்மொழியைப் போற்றும் மக்களெல்லாம் தாய்நாட்டில் தலைசிறந்த பற்றுடையராய் விளங்குவார்கள். தாய் மொழிபேணும் ஊக்கமற்றோரது தாயகப்பற்று வேரற்ற மரம்போல் வீழ்ந்தொழிவதாகும். இவ்வுண்மை இவர் பாடிய கீழ்வரும் அடி களால் மாண்புற விளங்கித்தோன்றும்.

'செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே'

என்று கவி தாமுணர்ந்த கருத்தைக் கரவாதுரைத்தார். இனி மையும் அழகும் பொங்கித் ததும்பும் செந்தமிழ் வழங்கும் நாடு என்று சொல்லும்பொழுது தென்தமிழின் தீந்தேன் செவிகளில்

விரைந்து பாய்ந்து நிரம்புகின்றது. அன்னையின் இனிமையும் அன்பும் செந்தமிழ் நாடென்னும் சொற்றொடரில் அமைந்திருத்தலால் நம் செவியின் வாயிலாக இன்பத்தேன் வந்து பாய்வதாகும். இத்தமிழ் நாட்டில் வாழ்ந்த அறிஞர் இனிமையும் தமிழும் வேறென்று கொள்ளார். தமிழ் என்னும் பதத்திற்கே இனிமை என்னும்பொரு ளமைத்தார்கள். இத்தகைய இனிமை வாய்ந்த தமிழொலி, இன் னொலியாய், இன்ப ஒளியாய், ஆனந்தத்தேன் சொரியும் அழகிய ஒலியாய் இன்பம்பயப்பது இயல்பேயன்றோ? இவ்வாறன்றி இந்நாட் டைத் தந்தையர் நாடென்று கருதும்பொழுது மக்களாய்ப்பிறந்த நமது உரிமை முனைந்து மனத்திற் தோன்றுவதாகும். இவ்வுரிமைக் கருத்து உள்ளத்தைக் கவரும்பொழுது வீரம் கிளம்புகின்றது. தாயை அன்பின் வடிவமாகவும் தந்தையை வீரத்தின் வடிவமாகவும் அமைத்துப் போற்றுதல் தமிழ்வழக்காகும். இம்முறையில் தமிழ் நாட்டைத் தாய்நாடென்று நினைக்கும்பொழுது அன்பினால் இன் பம் பிறக்கும். அன்றித் தந்தைநாடென்று கருதும்பொழுது ஆண் மையால் வீரம் பிறக்கும். இவ்வுண்மையை அறிந்தமைத்த பாரதி யார் முதலில் தாயன்பை அமைத்து அப்பால் தந்தையின் வீரத்தை அமைத்த முறை அறிந்து போற்றுதற்குரியதாகும். இறைவனை அம்மையப்பரென்று தாய்வடிவாகவும் தந்தைவடிவாகவும் அமைத்து வணங்கும் வழிபாடும் இக்கருத்தையே வலியுறுத்து வதாகும். பாசங்களினின்றும் நீங்கிப் பேரின்பம் பெற விரும்பிய பெரியார் 'அம்மையே, அப்பா, ஒப்பிலா மணியே' என்று இறை வனை முதலில் அன்னையாகவே கருதி அகங்குழைவாராயினர். ஆகவே, இத்தென்தமிழ்நாடு முதலில் எம் தாய்நாடு; அப்பால் எம் தந்தையர்நாடு. இதுவே உண்மைத்தொண்டராய் உழைக்கும் உயர்ந்தோர் உளப்பான்மையாகும்; மெய்யன்புவாய்ந்த மேலோர் நிலையாகும்.''

உண்மைப் புலவர்கள் வறுமையாற் பீடிக்கப்பட்டு உழல்வ ரென்பது பண்டைப் புலவர்களின் வாழ்க்கையிலிருந்து கண்ட முடிபாகும். அதற்கிணங்க நம் பாரதியாரும் வறுமையாற் பிணிக் கப்பட்டுப் பலவித இன்னல்கட்காளாகித் தமது முப்பத்தொன் பதாமாண்டில் இவ்வுலகவாழ்வை நீத்தது தமிழர்கட்கு என்று மழியாத ஒரு பெருங்குறையாகும். பலவித வளந்திகழும் இந்நாட்டின் அருந்தமிழ்ச்சுவை கண்டு செந்தேன் சொரியுஞ் செஞ்சொற் கவிமழை பொழிந்த, கைம்மாறு சிறிதுங் கருதாத புயலனைய இப்பெருந்தகைக்குத் தமிழர் ஆற்றுங்கடப்பாடு அன்ன வரியற்றிய நூல்களை என்றும் போற்றிப் படித்து வருதலேயாம்.

(முற்றும்)

இயற்கையின் காட்சி

எஸ். எஸ். ஹாலாஸ்யம்

நொண்டிச் சிந்து

இயற்கையின் காட்சி சொலவோ!—அதை
இயம்பிடுந் திறனென்ற னாவிற்குளதோ?
வியப்பினுக் களவுமுண்டோ—பல
விந்தைகளு நித்தநித்த நிகழ்ந்திடுங்காண்!

குயவன் திகிரியெனவே—மண்டலக்
கூட்டங்கள் சுழன்றிடுங் கிறுகிறென
வியனுல கனைத்து முய்யக்—கதிரோன்
விரித்தொளி யுதித்தெழுங் காட்சியேகாட்சி!

கீழ்வானம் வெளுத்திருக்கும்—கடலைக்
கிழித்தங்குக் கதிர்முகம் கரித்தே எழும்
பாழான இருளெனும் பேய்—துக்கப்
படமெங்கை தனியறை நுழைதல் போலப்

பாழிடங்க ளோடிமறையும்—அந்தப்
பகலவன் வருகைக்குப் பறையொலி போல்
ஆழநெடுங் கடலலைகள்—அரசன்
ஆணையேற்ற சேனைவெள்ளம் போல எழுங்காண்!

காலையைக் கண்டவுடன்—கருங்
காசமுதல் புள்ளினங்கள் சிறகடித்து
வேலைக்கேகு முழவர் போலும்—மிக்க
வேகமுடன் கூட்டில்நின்றும் பறந்தெழும்பும்.

வேலுடைய முருகன் சேவல்—விசும்பின்
வீரனுக்கு நல்வரவு கூவிமுழங்கும்
நூலைவிரித் திடுவேதம் போல்—மலர்கள்
நாறுநாறாய் நறுமண மெங்குங் கமழும்.

பச்சைப் பட்டு விரித்ததெனப்—படர்ந்த
பசும்புல்லின் நுனியதனில் பனித்துளிகள்
இச்சகமும் விலைமதியா—வைரம்
இழைத்தங்குப் பொருத்தினாற் போல ஒளிரும்.

அச்சமின்றி ஆவினங்கள்—மேய
ஆடுகளுங் கன்றுகளுந் துள்ளித்திரியும்
உச்சிமரக் கிளைகளின் மேல்—ஆயர்
ஊதுகுழல் நாதம்நுகர்ந் துறங்கும்சில.

தெள்ளியநீர் பாயும்நதிகள்—நாதனைத்
தேடியணைந் திடுமுண்மைக் காதலிபோலும்
பள்ளக்கட லோடிக் கலக்கும்—அவற்றின்
பக்கமிரு கரைகளிற் பாயுமடைகள்.

துள்ளிவிழும் மீன்களங்கே—அந்தத்
தோற்றம்வெள்ளி மணியிறைத்தல் போற்றிகழுங் காண்
எள்ளிநமைப் பழிப்பதுபோல்—தவளைகள்
எட்டித்தலை நீட்டிப்போந்து களில்மறையும்.

தண்ணெனவே அடிக்குங்காற்றில்—மன்னனைத்
தாழ்ந்துபணிந் திடுகுடி படைகளெனப்
பண்ணைவயல் தாள்மணிகள்—தரையிற்
படிந்தெழுந் தாடியாடி அசைந்திடுங்காண்.

கண்ணைப்பறித் திடுங்கதலிக்—குலைகளும்
கனிந்துபல தோட்டங்களில் நிறைந்திருக்கும்
விண்ணமுத மிழிந்தது வோ—என
விந்தையுறச் செந்தேனவை சொரிந்திருக்கும்.

செங்கதிரோன் வேகமுடனே—விரைந்து
சென்றுமறைந் திடுங்காட்சிச் செப்பத்தரமோ?
தங்கமதை யுருக்கி வார்த்து—அடித்த
தகடுபோல் தகதகென ஜொலிப்பதைப்பார்.

பாங்குடன் மேற்குத்திசையில்—மிச்க
பளபளப் புடன்வட்ட மிட்டுச்சுழலும்
அங்குற்று நோக்கிடிலோர்—நொடியில்
அற்புதமாய் வண்ணம்பல தோன்றிமறையும்.
(இயற்கை)

சாஸ்திரம்

பிராணிகளும் தாவரங்களும்

மா. ஏ.

பிராணிகள் தாவரங்கள் இவ்விரண்டிற்கும் ஜனனம், ஜீவ ரஸாயனமுறை, வளர்ச்சி, இனப்பெருக்கம் முதலான ஜீவகுணங்கள் இருந்தாலும், சில அம்சங்களில் அவைகள் வித்தியாசப்படும் காரணமாக அவற்றை ஜீவவர்க்கத்தின் இரு பிரிவுகளாக உயிர் நூலோர் பகுத்துள்ளார். அவ்வித்தியாசங்கள் யாவை? உயர்தர ஜீவிகளான விருக்ஷத்தையும், மிருகத்தையும் தாவரமென்றும் பிராணியென்றும் தெரிந்துகொள்வது எளிது. ஆனால் கடற்பஞ்சு, காளான் (*Mushroom*) முதலான தாழ்ந்த ஜீவிகளை அவ்விதம் பிரிப்பது எளிதல்ல; முற்காலத்தில் இருந்த பிராணிசாஸ்திர நிபுணர்களே கடற்பஞ்சை சமுத்திரத்தில் வளரும் செடிகளாகக் கருதினர். தவிர, பூதக்கண்ணாடியால் பார்க்கக்கூடிய சூக்ஷ்மமான சில தாழ்ந்த ஜீவிகளைப்பற்றி, அவைகள் தாவரங்களா அல்லது பிராணிகளாவென்று உயிர்நூலோர்களுக்குள்ளேயே அபிப்பிராய பேதம் இருப்பதிலிருந்து இவ்வித்தியாச நிர்ணயம் எளிதல்ல என்பது விளங்கும். பிற்கூறிய சூக்ஷ்மப்பிராணிகள், பிராணி வர்க்கம் தாவரவர்க்கம் இரண்டிற்குமுள்ள முக்கிய குணங்களை உடைத்தாயிருக்கும் காரணமாக அவற்றைத் தாவரப்பிராணிகள் அல்லது பிரதமஜீவிகள் என்றும் அவற்றிலிருந்தே இவ்விரு வர்க்கங்களும் இரண்டு பிரிவுகளாகப் பரிணமித்தன என்றும் உயிர்நூலோர் கருதுகின்றனர்.

பிராணிகளுக்கும் தாவரங்களுக்கும் உள்ள முக்கியமான வித்தியாசம், அவற்றின் ஆகார முறையிலாகும். ஜீவிகள் அவை உட்கொள்ளும் உணவு பதார்த்தங்களிலிருந்துதான் புரோடோப்ளாஸத்தை உண்டுபண்ணுகின்றன. புரோடோப்ளாஸத்தின் முக்கிய வஸ்து புரதபதார்த்தமாகும். புரதபதார்த்த மில்லாமல்

புரோடோப்ளாஸமுமில்லை, ஜீவியுமில்லை. ஆகவே புரோடோ-ப்ளாஸத்தின் மூலபதார்த்தங்களான கரி, நைட்ரோஜன் முதலானவை ஆகார பதார்த்தங்களில் இருக்கவேண்டியது அவசியம். காளான்கள் தவிர உயர்தரத் தாவரங்களெல்லாம் இவ் வுணவுப்பொருள்களை அவற்றைச் சுற்றிலுமுள்ள ஆகாயத்திலிருந்தும் பூமியிலிருந்தும் வாயுரூபமாகவும் ஜலரூபமாகவும் கிரகிக்கின்றன. ஆகாயத்தில் கரியமிலவாயுவும், பூமியில் ஜலமும் நைட்ரோஜன் கலந்த பொட்டாசியம்நைட்ரேட் முதலான உப்புக்களும் இருக்கின்றன. ஜலமானது, ஜலவாயுவும் பிராணவாயுவும் கலந்த ஓர் ஸம்யோகவஸ்து; கரியமிலவாயு, கரியும் பிராணவாயுவும் சேர்ந்த வஸ்து; பொட்டாசியம் நைட்ரேட் என்பது பொட்டாசி-யம், நைட்ரோஜன், பிராணவாயு முதலானவை சம்பந்தப்பட்ட வஸ்து. மேற்கூறிய சாமான்ய ஸம்யோக வஸ்துக்களிலிருந்து கரி, நைட்ரோஜன் முதலான வஸ்துக்களைக் கிரகித்து புரோடோ-ப்ளாஸத்தை உண்டுபண்ணக்கூடிய சக்தி தாவரங்களுக்குண்டு. ஆனல் பிராணிகளுக்கோ இம்மாதிரியான சாமான்ய வஸ்துக்களிலிருந்து புரோடோப்ளாஸத்தை உண்டுபண்ணும் சக்தி இல்லை; அவற்றிற்கு வேண்டிய கரி, நைட்ரோஜன் முதலானவற்றைச் செடிகளிலும் மற்றப் பிராணிகளிலு முள்ள புரத வஸ்துக்களிலிருந்து தான் கிரகிக்கும். இப் பிரதானவித்யாசத்துக்குச் சில விலக்குகள் இருக்கின்றன. மாம்சபக்ஷணச்செடிகள் என்று கூறும் உயர்தரச் செடிகள் சிறு பூச்சிகளை ஜீர்ணம் செய்யக்கூடியன. வெகு சூக்ஷ்மமான பிராணிகளுள் சில பசுஞ்செடிகளைப்போல் உணவுமுறைகளை அனுசரிக்கின்றன.

தாவரங்களுக்கும் பிராணிகளுக்கும் உள்ள மற்ற வித்தியாசங்கள் மேற்கூறிய முக்கியமான வித்தியாசத்துடன் சம்பந்தப்பட்டனவாகக் கூறலாம். தாவரங்களுக்கு வேண்டிய உணவுபதார்த்தங்கள் அவற்றைச் சுற்றிலும் இருப்பதனல் தாவரங்கள் இடம் விட்டு இடம் போக அவசியமில்லை. மற்றப் பிராணிகளையும் தாவரங்களையும் ஆகாரமாகக் கொள்ளும் பிராணிகள் அவ்விதம் இருந்தால் போதுமா? அவற்றைச் சேகரிக்கும்பொருட்டு அங்குமிங்கும் போகவேண்டுவதவசியமாகிறது. ஆகவே இடப்பெயர்ச்சி பிராணிகளுக்குரித்தான ஓர் குணமாகும். இரை உணவு முதலானவை இருக்கும் இடத்தைத் தெரிந்துகொள்ள கண்கள் காதுகள் முதலானவை பிராணிகளுக்கு இருக்கின்றன. கண்களால் பிரத்யக்ஷமாகப் பார்க்கின்றன; சப்தத்தால் தெரிந்துகொள்ளக் காதுகளும், மோப்பத்தால் அறிய மூக்கும் உதவு

கின்றன. இச்சந்தர்ப்பத்தில் நமது குடலில் ஜீர்ணமான உணவு பதார்த்தங்களிலேயே மிதந்துகொண்டிருக்கும் நாக்குப்புழு, (*Thread worm*) கிரைப்புழு (*Round worm*) முதலான பரஸக்தங்களுக்கு இடப்பெயர்ச்சியும், இந்திரியங்களும் இல்லை என்பது கவனிக்கற்பாலது. இரைகளைப் பிடித்துக் கொல்லவும், உணவு பதார்த்தத்தை நொறுக்கவும் வேண்டிய அமைப்புக்கள் பிராணிகளுக்குண்டு.

தாவரங்களுடைய உருவம் ஆகாயத்திலும் பூமியிலும் விசால மாகப் பரவியிருந்தால் காற்றுடனும் பூமியுடனும் சம்பந்தம் அதிகமாகி ஆகாரத்தைச் சேகரிக்கச் சவுகரியமாகும் அல்லவா? இது காரணமாகப் பூமியினுள்ளே வேர்களும், ஆகாயத்தில் இலை களும் தாவரங்களுக்குப் பரவியிருக்கின்றன. விசாலமான உருவம் இருந்தால் இடப்பெயர்ச்சிக்குப் பிரதிகூலமாகுங் காரணமாகப் பிராணிகளுடைய உருவம் அடக்கமாக இருக்கிறது. பிராணிக ளுள்ளும் சிலவற்றிற்குச் செடிகளுக்குள்ள மாதிரி விசாலமான அகன்ற உருவம் இருக்கிறது. இவை ஓரிடத்திலேயே ஸ்திரமாகப் புதைந்துள்ளன. கடற்பஞ்சையும், சில பவழப்பிராணிகளையும் இவற்றிற்கு உதாரணமாகக் கூறலாம். தாம் இருக்கும் இடத்தில் உள்ள நீரைச் சுழலச்செய்து ஆகாரத்தைத் தம்மிடம் கொண்டு வந்து சேர்க்கக்கூடிய விசேஷ அமைப்புக்களை இப்பிராணிகள் பெற்றிருக்கின்றன.

வீடானது செங்கற்களால் அமைந்துள்ள மாதிரி பிராணியோ அல்லது செடியோ அநேக கணங்களால் அமைந்துள்ளது. கணங் கள் ஜீவிகளுடைய தேகத்தின் மாத்திரைப்பொருள்களாகும். செங்கல் களிமண்ணால் அமைந்துள்ள மாதிரி, கணம் புரோடோ-ப்ளாஸம் என்கிற வஸ்துவால் அமைந்துளது. இக்கணத்தினுள்ளே நியூக்ளியஸ் (கணகம்) என்று கூறும் ஓர் விசேஷ அமைப்பு இருக்கிறது; இது புரோடோப்ளாஸத்தின் மாறுபாடேயாகும். கணத்தினுடைய வாழ்க்கைக்கு இது அத்தியாவசியமான அமைப்பு. சில தாழ்ந்த இராசிப்பிராணிகளுடையவும் தாவரங் களுடையவும் அமைப்பு ஒரே கணத்தினாலாகியது. தாவரகணங் கள் செல்லுலோஸ் என்று கூறும் ஒருவித வஸ்துவால் மூடப் பட்டிருக்கின்றன. தாவரவர்க்கத்தில் புரோடோப்ளாஸந்தின லாகிய கணமானது செல்லுலோஸ் என்று கூறும் பெட்டியி னுள்ளே அடங்கியுள்ளதாகக் கூறலாம். செல்லுலோஸ் வஸ்து வானது கரி, பிராணவாயு, ஜலவாயு முதலானவை கலந்த கரிநீர்ப்

பதார்த்தமாகும். பிராணிகளுடைய கணங்களுக்கு இம்மாதிரியான செல்லுலோஸ் சுவர் கிடையாது.

சாஸ்திர சம்பந்தமான மொழிகள்

கணகம் (நியூக்ளியஸ்)—*Nucleus*
கணம்—*Cell*
செல்லுலோஸ்—*Cellulose*
தாவரப்பிராணிகள்—*Zoophytes*
நியூக்ளியஸ்—*Nucleus*
பரஸக்தம்—*Parasite*
பிரதம ஜீவிகள்—*Protista*
புரதம்—*Proteid*
மாத்திரைப்பொருள்—*Unit*
மாம்சபக்ஷணச் செடிகள்—*Carnivorous plants*
மாவுபதார்த்தம்—*Carbohydrate*

பலநிற வைரங்கள்

நவரத்னங்களில் மிகவும் விலைமதிப்புள்ளது வைரமே. அதனுடைய ஒளி வெள்ளைக்கிரணங்களுடன் பளிச்சென்று இருக்கும். தற்காலத்தில் மற்ற நிறங்களிலும் வைரம் காணப்படுவதுண்டு என ஆராய்ச்சி செய்திருக்கிறார்களாம். சுயம் வைரம் சிவப்பு நிறத்துடன் காணப்படுதல் அபூர்வம். அம்மாதிரி வைரமொன்று தென்ஆப்பிரிக்கா ‘கிம்பர்லி’ வைரச் சுரங்கத்தின் அருகில் அகப்பட்டிருக்கிறதாம்.

அந்தச் சிவப்புவைரம் இடையில் 6 காரட்டுகள் உள்ளதாயிருக்கிறதாம். அதைக் கண்டெடுத்தவர் அதை 900 பவுனுக்கு விற்றாராம். சிவப்புவைரம் சாதாரண ஜனங்களுக்கு அகப்படுவது அபூர்வம். ஆகையால் இதன் விலை சாதாரண ஸ்படிகவைரங்களைக்காட்டிலும் அதிகமாக மதிக்கப்பட்டு எதிர்பாராத கிராக்கியில் விலைபோகிறதாம்.

இம்மாதிரி வர்ண வைரங்களின் வர்ணத்திற்குத் தக்கபடியும், சாதாரணமாகக் கடைகளில் அவற்றின் புழக்கக்குறைவுக்குத் தக்கபடியும் விலைமதிப்பு அதிகமாக ஏறுவது சகஜம்.

சிவப்புவைரத்துக்கு அடுத்தாற்போலுள்ளது பச்சைவைரம். சில வருஷங்களுக்குமுன் பிளீம்ஹூப் (Bloemhof) என்ற இடத்தில் கருப்பு வைரம் ஒன்று அகப்பட்டதாம். அதைச் சாணையில் தீட்டினவுடன் அதனுள்ளே இருப்பது பச்சைநிறமாக இருந்ததாம். இடையில் $1\frac{1}{2}$ காரட்டுகள் இருந்ததால் 370 பவுனுக்கு விலைபோயிற்றாம்.

வைரத்தின் மூலதாது சுத்த கரி (Pure corbon) என விஞ்ஞானிகள் கண்டிருக்கின்றனர். கருப்புநிறமான கரி இம்மாதிரியான கருப்பு, சிவப்பு, பச்சை, வெள்ளை முதலிய கிரணங்களுடன் சுயதேஜோரத்தினங்களாய் இருப்பது இயற்கை அதிசயமே.

குரங்குகளின் பாஷை

ஒ. ப. தேசிகன்

மனிதவர்க்கத்துக்கு அடுத்தபடியாக, விலங்கினங்களில் அறிவிற் சிறந்ததாக அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பது குரங்குவர்க்கமேயாகும். அவைகளிலும் மனிதக்குரங்குகளே மற்றவைகளினும் அதிக அறிவு வாய்ந்திருக்கின்றனவென்பதும், அடுத்தாற்போல் வாலில்லாக்குரங்கு, குட்டைவால் குரங்கு, ஊராங் உடாங் முதலியவைகளைக் கூறலாமென்பதும் அறிஞர்களது கருத்து. அப்படியாயின் சிருஷ்டியிலே மனிதனுக்கடுத்தபடியாக முன்னேற்றமடைந்திருக்கும் குரங்கினங்கள் ஒன்றோடொன்று பேசுகின்றனவா? பேசுமாயின் அப்பாஷையின் தன்மை யாது? என்று அறிய பலர் ஆவலுள்ளவர்களாக இருப்பது சகஜமே. குரங்கினங்களின் வாழ்க்கை யியல்புகளையும், அவைகளின் பேச்சு வார்த்தைகளையும் குறித்து ஆராய்ச்சி செய்யும்முயற்சியில் டாக்டர் ரிச்சார்ட் எல். கார்னர் (*Dr. Richard L. Carner*) என்னும் அமெரிக்கர் சற்றேறக்குறைய தமது வாழ்நாள் முழுவதையும் செலவிட்டிருக்கிறார். அதன்பொருட்டாகவே ஆபிரிக்காக் கண்டத்தின் மிக்க அடர்ந்த வனங்களிலே 25 வருடங்களுக்கு மேற்பட்டதான அஞ்ஞாதவாஸத்தை அவர் வலுவிலே மேற்கொண்டார். அவருடைய அரிய பிரயாஸைகளின் காரணமாக மிக்க அற்புதமான விவரங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

அவர் குரங்கினங்களின் த்வனிபேதங்களையும், பேச்சுக்களையும் பலவேறாக வேறுபடுத்தும் புலமையை அடைந்தவர். அவர் நூற்றுக்கு மேற்பட்ட குரங்கு 'வார்த்தைகளை' (*Simian words*) மற்றவைகளிலிருந்து தேர்ந்தெடுத்து, தொகுத்து வைத்திருக்கிறார். அவைகளில் சற்றேரக்குறைய முப்பது வார்த்தைகளின் பொருள் இன்னதென்று அவருக்குத் தெரியும். அவருடைய இடைவிடா ஊக்கத்தையும், கடுமையான உழைப்பையும் அறிந்திருந்துங்கூட அவருடைய அந்தரங்க சுத்தியையும், அவ்வாராய்ச்சியின் விளைவாகத் தெரியவந்த அரிய விஷயங்களின் மேன்மையையும் ஒப்புக்கொள்ளத் தயங்கிய பலர் இவ்வளவு

கடுமையான பிரயாசையையும் கஷ்டநிஷ்டூரங்களையும் மேற்கொள்ளக்கூடிய அவர் உலகத்தையே மாற்றும் வித்தையில் ஈடுபட்டுவிட்டதாகத் தூற்றிவந்தார்களென்பது ஆச்சரியமாகவேயிருக்கிறது.

டாக்டர் கார்னர் 1920-ஆம் வருடத்தில் காலமானார். தாம் மரணமடைவதற்குச் சிலநாட்களுக்குமுன் அவர் தம்முடைய அனுபவவிசேஷத்தால் கண்டுதெளிந்த ஆராய்ச்சி முடிபுகளை 'பாபுலர் சயன்ஸ்' என்ற விஞ்ஞானப் பத்திரிகையில் எழுதி வெளியிட்டார். டாக்டர் கார்னர் கூறுவதாவது:—

மொழி அல்லது பாஷை என்னும் வார்த்தையைக்காட்டிலும் 'பேச்சு' (*speech*) என்பதே திட்டமான வார்த்தையாக எங்கும் வழங்குகிறது. பாஷை என்னும் பதம் விரிவான அர்த்தத்திற்கு இடங்கொடுக்கக்கூடியது. ஆனால் பேச்சென்பதோ அவ்வாறனதன்று. அப்படியாயின் 'பேச்சு' என்பது யாது?

ஒருவன் தன் மனத்தகத்தே அரும்பும் எண்ணத்தையேனும் உணர்ச்சியையேனும் தன்னைப்போன்ற வேறொருவன் அறிந்து கொள்ளும் விதமாகச் செய்யும் சப்த உச்சரிப்பையே நாம் 'பேச்சு' என்று அழைக்கிறோம்.

இந்தச் சாமானியமானதை அடிப்படையாகக் கொண்டு குரங்கு இனங்களின் பேச்சிலே சிறப்பாகவுள்ள அமிசங்கள் யாவை என்பதை ஆராய்வோம். பல வருடங்களாக மிக்க பொறுமையோடு நான் ஆராய்ச்சி செய்துவந்ததில் எனக்குப் புலனான மிகவும் சாதாரணமான விஷயங்களை விடுத்து முக்கிய உண்மைகளைமட்டுமே ஈண்டு எடுத்துக் கூறுவேன்:

சிறுபிராயந்தொட்டே மிருகங்கள் ஒன்றோடொன்று தமது குறிப்பை யுணர்த்தி வந்திருக்கும் உதாரணங்கள் பலவற்றை நான் கவனித்து வந்திருக்கிறேன். ஆதியில் சிலவருடங்கள் வரையில் இந்தப் பிரச்சனையை மேல்வாரியாகவே நான் கவனித்து வந்தேனாதலின், என் முயற்சிகள் போதுமான பலனை யளிக்கவில்லை. அதன்முடிபுகளும் விளக்கமற்றவையாக இருந்தன. ஆனால் அவை நாளாக நாளாக அபிவிருத்தியடைந்தே வந்தன. அதாவது மிருகங்களின் பாஷையைச் சூழ்ந்திருக்கும் மருமத்தை விளக்க வேண்டுமென்பதே எனது பேரவாவாக இருந்தது. இக்காரியத்தில் நான் வெற்றிபெறுவேன் என்ற விஷயமாக அளவற்ற நம்பிக்கையும் எனக்கு இருந்துவந்தது.

இதனிடையில் நான் முக்கியமான சில ஒலிக்குறிப்புக்களைப் பேச்சுக்கு ஆதாரமானவைகளாகவும் (*Elements of speech*)

மற்றும் பலவற்றை அவ்வாறல்லாதனவாகவும் பிரிவினை செய்தேன். இவற்றில் முற்கூறியவை தாமாகவே வலுவில் உச்சரிக்கப்படும் தன்மையன (*voluntary*). அவை ஏதோ சில குறிப்புக்களையோ தேவைகளையோ உணர்த்துவனவாகக் காணப்பட்டன; ஆனால் பிற்சொன்னவைகளோ தாமாக உச்சரிக்கப்படுவனவல்ல; அவை தற்செயலாகவே உச்சரிக்கப்படும் தன்மையன (*Involuntary and accidental*). அதாவது ஏற்கனவே மனத்திலுள்ளதை வெளிப்படுத்துவனவல்ல. இவற்றினுள் முந்தியவைகளைப் பேச்சுக்காதாரமான சப்தங்களாகவும் (*speech sound*) பிந்தியவர்க்கத்தைச் சேர்ந்தவைகளை யதேச்சையான (*anomalous*) சப்தங்களாகவும் நான் வகுத்தேன்.

ஒருநாள் நான் லின்லினுட்டின் மிருகக்காட்சிச் சாலைக்குச் செல்லநேர்ந்தது. இங்கே ஓர் ராக்ஷதக்குரங்கை (*Mandrill*) வெவ்வேறு இனத்தைச் சேர்ந்த சிறிய குரங்குகள் பலவற்றுடன் அடைத்து வைத்திருந்தார்கள். அந்தக் கூண்டை இரண்டு அறைகளாகத்தடுத்து இரண்டிற்கும் மத்தியில் ஓர் வாயிற்படியைப்போன்ற திட்டியொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த ராக்ஷதக் குரங்கைக்கண்டு மற்றக்குரங்குகளெல்லாம் பீதியடைந்திருந்தனவென்பது பார்த்தவுடனே தெரிந்தது. இந்தச் சிறிய குரங்குகளில் பல அந்தக் குரங்கின் நடவடிக்கைகளையெல்லாம் இடைவிடாது கவனித்துவந்ததுடன், இடையிடையே விசித்திரமான சப்தங்களைச் செய்தவண்ணமிருந்தன. அந்தச் சப்தங்களின் வாயிலாகக் கூட்டிலிருந்த வேறு குரங்குகளுக்கு அது இடைவிடாது ஏதோ செய்தி அறிவித்தவண்ணமாக இருந்த தென்றும் அதைக்கேட்டு அவை அச்சத்தையோ ஆறுதலையோ அடைந்துவந்தனவென்பதும் தெளிவாகப் புலனாயிற்று. அன்றைப்பொழுது முழுவதையும் நான் இக்குரங்குகளினூடே கழித்தேன். முடிவில், 'தம் இனத்தான் ஒருவனிடமிருந்து கிளம்பிய த்வனியின் பொருளை யுணர்ந்துகொண்டு அவ்வொலிக்குறிப்புக்கு ஏற்றவாறாகத் தமது நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ளும் அறிவு அவைகளுக்குண்டு' என்ற முடிவுக்கு நான் வந்தேன். அது முதலாக எனது ஆராய்ச்சிக்குப் புதிய ஆதரவு கிடைத்துவந்தது.

மிருகஜாதியின் பாஷையை வேறுபடுத்துவதிலுள்ள கஷ்டங்கள் பலவற்றிலும் ஓரேமிருகமானது பல சமயங்களில் செய்யும் சப்தத்தின் அளவையும், அதன் பேதாபேதங்களையும் நிஷ்கரிஷை செய்வதுதான் மிகவும் சிரமமானது. அந்தச் சப்தங்

களைச் செய்யுங்கால் அவைகளுடைய தோற்றத்தையும் அங்க சேஷ்டைகளையும் ஊன்றிக் கவனிக்கவேண்டும். அச்சப்தங்களின் விளைவாக எத்தகைய பலன்கள் ஏற்படுகின்றன என்ற விஷயத்திலும் கவனம் செலுத்தவேண்டும்.

முற்றிலும் வெவ்வேறு வகுப்பைச் சேர்ந்த குரங்குகளைப் புதிதாக ஓரிடத்தில் சந்திக்கச்செய்தால், அவைகளில் ஒன்றின் பேச்சு மற்றொன்றுக்கு விளங்குவதில்லை. எனினும் விரைவிலேயே அவை ஒன்றையொன்று உணர்ந்து கொள்வது ஸாத்தியமாகிறது. இதைக் கண்டுபிடிப்பதற்கு எனக்குப் பல நாட்களாயின.

எத்தனையோவிதமான கஷ்டங்களுக்குப் பிறகு நான் வாஷிங்டன் நகருக்குச் சென்று டாக்டர் பிராங்பேகர் (*Dr. Frank Baker*) என்பவருடைய உதவியை நாடினேன். அவர் ஸ்மித்ஸோனியன் கழகத்தில் (*Smithsonian Institute*) வளர்ந்து வந்த இரண்டு குரங்குகளை எனது ஆராய்ச்சிக்கு உபயோகமாயிருக்கும் பொருட்டாகக் கொடுத்தார். ஒரு கிராமபோன் கருவியை நான் என்னுடன் எடுத்துச்சென்றிருந்தேன். அவ்விரண்டு குரங்குகளையும் தனித்தனியாகப் பிரித்து ஒன்றையொன்று பார்க்கவொட்டாமலும், ஒன்றன்கூச்சலை மற்றொன்று கேட்கவொட்டாமலும், இரண்டு தனி அறைகளில் பூட்டிவிட்டேன். அதன்பிறகு கிராமபோன் 'ஸிலிண்ட'ரில் முதலில் ஆண் குரங்கினுடைய பேச்சுக்களைப் பதிவு — 'ரிகார்டு' — செய்து கொண்டேன்.

இவ்வாறு பதிவு செய்த அந்த த்வனிக்குறிப்புக்களைப் பெண்குரங்கு கேட்கும்படியாகச் செய்வித்தேன். அதைக்கேட்டதும் அதற்கு முதலில் மிக்க வியப்புண்டாயிற்று. அப்புறம் முகத்தில் அச்சமும் கவலையும் மாறிமாறித் தோன்றின. அது ஓட்டமாக ஓடிவந்து கிராமபோன்குழாயின் உள்ளும் புறமும் ஊன்றிப் பார்த்துத் தன்கையை அதனுள்ளேவிட்டு, சரமாரியாக ஏதேதோ வருஷிக்க ஆரம்பித்தது.

அப்பால் பெண்குரங்கின் குரலையும், வார்த்தைகளையும் முன்போலவே ('ரிகார்டில்') பதிவு செய்து, அவை ஆண் குரங்கினிடம் காட்டப்பட்டன. இதைச்செவியுற்றதும் அதனுடைய உற்சாகம் கட்டுக்கடங்கவில்லை. அதற்குத் தன்னையும்மீறிய உற்சாகம்கிளம்பி மிக்க படபடப்புடன் உரத்த கூச்சலிட்டு முன்னிலும் பலமான ஆரவாரத்தைச் செய்யத்தொடங்கியது. இவ்வாறாக த்வனிகளை உயர்த்தியும் தாழ்த்தியும் துரிதப்படுத்தியும் மெதுவாக்கியும் பல்வேறு விதங்களாகப் பரீக்ஷைசெய்து பார்த்ததில் அவை

முற்றிலும் ஒன்றையொன்று உணர்ந்துகொண்டன வென்பதை யாதொரு சந்தேகத்திற்கு மிடமின்றி நான் அறிந்துகொண்டேன். டாக்டர் பேகரும் என்னைப்போலவே அபிப்பிராயப்பட்டார்.

அதன்பிறகு நான் பல்வேறு குரங்கினங்களையும் அவற்றின் பேச்சுக்களையும் குறித்துஆராயலானேன். முடிவில் இப்பரீக்ஷைக்கு உபயோகமாக இருக்கும் பொருட்டுப் பழுப்பு நிறமுள்ள (*Capuchin*) "காபுசின்" குரங்கு ஒன்றைத் தேர்ந்தெடுத்தேன். குரங்கினங்களிலே அதுதான் மிக்க வாயாடி. இவ்வாராய்ச்சியினிடையே எனக்கு ஓர் விஷயம் புலனாயிற்று. அதாவது சில சப்தங்களை மற்றவைகளைக் காட்டிலும் அவை அடிக்கடி உபயோகிக்கின்றனவென்பதே. ஆதலின் அதைக்குறித்து அதிகக் கவனம் செலுத்தவேண்டியதாயிற்று. இவ்விதச் சப்தமொன்றைத் தாமாக உச்சரிக்கும்போதேனும் மற்றவைகள் செய்யும்போதேனும் அவைகளுடைய அங்கசேஷ்டைகளையும் இதர நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனித்துவந்ததனின்றும் அவைகளின் பொருள் யாதாயிருக்கக்கூடுமென நான் ஒருவாறு அறிந்துகொள்வதற் கேதுவுண்டாயிற்று.

இவ்விஷயமாக நான் மேற்கொண்ட வழியோ மிகவும் சுலபமான தொன்றும். சாதாரணமாக, யார்வேண்டுமானாலும் அதைப் பரீக்ஷித்துப் பார்க்கலாம். ஸெண்டிரல்பார்க்கிலிருந்த நானாவிதமான குரங்குகளிடையே, இளம்பிராயமான 'காபுசின்' குரங்கு ஒன்றைப் பொறுக்கியெடுத்து, மேன்மேலும் என்பரீக்ஷைகளைத் தொடர்ந்து நடத்தலானேன். முதலில் அதனுடைய த்வனியும், உச்சரிப்பும் மிகவும் தெளிவாக ஒரு 'போனகிரூப்' யந்திரத்தில் பதிவு செய்யப்பட்டது. இந்த மாதிரியான 'ரிகார்டுகள்' பல எடுக்கப்பட்டன. அவை ஒவ்வொன்றிலும் நான் மிகவும் முக்கியமானவையாகக்கருதிய சப்தங்கள் அடங்கியிருந்தன. இந்த 'ஸிலிண்டர்களை' ஸின்ஸினாட்டின் மிருகக்காட்சிச் சாலையிலுள்ள அதேவர்க்கத்தைச் சேர்ந்த குரங்குகளின் சமீபத்தில் வைத்து, அதனின்றும் வெளியான த்வனிகளை அவைகள் கேட்குமாறு செய்விக்கப்பட்டது. அதேகாலத்தில் அவற்றின் நடத்தைமுழுவதும் ஒன்று விடாது குறித்துக் கொள்ளப்பட்டது. அதற்குப் பிரதியாக அக்குரங்குகள் அளித்த பதிலை இரண்டாவது இயந்திரத்தில் பதிவு செய்துகொண்டோம். இந்தப் பதிலும் முற்சொன்ன குரங்கினிடம் காட்டப்பட்டதும் அதனுடைய நடத்தையிலும் விசேஷ கவனம் செலுத்தப்பட்டது.

இம்மாதிரியாகச் சற்றேறக்குறைய 20 'ரிகார்டு'களுக்கு மேல் தயாரிக்கப்பட்டன. அந்த அந்தச் சப்தங்களை உச்சரிக்கும் போதும் கேட்கும்போதும் குரங்குகளின் அங்கசாடைகளும் மற்ற நடவடிக்கைகளும் ஒன்று விடாமல் எழுதிக்கொள்ளப்பட்ட பிறகு இந்த 'ரிகார்டுகள்' யாவற்றையும் சாவகாசமாக ஆராய்ந்து மற்றும் பலவற்றுடன் ஒப்புநோக்கி, இவற்றினிடையே முக்கிய மானவையாகக் காணப்பட்ட சில சப்தங்களின் உட்கருத்தை (பொருளை) விளக்கத் தொடங்கினேன்.

இந்த 'ரிகார்டுகள்' வாயிலாகவன்றி நான் ஏற்கனவே அனு பவபூர்வமாகத் தெரிந்துகொண்ட விஷயங்களைக்கொண்டு சிகாகோ நகருக்குச்சென்று இந்தப் பரிசோதனைகளைப் பின்னும் விரிவான முறையில் நடத்திவந்தேன். ஆங்குப் புதிதாகப் பல 'ஸிலிண்டர்கள்' தயாரிக்கப்பட்டன. அதன்பிறகு நியூயார்க்குப் பட்டணத்தில் இந்தப் பரீக்ஷைகள் மேன்மேலும் விஸ்தாரமான அளவில் தொடர்ச்சியாக நடைபெற்றுவந்தன.

'போனகிருப்' யந்திரத்திலுள்ள சிற்சில சாதனங்களின் உதவி யால் அந்த அந்த சப்தங்களின் அளவைப் பெருக்கியும் தாழ்த் தியும் வேகமாக்கியும், தலைகீழாக மாற்றியும் மற்றும் பல்வேறு விதங்களாக அந்த அந்த த்வனிகளை நன்கு ஆராய்ந்து பார்க்கத் தீர்மானித்தேன். இவ்விதமுயற்சிகளின் பயனாக, சங்கீத த்வனிகள் என்று நாம் ஒருவாறு பெயரிட்டழைக்கக் கூடிய இசைச் சொற்களுக்கும் மற்றப்படி சாதாரணமாய் வழங்கும் வாய்ச் சொற்களுக்குமுள்ள பேதம் வெளியாயிற்று. இந்த வித்தியா சத்தை, நம்மைக்காட்டிலும் செவிப்புலன் உதவியை மிகுதியும் நுட்பமாக வாய்க்கப்பெற்ற குரங்கினங்கள் மிகவும் சீக்கிரமாகத் தெரிந்துகொண்டுவிடுகின்றன.

அப்போதுக்கப்போது இந்த அகராதியில் புதியபுதிய வார்த்தைகள் கண்டுபிடித்துச் சேர்த்துக்கொள்ளப்பட்டன. தவிர வும் இந்தப் பரிசோதனைகளை வெவ்வேறு வகுப்பைச் சார்ந்த வானரங்களைக் கொண்டும் நடைபெறுவதற்கு விசேஷமான பிரயத் தனங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. முடிவில் ஸின்ஸினாட்டின் மிருகக்காட்சி சாலையிலுள்ள சிம்பன்ஸி (*Chimpanzee*) குரங்கு களின் வாயிலாக ஓர்விஷயம் மிகவும் தெளிவாகப் புலனாயிற்று. அதாவது, குரங்கினங்களிலே உயர்வகுப்பைச் சேர்ந்த பெரிய குரங்குகளுக்கிடையே வழங்கிவரும் பாஷையே உயர்தரமான தென்று ஏற்கனவே நான் கருதிவந்திருப்பது தவறல்லவென்பது தான் அம்முடிவு. இவ்வெண்ணம் உறுதிப்படவும் குரங்குவர்க்கத்

தில் மிகப் பெரியவைகளான 'கொரில்லா' (*Gorilla*), சிம்பன்ஸி ஆகிய வர்க்கங்களை அவற்றின் யதேச்சையான நிலைமையில், அதாவது, அவைகளுக்கு இயற்கையாகவுள்ள வாசஸ்தலங்களிலேயே ஆராயவேண்டுமென்ற தூண்டுதல் எனக்கு ஏற்பட்டது.

ஆப்ரிக்காவின் உஷ்ணப்பிரதேசமான வனங்களுக்கு அடுத்தடுத்து ஏழுமுறை நான் பிரயாணம் செய்த வரலாறுகளை இச்சிறிய கட்டுரையின் அளவிற்குள்ளாகச் சங்கிரகமாகக்கூட எழுதுவது சாத்தியமல்ல. சற்றேறக்குறைய இந்த 27 வருடகாலம் முழுவதிலும் நான் வனங்களிலேயே என்காலத்தைக் கழித்திருக்கிறேன். என்னுடைய வாசஸ்தலத்தில் 39 விதமான மனிதக் குரங்குகளை (*Apes*) நான் வளர்த்துவந்ததுமன்றி, மற்றும் பலவேறு வர்க்கங்களை அவற்றின் யதேச்சையான நிலைமையிலேயே ஆராய்ச்சிசெய்தும் வந்தேன்.

ஆப்ரிக்காவின் மிகவும் அடர்ந்த காடுகளில் தன்னந்தனியாக ஓர் உதவியுமின்றி மக்கள் ஸமூகத்தின் சம்பந்தமில்லாமல், என்சொந்த ஜாதியாரின் முகதரிசனங்கூடக் கிடைக்க முடியாத நிலைமையில் என்னைப்போலவே தன்னுடைய ஜாதியாரின் சகவாஸத்தினின்றும் பலாத்காரமாகப் பிரிக்கப்பட்ட மனிதக்குரங்கு ஒன்றை என்னுடைய தோழனாக அடையப்பெற்றேன். நாங்கள் எவ்வளவு விரைவாகப் பரஸ்பரம் ஒருவரையொருவர் உணர்ந்துகொள்ளத் தெரிந்துகொண்டோம் என்பது ஆச்சரியத்தினும் ஆச்சரியமாகும். இந்த அஞ்ஞாதவாஸத்தில் நான்கண்டு தெளிந்தவிஷயங்களை விரிவாகக்கூறுமுன் அடியிற்கண்ட முக்கியமான அமிசங்களைக் குறிப்பிடுவது இன்றியமையாததாகும்.

போனகிராப் யந்திரத்தின் வாயிலாகச் செய்த பரிசோதனைகளால் வானரஜாதியில் உயர்வகுப்பைச் சேர்ந்தவைகளின் பாஷையில் சொற்கள் அதிகமாகக் காணப்படுகின்றனவென்பது முன்னமே பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அந்தச்சொற்கள் கீழ்வகுப்பைச்சேர்ந்த மற்றவைகளினும் ஒரே சீராகவும், தெளிவாகப் பொருளை யுணர்த்தக் கூடியனவாகவும் இருக்கின்றன. மனிதனுக்குக் கீழ்ப்பட்ட விலங்கினங்களில் சிம்பன்ஸி இனத்தைச்சார்ந்த குரங்குகளினிடையே இந்த அபிவிருத்தியானது குறிப்பிடத்தக்கதாகக் காண்கிறது. அடுத்தபடியாகக் குரங்கினங்களிலே சப்தம் அல்லது வார்த்தைகளை உச்சரிக்கும் விதமும், அவற்றினுடைய தன்மையும் நாம் பேசும் மொழியையே பெரிதும் ஒத்ததனவாக இருக்கின்றனவென்பதும் குறிப்பிடத்தக்கது. அவற்றினிடையே,

அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ முதலிய உயிரெழுத்துக்களும் அவைகளின் உயிர் மெய்யெழுத்துக்களும் ஸ்பஷ்டமாகத் தெரியவருகின்றன. ஒவ்வொரு குரங்கும் மேற்கூறிய அக்ஷரங்களையோ சப்தங் களையோ உச்சரிப்பதாகத் துணிந்துகூற முடியாதாயினும் சிம்பன்ஸி குரங்குகளைப் பொறுத்தவரையில் யாதொரு சந்தேகமு மின்றி உறுதியாகக் கூறலாகும். இன்னும் நமது நெடுங்கணக் காலும், மொழியாலும் தெரிவிப்பதற் கியலாத வேறுபல ஒலி பேதங்களும் உண்டு.

மிருகங்களின் ஒலிக்குறிப்புக்கள் அனைத்தையும் நம்முடைய நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களின் வாயிலாக எடுத்துக்காட்டு வதும் பெயர்த்து எழுதுவதும் ஒருபொழுதும் ஸாத்யமன்று. எனினும் அவைகளை உயிரெழுத்துக்களாகவும், மெய்யெழுத்துக்க ளாகவும், ஒருவாறாக உருவகப்படுத்திக் காட்டலாகும்.

மேற்கூறிய அமிசங்களைக் கூர்ந்து நோக்குங்கால், அவை பாஷாவளர்ச்சியின் சரித்திரத்திலே ஓர் குறிப்பிட்ட மாறுதல் நிலையினையே காட்டுகின்றன என்பது தெளிவாகும். அன்றியும் சரீர அமைப்பில்மட்டுமேயன்றி பாஷாவளர்ச்சியிலுங்கூட மனிதக் குரங்குகள் மானிடவர்க்கத்தைப் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன என்ற கூற்றுக்கு அவை அரண்செய்கின்றன. மேலும் குறிப் பிடத்தக்க மற்றொரு விசேஷம் யாதெனில் குரங்குவர்க்கத் தின் ஓர் பிரிவினால் உச்சரிக்கப்படும் பேச்சுக்களின் கருத்தை, அதேவர்க்கத்தைச் சேர்ந்த ஏனையகுரங்குகள் நன்றாக உணர்ந்து கொள்வதுடன் அவ்வாறு உணர்த்தப்படும் குறிப்புக்களுக்கேற்றவா றாகவே செயலும் புரிவதால் அந்தந்த த்வனிகளுக்குக் குறிப்பாக இவ்விதமான அர்த்தம்தான் உண்டு என்று நாம் ஊகிப்பது தவறாகாது. மனிதவர்க்கத்தில் ஒருவரோடொருவர் ஸந்தித்து, உறவாடி, சம்பாஷிப்பதற்குப் பாஷை எவ்வளவு இன்றியமை யாததாக உள்ளதோ, அவ்வாறாகவே விலங்கினங்களினின்றும் வெளிப்படும் சிற்சில ஒலிக்குறிப்புகள் அவ்விதமான தேவையையே பூர்த்திசெய்கின்றன வென்று நாம் துணிந்து கூறமுடியும்.

மேலும் ஒரு குரங்கு, தனிப்பட்ட ஒரு நபரையேனும் கூட் டத்தையேனும் குறித்துச் செய்யப்படும் சப்தக்குறிப்புக்கு உத் திரமாக அவ்வாறு எதிர்பார்த்த பிரதிபலன் யாதும் ஏற்படாத பக்ஷத்தில் அப்படி கோரி நிற்கும் பலன் கிட்டும்வரையில் அதே சப்தத்தையே மீண்டும் மீண்டும் தொடர்ச்சியாக அது உச்சரிக் கின்றது என்பதும் கவனிக்கத்தக்கது. அதனின்றும் அந்தஅந்த சப்தத்திற்கும் பிரத்தியேகமாக ஓர் பொருளுண்டு என்னும்

விஷயத்தை அதை உச்சரிக்கும் ஆஸாமி நன்ருகத் தெரிந்து கொண்டிருப்பது வெளிப்படை. தவிரவும் வானரங்கள் தம் முடைய சகாக்களோடு இராமல் தனித்திருக்கும்போது, இவ்வித மான சப்தங்களை யொருபொழுதும் செய்வதேயில்லை.

ஒரு குரங்கானது தனது குரலோசையை ஏற்றியும், தாழ்த் தியும் சமயத்திற்குத் தக்கவாருக அளவறிந்து உபயோகிப்பதால், தன்னினத்தாரோடு உறவாடுவதற்கு அஃதோர் சாதனமென்பதை அது உணர்ந்துகொண்டிருக்கிற தென்பதில் ஐயமில்லை. அத னின்றும் தனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துவதற்கு அடிப்படையான சிந்தனைசக்தியும் பேச்சுத்திறனும் அதற்கு இயற்கையாகவே அமைந்து இருக்கின்றனவென்பதும் புலனுகாமற் போகாது.

விலங்கினங்களிலாகட்டும் மனிதவர்க்கத்திலாகட்டும் அந்த அந்த ஜாதியின் பாஷையிலடங்கியுள்ள சொற்கள், அந்த அந்த ஜாதியின் தேவைகளைக் கொண்டே அளவிடப்படுகின்றன. மிருகங்களின் பாஷை என்ற பெயரினல் நாம் அழைக்கும் சப் தங்கள் அல்லது ஒலிக்குறிப்புக்கள் பெரும்பாலும் தனித்தனியான சப்தங்களே. அவைகள் நீண்ட தொடர்ச்சியான வாக்கியங்க ளாகப் பிணைக்கப்படக் கூடியனவல்ல; எனினும் வார்த்தைகள் மிகவும் குறைவாகவிருக்கும் காரணத்தைக் கொண்டே அந்தப் பாஷையினல் யாதொரு பயனுமில்லையென்று எளிதாகப் புறக் கணித்துவிட முடியாது. உள்ளத்தின் கருத்தை வெளிப்படுத்து வதில் ஓர்சொல் அல்லது வார்த்தையே மிகவும் குறுகிய அளவையாகும்.

டாக்டர் கார்னர், டார்வின் சாஸ்திரியின் பரிணும வாதத்தை (*Theory of Evolution*) அப்படியே ஒப்புக்கொள்ளுபவர். சிருஷ்டியில் மற்ற ஜீவன்களைக் காட்டிலும் குரங்குகளே மனி தனைப் பெரிதும் ஒத்திருப்பதால், அவைகளினின்றும் உலகில் தோன்றிய மனிதன் தனக்கு இன்றியமையாத பாஷாவளர்ச்சிக்கும் அவைகளையே ஏன் ஆதாரமாகக் கொண்டிருக்கக்கூடாது என்று அவர் வினவுகிருர்.

மனிதர்கள் பாஷையின் துணைகொண்டு எதத்கைய காரியங் களைச் சாதித்துக் கொள்ளுகிருர்களோ, அம்மாதிரியாகவே குரங் கினங்களும் தமது குரலின் உதவியைக்கொண்டு தமது கோரிக்கை களை நிறைவேற்றிக்கொள்வது ஸாத்யமாயின், அதையும் ஓர் விதத் தில் பாஷை யென்று நாம் ஏன் அழைக்கக் கூடாது?

குரங்குகளின் பாஷையில் அடியிற்கண்ட வார்த்தைகளை டாக்டர் கார்னர் துரை அடையாளம் கண்டுபிடித்திருக்கிறார்:

'வியூ' (*Weuh*) என்பதற்கு அதென்னவென்றுபொருள். அதையே சற்று மெதுவாக உச்சரித்தால் அஃதோர் வேண்டுகோளையுணர்த்தும். —'கியூ' (*Ki-uh*) என்னும் வார்த்தை யாதேனுமோர் தேவை அல்லது விருப்பத்தைக் குறிப்பிடும்.—'அர்-ர்-ர்' *Ahr-r-r*)=என்பது வரப்போகும் ஆபத்தைக் குறிக்கும் முன்னச்சரிக்கை.—'ஔர்-ஹ்' (*Our-h*)=நீ எங்கேயிருக்கிறாய்?—'யூ-ன்ஹ்' (*Eu-nh*)=இங்கேயே.—'க்ரி-இ' (*Kiri-i*)=எங்கே?—'க்ஷயி' (*Qhui*)=ஏதாவது ஒரு கோரிக்கையை யறிவிப்பது. 'கிய்-யு' *Khi-iu*)=ஜாக்கிரதை, நாலாபக்கமும் பார்.—'கிய்-யு-ஹௌ' (*Keu-iu-hou*)=பின்னடையுமாறு அவசரஉத்தரவு அறிக்கை.—'ச்சு' (*Chu-h*)=கவனமாகக் கேள்.

டாக்டர் கார்னருக்குச் சிம்பன்ஸி குரங்குகளிடத்திலேயே மிகுந்த பிரியம். வானரஜாதியில் மற்றவைகளைக் காட்டிலும் அதிகமான வார்த்தைகள் அவைகளுக்குத் தெரியும் என்று அவர் உறுதியாக நம்பிவந்ததே அதற்குக் காரணமாகும். அவைகளுடைய பாஷையையும், பழக்கவழக்கங்களையும் அவர் மிக்க நுட்பமாக அறிந்திருந்ததாகவே கூறிவிடலாம். ஒவ்வோர் சமயம் சிம்பன்ஸி குரங்குகளை அடைத்திருக்கும் கூண்டுகளின் சமீபத்தில் நின்றுகொண்டு அவர் திடீரென்று அவைகளுக்குக் கேட்கும்படியாக 'அக், அக், அக்' என்று சப்தம்செய்வார். அந்தச் சப்தம் கேட்டதும் குரங்குகள் உறங்கிக் கொண்டிருந்தாலும்கூட, நித்திரை கலைந்து ஓடிவந்து கூட்டின் இருப்புக்கம்பிகளைப் பிடித்துக் கொண்டே அவருக்குப் பதிலிறுப்பதுடன், மிக்க ஆழ்ந்த வியப்புடன் அவரை இமைகொட்டாது நோக்குமாம்.

டாக்டர் கார்னர். 'மனிதக்குரங்கும், மற்றக்குரங்கினங்களும்' என்ற அரிய புத்தகமொன்றை எழுதியிருக்கிறார். அப்புத்தகத்தில் தாம் மிகவும் அருமையாக வளர்த்துவந்த 'மோஸஸ்' என்னும் சிம்பன்ஸி குரங்குக்கு இங்கிலீஷ்பாஷையைப் போதிப்பதற்காகத் தாம் எடுத்துக்கொண்ட முயற்சியைப்பற்றி அவர் வருணிக்கிறார். முதலில் 'மம்மா' (*Mamma*) என்ற வார்த்தையையும், அதற்குப் பின் 'நெருப்பு' என்பதற்குச் சரியான பிரெஞ்சு வார்த்தையாகிய 'ப்யூ' (*fuw*) என்ற வார்த்தையையும் சொல்லிக்கொடுத்தார். பல நாட்களுக்குப்பின் மோஸஸ் 'ப்யூ' என்றவார்த்தையை உச்சரிப்பதற்குக் கற்றுக்கொண்டதாம். ஆனல் 'ப்யூ' என்பதற்குப் பதிலாக 'வ்யூ' (*Vew*) என்று உச்சரித்ததாம். ஒவ்

வொருநாளும் அவர் மணிக்கணக்காக மோஸஸைத் தம்மடிமீ திறுத்தி, 'ப்யூ' என்று சொல்லச்செய்வார். அதே சமயத்தில் அதன் பொருளையும் உணர்த்துவதற்காக நெருப்பையாவது, ஓர் கிழித்த வத்திக்குச்சியையாவது காட்டுவாராம். முடிவில் அவருடைய விடாமுயற்சியும், பொறுமையும் பலனளிக்காமற் போகவில்லை. மோஸஸ் நெருப்பு எரிவதைக் கண்டாலும் அல்லது விளக்கேற்றுவதைப் பார்த்தாலும், 'ப்யூ' என்று சொல்ல ஆரம்பித்தது. இதனின்றும் புதிய வார்த்தைகளைக் கற்றுக்கொள்ளும் ஊகசக்தியும், திறமையும் சிம்பன்ஸி குரங்குகளுக்கு உண்டு என்பதை அவர் அனுபவ பூர்வமாக அறிந்துகொண்டார். மோஸஸ் இன்னும் கொஞ்சகாலம்வரையில் உயிரோடிருந்திருந் தால் அதற்குக் குறிப்பாகச் சில ஆங்கில வார்த்தைகளை அவற் றின் பொருளுடன் சொல்லிவைத்திருக்கமுடியும் என்று அவர் உறுதியாக நம்பியிருந்தார்.

பொதுவாகக் குரங்குகள் மாத்திரமேயல்ல, விலங்கினங்கள் அனைத்தும் ஏதோர்வழியாகத் தம்முடைய கருத்துக்களைத் தம்மினத்தைச்சேர்ந்த மற்றப் பிராணிகள் அறிந்துகொள்ளுமாறு செய்யும் திறனைப் பெற்றிருக்கின்றன என்பதில் ஸந்தேகமில்லை. முக்கியமான அமிசங்களில் வாய்மொழியாகப் பேசுவதற்கும் அதற்குமுள்ள பேதம் குறிப்பிடத்தக்கதாக இருந்தபோதிலும், அது அந்த அந்த வகுப்பு ஜீவன்களின் தேவையைப் பூர்த்தி செய்கிறது என்பது ஒருவராலும் மறுக்க முடியாது.

மனிதரின் மூளை

காரல்பியர்சன், டாக்டர் ரேமண்டு பியரி என்னும் இருவர் சாஸ்தி ரப்படி பரீட்சைசெய்து பார்த்ததில், சராசரியில் பெண்களின் மூளையின் எடை 44 அவுன்சுகளும், ஆண்களின் மூளையின் எடை 49 அவுன்சுகளும் இருக்கின்றனவென்று கூறுகின்றனராம். ஆனல் மூளை எடை அதிகமிருப்பத னலேயே அதிக புத்திசாலி என்று சொல்லிவிட முடியாதாம். ஏனென் றல், பிரான்சு தேசத்துக் கீர்த்திவாய்ந்த ஓர் ஆசிரியரின் மூளை 38 அவுன்சுகள் தானிருந்ததாம். இந்த நிபுணர் பொதுவாக ஓர் விதிசொல்லுகிறர். அதா வது, 30 அவுன்சுகளுக்குக் குறைவாகவாவது, 75 அவுன்சுகளுக்கு அதிகமாக வாவது மூளையின் எடை இருப்பவர்கள் முழு முட்டாள்களாகத்தானிருப் பார்கள் என்று கூறுகிறர். மற்றொரு விஷயத்தையும் கண்டு பிடித்துச் சொல்லுகிறர். அதாவது, மானிடர்களுக்கு இரண்டு கண்கள் இரண்டு காதுகள் இருப்பதுபோல், இரண்டு மூளைகளுமிருக்கின்றனவாம். ஒன்று கெட்டுப்போய்விட்டால், மற்றென்று வேலை செய்கிறதாம். இந்த இரண்டு மூளைகளும் ஒரேமாதிரியானவை. ஒரே அளவு, நிறை, குணம் பொருந்தி யிருக்குமாம்.

—ஜெயபாரதி.

வில்லியம் ஹெர்ஷல்

'வில்லி'

காப்பர்னிகஸ் பெற்ற மேனாட்டு வானசாஸ்திரம், கெப்ளர் கலிலியோ, டெஸ்கார்டிஸ் முதலியோரால் வளர்க்கப்பட்டு பேரறிஞர் நியூட்டனால் வாலிபதசையடைந்தது. "கிரகங்களின் சலனகதியைப் பற்றிய விஷயங்களை முற்றிலும் அறிந்துகொண்டோம்; நியூட்டன் விதிகளாலும், கணிதசாஸ்திர உதவியாலும் கிரகங்களின் எக்காலநிலையையும் துல்யமாகக் கணக்கிட்டறியலாகும்; இனிப் புதிதாகக் கண்டறியக்கூடியது வானசாஸ்திரத்தில் யாதுளது!" என்று மேனாட்டு விஞ்ஞான சாஸ்திரிகள் எண்ணலாயினர். அம்மனோநிலை காரணமாக நியூட்டனுக்குப் பிறகு பல வருடங்கள்வரை விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி பௌதிக சாஸ்திரத்தின் வேறுகிளைகளில் சென்றிருந்தது. அந்நிலையை மாற்றி, வானசாஸ்திரத்தில் மேலும் அறியவேண்டுவன உள என்பதை எடுத்துக்காட்டிப் புதிதாக ஒருகிரகத்தைக் கண்டு பிடித்து, நட்சத்திர வானசாஸ்திரத்திற்கு அடிகோலிச் சென்றவர் வில்லியம் ஹேர்ஷல் (*William Herschel*) ஆவர்.

இவர் கி. பி. 1738-ஆம் ஆண்டில் ஹானோவர் என்ற நாட்டில் பிறந்தார். இவருடைய தந்தையாராகிய ஐசக் என்பவர் சங்கீதப் பயிற்சியுடையவர்; இங்கிலாந்து அரசரது படையின் ஒரு பகுதியில் வாத்தியம் வாசிக்கும் தொழிலில் அமர்ந்திருந்தார். இவருடைய தாயார் குடும்பத்திற்குத் தேவையானவற்றைக் கவனிப்பதிலும் வீட்டு வேலைகளைச் செய்வதிலும் சமர்த்தர்; தம்மக்களுக்குக் கல்வி சங்கீதம் முதலியன பயிற்றுவிப்பதில் விருப்பமற்றவர். ஆயினும் தந்தையார் தம் பிள்ளைகளுக்குக் கல்விகற்பித்துச் சங்கீதமும் பயிற்றுவித்தார்; பெண்களுக்கும் சிறிது சங்கீதம் கற்றுக் கொடுத்தார்.

வயதுவந்தபிறகு வில்லியம் ஹெர்ஷல் தந்தையாரைப்போலவே ஒரு படைப்பகுதியில் வாத்தியம் வாசிக்கும் தொழிலில் அமர்ந்தார். அப்படை ஹானோவரை விட்டு இங்கிலாந்து சென்றது; அப்பொழுது இவரும் இங்கிலாந்து சென்றார். இரண்டு

வருடத்தில் அப்படையினின்று விலகிக் கொண்டார்; அப்பொழுது இவருக்கு வயது பத்தொன்பது. விரும்பியவர்களுக்குச் சங்கீதம் பயிற்றுவித்து அதனால் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு வாழ்ந்துவந்தார். சில வருடங்கள் இவ்வாறு கழிந்தபின் 'பாத்' என்றவிடத்தில் சங்கீத ஆசிரியராக அமர்ந்தார். 1763-ஆம் வருடத்தில் இவருடைய தந்தையார் இறந்தபின், இவருக்கு இளைய சகோதரரான அலெக்சாண்டர் என்பவரும், சகோதரி கரோலைன் என்பவரும் ஹானோவரைவிட்டு நீங்கி இங்கிலாந்திற்கு வந்து இவருடன் வசிக்கத் தொடங்கினர். கரோலைன் ஆங்கிலமும் சங்கீதமும் கற்றுக்கொண்டும், வீட்டு வேலைகளைக் கவனித்தும், வரவு செலவு கணக்கு எழுதியும் வந்தார். இவ்வம்மையார் நமது வானசாஸ்திரிக்கு மிகவும் உதவியாயிருந்தார்.

சிறுவயதிலேயே வானசாஸ்திரத்தில் இவருக்குச் சிறிது விருப்பமுண்டு. ஆயினும் ஒரு தூரதரிசனியால் (*Telescope*) வானத்திலுள்ள கோளங்களை ஒருநாள் பார்த்தபிறகே வானசாஸ்திரத்தால் இழுக்கப்பட்டார். சங்கீதத்தில் மேம்பட்டு, அதன் சுவையை அநுபவித்துவந்த ஒருவரைத் தமக்குத் தொண்டுபூண் டொழுகும்படி வானத்திலுள்ள கோளங்கள் செய்தமையால் அவற்றிற்கு அதிக வசீகரசக்தியிருக்கவேண்டுமென்று அறியலாகும்.

உயர்ந்த பெரிய தூரதரிசனிகள் அக்காலத்தில் கிடைக்கவில்லை; கிடைப்பனவற்றிற்கும் அதிகவிலை கொடுக்கவேண்டியிருந்தது. ஆதலின் வில்லியம் ஹெர்ஷல் தாமே தூரதரிசனிகளைச் செய்துகொள்வதென்று நிச்சயித்தார். அதற்குத் தேவையான கருவிகளைச் சேகரித்தார்; ஓய்வு நேரங்களைக் கண்ணாடிகள் வார்ப்பதும், அவற்றை மெருகிடுவதுமாகக் கழித்தார். இவ்வேலையில் இவருடைய சகோதரி கரோலைன் இவருக்கு மிகவும் உதவிசெய்து வந்தார். பல மணி நேரங்கள் தொடர்ந்து ஒரு கண்ணாடியை மெருகிடவேண்டிவரும்; இவ்வேலையே கருத்தாக இவர் இருப்பர். அக்காலங்களில் இவ்வம்மையாரே இவருக்கு ஆகாரத்தை ஊட்டி, பொழுது போக்கச் சில கதைப்புத்தகங்களை வாசித்துவந்தார்.

தொடக்கத்தில் கண்ணாடிகளெல்லாம் சரியாக அமையவில்லை. நூற்றுக் கணக்கானவை வீணாயின. ஆயினும் இவை செய்வதில் அடைந்த அநுபவமே பிற்காலத்தில் 20 அடி, 40 அடி தூரதரிசனிகள் செய்வதற்குத் துணையாயிற்று. தாம் செய்தவற்றுள் ஒரு சிறந்த தூரதரிசனியைக் கொண்டு வானத்தை நோக்கத் தொடங்கினார். இக்காலங்களில் சங்கீதத்தையும் கவனித்துக்கொள்ள வேண்டியிருந்தது. பகலில் கண்ணாடிகளை மெருகிடுவதும், மாலை

யில் சங்கீதமும், இரவில் வானகோளங்களை ஆராய்வதுமாக இவர் காலங்கழித்துவந்தார். இத்துணை வேலைசெய்துவந்தும் இவருடைய உடல் நலம் சீர்குலையாதது ஆச்சரியமே.

இவர் எடுத்துக் கொண்ட வேலையோ எளிதானதன்று. தூர தரிசனியை வானம் முற்றிலும் முறையே திருப்பிக் கண்ணுக்குத் தோன்றும் கோளங்களை யெல்லாம் குறித்துக்கொண்டு அவற்றின் தன்மை, பிரகாசம், இடம் முதலியவற்றை வருணிப்பதே இவர் தொடங்கிய வேலை. ஒரு முறை தூரதரிசனியால் வானம் முற்றிலும் ஆராய்வதற்குப் பலவருடங்களாகும். இவர் தம் ஆயுட்காலத்துள் இவ்வாறு நான்குமுறை செய்துள்ளார்.

1781-ஆம் ஆண்டு இவ்வாறு வான சோதிகளை ஆராயும் பொழுது ஒரு கோளம் அருகேயுள்ள நட்சத்திரங்களைவிடப் பெரிதாகவும் இடம்விட்டுப் பெயர்ந்து சென்றுகொண்டிருந்ததைக் கவனித்தார். அது நட்சத்திரமன்று, சூரியனைச்சுற்றி வரும் ஒரு கோளம் என்று அறிந்து அவ்விஷயத்தை 'ராயல் சோசைடி' என்ற விஞ்ஞான சாஸ்திரிகள் சங்கத்திற்கு அனுப்பினர். உடனே வேறுசில வானசாஸ்திரிகளும் அக்கோளத்தைக் கவனித்து அது சனிகிரகத்தைப் போல இருமடங்கு தூரத்திலுள்ளதென்றும் அநேகமாக வட்டமான ஒரு பாதையில் சுற்றிவருகிறதென்றும் அது ஒரு புதிய கிரகமென்றும் அறிந்தார்கள். அதற்கு யுரானஸ் என்று நாமகரணம் செய்தனர். இவர் காலத்திற்குமுன் பூமியைத் தவிர, புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி என்ற ஐந்து கிரகங்களே அறியப்பட்டிருந்தன. வேறு கிரகங்கள் இருக்கக் கூடுமென்று ஒருவரும் எண்ணவில்லை. ஆகவே, வானசாஸ்திரிகள் உலகத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. ஹெர்ஷலின் புகழ் ஐரோப்பா முற்றிலும் பரவியது.

ராயல் சொசைடியார் உடனே ஹெர்ஷலைத் தம் சங்கத்தில் ஓர் அங்கத்தினராக்கினர்; அதாவது 'எப். ஆர். எஸ்.' என்ற பட்டத்தை யளித்தனர். ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையார் டாக்டர் என்ற பட்டத்தை யளித்துத் தம்மைக் கௌரவித்துக் கொண்டனர். அக்காலத்து அரசர் மூன்றாம் ஜார்ஜு இவரை லண்டனுக்கு வரவழைத்து இவருடைய தூரதரிசனிகள் மூலம் கிரகங்களையும் நட்சத்திரங்களையும் தமக்கும் தம் குடும்பத்தாருக்கும் காட்டச் செய்தார். பிறகு இவரைச் சம்ஸ்தான வான சாஸ்திரிகளில் ஒருவராக நியமித்து வருஷத்திற்கு இருநூறு பவுன் வீதம் கொடுத்து வந்தார். இதன் பயனாக 'பாத்' என்ற இடத்தை விட்டு 'டாச்சட்' என்ற இடத்தில் ஒரு சிறு வீட்டில்

இவர் சகோதரியுடன் வசித்துவந்தார். சங்கீதத்தை முற்றிலும் கைவிட்டு வான சாஸ்திரத்திற்கே தம் காலமுழுமையும் செலவிட இது அனுகூலமாயிற்று.

சிறிது காலத்திற்குள் 40 அடி தூரதரிசனி யொன்று செய்து அதைத் தம் வான ஆராய்ச்சிச்சாலையில் (*Observatory*) அமைத்தார். இத்துணைப் பெரிய கருவியைச் செய்தமைக்க 4000 பவுன் பிடித்ததாம்; செலவு முற்றிலும் அரசரே ஏற்றுக்கொண்டார். இவ்வுயர்ந்த கருவியைக் கொண்டு தாம் புதிதாகக் கண்டு பிடித்த கிரகத்திற்கு இரண்டு சந்திரர்களும், சனி கிரகத்திற்கு முன் அறியப்பட்ட ஐந்துடன் மேலும் இரண்டு சந்திரர்களும் இருக்கின்றனவென்று கண்டார்.

நட்சத்திரங்கள் எப்பொழுதும் ஒரு தன்மையாக இருக்கவில்லை என்றும், அவற்றுள்ளும் மாறுதல்களும் சலனங்களும் உள்ளன என்றும் இவர் தூரதரிசனியின் உதவியால் கண்டறிந்தார். ஆனால் அவை பலகோடிக்கணக்கான மைமைல்களுக்கப்பால் இருப்பதால் ஆயிரக்கணக்கான வருஷங்கள் சென்றாலும் அவற்றின் நிலைமைகளில் அதிகவேற்றுமை தோன்றாது. மிக நுட்பமான கருவிகளைக் கொண்டே அவை நிலையாக ஒரே இடத்திலில்லை என்பதை ஊகித்தறியலாகும்.

நமது சூரியனும் நட்சத்திரங்களில் ஒன்று; ஆயின் இது நிலையாக நிற்கிறதா அல்லது ஏனையவைபோலச் சலித்துக்கொண்டிருக்கிறதா என்ற கேள்வி ஹெர்ஷல் மனத்தில் எழுந்தது. இதற்கு விடைகொடுப்பதற்கு ஏனைய நட்சத்திரங்களின் சலனத்தை ஆராய வேண்டும். அவ்வாறு நீண்டகாலம் ஆராய்ந்ததில் ஹேர்குலீஸ் நட்சத்திரத்திற்கு அருகேயுள்ள விண்மீன்கள் தம்முள் சிறிது விலக்கமடைந்துகொண்டும், அதற்கு நேர் எதிர்ப்புறத்திலுள்ளவை தம்முள் சிறிது நெருக்கமடைந்துகொண்டும் இருப்பதைக் கவனித்தார். வெகுதூரத்திலுள்ளனவும் தம்முள் சம்பந்தமில்லாதனவுமான நட்சத்திரங்களுள் இம்மாதிரிப் பொதுவான ஒரு சலனமிருப்பதற்குக் காரணம் நமது சூரியனுடைய சலன கதியே என்று ஹெர்ஷல் யூகித்தார். ஒரு பெரிய சோலைக்குள் ஓடினால், நமக்கு நேர் எதிரில் உள்ள மரங்கள் தம்முள் விசாலமடைவதும், நமக்குப் பின்புறத்திலுள்ளவை தம்முள் நெருக்கமடைவதும் இருபக்கங்களிலும் உள்ளவை இவ்விரண்டுமின்றி யிருப்பதும் போன்ற தோற்றத்தை யாவரும் கவனித்திருக்கலாம். இதுபோன்ற ஒரு தோற்றமே மேற்கூறிய நட்சத்திரங்களின் விளக்கமும் நெருக்கமும். ஆகவே சூரியன் ஹெர்கு

லீஸ் நட்சத்திரத்தை நாடித் தன்குடும்பமாகிய கிரகங்களுடன் வேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது என்று இவர் நிரூபித்தார். இவரால் கண்டறியப்பட்ட பலவற்றுள் இதுவே மிகவும் புகழ்ச்சிக்குரியதாகும்.

சாமான்யப் பார்வைக்கு ஒரே நட்சத்திரமாகத் தோன்றுவன பல, தூரதரிசனியில் இரட்டைகளாகத் தோன்றுகிறதையும், ஆங்காங்கு வெள்ளிய புகைபோன்ற சில தூமதாரகைகள் (*Nebulae*) இருப்பதையும் கவனித்தார். தூமதாரகைகள் சிருஷ்டிக்காலத்துச் சூரியர்கள் என்று இவர் கருதினர். இவற்றுள் சில நீர்ச்சுழல்கள் போலச் சுழன்றுகொண்டிருக்கின்றன; நாளடைவில் அவை சுருங்கிக் கொண்டே சென்று சூரியர்களாகவும் கிரகங்களாகவும் பிரியும்.

தமது ஐம்பதாவது வயதில் முப்பத்தெட்டு வயதுள்ள ஒரு மாதை இவர் மணந்துகொண்டார். மனைவியார் செல்வமுடையவராக இருந்தாராதலின் இவருடைய பணக்கஷ்டம் அறவே யொழிந்தது. இத் தம்பதிகளுடைய மகனே பிற்காலத்தில் பிரபலமடைந்த சர் ஜான் ஹெர்ஷல் என்ற வானசாஸ்திரி.

வானம் தெளிவாக இருந்த இரவு முற்றிலும் நட்சத்திரங்களைக் கவனித்தும், பகலில் தூரதரிசனிகள் செய்தும், சிலமணி நேரமே தூக்கத்தில் செலவழித்தும் காலத்தைப் போக்கியதால் இவருடைய உடல் தளர்ச்சியடைந்தது. 1822-ஆம் வருடத்தில் இவர் உயிர் துறந்தார். 'வானமாகிய சிறையைத் தகர்த்தார்' என்று பொருள்படக்கூடிய ஒரு வாக்கியம் இவருடைய கல்லறையின்மேல் வரையப்பட்டுள்ளது; நட்சத்திரங்களின் சலனத்தையும், நமது சூரியனுடைய சலனத்தையும் நிரூபித்து, ஆங்காங்கே உள்ள உலகங்கள் சில தோன்றுந் தருணத்திலும், சில மத்திய காலத்திலும், சில அழியும் நிலையிலும் உள்ளன என்பதையும் தூரதரிசனியால் காட்டிய இவருக்கு மேற்குறித்த வாக்கியம் மிகவும் ஏற்றதே யாகும்.

சூரியவெளிச்சம்

நம் உடலிலேயே சூரியவெளிச்சம் சில வைடமின்களை உண்டாக்குகின்றது. அவ்விதம் உண்டாகும் வைடமின் டி (D), நம் எலும்புகளின் அமைப்புக்கு வேண்டியது. இந்தியாவிலுள்ளதைப்போன்று சூரியவெளிச்சம் இல்லாத நாட்டின் குழந்தைகளைப்போன்று நம் குழந்தைகள் மெலிந்த வளைந்த எலும்புகளால் நோயுறுவதில்லை. ஆயின் பகல்முழுதும் இருண்ட அறையிலேயே குழந்தைகள் வைக்கப்பட்டு மாலையிலேயே வெளிவந்தால் அவர்களின் எலும்புகள் வளைந்து மெலிந்து கணச்சூடு (Rickets) என்ற வியாதி உண்டாகும்.

—உணவு.

உயிர் நூலை ஏன் கற்கவேண்டும்?

உயிர் நூலும் நோயற்ற வாழ்வும்

அ. ஸ்ரீநிவாஸாசாரியார், பி.ஏ., எல். டி.

(357-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பழமொழி; அன்றியும், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கினையும் அடைதற்கும், அந்நான்கினையும் தரவல்லதான கல்வியைப் பெறுதற்கும் அடிப்படையாவது நோயற்ற வாழ்க்கையே. ஆதலின் நோய்க்கு இடங்கொடாதிருக்க முயலுதல் மக்கட்கு முதற்கடமையாகும். நோய்க்கு இடங்கொடாதிருக்க முயலுதல் மக்கட்கு முதற்கடமையாகும். நோய்க்கு இடங்கொடாதிருத்தற்கு நோய்க்காரணங்களை நன்கறிதல் வேண்டும்; பின்னர் அக்காரணங்கள் உண்டாகாதவாறு தடுத்தல் வேண்டும். அநேக நூற்றாண்டுகளாகப் பொதுமக்களும் மருத்துவர்களும் பல நோய்களின் காரணங்களை அறியாது திகைத்துவந்தனர். மக்களால் அறிய முடியாதபடி உடல்கட்குள் நுழைந்து எண்ணிக்கையற்ற உயிர்களை இரக்கமின்றி விரைவிற் கவர்ந்துசென்ற கொள்ளை நோய்களைக் காணும்போதெல்லாம் நெஞ்சம் துணுக்குற்றனர். அந்த அச்சமும் திகைப்பும் பெரும்பாலும் ஒழியச் சிறந்த காரணமாயிருந்தவர் 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாஸ்டியூர் என்னும் உயிர்நூலறிஞரே. வெறுங்கண்ணிற்குத் தோன்ற ஒண்ணாத, நீரிலும் காற்றிலும் தூசியிலும் துணியிலும் உணவிலும் உடலிலும் நிறைந்திருக்கும் நுண்ணுயிர்களே பல நோய்களை விளைக்கின்றன என்பதையும், தொற்று வியாதிகட்கு மூலம் அவைகளே என்பதையும், ஒவ்வொரு நுண்ணுயிர் ஒவ்வொரு வகைநோய்க்குக் காரணமாகின்றது என்பதையும் அவரே அந்நூற்றாண்டின் பிற்பகுதியுள் நிலைநாட்டினுர். அன்று முதலே மருத்துவப் புலவரது மனப்பான்மை மாறத்தொடங்கிற்று. காரணங்களைக் கண்ட நிபுணர் அவைகளை நீக்கும் வழியையும் நோயைப் போக்கும் வழியையும் ஆராயலாயினர். அதன் பயனுய்ப் பிணிகளைத் தடுக்கும் மருத்துவமுறை பெரிதும் வழங்கி வரலாயிற்று. அம்மை வாந்திபேதி, வெறிநாய்க்கடி முதலியவைகள் மக்களை அணுக

வொட்டாது பாதுகாக்கக் கூடிய முறைகள் நாளடைவில் மேன் மேலும் புலப்படலாயின. நுண்ணுயிர்களாகிற நோய்க் காரணங் கள், நுண் செடிகள் நுண் விலங்குகள் என இருவகையாக அமைந் துள்ளன என்ற உண்மையும், முறைஜுரம் தூக்கநோய் போன்றன நுண்விலங்குகளால் உண்டாவன என்ற உண்மையும், இந் நுண் விலங்குகள் உடலிற் புகுந்ததும் நச்சுப்பொருள்களை மிகுதி யாக உண்டுபண்ணி உடலிற் குவித்து உயிர்தங்கும் நுண்ணிய கூடுகளை (*Cells*) அழித்து வருகின்றன என்பதும் நாளடைவில் தெரியவரலாயின. பின்னர் அந் நுண் விலங்குகளை மனித உடலிற் புகுத்தும் சிற்சில உயிர்ப்பொருள்கள் தோன்றின. உதாரண மாக முறை ஜுரத்தை விளைக்கும் நுண்விலங்குகள் கொசுக் கடிவாயிலாக மனித உடலில் புகுவதும், தூக்கநோய் என்னும் பிணி ஒருவகை ஈயால் பரவுவதும் உயிர்நூலறிஞர்க்கு விளங்க லாயின. அதன்பின், நோய்க்காரணங்களாகும் நுண்ணுயிர்களின் பிறப்புவளர்ப்பு வரலாறுகளையும், அவைகளைச் சுமந்து செல்லும் உயிருள்ள வாகனங்களின் பழக்க வழக்கங்களையும் முறையாக ஆராய்ந்தறியத் தலைப்பட்டனர். இந்த அறிவினல் நோயைத் தடுக்கும் முறைகள் தெளிவாயின. இவ்வண்ணம் உயிர் நூலறிவின் மாட்சியால் மனிதன் நோய்களை ஒவ்வொன்ருக வென்று வருகிருன்.

முற்கூறிய உண்மைகளைச் சிலகுறிப்பிட்ட உதாரணங்களால் விளக்குதல் மிக்க பயன்தரத்தக்கதாகும். மலைக்காய்ச்சல் அல்லது முறைஜுரம் (*Malaria*) என்னும் நோய்க்குக் காரணமாகிய நுண் விலங்கை மனிதரது இரத்தத்திற் கண்டது ஐம்பது ஆண்டுகட்கு முன்புதான். அது எவ்வாறு உடற்குள் புகுந்தது என்பது அப் போது அறியப்படாமலிருந்தது. ஆனல் நான்சன் என்ற அறிஞர், அந்நாளில் கொசுக்கடியால் ஒருவகை நுண்ணுயிர் ஒரு மனித னிடமிருந்து மற்ருெருவனிடம் பரவிவருதலைக் கண்டார். அதுவே ஒருகால் ஆனைக்கால் எனும் நோய்க்குக் காரணமாகுமோ என்று கருதப்பட்டது. பின்னர் மலைக்காய்ச்சலும் வேறு நோய்கள் பல வும் அம்மாதிரியே பரவுதல் அறியப்பட்டது; 1904-ஆம் ஆண்டு முதலே மலைக்காய்ச்சலோடு போர்புரியத் தொடங்கினர். அந் நோயைப் பரப்பும் கொசுக்களைக் கொல்லுதற்கும் ஒழித்தற்கும் பல முறைகளை நாடினர். அவைகளனைத்திலும், கொசுவைப் புழு நிலையிலேயே வளரவிடாது கொல்லுதலே மிகச்சிறந்ததாகக் காணப் படுகின்றது. கொசு தேங்கிக் கிடக்கும் நீர்நிலைகளிலே முட்டை யிடுகின்றது; அம்முட்டையினின்று வெளிவரும் குஞ்சுகள் புழு

வடிவினவாகி நீர்க்குள்ளேயே நெளிந்து நெளிந்து சென்று, இடையே நீர்மட்டத்திற்கு வந்து காற்றை உட்கொண்டு வாழ்கின்றன. இப்புழுக்களைக் கொல்ல மூன்று முறைகள் கையாளப்படுகின்றன. நீரை ஊருக்குள் தேங்கவிடாது வெளியேற்றி, கொசு முட்டையிட வழியில்லாது செய்தல் ஒரு முறை. நீர் தேங்கும் இடங்களில் நீர்மேல் மண்ணெண்ணெயை ஊற்றி, பரவி மிதக்குமாறு செய்தல் இன்னொரு முறை. இதனால் கொசுப்புழுக்கள் மூச்சிழுக்க வழியின்றி மாளுகின்றன. நீர்க்குட்டைகளின் மேற்புறத்துள்ள அழுக்கையும் முக்கியமாகக் கொசுப் புழுக்களையும் விரும்பியுண்ணும் காம்பூசியா என்னும் ஒருவகை மீனை நீர்நிலைகளில் விட்டு வளர்த்தல் மூன்றாவது முறை. இம்மூன்று முறைகளில் முதலாவது முறை எல்லா இடங்களிலும் எப்போதும் எல்லாராலும் கையாளுதற்குரியதன்று. இரண்டாவது முறை பொருட்செலவை எதிர்பார்ப்பது மன்றி, கொசுக்களோடு இன்னும் பல உயிர்களையும் அழிக்க ஏதுவாகின்றது; ஆயினும் அது மிக்க வெற்றியை அளித்துள்ளது என்பதற்கு ஐயமில்லை. மூன்றாவது முறையோ மற்ற இரண்டிற்குமுரிய குறைகளினின்றும் நீங்கியிருப்பது மன்றி நிலைத்தபயனை அளிக்கக் கூடியதாகிறது. இம்முறையைக் கையாளுமுன் இத்தாலியநாட்டின் ஒரு பகுதியில் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுக் குழந்தைகள் 1924-ஆம் ஆண்டில் மலைக்காய்ச்சற்கு ஆளாயின; அதனைக் கையாண்டபின் இன்று நூற்றுக்குப் பத்துக்கும் குறைந்த குழந்தைகளே அந்நோயால் வருந்துகின்றன.

மற்றோர் உதாரணமும் நாம் முற்கூறியதை நன்குவிளக்கும். குளிரும் சூடும் மிதமான தேசங்களிலுள்ள மக்களிற் பலர் மிக்க சூடுள்ள தேசங்களிற் போல் உடற்சோர்வையும் கைகால்களின் தளர்ச்சியையும் உணரலானார்கள். அத்தகைய ஊர்கட்குச் செல்லும் பிரயாணிகளும் அவ்வாறே உணர்ந்தனராதலின், அதனை ஒரு நோயாகவே கருதினார்கள். ஆயினும் அதன் காரணத்தை அறிஞரால் அறியமுடியவில்லை. நோய் உண்டாகும் வழியைப் பின்னர் ஆராய்ந்து பார்த்தபோது, பல உண்மைகள் வெளியாயின. மக்கள் வெறுங்காலோடு தரையில் நடந்து செல்லும்போது, கால்களின் அடிப்பாகங்களில் இடையிடையே உண்டாகும் பிளவுகளின் வழியாகத் தரையிலுள்ள சில நூல்போன்ற நுண்ணிய புழுக்கள் இரத்தத்திற்குட் புகுகின்றன. பின்னர் இரத்தத்தின் வழியாக அவை செல்லுமிடமெல்லாம் சென்று, முடிவில் நமது குடலின் உட்சுவரிற் குடைந்துகொண்டு தமது வாயினருகேயுள்ள சில கொக்கிகளின் உதவியால் குடலைப் பற்றிக்கொண்டுநின்று, அங்குள்ள

மெல்லியதோலிலுள்ள இரத்தத்தை உறிஞ்சுகின்றன. இத்தகைய புழுக்கள் கொக்கிப் புழுக்கள் எனப் பெயர்பெற்றுள்ளன. இவை குடலைப்பற்றி இரத்தத்தை உறிஞ்சுவதன் பயனாய், சோகை, தளர்ச்சி, உடல் மெலிவு மனத்தளர்ச்சி, இன்னது செய்வதென்பதை அறியாது திகைத்தல் முதலிய பல குறிகள் உடலில் தோன்றுகின்றன. இந்தக் கொக்கிப்புழுநோயின் காரணம் நன்கு அறியப்பட்டபின், அதனை ஒழிக்கும் முறையும் தடுக்கும் முறையும் எளிதாக மருத்துவர்க்கு விளங்கலாயின. குடலைக் கவ்விக்கொண்டு தொங்கும் இப்புழுக்களைச் சில மருந்துகளை அருந்துவதன் மூலமாக முழுதும் வெளியேற்றிவிடலாம் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இன்னும், தரையில் இந்தக் கொக்கிப்புழுவின் குஞ்சுகள் வாழமுடியாதபடித் தரையைச் சுத்தமாக வைத்துக்கொண்டால் இந்த நோய் பரவுதற்கு வழியில்லை என்பதும் இப்போது அறியப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ராக்பெல்லர் என்னும் கோடீசுவரப் பிரபு ஒருவர் இந்நோயைத் தீர்ப்பதற்காக ஒரு மருத்துவச் சாலை ஏற்படுத்தி, அறிஞர்கள் தக்கவாறு அதில் ஆராய்ச்சி செய்து வரவும் வசதியளித்தார். இப்பெரியாரது தரும சிந்தனையின் பயனாய், அந்நோயால் வருந்துபவரது தொகை நூற்றுக்கு-25-இலிருந்து 20-க்குக் குறைந்துவிட்டது.

உயிர்நூல் மக்கட்குச் செய்த பேருதவிக்கு வேறொரு சிறந்த உதாரணமும் தரலாம். எகிப்து ஜப்பான் முதலிய தேசங்களில் பில்ஹார்சியாசிஸ் (*Bilharziasis*) என்னும் பெயர் கொண்ட ஒரு கெட்ட நோய் பரவிவருகின்றது. பிறக்கும் குழந்தைகள் மூன்றில் ஒன்றுக்கும், சில இடங்களில் காளைப் பருவத்தினரில் மூவரில் ஒருவர்க்கும் இந்நோய் காண்கிறது. எகிப்து தேசத்தில் போர் நிகழ்ந்த போது அங்கே சென்றிருந்த ஆங்கிலப் போர் வீரர்கட்கு இந்நோய் பரவியதும், அதன் காரணத்தை ஆராய அறிஞர் தலைப்பட்டனர். இவ்வாராய்ச்சியினால் அந்நோயின் வரலாறு நன்கு தெளியப்படலாயிற்று. ஒரு விசித்திரமான புழு முட்டையிட்டபின், அம் முட்டையினின்றும் மிக நுண்ணிய (கண்ணிற்குத் தெரிய முடியாதபடி மிகச்சிறிய) குஞ்சுகள் பல கிளம்புகின்றன. இக்குஞ்சுகள் கவர்பட்ட நூல்களைப் போன்ற வடிவுடையனவாகின்றன. ஒரு மனிதனது வாயிலும் உதட்டிலும் வேறு இடங்களிலும் உள்ள தோலில் வெடிப்பு உண்டாகும் போது, அப்பிளவுகளின் வழியாக உடலிற்குட் புகுந்து இரத்தத்தின் வழியாகச் சென்று, குடலில் உள்ள இரத்தக் குழாய்களிலும் சிறுநீரைப்பிரிக்கும் அங்கத்திலும் சிறுநீர்ப்பையிலும் நிலை

யாக வாழத்தொடங்குகின்றன. அவை நாளடைவில் உறுதி வாய்ந்த ஒட்டினையுடைய முட்டைகளை இடுகின்றன; இவை ஒவ்வொன்றிலும் பக்கத்திலோ அல்லது ஒரு நுனியிலோ ஒரு கூர்மையான முள் காணப்படுகின்றது. இரத்தக்குழாய்களில் இப்பேர்ப்பட்ட எண்ணிறந்த கூறிய முட்கள் அழுத்தும்போது, பெரும் வலி உண்டாகின்றது. குடலிலிருந்தும் வேறு அங்கங்களிலிருந்தும் வெளியேறும் முட்டைகள் மிகச் சிறியனவாதலின், அவை நமக்குத் தெரியாமலே எளிதாகக் குளங்களிலும் குட்டைகளிலும் உள்ள நீர்க்குட் புகுகின்றன. அந்நீரில் அம்முட்டைகள் குஞ்சு பொரிக்கவே, மிகச்சிறிய குஞ்சுகள் வெளிவருகின்றன. இக்குஞ்சுகள் ஒருவகை நீர்நத்தையால் விழுங்கப்பட, அவைகளின் வயிற்றில் அவை சௌகரியமாக வளர்ந்து முதிர்ந்த நிலையை யடைந்து மீண்டும் நூல்போன்ற சிறிய புழுக்களாக நத்தை வயிற்றினின்றும் வெளியேறிவிடுகின்றன. இப்புழுக்கள் தண்ணீரில் உல்லாசமாக நீந்திக் கொண்டிருக்கும்போது, குளிப்பதற்காக அந்த நீர்க்குள் இறங்கும் சிறுவரது தோல்களைத் துளைத்துக்கொண்டு உட்புகுகின்றன; இம்மாதிரியே அக்குட்டைகளில் இறங்கும் (வயது சென்ற) வண்ணார் தோட்டக்காரர் முதலியவர் உடலிற்குள்ளும் புகுந்துவிடுகின்றன. இவ்வண்ணம் இந்நோய் தொற்றுநோயாய்ப் பரவுகிறது. இவ்வரலாற்றை நன்கறிந்ததும், அதைத்தடுத்தற்குரிய முறைகள் மருத்துவர்க்குப் புலப்பட்டன. அவையாவன: (1) குளங்கள் குட்டைகள் முதலிய நீர் நிலைகளை அசுத்தமாகாது பாதுகாத்தல், (2) அந்நீர்நிலைகளிற் சிறுவர் குளிக்காதபடி தடுத்தல், (3) நீர்நத்தைகளைப் பொறுக்கிச் சேர்த்துத் தூர எறிதல், (4) நீர்நத்தைகளைப் பிடித்துண்ணும் சில பறவைகளை அருகில் வாழவிடுதலும், அவைகள் சுகமாக வாழ்தற்கு வேண்டிய வசதிகளை அளித்தலும், (5) நீர்நத்தைகட்கு இன்றியமையாது வேண்டப்படும் உணவுப் பொருளாகிய சில நீர்ச்செடிகளை அழித்தல், (6) புழுக்குஞ்சுகளைக் கொல்லுதற்காக ஸோடா ஸல்பேட் என்னும் மருந்தை நீரில் கரைத்தல். (ஓடாத தண்ணீரில் இம்மருந்தினால் அப்புழுக்குஞ்சுகள் 36 மணி நேரத்தில் மரிக்கின்றன). ஆக உயிர்நூலாராய்ச்சியால் ஒரு நோயின் காரணமும் வரலாறும் அறியப்படவே, அவ்வறிவின் துணையால் நோயற்ற வாழ்வு மனிதர்க்குக் கைகூடுகின்றது.

சரித்திரம்

பாரசீக மன்னர் ரிஜாகான்

மா. இராசமாணிக்கம்

இப்பொழுது பாரசீக நாட்டு மன்னராக விளங்கும் ரிஜா கான், பதினெட்டு ஆண்டுகளுக்குமுன் சாதாரணப்போர் வீரராக இருந்தவர்; அதற்குமுன் வேலையில்லாமல் உணவுக்கே அலைந்தவர். சிறிதளவும் கல்வி கற்காதவர். இத்தகைய கேவலநிலையில் இருந்த இவர் இன்று பாரசீக மன்னராக விளங்குகின்றார் என்றால், நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள் அல்லவா? இவரது அரிய வரலாற்றை அறிய அவாக் கொள்வீர்கள் அல்லவா?

ரிஜாகான் மிகவும் எளிய குடும்பத்திற் பிறந்தவர். சிறு வயதில் இவர் கல்விகற்க வசதியில்லை. பதினெட்டு வயதானதும் இவர் பாரசீகத்தின் தலைநகரான டெஹிரானை யடைந்தார்; வேலைக்காக அந்நகரத்தெருக்களில் அலைந்தார்; முடிவில் ஒரு மேனாட்டுக் கனவான் வீட்டு வாயிற் காப்போனாக இருந்தார். அக்கனவான் இறந்த பின்னர்ச் சிறிது காலம் வேலையில்லாமல் துன்பப்பட்டார்; முடிவில் பாரசீகச் சேனையில் போர்வீரராகச் சேர்ந்துகொண்டார்.

சாதாரணப் போர் வீரராகச் சேர்ந்த ரிஜாகான், தம் உழைப்பாலும் நாட்டுப்பற்றாலும் சேனையில் இருந்த வீரர்களைச் சிறந்த போர்வீரர்களாக்கினார்; தாமும் போர்முறைகளை நன்றாகக் கற்றுத் தேறினார். இவரது உடல் வன்மையையும் அஞ்சாநெஞ்சத்தையும் கூரிய கண்களையும் கண்ட பாரசீகச் சுல்தான் இவரை ஓர் இராணுவ உத்தியோகஸ்தராக்கினார்; பின்னர், இவர் இராணுவ தந்திரத்திலும் படையைச் செலுத்தும் திறமையிலும் சிறந்திருந்ததைக் கண்டு இவரை ஓர் இராணுவத் தலைவர் ஆக்கினார். அந்நிலையிற் சிறிது காலம் இருந்த ரிஜாகான் போர்வீரர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று யுத்தமந்திரி யானார்.

இவர் யுத்தமந்திரியாக இருந்தபோது அரேபியப்படை யொன்று பாரசீகத்தின்மீது படையெடுத்தது. அப்படையை

நசுக்கும்படி சுல்தான் ரிஜாகானுக்குக் கட்டளையிட்டார். ரிஜா கான் ஒரு சிறந்த படையுடன் சென்று அரேபியருடன் போர் புரிந்தார்; அவர்களைப் போரில் முறியடித்தார்; அவர்களின் தலைவனைக் கைதுசெய்து டெஹிரானுக்குத் திரும்பினார். இவரது பெரு வெற்றியைக் கண்ட பாரசீக மக்கள் இவர் நடந்து வந்த தெருக்களில் எல்லாம் விலையுயர்ந்த நவரத்தினக் கம்பளங்களை விரித்து, மாலை சூட்டி, உற்சாகத்தோடு வரவேற்றனர். அப்போது ரிஜாகான் புகழ் பாரசீக மெங்கும் பரவியது.

பாரசீக மக்கள் ரிஜாகானை வாழ்த்தி மகிழ்ந்தனர்; அவரையே தங்கள் இரட்சகராகக் கருதினர்; தமது தேச நலத்தைக் கவனியாதிருந்த சுல்தானை வெறுத்தனர். சேனைவீரர் அனைவரும் சுல்தானைப் பட்டத்தினின்றும் இறக்கி, ரிஜாகானை அரசராக்க விரும்பினர். ரிஜாகானும் தம் தாய்நாட்டு நலத்துக்காகத் தாம் அரசராவதெனத் தீர்மானித்தார். ஆகவே, அவர் சேனைகளின் உதவியால் சுல்தானைத் துரத்திவிட்டுப் பெருமைபொருந்திய பாரசீக சிம்மாதனத்தில் இராஜாதி ராஜனாக முடி சூட்டிக்கொண்டார்.

இவர் அரசரான பிறகே எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டார். இவர் இப்பொழுது ஆங்கிலம் வெகு அழகாகப் பேசவும் எழுதவும் கற்றுள்ளார். இப்பெரியார் அரசரானதும் நாட்டு முன்னேற்றத்தில் கவனஞ் செலுத்தலானார்; மேனாடுகளைப்போலத் தம் தாய்நாட்டையும் நாகரிக நாடாகச் செய்துவருகின்றார். நவீன கட்டடங்களும் தொழிற்சாலைகளும் நாளுக்குநாள் அதிகரிக்கச் செய்கின்றார். புதிய ரஸ்தாக்கள் இருப்புப்பாதைகள் முதலிய சாதனங்கள் பாரசீகத்தில் முன்னேற்றமடைந்து வருகின்றன. அங்கு 500 ஆகாய விமானங்களும் ஆயிரக் கணக்கான மோட்டார்களும் நடனம்புரிகின்றன. மேல்நாடுகளுடன் வர்த்தகம் நடைபெற்று வருகின்றது. இத்தகைய முன்னேற்றங்களைத் தமக்கு அளித்துவரும் ரிஜாகானைப் பாரசீகர்கள் தங்கள் தெய்வமாகப் பாராட்டி வருகின்றனர் என்பதில் வியப்பு ஒன்றும் இல்லை அல்லவா?



என் கடிகாரம்

பே. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.

என்னுடைய அழகான புதுக்கடிகாரம் வேகமாய்ப் போகாமலும் மெள்ளப் போகாமலும் ஒழுங்காகப் பதினெட்டு மாதம் ஓடியாய்விட்டது. அதனுடைய சக்கரம் ஒன்றையும் அது ஒடித்துக் கொள்ளவுமில்லை; ஒருவேளைகூட அது நிற்கவுமில்லை. ஆதலால், இன்ன மணியாயிற்று என்று அது தீர்ப்புச் சொல்லிவருவதை வேதவாக்கை நம்புவதுபோல நான் நம்பத் தொடங்கிவிட்டேன். 'அதனுடைய தேக அமைப்பும் அதன் உள்ளுறுப்புக்களும் ஒரு நாளும் கெடாதவை, என்றென்றைக்கும் அழியாதவை' என்று எண்ணவும் தொடங்கிவிட்டேன். ஆனால் கடைசியாக, ஒருநாள் அதற்கு நான் சாவிகொடுக்க மறந்துவிட்டேன். அன்றிரவு பார்த்து அது நின்றுவிட்டது. எனக்கு ஏதோ ஒரு பெரிய ஆபத்து வரப்போகிறது என்பதற்கு ஓர் அறிகுறிகிடைத்தால் எப்படி வருந்துவேனோ, முன்னாலேயே ஓடிவந்து கேட்டைத் தெரிவிக்கின்ற தூதன் ஒருவன் வந்தால் எப்படி வருந்துவேனோ அப்படித்தான் அந்த விஷயத்தைப்பற்றி நான் வருந்தினேன். ஆனால், சிறிது சிறிதாக என் மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டேன். கடிகாரத்தில் உத்தேசமாகப் பார்த்து மணிவைத்துக்கொண்டேன். என் மனத்தில் தோன்றிக்கொண்டேயிருந்த அபசகுனம்போன்ற எண்ணங்களுக்கும் என் மூடநம்பிக்கைகளுக்கும் 'ஓடிப்போங்கள்' என்று உத்தரவிட்டேன். மறுநாள் அங்குள்ள பிரபலமான நகைநட்டு வியாபாரம் செய்துவந்த வியாபாரியின் கடைக்குச்சென்று சரியான மணி பார்த்து வைத்துக் கொள்ளலாமென்று போனேன். அந்தக் கடையின் மேலதிகாரி என்கையிலிருந்த கடிகாரத்தைத் தன்கையில் வாங்கிக்கொண்டு, எனக்காக மணிபார்த்துவைபபதாகச் சொன்னான். என் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு அவன், 'இந்தக்கடிகாரம் நான்கு நிமிஷம் பிந்திப்போகிறது. ஆகையால் ரெகுலேட்டரைக் (கடிகாரத்தை வேகமாக ஓடச்செய்யவும், மெதுவாகப் போகச்செய்யவும் அமைக்கப்பட்டிருக்கும் முள்ளைக்) கொஞ்சம்மேலுக்குத் தள்ள

மார்க் ட்வெயின் எழுதிய கட்டுரை ஒன்றன் மொழிபெயர்ப்பு.

வேண்டும்' என்றான். அவனைத் தடுக்க முயன்றேன். கடிகாரமானது மிகவும் ஒழுங்காகச் சரியானபடி மணிகாட்டிக்கொண்டுவருகிற தென்று அவனுக்குத் தெரியும்படி சொல்ல முயன்றேன். ஆனால் என்னால் ஒன்றும் முடியவில்லை. இந்த மனுஷக் கீரைத்தண்டுக்குத் தெரிந்ததெல்லாம் என்னவென்றால், 'இந்தக் கடிகாரம் நான்கு நிமிஷம் பிந்திப்போகிறது, ஆகையால் ரெகுலேடரை மேலுக்குத் தள்ளவேண்டும்' என்பது ஒன்றேதான். அவன் பக்கத்தில் முன்னும் பின்னுமாகச் சுற்றிவந்து நான் கவலையால் துடிதுடித்துக் கூத்தாடிக்கொண்டிருக்குபொழுதே, அவன் அமரிக்கையாகவும் குரூரமாகவும் வெட்கங்கெட்ட அந்தப்பாதகச் செயலைச் செய்து விட்டான். என்னுடைய கடிகாரம் வேகமாக ஓடஆரம்பித்து விட்டது. நாளுக்குநாள் அது அதிக வேகமாகப் போகத்தொடங்கிற்று. அந்த வாரத்துக்குள் அதற்கு ஜுரம்வந்து ஜன்னி பிறந்ததுபோல் ஆகிவிட்டது. அதனுடைய நாடித்துடிப்பு நிழலில் கூட நூற்றைம்பதுவரை ஏறிவிட்டது. இரண்டாவது மாதமுடிவில் எங்கள் நகரத்தில்உள்ள கடிகாரங்கள் அத்தனையையும் பின்னால் விட்டுவிட்டு ஓரேஓட்டமாய் முன்னால் ஓடிவிட்டது. பஞ்சாங்கத்துப்படிஉள்ள தேதிக்குப் பதின்மூன்றுநாளும் கொஞ்சமும் போல் அது முந்திவிட்டது. ஊரில் எங்கும் அக்டோபர்மாதமாயிருந்து இலைகள் உதிர்ந்து கொண்டிருக்க, அது நவம்பர்மாதத்துக்குள் ஓட்டமாக ஓடிப் புகுந்துகொண்டு பனியின் குளிரைச் சுகமாக அனுபவித்துக்கொண்டிருந்தது. அதனால் வீட்டுவாடகை, கடைகளுக்குக் கொடுக்கவேண்டிய கடன்கள், இவைபோன்ற காரியாதிகளை யெல்லாம் மிகவும் அந்நியாயமாகத் தூரிதப்படுத்திற்று. அது இவ்வாறு செய்துவந்த தீங்குகளை என்னால் தாங்க முடியவில்லை. எவ்வளவுநாள்தான் ஒருவன் பொறுக்க முடியும்?

அதைக் கடிகாரக்காரனிடம் எடுத்துக்கொண்டுபோய்ச் சரியாக்கி வரலாமென்று போனேன். 'இதற்கு முந்தி எப்பொழுதாவது யாராவது இந்தக் கடிகாரத்தை ரிப்பேர் செய்திருக்கிறார்களா?' என்று அவன் கேட்டான். நான் 'இல்லை, இதுவரை அதை ஒக்கிடவேண்டிய அவசியம் ஏற்பட்டதேயில்லை' என்று சொன்னேன். அப்பொழுது அவன் முகத்தில் ஒருவகையான கெட்ட சந்தோஷப்பார்வை உண்டாயிற்று. அவன் மிகவும் ஆத்திரத்துடன் கடிகாரத்தைத் திறந்தான். பிறகு, சிறிய குடுக்கை போன்ற ஏதோ ஒன்றைக் கண்ணில் செருகிக்கொண்டு, கடிகாரத்துக்குள்உள்ள சக்கரங்களைக் கூர்மையாக எட்டிப் பார்த்தான். 'இதைச் சுத்தம் செய்யவேண்டும், இதற்கு எண்ணெய் போடவேண்டும், இதைச் சரியாக ஓடும்படி செப்பஞ் செய்ய

வேண்டும்' என்றான். ஒருவாரம்கழித்து என்னை வரச்சொன்னான். அதை அழுக்கெடுத்து எண்ணெய்போட்டு ஒழுங்குபடுத்திய பிறகு, என்னுடைய கடிகாரமானது சாவுக்காக அடிக்கும் இழவுமணி அடிப்பதுபோல் மிகவும் மெதுவாக அடிக்கத் தொடங்கிவிட்டது. ரயில்களெல்லாம் என்னை ஏற்றிக்கொள்ளாமல் பின்னால் விட்டுவிட்டு ஓடத்தொடங்கின. நான் இன்ன வேளையில் வருகிறேன் என்று குறிப்பிட்டபடி ஓரிடத்துக்கும் காலாகாலத்தில் குறித்தவேளையில் போகாமல் தவறிநடக்க நேர்ந்தது. சரியான சாப்பாட்டுவேளைக்கு வீட்டுக்கு வராததால் சாப்பாட்டை இழக்கவும் நேர்ந்தது. தவணைக்கு அதிகப்படியாகத் தயவாகக் கொடுக்கப்படுகிற மூன்று நாட்களை நீட்டி நாலுநாளாக்கி விட்டது. அப்படிச்செய்தபடியால் நான்போய் ஆக்ஷேபங்களையும் கக்ஷிகளையும் சாக்குப்போக்குகளையும் சொல்லும்படி நேரிட்டது. மெள்ள மெள்ள நான் கொஞ்சம் கொஞ்சமாகப் பிந்திக் கொண்டேபோய் நேற்றையதினத்தில்போய்ச் சேர்ந்துவிட்டேன். பிறகு அதற்கும் பிந்திப்போய் முந்தாநாளில் போய்ச்சேர்ந்து கொண்டேன். இப்படிப் பிந்திக்கொண்டேவந்து முந்தினவாரத் துக்கே போய்விட்டேன். இன்னும் கொஞ்சநாள் சென்றதும், 'அடடா! முந்தினவாரத்துக்கு முந்தின வாரத்திலல்லவா நாம் ஒண்டியாக இருக்கிறோம். உலகத்தார் மற்றவர்களெல்லாம் கண்ணுக் கெட்டாமல் போய்விட்டார்களே' என்ற உணர்ச்சியானது சிறிது சிறிதாக எனக்குக் கிடைத்தது. கண்காட்சி சாலையில் (மியூசியத்தில்) வைத்திருக்கப்பட்ட மம்மி (பழையகாலத்து எகிப்தப்பிரேதம்) யோடு ஏதோ ஒரு விதமான ஒற்றமை உணர்ச்சியானது எனக்கு ஏற்படத்தொடங்கி, அதனோடு, குசலப் பிரச்னம் செய்து உபயலாபக்ஷேமங்களைப்பற்றி விசாரணைசெய்து பேசிக்கொண்டிருக்கவேண்டுமென்ற ஆசை உண்டாகலாயிற்று.

நான் மறுபடியும் இன்னொரு கடிகாரக்காரனிடம் சென்றேன். என்னை 'இரு' வென்று சொல்லிவிட்டுக் கடிகாரத்தை அச்சுவேறு ஆணிவேறாகக் கழற்றினான். பிறகு 'பார்ரெல் வீங்கிக்கிடக்கிறது' என்றான். 'அதை மூன்றுநாளில் குறைத்துச் சரியாக்கிவிடுகிறேன்' என்றும் சொன்னான். இதற்குப்பிறகு கடிகாரத்தின் ஓட்டமானது சராசரிக்கணக்கில் சரியாகிவிட்டதே யொழிய மற்றப்படி செவ்வையாகச் சரியாகவில்லை. பாதிநாள் அது பிசாசு ஓடுகிறமாதிரி ஓடும். அப்பொழுது கடிகாரத்துக்குள்ளிருந்து ஏதோஒன்று குலைப்பதுபோலவும், சீறுவதுபோலவும், இருமுவதுபோலவும், தும்முவதுபோலவும், உறுமுவதுபோலவும் இருக்கும். அந்தச் சத்தத்தில் நான் செய்கிற யோசனையே என்காதுக்கே கேட்காது.

அந்த ஓட்டம் செல்லுகிறவரையில், அந்த நாட்டிலுள்ள எந்தக் கடிகாரமும் அதைப் பந்தயத்தில் ஜயிக்கவே முடியாது. ஆனால், இப்படிப் பாதிநாள் ஓடியதற்கப்புறம் மீதியுள்ள பாக்கிப் பாதி நாளும் அது மெள்ள மெள்ளப் போய்க் கோமாளித்தனம் செய்ய ஆரம்பிக்கும். அதனால் ஓட்டத்தில் அதற்குப் பின்வாங்கித் தோற்றுப்போன கடிகாரங்கள் எல்லாம் ஓடிவந்து அதை எட்டிப் பிடித்துவிடும். இப்படியாக, இருபத்துநான்காவது மணியின் முடிவில் அது சரியாக, வெகு கணக்காக, ஒழுங்காக வந்துசேரும். முந்தவும் முந்தாது; பிந்தவும் பிந்தாது. இப்படியாக அதன் சராசரி வேகம் மிகவும் துல்லியமானதாக இருக்கும். ஆதலால், அது தன் கடமையைச் செய்யவில்லை என்று ஒருவரும் அதைக் குறை கூறுவதற்கில்லை. அது தன் கடமைக்குமேல் அதிகப்படியான வேலையைச் செய்துவிட்டது என்று ஒருவரும் அதைப் புகழுவதற்கும் இல்லை. ஆனபோதிலும் மொத்தப்படிச் சராசரிக்கணக்கில் சரியாக இருப்பது என்பது பொதுவாக ஒரு நல்ல குணமானலுங்கூட, ஒரு கடிகாரத்தைப்பற்றிச் சொல்லும்போது அதை ஒரு சிறந்த குணமென்று சொல்லுவதற்கில்லை அல்லவா? அதனால் மறுபடியும் கடிகாரத்தை எடுத்துக்கொண்டு இன்னொரு கடிகார ரிப்பேர்க்காரனிடம் போனேன்.

அவன் 'கிங்போல்ட் (ராஜா ஆணி) உடைந்துபோய்விட்டது' என்றான். 'இவ்வளவுதானே? நல்லவேளையாய்ப்போய்விட்டது. மற்றப்படி பெரிய அபாயம் வேறு ஒன்றும் இல்லை என்பதைப் பற்றி எனக்குச் சந்தோஷமே' என்று சொன்னேன். கிங்போல்ட் என்றால் என்ன என்பது எனக்குத் தெரியவே தெரியாது. ஆனாலும் ஒரு அன்னியனிடம்போய் எனக்கு ஒன்றும் தெரியாது என்று காட்டிக்கொள்ளுவதற்கு எனக்குச் சம்மதமில்லை. அவன் அந்த கிங்போல்டைச் சரியாக்கிவிட்டான். ஆனால் கடிகாரத்துக்கு இந்த ஒரு வழியாகக் கிடைத்த லாபமானது மற்றொரு வழியாக ஓடிவிட்டது. அது கொஞ்சநேரம் ஓடும்; பிறகு கொஞ்சநேரம் நிற்கும்; பிறகு இன்னும் கொஞ்சநேரம் ஓடும். இப்படி மாறி மாறி ஓடியும் நின்றும் வேடிக்கை பண்ணிக்கொண்டுவந்தது. எவ்வளவு நேரம் ஓடுவது, எவ்வளவுநேரம் நிற்பது என்பது முழுவதும் அதன் இஷ்டமே தவிர, வேறொருவரையும் கேட்டு அது நடப்பதில்லை. அது ஓடப் புறப்படும்போதெல்லாம் துப்பாக்கி உதைப்பதைப்போல் ஓர் உதை உதைத்துக்கொண்டு புறப்படும். கொஞ்சநாளைக்குக் கடிகாரத்துக்கு அடியில், என் நெஞ்சுக்கு நேராகப் பஞ்சை மெத்தென்று வைத்துக் கட்டிப்பார்த்தேன்.

அப்படியும் உதை தாங்க முடியவில்லை. அதனால் மறுபடியும் இன்னொரு ரிப்பேர்க்காரனிடம் அதை எடுத்துக்கொண்டு போனேன்.

அவன் அதைத் துண்டு துண்டாகப் பிரித்தெடுத்தான். அந்த மாதிரி அவன் செய்துவைத்த அலங்கோலத்தை ஒரு கண்ணாடியை வைத்துக்கொண்டு பலமுறை புரட்டிப் புரட்டித் திரும்பத் திரும்பச் சோதித்துப் பார்த்தான். பிறகு, 'இதனுடைய மயிர்க்குதிரையில் (ஹேர் ட்ரிக்கரில்) ஏதோ பிசகு இருக்கிறதுபோல் தோன்றுகிறது' என்றான். அதைச் சரிப்படுத்திக்கொடுத்து, கடிகாரத்தை மறுபடியும் ஓடப்பண்ணினான். அதற்கப்புறம் அது சரியாகத்தான் ஓடிற்று. ஆனால் ஒன்று. பத்தடிக்கப் பத்து நிமிஷம் ஆன பொழுது கடிகாரத்தின் முட்கள் இரண்டும் கத்தரிக்கோல் மூடுவதைப்போல் ஒன்றாகக் கெட்டியாக மூடிக்கொண்டுவிடும். அதன் பிறகு இரண்டு முட்களும் ஒன்றாகவே—ஒன்றைவிட்டு ஒன்று இணைபிரியாமல்—சுற்றிப் பிரயாணமாகிக் கொண்டுவரும். பூலோகத்தில் எவ்வளவோ காலம் வாழ்ந்து அனுபவம் முதிர்ந்த பழங்காலத்து மனுஷ்யனுக்குங்கூட அப்பேர்ப்பட்ட கடிகாரத்தைப் பார்த்தால் மணி என்னவென்று தலையா காலா ஒன்றும் விளங்காது. அதனால் மறுபடியும் அதைக்கொண்டுபோய்ச் சரிப்படுத்திக்கொண்டு வருவோமென்று கடிகாரத்தை இன்னொரு ரிப்பேர்க்காரனிடம் எடுத்துக்கொண்டுபோனேன்.

அந்த மனுஷ்யன், 'கிறிஸ்டல் வளைந்துபோய்விட்டது. மெயின் ஸ்பிரிங் (முக்கிய விலை) நேராக இல்லை' என்று சொன்னான். அதுவும் தவிர கடிகாரத்தின் உட்புறமுள்ள சக்கரங்களில் சிலவற்றுக்குப் 'பாதி அடி' போடவேண்டுமென்றும் சொன்னான். இந்தச் சங்கதிகள் எல்லாவற்றையும் செய்து அவன் கடிகாரத்தைச் சரிப்படுத்தினான். அப்புறம் என்னுடைய கடிகாரமானது மிகவும் ஒழுங்காக நடந்துகொள்ள ஆரம்பித்தது என்றுதான் சொல்லவேண்டும். ஆனால், சிற்சில வேளைகளில், ஒரு எட்டுமணிநேரம் சேர்ந்தாற்போல் ஓடியானபிறகு, அதற்குள்ளே உள்ள சக்கரங்களுக்கு எல்லாம் ஒன்றுபோலப் பிடிமானம் விட்டுப்போகும். உள்ளேயிருந்து வண்டு கத்துவதுபோல் 'ஙொய்' என்ற சத்தம் புறப்படும். கடிகார முட்கள் இரண்டும் வெகுவேகமாய்ச் சுழலத் தொடங்கும். அவை சுழலுகிற வேகத்தில் அவற்றைப் பார்த்தால் கடிகார முட்கள்என்றே தோன்றமாட்டா; கடிகாரத்தின் மேல் சிலந்தியின் மெல்லிய நூல் ஒன்று படிந்திருப்பதுபோல்தான் தோன்றும். இப்படிப் புறப்பட்டு அடுத்த ஐந்தாறு நிமிஷங்

களுக்குள் இருபத்துநான்குமணி நேரங்களேயும் ஒரே மூச்சாக ஓடித் தீர்த்துவிடும். பிறகு டக்கென்ற ஓசையுடன் திடீரென்று நின்றுவிடும். இதைக்கண்டதும் என் மனத்தில் துக்கபாரமானது பலமாக ஏறி உட்கார்ந்துகொண்டுவிட்டது. வேருெரு கடிகாரக் காரனைத் தேடிச் சென்றேன். அவன் என்னுடைய அருமையான கடிகாரத்தைக் கழற்றிக் கண்டதுண்டமாக்கும்பொழுது நான் சொல்லமுடியாத பரிதாபத்துடன் பார்த்துக்கொண்டிருந்தேன்.

அதன்பிறகு, 'காரியம் வரவரக் கெட்டுப்போய்க்கொண்டு வருகிறது' என்று நினைத்து, அவனை நன்ருகக் குறுக்கு விசாரணை செய்கிறது என்று தீர்மானித்தேன். கடிகாரத்தை நான் முதன் முதலில் விலைக்கு வாங்கியபொழுது எனக்கு இருநூறு டாலர் அது அடங்கிற்று. பிறகு அதை ரிப்பேர்செய்ய முயன்ற முயற்சியில் நான் இரண்டு அல்லது மூவாயிர டாலர்வரை செலவழித்திருக்கலாமென்று தோன்றுகிறது. அந்த ரிப்பேர்க்காரன் என்ன செய்கிருனென்று கவனித்துக்கொண்டு ஆவலாய்ப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவனைக் கூர்ந்து கவனிக்கநேர்ந்தது. அப்பொழுதுதான் அவன் எனக்கு வெகுகாலத்துக்கு முன்னமேயே தெரிந்தவன், பழைய சிநேகிதன் என்பதைக் கண்டு கொண்டேன். அவன் அந்தப் பழைய நாளில் கப்பல் என்ஜினியர் வேலையில் அமர்ந்திருந்தான். அவனை அவ்வளவு நல்ல என்ஜினியர் என்று சொல்லுவதற்கில்லை. மற்ற ரிப்பேர்க்காரர்கள் கடிகாரத்தைச் சோதித்துப் பார்த்ததுபோலவே அவனும் வெகு ஜாக்கிரதையாகச் சோதித்துப் பார்த்தான். பிறகு அவர்களைப் போலவே அவனும் துளிகூடச் சமுசயம் சந்தேகம் ஒன்றும் இல்லாமல் தன்னுடைய அபிப்பிராயத்தைச் சொன்னுன்.

'இந்தக் கடிகாரம் ஏகப்பட்ட நீராவியை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. இதற்கு நீராவி ஜாஸ்தியாகிவிட்டது. அதை நிறுத்தவேண்டும். ஸேப்டி வால்வில் ஸ்பான்னர் ஒன்றைக் கட்டித் தொங்கவிடவேண்டும்' என்று தெரிவித்தான். கடிகாரத்துக்கு நீராவியாம்!

மறுபேச்சில்லாமல் அந்த இடத்திலேயே அவன் மண்டையை ஒரே உடையாக உடைத்தேன். என்னுடைய சொந்தச் செலவிலேயே அவனுடைய அபரக்கிரியைகள் முழுவதையும் நடத்தி அவனைப் புதைக்கவும் ஏற்பாடு செய்தேன்.

எனக்கு வில்லியம் என்று ஒரு மாமா இருந்தார். அவர் இப்பொழுது இல்லை. அந்நியாயமாக இறந்துபோய்விட்டார். 'ஒருதரம் ஓடிப்போகிறவரையில்தான் ஒரு குதிரையை நல்லகுதிரை

என்று சொல்லலாம்' என்றும் 'ரிப்பேர்க்காரர்கள் கையில்போய் அகப்பட்டுக்கொள்ளாதவரையில்தான் ஒரு கடிகாரத்தை நல்ல கடிகாரம் என்று சொல்லலாம்' என்றும் அவர் சொல்லுவதுண்டு. 'ஒன்றுக்கும் உதவாமல் போன உதவாக்கடையான தகரக்கடைக் காரர்கள், துப்பாக்கி ரிப்பேர்செய்யும் பேர்வழிகள், ஜோட்டு ரிப்பேர்க்காரர்கள், இருப்புக் கொல்லர்கள், என்ஜினியர்கள் இவர்கள் எல்லாரும் எங்கே போய்ச்சேருகிறார்களோ என்னசெய்கிறார்களோ தெரியவில்லையே!' என்று அவர் அடிக்கடி ஆச்சரியப்பட்டதுண்டு. அவர்கள் எங்கே போகிறார்கள் என்பதை இன்றுவரை அவருக்கு யாரும் தெரிவித்ததில்லை. எனக்குமட்டும்தெரியும்.

பளிங்குகள்

பளிங்குகள் வைரங்கள்போல் பல வர்ணங்களில் காணபபடுவதுண்டு. சாதாரணமாக இவை வெள்ளை, பச்சை, மஞ்சள், நீலம் முதலிய நிறங்களில் காணப்படுவதால் இவைகளுக்கு விலைமதிப்பு அவ்வளவு அதிகமில்லை. இவை சர்வசாதாரணமாக எல்லா ரத்னவியாபாரிகளிடமும் கிடைக்கும். ஆனால் ஜோதிப்பளிங்கு கிடைப்பதரிது. அதன் ஜோதி நெருப்பு ஜ்வாலைகள் போல் பிரகாசக்கிரணங்களை வீசிக் கண்ணைப்பறிக்கும் சக்தியுடையது. ஆகையால் இந்த ஜோதிப்பளிங்குக்கு (Fire opal) விலை மதிப்புப் பன்மடங்கு அதிகம். ஜோதிப்பளிங்குகளில் கிருஷ்ணஜோதிப் பளிங்குக்கு (Black fire opal) விலை மதிப்பே கிடையாது. வாங்குபவர் ஆத்திரமும் விற்பவர் இஷ்டமும் பொறுத்தது அதன் விலை மதிப்பாகும் எனலாம்.

1931-ம் வருஷத்தில் ஆஸ்ட்ரேலியாக் கண்டத்திலுள்ள லைட்னிங் ரிட்ஜ் (Lightning Ridge) என்ற இடத்தில் ஒரு கிருஷ்ணஜோதிப்பளிங்கு அகப்பட்டது. அது 771 காரட்டுகள் ஆகும். அதன் உடல் பளீர் பளீர் என்று சிவப்பு முதல் நீலம்வரை ஆகக்கூடிய எல்லா வர்ணங்களுடன் அக்னி தேஜஸ் வீசுவது போல் பிரகாசித்தது. அதன் விலை இன்னும் மதிக்கப்படவில்லை. அதேபோன்ற மற்றொரு பளிங்கு 1928-ம் வருஷத்தில், தோண்டும் போது அகப்பட்டது. அதன் எடை 225 காரட் இருந்தாலும் அது உடனேயே 5,000 பவுனுக்கு விலை போயிற்றும். இந்தியாவிலும் இம்மாதிரி அபூர்வ இரத்தினங்கள் ஏராளமாகக் கோதாவரி, நர்மதை நதிக்கரைகளிலும் கோல்கொண்ட முதலிய இடங்களிலும் அகப்படுகின்றன. ஆனால் விவரங்களை ஒருவரும் சொல்லுவாரில்லை.

கண்ணன் தப்பிய கண்டம்

ஸ்ரீ

நாலு வாலிபர்கள் இரவு ஒன்பதுமணி சுமாருக்குக் கடற்கரையில் பேசிக்கொண்டிருந்தார்கள். ஓயாத அலைஓசை, நக்ஷத்திரங்களின் பிரகாசம், காற்றின் இன்பம், இவை அவர்களை உற்சாகப் படுத்தின. அவர்களில் ஒருவன் இடதுகை தலையணையாகச் சயனித்திருந்தான். மற்றவர் அவனருகில் சிரமபரிகார நிலையில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய பேச்சுடன் கலந்து அடிக்கடி கலகல வென்ற சிரிப்பும் கேட்டது; அவர்கள் பேசிக்கொண்டிருந்த விஷயமோ, கவலைக்கிடமாகிய பரீக்ஷைச் செய்தியைப்பற்றி இருந்தது.

"எல்லாம் விடிந்தால் தெரியும் வெளிச்சம்" என்றான் மணி.

"நான் சத்தியசந்தன் என்பது நிஜமானல், நாளைப்பொழுது விடியாதிருக்கக் கடவது" என்று சபித்தான் கண்ணன்.

"இதுவரை நான் ஜோஸியத்தை நம்பினதில்லை. இப்பொழுது அதை விட்டால் வேறு கதியில்லை. இந்த வருஷம் நான் எடுத்தகாரியத்திலெல்லாம் எதிர்பாராத ஜயம் கிடைக்கும் என்று ஜோஸியர் சொல்லுகிறார். 'எதிர்பாராத' என்று சொன்ன வாய்க்குச் சர்க்கரை போட்டுவிட்டு அவரையே நம்பிக்கொண் டிருக்கிறேன்" என்றான் மணியின் தம்பி ராஜு.

"நியாயமாக மார்க்குப் போட்டால், எனக்குத் தவறாது. இருந்தாலும்" என்று நாலாமவன் தொடங்குமுன் மற்றவர்கள், "போடா போ, நீ எங்கள் கோஷ்டியைச் சேர்ந்தவனேயல்ல, உன் சந்தேகமெல்லாம் முதல்வகுப்புக் கிடைக்குமோ, கிடைக்காதோ, என்பதுதான். அதைப்பற்றி எங்களுக்கு விசாரமில்லை" என்று அவனை அமர்த்திவிட்டார்கள். உடனே அவன் "மணி ஜோஸியம் பார்க்கவில்லையா?" என்று கேட்டான்.

"இல்லை, இப்பொழுது கண்ணனை எழுப்பி இந்த வருஷ அதிர்ஷ்ட பலனைக் கைபார்க்கச் சொல்லலாம் என்று தோன்றுகிறது. வெளிச்சம் வேண்டுமானல் "டார்ச் கூட இருக்கிறது."

"ரேகை சாஸ்திரப்படி, எந்தப் பலன்கள் எந்தக் காலத்தில் ஏற்படுமென்று அவ்வளவு துல்லியமாய்ச் சொல்லமுடியாது" என்றான் விசுவநாதன். "ரேகை சாஸ்திரம் சரியாகத் தெரிந்தால் கை பார்த்துச் சொல்லக்கூடாத விவரமே இல்லையாம். கண்ணன் சொல்லியிருக்கிறான். ஜோஸியத்தை விட நிச்சயமாகச் சொல்லலாமாம்."

"கண்ணன் ரேகை சாஸ்திரநிபுணன் என்பது எனக்குத் தெரியாதே!"

"ரேகை சாஸ்திரப் புஸ்தகங்களைப் படிப்பதில் நான் செலுத்திய கவனத்தில், பாதி கவனத்துடன் என்பாடபுத்தகங்களைப்படித்திருந்தேனானல், இன்றிரவு நான் பீதிக்கு ஆளாகி வருந்தவேண்டியிராது" என்று கண்ணன் இங்கிலீஷில் சொன்னான். விசுவநாதன் சிரித்தான். "உன் அதிர்ஷ்டந்தான் உன் கையில் எழுதியிருக்கிறதே, அது உனக்குத்தெரிந்தது தானே" என்று கேட்டான்.

"இந்தச் சில்லரை விஷயங்களெல்லாம் கையில் விளம்பரம் செய்திராது; அவற்றை நுட்பமாகப் பார்க்கவேண்டும்; நான் பார்த்ததில்லை; பார்க்கப்போவதுமில்லை."

"அட! பயங்கொள்ளியே!" என்றான் ராஜு. கண்ணன் எழுந்து உட்கார்ந்துகொண்டான். "எனக்குக் கைபார்க்கத் தெரியும்; ஆனால் நான் இனிமேல் ஒரு கையையும் பார்க்கப்போவதில்லை; போன கிருஸ்மஸ் லீவில் நடந்த சம்பவம் ஒன்றை நான் இதுவரை யாரிடமும் சொன்னதில்லை. இப்பொழுது சொல்லுகிறேன்."

"சுருக்கிச்சொல்லு" என்றான் மணி.

"சுருங்கச் சொல்வதானல், நான் ஒரு கொலைகாரன்."

ராஜு சிரித்தான். கண்ணன் முகத்தில் சிரிப்பு ஜாடையே இல்லை.

"சரி, விவரமாய்ச் சொல்லு" என்று விசுவநாதன் கேட்டான்.

"கிருஸ்மஸ் லீவில் நான் ஹைதராபாத்துக்கு என் மாமா வீட்டிற்குப் போயிருந்தேன். அப்பொழுதுதான் நான் ஒரு கட்டுப்புஸ்தகங்களைப் படித்து ரேகை சாஸ்திரத்தைச் சரியாகக் கற்றுக்கொண்டேன். பிறகு என்கையைப் பார்த்தேன். அதில் எனக்கு இருபத்தோராவதுவயதில், வாகனமூலமாய் ஒரு பெரியகண்டம் ஏற்படும் என்று நிச்சயமாய்க் கண்டிருந்தது. அந்த விபத்திலிருந்து நான் தப்பிப்பிழைப்பேன் எனினும், விபத்து என்னவோ நேர்ந்துதான் தீரும் என்று அறிந்தேன். எனக்கு இருபத்தோராவது ஆண்டு நிறைய ஒரு

மாதங்கூட இல்லை. கண்டம் நாளுக்குநாள் நெருங்கிக்கொண்டே வந்தது. சைகிளில் போகும் பொழுது எனக்கு என்னை அறியாமல் கைநடுங்கும். எதிரில் 'கார்' வந்து விட்டால் ஒரு விநாடி அப்படியே தலை சுழன்றுவிடும். பயங்கொள்ளியாகிய நான், 'வருவது வந்தேதீரும்' என்ற தீரத்துடன் எப்படியோ தினசரி வாழ்க்கையை நடத்தினேன். சற்றுமுகம் ஒருபடியாக இருந்தால், மாமாவும் அம்மாமியும், எனக்கு அந்த வீட்டில் ஏதேனும் சௌகரியக்குறைவோ என்று சந்தேகப்பட ஆரம்பித்து விடுவார்கள். லீவும் முடிந்தது. என் மாமா தாராளப்பிரபு. அவர், எனக்கு ஓர் இரண்டாம் வகுப்பு டிக்கெட் வாங்கிக்கொடுத்து ரயிலேற்றிவிட்டார். கூட வண்டியில் ஒரு பார்ஸி வியாபாரியும், அவருடைய மனைவியும், மகனும் இருந்தார்கள். அந்த வியாபாரி ஸ்டேஷன் புஸ்தகக்கடையில் 'கீரோ'வின் ரேகை சாஸ்திரம் ஒன்று வாங்கிவந்தார். சாயங்காலம், நான் வைத்திருந்த பத்திரிகையைக் கேட்டுவாங்கிக்கொண்டு, அதற்குப் பதிலாக எனக்கு அந்தப் புஸ்தகத்தைக் கொடுத்தார். என்கர்வம் என்னைச் சும்மா இருக்கவிடவில்லை. என் மட்டில் அந்தப்புஸ்தகம் பாலசிக்ஷைபோன்றது என்று சொன்னேன். அதிலிருந்து வார்த்தை வளர்ந்து, என்னுடைய பாண்டித்தியம் வெளிப்பட்டது. நான் தன்கையைப் பார்க்கவேண்டுமென்று, அவருடைய மனைவி கேட்டாள். அவளுக்கு, முப்பத்தைந்து வயதிருக்கலாம். பார்ஸிகளுக்குள் அதிபால்ய விவாகம் கிடையாது. அவள் மகனுக்கே சுமார் பதினெட்டு வயதிருக்கும். அவளுடைய வயதை நான் அதிகமாகக்கூடக் கணக்கிட்டிருப்பேன். ஆனால் அதற்கு இடமில்லை. ஏனெனில் அவள் கையில் அவளுக்கு முப்பத்தைந்து வயதுக்கு மேல் ஆயுசு கிடையாதென்று அச்சடித்தாற்போல் எழுதியிருந்தது. அவளுக்கும் விபத்து வாகனத்தால் தான்; ஆனால் அந்த விபத்திலிருந்து அவள் தப்பமுடியாது. இதை மறைத்து, அவள் குணத்தையும் பூர்வோத்திரத்தையும் பற்றி ஏதோ சிலவிஷயங்கள் சொன்னேன். நான் சொன்னதெல்லாம் நிஜம் என்று சொல்லி அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். பிறகு பையன் கையை நீட்டினான். அவன் கையில், பதினெட்டாவது வயதில், வாகனத்தால் மரண ஆபத்து நேரிடும் என்று இருந்தது. இப்பொழுது தான் எனக்கு விதியின் சூக்ஷ்மம் சற்றுவிளங்க ஆரம்பித்தது. அந்த வியாபாரி இவர்களைப் பட்டணத்தில் விட்டுவிட்டு, தான்கொழும்புக்கு மூன்று மாதம் போகப் போவதாகச் சொல்லி யிருந்தார். பையனுக்குச் சமாதானமாக ஏதோ சொல்லிவிட்டு, நானே அவர்கையைப் பார்க்கவேண்டுமென்று கேட்டேன்.

ஒருமுறைக்குமேல் மறுமுறை பார்க்கவேண்டி யிருக்கவில்லை; அவர் விதியும் அதுவேதான்; நாற்பத்துநாலாவது வயதில் வாகனத்தால் ஏற்படும் விபத்தால் சாகவேண்டியது. அந்தப் பாழாய்ப் போன ரயிலே, அவர்களுக்கு மரணஹேதுவான வாகனம். நாங்கள் நால்வரும் அந்தவண்டியில் ஏறியது விதியின் செயலே என்று அறிந்தேன். எப்படியாவது அந்த ரயிலை நிறுத்தி, நாங்கள் வெவ்வேறாகப் பிரிந்து, விதியுடன் போராட வேண்டுமென்று என்புத்தி சொல்லிற்று. மனத்தைரியமில்லை. மூன்றுதரம் அபாயச் சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்த எழுந்தேன். விதியை வெல்ல யாரால் முடியும்? ரயில் நின்றவுடன் அதிகாரிகளிடம் என்ன சொல்கிறது என்ற யோசனை தீராமல், திடச்சித்தமில்லாமல், உட்கார்ந்து விட்டேன். என் யோசனை முடியுமுன் ரயில், எதிரில் வந்த 'குட்ஸ்' வண்டியுடன்மோதிவிட்டது. எனக்குப் பிரஞ்ஞை வரும்பொழுது நான் ஆசுபத்திரியில் கிடந்தேன். ரயில் விபத்தில் சேதம் அதிகமில்லையாம்; என்வண்டியிலிருந்த மூவரும் இறந்து விட்டார்கள்; எஞ்சின்டிரைவரும் செத்துவிட்டான்; வேறு சிலருக்குக் காயம், அவ்வளவுதான். எனக்கு உடம்பு சீக்கிரம் குணமாய் விட்டது. மனந்தான் பித்துப்பிடித்தாற்போலிருந்தது. நான் முதலில்நினைத்தபடி ரயிலை நிறுத்தியிருந்தால்—ஆனால் எனக்குத் திடச்சித்தம் கிடையாதென்று என்கையில் இருக்கிறது. அதுவும் விதிதான். சிலவேளைகளில் மட்டும், நான்தான் அவர்களின் கொலையாளி என்று தோன்றுகிறது. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி என் நெஞ்சம் புண்ணாய்ப் போய்விட்டது. ஒன்றுமட்டும் கேட்டுக் கொள்கிறேன். இந்த விஷயத்தை மறுபடியும் கிளப்பி, நீங்கள் ஒருவரும் என்னிடம் இதைப்பற்றிப் பேசாதேயுங்கள்."

"இது என்ன ஆச்சரியம்!" என்றான் ராஜு.

"ரயிலை நிறுத்தி, நீ ஒருகை பார்த்திருக்கவேண்டியதுதான். ஆனால் உன்மேலும் குற்றமில்லை" என்று மணி ஆரம்பித்தான்.

"பேச்சைவிடு" என்றான் கண்ணன்.

"இதனால் தான் நீ லீவுமுடிந்து சிலநாள் வரை காலேஜுக்கு வரவில்லையோ? உனக்கு ஜுரம் என்று யாரோ சொன்னார்கள். ரயில் விபத்தைப் பற்றி நான் கேள்விப்படவில்லை" என்றான் மணி.

கண்ணன் ஆமெனத் தலையசைத்தான்.

"இவனை நம்புகிறாயே, நீ! நாம் வீட்டுக்குப் போகலாம் வா" என்று ராஜு கூப்பிட, மணியும் அவனும் எழுந்து போய்விட்டார்கள். கண்ணன் மணல்மேல் சாய்ந்துகொண்டான். விசுவநாதன் கடலை நோக்கியவண்ணம் உட்கார்ந்திருந்தான்.

"சட்! நினைவுக்கு வரமாட்டேனென்கிறது!"

"என்னது?"

"இது யார் எழுதின கதை என்பதுதான். பேரிங்கா, பீர் போமா"?

"பீர்போமா இருக்கலாம்—எப்பொழுதோ படித்த ஞாபகம் நிச்சயமாய்த் தெரியவில்லை" என்றான் கண்ணன்.

"உனக்கு ரேகை சாஸ்திரம் தெரியும் என்பது புளுகு தானே?

"இல்லவேயில்லை. நான் நிச்சயமாகவே படித்திருக்கிறேன். ஆனால் இதையெல்லாம் ஒரு வேடிக்கையாக வைத்துக்கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால் மனத்துக்குக் கஷ்டந்தான். மணிக்குக் குடுகுடுப்பாண்டி சொல்லில்கூட முழுநம்பிக்கை உண்டு. நிறுக்கிற மெஷின்களிலிருந்து விழும் டிக்கட்களின் அதிர்ஷ்டவாக்கியத்தில் ஏதேனும் அவச்சொல் இருந்துவிட்டால், அவன் படும்பாடு கொஞ்சமில்லை. அவன் என்னைக் கைபார்க்கச் சொன்னான். அந்த கண்டத்திலிருந்து தப்புவதற்காகத்தான் கதை ஆரம்பித்தேன்."

"நாளை இந்நேரம் நம்முடைய அதிர்ஷ்டமெல்லாம் தெரிந்துவிடும்; ராஜு ஒப்பேறிவிடுவான். மணிபாடு சந்தேகந்தான். நான் இரண்டுகேள்விகளுக்குப் பதிலெழுதவில்லை. நீ நன்றாய் எழுதியிருப்பதாக அப்பொழுது சொன்னாய்."

"நான் ஒரு கேள்வியையும் விடவில்லை. தெரியாத இடத்தில் கதை அளந்திருக்கிறேன்."

"அப்படியானால் தேறிவிடுவாய்" என்று விசுவநாதன் சிரித்தான். விதி போல நடக்கும் என்றான் கண்ணன்.

பழங்கள்

பசிய இலைக்கறிகளைப் போன்ற பயனே இவற்றாலும் ஏற்படுகின்றன. இவைகள் உணவுப்பொருள்களில் சிறந்தவையாகையால் இவைகளை அதிகமாக நாம் சாப்பிடவேண்டும். இவற்றில் துவர்ப்புள்ள பல உப்புக்களிருப்பதால் இரத்தத்தைச் சரியாக வைக்க உதவுகின்றன. பெருங்குடலைச் சரியாக வேலை செய்யும்படியும் இவைசெய்கின்றன. தக்காளி மிகவும் சிறந்ததாகையால் அதை அதிகமாகப் பயிரிட்டு உபயோகிக்கவேண்டும். அதில் ஏ.பி.ஸி. வைடமின்கள் நிறைந்திருக்கின்றன. வாழைப்பழம் சரியாகக் கனிந்தாலல்லது ஜீர்ணிப்பது கடினம். அவைகளில் வைடமின்கள் மிகவும் குறைவானாலும் கஞ்சிப்பசையும் சர்க்கரையும் அதிக மிருக்கின்றன. —உணவு.

அரங்கன் வேலை

குமுதினி

பஞ்சகச்சமும் மடிஸஞ்சியுமாய், முதல்நாள் தசமியன்றே மோகினிஸேவைக்கு ஸ்ரீரங்கம் வந்துசேர்ந்தேன். "இந்த வயதிலேயே எவ்வளவு பக்தி, எவ்வளவு சிரத்தை!" யென்று என்னைக் கொண்டாடாத முதியோர்களில்லை. ஆனால் விஷயம் வேறு.

"காதலோ காதல், எங்கே கிடைக்கும்?" என்று எழுதியிருந்தேன் என் குறிப்பில். குறும்புக்காரன் என் அத்தான், அதன் கீழே, "காட்டுரோஜா, ஸ்ரீரங்கம்" என்று வரைந்தான்.

"தன்னந்தனியே மலர்ந்திருக்கிறது காட்டுரோஜா; அதை அணுகுவார் எவருமில்லை. 'அதற்குச் சொந்தமானவன் போய் விட்டான்; நாம் அதை நெருங்கக்கூடாது' என்று வைதிகர் விலகினர். ஆசைப்பேய் பிடித்தவர் அதைப் பிடுங்கிக் கசக்கி முகர்ந்து எறிந்துவிட வந்தனர். மற்றும் சிலர் அதைப்பற்றிப் பலவாறு வம்பளந்தனர். வருந்துகின்றது ரோஜா; நகைமுக நங்கையரின் கூந்தலை அலங்கரித்துக் கோவிலுக்கும் கடைகளுக்கும் செல்ல இச்சித்தது. கூந்தல்மேலிருந்தே, குறிப்பாய்ப் பார்க்கும் காளையர் மனத்தைக் கொள்ளையிட விரும்பியது. ஆனால் ஆதரிப்பார் ஒருவருமில்லை. அதை நான் மெல்ல எடுத்துப் பன்னீர் தெளித்து மாரில்வைத்து மகிழவிரும்புகிறேன்" என்று கடிதமெழுதியிருந்தேன். "மலர் மகிழ்ந்தது" என்று பதில் எழுதினாள். உடனே புறப்பட்டேன் ஸ்ரீரங்கத்திற்கு.

என் அதிர்ஷ்டம், நான் அடுத்தவீட்டிலேயே தங்கநேர்ந்தது. கண்டேன் என் காதலியை. மனமும் தேகமும் பூரித்தன. மங்கல நாணற்றவளாயினும் அவள் அழகு மஹாலக்ஷ்மியையே வென்றது. பாதிமறைந்து நின்று அளவிலா ஆவலுடன் விழிகளால் என்னை விழுங்குவதேபோல் நோக்கினாள். ஒரேபார்வையில் பாதாதிகேசம் வரை அவள் எழிலை என் மனத்தில் அழியாதபடி பதியவைத்துக் கொண்டேன். காமன் எங்கள் புத்தியைக் கூர்மையாக்கினான். எப்படியோ, அதை நான் சொல்லமாட்டேன்; பலர் நடுவிலும்

நாங்கள் பேசாமல் பேசி, குறிப்பால் குறிப்பறிந்து எங்கே சந்திப்பதென்பதை ஏற்படுத்திக் கொண்டோம்.

மாலையில், மேன்மாடியின் பின்புறத்தில் சந்தித்தோம். சாதாரணப்பேச்சுக்களே; ஆனால் என்ன ருசி!

"கோபாலா, எப்போ வந்தே? முன்னாடி கடிதம் போடக் கூடாதா?"

"லக்ஷ்மி, ஒரே வார்த்தையா பதில் எழுதுவது?"

அவள் பார்வையும் அம்முல்லை முறுவலும் நான் என்ன பேசுகிறேன் என்பதையே மறக்கடித்தன.

"கோபாலா, காலையிலிருந்து எனக்கு இருப்பாகவே இருக்கவில்லை. திடீரென்று வருவதானால் இனிமேல் மாலைவேளையில் வரவேண்டும்."

என் முகம் நகைகொண்டது. அவள் வெட்கிச் சிவந்து தலைகுனிந்தாள். எங்கள் வாய் பேசவில்லை. கண்களே ஒன்றிற்கொன்று பேசிக்கொண்டன. நெஞ்சம் திக்திக்கென, கூச்சத்தால் நடுங்கும் எங்கள் கரங்கள் ஒன்றையொன்று நாடின. வாசலில் ஏதோ அரவம்—என்னபேதமை. சட்டென்று கையை யிழுத்துக் கொண்டேன். "கோடிவீட்டுக் குப்புசாமி போலிருக்கிறது. இரவு கோயிலுக்கு ஏகாந்த ஸேவைக்குப் போவோம்" என்று எழுந்து வந்து விட்டேன்.

தனித்தனியாகப் புறப்பட்டுக் கோயில் 'ரங்கபட்டாள்' வாசலில் வந்துசேர்ந்தோம். கோயில் வாசலில் ஒரேகூட்டம்! சிறுவர்களும், கிழவிகளும், குழந்தைகளும், ஸ்திரீகளும் ஆடவர்களும், போலீஸ்புலிகளும் கலந்து குழுமியிருந்தனர். இக்கும்பலில் யார் எங்களைக் கவனிக்கப்போகிறார்கள்! நிர்ப்பயமாய்,களிப்புடன் ஒருவர்கையை ஒருவர் பிடித்துக்கொண்டு நாங்கள் சேர்ந்து நெருக்குண்டு நின்றோம். ஐம்பதுபேர் எங்கள் காலை நசுக்க, ஐம்பது பேர் கால்களை நாங்கள் மிதித்து, முட்டியடித்து உள்ளே புகுந்தோம். உட்புறத்திலோ கூட்டம் எள்ளுப்போட்டால் எள்ளு விழாது; ஆனால் ஊசி கீழே விழுந்தால்கூட அந்தச் சப்தம் காதில் கேட்கும்.

"லக்ஷ்மி!" என்று திரும்பிப்பார்த்தேன். லக்ஷ்மியைக் காணவில்லை. மனம் உடைந்துபோய்விட்டது. "திடீரென்று எங்கே பிரிந்து போய்விட்டாள்? எப்படி இரைந்து கூப்பிடுவது? கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை யென்பதுபோலாயிற்று. இவ்வளவு நெருக்கடியிலும் பிரியாமல் இப்பொழுது எங்கே

தனித்துச் சென்றாள்! நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது. இச்சிறு விஷயத்திலுமா அப்பெருங்கடவுள் தலையிடுகிறார்? நாயகனும் நாயகியுமாய், ஜோடி ஜோடியாய் எத்தனை பேர் ஸ்வாமிதரிசனம் செய்கிறார்கள்! என் லக்ஷ்மிமாத்திரம் எங்கோ தட்டுக்கெட்டுப் போய்விட்டாளே என்ன துரதிர்ஷ்டம்! அரங்கர் சூழ்ச்சியா!" என்று பலவாறு எண்ணமிடலானேன்.

இச்சமயத்தில் வீணாகானம் கேட்டது.

பல்லவி

[1]எவரநீ நிர்ணயிஞ் சிரிரா நிந்
னெட்லா ராதிஞ் சிரிரா நரவர (எவ.)

அநுபல்லவி

சிவுடநோ மாதவுடநோ
கமலபவுடநோ பரப்ரஹ்மமநோ நிந் (எவ.)

என்ற கீர்த்தனத்தைக் கேட்டேன்.

கிராமபோன்கள் சந்திக்குச்சந்தி இப்பாட்டை ஊளையிடுவது காதில் விழுந்திருக்கிறது. இந்த இனிமை அப்பொழுது இல்லை; லக்ஷ்மியோடன்றோ இதை அனுபவிக்கவேண்டும்! எங்கே என்னைத் தேடிக்கொண்டிருக்கிறாளோ? எவர் இத்தடங்கலேற்படுத்தினர்? எண்ணி வந்தபடி நடக்காவிட்டாலும் வந்த இடத்தில் அதிக வஸ்திராபரணங்களால் மறைக்கப்படாமல் அரங்கர் மிகுந்த அழகுடன் காட்சியளித்தார். மதுரமாய்ப்பாட ஆரம்பித்தார் அவ்வீணை வித்வான்:

"குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவு ளெந்தை அரவணைத் துயிலு மாகண்டு
உடலெனக் குருகு மாலோ! என் செய்கேன் உலகத் தீரே!"

பாசுரத்தின் இனிமைக்கொத்துப் பையநடந்தார் ஸ்ரீபாதந் தாங்கிகள். 'லக்ஷ்மியைக் காணவில்லையே'யென்ற கவலை கொஞ்சம் மறைந்தது. பெருமான் மேலண்டைப்பிராகாரத்திற்குத் திரும்பி மண்டபத்தின் படிக்கட்டுகளிடம் வந்துசேர்ந்தார். என்னப்பனைக் கரங்குவித்து நமஸ்கரித்தேன். என்ன ஆனந்தமான ஸேவை! இவ்விக்கிரஹஸ்வரூபியே இவ்வளவு அழகாயிருந்தால் எம்பெருமானை நேரில்காண பாக்யமிருந்தால் . . . . . . ; அழகே தெய்வ

---

[1] உன்னை யார் என்று (பெரியோர்கள்) நிர்ணயித்தார்கள்? எவ்வாறு ஆராதித்தார்கள்? சிவனென்றோ, திருமாலென்றோ, பிரமனென்றோ, இல்லையேல் பரப்பிரமனென்றோ-உன்னை யாரென்று நிர்ணயித்தார்கள்?

மன்றோ! புஷ்பமாரிபொழிந்தனர் பூசுரர். "ரங்கா! ரங்கப்ரபோ!!" என்று அரையர் ஏத்தினர். இடையிலே மறுபடியும் லக்ஷ்மியின் நினைவு. "ஆ! லக்ஷ்மி!—அடே திரும்பிப் போகும்போது பார்த்துக் கொள்கிறோம்" என்ற ஆறுதல். மாகதர்கள் வீணையில் மறுபடியும் பாடினார்கள்.

"போதெலாம் போது கொண்டுன் பொன்னடி புனைய மாட்டேன்
தீதிலா மொழிகள் கொண்டுன் திருக்குணம் செப்ப மாட்டேன்
காதலால் நெஞ்சம் அன்பு கலந்திலேன் அதுதன் னாலே
ஏதிலேன் அரங்கர்க் கெல்லே! என்செய்வான் தோன்றி னேனே!"

இந்தப் பாட்டை அநுபவித்துக்கொண்டே நிமிர்ந்து நோக்கினேன். எதிரே தானேடு தானாய்ப் பொற்பாவை யொருத்தி ஐம்புலன்களையும் அடக்கி அரங்கன் அடிகளில் சிந்தனை பாய்ந்து கிடந்தாள். யார் அவள்?—லக்ஷ்மிதான். திடீரென என் மனத்தில் புதியதோ ரினிய அன்புண்டாயிற்று. அப்பொழுதே கொணர்ந்த அமிருதத்தால் சுத்தீகரிக்கப்பட்டது என்னெஞ்சம். "லக்ஷ்மீ!" என்று கூப்பிட்டுக்கொண்டே போய் அவள் கையைப் பிடித்துக் கொண்டேன்.

"அண்ணா!" என்றாள் லக்ஷ்மி. என்மனத்தை மாற்றிய சக்தியே அவளையும் வென்றதா, என்ன!

படிமேல் அசைந்தசைந்து அரங்கர் ஆஸ்தானத்துக்கு எழுந்தருளும் நேர்த்தியைக் கண்டோம். கைகோத்துக்கொண்டு கூச்சம், திகில், காமம் ஒன்றுமில்லாமல் குழந்தைகள்போல் பேசிக்கொண்டு நடந்தோம். ஸந்நிதிக்குப் பின்புறத்திற்கு வந்தோம். குளிர்ந்த நிலவொளியில் விமானத்தின் பொற்கலசங்கள் பிரகாசித்தன. விமானதரிசனம் செய்தோம். எங்கள் ஹிருதயமும் பொன்போல் பிரகாசித்தனவன்றோ! என்ன பாசத்துடன் ஸ்ரீரங்கம் வந்தோம்! என்ன தூய்மையான காதலுடன் நாங்கள் கோயிலைவிட்டுக் கிளம்பினோம். அது காமக்கலப்பற்றது. அது சரீர இச்சையில்லாதது. அரங்கரை நினைக்கும்போதெல்லாம் ஆழ்ந்த சிந்தனையோடு தானேடு தானாய் நின்ற லக்ஷ்மியை நினைப்பேன். லக்ஷ்மியை எண்ணும்போதெல்லாம் அரங்கர் திவ்யரூபத்தைத் தியானிப்பேன்.

காணாமற்போன வைரடோலக்

ஜி. எஸ். அம்மாள்

"என் பிரியமுள்ள பாக்யம்,

நான் அழுத கண்ணும் மனச்சோர்வுமாய் என்பிறந்த ஊரை விட்டுப் புறப்பட்டதை நினைக்கையில் எனக்கே வெட்கமாக இருக்கிறது. இருந்தாலும் அதனால் என்னைப் பீடித்த கஷ்டம் விலகியது. பாக்யம்! நான் இவ்வூர்வந்த ஒருமாதத்திற்குள் என் ஆத்துக்காரருக்கு மாதம் 500 சம்பளத்தில் இன்ஷியூரென்ஸ் கம்பெனி மானேஜர்வேலை கிடைத்திருக்கிறது. நான் நன்றாக இருப்பதைக் கண்டு சந்தோஷிப்பவள் நீ ஒருத்தியே யாதலால், இதைஎழுதினேன். நீயும் உன்குழந்தைகளும் சௌக்கியமா? நாங்கள் இங்கே சௌக்கியமாக இருக்கிறோம். என் உடன்பிறந்தவர்களே என்மீது வீண்சந்தேகம் கொண்ட அந்த மனக்குறைதான் என்னை விட்டு மாறவில்லை. இருந்தாலும் இரத்தபாசம் யாரை விட்டது? நீ அவர்கள் க்ஷேமத்தைப்பற்றி அடிக்கடி எழுதிக்கொண்டு இருப்பாய் என்று நம்புகிறேன். குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் மூடியதும், நீ அவர்களுடன் இங்கு வந்து கொஞ்ச நாள் என்னுடனிருக்கவேண்டுமென்று எனக்கு ஆசையாக இருக்கிறது.

உன் அன்புள்ள
குணம்."

இக் கடிதத்தைப் பார்த்ததும் என்னை அறியாமலே என் கண்களில் நீர்பெருகியது. எங்கள் வீட்டுக்கு அடுத்தவீட்டுக் குணவதி என் அருமைத் தோழி. அன்று அவள் மீது அபாண்டப் பழி சுமத்தப்பட்டதைக் கேட்டதும் என்மனம் பதைத்ததை நான் மறக்கவே மாட்டேன். ஊரில் அக்கம்பக்கத்திலிருப்பவர்கள் அசூயையின் காரணமாகக் காணாததையும் பொல்லாததையும் சொல்லி அபாண்டம் கட்டிவிடுவது உண்டு. ஆனால் குணவதியின் துர்ப்பாக்கியம், அவளுடைய சொந்த மதனியினாலேயே

அவளுக்குக் கெட்டபேர் வந்தது. இது நடந்து பத்து வருஷங்களுக்கு மேலாகிவிட்டதென்றாலும் என்மனத்தில் அது நேற்றைய சம்பவம் போலிருக்கிறது.

அந்த வருஷம் அவளுடைய உடன் பிறந்தான் பெண்ணுக்குக் கல்யாணம். குணவதிக்குத் தன் தமையன் குழந்தைகள் மேலிருந்த வாஞ்சையினால் பம்பாயிலிருந்து மூன்றுநாள் பிரயாணம் செய்துகொண்டு இங்கு வந்திருந்தாள். அவள் பிறந்தகம் பணக்காரக் குடும்பம். புக்ககத்தில் கல்யாண சமயத்தில் செல்வம் தழைத்திருந்தது. காலவசத்தால் அவர்கள் ஏழையாகி விட்டனர். குணவதிக்கு அவளுடைய அழகுக்கும் குணத்துக்கும் ஏற்றவாறு கணவர் வாய்த்திருந்தார். கடவுள் கிருபையால் ஆசைக்கு ஒரு பிள்ளையும் அழகுக்கு ஒரு பெண்ணும் உண்டு. இவர்கள் மானமாகப் பம்பாயில் வாழ்ந்துவருகிறார்கள்.

கலியாணத்துக்கு வந்தபொழுது குழந்தைகளை மாத்திரமே அழைத்து வந்திருந்தாள். மற்றக் குழந்தைகளைப்போல் அக்குழந்தைகளுக்கு நிறைய நகை இல்லாவிடினும் கல்யாணத்திற்கு வந்தவர்கள் ஒருவராவது, "இக்குழந்தைகள் யார்" என்று கேளாமல் போனதில்லை.

மாப்பிள்ளையை அழைக்க ஏற்பாடுகள் நடந்தன. "அம்மா! எல்லோரும் புறப்படுங்களேன்" என்றார் குணவதியின் தமையனார். அவர், தம் தாயாரைக் கூப்பிட்டு அவ்வாறு சொன்னார். தாயார், மாட்டுப்பெண் தனவதியை, முதலில் சோமஞ் சட்டைகளை எடுத்துக்கொண்டு புறப்படச் சொன்னாள். தனவதி சற்றுத் தயங்கினாள். பிறகு அவள் தன் தங்கை ரங்கத்தை யழைத்து, "நீ இதை எடுத்துக்கொண்டு முன்னால் போ. நான் சற்றுப் பொறுத்து வருகிறேன்" என்றாள்.

ரங்கம்:— எதற்காக நீ இங்கே இருக்கிறது?

தனவதி:—குழந்தை காதிலிருந்த வைரடோலக் ஒன்றைக் காணோம். அதைத் தேடிப் பார்த்துவிட்டுவரேன்.

இதைக் கேட்டதும் அங்கிருந்த எல்லாப்பெண்டுகள் முகத்திலும் சந்தோஷக்குறிமாறிக் கவலையுண்டாய் விட்டது.

தாயார்:—என்னடி சமாசாரம்? அது எங்கே போய்விடும்! நான் இருந்து தேடுகிறேன். முகூர்த்தநாழிகைக்குள் நீங்கள் போங்கோ.

தனவதி:—இல்லை யம்மா! அது கீழேவிழுந்திருக்காது. குழந்தையின்காதில் திருகி இருந்தது என்னமாட விழும்?

தாயார் :—என்னவிதமாய் இருந்தால்தானென்ன? நீபோய்வா, நான் தேடிப் பார்க்கிறேன்.

தனவதி:—குணவதிதான் குழந்தையைச் சத்தேமுன்னே மடியில் போட்டுத் தட்டிக்கொண்டிருந்தார். அவரைக்கேட்கணும்!

இதை யருகிலிருந்து கேட்ட குணவதி, விக்கிச்சாபோலே நின்றுவிட்டாள். அவள் முகத்தில் வியர்வைத்துளிகள் முத்துப் போல் வந்தன. வெளியில் காட்டிக்கொள்ளாமல் பெருமூச்சு விட்டாள். நான் அவள் பக்கத்தில் இருந்து இதைக் கவனித்ததும் என்னை அறியாமல் எனக்குக் கோபம் படபடவென வந்தது. சாயந்திரமுதல் நான் குணவதியுடன் பேசிக்கொண்டே உட்கார்ந்திருந்தேன். அரைமணி முன்னால் அந்தக்குழந்தை அத்தையிடம் பிரியமாக ஓடிவந்தது. அவள் மடியில் படுத்துக் கொண்டது. குணவதி அவள் தலையைக் கோதி முத்தமிட்டுக் கையால் அவளைத் தடவிக்கொண்டிருந்தாள். குழந்தை தூங்கிப் போய்விட்டது. குணவதி மன்னியை யழைத்துக் குழந்தையை எடுத்துக் கட்டிலில் விடுமாறு சொன்னாள். இவையாவும் என் ஞாபகத்திற்கு வந்தன.

“தனம்! அதென்ன அப்படி பேசறே; வாய் வார்த்தை இல்லையா? நானுந்தான் அந்தக்குழந்தை வரச்சேகூட இருந்தேன். டோலக் எங்கேனு மிருக்கும்; தேடி விசாரித்துப்பார்” என்றேன்.

தனவதி:—போரும், பாக்யம்! நான் உன்னைக் கேட்கவில்லை. சொனகுபோலே 150 ரூபாய் கொடுத்து அதுபண்ணி ஒருவாரம் கூட ஆகலேனு, வயத்தெரிச்சலாயிருக்காதோ?

“அதற்காக நீ யார்மேலே சந்தேகப்படறே? குழந்தை விளையாட்டுலே தொலைச்சிருக்கலாம். அவள் அத்தேட்ட வரத்துக்கு முன்னாலே எங்கே இருந்தாள் என்று கவனி!” என்று நான் சொன்னேன்.

தனவதி:—நான் டோலக்கைக் காதில் போட்டேன். உடனே அத்தேட்டே காட்டிட்டு வரேன்னு அவள் ஓடினா. அதுக்குள்ளே எங்கே போய்இருக்கும்?

இதைக்கேட்டதும் குணவதி, “வீணாப்பேசறத்திலே, என்ன ப்ரயோசனம், பாக்யம்? மன்னி! நீங்க சம்மந்தியை அழைக்கப் புறப்பட்டுப் போங்கோ; நான் ஆம்முழுதும் தேடிப்பார்க்கிறேன். இங்கேதான் இருக்கும். நம்மாத்துக்குத் திருடாள் வந்ததாக இதுவரைக் கேட்டதில்லை” என்று அடக்கமாகச் சொன்னாள். இந்த விதமாகப் பேசிக்கொண்டிருக்கையில் கூட்டத்திலிருந்த

புருஷாள், மற்றுமோர் முறை அதட்டி அழைக்கவே, எல்லோரும் புறப்பட்டுப்போனோம். குணவதியின் தாயாருக்கு இந்தக்கலவரத்தில் ஒன்றும் புரியவில்லை. அவள் எல்லோருடனும் வருவது போல் புறப்பட்டு வாசலில் வந்ததும், ஒருவருக்கும் தெரியாமல் கொல்லைப் புறம் சென்றாள். குணவதி என்ன முயன்றும் ஒன்றுமே பேசப்பிரியப் படவில்லை. தகப்பனார் தமையன் மனவருத்தப்படாமல் இருப்பதற்காக முகத்தை மாத்திரம் தன்னால் ஆனமட்டில் சிரிப்பாக வைத்துக்கொண்டு கூட்டத்தின் நடுவில் இருந்தாள். எங்களுக்கு முன்வரிசையில் போய்க்கொண்டிருந்த தனவதியும் அவள் சகோதரி ரங்கமும் தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் இருவரும் பின்னால் வருவதை அவர்கள் கவனிக்கவில்லை. என்காதில் பின்வரும் வார்த்தைகள் விழுந்தன.

ரங்கம்:—தனம் நீ பேசினது எனக்குப் பிடிக்கவில்லை. அவள் ஒருநாளும் அதை எடுத்தே இருக்கமாட்டாள்.

தனவதி:—என்னடி அப்படிச் சொல்லறே! அவள் ஆம்படையானுக்கு ரூ. 75 தானே சம்பளம்; சாப்பாட்டுக்குத்தான்போதும். அவள்பெண் காதும் மூளியாக விருக்கிறதோ இல்லையோ!

ரங்கம்:—அதுக்காக ஒரு காது டோலக்கை எடுத்து என்ன பண்ணமுடியும்?

தனவதி:—வித்து சிகப்புத்தோடு கட்டிப்போட்டுக்கிறு.

ரங்கம்:—அதை அவள் அம்மா செய்யமாட்டாளா?

தனவதி:—செய்யறத்துக்கு அங்கே என்ன இருக்கு? சொத்தெல்லாம் பெண்ணுக்குச் சேஞ்சு அழிச்சாச்சு. இனிமேல் உங்க அத்திம்பேர் பணத்தை எடுத்தால்தான். அதற்கு நான் சம்மதிப்பேனு?

ரங்கம்:—என்னமோ அம்மா, எனக்கு அவளைப் பார்த்தால் சந்தேகமே தோணவில்லை.

தனவதி:—இல்லையானால், எங்கேடி போயிருக்கும்? குழந்தை எங்கிட்டே இருந்து அவளிட்டேதான் ஓடித்து. சனியன்! பீடை! அஷ்டதரித்ரம்.

இந்த வசைமொழிகள் யாருக்கென்பது எனக்குப் புரியவில்லை. குணவதியும் இதைக் கேட்டுக்கொண்டேயிருந்தாள். எனக்கு அவளைப் பார்க்கத் துக்கமாக இருந்தது. ஏழை என்ற தோஷத்திற்காக இவ்வளவு தூரம் ஒரு அப்பாவிமீது பழி சுமத்தினளே என்று நான் ஏங்கினேன். குணவதி வாயைத் திறக்கவுமில்லை. மாப்பிள்ளை வீடும் சமீபித்துவிட்டதால் தனவதி பேசுவது முடிந்தது.

அன்று இரவு முழுவதும் வீடெல்லாம் தேடியும் டோலக் அகப்படவில்லை. குணவதியின் தாய் தந்தை தமையன் எல்லோரும் கூடத்தேடியும் ஒரு பயனுமில்லை. அவர்களுக்குக் குணவதியை நேரில் நிமிர்ந்துபார்க்கவும் மனம் வரவில்லை. கலியாணமும் ஏகச்செலவில் ஆடம்பரமாக நடைபெற்றது. ஆனால் வீட்டுக் காரரிடம் அதற்கேற்றச் சந்தோஷம் காணப்படவில்லை. குணவதி கலகலப்பாய் இல்லாததால் கல்யாணமும் சோபிக்கவில்லை. நாலு நாள் கல்யாணமும் முடிந்தது. ஐந்தாநாளன்று குணவதி பேருக்கு ரூ. 150 தந்திமணியார்டர் அவள் கணவனிடமிருந்து வந்தது. அவள் அதை என்னிடம் இரகஸியமாகக் கொடுத்துக் காணாமல்போன டோலக் மாதிரி ஒன்று வாங்கித் தருமாறு என்னைக் கேட்டாள். அவ்விதமேவாங்கிக் குணவதியிடம் கொடுத் தேன். அவள் அதைக் கையிலேயே வைத்துக்கொண்டிருந்தாள். அவள், மேலும் ஒருவாரம் தங்குவதாக எண்ணி வந்திருந்த போதிலும், அன்று சாயந்திரமே ஊருக்குப் புறப்பட்டு விட்டாள். வண்டி ஏறுவதற்கு முன்னால் கையிலிருந்த பொட்டலத்தைக் குழந்தை மருமாளிடம் கொடுத்து, முத்த மிட்டு விட்டுச் சரேலென்று போய் வண்டியிலேறிக்கொண்டாள். அவளுக்குத் துக்கம் அடைத்துக் கொண்டது. வண்டி புறப் பட்டதும் அவள் தேம்பி அழுவது தெரிந்தது.

அவள் தாயர் தகப்பனாரும் துக்கத்தைவெளிக்காட்டாமல் விச னப்பட்டார்கள். தமையன் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு தூர நின்றுகொண்டிருந்தார். அதேசமயத்தில் குணவதியிட மிருந்து கிடைத்த பொட்டலத்தைப் பிரித்துக்கொண்டு குழந்தை குதித்து ஓடினாள். தாயார் அதை வாங்கிப்பார்த்தாள். குழந்தை கையில் வைரடோலக் ஒன்று இருந்தது. தனவதிக்குச் சந்தோஷம் பொங்கியது. ரங்கத்தைப் பார்த்துக் கண்ஜாடை காட்டினாள். வீட்டிலிருந்த மற்றவர்கள் இதைப்பார்த்ததும் என்னசொல்வது அல்லது என்னசெய்வதென்று விளங்காமல் தத்தளித்தார்கள்.

குணவதிக்கு அவர்கள் பல கடிதங்கள் எழுதினார்கள். அவை திரும்பிவந்துவிட்டன.

கலியாண அமர்க்களம் அடங்கி ஒரு மாதமாயிற்று. நான் ஒருநாள் வழக்கம்போல் குணவதி தாயாருடன் பேசிக்கொண்டிருந் தேன். கலியாண சமயத்தில் நான் குணவதியுடன் பேசிக்கொண் டிருந்த அறையிலேயே அன்றும் நாங்கள் பேசிக்கொண்டிருந் தோம். தனவதியும் வேலைக்காரியுமாக அந்த உள்ளை ஒழித்துச்

சுத்தம் செய்துகொண்டு இருந்தார்கள். அப்பொழுது குணவதி தாயர் பெருமூச்சு விட்டாள். நான் என்னவென்று கேட்டேன்.

"பாக்யம் என்ன சொல்வேன்! அந்த டோலக் சமாசாரம் என்னை வதைக்கிறது" என்றார் அவர்.

"ஏன், ஒருவழியாக அதை மறந்து தொலைக்கிறது தானே?" என்றேன்.

"முடியலேடி, பாக்யம்! அன்னிராத்ரியே, நீங்கள் மாப்பிள்ளையை அழைக்கப்போனதும், நான் ஜோஸ்யன் வீட்டுக்குப் போய்க் குறி கேட்டேன். அவன் சொன்னபடி பலித்ததுதான் எனக்கு விசாரமாய் இருக்கு" என்று அந்த அம்மா சொன்னார்.

"அவன் என்ன சொன்னன்"?

"பொருள் நஷ்டப்படவில்லை. இதனால் குடும்பத்தின் நல்ல பேர்தான் கெட்டுப்போகும் என்றான்."

"அதனாலென்ன?"

"குணவதிதான் அதை எடுத்திருக்கணும் என்றேற்பட வில்லையா?" என்று மெதுவாகக்கூறிக் கண்ணீர்விட்டாள்.

அச்சமயம் நான் தனவதி இருக்கும் பக்கமாகத் திரும்பினேன். அவள் அங்கிருந்த கட்டிலை ஓரமாக இழுத்துக்கொண்டிருந்தாள். ஓர் ஓரமாக இழுத்தபோது பளிச்சென்று ஏதோ விழுந்தது. தன வதி திடீரெனக்குனிந்து அதைக்கையில் எடுத்து மூடிக்கொண் டாள். நான் ஆவலோடு அது என்னவென்று கேட்டேன். அவள் அதை மறைக்கப் பார்த்தாள். அதற்குள் வேலைக்காரி, "அடே! ஏஞ்சாமி! அந்தநகை! யென்ன அது! குணவதி அம்மா மேலே வீண்பழிபோட்டேளே?" என்று கூச்சலிட்டாள். அவள் அழவும் ஆரம்பித்து விட்டாள். குணவதியிடம் அவ்வேலைக் காரிக்கு மிகவும் பிரியமுண்டு.

அதுதான் காணுமற்போன குழந்தை காது டோலக். குழந் தையை அன்று படுக்கவைக்கும்போது காதிலிருந்து கழன்று அந்த ஓரத்தில் விழுந்துவிட்டது. குணவதிமீது ஏற்பட்ட சந்தேகத் தினல் அங்கெல்லாம் அன்று ஒருவரும் கவனித்துத்தேடவில்லை.

குணவதிக்குத் தந்தி கொடுக்கப்பட்டது. அவள் கொடுத்த டோலக்கும் திருப்பியனுப்பப்பட்டது. ஆனல் தந்தி தவிர மற்றது திரும்பி வந்துவிட்டது. குணவதி தாயார் குலதெய்வத்துக்கு அபிஷேகம் செய்து, அனுமாருக்கு வடைமாலையும் சாத்தினள். தனவதி பிரசாதம் தின்றாள். எனக்கும் அப்பிரசாதம் கிடைத்தது.

இது நேர்ந்த ஒருவாரத்திற்கெல்லாம் குணவதி யிடமிருந்து மேற்கூறிய கடிதம் எனக்குக் கிடைத்தது. அந்தச் சமாசாரத்தைக் கேட்ட இரண்டு நாளுக்கெல்லாம் குணவதி தாயார் திடீரென மாரடைப்பால் காலமானார். கிரியைகள் முடிந்ததும் தகப்பனார் பெண்வீட்டுக்குப் புறப்பட்டுப் போய்விட்டார். குணவதி எங்களூர் பக்கம் அப்பால் வரவேயில்லை.

என்ன வெயில்!

ஜோதி

என்னவெயில்! என்னவெயில்! கதிரோன் கோபம்
  இத்தனையேன் உயிர்களின்மேற் காட்டுகின்றான்?
பொன்னைவெளி யினில்வைத்தால் உருகி யோடும்;
  புழுக்கத்தால் உடல்வேர்வை வெள்ள மூழ்கும்;
சின்னவிசி றிகளையசைத் தாட்டிப் பிய்த்துச்
  செய்வதென்ன? காற்றென்னும் பேரு மில்லை;
இன்னமுயன் றிடின்கானற் காற்றே வீசும்;
  என்னவெயில்! என்னவெயில்! என்னே! என்னே!

மூச்சுவிட முடியவில்லை; கண்க ளெல்லாம்
  மூண்டெரிச்ச லடங்கவில்லை; எங்கே னும்போய்
வாச்சபணி செயவென்றால் கீழும் மேலும்
  மண்டுவெயில் உடலையுருக் கிடுமால்; அந்தோ!
சீச்சியிந்த வெயிலோனுக் கிந்தக் காலம்
  சீற்றமிக எவரிழைத்தார் கொடுமை? நீரால்
போச்சுதிந்த வெப்பமென்றே இருப்ப தற்கும்
  போதவில்லை; என்செய்வோம்? என்னே! என்னே!

பார்த்தாலுங் கண்ணெரிச்சல்; நடந்தாற் காலிற்
  படர்எரிச்சல், தலையெரிச்சல்; மேலெல் லாமும்
வேர்த்தாலங் குடம்பெரிச்சல் விசிறிக் காற்றோ
  மிகத்தழலை வீசியள்ளிக் கொட்டும்; நாவில்
நீர்த்தாகம் எதனாலுந் தீர்வ தில்லை;
  நினைந்துநினைந் தேபாழும் வயிற்றில் ஆழி
வார்த்தாலும் வறட்சியடங் கினபா டில்லை
  வையகமே நெருப்புலக மாயிற் றம்மா!

தாமஸ் மூரும் அவருடைய புதல்வியும்

ச. முனிஸ்வாமி பிள்ளை

இங்கிலாந்து தேசத்தை எட்டாவது ஹென்றி என்னும் மன்னன் ஆண்டுவந்தான். அம்மன்னன் செய்த தீச்செயல்கள் பல. அவற்றுள் ஒன்று, அக்காலத்தில் அந்நாட்டில் வாழ்ந்திருந்த குடிகளிற் சிறந்தவரும் மேதாவியும் கனவானுமாகிய ஸர்தாமஸ் மூர் என்பாரைக் கொன்றதே யாகும். இவ்வுலகம் அம்மன்னன் செய்த மற்றெந்தத் தீச்செயல்களை மறந்தாலும், இப்பெரியாரைக் கொன்ற கொடுஞ்செயலைமட்டும் எக்காலத்திலும் மறந்திடாது.

ஸர்ஜான்மூர் என்னும் பெயரினராகிய ஒரு நீதி பதியின் செல்வக் குமாரராய் ஸர்தாமஸ் மூர் என்பார் பிறந்தனர். தந்தையார் உயிரோடிருந்த காலத்திலேயே மகனார் 'லார்டுசான்ஸலர்' என்னும் சிறந்த பதவியைப் பெற்றுத் தமது தந்தைக்கும் தலைவராய் விளங்கினார். அப்பதவியை அவர் பெற்றிருந்தாராயினும் தாம் நீதி மன்றத்திற்குச் செல்லுமுன், தினம் தம்முடைய தந்தையாரைக்கண்டு வணங்கி, அவரெதிரே சென்று முழங்காற் படியிட்டு, "அப்பா! தாங்கள் என்னை ஆசீர்வதித்து, நான் என் வேலையை அறநெறிதவறாது செய்துமுடிக்க வரந்தரவேண்டும்" என்று இரந்துவணங்குவார். தந்தையாரின் ஆசிபெற்ற பின்னரே நீதி மன்றம் செல்வார்.

அந்நாட்களில் தாமஸ் மூருக்கு நிகரான கல்விமான்களைக் காண்பது அரிதாயிருந்தது. 'செல்ஸே' என்னும் தலத்தில் இருந்த அவருடைய மாளிகையில் புகழ்பெற்ற பெரியார் பலர் அவரது ஞானந்ததும்பிய மொழிகளைக்கேட்க ஆவலாய், கூடாத நாளில்லை.

அப்பெரியாருக்கு அறிவிற் சிறந்த மக்கள் பலரிருந்தனர். அன்னவருள் மார்கரித் என்பவள் தந்தையிடத்தில் நிறைந்த விசுவாசமுடையவள். அழகிற் சிறந்த அவள் வில்லியம் ரூபர் என்பானை மணந்துகொண்டாள்.

ஸர்தாமஸ் மூரின் வாழ்க்கை நெறியில் ஹென்றி மன்னன் ஒரு முள்ளாயிருந்தனன். ஹென்றிமன்னன் முதன்முதலில் தன் சகோதரனின் மனைவியாகிய அராகான் நாட்டுக் காதரீனை அவ

ளுடைய கணவன் இறந்த பின்னர், மணந்துகொண்டு அவளோடு இருபது வருடகாலம் வாழ்ந்திருந்தான். பின்பு அவள்மீது சலிப்புற்றுத் தான் அவளை மணக்கவில்லை யென்றும், அவள் தனக்கு நியாயமான மனைவியல்ல வென்றும் சாட்சிகூறக் கோயில் அதிகாரியாகிய போப்பை வற்புறுத்தினன். அதற்குப் போப் இணங்காதது கண்டு, அவரை அதிகாரத்தினின்றும் அகற்றித் தானே கோயிலுக்கும் பாராளுமன்றுக்கும் தலைவன் என்று கூறித் தன்னை அவ்வாறு அங்கீகரித்துக் கொள்ளுமாறு யாவரையும் வற்புறுத்தினன். பின்னர் ஆனிபோலியன் என்னும் சீமாட்டி ஒருத்தியை விவாகம் செய்து கொண்டனன்.

இவனது அடாத செய்கையைக் கண்ணுற்ற தாமஸ் மூர் நல்ல வழியில் மன்னனைக்கண்டிக்க, மன்னன் அவரை லந்தன் கோபுரச் சிறையில் அடைத்தான். மார்கரித் இதனால் மிகவும் மனம் நொந்தவளாய் அவரைப் பல முறையும் சிறையிற் கண்டு கண்ணீர்விட்டுச் செல்வாள். அவருடைய மனைவியாருக்குத் தன் கணவனரின் கூரிய மனச்சாட்சியின் சீரியதன்மை புலப்படாததால் ஒரு நாள் சிறையில் அவரைப்பார்த்து, "தாங்கள் ஏன் இந்தப் பாழும் சிறைச்சாலையில் வாழுகின்றீர்கள். தாங்கள் வெகு எளிதில் அரியாசனத்தமரும் மன்னரோடு சரியாசனத்தில் அமர்ந்திருக்கலாமே" என்றாள்.

அதற்கு அவர், என் ஆருயிர் ஆலிஸ்! நான் இப்பொழுது இருக்கின்ற இந்த வீடு என் சொந்த வீட்டைப் போலவே விண்ணுலகத்திற்குச் சமீபமாயிருக்கவில்லையா என்று தம்மனைவியையும் புதல்வியையும் பார்த்துக் கேட்டார்.

தந்தையாரின் கேள்வியை மார்கரித் நன்றாய் உணர்ந்து கொண்டாள். அவள் தன் தந்தையாருக்குத் தைரியமான வார்த்தைகள் கூறி அவரைத் திடப்படுத்தினள். எனினும், அவளுடைய நெஞ்சம் தகர்ந்துகொண்டே வந்தது.

முடிவில் மன்னன் அவரை விசாரணை செய்வதுபோற் காட்டி மரணதண்டனை விதித்தான். அவர் இராணுவ வீரர்களின் மத்தியில் கைதியாகி மரணதண்டனை யேற்று நிற்கையில், மார்கரித் அவ்வீரர்களை இடித்துத்தள்ளிக்கொண்டு தன் தந்தையாரிடம் ஓடிச் சென்று அவரது கழுத்தைத் தன் இரு கரங்களாலும் இறுகக்கட்டிக்கொண்டு கதறினள். அவர் மகாசாந்தநிலையில் நின்று தமது கையைத் தம் மகள் தலைமீதுவைத்து ஆசீர்வதித்தார். அப்போதும் வெறிகொண்டவள் போல் பலமுறையும் அவரை முத்தாடி, கண்ணீர்பெருகக் கதறினள். அவளது

துயரத்தைக் கண்ணுற்றுக் கன்னெஞ்சராகிய வீரர் எல்லோரும் விம்மி விம்மி அழலாயினர்.

துயர்க்கடலி லாழ்ந்த அம்மகள் பின்னர் தன் மனே சார்ந்தாள். அங்கே ஓர் ஏவலன் அடுப்புக் கரியினுல் எழுதப்பெற்ற ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அக்கடிதத்தில்,

"என் அருமை மகளே! நீ என்னைக் கடைசி முறையாக முத்தாடியதைப் போல நான் உன் மற்றெந்த ஒழுக்கத்தையும் அத்துணைச் சிறப்பாகக் கருதவில்லை. ஏனெனில், புத்திர வாஞ்சைக்கும் கனிந்த அன்பிற்கும் உலகோரின் அபிப்பிராயங்களை எதிர்பார்க்கப் போதிய ஒழிவுகாலமில்லை என்பதை அறிந்து நான் பெரிதும் மகிழ்கின்றேன்.

இங்ஙனம் உன் தந்தை
தாமஸ் மூர்."

என்றெழுதி யிருந்தது.

இம்மகா புருஷரின் தலை ஒருகழியிற் குத்தப்பட்டு லந்தன் நகர்ப்பாலத்தில் யாரும் காணும்படி வைக்கப்பட்டது. எனினும், அது வெகு சீக்கிரம் அவ்விடத்திலிருந்து வெகுமாயமாக மறைந்து போயிற்று. அதனை மார்கரித் எவ்வாறே கவர்ந்து கொண்டனள். வெகு விரைவில் இச்செய்தி மன்னனுக் கெட்டியது.

உடனே அரசனது ஆணையால் போர்வீரர்கள் மார்கரித்தைக் கட்டி யிழுத்துக்கொண்டுபோய் மன்னன் முன்னிலையில் நிறுத்தினர்.

மன்னன் அவளை விசாரித்த பொழுது அவள் அத்தலை தன்னிட மிருப்பதாக ஒப்புக் கொண்டனள். மன்னன் அவளை, "ஏன் அவ்வாறு கவர்ந்து சென்றாய்?" என்று கேட்ட பொழுது அந் நங்கை நல்லாள் கூறிய மொழிகள் லந்தன்மாநகரத்துக் கற்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு நாக்கைக் கொடுத்து அவளது கருத்தைக் கூவி ஒலமிட்டு உரைக்கச் சொல்லும் பெருமையும் ஆண்மையும் துயரமும் பெற்றிருந்தனவாகையால், அவளை அத் தகைய கொடுங்கோல் மன்னனும் தண்டிக்கத் திறனற்றுத் திகைத்துப்போனன். அவள் இறக்கு மட்டும் அப்பெரியாரது தலை அவளிடமே இருந்தது. அவள் இறந்த பொழுது அதனை அவளது கரத்தில் வைத்து அவளோடு அடக்கம் செய்தனர்.

காணிச் சோம்பல் கோடி கேடு

எம். பி. எஸ். துரைசாமிமுதலியார், பி.ஏ., பி.எல்.

நந்தியூர் நீர்வளமும் நிலவளமுமுள்ள ஒரு சிறிய கிராமம். மலையடிவாரத்தி லிருப்பதால் கார் பிசகான காலங்களில் தகுந்தபடி மழை பெய்து எக்காலமும் செழிப்பாயிருந்தது. அந்தச் சிறிய கிராமத்தில் சுப்பாரெட்டியென்ற ஒருகிழவர் இருந்தார். அவர் வாலிப பருவமுதல் தம் குடும்பத்துக்குப் பாத்தியப்பட்ட நன் செய் புன்செய் நிலங்களைச் செவ்வனே பயிரிட்டும், தம்முடைய விடா முயற்சியாலும் பணச்சிக்கனத்தாலும், அக்கிராமத்திலுள்ள மற்ற விபவசாயிகளைப் பார்க்கிலும் செல்வாக்குப் பெற்றிருந்தார்.

அப்படி யிருக்குங் காலையில், ஒருநாள் தம் கிராமத்தி லிருந்து ஒருமைல் தூரத்திலுள்ள கோபாலபுரம் என்ற பட்டணத் திற்கு ஒரு ஜோலியின் நிமித்தம் போயிருந்தபோது, தமக்கு அப் போது அவகாசமிருக்கிறதைக் கவனித்துத் தாம் வெகுகாலமாக யோசனை பண்ணிக்கொண்டிருந்த ஓர் எண்ணத்தைப் பூர்த்தி செய்யத் தீர்மானித்து அப்பட்டணத்தில் கெட்டிக்கார வக்கீலின் பெயரை விசாரித்துச்சென்று அவர் வீட்டினுள் புகுந்தார்.

வக்கீல் ஐயருடைய திண்ணையில் குமாஸ்தாக்களும் கக்ஷிக்காரர் களும் உட்கார்ந்திருந்தார்கள். வீட்டின் தாழ்வாரத்தில் வக்கீல் ஐயர் அன்று நடக்கும் வியாச்சியக்கட்டுக்களைப் பார்த்துக்கொண் டும் அதற்குச் சம்பந்தமுள்ள கக்ஷிக்காரர்களிடம் பேசிக்கொண்டு மிருந்தார். ரெட்டியார் திண்ணையில் உட்காரவும் குமாஸ்தாக்கள் ரெட்டியின் க்ஷேமலாபங்களை விசாரித்தார்கள். அவர்கள் அனாவசியமாகக் கேள்வி கேட்கிறார்களென்று எண்ணங்கொண்டு 'எல்லாம் வக்கீல் ஐயரிடம் சொல்லவேண்டும்' என்னும் ஒரே வார்த்தையாகப் பதிலளித்தார். அங்கிருந்தவர்கள் ரெட்டியைச் சற்றும் கவனியாமல் தங்கள் தங்கள் காரியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நேரமாகவே, கக்ஷிக்காரர்களும் குமாஸ்தாக் களும் கோர்ட்டுக்குப் புறப்பட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள்.

பிரஞ்சுபாஷையிலிருந்த கதையைத் தழுவி எழுதப்பட்டது.

உள்ளேயிருந்த வக்கீல் ஐயர் ரெட்டி தனித்திருப்பதைக் கவனித்து, அவரை உள்ளே கூப்பிட்டு ஓர் ஆசனத்திலுட்காரச் செய்து, வந்த காரியம் என்னவென்று வினவினர். 'சுவாமிகளே! தங்களைப்பற்றி மிகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். தங்களுடைய சாமர்த்தியம் எங்கள் கிராமம்வரை எட்டியிருக்கிறது. இன்று இந்தப் பட்டணத்திற்கு வந்ததில் எனக்குச் சாவகாசம் கொஞ்சமிருப்பதால் அச்சமயத்தில் தங்களைக் கண்டு தங்களிடம் ஓர் அபிப்பிராயம் கேட்டு, நேரத்தை நல்லவழியாகச் செலவழிக்கலாமென்று இங்கு வந்திருக்கிறேன்' என்று ரெட்டி பதிலளித்தார்.

'என்பேரில் பூரண நம்பிக்கையிருப்பதற்கு மிகவும் சந்தோஷம். எனக்குத் திருப்தியாயிருக்கிறது. தங்கள் பேரிலோ, அல்லது தங்களாலோ, இப்பட்டணத்திலுள்ள கோர்ட்டுகளில் வழக்கு நடக்கிறதோ அல்லது நடத்தவேண்டுமோ' என்று ஐயர் வினவினர்.

'வியாச்சியமா! தற்கால வழக்குக்களைக் கேட்கையில் எனக்கு மிகவும் இகழ்ச்சியாயிருக்கிறது. சுப்பாரெட்டி எவ்விஷயத்திலும் எப்பொழுதாவது யாரிடமும் தாவா வைத்துக்கொள்ளுகிறதே இல்லை.'

'நல்லது, தாங்கள் குடும்ப பாகவிஷயமாக வந்த காரியமோ?'

'இல்லை, இல்லை. என் குடும்பத்தில் இரண்டு மூன்றுதலை முறையாக எல்லோரும் ஒற்றுமையாக வாழ்கின்றோம். என் சகோதரர்களாகட்டும், என் பிள்ளைகளாகட்டும். என் சகோதரர்களின் பிள்ளைகளாகட்டும், என் சகோதரர்களின் பிள்ளைகளாகட்டும், எல்லோரும் யாதொரு வித்தியாசமின்றி வாழ்ந்து வருகிறோம்!'

'மிகவும் சந்தோஷம். எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்? ஒருகை முழும்போடுமா, என்ற பழமொழிகள் நம் நாட்டில் வழங்குகின்றன. தற்காலத்தில் அவிபக்த இந்து குடும்பங்களில், பாகப்பிரிவினை வியாச்சியங்கள் பலவிதமாகக் கிளம்புகின்றன. அதெல்லாமிருக்கட்டும். தாங்கள் வந்த காரியம் ஏதாவது நிலக்கிரயச் சம்பந்த விஷயமோ!'

'இல்லவே இல்லை!' என்று ரெட்டி சொல்லவும் வக்கீல் கொஞ்சம் பிரமித்து, மனத்தைச் சமாதானம் பண்ணிக்கொண்டு, தங்களுக்கு வேண்டுவது யாது? அதை வக்கீலிடமோ டாக்டரிடமோ, யாதொரு மறைப்பின்றிச் சொல்லலாம். தாங்கள்

சொல்லுவதைக்கேட்டு, எங்கள் யுக்தியாலோ சட்டபுஸ்தகங்களி லுள்ள அறிவின் நுட்பத்தாலோ தங்களுக்குத் தகுந்தபடி அபிப் பிராயம் சொல்லத் தயாராக முடியும்.'

இது சொன்னதும், ரெட்டி நகைத்து, 'நான் முன்னமே தங்களிடம் சொன்னேன். எனக்கு ஓர் அபிப்பிராயம் வேண் டும். அதற்குத் தாங்கள் பிரியப்படுகிற பணம் கொடுக்கச் சித்த மாயிருக்கிறேன். நான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தை நல்ல வழியில் பிரயோசனமாகச் செலவழிக்கவேண்டும். நான் சொல்வது ஐயரவர்களுக்குத் தெரிகிறதல்லவா!' என்று ரெட்டி தடுமாறிச் சொன்னார்.

வக்கீல் அடக்கமுடியாத சிரிப்பை அடக்கிக்கொண்டு இதுவும் ஒரு தொழிலென்று யோசித்து, அருகேயிருந்த காகிதத்தில் எழுதத் தொடங்கியவர், கக்ஷிக்காரரின் பெயரை வினவினார்.

'என்பெயர், சுப்பாரெட்டி.'

'தங்கள் வயது?'

'50 அல்லது 52 இருக்கும்.'

'தங்கள் உத்தியோகம்?'

'என்உத்தியோகமா? நான் என்னவேலை பார்க்கிறேன் என்று கேட்கிறீர்கள்? ஒரு குடியானவன் நான்.'

இவ்வளவு கேட்டவுடன் ஒரு காகிதத்தில் எழுதி அதை ஒரு பையில் போட்டு ஒட்டி ரெட்டியிடம் கொடுத்தார்.

கொடுக்கவும், 'முடிந்துவிட்டதா! நல்லது. என்ன கொடுக்க வேண்டும்' என்று ரெட்டி கேட்டார்.

'பத்து ரூபாய்' என்று வக்கீல் சொல்லவும், அதைச் சந்தோஷ மாகவும் திருப்தியுடனும் கொடுத்துவிட்டு, வக்கீலையர் வீட்டை விட்டுப் புறப்பட்டார். 'இந்தச் சமயத்தை மிகவும் திருப்திகர மாகச் செலவழித்தேன்' என்ற சந்தோஷத்துடன் தன் கிராமத் திற்கு வந்து சேர்ந்தார். பட்டணம்போன அலுப்பினால் அன்று வீட்டிலே யிருந்து களைப்பைத் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்று யோசித்து அயர்ந்து படுத்திருந்தார்.

அந்தக் காலம் புரட்டாசிமாசம். கார் மாசூல் அறுவடை யாகிக் கொண்டிருந்தது. சில நாட்கள் மழை இடை விடாது பெய்து பிறகு ஒருநாள் வெயிலடித்துக் கொண்டிருந்தது. முன் நடந்த அறுவடைகளில் போரடித்த வைக்கோல் நனைந்துபோய் அன்று உலர்த்திக் காயப்போடப்பட்டு நல்ல சரக்காக வேண்டிய

பருவமாயிருந்தது. அந்தச் சமயத்தில் ஒருபையன் ஓடிவந்து 'காய்ந்த வைக்கோல் படைப்பு அடையவா?' என்று கேட்டான். 'நாளைக்குச் செய்யலாம்; இன்று நேரமாய் விட்டது' என்று ரெட்டியின் மனைவி சொன்னாள்.

'வெயில் இன்று கொடூரமாயிருக்கிறது. கீழ்காற்று அடித்துக் கொண்டிருக்கிறது. ஈசானியத்தில் மேகங்கள் திரள் திரளாகக் கூடி யிருக்கின்றன; மழை வரும்போல் குறிகள் காண்கின்றன. ஆட்களும் வண்டியும் தயாராயிருக்கின்றன' என்று பையன் சொல்லியும், ரெட்டியின் மனைவி தன் கணவன் பட்டணம் போய்வந்த பிரயாண அலுப்புத் தீரவேண்டுமென்று நினைத்து அன்று வைக்கோல் ஒன்று சேர்க்க விரும்பவில்லை.

இதை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ரெட்டி முதலில் என்னசெய்வது என்று திகைத்து, அடுத்த நிமிஷத்தில் திடீரென்று ஒரு யோசனை ஞாபகத்திற்குவரப் பையனையும் தம்மனைவியையும் அருகே அழைத்து, 'பொறுங்கள், நான் இன்று ஒரு பெரிய கன வானிடம் பத்துரூபாய் செலவழித்து ஓர் அபிப்பிராயம் வாங்கி வந்திருக்கிறேன். நம்முடைய கஷ்டத்தை இப்போதே நிவிர்த்திக் கும்' என்று கூறித் தான் கொண்டுவந்த காகிதத்தைப் பையனிடத் தில் கொடுத்து வாசிக்கச் சொன்னார்.

பையன் உறையைக்கிழித்து உள்ளே இருந்த காகிதத் துண்டை எடுத்து, 'சுப்பா ரெட்டியாரே! காணிச்சோம்பல் கோடி கேடு' என்று வாசித்தான்.

இதைக்கேட்டதும், ரெட்டிக்கு உற்சாகங்கிளம்பி, 'எனக்கு யோசனை வந்துவிட்டது. பையா, எல்லாம் தயாராயிருக்கட்டும். நான் இப்போதே வந்துவிடுகிறேன். எல்லாரும்போய் உலர்ந்த வைக்கோலைக் கொண்டுவந்து படைப்பு அடைத்து விடவேண்டும்' என்று சொன்னார்.

அவருடைய மனைவியோ ரெட்டியைத் தடுக்க முயன்றதில், 'பத்துரூபாய் செலவழித்து வாங்கிய அபிப்பிராயத்தின்படி நடக்கவேண்டும்' என்று சொல்லி வெளியே புறப்பட்டார்.

புறப்பட்டவர் ஆட்களையும் வண்டிகளையும் சேர்த்துக் காய்ந்த வைக்கோற்கட்டுகளை ஒருங்குதிரட்டி அன்று இரவுக்கு முன் படைப்பு அடைத்து மழை பெய்தாலும் சேதமாகாதபடி முகடுபோட்டுப் புரிபோட்டு முடித்தபின் வீடு திரும்பினார்.

அன்றிரவில் காற்று மும்மரமாய் வீசவே மழையும் பாட்டம் பாட்டமாகப் பொழிந்து, எங்கே பார்த்தாலும் வெள்ளக்காடாக

இருந்தது. அந்தக் கிராமத்தினருகே ஓடிக்கொண்டிருந்த நதியில் பிரவாகம் கரைகளை உடைத்துக்கொண்டு அக்கம்பக்கத்திலுள்ள இடங்களில் பரந்தோடி அங்கிருந்த மாசூல், வைக்கோல் முதலிய வற்றை யிழுத்துக்கொண்டு சென்றது; மற்றக் குடியானவர் களுக்குப் பெருத்த நஷ்டம் விளைவித்தது. அவர்கள் அங்கங்கு வைத்திருந்த வைக்கோற் சூடுகளை, இழுத்துக்கொண்டு போய் விட்டது. ஆனால் ரெட்டிக்கு யாதொரு சேதமுமில்லை.

இந்தக் கைகண்ட அநுபவமானது ரெட்டிக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. மறவாமல், வக்கீல் ஐயர் கொடுத்த அபிப் பிராயத்தைத் தம் வாழ்நாள் நடக்கைக்கு ஒரு வழிகாட்டியாக வைத்துக்கொண்டு, அதை அநுசரித்துக் காலங்கழித்து வந்தார். நாள் ஆக ஆக ரெட்டி பெருத்த பணக்காரரானார். தம் நன்றி யறிதலைக் காட்ட வருஷந்தோறும் ஒருவண்டி ஆனைக் கொம்பன் நெல் நல்ல தினுசாக வக்கீலையருக்கு அனுப்பி வந்தார்.

இரும்பு

இரும்பு ஆகாரத்தின் முக்கிய உலோகச்சத்தாகும். இது ரத்தத்துக் குச் சிவப்புவர்ணத்தைக் கொடுக்கிறது. பிராணவாயு சுவாசாசயத்திலிருந்து பல பகுதிகளுக்குச்செல்ல உதவுகிறது......வளர்ந்தவர்களைவிட வளருபவர்க ளுக்கு இது அதிகம் தேவையாகிறது. ஆகாரத்தில் போதிய அளவு இரும்பு இல்லாவிட்டால் இரத்தம் வலிவு குறைவதுடன், பிராணன் சரியான நிலை யில் நிற்கப் பிராணவாயுவும் இல்லாது குறைகிறது. அதனால் வலிவின்மை யும் ஓய்ச்சலும் நாம் உணருகிறோம்......கல்லீரல், சிவப்பு ஊன், முட்டைகள், பருப்புக்கள், நவதான்யங்கள், பசளைக்கீரை, வெங்காயம், முள்ளங்கி, வெள்ளரி, பூஷணி, வெள்ளுள்ளி, கீரை, தக்காளி முதலியவை களில் வேண்டிய இரும்பு இருக்கிறது. —உணவு.



மோகினியும் மோதிரமும்

வி. விசாலாக்ஷியம்மாள்

சோமசுந்தரத்தின் தாய் தகப்பன்மார்கள் அவனுடைய சிறு வயதிலேயே இறந்துபோய்விட்டார்கள். அவனுடைய தாய் மாமன் ராமநாதன் அவனை வளர்த்துப் படிப்பித்து, அவன் தகப்பன் வைத்துவிட்டுப்போன ஏராளமான பொருள்களை மேல் பார்வை இட்டுவந்தான். இப்பொழுது, சோமசுந்தரம் எம். ஏ. பரீக்ஷையில் முதல்தரமாகத் தேறி, விடுமுறை நாட்களைத் தன் மாமன் வீட்டில் கழித்தான். விடுமுறை நாட்கள் முடிவதற்குள் அவனுக்கும், அவனுடைய மாமனின் செல்வக் கடைக்குட்டி குமுதாவுக்கும் மணம் செய்வது என்று ஏற்பாடாயிருந்தது. தன்மாமன் பிள்ளைகள், சிநேகிதர்கள், குமுதா, அவளுடைய சகோதரிகளாகிய இவர்களுடன் டென்னிஸ் ஆடுவதிலும், இரண்டு மைலுக்கு அப்பால் உள்ள ஏரிக்கு அவர்களை அழைத்துச் சென்று, படகில் உல்லாசமாகச் செல்லுவதிலும், சோமசுந்தரம் வேடிக்கையாகக் காலத்தைக் கழித்தான்.

ராமநாதன் வீட்டுத் தோட்டத்தில் டென்னிஸ் மேடையின் அருகில், ஒரு மோகினியின் சிலை வைத்திருந்தது. இந்தச் சிலை வார்ப்படம். அநேக வருஷங்களுக்குமுன், அந்த ஊரில் ஒரு பிரபல கனவான், மஞ்சள் காகிதத்தை நீட்டிவிட்டதன் பலனாக அவருடைய ஆஸ்திகளை ஏலம் போட்டபொழுது, சொற்ப தொகைக்கு ராமநாதன் இந்தச் சிலையை வாங்கிவந்தான். மோகினி ஒரு கையை இடுப்பில் வைத்துக்கொண்டு, மற்றொருகையில் கிளி ஏந்தி இருந்தாள். ராமநாதன் வீட்டில் இந்தச் சிலையைக் கவனிப்பாரே கிடையாது. டென்னிஸ் ஆடிவிட்டு, அதற்கு எதிரில் உட்

கார்ந்து இளைப்பாறும் சோமசுந்தரத்தின் மனத்திற்கு மட்டும், மோகினி ஒருவேளை தன்னைப் பார்த்துச் சிரிப்பது போலும், ஒரு வேளை கோபமாகப் பார்ப்பதுபோலும், சிலவேளை உருகிய கனிந்த பார்வையுடன் நோக்குவது போலும் தோன்றும். இந்த எண்ணங்களை வெளியில் சொன்னால் வெட்கக்கேடு என்று சும்மா இருந்து விட்டான்.

கலியாணத்திற்கு மூன்று தினங்களுக்கு முன் சோமசுந்தரம் வழக்கம்போல் டென்னிஸ் ஆடிக்கொண்டிருந்தான். அன்று காலையில் அவன் தன் தாயாரின் நகைப்பெட்டியை எடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தான். குமுதாவுக்குக் கொடுக்கக்கூடிய நாசூக்கான நகை ஏதாவது இருக்கின்றதா என்று பார்வை யிட்டான். அதில், விசித்திரமான வேலைகள் செய்த தங்க மோதிரம் ஒன்று இருந்தது. அதை எடுத்துத் தன்விரலில் மாட்டிக் கொண்டான். டென்னிஸ் ஆடும்பொழுது, மோதிரம் விரலில் உறையவே, அதைக் கழற்றி, கிளி ஏந்திக்கொண்டிருந்த மோகினி யின் விரலில் சோமசுந்தரம் மாட்டினான். அப்பொழுது, தன்னை அறியாமலே, 'மரணம் நம்மைப் பிரிக்கும் வரையில்' என்று, கிறிஸ்தவ மதத்தினரின் கலியாணச் சடங்கின் ஒரு பாகத்தை முணுமுணுத்துக் கொண்டான்.

டென்னிஸ் முடிந்ததும், எல்லாரும் உல்லாசமாகப் பேசிக் கொண்டு உள்ளே சென்றார்கள். நடு இரவில்தான் மோகினியின் விரலில் தான் மாட்டின மோதிரத்தின் நினைவு சோமசுந்தரத்திற்கு வந்தது. முதலில், காலையில் சென்று எடுத்துக்கொள்ளலாம் என்று எண்ணினான். தூக்கம் பிடிக்கவில்லை. சந்தடி செய்யாமல் வெளியே வந்து, டென்னிஸ் கோர்ட்டுக்குச் சென்றான். நிலா வெளிச்சம் தாவள்ளியமாக வீசிக்கொண்டிருந்தது. மோகினியின் முகத்தில் ஒருவிதமான வசீகரப் புன்னகை தவழ்வதுபோல் சோம சுந்தரத்தின் மனத்திற்குத் தோன்றியது. அருகில் சென்று மோதி ரத்தைக் கழற்ற முயன்றான். ஸ்தம்பித்து நின்றான். கனவா நினைவா என்று தயங்கினான். நீட்டி யிருந்த விரலை மோகினி மடக்கிக் கொண்டிருந்தாள். மோதிரத்தைக் கழற்ற முடியவில்லை.

மறுநாள் யாரும் அறியாமல் மோதிரத்தைக் கழற்றச் சோம சுந்தரம் பலமுறை முயன்றான். உளியை எடுத்து விரலை உடைத் தால் ஒழிய முடியாது என்று தோன்றிற்று. மோகினியின் முகத்தில் கோபாக்கினி ஜொலிப்பதாகச் சோமசுந்தரம் எண்ணி னான். கலியாண கலாட்டா முடிந்தபின், சாவகாசமாக, இதைப் பற்றிப் பரீக்ஷை செய்யலாம், என்று ஒருவாறு மனத்தைத் திடப்

படுத்திக்கொண்டு, குமுதாவுக்கு ஒரு புதிய வைர மோதிரம் வாங்கினான்.

கலியாணம் சிறப்பாக நடந்தது. மணமக்கள் பள்ளி அறைக்குச் சென்றனர். அனைவரும் களைப்புடன் நித்திரைக்குச் சென்றனர். நடு இரவில் காற்றும் மழையும் கிளம்பிற்று. யாரோ நடந்து, பள்ளி அறைப்பக்கம் போவதுபோல் சத்தம் கேட்ட தாகப் பிறகு சிலர் சொன்னார்கள். காலையில் மணப்பெண்ணும், பிள்ளையும் எழுந்துவரவில்லை. முதலில் எல்லாரும் பரிகாச மாகப் பேசிக் கொண்டார்கள். பிறகு, சற்றுக் கவலையுடன் ராம நாதனின் மனைவி கதவைத் தட்டினாள். பதில் இல்லாமல் போகவே, திகிலுடன் கதவை உடைத்தார்கள். படுக்கையில் இருவரும் என்றும் எழாத துயிலில் அமிழ்ந்து கிடந்தார்கள். அவசரமாக அழைக்கப்பட்ட வைத்தியர், ஏதோ ஒரு தாங்கமுடியாத அதிர்ச் சியே இருவர் மரணத்திற்கும் காரணம் என்று சொன்னார். அவர் களுக்கு நடுவில், விசித்திரமான வேலைகள் செய்யப்பட்ட மோதிரம் ஒன்று கிடந்தது. கிளி ஏந்தி இருந்த தன் கை விரலை மோகினி வழக்கப் பிரகாரம் நீட்டிக்கொண்டிருந்தாள்!

இது ஒரு மேல் நாட்டுக் கதை. காதல், அன்பு, ஆசை, வாஞ்சை, சிநேகம் முதலியவைகளை மனிதர்களுக்கு இயற்கையில் உண்டாக்கும் ஓர் உணர்ச்சியின் பலவிதமான வெளித்தோற்றங் கள், அல்லது அம்சங்கள் என்று கூறலாம். யௌவன வயதுள்ள ஸ்திரீ புருஷர்களுக்குள் ஏற்படும் பிரியத்தைக் காதல் என்றும், தாய் தகப்பன், சகோதர சகோதரிகள்மேல் உண்டாகும் பிரி யத்தை அன்பு என்றும், பெற்றோர்களுக்குக் குழந்தைகள்மேல் ஏற்படும் வாத்ஸல்யத்தை வாஞ்சை என்றும், சமவயதுடையவர் களுக்குள் ஏற்படும் பிரியத்தைச் சிநேகம் என்றும், காலத் திற்கும் இடத்திற்கும் தகுந்தாற்போல் வித்தியாசப்படுத்திச் சொல்லுகிறோம்.

காதலும் வாஞ்சையும், புருஷர்களைவிட ஸ்திரீகள் இடத்தில் அதிகமாக லயித்துக் காண்கிறது என்றும் கூறலாம். இதுபற்றியே 'காதல் ஒரு ஆடவனின் வாழ்க்கையில் ஒருபாகம், இது ஒரு ஸ்திரீ யின் உயிர்நிலை' என்ற மேல்நாட்டுப் பழமொழி ஏற்பட்டுளது. இந்த உணர்ச்சியானது ஆக்கவும் அழிக்கவும் வன்மை உள்ளது. மேலும், இந்தக் காதலானது, தான் காதலிக்கும் பொருளை முற்றிலும் தானே அனுபவிக்க வேண்டும் என்று பிரியப்படும் குணமுடையது. தன் காதல் அல்லது வாஞ்சையானது அவமதிக் கப்பட்டது என்ற எண்ணமே, மனிதர்களைப் பழிவாங்கும்படித்


தூண்டுவது; இவ்விதம் தாங்கள் செய்வதனால் தங்களுக்கே கெடுதல் விளைவதையும் பாராட்டாமல், தன்னுடைய சிநேகத்தை முதலில் பெற்றுப் பிறகு, அதை அவமதித்த ஆளை எவ்விதமாகவாவது தண்டிக்கவேண்டும் என்ற அவா மனிதர்கள் மனத்தில் உதிக்கும்படிச் செய்யும் சக்தி பெற்றது. இதைக் காதலின் கீழ்நோக்கம் என்றும் கூறலாம். மோகினியின் உருவத்தை இதற்கு ஒப்பிடலாம்.

இதே காதல் மேல்நோக்கிச் செல்லும் பொழுது, எதையும் லக்ஷியம் செய்யாமல், தன்வாஞ்சைக்குப் பாத்திரமான ஆளின் நன்மையின் பொருட்டு, எவ்விதக் கஷ்டத்தையும் மனிதர்களைச் சகித்துக் கொள்ளும்படிச் செய்கின்றது. தன் குழந்தையோ, காதலனோ, சிநேகிதனோ, தாய்தகப்பன்மார்களோ, ஓர் ஆபத்தில் இருந்து தப்புவதன் பொருட்டு, உயிர்த்தியாகம், தன் வாழ்க்கையின் லக்ஷியம் என்று கருதிய பொருளின் தியாகம், எதிலும் மேலாக மதிக்கும் மானத்தைக்கூடத் தியாகம் செய்துவிடும்படி மனிதர்களைத் தூண்டுவது இந்த உணர்ச்சிதான். இத்தருணங்களில் இது பொலிவுற்று விளங்குவதாகக் கூறலாம்.

ஒப்புமைக் கருத்து

சடில மன்றுபைங் தார்குழற் பின்னல்கார்
மிடறு தோன்றல் விடமன்று நானமே
உடல்வி ளர்ப்புவெண் ணீறன் றுருவிலாய்
அடர்வ தென்னை அரனலன் காண்டியால். (நைடதம்)

𑌜𑌟𑌾 𑌨𑍇𑌯𑌂 𑌵𑍇𑌣𑍀𑌕𑍃𑌤𑌕𑌚𑌕𑌲𑌾𑌪𑍋 𑌨 𑌗𑌰𑌲𑌂
𑌗𑌲𑍇 𑌕𑌸𑍍𑌤𑍂𑌰𑍀𑌯𑌂 𑌶𑌿𑌰𑌸𑌿 𑌶𑌶𑌿𑌲𑍇𑌖𑌾 𑌨 𑌕𑍁𑌸𑍁𑌮𑌮𑍍 ।
𑌇𑌯𑌂 𑌭𑍂𑌤𑌿𑌰𑍍𑌨𑌾𑌙𑍍𑌗𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌰𑌹𑌜𑌨𑍍𑌮𑌾 𑌧𑌵𑌲𑌿𑌮𑌾
𑌪𑍁𑌰𑌾𑌰𑌾𑌤𑌿𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌕𑍁𑌸𑍁𑌮𑌶𑌰 𑌕𑌿𑌂 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌹𑌰𑌸𑌿 ॥



மூஷிக விவாகம்

என். ஆர். சேஷாசாரி

ஊரூர் என்னும் குக்கிராமத்தில் மனித ஸஞ்சாரமில்லாத ஒரு குட்டிச் சுவரில் ஆணும் பெண்ணுமாக இரண்டு பெருச்சாளிகள் வளை தோண்டிக்கொண்டு அதில் சௌக்கியமாய் வாழ்ந்து வந்தன.


நெடுநாள் கழித்து அவைகளுக்கு ஒரு பெண் பிறந்தது. குட்டிப் பெருச்சாளி மிகச் செல்வமாய் வளர்ந்து பெரிய பெருச்சாளி ஆயிற்று. கலியாணம் செய்யவேண்டிய வயது வந்ததும், "நம்முடைய அருமைப் பெண்ணுக்கு நல்ல வரன் கிடைக்க வேண்டுமே" என்ற கவலையே பெற்றோர்க்குப் பெரிதாய் விட்டது. தெரிந்தவர்களிடத்திலும், அறிந்தவர்களிடத்திலும், சிநேகிதர்களிடத்திலும், பந்துக்களிடத்திலும் சொல்லிவைத்தன. சில சில வரன்கள் கிடைத்தன. ஆனாலும், "கண்ணுக்குப் பிள்ளை அழகாயில்லை"; "பெரிய இடத்துப் பிள்ளையாயில்லை"; "பிள்ளைக்கு வயது ஈடாகவில்லை"; "அவ்வளவு சாமர்த்திய சாலியாயில்லை" என்பனபோன்ற பல பல காரணங்களைச் சொல்லி, பெருச்சாளி தாய் தந்தையர் பெண்ணைக் கொடுக்கச் சம்மதிக்க வில்லை.

"இப்படி யெல்லாம் தாமதம் செய்வதில் பிரயோஜனமில்லை. பிறர் கையை எதிர் பார்ப்பது முட்டாள் தனமாகும். தன் கையே தனக்கு உதவவேண்டும். நாமே நேரில்போய் விசாரித்து மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுப்பதே நல்லது" என்று அப்பா பெருச்சாளி சொல்லிற்று.

அதற்குத் தாய்ப் பெருச்சாளி, "வாஸ்தவம்! நானும் அதைத் தான் சொல்ல வாயெடுத்தேன். நமது குழந்தைக்கு ஜோடியான அழகன் ஸூரியன் ஒருவன் தான். எப்படியாவது அவனையே நம்

முடைய மாப்பிள்ளையாகச் செய்யவேண்டும். குழந்தையையும் சிங்காரித்து அழைத்துக்கொண்டு போய்க் கேட்கலாம் வாருங்கள்'' என்று சொல்லிற்று. பெருச்சாளிக் கன்னிகையை விலை உயர்ந்த ஆடை ஆபரணாதிகளால் அலங்கரித்து அழைத்துக்கொண்டு அப்பா பெருச்சாளி, அம்மா பெருச்சாளி, குட்டிப் பெருச்சாளி ஆகிய மூன்றும் ஸூரியனிடம் சென்றன. ஸூரியனும் அவர்களைக் கண்டதும் க்ஷேமம் விசாரித்து "வந்த காரியம் என்ன?" என்று கேட்டான்.

அப்பா பெருச்சாளி ஸூரியனைப் பார்த்து,



"பகலவனே! பகலவனே!
பகல் வெளிச்சம் தருபவனே!
இந்த எங்கள் பெண்ணரசி
பெருச்சாளிக் கன்னிகையை
நீ மணந்து தாலி கட்டி
மாப்பிள்ளை ஆவாயோ?
தட்டுகளும் முட்டுகளும்
தானியமும் பழவகையும்
வற்றல்களும் வடகங்களும் வேண்டுமென்ற பக்ஷணமும்
கந்தல்களும் பஞ்சுகளும் கனத்த அட்டைப் புஸ்தகமும்
வெண்ணெய்ரொட்டித் துண்டுகளும் விதவிதமாய் எண்ணெய்களும்
சீதனமாய் நான்கொடுப்பேன் சிறப்பான மாப்பிள்ளையே!"

என்று சொல்லிற்று.

அதைக் கேட்ட ஸூரியன்,

"மணமகளின் தாயாரே! கன்னிகையின் தந்தையரே!
கலியாணப் பெண் அழகில் குறைவொன்று மில்லைகாணும்,
கண்ணுடிக் கண்ணழகி, களா இலைக் காதழகி,
நீண்ட மீசை மூக்கழகி, சிவந்ததொரு வாயழகி,
கூனல் முதுகழகி, நீண்டுருண்ட வாலழகி,
அழகிக்கேற்ற மணவாளன் நானல்ல மூஷிகரே!
மேகம் படர்ந்துவந்தால் என்கதியைப் பார்த்தீரோ?
மறைந்து திரியவேணும் இருந்தஇடம் தெரியாமல்
அதுவே சிறந்தது நீர் அதனிடமே போங்காணும்''

என்று பதில் கூறியது.

பிறகு மூன்று பெருச்சாளிகளும் மேகத்தினிடம் சென்றன. அப்பா பெருச்சாளி மேகத்தைப் பார்த்து,



"கார்மேகப் பெயரோனே!
திருமால் நிறத்தோனே!
இந்தளங்கள் பெண்ணரசி
பெருச்சாளிக் கன்னிகையை
நீ மணந்து தாலி கட்டி
மாப்பிள்ளை யாவாயோ?
மாப்பிள்ளை நீயானல் மகிழ்வாக
உன்றனுக்குச்
சீதனமாய் நான் கொடுப்பேன் சிறப்பான பொருள்களையே"

என்று கேட்டது.


அதைக் கேட்ட கார்மேகம் புன் சிரிப்புச் சிரித்து,

"மண மகளின் தாயாரே! கன்னிகையின் அப்பாவே!
கலியாணப் பெண்அழகில் குறைவொன்று மில்லைகாணும்;
அழகிக்கேற்ற மணவாளன் நானல்ல மூஷிகரே!
பெருங்காற் றடிக்கையிலே என்கதியைப் பார்த்தீரோ?
அங்குமிங்கும் ஓடவேணும் அலைந்து திரியவேணும்
தூற்றலும் தும்மலுமாய்த் துளிதுளியாய்ப் பெய்யவேணும்
அதுவே பலவான்காண் அதனிடமே போங்காணும்"

என்று பதிலுரைத்தது.

மூன்று பெருச்சாளிகளும் அங்கிருந்து வாயுபகவானிடத்திற்குச் சென்றன. அப்பா பெருச்சாளி சூறுவளியாரைப் பார்த்து,

"சூறுவளியாரே!
சுகவாயு பசவானே!
இந்தளங்கள் பெண்ணரசி
பெருச்சாளிக் கன்னிகையை
நீர் மணந்து தாலி கட்டி
மாப்பிள்ளை யாவீரோ?
மாப்பிள்ளை நீரானல்
மணமுள்ள பலபொருளைச்
சீதனமாய் நான் கொடுப்பேன்
சிறப்பான மாப்பிள்ளையே!"




என்றது. அதற்கு வாயுபகவான்,

"மண மகளின் தாயாரே! கன்னிகையின் அப்பாவே!
கலியாணப் பெண்ணழகில் குறைவொன்று மில்லைகாணும்;
அழகிக்கேற்ற மணவாளன் நானல்ல மூஷிகரே!
மொட்டைக் குட்டிச் சுவர்கண்டால் என்கதியைப் பார்த்தீரோ?
மண்டியிட்டு முட்டவேணும் மண்டை யுடையவேணும்
அதையிடிக்க மாட்டாமல் அப்படியே நிற்கவேணும்
அதுவே பலவான்சாண் அதனிடமே போங்காணும்"

என்று சமாதானம் கூறியது.

உடனே மூன்று பெருச்சாளிகளும் மொட்டையான பெரிய குட்டிச்சுவர் ஒன்றைக் கண்டன. அப்பா பெருச்சாளி அதனிடம்,



"குட்டிச் சுவராரே!
கொழுத்தகளி மண்ணாரே!
இந்த எங்கள் பெண்ணரசி
பெருச்சாளிக் கன்னிகையை
நீர் மணந்து தாலி கட்டி
மாப்பிள்ளை யாவீரோ?
மாப்பிள்ளை நீரானல்
மகத்தான பொருள்களையே
சீதனமாய் நான்கொடுப்பேன்
சிறப்பான மாப்பிளையே"


என்று பகர்ந்தது.

அதைக் கேட்ட குட்டிச்சுவர் கோபத்தினல் முகத்தைச் சுளித்துக் கொண்டு,

"மணமகளின் தாயாரே! கன்னிகையின் அப்பாவே!
கலியாணப் பெண்ணழகில் குறைவொன்று மில்லைகாணும்
அழகிக்கேற்ற மாப்பிள்ளை நானல்ல மூஷிகரே!
உங்கள் இனத்தார்முன் என்கதியைப் பார்த்தீரோ?
குண்டுப் பெருச்சாளியும் நீண்மூக்கு மூஞ்சூறும்
கனத்தஎன் உடல்மேலே தோண்டும்வளை கணக்கேது?
அவர்கள் பலவான்கள் அவர்களிடம் போங்காணும்"

என்று விடையளித்தது.

உடனே அப்பா பெருச்சாளி வளைக்குள் எட்டிப் பார்த்தது. அங்கே பலபெருச்சாளிகள் இருப்பதைக்கண்டது.




"எங்கள் இனத்தாரே!
மேன்மையான குலத்தாரே!
இந்த எங்கள் பெண்ணரசி
பெருச்சாளிக் கன்னிகையை
ஒருவர் வந்து தாலிகட்டி
மாப்பிள்ளை யாவீரோ?
தட்டுகளும் முட்டுகளும்
நல்ல நவதானியமும்
வற்றல்களும் வடகங்களும் வேணுமான பக்ஷணமும்
கந்தல்களும் பஞ்சுகளும் கனத்த அட்டைப் புஸ்தகமும்
வெண்ணெய்ரொட்டித் துண்டுகளும் விதவிதமாய் எண்ணெய் களும்
சீதனமாய் நான் கொடுப்பேன் சிறப்பான மாப்பிளைக்கே"

என்று கேட்டது.

கலியாணப் பேச்சைக்கேட்டதும் வளையிலுள்ள எலியினம் எல்லாம் வெளியேவந்தன; அளவற்ற சந்தோஷங் கொண்டன.

"குண்டுப்பெருச் சாளியெல்லாம் குட்டிக்கரணம் போட்டனவாம்
சுண்டெலிகள் ஒன்றுகூடிச் சுற்றிச்சுற்றி ஓடினவாம்
மூஞ்சூறுகள் முடுக்காக மீசை முறுக்கினவாம்
சிட்டெலிகள் கிட்டச்சென்று கீச்கீச்சென்றனவாம்
வெள்ளெலிகள் வெளியேவந்து விரைத்துவிரைத்துப் பார்த்தனவாம்
பேரெலிகள் எழும்பியெழும்பிப் பாங்காகக் குதித்தனவாம்
நாட்டெலிகள் கூடிக்கூடிப் பாட்டுப்பாடி நின்றனவாம்
நகரத்தெலி பெண்ணைக்கொடு என்றுமே கேட்டதாம்."

அப்பொழுது ஒரு மொழுமொழு மூஷிகத்துக்குத் தங்கள் கன்னிகையை விவாகஞ் செய்துகொடுப்பதாகத் தாய்ப் பெருச்சாளியும் தகப்பன் பெருச்சாளி யும் நிச்சயம் செய்தன. பந்து மித்திரர்களுக்கு முகூர்த்தப் பத்திரிகைகள் அனுப்பப் பட்டன. பந்தல் படிகளெல் லாம் விசித்திரமாய் அலங்கரிக் கப்பட்டன. திரள் திரளாய் எலி வர்க்கங்கள், பல இடங்களி லிருந்தும் வந்து சேர்ந்தன. மேள தாள பேரிகை முழக்கத்துடன்



நல்ல முகூர்த்தத்தில் குண்டுப் பெருச்சாளிக்கும் பெருச்சாளிக் கன்னிகைக்கும் விவாகம் வெகு விமரிசையாய் நிறைவேறியது.

"வந்தவர்களும் போனவர்களும் வயிறு புடைக்கத் தின்றாராம்
நின்றவர்களும் இருந்தவர்களும் பாட்டுக்கச்சேரி கேட்டாராம்
ஏழையெலியும் பாழையெலியும் மூட்டைகட்டிக் கொண்டனவாம்
தோப்பை எலியும் தோந்தி எலியும் படுத்துப்புரண்டு உருண்டனவாம்
நாட்டெலிகள் பலவுங்கூடி நல்லகதை படித்தனவாம்
காட்டெலிகள் மேட்டிமையாய்க் கட்டுக்கதை பேசினவாம்
வீட்டெலிகள் நெட்டிப் பேசிச் சீட்டாட்டம் ஆடினவாம்.

அந்த வேளை அங்கே ஒரு
குண்டுப் பூனை வந்ததாம்
பார்த்த வுடன் அத்தனை
யும் பாய்ந்து ஓடிப் பதுங்
கினவாம்."



இந்தியாவுக்குப் பொதுமொழி அவசியம்

சுமார் ஆயிரம் வருடங்களுக்குமுன் முஸ்லிம்கள் இந்தியாவுக்கு வந்தார்கள். அவர்களுடைய கலையும் நாகரிகமும் பெரும்பாலும் அரபி பார்ஸீ துருக்கிகளாகவே இருந்தன. அவர்கள் எண்ணூறு வருடம் வரை இந்தியாவை ஆண்டுவந்தனர். ஆனால், இற்றைக்கு இந்தியாவைச் சுற்றிப் பார்ப்போமானால் அவர்களுடைய அரபி பார்ஸீ துருக்கி முதலிய பாஷைகளைத் தாய்ப்பாஷையாகக்கொண்டு அனுஷ்டித்துவரும் மக்கள் இவ்வகண்ட இந்தியாவுக்குள் எங்கும் காணப்படவில்லை. இதற்கு மாறாக இவ்விந்திய தேசத்திலுள்ள பற்பல பாஷைகளை ஒன்று திரட்டிப் பாரஸீக அக்ஷரத்தால் எழுதப்படும் உர்து என்னும் ஹிந்துஸ்தானி பாஷைதான் இவ்விந்தியா முழுவதிலும் காணப்படுகின்றது. இதிலிருந்து நீங்களெல்லோரும் என்ன தெரிந்து கொள்கிறீர்கள்? இனி ஐரோப்பாவில் காணப்படும் ஆங்கில பாஷையாகட்டும், ஜெர்மன் பிரெஞ்ச் போன்ற வளமிக்க பாஷையே யாகட்டும், ஆசியாவில் காணப்படும் அரபி, துருக்கி, பாரசீக பாஷைகளாகட்டும், இனி இந்திய நாட்டிற்கு இவையெல்லாம் ஒருகாலும் தாய்ப்பாஷை யாகமாட்டா! இதனால் நாம் இனி இந்தியாவிற்கு ஒரு பொதுமொழியை இந்தியாவிலிருந்தே தேர்ந்தெடுத்து அது உன்னத நிலைமையை எய்தச் செய்துவிடுதல் வேண்டும்!

உலகப் போக்கு

நெல்லை நேசன்

சென்ற இரண்டு, அல்லது மூன்று மாதங்களில், உலகத்தில் யுத்தத்தைப் பற்றிய பேச்சும் பயமும் அதிகமாயிருந்தன. ஆனால் இன்று ஐரோப்பா இருக்கும் நிலைமையைப் பார்த்தால், யுத்தம் சமீபத்தில் இல்லையென்றே தோன்றுகிறது. வார்ஸேல்ஸ் ஒப்பந்தந்தான் ஐரோப்பாவின் தற்காலக் குழப்பத்திற்குக் காரணம். அது ஏற்றத்தாழ்வை அடிப்படையாகக் கொண்டு பட்சபாதமாகச் செய்யப்பட்டதால், தனக்கு நியாயம் கிடைக்கும்வரை, அதை மீறினால் போதுமென்று இப்போது ஜர்மனி கருதுகிறது.

ஹிட்லர் பேச்சு

ராணுவ முஸ்தீப் விஷயமாக—அதாவது, கட்டாய ராணுவப்பயிற்சி விஷயமாகவும் ஆகாயவிமானப்படை விஷயமாகவும்—ஜர்மனி பின்வாங்கப்போவதில்லை. ஆனால் சென்ற யுத்தத்திலே இழந்த நாடுகள் விஷயமாக, வார்ஸேல்ஸ் ஒப்பந்தத்தை மீறும் உத்தேசம் தற்சமயம் இல்லையென்று ஹிட்லர் சொல்லுகிறார். "அந்த ஒப்பந்தத்தை அப்படியே உடைத்தெறிந்துவிடுவாரோ ஜர்மன் சர்வாதிகாரி?" என்று கலங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு, ஹிட்லரின் ராஜதந்திரம் ஓரளவு ஆறுதலையும் ஆச்சரியத்தையும் கொடுத்திருக்கவேண்டும். "ஹிட்லரின் பேச்சு நெருப்பைக் கக்கவில்லை; அதில் போதுமான வெளிச்சமும் இருக்கிறது!" என்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் நினைக்கிறார்கள்.



ஹிட்லர்

ஜர்மனிக்கு வேண்டியது சமாதானந்தான் என்றும், பிரான்சின் மனப்பான்மைதான் சமாதானத்திற்கு விரோதமானதென்றும் ஹிட்லர் தமது பேச்சினிடையே வற்புறுத்துகிறார். இது சொற்பொழிவு; இதன் பொருட்பொழிவு வேறு என்று கருதுவோருமுண்டு. "ஹிட்லர் சமாதானத்தை

விரும்பவில்லை; சண்டையைத்தான் விரும்புகிறார். ஆனால் இன்னும் அவருக்குச் சமயம் வந்து கைகூடவில்லை!'' என்று வியாக்கியானம் செய்வோரும் சமீபத்தில் யுத்தபயம் இல்லை யென்பதை ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

யுத்தத்தைப்பற்றிய பேச்சே யுத்தத்தை இழுத்துவிடக்கூடும் என்று சிலர் எண்ணுகிறார்கள் அல்லவா? ஆனால் பேர்னார்டுஷாவோ வேறொரு கொள்கையை வெளியிடுகிறார். பேச்சு அதிகமாக, ஆக, அபாயம் குறைவுபடும் என்பது அவர் அபிப்பிராயம். 1914-ம் வருஷம்வரை, யுத்தத்திற்கு உலகத்திலே இருந்த மதிப்பு இப்போது இல்லை யென்பதைப் பேச்சுக்காரர்களும் சர்வாதிகாரிகளும் நன்றாக அறிவார்கள். அந்த மகாயுத்தம் எவ்வளவோ பயத்தையும் கவலைகளையும் விதைத்துவிட்டது! ''விஷப்புகையாலும் விஷக்கிருமிகளாலும் ஒருவரை யொருவர் வதஞ்செய்துகொள்வதில் ஜனங்கள் சந்தோஷம் அடையமாட்டார்கள்'' என்று பேர்னார்டுஷா நினைப்பது உண்மையினும் உண்மை. இப்போதுள்ள அபாயம் ஜனங்களுடைய போர்வெறியல்ல; ஸர்வாதிகாரிகளுடைய திமிரும் ராஜதந்திரிகளுடைய சூழ்ச்சிகளுமேயாகும். ஸர்வாதிகாரிகளிலும், ஹிட்லரைக் காட்டிலும் முஸோலினியே இப்போது அபாயகரமானவர் என்பது ஷாவின் அபிப்பிராயம்.

பேர்னார்டுஷாவின் கொள்கை

சர்வதேச சங்கத்தின் ஆதரவில், இத்தாலிக்கும் அபிஸீனியாவுக்கும் இடையே ஒருவிதமான சமரஸ ஏற்பாடு தற்சமயம் செய்யப்பட்டிருப்பதால், முஸோலினி நிமித்தமாகவும் சமீபத்தில் யுத்தம் ஏற்பட வழியில்லையென்று கூறலாம். எனினும் இத்தாலி அபிஸீனிய எல்லைப்புறத்திற்குத் துருப்புக்கள் அனுப்புவதை நிறுத்தவில்லை. ஒருபுறம் சமரசப்பேச்சு; ஒருபுறம் யுத்த முஸ்தீப். காரணம் என்ன? உள்ளொன்றுவைத்துப் புறம்ஒன்றுபேசும் ராஜதந்திரிகளையும் ஸர்வாதிகாரிகளையும் வழிப்படுத்தும் சக்தி சர்வதேச சங்கத்திற்கு இல்லை. ''இத்தாலி ஒரு துறையில் பிரவேசித்துவிட்டால், அது மேலும் மேலும் முன்னேறிக்கொண்டுதான் இருக்கும். 'ஒருநாள் உயிருடன் மனிதனாக வாழ்வது ஒரு நூற்றாண்டு ஆடுகளாக வாழ்வதைக்காட்டிலும் மேலானது' என்ற வாக்கியமே எங்கள் வேதம். எந்த இடத்திலே யாரை எதிர்க்கும்படி நேர்ந்தாலும், அந்த வேதவாக்கியத்தின்படியே நாம் நடப்போம்'' என்று சமீபத்தில் மார்தட்டிய முஸோலினியை 'முதுகெலும்பு இல்லாத' ஒரு ஸ்தாபனமாகயிருக்கும் சர்வதேச சங்கம் எவ்விதமாகக் கட்டுப்படுத்த முடியும்?

இத்தாலியும் சர்வதேசசங்கமும்

இத்தாலியோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அபிஸீனியா செல்வச்சிறப்பிலும் நவ நாகரிக நிலையிலும் ராணுவபலத்திலும் எவ்வளவோ தாழ்ந்த நிலையில்தான் இருக்கிறது. எனினும் அபிஸீனியா அரசரும் அவருக்கு ஆலோசனை சொல்லும் அரசியல் நிபுணர்களும் முன்யோசனையும் சாமர்த்தியமும் உள்ளவர்கள். அபிஸீனியா அரசரான ராஸ்துபாரி என்பவர் வயதிலும் புத்திசாதுரியத்திலும் குணநிசயத்திலும் பேச்சுத் திறமையிலும் ஏறக்

குறைய முஸோலினியை ஒத்தே யிருக்கிறாராம். தாம் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை வாழ்வதோடு, நவீன நாகரிக முறைகளைத் தழுவி இராஜ்ய விவகாரங்களை நடத்தவும் முயன்றுவருகிறார். யுத்தசாதனங்களிலும், பழைய முறைகளோடு புதிய முறைகளையும் கையாண்டுவருகிறார். எனினும் அபிஸீனியர்களுக்கு ஐரோப்பிய நாகரிகத்தில் ஒருவித வெறுப்புண்டு. நல்ல சுபாவமுள்ளவர்களாயினும், இன்னும் நாகரிகம் அவர்களிடையே விசேஷமாகப் பரவவில்லை. 1896-ம் வருஷத்தில் இத்தாலியர்களுக்கும் அபிஸீனியர்களுக்குமிடையே ஒரு சண்டை நடந்தது. அந்தச் சண்டையில் இத்தாலியர்கள் ஆயிரக்கணக்கான போர்வீரர்களைப் பலிகொடுத்தார்கள். கடைசியில் முறியடிக்கப்பட்டார்கள். ஆனால் இன்று நிலைமை எவ்வளவோ மாறியிருக்கிறது. இத்தாலிக்கு இப்போதிருக்கும் விமானப்படையும் ராணுவபலமும் அபிஸீனியாவுக்கு இல்லை. எனினும் அபிஸீனியர்கள் புஜபலமும் ஆயுதபலமும் வாய்ந்த ஒப்பற்ற குதிரைவீரர்கள் என்பதையும், மலைகளும் காடுகளும் சூழ்ந்த இயற்கைப் பாதுகாப்பு அபிஸீனியாவுக்கு உண்டென்பதையும், அங்கே ரஸ்தாக்கள் முதலான பிரயாணவசதிகள் அதிகமில்லை யென்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். இத்தாலிக்கும் அபிஸீனியாவுக்கும் மறுபடியும் சண்டை ஏற்பட்டால், இத்தாலிக்கு வெற்றி மிகவும் எளிதாகக் கிடைத்துவிடும் என்று எண்ண இடமில்லை. எப்படியிருந்தாலும் ‘அந்த வேட்டை மிருகம் ஒருநாள் என் கையில் சிக்கிக்கொள்ளும்!’ என்றே முஸோலினி நினைக்கிறார்.

இத்தாலியும் அபிஸீனியாவும்

முஸோலினியின் பேராசைக்கு அபிஸீனியா முடிவில் பலியாகித்தான் தீரவேண்டுமோ? பிரிட்டிஷ், பிரெஞ்சு சர்க்கார்களும் மற்ற அரசுகளும் இன்றிருக்கும் நிலையில் முஸோலினியின் அதிருப்திக்கு இலக்காக விரும்பவில்லை. வல்லரசுகளால் ஜர்மனியின் விருப்பத்திற்கு மாறாகச் சுமத்தப்பட்ட வார்ஸேல்ஸ் ஒப்பந்தத்தைச் சீர்திருத்தி ஜர்மனியின் மனக்கொதிப்பை மாற்றும் துறையிலும் ராஜதந்திரிகள் இறங்கி உழைக்க முன்வரவில்லை. அபிஸீனியர் விஷயத்திலும் ஜர்மனி விஷயத்திலும் தைரியமாகத் தலையிட்டுச் சர்வதேச சங்கம் நேர்மையாகப் பூர்ண நீதியும் வழங்கினாலொழிய, ஐரோப்பாவில் சமாதானமுயற்சி நிலைபெறாது. வார்ஸேல்ஸ் உடன்படிக்கைக்கும் சர்வதேச சங்கத்தின் ஒப்பந்த விதிக்கும் சம்பந்தமில்லையென்று ஏற்பட்டால்தான், ஜர்மனி தனக்குரிய சமத்வம்பெற்று அந்தச் சங்கத்திலே சேர்ந்துகொள்ள முடியும் என்றும், விமானப் போக்குவரவுகளெல்லாம் சர்வதேச ஆதிக்கத்தில் இருக்கவேண்டுமென்றும், அப்போதுதான் சமாதானம் நிலைக்க வழியுண்டென்றும் திரு எச். என். பிரேயில்ஸ்போர்ட் கூறுகிறார்.

சமாதானம் நிலைக்குமா?

நாட்டு நடப்பு

நெல்லை நேசன்

யுத்த அதிர்ச்சி இப்போது ஒருவாறு ஓய்ந்திருந்தபோதிலும், பலுச்சிஸ்தான ஏஜென்ஸியின் தலைநகரான குவேட்டா என்ற ராணுவ ஸ்தலத்திலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசத்திலும் ஏற்பட்ட பூமியதிர்ச்சியின் கொடுமை, யுத்தகோஷங்களால் கரையாத கல்மனங்களையும் கரைத்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. இயற்கையின் இந்தக் கோரதாண்டவம் இரவிலே நிகழ்ந்தது. எனவே, ஜனங்கள் தப்பியோட முடியவில்லை. இடிந்த கட்டடங்களுக்கு அடியில் அகப்பட்டு உயிர் துறந்தவர் எத்தனை! குற்றுயிராகக் கிடந்து நரகவேதனை அனுபவித்தவர் எத்தனை! படுகாயம் அடைந்தவர் எத்தனை! தரைமட்டமான ஊர்களில் தங்க இடமில்லாமலும் உண்ண உணவில்லாமலும் தவித்தவர் எத்தனை! ஆசுபத்திரியில், இடிந்துவிழுந்த சுவர்களால் படுக்கையிலேயே நசுக்கப்பட்டவர் எத்தனை!............பூமிதேவியின் சீற்றத்திற்கு இலக்காகிய அந்தப் பிரதேசம் முழுமையும் ஒரேமயானமாகக் காண்கிறதாம். என்ன உயிர்ச்சேதம்! என்ன பொருட்சேதம்! குவேட்டா, இரண்டாவது ஆப்கானிய யுத்தத்தின் முடிவில் திரு பார்ன்ஸ் என்பவர் வசம் விடப்பட்டது. மரங்கள் கொடிகள் முதலியவற்றை வைத்துப் பயிர் செய்து அவர் இதை ஒரு நல்ல ஸ்தலமாக்கினர். கோடையிலும் இங்கே வெயில் உக்கிரம் கொடுப்பதில்லை; சரத்காலமோ மிக இனிமையாகவும் அமைதியாகவும் ரமணீயமாகவும் இருக்கும். இந்த ராணுவ ஸ்தலம், இளவேனிற் காலத்தில், எங்கும் ஒரே ரோஜா வனமாகக் காணப்படும். காற்று 'குளுகுளு' என்று குளிர்ந்து வீசும்; பயங்கரமான புயற்காற்றும் இந்தியர்களால் தாங்கமுடியாத குளிரும் ஏற்படுவதுமுண்டு. ராணுவ வீரர்களோடு சிவில் அதிகாரிகளும் வியாபாரிகளான இந்தியர்களும் ஐரோப்பியர்களும் இங்கே உண்டு. இத்தகைய பிரதேசத்தில் ஏற்பட்ட பூகம்ப விபத்து, பீகாரில் ஏற்பட்ட விபத்தைக் காட்டிலும் கொடுமையானதென்று தெரியவருகிறது. இந்த நிலையில், துன்பம் அடையும் ஜனங்களுக்குப் பொருளுதவியும் பிற உதவிகளும் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். இவ்விஷயத்திலும் அரசாங்கத்தார் உத்தியோகப் பற்று இல்லாத பொது ஜனத்தலைவர்களின் ஒத்துழைப்பையும் பெற்று நிவாரணவேலையைச் சிறப்பாக நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இப்படிப்பட்ட பெரிய கஷ்டகாலங்களிலாவது, இந்தியர்களும் வெள்ளைக்காரர்களும் தங்களுடைய லாபநஷ்டங்களையும் கருத்து வேற்றுமைகளையும் மறந்து ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையே இதா ஒற்றுமை ஏற்படத்தக்க ஒரு 'பாலம்' அமைக்க முயலவேண்டும்.


குவேட்டா பூகம்பம்

இந்திய மசோதாமூலம் இந்தியாவில் ஏற்படப்போகும் அரசியல் அமைப்பும் அப்படிப்பட்ட ஒரு பாலமாகுமென்று மசோதாவின் கர்த்தாவான இந்தியா மந்திரி சொல்லுகிறார். இதிலுள்ள மூன்று பெருந்தத்துவங்களான (1) சமஷ்டி, (2) மாகாண சுய ஆட்சி, (3) பாதுகாப்போடு பொறுப்பாட்சி ஆகியவற்றைக் குறித்து அவர் பிரமாதமாகப் பேசுகிறார். ஆனால் இந்த அமைப்பில் 'குடியேற்ற நாட்டந்தஸ்து' ஏற்படுவதற்குரிய வசதிகள்கூட இல்லை. ஒரு கையால் கொடுப்பதை இரண்டாவது கையால் பிடுங்கிக் கொள்வதுபோல, நியாயமற்ற நிர்ப்பந்தங்கள், பாதுகாப்புக்களாக அமைந்து மசோதாவால் வழங்கப்படும் ஒரு மாதிரி 'சுய ஆட்சி'யைக்கூட எவ்வளவோ குறைத்து வலிமிழக்கச் செய்கின்றன. மேலும் இம் மசோதாவால் சிருஷ்டிக்கப்படும் சட்டசபைகள் விசேஷ உரிமையாளர்களுக்கும் பிற்போக்காளர்களுக்குமே அரணாக இருக்கும். இத்தகைய முப்பெருங்குறைகளும் மசோதாவின் சாராம்சமான முப்பெருந்தத்துவங்களையும் கெடுத்துவிடுகின்றன. எனவே, ஆறாயிரம் மைலுக்கப்பாலிருந்து ஸர் ஸாமுவேல் ஹோர் அமைக்க முயலும் ஒற்றுமைப் பாலம் சரியான பாலந்தானா என்பது பெரிய சந்தேகந்தான். மசோதா சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளின் பக்கங்கள் 25,000; கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடைகள் அடங்கிய அறிக்கையின் பக்கங்கள் 4000; இந்தியா மந்திரியும், உதவிமந்திரியும் தூய ஆங்கிலத்தில் ஆற்றிய சொற்பொழிவுகள் 600; பேசிய வார்த்தைகள் கோடியே ஐம்பத்தைந்து லட்சம் என்று நாம் தெரிந்து கொள்ளும்போது, "ஐயோ! இந்த மசோதாவைக் கண்டிக்க இந்தியர்கள் வதஞ்செய்த வார்த்தைகள் எத்தனையோ? இந்தப் புதிய பகீரதப் பிரயத்தனம், இப்படி மலைகல்லி எலிபிடித்த கதையாகவா இருக்கவேண்டும்? என்று பெருமூச்சு விடுகிறோம். இந்த 'எலி'யைத்தான் 'வேண்டா'மென்று சொல்லுகிறவர்களின் நன்மைக்காக இப்படி ஏன் சிரமப்பட்டு வேட்டையாட வேண்டும்? வெள்ளைக்காரர் தலைச்சுமையை வெள்ளைக்காரரே சுமந்துகொண்டு 'சிவனே!' என்றிருக்கலாகாதா?" என்று சர்ச்சில் துரையும் அவருடைய தோழர்களும் கோஷிக்கிறார்கள். மசோதா சட்டமாய் விட்டால், இந்தியா அதை ஏற்றுக்கொண்டு நடத்திவைக்கும் என்று ஹோர்-கோஷ்டி நம்புகிறது.

மூன்று பெருந் தத்துவங்களும் மூன்று பெருங் குறைகளும்

புதிய அரசியல் திட்டத்தைக் குறித்துத் தேசியவாதிகள் கொண்டிருக்கும் அபிப்பிராயம் யாவரும் அறிந்ததே எனினும் கூடுமானவரையில் தேச நன்மைக்கான வழிகளில் புதிய சட்டசபைகளைப் பூரணமாக உபயோகித்துக் கொள்வதுதான் காங்கரஸ் சட்டசபைவாதிகளின் கடமையாகும். அவர்கள் மந்திரி ஸ்தானங்களையும் ஒப்புக்கொண்டு, நிர்வாகத்தைக் கைப்பற்றி, விடுதலைக்காக உழைக்கவேண்டும். "கடல் கொந்தளிக்கிறது; பிரதிகூலமாக வீசியடிக்கும் காற்றிலே கப்பல் தத்தளிக்கிறது!" என்று கப்பலோட்டி கையைக்கட்டிக் கொண்டு சும்மா இருந்துவிடலாமா?

காங்கரஸின் கடமை



ஜர்மனியின் ஏற்பாடு

மற்ற நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஜர்மனியை எதிர்த்தாலும் அவைகளின் கூட்டு எதிர்ப்பை முறியடிப்பதற்காக ஜர்மனி அடியிற் கண்ட ஐந்து பயங்கர யுத்தக் கருவிகளைக் கண்டுபிடித்திருக்கிறதாகச் சொல்லப்படுகிறது:—

1. **ஊடுருவிச் செல்லும் குண்டு:**—கீழ் நகர டாக்டர் ஒருவர் இதைக் கண்டு பிடித்திருக்கிறார். 6 அங்குல கனமுடைய இருப்புக் கேடயங்களையும் பட்டங்களையும்இக்குண்டு துளைத்துக்கொண்டு செல்லுமாம். நாள் ஒன்றுக்கு 48 லக்ஷம் இது போன்ற குண்டுகள் உற்பத்திச் செய்யப்படுகின்றனவாம்.

2. **சுழன்று சுழன்று அடிக்கும் துப்பாக்கி:**—ஐந்து பாரல்களை உடையது. ஐந்தும் சுழன்று சுழன்று தாமாக வேலைசெய்கின்றன. ஒரு நிமிஷத்திற்கு 1000 சுற்றுக்கள் அடிக்கின்றன. இவைகளைக்கொண்டு ஆகாயக் கப்பல்களைத் தாக்கி, நெருப்பு மழை பெய்யுமாறு செய்யலாமாம். இம்மாதிரியான துப்பாக்கிகள் 2000 உற்பத்திச் செய்யப்படுகின்றனவாம்.

3. **விஷமேகநாசகாரி:**—ஆகாயத்தில் எவ்வளவு உயரத்திலும் ஆகாய வாணத்தைப்போல் பறந்துசென்று 200 மைல் விஸ்தீரணத்திற்கு விஷப் புகையையும் மேகத்தையும் இது உற்பத்திச் செய்யுமாம். மற்றொரு முறையிலும் இது ஆபத்தாகிறது. இதை ஆகாயவிமானத்தில் வைத்துக் கொண்டு எந்த நாடு நகரத்தின் மீதும் இதைப்போட்டு ஒரு விநாடியில் அந்த இடத்தை நிர்மூலமாக்கலாமாம்.

4. **'இஜட்ரே' (மாய ஒளி):**—இதைக்கொண்டு ரயில்கள், பாலங்கள், மோட்டார்கள் ஆகாயவிமானங்கள், ரேடியோ நிலையங்கள் ஆகிய எல்லாவற்றையும் நாசமாக்கலாமாம். இது பரம ரகசியமாக ஜர்மனியாரால் பாதுகாக்கப்பட்டு வருகிறதாம். இந்த ஒளியைக்கொண்டு மெஷின் டாங்க்ஸ் பீரங்கிச் சதுரங்கத்தை ஒரு நொடியில் தூள்தூளாக்கி விடலாமாம். மேலும் எதிரிகளின் விமானங்கள் மோட்டார்கள் முதலியன மேற்படி ஒளியின் எல்லைக்குள் வந்தவுடன் என்ஜின்கள் ஸ்தம்பித்துப் போய்விடுமாம். ஆகவே, எதிரிகளின் விமானங்கள் கீழே விழுந்து நொறுங்கவேண்டியதே.

5. **மாயமெஷின் துப்பாக்கி:**—இத் துப்பாக்கி 18 ராத்தல் எடை கொண்டது. கையிலும் தூக்கிச் செல்லலாம். ஒரு நிமிஷத்திற்கு இது 600 சுற்றுவட்டம் சுடுகிறது. இவைகளெல்லாம் போதாவென்று ஒரு நிமிஷத்திற்கு 1400 சுற்றுவட்டம் சுடக்கூடிய பீரங்கிகள் (மோட்டாரில் இழுத்துச் செல்லப்படுவை) கண்டுபிடிக்கப் படுகின்றனவாம்.

த. வ.



விறலிவிடுதூது : [கிடைக்குமிடம்: லக்ஷ்மி விலாச புஸ்தகசாலை திருவல்லிக்கேணி, சென்னை. விலை அணா 8.]

தன்மேல் ஊடல் கொண்ட தனது நாயகியைச் சமாதானப் படுத்த வெண்ணிய ஒருவன் அவளிடம் ஒரு விறலியைத் தூது விடுவதைப் பற்றிக் கூறுவது இப்பிரபந்தம். இதனை இயற்றியவர் சுப்பிரதீபக் கவிராயரென்பவர். நாகம கூளப்ப நாயகன் என்பவனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டுள்ளது இந்நூல். தூதனுப்புவோன் தான் மதனாபிஷேகம் என்ற ஒரு பரத்தையின் மாயவலையிற்பட்டு அவஸ்தைப் பட்டதை விஸ்தரித்துக் கூறும் இந்நூல் சிற்றின்பச் செய்திகள் பலவற்றைத் தன்னுட் கொண்டுள்ளது.

தாய்க்கிழவி மதனாபிஷேகத்தை அழகுபடுத்தித் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுதலைக் கூறும் பகுதி,

"செய்க்குவளைக் கண்மயிலே செம்பொனுள்ள பேர்களையுன்
கைக்குள்வளை யென்றுவளை கைக்கிட்டாள் - சிக்காப்புள்
ஒட்டுக்கு ளாவதுபோ லுள்ளபணக் காரர்களுன்
பொட்டுக்கு ளாகவென்று பொட்டிட்டாள் - பொட்டெனவே
வேந்தர் புதையல் வெளியாக்கு மஞ்சனம்போல்
வாய்ந்தவடி வேல்விழிக்கு மையிட்டாள் - காந்திமுக
வன்னக் கமலமதில் வண்டிருந்தாற் போலமகள்
கன்னத்தின் மீதோர் கறுப்பிட்டாள் - சொன்னதனம்
வீடேறப் பண்டைமுதன் மேலேறத் தன்குடும்பம்
ஈடேறப் பொற்றொட்டி லேற்றினாள் - தேடியுன்பால்
வாரா தவராரார் வந்துமடிச் சீலைகொட்டித்
தாரா தவராரார் தந்தனையிற் - சேராதார்
ஆராரார் சேர்ந்துனக்குள் ளாசைகொண்டு சுற்றாதார்
ஆராரா ரென்றுதா லாட்டினாள்"

என்று வருணிக்கப் பட்டுள்ளது. இதைப்போல் ரசமான பகுதிகள் பல இந்நூலில் மிளிர்கின்றன.

சொற்சுவை பொருட்சுவை மிகுந்த இந்நூல் அவசியம் படித்தற்குரியதொன்றாம். தமிழ் மக்கள் இதனை ஆதரிப்பார்களாக.

உணவு :[ஆசிரியர் : ஸர். ராபர்ட் மெக்காரிஸன்; மொழிபெயர்ப்பாளர். திருவாளர் என். எஸ். சிவசுப்பிரமணியன், எம். ஏ. கிடைக்குமிடம்: தமிழ்நாடு கூட்டுறவு பெடரேஷன், கோயமுத்தூர். விலை அணு 8.]

உணவைப்பற்றிய புதிய ஆராய்ச்சிகள் கிளம்பியுள்ள இக்காலத்தில் இது போன்ற புத்தகங்கள் தமிழில் வெளிவருவது போற்றத்தகுந்த செயலாகும். இதனுள் உணவைப் பற்றிய விஷயங்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இன்ன இன்ன உணவுப் பொருள் இன்ன இன்ன பலனைத்தரும் என்பது கூடியவரையில் விளக்கப்பட்டுள்ளது. நடை எளியதாகவே காணப்படுகின்றது.

விரத வைராக்கியம்: [ஆசிரியர்: சுவாமி சுத்தானந்த பாரதியார். கிடைக்குமிடம்: ஸ்ரீ கான வித்யா பிரஸ், ஸ்ரீ வைகுண்டம். விலை அணு 6.]

ருக்மாங்கதன் சரித்திரம் இந்துக்களுக்குப் புதியதன்று. நம்முடைய பெண்கள் இச்சரித்திரத்தைப் பாட்டாகப்பாடிக் காலங்கழித்து வருகிறார்கள். அத்தகைய சரித்திரத்தை சுவாமிகள் இப்பொழுது விரதவைராக்யம் என்ற பெயருடன் நாடகரூபமாக எழுதிவெளியிட்டிருக்கிறார்கள். இந்நூல் ஆஸ்திகர்களுக்குப் பெரிதும் உதவக்கூடியது. நடை மிகவும் எளியதாக அமைந்திருக்கிறது. பக்தி விஷயங்கள் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. இடையிடையே ஆசிரியர் தாமே புனைந்து அமைத்துள்ள பாடல்கள் தனியழகைப் பெற்றுள்ளன.

புத்தக வரவு

திருவேங்கட மும்மணிக்கோவை. ஆசிரியர்: கவிராஜ பண்டிதர் ஆந்திரக் காசியப திம்மப்ப அந்தணனர். கிடைக்குமிடம்: ஆசிரியர்; தலைமைத் தமிழாசிரியர், முனிஸிபல் காலேஜ், சேலம். விலை அணு 4.

ஸ்ரீ காமகோடி பீடம்: ஆசிரியர்: வெங்களத்தூர் காமகோடி ஸ்ரீமான் வெ. கா. ராமநாதன், பி.ஏ., பி.எல்.

தமிழ்த்தெய்வமாலை. ஆசிரியர்: ஸ்ரீமான் எம். எஸ். சுந்தரேச ஐயர்.

உதயண குமார காவியம்[1]

முதலாவது

உஞ்சைக் காண்டம்

வணக்கம்

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

1. மணியுடன் கனக முத்த மலிந்தமுக் குடையி லங்க
அணிமலர்ப் பிண்டி யின்கீ ழமர்ந்தநே மீசர் பாதம்
பணிபுபின் வாணி பாதம் பண்ணவர் தாள்க ளுக்கெம்
இணைகரஞ் சிரத்திற் கூப்பி யியல்புறத் தொழுது மன்றே.

2. பொன்னெயில் நடுவ ணோங்கும் பூநிறை யசோக நீழல்
இன்னிய லால யத்து ளேந்தரி யாச னத்தின்
மன்னிய வாமன் பாதம் வந்தனை செய்து வாழ்த்தி
உன்னத மகிமை மிக்கா னுதயணன் கதைவி ரிப்பாம். (உ)

அவையடக்கம்

3. மணிபொதி கிழியு மிக்க மணியுட னிருந்த போழ்தில்
மணிபொதி கிழிய தன்னை மணியுட னன்கு வைப்பார்

---

[1] இந்தநூல் சற்றேறக் குறைய 50 வருஷங்களுக்குமுன் கிடைத்தது. சீவகசிந்தாமணி, பெருங்கதை யென்னும் நூல்களை ஆராய்ச்சி செய்த காலத்தில் எனக்கு மிகவும் உபயோகமாக இருந்தது. ஆனாலும் பிரதிகள் மிகவும் பிழைபட்டிருந்தமையின், ஜைன நூல்களில் வல்ல வீடூர் ஸ்ரீ அப்பாசாமி சாஸ்திரியாரென்பவருடைய உதவியைக் கொண்டு இந்நூல் முற்றும் சிலமுறை ஆராய்ச்சிசெய்து குறிப்பு முழுவதும் எழுதிவைக்கப்பட்டது; சில அன்பர்கள் விருப்பத்தின்படி இப்பொழுது இங்கே பதிப்பிக்கப்படுகின்றது.

1. முக்குடை - சந்திராதித்தியம், நித்தியவினோதம், சகலபாசனம் என்பன; "பொன்னுநன் மணியு முத்தும் புனைந்தமுக் குடை" (11-ஆம் நிகண்டு.) நேமீசர் - இருபத்திரண்டாந் தீர்த்தங்கரர்; இவர்பெயர் நேமிநாதரெனவும் வழங்கும்; இவருக்குப் பண்டைகாலத்தில் மயிலாப்பூரில் ஆலயமிருந்தது; இவரைப்பற்றிய செய்திகளை நன்னூல் மயிலைநாதர் உரைப்பதிப்பில் உள்ள உரையாசிரியர் வரலாற்றில் அறியலாகும். பண்ணவர் - ஸாதுக்கள். இணைகரம் - இணைந்தகரம். இச்செய்யுள் சில பிரதிகளிற் காணப்படவில்லை.

2. பொன்னெயில் - பொன்மதில். ஆலயம் - ஸமவஸரணம். வாமன் - அருகக்கடவுள்.

A

துணிவினிற் புன்சொ லேனுந் தூயநற் பொருள்பொ திந்தால்
அணியெனக் கொள்வார் நாமு மகத்தினி லிரங்கல் செல்லேம்.

பயன்

4. ஊறுந்தீ வினைவாய் தன்னை யுற்றுடன் செறியப் பண்ணும்
கூறுநல் விதிபு ணர்ந்து குறைவின்றிச் செல்வ மாமுன்
மாறுறு கருமந் தன்னை வரிசையி னுதிர்ப்பை யாக்கும்
வீறுறு முறுப்பின் றன்மை விளம்புதற் பால தாமே. (௪)

நூல்

5. இஞ்சிமூன் றுடைய கோமா னெழில்வீர நாத னிந்தப்
புஞ்சிய நிலத்தோர்க் கெல்லாம் பொற்புநல் லறநன் மாரி
விஞ்சவே சொரியுங் காலம் வெண்மதிக் குடைக்கீழ் வாழும்
எஞ்சலில் காட்சிமன்ன னிருக்கைநா டுரைத்து மன்றே. (௧)

6. பூவுநற் றளிருஞ் செற்றிப் பொழின்மிகச் சூழ்ந்தி லங்கும்
நாவலா மரத்தி னாலே நாமமாய்த் துலங்கி நின்று
தீவுநற் கடல்க டாமு மொன்றிற்கொன் றிரட்டி சூழ்ந்த
நாவலந் தீவு நந்தி னன்மணி போன்ற தன்றே. (௨)

7. வேதிகை சிலைவ ளைத்து வேதண்ட நாணே றிட்டுப்
போதவும் வீக்கி னற்போற் பொற்புடைப் பரதந் தன்னில்
ஓதிய தரும கண்டத் தோங்கிய காவு நின்று
வாதத்தாற் சுகந்தம் வீசும் வத்தவ னாடு தாமே. (௩)

---

3. கிழி - முடிப்பு. "நாவலந் தீவிற் கிட்டா நவமணி பொதிந்து வைத்த, மேவருங் கிழியு மந்த மணியுடன் விரும்பு மாபோற், பாவருங் குற்ற மாமென் கவிதையின் பழுதும் பாரா, தியாவருங் கொள்வா ரீசன் பெயரதி விருக்கை யாலே" சேவ்வந்திப். அவையடக்கம்.

4. ஊறுந் தீவினை - பாபாச்ரவம். செறியப்பண்ணும் - அடைக்கும்; ஸம்வரை செய்யும். நல்விதி - நல்வினை. கருமம் - காதிகருமம். உதிர்ப்பை - நிர்ஜரை; கெடுத்தல்.

5. இஞ்சி மூன்று - மதில் மூன்று; அவற்றின் பெயர் உதயதரம், பிரீதிதரம், கல்யாணதர மென்பன. வீரநாதர் - ஸ்ரீ வர்த்தமானர்; இவர் 24-ஆம் தீர்த்தங்கரர். புஞ்சிய - தொகுதியாகவுள்ள. காலம் - காலத்தில்.

6. செற்றி - நெருங்கி. நந்து - இங்கே சலஞ்சலம். மணி - முத்து.

7. வேதிகை - கடலுக்கு அப்பாற்கரையிலுள்ள சுவர். வேதண்டம் - விசயாத்தகிரி; வெள்ளியம் பெருமலை. பரதம் - பரதகண்டம். கண்டங்கள் ஆறில் ஐந்து மிலேச்சகண்டம்; ஒன்று தருமகண்டம். வாதம் - காற்று. வத்தவனாடு - வத்ஸதேசம்.

8. இஞ்சிமிக் கெழுந்தே யோங்கி யிலங்கிய வமர லோகம்
எஞ்சலி லெல்லை காணு வெழில்பெற நிற்ற ஞேக்கி
அஞ்சலில் வருக வென்றே யணிபெற விலங்கி நீண்ட
குஞ்சிநன் கொடிக்க ரத்தாற் கூவியிட் டழைக்கு மன்றே. (௮)

9. முகிறவழ் மாட மீதின் முத்தணி மாலை நான்றே
இகலுறு மமளி யின்மே லெழின்மங்கை மைந்தர் தாமும்
பகலிர வின்றிப் போகம் பண்பினுற் றுய்த்தி ருப்பார்
நகரிகௌ சாம்பி யென்னு நாமமார்ந் திலங்கு மன்றே. (௯)

10. ஊனுமிழ்ந் திலங்கும் வேலா னுன்னத முகிலெ ழுந்து
வானுமிழ் வாரி யன்ன வண்கையன் வண்ட றற்றும்
தேனுமி ழலங்கற் றேளான் செல்வத்திற் குபேர னன்னான்
தானுமிழ் கிரண மார்பன் சதானிக னரச னுமே. (௧0)

11. மன்னவ னுள்ளத் துள்ளாண் மாமணி மயிலஞ் சாயல்
அன்னமென் னடைவேற் கண்ணு ளருந்ததி யனைய நங்கை
பொன்னணி சுணங்கு பூத்த புணர்முலை யமிர்த மன்னாள்
மின்னுநுண் ணிடையா ளும மிகாவதி யென்று மிக்காள்.

12. கற்புடைத் திருவி னங்கை காரிகை தன்வ யிற்றிற்
சற்புரு டொருவன் வந்து சார்ந்தவ தரித்து மிக்க
நற்புடைத் திங்க ளொன்பா னன்கமைந் திருக்கு மோர்நாட்
பொற்புடை மஞ்ச மீதிற் பொலிவுட னிருந்த போழ்தில். ()

13. செந்துகின் மூடிக் கொண்டு திருநிலா முற்றந் தன்னில்
அந்தமாய்த் துயில்கொள் கின்ற வாயிழை தன்னைக் கண்டே
அந்தரத் தோடு கின்ற வண்டபே ரண்டப் புள்ளொன்
றந்தசை யென்று பற்றி யன்றவான் போயிற் றன்றே. (௧௩)

---

8. இஞ்சி - மதில்; எழுவாய். அஞ்சல் இல் - அஞ்சுதல் இல்லை. குஞ்சி - கொடிநாட்டுங்குழி. "இஞ்சி மாக நெஞ்சுபோழ்ந் தெல்லை காண வேகலின், மஞ்சு சூழ்ந்து கொண்டணிந்து மாக நீண்ட நாகமும், அஞ்சு நின்னை யென்றலி னுண்டு நின்று நீண்டதன், குஞ்சிமாண் கொடிக்கையாற் கூவி விட்ட தொத்ததே" சீவக. 143.

9. குசாம்பனென்னும் அரசனல் ஆளப்பட்டமையின் கௌசாம்பி யென்னும் பெயருடையதாயிற்று.

11. மிகாவதி - மிருகாவதி.

12. புருடு - புருடன். ஒருவன் - ஒருதேவன். நற்புடை - நல்ல பக்ஷம். மஞ்சமீதில் - கட்டிலின்மேல்.

13. அந்தமாய் - அழகாய். அண்ட பேரண்டப்புள்: சிம்புட் பறவை யென்று பிறநூல்கள் கூறும்.

14. மற்றவ டந்தை தானு மாமுனி யாகி நிற்கும்
சற்கிரி விபுல மன்னுஞ் சாரலவ் வனத்திற் சென்று
நற்றவ னருகில் வைப்ப நற்றயில் விட்டெ ழுந்தாள்
பற்றயி ருண்ணுப் புள்ளும் பறந்துவான் போயிற் றன்றே. ( )

15. நிறைமதி முகநன் மங்கை நிரம்பிய கொர்ப்ப மாதல்
பொறைவயி னேய்மீக் கூரப் பொருவில்வான் கோள்க ளெல்லாம்
முறையினல் வழியை நோக்க மொய்ம்பனத் தினத்திற் றேன்ற
அறையலை கடலிற் சங்க மாணிமுத் தீன்ற தொத்தாள். ( )

16. பொருகயற் கண்ணி னுடான் போந்ததை யறிந்த ழுங்கித்
திருமணி கிடந்த தென்னச் செழுமகன் கிடப்பக் கண்டு
பெருகிய காத லாலே பெருந் துயர் தீர்ந்தி ருப்ப
மருவுநற் றூதை யான மாமுனி கண்டு வந்தான். (கஉ)

17. தவமுனி கொண்டு சென்று தாபதப் பள்ளி சேர்த்தி
அவணினி தோம்ப வப்பா லருக்கன் துதய காலத்
துவமையின் றதித்தா னும முதயண னுகை வென்றூர்
இவணமத் தாயுஞ் சேயு மிருடிபா லிருந்தா ரன்றே. (கங)

18. பிரமசுந் தரயோ கிக்குப் பிறந்தவன் யூகி யோடும்
இருவரும் வளர்ந்தே யின்பக் கலைக்கட னீந்திக் கானக்
கரிணமும் புள்ளு மற்றுங் கண்டடி வீழுங் கீதப்
புரந்தரன் கொடுத்த யாழும் பொறைமுனி யருளிற் பெற்றுன்.

19. மைவரை மருங்கி னின்ற மலையென விலங்கு கின்ற
தெய்வநல் லியானை கண்டு சென்றுதன் வீணை பாடப்

---

14. தந்தை - சேடகன். விபுலத்தில். சிம்புள் உயிருண்ணுத பட்சி யென்பர்; "சிம்புளாவது பிராணவதம் பண்ணுததொரு பட்சி" தக்க. 630, உரை.

15. மொய்ம்பன் - உதயணன்.

16. அழுங்கி - வருந்தி. "பொன்னனுன் பிறந்த போழ்தே, மருளுடை மாத ருற்ற மம்மர்நோய் மறைந்த தன்றே" சீவக. 304.

17. தவமுனி-இவள் தந்தையாகிய சேடகமுனிவன். அவண் இனிது. உவமையின்று - உவமையில்லாமல். இவணம் - இவ்வண்ணம்.

18. பிறந்தவனுகிய யூகியோடும். கானக் கரிணம் - காட்டிலுள்ள யானை. வீழும் - விரும்புதற்குரிய. கீதம் - சங்கீதம். யாழ் - கோடபதி யென்பது. முனி - பிரமசுந்தர முனி. பெற்றவன் உதயணன்.

19. இலங்குகின்ற - விளங்குகின்ற. யானையைக் கண்டு. உதயணன் சென்று. பையென - மெல்ல. எறுவதற்கு யானை தன் கையை நீட்ட. பள்ளி - ஆச்சிரமம்.

பைபெனக் களிறுங் கேட்டுப் பணிந்தடி யிறைஞ்சி நின்ற
கையது கொடுப்ப வேறிக் காளையும் பள்ளி சேர்ந்தான். ( )

20. நன்றிருட் கனவி னுக நயமறிந் தினிது ரைக்கும்
பன்னிடும் பாகன் வந்து பற்றியே யேறி னுலும்
இன்றைநான் முதலா நீநா னின்றியே முன்னுண் டாலும்
அன்றுன்பா னில்லே னென்றே யக்கரி யுரைப்பக் கேட்டான்.

21. செல்லுமக் காலந் தன்னிற் செறிதவன் புதல்வ னை
வெல்களிற் றியானை வேந்தன் விக்கிரன் றனக்கு மக்கள்
இல்லையென் றெவ்வங் கூர்ந்தே யினிமையின் வந்து நல்ல
சொல்லருண் முனிவன் பாதந் தொழுதுநன் கிருந்தா னன்றே.

22. புரவல னினிய ராமிப் புதல்வர்க ளார்கொ லென்ன
வரமுனி யருளக் கேட்டு மகிழ்ந்துதன் ருய மெல்லாம்
சிரசணி முடியுஞ் சூட்டிச் செல்வற்குக் கொடுத்துப் போக்கி
விரவிய தவத்த னுக வேண்டுவ தென்ன மென்ருன். (கஅ)

23. முனியொடு தங்கை தன்னை முயன்றிரந் தெய்தி நாகம்
தனையன வெங்க யத்திற் றனயனை யேற்றிப் போய்த்தன்
மனனிறை நாட்டை யந்த மருகனுக் கீந்து போந்து
முனிவனம் புகுந்து மாமன் முனிவனுய் நின்ரு னன்றே. ( )

24. இளமையை யிகந்து மிக்க வினியநற் குமர னுகி
வளமையிற் செங்கோ றன்னை வண்மையி னடத்தி னுனங்
கிளமயி லனைய தேவிக் கிரங்கிய சதானி கன்ருன்
உளமலி கொள்கை யான்ற வொருதவற் கண்டு ரைத்தான்.

25. தேவியின் வரவு நல்ல திருமகன் செல்வுங் கேட்டு
மாவலன் மனம கிழ்ந்து வந்தூர்புக் கிருக்கு நாளில்
தேவியும் வந்து கூடிச் சிறந்தநற் புதல்வர் தம்மைத்
தேவிளங் குமரர் போலச் செவ்வியிற் பயந்தா ளன்றே. (உக)

---

20. நாகம் - தெய்வயானையானது.

21. தவன் - சேடகமுனிவனுடைய. விக்கிரன்: இப்பெயர் விக்ரமன் என்றும் வழங்கும். எவ்வம் - துன்பம்.

22. செல்வற்கு - உதயணனுக்கு.

23. நாகந்தனையன கயம் - மலையைப்போன்ற யானை.

24. ஆங்கு - கௌசாம்பி நகரத்தில். ஒரு தவற்கண்டு - ஒரு முனிவனைப் பார்த்து.

25. செல்வு - செல்வம்.

26. பிங்கல கடக ரென்று பேரினி திட்டு மன்னன்
தங்கிய காத லாலே தரணியான் டினிது செல்லக்
குங்கும மணிந்த மார்பக் குமரனும் யூகி யும்போய்
அங்குள தேச மெல்லா மடிப்படுத் தினிதி ருந்தார். (உஉ)

27. உதயண குமரன் றன்னை யுற்றுட னழைத்துப் பூமிப்
பதமுனக் காக வென்று பார்த்திபன் கொடுத்துப் போகிக்
கதமுறு கவலை நீங்குங் காட்சிநற் றவத்த னாகி
இதமுறு யோகந் தன்னி லெழில்பெற நின்று னன்றே. (உஙு)

28. மணிமுடி கவித்த போழ்தின் வத்தவர்க் கிறைவ னானன்
அணியுநாற் படையுஞ் சூழ்ந்த வமைச்சரு நால்வர் நாமம்
தணிவில் சீர் யூகி யோடு சாருரு மண்ணு வாவும்
துணைவயந் தகனுந் தொல்சீர் விடபக னென்ப வாமே. (உச)

29. அரசனுக் கினிய ராகி யமைச்சிய னடத்திச் செற்றே
வருபகை பலவுந் தேய வரச்செங்கோ லுய்க்குங் காலை
அரியநா டகங்கள் கண்டே யரசனு முளமா ழாந்து
கரிணத்தை மறந்து விட்டுக் காதலி னடிசி லுண்டான். (உரு)

30. மன்னிய தெய்வ யானை மாயமாய் மறைந்து போக
மன்னனு மனந்த ளர்ந்து மணியிழந் தரவு போலத்
துன்னிய சோக மேவித் துயரெய்தித் தேடு கென்றான்
பன்னருஞ் சேனை சென்று பாரெங்குந் தேடிற் றன்றே.

(கலிவிருத்தம்)

31. சிந்து கங்கைநீர் சேர்ந்து வளம்படும்
அந்த மாகு மவந்திநன் னாட்டினுள்
இந்து சூடிய விஞ்சி வளநகர்
உந்து மாளிகை யுஞ்சயி னிப்பதி. (உஎ)

---

27. பதம் - பதவி. பார்த்திபன் - சதானிகன். காட்சி - அறிவு.

12-27. இச்செய்யுட்களிற் சொல்லப்பட்ட செய்திகளை, பெருங்கதையில் அவலந்தீர்த்தது என்னுங் காதையில் ஒரு வகையாகக் காணலாம்.

28. சூழ்ந்த : முற்று. நால்வராவார். நாமம் - அவர்கள்பெயர்.

29. செற்று - கோபித்து. வரம் - விசேஷம். மாழாந்து - மயங்கி.

30. இழந்த அரவு.

31. சிந்து - சிந்து நதி. அந்தம் - அழகு. இஞ்சி - மதில்.

32. உரைப்ப ரும்படை யோர்பிரச் சோதனன்
நிரைத்த மன்னர் நிதிமிக் களப்பவே
தரித்த நேமி யுருட்டித் தரணியாண்
டிரைத்த மாக்களிற் றேறொடு மன்னுவான். (உஅ)

33. பொருவின் மன்னவன் பொன்றிறை கேட்புழித்
திருவ மன்னர் திறைதெரி யோலையுள்
ஒரும கன்புள்ளி யிட்ட தறிந்திலன்
மருவிக் கூறலு மன்னன் வெகுண்டனன். (உகூ)

34. தாம ரைக்கண் டழலெழ நோக்கியத்
தீமை செய்த திறைக்கடன் மன்னனை
நாம றந்திட நன்கு மறைத்ததென்
ஆம மைச்சரென் றண்ணல் வினவினான். (௩0)

35. உறுக ளத்தினி லுன்னிய வாண்மையும்
பெறுபொ ருள்செறி பீடுடைக் கல்வியும்
தறுகண் வேழந் தகைக்குறு பெற்றியும்
மறுவில் வீணையின் வாய்த்தநல் விஞ்சையும். (௩க)

36. வளமை யின்வந்த மன்னிய செல்வமும்
இளமை யின்ப மெழில்கல நற்குலம்
உளவ னுதலி னுற்ற கடனென
அளவு நீதி யமைச்ச ருரைத்தனர். (௩உ)

37. வேந்தன் கேட்டு வெகுண்டுரை செய்தனன்
போந்த வற்பற்றிப் போதரு வீரெனச்
சேர்ந்த மைச்சர்கள் செய்பொரு ளென்னென்று
மாந்தி மற்றவர் மற்றென்று செய்கின்றார். (௩௩)

---

32. பிரச்சோதனன் - பிரத்தியோதனன்; இவன் மகா சக்கரவர்த்தி. நேமி - ஆஞ்ஞாசக்கரம். களிற்று ஏறு - நளகிரி; அஃது இவன் பட்டத்து யானை.

33. திறை - கப்பம். ஒருமகன் என்றது உதயணனை. புள்ளியிட்டது - குறிப்பிட்டிருந்ததை.

34. திறைக்கடன் - கப்பமாகிய கடனையுடைய.

35. களத்தினில் - போர்க் களத்தில். தகைக்குறு - தடுத்துச் செலுத்துகின்ற. விஞ்சை - வித்தை.

36. கலம் - ஆபரணம். இளமை முதலியவற்றை உள்ளவனுதலால் கடன் உற்ற; கப்பம் செலுத்தாமலிருந்துவிட்டானென்பது கருத்து.

37. செய் பொருள் - செய்யும் காரியம். மாந்தி - மயங்கி.

38. ஊன மாற்றர்மேல் யூகிபோர் போனதும்
ஆனை போக வரச னிரக்கமும்
கான யானையைக் காட்டிப் பிடிப்பதும்
மான வேலவர் மந்திரித் தொன்றினர். (௩௪)

39. அரக்கி னும்மெழு காக்கிய நூலினும்
மரத்தி னுங்கிழி மாவின் மயிரினும்
விரித்த தோலினும் வேண்டிய வற்றினும்
தரித்த யானையைத் தாமிக் கியற்றினர். (௩௫)

40. பொறிய மைகரிப் பொங்கு முதரத்தில்
உறையு மாந்தரோர் தொண் ணூற் றறுவரை
மறையு மாயுதம் வைத்தத னேருடல்
நெறிகண் டேர்ந்தனர் நீல மலையென. (௩௬)

41. கார்மு ழக்கிற் களிறொலி செய்யவே
போர்மிக் கானையைப் பொற்புடை மன்னன்முன்
ஊர்ந்து காட்டின னுற்ற வமைச்சருட்
சார்ந்த மந்திரி சாலங்கா யென்பவன். (௩௭)

42. சாலங் காயநீ சார்ந்து தருகென
ஞாலங் காக்கு நரபதி செப்பலும்
வேலுங் கொண்டுநல் வேந்தர்கள் வெண்குடைக்
கோலும் பிச்சமுங் கொண்டு பறந்தனன். (௩௮)

43 ஈரெண் ணாயிர மெண்வரை யானையும்
ஈரெண் ணாயிர மீடில் புரவியும்
ஈரெண் ணாயிர மின்மணித் தேருடன்
ஈரெண் ணாயிர விற்படை யாளரே. (௩௯)

---

38. மாற்றர் - பகைவர். ஆனை போக - தெய்வயானை நீங்கிவிட. அரசன் - உதயணன். மந்திரித்து - ஆலோசனை செய்து. ஒன்றினர் - ஒன்றுபட்டார்.

39. கிழி - துணி. மாவின் - மிருகங்களின். யானையை - யானை உருவமொன்றை.

40. பொறியமை - எந்திரமாக அமைந்த. உடல் - உடலில்.

41. சாலங்காய் - சாலங்காயன்.

42. நரபதி - பிரச்சோதனன். பறந்தனன் - விரைந்து சென்றான்.

43. மகாசக்கரவர்த்திக்கு எல்லாம் பதினாறாயிரமாக இருத்தல் வேண்டுமென்பது சைனநூல் விதியாகலின் இங்ஙனங் கூறினர்.

44. இத்த னையு மியல்புடன் கூடியே
மெத்தெ னவரு கென்றா விடுத்துடன்
ஒத்த நற்பொறி யோங்கிய யானையும்
வத்த வன்றன் வனத்திடை வந்ததே. (சO)

45. அவ்வ னத்தினி லான பிடிகளும்
கவ்வு கைத்தழைக் காரிடி யானைதன்
மவ்வ லம்மத வண்டெழ வீசலும்
அவ்வ னச்சர ரன்புடன் கண்டனர். (சக)

46. எம்மி றையது வேழ மெனவெண்ணித்
தம்மி லோடி யுதையற் குரைத்தலும்
கொம்மை வண்மணிக் கோலக் கலினமாச்
செம்ம லுஞ்சிறந் தேறி நடந்தனன். (சஉ)

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

47. புள்ளிடை தடுப்பத் தீய பொய்க்குறி செய்யக் கண்டும்
வள்ளலு நடப்பா னாக வயந்தகன் விலக்கப் போந்து
கள்ளவிழ் மலர்கா னத்துக் கள்ளநல் லியானை கண்டே
உள்ளமெய் மொழிக டம்மா லுணர்ந்தவ னினிய னானன். ()

(கலிவிருத்தம்)

48. நக்க ணத்தை நயந்துட னேக்கிலன்
அக்க ணத்தி லகமகிழ் வெய்தித்தன்
மிக்க வீணையை மெய்ந்நரம் பார்த்துடன்
தக்க ராகத்திற் றன்மிக வாசித்தான். (சச)

49. பொறியின் வேழத்தின் பொங்கு செவியுற
உறும னத்துட னார்ந்துமுன் னேவர
மறையு மாந்தர்கைம் மாவை யழித்திடப்
பொறிக ழன்றது போர்ப்படை யானதே. (சரு)

---

44. மெத்தென - மெல்ல. பொறியோங்கிய யானை - எந்திரயானை.

45. மவ்வல் - முல்லை. யானையின் மதம் மணமுள்ளதென்பர். வனச்சரர் - காட்டிலுள்ள வேடர்கள்; தமிழ்முடிபு.

48. நகணத்தை - சிறப்புப் பொருந்திய கூட்டத்தை. ஆர்த்து - கட்டி.

49. பொறியின் வேழம் - எந்திரயானை; இன்: வேண்டா வழிச் சாரியை. மறையும் - அதனுள்ளே ஒளித்திருந்த. கைம்மா - யானை.

50. செறுநர் செய்தது சித்திர மாமென
முறுவல் கொண்ட முகத்தின னுகத்தன்
உறுவ யந்தக னுற்றவைந் நூற்றுவர்
மறுவில் வீரியர் வந்துடன் கூடினர். (சசா)

51. கரந்தி ருந்த களிற்றினுட் சேனையும்
பரந்து முன்வந்து பாங்கில் வளைத்தபின்
விரிந்து வத்தவன் வெகுண்டுவின் னூறினன்
முரிந்து சேனை முனையின் மடிந்ததே. (எ)

52. சாலங் காயனுஞ் சார்ந்து வெகுண்டிட
நாலு மாப்படை வந்துநாற் றிக்கினும்
மேலெ ழுந்து மிகவும் வளைத்தன
காலன் போன்மனன் கண்கள் சிவந்தவே. (சஅ)

53. புல்வாய்க் கூட்டத்துப் புக்க புலியெனக்
கொல்வா ளோச்சியே கூற்றம் விருந்துண
வில்வா டம்முடன் வீர ரழிந்திட
வல்வாள் வத்தவன் வாட்கிரை யிட்டனன். (சகூ)

54. கொன்ற போரிற் குருதியா றோடவும்
நின்ற மாந்தர்க ணீங்கிவிட் டோடவும்
கன்றி யுட்சாலங் காயனு மேல்வர
மன்றன் வாளவன் சென்னியில் வைத்தனன். (ருo)

55. மந்தி ரீகளை மன்னர் வதைசெயார்
புந்தி மிக்கோ ருரைபொருட் டேறித்தன்
செந்தி வாளை யழுத்திலன் செல்வனும்
அந்த மைச்சனை யன்பின் விடுத்தனன். (ருக)

---

50. செறுநர் - பகைவர். செய்தது - செய்த செயல். சித்திரமாமென - வஞ்சமென்று. வயந்தகனோடு வந்த ஐந்நூறு வீரர்கள்.

51. களிற்றினுள் கரந்திருந்த. வில் நூறினன் - வில்லாலடித்தான்.

52. மன்னன் - உதயணனுடைய.

53. புல்வாய் - மான். வில்வாள் தம்முடன். வீரர் - பகைவராகிய வீரர். வாட்கு - வாளுக்கு.

54. குருதி - இரத்தம். உள் கன்றி - மனம் கொதித்து. மன் தன் வாள் வைத்தனன்; மன் - உதயணன்.

55. உதயணன் தேறி. செந்தி - செவ்விய தீ; குறுக்கல் விகாரம். அந்த அமைச்சனை. மந்திரிகளைக் கொல்லுதல் முறையன்மையின் உதயணன் சாலங்காயன் தலைமேல் வைத்த வாளை அழுத்தவில்லை.

56. திரளு டைக்கரி சேர்ந்து வளைத்தலும்
வரைகள் வீழ்வென வாரணம் வீழவும்
நிரைம ணித்தேர் நிலத்திற் புரளவும்
புரவி கள்பொங்கிப் பூமியில் வீழவும். (ருஉ)

57. வெஞ்சி னம்மனன் வேறணி நூறலும்
குஞ்ச ரத்தினற் கோட்டின்வா ளொடியவத்
தஞ்ச மின்றிய தாருடை வேந்தனை
வெஞ்சொன் மாந்தர் வெகுண்டுடன் பற்றினர். (ருங)

58. நங்கை மார்குழ லுண்மலர் சூட்டுங்கை
திங்கள் போலத் திலத மெழுதுங்கை
பொங்கு கொங்கையிற் குங்குமம் பூசுங்கை
பங்க யத்தடிப் பாடகம் பூட்டுங்கை. (ருச)

59. கீத வீணைசெங் கெந்த மளையுங்கை
ஈதன் மேவி யிரவலர்க் காற்றுங்கை
ஏத மில்குணத் தென்முடி மன்னன்கை
போத வெண்டுகி லாற்புறத் தார்த்தனர். (ருரு)

60. சிலந்தி நூலிற் செறித்தநற் சிங்கம்போல்
அலங்கல் வேலினு னன்புடை யூகிக்கே
இலங்க வோலை யெழுதி வயந்தகன்
நலங்கொள் கையி னவின்று விடுத்தனன். (ருசு)

61. காசி றேர்மிசைக் காவ லுடன்செலப்
பேச ரும்பெரு மைப்பிரச் சோதனன்
ஆசை யின்மக ளாடகப் பாவைபோன்ம்
வாச வதத்தை வண்மைக் கனவிடை. (ருஎ)

---

56. வீழ்வு என - வீழ்தலைப் போல.

57. மனன்=மன்னன் - உதயணன். வேறு அணி நூறலும் - வேருக இருந்த படைகளை அழித்தவுடன்.

58. பாடகம் - ஒருவகைக் காலணி.

59. மேவி - விரும்பி. ஈதல் ஆற்றுங் கை. எல் முடி - விளக்கத்தை யுடைய கிரீடம். ஆர்த்தனர் - கட்டினர்.

60. வேலினுன் - உதயணன்.

62. பொங்கி எங்கதிர் போந்த தமளியில்
கொங்கை யைத்தழீஇக் கொண்டு டன்செல
நங்கை கண்டுநற் றுதைக் குரைத்தனள்
அங்கந் நூலி னறிந்தவர்க் கேட்டனன். (ருஅ)

(ஆசிரிய விருத்தம்)

63. இவண்முலைக்கியைந்தநல் லெழின்மணம்மகன்வந்தே
துவளிடையிளமுலை தோய்ந்துகொண்டுபோமென
அவள்கனவுரைப்பக்கேட் டண்ணலும்மகிழ்ந்தபின்
திவளுமாலைத்தேர்மிசைச் செம்மல்வந்தடைந்தனன். (ருகூ)

64. மன்னனைமிகவுநொந்து மாநகரிரங்கவும்
துன்னிவெஞ்சிறைமனையிற் றுரல்வினை தூரப்பவும்
இன்னநற்படியிருப்ப வியல்வயந்தகனுந்தான்
சென்றியூகிதன்னிடைத் திருமுகத்தைக்காட்டினன். (சுo)

65. அண்ணல்கோயிலெங்கணும் மரற்றினும்புலம்பினும்
கண்ணினீரருவிகள் காலலைத்தொழுகவும்
அண்ண லோலைவாசக மானயூகிகேட்டுடன்
புண்ணில்வேலெறிந்தெனப் பொறப்பழிந்துவீழ்ந்தனன். ()

66. தேறினனெழுந்திருந்து தீயர்கள்ளயானையை
மாறுதரக்காட்டியெம் மன்னனைப்பிடித்தனர்
வீறுதரவந்நகரை வெங்கயத்தழித்துப்பின்
கூறுமன்மகளுடன் கொற்றவனைமீட்குவம். (சுஉ)

67. மீள்குவம்யாமென்றெண்ணி வெகுண்டுபோர்க்களத்தினில்
வாண்முனைகடந்தவர்க்கு வஞ்சனைசெய்வோமென
நீள்விழிநன்மாதரோடு நின்றசுற்றத்தோர்களைக்
கோள்களைந்நுபுட்பகத்திற் கொண்டுவந்துவைத்தனன். ()

---

62. அந்நூல் - கனநூல்.
63. திவளும் - விளங்கும்.
65. அரற்றுதலாலும் புலம்புவதாலும்.
66. வெங்கயத்து அழித்து - வெவ்விய யானையால் அழிப்பித்து. மன்மகள் - பிரச்சோதனன் மகளாகிய வாசவதத்தை.
67. புட்பகத்தில் - புட்பகமென்னும் நகரத்தில்.

68. உருமண்ணுவாவினுட னிடபகன்சயந்தியும்
திருநிறைந்தபுட்பகமுஞ் சேர்ந்தினிதிருக்கவெண்
பெருமகன்கணிகைமைந்தர் பிங்கலக்கடகரை
அரசுநாட்டியாள்கவென்றே யன்புடன்கொடுத்தனன். ( )

69. மன்னவற்கிரங்கியூகி மரித்தனனென்வார்த்தையைப்
பன்னியெங்கணும்முரை பரப்பிவையகந்தனில்
அன்னதனதொப்புமை யமைந்ததோர்சவந்தனே
உன்னியூகிகான்விறகி லொள்ளெரிப்படுத்தனன். (சுரு)

70. தன்னகர்புலம்பவெங்குந் தன்னையுங்கரத்தலின்
உன்னிவந்துமாற்றரச ரோங்குநாடுபற்றினர்
என்றறிந்துயூகியு மினிச்சிறையின்மன்னனைச்
சென்றவனைக்காண்டுமென்று தேசமுன்னிச்சென்றனன்.

71. துன்னருநற்கானமோடு தொன்மலையிற்சார்தலும்
செந்நெல்கள்விளைவயற் செழும்புனனதிகளும்
மன்னுநாடுந்தான்கடந்து மாகொடிநிறைந்திலங்கு
நன்னகருஞ்சேனையி னன்கமைச்சன்சென்றனன். (சுஎ)

(கலிவிருத்தம்)

72. ஒலிகட லன்ன வோசையுஞ் சேனைதன்
புலிமுக வாயிற் பொறிபுடைத் திலங்கும்
மலிகுடிப் பாக்க மதின்மறைந் திருக்க
வலியதன் சேனை வைத்தன னன்றே. (சுஅ)

73. இன்னவை கேட்கி னின்னவை தருகென
மன்னவ னறியு மருளுரை பயிற்றி
மன்னிய வேடம் வகுத்துடன் கொண்டு
நன்னகர் வீதி நடுவினில் வந்தான். (சுகூ)

---

68. உருமண்ணுவா சயந்தி நகரத்தையும் இடபகன் புட்பக நகரத்தையும் முறையே சேர்ந்து. பெருமகன் - உதயணன் தந்தையாகிய சதானிகன்.

69. கான் விறகில் - சுடுகாட்டில் உள்ள ஈமப்படுக்கையில்.

70. தேசம் - அவந்திதேசம்.

71. உஞ்சேனை - உஜ்ஜயினி நகரம்.

73. மன்னவன் - உதயணன்.

74. இருள்படு குஞ்சி யியல்படத் தூற்றி
மருள்செய மாலை வகுத்துடன் சுற்றி
உருணிறச் சுண்ண முடலினிற் பூசிப்
பொருணலச் சுட்டி பொருந்துறச் சேர்த்தி. (எ0)

75. செம்பொற் பட்டஞ் சேர்த்தின னுதலில்
அம்பொற் சாந்த மணிந்தநன் மார்பன்
செம்பொற் கச்சைச் சேர்த்தின னரையில்
அம்படக் கீறி யணிந்த வுடையான். (எக)

76. கோதையுத் தரியங் கொண்டகோ லத்தன்
காதிற் குழையினன் காலிற் சதங்கையன்
ஊதுங் குழலின னுலரிய வுடுக்கையன்
போதச் சிரசிற் பொருநீர்க் கலசன். (எஉ)

77. கொடியணி மூதூர்க் கோலநல் வீதி
நடுவட் டோன்றி நாடக மாடிப்
படிமிசைக் கரணம் பாங்கிற் றுண்டி
இடியென முழக்கி யினிதினின் வந்தான். (எங)

78. இந்திர லோகம்விட் டிந்திரன் வந்தனன்
அந்தரத் திருந்தியா னன்பினின் வந்தேன்
இந்திர னெனக்கிறை யீண்டும் புதல்வர்க்குத்
தந்திரக் குமக்குத் தானிறை யாமென. (எச)

79. புற்றினி லுறையும் பொறிவரி யைந்தலைப்
பற்றரு நாகம் பற்றிவந் தினிதா
உற்றவிந் நகரத் துட்சிறை வைத்தார்
அற்றதை யெங்கு மறியக் காட்டினர். (எரு)

---

74. குஞ்சி - தலைமயிர்.

75. அம் படக் கீறி - அழகு கெடக் கிழித்து.

76. உலரிய - தோல் உலர்ந்துபோன.

78. தந்திரக்கு - சேனைகளுக்கும். இறை ஆம் - தலைவன் ஆவான்.

79. ஐந்தலைநாகமென்றது நான்கு நண்பர்களோடுகூடிய உதயணனைக் குறிப்பித்தபடி. அற்று அதை.

80. மருளுந் தெருளும் வரம்பில பயிற்றித்
திரளுறு செனங்கள் திறவதிற் சூழப்
பெருந்தெரு வெல்லாம் பிறபடப் போந்தே
அருஞ்சிறைப் பள்ளி யருகினிற் சேர்ந்தான். (எசு)

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

81. கிளைத்தலை யிருவர் கற்ற கிளர்நரப் பிசையுங் கீதம்
தளைச்சிறை மன்னன் கேட்பத் தான்மகிழ் குழலி னூத
உளத்தியல் பாட்டைக் கேட்டு யூகியா மெனமகிழ்ந்து
களைந்தனன் கவலை யெல்லாங் காவலர்க் குணர்த்திப் போந்தான்.

82. பலகொடி வாயிற் செல்லப் பார்மன்னன் சேனை வந்து
நலமுறு வடிவு நோக்க நாகத்திண் கோடு பாய்ந்த
கலனணி மார்வ டுவ்வைக் கஞ்சுகத் துகிலின் மூடத்
தலைமுத லடியீ றுகத் தரத்தினுற் கண்டு போந்தார். (எஅ)

83. பித்தனற் பேய னென்று பெருமகற் குரைப்பக் கேட்டு
வெற்றிநற் சேனை மற்றும் வெஞ்சிறை காக்க வென்றான்
மற்றினி யூகி போந்து மலிகுடிப் பாக்கஞ் சேர்ந்தே
அற்றைநா ளிரவில் யானை யனல்கதம் படுக்க லுற்றான். ()

---

80. சிறைப்பள்ளி - உதயணன் இருந்த சிறைச்சாலை.

81. கிளைத்தலை - சுற்றத்தாரிடத்தே. இருவர் - உதயணனும் யூகியும். நரப்பிசையும் கீதம் - யாழ்நரம்பில் பொருந்திய பாட்டை. மன்னன் - உதயணன். உளத்து இயல் - தன்நெஞ்சில்மட்டும் தெளியச் செல்கின்ற. போந்தான்: போந்தவன் யூகி.

82. செல்ல - யூகி செல்ல. நாகத்திண்கோடு பாய்ந்த மார்வடு-யானையினது திண்ணிய கொம்பு பாய்ந்ததனுல் மார்பில் உண்டாகிய வடு;"வலிந்து மேற் சென்ற கலிங்கத் தரசன், குஞ்சர மருப்பிற் குறியிடப் பட்டுச், செஞ்சாந்து மெழுகிய சேடுபடு செல்வத்து, மார்பினது வனப்பும்" (பெருங்கதை, க. 45 : 20 - 23.) மார் - மார்பு; "நானென்று மார்தட்டும் பெருமாளே" (திருப்புகழ்); "ஆர்தட்டி னுந்தட்டு வாராம லேயன்ன தானத்துக்கு, மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே" (தனிப் பாடல்.) வடுவ்வை: விரித்தல். கஞ்சுகத்துகில் - மேலாடை.

83. பெருமகன் - பிரச்சோதனன். யானை - நளகிரியென்னும் பட்டத்து யானையை. அனல்கதம் - எரிகின்ற கோபம்.

84. வாளொடு கைவி லேந்தி வயந்தகன் றன்னோ டெண்ணித்
தோளன தோழன் கூடத் தூபத்துக் கேற்ற வத்தும்
வேளையீ தென்று கொண்டு விரகினாற் கயிறு பற்றித்
தாளொத்த கொம்மை மீதிற் றரத்தின விழிந்தா னன்றே.

85. ஆனை தன் னிலைகண் டெய்தி யகிலிடும் புகையு மூட்டிச்
சேனைமன் னகர நீத்துச் சிறைவீடுன் கடனே யென்று
மான நல் யூகி யானை செவியின்மந் திரத்தைச் செப்ப
யானைதன் மதக்கம் பத்தி லருந்தளை யுதறிற் றன்றே. (அக)

86. நீங்கிட மிதுவென் றெண்ணி நிலைமதி லேறிப் போகத்
தூங்கிரு டன்னி லானை சுழன்றலைந் தோடப் பாகர்
பாங்கினல் வளைப்பப் பொங்கிப் படுமுகின் முழக்க மென்ன
ஆங்கது பிடுங்கிக் கையா லவரைக்கொன் றிட்ட தன்றே. ()

87. வேழமும் மதங்கொண் டோட வேந்தன்கேட் டினிதெழுந்து
வேழநன் வேட்டங் காண வெம்முலை மாத ரோடும்
ஆழிநல் லிறைவன் றானு மணிமிகு மாட மேறிச்
சூழநன் மாதர் நிற்பத் துளக்கின்றி நோக்கி னானே. (அங)

88. கூடமா ளிகைக ளெல்லாங் கோட்டினாற் குத்திச் செம்பொன்
மாடமு மதிலு மற்று மறித்ததில் திடித்துச் செல்ல
ஆடவர் கூடி யோடி யயில்குந்தந் தண்ட மேந்தி
நாடிநற் கைகால் தட்டி நாற்றிசை சூழ்ந்து நின்றார். (அச)

89. கூற்றுரு வெய்தி யோடிக் கோட்டிடைக் குடர்க ளாடக்
காற்றென முழக்கி வேழங் கண்டமாந் தரைத்தன் கையால்
நாற்பத்தெண் பேரைக் கொன்று நடுவுறப் பிளந்திட் டோடி
மாற்றருங் கோட்டை வாயின் மதிற்புறம் போந்த தன்றே.

---

84. வத்தும் - வஸ்துக்களும். விரகு - தந்திரம். கொம்மை - மதின் மேலுறுப்பு.

85. சிறைவீடு - உதயணனைச் சிறையினின்று விடுவித்தல். தளை - சங்கிலி.

86. அது - யானை.

87. ஆழி நல் இறைவன் - சக்கரவர்த்தி; பிரச்சோதனன்.

89. கூற்றுருவெய்தி: "கூற்றும் நாகத்தின்" 109.

90. அறுநூற்றின் மீதி லைம்ப தானநற் சேரி தானும்
உறுநூற்றி லேழை மாற வுள்ளநாற் பாடி யோடும்
நறுமலர் கந்தம் வீசு நன்குள காவு மற்றும்
பெறுமத யானை கோட்டாற் பெருநக ரழித்த தம்மா. ()

91. பாடுநன் மகளி ரெல்லாம் பாட்டொழிந் தரற்றி யோட
ஆடுநன் மாதர் தாமு மாடல்விட் டுலந்து செல்லக்
கூடுநன் மங்கை மைந்தர் குலைந்தவ ரேகிச் செம்பொன்
மாடநன் மேனி லைப்பான் மன்னினர் பலரோ டாங்கே. ()

92. மத்துறு கடலின் மிக்கு மறுகிய நகரத் தாரும்
வெற்றிநல் வேந்தனோடு வினவினு ரமைச்ச ரெண்ணி
இத்தின நகரம் பட்ட விடரது விலக்க வல்ல
வத்தவன் கைய தென்ன வகுத்துரை கேட்ட மன்னன். ()

93. போரினி னிற்க லாற்றும் பொய்யினிற் றந்த மைந்தன்
சீரொடு சிறப்பும் வெளவிச் சிறையினில் வைத்த தன்றிப்
பேரிடிக் கரிமுன் விட்டாற் பெரும்பழி யாகு மென்று
தாருடை வேந்தன் சொல்லத் தாத்தினு லமைச்சர் சொல்வார்.

94. இந்திர னானை தானு மிவன்கையா ழிசைக்கு மீறு
திந்திரன் வேழ முங்கேட் டேழடி செல்லு மற்றிக்
கந்திறு கைம்மா விக்கோன் கைவீணை கடவா தென்ன
மந்திரித் தவர்சொற் கேட்டு மன்னனப் படிசெய் கின்றான்.

95. சீவகன் வத்த வற்குச் செவ்விதிற் செப்பு கின்றான்
தேவவிந் நகரி டுக்கண் டீர்க்கைநின் கடன தாகும்
போவதுன் றேசத் தென்றல் புரவலன் கடன தாகும்
பூவல னுரைத்தா னென்னப் புகழ்ந்தவன் சிறைவிடுத்தான்.

---

91. உலந்து - வருந்தி.

92. நகரத்தார் வினவினர். வத்தவன் - உதயணன். துன்பத்தை நீக்குதல் வத்தவன் கையிலுள்ளது; அவன் நீக்கும் ஆற்றலுடையானென்பது கருத்து.

93. போரில் நிற்கலாற்றேமாகி வஞ்சத்தினுற் கொணரப்பட்ட வலியை யுடையவன்.

94. மீறுது - மீறிச்செல்லாது. ஏழடி செல்லும்: 'ஏழடி வருதல் ஒரு மரபு; ஏழிசைக்கும் வழிபாடு செய்தானுகக் கருததலின்' (பொருந. 166, ந.) கந்து இறு கைம்மா - கட்டுத்தறியை முறிக்கும் யானை. மந்திரித்தவர் - யோசனை செய்தவர். செய்கின்றான் - செய்யலானுன்.

95. சீவகன்: இவன் பெயர் சிவேதனென்று வேறு நூல்கள் கூறும். போவது - போவாயாக; வியங்கோட்பொருளில் வந்தது. புரவலன் - பிரச்சோதனன். பூவலன் - அரசன்.

96. உருவுள சிவிகை யேறி யுயர்மன்னன் மனைபு குந்து
திருமயி ரெண்ணெ யிட்டுத் திறத்தினன் னீரு மாடி
மருவிநன் பட்டு டுத்து மணிக்கல னினிது தாங்கித்
தெருவிடைத் திகழப் புக்கான் றிருநகர் மகிழ வன்றே. ()

97. பருந்துபின் றொடர யானை பறவைகண் மற்றுஞ் சூழப்
பெருந்தெரு நடுவுட் டோன்றப் பீடுடைக் குமரன் றானும்
திருவலித் தடக்கை வீணை சீருடன் பாட லோடும்
மருவலிக் களிறுங் கேட்டு வந்தடி பணிந்த தம்மா. (கூஎ)

98. பிரிந்தநற் புதல்வர் வந்து பெற்றதந் தந்தை பாதம்
பரிந்தநற் காத லாலே பணிந்திடு மாறு போல
இருந்துதற் பணிந்த யானை யெழின்மருப் படிவைத் தேறிப்
பெருந்தகை யேவிக் கோட்டு பெருங்கையாற் றோட்டி கொண்டான்.

99. வைத்தநன் மணியும் யாழும் வரிக்கயி றதுவு நீட்ட
வெற்றிநல் வேந்தன் வாங்கி வீக்கிமிக் கார்த்துக் கொண்டே
உற்றநல் வீதி தோறு மூர்ந்துநற் சாரி வட்டம்
பற்றிநன் கோட்டக் கண்டு பார்த்திபன் மகிழ்ச்சி கொண்டான்.

100. பிடிப்புப்பொன் விலைமட் டில்லாப் பெருவலி யாரந் தன்னை
முடிப்புவி யரச னீய மொய்ம்பனு மணிந்து கொண்டு
கொடிப்புலி முகத்து வாயிற் கோட்டையுட் கொண்டு வந்தான்
இடிக்குரற் சீய மொப்ப விலங்கிய குமரன் றானே. (கூகூ)

101. சால்கவென் றிறைவன் செப்பத் தன்னுடைக் கையி னேச்சிக்
கால்களின் விரலி னெற்றி கனக்கநன் கூன்றி நின்று
மால்கரி கால்கொ டுப்ப மன்னனு மகிழ்ந்து போந்து
வேல்கவின் வேந்தன் காண வியந்துடன் றழுவிக் கொண்டான்.

---

96. கலன் - ஆபரணம்.

97. பருந்து தொடரச் செல்லல்: "பருந்தின் பந்தரும் . . . . அல வுற்று விளிப்ப" (மணி. ச: 41 - 2.) சீர் - தாளம். பாடலோடும் - பாடிய வுடன். மருவலி - மதத்தாற் சிறந்த மணத்தையும் வன்மையையும் உடைய.

98. தற்பணிந்த - தன்னை வணங்கிய. யானையையேவி அது தன் வளைந்த துதிக்கையால் அங்குசத்தை எடுத்துக் கொடுக்கக் கையில் வாங்கிக் கொண்டான்.

99. சாரி வட்டம் - நடை வகைகள். பார்த்திபன் - பிரச்சோதனன்.

100. ஆரம் - முத்துமாலை. அரசன் - பிரச்சோதனன். மொய்ம்பன் - உதயணன். யானையை அடக்கியவனாதலின் 'சீய மொப்ப விலங்கிய குமரன்' என்றார்.

101. சால்க - போதும். வேல்கவின் : எதுகைநோக்கி இயல்பாயிற்று.

102. மருமக னீயே யென்று மன்னவ னினிமை கூறி
வருமுறை நயந்து கொண்டு மகிழ்ந்துட னிருந்த போழ்து
திருமகள் கனவு கூறிச் செல்வநீ கற்பி யென்னப்
பெருவலி யுரைப்பக் கேட்டுப் பெருமக னுணர்த்த லானன்.

103. வேந்தன்றன் மக்கட் கெல்லாம் வேன்முதல் பயிற்று வித்தும்
பூந்துகில் செறிம ருங்குற் பொருகயற் கண்ணி வேய்த்தோள்
வாய்ந்தவா சவதத் தைக்கு வருவித்தும் வீணை தன்னைச்
சேர்ந்தவ ணிகரி லின்பிற் செல்வனு மகிழ்வுற் றானே. (௬௬)

104. உரையினி லரிய னாய வுதயண குமர னோர்நாள்
அரசிளங் குமரர் வித்தை யண்ணனீ காண்க வென்ன
வரைநிகர் யானை யூர்ந்து மாவுடன் றேரி லேறி
வரிசையிற் காட்டி வாள்வில் வகையுடன் விளக்கக் கண்டான்.

105. வாசவ தத்தை வந்து மன்னனை யிறைஞ்ச நல்யாழ்
பேசவை தளரக் கேட்டுப் பெருமக னினிய னாகி
ஆசிலா வித்தை யெல்லா மாயிழை கொண்டா ளென்றே
ஏசவன் சிறைசெய் குற்ற மெண்ணுறேல் பெருக்க வென்றான்.

106. விசும்பியல் குமரர் தாமும் வியந்துட னிருப்பப் புள்ளும்
பசும்பொனி னிலத்தில் வீழப் பாவையர் மயக்க முற்றார்
வசம்படக் குறுக்கி நீட்டி வரிசையிற் பாட லோடும்
அசும்பறுக் கடாத்து வேழத் தரசனு மகிழ்ந்தா னன்றே.

107. வத்தவன் கையைப் பற்றி மன்னவ னினிது கூறி
வத்தவ னோலை தன்னுள் வளமையிற் புள்ளி யிட்டும்
வத்தவ நாட்டுக் கேற வள்ளலைப் போக வென்ன
வத்தவ நாளை யென்றே மறையவர் முகிழ்த்த மிட்டார். ( )

---

102. திருமகள் - வாசவதத்தையினது. கற்பி - யாழ் கற்பிப்பாயாக.

103. வீணை தன்னை வருவித்தும்; வருவித்தும்—பயிற்றியும்.

104. என்ன - என்று பிரச்சோதனனுக்குக் கூற. விளக்க - அரசிளங் குமரர் விளங்கச்செய்ய.

105. ஏச - உலகத்தார் அவமதிக்க. எண்ணுறேல் - மனத்திற்கொள்ளாதே.

106. விசும்பியல் குமரர் - கந்தருவர். அசும்பு - துளித்தல்.

107. ஓலை - கணக்கோலை. புள்ளியிட்டு - கடனை வரவுவைத்துக் கொண்டு. வத்தவநாடு - வத்ஸதேசம். வள்ளலை - உதயணனை. வத்தவ : விளி. முகிழ்த்தம் - முகூர்த்தம்.

108. ஓரிரண் டாயி ரங்க ளோடைதாழ் மத்த யானை
ஈரிரண் டாயி ரங்க ளெழின்மணிப் பொன்னின் றேரும்
போரியல் புரவி மானம் பொருவிலை யாயி ரம்மும்
வீரர்க ளிலக்கம் பேரும் வீறுநற் குமரற் கீந்தான். (கoச)

109. யூகியும் வஞ்சந் தன்னை யுற்றுச்சூள் வழாமை நோக்கி
வாருடன் குறத்தி வேடம் வகுத்தனன் குறிகள் கூற்றும்
நாகத்தி னகர ழிந்த நடுக்கங்க டீர வெண்ணிப்
போகநன் னீரி லாடப் புரத்தினி லினிதுரைத்தான். (கoரு)

110. மன்னவன் றன்னோ டெண்ணி மாநகர் திரண்டு சென்று
துன்னிய நீர்க்க யத்திற் றெல்புரப் புறத்தி லாட
நன்னெறி வத்த வன்று னன்பிடி யேறி நிற்ப
உன்னிய யூகி மிக்க வூரிற்றீ யிடுவித் தானே. (கoசா)

111. பயந்துதீக் கண்டு சேனை பார்த்திபன் றன்னோடேக
வயந்தகன் வந்து ரைப்ப வத்தவ குமரன் றானும்
நயந்துகோன் மகளை மிக்க நன்பிடி யேற்றத் தோழி
கயந்தனை விட்டு வந்த காஞ்சனை யேறி னாளே. (கoஎ)

112. வயந்தகன் வீணை கொண்டு வன்பிடி யேறிப் பின்னைச்
செயந்தரக் கரிணி காதிற் செல்வன்மந் திரத்தைச் செப்ப
வியந்துபஞ் சவனந் தாண்ட வேயொடு பற்ற வீணை
வயந்தகன் கூற மன்னன் மாப்பிடி நிற்க வென்றான். (கoஅ)

113. நலமிகு புகழார் மன்ன நாலிரு நூற்று வில்லு
நிலமிகக் கடந்த தென்ன நீர்மையிற் றந்த தெய்வம்
நலமிகத் தருமின் றென்ன பண்ணுகை நம்மா லென்னக்
குலமிகு குமரன் செல்லக் குஞ்சர மசைந்த தன்றே (கoகூ)

---

109. சூள் - தான் முன்செய்த சபதம்; 66-ஆம் செய்யுளைப் பார்க்க. குறத்திவேடம்பூண்டு, யானையால் நகரம் அழிந்த நடுக்கம்தீர நீர்விளையாடல் வேண்டுமென அந்நகரத்தில் உரைத்தான். குறிகள் உரைத்தான்.

110. புரப்புறத்தில் - நகருக்கு வெளியே.

111. கோன்மகள் - வாசவதத்தை. கயம் - பொய்கை.

112. கரிணி - பிடி. பஞ்சவனம் - ஓர் இடம். வீணை வேயொடுபற்ற - யாழ் மூங்கிலிற் சிக்க. மா - கருமை; பெருமையுமாம்.

112-3. "வலிகெழு வயந்தகன் வத்தவ நின்யாழ், நிலமிசை வீழ்ந்தது நிற்கநின் பிடியென, நலமிகு புகழோய் நாலிரு நூற்றுவிற், சென்றது கடிதினிச் செய்திற னிதன்மாட், டொன்று மில்லை யுறுநி வேண்டிற், றந்த தெய்வந் தானே தருமென" பெருங். க. 52: 92-7.

114. அசைந்தநற் பிடியைக் கண்டே யசலித மனத்த ராகி
இசைந்தவ ரிழிந்த பின்னை யிருநில மீதில் வீழத்
தசைந்தகை யுதிரம் பாயச் சாலமந் திரமங் காதில்
இசைந்தவர் சொல்லக் கேட்டே யின்புறத் தேவா யிற்றே.

115. உவளகத் திறங்கிச் சென்றே யூர்நிலத் தருகு செல்லப்
பவளக்கொப் புளங்கள் பாவை பஞ்சிமெல் லடியிற் றோன்றத்
தவளைக்கிண் கிணிகண் மிக்க தரத்தினாற் பேச லின்றித்
துவளிடை யருகின் மேவுந் தோழிதோள் பற்றிச் செல்வாள்.

116. பாவைதன் வருத்தங் கண்டு பார்த்திபன் பாங்க னோங்கும்
பூவைவண் டாரற்றுங் காவுட் பூம்பொய்கை கண்டி ருப்ப
வாவுநாற் படையுங் கொண்டு வயந்தகன் வருவே னென்றான்
போவதே பொருளூர்க் கென்று புரவலனுரைப்பப் போந்தான்.

117. சூரியன் குடபாற் சென்று குடவரை சொருகக் கண்டு
நாரியைத் தோழி கூட நன்மையிற் றுயில்க வென்று
வீரிய னிரவு தன்னில் விழித்துட னிருந்த போழ்து
சூரிய னுதயஞ் செய்யத் தொக்குடன் புளினர் சூழ்ந்தார்.

118. வந்தவ ரம்பு மாரி வள்ளன்மேற் றாவத் தானும்
தந்தனு மேவிச் சாராத் தரத்தினால் விலக்கிப் பின்னும்
வெந்திறல் வேடர் வின்னாண் வெந்நுனைப் பகழி வீழ
நந்திய சிலைவ ளைத்து நன்பிறை யம்பி னெய்தான். (கக௪)

119. செய்வகை யின்றி வேடர் தீவனங் கொளுத்த மன்னன்
உய்வகை யுங்க ளுக்கின் றுறுபொரு ளீவ னென்ன
ஐவகை யடிசில் கொண்டே யானநாற் படையுஞ் சூழ
மெய்வகை வயந்த கன்றான் வீறமைந் தினிதின் வந்தான்.

---

114. அசைந்தது - மெலிவுற்றது. அசலிதமனத்தர் - இயக்கமற்ற நெஞ்சினர். வீழ - பிடிவீழ. தசைந்த கை - தசைப்பற்றுடைய துதிக்கை. மந்திரம் - பஞ்ச நமஸ்கார மந்திரம். தே ஆயிற்று - பிடி தேவன் ஆயிற்று.

115. உவளகம் - பள்ளம். பவளக் கொப்புளங்கள் - சிவந்த கொப்புளங்கள். பாவை - வாசவதத்தையினுடைய. தரத்தினால் - அச்சத்தினால்.

116. பூவையும் வண்டும் அரற்றும்; பூவை - நாகணவாய்ப்புள். பொருள் - காரியம். போந்தான் - வயந்தகன் சென்றான்.

117. சொருக - மறைந்துகொள்ள. புளினர் - வேடர்.

118. தம் தனு மேவிச் சாராத் தரத்தினால் - தம்முடைய உடம்பிற் பட்டுச் சாராத தகுதியோடு.

119. உய்வகை - உய்யுமாறு.

120. அன்புறு மடிசி லுண்டே யற்றைநா ளங்கி ருந்தார்
இன்புறு மற்றை நாளி னெழிற்களிற் றரச னேற
நன்புறச் சிவிகை யேற நங்கைநாற் படையுஞ் சூழப்
பண்புறு சயந்தி புக்குப் பார்த்திப னினிதி ருந்தான். ()

இரண்டாவது

இலாவாண காண்டம்

(ஆசிரிய விருத்தம்)

121. உஞ்சைநகர்விட்டகன் றுதயணகுமாரனும்
தஞ்சமாய்ச்சயந்தியிற் றளர்வின்றிப்புகுந்தபின்
என்செய்தனனென்றிடி னியம்புதும்மறியவே
கொஞ்சுபைங்கிளிமொழிதன் கூடலைவிரும்பினன். (க)

122. இலங்கிழைநன்மாதரை யினிமைவேள்வித்தன்மையால்
நலங்கொளப்புணர்ந்தனன் ஞகநற்புணர்ச்சிபோல்
புலங்களின்மிகுத்தபோகம் பொற்புடன்னுகர்ந்தனன்
அலங்கலணிவேலினு னன்புமிகக்கூரினுன். (உ)

123. கைம்மிகுகாமங்கரை காண்கிலன்வழுந்தலில்
ஐம்மிகுங்கணைமத னம்புமீக்குளிப்பவும்
பைம்மிகும்பொனல்குலாள் படாமுலைபுணையென
மைம்மிகுங்களிற்றரசன் மாரன்கடனீந்துவான். (ங)

124. இழந்ததன்னிலத்தையும் மெளிமையுந்நினைப்பிலன்
கழிந்தறமுமெய்ம்மறந்து கங்குலும்பகல்விடான்
அழுந்தியன்பிற்புல்லியே யரிவையுடைநன்னலம்
விழுந்தவண்மயக்கத்தில் வேந்தனினிச்செல்கின்றுன். (ச)

125. ஒழுகுங்காலையூகியா முயிரினுஞ்சிறந்தவன்
எழில்பெருகுஞ்சூழ்ச்சிக்க ணினியதன்வரவதாற்

---

120. நன்பு - நன்மை. நங்கை சிவிகையேற. சயந்தி - ஒருநகரம்.

122. மாதர் - வாசவதத்தை. வேள்வி - மணவேள்வி. கூரினுன் - மிக்கான்.

123. ஐ மிகும் கணை - அழகுமிக்க அம்பு; மிகும் ஐங்கணையெனலுமாம்; கணை மதன்; இடுகுறியளவாய் நின்றது. புணை - தெப்பம். மாரன் கடல் - காமக்கடல்.

124. நிலம் - நாடு. அறமும் கழிந்து. அரிவை - வாசவதத்தை.

125. வரவு - உச்சயினிக்குவந்தமை. சிறைவிடுத்து - உதயணனைச் சிறையினின்றும் நீக்கி. கண்டனன் - செய்தான்.

பழுதின்றிச்சிறைவிடுத்துப் பாங்குபுகழ்வத்தவன்
எழின்மங்கையிளம்பிடி யேற்றியேகக்கண்டனன். (ரு)

126. மிஞ்சிநெஞ்சிலன்புடன் மீண்டுவரவெண்ணினன்
உஞ்சைநகர்க்கரசன்கேட் டுள்ளகத்தழுங்கினன்
விஞ்சுபடைமேலெழாமை விரகுடனறிந்தந்த
உஞ்சையெல்லைவிட்டுவந்து யூகிபுட்பகஞ்சென்றான். (சு)

127. இடபகற்குத்தன்னுரை யினிதுவைத்துரைத்துப்பொன்
முடியுடையநம்மரசன் முயற்சியதுவென்னென
பிடிமிசைவருகையிற் பெருநிலங்கழிந்தபின்
அடியிடவிடம்பொறாமை யானைமண்ணிற்சாய்ந்ததே. (எ)

128. சவரர்தாம்வளைத்ததுந் தாமவரைவென்றதும்
உவமையில்வயந்தகன்ற னூர்வந்துடன்போந்ததும்
தவளவெண்கொடிமிடை சயந்தியிற்புகுந்ததும்
குவிமுலைநற்கோதையன்பு கூர்ந்துடன்புணர்ந்ததும். (அ)

129. இழந்தபூமியெண்ணில னினியபோகத்தழுந்தலும்
குழைந்தவனுரைப்பயூகி கூறெயிறிலங்கநக்கு
விழைந்தவேந்தன்றேவியை விரகினாற்பிரித்திடின்
இழந்தமிக்கரசியல்கை கூடுமெனவெண்ணினான். (கூ)

130. சாங்கியமகளெனுந் தபசினியைக்கண்டுடன்
ஆங்கவனறியக்கூறி யானயூகிதன்னுயிர்
நீங்கினதுபோலவு நின்றமைச்சர்மூவரும்
பாங்கரசன்ரூபமும் படத்தினில்வரைந்தனன். (கo)

131. படத்துருவிலொன்றினைப் பரந்தமேற்கண்ணுகவைத்
திடக்கணீக்கியிட்டுமிக் கியல்புடன்கொடுத்துடன்

---

126. மீண்டுவர - உச்சயினியை நீங்கி உதயணன்பால் மீண்டுவர. உஞ்சைநகர்க்கரசன் - பிரச்சோதனன். படை - உதயணனோடு போர் செய்தற்குப் பிரச்சோதனன் விட்ட சேனை. அறிந்து - யூகி அறிந்து. புட்பகம் - உதயணனுக்குரிய நகரங்களுள் ஒன்று; இதனைப் பின் இடவகன் பெற்றான்.

127. அரசன் - உதயணன். விடம் - காலகூடமென்னும் நோய்.

128. தன்னூர் - புட்பகம். வயந்தகன் போந்ததும்.

129. விரகு - தந்திரம்.

130. சாங்கியமகள் - சாங்கியத்தாய். வரைந்தனன் - குறிப்பாகப் புலப்படும்படி உருமண்ணுவா வரைந்தான்; குறிப்பு அடுத்த செய்யுளிற் கூறப்படும்.

131. வைத்திடு அக்கண் நீக்கி. கொடுத்து - சாங்கியத்தாயின் கையிற் கொடுத்து. இச்செய்தி பெருங்கதையிலுள்ள யூகிக்கு விலாவித்தது (உ - 10)

முடிக்கரசற்கறிவியென்ன முதுமகளும்போயினள்
இடிக்குரனற்சீயமா மிறைவனையேகண்டனள். (கக)

132. வேந்தனுங்கண்டேவிரும்பி வினயஞ்செய்திருக்கென
பாந்தவக்கிழவியும் பண்பினியசொல்லிப்பின்
சேந்தநின்சிறைவிடுத்த செல்வயூகிநின்னுடன்
போந்துபின்வராததென்ன புரவலநீகூறென்றாள். (கஉ)

133. அவனுரையறிந்தில னறிந்தநீயுரைக்கெனத்
தவிசிடையிருந்தவ டான்படத்தைக்காட்டினள்
புவியரசன்கண்டுடன் புலம்பிமிகவாடிப்பின்
தவமலிமுனிவனைத் தான்வணங்கிக்கேட்டனன். (கங)

134. முடிமுதலரசினோடு முனிவறநின்றுணைவனை
வடிவுடன்பெறுவையென்ன வன்மையினிற்றேறிமீக்
கடிகமழுச்சாரலிற் கண்டமாதவன்மகள்
துடியிடைவிரிசிகையைத் தோன்றன்மாலைசூட்டினான். (கச)

135. கலந்தனனிருந்துபின் கானகத்தழைதர
நலந்திகழ்நன்மாதர்செப்ப நரபதியும்போயினன்
கலந்திகழும்யூகியுங் காவலன்றன்றேவியை
சிலதினம்பிரிவிக்கச் சிந்தைகூரித்தோன்றினான். (கரு)

136. மன்னவன்மனைதனின் மறைந்திருக்குமாந்தரைத்
துன்னுநன்கிருவரைத் தொக்குடனிருக்கவென்று
மன்னன்மனைதன்மனைக்கு மாநிலச்சுருங்கைசெய்
தன்னவண்மனைமுழுது மறைந்தவர்தீயிட்டனர். (கசு)

என்னும் பகுதியால் தெளிய விளங்கும். உதயணனைப்போன்ற ஒருபடம் எழுதி அப்படத்தில் யூகிமுதலிய நால்வரைக் குறிக்க நான்கு கண்களை எழுதி அவற்றுள் மேலேயுள்ள கண்ணை யூகி இறந்தானென்பதைப் புலப்படுத்தும் பொருட்டு அழித்துக் கொடுத்தான்.

132. வினயம் - பணிவு. பாம்=பாவும் - பரந்த. சேந்த - தங்கிய.

133. முனிவன் - இலாவாணநகரத்திற்கு அருகிலிருந்த மலைச்சாரலில் உள்ளதோர் ஆச்சிரமத்தில் வாழ்ந்த ஒருமுனிவன்; பெருங்கதை, குறிக்கோட் கேட்டது பார்க்க.

134. என்ன - என்று முனிவன் கூற.

135. இருந்து - இலாவாணத்திற்கு மீண்டு வந்திருந்து. மாதர் - வாசவதத்தை. போயினன் - காட்டிற்குப் போனான்.

136. மன்னன்மனை - உதயணன் மனைவியாகிய வாசவதத்தை. சுருங்கை - நிலத்துக்கு அடியிற் செய்யப்படும் வழி.

137. நிலந்திகழ்சுருங்கையி னீதிமன்னன்றேவியை
இலங்குசாங்கியம்மக ளெழில்பெறக்கொண்டுவந்
தலங்கலணி வேலினு னமைச்சன் மனைசேர்ந்தனன்
துலங்கிவந்தடிபரவிச் சொல்லினிதுகூறுவான். (கஎ)

138. என்னுடைநற்றுயேநீ யெனக்கொருவரங்கொடு
நின்னரசனின்னைவிட்டு நீங்குஞ்சிலநாளன்றி
நன்னிலமடந்தைநமக் காகுவதுமில்லையே
என்னவுடன்பட்டன ளியல்புடன்கரந்தனள். (கஅ)

139. சவரர்வந்துதீயிட்டுத் தஞ்செயலினுக்கிமிக்
கவகுறிகள்கண்டரச னன்பிற்றேவிக்கேதமென்
றுவளகத்தழுங்கிவந் துற்றகருமஞ்சொலக்
கவற்சியுட்கதறியே கலங்கிமன்னன்வீழ்ந்தனன். (கசு)

140. பூண்டமார்பனன்னிலம் புரண்டுமிக்கெழுந்துபோய்
மாண்டதேவிதன்னுடன் மரித்திடுவனென்றான்
நீண்டதோளமைச்சரு நின்றரசற்பற்றியே
வேண்டித்தானுடனிருந்த வெந்தவுடல்காட்டென்றான். ()

141. கரிப்பிணத்தைக்காண்கிலர் காவலர்களென்றபின்
எரிப்பொன்னணிகாட்டென வெடுத்துமுன்புவைத்தனர்
நெருப்பிடைவிழுந்தமை நினைப்பமாயமன்றெென
விருப்புடைநற்றேவிக்கு வேந்தன்மிக்கரற்றுவான். (உக)

142. மண்விளக்கமாகிநீ வரத்தினெய்திவந்தனை
பெண்விளக்கமாகிநீ பெறற்கரியையென்றுதன்
கண்விளக்குகாரிகையைக் காதலித்திரங்குவான்
புண்விளக்கிலங்குவேற் பொற்புடையமன்னவன். (உஉ)

---

137. அமைச்சன் - யூகி. கூறுவான் - யூகி கூறலாயினன்.

138. உதயணன் உன்னை விட்டுச் சிலநாள் நீங்கியிருந்தால் ஒழிய நமது நாட்டை நாம் பெறுதல் இயலாது.

139. தீ இட்டு - வாசவதத்தையின் அரண்மனையில் தீயிட்டு. உவ்ளகம் - அந்தப்புரம்.

141. "கரிப்பிணங் காணா் காவலரென்னும், மொழிப்பல காட்டவும்" (பெருங். உ. 19: 43 - 4.) மாயம் அன்றெென நினைப்ப.

142. புண்விளக்குவேல், இலங்குவேலென்க. "மண்விளக் காகி வரத்தின் வந்தோய், பெண்விளக் காகிய பெறலரும் பேதாய்" பெருங். உ. 18: 78 - 9.

143. மானெனும்மயிலெனும் மரைமிசைத்திருவெனும்
தேனெனுங்கொடியெனுஞ் சிறந்தகொங்கைநீயெனும்
வானிலமடந்தையே மாதவத்தின்வந்தனே
நானிடர்ப்படுவது நன்மையோநீவீந்ததும். (உங)

144. நங்கைநறுங்கொங்கையே நல்லமைக்குழலியெம்
கொங்குலவுகோதைபொன் குழையிலங்குநன்முகம்
சிங்காரமுனதுரையுஞ் செல்விசீதளம்மதி
பொங்காரம்முகமெனப் புலம்பினான்புரவலன். (உச)

145. வீணைநற்கிழத்திநீ வித்தகவுருவிநீ
நாணின்பாவைதானுநீ நலந்திகழ்மணியுநீ
காணவென்றன்முன்பதாய்க் காரிகையேவந்துநீ
தோணிமுகங்காட்டெனச் சொல்லியேபுலம்புவான். (உரு)

146. துன்பமிகவும்பெருகச் சொற்கரியதேவிக்கா
அன்புமிக்கரற்றுவதை யகல்வதுபொருளென
நன்புறமமைச்சர்சொல்ல நரபதியுங்கேட்டனன்
இன்புறும்மனைவிகாத லியல்புடனகன்றனன். (உசு)

(கலிவிருத்தம்)

147. அண்ண றன்னிலை யறிந்த யூகியும்
திண்ணி தின்னியல் செய்கையென்றரு
மண்ணு வாவினை மன்ன னண்டையில்
எண்ணுங் காரிய மீண்டுச் செய்கென்றான். (உஎ)

(வேறு)

148. தன்னிலைக் கமைந்த தத்துவ ஞானத்தான்
துன்னருஞ் சூழ்ச்சித் தோழன் வயந்தகன்
மன்னற் குறுதி மறித்தினிக் கூறும்
பொன்னடி வணங்கிப் புரவலன் கேட்ப. (உஅ)

149. வெற்றிவேன் மகதவன் வேந்தன் றேசத்தில்
இற்றவர்க் காட்டு மியல்பின னாலுரை

---

143. மரை - தாமரைமலர்.

144. பொங்குதல் ஆர்ந்த அம்முகம்.

145. "வீணைக் கிழத்தீ வித்தக வுருவீ" (பெருங். உ. 18: 82.) நாணின் பாவை: "நாணின் பாவாய் நீணில விளக்கே" (சிலப். கசு : 90.) தோணி - தோன்றி. 146. நன்பு - நன்மை.

149. மகதவன் வேந்தன் தேசம் - மகததேசம். இற்றவர்க் காட்டும் இயல்பினன் - இறந்தவர்களை உயிருடன் காட்டும் தன்மையை யுடையவன்.

கற்றுவல் லவனற் காட்சி யறிவுடன்
தத்துவ முனியுள ளுமினிச் சார்வோம். (உகூ)

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

150. வத்தவ குமரன் கேட்டு வயந்தகன் றன்னை நோக்கி
அத்திசை போவோ மென்றே யகமகிழ்ந் தினிய கூறி
வெற்றிநாற் படையுஞ் சூழ வெண்குடை கவரி மேவ
ஒத்துட னிசைந்து சென்று னுதயண குமரன் றானே. (-)

மூன்றாவது

மகத காண்டம்

151. சயந்தியி னெல்லை விட்டுச் சாலவு மகத நாட்டுக்
கியைந்துநன் கெழுந்து சென்றே யிரவியி னுதய முற்றுன்
நயந்தனன் றேவி காத னன்மனத் தழுங்கிப் பின்னும்
வியந்துநல் லமைச்சர் தேற்ற வெங்கடுங் கானம் புக்கான்.

152. செத்தநற் றேவி தன்னைத் திருப்பவு மீட்க லாமென்
றத்திசை முன்னி நல்ல வருவழிப் பட்டுச் செல்ல
அத்தியும் பிணையு மேக வாண்மயி லாடக் கண்டு
வத்தவன் கலிழ்ந்து ரைக்கு மனனமை மனையை யோர்ந்தே.

153. கோட்டுப்பூ நிறைந்தி லங்குங் கொடிவகைப் பூவுங் கோலம்
காட்டுநந் தேவி யென்று கால்விசை நடவா மன்னன்
காட்டினன் குன்ற மேறிக் கானகங் கழிந்து போந்து
சேட்டிளஞ் சிங்க மன்னன் திருநிறை மகதஞ் சேர்ந்தான்.

154. மருவிய திருவி னனம் மகதவர்க் கிறைவ னமம்
தருசக னென்னு மன்னன் றனைவேற் றலைவன் மாரன்
இருந்தினி துறையு மிக்க விராசநற் கிரியந் தன்னிற்
பொருந்திச்சென் னகர்ப்பு றத்திற் பொலிவுட னிருந்தானன்றே.

---

152. அத்தி - பிடி. பிணை - பெண்மான். கலிழ்ந்து - இரங்கி. மனன் அமை - உள்ளத்திற் பொருந்திய. மனையை - மனைவியாகிய வாசவதத்தையை.

153. நடவா - நடந்து. சிங்கமன்னன் - தருசகனுடைய.

154. மாரன் - காமனைப் போன்றவன். இராசநற்கிரியம் - இராசகிரிய மென்னும் நகர்.

155. காமனற் கோட்டஞ் சூழக் கனமதி லிலங்கும் வாயிற்
சோமநற் ருப தர்கள் சூழ்ந்தமர் பள்ளி தன்னில்
நாமநல் வயந்த கன்னு நன்றறி காக துண்ட
மாமறை யாளற் கண்டு வஞ்சகஞ் செப்பி னுனே. (ரு)

156. திருநிறை மன்னன் றன்னைச் சீர்மறை யாளன் கண்டே
இருமதி யெல்லை நீங்கி யிப்பதி யிருப்ப வென்றும்
தருவனீ யிழந்த தேவி தரணியுங் கூட வென்ன
மருவியங் கிருக்கு மோர்நாண் மகதவன் றங்கை தானும்.

157. பருவமிக் கிலங்குங் கோதைப் பதுமைதே ரேறி வந்து
பொருவில்கா மனையே காணுப் புரவலற் கண்டு கந்து
மருவும்வா சவதத் தைதான் வந்தன ளென்று ரைப்பத்
திருநிகர் மாது கண்டு திகைத்துளங் கவன்று நின்ருள்.(எ)

158. யாப்பியா யினியா ளென்னு மவளுடைத் தோழி சென்று
நாப்புகழ் மன்னற் கண்டு நலம்பிற வுரைத்துக் கூட்டக்
காப்புடைப் பதுமை யோடுங் காவலன் கலந்து பொன்னின்
சீப்பிடக் கண்சி வக்குஞ் சீர்மங்கை நலமுண் டானே.(அ)

159. எழில்பெறு காமக் கோட்டத் தியற்கையிற் புணர்ந்து வந்து
வழிபெறு மமைச்ச ரோடு வத்தவ னினிய கூறும்
மொழியமிர் தந்ந லாளை மோகத்திற் பிரியே னென்னத்
தொழுதவர் பெறுக போகந் தோன்றனீ யென்று சொன்னுர்.

160. மாட்சிநற் சிவிகை யேறி மடந்தைதன் னேடும் புக்குத்
தாழ்ச்சியின் மாளி கைக்குட் டக்கவண் மனங்கு ளிர்ப்பக்
காட்டினன் வீணை தன்னைக் காவலன் கரந்தி ருப்ப
ஒட்டிய சினத்த னுய வுருமண்ணு விதனைச் செப்பும்.(கo)

161. ஆகிய தறிந்து செய்யு மருளுடை மனத்த னுன
யூகியங் குஞ்சை தன்னை யுற்றருஞ் சிறைவி டுக்கப்
போகநற் றேவி யோடும் போந்தது போல நாமும்
போகுவ மன்னன் மாதைப் புதுமணம் புணரு வித்தே.(கக)

---

155. காமனற்கோட்டம் - இராசகிரியத்திலிருந்த காமன்கோயில். சோமம் - சாந்தகுணம். பள்ளி - ஆச்சிரமம். வஞ்சகம் - தம் சூழ்ச்சியாற் செய்த செயல்களை.

157. உரைப்ப - உதயணன் கூற. உகந்து கவன்றுநின்ருள்.

158. மங்கை - பதுமாபதி.

159. காமக்கோட்டத்து - காமன் கோயிலில், அவர் தொழுது.

161. மாதை - பதுமாபதியை.

162. உருமண்ணு வாவ னுப்ப வுற்றமுந் நூறு பேர்கள்
மருவிய விச்சை தன்னுன் மன்னவன் கோயி றன்னுள்
மருவினர் மறைந்து சென்றூர் மன்னவன் ருதை வைத்த
பெருநிதி காண்கி லாமற் பேர்க்குநர்த் தேடுகின்றுன். (கஉ)

163. யானறிந் துரைப்ப னென்றே யரசனைக் கண்டு மிக்க
மாநிதி காட்டி நன்மை மகதவ னேடுங் கூடி
ஊனமில் விச்சை தன்னு லுருமண்ணுப் பிரித லின்றிப்
பானலங் கிளவி தன்னுற் பரிவுட னிருக்கு நாளில். (கங)

164. அடவியா மரசன் மிக்க வயோத்தியர்க் கிறைவன் றனைப்
படையுறு சாலி யென்பான் பலமுறு சத்தி யென்பான்
முடிவிரி சிகையன் மல்லன் முகட்டெலிச் செவிய னென்பான்
உடன்வரு மெழுவர் கூடி யொளிர்மக தத்து வந்தார். (கச)

165. தருசகற் கினிதி னுங்க டருதிறை யிடுவ தில்லென்
றெரியென வெகுண்டு வந்தே யினியநா டழிக்க லுற்றூர்
தருசக ராசன் கேட்டுத் தளரவப் புறத்த கற்ற
உருமண்ணு வாம னத்தி லுபாயத்தி லுடைப்ப னென்றுன். ()

166. கள்ளநல் லுருவி னேடுங் கடியகத் துள்ளே யுற்ற
வள்ளலை மதியிற் கூட்டி வாணிக வுருவி னேடு
தெள்ளிய மணிதெ ரிந்து சிலமணி மாறப் போந்து
பள்ளிப்பா சறைபு குந்து பலமணி விற்றி ருந்தார். (கரு)

(கலிவிருத்தம்)

167. மன்னன் வீர மகதற்குக் கேளாத்தம்
இன்னு ரைக ளியல்பின் வரவரத்
துன்னு நாற்படை வீடுதோன் றிரவிடை
உன்னி னர்கரந் துரைகள் பலவிதம். (கஎ)

168. உரையு ணர்ந்தவ ருள்ளங் கலங்கிப்பின்
முரியுஞ் சேனை முயன்றவ ரோடலிற்
றெருளினர் கூடிச் சேரவந் தத்தினம்
மருவி யையம் மனத்திடை நீங்கினர். (கஅ)

169. இரவு பாசறை யிருந்தவர் போனதும்
மருவிக் கூடியே வந்துடன் விட்டதும்

163. கண்டு - உதயணன் கண்டு.

164. சாலி : இவனை வேசாலியென்பர் பெருங்கதையாசிரியர். அவர் மல்லனென்பானைக் கூறுமல் மிலேச்சனென்பா னெருவனைக் கூறுவர்.

166. வள்ளல் - உதயணன். மணி - இரத்தினங்கள். மாற - விற்க.

விரவி யொற்றர்கள் வேந்தற் குரைத்தலின்
அரசன் கேட்டுமிக் கார்செய லென்றனன். (ககூ)

170. வார ணிக்கழல் வத்தவன் றன்செயல்
ஓரணி மார்ப னுருமண் ணு வாவுமிக்
கேரணி யரச ருக்கியல் கூறலும்
தாரணி மன்னன் றன்னுண் மகிழ்ந்தனன். (உ0)

171. ஆரா வவ்வகையுள் ளாகி யரசனும்
பேரா மினியயாழ்ப் பெருமகன் றன்னையே
சேரா வெதிர்போய்ச் சிறந்து புல்லினன்
நேரா மாற்றரை நீக்குவ னென்றான். (உக)

(ஆசிரியவிருத்தம்)

172. உலம்பொருததோளுடை யுதையணகுமர னும்
நலம்பொருதநாற்படையு நன்குடனேசூழப்போய்ப்
புலம்பொருதபோர்ப்படையுட் பொருதுதவத்தொலைத்தடன்
நலம்பெறத்திறையுட னரபதியுமீண்டனன். (உஉ)

173. வருவவிசையத்துடன் வத்தவற்கிறைவனைத்
தருசகனெதிர்கொண்டு தன்மனைபுகுந்தபின்
மருவநற்பதுமையா மங்கைதங்கைதன்னையே
திருநிறைநல்வேள்வியாற் செல்வற்கேயளித்தனன். (உந)

174. புதுமணக்கோலமிவர் புனைந்தனரியற்றிப்பின்
பதியுடையையாயிரம் பருமதக்களிற்றுடன்
துதிமிகுபுரவிகள் தொக்கவிரண்டாயிரம்
அதிர்மணியரற்றுந்தே ராயிரத்திருநூறே. (உச)

175. அறுபதினெண்ணுயிர மானபடைவீரரும்
நறுமலர்நற்கோதையர் நான்கிருநூற்றிருபதும்
பெறுகவென்றமைத்துடன் பேர்வருட்காரியும்
உறுவடிவேற்சத்தியு முயர்தருமதத்தனும். (உரு)

176. சத்தியகாயனுடன் சாலவுமமைச்சரை
வெற்றிநாற்படைத்துணை வேந்தவன்பிற்செல்கென்று
முற்றிழையரிவைக்கு முகமலரச்சீதனம்
பற்றியன்பினலளித்துப் பாங்குடன்விடுத்தனன். (உசு)

---

171. பெருமகன்றன்னை - உதயணனை. மாற்றரை - உன்பகைவர்களை.

172. நரபதி - உதயணன்.

173. வேள்வி - மணம்.

177. வெல்லுமண்ணலைமிக வேந்தனன்னயஞ்சில
சொல்லிநண்பினுலுரைத்துத் தோன்றலை மிகப்புல்லிச்
செல்கென்விடுத்தரச் செல்வனங்குப்போந்தனன்
எல்லைதன்னுடைய்திப்பி னினியர்தம்பிவந்தனர். (உஎ)

178. பிங்கலகடகரெனப் பீடுடைக்குமரரும்
தங்குபன்னீராயிரந் தானையுடைவீரரும்
அங்குவந்தவ்வண்ணலை யடிவணங்கிக்கூடினர்
பொங்குபுரங்கௌசாம்பியிற் போர்களத்தில்விட்டனர்.

179. வருடகாரனையழைத்து வத்தவனியம்புமிப்
பருமிதநற்சேனையுள்ள பாஞ்சாலராயனிடம்
திருமுடியரசரைத் திறத்திலுலகற்றெனப்
பொருளினவன்போந்தபின்பு போர்வினை தொடங்கினர்.

180. அமைச்சனுஞ்சென்றவ்வண்ண மதிர்கழனல்வேந்தரைச்
சமத்தினிலகற்றினன் சாலவும்பாஞ்சாலனும்
அமைத்தநாற்படையுட னமர்ந்துவந்தெதிர்த்தனன்
அமைத்திருவர்விற்கணைக ளக்கதிர்மறைத்தவே. (கூ0)

(வேறு)

181. விரிந்த வெண்குடை வீழவும் வேந்தர் விண்ணுற வேறவும்
பரிந்து பேய்க்கண மாடவும் பலந ரிபறைந் துண்ணவும்
முரிந்த முண்டங்க ளாடவு முரிந்த மாக்களி றுருளவும்
வரிந்த வெண்சிலை மன்னவன் வத்த வன்கண்கள் சிவந்தவே.

182. மாற்ற வன்படை முறிந்தென மன்ன வன்படை யார்த்திடத்
தோற்ற மன்னன்வந் தெதிர்த்தனன் றூய காளைதன் வாளினல்
மாற்ற லன்றனைக் கூற்றுண வண்மை யில்விருந் தார்கென
ஏற்ற வகையினி லிட்டன னிலங்கு வத்தவ ராசனே (கூஉ)

183. பகைய றவேயெ றிந்துடன் பாங்கிற் போர்வினை தவிர்கென
வகைய றவேப டுகளங் கண்டு நண்ணிய மற்றது
தொகையு றந்தன தொல்படை சூழ வூர்முக நோக்கினன்
நகையு றுங்நல மார்பனு நகர வீதியில் வந்தனன். (கூங)

---

177. தம்பி - பிங்கலகடகர்.

179. வருடகாரன் - தருசகனல் உதயணனுக்கு உதவியாக அனுப்பப்பட்ட படைத்தலைவன். திறத்தினல் - வஞ்சகவகையினல்.

182. பெருங்கதையாசிரியர் தருமதத்தனென்பவன் பாஞ்சாலவரசனைக் கொன்றுனென்பர்.

(வேறு)

184. மாடமா ளிகைமிசை மங்கையரு மேறிமீக்
கூடிநின் றிருமருங்குங் கொற்றவனை வாழ்த்தினர்
பாடலவர் படித்திடப் பலகொடி மிடைந்தநல்
ஆடகநன் மாளிகை யரசனும் புகுந்தனன். (௱௮௪)

185. படுகளத்தி னொந்தவர்க்குப் பலகிழி நெய்பற்றுடன்
இடுமருந்து பூசவு மினிப்பொருளளித்தபின்
தொடுகழ லரசர்கள் சூழ்ந்தடிபணிந்திட
முடிதரித்தரசியன் முகமலர்ந்து செல்லுநாள். (௱௮௫)

நான்காவது

வத்தவ காண்டம்

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

186. மின்சொரி கதிர்வேற் றானை வீறடி பணிய வெம்மைப்
பொன்சொரி கவரி வீசப் பொங்கரி யாச னத்தில்
தண்சொரி கிரண முத்தத் தவளநற் குடையி னீழல்
மின்சொரி தரள வேந்தன்வீற் றிருந்த போழ்தின். (௧)

187. மாற்றலர் தூதர் வந்து வருதிறை யளந்து நிற்ப
ஆற்றலர் வரவ வர்க்கே யானபொன் றுகில ளித்தே
ஏற்றநற் சனங்கட் கெல்லா மினிப்பொரு ளுவந்து வீசிக்
கோற்றொழி னடத்தி மன்னன் குறைவின்றிச் செல்லுகின்றான்.

188. மதுரவண் டறுத மாலை மகதவன் றங்கை யாய
பதுமைதன் பணைமு லைமேற் பார்த்திபன் புணர்ந்து செல்லத்
துதிக்கைமா வீழ்ந்த கானந் தோன்றலு மாடம் பண்ணிப்
பதியினு மமைத்துப் பாங்கிற் படிமமு மமைத்தா னன்றே.

189. அருமறை யோதி நாம மருஞ்சன னந்த ணன்றான்
திருவுறை யுஞ்சை நின்று திகழ்கொடிக் கௌசாம் பிக்கு
வருநெறி வேயின் மீது வத்தவன் வீணை கண்டு
பொருந்தவே கொண்டு வந்து புரவலற் கீந்தா னன்றே. ()

---

185. கிழி, நெய்: சீவக. 218, 219. 187. ஆற்றலர் - வீரர்.

188. துதிக்கைமா - பத்திராபதியாகிய யானை. கானம் - கானத்தில். தோன்றல் - உதயணன். பதியினும் - கோசம்பிநகரத்திலும்.

189. அருஞ்சனன்: இவன் பெயர் அருஞ்சுகனென்று பெருங்கதையிற் காணப்படும். நெறி - வழியில். புரவலற்கு - உதயணனுக்கு.